# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி 4


4/6

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| **வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை** | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| **வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை** | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208<br>ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222<br>[Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225<br>மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230<br>[Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239<br>[Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத்<br>தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார்<br>பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச்<br>1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348<br>[Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390<br>[Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427<br>[Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440<br>[Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465<br>ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே<br>1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490 [Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509 ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516 [Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525 [Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573 [Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610 [Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664 R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664 [Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721 பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732 [Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740 ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741 [Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761 [Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776 [Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786 [Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833 [Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839 மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843 ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899 பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916 [Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936 மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004 [Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013 மார்ச் 1888 [Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013 [Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | | | | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | | | | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | | | | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382 மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431 [Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448 [Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504 மார்ச்1893 & R 2436 பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 & R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559 [Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 & R5882 [Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை** | | | | |
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625<br>மார்ச்1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636<br>ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657<br>ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657<br>ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704<br>[Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| **வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை** | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786<br>மார்ச்1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900 [Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904 [Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942 மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988 ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018 [Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168 [Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270 [ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270 ( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278 மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278 [ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282 ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291 ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297 [ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312 மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315 ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379 நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஒவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| **வருடம் 1899 #R 2411 முதல் R 2552** | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455 ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464 மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467 மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469 மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470 மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473 மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| **வருடம் 1900# R 2553முதல் R 2747வரை** | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592 மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622<br>மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளைஅதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630<br>[ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646<br>[ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743<br>டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745<br>டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

### வருடம் 1901# R 2751முதல் R 2928வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369<br>மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431<br>[Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521<br>[ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534<br>ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537<br>ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542<br>ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544<br>ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548<br>மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551<br>மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர்<br>1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749<br>ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759<br>Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759<br>ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820<br>[R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850 செப்டம்பர் 1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877 அக்டோபர் 1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879 அக்டோபர் 1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885 நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887 நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895 நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900 டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346<br>மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363<br>[ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374<br>[R3017]<br>[R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375<br>ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384<br>மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 &<br>R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கத்தரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கத்தரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341 (தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342 நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370 [Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370 [Page 377] R 5371 [Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377 [Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377 [Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552 செப்டம்பர் 1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560 செப்டம்பர் 1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563 செப்டம்பர் 1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570 செப்டம்பர் 1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572 [Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572 [Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577 நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள்]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603 [Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உரபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | ˙ இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722 [ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722 [ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724 [ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728 [ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732 [ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733 [ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735 [ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736 [ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737 [ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742 [ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746 [ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747 [ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749 [ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750 [ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751 [ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752 [ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754 [ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758 [ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762 [Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874<br>[ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 &<br>R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875<br>[ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின் நிரூபணம் | 2658 |
| 657 | R 5876<br>[ Page 99] | 6 | எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878<br>[ Page 101] | 5 | புயலின்மத்தியில் சமாதானம் | 2664 |
| 659 | R 5879 &<br>R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879<br>[ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882<br>[ Page 105]<br>[R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885<br>[ Page 117] | 4 | கிறிஸ்துவோடு நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886<br>[Page 118] | 2 | சிறு நரிகள் | 2689 |
| 663 | R 5886<br>[ Page 125] | 2 | சகோதரர்களை முறையாகவோ, முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889<br>[ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம் | 2697 |
| 667 | R 5890<br>[ Page 133] | 3 | இயேசு மரித்து எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891 [ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 & R 4374 & R 3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896 [ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898 [ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899 [ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900 [ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905 [ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907 [ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907 [ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909 [R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913<br>[ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917<br>[ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919<br>[ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேண்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923<br>[ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929<br>[ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931<br>[ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

R 4636

# "இராஜ்யத்தின் காட்சிகள்"
## மத்தேயு 13:31-33; 44-52

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது." - **ரோமர் 14:17**

பரலோக இராஜ்யம் பற்றியதான ஆண்டவருடைய உவமையானது, சீக்கிரத்தில் ஆரம்பிக்க இருக்கும் ஆண்டவருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில் அவரோடுகூட இருக்கும்படிக்கு, மனுக்குலத்தின் உலகத்தினின்று அவர் அழைக்கும் ஒரு வகுப்பார் தொடர்புடையது என்பதை நாம் நினைவில் கொண்டிருப்போமாக. சில சமயம் இந்த வகுப்பார் பரிசுத்தமான கோதுமைகள் மாத்திரமல்லாமல், களைகள் போன்றவர்களும் உள்ளடங்கினவர்களாகவும் பேசப்படுவதையும் நினைவில் கொள்வோமாக. இந்தப் பல்வேறு உவமைக் காட்சிகள் ஒரே காரியத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து விவரிக்கின்றதாய் இருக்கின்றது. அதாவது, ஒரு கட்டிடத்தை வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் நாம் படம் பிடித்துக் காட்டுவது போலாகும்.

## "கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது"

கடுகு விதை மிகச் சிறியதாய் இருந்தும், அது பெரிய செடியாக வளர்ந்து, ஆகாயத்தின் பட்சிகள் அதன் கிளைகளில் வந்து அடையத்தக்கதாக இருப்பதுபோல, இராஜ்யத்தின் சுவிசேஷமும் சிறிய ஆரம்பத்திலிருந்து, பெரிய அளவை அடையும் என விவரிக்கப்படுகின்றது. இது மரங்கள் மத்தியில் பெரிய மரமாக ஆகாமல், மாறாக செடிகள் அல்லது பூண்டுகள் மத்தியில் பெரியதாகக் காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, கிறிஸ்துவினுடைய செய்தியானது ஆரம்பத்தில் ஏழைகளினாலும், இஸ்ரயேலிலுள்ள சிலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இறுதியில் அது முக்கியத்துவம் வாய்ந்த அளவுக்கு வளர்ந்தபடியால், அதின் கிளைகளில் ஆகாயத்துப் பறவைகள் வந்து கூடின. முந்தின உவமைக்கு நமது கர்த்தர் கொடுத்திட்ட விளக்கத்தில் பறவைகள், பொல்லாங்கனின் ஊழியக்காரருக்கு அடையாளமாக இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக. ஆகவே, ஒருகாலத்தில் கிறிஸ்துவின் சபையானது உலகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அற்றதாகவும், சபையில் இருப்பது என்பது வெட்கமாகவும், அவமானமாகவும் கருதப்பட்டது என்றும், பிற்பாடு அது கனமுள்ளதாகவும், பிரம்மாண்டமானதாகவும் கருதப்படுவதினால், எதிராளியானவனின் ஊழியக்காரர்கள் இதன் நிழலின் கீழ்க் காணப்படுவதில் மகிழ்ச்சிகொள்வார்கள் என்றுமுள்ள விஷயங்களே இந்த உவமையின் விளக்கம் என்று முடிவு செய்வதற்கு ஏதுவாக வழிநடத்தப்படுகின்றோம். இந்த வளர்ச்சியை, வேதவாக்கியங்கள், பாபிலோன் என்று தெரிவிக்கின்றது, மற்றும் பல்வேறு கிளைகளையும், பிரிவுகளையும் கொண்டுள்ள கிறிஸ்துவின் பெயரளவிலான சபை முழுவதும், பாபிலோன் தன்மையில் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கின்றது. "அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று" (வெளிப்படுத்தல் 18:2). இதில் இடம்பெறும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள். இது சபையின் வெளித்தோற்றமான பெரிய வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது, மற்றும் இந்த வளர்ச்சி அவளுக்கு நன்மையாகவும், மகிமை சேர்க்கின்றதாகவும் இராமல், எதிர்மாறாகவே இருக்கின்றது. இது பெயரளவிலான கிறிஸ்துவின் சபையாகும். கர்த்தருடைய ஆவி தவறாகக் காட்டப்பட்டாலும், சரியில்லாத வளர்ச்சிக் காணப்பட்டாலும், இறுதியில் சபையின் மாபெரும் தலையானவர் குழப்பதைச் சரிப்படுத்தி, தம்முடைய "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை" மகிமைப்படுத்திப் பயன்படுத்துவார்.

## "மாவிலே அடக்கி வைக்கப்பட்ட புளிப்பு"

"புளிப்பு" பற்றின உவமையானது (33-ஆம் வசனம்) சபை தவறான நிலைக்குள் கடந்துப் போகும் முறைக்குறித்து விவரிக்கின்றது. எப்படி ஒரு ஸ்தீரி அப்பம் உண்டாக்க மாவுக்குள் புளிப்பை அடக்கி வைத்து, மாவு முழுவதையும் புளிக்கச் செய்வதைப் போன்று, கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இப்படியாகவே காணப்படும். முழு விசுவாச வீட்டாருக்குரிய உணவும் புளிப்பாக்கப்படுகின்றது (அ) கெடுக்கப்படுகின்றது. முழு மாவுக்குள்ளும் கலக்கும் புளிப்பாகிய தவறான உபதேசமானது, ஒவ்வொரு பாகத்தினுடைய தூய்மையை ஏறக்குறைய கெடுத்துப்

போடுகின்றதாய் இருக்கின்றது. இவ்வாறாக இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு உபதேசமும், ஏறக்குறைய இருண்ட யுகத்தின் தப்பறைகளினால் திரிக்கப்பட்ட நிலையில் அல்லது தவறான நிலையில் இன்று வழங்கப்பட்டுள்ளது.

## "நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்"

கிறிஸ்துவுடன் அவருடைய ஆயிரம் வருஷத்தின் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவத்தை அடைவதற்காக விரும்பும் தன்மையானது, இந்த உவமையில் காட்டப்படுகின்றது. பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கிறவன், அதன் மதிப்பை உணர்ந்தவனாக, அது தனக்கு வேண்டுமென விரும்புகின்றான், மற்றும் அதன் மீது கொண்டிருக்கும் அத்தகைய விசுவாசத்தினால், விலையேறப்பெற்ற பொக்கிஷம் காணப்படுகின்றது என அவன் நம்பின நிலத்தை வாங்குவதற்கென, தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றுவிடுகின்றான். சுவிசேஷத்தின் செய்தியை உணர்கின்றவர்கள் மாத்திரமே, அதன் மகிமையான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வார்கள். ஒருவேளை நாம் தற்கால ஜீவியத்தினுடைய சந்தோஷங்களையும், அதன் இலட்சியங்களையும், வாய்ப்புகளையும் நேசிப்போமானால், இவைகளுக்காகவே நாம் ஊழியம் புரிகின்றவர்களாக இருப்போம். ஆனால், ஒருவேளை கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தில் அவருடன் பங்கடைவதற்கென, இந்த யுகத்தில் அளிக்கப்படும் சுவிசேஷத்தின் வாய்ப்பை நாம் புத்திக்கூர்வமாகக் கேட்டு, விசுவாசித்தால், நம்முடைய விசுவாசம் மற்றும் உணர்ந்துக்கொள்ளுதலுக்கு ஏற்ப, பரிசை அடைவதற்கான நமது சுயத்தைப் பலிச் செய்யும் வைராக்கியம் காணப்படும். இராஜ்யத்தின் சுவிசேஷத்தை விசுவாசிக்கின்றவர்கள், பரிசை தாங்கள் பெற்றுக்கொள்வதற்கு இந்த அவர்களுடைய விசுவாசமே, அவர்களுக்கு ஊக்கமாக விளங்குகின்றது. ஏனெனில், இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, ஒருவர் கொண்டிருக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழக்க வேண்டியதாய் இருக்கும் மற்றும், ஒருவன் தான் பரிசை அடைவான் என்று விசுவாசம் கொள்ளவில்லை என்றால், அவன் தன்னிடத்திலுள்ள அனைத்தையும் பலிச் செலுத்திட நிச்சயமாய் விருப்ப மாட்டான். இவ்வுமையில் இடம்பெறும் நிலம் தேவனுக்குச் சொந்தமானதாகும். இங்குத் தேவன் பொக்கிஷத்தை வைத்துள்ளார். விலைக்கொடுத்து வாங்க விருப்பமுள்ள எவருக்கும் விற்கும்படி தேவன் அந்நிலத்தை வைத்துள்ளார். விலைக்கொடுத்து வாங்குபவர்கள் கர்த்தரும், கர்த்தரோடு அவருடைய பரலோக மகிமையில் பங்கடையத்தக்கதாக, பூமிக்குரிய நன்மைகளை பலிச் செலுத்துவதில் அவரோடு இணைந்துக் கொள்ளும்படியான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்பவர்களும் ஆவர். அதாவது, கர்த்தரும், ஆயிரவருஷ யுகத்தில் மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான சகல பொக்கிஷங்களைக் கொண்டு வருவதற்குரிய வேலையில் அவரோடு பங்கடையத்தக்கதாக, பூமிக்குரிய நன்மைகளைப் பலிச் செலுத்துவதில் அவரோடு இணைந்துக் கொள்ளும்படியான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்பவர்களும் ஆவர். பொக்கிஷத்தைப் புதைத்து வைப்பது அவசியம், ஏனெனில் "பன்றிகளுக்கு முன்பாக உங்களது முத்துக்களைப் போடாதீர்கள்" என்று நமது கர்த்தர் கூறியிருக்கின்றார். பன்றிகள் போன்றவர்கள் உங்களைப் புரிந்துக்கொள்ள மாட்டார்கள், உங்களை முட்டாள்களென எண்ணுவார்கள், மற்றும் அவர்களுடைய ஏமாற்றத்தில், உங்களைக் காயப்படுத்த முற்படுவார்கள். "உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்குமுன்பாக உன்மட்டும் இருக்கட்டும்" (ரோமர் 14:22). பூமிக்குரிய விஷயங்களை நீங்கள் அவரிடத்தில் பலிச் செலுத்துங்கள் அந்தரங்கத்தில் பார்க்கின்ற உங்கள் பிதா, வெளியரங்கமாய் உங்களுக்குப் பலனளிப்பார்.

## "விலையேறப்பெற்ற முத்து"

இன்றைய காலங்களைவிட முற்காலங்களில் முத்துக்கள் பொதுமக்களால் பெரிதும் விரும்பப்பட்டது. முத்து வியாபாரிகள் இந்த முத்துக்களை வாங்கி, முத்துக்கள் மிகவும் உயர்வாக மதிக்கப்படும் அங்காடிகளில் எடுத்துச் செல்வார்கள். இந்த உவமையில் முத்து வியாபாரிகளில் ஒருவர், அவர் அதுவரையிலும் பார்த்திராத மிகவும் உயர்வான ஒரு முத்தைக் காண்பதாக இடம்பெறுகின்றது. அந்த முத்து மிகவும் விலையேறப் பெற்றது எனக் கண்ட இவர், இந்த முத்தினுடைய உரிமையாளர் ஆகத்தக்கதாக, தன்னிடத்திலுள்ள மற்ற அனைத்து முத்துக்களையும், உடைமைகளையும் விற்பதில் மகிழ்ச்சிக் கொண்டார்.

உலகம் அளிக்கும் சகல வாய்ப்புகளைவிட, கிறிஸ்துவுடன் அவருடைய இராஜ்யத்தில் பங்கடைவதற்கான சுவிசேஷத்தின் வாய்ப்பானது மிகவும் பெரியது என்பதை இந்த உவமை காட்டுகின்றது. "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே

தெரிந்துக்கொள்ளப்படத்தக்கது" (நீதிமொழிகள் 22:1) என்ற வேதவாக்கியம் தெரிவிக்கிறபடி, உலகத்தின் கனமும், நற்கீர்த்தியின் விளைவான கனமும், ஆஸ்தி, ஸ்தானம் ஆகியவற்றினால் வரும் கனமும் விரும்பத்தகுந்தவைகளே. ஆனால், நம்முடைய கண்கள் கர்த்தராகிய இயேசுவுடன் அவருடைய பரலோக மகிமையிலும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் வேலையிலும், அவருடைய உடன் சுதந்திரராகுவதற்கான இராஜ்யத்தின் வாய்ப்பாகிய, "விலையுயர்ந்த ஒரு முத்தை" காண்கையில்/கண்டுபிடிக்கையில், இதுவே உலகத்தின் சகல கனங்கள், அந்தஸ்துகள் மற்றும் இன்பங்களைக் காட்டிலும் மிகவும் விலையேறப் பெற்றதென நாம் உணர்கின்றோம். இந்த முத்தை வாங்குவதற்குப் பாத்திரமானவர்கள், இதற்காக தங்களுடைய பூமிக்குரியக் காரியங்களைக் கொடுத்துவிடுவார்கள்; தங்களுடைய நல்ல பெயரைக்கூட ஒப்புக்கொடுத்துவிடுவார்கள்; இப்படியாக, நமது நல்ல பெயரையும் ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம். ஏனெனில், ஆண்டவர் இதைக்குறித்து மத்தேயு 5:11, 12-ஆம் வசனங்களில் கூறியுள்ளார், "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கத்தரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே." இப்படியாக விலைக் கொடுத்து இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பம் இல்லாதவர்கள், இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களல்ல. "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" அப்போஸ்தலர் கூறினார் (அப்போஸ்தலர் 14:22). மேலும் இப்படியாக நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும், பரம அழைப்பிற்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாகவும் உபத்திரவங்களைச் சகிக்க விருப்பம் உள்ளவர்களே ஜெயங்கொள்பவர்கள் ஆவர். மேலும் இந்த "ஜெயங்கொள்கிறவர்களுக்கு" மாத்திரமே கர்த்தர் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களையும் கொடுத்துள்ளார். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளிப்படுத்தல் 3:21).

## "சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலை"

இராஜ்யத்தைப் பற்றின மற்றொரு உவமையில், வலை சுவிசேஷ செய்தியை அடையாளப்படுத்துகின்றது. ஒரே ஒரு வகை மீன்தான் விரும்பப்படுகின்றது. ஆனால், வலையோ சகலவிதமான மீன்களையும் வாரிக்கொள்கின்றது. எல்லா வகை மீன்களும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்தைச் சுதந்தரிக்கப் போவதில்லை. ஆகவேதான் இந்த யுகத்தின் முடிவானது, உவமையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் புடமிடுகின்ற, பிரித்தெடுக்கின்ற காலமாக இருக்கின்றது. விரும்பத்தக்கதான மீன்கள் கூடைகளில் சேர்க்கப்படும், மீதமான மற்ற மீன்களோ இராஜ்யத்திற்குப் பாத்திரம் அற்றவைகள் எனக் கடலில் வீசப்படும்; இராஜ்யத்திற்குப் பாத்திரமல்ல என்றாலும், வேறு நோக்கத்திற்கு இவைகள் பயன்படாதவைகள் அல்ல. இராஜ்யத்திற்குப் பாத்திரமற்றவர்கள் என்று (சுவிசேஷ யுகத்தில்) கருதப்பட்ட அந்த வகுப்பார் கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் ஆளுகையின் போது ஆசீர்வதிக்கப்படுவார்கள், மற்றும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்குப் பாத்திரமாய்க் கருதப்படலாம்.

கோதுமை மற்றும் களைகள் உவமையில் வரும் அக்கினிச் சூளை மற்றும் அழுகையும், பற்கடிப்பும் இந்த யுகத்தை முடித்து, ஆயிரம் வருஷம் இராஜ்யத்திற்கு அதாவது, விடாமல் பத்தொன்பது நூற்றாண்டு காலங்களாகச் சபையால் ஜெபம் பண்ணப்படும் பூமியில் ஸ்தாபிக்கப்படப் போகும் இராஜ்யத்திற்கு இடமளிக்கும் மகா உபத்திரவக் காலத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போன்று பூமியிலும் செய்யப்படுவதாக" இது எத்துணை இராஜ்யமாக இருக்கும்! "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32). மனுக்குலத்தின் மத்தியில் பரலோகத்தின் ஆளுகையை ஸ்தாபிப்பதற்கே இந்த இராஜ்யம் செயல்படுகின்றது!

இராஜ்யம் தொடர்பான காரியங்களினால் போதிக்கப்பட்டுள்ள அனைவரும், இதற்கு இசைவாகத் தங்களுடைய காரியங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கர்த்தருடைய புத்திமதியுடன் நம்முடைய பாடம் நிறைவுப்பெறுகின்றது.

**ஆமென்!**

# இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை

பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவன் என்பது பலியாக்கப்பட்ட ஜீவனல்ல. நமது கர்த்தர் ஒருவேளை தம்முடைய ஜீவனை பறிக்கொடுத்திருந்திருப்பாரானால், அது ஒரு பலி ஆகாது. பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவன் என்பது ஏதோ ஒரு நீதியான காரணத்திற்காய் எடுத்துக்கொள்ளப்பட்ட ஜீவனாய் இருக்கின்றது; ஆனால் அவருடைய ஜீவனானது காரணமில்லாமல், அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர் பாடுபட்டார். அவர் எப்படிப் பாடுபட்டார் மற்றும் ஏன் பாடுபட்டார் என்பது தொடர்புடைய விஷயத்தில், "அவர் தேவன் முன்னிலையில் பிழையற்றவராய்க் காணப்பட்டார்" என்று வேதவாக்கியங்களானது தெள்ளத்தெளிவாய் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தேவனுடைய சித்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கமுடையவராய் அவர் காணப்பட்டார்; தேவ சித்தத்திற்கு அவர் தலை வணங்கினார்; தேவ சித்தத்தை நிறைவேற்றும்படியாக அவர் தமது முழு ஜீவியத்தையுமே அர்ப்பணம் பண்ணியிருந்தார். அவரது உண்மையினையும், கீழ்ப்படிதலையும் முழுமையாய்ப் பரீட்சிக்கத்தக்கதாக, அவர் "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்" கீழ்ப்படிதலுள்ளவராகவும், கட்டுப்பட்டு நடப்பவராகவும் காணப்பட தேவன் எதிர்ப்பார்த்தார். அவரது ஜீவனானது அவரிடமிருந்து தேவனாலோ அல்லது மனிதர்களாலோ பறித்தெடுக்கப்படவில்லை; அவர் சொல்லியிருந்ததுபோல, திவ்விய உதவிக்காக அவர் கேட்டுக்கொண்டிருந்திருக்க முடியும் மற்றும் இப்படிக் கேட்டிருந்தாரானால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவருடைய ஜீவனைப் பாதுகாத்திருப்பார்கள்; "என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன்." (யோவான் 10:18 திருவிவிலியம்). ஆகையால் இயேசுவினுடைய பலியின் விஷயத்தில், மனுஷன் அவருடைய ஜீவனை எடுத்துப்போடவுமில்லை, தேவனும் அதைக் கேட்கவுமில்லை, மாறாக அவரது நேர்மையினை நிரூபித்து விவரிப்பதற்கான வாய்ப்பினை அவருக்குத் தேவன் கொடுத்தார்; இதில் பலி ஒன்று சம்பந்தப்பட்டுள்ளது; அதாவது இது தேவன் விரும்பியதை - தமது பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்துவிடுவதைக் குறிக்கும் காரியத்தை - நிறைவேற்றிடும் நிலைக்கு அவரை ஆளாக்கியது/வழிநடத்தியது.

அவரது மரண நேரத்தின்போது, அவர் தம்முடைய புண்ணியத்தைக் குறித்து: "இதை நான் இன்ன நோக்கத்திற்காகவும், இன்ன காரியத்திற்காகவும் செய்கின்றேன் மற்றும் என்னுடைய கீழ்ப்படிதல் நிமித்தமாய் உண்டாகும் புண்ணியம் எதையும், இன்ன ஒரு நோக்கத்திற்காகப் apply/**பயன்படுத்துகின்றேன்**" என்று கூறி, அவர் முன்கூட்டியே தம்முடைய புண்ணியத்தினைப் **பயன்படுத்தவில்லை.** இப்படியாக அவர் ஏதும் செய்யவில்லை. இப்படி அவர் பயன்படுத்திடவில்லை. கிறிஸ்துவின் மரணத்தினை முழு உலகத்தினுடைய பாவத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமென நாங்கள் பேசுகையிலும், "அனைவரின் மீட்பிற்காக அவர் தம்மையே ஈடாக தந்தார்" என்று நாங்கள் பேசுகையிலும், மனுக்குலத்தின் உலகத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகிய அந்தப் பலியினுடைய புண்ணியத்தினைக் கர்த்தராகிய இயேசு அவர்களுக்காகப் பயன்படுத்த வாய்ப்புள்ள திவ்விய ஏற்பாட்டின் மற்ற அம்சங்களையும்கூட நாங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளவே செய்கின்றோம். இவைகள் இவைகளுக்கான ஏற்றகாலத்தில் நிறைவேற்றப்படும் (1 தீமோத்தேயு 2:5, 6; திருவிவிலியம்). இவை அவர் மரித்தபோது நிறைவேற்றப்படவில்லை, மாறாக இனிமேல் நிறைவேற்றப்பட வேண்டியவையாய் இருக்கின்றது.

மரணபரியந்தமுமான தம்முடைய கீழ்ப்படிதலை நமது கர்த்தர் வெளிப்படுத்திட்ட பிற்பாடு, பிதா தாம் குறிப்பிட்டுள்ள அல்லது வாக்களித்துள்ள அனைத்தையும் நிறைவேற்றவும் மற்றும் இவைகளுக்கும் மேலாக நிறைவேற்றவும் பிரியமாய்க் காணப்பட்டார். ஆகையால் அவர் ஏற்கெனவே காணப்பட்ட மனித நிலைமையில், அவரைத் தேவன் மரணத்திலிருந்து எழுப்பாமல், மாறாக "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய்" திவ்விய சுபாவத்தினுடைய மகிமையான நிலைமைக்கு எழுப்பினார். நமது கர்த்தரைப் பூமிக்குரிய சுபாவத்திற்குக் கொண்டுவருவது என்பது பிதாவிற்குக் கூடுகிற காரியம்தான்; ஆனால் இப்படிச் செய்வது என்பது, நாம் புரிந்திருக்கிறபடி "அவருக்கு முன் இருந்த சந்தோஷம்" என்ற இந்த விசேஷித்த கீழ்ப்படிதலுக்கு, விசேஷித்த வெகுமானம் கொடுக்கப்படும் என்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதான தம்முடைய வாக்குத்தத்தத்தைப் பிதா நிறைவேற்றுவதாக இராது.

**--1643--**

## இயேசு பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை உடையவராவார்

மூன்றாம் நாளில் நமது கர்த்தர் பிதாவினால் மரணத்திலிருந்து, இப்பொழுது அவர் பெற்றிருக்கின்றதான இந்த மகிமையான சுபாவத்திற்கு உயர்த்தப்பட்ட போது - பூமிக்குரிய சுபாவத்தைக்காட்டிலும் அதிகம் மேலான சுபாவத்திற்கு உயர்த்தப்பட்ட போது, அவர் பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையையும்கூட உடையவராகவே காணப்பட்டார். தம்முடைய உயர்வான சுபாவத்தினை (exchange) மாற்றாகக்கொடுத்துவிட்டு, பூமிக்குரிய சுபாவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கர்த்தர் நிச்சயமாகவே எண்ணியிருந்திருக்க மாட்டார்; அதிலும் விசேஷமாக இத்தகையதொரு மாற்றிக்கொள்ளுதலானது, தேவனுடைய முழுத்திட்டத்தையும் சீர்க்குலைவிற்குள்ளாக்கும் காரியமாய் இருக்கும் என்கிறபோது, கர்த்தர் இப்படி நிச்சயமாகவே எண்ணியிருந்திருக்க மாட்டார். இதோ விவரிக்கின்றோம்: ஒருவேளை மரணத்திலிருந்து பிதாவின் மகிமைக்கு, திவ்விய சுபாவத்திற்கு எழுப்பப்பட்டுள்ளதான நமது கர்த்தர் இயேசு பின்வருமாறு: "பிதாவே என்னை இவ்வளவு உயர்வாய் உயர்த்தினதில், எனக்கு நீர் பாராட்டியுள்ள அன்பையும், தயவையும் நான் பெரிதும் மதிக்கின்றேன்; ஆனாலும் இப்பொழுதோ நான் மனுஷீக சுபாவத்தையே விரும்புகின்றேன்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்ளலாம். ஒருவேளை அவர் இப்படியாகப் பேசுகின்றார் என்று நாம் கற்பனை பண்ணினால்கூட, அவரது மனுஷீக ஜீவனை அவர் ஒருபோதும் பறிக்கொடுக்காத காரணத்தினால், அதற்கான உரிமையினை உடையவராகத்தான் அவர் காணப்படுவார் என்றே நாம் பார்ப்போம். அவர் அதை laid it down/ கொடுத்து வைத்து மாத்திரமே இருந்தார். தேவனுக்கான கீழ்ப்படிதலில் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்துவிட்டார்; மற்றும் ஒருவேளை அவரது உயிர்த்தெழுதலில் அவர் பூமிக்குரிய சுபாவத்தினை விரும்பிட்டாலும், அதனை திரும்பவும் அவர் ஒருவேளை பெற்றுக்கொள்வதும் முற்றிலும் தகுதியானதே. ஆனால் ஒருவேளை அதை அவர் திரும்பவும் எடுத்துக்கொள்வது என்பது, நிறைவேற்றத்தக்கதாக அவர் துவங்கின வேலை அனைத்தையும் இரத்துச் செய்துவிடுவதாய் இருக்கும்; மேலும் மிகவும் விரும்பத்தக்க பரலோகச் சுபாவத்தை, அதாவது எதைக் குறித்து அவர் "பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:5) என்று பேசினாரோ அந்தப் பரலோகச் சுபாவத்தை அவர் உதறிதள்ளினவராய் இருந்திருப்பார்; இப்படியாக அவர் தாம் விரும்புவதாகத் (யோவான் 17:5-இல்) தெரிவித்ததைப் புறக்கணித்தவராய் மாத்திரமல்லாமல், தெய்வீகத் திட்டத்தையும், ஒழுங்கையும் மற்றும் ஏற்பாட்டையும் புறக்கணித்துப் போட்டவராயும் இருந்திருப்பார், ஏனெனில் இயேசு இந்த உயர்வான சுபாவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும், இன்னுமாக ஆதாமினால் பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கும், அதன் சகல பூமிக்குரிய சிலாக்கியங்களுக்குமான சரிநிகர் சமான விலையென அல்லது "மீட்கும்பொருளென," பூமிக்குரிய சுபாவத்தையும், அதன் சகல உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை இயேசு அருளத்தக்கதாக, பூமிக்குரிய ஜீவனுக்கான, பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை உடையவராகவும்கூட அவர் காணப்பட வேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாய்க் காணப்பட்டது.

## அதைப் பலி செலுத்திடுவதற்கு உடன்படிக்கைப் பண்ணினோருக்கு இப்பொழுது அவர் தமது புண்ணியத்தினைச் சாற்றுகின்றார்

உண்மையில் நமது கர்த்தர் இன்னமும் அனைவரையும் மீட்டுக்கொள்ளவில்லை, ஆனால் 1800-வருடங்களுக்கு முன்னதாகவே பலியை ஏறெடுக்கும் விதத்தில் அவர் தம்மைக் கொடுத்துவிட்டார். ஆனால் உலகம் அனைத்திற்குமான மீட்கும்பொருள் விலைக்கிரயமென, அவர் இன்னமும் புண்ணியத்தினைப் applied/பயன்படுத்திடவில்லை. இவ்வளவு காலங்களாக அவர் அந்த மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினை வைத்து என்ன செய்துகொண்டிருக்கின்றார்? மீட்கும்பொருள் விலைக்கிரயமானது பிதாவினுடைய கரங்களில் வைக்கப்பட்டுள்ளது. இயேசு மரித்தபோது, "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார். கர்த்தர் இயேசுவாகிய மாபெரும் மேசியா ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கும் - ஆதாம் மற்றும் அவரது சந்ததியார் அனைவருக்கும் - கொடுத்துவிடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளதான அந்தக் காரியங்கள் அனைத்திற்குமான உரிமையினை உடையவராய் இருக்கின்றார். இவர்கள் அனைவரும், தேவனுடைய ஜனங்களாகிடுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்தருளுவார். இதற்கிடைப்பட்ட காலத்தில் அந்தப் புண்ணியத்தை வைத்துக்கொண்டு, அவர் என்ன செய்துகொண்டிருக்கின்றார்

ஆதாமின் சந்ததியார் மத்தியிலிருந்து யாரொருவர், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர் தமது பூமிக்குரிய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டதுபோன்று ஒப்புக்கொடுத்திடும் நிபந்தனையின் கீழ்ப் பிதாவுடன் முழுமையான உறவிற்குள்ளாக வருவதற்கு வாஞ்சிக்கின்றாரோ, அப்படியான அந்தத் தனி நபர்களுக்கு கர்த்தர் அதைத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார். இப்படியாக தம்மிடத்தில் வரும் ஒவ்வொருவருக்கும், அவனவன் பலி செலுத்திடுவதற்குத் தன்னை அர்ப்பணிக்கும் தருணத்திலேயே, கர்த்தர் தம்முடைய புண்ணியத்தினைச் சாற்றுகின்றார் மற்றும் கர்த்தருடைய புண்ணியம் சாற்றப்படுதல் காரியமானது, அவனைப் பிதா ஏற்றுக்கொள்வதற்குத் தகுதிப்படுத்துகின்றது; அவர் அவனைப் புதுச்சிருஷ்டியென ஜெநிப்பிக்கின்றார். அதுமுதற்கொண்டு இத்தகையவர்கள் புதுச்சிருஷ்டிகளாக இருக்கின்றனர் மற்றும் இயேசுவின் ஜீவனானது, பலியில் கொடுக்கப்பட்டதுபோன்று, இவர்களது பூமிக்குரிய ஜீவனும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இவர்கள் அனைவருக்கும், அதாவது கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டான புண்ணியத்தின் வாயிலாக, இந்த விசேஷித்த ஏற்பாட்டின்கீழ் இப்பொழுது அழைக்கப்படுபவர்களுக்கு அந்தப் புண்ணியம் சாற்றப்படுகின்றதே ஒழிய, அந்தப் புண்ணியம் இவர்களுக்கு வழங்கப்படுகிறதில்லை/கொடுக்கப்படுகிறதில்லை.

புண்ணியம் சாற்றப்படுகிறதற்கும்/தரிப்பிக்கப்படுகிறதற்கும் மற்றும் புண்ணியம் வழங்கப்படுகிறதற்கும்/கொடுக்கப்படுகிறதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. உதாரணத்திற்கு, ஒருவேளை உங்கள் கரங்களில் நாங்கள் 100 டாலர் கொடுத்தோம் என்றால், நாங்கள் உங்களுக்கு இப்படி நேரடியாய்க் கொடுத்ததன் வாயிலாக, 100 டாலர் வழங்கியிருக்கின்றோம் என்று அர்த்தப்படும். ஆனால் ஒருவேளை உங்களுக்குக் காசோலையில் 100 டாலர் எழுதிச் சம்மதக் கையெழுத்திடுகிறோம் என்றால், நாங்கள் உங்களை 100 டாலர் உரியவராக்குகின்றோம்/உங்களுக்கு 100 டாலரைச் சாற்றுகின்றோம். சபையின் விஷயத்தில் தரிப்பித்தலே/சாற்றுதலே நடக்கின்றது; இவர்களுக்குப் புண்ணியமானது நிஜமாக கடந்துவருகிறதில்லை. ஆதாம் ஆரம்பத்தில் பெற்றிருந்ததும் மற்றும் அவரால் இழந்துபோகப்பட்டதுமான, மனுஷீக ஜீவனுக்கும், மனுஷீக சிலாக்கியங்களுக்குமான உரிமையினைத்தான், நமது கர்த்தர் மனுக்குலத்திற்கு கொடுக்கவிருக்கின்றார். மனுஷீக ஜீவனுக்கான அந்த உரிமையினை நமது கர்த்தர் மனுக்குலத்திற்குக் கொடுத்துவிட வேண்டியவையாகும், ஆனால் அவர் இப்பொழுது அதைக் கொடுத்து விடுவதில்லை. மனுக்குலத்தாரிடத்தில் அதனை ஏற்றகாலத்தில் கொடுக்கத்தக்கதாக, அதனை வைத்திருக்கின்றார். அவர் அந்தப் புண்ணியத்தினை இப்பொழுது நமக்குச் சாற்ற மாத்திரமே செய்கின்றார் அல்லது பரம பிதாவுடன் நாம் இத்தகைய ஒப்பந்தத்திற்குள் பிரவேசிக்க விரும்பும் பட்சத்தில், பிதாவுடனான நம்முடைய ஒப்பந்தத்திற்குக் கையெழுத்திடுவதைக் குறிக்கும் விதத்தில் சாற்றுகின்றார்.

## உலகமானது, அவர்களுக்காக விலைக்கொடுத்து வாங்கப்பட்டதான பூமிக்குரிய ஜீவ-உரிமைகளைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும்

உலகத்திற்காக அந்தப் புண்ணியமானது கொடுக்கப்படப் போகின்றது என்ற கருத்திற்கு மீண்டும் வருகையில், அது சம்பந்தமாகத் தெளிவாகச் சொல்ல வேண்டுமெனில் . . . அந்தப் புண்ணியமானது **முழு உலகத்திற்கும்** கொடுக்கப்படப்போவதில்லை; மாறாக வேதவாக்கியங்கள் சொல்வதுபோன்று "எல்லா ஜனங்களுக்கேயாகும்." "**எல்லா ஜனங்கள்**" என்பதானது, முழு உலகத்தையும் குறிப்பதில்லை, மாறாக மாபெரும் மத்தியஸ்தரின் இராஜ்யத்தினுடைய காலப்பகுதியின்போது, தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாகக் கடந்துவரப்போகிற அனைவரையும் குறிக்கின்றது. இந்த ஜனங்களுக்கு மாத்திரமே புண்ணியமானது applied/பயன்படுத்தப்படும். இந்த வாய்ப்பினைப் புறந்தள்ளி, இந்த ஜனங்களில் ஒருவராகிடுவதற்கு மறுத்திடும் யார் ஒருவரும், அருளப்படவிருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் புறந்தள்ளுகிறவராய் இருந்து, மனுஷீக ஜீவனுக்குரிய சீர்ப்பொருந்துதலை அடையாமல் போய்விடுவர். இத்தகையவர்கள் பூரணப்படுத்தப்படுவதில்லை. இத்தகையவர்கள் மனுஷீக உரிமைகளைப் பெற்றுக்கொள்வதேயில்லை. இத்தகையவர்கள் மரணத்திலிருந்து விழித்துக்கொள்வார்கள், ஆனால் இந்த விழித்துக்கொள்ளுதல் என்பது சீர்ப்பொருந்துதல் ஆகாது. இது வெறும் முதலாம் படியேயாகும்; இதிலிருந்தே அவர்கள் விரும்பும் பட்சத்தில் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்கு நேராய் வழிநடத்தக்கூடிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்கமுடியும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை - மகா மத்தியஸ்தரை, மகா தீர்க்கத்தரிசியை, ஆசாரியனை மற்றும் இராஜாவை - இயேசுவைத் தலையாகவும், இந்தச் சுவிசேஷ யுகத்தின் சபையை அவரது அங்கத்தினர்களாகவும் பெற்றிருக்கும்

தீர்க்கத்தரிசியை - உங்களுக்கு "உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றார்" (அப்போஸ்தலர் 3:22, 23).

இக்காரியம், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்;" என்ற வேதவாக்கியத்திற்கு இசைவாக உள்ளது (1 யோவான் 5:12; யோவான் 3:36). அவன் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டான்; அவன் சத்திய அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டுள்ளான்; இஸ்ரயேல் வாயிலாக அனைவருக்குமே கடந்துவருகின்றதான புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கடுத்த ஏற்பாடுகளின்கீழ் வரும் சிலாக்கியத்தினை அடையும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளான். ஆனால் ஒருவேளை அந்த வாய்ப்பினை அவன் பயன்படுத்திடுவதற்கும், தேவனுடைய ஜனங்களில் ஒருவராகிடுவதற்கும் தவறுவானாகில், அவர் கோபத்திற்கு நீங்கலாகவே மாட்டான். அவன் ஆயிரவருட யுகத்தின் முடிவைக் காணாமலும் - சீர்ப்பொருத்தப்பட்ட ஜனங்களில் ஒருவராகிடாமலும் - தேவனுடைய கோபத்தின்கீழ் மரித்துப்போய்விடுவான்.

---

## ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை

இயேசு எதைப் பலிசெலுத்திட்டார்? எதைக் கொடுத்திட்டார்/கொடுத்துவைத்திட்டார்? என்று நாம் தெளிவாகக் காணமுடிகின்றதா? அவர் தம்மையே கொடுத்தார், பிதாவின் சித்தம் என்னவாக இருப்பினும் அதற்குத் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டார், மாறாக அவரிடமிருந்து பூமிக்குரிய ஜீவன் எடுத்துப்போடப்படத்தக்கதாக அவர் பாவம்செய்து, அது அவரிடமிருந்து பறித்தெடுக்கப்படவில்லை. இந்த ஜீவனைப் பரலோக சுபாவத்திற்காகவென்று அவர் கொடுத்து மாற்றிக்கொள்ளவும் இல்லை. **"No man taketh it from me, but I lay it down of myself. I have power to lay it down, and I have power to take it again. This commandment have I received of my Father." "ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்"** (யோவான் 10:18) எனும் அவரது வார்த்தைகளுக்கு இசைவாக தம் பூமிக்குரிய உரிமைகளை அவர் ஒப்படைக்க அல்லது கொடுத்துவைக்க மாத்திரமே செய்தார். அதை அவரிடமிருந்து எடுத்துப்போடத்தக்கதாக எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை; ஏனெனில், "நியாயப்பிரமாணத்தைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்" என்று தேவன் வாக்களித்துள்ளார். ஆகையால் நமது கர்த்தர், தம்முடைய ஜீவனைத் தாமே முன்வந்து கையளித்துக் கொடுக்கவில்லையெனில், அவரது ஜீவனானது பாதுகாக்கப்பட்டிருக்கும்.

மறுபடியும் எடுத்துக்கொள்ளத்தக்கதாக அவர் அதைக் கொடுத்தார்/கொடுத்துவைத்தார். "உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி அதைப் பிதாவின் கரங்களில் கொடுத்துவைத்திட்டார். ஆகையால் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபோது, புதுச்சிருஷ்டியாகிய அவருக்கு பூமிக்குரிய ஜீவனுக்கும், பூமிக்குரிய பாதுகாப்புக்கும், பூமிக்குரிய கனத்துக்கும், மகிமைக்கும், பூமிக்குரிய ஆளுகைக்கும் மற்றும் அதிகாரத்திற்குமுரிய அவரது உரிமைகள் அவருடையதாகவே இருந்தன. தம்முடைய பூமிக்குரிய உரிமைகள் எதையும் அவர் இழந்துபோகவும் இல்லை, பறிக்கொடுத்திடவுமில்லை. இந்தப் பூமிக்குரிய உரிமைகளே, கிறிஸ்து மூலமாக ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்குக் கடந்துவரும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் அடிப்படையாயின.

R 4658

# "ஒட்டகமும், ஊசியின் காதும்"

## மத்தேயு 19:13-26

"இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார்."

(வசனம் 14).

எருசலேமுக்குப் போகிற வழியில், தங்கள் பிள்ளைகள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று விரும்பின தாய்மார்களினால் ஆண்டவர் எதிர்க்கொள்ளப்பட்டார். அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஆண்டவரின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாகவும், அவருடைய நேரத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்தவர்களாகவும், வந்த தாய்மார்களைத் தடுத்து, அவர்களைக் கடிந்துக்கொண்டார்கள். இதை இயேசு கேட்டபோது, அவர்களை அழைத்து, "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று கூறி, சிறுபிள்ளைகளின் மேல் தம் கரங்களை ஆசீர்வதிக்கும்படிக்கு வைத்தார் (மத்தேயு 19:14).

இதிலிருந்து பரலோக இராஜ்யம், சிறுபிள்ளைகளைக்கொண்டிருக்கப் பெற்றிருக்குமென நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. இந்தத் தப்பறையான கருத்துப் பரவிப்போய், இப்படியான கருத்து மனதில் பதியப்பட்டுக் காணப்படுகின்றது. எந்தச் சிறு பிள்ளையினாலும், பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசித்திட முடியாது. விசுவாசத்தின் கேட்கும் செவிகளை உடையவர்கள் மாத்திரமே இராஜ்யத்திற்கும், அதன் மகிமைக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். நமது கர்த்தர் சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தக் காரியமானது, அவருடைய இரக்கத்தையும், அன்பையும் மற்றும் சிறுபிள்ளை பருவத்தின் தூய்மை மற்றும் கபடமற்ற தன்மையை அவர் விரும்புவதையும் குறிக்க மாத்திரமே செய்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தில் காணப்படுபவர்கள் சிறுபிள்ளைகள் போன்று, எளிமையான இருதயங்கொண்டவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், தங்களுடைய பரமபிதாவை நம்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இப்படியாக இருப்பவர்களே இராஜ்யத்தின் சுதந்தரர்களாக இருப்பார்கள்.

இன்னொரு சுவிசேஷத்தின் பதிவானது, இயேசுவின் சீஷர்களாய் இருப்பவர்கள், சிறுபிள்ளைகளாக ஆக வேண்டும், அதாவது வஞ்சகமற்ற விஷயத்திலும், விசுவாசம்/நம்பிக்கை வைக்கும் விஷயத்திலும் சிறுபிள்ளைகள் போன்று காணப்பட வேண்டும் என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்படுகின்றது. இராஜ்யத்தின் சுதந்தரர்களாய் இருக்கப் போகிறவர்கள், "ஜெயங்கொண்டவர்களாக" இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு, கர்த்தர் எங்கெல்லாம் வழிநடத்துகின்றாரோ, அங்கெல்லாம் அவரைப் பின்பற்றுபவர்களாய் இருப்பார்கள். நமது கர்த்தர் இயேசுவினால் அவர் ஒன்பது வயது சிறுவனாக இருந்த போது, அவருடைய சிலுவையை எடுத்துச்செல்ல முடியாமல் இருந்தது போன்று, சிறு பிள்ளைகளாலும், அவர்களுக்கான பகுத்தறிவின் வயதை அடைவது வரையிலும், அவர்களால் ஆவிக்குரிய விஷயத்தில் கிறிஸ்துவின் பின்னடியார்களாகிவிட முடியாது. இந்தப் பகுத்தறிவின் வயதை ஒவ்வொரு பிள்ளைகளும் வெவ்வேறு வயதில் அடைகின்றனர். பன்னிரண்டு வயது பிள்ளைகள் விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும், கர்த்தருடைய சித்தத்திற்கும் அர்ப்பணம் பண்ணுவதற்குமான சிறந்த சாட்சியங்களை கொடுத்துள்ளதையும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதற்கான சாட்சியங்களை/ஆதாரங்களைக் கொடுத்துள்ளதையும் நாம் அறிந்திருக்கின்றோம். மற்றப் பிள்ளைகள் அல்ல, இந்தப் பிள்ளைகளே, கிறிஸ்துவினுடைய ஆயிர வருட இராஜ்யத்தில் அவரோடு கூடப் பங்கடைவதற்கான நம்பிக்கைப் பெற்றிருப்பார்கள்.

### "ஐசுவரியமுள்ள வாலிபனுக்கான பரீட்சை"

நமது கர்த்தர் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில், அவரிடம் ஒருவன் வந்து, "நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" என்று கேட்டான். இந்த வாலிபன் சரியான கருத்துக்கொண்டிருந்தான், அதாவது நித்திய ஜீவன் என்பதே மனித குடும்பத்திற்கு முன்பாகக் காணப்படும் அனைத்து நம்பிக்கைகளிலுமே, மாபெரும் நம்பிக்கை என்றும், மாபெரும் தேவை என்றுமுள்ள சரியான கருத்தைக்கொண்டிருந்தான். இக்கேள்வி எழும்பினதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம், காரணம் இது அனைவரும் அறிய ஆவல் கொண்டுள்ள

பதிலை வெளிக்கொண்டு வந்தது. நித்திய ஜீவனுக்கான பாதைக்கு வழிநடத்துவதைத் தவிர, மற்றப்படி, தற்கால ஜீவியத்திற்கு என்னத்தான் முக்கியத்துவம் காணப்படுகின்றது? ஒருவேளை மரணத்தில் நாம் என்றென்றுமாய் முற்றிலும் அழிக்கப்பட்டு விடுவோம் என்பதாக நமக்கு உறுதிப்பண்ணப்பட்டால், நாம் எவ்வளவு சோர்ந்துப் போயிருப்போம்! இன்னுமாக இந்தத் தற்கால ஜீவியம் எவ்வளவு அற்பமாய்த் தோன்றியிருக்கும்! நித்திய ஜீவனுக்கான நம்முடைய இருதயங்களின் ஏக்கங்களுக்கு, இந்தத் தற்கால ஜீவியம் உதவாததாகத் தோன்றியிருக்கும்!

அந்த வாலிபன் தன்னைத்தான் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, நமது கர்த்தர் கேள்வியைத் தவிர்த்தார். "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? நீ என்னை நல்ல போதகர் என்று ஒப்புக்கொள்வது ஏன்? நான் ஒன்றில் உரிமைப்பாராட்டுவது போன்று மேசியாவாக இருக்க வேண்டும், இல்லையேல் நான் ஏமாற்றம் பண்ணுகிறவராகவும், நல்லவைகளுக்குத் தூரமானவராகவும் இருக்கவேண்டும். நீ என்னுடைய மேசியாத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றாயா? ஒருவேளை இல்லையெனில், எப்படி என்னை நல்லவன் என்று சொல்கின்றாய் அல்லது சகல நன்மைகளுக்கும் ஊற்றாய் இருக்கும் தேவனிடத்திலிருந்து வராத எதையும், நன்மை என்று எப்படி நீ ஒப்புக்கொள்கின்றாய்? நீ நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளைக் கைக்கொள் என்பதே உன் கேள்விக்கு நான் பதிலாகக் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு பேசினார். இப்படி இயேசு கூற, வாலிபன் எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: "கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார்" (வசனம் 18, 19).

இந்த வாலிபன் ஒரு முன்மாதிரியான வாலிபனாக இருந்தான் மற்றும் இயேசு இவனில் அன்புகூர்ந்தார். இவன் தன்னால் முடிந்த மட்டும், மற்றும் தான் அறிந்திருந்தமட்டும், யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு வந்தான். தன்னை நேசிப்பதைப் போலவே, தன்னுடைய அயலானை, தான் நேசிப்பதாக இவன் எண்ணினான்; ஆனால் இப்படியாக இவன் எண்ணினது தவறு என்பதை 21-ஆம் வசனத்தின் ஆலோசனையைக் கூறி இயேசு இவனுக்கு வெளிப்படுத்தினார். "அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்."

ஆ! நமது கர்த்தர் முக்கியமான இடத்தில், தம்முடைய விரலை வைப்பதற்கு அறிந்தவராக இருந்தார் உலகத்திலேயே தெய்வீக ஏற்பாடுகளுக்கு ஒருவன் இசைவாக வாழ நாடுகின்றான் என்றால், அது தானாகத்தான் இருக்கும் என்ற பெருமிதத்துடன் அந்த வாலிபன், கர்த்தரிடத்தில் சென்றான். "நீ அபூர்வமானவனாக இருக்கின்றாய்" என்று ஆண்டவர் ஒருவேளை சொல்லுவார் என்று எண்ணி, அவன் ஆண்டவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவரிடத்தில் வந்தவனாய் இருந்தான். "நீ உன் அயலானை அன்புகூர்ந்தாயானால், நீ சௌகரியமாய் இருக்க விரும்பிட்டது போன்று, அந்த உன் அயலானையும் சௌகரியமாய் இருக்கத்தக்கதாக, நீ பிரயாசமாகிலும் எடுத்திருப்பாய்" என்று கர்த்தர் சொல்லவில்லை. இவன் ஐசுவரியவானாய் இருப்பதில் திருப்திக்கொண்டிருக்க, இவன் தன்னைத்தான் நேசிப்பது போன்று, தான் நேசிப்பதாக எண்ணிக் கொண்டிருந்த அயலானே, மிகவும் ஏழையாகவும், கவலைக்கிடமான நிலைமையிலும் காணப்பட்டான். ஆகவே ஆண்டவர் இவனுடைய பிரச்சனை என்ன என்பதை இவனுக்கு வெளிப்படுத்தின போது, இவன் அதை உடனடியாகக் கிரகித்துக் கொண்டான். இவன் இப்போது, முன்பொருபோதும் இல்லாத அளவுக்குத் தன்னுடைய நிலைமையைக் கண்டான். இது இவனுக்கு ஒரு புதிய பரீட்சையாக இருந்தது. இப்படியாகவே அனைவருக்கும் இருக்கின்றது. முன்பொரு பாடத்தில் நாம் இராஜ்யம் ஒரு மாபெரும் பரிசாகவும், மாபெரும் மதிப்புள்ள . . . ஒரு முத்தாகவும், ஒரு பொக்கிஷமாகவும் இருக்கின்றது என்றும், இதனை அடைவதற்கு, நம்மிடத்தில் உள்ள அனைத்தையும் நாம் விலையாகக் கொடுக்க வேண்டும் என்றும் பார்த்தோம்; மேலும் இந்தப் பாடமும் கூட, இதே கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

மிகவும் நல்ல ஓர் ஜீவியத்தை ஜீவித்த இந்த வாலிபன் பரலோகத்தை அடைய தவறிப்போய், நித்தியமான சித்திரவதைக்குள்ளாகப் போடப்பட்டான், காரணம் இவன் கர்த்தருடைய சீஷனாகுவதற்கெனத் தன்னில் உள்ள யாவற்றையும் பலிச்செலுத்தவில்லை என்று சிலர் எண்ணிக்கொண்டது போன்று, நாமும் எண்ணி, தவறு செய்யாமல் இருப்போமாக. நித்தியமான சித்திரவதை இல்லாமலேயே, இவன் இராஜ்யத்தை இழந்ததே, எதிர்க்காலத்தில் இவனுக்கு

போதுமான தண்டனையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மனித குடும்பத்தின் அங்கத்தினர், ஆயிர வருட இராஜ்யத்தின் ஆசீர்வாதமான நிலைமையின் கீழ், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரிய இராஜ்யத்தின் கனத்தை அடைய பாத்திரமாய் இல்லை என்றாலும், மனித பரிபூரண தளத்தில் நித்திய ஜீவனை அடைவார்கள்.

மாபெரும் பரிசை அடையத்தக்கதாக, தங்களுடைய ஜீவியங்களையும், தங்களுடைய அனைத்தையும் மகிழ்ச்சியுடன் பலிச்செலுத்துபவர்களாக இருப்பவர்களே தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

## ‘‘ஊசியின் காது வழியாய் நுழைதல்’’

இவ்விஷயத்தைக் குறித்து நமது கர்த்தர் சீஷர்களிடம் கருத்துத் தெரிவித்து ஐசுவரியவான்கள், இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு எடுக்கும் பிரயாசம் தொடர்புடைய விஷயத்தில் மிகுந்த சிரமம் உள்ளது என்று கூறினார். கண்டிக்கும் விதத்தில் அல்லாமல், மாறாக அனுதாபத்துடனே, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று இயேசு கூறினார் (மத்தேயு 19:24). இது சீஷர்களை வெகுவாய் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. ஏனெனில் சீஷர்களின் நாட்களில் மதம் சம்பந்தப்பட்ட பெரும்பான்மையானவர்களாகிய பரிசேயர்களும், வேதபாரகர்களும் ஐசுவரியமுள்ள வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதைச் சீஷர்கள் அறிந்திருந்தார்கள். "அவருடைய சீஷர்கள் அதைக்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால், யார் ரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள். இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார்” (மத்தேயு 19:25, 26). தேவன் ஒருவேளை ஐசுவரியவான்களைப் புறக்கணித்தார் என்றால், தேவனால் இராஜ்யத்திற்கு என்று எவரையும் கண்டுபிடிக்க முடியாது என்று மனிதர்கள் சொல்லுபவர்களாய் இருப்பார்கள்.

சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில், எந்த ஐசுவரியமுள்ள மனுஷனும் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஒருவன் அனைத்தையும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். இல்லையேல், அவன் இராஜ்யத்தில் இடம் பெறுவதிலிருந்து தள்ளப்படுவான். இராஜ்யத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் ஐசுவரியவான்களுக்கும், ஏழைகளுக்கும் ஒரே போல்தான் உள்ளது. மாபெரும் விலையுள்ள முத்தை ஒருவன் அடைய வேண்டுமெனில், இதற்காக அவன் தன்னில் உள்ள யாவற்றையும் விற்க வேண்டியவனாய் இருக்கின்றான். ஐசுவரியவான் தன்னில் உள்ள யாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவனாய் இருக்கின்றான்; பின்னர் அவன் தன்னுடைய ஐசுவரியங்கள் மீது உக்கிராணக்காரனாய் இருந்து, தனக்கான உக்கிராணத்துவத்தின் கணக்கை ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கின்றான்.

சூரியன் அஸ்தமித்தப் பிற்பாடு, பட்டணத்திற்குள்ளாகப் போவதற்கான பெரிய வாயிற்கதவில் இருக்கும், சிறிய வாயில் (அ) ஊசியின் காது வழியாய்ப் பாரங்கள் கீழே இறக்கி வைக்கப்பட்டு, ஒட்டகங்கள் செல்வதைக் கீழே இடம்பெறும் கவிதை விளக்குகின்றது. இப்படியாகவே ஐசுவரியவான்கள், ஐசுவரியம் எனும் பாரங்களை இறக்கி வைத்துவிட்டு, தரித்திரர் ஆகும்போது, இராஜ்யத்திற்குள் செல்லலாம்.

## ‘‘ஊசியின் காது வழியாய்...’’

"ஊயரமாம் என்னுடைய ஒட்டகம், சரக்குகள், சுமைகள், ஒட்டகங்களின் மேலே,
ஊசியின் காதெனச் சிறியதாய் வாயிற்கதவு உள்ளதே.

உள்ளிருக்கும் பட்டணம் வெகு அழகாமே
நானும் என் ஒட்டகமும் பிரவேசிக்க வேண்டுமே.

நீ உந்தன் சுமையை இறக்கிவிடு, நீ உந்தன்
பெருமை எனும் மூட்டையை இறக்கிவிடு என்று கூக்குரலிட்டான் வாயிற்காவலன்.

அதைச்செய்திட்டேன் நான், ஆனாலும் சுமை இன்னும் பெரிதாய் இருந்ததே
இடுக்கமான வழிக்கு, எந்தன் சுமை மிகவும் அகலமாய் இருந்ததே.

இன்னும் குறைத்திட, சுயநலம் எனும் மூட்டையை
வீசிடு இப்போது, என்றான் வாயிற்காவலன்.

மிகுந்த கலக்கத்துடன் கீழ்ப்படிந்தேனே நான்,
எனினும் நானும், எந்தன் ஒட்டகமும் உள்ளே செல்ல இயலவில்லையே.

ஆ! உந்தன் சுமைகளில் பொன் கொஞ்சம்
இருக்கின்றதே என்றான் வாயிற்காவலன்.

கொஞ்சமான இதை மாத்திரமே நான் கொண்டிருந்தேனே
எனினும் வீசிடு வெளியே என்றான் வாயிற்காவலன்.

இதோ உயரமான எந்தன் ஒட்டகம் உயரம் குறைந்தே
வாயில் கதவின் அளவுக்குக் குறைந்ததே,

எந்தன் அனைத்து ஐசுவரியங்களும், பெரிய ஆஸ்தியும்
குறுகலான வாயிற்கதவு வழியே நுழைந்ததே எளிமையாக!"

**ஆமென்!**

## ஊசியின் காதினிலே
## THE CAMEL AND THE NEEDLES EYE

*உயரமாகவே சுமை மிக ஏற்றியே*

*ஒலிமுக வாயிலின் கதவருகினிலே*
*ஒட்டக மீதினில் அமர்ந்தே வந்தே நின்றேனே.*

*ஊசியின் காதினைப்போன்றேதான்*
*திட்டிவாசலும் இருந்ததுவே.*

*உள்ளே காணும்பெருநகரோ, மிகவும் அழகாய் விளங்கியதே.*

*நானும் என் ஒட்டகமும் உள்ளே செல்லவே,*
*வரிசையில் நின்றோம்*

*சுமைதூக்கும் நண்பரோ, என் சுமையினை முழுதும்*

*இறக்கிவைக்கவே வேண்டும் என்றே*

*உரத்த சத்தமாய் இரைந்தே கூவினாரே.*

*தற்பெருமை எனும் பொதியினை முதலாய்*

*இறக்கி வெளியினில் வீசு என்றாரே.*
*அதனை வீசிய பின்னும்தான் சுமை என்னவோ குறையவே*
*இல்லையே, திட்டிவாசலோ உள்ளே நுழையவும்கூடாது*
*போன்றே மிகவும் குறுகலாய் அமைந்ததுவே.*
*இன்னும்கூட குறைக்கவேண்டியே, சுமைதூக்கி என்னை*

*தன்னலம் என்ற கூடையைக்கூட*
*இறக்கச்சொல்லியே பணித்தாரே.*

*கீழ்ப்படிந்தோனாய் ஆரவாரமாய் அதனையும் இறக்கியே*
*வைத்தபின்னும், நாங்களிருவரும் வாயிலினுள்ளே,*

*நுழைவதற்கில்லை. சுமைதூக்கி வியந்தே, ஆஹா, உனக்குப்*
*பொருளாசை உள்ளதோ?.*

*சிறிதளவேனும் தங்கத்தின்மீதே பற்றுக்கொண்டிருந்தால்*
*அதையும் தூக்கி எறிந்துவிடு.*

*எறிந்தபின்னே ஆச்சர்யம் அன்றோ,*
*ஒட்டகம் சிறிதாய் சுருங்கக்கண்டேன்.*

*ஊசியின் காதினில் நுழைந்திடக்கண்டேன்.*
*என் ஒட்டகம் முற்றிலும் ஊசியின் காதினில்*

*எளிதாய் நுழைய இயன்றதுவே,*
*குறுகலான அந்தத் திட்டிவாசலில் எளிமையாகவே*

*நுழைந்தேனே, அழகிய நகரில் இடம்பிடித்தேனே,*
*தேவனுக்கே நன்றி!*

**--1652--**

______________

R 4668

# "பெரியவன் ஊழியக்காரன்"

## மத்தேயு 20:17-34

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (வசனம் 28)

குறிக்கோள், அதாவது சுயநலமான குறிக்கோள் உலகத்தை இயக்கிக்கொண்டிருக்கின்றது. தேவனைப் பிரியப்படுத்துவதும், அவருடைய பலன்களைப் பெற்றுக்கொள்வதுமாகிய ஒருவகையான குறிக்கோளுக்கு/ஆசைக்குத் தேவனுடைய வார்த்தைகளிலுள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் ஊக்கமூட்டுகின்றன. இயேசுவின் அர்ப்பணம் பண்ணியுள்ள மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துகிறதுமான பின்னடியார்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தைச் சிந்தித்துப் பாருங்கள்; அதென்னவெனில் அவர்கள் மரணம் வரை உண்மையுள்ளவர்களாய் இருந்தால், ஜீவகிரீடத்தையும், அழியாமையையும், அவருடைய இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும் அவர்கள் பங்கடைகின்றவர்களாக, தங்களுடைய ஆண்டவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் ஓர் இடத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும். சிருஷ்டிகரிடமிருந்து, விசுவாசத்தின் கேட்கும் செவிகளை உடையவர்களிடத்தில் வரும் இந்தக் காரியத்தைக் காட்டிலும், குறிக்கோள் கொள்ளத்தக்கதாக இதுபோல் மிகப் பலமாய், வேறு எந்தப் பூமிக்குரிய காரியத்தினாலும் நமது கவனத்தை ஈர்க்க முடியாது. எனினும் இந்த வாக்குத்தத்தங்களினால் எழுப்பப்பட்ட இந்தக் குறிக்கோள்கள்/ஆசைகள், நமக்குக் கண்ணிகளாகக்கூட மாறலாம் என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம். அவமானம், தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுதல் மற்றும் இகழ்ச்சியை நாம் உண்மையாய் சகித்து முன்னேறுதல் மற்றும் இறுதிவரையிலும் தாழ்மையை, தேவனிடத்திலான முழுமையான நேர்மையை, அவருடைய வழிநடத்துதல்களுக்கு நாம் முழுமையாய் ஒப்புக்கொடுத்தலை நிரூபித்தல் ஆகிய நிபந்தனைகளின் கீழ்தான் நாம் இராஜ்யத்தை அடைய முடிகின்றவர்களாய் இருப்போம். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போன்று பூமியிலும் செயல்படுவதாக" என்று நாம் ஜெபம் பண்ணுகிறதான வரவிருக்கின்ற இராஜ்யத்தில் மேசியாவோடு கூட ஆள வேண்டுமெனில், ஒருவர், "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்ற வசனத்தின்படிக் காணப்பட வேண்டும் (1 பேதுரு 5:6).

இயேசு தம்முடைய அவமானத்துடன் கூடிய பாடுகளையும், மரணத்தையும் பற்றி முன் அறிவித்த போதிலும், அப்போஸ்தலர்களுடைய மனங்களுக்கு முன்னதாக இராஜ்யத்தைப்பற்றின நம்பிக்கை பிரகாசமாகவே காணப்பட்டது; ஆகையால்தான் இயேசுவுக்குப் பிரியமாய் இருந்த பின்னடியார்களில் இருவரான யாக்கோபும், யோவானும், தங்களுடைய தாயார் வாயிலாக, அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, மாபெரும் இராஜாவாகிய அவருடைய வலது பக்கத்தில் ஒருவரும், இடது பக்கத்தில் இன்னொருவரும் உட்காரத்தக்கதாக ஒரு வாக்கை அடையும்படிக்கு வேண்டிக் கொண்டார்கள்.

இந்த ஒரு விண்ணப்பத்தின் மூலமாய், இப்படிப்பட்ட உயர்வான நிலையை அடைவதற்குரிய விலையைக் குறித்து அன்பும், குறிக்கோளும் கொண்டுள்ளவர்களாகிய சீஷர்கள் முழுமையாய்க் கணக்குப் பார்க்கவில்லை என்று மாபெரும் போதகர் கருத்துத் தெரிவிக்க ஏதுவாயிற்று. அவர்கள் தம்முடைய அவமானம் மற்றும் நிந்தனையின் பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கு விரும்புகின்றார்களா என்றும், அவர்கள் தம்முடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள விரும்புகின்றார்களா என்றும், அனைத்துப் பூமிக்குரிய நன்மைகளையும் பலிச்செலுத்திட விரும்புகின்றார்களா என்றும் கர்த்தர் அவர்களிடம் கேட்டார். அவர்கள் விலையைக் கணக்குப்பார்த்து விட்டனர்; மற்றும் உடனடியாக தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர். அவர்கள் மாபெரும் போதகருடைய பாடங்களை நன்கு கற்றிருந்தனர். அவர்கள் இத்தகைய மனவிருப்பம் கொண்டதினால், அவருடைய அவமானத்திலும், அவருடைய மரணத்திலும் பங்கடைவதற்கும் மற்றும் அவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் உட்காருவதற்கும் உரிய சிலாக்கியம் அவர்களுடையதாய் இருக்குமெனக் கர்த்தர் அவர்களுக்கு நிச்சயம் அளித்தார். அவருடைய ஜனங்களின் பரீட்சைகள் நிறைவடையும்போது, பிதா ஆயத்தம் பண்ணினதும், ஏற்படுத்தினதுமான நியாயமான நியமனத்தின்படி /அளவுகோலின்படி/கொள்கையின்படி, கர்த்தருடைய வலது, இடது பக்கத்தில் இருக்கும் இராஜ்யத்தின் உயர்வான கனத்திற்குரிய ஸ்தானம் அருளப்படும். அப்போஸ்தலர்களோடு கூட

நாமும், அவர்களுடைய முழுமையான அர்ப்பணிப்பிலும், ஆண்டவருடைய நிச்சயத்திலும்/வாக்கிலும் எவ்வளவாய்க் களிக்கூரலாம்! ஆண்டவரோடு கூட, அவருடைய சிங்காசனத்தில் அவருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராக இடம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாமும் உண்மையாய் நாட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

யாக்கோபு மற்றும் யோவானுடைய குறிக்கோளானது/ஆசையானது, கர்த்தரிடம் மிகவும் விசேஷித்த நெருக்கமான இடத்தை அடைய வேண்டுமென்றதான அவர்களது விருப்பத்தைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் இயேசு அவர்களைக் குறிப்பாய்க் கடிந்துக்கொள்ளாமல், மறைமுகமாகக் கடிந்துக்கொள்கின்றார். இந்த இருவரும் எவ்வாறு கனத்திற்குரிய பிரதான இடங்களை அடைய நாடினார்கள் என்பதை, மற்றவர்கள் கேட்டபோது மிகவும் எரிச்சலடைந்தார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மனிதனுடைய கணிப்பிலிருந்து, தேவனுடைய கணிப்பு எவ்வளவு வேறுபாடாக இருக்கின்றது என்பதை ஆண்டவர் காட்டினார். மனுஷர்கள் மத்தியில், ஆக்கிரமிக்கிறவர்களும், வல்லமையுள்ளவர்களுந்தான் மற்றவர்கள்மேல் ஆளுகையையும், அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றனர், ஆனால் தெய்வீக ஏற்பாட்டிலோ, இது முற்றிலும் தலைக்கீழாக இருக்கின்றது. தேவன் தாழ்மையுள்ளவர்களையும், சாந்தமுள்ளவர்களையும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்களையுந்தான், மிகவும் கனப்படுத்தி, உயர்வான ஸ்தானத்தில் அமர்த்துவார். இந்தச் சம்பவத்தில், தாழ்மையின் அவசியத்தைக் குறித்துத் தம்முடைய பின்னடியார்களுக்குப் போதித்தார்; நாமும் தெய்வீகக் கண்ணோட்டத்தின்படிச் செயல்படுகிறவர்களாய் இருந்து, சபையில் யார் அதிகமாய் ஊழியம் புரிகிறார்களோ, அவர்களையே நாம் மிகவும் கனப்படுத்த வேண்டுமே ஒழிய, ஊழியம்கொள்வதற்கும், கனங்களை அடைவதற்கும், தன்னைத்தான் உயர்த்துவதற்கும் நாடுபவர்களுக்கும் அல்ல. "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்," அதாவது தேவனுடைய ஏற்ற வேளையாகிய, மேசியாவின் இராஜ்யத்தில் ஜனங்கள் பாவம் மற்றும் மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவதற்குத் தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுக்க வந்தார் (மத்தேயு 20:28).

## "குருடர்களையும், ஏழைகளையும் ஆசீர்வதித்தல்"

பிரயாணம் பண்ணிக்கொண்டு போகையில், ஆண்டவருக்குத் தம்மை வேலைக்காரனாக முன்மாதிரிப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இயேசு அவ்வழியாய்ப் போய்க் கொண்டிருக்கின்றார் என்பதை அறிந்துக் கொண்ட இரண்டு குருடர்கள், அவர் தாவீதின் குமாரனாகிய மேசியா என்று விசுவாசித்து, இரக்கத்திற்காக, உதவிக்காகக் கூக்குரலிட்டனர். நீங்கள் குருடர்களாகப் பிச்சை எடுப்பவர்கள்தானே என்று கூறி, பொருட்படுத்தாமல் செல்வதற்குப்பதிலாக, ஆண்டவர் நின்று, அவர்களைத் தம்மிடம் கொண்டு வரச்சொல்லி, அவர்களுடைய விண்ணப்பத்தின்படி, அவர்களுடைய கண்களைத் தொட்டார், மற்றும் அவர்கள் உடனடியாகப் பார்வை அடைந்தார்கள். அவருக்கு இழப்பு இல்லாமல், அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை என்று மற்ற வேதவாக்கியங்களும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. "அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கிற்று" (லூக்கா 6:19).

ஐசுவரியவானாய் இருந்த அவர், மிகவும் தரித்திரரும், கீழானவர்களுமான நமக்கு ஊழியம் புரியும்படிக்கு, நமக்காக தரித்திரர் ஆனார்! இங்கு நம்முடைய இருதயத்தில் காணப்பட வேண்டிய சாந்தத்தின் ஆவிக்கும், ஊழியம் புரிவதற்கான ஆவிக்கும் எடுத்துக்காட்டைப் பெற்றிருக்கின்றோம்; இது ஓரளவுக்கு, மாபெரும் போதகருடைய சீஷர்களாகிய, உண்மையான பின்னடியார்களின் ஜீவியங்களைக் கட்டுப்படுத்துகின்றதாய்/ஆளுகின்றதாய் இருக்க வேண்டும். ஒருவேளை மாம்ச குருடான கண்களைத் திறப்பதற்கான வல்லமை நமக்கு இராவிட்டாலும், மாம்ச கண்கள் காணாததும், மாம்ச காதுகள் கேட்டிராததும், தேவன் தம்மை அன்புகூருகிறவர்களுக்கும், தம்மை அன்புகூர்ந்து, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும் வைத்திருக்கிறதுமான காரியங்களை அநேகர் தெளிவாய்ப் பார்க்க உதவுவதற்கான வல்லமை, நமக்குக் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது (1 கொரிந்தியர் 2:9). இந்த உண்மையான குறிக்கோளை அடைய நாடுவோமாக; பரலோகத்தில் இருக்கும் நம்முடைய பிதாவின் சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்கும் நாம் விசேஷமாக நாடுவோமாக!

**ஆமென்!**

---

R 4678

# "தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன"

## மத்தேயு 21:23-46

"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு,...என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."— வசனம் 43.

மாபெரும் போதகர் வாழ்ந்திட்ட நாட்களில் காணப்பட்ட மதவாதிகள் செய்திட்ட தவறை இரண்டு உவமைகளில், போதகர் சித்தரிக்கின்றார். இந்த உவமையானது, ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தெய்வீகக் கிருபையினின்று இஸ்ரயேலர்கள் புறக்கணிக்கப்படத்தக்கதாக வழிவகுத்திட்ட காரணங்களைப்பற்றின தெளிவான பார்வையைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்கள் என்பவர்கள், பெயரளவிலான பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாருக்கு ஒத்த மாதிரியாகக் காணப்படுகின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால் இந்தக் கிறிஸ்தவ யுகத்தின் அறுவடை காலமாகிய இப்பொழுது, நமக்கு முன்பு நடந்திட்ட அதே நிலைமைகளும், கையாளுதல்களும் காணப்படும் என எதிர்ப்பார்க்கின்றோம்.

யூத ஜனங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்திற்கு, தாவீதின் இராஜ்யமானது சிறிய அளவிலான நிழலாய் இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொண்டாலே, இங்கும், மற்றவிடங்களிலும் கொடுக்கப்பட்ட கர்த்தருடைய போதனைகளின் அழுத்தத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். யூத ஜனங்கள் தங்களை உயர்த்தி, தங்களைத் தேவனுடைய இராஜ்யமாக முக்கியமான ஸ்தானத்திற்குக் கொண்டுவருபவரான, மேசியாவாகிய மாபெரும் இராஜாவுக்குப் பல நூற்றாண்டுகளாக எதிர்ப்பார்த்திருந்தனர். மேசியாவை அறிமுகப்படுத்த வந்த யோவான் ஸ்நானன், இவர்கள் மனம் வருந்தி, மனந்திரும்பி, தங்களால் இயன்றமட்டும் தேவனோடும், நியாயப்பிரமாணத்தோடும், இசைவாய் வராதது வரையிலும், இவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைய எதிர்ப்பார்க்க வேண்டாம் என்று யூதர்களிடம் கூறினார். இயேசுவும் ஜனங்களிடம், "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:20). நாம் பார்க்கவிருக்கிற இரண்டு உவமைகளும், பெரும்பான்மையானவர்களுக்கு இடையூறாக இருந்த காரியத்தை விவரிக்கின்றதாய் இருக்கும்.

## "என் திராட்சத்தோட்டத்தில் இன்று பணிபுரியுங்கள்"

யூத ஜனங்கள், தேவனுக்கு ஊழியம் செய்திட விரும்பும் தேவனுடைய ஜனங்களென தங்களை அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் அடிமைகள்போல் நடத்தப்படாமல், மாறாக குமாரர்கள்போல் நடத்தப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் போய், வேலை செய்யும்படிக்குக் கூறப்பட்டார்கள்; ஆனால் இவர்கள் இரு வகுப்பாராகப் பிரிந்துவிட்டனர்; இந்த இரண்டு வகுப்பாருக்கு அடையாளமாக, நம்முடைய முதலாம் உவமையில் இரு குமாரர்கள் காணப்படுகின்றனர். இந்த இரு குமாரர்களில் ஒருவன், வெளிப்புறமாய்ப் பயபக்தியாய் இருந்து, ஆம் நாங்கள் தேவனுக்குச் சேவை செய்வோம் என்று கூறும் வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இவர்கள் தேவனுக்குச் சேவை செய்வதாகக் கூறினாலும் கூட, இவர்கள் உண்மையில் தெய்வீக ஊழியங்களை நாடவில்லை, மாறாக தங்கள் சொந்த மதப்பிரிவுகளுக்கும், தங்கள் தனிப்பட்ட இலட்சியங்கள், கனங்கள், செல்வாக்குகள் மற்றும் விருப்பங்களுக்கும் ஊழியம் புரியவே நாடினவர்களாகக் காணப்பட்டனர். உவமையில் இடம்பெறும் மற்றொரு குமாரன், தேவனுக்கு ஊழியஞ்செய்வதாக நடிக்காதவர்களும், ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் வேசிகள் என்று கூறப்படுபவர்களுமாகிய, இஸ்ரயேலர்களின் இன்னொரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். எனினும் யோவான் ஸ்நானனின் செய்தி கடந்து சென்றபோது, பிற்பாடு இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் செய்தி கடந்து சென்றபோது, இதே ஆயக்காரர்களும், பாவிகளும், வேசிகளும்தான் அவரை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய் இருந்தார்கள்; ஆனால் அவருடைய செய்தியானது, தங்களுடைய போதனைகளிலிருந்து முரண்பாடாக இருப்பதைக் கண்ட மதவாதிகளோ, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆகையால்தான் இயேசுவுக்கு எதிராகக் கூறின குற்றச்சாட்டுகளில் ஒன்று, "இவர் ஆயக்காரர்களையும், பாவிகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்பதேயாகும்.

## ''பாவிகளுக்குச் சிநேகிதன் என்பது அவரது பெயராய் இருந்தது''

இரண்டாம் உவமையில், தேவன் மாபெரும் திராட்சத்தோட்டத்தின் சொந்தக்காரராக அடையாளப்படுத்தப்படுகின்றார்; இந்தத் திராட்சத்தோட்டமானது எல்லா விதத்திலும், தம்முடைய நோக்கங்களுக்கு ஏற்றதாகவும், நியமிக்கப்பட்டதாகவும் காணப்பட்டது. இந்தத் திராட்சத்தோட்டமானது யூத தேசத்தையும், இந்த ஜனங்களுக்குப் பண்ணப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களையும், அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இவர்களுடைய வளர்ச்சிக்கென நியாயப்பிரமாணமும், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் சகல ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டது. இந்தத் திராட்சத்தோட்டத்தை அதன் சொந்தக்காரர், தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டார்; இவர்களுடைய கடமை, திராட்சச்செடிகளையும், கனிக்கொடுப்பதையும் கவனித்து, பலனைச் சொந்தக்காரருக்குக் கொடுப்பதாகும்; இந்தப் பலனில் ஒரு பகுதியை மாத்திரமே இந்தத் தோட்டக்காரர் தங்களுக்கென வைத்துக்கொள்ளலாம். இந்தத் தோட்டக்காரர்கள், முன்னிலை வகுத்த மதவாதிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றனர் இவர்களைக் குறித்து இயேசு, "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:2, 3). சொந்தக்காரர், தன்னுடைய திராட்சத்தோட்டத்தின் பலனை அடைய வேண்டுபவராகக் காணப்படுவதினால், பலனில் தன்னுடைய பங்கை அடையும்படிக்குத் தன்னுடைய ஊழியக்காரரை அனுப்பினார். ஆனால் தோட்டக்காரர், எஜமானுக்கு உரிய பங்கினைக் கொடுப்பதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களை அடித்து, கல் எறிந்து கொன்றனர்.

அந்த ஊழியக்காரர்கள் என்பவர்கள், இஸ்ரயேலுக்கு அனுப்பப்பட்ட முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் ஆவார்கள். அவர்கள் அன்புடனும், சாந்தம், பொறுமை முதலான திரளான கனிகளுடனும் வரவேற்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் இதற்குப் பதிலாக, அவர்கள், இஸ்ரயேலின் தலைவர்களால், அழையாமல் உள்ளே தலையிட்டவர்களாக நடத்தப்பட்டார்கள்; அவர்களில் சிலர் கல்லெறியப்பட்டார்கள், சிலர் அடிக்கப்பட்டனர், சிலர் கொல்லப்பட்டனர், சிலர் வெட்டப்பட்டனர்; சிலர் ஏற்றுக்கொள்ளப்படாததினால் செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்திக்கொண்டு, திரிந்து, குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் தங்கியிருந்தார்கள். அவர்கள் திராட்சத்தோட்டத்தின் சொந்தக்காரருடைய பிரதிநிதிகள்போல் நடத்தப்படவில்லை. இறுதியில், "என் குமாரனுக்கு அஞ்சுவார்கள்" என்று சொந்தக்காரர் எண்ணி, தன்னுடைய குமாரனை அனுப்பி வைத்தார். ஆனால் நமது கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட மதவாதி/மத தலைவர்களாகிய தோட்டக்காரர்கள், குமாரனைக் கொன்று போட்டு, சுதந்திரத்தைக் கட்டிக்கொள்ள ஆலோசனைப் பண்ணினார்கள். இந்த மதத்தலைவர்களுக்குத் தேவனுடைய சுதந்தரத்தின் மீது, எஜமானனாய்த் தாங்கள் காணப்படலாம் என்ற எண்ணம் எப்படியோ வந்துவிட்டது; மற்றும் தங்களைக் கடிந்துக்கொள்பவர்கள் எவரையும் (அ) தங்கள் மாய்மாலத்தை வெளிப்படுத்துபவர்கள் எவரையும் (அ) தங்கள் அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து, ஜனங்களை விடுவிக்கும் எவரையும், அது யாராக இருந்தாலும் சரி, அது சுதந்தரவாளியாக இருந்தாலும் சரி, அவரைக் கொன்றுபோடுவதற்கான சுதந்தரமும் தங்களுக்கு இருக்கின்றது என எண்ணினார்கள். இவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து போட்டார்கள்.

திராட்சத் தோட்டத்தின் சொந்தக்காரர் யார் என்பதை மறந்து, திராட்சத் தோட்டத்தைத் தங்களுக்குச் சொந்தமானது போன்று பயன்படுத்தி, சொந்தக்காரரின் ஊழியர்களைத் துன்பப்படுத்தி, சொந்தக்காரரின் குமாரனைச் சிலுவையில் அறைந்துப் போட்டவர்களாகிய இந்தப் பொல்லாத தோட்டக்காரரை, சொந்தக்காரர் என்ன செய்வார்? என்று நாம் எண்ணலாம்: மாபெரும் போதகர் தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களிடம் இக்கேள்வியைக் கேட்டபோது, சொந்தக்காரர் வந்து அந்தப் பொல்லாத தோட்டக்காரர்களை அழித்து, தனக்குப் பலனைத் தருகின்ற மற்றவர்களுக்குத் தோட்டத்தைக் குத்தகைக்கு விடுவார் என்று உடனடியாகப் பதில் தெரிவிக்கப்பட்டது.

இதுதான் நடந்தது. சர்வ வல்லமையுள்ள தேவனை அவமதித்து, பரிசேயர்களும், வேதபாரகர்களும், நியாயசாஸ்திரிகளும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும், தங்களுக்கான வாய்ப்புகளையும், சுயநலமாய்ப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்; இவர்கள் தள்ளிவிடப்பட்டனர். இவர்களுடைய அரசாங்கம் அழிக்கப்பட்டது மற்றும் இவர்கள் ஒரு காலத்தில் அனுபவித்த தெய்வீகக் கிருபைகளும், தேவனுடைய வாய்க்கருவிகளாக இருக்கும் சிலாக்கியங்களும், இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு,

மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; அதாவது இந்தச் சுவிசேஷ யுகத்தில் உள்ளவர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

மாம்சீக இஸ்ரயேலர்கள், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான நிழலாய் இருப்பதினால், இதே மாதிரியான நிலைமைகள் இன்று காணப்படுகின்றதா என்பதைப் பார்ப்பதற்கு நாம் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டியதில்லை. இன்று தேவனுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் பிரதிநிதிகளென உயர்ந்த ஸ்தானத்தில் காணப்படும் சிலர், தங்களை வலுப்படுத்துவதற்கும், ஜனங்கள் மீது அதிகாரங்கொள்வதற்கும், தங்கள் சொந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமென தங்களுடைய ஸ்தானங்களைப் பயன்படுத்துவதை நாம் பார்க்கவே செய்கின்றோம். இவர்கள் தங்கள் மத்தியில் தாழ்மையுடனும், சாந்தத்துடனும், கர்த்தருடைய நாமத்தில் வருகிற எவரையும் கடுமையான வார்த்தைகள் பேசி, கொலைச் செய்கிறவர்களாய்க் காணப்படுகின்றனர். இவர்கள் சொல்லர்த்தமாக அவர்களைக் கொல்லுவதோ (அ) அம்பு எய்வதோ இல்லை, மாறாக இவர்கள் அவர்களைத் தள்ளி, ஒதுக்கி வைப்பதன் மூலம் சிரச்சேதம் பண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் கசப்பான வார்த்தைகள், பழிப் பேச்சுகள் மூலம் அவர்கள்மேல் அம்பு எய்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இப்படியான ஊழியர்களைச் சொந்தக்காரர் என்ன செய்வார்? இவர்கள் அனுபவித்த வாய்ப்புகள் இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்ற, அதே பதில்தான் இவர்களுக்கும் பொருந்தும். தேவனுக்கு நன்றி, ஏனெனில் அவருடைய திட்டத்தில் அடுத்தப்படியாகச் சொந்தக்காரரின் குமாரனும், கொடுமைப்படுத்தப்பட்ட அனைத்து ஊழியர்களும், தேவனுடைய அருமை குமாரனுடைய புதிய இராஜ்யத்தின் அங்கத்தினர்களாய்க் காணப்படுவார்கள். பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களைத் தவிர வேறு எவரிடத்திலும், இனிப் பொறுப்பு ஒருபோதும் ஒப்படைக்கப்படுவதில்லை.

புறக்கணிக்கப்பட்ட இயேசு, தேவனுடைய மாபெரும் ஆலயமாகிய சபையின், "மூலைக்குத் தலைக்கல்லானார்." தேவனுடைய கருநிலையிலான இராஜ்யமாய் இருப்பதற்கான சிலாக்கியம் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, கிறிஸ்துவுக்கும், சபைக்கும் கொடுக்கப்பட்டது. தற்போது அவருடைய கருநிலையிலான இராஜ்யம் முற்றிலுமாகப் பூமியிலிருந்து எடுக்கப்படும், அதாவது அவருடைய உண்மையுள்ளவர்கள் பரலோகத் தளத்திலும், வல்லமையிலும், மகா மகிமையிலும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இயேசுவின்மேல் விழுந்தவன் எவனும் நொறுங்கிப்போனாலும், சரி பண்ண முடியாத அளவுக்கு நொறுங்கிப்போகவில்லை. ஆனால் "இந்தக் கல் (மேசியா) எவன் மேல் விழுமோ, அவனை அது இரண்டாம் மரணத்தில் நசுக்கிப்போட்டுவிடும்." (மத்தேயு 21:44).

**ஆமென்!**

---

[R4686]

# ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா?

யாக்கோபு ஏன் ஏசாவிடமிருந்து சேஷ்டபுத்திரபாகத்தையும், ஆசீர்வாதத்தையும் எடுத்துக் கொண்டார்? என்ற கேள்வி கேட்கப்படுகின்றது. ஏசா பசித்திருந்தபோது, சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட செய்வதற்கு பதிலாக ஏன் யாக்கோபு அவருக்கு கூழை கொடுக்கவில்லை? ஏசாவும், யாக்கோபும் இருவருமே பசியாயிருந்தார்கள் என்று சொல்வது நியாயமானது என நாம் எண்ணுகின்றோம். யாக்கோபு பசியாயிருந்தபடியினால் தான் கூழை காய்த்துக் கொண்டிருந்தார். ஏசாவும் பசியாயிருந்தார் என்று நமக்கு ஆதாரமுள்ளது என்றாலும், யாருக்கு பசி அதிகமாய் இருந்தது என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை. இருவருக்கும் ஒரே அளவு பசியிருந்திருக்கும் என நாம் வைத்துக் கொள்ளலாம். ஆனாலும் இருவருக்கும் போதுமான அளவு கூழ் இல்லை. ஏசா புசிப்பதற்கு கூழ் வேண்டுமென தெரிவித்தபோது, ஏசாவிடமிருந்ததும், ஏசாவுக்கு தேவையற்றதுமாய் இருந்த ஏதோ ஒன்றினை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான சரியான சந்தர்ப்பம் இதுதான் என யாக்கோபு கருதினார்.

மேலும் ஏசா தேவனுக்கு அடுத்த விஷயங்களில், முழு வாழ்க்கையிலுமே அஜாக்கிரதையாகவே இருந்தார் என்பதை யூகிப்பதும், நியாயமானதே ஆகும். ஏசாவின் தாயையுடைய வார்த்தைகளிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவெனில், இவர் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை அலட்சியப்படுத்தி, சுற்றியுள்ள தேவனற்ற ஜனங்களுடைய குடும்பங்களிலிருந்து திருமணம் பண்ணி தகுதியற்ற அநேக மனைவிகளைக் கொண்டிருந்தார். கண்டிப்பாக ஏசாவும், யாக்கோபும் அநேகந்தரம் தங்களுடைய தாத்தாவாகிய ஆபிரகாமிடம், தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பற்றியும், வாக்குத்தத்தம் எவ்விதத்தில் நிறைவேறும் என்பது பற்றியும் பேசியிருந்திருக்க வேண்டும். அந்த சமயங்களிலெல்லாம் ஏசா அதை நம்பாமல் காணப்பட்டார். இப்பொழுதோ வேளை வந்தது. அவர்கள் இருவரும் பசியாய் இருந்தார்கள். உணவும் இருந்தது. யாக்கோபு, ஏசாவிடம், "நீர் உம்முடைய சேஷ்டபுத்திர பாகத்தைப் பெரிதாக எண்ணுகிறதில்லை, ஆபிரகாமுடன் பண்ணின உடன்படிக்கையையும் நீர் ஏற்றுக் கொள்கிறதில்லை, அவைகள் உமக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. நீர் இப்பொழுது செய்ய வேண்டியதை நான் உமக்கு சொல்லுகிறேன், நீர் கூழைப் பெற்றுக்கொள்ளலாம், நான் உம்மிடத்தில் இருந்து சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொள்கிறேன் ஒப்பந்தம் தானா? என்றார். அதற்கு ஏசா, "ஒப்புக்கொள்கிறேன், சேஷ்டபுத்திர பாகத்தைப் பார்க்கிலும் நான் கூழையே மிகவும் விரும்புகின்றேன்" என்றான்.

இதில் நியாயமான/நீதியாய் நடந்த விற்பனையாகும். ஒருவர் ஒப்பந்தம் பண்ணி ஒரு வீட்டை வாங்கினால், விற்பவனும், வாங்குபவனுமாகிய இருவரும் விற்பனையில் திருப்தியுடன் இருக்கின்றனர் என்பதாகும். இது ஏமாற்றம் என்றோ, திருட்டு என்றோ நாம் சொல்ல முடியாது. யாக்கோபின் விஷயத்திலும் இப்படியாகதான் உள்ளது. ஏசாவை பொருத்தமட்டில், ஆபிரகாமின் வாக்குத்தத்தம் ஒரு பொருட்டல்ல. ஏசாவுக்கு அந்த வாக்குத்தத்தத்தின் மீது நம்பிக்கை இல்லை. இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுகையில், அப்போஸ்தலர் பவுல், ஏசா தேவபக்தியற்றவன் என்றும், அவர் தேவனுடைய வாக்குத்தத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்றும், அருமையான பேரம் பேசிவிட்டோம் என்ற நினைப்பில், அவர் அதை ஒரு பானை கூழுக்கு விற்றுப் போட்டார் என்பதை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றார். ஏசா ஒருவேளை தனது மனதில், "பாவம் என் சகோதரன், வாழ்கையென்றால் என்னவென்பது அவனுக்குத் தெரியவில்லை, என்னிடமிருந்து சில பாடங்களை அவன்

கற்றுக்கொண்டால், அவன் வாழ ஆரம்பிப்பான்/பழகுவான், தாத்தாவாகிய ஆபிரகாம் தேவன் கூறின ஏதோ ஒன்றை நம்பிக்கொண்டிருக்கின்றான். அந்த வாக்குத்தத்தத்திலிருந்து எதிர்காலத்தில் எதையாகிலும் பெற்றுக்கொள்வோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான், ஆனால் என்னைப் பொருத்தவரையில் அது பொருட்படுத்துவதற்குரிய விஷயமே அல்ல" என்று சொல்லியிருக்க வேண்டும். ஆகவே யாக்கோபிடமிருந்து உணவைப் பெற்றுக்கொண்டதில் தனக்குத்தான் ஆதாயம் என்று ஏசா நினைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## ஏசா சேஷ்டபுத்திர பாகத்தில்

## பூமிக்குரிய பாகத்தின் மீது மாத்திரமே அக்கறை கொண்டிருந்தார்

ஏன் யாக்கோபு தன்னுடைய தகப்பனை வஞ்சிக்க முற்பட்டார்? என்ற கேள்வியும் கேட்கப்படுகின்றது. யாக்கோபு, தான் ஏசாவிடம் வாங்கினதை அடைவதற்கும், அதை விற்றவினிடம் கொடுக்கமாட்டான் என்று உணர்ந்து கொண்டு, அதை அடைவதற்குமே முயற்சித்த யாக்கோபு, தன்னுடைய சகோதரன் நம்புவதற்கு நேர்மையற்றவர் என்பதை அறிந்திருந்தார். ஏசா விற்றுப்போட்ட ஆசீர்வாதத்தை ஏசா பெற்றுக் கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இப்பொழுது ஏசா விற்றுப்போட்டதை, ஏசாவே திருட ஆயத்தமானார். யாக்கோபு இப்படியாக சிந்தித்து இருக்க வேண்டும். அதாவது, "ஏசா திருடுவதை நான் தடுக்க முயற்சிக்க வேண்டும். நான் சேஷ்டபுத்திர பாகத்தை வாங்கியுள்ளேன். ஆகவே, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் நான்தான் ஏசாவிற்கு பதிலாக நிற்க வேண்டும். நான் நீதியானதை செய்ய/நீதியாய் நடப்பதற்கு முயற்சிக்கப் போகிறேன். சரியானதும், தேவனுடைய சித்தம் என்று நாம் அறிந்திருக்கிற விஷயத்தை என் தகப்பன் செய்யும்படி முயற்சிக்கப் போகிறேன். காரணம், இந்த தேவனுடைய சித்தமானது, தேவனால் எங்களின் பிறப்பின்போது, எங்கள் தாயிடம் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஆசீர்வாதம் எனக்குத்தான் வரும் என்றார். மேலும் என்னுடைய சகோதரன் அதை அலட்சியம் பண்ணினதின் மூலமாகவும் நாம் அதற்காக அதிக அக்கறை கொண்டதன் காரணமாகவும், தேவனுடைய வழிநடத்துதலின்படி இப்பொழுது அந்த ஆசீர்வாதம் என்னிடத்திற்கு வந்துள்ளது. இப்பொழுது நான் அதை எப்படி பெற்றுக்கொள்வேன் என்பது தான் கேள்வி. பூமிக்குரிய அடிப்படை தேவை தவிர, ஏசா சேஷ்டபுத்திர பாகத்திற்கு எவ்வித மதிப்பும் கொடுக்கவில்லை. தகப்பனோடு பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தின் மீது எவ்வித அக்கறையும் ஏசாவுக்கு இல்லை என நான் அறிவேன். அவனுக்கு அதில் நம்பிக்கை இல்லை. நான் மூத்த குமாரனாக அடையாளம் கண்டுகொள்ளப்படும் பட்சத்தில், தனக்கு வந்து சேரும் ஆஸ்திகளைக் குறித்துதான் அவன் கவனம் கொள்கின்றான்."

தான் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டால், தான் ஆபத்தில் சிக்கிக் கொள்வோம் என யாக்கோபு அறிந்திருந்தார் என்றாலும், மிகுந்த ஆசிர்வாதத்தை அளிக்கும் வாக்குத்தத்தம் மீது உள்ள பிரியத்தினால், எதையும் சந்திக்க தயாரானார். வாக்குத்தத்தத்தின் ஆவிக்குரிய பாகத்தை தான் பெறுவோம் என்றிருந்ததால், வீட்டிலிருந்து துரத்தப்படுவதற்கும் ஆயத்தமாய் இருந்தார். ஆகவேதான், தனது தகப்பனுடைய பூமிக்குரிய சொத்துக்களை இழந்துவிட்டோம் என்பதையும், ஏசா விரும்பாத ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை மாத்திரமே பெற்றுள்ளோம் என்பதையும் உணர்ந்து, யாக்கோபு தன்னுடைய வீட்டைவிட்டு வெளியேறினார். ஏசா விரும்பின (பூமிக்குரிய சொத்துக்கள் எனும்) பாகத்தை அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள யாக்கோபு முயற்சிக்கவில்லை.

யாக்கோபு தனது தாயின் மூலமாக கர்த்தர் தனக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ளதை அறிந்திருந்தாரானால், வஞ்சனை அல்லது ஆள்மாராட்டம் பண்ணாமலும், கர்த்தர் தனக்கு அதை தந்தருளுவார் என்று யாக்கோபு எண்ணாதது, அவரது விசுவாசக் குறைச்சலையல்லவா காட்டுகின்றது? என உங்களில் சிலர் கேட்கலாம். இக்கேள்விக்கான நம்முடைய பதில் என்னவெனில்,

ஒருவேளை யாக்கோபு நம்முடைய நாட்களில் வாழ்ந்து, நாம் பெற்றிருக்கும் அனைத்து அனுகூலங்களையும் அவரும் பெற்றிருந்தாரானால், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் போதனைகளை அவரும் பெற்றிருந்தாரானால், பரிசுத்த ஆவியினால் அவர் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பின் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது ஏற்கனவே உள்ள உறுதியான விசுவாசத்தை இன்னும் செயல்முறை படுத்துவதைக் கற்றுக்கொண்டிருந்திருப்பார். நாம் அவரைக் காட்டிலும் இந்த விஷயங்களிலெல்லாம் அதிக அநுகூலங்கள் பெற்றவர்களாய் இருக்கின்றோம். கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும் என்பது பற்றி அவருக்கு அநேக முன் மாதிரிகள் அப்பொழுது இருக்கவில்லை என்றாலும், அவர் தேர்ந்தெடுத்த பாதையின் மூலம் தேவன் மீதான அவருடைய நம்பிக்கை, வைராக்கியம் மற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்தினார். மேலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத ஒருவராகிய யாக்கோபு, அருமையாக இவைகளை செய்து முடித்தார் என்றே நாம் எண்ணுகின்றோம்.

## யாக்கோபு கர்த்தரால் கடிந்து கொள்ளப்படவில்லை

இந்த விஷயத்தை பொருத்தமட்டில் நம்முடைய அனைத்து கருத்துக்களும் தெய்வீக நிர்ணயத்தின்படி காணப்பட வேண்டும். இல்லையெனில், நாம் தவறு செய்துவிடுவோம். யாக்கோபுடைய வாழ்க்கை முழுவதும் இவ்விஷயத்திற்காக கர்த்தர் இவருக்கு எதிராக செயல்பட்டார் என்று எந்த வார்த்தைகளும் பதிவு செய்யப்படவில்லை. தேவனே யாக்கோபுக்கு எதிராக ஒன்றும் கூறவில்லையென்றால், அவருக்கு எதிராக கூறுவதற்கு நாம் யார்?

யாக்கோபு தனது சகோதரனுக்குப் பயந்து, பதான்ஆராமுக்கு தனது வீட்டையும், ஏசாவிடமிருந்து வாங்கிக் கொண்டதினிமித்தம் தனக்கு சொந்தமான சகல சொத்துக்களையும், ஏசாவின் கரங்களில் நிரந்தரமாகவே இருக்கும்படி விரும்பி விட்டுச் சென்று ஓடினபோது, யாக்கோபினிடத்தில் தலையணையாகிய ஒரு கல் இருந்ததே தவிர, வேறு எதுவும் இருக்கவில்லை. அந்த இராத்திரியில், கர்த்தர் யாக்கோபின் சொப்பனத்தில் வந்தார். அவருக்கு சொந்தமான ஆசீர்வாதத்தைக் குறித்ததான ஒரு காட்சி அருளப்பட்டது. இது யாக்கோபின் மேலிருந்த தேவகிருபையைச் சுட்டிக்காட்டுகின்றது. தேவன் தீமையான நபர்களோடு இரகசிய ஒப்பந்தம் செய்வார் என்று நாம் இந்த விஷயத்தைக் குறித்து எண்ணக்கூடாது. வேறுவிதமாய் சிந்திக்கிறவர்களுக்கு நாம் மறுப்பு தெரிவிப்பதில்லை. கர்த்தர் கூறினதுபோல, நாமும் "எழுதப்பட்டிருக்கிறது" என்றே முன் வைக்கின்றோம்.

அப்போஸ்தலனாகிய பவுலும், யாக்கோபின் விசுவாசத்தைப் பாராட்டி ஏசா சேஷ்டபுத்திர பாகத்தை விற்றதின் பொருட்டு, அவரை குற்றம் சாட்டுகின்றார். "ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளை போஜனத்துக்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" என்கிறார். (எபிரெயர் 12:16) இவ்வசனத்தின் மூலம் சிலர் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட விரும்புகிறவர்களும், சிலர் சேஷ்டபுத்திரத்தை வாங்க விருப்பத்துடனும் சிலர் இருப்பார்கள் என சுட்டிக்காட்டுகின்றார்.

இயேசுவின் நாட்களிலிருந்து கர்த்தருடைய அழைப்பை நிராகரித்த உண்மையான இஸ்ரயேலர் அல்லாத யூதர்கள் பூமிக்குரிய ஆசீர்வாதங்களும், பூமிக்குரிய கிருபைகளும், "ஒரு பானை கூழுக்காக" தங்களுடைய பரலோக, ஆவிக்குரிய உரிமைகளை விற்றுப்போட்டார்கள். புறஜாதிகளாகிய நமக்கும் உரிமையின்படி வராத அழைப்பானது நாம் அதையும், அதன் வாய்ப்புகளையும் ஏற்றுக்கொண்டு, பரிசை பெற்றுக்கொள்வோமா என்று பார்க்கும்படிக்கு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாம் பரிசை வென்றுவிடுவோம். ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்தை நாம் பெற்றுக்கொள்வோம். ஏசா வகுப்பாரோ, அதனைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆமென்!

---

R 4686

# "சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள்"

## மத்தேயு 22:15-22; 34-46.

"இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்."—வசனம் 21.

நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள், மதத்தின் தலைவர்களாய்க் காணப்பட்டனர். இவர்கள் ஒரு கூட்டுச் சமுதாயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்; மேலும் இவர்கள் இருவரின் உபதேசங்களும் எதிரிடையாக இருப்பினும், இவர்கள் மிகவும் அபூர்வமாகவே ஒருவர்மேல் ஒருவர் தாக்குதல் பண்ணுபவர்களாகக் காணப்பட்டனர். பரிசேயர்கள் தேவனையும், தீர்க்கதரிசிகளையும், நியாயப்பிரமாணங்களையும் அங்கீகரிக்கின்றவர்களாக இருந்து, மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலின் மூலம் எதிர்கால வாழ்க்கை இருக்கின்றது என்று நம்பி, தங்கள் தேசத்தை உயர்த்துவதற்கும், தங்கள் தேசம் மூலம் உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்குமென, மேசியா வருவார் என்றும் நம்பினவர்களாகக் காணப்பட்டனர். இவைகளையெல்லாம் சதுயேர்கள் நம்புவதில்லை; சதுசேயர்கள் கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய/முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது என்ற கொள்கை உடையவர்களாகவும், விமர்சனம் பண்ணுபவர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி ஐயம் கொள்வதினால், தற்கால ஜீவியத்தை நன்கு அனுபவிக்கிறவர்களாய் இருந்தனர். இயேசு பரிசேயர்களை அங்கீகரியாமலும், அவர்களுடைய குறைகளைச் சுட்டிக்காண்பித்ததினாலும், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில் பூரணமாயும், பரிசுத்தராயும் இருக்கின்றார்கள் என அவர்கள் கூறிக்கொள்ளும் விஷயத்தில், அவர்கள் மாய்மாலக்காரர்கள் என்று சுட்டிக்காண்பித்ததினாலும், அவர்களுக்கு நடிக்காதவர்களிடத்திலும், ஏழைகளிடத்திலும் அனுதாபம் இல்லை என்று அவர்களைக் கடிந்துகொள்வதினாலும், பரிசேயர்கள் இயேசுவை எதிர்த்தனர்.

சதுசேயர்களுடைய நம்பிக்கையின் கண்ணோட்டத்தின்படி இயேசு மோசடிக்காரராக/ஏமாற்றுப் பேர்வழியாக இருந்தபடியினால், சதுசேயர்கள் இயேசுவை எதிர்த்தனர். இவர்கள் பார்வையில், இயேசு ஏமாற்றும் பேர்வழிபோல் இருந்த விஷயம், இயேசுவை எதிர்க்கும் அளவுக்கு ஒரு பொருட்டான காரியமாக இல்லாமல் இருந்தபோதிலும், இயேசு ஜனங்கள் மத்தியில் பெற்றுக்கொண்டு வந்த செல்வாக்கானது, சமாதானத்தைக் குலைக்கும் ஏதோ காரியத்திற்கு வழிநடத்திவிடும் என்றும், இதினிமித்தம் உரோம சாம்ராஜ்யமானது, யூதர்களிடத்தில் பாதகமாய் நடக்க வழிநடத்திவிடும் என்றும் அஞ்சினதினால், இவர்கள் இயேசுவை எதிர்த்தனர். ஆக பரிசேயர்களும், சதுசேயர்களும் இருவரும் இயேசுவை எதிர்த்திட்டாலும், இவர்கள் இருவரும் வெவ்வேறு காரணங்களுக்காக இயேசுவை எதிர்த்தவர்களாக இருந்தனர். எருசலேமுக்குள்ளான இயேசுவின் பிரவேசித்தலும்/விஜயமும், "தாவீதின் குமாரனுக்கு," மேசியாவிற்கு "ஓசன்னா" என்ற ஜனங்களின் ஆரவாரக் கூக்குரலும், பரிசேயர்களுடைய மனதில் பொறாமையைத் தூண்டினது. ஆனால் சதுசேயர்களோ, உரோம சாம்ராஜ்யத்துடன் ஏதேனும் பிரச்சனையில் பொதுஜனங்கள் இறங்கிவிடுவார்களோ என அச்சம் கொண்டனர். மாபெரும் போதகரிடமிருந்து ஜனங்களுடைய ஆதரவைத் திசைத்திருப்பிட பரிசேயர்கள் முயற்சித்தனர். மேலும் இதற்காக அவரிடம் கேள்வி கேட்டு, அவரை அகப்படுத்த நாடினார்கள்.

## "வரிக்கொடுக்கிறது நியாயமோ?"

ஒருவேளை இக்கேள்விக்கு இயேசு, நியாயம் இல்லை என்று பதிலளிப்பாரானால், அவரைக் கலகத்தின் தலைவனாகக் கைதுச் செய்து, அவரைக் கொன்றுபோடும்படிக்குப் பிலாத்துவை வற்புறுத்துவது சுலபமாய் இருக்குமென்று எண்ணினார்கள். ஒருவேளை இயேசு, இராயனுக்கு வரிக்கொடுப்பது நியாயமானது என்று சொல்வாரானால், அக்காரியம் அவருக்கு "ஓசன்னா!" கூறின ஜனங்களுக்கு மனமுறிவு ஏற்படுத்துகிறதாக இருக்கும் என்று இவர்கள் எண்ணினார்கள்; யூதர்கள், தாங்கள் தேவனுடைய இராஜ்யமாக இருப்பதினால், எந்தப் பூமிக்குரிய இராஜ்யத்திற்கும் வரிக் கொடுக்கக்கூடாது என்றும், இப்படியாக வற்புறுத்தலின் காரணமாகச் செய்வதுங்கூடப் பயபக்தியற்றது என்றுமுள்ள மூடநம்பிக்கையான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். "போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்று...அறிந்திருக்கிறோம்" (மத்தேயு 22:16, 17) என்ற வசனத்தின் வார்த்தைகளை இவர்கள் எவ்வளவு தந்திரமாய்ப் பயன்படுத்தினார்கள் என்று நம்மால் கவனிக்க முடிகின்றது;

அதாவது அவருடைய உண்மையைப் பாராட்டும்படியாக, "நீர் சத்தியமுள்ளவரென்றும் அறிந்திருக்கின்றோம்" என்றும், அவரைப் போதகர் என்று தாங்கள் அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், அவர் என்ன நேர்ந்தாலும் ஒளியை, சத்தியத்தைப் போதிப்பார் என்பதைத் தாங்கள் அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், "நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும் அறிந்திருக்கிறோம்" என்றும், தங்கள் நிலைப்பாட்டினை வலுப்படுத்தும் வண்ணமாக, "நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்றும் கூறினார்கள்.

இயேசுவைச் சிக்க வைக்க வேண்டுமென்று இந்த நயவஞ்சகமான பாராட்டுகள் எல்லாம் கூறப்பட்டது; ஆனால் இயேசு உடனடியாக, "மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்," "உங்கள் உள்ளான நயவஞ்சகங்களை, ஏன் உண்மை பேசுபவர்கள்போல் திரையிட்டு மூடுகின்றீர்கள்?," "வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள்" என்று கூறினார். வரிக்காசு என்பது, அவர்கள் கட்டவேண்டிய வரிக்கான காசாக இருந்தது. ஒருநாளுக்கான வழக்கமான கூலியாகிய ஒரு பணத்தை (நம்முடைய கணக்கின்படி கிட்டத்தட்ட 17 cents) அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். "அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்." (மத்தேயு 22:20,21). இயேசுவை அவருடைய வாயின் வார்த்தைகளினால் எப்படிச் சிக்க வைக்க முடியும் எனும் விஷயத்தில் தந்திரமான பரிசேயர்கள் குழம்பிப் போயிருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை! அவரைச் சிக்க வைப்பதற்குப் பதிலாக, இவர்களே மாட்டிக்கொண்டனர்; ஏனெனில் இவர்கள் கூறின பாராட்டுதல்கள் அனைத்தும், இயேசுவுக்கு ஆதரவானதாக, ஜனங்களின் மனதில் பதிந்துவிட்டது.

## "எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்?"

அடுத்ததாக, கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய முடியாது எனும் கொள்கையை உடையவர்களாகிய சதுசேயர்கள், தங்களுடைய கேள்வியினால், மாபெரும் போதகரைச் சிக்க வைத்திட முயன்றனர். "ஏழுச் சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக, ஒரே ஸ்திரீயை மணந்து, அவள் மரித்துப்போவதற்கு முன்னாக, இந்த ஏழுச் சகோதரர்களும் மரித்துப்போனவர்களாகக் காணப்பட்டனர். உயிர்த்தெழும்போது, இவர்கள் ஏழு பேரில் எவனுக்கு அவள் மனைவியாக இருப்பாள்?" என்பது இவர்களின் கேள்வியாக இருந்தது. அவள் எவனுக்குப் பரலோகத்தில் (அ) உத்தரிக்கும் ஸ்தலத்தில் (அ) நித்திய காலமான சித்திரவதையின் ஸ்தலத்தில் மனைவியாக இருப்பாள்? என்று இவர்கள் கேட்கவில்லை, ஏனெனில் இயேசுவும் சரி, யூதர்களும் சரி, இப்படியான போதனைகளைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. பரிசேயர்களும், இயேசுவும், மரணத்திலிருந்து இருக்கும் உயிர்த்தெழுதலைப் போதித்தவர்களாகக் காணப்பட்டனர்; மேலும் இந்தப் போதனைக்கு எதிராகவே, சதுசேயர்களின் ஏளனப்படுத்தும் கேள்வி காணப்பட்டது.

"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" (மத்தேயு 22:22, 29) என்ற ஆண்டவருடைய பதிலின் மகத்துவத்தைக் கவனியுங்கள்; அதாவது, "இப்படிப்பட்ட கேள்வி தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனையை நீங்கள் புரிந்துக்கொள்ளவில்லை. உங்களுடைய இந்தக் கேள்வியில், நீங்கள் மாபெரும் தெய்வீக வல்லமையைப் பொருட்படுத்தாமல் காணப்படுகின்றீர்கள். இந்த மாபெரும் தெய்வீக வல்லமையானது, உயிர்த்தெழுதலின் காலங்களில் செயல்பட்டு, அச்சூழ்நிலைகளின் அனைத்து இடர்பாடுகளையும் செம்மைப்படுத்துகின்றதாய் இருக்கும்," என்ற விதத்தில் இயேசு பேசினார். உயிர்த்தெழுதலை (படிப்படியாக) அடைபவர்கள், பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து முற்றிலுமாக எழும்புபவர்கள் என்றும், "திருமணம் செய்து கொள்வதில்லை" மற்றும் ஆண் பால்-பெண் பால், வேறுபாடின்றி தேவதூதர்களைப்போல் இருப்பார்கள் என்றும் மாபெரும் போதகர் தெரிவித்தார். இப்படியாக மாபெரும் கேள்வி என்றும், பதில் கொடுக்கவே முடியாத கேள்வி என்றும் எண்ணிக்கொண்டு, வரப்பட்ட சதுசேயர்களின் கேள்வியானது தோல்வியுறப்பண்ணப்பெற்றது, மற்றும் இவர்களின் அறியாமையும் வெளிப்படுத்தப்பட்டது.

## "எந்தக் கற்பனை பிரதானமானது?"

தெய்வீகக் கற்பனைகளின் முக்கியத்துவம் தொடர்புடைய கேள்வியினால், கர்த்தரைச் சிக்க வைக்கும்படிக்கு அடுத்து நியாயசாஸ்திரிகளில் ஒருவன் முயற்சித்தான். இயேசு எந்தக் கற்பனையைப் பிரதானமாக கருதுகின்றதாக இயேசுவிடம் நியாயசாஸ்திரி கேட்டார். பத்துக்கற்பனைகளை (உபாகமம் 6:5), நியாயப்பிரமாணத்தின்படி, மாபெரும் போதகர், இரண்டாகப்

பிரித்துக்கூறினார். "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்" (மத்தேயு 22:37-40). இப்படியாக அருமையாய் நியாயப்பிரமாணத்தைச் சுருக்கமாய்க் கூறுபவரிடம், நியாயசாஸ்திரி என்ன பதில் கூற முடியும்? இவரால் எதுவும் சொல்ல முடியாமல் போய்விட்டார். இதுவரையிலும் இல்லாத அளவுக்கு, நியாயசாஸ்திரிக்குப் பதில் கொடுக்கப்பட்டது.

## "இயேசு கேள்வி கேட்டார்"

"மெசியாவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்" (மத்தேயு 22:42-45).

ஆம் இக்கேள்வி, பரிசேயர்களுக்கு மிகவும் ஆழமான கேள்வியாக இருந்தது. இவர்களுடைய அனைத்துக் கேள்விகளுக்கும் மாபெரும் போதகரினால் பதில் கொடுக்க முடிந்தது, ஆனால் இவர்களால் அவருடைய கேள்விக்குப் பதில் கொடுக்க முடியவில்லை. மேசியா மாம்ச பிரகாரமாக தாவீதின் வம்சத்தில் பிறந்தார் என்றும், மாம்சத்தில் காணப்பட்ட மேசியாவினடத்தில் தேவனுடைய நோக்கங்கள் முழுமையாய் நிறைவு பெறவில்லை என்றும், மேசியா பலியாகத் தம்முடைய மாம்சத்தை ஒப்புக்கொடுத்து மகிமை, கனம் மற்றும் அழியாமையின் தளத்தினிடத்திற்கு, மரணத்திலிருந்து உயர்த்தப்பட்டார் என்றும், தேவதூதர்கள், அதிகாரங்கள் மற்றும் துரைத்தனங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டார் என்றும், நாம் தெளிவாய்க் காணமுடிகின்றது. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் அவர் தாவீதின் குமாரனாய் இருந்தார் என்றும், அவர் மகிமைப்படுத்தப்பட்டபோது, அவர் தாவீதின் ஆண்டவராய் இருக்கின்றார் என்றும், ஏற்றவேளையில் அவர் மூலமாய்த் தாவீது மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலை மாத்திரமல்லாமல், மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதான ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொள்வார் என்றும் நாம் புரிந்துக்கொள்கின்றோம். மாம்சத்தில் வந்த மேசியாவிற்கு தகப்பனாய்/முற்பிதாவாய் காணப்பட்டவர், இவ்வாறாக மகிமையடைந்த மேசியாவின் குமாரனாய் இருப்பார்; மேசியாவின் பூமிக்குரிய ஜீவியமானது, தாவீதையும் உள்ளடக்கின முழு உலகத்திற்குரிய திரும்பக்கொடுத்தலுக்கான விலையாக வழங்கப்பட்டது. "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்." (சங்கீதம் 45:16).

## "பூமிக்குரிய இளவரசன் ஒருவனின் உதாரணம்"

பெர்லினில் நடைப்பெற்ற ஜெர்மானிய நிகழ்ச்சி ஒன்றில், தளபதி ஒருவன், ஒரு அறிமுகமற்ற வாலிப உத்தியோகஸ்தன் ஒருவனைச் சந்தித்தான்; அந்த வாலிபன் பெரிய பதக்கமாகிய சின்னம் ஒன்றை மாத்திரம் தரித்தவனாகக் காணப்பட்டான். "ஆயுத படை அதிகாரியே, நீ தரித்திருக்கின்ற இச்சின்னம் என்ன என்று தளபதி கேட்டான். வாலிபன் தன்னடக்கத்துடன், தளபதியே இது ஒரு பதவி என்றான். இது புரஷிய நாட்டு பதவி இல்லையே, இதுபோன்று நான் பார்த்ததில்லையே" என்றான் தளபதி. "இது ஒரு ஆங்கில பதவி" என்றான் வாலிபன். "இதை யார் உனக்குத் தந்திட்டார்கள்?" என்று வினவினான் தளபதி. "என்னுடைய பாட்டி" என்றான் வாலிபன். வாலிபன் தன்னை முட்டாளாக்கப் பார்க்கின்றான் என்று தளபதி எண்ண தொடங்கி, "உன்னுடைய பாட்டி யார்?" என்று கேட்டான். தளபதி வியக்கத்தக்கதாக, "இங்கிலாந்தின் மகாராணி விக்டோரியா அவர்கள் என் பாட்டி ஆவார்" என்று வாலிபனிடமிருந்து பதில் வந்தது. மாறுவேடத்தில் இளவரசன் அங்குக் காணப்பட்டான், இப்படியாகவே மகிமையின் மாபெரும் இராஜாவாகிய இயேசு மாறுவேடத்தில் காணப்பட்டார். "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" (யோவான் 1:10).

**ஆமென்!**

---

R 4701

# "அக்கினியைக் கட்டளையிட உமக்குச் சித்தமா?" லூக்கா 9:51-56

"பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி, தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார்."

- வசனம் 51, 52

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக அவர் கலிலேயாவிலிருந்து, எருசலேமை நோக்கி மேற்கொண்ட பிரயாணத்தின்போது நடந்திட்ட சம்பவத்தையே இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம். தம்முடைய வேளை சமீபித்துவிட்டது என்றும், தம்முடைய அர்ப்பணிப்பு ஜீவியத்தினுடைய மூன்றரை வருடங்கள் நிறைவடைய போகின்றது என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். மாபெரும் போதகர் முழுமையாய்த் தைரியம் கொண்டிருந்தார். "ஜனங்களில் ஒருவனும் அவரோடிருந்ததில்லை" (ஏசாயா 63:4) என்ற வார்த்தைகள் அனுதாபத்திற்குரிய அவருடைய நிலைமையைக் காட்டுகின்றது. தம்முடைய வேலை முழுவதும் பட்சிக்கப்படுவது/நிறைவேற்றுவது குறித்தும், அதற்கான வேளை சமீபித்துள்ளதைக் குறித்தும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு அவர் தெரிவித்தது உண்மையே. ஆனால், அவரைக்குறித்து நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கத்தரிசனங்களிலும் எழுதியிருப்பவைகள் அனைத்தையும் நம்புவதில் அப்போஸ்தலர்கள் தாமதமாகக் காணப்பட்டார்கள். மேசியாவைக்குறித்துப் பேசப்பட்ட மகிமையான காரியங்களையே அப்போஸ்தலர்களின் மனங்கள் இயல்பாகக் கிரகித்துக் கொண்டன. அவருடைய மகிமையான இராஜ்யம் குறித்தும், அந்த இராஜ்யத்தில், அவரோடு கூடத் தங்களுடைய மகிமையான இணைதலைக் குறித்தும், எண்ணுவதிலேயே அப்போஸ்தலர்கள் மூழ்கிக் காணப்பட்டதினால், அவருடைய பாடுகளையும், அவருக்கு ஏற்படும் அவமானங்களையும் பற்றிப் பேசும் மற்றத் தீர்க்கத்தரிசனங்களைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். இப்படியே, தம்முடைய மரணம் குறித்து ஆண்டவராலேயே பேசப்பட்ட வார்த்தைகளையும், அப்போஸ்தலர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர். அவர் ஏதோ அடையாளமாக, உருவகமான விதத்தில் பேசுகின்றார் என எண்ணிக்கொண்டார்கள். மேலும் பேதுரு, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று சொல்லி அவரைக் கடிந்துக்கொள்ளவும் முற்பட்டார். (மத்தேயு 16:22)

## "சமாரியர்களால் நிராகரிக்கப்படுதல்"

அப்போஸ்தலர்களுடைய கூட்டத்திற்கென அப்பங்களை வாங்கும்படிக்கு யாக்கோபும், யோவானும், சமாரியா பட்டணத்திற்குச் சென்றதாக மற்றுமொரு பதிவு தெரிவிக்கின்றது. இவர்களைச் சமாரியர்கள் அடையாளம் கண்டுபிடித்து, மாபெரும் போதகர் சமாரியர்களாகிய தங்களை அங்கீகரித்து, தங்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவாரா அல்லது யூதர்கள் தங்களை நடத்துவது போன்று, அன்பற்ற விதத்தில் போதகர் நடத்துவாரா? என்று விசாரித்தார்கள். மாபெரும் போதகரும், யூதர்கள் தங்களை நடத்துவது போன்றே நடத்துவார் என்று சமாரியர்கள் நம்பினார்கள். மாபெரும் போதகர் யூத தேசத்தாருக்கு மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளார் என்றும், சமாரியர்களின் வியாதிகளைச் சொஸ்தப்படுத்தும்படிக்கு (சமாரியாவில்) நிற்கமாட்டார், காரணம் "அவர் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கே" அனுப்பப்பட்டுள்ளார் என அப்போஸ்தலர்கள் சமாரியர்களிடம் வெளிப்படையாகக் கூறினார்கள்.

சமாரியர்கள் கோபமடைவதற்கு இதுவே போதும். "நல்லது நீங்கள் போதிக்கிறவர்களிடமிருந்தும், நீங்கள் சொஸ்தப்படுத்துகிறவர்களிடமிருந்தும் போய் அப்பம் வாங்கி கொள்ளுங்கள்" என்றார்கள் சமாரியர்கள்.

இதனிமித்தம் பரிசுத்தவானாகிய யோவானும், பரிசுத்தவானாகிய யாக்கோபும் ஆத்திரம் அடைந்தார்கள். இயேசு மாபெரும் போதகர் அல்லவா? அவர் மேசியா அல்லவா? யார் தம்முடைய நன்மைகளை அடைய வேண்டும், அடையக் கூடாது தொடர்பான விஷயத்தில் தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது அல்லவா? இவ்விஷயத்தோடு அவர்கள் இருவரும் இயேசுவினிடத்திற்கு வந்து, நடந்ததை விவரித்துக் கூறி, "வானத்திலிருந்து

அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?" என்று கேட்டார்கள்.

## "இன்ன ஆவியுள்ளவர்கள்?"

ஆண்டவருடைய பதிலை நாம் ஆவலாய்ப் பார்க்கின்றோம். மாபெரும் போதகர் அப்போஸ்தலர்களை நோக்கி, "எனது அருமையான சீஷர்களே, இதை விட்டுவிடுங்கள்; கொஞ்சம் காத்திருங்கள்; இந்தச் சமாரியர்கள் அனைவரும் மரிக்கும்போது, இவர்கள் நித்திய சித்திரவதை அடையும்படிக்கு பரம பிதா இவர்களைப் பிசாசினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவார். அந்த நித்திய சித்திரவதைக்கு முன்னதாக, நீங்கள் அக்கினியை இறங்க செய்து, இப்பட்டணத்தைச் சில நிமடங்களில் எரித்துப்போடுவது என்பது ஒன்றுமில்லாததாக இருக்கும். உங்களுடைய ஆவியை, என் அன்பு சீஷர்களே நான் அங்கீகரிக்கின்றேன்; இது தேவன் போன்ற தன்மைதான்; இப்படியாக, உங்களது வல்லமையினால் இவர்களை நீங்கள் எரிக்கவும், பொரிக்கவும் நீங்கள் விரும்பினதற்காக நான் உங்களைப் பாராட்டுகின்றேன். இப்படியான உங்களது தேவனை நீங்களும் தொடர்ந்துப் பின்பற்றுங்கள். உங்களை யார் என்று சரியாகப் புரிந்துக்கொள்ளாத சக மனிதர்களை உங்களால் முடிந்தமட்டும் உபத்திரவப்படுத்துங்கள்" என்று (ஒருவேளை) கூறியிருப்பாரானால், இது, முன்பொருக் காலத்தில் தெய்வீக ஏற்பாடுகளைப் பற்றி, நாம் கொண்டிருந்த கண்ணோட்டத்தின்படி பார்க்கப்பட்டால், இப்படிப் போதகர் பதில் சொல்வது சரி என்று நாம் எண்ணியிருந்திருப்போம்.

இப்படித்தான் மாபெரும் போதகர் பதில் சொன்னாரா? இல்லை. தேவனுக்கு நன்றி! அவருடைய போதனைகள் முற்றிலும் எதிர்மாறாக காணப்பட்டது. அதாவது, அனுதாபத்துடனும், அன்புடனும், இரக்கத்துடனும் காணப்பட்டது. அவரிடம் பிதாவின் ஆவி இருந்தது. மேலும், தம்மிடம் பிதாவின் ஆவி இருப்பதை அவர் புரிந்துக் கொண்டிருந்தார், மற்றும் அதைப் பூரணமாய்ப் பின்தொடரவும் செய்தார். "அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" (லூக்கா 9:55-56).

## "ஓர் இரட்சகர், ஒரு மாபெரியவர்"

இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனியாவில் பேசப்பட்ட மொழி சிரியாக் (Syriac) ஆகும். மாபெரும் போதகரின் நாமங்களில்/பட்டங்களில் ஒன்று "இரட்சகர்" என்பதாகும். இரட்சகர் என்பதற்குச் சிரியாக் மொழியில், "ஜீவன் கொடுப்பவர்" என்பது அர்த்தமாகும். இயேசு வருவதற்கு முன்பாக முழு உலகமும் போதுமானளவுக்குக் குற்றவாளி என ஏற்கெனவே தீர்க்கப்பட்டுள்ளனர். அவர் இன்னும் அதிகமாகக் குற்றவாளி எனத் தீர்ப்பதற்கு வராமல் மாறாக, அவர்கள் (உலகம்) தம் மூலம் ஜீவனையடைவதற்கே வந்தார்! (யோவான் 10:10; 3:17)

ஜீவன்! உலகத்திற்கு ஜீவன் இல்லையா? ஆம், ஜீவன் இல்லை. ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக மனுஷீக ஜீவன் இழக்கப்பட்டது. இதன் விளைவாக மனுக்குலம் முழுவதும் மரித்துக் கொண்டிருக்கின்றது. (நித்திய சித்திரவதையிலிருந்து அல்லாமல்) மரணத்திலிருந்து, இரட்சிக்கின்ற ஓர் இரட்சகரே, ஜீவன் அளிப்பவரே, மனுக்குலத்திற்கு அவசியம்.

இரட்சகரின் முதல் வேலை, கல்வாரியின் மீட்பின் வேலையாகும். அவருடைய இரண்டாம் வேலையானது, இராஜ்யத்தில் தம்முடன் உடன் சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, தமது சபையைத் தெரிந்தெடுப்பதாகும். அவருடைய மூன்றாவது வேலை, பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் ஆதாமையும், அவருடைய சந்ததி முழுவதையும் இரட்சிப்பதாகும். அதாவது, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாகவும், அவருடைய பிள்ளைகள் பாவத்தில் பிறந்து, துர்க்குணத்தில் உருவாகி, மற்றும் அவர்களது தாய் அவர்களைப் பாவத்தில் கர்ப்பந்தரித்ததின் மூலமாகவும் வந்திட்ட மனரீதியில், சரீர ரீதியில் மற்றும் ஒழுக்க ரீதியிலுள்ள சீர்க்கேடுகள் அனைத்திலிருந்தும் அவர்களை இரட்சிப்பதாகும்.

சபையை இரட்சிப்பது என்பது மாபெரும் வேலையாகும்! கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாகுவதற்கான இந்த அருமையான சிலாக்கியத்திலுள்ள தேவனுடைய கிருபையை, ஒருவேளை நமது இருதயங்கள் ருசிபார்த்ததானால், ஒருவேளை நம்முடைய கண்கள்

கண்டதானால், ஒருவேளை நாம் கேட்டிருப்போமானால், நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். எனினும் கொஞ்சம் பேர்களை மாத்திரமே இரட்சிப்பது என்பது, உலகத்தைச் சிருஷ்டித்ததிலும், உலகத்தை மீட்பதிலுமுள்ள தேவனுடைய நோக்கம் என்று நாம் அனுமானித்து விடக்கூடாது. மாறாக, இந்தத் தெரிந்துக்கொள்ளப்படும் "சிறுமந்தையினர்" தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலனானவர்கள் என்று கூறப்படுகின்றனர் (யாக்கோபு 1:18; வெளி 14:4). அப்படியானால் பிற்பலன்கள் அநேகம் இருப்பது காட்டப்படுகின்றது. எந்த ஒரு நபருடைய தனிப்பட்ட விருப்பத்திற்கு எதிராக, அவரைத் தேவன் மரணத்திலிருந்து இரட்சித்து, நித்தியத்திற்குரிய ஜீவனைக்கொடுப்பதாக அறிவிக்கவில்லை என்றாலும், ஆதாமுக்குள் இழந்துப்போய் மற்றும் இயேசுவினால் மீட்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படத்தக்கதாக, சத்தியம் பற்றிய தெளிவான அறிவிற்குள் கொண்டு வரப்படுவார்கள் என்று தேவன் தெரிவிக்கின்றார். துணிந்துப்பிடிவாதமாக இருப்பவர்கள் மாத்திரமே இழப்பிற்குள்ளாகப் போவார்கள் என்று தேவன் தெரிவித்துள்ளார்; மேலும், இத்தகையவர்களுடைய இழப்பு என்பது, ஜீவனை இழந்து போவதாகும். அதாவது, அப்போஸ்தலர் தெரிவித்துள்ளது போன்று "நித்திய அழிவிற்குள்" ஆகுவார்கள்.

**ஆமென்!**

---

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

## மத்தேயு 26:17-30

இந்தப் பாடங்கள் அனைத்துமே நமக்காக முன்கூட்டியே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இல்லையேல் நமது கர்த்தருடைய இறுதி பூமிக்குரிய நாட்களில், வருஷத்தினுடைய வசந்த காலத்தின்போது சம்பவித்த நிகழ்வுகளைக் குறித்து, அவைகள் நிகழ்ந்த காலப்பகுதியில்தான் தியானிப்பவர்களாய் இருந்திருப்போம். சத்தியம் எப்போதுமே நமக்கு விலையேறப்பெற்றதாய் இருந்துள்ளது மற்றும் எப்போதும் நன்மைக்கேதுவான படிப்பினைகளைக் கொண்டுள்ளது.

இயேசு ஒரு யூதனாவார்; ஆகையால் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் அனைத்து அம்சங்களுக்கும் கீழ்ப்பட்டவராய் இருந்தார். அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை, மாறாக அதை நிறைவேற்றவே வந்தார். இன்றைய பாடமானது, நியாயப்பிரமாணத்தினுடைய ஓர் அம்சமாகிய பஸ்கா பிரமாணத்தினுடைய நிறைவேறுதலைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது; இது ஏற்கெனவே முழுமையாய் நிறைவேறிவிட்டது என்றில்லாமல், 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிழலானது நிறைவேறிக்கொண்டு வருகின்றது என்றும், சீக்கிரத்தில் முழுமையாய் நிறைவேறிவிடும் என்றும் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இந்தப் பாடத்தினைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், நாம் நிழலைத் தெளிவாய் மனதில் நினைவு பெற்றிருக்க வேண்டும்:

சுமார் 3,500 - வருடங்களுக்கு முன்னதாக, தேவன் இஸ்ரயேல் ஜனங்களை, எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் சர்வாதிகார/கொடுங்கோலாட்சியின் கீழிருந்து விடுவித்தார். ஜனங்களை அடிமைகளாக, சொத்துக்களாக வைத்துக்கொள்ள விரும்பி, அவர்களை அனுப்புவதற்குப் பார்வோன் திரும்பத்திரும்ப மறுத்து வந்தான். சிட்சைகளாக தேவன் எகிப்தின்மீது வாதைகளைத் திரும்பத்திரும்ப அனுப்பினார். ஒவ்வொரு வாதையினுடைய தாக்கத்தினாலும், பார்வோன் மனந்திரும்பினான் மற்றும் தன்மீது இரக்கம் காண்பிக்கப்படுவதற்கும், ஜனங்கள் வாதையினின்று விடுவிக்கப்படுவதற்கும், மோசே வாயிலாக தேவனிடத்தில் மன்றாடினான். எனினும் தெய்வீக இரக்கத்தினுடைய ஒவ்வொரு வெளிப்பாடும், அனைத்து வாதையிலுமே கடினமானதான பத்தாவது வாதை இறுதியில் வருவதை அவசியமாக்குமளவுக்குப் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்த மாத்திரமே செய்தது. அந்தப் பத்தாம் வாதையானது, எகிப்தினுடைய முதற்பேறானவைகள் அனைத்திற்கும் எதிரான மரணத் தீர்ப்பின் நிறைவேற்றுதலாய்க் காணப்பட்டது. ஆனால் எகிப்திலுள்ள இஸ்ரயேலர்கள், குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் எகிப்திற்கான இந்த ஏற்பாடுகளிலிருந்து விலக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்கென்று ஓர் ஆட்டுக்குட்டியினைப் பெற்றிருக்க வேண்டும்; அதன் எலும்புகள் எதுவும் முறிக்கப்படக்கூடாது. அதன் இரத்தமானது, வீட்டுவாசல் நிலைக்கால்களில் தெளிக்கப்பட வேண்டும் மற்றும் வீட்டிற்குள் கூடியிருக்கும் குடும்பமானது, அதன் மாம்சத்தைப் புளிப்பில்லாத அப்பங்களுடனும், கசப்பான கீரைகளுடனும் புசிக்க வேண்டும்; அதுவும் பிரயாணிப்பவர் போன்று கையில் தடி பிடித்துக்கொண்டு, காலையில் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கு ஆயத்தமான நிலையில் புசிக்க வேண்டும்.

## இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள்

தெய்வீகத் தீர்ப்பானது எகிப்தியர்களின் முதற்பேறானவர்களைக் கொன்றுபோட்டதான அந்த இரவில், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது தப்புவிக்கப்பட்டனர்; ஆகையால்தான் பஸ்கா - கடந்துபோதல் எனும் பெயர் வந்தது. மேலும் இஸ்ரயேலின்மீதான கர்த்தருடைய மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்கான ஞாபகமான இந்த ஆசரிப்பானது, தேவனுடைய தயவிற்கான நினைவுகூருதலாக வருடந்தோறும் ஆசரிக்கப்படும்படிக்கு கட்டளையிடப்பட்டது; ஏனெனில் இது கடந்துவரவிருக்கின்றதான இன்னும் மேலான இரக்கம் மற்றும் ஆசீர்வாதத்திற்கான நிழலாய்க் காணப்படுகின்றது. கொஞ்சம் காலத்திற்குப்பிறகு, தப்புவிக்கப்பட்டதான முதற்பேறானவர்களுக்குப்பதிலாக கோத்திரங்களில் ஒன்றாகிய, லேவி கோத்திரம் எடுக்கப்பட்டது. இதற்குப் பிற்பாடு லேவியர்களே, கடந்துபோகப்பட்ட முதற்பேறானவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கென்றும் விசேஷமாய் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆனார்கள்.

## நிஜத்தில் நிறைவேறுதல்

இஸ்ரயேலர்கள் மற்றும் அவர்களது முதற்பேறானவர்களின் இந்த அனுபவங்களானது மிகவும் உண்மையானவைகளாகவும், கவனத்தை மிகவும் ஈர்க்கின்றவைகளாகவும் அவர்களுக்குக் காணப்பட்டன; ஆனால் இவைகள் இப்பொழுது கடந்துபோகப்படுகின்றவர்களும், அந்நிழலுக்கு நிஜமானவர்களுமாய்க் காணப்படுகின்றவர்களுமான கிறிஸ்தவர்களுக்கு இன்னும் அதிகமாய்க் கவனத்தை ஈர்க்கின்றதாயுள்ளது. கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிடுகையில், கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணியுள்ளவர்கள் அனைவரையும் அல்லது சபைக் கூடுகைகளில் தினந்தோறும் பங்கெடுப்பவர்கள் அனைவரையும் நாம் குறிப்பிடவில்லை. இப்பொழுது அழைக்கப்பட்டு, கர்த்தருக்கான தங்களது உண்மையில் பரீட்சிக்கப்பட்டு, விசுவாசத்தின் வாயிலாக மரணத்தைவிட்டு, ஜீவனுக்குட்பட்டிருப்பவர்களாகிய, பரிசுத்தவான்களாகிய சிலரையே நாம் குறிப்பிடுகின்றோம். இவர்கள் வேதவாக்கியங்களில், "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (எபிரெயர் 12:23). முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கு அல்லது முதற்பேறானவர்களின் தப்புவிக்கப்படுதலுக்குப்பிற்பாடே எகிப்திலிருந்து இஸ்ரயேல் தேசத்தாரின் விடுதலை சம்பவித்ததுபோலவே, "முதற்பேறானவர்களுடைய சபை" நிறைவேறுதலுக்குப்பிற்பாடே, முதலாம் உயிர்த்தெழுதலுடைய வல்லமையினால் இவர்கள் மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்து சென்றபிற்பாடே, தெய்வீக ஆசீர்வாதமானது மனுக்குலத்தினுடைய உலகத்தின்மீது நேரடியாய்க் கடந்துவரும். முதற்பேறானவர்களின் வகுப்பார் இருப்பது என்பது, பிற்பிறப்புகள் வகுப்பார் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக தற்காலத்தின் சபைக்கான அழைப்பும், பரீட்சைகளும், சோதித்தல்களும், நிரூபித்தல்களும் மற்றும் இறுதியில் பலன் அளித்தல்களும், மனுக்குலத்திற்கான தெய்வீக இரக்கம் பாராட்டுதலின் முடிவாக இல்லையென்றும், இது இரக்கம் பாராட்டுதலுக்கான ஆரம்பம் மாத்திரமே என்றும், வேதவாக்கியங்கள் எங்கும் தெளிவாய்ப் போதிக்கின்றன; ஏனெனில் பரிசுத்தவான்கள் "முதற்பேறானவர்களின் சபை" என்று அல்லது அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்று குறிப்பிடப்படுவதால், பிற்பலன்கள் என்பதும் தெய்வீகத் திட்டத்தினுடைய பாகமாய் இருக்கின்றது என்பதில் நமக்கு உறுதியே.

லேவியர்கள் மத்தியில் காணப்பட்ட பல்வேறு பிரிவுகள், கிறிஸ்துவினுடைய சபையின் பல்வேறு படிநிலைகள் மற்றும் நிலைகளை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் லேவியர்கள் மத்தியிலான முதன்மையான பிரிவினர், ஆரோனின் ஆசாரிய குடும்பத்தினராய் இருந்தனர்; இதுபோலவே நிஜமான லேவியர்கள் மத்தியிலும் ஒரு விசேஷித்த வகுப்பார், அதாவது உண்மையுள்ளவர்களாகிய சிலர் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் வேதவாக்கியங்களில் இராஜரிக ஆசாரிய கூட்டத்தினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## நிஜமான ஆட்டுக்குட்டியானவரும், அவருடைய இரத்தமும்

இயேசுவின் நாட்களில் பஸ்காவினுடைய நிஜம் நிறைவேறுவதற்கான வேளை வந்தது. இயேசுதாமே பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் போகின்றார். விசுவாசத்தினால் அவரது பலியின், அவரது இரத்தத்தின் புண்ணியமானது, அவரது ஜனங்களுடைய இருதயங்களின் நிலைக்கால்களில் தெளிக்கப்படப்போகின்றது மற்றும் அவரது மாம்சமானது, அவரது பூமிக்குரிய பூரணத்தின் புண்ணியமானது அவர்களது மனங்களில் புசிக்கப்படப்போகின்றது அல்லது சொந்தமாக்கப்படப்போகின்றது. இதனோடுகூட அவருடைய ஜனங்கள் தெய்வீக வாக்குத்தத்தங்களாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் மற்றும் சோதனைகள், துன்பங்கள் எனும் கசப்பான கீரைகளையும் புசிக்கப்போகின்றார்கள் மற்றும் இன்னுமாக ஆட்டுக்குட்டியானவரோடுகூட, அவரது அவமானங்களிலும், பாடுகளிலும் அவர்கள் பங்கெடுப்பதை அடையாளப்படுத்துகின்றதான திராட்சப்பழரசத்தையும் அவர்கள் பானம்பண்ணப் போகின்றார்கள்.

தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு என்ற நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியானவர், நிழலான ஆட்டுக்குட்டிகளானது அடிக்கப்பட்டதற்கான நாளுக்குரிய ஆண்டு நிறைவு நாளில்தானே, சுமார் 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக அடிக்கப்பட்டார். இயேசுவின் பலியானது, மீண்டும் மீண்டுமாகத் திரும்பிச்செய்யப்பட வேண்டியதில்லை, ஏனெனில் விசுவாசத்தின் மூலமாக நாம் அனைவரும் அதே இரத்தத்தை இன்று தெளிக்கின்றோம் மற்றும் நம்முடைய இருதயத்தில் அதே பூமிக்குரிய பலியினுடைய புண்ணியத்தினைப் புசிக்கின்றோம் மற்றும் துன்பங்கள் எனும் அநேகக் கசப்பான கீரைகளைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் இரத்தத்தைப் பானம் பண்ணுகின்றோம் - அதாவது ஆண்டவருடைய சிந்தனையிலும், நீதியினிமித்தமான பாடுகளுக்கான பலனிலும் பங்கடைகின்றோம்.

"சிறு மந்தையினரைத்" தவிர மற்றபடி இந்த 19 நூற்றாண்டுகள் காலமாக, அநேகர் இந்தச் சிலாக்கியங்களை உணர்ந்துகொண்டதில்லை. சிறுமந்தையினருக்கான தற்போதுள்ள அனுபவங்களினிமித்தம், அவர்கள்மீது பொறாமைகொள்வதற்கும் எவருமில்லை; இனிவரவிருக்கும் ஜீவியத்தில் அவர்களுக்கான பலன் மற்றும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு மிகுதியாயிருக்கும் என்பது குறித்தும் எவரும் உணர்ந்துகொள்ளவுமில்லை. அக்காலத்தில் கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுவதற்குப் பதிலாக, இவர்கள் மகிமையோடும், கனத்தோடும், அழியாமையோடும் அவரோடுகூட ஆளுகைச்செய்வார்கள்.

## என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

("நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" - 1 கொரிந்தியர் 5:7) நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியென மரிப்பதன் வாயிலாக இந்த நிழலை நிறைவேற்றிட ஆரம்பித்த இயேசு, தம்முடைய பின்னடியார்களுக்கு வருடந்தோறும் நினைவூட்டும் சின்னங்களை நிறுவினார்; இது அவர்களுடைய மனதில் நிழலுக்குப் பதிலாக இடம் பெற்று, மாபெரும் நிஜத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு நினைப்பூட்டுவதாகக் காணப்படும். சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்திற்குப்பதிலாக, ஆண்டவர் அப்பத்தினைப் பயன்படுத்தினார் மற்றும் இரத்தத்திற்குப்பதிலாக திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்தினார் மற்றும் தொடர்ந்து நிழலானது ஆசரித்து நினைவுகூரப்படுவதற்குப்பதிலாக, இவைகள் [புதிய சின்னங்கள்] நிஜத்திற்கான, நினைவுகூருதலாக ஆசரிக்கப்படுவதற்குக் கட்டளையிட்டார்; அதாவது "உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுகிறதான *தேவ ஆட்டுக்குட்டிக்கும்"* மற்றும் இஸ்ரயேலும், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு முன்னதாக *முதற்பேறானவர்களின் சபைக்கு நிகழவிருக்கின்றதான கடந்துப்போகுதலுக்குமான* — நினைவுகூருதலாக ஆசரிக்கப்படுவதற்குக் கட்டளையிட்டார்.

நமது கர்த்தர் யூதனாயிருந்தபடியால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டி, முதலானவைகளைப் புசிப்பதற்கு, அதாவது நிழலான பஸ்காவைக் கைக்கொள்வதற்கு முதலாவது கடமைப்பட்டிருந்தார்; ஆனால் அந்தப் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு தமக்கான நினைவுகூருதலுக்கு மாற்றுப்பொருளான அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் பின்வருமாறு கூறி நிறுவினார் . . . "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள்" (வசனம் 23). அவரது தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டியும், அவரது இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களுமான சபையைச் சேர்த்துக்கொள்வதற்கென்றும், இஸ்ரயேல்மீதும் மற்றுமாக இஸ்ரயேல் வாயிலாக ஒட்டுமொத்த மனுக்குலத்தின்மீதும் சம்பூரணமான ஆசீர்வாதங்களைப் பொழிந்திடுவதற்கென்றும் அவர் வல்லமையிலும், மகா மகிமையிலுமான தமது இரண்டாம் வருகையில் வரும்வரையிலும்... "நான் தேவனுடைய இராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 14:22-25).

## சுயநலமாய்க் காட்டிக்கொடுத்த யூதாஸ்

காட்டிக்கொடுப்பதற்கான வேளை சமீபமாயிற்று. நாம் அறிந்திராத ஏதோ ஒரு வல்லமையினால், யார் தம்மைக் காட்டிக்கொடுப்பார் மற்றும் இன்னும் பல விஷயங்களை ஆண்டவர் அறிந்திருந்தார். அக்காரியத்தைப் பன்னிருவரிடத்தில் வெளிப்படுத்தும் வண்ணமாக அவர் "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். ஒவ்வொருவரும், "ஆண்டவரே, நானோ, நானோ?" என்றும் கேட்டார்கள். தன்னுடைய வஞ்சகமான நடவடிக்கைப்பற்றி ஆண்டவர் அறிந்திருக்கிறார் என்பதை அறிந்தும், யூதாஸ் வெட்கம் இல்லாமலேயே "நானோ?" என்று கேட்டான். "நீ சொன்னபடிதான்" ...நீ தான் காட்டிக்கொடுப்பவன் என்பதாகப் பதில் கடந்துவந்தது. தெய்வீகத் திட்டமானது துரோகியினால் நடந்தேற்றப்பட்டது மற்றும் அவர் முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட வேண்டும் என்பதான வேதவாக்கியங்கள் நிறைவேறின; ஆனால் இது தொடர்பாக தேவன் முன்னறிவு கொண்டிருப்பதினால், தேவன் எவ்விதத்திலாகிலும் துரோகமானச் செயல் புரிவதற்குப் பின்னிருந்து தூண்டிவிட்டார் என்பதாகாது; ஆகையால்தான் "எந்த மனுஷனால் மனுஷக்குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ" என்பதாக வேதவாக்கியம் இடம் பெறுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, யூதாசுக்கு எதிர்கால வாழ்க்கைக்கான எந்த நம்பிக்கையும் இல்லையென்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். யூதாஸ் தனது மரணத்திற்கு முன்பாக அடைந்த துக்கமும், வேதனையும், முந்திய நாட்களில் அவன் அடைந்திருந்த எந்தச் சந்தோஷங்களினாலும் சரிபடுத்தப்பட முடியவில்லை.

## என் பிதாவின் இராஜ்யத்தில்

தமது மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தையும், தமது இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதான பாத்திரத்தையும் ஆண்டவர் சீஷர்களிடத்தில் கொடுத்தபோது, அவர் அவர்களுக்கு நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தமாக்கப்படுதலையும் அடையாளமான விதத்தில் கொடுத்தவராய் இருந்தார் மற்றும் பரிசுத்தவானாகிய பவுல் விவரித்ததுபோன்று, இதைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்தார்; அதாவது தற்காலத்தின் பாடுகளிலும், எதிர்க்கால மகிமைகளிலும் அவரோடுகூடப் பங்கெடுப்பதற்கு வாய்ப்பளித்தார் (1 கொரிந்தியர் 10:16, 17; மத்தேயு 26:29). பாத்திரத்தினுடைய நிஜமானது, அதன் உயர்வான கோணத்தில் பார்க்கையில், அது மகிமையின் மகா இராஜாவாகிய கிறிஸ்து, தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக்கொள்ளும்போது, அவரோடுகூட, அவருக்குள் உண்மையுள்ளவர்கள் அனைவரும், பங்கடைகின்றதான புதிய சந்தோஷங்களைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

*****

# இருளான கெத்செமனே வேளை

## மத்தேயு 26:36-46

"*இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றார்.*" **மத்தேயு 26:45**

யூதர்களெனப் போதகரும், அவரது சீஷர்களும் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தப் பிற்பாடு, அடுத்து தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை அப்பம் மற்றும் திராட்சரசம் கொண்டு நிறுவின பிற்பாடு, தம்மைக் காட்டிக்கொடுப்பதற்கென யூதாஸ் வெளியேறின பிற்பாடு, இயேசுவும், மீதம் இருந்த பதினொரு பேரும் எருசலேமிலுள்ள மேல் வீட்டறையினின்று வெளியேறி, பட்டணத்தை வாயில் வழியாய்த் தாண்டி, கெதரோன் ஆற்றைத் தாண்டி, ஒலிவ மலையினுடைய சாய்வான பகுதிகளில் ஏறி கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். கெத்செமனே என்ற வார்த்தையின் அர்த்தமானது எண்ணெய் செக்காகும். இந்தத் தோட்டமானது, அப்போஸ்தலனாகிய யாக்கோபு மற்றும் யோவானுடைய உறவினர்களுக்குச் சொந்தமானது என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது. சுவிசேஷகர்களில் ஒருவரும், அப்போஸ்தலர் அல்லாதவருமான பரிசுத்த மாற்கு அவர்கள், அதே குடும்பத்தினுடைய அங்கத்தினன் என்றும் சொல்லப்படுகின்றது. போதகர் கைது செய்யப்பட்டதைப் பதிவு செய்யும் பதிவுகள் ஒன்றில், போதகரைப் பின்தொடர்ந்து போனவர்கள் மத்தியில், துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்திக்கொண்டு, வாலிபன் ஒருவனும் போனான் என்றும், சேவகர்கள் வாலிபனைப் பிடிக்க முயன்றபோது, அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் ஓடிப்போய்விட்டான் என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. இந்த வாலிபன், பல வருடங்களுக்குப் பிற்பாடு பரிசுத்த மாற்கு என்று அறியப்பட்டிருந்தார் என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

இது போதகருடைய அனுபவங்களிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க இரவாகும். அவர் பஸ்காவினுடைய ஒவ்வொரு அம்சத்தின் அர்த்தத்தையும் நன்கு அறிந்திருந்தார். தாம்தான் நிஜமான தேவ ஆட்டுக்குட்டி என்றும், தம்முடைய மரணமானது அடுத்த நாளில் சிலுவையில் அறையப்படுவதின் மூலம் நிறைவேறும் என்றும் அவர் அறிந்திருந்தார். எனினும் அவரது எண்ணங்களானது, அவரது அருமை சீஷர்கள் பற்றியதாகவே இருந்தது. அவர் அவர்களுக்கு இறுதியான அறிவுரைகள் மற்றும் உற்சாகத்தின் வார்த்தைகளைக் கொடுக்க வேண்டும். அவர் இதைச் செய்தார். மேல் வீட்டறையை விட்டுச் சென்றதற்கும், எண்ணெய் செக்காகிய கெத்செமனேயை வந்தடைவதற்கும் இடையில் நடைப்பெற்றவைகளானது பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தின், மூன்று அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்" (யோவான் 18:2). பரிசுத்த யோவான் எழுதின சுவிசேஷத்தினுடைய 14-ஆம் அதிகாரத்தில், போதகர் சீஷர்களிடத்தில், தாம் போய் அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகின்றார் என்றும், அவர்களுக்குத் தேற்றரவாளனாய் இருக்கும்படிக்குச் சத்திய ஆவியை அனுப்புவார் என்றும், சத்திய ஆவியானது, வரும் காரியங்களை அவர்களுக்கு அறிவிக்கும் என்றும் கூறியுள்ளார். 15-ஆம் அதிகாரத்தில் அவர் அவர்களுக்குத் திராட்சச் செடி மற்றும் கொடிகள் குறித்த உவமையைக் கூறினார் மற்றும் அவர்கள் இனி ஊழியக்காரர்களாய் இராமல், நண்பர்களாய் இருக்கின்றனர் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார்; "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான் 15:15). 16-ஆம் அதிகாரத்தில், அவர்கள் தம்முடைய பாடுகளில் பங்கடைந்து, அவரது மகிமையில் பங்கடைவதற்கு ஆயத்தமாக வேண்டுமெனில், அவர்கள் உபத்திரவங்களை எதிர்ப்பார்த்திட வேண்டுமென்று அவர்களுக்கு விவரித்தார்.

"கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள்" என்றார். தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் அவர் இல்லாமல் இருக்கும் காலப்பகுதியானது, நித்தியக்காலத்துடன் ஒப்பிடுகையில், கொஞ்சக் காலமாகவே உள்ளது. பின்னர் உயிர்த்தெழுதலினுடைய "மறுரூபத்தின்" காரணமாக, அவர்கள்

அவரைக் காணமுடியும், ஏனெனில் அவர்களும் அவரைப்போன்று காணப்படுவார்கள். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33). 17-ஆம் அதிகாரத்தில் தம்முடைய அப்போஸ்தலர்களுக்காக மாத்திரமல்லாமல், இவர்களுடைய வார்த்தைகளின் வாயிலாக தம்மேல் விசுவாசம் வைக்கின்ற யாவருக்காகவும் தம் பின்னடியார்கள் சார்பில் பிதாவிடம் ஏறெடுக்கப்பட்டதான அவரது அருமையான ஜெபம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கெத்செமனே தோட்டத்தில்

இப்படியாக அவர்கள் சம்பாஷித்துக்கொண்டு, தோட்டத்திற்கு (அ) ஒலிவ தோட்டத்திற்கு வந்து சேர்ந்தார்கள்; இங்கு ஒலிவ பழங்களிலிருந்து எண்ணெய் எடுக்கப்படும் ஆலை காணப்பட்டது. வாயிற் பகுதியில் சீஷர்களில் எட்டுப்பேர் காவல்காக்கும்படிக்கு விடப்பட்டனர்; இயேசுவும், அவரால் விசேஷமாய் அன்புகூரப்பட்டதான பேதுருவும், யாக்கோபும், யோவானும் சற்று உள்ளே, தொலைவாகப் போனார்கள். பின்னர் தம்முடைய அன்பார்ந்த நண்பர்களால் கூடத் தம்முடைய துக்கமானச் சூழ்நிலையை உணர்ந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதை உணர்ந்தவராக, இன்னும் தொலைவாக, பிதாவோடு பேசும்படிக்குத் தனிமையில் போனார். அவரது வாயினின்று பேசப்பட்டவைகளைக் குறித்துக் குழப்பமடைந்து, அதிர்ச்சியடைந்துக் காணப்பட்ட சீஷர்கள், உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவரது வார்த்தைகள் மறைப்பொருட்களாகவே இருக்குமென்று அவர்கள் எண்ணினார்கள் என்பதில் உறுதியே. அவரோடுகூட விழித்திருக்க அவர்களுக்கு விருப்பம்தான், ஆனாலும் அவர்கள் களைப்படைந்திருந்தபடியால், உறங்கிப்போனார்கள். அவர்களது ஆவி உற்சாகமுள்ளதாய்தான் இருந்தது, ஆனால் மாம்சமோ பெலவீனமாய் இருந்தது.

ஏன் இப்படி ஜெபத்தில், தனிமையில் காணப்படுவதற்குப் போதகர் அடிக்கடி விரும்பிட்டார் என்று சிலர் கேட்கலாம் மற்றும் இதற்கான பதில் என்னவெனில், "நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" என்பதேயாகும் (ஏசாயா 63:3). அவரது சீஷர்களும், பின்னடியார்களும் அவரை மிகவும் அன்புகூர்ந்தார்கள். ஆனாலும் அவர் தனியாகத்தான் காணப்பட்டார்; ஏனெனில் அவர் மாத்திரமே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவராய் இருந்தார். அவரது பலி நிறைவேறுவது வரையிலும், அவர்களுக்கு தம்முடைய புண்ணியத்தினைத் தரிப்பிக்கத்தக்கதாகவும், அவர்கள் பின்வரும் மகிமைகளில் பங்கடையத்தக்கதாக, தற்காலத்தின் பாடுகளில், அவரோடுகூடப் பலிச்செலுத்தும்படிக்குப் பங்கடைவதற்கு அவர்களை அனுமதிக்கத்தக்கதாகவும், அவர் தேவன் முன்னிலையில் தோன்றுவது வரையிலும், அவர்களது பின்னடியார்களால் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக உணரமுடியாது, ஆவியினால் ஜெநிப்பிக்கவும் படமுடியாது.

இந்த நமது கர்த்தருடைய அனுபவத்தைக் குறித்துப் பரிசுத்த பவுல் அவர்கள், "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" (எபிரெயர் 5:7) என்று தெரிவிக்கின்றார். அவர் ஏன் பயப்பட்டார்? மனுஷர்கள் அனைவரும் மரணத்தைச் சந்திக்கவில்லையா? மனுஷர்களில் சிலர் மிகுந்த தைரியத்துடனும், சிலர் மனத்துணிவுடனும் சந்தித்திருக்கின்றார்கள் அல்லவா? ஆ! மரணம் குறித்த விஷயத்தில், நம்முடைய கண்ணோட்டத்திற்கும், போதகருடைய கண்ணோட்டத்திற்கும் வெகு வித்தியாசம் உள்ளது. நாம் மரிப்பதற்காகவே பிறக்கின்றோம். நமக்குப் பரிபூரண ஜீவன் என்றாலே என்னவென்று தெரியாது. மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வழியே இல்லை என்று நாம் எப்போதுமே அறிந்தவர்களாய் இருக்கின்றோம். ஆனால் அவர் விஷயத்தில் மிகவும் வித்தியாசமாகும். உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக, ஆவிக்குரிய தளத்திலான அவரது அனுபவங்கள் அனைத்தும் ஜீவன், பூரண ஜீவன் தொடர்புடையதாகவே காணப்பட்டது. "அவருக்குள் இருந்த ஜீவனானது" மாசற்றது, ஏனெனில் அவர் பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார்; அவரது ஜீவன் ஆதாமிடமிருந்து வந்ததல்ல.

தெய்வீக எதிர்ப்பார்ப்புகளுக்கு இசைவாக தாம் பூரணமாய் ஜீவித்தால், தம்முடைய பரிபூரணத்தில் ஜீவனுக்கான உரிமையை, தாம் பெற்றிருப்பார் என்பதை அவர் அறிவார். இன்னுமாக "பலியினாலான உடன்படிக்கை" என்று தேவனிடத்தில் பண்ணிக்கொண்டதான விசேஷித்த உடன்படிக்கையின் காரணமாக, தம்முடைய பூமிக்குரிய உரிமைகளைக் கையளித்து விடுவதற்குத் தாம் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதையும், தம்முடைய ஜீவன் தம்மிடமிருந்து எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கத்தக்கதாக தாம் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். பிதாவும் அவருக்கு மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதலின் வாயிலாக மகிமை, கனம் மற்றும் அழியாமை எனும் மகா பலனை வாக்களித்துள்ளார்; ஆனால் இது அனைத்து விஷயங்களிலுமுள்ள, அதாவது வார்த்தையிலும், சிந்தையிலும், கிரியையிலுமுள்ள அவரது முற்றும் முழுமையான கீழ்ப்படிதலைச் சார்ந்துள்ளது. அவர் அனைத்து விஷயங்களிலும் தேவனுக்கு உண்மையாய் இருந்துள்ளாரா? என்பதுதான் கேள்வி. இல்லையெனில் மரணமானது, அவருக்கு நித்திய மரணத்தைக் குறிக்கின்றதாகிவிடும்; அவருக்குப் பலனாக வாக்களிக்கப்பட்டுள்ளதான பரலோக மகிமையை இழந்துபோவது மாத்திரமல்லாமல், அனைத்தையுமே இழந்துபோவதாக இருந்துவிடும். அவர் இதைப் புரிந்துகொள்ளவில்லை என்று நாம் எண்ண முடியுமா? அந்த வேளை மிகவும் இருளானதாய்க் காணப்பட்டது மற்றும் அவர் "என்னுடைய ஆத்துமா மரணத்திற்கேதுவான துக்கம் கொண்டிருக்கின்றது" என்று கூறினார். அவர் தாம் மரிக்கப்போகின்றார் என்பதை அறிந்திருந்தார். மரணம் அவசியமானது என்றும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அடுத்த நாளில் தேவதூஷணம் புரிந்திட்டவரென, குற்றவாளியென, தெய்வீகப் பிரமாணத்தை மீறினவரென அவமானமாய் மரணத்தண்டனை நிறைவேற்றப்படப் போகின்றதான காரியமானது அவரை பயமுறுத்திக்கொண்டிருந்தது. ஏதேனும் விஷயத்தில், கொஞ்சமேனும் தாம், பிதாவுக்குரிய கனத்தைத் தமக்கென்று எடுத்திருப்பதற்கு வாய்ப்பிருக்கின்றதா? ஏதேனும் அளவில், மனதிலாகிலும், பிதாவின் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படியாமல் இருந்திருப்பதற்கு வாய்ப்பிருக்கின்றதா? இப்படிச் சிலுவையில் அறையப்படுதல் என்பது, தாம் தெய்வீகத் தயவை இழந்துவிட்டதைக் குறிப்பதாக ஒருவேளை உண்மையில் இருந்துவிடுமோ? தாம் இவ்விதமாய் மரிப்பது அவசியமா? இந்த அவமானத்தின் பாத்திரம் நீங்குவதற்கு வாய்ப்புள்ளதா? என்ற கேள்விகள் அவரை பயமுறுத்திக்கொண்டிருந்தது. ஆகையால் அவர் மிகுந்த வியாகுலத்துடனே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது என்ற வார்த்தைகள் பழைமைமிக்க கிரேக்க மூலப்பிரதிகளில் இடம்பெறவில்லை என்றாலும், மன வியாகுலத்தின் போது, அழுத்தத்தின்போது, இப்படியாக வருவதற்கு வாய்ப்புள்ளது என்றே மருத்துவ துறையானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது ஜெபத்தினுடைய இறுதி வார்த்தைகளாகிய, "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்பதிலுள்ள அருமையான எளிமையினை நாம் கவனிக்கின்றோம்.

கடுமையானச் சூழ்நிலை மத்தியிலும்கூட விசுவாசமும், நம்பிக்கையும் எத்துணை அருமையாயும், குழந்தைகள் வைப்பதுபோன்றும் காணப்படுகின்றது! அவருக்கு உண்டான பயத்தின் நிமித்தம் கேட்கப்பட்டார் என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். எப்படி? தேவனுடைய வார்த்தையானது, தேவதூதனுடைய கரங்களின் வாயிலாக வந்தது. ஒரு தூதன் தோன்றி, அவருக்கு ஊழியம் புரிந்திட்டார் - அதாவது அவரது தேவைக்காக ஊழியம் புரிந்திட்டார். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரெயர் 1:14). போதகர் துயரத்திலும், தாழ்மையிலும் காணப்படுகையில் எந்த வார்த்தைகளினால் இந்தப் பரம ஊழியமானது செய்யப்பட்டது என்பது குறித்து நமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், அது பரம பிதாவினுடைய தயவு, அனுதாபம் மற்றும் அன்பு குறித்த முழு வாக்குறுதி நிரம்பின வார்த்தைகளாகவே இருந்திருக்கும் என்பதை நாம் அறிவோம். அவருக்கு உண்டான பயத்தின் நிமித்தம் கேட்கப்பட்டார். அவர் பிதாவுக்கு நன்கு பிரியமாய் இருக்கின்றார் என்றும், அவர் தமது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராக இருந்திருக்கின்றார் என்றும், வாக்களிக்கப்பட்டதான உயிர்த்தெழுதலை அவர் பெற்றுக்கொள்வார் என்றுமுள்ள நிச்சயத்தினை அவர் பெற்றுக்கொண்டார்.

அத்தருணம் முதல் போதகர், அந்த இரவு மற்றும் அடுத்த நாள் வந்த மாபெரும் நிகழ்வுகளில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரிலுமே அமைதலுள்ளவராய்க் காணப்பட்டார். அதிகாரிகள், வேலைக்காரர்கள், ஆலோசனை சங்கத்தினர், ஆசாரியர்கள், ஏரோது, இவரது சேவகர்கள், பிலாத்து மற்றும் இவரது சேவகர்கள், மக்கள் கூட்டம் - அனைவரும் மன அமைதல் இல்லாமலும், கிலேசத்துடனும் காணப்பட்டார்கள். இயேசு மாத்திரமே அமைதியுடன் காணப்பட்டார். இதற்குக் காரணம், அனைத்துமே அவருக்கும், பிதாவுக்கும் இடையில் நன்றாய் உள்ளது என்ற பிதாவின் வாக்குறுதியேயாகும். இந்தப் பாக்கியமான வாக்குறுதியானது, போதகருக்குத் தைரியத்தைக்

கொடுத்ததுபோன்று, இன்றுவரையிலுமாக அவரது பின்னடியார்கள் கூட, "தேவன் நம் பட்சத்தில் இருந்தால், நமக்கு எதிராய் நிற்பவன் யார்? என்றும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானமானது, எங்களுடைய இருதயங்களை ஆளுகின்றது என்றால், நமக்கு எதிராய் நிற்பவன் யார்?" என்றும் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## நன்றியற்றவனும், எதிராளியானவனுமான யூதாஸ்

ஏமாற்றுகின்ற கதாப்பாத்திரங்கள் அநேகர் உலகத்தில் காணப்படுகின்றனர். அநேக விஷயங்களில் நாம் அனைவருமே தவறுகின்றோம். சுயநலம், பெருமை, பிடிவாதம் (கீழ்த்தரம்)/குறுகிய மனம் முதலானவைகள் மிகவும் துயரளிக்கும் விதத்தில் மனித குடும்பத்தில் காணப்படுகின்றது. ஆனால் இவைகள் அனைத்திலுமேயே, ஒருவன் நன்றிகெட்டவனாய், தனது அருமை நண்பனைக் காட்டிக்கொடுக்கும் அளவுக்குச் செய்கிறதைப் பார்க்கிலும் மிகவும் கண்டனத்திற்குரியதாய் ஏதேனும் காணப்படுகின்றதா?

யூதாஸ் போன்ற பாத்திரங்கள் குறித்ததான அபிப்பிராயத்தில், உலகம் எதிராகவே காணப்படுகின்றது. யூதாஸ் பெயர் பெற்ற உதாரணம் என்றாலும், இவர் ஒருவரே உதாரணம் என்றில்லை; அநேகர் இப்படியாகக் காணப்பட்டிருந்திருக்கின்றனர். இப்படியானவர்களில் சிலர் இன்றும் ஜீவித்துக்கொண்டிருக்கின்றனர். யார் ஒருவர் இத்தகைய ஒரு பண்பின் குறுகிய தன்மையை/கீழ்த்தரத்தை நன்கு உணர்ந்துகொள்கின்றாரோ, ஒருவேளை இவரின் மற்ற பண்புகள் எவ்வளவுத்தான் கீழ்த்தரமாய் இருப்பினும், இக்குறிப்பிட்ட பண்பை வெளிப்படுத்துவதிலிருந்து இவர் தப்பித்துக்கொள்வார். தனது எஜமானை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கமுடிந்த மனுஷன், யாவராலும் வெறுக்கவேபடுவான். நன்றிகெட்டுப் போவதற்கு, முப்பது வெள்ளிக்காசுகள் மாத்திரமே தூண்டிடவில்லை; பெருமையும் காரணமாகும். யூதாஸ் போதகரோடுகூடப் பூமிக்குரிய சிங்காசனத்தில் காணப்பட வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தான்; இந்த எதிர்ப்பார்ப்பில் அவன் நம்பிக்கையாய்க் காணப்பட்டான். இப்பொழுதோ அதே போதகர் சிங்காசனம் இப்பொழுது வருவதில்லை என்றும், இந்த யுகத்தினைத் தொடர்ந்துவரும் யுகத்திலேயே வரும் என்றும், மரணம் வரையிலும் உண்மையுடனும், நேர்மையுடனும் காணப்படுவர்களுக்கே அது அருளப்படும் என்றும் தெளிவாய், முழுமையாய் விளக்கினார். இக்காரியமானது ஞானமான மற்றும் சிறந்த வழியல்ல என்று யூதாசின் மனம் எண்ணினது. மாபெரும் போதகரை வெறுத்தவனாக, வஞ்சிக்கப்பட்டவனாகிய யூதாஸ், தற்காலிகமாக போதகர் கையளிக்கப்பட வேண்டுமென்றும் - இது போதகர் இப்படியாய்ப் பேசக்கூடாது மற்றும் இப்படிக் காலத்தைத் தாழ்த்திக் கொண்டிருக்கக்கூடாது என்று அவருக்குப் போதிக்கும் வண்ணமாக காணப்படும் என்றும் - இது போதகருக்குத் தூண்டுதலாக காணப்பட்டு, அவரது ஜீவனை நாடினவர்களை எதிர்க்கும் வண்ணமாய், அவர் தம் வல்லமையைச் செயல்படுத்தத்தக்கதாக அவரை வலுக்கட்டாயத்திற்குள்ளாக்கி மற்றும் இப்படியாய் அவரை உயர்த்திக்கொள்வதன் மூலமாக, அவர் சீஷர்களுக்கு வாக்களித்த வண்ணமாக அவர்களை இராஜ்யத்தில் பங்கடையச் செய்வதன் மூலம், அவர்களுக்கு நன்மைச் செய்ய வைப்பதற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் [அ] இல்லையேல் இவைகளைப் போதகர் செய்யத் தவறினால், முழுத் திட்டத்தையும் சிதைத்துப் போடுவதற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் எண்ணினான். அந்தோ பரிதாபம்! பேராசையினால் வெறியூட்டப்படுகின்ற சிலர், பணத்தின் மீதான ஆசையினாலும், அதிகாரத்தின் மீதான ஆசையினாலும் பெருமிதம் அடைந்து, மன தடுமாற்றம் அடைந்துவிடுகின்றனர். "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:12) மற்றும் "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6) என்கிற செய்தியினைக் கர்த்தருடைய பின்னடியார்கள் நினைவுகூர்வது எத்துணை அவசியமாயுள்ளது.

*****

# அவர் அரைக்கட்டிக்கொண்டு, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்

அந்தோ பரிதாபம்! சுயாதீனம் என்பது எத்தகைய ஆபத்தான ஒன்று என்றும், நமக்குப் பிரயோஜனப்படும் வகையில் அது எத்தனை ஜாக்கிரதையாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் மற்றும் நம்முடைய நித்திய அபாயத்திற்கு ஏதுவாய் அது எத்தனை சுலபமாய்த் தவறாய்ப் பயன்படுத்தக்கூடும் என்றும், எத்தனை சொற்பமானவர்களே உணர்ந்திருக்கின்றனர்! தேவன் நம்மைச் சுதந்தரமாய்ச் செயல்படுபவர்களாய்ச் சிருஷ்டித்திருப்பதன் காரணத்தினால், இது அவரது சாயலின் ஒரு பாகமாய் இருப்பதன் காரணத்தினால், முன்னேறுகிற ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் குறிக்கோள் என்பது ஒரு பாகமாகக் காணப்பட வேண்டும் என்ற காரணத்தினால், சுதந்தரமாய்ச் செயல்படும் இத்தன்மையும், குறிக்கோளும் சேர்ந்து, நம் அனைவரையும் குணலட்சண பரீட்சையின் கீழாகக் கொண்டு வருகின்றது. நம்முடைய திறமைகள் அதிகமாய்க் காணப்படுகையில், நம்முடைய தாலந்துகள் அதிகமாய்க் காணப்படுகையில் மற்றும் நம்முடைய செல்வாக்கு பரந்துவிரிகையில், குறிக்கோளின் வல்லமையும் பலமாகுகின்றது. பின்னரே சோதனை வருகின்றது. அதாவது இந்த நலமான குறிக்கோள் திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்படுமா - மரணம் வரையிலும் கர்த்தருடைய சித்தத்தைச் செய்யத்தக்கதாக முற்றும் முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்டிருக்குமா? என்ற சோதனைக் கடந்து வருகின்றது.

ஒருவேளை கர்த்தருக்கான நமது அர்ப்பணிப்பானது முழுமையாகக் காணப்படுமானால், நம்முடைய எண்ணங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் முழுக்கக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்போமானால், நம்முடைய சுயாதீனமும், பெரிதான குறிக்கோளும் சரியாய்ச் செயல்படுகிறதாயும், நமக்கும், மற்றவர்களுக்கும் இறுதியில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறதாயும் இருக்கும். ஆனால் ஒருவேளை திவ்விய சித்தமானது முதலாவதாகக் காணப்படாமலும், நம்முடைய சித்தங்களை முழுமையாய்க் கட்டுப்படுத்துகிறதும் இல்லையெனில், நாம் அதிகம் குறிக்கோளும், அதிகம் சுயாதீனமும் கொண்டிருப்பதற்கேற்ப, நமக்கான அபாயமும் அதிகமாய் இருக்கும். எங்குக் கர்த்தர் தொழுதுகொள்ளப்படுகிறதில்லையோ மற்றும் இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் மற்றும் பலத்தோடும் அவருக்குக் கீழ்ப்படிகிறதில்லையோ - வேறு யாரோ, அதாவது கணவனோ (அ) மனைவியோ, பெற்றோர்களோ (அ) பிள்ளைகளோ அல்லது சுயமோ - நமது இருதயங்களில் செல்வாக்கு கொண்டிருக்கின்றனர் என்பதாயிருக்கும். நம்முடைய இருதயங்களானது கர்த்தருக்கு முற்றிலும் நேர்மையாகவும், சுய சித்தமும், மற்ற ஒவ்வொரு சித்தமும் முற்றிலுமாய்த் திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இல்லையேல், நாம் ஜெயங்கொள்பவர்களாகிட முடியாது. இதுவே ஜெயம் கொள்பவர்களுக்கான ஜீவியம் முழுவதுமான படிப்பினையாக இருக்கின்றது. ஒவ்வொரு போராட்டங்களின் போதும், இறுதியில் தேவ கிருபையால் நாம் சமநிலையடைகையில் நாம் எவ்வளவாய்க் களிகூருகின்றோம்!

இந்த விஷயங்களில் மிகவும் முதன்மை வகிக்கும் சகோதரர்கள், மிகவும் கடுமையான சோதனைக்குள்ளாகுகின்றனர் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நிலைமையின் காரணமாகத்தான், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அப்போஸ்தலன் நம்மை முன்னெச்சரிக்கைப் பண்ணுகின்றார். போதகர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் சிலரின் திசைமாறுதல் என்பது, போதகர்களல்லாத மற்றவர்களுக்கு விசேஷித்த சோதனைகளை உண்டாக்குகிறதாய் இருந்து, கர்த்தரிடத்தில் எந்தளவுக்குத் தனிப்பட்ட உறவைக்கொண்டிருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றதாகவும் இருக்கும் - அதாவது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளின் வாயிலாகவும், அவருக்கான தனிப்பட்ட அர்ப்பணிப்பின் வாயிலாகவும் மற்றும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அவரது வார்த்தைகள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் மூலமான அவரது அறிவுரைகள் வாயிலாகவும், கர்த்தரிடத்தில் எந்தளவுக்குத் தனிப்பட்ட உறவைக்கொண்டிருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றதாகவும் இருக்கும். அநேகர் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் பழக்கத்தில் காணப்படுகின்றனர்; இந்த மற்றவர்கள் இடறிவிழுகையில், இந்த அநேகருக்கு விபரீதங்களைக் கொண்டுவருகின்றதாயிருக்கும். இந்தக் கொள்கையினை நாம் நீண்டகாலமாக அடையாளம் கண்டுகொண்டுள்ளபடியாலே, நாம் எழுதுகையில், நாம் கர்த்தருடைய செய்தியை, அவருடைய செய்தியாகவே முன்வைத்துள்ளோமே ஒழிய, எங்களுடைய செய்தியாக அல்ல; ஒவ்வொரு உபதேசத்திற்கான வேத அதிகாரத்தையும், வசனத்தையும் கொடுத்துள்ளோம்.

---

# தேவனைத் தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார்

## மத்தேயு 26:57-68

"*அவர் வையப்படும்போது பதில் வையாமலும்...*" 1 பேதுரு 2:23

இப்பாடத்தை நாம் திரு. சாண்டிலர் அவர்களால் கூறப்பட்டுள்ள சில வார்த்தைகளைக் குறிப்பிட்டு ஆரம்பிக்கலாம். அவர் பின்வருமாறு கூறியுள்ளார், "மனுக்குலத்தினுடைய நீதித்துறை சார்ந்த வரலாற்றில், அநேக குறிப்பிடத்தக்கதான விசாரணைகள் நடைபெற்றுள்ளது. அத்தேனே பட்டணத்தின் வாலிபர்களைச் சீர்க்குலைத்ததற்கும், கிரேக்கர்களின் தேவர்களைத் தூஷித்ததற்கும், அத்தேனே பட்டணத்தின் ஜனநாயக அமைப்பை அழிக்க நாடினதற்குமான குற்றங்களுக்காக, அத்தேனே பட்டணத்தின் சட்டசபைக்கு முன்பாக நடைபெற்ற சாக்கிரெட்டீஸ் அவர்களின் விசாரணையானது, அருமையான ஜனங்கள் பற்றின வரலாற்றில் இன்னமும் வியக்கத்தக்க மற்றும் சுவாரசியமான பாகமாகவே காணப்படுகின்றது."

"ஆல்பிரட் டிரெபஸ் அவர்களின் விசாரணைக்கூட இன்னமும், மனுஷர்களின் நினைவுகளில் காணவேபடுகின்றது. டிரெபஸ் ஒரு பிரமீதீயஸ்* என்று அவருடைய நண்பர்கள் கூறுவதுண்டு [*Prometheus - பிரமீதீயஸ் - கிரேக்க கடவுள்கள் வாழும் மலையிலிருந்து ஒளியைத் திருடி, மனுக்குலத்திற்குக் கொடுத்த ஓர் இராட்சதன் ஆவார். இந்தத் திருட்டிற்கான தண்டனையாக, இவன் பாறையில் கட்டப்படுவதற்கும், இவனுடைய கல்லீரலை உண்ணும்படிக்கு மாபெரும் கழுகை அனுப்புவதற்கும் சீயஸ் கடவுள் கட்டளையிட்டார்]. பிரஞ்சு தேசம் அதன் பிரிவினைவாதங்களினால் இன்னமும் பிரிவினையிலேயே காணப்படுகின்றது. டிரெபஸ் தேவனையோ (அ) கிறிஸ்துவையோ காட்டிக்கொடுத்த யூதாசாய் இராமல், மாறாக பிரான்ஸ் மற்றும் தாய்நாட்டையும் காட்டிக்கொடுத்த யூதாசாக இருக்கின்றாரென இவரது சத்துருக்கள் இன்னமும் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த விசாரணைகள் அனைத்தும், கலிலேயா ஊரானாகிய நாசரேத்தூர் இயேசுவினுடைய விசாரணை மற்றும் சிலுவையில் அறையப்படுதலுக்கு முன்னதாக சர்வ சாதாரணமானவைகளாகவும், சுவாரசியமற்றவைகளாகவும் உள்ளது."

இயேசுவுக்கு யூதர்கள் செய்திட்ட தீங்குகளின் விஷயத்திலும், உரோமர்கள் வாயிலாக இயேசுவை யூதர்கள் சிலுவையில் அறையப்பண்ணிட்ட விஷயத்திலும், யூதர்கள் முழுமையாய்ப் பழியினின்று விலக்கப்பட்டவர்கள் என்று கூறுவது நமக்கடுத்தக் காரியமல்ல. எனினும் நடந்திட்ட அநியாயங்கள் தொடர்புடைய விஷயத்தில், நமது கணிப்பினுடைய தீவிரமானது/கடுமைத்தனமானது மட்டுப்படுத்தப்படுவதற்குரிய அனைத்தையும்கூட நாம் கருத்தில் எடுத்துக்கொள்வதும் ஏற்றக்காரியமாய் இருக்கும். அவர்களுடைய (யூதர்களுடைய) கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, எவைகள் குற்றத்திற்கான பொறுப்பைக்குறிக்கின்றது என்பதை நாம் கருத்தில் எடுத்துக்கொள்வதும் ஏற்றக்காரியமாய் இருக்கும். இது அனைவராலும் அங்கீகரிக்கப்படும் ஒரு காரியமே. குற்றவாளியாகக் காணப்படும் ஒருவனுக்காய் வாதாடும் வழக்கறிஞர், தான் வழக்காடும் குற்றவாளிக்காக வழக்காடும்போது, குற்றவாளி குற்றத்தைச் செய்திடுவதற்குக் காணப்பட்ட நியாயமான காரணங்களை முன்வைப்பது கடமையாய் உள்ளது.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நாம் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பாகக் காணப்பட்டிருந்த யூத ஜனங்களைக் கண்ணோக்கும்போது, சூழ்நிலைகளைக் குறித்த மிகுந்த நியாயமான கண்ணோட்டத்தை நம்மால் அடையமுடிகின்றது. யூதர்களின் நடவடிக்கைக் குறித்த பரிசுத்தவானாகிய பேதுருவின் வார்த்தைகளை நாம் முதலாவதாகக் கவனித்துக்கேட்கலாம். "ஜீவாதிபதியைக்கொலை செய்தீர்கள்; சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்று பரிசுத்தவானாகிய பேதுரு கூறினார் (அப்போஸ்தலர் 3:15-17). ஒருவேளை அறிந்திருப்பார்களேயானால், இவர்கள் ஜீவாதிபதியைக் கொலை செய்திருக்கமாட்டார்கள்.

தங்களுக்குத் தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், இராஜாவாகவும்; மோசேயைப் போன்று, ஆனால் மோசேயைப்பார்க்கிலும் பெரியவராகவும்; தாவீது மற்றும் சாலொமோன் போன்று, ஆனால் இவர்களைப்பார்க்கிலும் பெரியவராகவும், மெல்கிசெதேக்கைப்போன்று ஆனால்

மெல்கிசெதேக்கிலும் பெரியவராகவும் இருப்பாரென முன்னுரைக்கப்பட்ட மாபெரும் மேசியாவானவர், "துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாய்த்" தோன்றுவாரென யூதர்கள் ஒருகணம்கூட எண்ணிப்பார்க்கவில்லை. அவர் "துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" என்று மேசியாவைக் குறித்துத் தீர்க்கத்தரிசியினால் எழுதப்பட்டதாய் இருந்தாலும் (ஏசாயா 53:3), இவைகள் மற்றத் தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்படும் அவரைக் குறித்த மகிமையான காரியங்களினால் அவர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்களுக்கு முன்பாக மறைக்கப்பட்டன. அவர்கள் மகிமைகளைக் கண்ணோக்கினார்கள். ஆனால் அவர்கள் பாடுகளைக் கண்ணோக்கவில்லை. இன்றுவரையிலும் தங்கள் ஜாதி சந்தித்த பாடுகளானது, இறுதியில் தங்களுக்கு நன்மையைக் கொண்டுவரும் என்றே எண்ணுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். தீர்க்கதரிசனங்கள் ஒரே இடத்தில் காணப்படுவதில்லை, மாறாக "இங்கே கொஞ்சமாகவும், அங்கே கொஞ்சமாகவும்" சிதறிக்காணப்படுகின்றன; அக்காலத்தில் அவைகள் புரிந்துகொள்ளக்கூடாதபடிக்கு, இப்படியாகச் சிதறிக்காணப்பட்டன; நமது கர்த்தர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வந்து தீர்க்கத்தரிசனங்களை விளக்குவது வரையிலும், கர்த்தருடைய சீஷர்களாலும்கூடப் புரிந்துகொள்ளப்படவில்லை; பின்னர் இப்படியாகவே காரியங்கள் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டுள்ளது என்றும், மனுஷகுமாரன் தம்முடைய மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பும், இஸ்ரயேலையும் மற்றும் உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்கு முன்பும், அவர் பாடுபட வேண்டியுள்ளது என்றும் சீஷர்கள் புரிந்துகொள்வதற்குப் பரிசுத்த ஆவியினால் உதவப்பட்டார்கள்.

ஆம், யூதர்கள் போன்று, இன்றும் அநேகம் கிறிஸ்தவர்களும் இவ்விஷயத்தில் மிகவும் குழப்பமடைந்துக் காணப்படுகின்றனர். இஸ்ரயேலையும், சகல மனுக்குலத்தையும் பொதுவாய் ஆசீர்வதிப்பதற்கும், சீர்த்தூக்குவதற்குமான மேசியாவின் மகிமையான இராஜ்யத்தின் ஆளுகைக் குறித்த கருத்தை அநேகர் முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளனர். "கிறிஸ்துவின் பாடுகள்தான்" அவரது மகிமையின் இராஜ்யத்திற்கான வழியை ஆயத்தம்பண்ணி, இராஜ்யத்தைக் கொண்டுவருவதாக இருக்கும் பட்சத்தில், (அந்த இராஜ்யம் இன்னமும் வராததினால்) இந்தக் குழப்பமடைந்துள்ள கிறிஸ்தவர்களின் கண்ணோட்டத்தின்படி ஒன்றில் தெய்வீகத் திட்டம் தோல்வியடைந்துவிட்டதாகக் காணப்பட வேண்டும் அல்லது அவரது மகிமையின் இராஜ்யம் என்பது, இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி, "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்று நமது கர்த்தரால் கற்றுத் தரப்பட்ட ஜெபத்திற்கு முழு இசைவாகவும் உள்ள பரலோக இராஜ்யமாக (மாத்திரமே) காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் தலைப்பாகத்தினுடைய பாடுகள் முடிவடைந்தவுடன், "கிறிஸ்துவின் சரீரத்தினுடைய" பாடுகள், அதாவது அவரது சரீரமாகிய சபையின் பாடுகள், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிற" காரியம் ஆரம்பமாகியுள்ளது என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ளாததே பிரச்சனையாகும் (கொலோசெயர் 1:24). கர்த்தருக்குப் பின்னாக, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையானது, பிரயாணத்தின் முடிவுவரையிலும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சிலுவையைச் சுமந்து முடித்தவுடன், மகிமையின் இராஜ்யம் வரும். இஸ்ரயேலின் குருட்டுத்தனம் எடுத்து மாற்றப்படும் மற்றும் கர்த்தருடைய ஆசீர்வாதமானது, முழுப் பூமியையும் நிரப்புகிறதாய் இருக்கும்.

ஸ்தேவானைக் கல்லெறியும்படிக்குத் தர்சு பட்டணத்துச் சவுலை வழிநடத்தின அதே ஆவிதான், இயேசுவைச் சிலுவையில் அறைந்திட்ட யூதர்களிடத்திலும் காணப்பட்டது. சவுல் மன்னிக்கப்பட்டதுபோன்று, இஸ்ரயேலும் மன்னிக்கப்படும்; "கர்த்தர் தாவீது குடும்பத்தார் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (சகரியா 12:10); ஆனால் அவர்களது துக்கம் சந்தோஷமாய் மாறும்; ஏனெனில் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை மன்னித்ததுபோன்று, தாம் சிலுவையில் அறையப்படுவதற்குக் காரணமாய் இருந்தவர்களை, பூமியின் சிங்காசனத்தில் காணப்படும் மாபெரும் நிஜமான யோசேப்பும் மன்னிப்பார்.

## அரசியலாகவும், சுயநலமாகவும் காணப்பட்ட மதம்

இன்று காணப்படும் ஜனங்களிலிருந்து வேறுபட்டவர்களாக, யூதர்கள் அன்று காணப்படவில்லை. அரசியல் செல்வாக்கிற்காக, மதநம்பிக்கை அற்றவர்கள், சில உயர்வான ஸ்தானங்களில் யூதர்களின் மத்தியில் காணப்பட்டதாக, வரலாறு தெரிவிக்கின்றது; ஆகவேதான் நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, பிரதான ஆசாரியனாக, ஒரு சதுசேயன் காணப்பட்டான் என்று பார்க்கின்றோம்; சதுசேயர் என்பவர்கள் இஸ்ரயேலுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை முற்றிலும் நம்பாதவர்களாகவும், மரணத்திலிருந்ததான உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களாகவும் காணப்படுபவர்களாவர். இப்படியாகவே விசுவாசிக்காதவர்களாகவும், உயர் ஸ்தானம் வகிப்பவர்களாகவும் இருக்கும் பிரதான ஆசாரியர்கள், யூதர்கள் மத்தியிலும் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றனர். கிறிஸ்தவர்கள் மத்தியில், விசுவாசிகள் அல்லாத வேதசாஸ்திரிகள் (Doctors of Divinity) காணப்படுகின்றனர்; தாங்கள் முற்றிலும் விசுவாசியாதவர்கள் என்று ஒப்புக்கொள்ளும், மிகவும் பிரபலமான அநேக ரபீக்கள், யூதர்கள் மத்தியில் காணவேபடுகின்றனர். இப்படிப்பட்டதான அவிசுவாசியான கிறிஸ்தவனும், யூத ஊழியர்களும் ஒரு குற்றமற்ற மனிதனுக்கு எதிரான அநீதியான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கிடுவார்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. அப்படிச் செய்வார்களா (அ) இல்லையா என்பதை நாம் அறியோம். அநேகமாக இனிமேல்தான் இது குறித்து ஆராய்ந்திட வேண்டும். ஆனால் தெய்வீக வெளிப்படுத்தல்களிலும், மனிதனுடைய காரியங்களிலான தெய்வீக மேற்பார்வையிலுமுள்ள விசுவாசமானது இல்லாமல் போகும்போது, இயல்பாகவே விசுவாசத்தை இழக்கிறவர்கள் அதிகமதிகமாய் கொள்கைவாதிகளாகி, சபை மற்றும் நாட்டினுடைய காரியங்களின் வழிநடத்துதல் தொடர்புடைய விஷயங்களில், குறிப்பாகக் "கொள்கையை" மனித ஞானத்தின் உச்ச நிலையெனக் கருதுவார்கள் என்பதை நாம் அறிவோம்.

உதாரணத்திற்குச் சரித்திரத்தை எடுத்துப்பார்க்கும்போது, நமது கர்த்தருடைய நாட்களில், யூத மார்க்கத்தின் தலைவர்களாய் இருந்தவர்கள், அவிசுவாசிகளாவர் (சதுசேயராவர்); மேலும் இவர்களுடைய கொள்கையானது, உரோம சக்கரவர்த்தியின் உதவியினை அடைவதும், சாமானிய ஜனங்களைத் தங்களுடையக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ள நாடுவதுமாகும் என்பதை நம்மால் எளிதில் காணமுடிகின்றது. ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு, உயர்க்குடிப்பிறப்பை உடையவராக, அதாவது தாவீதின் குடும்பத்திலும், யூத கோத்திரத்திலும் பிறந்தவராக இருப்பினும், ஏழையாக இருக்கும் ஒரு மனிதன், கொஞ்சம் மீனவர்களையும், ஆயக்காரர்களையும், இன்னும் சிலரையும் ஆதரவு திரட்டிக்கொண்டு, தம்மையே இராஜாவென அறிவிப்பதும், தம்முடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது அருகாமையில் உள்ளது என அறிவிப்பதும், கல்விமான்களைக் கவருகின்றது இல்லையென்றாலும், அவர் தரத்திலுள்ள சாதாரண ஜனங்களை அவர் கவருவதும், ஏதோ சில இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைக்கொண்டு, ஜனங்களின் வியாதிகளை அவர் சொஸ்தப்படுத்துவதும், பேராபத்தாய்த் தோன்றியிருக்க வேண்டும். இக்காரியங்கள், அதாவது இயேசுவின் கீர்த்தி இப்படியாகத் தொடர்ந்துகொண்டே சென்றால், விஷயங்கள் சீக்கிரமாய், உரோம சக்கரவர்த்தியின் செவிகளுக்குப் போய்ச் சேரும் என்றும், இதனால் தங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் தள்ளுபடிப் பண்ணப்படும் என்றும், தாங்கள் அதிகாரத்தை எதிர்க்கும் கலகவாதி ஜாதியினர் எனக் கருதப்படுவர் என்றும் இவர்கள் சிந்தித்திருப்பார்கள் என்பதை நம்மால் நன்கு கற்பனைச் செய்துபார்க்க முடிகின்றது.

இஸ்ரயேலின் இராஜாக்கள் வருவதுபோன்ற விதத்தில், பஸ்காவுக்கு முன்னதாக, இயேசு எருசலேமுக்கு கழுதையின் மீது வந்ததும், ஜனங்கள் அவரைச் சூழ்ந்து, "கர்த்தருடைய நாமத்தில் வருகிற, தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" எனச் சத்தமிட்டதுமான விஷயங்களானது, உச்சக்கட்ட நிகழ்வாய்க் காணப்பட்டது; மேலும் இது ஒட்டுமொத்த தேசமும் கொந்தளித்து மற்றும் இதன் விளைவாக, உரோமர்களால் தங்கள் தேசமானது அழிக்கப்படுவதற்குப் பதிலாக, ஒரு குற்றமற்ற மனிதன் மரிப்பது மிகவும் நலமாய் இருக்குமென, மதத்தின் ஸ்தானங்களில் காணப்படும் இந்த அவிசுவாசியான யூதர்களையும், அரசியல்வாதிகளையும் நம்பவைத்தது. இப்படிப்பட்டதான ஒரு காரியம் தொடர்புடைய விஷயத்தில், இதைப்போன்றே இந்தப் பிரகாசமடைந்துள்ள நாட்களில் வாழும் எத்தனை அமெரிக்க பிரசங்கிமார்களும், நீதிபதிகளும், அதிகாரிகளும் முடிவெடுக்க விரும்புபவர்களாய் இருப்பார்கள்! இந்தக் கொள்கைதானே, சக்கரவர்த்திகளின் விஷயத்தில் எப்போதும் நிலவி வருகின்றது? இப்படிப்பட்ட ஓர் அமைதியின்மை ஜெர்மனியின் தலைநகரத்திலும், இத்தாலியிலும், பிரான்சிலும், ஆஸ்திரேலியாவிலும், ரஷ்யாவிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏற்படுவதாகக் கொஞ்சம் கற்பனைப் பண்ணிக்கொள்ளுங்கள். இப்படியான ஓர் ஊர்வலம் போய் முடிந்த பிற்பாடு, இயேசு ஆலயத்திற்குச் சென்று, நீண்டகாலமாய்ப்

புறக்கணிக்கப்பட்ட பிரமாணம் ஒன்றைச் செயல்படுத்துவதையும் மற்றும் இப்படியாக அவர் தம்முடைய மத உரிமைகளைச் செயல்படுத்துவதையும் கொஞ்சம் கற்பனைப் பண்ணிப்பாருங்கள்; இன்னுமாக யூதர்களின் பிரதானமான ஆலயங்களின் வெளிப்புறங்களிலிருந்து காசுக்காரர்களையும், வியாபாரிகளையும் துரத்துவதையும் கொஞ்சம் கற்பனை செய்துப் பாருங்கள்! இப்படியாகச் செய்யும் ஒரு நபர், இன்றைய காலங்களில் என்ன செய்யப்படுவார்? மிகவும் நாகரிகமான தேசங்களில் அவர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவாரா? என்றோ, மிகவும் நாகரிகம் இல்லாத தேசங்களில் அவர் அடிக்கப்படுவாரா (அ) கொல்லப்படுவாரா? என்றோ நாம் அறியோம். ஆகவே இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, நமக்கு ஏற்பட வாய்ப்புள்ள பகைமையின் ஆவிக்குப்பதிலாக, அனுதாபமே ஏற்படும்; அதாவது ஒரு பக்தியுள்ள ஜாதியானது, தங்களை இந்த அளவுக்கு அரசியல்வாதிகளின் கரங்களுக்குள் அடங்கிவிடுவதற்கு அனுமதித்துள்ளதைப் பார்க்கையில் அனுதாபமே ஏற்படுகின்றது.

## காய்பாவிற்கு முன்பு கொண்டுவரப்பட்டார்

பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடைய காதை வெட்டின பிற்பாடு (இயேசுவினால் காயம் ஆற்றப்பட்டிருப்பினும்) பரிசுத்தவானாகிய பேதுரு, போதகருக்கு என்ன சம்பவிக்கும் என்பதைக் காணத்தக்கதாக, போதகரை பிரதான ஆசாரியனுடைய பிரகாரம்வரை பின்தொடர்ந்து வந்தது மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எந்த ஒரு கடுமையான குற்றச்சாட்டாக இருப்பினும், இரவு வேளையில் கைதியை விசாரணை செய்வது யூதர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிராய் இருந்தபோதிலும், இயேசுவை இரவு வேளையிலேயே குற்றஞ்சாட்டி விசாரணை செய்தார்கள். ஆனால் இதற்கு ஒரு சாக்குப்போக்கு வைத்திருந்தார்கள்; இது ஒரு முக்கியமான சூழ்நிலையாகும்; அவசரமாய்ச் செயல்படுவது அவசியமாய் இருந்தது; ஏனெனில் செய்யப்படப்போகிற காரியங்கள் விரைவாய்ச் செய்யப்பட வேண்டியிருந்தது; இயேசு பொது ஜனங்கள் மத்தியில் கொண்டிருந்த மாபெரும் செல்வாக்கினை, அந்த அவிசுவாசியான அதிகாரிகள் உணர்ந்திருந்தார்கள். இயேசு திறமிக்க, ஆனால் தீங்கற்ற மோசடிக்காரர் என்று அவர்கள் நம்பினார்கள். இயேசு எந்தக் குற்றமும் புரியவில்லை, ஆனால் அவர் சமாதானத்தைக் குலைத்தவராய் இருக்கின்றபடியால், அவருடைய ஜீவனை எடுத்துப்போடுவது சரியான காரியம் என்று அவர்கள் எண்ணினார்கள். பஸ்கா பண்டிகை சமீபமாய் இருந்தது மற்றும் அது ஒரு வாரம் நீடிக்கும் மற்றும் அந்த வாரத்தில் ஒருவரின் மரண தண்டனையை நிறைவேற்றுவது என்பது அவர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிரான காரியமாக இருந்தது. பாலஸ்தீனியா முழுவதிலிருந்தும் எருசலேமின் உள்ளிலும், வெளியிலும் ஒன்று முதல் இரண்டு மில்லியன் ஜனங்கள் காணப்படும் தருணத்தில், ஜனங்கள் மீது இயேசுவால் அவ்வாரத்தில் செலுத்தப்படப்போகும் செல்வாக்கைக் குறித்தும் அவர்கள் அஞ்சினார்கள். தாங்கள் செய்யப்போகும் காரியங்கள் திடீரென்றும், திட்டவட்டமாயும் இருக்கவேண்டுமென, அவர்கள் ஏற்கெனவே தீர்மானமாய் இருந்தார்கள். இவைகள் கைது செய்வதற்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. தங்களுடைய ஜாதிக்கு நன்மையானதாக இருக்குமென அவர்கள் எண்ணியிருந்த, அவர்களது கொலைப்பாதகத் திட்டங்களை நிறைவேற்றிடுவதற்காக, அந்த நடுராத்திரி வேளைக்கு ஆயத்தத்துடன், காத்திருந்தனர்.

அடுத்துவரும் காலையில், காரியங்கள் அனைத்தும் துரிதமாய்ச் செயல்படுத்தப்படத்தக்கதாக, சாட்சியங்கள் திரட்டுவதற்கான ஏற்பாடாக மாத்திரமே, இரவு வேளையின் விசாரணை நடைபெற்றது.

## தேவனைத் தூஷித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்

அவர்களுக்குக் குற்றச்சாட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருந்தது; ஏனெனில் இரக்கத்தின் கிரியைகளையும், ஞானத்தின், சீர்த்திருத்தலின் மற்றும் நம்பிக்கையின் வார்த்தைகளையும் அல்லாமல், வேறு எதை இயேசு செய்திருக்கின்றார் மற்றும் பேசியிருக்கின்றார்? தேவனைத் தூஷிப்பது என்பது யூதர்களுடைய பிரமாணத்தின்படி, கடுமையான குற்றச்சாட்டாகக் காணப்பட்டது. இயேசு தேவனைத் தூஷித்ததாக நிரூபிப்பது எளிமையாக இருக்கும் என்பதால், அதினால் இயேசுவைக் குற்றஞ்சாட்டலாம் என்றிருந்தார்கள். ஆலயத்தின் அருகாமையில் இயேசு காணப்பட்டபோது, "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறியிருந்தார். "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப்

பேசினார்". இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் சிலர் இயேசு சொல்லர்த்தமான ஆலயத்தைக் குறித்து இப்படிப் பேசினதாகப் புரிந்துகொண்டார்கள். இதை அவர்கள் தேவதூஷணம் என்று குற்றஞ்சாட்டினார்கள். காரணம் இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு பல வருடங்களாயிருக்க, இயேசு அதை மூன்று நாட்களில் கட்டி எழுப்புவது என்பது, அவரிடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதாக அவர் தெரிவிப்பதாய் இருக்கும். இயேசுவைக் கொன்றுபோட வேண்டுமென்று முன்பே திட்டமிட்டிருந்தவர்களுக்குக்கூட, இந்தக் குற்றச்சாட்டுப் போதுமானதாய், ஆற்றல் மிக்கதாய்க் காணப்படவில்லை. அவர்கள் தாங்கள் கண்டுபிடிக்கும் குற்றச்சாட்டுக்கு, கொஞ்சம் நீதியின் சாயத்தைத் தீட்டிட விரும்பினார்கள். ஆகவே தங்கள் முன்னிலையிலேயே, இயேசு காரியங்களை ஒப்புக்கொள்ளத்தக்கதாக, பிரதான ஆசாரியன் நாடி, "நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்றார்; "அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.சத்தத்தைக் கேட்ட முற்றத்திலிருந்த கும்பல்/கீழ்த்தரமான ஜனங்கள், தாங்கள் முன்காலங்களிளெல்லாம் செய்து வந்தது போன்று, இப்பொழுதும் கைதியைக் கீழ்த்தரமாய் நடத்திடுவதற்குச் சுதந்தரத்தை உணர்ந்தவர்களாக,அவரை உமிழ்வதன் முலம், அவர் மீதான தங்கள் வெறுப்பினைக் காண்பித்தார்கள்.அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்." (மத்தேயு 26:64-68) "அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார்."

*****

# சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும்

## மத்தேயு 26:31-35, 69-75.

*"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."* 1 கொரிந்தியர் 10:12

கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே மிகவும் உதவியானவர்களில், ஒருவராக பரிசுத்தவானாகிய பேதுரு காணப்படுகின்றார். அவருடைய மனித சுபாவம், அதன் பலம் மற்றும் பெலவீனங்கள் குறித்ததான வேதவாக்கியங்களின் வெளிப்படுத்தல்களே, நமக்கான அவருடைய உதவியின் இரகசியமாகக் காணப்படுகின்றது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே போதகரை, தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று முதலாவதாக அறிவித்தவர் இவரே ஆவார். பன்னிருவரில் இவர்தான் முதலாவதாக அவரை மறுதலிக்கவும் செய்தார். பன்னிருவரில் இவர் மாத்திரமே போதகரைக் காப்பாற்றுவதற்காக, தனது பட்டயத்தை உருவினவரும் ஆவார். மேலும், இவர் மாத்திரமே பின்னர் போதகரை அறியேன் என்று சூழுரைக்கவும் செய்தார். தெய்வீக ஏற்பாட்டின்படி, இராஜ்யத்திற்கான பரம அழைப்பின் கதவுகளைத் திறக்கும்படி, இவரிடமே திறவுகோல்கள் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர் வல்லமையின் திறவுகோல்களில் ஒன்றைப் பயன்படுத்தி, மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குள் பிரவேசிப்பதற்கான வழி திறக்கப்பட்டுள்ளதைக் குறித்து, தைரியத்துடன் யூதர்களுக்கு அறிவித்தார். கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு, நியமிக்கப்பட்ட காலத்தில், அதே பரம அழைப்பிற்கான கதவை, இவர் புறஜாதிகளுக்குத் திறந்து வைத்தார்; மேலும் இது இவர் கொர்நேலியுவுக்குப் பிரசங்கம் பண்ணி, அவர் முதல் புறஜாதியாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது சம்பவித்தது. இச்சம்பவமானது, முற்காலங்களில் யூதர்களையும், புறஜாதிகளையும் பிரித்துவைத்திருந்த தடுப்புச் சுவரானது தகர்க்கப்பட்டதற்கான நிரூபணமாகவும் அமைகின்றது. இத்தகைய சகல அறிவையும், விசேஷமான வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டிருந்தாலும், இந்த மாபெரும் மனுஷன் புறஜாதிகளுக்குப் போதுமான அளவு தேவனுடைய கிருபை கொடுக்கப்பட்டுள்ளது எனும் காரியத்தைப் பொருட்படுத்தாததுபோல, பாசாங்குச் செய்யும் அளவுக்கும் நடந்தும் கொண்டார். மேலுமாக, யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்கு இடையில் வேற்றுமை கண்டு, கர்த்தருக்கு முன்பு அவர்கள் இருவரும் சரிசமமாகக் கருதப்படுவதைப் பொருட்படுத்தாதது போல பாசாங்குச் செய்யும் அளவுக்கும் போய்விட்டார்.

அனைத்து அனுபவங்களிலும் பரிசுத்தவானாகிய பேதுரு அவருடைய இருதயத்தின் ஆழத்தில் தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் உண்மையாய் இருக்கின்றார்; ஆனால் அவருடைய குணலட்சணங்களிலுள்ள களங்கம், தவறுகள், பெலவீனங்கள் ஆகியவை அவருடைய மாம்சத்தினுடையவைகளே தவிர, அவருடைய உண்மையான இருதயத்தின் நோக்கமாக இருந்ததில்லை என்பது வெளிப்படுகின்றது. போதகரை மறுதலித்ததின் காரணமாக அவர் மிகவும் மனங்கசந்து அழுதார். மேலும், புறஜாதிகளை ஏற்றுக்கொள்வதில் அவர் தவறினதால், மிகுந்த தாழ்மையுடன் தன்னை முழுமையாகத் திருத்திக்கொண்டார். பரிசுத்தவானாகிய பேதுருவின் மனித சுபாவத்தின் வெளிப்படுத்தல்கள், நம்மை அவர்பால் கவரச் செய்தது போன்றே, இஸ்ரயேலின் இராஜாவும், தீர்க்கத்தரிசியுமான தாவீதினிடத்திலும் நாம் கவரப்படுகின்றோம். தவறு செய்யாமல் இருக்க அவர் (தாவீது) ஒன்றும் பரிசுத்தவான் அல்ல. அவரை ஒரு சக மனிதனாகக் காண முடியாத அளவிற்கு, அவர் (தாவீது) மீதியான மனுக்குலத்திற்கு அப்பாற்பட்ட ஜீவியும் அல்ல. எனினும், அவரை வெறுக்கத்தக்க அளவுக்கு, அவர் மதிப்புக் குறைந்தவரும் அல்ல. தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் இருதயத்தில் அவர் (தாவீது) கொண்டிருந்த உண்மை குறித்த திரளான ஆதாரங்களானது, அவருடைய பெலவீனங்களை முழுமையாக ஈடு செய்கின்றதாக அமைகின்றது. இடறி விழுதல் மற்றும் சீர்ப் பொருந்துதல் குறித்ததான அவருடைய (தாவீது) அனுபவங்களினால், சங்கீதங்கள் மிகவும் நிரப்பப்பட்டிருப்பதினால், அவைகள் தேவனிடத்தில் உண்மை கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலும், அதேசமயம் பாவம் மற்றும் பெலவீனத்தின் அனுபவங்களை வெவ்வேறு அளவுகளில் கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலுமுள்ள, உள் உணர்ச்சியின் நரம்பைத் தொடக்கூடியதாக இருக்கின்றது.

## பரிசுத்தவானாகிய பேதுருவை மற்றவர்கள் பார்த்த விதம்

நமது கர்த்தரின் ஆரம்ப பிரயாண நாட்களில், அவரோடு கூடக் காணப்பட்ட மனிதர்கள் மத்தியில் பேதுரு இன்றளவும் மிகவும் வசீகரிப்பவராகக் கருதப்படுகின்றார். பேதுருவைக் குறித்து, ஜி.சி. மோர்கன் (G. C Morgan) அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுருவுக்குள்ளாக, நமக்கொரு மாபெரும் மனிதன் புதிய ஏற்பாட்டில், வெளிப்படுத்தப்பட்டுள்ளான் என்று என்னால் இப்பொழுது நம்ப முடிகின்றது. ஒருவனை மாபெரும் மனுஷன் என்று கணிப்பது அவனுடைய சாதனைகளின் அடிப்படையிலோ அல்லது அவனுடைய தனித்துவமான ஒரு திறமையின்/பண்பின் அடிப்படையிலோ அல்லாமல், அவனுடைய மனித சுபாவத்தின் மிக ஆச்சரியமான வெளிப்படுத்தலின் அடிப்படையிலே என்று நான் கூறுகின்றேன். அறிவுடைய இந்த மனுஷன் தொடர்ந்து கண்மூடித்தனமாக/மடத்தனமாக தவறு செய்து கொண்டிருந்தார். உணர்ச்சிவசப்படும் இந்த மனுஷன், தான் உதவ வேண்டும் என்று விரும்பின, அதே காரணத்திற்கு எதிராக அவர் செயல்பட்டதினால் மிகுந்த குற்ற உணர்வுக்குள்ளாகவும் ஆனார்."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, சவுதோஸ் (Southouse) என்பவர் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுரு ஒரு சராசரியான மனுஷன் ஆவார். இக்காரணத்தினால் அவர் நமக்கும், அவரோடு கூட இருந்தவர்களுக்கும் (மற்ற அப்போஸ்தலர்களுக்கும்) கூடச் சரிசமமாவார். ஆனால், சராசரியான மனிதர்களுக்கும் கூட, அவர்களுடைய வாழ்க்கையில் சிறப்பான தருணங்கள் உண்டு. அதாவது பரிசுத்தவானாகிய பேதுருவின் விஷயத்தில், அவர் தண்ணீரின் மீது நடக்க முயன்றார். இவ்விடத்தில் தன்னால் முடியாத ஒரு காரியத்தைச் செய்ய முயன்றார். தனக்கு எவ்வித அனுபவமும் இல்லாத ஒன்றைச் செய்யும்படிக்குப் பேதுரு கடந்துப்போனார். நாம் அறிந்திருக்கும் ஆண்கள் மற்றும் ஸ்திரீகள் மீது நாம் கணநேரம் கண்ணோட்டம் இடுகையில், அவர்களின் திறமையின் அடிப்படையில் அவர்கள் இன்னென்ன காரியங்களைச் செய்துவிடுவார்கள் என்று தீர்க்கத்தரிசனம் கூறுவதுபோன்று கூறுவது, எப்போதும் (சாதகமாக) அப்படியே நடந்துவிடும் என்பது இல்லை என நாம் அறிந்திருக்கின்றோம். ஏனெனில் உலகத்திலேயே (திறமைகளில்) மிகக் குறைவான மனிதனால், அசாதாரணமான காரியங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, டாக்டர் டேவிஸ் (Dr. Davis) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்: "பேதுரு புத்திக்கூர்மை உடையவர். மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் இவரே இயேசுவிடம் அநேக கேள்விகளைக் கேட்டுள்ளார். கேள்விகள் கேட்கும் தன்மையானது, புத்திக்கூர்மையின் வெளிப்படுத்தலாகும். கேள்வி கேட்பது என்பது, அறியாமையின் வெளிப்படுத்தலாகக்கூட இருக்கலாம். ஆனால், ஒருபோதும் கேள்வி கேட்காத மனிதன் நிச்சயம் அறிவாற்றலில் குறைவுபட்டவனாகவே இருக்கின்றான்...பேதுரு, நல்ல இருதயம் கொண்டவரும், துக்கத்தால் விம்மி அழுகிறவரும், சிந்திக்காமல் செயலாற்றுகிறவரும் ஆவார். அவருடைய பேரார்வம் எனும் பண்பிலே, அவருடைய நற்பண்புகளும், அவருடைய தவறுகளும், இரண்டும் பொதுவான வேரைக் கொண்டுள்ளது. பேதுருவிடம் அவசர செயல்பாடு எனும் களை இருக்கவே, இதனோடு கூட அவருடைய ஜீவியத்தில் கொழுந்துவிட்டு எரியும் அன்பு மற்றும் சத்தியத்தை உடனடியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையாகிய அழகிய செடியும் மிகப் பலமாக வளர்ந்ததே, அவரிடத்தில் பாராட்டத்தகுந்த விஷயமாகும்."

## உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

ஆண்டவர் தம்முடைய பின்னடியார்களுக்குக் கற்றுக்கொடுத்ததும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பயிலும் அனைவராலும் கற்றுக்கொள்ள வேண்டியதுமான மாபெரும் பாடம் என்னவெனில்... தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் கொழுந்துவிட்டு எரியும் அன்பும், வைராக்கியமும் இருக்கும் அதேசமயத்தில், நம்மிடத்தில் தன்னடக்கமும் காணப்பட வேண்டும்; அதாவது தெளிந்த புத்தியின் ஆவியைச் செயல்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்கள், "புறாக்களைப்போல் கபடற்றவர்களாகவும், சர்ப்பத்தைப்போல் வினாவுள்ளவர்களாகவும்" இருக்கும்படி புத்திமதி அளிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய ஞானமானது, அவர்களுடைய நலனை மாத்திரம் கருதும் சுயநலநோக்கமுள்ளதாக இராமல், பரந்தமனப்பான்மையுடையதாக இருக்க வேண்டும். அதாவது, சகலருடைய நலனைக் கருதக்கூடியதாகவும், விசேஷமாகக் கர்த்தருடைய நோக்கங்களுக்கடுத்த நலனுக்காகவும்,

கர்த்தருடைய நோக்கத்தில் அவர் நமக்கு ஏதேனும் பங்களிப்புக் கொடுத்திருந்தாரானால், அதனுடைய நலனுக்காகவும் கருதக்கூடியதாக அவர்களுடைய ஞானம், பரந்த மனப்பான்மை உடையதாக இருக்க வேண்டும்.

இயேசு, தாம் காட்டிக் கொடுக்கப்படப்போகிற சோதனையான வேளைக்கு முன்பாக, தம்முடைய சீஷர்களிடத்தில், "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்" (மத்தேயு 26:31, 32).

உணர்ச்சிவசப்படும் பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று கூறுகின்றார் (வசனம்-33). அந்தோ! இந்தத் தைரியமுள்ள மனிதன், தனக்கு முன்பு வரவிருக்கும் பரீட்சைகள் மற்றும் இடர்பாடுகளின் வீரியத்தை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார் (அ) தனது உணர்ச்சிவசப்படும் சுபாவத்தில் உள்ள பெலவீன பாகங்களை, எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார். எனினும், ஒருவேளை இவர் போதகரை மறுதலித்து விட்டாரே என்று நாம் வருத்தம் அடைந்தோம் என்றால், பிற்காலங்களில் இயேசுதான் மேசியா என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும், அவரிடத்திலான தனது உண்மையை எதுவும் அசைக்க முடியாது என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும் வெளிப்பட்ட இவருடைய விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியங்களைக் கண்டு நாம் களிக்கூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

விசேஷித்த விதத்தில் உண்மையும், அனல்/ஆர்வம் கொண்டவர்களையும்தான் சிக்கவைக்கும்படி எதிராளியானவன் மிகவும் விடாப்பிடியுடன் நாடுகின்றான். ஆகவேதான், அத்தருணத்தில் இயேசு பரிசுத்தவானாகிய பேதுருவிடம், "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று விளக்கினார் (லூக்கா 22:31). அதாவது, "என் மீது நீ கொண்டிருக்கும் உண்மையினின்று உன்னைப் புறம்பாக்கிப்போடவும், சீஷத்துவத்தின் பாதையினின்று உன்னை மனம் தளர்வடையச் செய்யவும், பயம் மற்றும் உன்னுடைய சொந்த பெலவீனத்தைக்கொண்டு உன்னை மூழ்கடித்துவிடவும் சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று பேதுருவுக்கு விளக்கினார். பின்னர், "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்றும் இயேசு கூறினார் (லூக்கா 22:32). நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், அதே அன்பான ஆண்டவர் இன்னமும், அவருடைய உண்மையும், பாசமுமிக்க சகல பின்னடியார்களுக்கு, அவர்களுடைய முன்னோர் வழிவந்த பெலவீனங்கள் எதுவாயிருப்பினும், அவர்களுக்கு உதவி செய்கின்றார் என்பதேயாகும். மேலும் இத்தகையவர்கள், அவருடைய அன்பில் நிலைத்தும், தங்களுடைய வைராக்கியத்தில் தொடர்ந்தும் கொண்டிருப்பார்களானால், அவர்களைப் பலமுள்ள பாத்திரங்களாக வளர்த்திவிடவும், அவர் வல்லவர் என்பதையும் கூட நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சகலவற்றையும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக மாற்ற, அவர் வல்லமையுள்ளவராக இருக்கின்றார்; அதாவது உண்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம், அவர்களின் முன்னோர் வழிவந்த பெலவீனங்களையும் கூட, "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" உண்டாக்குவதற்கு ஏதுவாக நன்மையாக மாற்றுவதற்கு அவர் வல்லவராக இருக்கின்றார்.

## சேவல் கூவுவதற்கு முன்பு

ஆண்டவர் தம்முடைய அன்புமிக்க, அதேசமயம் சிந்திக்காமல் செயல்படும் பின்னடியானுக்குரிய ஆபத்தை உணர்ந்தவராக, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தன்னுடைய ஆண்டவரை மறுதலிப்பார் என்று எச்சரித்தார். இது, பரிசுத்தவானாகிய பேதுருவுக்கு உண்மையாக இருக்க முடியாததாக தோன்றியிருந்திருக்கும்! "நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்று எவ்வளவு தைரியத்துடன் பேதுரு கூறினார். "சீஷருள்ளவர்களும் அப்படியே சொன்னார்கள்" (மத்தேயு 26:35). அவர்கள் அனைவருடைய இருதயங்களும் நல்லவைகளாக இருந்தது. கர்த்தரும் அவர்களுடைய இருதயத்தைப் பார்த்தார். இப்பொழுது நம்முடைய பாடம் மத்தேயு 26:69-ஆம் வசனத்திற்குச் செல்கின்றது. ஆண்டவர் கைதுச் செய்யப்பட்டுவிட்டார். சிதறடிக்கப்பட்ட சீஷர்கள் தப்பி ஓடினார்கள். பிரதான ஆசாரியனின் குடும்பத்திற்குப் பரிசுத்தவானாகிய யோவான் நெருக்கமானவராக இருந்தபடியால்,

பரிசுத்தவானாகிய பேதுரு முற்றத்தில் நிற்க, பரிசுத்தவானாகிய யோவான் அரண்மனைக்குள்ளாகவே பிரவேசித்து நின்றார். அரண்மனையின் வேலைக்காரி பரிசுத்தவானாகிய பேதுருவை, இயேசுவின் சீஷர்களில் ஒருவராக அடையாளங்கண்டு, வெளிப்படையாகச் சத்தமிட்டுக் கூறினாள். ஆண்டவரின் நிலை தனக்கும் வந்துவிடும் என்று பயமடைந்த பரிசுத்தவானாகிய பேதுரு, தான் அவருடைய சீஷரில் ஒருவன் அல்ல என்று மறுத்து, அக்காரியத்தைக் குறித்துத் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் கூறிவிட்டார். கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு வேறொருவர் பரிசுத்த பேதுருவைக் குறித்து மீண்டும் அடையாளம் கண்டபோது, அவர் சத்தியம் செய்து, அதை மறுத்து, தனக்கு இயேசுவைத் தெரியாது என்றும் கூறினார். கொஞ்ச நேரத்திற்குள் முற்றத்தில் இருக்கும் அனைவர் மத்தியிலும் விஷயம் பரவத் தொடங்கி, அநேகர் வேலைக்காரியின் வார்த்தைகளை மெய் என்று ஏற்றுக்கொண்டு, பரிசுத்த பேதுருவுக்கு கலிலேயா பேச்சு வழக்கு காணப்படுகின்றது என்றும் கூறினார்கள். பரிசுத்தவானாகிய பேதுருவோ, தன்னுடைய மறுதலிப்பை உறுதிப்படுத்தும் வண்ணமாகச் சபிக்கவும் தொடங்கி, அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிடவும் செய்தார். இப்படிச் செய்த உடனே சேவல் கூவ ஆரம்பித்தது. அப்போது, பரிசுத்தவானாகிய பேதுரு, "சேவல் கூவுவதற்கு முன்னதாக நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று தன்னோடு பேசின ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தார்.

அந்தோ பரிதாபம்! பரிசுத்தவானாகிய பேதுரு தன்னுடைய நிலைநிற்கும் தன்மையின் மீது மிகுந்த நிச்சயமும், தனது நேர்மையின்/உண்மையின் மீது மிகுந்த நம்பிக்கையும் கொண்டவராக இருந்தார். அவர் தன்னைக் குறித்துப் பெருமையாய்ப் பேசின அதே விஷயங்களிலேயே, அவர் எதிராளியானவனால் சிக்க வைக்கப்பட்டார். இயேசு திரும்பி, பேதுருவைப் பார்த்தார் என்று வேறொரு பதிவு கூறுகின்றது! அந்தப் பார்வை போதுமானதாகும். அப்பார்வையானது, பரிசுத்தவானாகிய பேதுருவின் உத்தம இருதயத்திடம், ஆயிரமாயிரமான காரியங்களை/விஷயங்களைப் பேசிவிட்டது. அது கோபத்தின் பார்வையாகவோ அல்லது இகழ்ச்சியின்/வெறுத்து ஒதுக்கும் பார்வையாகவோ இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அது அன்புடன்கூடிய அனுதாபத்தின் பார்வையாகவே இருந்தது. அது பரிசுத்தவானாகிய பேதுருவின் இருதயத்தை உருக்கிற்று/கரையப்பண்ணிற்று. அவர் வெளியே போய், மனம் கசந்து அழுதார். எதிராளியானவனின் சோதனைகளினாலும், பெலவீனங்களினாலும், குறைபாடுகளினாலும் நெருக்கப்பட்டிருக்கின்ற, இன்றைய காலத்தில் காணப்படும் ஆண்டவரின் பின்னடியார்களுக்கு, பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களிலிருந்து வரும் பாடம் எச்சரிப்பாக விளங்குகின்றது; அதாவது பின்னடியார்கள் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களாக, உதவிக்காகக் கர்த்தரையே நோக்க வேண்டுமே ஒழிய, சுய/தன்நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கக்கூடாது என்பதேயாகும். வீழ்ந்த நிலையில் இன்று காணப்படுபவர்களுக்கும், பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களிலிருந்து, கர்த்தர் வைக்கும் அனுதாபம் மற்றும் இரக்கம் குறித்ததான ஒரு பாடமும் உள்ளது. வீழ்ந்த நிலையில் இருப்பவர்களும் கூடத் தங்களுடைய அக்கிரமங்களுக்காக மனம் கசந்து அழுது, மனந்திரும்பி, தங்களுடைய அனுபவங்களின் மூலம், நன்மை (படிப்பினை) பெற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

*****

# ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார்

## மத்தேயு 27:33-50

***"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்." ஏசாயா 53:5***

இயேசு கைது செய்யப்பட்ட கொஞ்ச நேரத்திலேயே அவருடைய விசாரணை ஆரம்பித்தது. ஆனால், நியாயப்பிரமாணத்தின்படி மரணத்தீர்ப்பானது காலை வேளையிலேயே அளிக்கப்பட வேண்டும் என்றிருப்பதினால், காலையில் ஆலோசனை சங்கத்தார் கடமைக்காகக் கூட்டங்கூடி, முந்தின இரவில் பிரதான ஆசாரியனால் கொடுக்கப்பட்டத் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்; அதாவது, சிருஷ்டிகரினால் நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த திட்டத்தின்படி இயேசு தாம் பூமிக்கு வந்ததாகவும், தாம் உலகத்தையும், இஸ்ரயேலர்களையும் மரணத் தண்டனையினின்று மீட்கப்போகிறதாகவும், பின்னர்த் தேவனுடைய ஏற்றவேளையில் பூமியின் குடிகள் மற்றும் இஸ்ரயேலர்களுக்கான ஆசீர்வாதத்திற்கென, தாம் மேசியாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போவதாகவும் அறிவித்தபடியால் இயேசு சிருஷ்டிகருக்கு எதிராக தூஷணம் பேசியுள்ளார் என்று பிரதான ஆசாரியனால் கொடுக்கப்பட்டத் தீர்ப்பை ஆலோசனை சங்கத்தார் உறுதிப்படுத்தினார்கள். இயேசு ஐந்து நாளுக்கு முன்பு கழுதையின் மீது ஏறிவந்தபோது, "ஓசன்னா, தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று ஆரவாரித்த ஜனங்கள் மீண்டுமாக இயேசுவை இராஜாவாக அறிவிக்க/நியமிக்க பிரயாசம் எடுப்பதற்கு முன்பாக எல்லாம் முடிந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசாரியர்கள் மற்றும் சங்கத்தார் வேகமாகச் செயல்பட்டார்கள். பஸ்கா வாரத்தில் எந்த மரணத்தண்டனையும் நிறைவேற்ற முடியாது. ஒருவேளை இயேசு கொல்லப்படாமல் (பஸ்கா வாரம் முடியும்வரை) கைதியாக வைக்கப்பட்டிருப்பாரானால், அடுத்த கட்டமாக இயேசுவுக்கோ அல்லது தங்களுக்கோ என்ன சம்பவிக்கும் என்பதை அவர்கள் தெரியமுடியாத நிலையில் காணப்பட்டார்கள். ஆகவே, அவர்கள் தங்கள் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சில மணி நேரங்களையே பெற்றிருந்தார்கள். மேலும் தங்களுடைய இந்தத் திட்டத்தின் வாயிலாக அவர்களால் வஞ்சகன்போல் பார்க்கப்படுபவரும், தங்களுக்கும் உரோம அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை உண்டாக்குவதற்கு ஏதுவாய் இருப்பவருமாகிய இயேசுவைத் தங்கள் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டிவிடலாம் என்று நம்பினார்கள்.

ஆலோசனை சங்கத்தார் தங்களுடைய மத சம்பந்தமான விஷயங்களில் ஜனங்களை நியாயந்தீர்க்க அதிகாரம் பெற்றிருந்தாலும், அவர்கள் மரணத் தண்டனை விதிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். ஆகவே, இயேசுவை ஆலோசனை சங்கத்தார் முன்பு குற்றவாளி என நிரூபித்த பிற்பாடு, அவரை உரோம தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கு முன்பு அழைத்துச் சென்று நிறுத்துவது அவசியமாய் இருந்தது. மரணத் தண்டனை வழங்குவதற்குப் பிலாத்துத் தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ள மாட்டார் என்று அறிந்திருந்த அவர்கள், பிலாத்துவுக்கு முன்பு முற்றிலும் மாறான குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக வைத்தார்கள். அதாவது, இயேசு ஒரு கலகவாதி என்றும், பிரச்சனைகளைத் தூண்டிவிடுபவர் என்றும், இயேசு தம்மை இராஜாவாக அறிவித்தார் என்றும், இயேசுவைச் சுதந்திரமாய் விட்டுவைப்பது என்பது உரோம சாம்ராஜ்யத்தின் நலனுக்கடுத்த விஷயங்களுக்கு தீமை விளைவிக்கக்கூடியதாக இருக்கும் என்றுமுள்ளக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள். இவர்களுடைய இந்தக் குற்றச்சாட்டில் காணப்படும் மாய்மாலமும், முட்டாள்தனமும் மிகவும் வெட்ட வெளிச்சமாய் இருந்தபடியினால் அக்குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்திக்கொள்ள பிலாத்துவுக்கு அவசியமில்லாமல் போயிற்று. பொறாமையினிமித்தமாகவே இயேசுவை அவர்கள் தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கின்றார்கள் எனப் பிலாத்து புரிந்துகொண்டார். ஏனெனில், பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் பொது ஜனங்கள் மத்தியில் கொண்டிருக்கும் செல்வாக்கைக் காட்டிலும் இயேசுவுக்கும், அவருடைய போதனைகளுக்கும் அதிக செல்வாக்குக் காணப்பட்டது எனப் பிலாத்து உணர்ந்துகொண்டார். இயேசுவின் ஊர் கலிலேயாவாக இருந்தபடியினால், இயேசுவின் வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகிக்கொள்ள விரும்பின பிலாத்து, இயேசுவின் வழக்கானது கலிலேயா தேசாதிபதியான ஏரோது இராஜாவிற்கு உட்பட்டது என்று அறிவித்து, இயேசுவின் வழக்கை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

## ஏரோது இராஜாவுக்கு முன்பு இயேசு

இப்படி இயேசுவை ஏரோதினிடத்தில் ஒப்புக்கொடுத்த காரியம் அவர்களுக்கு எதிர்பாராத அசௌகரியத்தைக் கொடுத்தது. ஆனால், ஏரோதின் அரமனை அவ்வளவாகத் தொலைவில் இல்லை. ஏரோது, இயேசுவினுடைய அற்புதங்களைக் குறித்து அநேக காரியங்களைக் கேட்டிருந்தபடியால் அவரைச் சந்திக்கும் இவ்வாய்ப்பிற்கு மிகவும் சந்தோஷமடைந்தார். ஏரோது போதகரின் கம்பீரமான தோற்றத்தைப் பார்த்து அவரில் தூய்மையையும், சாந்தத்தையும்,பெருந்தன்மையையும் கண்டு உணர்ந்தபோது, இப்படிப்பட்ட ஒரு நபர் கலகவாதி என்றும், தேசத்தின் சமாதானத்தினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு ஆபத்தான மனுஷன் என்றும், குற்றஞ்சாட்டப்படுவது ஏரோதுக்குக் கொஞ்சம் கேலியாகவே தோன்றியிருந்திருக்கும். கொஞ்சம் நேரம் இயேசுவை வசைமொழிக் கூறியும், கேலியாகப் பேசி சிரித்த பிற்பாடு, இயேசுவை மரியாதையின்றி நடத்தின ஏரோதோடு,அவரது அரமனை சேவகர்களும் வாய்ப்பைப் பயன்படுத்தி, அவரை எள்ளி நகையாடினார்கள். அவர்கள் அவருக்கு இரத்தாம்பர வஸ்திரத்தையும், முள்ளினால் உண்டுபண்ணின கிரீடத்தையும் தரிப்பித்து, இராஜா போன்றில்லாத அவரது தோற்றத்தை எள்ளி நகையாடினார்கள். பின்னர், ஏரோது அவ்வழக்கை விசாரிக்க மறுத்து, கைதியை மீண்டுமாகப் பிலாத்துவினிடத்தில் அனுப்பி வைத்தார். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கு முன்னதாக யோவான்ஸ்நானனை சிரைச் சேதம் பண்ணின விஷயம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகளே தனக்குப் போதுமென ஏரோது எண்ணிதான், கைதியைப் பிலாத்துவிடம் அநேகமாக திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். இயேசுவின் வழக்கானது, ஏரோதுக்கும் பிலாத்துவுக்கும் இடையில் ஒரு நகைச்சுவைப் போன்று காணப்பட்டது. அதாவது, இயேசு தூய்மையும், அப்பாவியாகவும் ஏரோதின் கண்களுக்குக் காணப்படும்போது, பிரதான ஆசாரியர்களோ அவர் மிகவும் ஆபத்தானவர், அவரை மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்துவிட வேண்டும் என்று முன்வைத்த இப்படிப்பட்ட ஒரு வழக்கை கையாளுவது ஏரோதுக்குக் கேலியாக இருந்தபடியால், பாவப்பட்ட இயேசு பிலாத்துவினிடத்தில் இருந்தால் பாதுகாப்பாய் இருப்பார் என்று எண்ணி ஏரோது பிலாத்துவினிடத்தில் அனுப்பி வைத்தார்.

## பிலாத்துவின் சிக்கல் பெருகியது

இயேசு மீண்டுமாகப் பிலாத்துவின் அரமனைக்குக் கொண்டுவரப்பட்ட போது, அது பிலாத்துவுக்கு மனமடிவை உண்டாக்கிற்று. அவ்வழக்கைத் தீர்த்துவைப்பது சுலபமானதல்ல. கைதியிடம் எவ்வித குற்றத்திற்கான அறிகுறியும் இல்லை. ஆனால், அவர் மேல் குற்றம் சுமத்துபவர்கள் பிலாத்துப் பொறுப்பேற்றுள்ள பட்டணத்திலுள்ள மிக முக்கியமான நபர்களாய்க் காணப்படுகின்றனர். மதத்தலைவர்கள் தாங்கள் நல்நோக்கத்துடன் இவைகளைச் செய்கின்றார்கள் என்ற தங்கள் நற்சாட்சியைக் கூடுமானமட்டும் காக்கவும் வேண்டியிருந்தது மற்றும் நீதியின் போர்வையின் கீழ்க் குற்றமற்ற தங்களுடைய கைதியைக் கொலை செய்யவேண்டுமென்றிருந்தார்கள். மதம் அவளுடைய ஆதரவாளர்களால் உலகத்தில் எல்லாக் காலக்கட்டங்களிலும் தவறாய்க் காட்டப்படுவது எத்துணை பரிதாபத்திற்குரியதாய்க் காணப்படுகின்றது! இங்கு நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதென்னவெனில், நாம் பொல்லாப்பிற்குரிய தவறுகளில் விழுந்துவிடாதபடிக்கு அதாவது, மற்றவருடைய உரிமைகளை எதிர்ப்பதின் மூலம் தேவனுக்கு எதிராக நிற்காதபடிக்கு நாம் நம்முடைய இருதயத்தின் நோக்கங்களையும், எண்ணங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதேயாகும்.

பிலாத்துக் குற்றச்சாட்டுக்களைக் கேட்ட பிற்பாடு, அவைகளில் எவ்விதமான உண்மையும் இல்லை என்று உணர்ந்துகொண்டு, தன்னுடைய முடிவைக்குறித்துக் கூறினதாவது: "இயேசுவினிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் காணேன், ஆனால், இங்கு ஏற்பட்டுள்ள அமைதியின்மையை நான் காண்கையில், இங்குச் சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிட்டு, இங்குக் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களின் அநீதியான கோரிக்கையைத் திருப்தி செய்வது அவசியமென நான் எண்ணுகின்றேன். இக்கைதி தண்டனைக்குப் பாத்திரவான் அல்ல என்று நான் ஒப்புக்கொள்கின்ற போதிலும், இக்கைதியை வாரினால் அடிக்க நான் உத்தரவு இடுகின்றேன். இக்கைதியின் நலன் கருதியும், பட்டணத்தின் சமாதானத்தினுடைய நலன் கருதியுமேதான், இக்கைதியை வாரினால் அடிக்க நான் ஒப்புக்கொடுக்கின்றேன்". ஏனெனில் ஜனங்கள் திருப்திபடுத்தப்படும்போது, இயேசுவின் ஜீவனும் தப்புவிக்கப்படும். அரசியல் தீர்ப்புகளைப் பொறுத்தமட்டில் இது மிகவும் நியாயமான தீர்ப்பாகும்.

பூரணமற்ற சூழ்நிலைகளில் மெய்யான/முழுமையான நீதி வழங்கப்படுவது கூடாத காரியம் என்று நீதிமன்றத்தின் நீதிபதிகள் கூட அங்கீகரிக்கின்றனர்.

ஆனால், இயேசுவுக்கு மரணத் தண்டனையில்லாமல் வேறெந்த தண்டனை அளிக்கப்பட்டாலும், அதில் மத அதிகாரிகள் திருப்தியடைவதாக இல்லை. "அவரை சிலுவையில் அறையும்!" "அவரை சிலுவையில் அறையும்!" என்று கூக்குரல் இடும்படிக்கு மக்கள் கூட்டத்தார் தூண்டிவிடப்பட்டனர். இப்படிப்பட்ட ஒரு குற்றமற்ற மனுஷனுக்கு எதிராக இப்படியானதொரு வெறி எழும்பியிருப்பதைப் பிலாத்துவுக்குப் புரிந்துகொள்ள கடினமாக இருந்தது. ஆகவேதான், "ஏன், என்ன பொல்லாப்புச் செய்தார்" என்று பிலாத்து வினவினார். ஆனால், "அவரை சிலுவையில் அறையும்!" என்பதே பதிலாக வந்தது. அந்தோ பரிதாபம், மனிதனுடைய சீற்றம் எவ்வளவாக அவனுடைய கண்களிலிருந்து நீதியின் கொள்கை அனைத்தையும் மறைத்துவிடுகின்றது. மேலும், பிலாத்துவின் குழப்பத்தை இன்னும் பெருகப்பண்ணும் விதமாக, அவருடைய மனைவி இயேசுவாகிய நீதிமானுக்கு ஒன்றும் பொல்லாப்புச் செய்யக்கூடாது என்றும், இயேசு தொடர்பான ஒரு பயங்கரமான சொப்பனத்தைக் கண்டேன் என்றும் கூறி செய்தி அனுப்பி வைத்தாள்.

கடைசி பிரயாசமாக, ஜனக்கூட்டம் அனைவரும் இயேசுவைக் காணத்தக்கதாக இயேசுவை ஓர் உயரமான இடத்தில் கொண்டுவந்து பிலாத்து நிறுத்தி, அவர்களை நோக்கி, "இதோ இந்த மனுஷன்" என்று உரத்த சத்தத்தில் கூறினார்... அதாவது, "நீங்கள் சிலுவையில் அறைய வேண்டும் என்று விரும்புகின்ற இம்மனுஷனுடைய அம்சங்களைப் பாருங்கள். உங்கள் இனத்திலும் சரி, வேறு எந்த இனத்திலும் சரி, எவரிடத்திலும் காணப்படாத இராஜாவுக்குரிய அம்சங்களை இவரிடத்தில் அதிகமாய்க் காணப்படுவதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். உங்கள் இனத்திலேயே காணப்படும் மிகச் சிறந்த அம்சங்களுடைய இவரை நீங்கள் சிலுவையில் அறையப்போகின்றீர்களா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், நியாயமாய் நடந்து கொள்ளுங்கள், "இதோ இந்த மனுஷன்!" இந்த ஒரு காலக்கட்டத்தில் அரசாங்கமானது, உங்களுக்கு ஒரு கைதியை விடுதலைப்பண்ணுவது வருடந்தோறும் உங்களுக்குக் காணப்படுகின்ற வழக்கமாயிருக்கின்றது. ஆகவே, நீங்கள் இப்பொழுது இயேசுவை ஒரு குற்றவாளியாக எண்ணிக்கொள்ளுங்கள். மேலும், நீங்கள் நீதி எனக் கருதி கொண்டிருக்கும் விஷயங்கள், அவர் குற்றவாளி என்று அழைக்கப்படுவதன் மூலம் திருப்தியடைந்து விட்டது என்றும் எண்ணிக்கொள்ளுங்கள். மேலும், (குற்றவாளி என்று அழைக்கப்படும்) இயேசுவை நான் இப்பொழுது (வருடத்திற்கு ஒருமுறை இக்காலத்தில் ஒரு குற்றவாளியை விடுவிக்கிற பிரகாரமாய்) விடுவிக்கின்றேன்" என்றார். ஆனால், மக்கள் கூட்டமோ, "அவரைச் சிலுவையில் அறையும்!", (திருடனும், ஆபத்தான பண்பை உடையவனுமான) பரபாஸை எங்களுக்கு விடுதலைப்பண்ணும் என்று இன்னும் அதிகமாகக் கூக்குரலிட்டார்கள்.

விழுந்துபோன மனுக்குலத்திடம் விளங்கும் இந்த விநோதமான தவறான நடத்தையை/விபரீதத்தை யாரால் விளக்கக்கூடும்? ...அதாவது, ஒரு பரிசுத்தவானுக்குப் பதிலாக ஒரு பாதகன் பரிந்துரைக்கப்படும் காரியத்தை யாரால் விளக்கக்கூடும்? சில வருடங்களுக்கு முன்னதாக வியட்னா பட்டணத்தில் சிறைச்சாலையிலிருந்த தனது தண்டனைக் காலம் முடிந்த பிற்பாடு வெளிவந்த ஒரு மனுஷன், வெளிவந்த மாத்திரத்தில் ஒரு சொற்பொழிவாற்றினான். அதில் அனைத்து யூதர்களும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்று அவன் கூறினான். ஜனங்கள் மத்தியில் ஒரு வெறி உண்டாயிற்று. சிறையிலிருந்து வெளிவந்த அந்தக் கெட்ட மனுஷன், வெறி கொண்ட அந்த ஜனக்கூட்டத்திற்குத் தலைவனானான். மேலும், அவனுடைய இந்த வீர பேச்சுகளினிமித்தம் அவன் அப்பட்டணத்திற்கான மாநகர தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டான். வெட்கம்! இப்படிப்பட்ட விஷயங்கள் வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டு, இவைகள் நமக்குப் பயங்கரமாய் தோற்றம் தந்துகொண்டிருக்கும்போது, உலகம் விடுதலை அடைவதற்கான நிலையை எட்டிவிட்டது என்று நம்மால் எப்படிதான் கூறமுடியும்? உலகம் விடுதலைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏதுவான நிலையில் இராமல், உலகத்திற்குத் தேவன் அருளுவேன் என்று சொல்லியுள்ள ஒரு பலமுள்ள, ஏகாதிபத்திய அரசாங்கம் தேவைப்படுகின்றது. அதாவது, எல்லாத் தவறுகளைக் கீழாக்கிப் போடுவதற்கும்/கீழ்ப்படுத்துவதற்கும் பலமுள்ளதாகவும், ஒவ்வொரு சரியான காரியங்களைச் சீர்த்தூக்குவதற்குப் பலமுள்ளதாகவும் காணப்படும் தேவனுடைய அருமையான குமாரனுடைய இராஜ்யத்தை அருளுவேன் என்று தேவன் கூறும் அரசாங்கமே, உலகத்திற்கு அவசியமாய் உள்ளது.

# நீர் இராயனுக்கு நண்பனல்ல

யூத மத தலைவர்கள் மதிநுட்பம் உடையவர்களாகக் காணப்பட்டார்கள். உரோமுக்கு எதிரான துரோகம் என்பது மிகப் பயங்கரமான குற்றச்சாட்டுகளில் ஒன்று என அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும், இயேசு தம்மை இராஜாவாக அறிவித்துள்ள காரியமானது, அவரைச் சிலுவையில் அறைந்து போடுவதற்கு வற்புறுத்தத்தக்கதாக அவர்கள் கையில் ஆயுதமாக விளங்கிற்று. இவ்வாயுதத்தை அவர்கள் பயன்படுத்தினார்கள். மேலும், பிலாத்துக் கைதியை விடுதலைப் பண்ணினால் தாங்கள் பிலாத்துவைக் குறித்துச் சக்கரவர்த்தியிடம் சென்று புகார் செய்ய நேரிடும் என்று வலியுறுத்தினார்கள். இப்படியான காரியங்களை உரோம அரசாங்கத்திடம் விவரிப்பது கடினமாயிருக்கும் என்றும், உரோம அரசாங்கம் தாங்கள் ஆளுகை செய்யும் பகுதியில் கலகம் வெடிக்க அனுமதிப்பதைவிட ஒரு மனுஷன் சாவது நலமாயிருக்கும் என்று உரோம அரசாங்கமும், காய்பாவினுடைய முடிவை ஒப்புக்கொள்ளும் என்றும், பிலாத்து நன்கு அறிந்திருந்தார். இப்படியான நிர்பந்தத்தின் கீழ் வற்புறுத்தப்பட்ட பிலாத்து, இறுதியில் சம்மதித்து, மரணத் தண்டனைக்கான காரியங்களை எழுதினான். ஆனால், இப்படி எழுதுவதற்கு முன்பு பிலாத்துத் தண்ணீருள்ள ஒரு பாத்திரத்தைக் கொண்டுவரச் சொல்லி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் காரணமல்ல" என்று கூறிய வண்ணம் ஜனங்களுடைய பார்வைக்கு முன் தனது கைகளைக் கழுவினான்.

தண்டனை தீர்ப்பு நிறைவேற்றுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருந்தது. போர்ச்சேவகர்களுக்கு ஏற்கனவே இரண்டு கள்வர்களைச் சிலுவையில் அறைய வேண்டியிருந்தபடியினால், இப்பொழுது இன்னும் ஒரு சிலுவையை எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டார்கள். ஊர்வலம், மண்டை ஓட்டின் வடிவிலிருக்கும் மலைப்பகுதியாகிய கொல்கொதாவை நோக்கி பயணத்தைத் தொடங்கினது. கொல்கொதா என்பது மண்டை ஓட்டுஸ்தலம் எனும் அர்த்தத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது பட்டணத்திற்கு வடக்கில், மதிலுக்கு வெளியே காணப்படுகின்றது. சமீபத்தில் அங்குக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றதான புதிய கட்டிடங்களும்,மதிலும், பார்வையாளர்களுக்கு முன்பிருந்த மண்டையோட்டுத் தோற்றத்தைப் பார்க்க முடியாமல் செய்துவிட்டது. சட்டத்தின்படி ஒவ்வொரு குற்றவாளியினுடைய குற்றச்சாட்டுகள் பலகையில் பொறிக்கப்பட்டு, சிலுவையில் கைதியின் தலைக்கு மேல் தொங்க விடப்பட்டிருந்தது. போதகரின் தலையின் மேல், "இயேசு, யூதர்களுடைய இராஜா" என்ற அவருடைய குற்றச்சாட்டு எழுதப்பட்டிருந்தது.

சாத்தானும், அவனால் வஞ்சிக்கப்பட்டவர்களும், ஒருவழியாக இயேசுவை ஒழித்துக் கட்டிவிட்டோம் என்று எண்ணியிருந்திருப்பார்கள் என்பதில் உறுதியே. இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிவித்த விஷயங்கள் குறித்து ஆசாரியர்களும், மூப்பர்களும் இகழ்ந்து பேசினார்கள். மேலும், ஒருவேளை இயேசு உண்மையாகவே தேவனுடைய குமாரனாக இருப்பாரானால், சிலுவையிலிருந்து கீழே இறங்கிவருவதன் மூலம் அதை நிரூபித்துக் காட்டும் என்றும் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உண்மை எதுவும் தெரியவில்லை. அதாவது, இயேசு மத்தியஸ்தராகக் காணப்படப்போகும் புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனையின்கீழ் மனுக்குலம் முழுவதையும், முழுமையான பூரணத்திற்கும், ஜீவனுக்கும் திரும்பிக் கொண்டுவரத்தக்கதாக தம்முடைய மகிமையான இராஜ்யத்தில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, தாம் மனுஷனுடைய பாவத்திற்காக மரிக்க வேண்டும் என்பதின் அவசியம் குறித்துள்ள உண்மை எதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை (எரேமியா 31:31). ஆறாம் மணி வேளையாய் இருந்த மதிய நேரத்தின் போது, காரிருள் மூன்று மணி நேரம் பூமியை நிரப்பிக் கொண்டது. அப்போது, இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறி மரித்தார். பாவிக்குச் சொந்தமான தெய்வீக நீதியின் பாரத்தை/பளுவை இயேசு முழுமையாக அனுபவிக்க வேண்டியதற்காக, பிதா இயேசுவை ஒரு பாவியைப் போல கருதி தமது முகத்தை அவரிடமிருந்து மறைக்க வேண்டியிருந்தது. பிதாவிடமிருந்து இயேசுவுக்கு ஏற்பட்ட இந்தத் தற்காலிகமான பிரிவு, போதகருக்கு ஏற்பட்ட அனைத்து அனுபவங்களிலுமே கடுமையான அடியாக இருந்திருக்கும் என்பது நிச்சயமே.

*****

[R4730]

# "யோசபாத்தின் ஒரு தவறு"

**[2 நாளாகமம் 17:1-13]**

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" - மத்தேயு 6:33.

ஆகாப் இஸ்ரயேலின் இராஜாவாக காணப்படும்போது, யூதாவின் சிம்மாசனத்தில் யோசபாத் அதிகாரத்திற்கு வந்தார். இவருடைய பெற்றோர்கள் தேவபக்தியுடன் காணப்பட்டது, இவருக்கு மாபெரும் அநுகூலமாய் இருந்தது. சிலசமயம் பெற்றோர்களின் மது குடிக்கும் தன்மையும், தீய பழக்கங்களும் பிள்ளைகள் மேல் தாக்கம் கொள்வதினால், பிள்ளைகள் அவைகளை உணர்ந்து, பெற்றோருக்கு வரும் விளைவுகளைப் பார்த்து கற்றுக் கொள்வதுபோன்று இஸ்ரயேலின் பாவங்களும், விக்கிரக ஆராதனையும் யூதாவின் மீது தாக்கம் கொண்டு அவர்களுக்கு பாடமாக அமைகின்றது என நாம் முந்தைய பாடங்களில் பார்த்துள்ளோம். இஸ்ரயேலின் விக்கிரக ஆராதனை அவர்களின் நல்ல குணங்களையெல்லாம் மாற்றி போட்டப்போது, யூதா தேசமோ அதை கண்டு நல்ல குணங்களில் வளர்ந்தது. தேவனுக்கும் அவர் ஏற்படுத்தியிருந்த ஆராதனை ஒழுங்கிற்கும் இன்னும் உண்மையாய் இருந்த சகல ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் பாடமாக அமைந்தது.

இவைகள் வாலிபனாகிய யோசபாத் இராஜாவை ஆரோக்கியப்படுத்தியது. மேலும் அவர் (யூதா) தேசத்திற்கு தலையாய் இருந்தபடியினால் அவரிடம் இவைகள் சிறந்து/உதாரணமாய் விளங்கினது.

இப்படியாக உற்சாக மூட்டப்பட்ட வாலிபனான இராஜா தனது இராஜ்யத்தில் காணப்படும் ஒவ்வொரு விக்கிரக ஸ்தலங்களுக்கும் சடங்காச்சாரங்களுக்கும் எதிரான அரப்போர் மேற்கொண்டார். ஆகாப் தன்னுடைய தகப்பனாகிய உம்ரியைக் காட்டிலும் தீமை செய்வதில் மிஞ்சினதுபோல, யோசபாத் தன்னுடைய தகப்பனாகிய ஆசாவைக் காட்டிலும் தெய்வீக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதில் மிஞ்சினார். ஆசா கடைசி காலங்களிலோ பெருமையும், சுயசிந்தை கொண்டவராகவும், சிலகாலம் தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிராகவே செயல்படவும் செய்தார்.

## தெய்வீக தயவில் செழிப்பு

யோசபாத்தின் இராஜ்யம் செழித்தோங்கியது. இஸ்ரயேல் தேசத்திற்கு அருகாமையில் உள்ள தனது எல்லைகளை விசேஷமாக பலப்படுத்தினார். இஸ்ரயேல் தேசம் யூதா தேசத்திற்கு அண்டை தேசமாய் இருந்தது. அண்டையில் உள்ள சிறு தேசங்கள் யூதாவின் தயவை நாடி யோசபாத் இராஜா மிகவும் வளர்ச்சியடையுமட்டும் அன்பளிப்புகளையும், கப்பங்களையும் செலுத்தினார்கள். இவ்வாறாக கர்த்தரிடம் காட்டின உண்மைக்கு பலனான செழிப்பு கொடுக்கப்பட்டது. சகல ஐசுவரியமான மனுஷர்களையும், தேசங்களையும், கனம் பொருந்தியவர்கள் என்றும், நீதியுடன் நடப்பவர்கள் என்றும் தேவனோடு தொடர்பு கொண்டவர்கள் என்றும் ஒருவர் கருதினால், அது தவறாய் போய்விடும். கஷ்டங்கள் நோய்கள் என்பவைகள் தெய்வீக கோபத்திற்கும், பாவ ஜீவியத்திற்கும் உரிய ஆதாரங்கள் என கருதுவதும் தவறே ஆகும்.

பொல்லாத இராஜாக்களாகிய உம்ரி மற்றும் ஆகாப் செழிப்பாய் காணப்பட்டதோடு அநேக பொல்லாத தேசங்களும் பாவமான சடங்காச்சாரங்களும் செழித்தோங்கியது எனவும், இன்றும் செழித்துக் கொண்டிருக்கின்றது எனவும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே செழிப்பு/வளம் என்பது எப்பொழுதும் தெய்வீக தயவிற்கான அடையாளமாய் இருக்க முடியாது.

யோசபாத் மற்றும் அவருடைய இராஜ்யத்தில் செழிப்பு கிருபைக்கான அடையாளமாக இருந்தது. காரணம், யூதா அப்போதும் தேவனால் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாக இருந்தது. தேவனுடனான அவர்களின் உடன்படிக்கையின் படி அவர்கள் எந்த அளவிற்கு தேவனுக்கும், தாங்கள் ஒத்துக்கொண்ட விஷயங்களுக்கும் உண்மையாய் இருக்கின்றார்களோ, அந்த அளவிற்கு அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே ஆகும். இந்த வாக்குத்தத்தமானது, மனுக்குலத்தோடு பொதுவாக பண்ணப்படாமல், இஸ்ரயேல் தேசத்தோடு மாத்திரமே பண்ணப்பட்டது. யூதாவின் இராஜ்யமே இங்கு அதாவது, நாம் இந்த பாடம் பார்க்கிற காலக்கட்டத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாக இருந்தது. நீதியாய் நடப்பதினிமித்தம் எப்பொழுதும் சமாதானத்தையும், உலக ஐசுவரியத்தையும் கொண்டுவருவதில்லை. இதையே நாம் போதகரிடத்திலும், அவருடைய மிக உண்மையான பின்னடியார்களிடமும் பார்க்கலாம். அதாவது, "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டு;" "உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்;" "தற்காலத்தில் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்பதே போதகர், தம்முடைய பின்னடியார்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களாகும்.

வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், நீதி சுட்டிக்காட்டும் தண்டனைகள் மற்றும் பலன்களின் முறை இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இப்பொழுதோ தேவன் தம்முடைய ஆவிக்குரிய குடும்பம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும் என ஏற்பாடு செய்துள்ளார். மேலும் அவர்களுக்கு விசுவாச பரிட்சை அளிக்கும்படிக்கு பூமிக்குரிய விஷயங்களில் அவர்களுடைய உண்மையையும், கீழ்ப்படிதலையும் சோதித்து, அவர்கள் ஜெயம் கொண்டவர்களென நிரூபிக்கப்படுவதற்கும், நீதியின் கொள்கைகளுக்கு மரணம் வரை உண்மையுள்ளவர்கள் என நிரூபிக்கப்படுவதற்கும் ஏதுவாக அவர் அடிக்கடி அவர்களுக்குப் பாடுகளையும், பூமிக்குரிய விஷயங்களில் அநுகூலமற்ற/ சாதகமற்ற சூழ்நிலைகளையும் அனுமதிக்கவும், தேவன் இப்பொழுது ஏற்பாடு செய்துள்ளார். இத்தகையவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தமானது, அதாவது, இவர்கள் தகுதியானவர்கள்/பாத்திரமானவர்கள் என்றால், இவர்கள் பரம சுதந்தரிப்பைப் பெற்றுக் கொள்வார்கள். பின்னர் உலகத்தின் கோபாக்கினை காலம் வரும்.

ஆனால் மேசியாவின் ஆளுகை ஆரம்பிக்கும்போதோ, அனைத்தும் மாற்றப்படும். ஒவ்வொரு தவறான கிரியையும், வார்த்தையும், சிந்தையும் அதற்கே உரிய தண்டனைகளைப் பெற்றுக் கொள்ளும். மேலும் ஒவ்வொரு நன்மைக்கு ஏதுவான பிரயாசமும் பலனை அடையும். உற்சாகம் ஊட்டப்படும். ஆகவே தான், "கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது, பூச்சக்கரத்துக் குடிகள் நீதியை கற்றுக் கொள்வார்கள்" என வேதவாக்கியங்கள் கூறுகின்றது. (ஏசாயா 26:9) அந்த காலத்தின் ஆசீர்வாதமான வாய்ப்புகள் சபை தவிர ஒட்டு மொத்த மனுக்குலத்திற்கும் உரியதாகும். இந்த யுகத்தின் விசேஷமாக அழைக்கப்பட்ட ஜனங்கள், கேட்கிற செவிகளையும், புரிந்துகொள்கிற மனதையும், பரலோக பலனையும் பெற்றுக் கொள்வதற்கான "பரம அழைப்பாகிய" அழைப்பையும் நமக்குரிய விசேஷமான ஆசீர்வாதங்களாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, என் அன்பான வாசகர்களே, நம்முடைய சோதனைகளும், கஷ்டங்களும் சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவைகள் நமக்கான ஆசிர்வாதங்கள் என நாம் காண்கின்றோம். காரணம், உலகம் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும், மேலான நித்திய கனமகிமையை நமக்கு இவைகள் உண்டாக்குகின்றன. உலகம் பெற்றுக்கொள்ளும் அதிகப்படியான பலன் பூமிக்குரிய திரும்பகொடுத்தல் விஷயமாகும். அதாவது, பரிபூரண மனுஷ நிலைக்கு வருவதே ஆகும். இவ்வாறாக கிறிஸ்துவுக்குள்ளாக தேவன், மனுக்குலத்திற்கு மனுஷீக நித்திய ஜீவனையும், தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கு ஆவிக்குரிய தளத்தில் நித்திய ஜீவனையும் முழுமையாக தெய்வீக இரக்கத்தையும், வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்ட பின்னரும் துணிகரமாக பாவம் செய்பவர்களுக்கு நித்திய மரணத்தையும் ஏற்படுத்தி உள்ளார்.

## யோசபாத்தின் ஒரு தவறு

மற்றவர்களை போன்று, இந்த இராஜாவும் அநேக தவறுகள் செய்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அநேக கண் மூடித்தனமான பிழைகளும் செய்திருப்பார். ஆனால், இவருடைய முக்கியமான தவறு, இவர் இஸ்ரயேலின் இராஜாவாகிய ஆகாபோடு கூட்டு சேர்ந்ததே ஆகும். இங்கு தேவனுடைய சகல ஜனங்களுக்கும் ஒரு பாடம் உள்ளது. "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரிந்தியர் 6:14-18).

ஆகாப் யுத்தம் செய்ய புறப்பட்டபோது, தன்னோடு வரும்படி யோசபாத்தை அழைத்தான். எளிதில் முறியடித்துவிடலாம் என எதிர்பார்த்தனர். ஆனால் கர்த்தருடைய ஆசீர்வாதம் இதிலில்லை என்பதை யோசபாத் தன்னுடைய உயிர் தப்பினபோது புரிந்துகொண்டார். ஆனால் யோசபாத் தன்னுடைய குமாரனுக்கும், ஆகாப் மற்றும் யேசபேலின் குமாரத்திக்கும் திருமணம் செய்விக்கும் தவறை ஏற்கனவே செய்திருந்தார். இவர் இதுவே (யூதா மற்றும் இஸ்ரயேல்) இரண்டு இராஜ்யங்களை மீண்டும் சேர்ப்பதற்கான ஞானமான முறை என கருதினதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் இது பரத்திலிருந்து வருகிற ஞானத்திற்கு எதிராகவும், உலகப்பிரகாரமான ஞானமாகவும், முட்டாள்தனமாகவும் இருந்தது. ஆகாபுடனான யோசபாத்தின் கூட்டணி மீதான கர்த்தரின் பிரியமற்ற நிலை வெளிப்படுத்தப்பட்டது. யோசபாத்திடம், தீர்க்கதரிசி அனுப்பப்பட்டு, "ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது" என்றார். (2 நாளாகமம் 19:2)

நாம் கருத்தை முன் வைப்பதற்கு முன்னதாகவே, தேவனுடைய ஜனங்கள் இந்த சம்பவத்திலிருந்து கிடைக்கும் பாடத்தை உடனடியாக எடுத்துக்கொள்வார்கள்.

நம்முடைய ஆதார வசனம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பங்கு கொள்ளும்படி இப்பொழுது அழைக்கப்பட்ட இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றது. அந்த இராஜ்யத்தை நாடுவது என்பது மீட்பரின் வரவிருக்கிற இராஜ்யத்திலுள்ள மகிமையிலும், வல்லமையிலும் ஒரு இடத்தை நாடுவதாகும். இதை நாடுபவர்கள் பூமிக்குரிய அநுகூலங்களை இழந்துவிடுவார்கள் என்றாலும், விசுவாசத்தின் மூலமாய் அவர்களின் சகல விஷயங்களும் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் இழப்புகளும் கூட அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைக்கு ஏதுவாக வினைப்புரிந்து, அவர்களை இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கிக் கொளண்டிருக்கின்றது என உணர்ந்து கொள்வார்கள். ஆமென்!

# 1911—நினைவுகூருதல் இராப்போஜனம்—1911

மீண்டுமாக நமது அருமை மீட்பர் சிலுவையில் அறையப்பட்டதற்கான ஆண்டு நிறைவு நாளினை நாம் நெருங்கிக்கொண்டிருக்கின்றோம்; மீண்டுமாகக் கடந்துவந்த வருடங்களானது நமக்குக் கற்பித்துத் தந்துள்ளதான படிப்பினையை நம்முடைய வாசகர்களுக்கு நாம் நினைப்பூட்டுகின்றோம்; அதென்னவெனில் சில விவரிக்கப்படாத காரணங்களின் நிமித்தமாக, இந்த ஒரு குறிப்பிட்டக் காலப்பகுதியில் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் விசேஷித்த சோதனைகளையும், பரீட்சைகளையும் சந்திக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர் – நமது கர்த்தருடைய துயரமான மற்றும் பாரமான வேளைக்கும், ஆரம்பக்கால சீஷர்கள் மத்தியிலான விசேஷித்த சோதனைகள் காணப்பட்ட வேளைக்கும் ஒத்தவைகளைச் சந்திக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். தாம் சிலுவையில் அறையப்படப்போவதை முன்னறிந்தவராக, எருசலேமுக்குப் போவதற்குக் கொஞ்சம் முன்னதாக, அவர் இது குறித்து அப்போஸ்தலர்களுக்கு விளக்கினார். அப்போதுதான் தம்முடைய மாம்சத்தைப் புசித்து, தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவர்கள் மாத்திரமே தங்களுக்குள் ஜீவனைப் பெற்றிருப்பார்கள் என்று அவர் கூறினார். அவருக்கு நெருக்கமான பின்னடியார்களாய்க் காணப்பட்டவர்களில் அநேகர், "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்றும், "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்" என்றும் பார்க்கின்றோம். (யோவான் 6:60, 66)

தாம் சீக்கிரத்தில் சிலுவையில் அறையப்படப்போவதைக் குறித்துப் பன்னிரண்டு பேரிடமும் சொன்ன பிற்பாடு, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று பரிசுத்த பேதுரு கூறி, கடிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார். இயேசுவோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்றார் (மத்தேயு 16:22, 23). "உன்னுடைய ஆலோசனைகளும், கருத்துக்களும் தெய்வீகத் திட்டத்திற்குப் புறம்பானவைகளாகக் காணப்படுகின்றன; மனுஷகுமாரன் தமது மகிமைக்குள் பிரவேசித்து, சபை மற்றும் உலகத்திற்கு இரட்சகரெனத் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள வேலையினை நிறைவேற்றத்தக்கதாகப் பலியாகும் விதத்தில் பாடுபட வேண்டியது அவசியமாய் உள்ளது" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

பின்னர் இறுதிக்கட்டத்தில் யூதாஸ் மீது வந்திட்டதான விசேஷித்த சோதனையையும், பணத்தின் மீதான இவரது மோகமானது, எப்படிப் போதகரின் அடக்கத்திற்கு ஏதுவான அபிஷேகித்தலை எதிர்ப்பதற்கு வழிநடத்தினது என்றும், பின்னர் 30 வெள்ளிக்காசுகளுக்கென்று போதகரை விற்றுப்போடுவதற்கு வழிநடத்தினது என்றும், பின்னர் முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுப்பதற்கு வழிநடத்தினது என்றும், நாம் நினைவுகூருகின்றோம். பின்னர் தங்கள் போதகர் கைதுசெய்யப்பட்டதினாலும், அவர் தாம் கைது செய்யப்படுவதற்கு விரும்பினார் என்பதினாலும் எப்படிச் சீஷர்கள் அனைவரும் குழப்பத்திற்குள்ளானார்கள் என்றும், "எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" என்றும் நாம் நினைவுகூருகின்றோம். (மாற்கு 14:50) பின்னர் எப்படிப் பெருந்தன்மையுள்ள பரிசுத்த பேதுரு கடுமையான தவறினால் மேற்கொள்ளப்பட்டவராகி, தனது ஆண்டவரும் போதகருமானவரைச் சபித்து மறுதலித்தார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம்.

அநேகமாக இச்சோதனைக்கான இணையானது, கர்த்தருடைய ஜனங்கள்மீது வருஷத்தினுடைய இந்தக் காலப்பகுதியில் வருமென நாம் கொஞ்சம் கற்பனைப்பண்ணுகின்றோம். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் இந்தக்குறிப்பிட்டக் காலப்பகுதியில் விசுவாசத்திற்கான, கீழ்ப்படிதலுக்கான, நேர்மைக்கான/உண்மைக்கான விசேஷித்த சோதனைகளை, விசேஷித்த பிரச்சனைகளை, பரீட்சைகளைப் பெற்றிருப்பது ஏற்றதாகவும் மற்றும் உண்மையாகவும் காணப்படுகின்றது.

## லெந்து (அ) உபவாச காலங்கள்

மேற்கூறப்பட்டக் கருத்துப்பற்றின எண்ணங்களானது நீண்டகாலத்திற்கு முன்னதாகவே மற்றவர்களுக்குத் தோன்றி, கர்த்தருடைய குடும்பத்திலுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் விசேஷித்த உபவாசம் மற்றும் ஜெபத்திற்குமான காலங்களாகிய லெந்து நாட்களை நியமிப்பதற்கு வழிநடத்தியுள்ளது. இந்த உபவாசமானது பல நூற்றாண்டுகள் காலமாய் உரோமன் சபையிலும், ஆங்கில சபையிலும், கிரேக்க சபையிலும் மற்றும் சில சபைகளிலும் ஆசரிக்கப்பட்டு வந்துள்ளது என்பது உறுதியே.

**--1692--**

பெரும்பான்மையானவர்களின் விஷயத்தில் உபவாசமானது, வெறும் சம்பிரதாயமாகவும், வெளித்தோற்றமான ஆசரிப்பாகவும், இருதய உணர்வு இல்லாமலும் காணப்படுகின்றது மற்றும் இது கர்த்தருக்குப் பிரியமாயும் காணப்படாது என்றாலும், முற்காலங்களிலும், இப்பொழுதும் சிலர் சிறந்த நோக்கங்களுடனும் உபவாசம் இருந்துள்ளனர் மற்றும் இருக்கின்றனர் என்று நாம் நம்புகின்றோம். எவரையும் நியாயந்தீர்ப்பதோ, தனிப்பட்ட விதத்தில் குற்றப்படுத்துவதோ நமக்கடுத்தக் காரியமல்ல; எனினும் நாம் கூறியிருப்பதை அநேகர் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. இருதயத்தை ஆளுவதற்கு ஏதுவான எந்தச் சட்டங்களையோ (அ) விதிகளையோ ஏற்படுத்திடுவது கூடாத காரியமாகும் – எந்தச் சட்டத்தினாலும்/விதியினாலும் மாம்சத்தைத் தற்செயலாகக்கூட ஆண்டிட முடியாது.

இம்மாதிரியான விஷயங்களில், இவைகளுக்கு விதிகளையும், சட்டங்களையும் ஏற்படுத்துவதை நாம் அங்கீகரிப்பதில்லை. உணவு தொடர்புடைய விஷயத்தில் மிதமாய் இருக்க வேண்டுமென இருதயப்பூர்வமாய் விரும்புகின்ற அனைவருக்கும், யோசனைகள் கொடுக்கப்படுவது போதுமானதாய் இருக்கும். போதகர் கடந்துபோன பிற்பாடு, தம்முடைய பின்னடியார்கள் உபவாசமிருக்க வேண்டுமென்ற போதகருடைய ஆலோசனையை நாம் பெற்றிருக்கின்றோம். இப்படியான உபவாசமிருக்கப்பட்டதான பல தருணங்களானது வேதவாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் இவைகள் கர்த்தருடைய பின்னடியார்களுக்கான சிறந்த/ஏற்ற மாதிரிகளாகக் கருதப்படலாம்; இந்தக் கர்த்தருடைய பின்னடியார்கள் உணவுகள் (அ) பானங்கள் (அ) மற்றப் பூமிக்குரிய சடங்குகள் விஷயத்தில் நியாயப்பிரமாணத்தின் கீழோ, கட்டளையின் கீழோ காணப்படுகிறவர்கள் அல்ல.

உபவாசத்தில் கொஞ்சம் சுயகட்டுப்பாட்டுடன் காணப்படுவது என்பது, நமக்கு சரீர விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும், அதிலும் குறிப்பாக வருஷத்தினுடைய வசந்த/இளவேனிற் காலத்தில் பயன்கொடுக்கின்றதாய் இருக்கும். குளிர்காலத்தினுடைய குளிரான பருவநிலைக்கு அவசியமாய்க் காணப்படும் பலமான ஆகாரங்களானது, கடுமையற்ற பருவநிலையின்போது அவசியமாய் இராது. அதிகப்படியாய் உணவு உட்கொள்ளப்படுவதே, பெரும்பான்மையான இளவேனிற் கால சுகவீனங்களுக்கான காரணமாய் ஐயத்திற்கிடமின்றி காணப்படுகின்றது மற்றும் இந்தச் சுகவீனங்களானது, கொஞ்சம் உபவாசம் இருக்கும்போது – சுவையான மற்றும் பலமான உணவுகளை உட்கொள்ளுதல் கொஞ்சம் கட்டுப்படுத்தப்படும்போது சுகமாகிவிடுகின்றது. அதிகப்படியான போஷாக்கின் நிமித்தமாகச் செரிமானம் தடைப்பண்ணப்படும்போது, மூளையானது மிகவும் மந்தமாகிப்போய், உயர் மனதின் ஆற்றல்களை வலுவிழக்கச்செய்துவிடுகின்றது மற்றும் குறிப்பாக பரம மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடையதான உயர் மனதின் ஆற்றல்களை வலுவிழக்கச் செய்துவிடுகின்றது.

இந்த யோசனைகளை, நாம் எவர்மேலும் நுகத்தினை (அ) நியாயப்பிரமாணத்தினைச் சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இல்லாமல், மாறாக ஒவ்வொருவனும் தனது சொந்த மனசாட்சிக்கேற்ப உபவாசம் இருந்து, ஜெபம் பண்ணிடுவதற்கும் மற்றும் இந்த விஷயத்திலும், ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடனான தனது உறவினுடைய அளவிற்கேற்ப ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான நமது விருப்பத்தில்தான் முன்வைத்திடுகின்றோம்.

## நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தியதி

அநேக அருமையான கிறிஸ்தவ ஜனங்கள் நினைவுகூருதல் இராப்போஜனமானது வாரந்தோறும், மாதந்தோறும், மாதத்திற்கு இரண்டுமுறை என்றும், காலாண்டுதோறும் என்றும் ஆசரிக்கப்பட வேண்டும் என்று கற்பனை செய்துகொள்வது போன்று, நமது கர்த்தர் எதுவும் குறிப்பிடவில்லை என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றோம். நினைவுகூருதல் இராப்போஜனமானது, யூத ஏற்பாடு அனைத்தின்படி வருடந்தோறுமான ஆசரிப்பாக – நிழலான பஸ்காவினிடத்தில் இடம்பெறும் ஆசரிப்பாக நிறுவப்பட்டது என்பதில் மிகுந்த நிச்சயமே. நிழலின் விஷயத்தில், தியதியின் காரியத்தில் திட்டவட்டம் காணப்பட்டது மற்றும் இது நிஜத்தினுடைய ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் அவசியமாய் இருக்க வேண்டியதில்லை. நிழலானது, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட வேண்டிய துல்லியமான/திட்டவட்டமான தியதியினை விசேஷமாய்ச் சுட்டிக்காட்டுவதற்குரிய நோக்கத்தினைப் பெற்றிருந்தது. ஆகையால் யூதர்கள் விஷயத்தில் மிகுந்த நுணுக்கம்/துல்லியம் என்பது ஏற்றதாய் இருந்தது. இப்பொழுதோ இயேசுவின் மரணம் பற்றின உண்மையானது, நடந்து முடிந்த காரியமாய் இருக்கின்றபடியால், தியதி மற்றும் வேளையின் துல்லியம் குறித்த விஷயத்தில் நுணுக்கமாய்க் காணப்படுவது என்பது மிகுந்த அவசியமானதாய்க் காணப்படுகிறதில்லை.

ஆகையால் எப்பிஸ்கோப்பிலியர்களும், கத்தோலிக்கர்களும் மற்றும் லுத்தரன்களும் நமது கர்த்தருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்குமான ஆண்டு நிறைவு நாளுக்கு அருகாமையிலுள்ள வெள்ளியையும், ஞாயிறையும் புனித வெள்ளி என்றும், ஈஸ்டர் ஞாயிறு என்றும் ஆசரிக்கும் வழக்கத்திற்கு மறுப்புத் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை. உண்மையில் இவர்களது

வழக்கத்திற்கு ஆதரவாக சில விஷயங்கள் சொல்லப்படலாம்; ஏனெனில் இவ்வழக்கமானது ஆண்டு நிறைவு நாளினை, அவ்வாரத்தினுடைய நாட்களுடன் ஒன்றுப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் 30-வருடங்களுக்கும் மேலாக, இந்த நினைவுகூருதலை, அதன் துல்லியமான ஆண்டு நிறைவு நாள் என்று நாங்கள் அறிந்திருக்கிற தியதியில் - யூதருடைய காலக்கணக்கீட்டு முறைக்கேற்ப – யூதருடைய நீசான் மாதத்தின் 14-ஆம் தேதியினுடைய முந்தின மாலையில் ஆசரிக்கும் வழக்கத்தினை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இந்த நீண்ட கால வழக்கத்தின் கண்ணோட்டத்தின்படியும் மற்றும் மாற்றத்தினுடைய அநுகூலத்தைச் சிலர் தெளிவாய்ப் பார்க்க முடியாதவர்களாய் இருப்பார்கள் என்ற உண்மையின் கண்ணோட்டத்தின்படியும், சிலர் குழப்பமடைந்து, தாங்கள் தப்பறையைப் பின்பற்றுவதாக எண்ணுவார்கள் என்றுள்ள உண்மையின் கண்ணோட்டத்தின்படியும், நம்முடைய தெரிந்துகொள்ளுதலானது இப்படியாய்க் காணப்படுகின்றது. ஆகையால் யூதருடைய நாள்காட்டியின்படியான துல்லியமான தியதியே பின்பற்றப்படுவதாக என்று நாம் அறிவுரைக் கூறுகின்றோம்.

இவ்வருஷத்தில் இளவேனிற் சமஇரவுபகல் நாளைத் தொடரும் அமாவாசையானது, மார்ச் 30-ஆம் தேதி நிகழ்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இதுவே யூதக்காலக்கணக்கீட்டின்படியான முதல் மாதத்தினுடைய முதலாம் நாளாய்க் காணப்படுகின்றது. நமது கர்த்தர் முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று சிலுவையில் அறையப்பட்டிருக்க, இந்த வருஷம் அந்நாளானது, ஏப்ரல் 12-ஆம் தேதியாகக் காணப்படும். ஆனால் அவரது மரணத்திற்கான நினைவுகூருதலான இராப்போஜனமானது, முந்தின நாள் மாலையன்று ஆசரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது மற்றும் நம்முடைய முந்தைய வழக்கத்தின்படி அனைவரும் ஒரே இருதயத்துடனும், ஒரே மனதுடனும் ஒன்றாய் மாபெரும் மீட்பருடைய மரணத்தினை ஏப்ரல் 11-ஆம் தேதியாகிய, செவ்வாய்க் கிழமையன்று, இரவில் 6-மணிக்குமேல் ஆசரித்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். இப்படியாக ஆசரித்திட்டாலுங்கூட நம் அனைவராலும் ஒரே மணிநேரத்தில் ஆசரித்திட முடியாது; காரணம் நேரத்திலுள்ள வித்தியாசம் ஆகும்; எனினும் உலகமெங்கும் இவ்வாசரிப்பானது அதேவேளையில்தான் நடைபெறும். அனைவரும் இப்படி ஆசரிப்பார்கள் என்ற இந்தப் பொதுவான ஐக்கியமும்கூட, இத்தருணத்திற்கே உரிய சந்தோஷம் மற்றும் பயபக்தியுடன்கூட அடங்குகின்றது. கர்த்தரை அன்புகூருகின்றவர்களும், மரணம் வரையிலுமாக அவரது சித்தம் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுமானவர்கள் அனைவரும், நமக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுகின்றதான இந்த ஆசரிப்பில் பங்குகொள்ளும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

இது முதலாவதாக — நம் அருமை மீட்பர் தம் சபை சார்பாகவும், பூமியின் குடிகள் அனைத்தின் சார்பாகவும் உள்ள அவரது பலியினை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. இரண்டாவதாக — அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கும், அவரோடுகூடப் பாடுபடுவதற்கும், அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், மரணத்திற்குள்ளான அவரது ஸ்நானத்திற்குள் ஸ்நானம் பெறுவதற்கும் நாம் கர்த்தரிடத்தில் பண்ணியுள்ளதான வாக்குறுதியை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. நினைவுகூரும் வண்ணமாக, அப்பம் பிட்குதலும், பாத்திரத்தில் பானம்பண்ணுதலும் — இவைகள் அடையாளப்படுத்துகின்ற நிஜங்களிலுள்ள நம்முடைய பங்கெடுத்தலைக்காட்டிலும் முக்கியத்துவம் குறைந்ததேயாகும் என்பது உண்மைதான். நம்முடைய மனங்களிலும், இருதயங்களிலும் நாம் இயேசுவினுடைய பிட்கப்பட்ட சரீரத்தைப் புசித்து, அவர் மூலமாய் நம்முடைய மாம்சத்தின் நீதிமானாக்கப்படுதலை தரிப்பிக்கப்பட்ட விதத்தில் நாம் பங்கெடுக்கின்றோம் என்றும், அவர் மூலமாகவே எதிர்கால ஜீவியத்திற்கான நம்முடைய நம்பிக்கைகள் அனைத்தும் வருகின்றது என்றும் விசுவாசத்தின் மூலம் உணர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவதாக அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதுபோல், நாம் அவரது துயரங்களில் பங்கடைய வேண்டும், கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பவர்களாகக் காணப்பட வேண்டும் மற்றும் அவரது அடிச்சுவடுகளில் மரணம் வரையிலுமாக உண்மையாய் நடந்து, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிட வேண்டும். பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தினை ஆண்டவர் பானம்பண்ணினார். தேவனுடைய கிருபையினால், அவர் பாத்திரத்தில் பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருக்கின்றோம்; ஏனெனில் நாம் அவரோடுகூடப் பாடுபட்டால், அவரோடுகூட ஆளுகை செய்வோம். கிறிஸ்துவின் பாடுகளிலிருந்து நாம் ஓடிவிடுவோமானால், அவரோடுகூட ஜீவப்பலிகளாகுவதற்கு நாம் தவறுவோமானால், நாம் அவரது இராஜ்யத்தினுடைய மகிமையான சிலாக்கியங்களை அடையமுடியாது.

*****

# கெட்ட வார்த்தை என்றால் என்ன?

**எபேசியர் 4:29**

கெட்ட வார்த்தை என்பது நற்கீர்த்திக்குப் பதிலாக துர்க்கீர்த்தியினை அல்லது துர்ச்செய்தியினைப் பரப்புவதாகும். நம்முடைய ஆதார வசனமானது, சாதாரண உரையாடல் சம்பந்தப்பட்ட கெட்ட வார்த்தையினைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்படலாம். நம்முடைய மனங்களானது, அவைகளை நாம் கட்டுப்படுத்தவில்லையெனில் மற்றும் குறிப்பிட்ட எல்லைக்குள்ளாக வைக்கவில்லையெனில், அவை நம்மிலும், மற்றவர்களிடத்திலும், சகலவிதமான பிரச்சனைக்குள் நம்மை உள்ளாக்கிடும்; ஆனால் நம்முடைய நாவுகளானது, நம்முடைய மனங்களைக்காட்டிலும் அதிகமான பாதகத்தைச் செய்திடும். நாம் சிந்திக்கிற விஷயங்கள் நம்மை மாத்திரமே பாதிக்கின்றதாய் இருக்கும்; ஆனால் நம்முடைய நாவுகளானது காரியத்திற்குள் நுழையும்போது நம்முடைய மனங்கள் அசுசிப்படுவதோடு மாத்திரமல்லாமல், தொற்றுநோய் ஏற்படுகின்றது, நச்சுத்தன்மை ஏற்படுகின்றது; ஏனெனில் நாவானது காரியத்தினைச் சுற்றிலும் பரப்பிவிடுகின்றது. விஷயம் உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருப்பினும், அதன் தாக்கம் சீரழிவாகவும், இழிவுப்படுத்துவதாகவும், சிலசமயம் நல்லொழுக்கமற்றுப் போவதற்கு ஏதுவானதாகவும் இருக்கும்.

உலகத்தார் மத்தியில் மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும் சிறுசிறு சம்பவங்களை விவரிக்கும் அல்லது குற்றங்கள் எடுத்துரைக்கும் மனப்பான்மைக் காணப்படுகின்றது; இவைகள் எப்போதும் பாவகரமானவைகளாக இல்லாமல் இருந்தாலும், தீமையின் முளைகள் முளைத்தெழுப்பப் பண்ணிடுவதற்கு ஏதுவானவைகளாக இருக்கின்றது. இதன் அடிப்படையில்தான், கெட்ட வார்த்தைகள் ஒன்றும் நம் வாயிலிருந்து புறப்படாமல் இருப்பதாக என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒருவேளை ஏதேனும் சீரழிக்கும் தகவல் நம் கவனத்திற்குத் துரதிருஷ்டமாக வந்திருக்குமானால், அது மேலும் பரவாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்குக் கேடு உண்டுபண்ணும் விதத்தில் நாவைப் பயன்படுத்துவது என்பது சுபாவ மனதினுடைய தன்மையா அல்லது இதற்கும், தீய ஆவிகளுக்கும் சம்பந்தம் உள்ளதாவென நாங்கள் சிலநேரம் சிந்தித்துப்பார்ப்பதுண்டு.

அப்போஸ்தலன் கட்டளையிட்டது போன்று, நாம் ஆகாத சம்பாஷணைகளை விட்டுவிடுவோமாக; அவைகளைத் தவிர்த்திடுவோமாக; மற்றும் பக்திவிருத்திக்கு ஏதுவானவற்றை மாத்திரம் பற்றிக்கொள்வோமாக; "பக்தி விருத்தி" எனும் வார்த்தையானது, ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல் எனும் அர்த்தத்தினை உடையதாய் இருக்கின்றது.

---

## உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

### 1 தெசலோனிக்கேயர் 5:13

நம்முடைய இந்த நாட்களில் பரவலாய் அதிருப்தியானது நிலவிவருவதினாலும் மற்றும் உலகத்தாராயிராத தேவனுடைய பிள்ளைகளானவர்கள் உலகத்தில் காணப்பட்டு, அதினால் தாக்கத்திற்குள்ளாகுகின்றபடியினாலும் - ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தினந்தோறும் தனது சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைப்பதற்கும், முறுமுறுக்காமல் தனது நாவை காத்துக்கொள்வதற்கும், தனது இருதயத்தை அதிருப்தியிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்வதற்கும், தேவனால் நமக்குப் பாராட்டப்பட்டதான அவருடைய நன்மைகள் யாவற்றையும் உணர்ந்து, தேவனுக்கான நன்றியுணர்வில் இருதயங்களானது நிரம்பிக் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்வதற்கும் விழிப்பாயிருப்பது என்பது மிகவும் அவசியமாகுகின்றது.

இன்னுமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தரால் அழைத்து, இழுக்கப்படுகின்றதான பாத்திரங்களானவர்கள், அனைவரும் உறுதியானவர்களாக - பலமான பாத்திரங்களாகக் காணப்பட வேண்டும். இத்தகையவர்களையே தேவன் தம்முடைய குமாரனுடைய மணவாட்டிகளாகவும், உடன்சுதந்தரர்களாகவும் காணப்படும்படிக்கு நாடுகின்றார். இவர்களது உறுதியும், திடமும், மற்றவர்களுடைய அசட்டையான மற்றும் அலட்சியமான தன்மையிலிருந்து வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. இவர்களது பெலவீனங்களானது சுதந்தரிக்கப்பட்டவைகளாக இருப்பினும், மற்றவர்களுக்குக் காணப்படுவதுபோலவே, அதிகமாகவே காணப்படுகின்றது. ஆகையால் இவர்களில் அநேகர் ஒன்றுகூடப்பண்ணப்படும்போது, அதாவது வேதாகம ஆராய்ச்சி வகுப்பிற்குக் கூடிவருகையில், ஒருவருக்கொருவர் மிகுந்த பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மையைப் பெற்றிருக்கும் அவசியமுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஒருவேளை கருத்துவேறுபாடுகளும், கருத்து மோதல்களும் ஏற்படுகையில், இவர்கள் ஒருவருக்கொருவர் உண்டுபண்ணிடும் பாதிப்பானது, பலம் குறைந்த குணமுடைய, உறுதி குறைந்த, ஸ்திரமற்ற தன்மையுடைய ஜனங்கள் மத்தியில் ஏற்படுவதைக் காட்டிலும் நிச்சயமாகவே அதிகமாயிருக்கும். இதனாலேயே இவர்கள், "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள், உண்மையாய் இருப்பதை அறிந்து கொள்கின்றனர்.

ஆகையால் இவ்வகுப்பார் சத்தியத்தோடுகூட, சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின், சாந்தத்தின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியையும் பெற்றிருக்க வேண்டுமெனத் தேவன் கூறுகின்றார்; இவை இல்லையெனில் மோசமான பிணக்குகளும், பாதிப்புகளும் ஏற்படும்.

வேதமாணவர்கள் அடங்கியுள்ள எந்தவொரு சபையில், வேதாகம பாடங்களானது (volumes) புறக்கணிக்கப்படுகின்றதோ, அங்குப் பெலவீனமும், உலகப்பிரகாரமான போக்கும், சுகபோகப் பிரியமும், கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியக் குறைவு முதலானவைகள் நிச்சயமாய் வெளிப்படும். ஒருவேளை வேதாகம பாடங்களானது நடத்தப்பட்டும், ஆனால் அவைகள் இருதயத்திலும், ஜீவியத்திலும் அப்பியாசப்படுத்தப்படவில்லையெனில், ஆவியின் கனிகளாகிய - சாந்தம், தயவு முதலானவைகள் குறைவுப்பட்டுக் காணப்படும். புதுச்சிருஷ்டியினுடைய குணலட்சணத்தினை வளமாக்கிடத்தக்கதாக, மற்ற ஆவியின் கனிகளானது வளர்வதற்குரிய மண்ணிற்கான அஸ்திபாரமென அறிவின் ஒவ்வொரு அம்சமானது, பயன்படுத்தப்பட வேண்டும்.

தங்களுக்கான ஊழியக்காரர்களாய், மூப்பர்களாய் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, தங்களது "அதிகாரிகளாக" அங்கீகரித்திடக்கூடாது என்றும், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுவதற்குரிய எந்தப் பிரயாசங்களுக்கும் உடன்படக்கூடாது என்றும், சபையாருடைய கவனத்திற்கு நாம் கொண்டுவந்த தருணங்கள் இருக்கின்றன (1 பேதுரு 5:3). இன்னொரு பக்கத்தில் அங்கத்தினர்கள் சிலரைத் தவறான மனோநிலையினைக் கொள்வதற்கு வழிநடத்தத்தக்கதாக, குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியானது சபையாரால் உண்டுபண்ணப்படலாம் எனும் உண்மையினிடத்திற்கும் விசேஷித்த கவனத்தைக் கொண்டு வந்திடுவதற்கு நாம் விரும்புகின்றோம். சபையார் மூப்பர்களை இறுமாப்பாய் ஆதிக்கம் பண்ணுவார்களானால், அது கர்த்தருடைய ஆவிக்கு முரணானதாகவே காணப்படும். அவர்கள்

அன்புகூரப்பட வேண்டும், ஆதரிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் சில அபூரணங்களைப் பெற்றிருக்கையில், அவர்களும் மற்ற மனுஷர்கள் போலவே அனுதாபம்கொள்ளப்படுவதற்கும், மன்னிக்கப்படுவதற்கும் மற்றும் பழியினை நிவர்த்திப்பண்ண பெறுவதற்கும் பாத்திரமானவர்களாகவே காணப்படுகின்றனர்.

எந்தளவுக்கு மந்தைக்கான ஊழியத்தில் மூப்பர்கள் அல்லது ஊழியக்காரர்கள் உண்மையாகவும், தாழ்மையாகவும், கடுமையான முயற்சி செய்கிறவர்களாகவும் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் சபையின் ஒவ்வொரு அங்கத்தினனுடைய இருதயப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுவார்கள்.

உலகத்திலுள்ள சில ஜனங்களைப் போன்று, தேவனுடைய ஜனங்களில் சிலர் சில முக்கியத்துவமற்றக் காரியங்களைக் குறைக்கண்டுபிடிக்கும் கண்ணோட்டத்துடன் காண்கின்றனர்; உதாரணத்திற்குக் கூட்டங்கள் தொடர்புடைய விஷயங்களில், பாராளுமன்றத்தில் பயன்படுத்துவது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் தொடர்பாகும். வேதாகமமானது எந்தக் குறிப்பிட்ட பாராளுமன்ற சட்டங்களை முன்வைத்திடாமல், தேவனுடைய ஜனங்களுக்கு, சபைக்கடுத்த காரியங்கள் அனைத்திலும், அவர்கள் ஒவ்வொருவரையும் நிர்வகிக்கிற ஒரு பரந்த, பொதுவான பிரமாணத்தையே கொடுத்திருக்கின்றார். இந்தப் பிரமாணத்தினை ஆண்டவர் சுருக்கமான வார்த்தைகளில், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறியுள்ளார் (யோவான் 13:34).

இந்த அன்பின் பிரமாணமானது, தேவனுடைய பிள்ளைகளென நமக்கிருக்கும் எல்லா உறவுகளையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக; நாம் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில் ஒருவராகவோ அல்லது தெரிந்தெடுக்கப்படாதவர்களாகவோ இருப்பினும், அன்பின் பிரமாணமானது, நம்முடைய ஒவ்வொரு கிரியைகளையும், நம்முடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் - ஆம் நம்முடைய ஒவ்வொரு எண்ணங்களையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக. அருமையான சகோதரரே நம் அனைவராலும் இப்பிரமாணத்தினைத் தொடர்ந்து மனதில் நிலைநிறுத்திக்கொள்ள முடியுமானால், அது அநேகமான பிணக்குகளையும், மனஸ்தாபங்களையும் மற்றும் வலிகளையும் தவிர்த்துவிடும். அது நம்மை அதிகமாய் நமது ஸ்தோத்திரத்திற்குரிய ஆண்டவர் போன்றாக்கிடும் மற்றும் ஒருவர் இன்னொருவரின் முன்னிலையிலும், உலகத்தாரின் முன்னிலையிலும் அவரைச் சிறந்த விதத்தில் பிரதிபலிக்கிறவர்களாக்கிடும். அது நாம் செய்கிற அனைத்திலும் முடிந்தமட்டும் ஜாக்கிரதையாயும், ஒழுங்காகவும் நம்மைக் காணப்படச் செய்து, மற்றும் நம்முடைய நடத்தையில் மற்றவர்கள் சரியான வழியின் அழகினைக் கவனித்து, கற்றுக்கொள்வது வரையிலும், மற்றவர்களிடம் அன்பாய் அதிகம் நாம் எதிர்ப்பார்க்காமல் காணப்படச் செய்யும். பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக/சித்தமாக விளங்கி, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு வழிமுறையிலும் நாம் திருப்திக் கொள்வோமாக. பெரும்பான்மையானவர்கள் நம்மைவிட ஞானம் குறைவானவர்களாய் இருப்பதாக நாம் கருதுவோமானால், அவர்கள் தங்கள் நடவடிக்கையினுடைய தவற்றை உணர்ந்து, அதைச் சரிசெய்வது வரையிலும் கர்த்தர் பொறுமையோடு காத்திருப்பதுபோன்று, நாமும் பொறுமையாய் இருக்கவும், காத்திருக்கவும் கற்றுக்கொள்வோமாக. சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில், நாம் அதிகமதிகமாய்ச் சமாதானம்பண்ணுகிறவர்களாகிவிடுவதற்கு நாடிடுவோமாக: "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

---

# மாம்சத்தில் ஒரு முள்
# THORN IN FLESH

"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்."

*2 கொரிந்தியர் 12:7-10*

தெய்வீக சித்தத்திற்குத் தாழ்மையுடன் தலைவணங்கும் ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவானுடைய மொழியாக இவ்வசனங்கள் காணப்படுகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் மேலானவராகவும், உண்மையுள்ளவராகவும், குணலட்சணங்களில் உறுதியுள்ளவராகவும் காணப்பட்டாலும் அவர் தானும் விழுந்துபோன இனத்தின் ஓர் அங்கம் எனவும், மனுக்குலத்தைப் போல தானும் பெலவீனங்களுக்குக் கீழ்ப்பட்டவர் எனவும் உணர்ந்திருந்தார். தேவன், அவர் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் மிக முக்கியமான மற்றும் மகிமையான வேலைக்கு அழைக்கப்பட்டிருந்தார். மேலும் முழு சபையின் நன்மைக்காக மற்ற கனத்திற்குரிய, நேசத்திற்குரிய அப்போஸ்தலர்களைக் காட்டிலும் விசேஷமான, அருமையான வெளிப்படுத்தல்கள் இவருக்கு அருளப்பட்டிருந்தது.

இவர் தரிசனத்தில் மூன்றாம் வானமாகிய, புதிய யுகத்திற்கு, கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சிக்கு எடுத்து செல்லப்பட்டு, சபை அறிந்துகொள்வதற்கு அது ஏற்ப காலமாய் இல்லாதபடியால், மனுஷர் பேசப்படாததும், வாக்குக்கெட்டாததுமாகியவைகள் அவருக்கு காட்டப்பட்டது. (2 கொரிந்தியர் 12:3) சகல புறஜாதி சபை ஜனங்களின் மீதான பராமரிப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவருடைய பணியின் பொறுப்பு மிகவும் பெரியதாய் இருந்தது. இந்த ஸ்தானம், மிகவும் உழைப்பு கொடுக்க வேண்டியதாகவும், கடினமானதாகவும், மேலும் பொறுமை, பக்தி வைராக்கியம் மற்றும் சுயத்தை வெறுத்தல் ஆகியவற்றை இந்த ஸ்தானத்தின் பணியை நிறைவேற்ற தேவைப்படுவதாக இருப்பினும், இந்த ஸ்தானம் மிகவும் கனமுடையவைகளில் ஒன்றாகும்.

## "குட்டும் சாத்தானுடைய தூதன்"

அப்போஸ்தலனாகிய பவுல், கர்த்தருடன் ஊழியம் புரிவதில் உள்ள நெருக்கமான ஐக்கியத்தின் கனத்தை உணர்ந்திருந்தார். மேலும் அதை தனது தளரா பக்தி வைராக்கியத்தின் மூலமாகவும், பேரார்வத்தின் மூலமாகவும் வெளிகாட்டினார். இதிலும்கூட கர்த்தர் தம்முடைய அன்புக்குரிய உண்மையுள்ள அப்போஸ்தலனிடம், தனிப்பட்ட ஓர் அபாயம் வளர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்டார். அதாவது, பெருமை மற்றும் தன்னைத்தானே உயர்த்தும் அபாயம் ஒருவேளை வளர ஆரம்பித்தால், அது அவர் தொடர்ந்து ஊழியம் செய்வதற்கு அவரை தகுதியற்றவராக ஆக்கி அவருடைய (பவுலுடைய) எதிர்கால பலனையும் திருடிவிடும் என கர்த்தர் உணர்ந்தார். ஆகவே மாம்சத்தில் முள் வரும்படிக்கு அனுமதிக்கப்பட்டது. அது கர்த்தருடைய கரத்திலிருந்து வர, அவருடைய அனுமதியினால் தான் அது வந்திருந்தாலும், அதை அப்போஸ்தலானாகிய பவுல், "தன்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாக," இருக்கின்றது என்றார்.

மாம்சத்தில் முள் என்பது எப்பொழுதும் வேதனையான ஒன்றாகும். மேலும் அது எதுவாக இருப்பினும், அது அப்போஸ்தலனாகிய பவுலுக்கு மிகவும் சோதனையாகவே இருந்தது. ஆரம்பத்தில் அதன் வலியையும், அதனால் வரும் தொந்தரவையும் கர்த்தருடைய வேலைக்கு அது அளிக்கும் தடையையும், அவர் கருத்தில் கொண்டார். மேலும் அது குட்டும் சாத்தானுடைய தூதுவனாக இருக்கிறபடியினால் அதை அப்புறப்படுத்துவதற்கு விருப்பமாய் இருந்தார். அதை எடுத்து போடும்படிக்கு மூன்று தரம் கர்த்தரிடத்தில் கேட்டார். ஆனால் அதுவோ அவருக்குள் நிலையாய் தங்கியிருக்கும்படிக்கு வந்துள்ளது. மேலும் அது தனது மாம்சத்திற்கு மிகவும் சகிக்கக் கூடாததாக இருப்பினும், தனது ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அது மிகவும் ஆதாயமானது என்றும், இது இல்லையெனில் தன்னைத்தான் உயர்த்தும் நிலைக்கு தன்னை கொண்டு செல்லக்கூடும் என கர்த்தர் கிருபையுடன் அவரை உணர்ந்துகொள்ளச் செய்தார்.

## "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்"

பலவீனம் உள்ளவன் என்று சுட்டிக்காட்டியதை அப்போஸ்தலன் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார். அவர் கோபத்தைக் காட்டவில்லை. தனது பெலத்தைக் குறித்து பெருமை பாராட்டவும் இல்லை. முள்ளை நீக்குவதற்கு கர்த்தர் தமது வல்லமையை பயன்படுத்தாததற்கு கர்த்தரை பழிக்கூறவும் இல்லை. மாறாக, தனது இருதயம் மற்றும் தனது பலம் குறித்ததான கர்த்தருடைய தீர்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தன் மூலம் கர்த்தர் முழு சபைக்கும் ஊழியம் செய்து கொண்டிருக்கையில் தனிப்பட்டவிதமாய் தன்னை பராமரிக்கும் அன்பை அவர் உணர்ந்து கொண்டார்.

ஆம்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தர் தமக்குரிய கருவிகளை தெரிந்து கொள்கின்றார். அந்த கருவிகளை அதிகபடியான ஊழியம் செய்வதற்கு ஏதுவாக, அவர்களை கூர்மையாக்கித் தீட்டி மெருகூட்டுகின்றார். மேலும், அவர்கள் தம்முடைய ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு அவர்களை வல்லமையுடனும், ஆற்றலுடனும் கையாண்டு நிர்வகிக்கின்றார். என்றாலும், வேதனையான கடினமான ஊழியங்கள் அனைத்தின் மத்தியிலும் விருப்பமும், உண்மையும் உள்ள கருவிகளுக்குக்கூட அவர் விசேஷமான பராமரிப்பு கொடுக்கின்றார். அந்த கருவிகள் தாங்க முடியாத அளவிற்கு அவர்களை அவர் சோதனையில் விட்டுவிடுவதுமில்லை, இன்னுமாக கருவிகளை சமநிலையில் மாம்சத்தின் முள் மூலம் தக்க வைக்காமல், கருவிகள் தன்னைத்தான் உயர்த்துவதற்கும் அவர் அனுமதிப்பதில்லை.

அப்போஸ்தலனின் ஜெபத்திற்குக் கொடுக்கப்பட்ட பதிலானது, அவருடைய விண்ணப்பத்திற்கு இசைவானதாய் இல்லாமல் இருப்பினும், அது ஓர் ஆசீர்வாதமான ஆறுதலாகும். "என் கிருபை (என் தயவு) உனக்குப் போதும்; (உன்னுடைய) பலவீனத்தில் என்னுடைய பலம் பூரணமாய் விளங்கும் (வெளிப்படும்)."

## "என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்"

உண்மையாய் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்த ஒவ்வொரு இருதயத்திற்கும் இது ஆசீர்வாதமான, ஆறுதலாக உள்ளது. எத்தனை விதமான கர்த்தருடைய ஜனங்கள் இந்த நாட்களில் சீற்றத்தில் அலைக்களிக்கப்பட்டு, கடுமையாக சோதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களில் அநேகர் இந்த சோதனைகள் அல்லது உபத்திரவங்கள் தங்களைவிட்டு போகும்படிக்கு கர்த்தரிடத்தில் கேட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் குத்துகிற முள்ளானதோ, அவர்களை ஒழுங்குப்படுத்துவதற்காகவும், பூரணப்படுத்துவதற்காகவும் அவர்களிடமே தங்கி நிலைத்திருக்கும்! "என் கிருபை உனக்குப் போதும்" என்ற போதகரின் சத்தத்திற்கு நாம் அனைவரும்கூட பவுலைப்போன்று செவிசாய்ப்போமாக. உன்னை உன் நண்பர்கள் கைவிட்டால்தான் என்ன? சத்துருவின் சேனைகள் உன்னை மேற்கொள்ளும்படி நாடினால்தான் என்ன? உனக்கு என் கிருபையும், என் அன்பும் இருந்தால் போதாதா? மாம்சம் பலவீனமாய்

இருப்பினும், இருதயம் தளர்ந்து போகையிலும், என் பெலம் உன்னுடைய குறைவுகளுக்கு அருள் செய்யும். மேலும் நான் நியமித்துள்ள பாதையில் நீ நடப்பாயானால், உன்னுடைய பலவீனமோ உன்னிடத்திலும், உன் மூலமாயும் கிரியை செய்கின்ற தேவனுடைய வல்லமையையே அதிகமாய் வெளிப்படுத்தும்.

உண்மையான தேவபிள்ளை தன்னுடைய அதிகப்படியான தேவையின் நேரத்திலும், பலவீனமான நேரத்திலும் தனது பலவீனங்களுக்கு ஈடாக பரத்திலிருந்து அளிக்கப்படும் தேவனுடைய வல்லமையை உணர்ந்ததில்லையோ? மேலும் கர்த்தர் அழைத்த வேலையை ஒருவன் நிறைவேற்றின பின்பு அவனுக்கு தன் மீதே திருப்தியற்ற நிலை நிலவுகையில், தன்னை குறைவு உள்ளவனாகக் காண்கையில், தேவனுடைய ஆச்சரியமான வல்லமை அவன் பலனில் வெளிப்படுவதை உணர்ந்ததில்லையோ?

தனது பலவீனங்களை நிறைவுபடுத்தும் விதமாக கொடுக்கப்பட்ட தெய்வீக பலமாகிய கிருபை நிறைந்த ஏற்பாட்டை உணர்ந்த அப்போஸ்தலன் தாழ்மையுடன், "கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" என்கின்றார். (வசனம்-9) தனது முழு சக்தியையும் கொடுத்து, தன்னால் முடிந்தமட்டும் ஞானமுள்ள உக்கிராணக்காரனாய் தன்னுடைய திறமைகளை உண்மையுடன் பயன்படுத்தினபடியால், அப்போஸ்தலனாகிய பவுல் அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் வல்லமை, மற்றும் ஆவியின் வெளிப்பாடுகள் மூலமாய் தன்னிடத்தில் கர்த்தருடைய கரம் கிரியை செய்வதை உணர்ந்து சந்தோஷம் அடைந்தார். (எபிரெயர் 2:4; அப்போஸ்தலர் 19:11; 1 கொரிந்தியர் 2:4 வாசிக்கவும்) அப்போஸ்தலனாகிய பவுல், தனது திறமைகளை உண்மையாய் பயன்படுத்தி அவைகளை நிறைவுபடுத்தினதற்கான தெய்வீக வல்லமையின் இந்த வெளிப்படுத்தல்கள் பவுல் செய்த அனைத்திற்குமான கர்த்தரின் ஒப்புதலாகும். அதாவது, அவருக்கும் மற்றவருக்குமான தெய்வீக அங்கீகரிப்பின் வெளிப்படுத்தலாகும்.

## தேவனுடன் முழு இசைவுடன் இல்லாத எவராலும் உபத்திரவங்களில் களிகூர முடியாது

அப்போஸ்தலனும் சகல தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய தாலந்துகளை ஊழியத்திற்கென்று உண்மையுடனும், தாழ்மையுடனும் பயன்படுத்திக் கொண்டிருக்கையில், அவர்களுடைய பலவீனங்கள் தெய்வீக கிருபையினால் நிறைவுபடுத்தப்படுவது சிலாக்கியமாகும். ஆகவே உண்மையுள்ளவர்கள் அனைவரும், தேவன் உபத்திரவங்களையும், பாடுகளையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றி, உபத்திரவங்களை தன்னுடைய துதியினால் நிறைவுபடுத்துவதால், உபத்திரவங்களில் களிக்கூர்ந்து மகிழ்ச்சி அடையலாம்.

ஆனால் உபத்திரவங்களில் களிக்கூருவதும், மாம்சத்தில் கொடுக்கப்பட்டுள்ள கடுமையான முள்ளை பொறுமையுடனும், தாழ்மையுடனும் சகித்துக் காணப்படுவதும், கிறிஸ்துவின் வல்லமை விளங்கும்படி பலவீனங்களில் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவதும், யார் தேவனுடைய அன்பான நோக்கத்திற்கு தங்களுடைய இருதயத்தில் முழு இசைவுடன் காணப்படுகிறார்களோ, அவர்களை தவிர வேறு எவராலும் கூடாத காரியம் ஆகும். இருதயம், பெருமையினாலும், இலட்சியங்களினாலும், புகழ்ச்சிக்காக அல்லது ஆஸ்திக்காக அல்லது எந்த உலகப்பிரகாரமான பேராசைகளுக்கான விருப்பங்களினாலும் நிறைந்திருந்தால், உபத்திரவத்தில் சந்தோஷப்படுவது என்பது கூடாத காரியமாகும். ஆனால் மாம்சத்தின் பழைய இலட்சியங்களும், விருப்பங்களும் கீழ்ப்படுத்தப்பட்டு விசுவாசம், அன்பு, நம்பிக்கை மற்றும் பக்தி வைராக்கியம் முதலியவைகளை உயிருள்ளவைகளாகவும், கிரியை செய்கிறவைகளாகவும் வைத்திருந்தார். கண்டிப்பாக தெய்வீக கிருபை குறித்ததான உணர்வு நமக்குள் காணப்படும். பின்னர் நாம் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் களிக்கூர முடியும். ஆமென்!

-----------------------------

**--1700--**

[R4794]

# திராட்சத் தோட்டத்தின் பாடல்

**ஏசாயா 5:1-12**

“இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கு ஏற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்.” (ஏசாயா 5:1)

இங்கு தீர்க்கதரிசி, பாடல் என்று வடிவமைப்பதற்கு உவமை அல்லது கதை என்ற பெயரை சூட்டலாம். தேவன் இஸ்ரயேல் தேசத்தை தமது சொந்த திராட்சத் தோட்டத்தில் நட்டார். அவர் அதிலுள்ள கற்களைப் பொறுக்கி அல்லது இடர்பாடுகளை மாற்றிப்போட்டு, தம்முடைய விஷேமான அந்த திராட்சச் செடியில் ஐசுவரியமான வாக்குத்தத்தங்களை நட்டார். அதாவது, ஆயிரவருட அரசாட்சி குறித்தும், இஸ்ரயேலின் ஆசீர்வாதங்கள் குறித்தும், பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிப்பதைக் குறித்ததுமான வாக்குத்தத்தங்களை அவர்களிடத்தில் நட்டார். தீர்க்கதரிசனமாகிய கோபுரத்தையும், நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகளுமாகிய இந்த பரிசுத்த ஜாதிக்கென்று ஏற்படுத்தப்பட்ட சகல ஏற்பாடுகளையும், அவர்களுக்கு வேலியாக அடைத்தார். ஆகவே, இவ்வளவு சாதகமான சூழ்நிலையிலுள்ள திராட்சத் தோட்டத்திலிருந்து, அருமையான கனிகளை அவர் எதிர்பார்ப்பது நியாயமானதே ஆகும். ஆனால், விளைபலன்களோ திருப்திகரமாய் இல்லை. அவர் கொடுத்து நட்ட வாக்குத்தத்தங்களுக்கு இசைவான கனிகளாய் இராமல் அவைகள் கசப்பானதும், சிறிய அளவில் உள்ள கனிகளாகவும் இருந்தது.

இம்மாதிரியான சூழ்நிலைகள் இயேசுவின் காலம் வரை நீடித்தது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேசத்தின் மீது கஷ்டங்கள்/பிரச்சனைகள்/உபத்திரவங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், காயங்கள் எப்போதும் ஆற்றப்பட்டு தேசம் தக்கவைக்கப்பட்டது. அதின் கோபுரமும் (தீர்க்கதரிசனம்) தெய்வீக பாதுகாப்பும் வழிநடத்துதலுமாகி அதன் வேலிகளும் தக்கவைக்கப்பட்டிருந்தன. யோவான் ஸ்நானகர் தீர்க்கதரிசிகளில் கடைசியானவராய் இருந்தார். இவருடைய நாட்கள் மட்டும் மாம்சீக இஸ்ரயேலுக்கு தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட அனைத்தையும் கர்த்தர் நிறைவேற்றினார். அதன் வேலிகள் உடைக்கப்பட்டது. அது பாழாய் விடப்பட்டது. எந்த பராமரிப்பும் அதற்குக் காட்டப்படவில்லை. வெளியின் மிருகங்களாகிய புறஜாதிகள் இந்த திராட்சத் தோட்டத்தை மேய்ந்து கொள்ளையாடிப் போட்டது. மேலும் தெய்வீக நோக்கத்துடன் 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக யூத ஜனங்கள் மீது தெய்வீக ஆசீர்வாதத்தின் ஆறுதலின் உற்சாகத்தின் மற்றும் பலன் கொடுப்பதற்கு ஏதுவான ஏற்ற மழையும் பெய்யவில்லை.

## ***நேர்த்தியான பலன்***

கர்த்தர் இந்த திராட்சத் தோட்டத்திடமிருந்து எதிர்பார்த்த நியாயமான பலன் என்ன? மேலும் ஏன் அதனை அவரால் கண்டடைய முடியவில்லை? “சேனைகளின் கர்த்தருடைய திராட்சத் தோட்டம் இஸ்ரயேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்திற்குக் காத்திருந்தார், இதோ கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ முறைப்பாடு!” என்று கர்த்தர் இந்த தீர்க்கதரிசனத்திலேயே நமக்குக் கூறுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இஸ்ரயேல் ஜனங்கள் உண்மையாய் தெய்வீக பிரமாணத்தைக் கடைப்பிடித்தால், அதற்கேற்றார்போல் அவர்கள் அவருடைய தெய்வீக கிருபையை பெற்றுக்கொள்வதற்கும், அவருடைய ஜனங்களாக இருப்பதற்குமான ஆசீர்வாதமான சிலாக்கியத்தைப் பெற்றுக்

கொள்வார்கள் என்பதே இஸ்ரயேலுடனான தேவனுடைய உடன்படிக்கை ஆகும். அவர்களால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய் கைக்கொள்ள முடியாது என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். பூரணமான திராட்சப் பழங்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். ஆனால் அவர்களிடம் பெற்ற பலனைக் காட்டிலும், மேலான பலனை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி, அவர் எதிர்பார்த்தது நியாயமே. அதாவது, மாம்ச பூரணமற்ற தன்மைகள் இருப்பினும் அவர்களிடம் இருதயப் பூர்வமான பிரயாசத்தை எதிர்பார்த்தார்.

1) சர்வவல்லமை உள்ளவருக்குப் பிரதானமாக அன்பையும், இந்த அன்பு நம்முடைய ஒவ்வொரு சிந்தனையையும், வார்த்தைகளையும், கிரியையையும் ஆண்டு நடத்துகிறதுமாய் இருக்க வேண்டும். மற்றும், 2) தன்னைப்போல் பிறனையும் நேசிக்கும் சுயநலமற்ற அன்பையுமே நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கின்றது. இந்த பிரமாணத்தை, அதாவது, அதன் சாராம்சத்தையாகிலும் மாம்சத்தால் முடிந்தமட்டும் நிறைவேற்றுவதே எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மாதிரியான கனி இஸ்ரயேலிடம் 18 நூற்றாண்டுகளுக்கு முன்பு இயேசு வந்த போது இருந்திருந்தால், அவர்கள் ஆவிக்குரிய இராஜ்யத்தைப் பெற ஆயத்தமாய் இருப்பார்கள். மேலும் வாக்களிக்கப்பட்ட பிரகாரம் அது ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும். ஆனால் அவர்களுடைய ஆயத்தமில்லா நிலைமை, அவர்களுடைய ஒட்டுமொத்த அமைப்பையும் உடையச் செய்தது. அவர்களுக்கு தேவனிடத்திலும் போதுமான அன்பில்லை. உடனிருப்பவர்களிடத்திலும் போதுமான அன்பில்லாமல் போயிற்று.

இதிலிருந்து மீதமுள்ள உலகத்தைக் காட்டிலும், இஸ்ரயேல் மிகவும் கீழானவர்கள் என்று நாம் கருதிவிடக்கூடாது. அப்பொழுதும் மற்ற தேசங்கள் விசேஷமாக நடப்படவோ, விசேஷமாக வேலியடைக்கப்படவோ, விசேஷமாக தண்ணீர் பாய்ச்சப்படவோ, விசேஷமாக பாதுகாக்கப்படவோ இல்லை. எங்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ, அங்குதான் அதிகம் எதிர்பார்க்கவும் படும். எதிர்பார்த்தவைகள் அதிகம் காணப்படவில்லையெனில், அங்கிருந்து உண்மையுள்ள சிலர் வெளியே எடுக்கப்பட்ட பின்னர் திராட்சத் தோட்டமானது தற்காலிகமாக புறக்கணிக்கப்படும். மேலும் இதே திராட்சத் தோட்டமானது, மீண்டுமாக இன்னும் மிகவும் சாதகமான சூழ்நிலைகளில் மேசியாவின் மகிமையான பரலோக வல்லமையின் ஆளுகையில் சீர்ப்பொருந்தப்படுவதற்கான காலம் வருகின்றது என நாம் வேதவாக்கியங்களில் காணும்போது, நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் இன்றும் (தேசம்) ஒழுக்கமில்லாமல் இருக்கின்றது.

பின்வரும் வசனங்களில் (ஏசாயா 5) இஸ்ரயேலர்கள் ஒருவருக்கொருவர் மீதுள்ள அநுகூலங்களை தனதாக்கிக் கொள்ளும் குணலட்சணங்களைக் குறித்து குற்றச்சாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஒருவர் கையில் மகா ஐசுவரியமும், மற்றொரு கையில் மகா தரித்திரமும் மிஞ்சினது. இந்த தீர்க்கதரிசனம் மாபெரும் போதகர் நமக்கு விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிற சதுசேயரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ! என்று கூறின வார்த்தைகளை நினைப்பூட்டுகின்றது. அதாவது, நீங்கள் சில சமயம் நுட்பமான விதங்களில் ஏழைகளின் சொத்துக்களை எடுத்துக் கொள்கின்றீர்கள், ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் தகப்பனற்றவர்களுக்கும் உதவி செய்வதற்கும் சகலரிடமும் தாராளமாய் நடந்து கொள்வதற்கும் உங்களை வழிநடத்தும், உன்னைப்போல் உன் பிறனையும் நேசிப்பாயாக என்ற அன்பு உங்களிடத்தில் இல்லை என்ற அர்த்தத்தில் கூறின வார்த்தைகளை நினைப்பூட்டுகின்றது. சுயநலம் மற்றும் பேராசையின் பாவம், கர்த்தரின் ஆவி மற்றும் எல்லாருக்கும் நன்மை செய்யும் தீங்கையும் இல்லையென்பதை சுட்டிக்காட்டுகின்றது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நாட்களில் வாழ்ந்த யூதர்களில் பெரும்பாலானவர்கள் இத்தகைய சுயநலத்தினால் காணப்பட்டபடியால், சிலரைத் தவிர தீர்க்கதரிசி குறிப்பிட்டது போன்று "மீதமானவர்களைத்" தவிர வேறு எவரும் ஆவிக்குரிய

மணவாட்டி வகுப்பாராகும்படிக்கு கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படும் மனநிலையில் காணப்படவில்லை.

கர்த்தர் தாம் எவ்வாறு சுயநலமுள்ளவர்களை தண்டிப்பார் என்று சுட்டிக்காட்டியுள்ளார். இடங்கள் பாழாய் போகும், பூமியானது உழைப்புக்கான பலனைக் கொடுக்காது, இவ்விதமாக சுயநலமானது கடிந்துகொள்ளப்பட்டு, பூமிக்குரிய விஷயங்களில் தண்டனையையும், ஆவிக்குரிய சிலாக்கியங்களின் இழப்பினால் தண்டனையையும் அளிக்கும்.

## *ஆவிக்குரிய இஸ்ரயேலுக்குப் பொருத்திப் பார்த்தல்*

தேவன் மாம்சீக இஸ்ரயேலர்களை நடத்தின விஷயங்கள், தெய்வீக அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை மாத்திரம் அடையாளப்படுத்துவதோடல்லாமல், மாம்சீக இஸ்ரயேலர்கள் ஊழியம் செய்வதற்குரிய தகுதிகளையும் அடையாளப்படுத்துகின்றது. காரணம், வேதவாக்கியங்கள் மாம்சீக இஸ்ரயேலர்கள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிழலாய் இருக்கின்றனர் என்று சுட்டிக் காட்டுகின்றது. "மீதமானவர்களை" தவிர மாம்சீக இஸ்ரயேலர்கள் இயேசுவின் முதலாம் வருகையில் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருப்பதற்கு தவறினதுபோல, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் என அழைக்கப்பட்ட "கிறிஸ்தவ மண்டலமும்" மாபெரும் மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய் இருப்பதில் தவறுவார்கள். கர்த்தர் எவ்வளவு பராமரிப்புடன் சபையை நாட்டினார் என்பதையும், சபையின் ஆரம்பத்தை ஸ்தாபிப்பதற்கு அவர் இடர்பாடுகளை தூக்கிப்போட்டதையும் கவனியுங்கள். மகா மேன்மையும் அருமையுமான பரலோக ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களினால், அவர் சபையாகிய தனது திராட்சத் தோட்டத்தை வேலியடைத்ததைக் கவனியுங்கள். பிதாவின் வலதுகரம் சபையை நட்டது என்பதை கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்ட கிருபை மற்றும் சத்தியத்தின் கோபுரத்தைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களை கவனியுங்கள்.

யூதயுகத்தின் முடிவின்போது மாம்சீக இஸ்ரயேலுக்கான அறுவடைக்காலம் வந்ததுபோன்று, இந்த யுகத்தின் முடிவில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான அறுவடைக்காலம் வரும். மாம்சீக இஸ்ரயேலிடம் இருந்ததுபோன்று, "மீதமானவர்களே" இராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவர்களாய் இருப்பார்கள். பெயரளவிலான மகாபெரிய கூட்ட கிறிஸ்தவர்களோ, தகுதியற்றவர்களாய் இருப்பார்கள். ஏன்? காரணம் என்னவெனில், கர்த்தருடைய ஆவிக்கு பதிலாகவும், தாழ்மையின், பெருந்தன்மையின், அன்பின் ஆவிக்குப் பதிலாகவும், உலகத்தின் மற்றும் சுயநலத்தின் ஆவி காணப்படுவதாலேயுமே ஆகும். ஒரு சிலரே தேவனை பிரதானமாகக் கருதுகின்றனர். ஒரு சிலரிடமே தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதற்குரிய முழுமையான அர்ப்பணிப்பின் ஆவி காணப்படுகின்றது. ஒரு சிலரிடமே சகோதரருக்கான அன்பும், ஒருவருக்கொருவர் ஜீவனையே கொடுக்கும் விருப்பமும் காணப்படுகின்றது (யோவான் 15:13). ஒரு சிலரிடமே நீதியும், நேர்மையும் காணப்படுகின்றது. இன்று சுயநலமானது ஆஸ்திகளை குவித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் முடிவோ மோசமாய் காணப்படும். அதாவது, "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்." தானியேல் 12:1.

தீர்க்கதரிசி மேலும் தொடர்ந்து ஆஸ்திகளைக் குவிப்பதினால் ஐசுவரியவான்கள் மீது உண்டாகும் பாதிப்பை அதாவது சோம்பேறித்தனம், இசை, திராட்ச ரசம் மற்றும் தெய்வீக விஷயங்களைப் புறக்கணித்தல் முதலியவைகளை சுட்டிக்காட்டுகின்றார். இந்த "மீதமானவர்கள்," "தெரிந்து கொள்ளப்பட்டவர்களை" நிறைவுப்படுத்துவதற்குப் போதுமான எண்ணிக்கையில் இருப்பார்கள். மகிமையான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். பின்னர் மகா உபத்திரவக் காலத்தைத்

தொடர்ந்து பூமியின் சகல குடிகளும் நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதத்தை உணர ஆரம்பிப்பார்கள். உண்மையில் உலகத்தை தாழ்மை நிலைக்குக் கொண்டுவரவும், அதாவது, இராஜ்யத்தின் ஆசீர்வாதத்தை நேர்த்தியாய் பெற்றுக்கொள்ளும்படிக்கு மனுக்குலத்தை ஆயத்தமாக்குவதற்கு கர்த்தர் "மகா உபத்திரவ காலத்தை" பயன்படுத்துவார். ஆமென்!

---

R 4802

# சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்

*"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்."* (எபிரெயர் 12:3)

"அவரை நினைத்துக்கொள்ளுங்கள்" என்பது, தமக்கு விரோதமாகப் பாவிகளால் ஏற்பட்டதான பல்வேறு எதிர்ப்புகளையும், சோதனைகளையும் நமது கர்த்தர் எவ்வாறு சகித்தார் என்பதைக் கவனிப்பதை, மனதில் கொண்டிருப்பதை, ஆழ்ந்து சிந்திப்பதை, எளிதில் மறந்துபோகாமல் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொந்த அனுபவங்களிலும்கூடக் கர்த்தருடைய பின்னடியார்களென நமக்கு விரோதமான பாவம் மற்றும் பாவிகளுடைய எதிர்ப்புகள் சிலவற்றைச் சகித்திருக்கின்றோம்; ஆனாலும் இரத்தம் சிந்தும் அளவுக்கு நாம் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை. அவர் கடந்து சென்றதான கடும்சோதனையான அனுபவங்களுக்குள் நாம் இன்னும் கடந்து செல்லவில்லை. நாமும் நம்முடைய அயலார்போன்று பாவப்பட்டவர்களாக, அபூரண சிருஷ்டிகளாக இருக்க, அவர் "பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமில்லாதவராகவும்" இருக்கின்றார் என்பதை நாம் நினைவில்கொள்கையில், அவர் பாவிகளின் எதிர்ப்புகளைப் பொறுமையுடன் சகித்தார் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப்பார்ப்பது நலம் பயக்கின்றதாய் இருக்கும். அவருக்குக் கடுஞ்சோதனையான அனுபவங்கள் வந்திட்டபோது, அவைகள் எவர்களிடமிருந்து கடந்துவந்ததோ, அவர்களிடமிருந்து மாத்திரமே வந்ததாக அவர் கருதிடவில்லை; மாறாக பிதாவின் மேற்பார்வையின் கீழ்க் கடந்துவந்ததாக கருதினார். ஆகையால் இத்தகைய அனுபவம் அவருக்கு வர பிதா அனுமதித்திருக்கிறாரெனில், பொறுமையாய்ச் சகிப்பதன் மூலம் தம்முடைய உண்மையினை நிரூபிப்பதற்கு அவர் கடமைப்பட்டிருக்கின்றார். "பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று அவர் கூறினார் (யோவான் 18:11).

இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம் விஷயத்திலும் காணப்படுகின்றது . . . "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3). ஜீவியத்தின் அனுபவங்களில் எந்தளவுக்கு நமது கர்த்தருடைய கண்ணோட்டத்தினைக் கொண்டிருக்க முடிகின்றவர்களாக இருக்கின்றோமோ, அவ்வளவுக்கு நாம் அமைதலுடன் காணப்படுவோம். நம்மைப் பரீட்சிப்பதற்காகவோ அல்லது மற்றவர்களைப் பரீட்சிப்பதற்காகவோ, நிரூபிக்கத்தக்கதாகவோ, நம்மால் புரிந்துகொள்ள முடியாத வழிகளில் பிதா கடுஞ்சோதனையான அனுபவங்களை அனுமதிப்பாரெனில், அவர் சித்தம் நடந்தேறுவதில் நாம் களிகூருகிறவர்களாகவே இருக்க வேண்டும். இக்கருத்தினைக் கவிஞன் பின்வரும் வரிகளில் அருமையாய் வெளிப்படுத்தியுள்ளார்...

"என் காலங்கள் உம்முடைய கரங்களில் உள்ளதுவே,
என் தேவனே அங்கு இருக்கவே யான் விரும்புகின்றேனே."

நாம் இறுதிவரை உண்மையாய்ச் சகித்து நின்றோமானால், பலன் நம்முடையதாய் இருக்கும். நாம் நம்முடைய நேர்மையினை நிரூபித்தவர்களாகி மற்றும் தேவன் நமது காரியங்களை மேற்பார்வை இடுகின்றார் என்றும், உத்தமமாய் நடப்பவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் என்றுமுள்ள நம்முடைய விசுவாசத்தினைக் காத்துக்கொள்வோமானால், நாம் ஒரு நாளில் "நல்லது உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று அவர் சொல்வதைக் கேட்போம்.

நமது கர்த்தர் சரீர ரீதியான எதிர்ப்புகளைச் சகித்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் "Contradiction" எனும் நம்முடைய ஆங்கில வார்த்தையின் சரியான அர்த்தம் அவரது வார்த்தைகள், எதிர்த்துப் பேசப்பட்டதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தருடைய விஷயத்தைப் பார்க்கையில், ஜனங்கள் சரீர ரீதியாக எதிர்க்காமல், அவரது வார்த்தைகளை, அவரது போதனைகளை எதிர்த்தார்கள். அவரைச் சரீர ரீதியாகத் துன்புறுத்தி, மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் காரியமானது பிரதான ஆசாரியனிடத்திலும் மற்றும்

ஆலோசனைச் சங்கத்தாரிடத்திலும் மற்றும் போர்ச் சேவகர்களிடத்திலும் விடப்பட்டது மற்றும் ஒருவேளை அவர் விரும்பி இருந்தாரானால், அவர் அவர்களை எதிர்த்திருந்திருக்க முடியும்.

## அவர் வையப்படும்போது பதில் வையாமலும் இருந்தார்

ஆகையால் அப்போஸ்தலன் கர்த்தருடைய வார்த்தைகளுக்கான எதிர்ப்பைக்குறித்துக் குறிப்பிடுவதாகவே தெரிகின்றது. இது பரிசுத்த பேதுருவினாலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; "அவர் வையப்படும்போது பதில் வையாமலும் இருந்தார்" என்று பரிசுத்த பேதுரு தெரிவித்தார் (1 பேதுரு 2:23). ஆகையால் 3½ வருட கிறிஸ்துவினுடைய ஊழியத்தினை நாம் கவனித்துப் பார்க்கையில், அவரது உபதேசமானது எதிர்க்கப்பட்டதையும், அவர் தூஷிக்கப்பட்டதையும் நாம் காண்கின்றோம். அவர் பிசாசு பிடித்தவர் என்றும், அவர் பிசாசுகளின் அதிபதியினாலே அற்புதங்களைப் பண்ணுகிறார் என்றும், அவர் தேவதூஷணம் பண்ணுகிறவர் என்றும் யூதர்கள் கூறினார்கள். இவர்கள் சார்பிலான இந்த எதிர்ப்புகள் மற்றும் மறுப்புகளுக்கு, அவர் சார்பிலிருந்து அவர்களைப் பற்றியதான மிகவும் நியாயமான, உண்மையுள்ள வார்த்தைகளை அவரால் சொல்லியிருந்திருக்க முடியும். அவர்கள் அவரைச் சொன்னதைப்போன்று, அவராலும் அவர்களுக்கு நன்கு பதில்கொடுத்திருந்திருக்க முடியும். பிசாசு அவர்களுக்குள்தான் கிரியைச் செய்துகொண்டிருக்கின்றான் என்பது போன்றவைகளை அவரால் அவர்களுக்குச் சொல்லியிருந்திருக்க முடியும். அவர்கள் சொன்னவைகளுக்கு அதிகமாகச் சொல்லுமளவுக்கு அவர் வார்த்தைகளுக்குரிய பூரண வல்லமையினைக் கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைகளைக்கொண்டு அவரைச் சிக்கவைத்திட அவர்கள் எண்ணினபோது, அவர்களது வார்த்தையினாலே அவர்களைச் சிக்கவைத்தார். ஆனால் அவர் பதிலுக்குப் பதில் வையவில்லை. அவர் தீமைக்குத் தீமைச் செய்யவில்லை, பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறவில்லை. இதுவே சரியான வழிமுறையாகும் என்று அப்போஸ்தலன் காண்பிக்கின்றார்.

ஆனால் அன்றாட ஜீவியத்தினுடைய காரியங்களில், ஜனங்கள் நமக்கு எதிராய்ப் பலவித தீமையான வார்த்தைகளைச் சொல்லுகையில், நம்மை வையும்போதும் பதிலுக்குத் தீமையான எதையாகிலும் சொல்லிடுவதற்கு விழுந்துபோன மாம்சம் சிந்திப்பது, அதன் இயல்பாய் இருக்கின்றது. இப்படியாக இவ்விஷயங்கள் நம்மீதான பரீட்சைகளாகுகின்றது. நாம் இத்தகைய ஒரு சிந்தைக்கு அடிப்பணிவோமானால், நாம் கர்த்தருடைய நடக்கையினைப் பின்பற்றுகிறவர்களாக இராமல், சத்துருவினுடைய நடக்கையினைப் பின்பற்றுகிறவர்களாகவே இருப்போம். எதிராளியானவனால் தாக்கப்படுகையில் - அவனது பிரதிநிதிகள் யாராக இருப்பினும், அவனது ஆயுதங்கள் என்னவாக இருப்பினும் - "பாவிகளால் தமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக்கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போக மாட்டீர்கள்" (எபிரெயர் 12:3; திருவிவிலியம்). நாம் உண்மையாய்ச் சகிக்கும்பட்சத்தில், எதிராளியானவன் கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நற்பெயருக்குப் பாதகம் பண்ணிட முடியாது, மாறாக நற்பெயரைப் பெருகப்பண்ணிட மாத்திரமே முடியும் மற்றும் தேவன் தம்முடைய நோக்கங்களுக்காக நன்மைக்கேதுவாய் - அதுவும் நன்மைக்கேதுவாய் என்பது கோதுமையினின்று பதரையும், களைகளையும் புடைத்தெடுப்பதாய் இருப்பினும், அப்படி நன்மைக்கேதுவாய் மாற்றிப்போட முடியாத, எந்தவொரு புறத்தோற்றமான பாதகத்தையும் எதிராளியானவனால் செய்திட முடியாது.

சொல்லப்படும் தீமையான விஷயம் உண்மையாய் இருப்பினும், தீமைபேசுதல், புறங்கூறுதல், அவதூறு என்பவைகள் தேவனுடைய அன்பின் ஆவிக்கு முற்றிலும் முரணானது என்ற விதத்தில் தேவனுடைய ஜனங்களுக்குக் கண்டிப்புடன் தடைப்பண்ணப்பட்டுள்ளது. அவதூறான எதையும் தடைப்பண்ணும் வண்ணமாக, மனக்குறையைச் சரிப்படுத்துவதற்கான ஒரே வழியினை வேத வாக்கியங்களானது மிகவும் கவனமாய் முன்வைத்துள்ளது (மத்தேயு 18:15-17).

## கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணுபவர்களே பெரும்பாலும் மோசமான அவதூறுகாரர்களாய் இருக்கின்றனர்

மிகவும் வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவர்களில்கூட அநேகர் இந்தத் தெய்வீகக் கட்டளைக் குறித்து முற்றிலுமாய் அறியாமையில் காணப்படுவதாகத் தெரிகின்றது மற்றும் இதன் காரணமாக கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணியுள்ளவர்களே பெரும்பாலும்

மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் அவதூறுகாரர்களாய் இருக்கின்றனர். இது நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான சில விசேஷித்த, குறிப்பிட்டக் கட்டளைகளில் ஒன்றாயிருக்கின்றது; மற்றும் இக்கட்டளையினை "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" என்ற அவரது வார்த்தைகளுடன் தொடர்புபடுத்திப்பார்க்கையில், நமது கர்த்தருடைய கட்டளையாய்க் காணப்படும் இதனை, தொடர்ந்து மீறிக்கொண்டிருப்பது என்பது, அநேகர் சிநேகிதராய் இருக்கும் நிலையில் - சீஷத்துவத்தில் அவ்வளவுக்கு வளரவில்லை என்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

ஒருவேளை கைக்கொள்ளப்படும் பட்சத்தில் பிறரைக்குறித்துப் பேசுதலை, "புறங்கூறுதலை," "தீமை பேசுதலை" தவிர்க்கக்கூடியதான இக்கட்டளைக்குறித்து நாம் கவனமாய்ப் பார்க்கலாம் (மத்தேயு 18:15-17). சம்பந்தப்பட்டவர்கள் இடையில் மாத்திரம் உரையாடல் எனும் இக்கட்டளையின் முதல் விதிமுறையானது, தான் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதும், குற்றஞ்சாட்டுபவர் சார்பிலான வெளிப்படையான பேச்சினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது குற்றஞ்சாட்டப்படுபவரைக் குறித்து எந்தத் தீமையும் தான் சிந்திக்காததையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. தன்தன் நடக்கை சரியானது என்று இருவருமே எண்ணிக்கொண்டு, விஷயத்தினைக் குறித்துக் கலந்துரையாடி, ஒரே கண்ணோட்டத்திற்குத் தாங்கள் வரமுடியுமா என்று பார்க்கத்தக்கதாக, "சகோதரர்களென" ஒன்றுகூடுகின்றனர். அவர்கள் ஒருமனப்பாட்டிற்குள் வந்தால், அப்போது அனைத்தும் சரியாகிவிடும்; காரியத்திற்குத் தீர்வுண்டாகும்; சமாதானம் உண்டாகும்; அச்சுறுத்தின பிரிவினை விலகிடும் மற்றும் இதைக்காட்டிலும் ஞானமானது எதுவுமிராது. பெரும்பான்மையான விவகாரங்களில், சம்பந்தப்பட்டவர்கள் இடையிலான மனம்விட்டு பேசுதல், வெளிப்படையான உரையாடல் என்பது இணக்கத்தினைக் கொண்டுவந்துவிடும். ஆனால் [சம்பந்தப்பட்டவர்கள்] இருவருமே ஒரேமாதிரி யதார்த்தமாய்க் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஆவியினால் அடக்கி ஆளப்பட்டிருக்க வேண்டும்.

மாம்சம் மற்றும் பிசாசினுடைய ஒரு கிரியையினின்று, இன்னொரு கீழ்த்தரமான கிரியையினிடத்திற்கு வழிநடத்துகின்றதும் மற்றும் சத்தியத்திலும், அதன் அன்பின் ஆவியிலும் வளர்வதை நிறுத்திவிடுகின்றதுமான அவதூறு பேசுதல் எனும் சதி செய்கிற பாவத்தினின்று இப்படியாய் நமது கர்த்தர் தம்முடைய உண்மையான சீஷர்களைக் காத்துக்கொண்டார். அவதூறான பேச்சுகளைக் கேட்பதினால் அவதூறு பேசுகிறவர்களை அவர்களது தீயச் செய்கைக்கு ஊக்குவிக்கிறவர்கள், அவர்களது தீயச்செய்கையில் பங்காளிகளாக இருக்கின்றார்கள் என்பதையும், ஆண்டவருடைய கட்டளைகளை மீறின குற்றத்தில் கூட்டாளிகளாக இருக்கின்றார்கள் என்பதையும் நாம் கவனிப்போமாக. அவதூறு பேசுகிறவர்களுக்குச் செவிக்கொடுக்க தேவனுடைய உண்மையான ஜனங்கள் மறுத்திட வேண்டும் மற்றும் இத்தவறைச் செய்பவருக்குக் கர்த்தருடைய வார்த்தையையும், அங்கீகரிக்கப்பட்ட ஒரே வழிமுறையையும் சுட்டிக்காண்பித்திட வேண்டும். நாம் தேவனைவிட ஞானிகளா? நம்முடைய சொந்த கணிப்புகளை நம்மால் நம்ப முடியாது என்பதையும், மேய்ப்பனுடைய சத்தத்தை முழுமையாய்ப் பின்பற்றிடும்போதே நாம் பாதுகாப்பாய்க் காணப்படுவோம் என்பதையும் அனுபவமானது கற்றுத் தருகின்றது.

## பிறரைப் பற்றின பேச்சையும் மற்றும் அவதூறு பேச்சையும் செவிகொடுத்துக் கேட்டிடுவதற்கு நாம் மறுத்திட வேண்டும்

எந்த ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ மற்றவர்களைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டு வந்தால், உடனடியாக அவரை அன்புடனும், அதேசமயம் உறுதியுடனும் தடுத்துவிடுங்கள். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11). சபையில் மிகுந்த பிரச்சனையை உண்டாக்குகின்றதான இந்த மீறுதலில் - ஆண்டவருடைய அக்கட்டளையினை மீறுதலில் எவ்விதமாய்ப் பங்குகொள்வதற்கும் மறுப்புத் தெரிவித்துவிடுங்கள். ஒருவேளை அச்சகோதரனோ அல்லது சகோதரியோ, ஆவிக்குரிய காரியங்களில் "குழந்தையாய்" மாத்திரம் இருப்பார்களானால், இவ்விஷயம் தொடர்பான கர்த்தருடைய கட்டளையினை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவாருங்கள் (மத்தேயு 18:15; 1 தீமோத்தேயு 5:19). ஒருவேளை உரையாடலானது நேரடியாய் உங்களிடத்தில் இல்லாமல், மாறாகப் பேசப்படும் இடத்தில் நீங்கள் காணப்பட மாத்திரம் செய்கின்றீர்களானால், அவ்விடத்திலிருந்து ஒதுங்கிவிடுவதன் மூலம் உங்களது மறுப்பினை உடனடியாக வெளிப்படுத்துங்கள்.

ஒருவேளை இது விஷயம் குறித்த கர்த்தருடைய கட்டளையினைக் கவனத்திற்குக் கொண்டு வந்த பிற்பாடும், அவதூறு பேசுகிறவர் "தீமைபேசுதலிலும்," "புறங்கூறுதலிலும்" தொடர்ந்து காணப்பட்டு, தனது "பொல்லாத சம்சயங்களை/ஊகங்களைச் சொல்லிக்கொண்டிருப்பாரானால், நீங்கள் கடந்துபோகையில் மிகவும் தெளிவாய்/கடுமையாய்க் கண்டித்துக்கூற வேண்டியதாவது: "என்னால் நீங்கள் பேசுவதைக் கேட்க முடியாது; நான் கேட்கவும் கூடாது; காரணம் ஒருவேளை நான் செவிக்கொடுத்துக் கேட்பேனானால், கர்த்தருடைய கட்டளையை மீறின விஷயத்தில், நானும் உங்களைப் போன்று குற்றவாளி (criminal) ஆகிவிடுவேன். ஒருவேளை நீங்கள் கூறும் கதையை நான் கேட்க வேண்டியதாயினும், என்னால் அதை நம்ப முடியாது; ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையை மதியாமலும், மனஸ்தாபத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுவதற்குரிய அவருடைய திட்டத்தைப் பின்பற்றாமலும் இருக்கும் ஒரு கிறிஸ்தவன், கர்த்தருடைய ஆவியை மிகவும் குறைவாய் வெளிப்படுத்துகிறவனாய் இருப்பதினால், அவனது வார்த்தைகள் நம்பத்தகுந்தவையாக இருக்காது. கர்த்தருடைய வார்த்தைகளைத் தட்டிக்கழிக்கிறவனும், திரித்துக்கூறுகிறவனும், சக சீஷர்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் தவறாய் எடுத்துக் காட்டுவதற்கும் மற்றும் திரித்துக் கூறிடுவதற்கும் தயங்கமாட்டான்." பின்னர் அத்தகையவன் தனது தவறுகளை ஒப்புக்கொண்டு, அதைச் சீர்த்திருத்தலுக்கான உறுதிகளுடன் உறுதிப்படுத்துவது வரையிலும், அவனிடமான ஐக்கியத்தினின்று ஒதுங்கிக்கொள்ளுங்கள். ஒருவேளை அத்தகைய சம்பாஷணைக்கு நீங்கள் எவ்வளவேனும் செவிக்கொடுத்திருப்பீர்களானால் அல்லது அக்காரியத்திற்கோ, பிறரைப் பற்றிப் பேசினவருக்கோ, அவதூறு பேசினவருக்கோ எவ்வளவேனும் ஆதரவு கொடுத்திருப்பீர்களானால், நீங்கள் அந்தப் பாவத்திலும் மற்றும் அதன் சகல பின்விளைவுகளிலும் பங்காளிகளாய் இருப்பீர்கள்; மேலும் இதன் காரணமாக "கசப்பான வேர்" முளைத்திருக்குமானால், அதனால் அசுசிபடுகிறவர்களில், நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் (எபிரெயர் 12:15).

சுத்தமாயிருங்கள்: தேவன் விஷயத்திலும், மனுஷர் விஷயத்திலும் குற்ற மனசாட்சி இல்லாமல் இருக்கும் நிலையினைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். இதனை இருதயத்திலிருந்து துவங்குங்கள்; எந்த விதத்திலும் தீமையாய்க் காணப்படும் எந்தச் சிந்தனைகளையும் குடிக்கொள்ள வைக்காதீர்கள். இப்படியாய்க் காணப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு, கிறிஸ்து இயேசுவை உங்கள் மாதிரியாக உங்கள் மனதின் முன் அதிகமதிகமாய் நிறுத்திக்கொள்ளுங்கள். தீமையானது வெளியிலிருந்தோ அல்லது உள்ளிலிருந்தோ உங்களுக்குள் தலையிடும்போது, ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையினை வாக்களித்துள்ளவரிடத்தில், உங்கள் இருதயத்தினை ஜெபத்தில் உயர்த்திடுங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" எனும் ஜெபத்தினை எப்போதும் ஏறெடுத்துக்கொண்டிருங்கள் (சங்கீதம் 19:14).

## தெய்வீகப் பிரமாணத்தினுடைய கொள்கைகளைப் பற்றின உணர்ந்துகொள்ளுதலை வளர்த்திக்கொள்வோமாக

வேதவாக்கியங்களின் பல்வேறு விசேஷித்தக் கட்டளைகளைப் பின்பற்றிட நாடுகையில், தெய்வீகப் பிரமாணங்களில் அடங்கியிருக்கின்றதான கொள்கைகளைப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் அவற்றிற்கு இசைவாய் வந்திடவும் அதிகமதிகமாய் நாடிடுவோமாக. கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பாகக் குறிப்பிடப்படாத வகையிலுள்ள, நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளிலுள்ள சரி மற்றும் தவறினைப் பகுத்துணர இந்தக் கொள்கைகள் நமக்கு உதவிடும். உண்மைதான் நாம் தெய்வீகப் பிரமாணத்தினுடைய கொள்கைகளைப் புரிந்துகொள்ளும் மற்றும் அவற்றிற்கு இசைவாய் வரும் நிலைக்கு வருகையில், அதற்கேற்ப நாம் திவ்விய வார்த்தைகளினுடைய ஆவியினைப் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். இது விஷயம் குறித்த சங்கீதக்காரனின் பின்வரும் சாட்சியினைக் கவனியுங்கள்: "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான்

கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன். நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன். உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்கீதம் 119:97-105).

அன்பிற்கு எதிரானதென - கிறிஸ்துவின் மனநிலைக்கு அல்லது ஆவிக்கு எதிரானதென -இந்தச் சண்டையிடும் மற்றும் குற்றம் கண்டுபிடிக்கும் மனநிலையினைத் தவிர்த்திடுவோமாக. உலகத்தையும், மாம்சத்தையும் மற்றும் பிசாசையும் மற்றும் இவைகளின் பல்வேறு கண்ணிகளையும் ஜெயங்கொள்வதற்குக் கொஞ்சம் போராடுவதற்குரிய தைரியம் தேவைப்படுகின்றது. இந்தப் போராடும் தன்மையானது, முதலாவது நமக்குள்ளும், இரண்டாவதாக மற்றவர்களுக்குள்ளும் காணப்படும் பாவத்திற்கு எதிராக முறையாயும், ஞானமாயும் பிரயோகிக்கப்படுமாயின், கர்த்தருக்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் மற்றும் சாத்தானுக்கு எதிராகவும் மற்றும் அவனது சகல இருளின் அதிகாரங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுமாயின், அது நமக்கும், ஆண்டவருடைய காரணங்களுக்கும் விலையேறப்பெற்ற உதவிகரமாகக் காணப்படும். இது வேதவாக்கியங்களில், நல்லதொரு போராட்டம் போராடுதலென்று அழைக்கப்பட்டுள்ளது மற்றும் நாம் அனைவரும் நீதிக்கும், சத்தியத்திற்குமான இந்த யுத்தத்தில் வீரமுடைய போர்ச் சேவகர்களாகக் காணப்பட்டு, நம்முடைய அதிபதிக்குரிய கனத்தினையும், அவரது ஜனங்களுடைய சுயாதீனங்களையும் அன்பாய்க் காத்துக் கொள்ள வேண்டும்.

## தீமையின் அதிகாரங்களானது, எதிர்த்துப் போராடும் தன்மையினைப் பிரதான பண்பாக்குகின்றன

ஆனாலும் எதிர்த்துப்போராடும் தன்மையானது நல்லவிதமாய் இப்படிப் பயன்படுத்தப்படுகிற காரியமானது, இவ்வுலகத்தின் அதிபதிக்குப் பிரியமாய் இருப்பதில்லை; இவன் தன்னால் நேரடியாய்ப் பயன்படுத்த முடியாததைத் தவறான விதத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிடுவான். இதன் விளைவாக, அவன் சிலரிடத்தில் எதிர்த்துப்போராடும் தன்மையினை, பிரதான பண்பாக்கிட முற்படுகின்றான். அனைத்தையும் மற்றும் அனைவரோடும் இவர்கள் எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்குவிக்கின்றான்; இருளின் அதிகாரங்களைப் பார்க்கிலும் சகோதரரையும், பெயர்ச்சபை மனுஷர்களைக் குருடாக்கி - அவர்களை இப்படி மாற்றிப் போட்டதான தப்பறைகள் மற்றும் அறியாமையைப் பார்க்கிலும், பெயர்ச் சபை மனுஷர்களையும் அதிகம் எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்குவிக்கின்றான். உண்மையில் நம்மைத் தேவனோடே போர்ச்செய்ய" வைப்பதே அவனது விருப்பமாய் இருக்கின்றது.

இவ்விஷயத்தில் நாம் கவனமாய் இருப்போமாக. மற்றவர்கள் முன்பு நாம் இடறலின் கற்களைப் போட்டுவிடாமல் இருக்கத்தக்கதாக, முதலாவது நாம் நம்மைப் பகுத்துணருவோமாக; அற்ப காரியங்களிலிருந்து மலைகளை உண்டுபண்ணிடுவதற்கு நாடுகின்றதும் மற்றும் முக்கியத்துவமற்ற விஷயங்களில் எல்லாம் நம்மைக் குற்றம் காணுகிறவர்களாகவும் மற்றும் எதிர்த்துப் போராடுகிறவர்களாகவும் மாற்றுகின்றதுமான நம்முடைய சொந்த இருதயங்களில் உள்ள தவறான ஆவிக்கு எதிராய் நாம் போராடுவோமாக. "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன்" மகாபெரியவனாய் இருக்கின்றான் (நீதிமொழிகள் 16:32). சுயமகிமை எனும் உள்நோக்கத்திற்காக இல்லாமல், சத்தியத்திற்கான அன்பின் நிமித்தமாக, கர்த்தருக்கான, அவரது ஜனங்களுக்கான - சகோதரருக்கான அன்பின் நிமித்தமாக, சத்தியத்திற்கான நம்முடைய போராடுதல்கள் காணப்படத்தக்கதாக, நம்மை நாம் காத்துக்கொள்வோமாக. ஒருவேளை அன்புதான் இயக்கும் ஆவியாக அல்லது உள்நோக்கமாக இருக்குமானால், அது சக ஊழியர்கள் யாவரிடத்திலுமான அன்புடன்கூடிய, பொறுமையுடன்கூடிய, சாந்தத்துடன்கூடிய, தாழ்மையுடன்கூடிய நடக்கையில் வெளிப்படும். நாம் "யாவரிடத்திலும் சாந்தத்துடன்" காணப்படுவோமாக. ஜீவனும், வல்லமையுள்ளதுமான தேவனுடைய வார்த்தையாகிய, ஆவியின் பட்டயமானது, வெட்டுதல் யாவற்றையும் செய்வதாக.

துர்க்குணம், பொறாமை, பகைமை, வாக்குவாதத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ள இருதயத்தினுடைய நிலைமைகள், எண்ணங்கள்,

உணர்வுகள் யாவற்றையும் குறித்து, எச்சரிக்கையாய் இருப்போமாக. இவைகளுக்கு ஒரு கணம்கூட உங்கள் இருதயத்தில் எந்த இடத்தையும் கொடுக்காதீர்கள்; ஏனெனில் அவை மற்றவர்களுக்குப் பாதகம் பண்ணிட உங்களை வழிநடத்திடுவதோடல்லாமல், உங்களுக்கும் மிகுந்த பாதகத்தினை நிச்சயமாய் உண்டுபண்ணிடும். தேவனிடத்திலும், அவரது சகல சிருஷ்டிகளிடத்திலும் அன்பினால் நிரம்பின நிலையில் உங்களது இருதயங்களை, உங்களது சித்தங்களை, உங்களது நோக்கங்களை மற்றும் விருப்பங்களைக் காத்துக்கொள்ளுங்கள் - தேவனிடத்தில் மிகவும் ஊக்கமாய் அன்புகொண்டிருங்கள் மற்றும் இதற்கேற்ப அவருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள் மற்றும் அவர் வழிகாட்டும் வழியில் நடப்பவர்கள் யாவரிடத்திலும் அன்புகொண்டிருங்கள்.

## மனசாட்சியினை மாத்திரமே நம்பிவிடாதீர்கள்

மனசாட்சியே போதுமான வழிகாட்டியாக இருக்குமானால், உங்களுக்கு வேதவாக்கியங்களினுடைய அவசியம் இராது. பெரும்பான்மையானவர்களுக்கு மனசாட்சி என்ற ஒன்றே இருப்பதில்லை; ஏனெனில் அவர்கள் மனசாட்சிக்கு வழிக்காட்டும்படிக்கு அருளப்பட்டுள்ளதான தேவனுடைய பிரமாணங்களுக்கும், கொள்கைகளுக்கும் குருடர்களாய் இருக்கின்றனர்; இவர்களைவிட மோசமானவர்கள் 1 தீமோத்தேயு 4:1-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். ஆகையால் கர்த்தருடைய வார்த்தைக்குக் கவனமாய்ச் செவிக்கொடுப்பதும், அதன் வெளிச்சத்திற்கு ஜாக்கிரதையாய் நடப்பதும் கண்டிப்பாய் அவசியமாய் இருக்கின்றது.

நமக்கு எதிராய் மிகவும் அதிகமாய்ப் பேசப்பட்டுவிட்டது, ஆகையால் ஓட்டத்தை விட்டுவிடுவோம் என்று எண்ணத்தக்கதாக நம்முடைய மனதில் சோர்ந்தோ அல்லது தளர்ந்தோ போய்விடக் கூடாது. மாறாக நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் அனைத்துக் காரியங்களையும் நடப்பித்துக் கொண்டிருக்கின்றதான பிதாவுக்குத் தெரிந்தே, எதுவும் நம்மீது கடந்துவருமே ஒழிய, மற்றப்படி வேறெதுவும் வராது என்று நாமும் நமது கர்த்தர் போன்று உறுதியடைந்துக் காணப்பட வேண்டும். இப்படியாகத்தான் நமது கர்த்தர், அவருக்கான உயர்த்தப்படுதலுக்கு ஆயத்தமாக்கப்பட்டார். ஆகையால் நமக்கான பல்வேறு அனுபவங்களினால் நாம் நன்றாய்ப் பயிற்றுவிக்கப்பட்டால் மற்றும் நமக்கு வழிகாட்டத்தக்கதாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான கட்டளைகளை நாம் முடிந்தமட்டும் பின்பற்றினோமானால், நமது கர்த்தருக்குக் காணப்பட்டதுபோல, நமக்கும் நீதிக்கு எதிரான எதிர்ப்புகளும், அவதூறு பேச்சுகளும், வைதல்களும் ஆசீர்வாதங்களைக் கொணர்கிறதாய் இருக்கும்.

ஆனால் எப்படிக் கர்த்தர் எதிர்ப்புகளை உண்மையாய்ச் சகித்து அனுபவித்தார் என்பதைக் கவனிக்கத் தவறினபடியால், எத்தனை பேர் தளர்ந்துபோய், பரிசினை இழந்துபோவதற்குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர்! இவர்கள், பரிபூரணராய் இருந்த கர்த்தர் நீதியின் நிமித்தம் எல்லா விதத்திலும் அநியாயமாய்ப் பாடுபட்டார் என்றும், தங்கள் நடக்கைகளானது பூரணமற்றது என்றும் கவனிப்பார்களானால், இவர்கள் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்பார்கள்; "இயேசு கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகனெனத் தீங்கநுபவிப்பதற்கும்" மற்றும் போராடுவதற்கும் கற்றுக் கொள்வார்கள்; "விசுவாசத்தில் நல்ல போராட்டத்தினைத் தொடர்ந்து போராடுவார்கள்." "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் (சபையைப்போல்) சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபிரெயர் 4:15).

---

[R4809]

# "சரீரத்தை ஒடுக்குதல்/அடக்குதல்"

"ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன்"
(காற்றைக் குத்துபவரைப் போல குத்துச் சண்டையிட மாட்டேன் - திருவிவிலியம்)
(1 கொரிந்தியர் 9:26)

பரிசு என்ன என்பதைக் குறித்த தெளிவான அறிவை அப்போஸ்தலனாகிய பவுல் பெற்றிருந்தார். அதைக்குறித்து அவர் நிச்சயமற்றவராகக் காணப்படவில்லை. இதுவாக இருக்குமோ அல்லது அதுவாக இருக்குமோ என்ற கேள்விகளுடன் அவர் தெளிவற்றவராக இல்லை. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரம அழைப்பிலேயே" நாம் அவரோடுகூட சுதந்தரர்களாக இருக்கப்போகிறோம் என்றும், நாம் அவரோடுகூட பாடுபட்டோமாகில், அவரோடுகூட மகிமையில் காணப்படுவோம் என்றும், பரிசுத்தவானாகிய பவுல் அறிந்திருந்தார். இவ்வோட்டத்திற்கான நிபந்தனைகள் குறித்தும் அப்போஸ்தலர் அறிந்திருந்தார். அது மரணம் வரையிலான ஓட்டம் என்றும், தான் ஒருவேளை தன்னுடைய ஜீவனை இரட்சிக்க விரும்பினால், தான் அதை இழப்பேன் என்றும் அறிந்திருந்தார். இன்னுமாக, அப்போஸ்தலர் தன்னுடைய சொந்த தீர்மானத்தைக் குறித்தும் நிச்சயமற்றவராகக் காணப்படவுமில்லை. தான் இவ்வோட்டத்தில் பிரவேசித்துள்ளேன் என்பதை அவர் உறுதியுடன் அறிந்திருந்தார். "நான் கொஞ்ச காலங்கள் கழிந்த பிற்பாடு இந்த ஓட்டத்தில் ஓடலாம் என நினைக்கின்றேன்" என்று சொல்லிக்கொள்கிறவர்களில் அப்போஸ்தலர் பவுல் ஒருவராக இல்லை. பவுல் கர்த்தருடன் மரணம் வரையிலான தன்னுடைய பலியின் உடன்படிக்கையைப் பண்ணினார்.

இன்னுமாக, பரிசைப் பெற்றுக்கொள்வதற்கான தனக்குரிய வாய்ப்பைக் குறித்தும், அவர் நிச்சயமற்றவராகக் காணப்படவில்லை. தேவனுக்குப் பிரியமான காரியங்களுக்கு இசைவாகவே காரியங்களைச் செய்வதும், அதற்கான விருப்பமும் தனக்குள்ளாக இருக்கின்றது என்றும் பவுல் அறிந்திருந்தார். இன்னுமாக, தன்னால் செய்யவே முடியாத எதுவும் இவ்வோட்டத்தில் தன்னிடமிருந்து எதிர்பார்க்கப்படவில்லை என்றும் அறிந்திருந்தார். மேலும், இந்த ஓட்டத்தில் தேவையான சமயங்களில் எல்லாம் சகாயம் அளிக்கும் கிருபை அருளப்பட்டிருக்கின்றது எனவும், இந்த உதவியும், கிருபையும் கர்த்தரிடத்திலிருந்து வருகின்றது எனவும் அப்போஸ்தலர் அறிந்திருந்தார். ஆகவேதான், இந்த ஓட்டத்தில் ஓடுபவர்களுக்கு ஆரம்பம் முதல் முடிவு வரையிலும் எவ்விதமான நிச்சயமற்ற தன்மைகளும் இருக்கவில்லை என்ற விதத்திலேயே அப்போஸ்தலரின் வார்த்தைகள் காணப்படுகின்றது.

இவ்விதமாகவே, மாபெரும் மீட்பருடைய வழி நடத்தும் கண்களின் கீழ் காணப்படும் அனைவருக்கும் இருக்கும். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவோமாக. "இவ்வாறு செய்தால் நீங்கள் ஒருபோதும் தடுமாற மாட்டீர்கள். அப்பொழுது நம் ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் என்றும் நிலைக்கும் ஆட்சியில் பங்கேற்கும் உரிமை உங்களுக்கு நிறைவாக அருளப்படும்" (2 பேதுரு 1:10, 11 - திருவிவிலியம்).

## "என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"

மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற அப்போஸ்தலர் பவுல், தன்னுடைய விஷயத்தில் ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, தன் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவதாக நமக்குத் தெரிவிக்கின்றார் (1 கொரிந்தியர் 9:27). வேறொரு மொழிபெயர்ப்பில், இவ்வசனம், "நான் என் சரீரத்தை அச்சுறுத்துகின்றேன்" "நான் என் சரீரத்தைக் குட்டுகின்றேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டும் உள்ளது. அதாவது, "நான் என் சரீரத்தின் மீது சில கட்டுப்பாட்டு முறைகளை

கையாளுகின்றேன் என்ற விதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (Diaglott, Darby, BBE, ASV மொழியாக்கங்கள்).

சரீரம், ஆரம்பத்தில் மாம்சீக மனிதனுக்கு மாம்சீக சித்தத்திற்கு உரியதாய் இருந்தது. ஆனால், பழைய சித்தமானது, புதிய சித்தத்துக்கு இடம் விட்டுக்கொடுத்து விலகினபோது, சரீரத்திற்கு, புதிய சித்தம் அதிகாரியானது. இந்த புதிய சித்தத்திற்குப் பழைய சரீரத்தினால் சரியாக ஊழியம் புரிய முடியாது. ஏனெனில், புதிய சித்தம், பூரணமானதாகவும், பழைய சரீரம், பூரணமற்றதாகவும் காணப்படுகின்றது. புதிய மனம், தேவனுடைய மனம், கிறிஸ்துவின் மனமானது, அழியும் சரீரத்தை தன்னுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டுவருகையில் கொஞ்சம் சிரமமாகவே காணப்படும். புதிய மனதிற்கு பழைய சரீரம் பொருத்தமானதல்ல. பழைய சரீரத்திற்கும் புதிய மனம் பொருத்தமானதல்ல. ஆகவே, சில விஷயங்களில் பழைய சரீரம் அவமானப்படுத்தப்படுவதாக இருந்தாலும், பழைய சரீரத்தின் உரிமைகளும், பழைய சரீரத்தின் பாசாங்கான (தேவையே இல்லாத) தேவைகளும் புறக்கணிக்கப்படுவதாக இருந்தாலும், புதிய சித்தமானது/மனமானது தெய்வீக சித்தத்திற்கு அதன் உண்மையையும் கர்த்தருக்கு அதன் கீழ்ப்படிதலையும் காண்பிப்பது அதற்கே உரிய (புதிய மனதிற்குரிய) கடமையாகும்.

பழைய சரீரத்தை அச்சுறுத்துவதும், அழிப்பதுமாத்திரம் நாம் அனைவரும் செய்ய வேண்டிய காரியமாயிராமல், இன்னுமாக, நாம் பழைய சரீரத்தைக் கீழ்ப்படுத்தவும் வேண்டும். நாம் அதனை புதிய சிருஷ்டிக்கு ஊழியம் புரியவைக்க வேண்டும் "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11). நாம் கர்த்தரை தியானிக்கையில் நம்மிடத்தில் அதிகமதிகமாய் கடந்துவரும் பரிசுத்த ஆவியானது, அவருடைய சித்தத்திற்கு ஒப்பாக நம்முடைய ஜீவியங்கள் காணப்படுவதற்கு ஏதுவாக நமக்கு உதவிசெய்து, சத்தியத்திற்காக நம்முடைய அழிந்துபோகக்கூடிய சரீரங்கள் ஊழியம் புரிவதற்கு ஏதுவாக அச்சரீரத்தை உயிர்ப்பிக்கின்றது.

இரண்டு சிருஷ்டிகளல்ல ஒன்றே இருக்க முடியும். நம்மால் ஒரே தருணத்தில் இரண்டு சிருஷ்டிகளாக இருக்க முடியாது. சித்தம் தொடர்பான விஷயத்தில் நம்முடைய பழைய சிருஷ்டி கீழ்ப்படுத்தப்பட்டு மறுரூபமடையும் போதுதான் நாம் உண்மையான புதிய சிருஷ்டியாகுகின்றோம். ஆனால், புதிய சிருஷ்டியானது, இன்னமும் அதன் புதிய சரீரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. புதிய சிருஷ்டியை ஒரு புதிய மனிதனாக அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். வெளி மனுஷன் என்ற ஒன்று உள்ளது. அதைத்தான் உலகம் ஒரு தனி மனிதனாக எண்ணுகின்றது. ஆனால், எந்தளவுக்கு இந்த வெளி மனுஷன் கீழ்ப்படுத்தப்பட்டு, ஊழியம் புரிய வைக்கப்படுகின்றானோ, அவ்வளவாய் புதிய சிருஷ்டியானது, வளர்ந்து, பலமாய்க் காணப்படும். இறுதியில், மனித சரீரம் மரணமடையும்பொழுது, தேவன் உயிர்த்தெழுதலில் புதிய சிருஷ்டிக்கு ஒரு புதிய சரீரத்தைக் கொடுக்கின்றார். புதிய சிருஷ்டியானது, அப்போது அவருக்கு ஒப்பாகக் காணப்படும்போது திருப்தியடையும்.

மரித்துப்போனதாகக் கருதப்படும் சரீரமானது இப்படியாக அது கருதப்படும் மரித்த நிலையிலிருந்து எழும்பும் பழக்கமுண்டு. ஆகவே, விசுவாசத்தில் நல்லதொரு போராட்டத்தைப் போராடுவதில் புதிய சிருஷ்டி தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும். மாம்சத்திற்கு எதிராக புதிய மனம் செய்யும் இந்த யுத்தங்கள், பாவத்திற்கும், விழுந்துபோன சுபாவத்திற்குரிய பெலவீனங்களுக்கும் எதிரான போராடுதல்களாக இருக்கின்றபடியால், இந்த போராட்டங்கள், "நல்லதொரு போராட்டமாக" இருக்கின்றது. புதிய சிருஷ்டியினுடைய முழு ஓட்டமும் விசுவாசத்தின் ஓட்டமாக இருக்கின்றது. ஒருவன் வாக்குத்தத்தங்கள் மீதும், தன்னுடைய உதவியாளராகிய கர்த்தரிடத்திலும் விசுவாசம் வைக்காதது வரையிலும் அவனால் மாம்சம் மற்றும் அதன் விருப்பங்கள் மற்றும் அதன் போக்குகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது.

## "அப்போஸ்தலர் தான் பின்வாங்கிப் போவேன் அல்லது தான் அடையாமல் தவறிவிடுவேன் என்பதான எண்ணங்களைக் கொண்டிருக்கவில்லை"

"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1). அப்போஸ்தலர் பவுல், தான் பின்வாங்கிப் போவேன் அல்லது தவறிவிடுவேன் என்பதான எந்த எண்ணங்களையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும், "அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்படிக்கு" அவர் காரியங்களை எழுதி அனுப்பக்கூடியவர்களுக்கு இக்காரியத்தைக் குறித்து வலியுறுத்துகின்றார்.

சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுக்கும்/அர்ப்பணிக்கும் காரியத்தையும், கர்த்தருடைய ஊழியத்திற்கென்று மனம் மற்றும் சரீரத்தினுடைய வல்லமை மற்றும் தாலந்தை முழுமையாய் அர்ப்பணிக்கும் காரியத்தையும் சரியாக செய்வது என்பது, விழுந்துபோன சுபாவத்தின் பெலவீனங்களை நேர்/ஜெயங்கொள்வதற்குப் பேருதவியாகக் காணப்படும். யாரொருவர் கர்த்தரிடத்தில் தன்னை அர்ப்பணம் பண்ணுவது தொடர்பாகவும், தான் கர்த்தருடைய சேனையில் சேர்ந்துகொள்வது தொடர்பாகவும் சரியான கண்ணோட்டத்தை உடையவராக இருக்கின்றாரோ அவரே, தான் இன்னும் கர்த்தருக்கென்று கொடுப்பதற்கென தன்னிடத்தில் எதுவுமில்லை என்று உணர்ந்துகொள்வான். ஆகவே, அவன் இறுதியாக தன்னை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க தீர்மானம் எடுக்கும் மாத்திரத்தில் அதுவரையிலும் சுயசித்தத்தோடு அவனுக்குக் காணப்பட்ட போராட்டங்கள் எதுவாயினும், அப்போராட்டங்கள் முடிவிற்கு வந்துவிடும். ஆகவே, மரணம் வரையிலும்தான் ஊழியம் புரிய வேண்டும் என்றும், பின்வாங்கி விசுவாசத்தின் நல்லதொரு போராட்டம் போராடுவதை நிறுத்துவதற்குரிய எவ்விதமான கருத்துக்களைக்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ளக்கூட வாய்ப்பில்லை என்றுமான காரியங்களை உணர்ந்துகொள்வது எவ்வளவு முக்கியமானதாயிருக்கின்றது.

பழைய சிருஷ்டியாகிய மாம்சம், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசிக்கவில்லை என்றும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தினுடைய படிப்பினைகள் மற்றும் இராஜ்யத்திற்கான ஆயத்தங்களின் கீழ் இல்லை என்றும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" (1 கொரிந்தியர் 15:50). ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தெய்வீக அழைப்பை நாம் ஏற்றுக்கொள்வது என்பது, எல்லாவிதத்திலும் பூமிக்குரிய சுபாவத்தை துறப்பது மாத்திரம் குறிக்காமல், "தேவனுடைய புத்திரர்களாக" புதிய சிருஷ்டிகளான நம்முடைய ஜெநிப்பித்தலையும் குறிக்கின்றதாயும் இருக்கின்றது. புதிய சிருஷ்டி, புதிய மனம், புதிய சித்தமே. கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கொண்டுவரப்பட்டு, பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மற்றும் கர்த்தருக்கு ஒத்த சாயலில் ஆகத்தக்கதாக தெய்வீக சித்தத்திற்கு முழு இசைவுடனும் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. தெய்வீக பிரமாணத்திற்கு முழுமையான இசைவு நிலையில் நம்முடைய மாம்சத்தைக் கொண்டுவரும் விஷயத்தில் நாம் ஒருபோதும் ஜெயங்கொள்ள முடியாது. ஏனெனில், மாம்சம் பூரணமற்றதாகும். ஆகவே, மாம்சமானது, கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட வேண்டிய அவசியமுள்ளது. மாம்சத்தில் பூரணத்தை எதிர்பார்க்கின்றவனுக்கு மாம்சத்தில் தனது விசுவாசத்தை வைக்கிறவனுக்கு கிறிஸ்துவின் சாயலை அடைவது அதாவது, சபையின் அங்கமாக ஆவது அதாவது, பிதாவின் குமாரனுடைய சாயலாகுவது என்பது ஒருபோதும் கூடாத காரியமாகும் (ரோமர் 8:29).

## “செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்யாதிருக்கின்றோம் மற்றும் செய்யக்கூடாத காரியங்களை நாம் செய்கின்றவர்களாக இருக்கின்றோம்”

விசுவாசத்தின் மூலமாகவும், அர்ப்பணிப்பின் மூலமாகவும் நாம் கர்த்தரோடு சேர்ந்துகொள்ளுகையில் நாம் நம்மை தேறின பட்டதாரிகளாகவும், அனைத்தையும் கொண்டவர்களாகவும் அறிவிக்காமல் மாறாக, தேவனை அன்புகூருகிறவர்களுக்கு அவர் ஆயத்தம் பண்ணியுள்ள காரியங்களைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு ஏதுவாக ஆயத்தமாக்கப்பட விரும்பும் மாணவர்களாகவும், சீஷர்களாகவுந்தான் நாம் இருக்கின்றோம் (1 கொரிந்தியர் 2:9). இவ்விஷயத்தை நாம் ஒருவேளை மனதில் கொண்டிருப்போமானால், நம்முடைய பூரணமற்ற மாம்சத்தின் காரணமாக தவிர்க்க முடியாத நிலையில் நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்திருக்கும் போதும், செய்யக்கூடாது என்றுள்ள காரியங்களை நாம் செய்கின்றவர்களாய் இருக்கும் போதும், நமக்குள் ஏற்படும் சோர்வுகளைத் தவிர்த்துவிடலாம் (ரோமர் 7:15, 18, 19, 25).

புதிய மனமானது, எந்தளவுக்கு கிறிஸ்தவனுடைய மனதிற்கு ஒப்பாக வளர்கின்றதோ, அவ்வளவாய் சரீரத்தையும் அதன் பாவ கோரிக்கைகளையும் கீழ்ப்படுத்தும் விஷயத்ததில் அதாவது, மாம்சத்தின் சித்தத்தை மரித்தநிலையிலேயே வைக்கும் விஷயத்தில் புதிய மனமானது, தனது பிரயாசத்தில் ஓய்வதில்லை என்பதை மீண்டும் மீண்டுமாக நாம் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்க அவசியமில்லை. ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட எந்த தேவனுடைய பிள்ளையாலும் தனது அழியக்கூடிய சரீரத்தில் பாவத்தை ஆளுகை செய்ய அனுமதிக்க முடியாது. ஒருவேளை, ஏதேனும் பாவம் அவனை ஏதேனும் ஓரளவில் கட்டுப்படுத்துகின்றது என்றால், அது அவன் வேண்டுமென்றே அனுமதியாமல் நிகழ்ந்ததேயாகும். ஆகவே, இப்படியான சூழ்நிலைகள் கொஞ்சம் முன்பு தான் காணப்படும். அதாவது, புதிய மனமாகிய புதிய சிருஷ்டி மாம்சம் தலை தூக்குவதைப் பார்த்து கிறிஸ்துவாகிய கிருபையின் பரலோக பண்டக சாலையிலிருந்து தேவையான வேளைகளில் உதவியளிக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டுள்ள கிருபையினால், மாம்சத்தின் மேல் ஜெயங்கொள்வது வரைதான் காணப்படும்.

இக்கருத்து சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படும் பட்சத்தில் இது உண்மையான சீஷர்களுக்கு உதவியாக இருக்கும். அதாவது, சீஷர்களுடைய இருதயங்கள், பாவம் மற்றும் அநீதிக்கு இசைவாக இராமல் மாறாக, நமது போதகருடைய கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு முழு இசைவுடன் காணப்பட்டு, தங்கள் இருதயங்கள் சுத்திகரிக்கப்படுதலை விரும்புகின்றது என்றும், அவருடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகக் காணப்பட வேண்டுமென தங்கள் இருதயங்கள் ஏங்குகின்றது என்றதுமான உணர்வில் காணப்படும் வரையிலும், மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தங்கள் நிலையையும் இவர்கள் ஒருவேளை மாம்சத்தின் தவறுகளினால் மேற்கொள்ளப்பட்டுவிட்டால், தளர்ந்துபோக வேண்டாம் என்பதையும் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றது. இன்னுமாக, மேற்கூறப்பட்டுள்ள கருத்து சீஷர்கள் தங்களைப் போன்று கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் உடன் மாணவர்களாக, சீஷர்களாக இருக்கும் மற்ற புது சிருஷ்டிகள் மீதும் மாம்சத்தின்படியல்லாமல், ஆவியின்படி அன்பு காட்டவும் உதவுகின்றது. ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நம் சகோதரரிடத்தில் அவர்க

ளுடைய மாம்சத்தில் குறைவுகளையும் அதை அவர்கள் வெறுத்து எதிர்த்துப் போராடுவதையும் பார்க்கும்போது, அதிலும் முக்கியமாக, அச்சகோதரன் தனது இருதயமும், தனது சித்தமும் கர்த்தருக்கும் அவருடைய அன்பின் பிரமாணத்திற்கும் இசைவாகவே உள்ளது என்றும், தான் தினந்தோறும் மாம்சத்தின் பெலவீனத்திற்கு எதிராக வெற்றிகரமான ஒரு பேராட்டத்தைப் போராடிக்கொண்டிருக்கின்றார் என்றும், நமக்கு அவர் நிச்சயமளிக்கும் பட்சத்தில் நாம் கண்ட அந்த தீமை அச்சகோதரனுடைய சத்துருவேவொழிய அச்சகோதரனாகிய புதிய சிருஷ்டியல்ல என்று நினைவில் நாம் கொள்ள வேண்டும்.

## "ஒருவன் தன் சொந்த ஆசைகளினால் இழுக்கப்படும்பொழுது சோதிக்கப்படுகின்றான்"

இப்பாடத்தை நாம் படிக்கும்போது, இரண்டு உண்மைகளை நாம் மனதில் நிறுத்த வேண்டும் : (1) வேதவாக்கியங்கள் புதிய சிருஷ்டியை பாவத்திற்கான காரணமாகக் குறிப்பிடுவதில்லை, மற்றும் (2) வேதவாக்கியங்கள் நம்முடைய விழுந்துபோன மாம்சம் நீதியில் பூரணமுடையது என்றும் குறிப்பிடுவதில்லை (மாம்சம் மரித்துப்போனதாகக் கருதப்படும்). புதிய சிருஷ்டியானது புதிய மனமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இது தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டது மற்றும் இதனால் பாவம் செய்ய முடியாது. ஏனெனில், இந்த புதிய மனமானது, "சத்தியத்தினால், ஆவியினால்" வித்திடப்பட்டுள்ளது. இந்த புதிய சிருஷ்டியானது, நீதிக்கு மிகவும் முழுமையாய் இசைவுடன் இருப்பதினாலும், கர்த்தருடைய ஆவியிலும், பரிசுத்தத்தின் ஆவியினாலும் மிக முழுமையாக ஊறின நிலையில் இருப்பதினாலும், இது பரிசுத்தத்தை மகிழ்ச்சி கொள்கின்றதேயொழிய பாவத்திலல்ல. மேலும், இப்படியான நிலை இந்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட நிலை தொடர்ந்து நீடிப்பது வரையிலும் காணப்படும். "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் (விரும்பி ஒருபோதும் பாவத்தில் பிரியப்படவுமாட்டான், அதை சந்தோஷங்கொள்ளவுமாட்டான்). ஏனெனில், அவருடைய வித்து (சத்தியம் மற்றும் அவன் ஜெநிப்பிக்கப்பட்ட சத்தியத்தின் ஆவியினுடைய பரிசுத்த வித்து) அவனுக்குள் தரித்திருக்கிறது." "பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1 யோவான் 3:9; 5:18).

நம்மீது வரும் ஒவ்வொரு/அனைத்துப் பிரச்சனை அல்லது சோதனைகளும், பிசாசினிடமிருந்து வருகின்றது என நாம் அனுமானித்துவிடக்கூடாது. மாறாக, யாக்கோபு 1:13, 14-ம் வசனத்தின் வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படியாக, வசனத்தில் குறிப்பிடப்படும் சோதனைகள் மாம்சத்தினின்றும் நாம் விழுந்துபோன மனுக்குலத்தின் அங்கங்களாக இருப்பதினிமித்தமும் வருகின்றதாய் இருக்கின்றது. மேலும், விழுகையினிமித்தம் உண்டான இந்த பெலவீனங்களும் பூரணமற்ற தன்மைகளும் இப்பொழுது 6000 வருடங்கள் கடந்திருப்பதினால் மிகவும் பெருகிப்போயும், வீரியம் கூடியும் காணப்படுகின்றது. ஆகவே, நம்முடைய பிரதானமான சத்துருக்கள் மத்தியில் நாம் விழுகையினிமித்தம் சுதந்தரித்துக் கொண்ட பெலவீனங்களும், பாவத்திற்கும், இழிவிற்கும், சுயநலத்திற்கும் ஏதுவான மனப்பான்மை/மனநிலைகளும் காணப்படுகின்றது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறாக, சீரழிக்கப்பட்டு சுயநலத்தின் ஆவியில் கீழ்க்காணப்படும் முழுஉலகமும் அறியாமையிலும், தங்களுக்கே தெரியாமலும் சாத்தானின் ஆயுதங்களாகக் காணப்படுகின்றது (எபேசியர் 2:2). தேவனுடைய பிள்ளைகளுக்கு உலகமானது, சத்துருவாக மாறியுள்ளது. இன்னுமாக, உலகம் அறிந்திருக்கிறதும்,விரும்புகிறதுமான காரியங்களுக்கு வேறுபட்டுக் காணப்படும் புதிய விருப்பங்கள், புதிய இலட்சியங்கள், புதிய நம்பிக்கைகள் மற்றும் புதிய குறிக்கோள்களுக்கும் நாம், "மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட்டுள்ள" சபையாக இருக்கின்ற காரணத்தினிமித்தம் தேவனுடைய ஜனங்களுக்கு உலகமானது, சோதனையாளர்களாகவும் இருக்கின்றது.

## "மாம்சம் ஆவிக்கு எதிராகவும், ஆவி மாம்சத்துக்கு எதிராகவும் விருப்பம் கொள்கின்றது"

நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஆகையால், நம்முடைய புதிய மனதின் போக்குகள் பரலோகத்திற்குரியதாகவும், ஆவிக்குரியதாகவும் அன்பு மற்றும் நீதிக்கு இசைவானதாகவும் காணப்படுகின்றது. ஆகவே, நம்முடைய இருதயங்கள் மாத்திரமே இப்படியாக மாற்றப்பட்டுள்ளதால், கிறிஸ்துவின் மூலமாகக் கிருபையினாலும், சத்தியத்தினாலும்

நம்முடைய இருதயங்களிலும், சித்தங்களிலும் நிறுவப்பட்ட புதிய ஒழுங்குகளுக்கு இசைவாய் இருப்பதைக் காட்டிலும், நம் மாம்சமானது, உலகத்திடமே அதிகம் இசைவுடன் காணப்படுகின்றது. ஆகவேதான், வார்த்தைகள் அல்லது எழுத்துக்கள் மூலம் உலகத்தாரும் அவர்களுடைய ஆவியும், கர்த்தருடைய ஜனங்களுடன் தொடர்புக்குள் வரும்போது, கர்த்தருடைய ஜனங்கள் தங்களுடைய கர்த்தருக்கும், அவர் தங்களுக்கும் வாக்களித்துள்ள அனைத்திற்கும் மற்றும் நீதி, அன்பு, சத்தியத்தின் ஆவிக்கும் உண்மையாகக் காணப்பட்டாலும், தங்களுடைய மாம்சத்திற்கு உலகத்தின் மீதும் அதன் கண்ணோட்டங்கள், அதன் ஏற்பாடுகள், அதன் சந்தோஷங்கள் முதலியவைகள் மீதும் ஈர்ப்புக் கொண்டுள்ளதை உணர்ந்துகொள்கின்றார்கள்.

இந்த காரணத்தினிமித்தமாகவே, ஒரு கிறிஸ்தவன் தான் பாவத்திற்கு மரித்துப் போவதற்கு மாத்திரம் அழைக்கப்படாமல், தன்னுடைய சொந்த மாம்சீக விருப்பங்களுக்கும், ஏக்கங்களுக்கும், ஆசைகளுக்கும் மற்றும் பாவத்திற்கும் இசைவாய் இருக்கும் உலகத்திற்கும் அதாவது, தவறான ஆசைகளைத் தரும் உலகத்திற்கும் மரித்துப் போகும்படியும் நாம் அழைக்கப்படுகின்றோம். அப்போஸ்தலர் கூறுகின்ற பிரகாரமாக, புதிய சிருஷ்டி, புதிய சித்தம் மற்றும் பழைய சிருஷ்டி அதன் மாம்சீக இழிவான/சீர்க்கெட்ட மனநிலைக்கும் இடையே தொடர்ந்து யுத்தம் காணப்படும் "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" (கலாத்தியர் 5:17). ஒரு கிறிஸ்தவன் தனது மாம்சமும், சித்தமும் முழுமையாக மரித்துப்போய் அடக்கம் பண்ணிவிட்ட நிலையை அடைந்துவிட்டாலும், அவனுடைய மாம்சம் மீண்டும் உயிர்ப்பித்துவிடாதபடிக்கு அவன் தொடர்ந்து தன்னை பரிசோதனைப் பண்ணிப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். இதுவே, அப்போஸ்தலனாகிய பவுல் கையாண்ட முறைமையாகும். "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை (மரிக்கச் செய்து, புதைத்து) ஒடுக்கி, (புதிய மனதிற்கு) கீழ்ப்படுத்துகிறேன் (1 கொரிந்தியர் 9:27). மாம்சம் உயிர்ப்பித்து விடாதபடிக்கு அதனை ஒடுக்கி அதை கவனித்துக் கொண்டிருக்கும் காரியமானது, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தொடர்ந்து அவசியமாய் இருக்க வேண்டிய காரியமாகும். ஏனெனில், இதுவே, மாம்சத்தின் சித்தமாகிய பழைய சித்தத்தின் மீதான புதிய சித்தத்தின் புதிய மனதின் வெற்றியாகும். இதுவே, பரிசுத்தமான, பலமான குணலட்சணங்களில் நமது மகிமையான கர்த்தரும், மீட்பருமானவருக்கு ஒப்பான குணலட்சணங்களில் வளர்த்தி, நம்மை ஜெயங்கொள்ளுகிறவர்களாக்குகின்றது. ஆமென்!

---

R 4821

# புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி
*(BIBLE STUDY CLASS – EXTENSION)*

பல்வேறு வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில், சகோதரர்கள் மத்தியில் கிருபையிலும், அறிவிலுமுள்ள வளர்ச்சியினை நாம் காண்கையில், அவர்கள் திராட்சத்தோட்டத்தில் வேலையாட்களென அவர்கள் பயன்படுகிற காரியத்தைக்குறித்து நாம் சிந்தித்தும், ஜெபித்தும் காணப்படுகின்றோம். ஆரம்பக் காலங்களில் சொசைட்டியானது வெளி வேலைகளில் சகோதரர்களில் பலரை ஊக்குவித்தும், ஆதரித்தும் வந்தது. ஆனால் இதேபோன்று அங்கீகரிக்கப்படுவதற்கு மற்றவர்கள் வேண்டிக்கொண்டபோது, ஒன்றில் பாத்திரமற்றவர்களுக்கு ஒப்புதலளித்து, ஆதரித்திடுவதன் வாயிலாக அல்லது பாத்திரமானவர்கள் சிலரை ஆதரிக்கத் தவறுவதன் வாயிலாகச் சொசைட்டியானது பிரச்சனைக்குள்ளாகும் என்று நாங்கள் உடனே அடையாளம் கண்டுகொண்டோம். எனினும் சொசைட்டியின் முயற்சியானது எப்போதுமே "பட்சபாதமில்லாமலும், மாயமற்றதாயும்" காணப்பட வேண்டும் எனும் அப்போஸ்தலனின் கட்டளையைப் பின்பற்றுவதாகவே இருந்துள்ளது (யாக்கோபு 3:17).

ஆகையால் வாட்ச் டவருடைய வெளியீட்டின் கடைசிப் பக்கத்தில் இடம்பெறும் அல்லது விசேஷமாய் அறிவிக்கப்பட்டுள்ள வழக்கமான பயண ஊழியர்களுக்கான ஒத்துழைப்புத் தவிர, மற்ற விசேஷித்த ஒத்துழைப்புகள் அனைத்தையும் நிறுத்திவிட்டோம். இவர்களுக்கான பொறுப்பினை நம்மால் தட்டிக்கழிக்க முடியாது மற்றும் குறைக்கண்டுபிடிக்கும் ஆவியினை வளர்த்திட விரும்பாமல், எங்குமுள்ள சொசைட்டியின் அருமையான அங்கத்தினர்கள், பயண ஊழியர்களின் நடத்தை அல்லது போதித்தல்களில் ஏதாகிலும் வசனத்தின் அறிவுரைக்கு மாறாக தங்களுக்குத் தோன்றும்பட்சத்தில் - "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்திற்கு" முரணாக தங்களுக்குத் தோன்றும்பட்சத்தில், அதைக் குறித்துத் தகவல் கொடுக்கும்படிக்கு நாம் உள்ளப்பூர்வமாய் வேண்டிக்கொள்கின்றோமென இப்பொழுது கூறுகின்றோம். இம்மாதிரியான காரியங்களைப் புறங்கூறும் வண்ணமாகக் கலந்துரையாடாதீர்கள், மாறாக பரிவுடனும், அன்புடனும் அதைக்குறித்துப் புரூக்கிலினிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு - "பயண ஊழியர்கள்" பிரிவிற்குத் தகவல் அளித்துவிடுங்கள். நாங்கள் உங்களோடு ஒப்புக்கொண்டு, பயண ஊழியரைக் கண்டனம்பண்ணிடுவோம் என்றில்லை. மாறாக பயண ஊழியர்கள் சொசைட்டியின் பிரதிநிதிகளாகக் காணப்படுவதினால், அவர்களது ஜீவியத்தின் செல்வாக்குக் குறித்தும், அவர்களது போதனைகளிலுள்ள ஏதேனும் விநோதம் குறித்தும் நாங்கள் அறிந்துகொள்வது சரியான காரியமேயாகும். தகவல் கொடுப்பவர் உண்மைகளோடு சிலவற்றைச் சேர்த்துச் சொல்லிடுவதற்கும், காரியத்தினைக் குற்றமாக மாற்றிடுவதற்கும் முயற்சிக்கவில்லையெனில், தகவல் கொடுப்பது புறங்கூறுதலாய் இராது.

## புதிய வகுப்புகளை உருவாக்குவதற்குரிய திட்டம்

ஆறு மாதங்களுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டத்தின் வாயிலாக, நூற்றுக்கணக்கான அருமையான சகோதரர்கள், அவர்கள் தங்களது தாலந்துகளை, சத்தியத்தைப் பரப்புவதற்கு என்று செயல்படுத்துவதில், சொசைட்டியானது அவர்களோடுகூட ஒத்துழைத்திட முடியும் என்று நாம் நம்புகின்றோம். இத்திட்டமானது, எங்களால் பார்க்க முடிந்தவரை, மனித திட்டத்திற்கு வரும் எல்லா வகையான மறுப்புகளுக்கு இடமளிக்காததாய்த் தெரிகின்றது. இது பல்வேறு சபையாரைப் புதிய வகுப்புகள் உருவாக்கும் வேலைக்குப் பொறுப்பாளியாக்கிடும் மற்றும் இப்படியாகச் சபையார் வாயிலாகவும் மற்றும் சபையாரோடு சேர்ந்தும் சொசைட்டியானது வேலைகள் புரிந்திடும். இது ஒரு சபையார் ஒரு வகுப்பை அல்லது வரையறை இல்லாமல் அநேகம் வகுப்புகளைத் தலைமையேற்றிடும் ஒரு திட்டமல்ல. தெய்வீக வழிநடத்துதலினால் ஒவ்வொரு சபையிலும் உள்ளூர் காரியங்களைக் கவனித்துக் கொள்வதற்கு முற்றிலும் திறமையுள்ளவர்களாகக் காணப்படும் மற்றும் புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலைகளிலும் ஈடுபட முடிகிறவர்களுமான மூப்பராகிய சகோதரர்கள் படிப்படியாய் எழுப்பப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றோம் என்பது எங்களது கருத்தாய்

இருக்கின்றது. நாங்கள் யோசனையாய் முன்வைக்கும் திட்டமானது, புதிய வகுப்பு உருவாக்குதல் வேலை சம்பந்தப்பட்டது மாத்திரமேயாகும்; அது பின்வருமாறு:

(1) எந்தச் சபையாரும், புதிய சபை உருவாக்கிடும் இவ்வேலையில் இணைந்துகொள்ள வரவேற்கப்படுகின்றனர்; அதுவும் அவர்கள் மத்தியில் வழக்கமாய்த் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்களிடத்தில், சபையாரின் நலனையும், வளர்ச்சியையும் சிரமத்திற்குள்ளாக்காத வண்ணம், வெளி ஊழியங்களில் பங்கெடுப்பதற்கெனப் போதுமான தாலந்துகள் காணப்பட வேண்டும்.

(2) ஒருவேளை ஒரு சபையார், அவர்களின் மூப்பர்களிடத்தில் அதிகமான திறமைகளை, அதுவும் சபையாரின் சொந்த வளர்ச்சிக்குரிய தேவைக்குமதிகமாய்ப் பெற்றிருக்குமானால், சபையார் வகுப்புகள்/சபைகள் இல்லாத தங்கள் சுற்றுப்புறங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஊழியம் புரிவதற்கான பல்வேறு இடங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சபையார் தங்களது மூப்பர்களில் யார் தெய்வீகத் திட்டத்தின் மூன்று விளக்கவுரைகளைக் கொடுத்திடுவதற்கு நன்கு தகுதியுடையவராய் இருக்கின்றார் என்றும், மூப்பர்களில் யார் பிற்பாடு நியாயத்தீர்ப்பின் நாள், ஈடுபலி மற்றும் திரும்பக் கொடுத்தல் மற்றும் கர்த்தருடைய வருகையின் விதம் குறித்த மூன்று உரைகளைக் கொடுத்திடுவதற்கு நன்கு தகுதியுடையவராய் இருக்கின்றார் என்றும் நம்புகிறவர்களை நியமித்திட வேண்டும். தெய்வீகத் திட்டத்தினுடைய வரைப்படங்களையும் மற்றும் இத்தகைய பேச்சாளர்களுக்குத் தெய்வீகத் திட்டம் குறித்த மூன்று உரையாடல்களுக்கான (outlines) முக்கிய அம்சங்களைத் தெரிவிக்கும் ஒரு சிறு துண்டு பிரசுரத்தையும் அளித்திடுவதற்கு சொசைட்டியானது ஆயத்தமாய்க் காணப்படுகின்றது. அடுத்த மூன்று உரையாடல்களானது, வேதாகமப் பாடங்களில் முன்வைக்கப்பட்டிருப்பவைகளின் அடிப்படையில் கொடுக்கப்படலாம் அல்லது மிகவும் பிரயோஜனமான வழிமுறையாய் இருக்குமானால், அந்த அத்தியாயங்களானது முழுமையான ஆராய்ச்சிக்குப் பிற்பாடு வாசிக்கப்படலாம்.

ஒவ்வொரு உரையாடலின் முடிவிலும், அடுத்துவரும் உரையாடல் குறித்து அறிவிக்கப்பட்டு, கேட்பவர்களும், இவர்களது நண்பர்களும் அன்போடுகூட வரவேற்கப்பட வேண்டும். தெய்வீகத் திட்டத்தின் மூன்றாம் விளக்க உரையினுடைய நிறைவில், பேச்சாளர் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையில் பேசப்போகும் சகோதரன் மற்றும் அவரது தலைப்பின் பெயர்களை அறிவித்திட வேண்டும் மற்றும் வாய்ப்பிற்கேற்ப சில சுவாரசியமான மற்றும் ஆர்வமூட்டும் கருத்துக்களைத் தெரிவித்திடலாம். இரண்டாம் பேச்சாளருடைய மூன்றாம் கூட்டத்தினுடைய நிறைவின்போது, கூட்டத்தில் எத்தனை பேர் - வேதமாணவர்களின் ஒரு வகுப்பென நிரந்தரமாய் தவறாமல் கூடிவருமளவுக்கு யுகங்களுக்கடுத்த வேதாகம ஆராய்ச்சியில் போதுமானளவுக்கு விருப்பம் கொண்டிருக்கின்றனர் என்று கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும். பேச்சாளர் பெரோயா வேத ஆராய்ச்சி வகுப்புகளைக் குறித்து விவரித்து, இவ்வகுப்புகள் நடத்தப்படுவதற்கான மிகப் பொருத்தமான இடம் மற்றும் நேரம் குறித்து ஆலோசித்திட வேண்டும் மற்றும் இவர்கள் விரும்பிடும் பட்சத்தில், இவர்கள் இந்தப் பெரோயா பாடங்களைத் துவங்கிடுவதற்கும் மற்றும் தாங்களே காரியங்களைப் பார்த்துக்கொள்ள முடிகிறது வரையிலும், இவர்களுக்கு உதவத்தக்கதாக, தன்னை அனுப்பின சபையார் தங்கள் மத்தியிலுள்ள யாரோ ஒருவரை அனுப்பிவைப்பார்கள் என்றும் வாக்களித்திட வேண்டும்.

(3) புதிய வகுப்புகளை உருவாக்கிடும் விஷயத்தில் உழைப்பும், செலவும் காணப்படுகின்றது. சில சமயங்களில் வீட்டு முற்றங்களும், சிலசமயங்களில் பள்ளி அறைகளும், சிலசமயங்களில் ஆலயத்தினுடைய விரிவுரை ஆற்றும் அறைகளும், சிலசமயங்களில் பயன்படுத்தப்படாத கிறிஸ்தவ கோவில்களும், சிலசமயங்களில் படக்காட்சி அரங்குகளும், சிலசமயங்களில் இசைப்பள்ளி அறைகளும் - வாய்ப்பிற்கு ஏற்ப பெற்றுக்கொள்ளப்படலாம். கூட்டங்களானது வேதாகம வகுப்புகளுக்காக நடத்தப்படுகிறது என்றும், அனுமதிக் கட்டணம் நியமிக்கப்படவில்லை என்றும், பணம் எதுவும் திரட்டப்படவில்லை என்றும் கட்டிடத்தின் உரிமையாளர்கள் அறிகையில், பெரும்பாலும் அறைகளை இலவசமாகவோ அல்லது வாயிற்காவலருக்கு அல்லது விளக்குகளுக்கு அல்லது வெப்பத்திற்குச் சாதாரணமான ஒரு தொகையைச் செலுத்தச் சொல்பவர்களாகக் காணப்படுவார்கள். சிலசமயங்கள் சிறுதொகை செலுத்தப்பட வேண்டியிருக்கும். எப்படி இருப்பினும் மூன்று முதல் ஆறு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், அவைகள் குறித்து அடுத்தடுத்த ஞாயிற்றுக்கிழமைகளில் விளம்பரம் பண்ணப்பட வேண்டும் என்றும் புரிய வைக்கப்பட வேண்டும். கட்டணம் முன்னமே செலுத்தப்பட்டு மற்றும் விளம்பரம்பண்ணும் காரியமானது பரப்பப்பட ஆயத்தமாயிருப்பதற்கு முன்னதாக எவ்விதமான தவறான புரிந்துகொள்ளுதல் உண்டாகாதபடிக்கு இரசீது ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(4) இம்மாதிரியான கூட்டங்கள் சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒத்துழைத்திடுவதற்கு சொசைட்டியானது மகிழ்ச்சியோடு காணப்படுகின்றது. Everybody's Paper-இன் பிரதிகளை இலவசமாய்ச் சொசைட்டியானது அளித்திடும்; இதன் பின்புறத்தில் முதல் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் ஒவ்வொன்றிற்கான தெய்வீகத் திட்ட விளக்க உரைகள் குறித்த ஓர் அறிவிப்புக் காணப்படும். அதில் கூட்டம் நடத்தப்படும் இடம் மற்றும் தேதிகள் தவிர, மற்றப்படி அது முழுமையாய் நிரப்பப்பட்டுக் காணப்படும். இவைகள் மிகச் சிறிய செலவில் உள்ளூர் அச்சிடுபவரால் அச்சிடப்படலாம் அல்லது ரப்பர் முத்திரைக்கொண்டு அச்சிடப்படலாம். Papers பரப்பப்படுவது என்பது அநேகம் பிரசங்கங்களைப் பரப்புவதாகும் மற்றும் பொதுக்கூட்டத்திற்கு வருவதற்கென இழுக்கப்படாதவர்களுக்கு நலம் பயக்கின்றதாய் இருக்கும். நாம் இவற்றை எந்த ஒரு பட்டணத்திலோ அல்லது மாவட்டத்திலோ அல்லது மாநகரத்திலோ காணப்படும், ஆங்கிலம் பேசுபவர்களின் ஜனத்தொகையில் ஒவ்வொரு ஆறுபேரில் ஒருவருக்கு என்ற விகிதத்தில் கொடுத்திடுவோம்; ஜனத்தொகையானது குழந்தைகளையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது மற்றும் ஆறில் ஒன்று என்பது பொதுவாய்க் குடும்பங்களின் எண்ணிக்கையினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இக்கூட்டங்களுக்கான செலவுகளானது பொதுவாகவே சபையாரால் சந்திக்க முடிகிறதாய் இருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள பட்டணங்களுக்குச் செல்வதற்குரிய பயண செலவுகளும் குறைவாகவே காணப்படும். எனினும் இக்கூட்டங்களுக்கான முழுச்செலவுகளையும் சந்திக்க முடியாத எந்தச் சபையாருக்கு, அதுவும் அனுப்பப்படும் தகவல்களானது செலவுகளை நியாயப்படுத்திடும் பட்சத்தில் ஒத்துழைப்புத் தந்திட சொசைட்டியானது விரும்புகின்றது. தகவல் அறிக்கையை ஆயத்தம்பண்ணுகையில் சபையானது, அதன் செயலாளர் (secretary) வாயிலாக எங்களுக்கு விவரங்களை அளித்து, செலவில் எவ்வளவு விகிதம் சபையார் சந்திக்க ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர் என்றும், காரியத்தை நடத்துவதற்கு சொசைட்டியானது எவ்வளவு பணம் பங்களிப்பாக அளித்திட வேண்டும் என்றும் தெரிவிக்கவும்.

(5) சொசைட்டியானது நேரடியாய்ப் பேச்சாளர்களுடன் இடைப்பட விரும்புகிறதில்லை; மாறாக அவர்கள், அவர்களை அனுப்பிடும் சபையாருக்குக் கடமைப்பட்டவர்களாகக் காணப்பட விரும்புகின்றது; அதாவது பவுலும், பர்னபாவும், கொரிந்துவிலுள்ள சபையால் முதலாவது அனுப்பிவைக்கப்பட்டது போலும், இவர்களும் அவர்களுக்குத் தகவல் அறிக்கைகள் கொடுத்தது போலுமாகும். சபையாரால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் வாயிலாக, நாம் அளிக்கும் அச்சிடப்பட்ட வெறும் காகிதத்தில் மாதந்தோறும் தகவல் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள சொசைட்டியானது விரும்புகின்றது.

(6) (தனிப்பட்ட காரியங்களாகவும் மற்றும் சகோதரர் ரசல் அவர்களால் மாத்திரமே கவனிக்க வேண்டியதாகவும் இருப்பவைகள் தவிர மற்றபடி) அனைத்துக் கடிதங்களும் International Bible Students Associations, புதிய வகுப்புகள் உருவாக்கிடும் வேலை பிரிவிற்கே (Extention Department) எழுதி அனுப்பப்பட வேண்டும். இது விஷயமான அனைத்துக் கடிதங்களும் அமெரிக்காவில் புரூக்கிலின் டேபர்நாக்கிளுக்கும், பிரிட்டனில் லண்டன் டேபர்நாக்கிளுக்கும், ஆஸ்திரேலியாவில் மெல்பர்னுக்கும், ஸ்கேண்டிநாரியன் மற்றும் ஜெர்மன் நாடுகளில் அவரவர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

(7) ஆங்கில மொழி கூட்டங்கள் தொடர்பாக நாம் மேலே சொல்லியுள்ளவைகளானது, வாய்ப்புகள் அனுமதிப்பதற்கேற்ப மற்ற மொழி ஊழியங்கள் தொடர்பாகவும் செயல்படுத்தப்படலாம்.

## இந்த வேலை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது

நாங்கள் மேலே சொல்லியுள்ளவைகளின் அடிப்படையில் ஏற்கெனவே முயற்சித்துப் பார்த்துவிட்டோம். சில விஷயங்களில் சிலர் நம்முடைய கருத்தினை முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகத் தெரிகின்றது. எனினும் நல்ல வேலையானது ஏற்கெனவே துவங்கிவிட்டது. நூற்று நாற்பத்தைந்து சபைகளிடமிருந்து நாம் ஏற்கெனவே தகவல் அறிக்கைகளைப் பெற்றிருக்கின்றோம். ஏப்ரல் 1-ஆம் தேதி வரையிலான தகவல்களின்படி 16,392-பேர் கலந்துகொண்டுள்ள 512-கூட்டங்கள் நடைப்பெற்றுள்ளன. இந்த நல்ல வேலையானது ஞானமாயும், தன்னடக்கமாயும், அன்பாயும், வைராக்கியமாயும் நடந்தேறுவதாக!

அறுவடை பெரிதாய் இருக்கின்றது; அறுவடைப்பண்ண வேண்டிய மாபெரும் நிலத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் வேலையாட்கள் குறைவாக இருக்கின்றனர்.

எல்லா விஷயங்கள் தொடர்பான அனைத்துக் கடிதங்களுமே தனிப்பட்ட நபருக்கு என்றில்லாமல், சொசைட்டியின் முகவரியில் அனுப்பப்படுவதாக என்று நாம் மீண்டுமாக வலியுறுத்துகின்றோம்; கூடுமானால் தபாலில், பிரிவின் (Department) பெயரானது எழுதப்பட வேண்டும். வேறுமாதிரி முகவரி எழுதப்பட்டு அனுப்பப்படும் கடிதங்களானது, உடனடியாய்க் கவனிக்கத் தவறுவதற்கு வாய்ப்பிருக்கின்றது; தனிப்பட்ட நபர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் அல்லது வராமல் இருக்கலாம், ஆனால் அந்தந்தப் பிரிவுகளானது (Departments) என்றும் இயங்கிக் காணப்பட்டு, உடனே கவனம் கொடுத்திடும்.

---

[R4838]

# “உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு”

“நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (கற்றுக்கொள்).” - 2 தீமோத்தேயு 2:15

இவ்வசனம், “வேதவாக்கியங்களைக் கற்றுக்கொள்” என்று கூறாமல், “உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு/கற்றுக்கொள்” என்று தான் கூறுகின்றது. முதலாவதாக தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இவ்வசனம் தெரிவிக்கின்றது. வேதவாக்கியங்களைப் பற்றியதான அறிவிற்குள் வந்த பின்னர், எவ்வாறு அந்த வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையின் சகல விஷயங்களிலும் பொருத்திப்பார்க்கலாம் என்றெல்லாம் கவனம் செலுத்தி நாம் தியானிக்க வேண்டும். ஆகவே, நம்முடைய கவனத்திற்கு வரும் ஒவ்வொரு விஷயமும் நன்மையானதா அல்லது தீமையானதா என்று கண்டு கொள்ளும்படி ஜாக்கிரதையாக இருக்க/கற்றுக்கொள்ள வேண்டும். இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள study/ஜாக்கிரதையாயிரு என்ற வார்த்தை, “அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவும்/study” என்ற அப்போஸ்தலனின் வார்த்தையில் வரும் அதே அர்த்தத்தைத் தெரிவிக்கின்றது.

மேலும் இவ்வசனத்தின் மையக்கருத்து என்னவெனில், நாம் நம்மை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்த வேண்டுமே ஒழிய, மனுஷர் முன்பாக அல்ல. சகல நல்ல மனுஷர் மற்றும் மனுஷிகள் முன்பாக நாம் உத்தமமாய் இருக்க வேண்டியது உண்மை தான். ஆனால் இதன் அடிப்படையில் நம்முடைய பாடம் இல்லை. முதலாவதாக நாம் தேவனை பிரியப்படுத்தும்படிக்கு, அதாவது அவர் முன்பு உத்தமமாய் இருக்கும்படிக்கு ஜாக்கிரதையாக இருக்க/கற்றுக்கொள்ள வேண்டும். தாவீது தன் மீது வேதம் கொண்டிருக்கும் தாக்கத்தின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து கொள்ளும்படிக்கு, “நான் இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருப்பேன்” என்று கூறுகையில் ஆழமான தியானத்தை நாம் கவனிக்கின்றோம். ஆகவே தான் அப்போஸ்தலரும் இங்கு நம்முடைய பிரதானமான நோக்கம், தேவனை பிரியப்படுத்துவதாகும் என்கின்றார்.

“சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்” என்பது சத்திய வசனத்தை சரியாகப் பொருத்தி பார்க்குதலையும், எப்படி, எப்போது மற்றும் எங்கு அது பொருத்திப் பார்க்கப்பட வேண்டுமென புரிந்துகொள்ளுதலையும், தேவனுடைய செய்தியாகிய இந்த சத்திய வசனத்தை தெய்வீக மனதானது கொடுப்பதற்கான திட்டம், கருத்து மற்றும் நோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்ளுதலையும் குறிக்கின்றது. நம்முடைய கர்த்தருடைய வருகை வரையிலும், தேவனுடைய செய்தியானது, முக்கியமாக பழைய ஏற்பாட்டின் வாயிலாகவே கொடுக்கப்பட்டது. பின்னர் தேவனுடைய செய்தியானது, வானத்திலிருந்து இறங்கி வந்தவராலே கொடுக்கப்பட்டது. நம்முடைய கர்த்தர், தெரிந்துகொள்ளப்பட்ட 12 அப்போஸ்தலர்களும் தம்முடைய விசேஷமான வாயாக இருக்கவும், சத்தியவசனத்தைப் பெருக்குவதற்கும், ஞான வார்த்தைகளைப் பெருக்குவதற்கும், தெய்வீக திட்டத்தை விவரிக்கும் வசனங்களைப் பெருக்குவதற்கும் கொடுத்துள்ளார். ஆகவே தீமோத்தேயு, கர்த்தருடைய செய்தி என அடையாளம் கண்டுகொள்ளும் எல்லாவற்றிற்கும், அவர் செவி சாய்க்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டார். தேவனுடைய செய்திகளில் ஒரு பகுதி, முற்காலத்திற்குப் பொருந்தலாம். ஒரு பகுதி, யூதர்களுக்கு மாத்திரமே பொருத்தலாம். இன்னும் சில பகுதிகள் கிறிஸ்தவர்களின் தற்கால வாழ்க்கைக்குப் பொருத்தலாம். வேறுசில பகுதிகளே, அவர்களுடைய எதிர்கால நம்பிக்கைக்கு ஏதுவானதாகக் காணப்படலாம்.

## “நம்முடைய முற்பிதாக்களைக் காட்டிலும் தெளிவான வளிச்சத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்”

நாம் சத்தியவசனங்களை நிதானமாய் பகுத்தப் பின்பு நம்முடைய நாட்களுக்கு அவசியமான விஷேமான வெளிச்சமும், உண்மையான புரிந்துகொள்ளுதலும் கிடைக்கிறபடியினால், நம்முடைய பிதாக்களைக் காட்டிலும் அதிகமாக, சத்தியவசனங்களை நிதானமாய் பகுக்க முடிகின்றது. ஆகவே நம்முடைய பிதாக்கள் காணாததை நம்மால் இன்று பார்க்க முடிகின்றது. அதாவது, ஆசீர்வாதத்தில் சபைக்குரிய ஆவிக்குரிய பாகத்தையும், உலகத்திற்குரிய மனுஷருடைய பகுதியுமான "பரம அழைப்பு" மற்றும் "திரும்பக்கொடுத்தல்" முதலியவைகள் குறித்ததான தேவனுடைய வார்த்தைகளின் போதனைகளை நம்மால் பார்க்க முடிகின்றது. சபைக்கும், உலகத்திற்குமான ஆசீர்வாதங்கள் தொடர்புடைய காலங்கள் மற்றும் வேளைகள் குறித்தும் நம்மால் கொஞ்சம் பார்க்க முடிகின்றது.

ஆகவே, நம்முடைய நாட்களில் சத்திய வசனத்தை நிதானமாய் பகுக்க வேண்டுமெனில், வசனங்களை பகுப்பதற்கு ஏதுவாக சத்திய வசனங்கள் மீது வெளிச்சம் கொடுக்கிறதும், கர்த்தரிடத்தில் இருந்து வருகிறதுமாய் தோன்றுகிற அனைத்தையுமே தெரிந்து கொள்வது அவசியமாய் உள்ளது. பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்கள், "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப்" பேசினார்கள் என்பதையும், அப்போஸ்தலர்களைக் குறித்து, "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று கர்த்தர் கூறினார் என்பதையும் நம்முடைய மனதில் நாம் எப்போதும் நினைவுகூர வேண்டும்.

கர்த்தர், தமது ஜனங்களை சத்தியத்தின் வழியில் வழிநடத்தி, வரவிருக்கிற காரியங்களை அவர்களுக்குக் காட்டுவார் என வாக்களித்துள்ளார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நாம் உத்தமமாய் இருக்கும்படிக்கு ஜாக்கிரதையாயிருக்க (கற்றுக்கொள்ள) வேண்டும். உபதேசங்களைக் கற்றுக்கொண்டு, அதற்கு இசைவாய் நம்முடைய ஜீவியம், நடத்தை இருப்பதற்குரிய பிரயாசம் எடுக்க வேண்டும். மேலும் கிறிஸ்துவின் சிலுவையை உடைய உண்மையான போர்சேவகரின் கடமைகளை உண்மையாய் நிறைவேற்றுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ போர்ச்சேவகள், தன்னுடைய அழைப்புக்குப் பாத்திரமாகும்படிக்கு சிறிய கடமைகளையும்கூட நேர்த்தியாக செய்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். போர்ச்சேவகனின் கடமைகளுக்குச் சம்பந்தமில்லாததும், திசை திருப்பக்கூடியதுமான மற்ற விஷயங்களில் போய் சிக்கிக் கொள்வதற்கு அவன் தன்னை அனுமதிக்கக்கூடாது. கிறிஸ்தவ போர்ச்சேவகன், சேவகனுக்குரிய தனது கடமைகளைப் புறக்கணிக்கும் பூமிக்குரிய விஷயங்களுக்காக தனிப்பட்ட விஷயங்களுக்காக நாடி திசைமாறிப் போனால், அவன் உண்மையற்ற போர்ச்சேவகனாகக் கருதப்பட்டு, போர்ச்சேவகர்களின் அணிவகுப்பிலிருந்து முற்றிலுமாக வெளியேற்றப்படுவான்.

"உன்னை உத்தமமாய் நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாய் இரு" (கற்றுக்கொள்/study)." வேதவசனத்தைக் கற்றுக்கொள். உன்னை யார் என்று தெரிந்துகொள்வதற்கும், உன்னுடைய தாலந்துகள் எதில் காணப்பட்டாலும், அதை ஊழியத்திற்கு நீ பயன்படுத்துவதற்கு, அவைகள் (உன் தாலந்துகள்) என்னவென்று அறிந்துகொள்வதற்கும், உன்னை நீ பாதுகாக்கவும், உன்னுடைய பெலத்தையும், இயலாமையையும் அறிந்துகொள்ளும்படியாக உன்னுடைய பெலவீனங்கள் என்னவென்று அறிந்துகொள்வதற்கும் உன்னைக் குறித்து நீயே கற்றுக்கொள். பின்னர் தப்பறையானவைகளை தவிர்ப்பதற்கும், மூடத்தனமான அனைத்து கேள்விகளையும் விட்டொழிப்பதற்கும், சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிருக்கவும் கற்றுக்கொள். மேலும், "தேவனுடைய உறுதியான அஸ்திபாரமே நிலைத்திருக்கிறது" எனவும், மற்ற அனைத்த அஸ்திபாரங்களும் பயனற்றது என்றும், மற்ற சகல கோட்பாடுகளும் தோல்வியை தழுவும் எனவும் நினைவில் கொள். "ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும்

அநியாயத்தை விட்டு, விலகக்கடவன் என்பதும், அதற்கு முத்திரையாய் இருக்கிறது" - 2 தீமோத்தேயு 2:19.

## "நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய புண்ணியத்தினால் உண்டான நீதியை அதிகமதிகமாய் நிஜமானதாக்கும்படிக்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்"

"ஜாக்கிரதையாயிரு/கற்றுக்கொள் (study) " என்ற வார்த்தைக்கு மிக முக்கியத்துவம் உள்ளது. மேலும் இந்த தெய்வீக கட்டளையானது சபைக்கும் கிறிஸ்துவுக்குள்ளாக காணப்படும் விசுவாசிகளுக்கும் அவருடைய ஊழியத்திற்கு என்று தங்களுடைய ஜீவியங்களை அர்ப்பணித்துள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது கவனிக்கப்படத்தக்கது. பாவத்திலிருந்து, சுத்திகரிக்கப்பட்டவர்களாக எண்ணப்பட்டவர்கள், இவ்விதமாய் சுத்திகரிக்கப்பட்டவர்களாக எண்ணப்பட்டதையும், தரிப்பிக்கப்பட்ட நீதியையும், நம்மால் முடிந்தமட்டும் நிஜமாக்குவதற்கு ஏதுவாக கற்றுக்கொள்ளும் வேலைக்கு நாம் சகல முயற்சிகளையும் செலுத்த வேண்டும். நாம் நிஜமான/உண்மையான நீதிமானாகுவதற்கு முன்பு, நாம் நீதிமான்களாக எண்ணப்பட்டது அவரது சுத்த தெய்வீக கிருபையினாலே ஆகும். நம்முடைய இருதயங்களை அவர் நோக்கிப் பார்த்து, அவைகளில் நல்லதும் நேர்மையுமான நோக்கங்கள் இருப்பதை பார்ப்பதோடு நீதியின் மீதான நம்முடைய விருப்பத்தையும், அவர் அங்கீகரிக்கும் விதத்தில் நீதிமான்களாகுவதற்குரிய நம்முடைய பிரயாசத்தையும் பார்க்கின்றார். தேவன் கிரியை செய்வதற்கான விருப்பத்தை/சித்தத்தை ஏற்றுக்கொள்கின்றார். இதன் அடிப்படையில் இப்பொழுது அவர் நம்மை நீதிமான்களாகக் கருதி, அவருடைய பிள்ளைகளென நம்மை நடத்துகின்றார். காரணம், நாம் சாபத்திலிருந்து மீட்கப்பட்டு ஒப்புரவாகுதலுக்கான அவருடைய கிருபை நிறைந்த ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டபடியினாலே ஆகும்.

## நாம் அழைக்கப்பட்ட நோக்கத்திற்கு நம்முடைய ஜீவியம் கனம் செலுத்துகிறதாய் இருக்கும்படிக்கு நாம் கற்றுக்கொள்வோமாக

அடுத்ததாக, பாவத்தின் சகல புளித்தமாவையும் நம்மிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு அன்றாடம் முயற்சி செய்கின்றோமா எனவும், பாவம் நம்மிடத்தில் தங்கி இருக்கவும், கிரியை செய்யவும் நாம் அனுமதிப்பதில் விருப்பமற்றுதான் இருக்கிறோமா என்பதில் உறுதியடையவும் அல்லது நீதிக்கான நம்முடைய விருப்பம் நாட்பட குறைந்து கொண்டிருப்பதை நம்முடைய ஜீவியத்தின் மூலமாக நிரூபிக்கின்றோமா எனவும் அறியும்படிக்கு நம்முடைய இருதயத்தைக் குறித்து கற்றுக்கொள்ள வேண்டும். தாங்கள் அவ்வப்பொழுது புளிப்புகளை கிரியை செய்ய அனுமதிக்கவில்லை எனவும், அது அதிகமதிகமாக புளிக்கும்படி அனுமதிக்கவில்லை எனவும், மாறாக பாவத்திற்கு தொடர்ந்து எதிர்த்து நின்று, அதை வெளியேற்றுகின்றோம் எனவும், தங்களின் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளை சத்தியத்தினால் சுத்திகரிப்பதின் மூலமும், ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் முதலியவைகளை விருத்தி செய்வதன் மூலமும், தங்களிடம் வருகின்ற புளிப்புகளை வெளியேற்றுகின்றோம் எனவும், தங்களிடத்தில் ஆராய்ந்து கண்டவர்கள் சந்தோஷமாய் இருப்பார்கள்.

கற்றுக்கொள்ள விருப்பம் உள்ளவர்கள் மாத்திரமே தெய்வீக அங்கீகரிப்பையும், ஏற்றுக்கொள்ளுதலையும் அடைவதற்கான வழியை கண்டடைவார்கள். தீமையின் சிறிதளவு தோற்றம் கூட நம்மிடத்தில் வரவொட்டாமல் இருப்பதற்கும், நம்முடைய சகல சம்பாஷணைகளிலும், நம்முடைய நடத்தைகளிலும் நாம் விருத்தசேதனம் உள்ளவர்களாக இருப்பதற்கும், அதாவது, நம்முடைய எண்ணங்கள், நம்முடைய வார்த்தைகள் மற்றும் நம்முடைய ஜீவியங்களை சீர்தூக்கிப்பார்ப்பதன் மூலம் விருத்தசேதனம் உள்ளவர்களாக இருப்பதற்குமென, நாம் அழைக்கப்பட்ட நோக்கத்திற்கு நம்முடைய ஜீவியம் கனம் செலுத்துகிறதாய் இருக்கும்படிக்கு நாம் கற்றுக்கொள்ளகடவோம். நம்முடைய ஒவ்வொரு கடமைகளுக்கும் கடின உழைப்பை செய்கிறவர்களாயும், ஆயத்தமான மனதோடும் இருதயப்பூர்வமான சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் நாம் கற்றுக்கொள்ளகடவோம். நாம்

போர்ச்சேவகர்கள் எனவும், உண்மையான போர்ச்சேவகர்கள் "துன்பங்களை சகிப்பதற்கும்" கற்றுக்கொள்ள வேண்டுமென நாம் ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்.

போர்ச்சேவகன், சேவகனுக்குரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியதாய் இருக்கும்போது, தனது கவசங்களை தேய்த்து மெருகூட்டுவதும், உணவு தேடுவதும், உணவுகளை சமைப்பதும், கூடாரத்தை சுத்தம் செய்வதுமான அநேக சிறு கடமைகளும் இருப்பதுண்டு. இவ்வேலைகள் பெரிதளவில் முக்கியத்துவம் அற்ற வேலைகளாய் இருப்பினும், இவைகள் அவனுடைய போர்சேவக பணிக்கு உறுதியளிக்கிறதும் அவசியமாய் உள்ளது. மேலும் இவைகளை தடைகள் என்றோ, நம்மை சிக்க வைக்கக் கூடியவைகள் என்றோ கருதிவிடக் கூடாது. இந்த கடமைகள் புறக்கணிக்கப்படவோ அல்லது உண்மையில்லாமல் அஜாக்கிரதையாகவோ செய்யப்படக்கூடாது.

## நம்முடைய அதிபதி எவைகளை அடையாளம் கண்டு, அங்கீகரித்துள்ளாரோ, அவைகள் நமக்கு ஏற்றவைகள்

மேற்கூறிய (தலைப்பின்) படியே கிறிஸ்தவ போர் சேவகனுக்கும் பொருந்தும். நமக்கு தேவையான விஷயங்களும், நம்மை சார்ந்து காணப்படுபவர்களுக்குத் தேவையான விஷயங்களுமாகிய அன்றாட விஷயங்களாகிய வீட்டு வேலைகள், கடை வேலைகள், அன்றாட உழைப்புகள் எதுவாயினும் கர்த்தருடைய ஊழியத்திற்கு உதவியாய் காணப்படும் எதுவாயினும், இவைகள் அனைத்தும் கர்த்தருடைய போர் சேவகர்களாகக் காணப்படும் நம்முடைய பணிக்கு ஏற்றவைகள் ஆகும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு, பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தரின் உயிர்த்தெழுதலையும், பரத்திற்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டதையும் பிரசங்கித்தபோது, எப்படி கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்தாரோ, அதேபோன்றுதான் போதகருக்கும், தனக்கு செலுத்த வேண்டிய வரிப்பணத்தை தனது வாயில் கொண்டிருந்த மீனைப்பிடிக்கும் போதும், கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்தார். அப்போஸ்தலனாகிய பவுலும், மார்ஸ் மேடையிலிருந்து, இயேசுவையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் பிரசங்கித்தபோது, எப்படி சிலுவையின் போர் சேவகராக தனது வேலையை உண்மையாக செய்தாரோ, அப்படியே அவர் கூடாரம் பின்னும் வேலையை செய்யும்போதும் உண்மையான சிலுவையின் சேவகனாகவே காணப்பட்டார். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய கர்த்தருடைய மகிமைக்கென்றும், கனத்திற்கென்றும் உள்ள நோக்கத்தில் என்னவெல்லாம் செய்யப்படுகிறதோ அல்லது நம்முடைய உடன் போர்ச்சேவகனுடைய நன்மைக்கென்று என்னவெல்லாம் செய்யப்படுகின்றதோ அல்லது இந்த போராட்டத்திற்கென்று நம்மை ஆயத்தப்படுத்துவதற்கென என்னவெல்லாம் செய்யப்படுகின்றதோ அல்லது நம்முடைய இரட்சிப்பின் அதிபதி போர்ச்சேவகர்களாகிய நமக்கு ஏற்ற வேலைகள் என அடையாளம் கண்டு அங்கீகரித்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதோ இந்த ஜீவியத்தின் விஷயங்களில் நம்மை சிக்க வைக்கும் சிக்கல்கள் அல்ல. ஆமென்!

---

# சிலுவையில்லையேல் கிரீடமில்லையே

## NO CROSS, NO CROWN

ஓ மகிமையின் கிரீடமே, நீதியின் கிரீடமே,
அழியாமையின் கிரீடமே
உன்னைத்தான் நானே எவ்வாறடைந்திடுவேனே ?
சிலுவைதனை நீ சுமந்திட்டாலே,
கிடைத்திடுமே கிரீடம் உமக்கே,
மெல்லியதாய் தெளிவான குரலினிலே,
எந்தன் ஏக்கத்திற்காய் பதிலும் கிடைத்ததே

அது என்ன சிலுவை ? நான்தான் கேட்டேன்,
வாழுகின்றபோதினிலே தந்தையவர்அனுமதிக்கும்
சோதனையை நாள்தோறும் சுமத்தலாகுமே,
உன் எஜமான் அவர் தாழ்மையிலே தாங்கிட்ட
கண்டனங்கள் கடிந்துரைகள்,
அவர்மீதே அன்புவைக்கும் மற்றவரே
உன்னை மிகத் திட்டுவரே அதுகூடத்தான்,

உலகம் உன்னை ஏற்றுக்கொள்ள
மறுக்கும் வகையில் பார்த்திடுமே
நீர் அன்புசெய்யும் நண்பரெல்லாம்
மௌனமாகக் கடந்துசெல்வார்
நீர் செய்யும் நன்மைகளை எள்ளி நகையாடிடுவார்,
உன்மீதே பொறுமையின்றி எரிந்தே அவர் விழுந்திடுவார்,
நேர்மையாக உனக்குக்கிடைக்கும்
நன்மைகளைத் தடுத்திடுவார்
எல்லாத் தீமைகளும் ஒருங்கிணைந்துவந்தே
உன்னைத் தாக்கும்

உன்னுடைய பெலவீனம் எல்லாமும் அவர் அறிந்தே,
நீ சோர்ந்திட்ட நேரம்தனில் ஆற்றலோடே வெல்லப்பார்ப்பார்,
உன்னை அவர் நசுக்கிடவே மூழ்கடிக்கச் சமயம் பார்ப்பார்
ரத்தம் சிந்திக்கூட அவரை ஆற்றலோடே
எதிர்க்கப்பார்ப்பாய்,
உன்னுடைய மாம்சமெனில் உன்மீதே வெற்றிகாண
ஒவ்வொரு மணித்துளியிலுமே முயற்சிசெய்யும் நீ அறிவாய்,
எப்போதும் ஓயாத போர் ஒன்று நடந்திடுமே,
உம் இருவரில் ஒருவர் மரித்தால்தான்
அப்போர் தான் நிற்குமன்றோ,
மெய் என்ற மெய்தன்னை வெறுத்துவிட்டே
நீயும் வந்து(மெய்– உடல்)

மெய்யான இயேசுமீட்பர் மெய்தன்னை
உண்டு குடித்து(மெய்– சத்தியம், உடல்)
மெய்யாக வாழ்ந்துவந்தால், வென்றிடலாம் ஜீவகிரீடம்
மெய்யாகவே கிடைத்திடுமே நித்ய ஜீவன்
அன்பே, நீ நடக்கும் பாதை
எளிமையான வழித்தடமில்லைதானே
எஜமானே, ஆகும் செலவைக் கணக்கிட்டேன்,
என்றேதான் நானும் சொன்னேன்
உம்முடனே சிலுவைதனை சுமந்துவந்தே சேருதலே
மிக உயர்ந்த மதிப்பாகும்
என்றே நான் எண்ணுகிறேன், மகிழ்வுடனே நான் சுமப்பேன்,
என்னில் அதன்வேலை நிற்கும் வரை நான் முழுதும்
உம்முடைய ஓர் அங்கமாக மாறிவிட்ட பின்பும்தானே,

எனக்கான சிலுவை மிகப் பாரமாகத் தோன்றுகையில்
எனக்கெனவே நீர் ஒதுக்கிவைத்த கிரீடந்தனை
நோக்கிப்பார்ப்பேன் விசுவாசத்திலே,
மகிழ்ச்சியின் கிரீடம், நீதியின் கிரீடம்,
அழிவிலா கிரீடம், நான் அடைய ஏங்கும்
கிரீடமதை பற்றிக்கொள்வேன் !

--1725--

[R4892]

# "இரவின் கீதங்கள்"

### சங்கீதம் 85-ஆம் அதிகாரம்

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்." சங்கீதம் 126:3.

நாம் இன்னும் அழுகையின் இரவில்தான் காணப்படுகின்றோம். வியாதி, வேதனை, பெருமூச்சு மற்றும் மரணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் இவைகள் மேசியாவின் இராஜ்யத்தினுடைய மகிமையான காலைவரை தொடர்ந்து நீடிக்கும். மேசியாவின் இராஜ்யத்தில் பூமி மகிமையான மாறுதல் அடையும் என்று அறிந்தபோது, எத்துணை மகிழ்ச்சியடைந்தோம்! இந்த கருத்தை தீர்க்கதரிசியான தாவீது, சங்கீதம் 30:5-ஆம் வசனத்தில் விவரிக்கின்றார். அதாவது, "சாயங்காலத்தில் (சரியான மொழிப்பெயர்ப்பு-இரவிலே, ஆங்கிலத்தில் night என்று வருகின்றது) அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." பரிசுத்தவானாகிய பவுலும் இதே கருத்தை ரோமர் 8:22-ஆம் வசனத்தில் விவரிக்கின்றார். அதாவது, "இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது, மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது." மகிமையுள்ள தேவனுடைய புத்திரர்கள் தங்கள் கர்த்தரோடுகூட இம்மானுயேலின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள்.

தற்காலத்தில் இந்த தேவனுடைய புத்திரர்கள் மனுஷர்கள் மத்தியில் பெரிதும் அறியப்படவில்லை. மேலும் நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும், தேவனுக்காகவும் இவர்கள் கொண்டிருக்கும் வைராக்கியம் காரணமாக இவர்கள் பொதுவாக/பெரும்பாலும் விநோதமான ஜனங்களாகவே கருதப்படுகின்றனர். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." 1 யோவான்3:2 மேலும் நாம் அவருடைய மகிமையில், கனத்தில், அழியாமையில் பங்கடைந்து அவரோடுகூட பூமியின் சகல குடிகளுக்கும் ஆசீர்வாதங்களை அளிப்பவர்களாகக் காணப்படுவோம்.

## "விடுதலையின் ஒரு பாடல்"

நம்முடைய பாடமாகிய 85-ஆம் சங்கீதம் பலவித அர்த்தங்களில் பார்க்கப்படலாம். இவைகளில் முதலாவது என்னவெனில், யாரெல்லாம் விரும்புகின்றார்களோ, அவர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்பலாம் என்ற கோரேஸ் மன்னனின் அனுமதி வழங்கப்பட்டபோது, பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று இஸ்ரயேல் விடுதலை/விடுவிக்கப் பெற்றதாகும். சுமார் 53,000 பேர் இந்த வாய்ப்பையும் அவருடைய உதவியையும் பயன்படுத்திக் கொண்டார்கள். தெய்வீக கோபம் தங்களைவிட்டு திரும்புவதையும், தெய்வீக தயவும் ஆசீர்வதாங்களும் தங்கள் மீது வருவதற்கான இந்த அறிகுறியின் நிமித்தம் ஜனங்கள் களிக்கூர்ந்தார்கள்.

தேவனுடைய தயவு தங்களிடம் மீண்டுமாக திரும்பும் விஷயம் தேசமாகிய அவர்களின் மீறுதல் மன்னிக்கப்பட்டதை இவ்விடுதலை சம்பவம் உறுதிபடுத்தினது.

இந்த சங்கீதப்பாடல் நமக்கும் கூட பொருந்தும். கடந்த 18 நூற்றாண்டுகளாக இஸ்ரயேல் கிறிஸ்தவ மண்டலத்திற்குள் சிறைப்பட்டுப் போயிருந்தது. அவள் விடுவிக்கப்படுவாள் என்று வாக்குத்தத்தம் பெற்றிருந்தாள். சொல்லர்த்தமான பாபிலோனிலிருந்து திரும்பும்படி விடுதலைக் கொடுத்த கோரேஸ் தேவனுடைய முற்காலத்து ஜனங்களுக்கு பாலஸ்தீனத்திற்கு,

கிருபையினிடத்திற்கு திரும்பும்படியான முழுமையான விடுதலையைக் கொடுக்கும் மாபெரும் மேசியாவிற்கு நிழலாக இருக்கின்றார். இஸ்ரயேலும் வரவிருக்கிற இந்த விடுதலையைக் குறித்து, பரிசுத்தவானாகிய பவுலும், ரோமர் 11:25-29-வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். விடுவிக்கிறவர், கூட்டிச்சேர்ப்பதைக் காட்டிலும் அதிகமாய் செய்வார். சங்கீதம் 25-ஆம் அதிகாரத்தில் முன்னுரைக்கப்பட்டவைகளையும் அப்போஸ்தலர் கூறினவைகளையும் விடுவிக்கிறவர் செய்வார். ரோமர் 11:27 "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது." எரேமியா 31:31-34 மற்றும் எபிரெயர் 8:8-11-வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

இஸ்ரயேலுடைய பாவங்களும், உலகத்தின் பாவங்கள் போன்று இன்னமும் நீக்கப்படவில்லை. மாபெரும் மீட்பர் பாவத்திற்காக மரித்தார். மேலும் அவர் பாவிகளின் நண்பனாகவும் இருக்கின்றார் என்றாலும் உலகத்திற்காக அல்லாமல் சபையான நமக்காகவே தேவனுடைய சந்நிதியில் தோன்றியுள்ளார். அவர் சபைக்காக பரிந்துரை செய்பவர். தேவனை கிட்டி சேர்வதற்கு விருப்பமுள்ளவர்களுக்கு அதாவது, பரிசுத்தமானவர்களுக்கு அதாவது, நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுப்பவர்களுக்காக மாத்திரமே தவிர வேறு எவருக்கும் அவர் பரிந்துரைப்பதில்லை.

இப்பொழுது ஆளுகையிலிருந்து மனுக்குலத்தை தவிக்கச் செய்யும் இரண்டு/இரட்டை மன்னர்களாகிய பாவம் மற்றும் மரணத்தின் கீழ் உலகம் அடிமைப்பட்டுள்ளது. இந்த அடிமைத்தனத்தின் நிலைக்குள்ளாகவே நாம் பிறந்துள்ளோம். இதைக் குறித்து வேதவாக்கியங்கள் சங்கீதம் 51:5 "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறுகின்றது. மனரீதியாக, ஒழுக்கரீதியாக, சரீர ரீதியாக நாம் சுதந்தரித்துள்ள பூரணமற்ற தன்மைகள் மற்றும் பெலவீனங்களின் கீழ் தவிக்கும் நமது இன்பமானது பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்டுள்ள விடுதலைக்காக ஏங்கித்தவிக்கின்றது. மனுக்குலத்தின் பெரும்பாலானவர்கள் தங்களின் அடிமைத்தனத்திலுள்ள கசப்புகளை உணர்ந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. விடுவிக்கப்பட்டால் மகிழ்ச்சியடைவார்கள்.

மாபெரும் விடுவிப்பவர் நிஜமான கோரேஸ் ஆவார். விரைவில் அவர் ஜெயம் கொண்டு வானத்தின் கீழ் தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். விரைவில் சபை வகுப்பார் பரிசுத்தவான்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மகிமையடைவார்கள். பின்னர் தெரிந்துகொள்ளப்படாதவர்களுக்கான ஆசீர்வாதக் காலம் வரும். மனுக்குலம் மனித பூரணம் அடைவதற்கும், மேசியாவின் இராஜ்யமும் வல்லமையையும் உலகத்தைப் பரதேசியாக்குவதற்குமான காலமும் வரும். 1 கொரிந்தியர் 15:25, 26 "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்." மரணம் அழிக்கப்படும் சீயோல் ஹேடிஸ், குழி "அவனவன் தன்தன் வரிசையில்" உயிர்ப்பிக்கப்படும்போது அழிக்கப்படும்.

## "இரவிலும் கீதம்பாட அருள்செய்கிறவர்"

ஒட்டுமொத்த சிருஷ்டியும் பாவம் மற்றும் துக்கத்தின் சுமையின் கீழ் தவித்துக் கொண்டிருக்கையில் பரிசுத்தவான்களாகிய சிலர் மாத்திரமே வாழ்க்கையின் கஷ்டங்கள் மத்தியிலும் மற்றவர்களைப் போல அல்லது மற்றவர்களைக் காட்டிலும் பாவத்தின் விளைவில் பங்குக்கொள்ளும் மத்தியிலும் பாட இயலும், களிக்கூற இயலும். இவர்களுடைய சந்தோஷத்திற்கான இரகசியம் இரண்டாகும். அதாவது, (1) இவர்கள் தேவனோடு ஒப்புரவாகியுள்ளனர், (2) இவர்கள் தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கென ஒப்புக்கொடுத்துள்ளனர். மீட்பர் மீதான விசுவாசத்தின் வாயிலாகவும் ஒப்புரவாக்குதலின் அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாயும் இவர்கள் இந்த புதிய உறவை பெற்றுள்ளனர். இவர்கள் தங்களுடைய சுய சித்தத்தை ஒப்புக்கொடுத்து, தங்களால் முடிந்தமட்டும்

தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவேன் என உடன்படிக்கை செய்து, தேவனுக்கு என்று அர்ப்பணித்து, "இடுக்கமான வாசல்" வழியாய் பிரவேசித்துள்ளனர்.

சுய சித்தத்தை தேவனுக்கென்று ஒப்புக்கொடுப்பதினாலும், தங்களுடைய வாழ்க்கையின் அனைத்து விஷயங்களும், தேவனுடைய பராமரிப்பின் கீழ் இருக்கின்றது என உணர்ந்து கொள்வதுமே இருதயத்திற்கு சமாதானத்தை அருளுகின்றது. சுய சித்தத்தின்படி நிறைவேற்றுவதற்கு என அவர்கள் முற்காலத்தில் நாடினபோதும், சிருஷ்டிகளுக்குரிய கனத்தை தங்களின் இருதயத்தில் புறக்கணித்திருந்தபோதும், தங்களுடைய ஜீவியங்களில் கீழ்ப்படிதல் இல்லாதபோதும், அறிந்திராத இளைப்பாறுதலும், சமாதானமும் இந்த தேவனுக்கு ஒப்புக்கொடுத்து சரணடைந்த நிலையில் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

அதேபோல் இவர்களிடம் சந்தோஷம், சமாதானம் மற்றும் தேவனுக்கு நன்றி செலுத்தும் பாடலும் உள்ளது. காரணம், இவர்களுக்கு தேவன் தம்முடைய தெய்வீக நோக்கம் குறித்ததான அறிவை அருளி வருங்காரியங்களை அவர்களுக்குக் காட்டுகின்றார். இவர்கள் தற்காலத்து பாடுகள் மற்றும் சோதனைகளை தாண்டி பார்க்கின்றனர். இவர்கள் தற்காலத்து பாடுகளை தொடர்ந்துவரும் மகிமைகளைக் காண்கின்றனர். இவர்கள் சகல பிரிவுகளிலும், சகல தேசங்களிலும் உள்ள பரிசுத்தவான்கள் சபை ஜனங்கள் தான் தேவனுடைய வருங்கால சுதந்தரவாளிகள் எனவும், மகிமை, கனம், அழியாமை மற்றும் மீட்பரோடு மகிமையான இராஜ்யத்தின் சுதந்தரர்கள் எனவும் காண்கின்றனர். இது அவர்களை உற்சாக மூட்டுகின்றது. மேலும் பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படப் போகிறதற்கானதெய்வீக திட்டத்தின் சுருக்கத்தைக் காண்கின்றனர். பரிசுத்தவான்கள் அல்லாத தங்களுடைய நேசத்திற்கு உரியவர்கள் மீதும் தேவன் அக்கறை கொண்டுள்ளார் எனவும், முழு மனுக்குலத்தின் மேலும் தேவன் அக்கறை கொண்டுள்ளார் என அவர்கள் உணர்ந்து கொள்கையில், இது அவர்களை களிக்கூற செய்கின்றது. கிறிஸ்து மூலமும் மகிமையடைந்த சபையின் மூலமும், பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு தேவன்ஏற்பாடு செய்துள்ளார் என இவர்கள் உணர்ந்து கொள்கையில், இவர்கள் மனித சுபாவத்திலிருந்து தெய்வீக/திவ்விய சுபாவத்திற்கான மாறுதலை எதிர் நோக்கி காத்திருக்கும் போதும், அதாவது, "பரதீசியாய் தங்கும் வீட்டிலும் சந்தோஷமாய்" இருப்பார்கள்.

---

R 4895/382/450

# கொஞ்சம் நேரமே

கொஞ்சம் நேரம்தான், அவர் பூலோகத்திற்கே வந்துவிட்டாரே,
அந்த மணிநேரம் விரைந்து நெருங்குதே,
ஆசீர்வதிக்கப்பட்ட நேரம்: மகிமை நிறைந்த இந்த காலை,
அவர் திருமுகம் தன்னை நாம் பார்க்கும் வேளை தானோ?
நம் சோதனைகள் எத்தனை இலகுவாய்த் தோன்றும் அந்த நேரத்தில்,
நம் யாத்ரீகப் பயணத்தின் பாதை மிகவும் சுருங்கி சிறியதாய் தோன்றுதே,
பூமியின் வாழ்க்கை, ஓர் விசுவாசமிகுந்த கனவு, அவிழ்க்கப்படுமே,
அந்த விசுவாசக் காலையிலே.

# நமது கர்த்தருடைய ஜீவ-உரிமைகள் மீதான கேள்விகள்

## ஆவிக்குரிய ஜீவ-உரிமைகள் பலிசெலுத்தப்படவில்லை

கேள்வி.--நமது கர்த்தர் மனிதனாகிடுவதற்கு முன்னதாக ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்ட போது, அவர் எந்த உரிமைகளை உடையவராய் இருந்தார் மற்றும் அவர் மனிதனான போது, அந்த உரிமைகளுக்கு என்னவாயிற்று?

பதில்.--ஐசுவரியமானவராய்க் காணப்பட்ட நமது கர்த்தர் பூமிக்குரிய உரிமைகளுக்கும் பரிபூரணத்திற்கென்றும், பரலோக உரிமைகளையும், பரிபூரணத்தையும் (exchange) மாற்றிக்கொண்டதன் காரணமாக, அவர் நம் நிமித்தமாய்த் தரித்திரரானார் (2 கொரிந்தியர் 8:9). இந்த (exchange) மாற்றிக்கொள்ளுதலானது பலியல்ல (பலியாக ஏறெடுக்கப்படவில்லை); ஏனெனில் மனிதனாகிய கிறிஸ்து இயேசுதான் மீட்கும்பொருளானார். மனிதனாகிடுவதற்கு முன்னதாக அவர் கொண்டிருந்த உரிமைகள் எதையும் அவர் பலிசெலுத்திட்டதாக வேதவாக்கியங்களில் எதுவும் சொல்லப்படவில்லை. எனினும் அவற்றை "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" துறந்துவிட்டார் (எபிரெயர் 12:2).

மனிதனுக்கு அவசியமான உரிமைகள், பூமிக்குரிய உரிமைகளாக, மனுஷீக உரிமைகளாகக் காணப்படுகின்றன; மேலும் இந்த உரிமைகளைத்தான், தம்முடைய பூமிக்குரிய ஜீவனைப் பலிசெலுத்தினதன் வாயிலாக இயேசு மீட்டுக்கொண்டார். ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்ட அவரால் ஆவிக்குரிய ஜீவிக்கடுத்த உரிமைகளைப் பலிசெலுத்தியிருக்க முடியாது; ஏனெனில் எந்த ஆவிக்குரிய ஜீவிகளும் மரணத்திற்குள்ளாகத் தீர்க்கப்படவில்லை. மனிதனாகிய ஆதாமையே அவர் மீட்கவேண்டியிருந்தது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:21, 22).

## மீட்கும்பொருள் விலைக்கிரயம் கல்வாரியில் கொடுக்கப்பட்டது

கேள்வி -- கல்வாரியில் நமது கர்த்தர் எதைச் செய்துமுடித்தார்?

பதில் -- நமது கர்த்தர் ஜீவனைக் கொடுத்து வைத்த காரியமானது, நாம் ஏற்கெனவே காண்பித்திருந்ததுபோன்று மனுக்குலத்தை மீட்டிடவில்லை, மாறாக தேவனுடைய ஏற்றகாலங்களிலும், வேளைகளிலும் மனுக்குலம் விடுவிக்கப்படத்தக்கதாக மீட்கும்பொருள் விலைக்கிரயம் வழங்கப்பட்ட காரியமாகக் காணப்பட்டது; அவர் தம்மையே *antilutron*-ஆக (சரிநிகர் சமான விலையாக) கொடுத்தவராயிருந்தார் (1 தீமோத்தேயு 2:5, 6).

நமது கர்த்தருடைய பலியும், அவர் மனமுவந்து தமது ஜீவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததும், தேவ பார்வையில் சிறப்பானதாய்க் காணப்பட்டது மற்றும் உயர்தளத்தில் ஒரு புதிய ஜீவனை அவருக்குக் கொடுப்பதன் வாயிலாக பிதா அவருக்கு வெகுமானமளித்தார். புதிய ஜீவனானது யோர்தானில், அவரது ஜெநிப்பித்தலில் துவங்கினது மற்றும் அவரது உயிர்த்தெழுதலில் நிறைவடைந்தது. பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையானது, பாவத்தின் காரணமாய்ப் பறிக்கொடுக்கப்படாததால், அது தொடர்ந்து நமது கர்த்தருக்கு உரியதாகவே இருந்தது. ஒரு மனிதனுடைய பாவத்திற்காக என்று, நீதிக்கு ஈடுகட்டும் வண்ணமாக அந்தப் பூமிக்குரிய ஜீவ-உரிமையினை அவர் கொடுக்க வேண்டுமென்றிருக்கின்றார். மாம்ச - ஆத்துமாவாக அவர் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார். அவர் ஆவிக்குரிய ஆத்துமாவாகப் பலனளிக்கப்பட்டார். ஆதாம் மற்றும் அவரது சந்ததியாருக்காகப் பயன்படுத்துவதற்கும், அவர்களுக்காகப் புதிய உடன்படிக்கையினை முத்திரையிடுவதற்குமென்று தம்முடைய மாம்ச ஆத்துமாவிற்கடுத்த உரிமையினை அவர் உடையவராய் இருக்கின்றார்.

## நீதியும்/புண்ணியமும், ஜீவ - உரிமையும்

கேள்வி -- உலகத்தின் பாவங்களுக்காகவெனக் கிறிஸ்துவின் புண்ணியம்/நீதி பயன்படுத்தப்படும் காரியத்திற்கும், உலகத்தின் பாவங்களுக்காகவெனக் கிறிஸ்துவின் ஜீவ-உரிமையானது அவரால் கொடுக்கப்படும் காரியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தினை நாம் எப்படி அறிந்துகொள்வது?

பதில் -- மனித தளத்தில் நமது கர்த்தருக்குக் காணப்பட்ட நீதியானது, அவர் மனிதனாகக் காணப்பட்டபோது, அவருக்கு உரியதாகவே காணப்பட்டது. இப்பொழுதோ மனிதன் என்ற விதத்தில் அவருக்கு நீதி ஏதுமில்லை. அந்த நீதியினால் உண்டான தகுதியை/credit மாத்திரமே பிதாவின் பார்வையிலும், நீதியின் பார்வையிலும் ஒரு புண்ணியமாக - அதாவது சுவிசேஷ யுகத்தின்போது சபைக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளதும், ஏற்றகாலத்தில் உலகத்திற்காகப் பயன்படுத்தப்படப்போகின்றதுமான புண்ணியமாகப் பெற்றிருக்கின்றார்.

மனுஷீக ஜீவ-உரிமைகளானது, இயேசு மரிக்கும் தருணம்வரையிலும் அவருக்கு அவசியமாய் இருந்தது. மரிக்கையில் பிதாவின் ஏற்பாட்டிற்கு இசைவாக, அவர் அதைப் பிதாவிடம் ஒப்படைத்துவிட்டார். "பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று அவர் கூறினார் (யோவான் 18:11). அவர் மனிதனாக இருந்தபோது, அந்த ஜீவ-உரிமைகளானது அவருக்குத் தேவையானவைகளாக இருந்தன; ஆனால் இப்பொழுதோ அவை அவருக்கு அவசியமில்லை; ஏனெனில் அவர் மேலான உரிமைகளை உடையவராயிருக்கின்றார். ஆனாலும் அவர் மனுஷீக ஜீவனுக்கான ஓர் உரிமையினையும் உடையவராயிருக்கின்றார்; இந்த உரிமையானது அவருக்கென்று தனிப்பட்ட விதத்தில் அவசியமில்லாததாகும் - எனினும் அது அவருக்கு - அதாவது மனுக்குலத்தின் உலகத்தார் விரும்பும்பட்சத்தில், அவர்கள் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாய், அவர்களுக்குக் கொடுத்திடுவதற்கு, அவருக்குத் தேவையாய் இருக்கின்றது.

கர்த்தரானவர் அவரது நிலைமையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும். முதலாவதாக அவர் ஆவியின் ஜீவியாகக் காணப்பட்டிருந்தார்; இரண்டாவதாக அவர் மாம்சமாக்கப்பட்டவராய் இருந்தார் - பரிசுத்தராயும், மாசில்லாதவராகவும், குற்றமில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார்; மூன்றாவதாகப் பூமிக்குரிய ஜீவனானது தம்மிடமிருந்து எடுக்கப்படத்தக்கதாக அவர் அனுமதித்ததின் காரணமாக, அவரை உயர்வாய் உயர்த்தி அவருக்குத் தேவன் தனிப்பட்ட விதத்தில் பலனளித்தார் (பிலிப்பியர் 2:9).

இந்த மகிமையான ஜீவி சில விஷயங்களை மனுக்குலத்தின் உலகத்திற்கென்று செய்யும்படிக்குத் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். இக்காரியங்களையெல்லாம் செய்வதற்கான வல்லமை என்பது, அவருக்கென்று தேவைப்படாத வண்ணமுள்ள பூமிக்குரிய ஜீவனுக்கான ஓர் உரிமையினை அவர் இன்னமும் உடையவராய் இருக்கின்றார் எனும் உண்மையின் அடிப்படையினாலானதாகும். ஆயிரவருட யுகத்தின்போது உலக ஜனங்கள் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இசைவாக வருகையில், அவர்களுக்குப் படிப்படியாக அதைக் கொடுக்கத்தக்கதாக, அதை அவர் வைத்திருக்கின்றார். அதில் ஒரு பகுதியை - தம்முடைய அங்கத்தினர்களாகுவதற்கு விருப்பம்கொள்பவர்களுடைய குறைவுகளை மூடத்தக்கதாகவும், அவர்களது பலிகளைப் பிதா ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவானதாக்கவும் வேண்டி இப்பொழுது சாற்றுகின்றார்.

கிறிஸ்துவின் புண்ணியமானது/நீதியானது, பிதாவின் சித்தத்தைச் செய்கிறதில் காணப்பட்டது. அதற்குப் பிதா திரைக்கு அப்பக்கத்தில் புதிய சுபாவத்தினால் அவருக்குப் பலனளித்தார். மேலும் அந்த நீதி/புண்ணியம் இன்னமும் காணவேபடுகின்றது; மேலும் அவர் மனுக்குலத்திற்கு எதைச் செய்தாலும்கூட, அவர் பிதாவின் பார்வையில் எப்போதுமே தனிப்பட்ட ஒரு நீதியை/புண்ணியத்தினை உடையவராகவே இருப்பார். ஆகையால் அவர் தம்முடைய நீதியை/புண்ணியத்தினைக் கொடுத்துவிடுவார் என்று நாம் எண்ணிடமுடியாது; இப்படிக் கொடுத்துவிடுவாரானால், அவர் நீதி/புண்ணியம் இல்லாமல் விடப்படுவார். ஆனால் தமக்கான வெகுமானத்தை அடைந்தாலும், அவர் மனுஷீக ஜீவனுக்கான உரிமையினை உடையவராய் இருப்பார் மற்றும் இப்படிக் காணப்படுவதே தேவனுடைய ஏற்பாடாகவும் காணப்படுகின்றது. இதுவே பிதாவின் பார்வையில் ஒரு புண்ணியமாக - ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளுடைய மீட்பிற்கான ஒரு கிரயமாக - அவர் விலைகொடுத்து வாங்கினதாகக் காணப்படுகின்றது. இதை அவர் சீக்கிரத்தில் உலகத்திற்காகப்

--1731--

பயன்படுத்தப்போகின்றார் மற்றும் இதைத்தான் அவர் இப்பொழுது நமக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார்.

## கிறிஸ்துவின் புண்ணியத்தினை/நீதியினைச் சாற்றுதல்

கேள்வி -- "கிறிஸ்துவினால் சாற்றப்படும் புண்ணியம்/நீதி" என்றால் என்ன?

பதில் -- கிறிஸ்துவினால் சாற்றப்படும் புண்ணியத்தைக் குறித்துப் பேசுகையில், அவர் தனிப்பட்ட ஒரு புண்ணியத்தினை, அவருக்கென்று ஒரு நீதியினை வைத்திருந்தார் என்றும், அதை அவர் ஒருபோதும் கொடுத்துவிடவில்லை என்றும் நாம் தெளிவாய் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அவரது நீதி, அவருக்கு வேண்டியிருந்தது. அப்படியானால் அவர் நீதியை இழக்காமல் அவரால் அவரது நீதியினை நமக்குக் கொடுத்திட முடியாது. இதே விஷயம் அவரது ஜீவ-உரிமை விஷயத்திலும் பொருந்துகின்றதாய் இருக்கும். ஜீவிப்பதற்கான ஓர் உரிமையினை அவர் உடையவராய் இருந்தார்; **ஆனால் ஜீவிப்பதற்கான இந்த உரிமையினை அவர் நமக்குத் தரிப்பித்துத் தரவில்லை/சாற்றிடவில்லை**; ஏனெனில் அது அவருக்கும் வேண்டியதாயிருந்தது. அவருக்கு அவரது சொந்த தனிப்பட்ட புண்ணியம்/ நீதி தேவையாயிருந்தது.

அப்படியானால் ஜீவ-உரிமையினையும், நீதியினையும் அவர் ஆயிரவருட யுகத்தின்போது மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார் என்றும், சுவிசேஷ யுகத்தின்போது சபைக்குச் சாற்றுகின்றார் என்றும் நாம் எந்த அர்த்தத்தில் சொல்லி வருகின்றோம்? பின்வரும் விதத்திலாகும்: அவர் தமது **மனுஷீக** ஜீவ-உரிமையினை - அதாவது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் கீழ்ப்படிதலுக்கான பலனாக அவருக்குரியதான புண்ணியத்தினை, அதாவது ஒரு மனுஷ ஜீவியாக வாழ்வதற்கான உரிமையினை அல்லது சிலாக்கியத்தினை மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார். அந்த உரிமையானது நியாயப்பிரமாணத்திற்கான கீழ்ப்படிதலின் காரணமாக அவரால் அடையப்பெற்றதாகும் (ரோமர் 10:5; கலாத்தியர் 3:12). இப்பொழுது அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டிருக்கின்றார்; திவ்விய சுபாவமுடையவராய் இருக்கின்றார் மற்றும் இனிமேல் மனுஷீக ஜீவனுக்கான அந்த உரிமையும், அதனோடுகூட வரும் நீதியும் அவருக்குத் தேவைப்படாது. அவர் தமது தற்போதைய நிலைமையில் முற்றிலும் திருப்தியடைந்தவராகவும், முழுமையடைந்தவராகவும் காணப்படுகின்றார். விரைவில் அவர் மனுஷீக ஜீவனுக்கான உரிமையினையும், அதனோடுகூட வரும் நீதியையும், அதாவது அந்த மாம்சீக பலியின் புண்ணியத்தினை உலகத்திற்குக் கொடுக்கவிருக்கின்றார். இதையே அவர் தற்காலத்தில் சபையின் அபூரணங்களை நிறைவுபடுத்திடுவதற்கென்று, சபைக்குச் சாற்றுகின்றவராய் இருக்கின்றார். நாம் அவரில் முழுமையடைந்திருக்கின்றோம், ஆகையால் அவர் வாயிலாக நாம் நம்மையே பலிசெலுத்திடும்போது, இது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க பலியாகக் காணப்படும் மற்றும் பரிசுத்தமானதாய்க் கருதப்படும்.

## ஜீவ-உரிமைகள் புது உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படுகின்றது

கேள்வி -- கல்வாரியில் கொடுத்து வைக்கப்பட்டதான இயேசுவின் ஜீவ-உரிமைகளானது, ஆயிரவருட யுகத்தின் போது எங்கே காணப்படும்?

பதில் -- மகாபெரும் மீட்பரின் ஜீவ-உரிமை என்று நாம் சொல்லுகிற காரியமானது, பாவநிவாரண இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று நாம் புரிந்திருக்கின்றோம். நிழலில் பாவநிவாரண நாளின் இறுதியில், பாவநிவாரண இரத்தமானது ஒட்டுமொத்த மனுக்குலத்திற்காக நீதிக்குச் செலுத்தப்படும் மற்றும் அது அவர்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படும்; அதாவது அப்போஸ்தலன் சொல்லுகின்றதுபோல், . . . "ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக" ஆகும் (எபிரெயர் 2:17). ஜனங்கள் தங்கள் மரண ஆக்கினையினின்று விடுதலைப்பண்ணப்பட்டவுடன், அவர்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள துவங்குவதற்குரிய நிலைமையில் காணப்படுவார்கள்; ஆனாலும் இக்காலத்திற்கு முன்பல்ல. மகா பிரதான ஆசாரியனென நமது கர்த்தர் சுவிசேஷ யுகத்தின் முடிவில், தேவனுக்கும், ஆபிரகாமின் சந்ததியாகிய மாம்சீக இஸ்ரயேலுக்கும் இடையில், பாவநிவாரண இரத்தத்தைக்கொண்டு புது உடன்படிக்கையினை முத்திரையிடுவார்; மேலும்

அவர் "தம்முடைய சரீரமாகிய சபையோடு," அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். அந்தப் பிரமாணத்திற்கு முழு இசைவாக வருகின்ற யாவரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். அந்த வருஷங்கள் முழுவதும் - திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களை ஜனங்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று வாக்களிக்கின்றதான, அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை, காரியங்களை நடந்தேற்றுவார்.

அப்போது மனுஷ ஜீவனுக்கான உரிமையானது மீட்பராகிய நமது கர்த்தருடைய கரங்களினின்று கடந்துபோய், அதுமுதற்கொண்டு உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படும்; அது மனிதன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் அறிவித்த யாவற்றையும் உறுதியளித்திடும். மனுஷருடைய கல்லான இருதயம் மாறி, சதையான இருதயம் உண்டாகும்; மற்றும் இந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்கேற்ப ஜீவிப்பவர்கள், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். நமது கர்த்தரினால் கொடுத்துவைக்கப்பட்டதான ஜீவ-உரிமைகளே, ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கையாய்க் காணப்படும். அந்தப் பிரமாணத்தினைக் கைக்கொள்ள தவறுபவர்கள் சிட்சைகள் பெறுவார்கள். இந்த ஏற்பாட்டின் வாயிலாக கிறிஸ்து புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரென, ஆயிரவருடங்களளவும் ஆசீர்வாதங்களை வழங்கிக்கொண்டிருப்பார். உலகத்தின் பாவங்களுக்காக - உலகத்தின் மீட்பிற்காக நீதியிடம் கொடுக்கத்தக்கதாக, ஜீவனுக்கான உரிமையினை நமது கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றார். இந்த யுகத்தின் முடிவில், அவர் இந்த உரிமையினைக் கொடுத்துவிட்ட உடனே, நீதி அதைக்கொடுக்க, மனுக்குலம் அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

---

--1733--

# ஹா! ஆசிக்கிறேன்

கீழ்ப்படிந்து தாழ்மையிலே அன்புடன் உம் சித்தம்செய்ய
ஆசிக்கிறேன் ! ஆசிக்கிறேன்! உம்மிடமே ஜெபிக்கின்றேன்,
உதவிடும் எம் நேச இரட்சகரே! ஆண்டவரே!
என்னையே மகிழ்ச்சியான செய்தியாக ஆக்கிவிட
என்னையும் பயன்படுத்தும், நானே ஆசிக்கிறேன்
பசிதாகம் கொண்டுள்ள மானிடர்கள் யாவருமே
உம்முடைய இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டுமன்றோ!
ஆசிக்கிறேன்! ஆசிக்கிறேன்!
எனை பயன்படுத்த யாசிக்கிறேன்
நீரே என் கரம் பற்றி நடத்திச்செல்ல ஆசிக்கிறேன்
பாதம் ஒற்றி நடக்கவேண்டும், நீர்மட்டும் நடத்தும் என்னை
செய்திசொல்ல வாயிலிலே காத்திருக்கேன் இயேசுவே நான்,
ஆணையிடும், உம் ஆவி தந்து நிரப்பிவிடும்
எனை முழுதும், சித்தம் செய்திடவும் செய்திசொல்ல
தயார்ப்படுத்தும்

--1734--

— அமைதியுடன் உம்மில் நான்
அமைதியாக காத்திருக்கேன் இன்னமுமே
என்னதான் கடினமான வேலை என்றபோதிலுமே

**நீர் செய்தவண்ணம் செய்திடவே வழிகாட்டும் அன்புளமே!**

**இப்பாருலகம் உம் ஆவி அறிந்துகொள்ள ஆசிக்கிறேன்**

**ஆசிக்கிறேன் பூமி எல்லாம் யாவே புகழ் பாடவேண்டும்**

**பாருலக ஆஸ்திகளின் ஆசைதனை விட்டொழித்து**

**நீர் நியமித்த வழிதனிலே நடந்திடவும் ஆசிக்கிறேன்**

**மீட்புக்கான ஒவ்வொருஅடியையும்**

**உம்முடனே எடுத்துவைத்து**

**பாடுபட்டு மகா பரிசுத்தஸ்தலந்தனில் நிற்க ஆசிக்கிறேன்**

**மகிழ்வுடனே பலிசெலுத்திஆனந்த களிப்புடனே**

**உம் வழியில் யாம் செல்ல ஆசிக்கிறேன் ஆசிக்கிறேன்**

**என் விளக்கை சுத்தம்செய்து எண்ணெயினால் நிரப்பிவிட்டீர்**

**‘வா என் அன்பே! உன் பிரயாசம் விட்டொழித்து**

**சுதந்தரத்தில் பங்குகொள்வாய் !’**

**என்றே என் மணவாளன்** **--1735--**

**என்னை அழைக்கும் சத்தம் கேட்கும் ! நானறிவேன் !**

– Dr.*ஆக்னஸ் ஹாவிலண்ட்*

**[R4917]**

# “அன்பைக் குறித்து சுயபரிசோதனை”

*“நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களை சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.” - 2 கொரிந்தியர் 13:5*

அன்பை விவரிப்பது என்பது கூடாத காரியமாகும். இப்பண்பு இல்லையெனில் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படவும் முடியாது! அப்போஸ்தலனும் அன்பை விவரிக்க முற்படாமல், அதன் அம்சங்கள் சிலவற்றை மாத்திரம்தான் வெளிப்படுத்துகின்றார். யார் ஒருவர் இத்தகைய அம்சங்களை உடைய அன்பை பெற்றிருக்கின்றார்களோ, அவர்களால் அதை உணர்ந்து கொள்ள முடியுமே தவிர, மற்றபடி விவரிக்க முடியாது. அன்பு, ஜீவன் மற்றும் ஒளியைப் போன்று விவரிக்க கடினமானதாகும். அன்பு ஏற்படுத்தும் தாக்கத்தை வைத்தே அதனை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றோம். அன்பு தேவனுடையதாகும். அன்பு இருதயத்திலும், நாவிலும், கைகளிலும், சிந்தனைகளிலும் தேவனைப் போன்று இருந்து, அனைத்து மனித பண்புகளையும் மேற்பார்வையிட்டு, அப்பண்புகள் ஆளுகை செய்ய நாடுகின்றது. எங்கு அன்பு குறைவுபடுகின்றதோ, அங்கு தீமை காணப்படுகின்றது. எங்கு அன்பு இருக்கின்றதோ, அங்கு வரும் பலன்கள் அன்பின் அளவிற்கு ஏற்ப காணப்படும். மேலும் அவைகள் நன்மையானவைகளாகக் காணப்படும்.

கிறிஸ்தவனிடம் சாந்தம், பொறுமை, தயவு, நற்பண்புகள் முதலியவை வெளித்தோற்றமாக மாத்திரம் இருப்பது, தேவனுடைய பார்வைக்கு முன்பும் போதுமானதாக இருக்காது. அவனுடைய பார்வையிலும் போதுமானதாக இருக்காது. இப்பன்புகள் அன்பின் ஆவியினால் உருவாக்கப்பட்டு, கிறிஸ்தவனின் இருதயத்திற்குள் நிரம்பி விரிவாக வேண்டும். அநேக ஆவியின் கனிகள், ஜெநிப்பிக்கப்படாத ஜனங்களினால் நல்ல வளர்ப்பின் காரணமாக உண்டான பண்புகள் என்று கூறப்படுகின்றது. மேலும் அநேக தருணங்களில், அன்பின் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் இருக்கும் எண்ணங்கள் மற்றும் இருதயங்களை மறைப்பதற்கு இப்பண்புகள் முகமூடியாக அல்லது வேஷமாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

தெய்வீக எதிர்பார்ப்பிற்கு ஒத்துப்போகத்தக்கதாக நம்முடைய பண்புகளை மாற்றுவதற்கு நம்மிடம் எந்த அளவிற்கு வைராக்கியம் காணப்படுகின்றதோ, அந்த அளவே தெய்வீக அன்பைக் குறித்து நாம் புரிந்து கொண்ட அளவும் இருக்கின்றது. இயல்பாகவே முரட்டுத்தனம், விகாரம் மற்றும் ஒழுக்கக்கேடான பண்புகள் உள்ளவர்கள், மாற்றம் காணபிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கின்றார்கள். ஏனெனில் தெய்வீக அன்பாகிய கிருபை, இருதயத்தில் பிரவேசித்து, அந்த கிருபை அனைத்து சிந்தனைகளிலும், வார்த்தைகளிலும், வெளி மனுஷனின் கிரியைகளிலும் வெளிப்பட காலம் எடுக்கின்றது. ஆனால் பிறப்பிலேயே மென்மையும், நன்கு பயிற்சிவிக்கப்பட்டவர்களும் தேவனுடைய கிருபை கிரியை செய்யாமலேயே அநேக வெளியரங்கமான பண்புகளில் நல்லவர்களாகவே இருப்பார்கள். யார் இந்த கிருபைகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்றும், யார் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், எந்த அளவிற்கு அது மற்றவர்களின் இருதயங்களில் வளர்ந்திருக்கிறது என்று நியாயந்தீர்ப்பதற்கு இருதயத்தை வாசிப்பவருக்கு மாத்திரம் முடியுமே ஒழிய வேறு ஒருவராலும் கூடாது. ஆனால் ஒவ்வொருவராலும் தன்னைக் குறித்து தீர்ப்புச் சொல்ல முடியும். இந்த பரிசுத்த ஆவியினால் அன்பினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொருவரும், பரலோகத்திலிருக்கும் தனது பிதாவை மகிமைப்படுத்தும் பொருட்டாகவும், "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் பொருட்டாகவும், தங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் தொடர்பு கொள்ளும் அனைத்துவிதங்களிலும்/விதங்களின் மூலமும் அன்பின் ஒளியை பிரகாசிக்கச் செய்ய வேண்டும். (1 பேதுரு 2:9)

ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தின் "வரங்களில்" தீர்க்கதரிசனம் வரம் என்பது, மிக உயர்வான வரமாக இருந்தது. தேவனுடைய இரகசியங்கள் குறித்து அறிவது, மிகவும் மேன்மையானதாகக் கருதப்பட்டது. மேலும் கிறிஸ்தவனிடம் காணப்பட வேண்டிய விஷயங்களில் அதிக விசுவாசம் என்பது பிரதானமாக இருந்தது என்றாலும், இவைகளனைத்தும் முழுமையாக இருந்து, அன்பு ஒருவனுக்கு இல்லையெனில் அவன் பூஜ்யமாக மாத்திரம் இருப்பான் என்றும், புதிய சுபாவம் ஜெநிப்பிக்கப்படுவதற்கு அன்பு தேவையாக இருக்கிறபடியால், அன்பு இல்லாதபோது அவர் புதிய சிருஷ்டியின் ஓர் அங்கமாகவும் கருதப்படான் என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இது எத்துணை அருமையான பரீட்சை! நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" என்பதே அப்போஸ்தலரின் ஆலோசனையாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் இப்பரீட்சையை தங்களிடத்தில் செய்யக்கடவோம். அதாவது, என்னுடைய ஞானம்/அறிவு அல்லது புகழ் அல்லது சொல்திறம் கொண்டு என்னை மதிப்பிடுவதற்குப் பதிலாக தேவன் பேரிலும், சகோதர சகோதரிகளின் பேரிலும், தேவனுடைய நோக்கத்தின் பேரிலும், பொதுவான மனுக்குலத்தின் பேரிலும், என்னுடைய சத்துருக்களின் பேரிலும் எனக்குள்ள அன்பை மதிப்பிடுவதற்கு நான் தேவன் முன்பு பொருட்டற்றவனாக இருக்கின்றேனா? அல்லது கொஞ்சம் பாத்திரமாக இருக்கின்றேனா?

அன்பின் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத எவரும், தேவனுடைய ஆழமான இரகசியங்களைப் பற்றின அறிவை பெற்றுக் கொள்ள முடியும் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில், தேவனுடைய ஆழமான இரகசியங்களை சுபாவத்தின்படியான மனுஷன் அறிந்து கொள்வதில்லை. மாறாக தேவனுடைய ஆவியினாலேயே அறிந்து கொள்கின்றான். ஆனால் ஒருவன் தனக்கு தேவனுடைய ஆவி கொடுத்த அறிவை இழப்பதற்கு முன்பு, ஆவியை இழந்து போகும் வாய்ப்புகள் உள்ளது. ஆகவே நாம் அன்பை பிரதானமாக வைத்து, அதுதான் நாம் கர்த்தரிடத்தில் அங்கீகாரமும், நெருக்கமுமாய் இருக்கின்றோம் என்பதை எடுத்துக் காட்டும் பிரதானமான பரீட்சை என்று கருத வேண்டும்.

அன்பின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர் உணர்த்தின பிற்பாடு எது அன்பு? எது அன்பில்லை? என்று அதாவது, அது எப்படி செயல்படும், எப்படி செயல்படாது என்று விளக்க முற்படுகின்றார். நம்மில் ஒவ்வொருவரும் இவ்விஷயங்களை நமக்குப் பொருத்திப்பார்த்து, நம்மிடத்தில் நாமே கேள்வி கேட்போம்:

நீண்ட காலமாய் சகித்தும், அன்பாய் இருக்கத்தக்கதாகவும், விசுவாச வீட்டார் மீது எனக்கு இத்தகைய அன்பு இருக்கின்ற நல்ல நோக்கமுடையவர்களின் பெலவீனங்களையும், குறைவுகளையும் நான் பொறுத்துக் கொள்கின்றேனா? வழிவிலகிப் போனவர்கள் திரளான ஜனங்களின் மனதை குருடாக்கி உள்ள மாபெரும் எதிராளியானவனினால் குருடாக்கப்பட்டுள்ளனர் என்றும், இத்தகையவர்கள் மீது காட்டும் அன்பானது, தனது சத்துருக்களிடம் பொறுமையாக இருந்த இயேசுவிடம் பிரதானமாகக் காணப்பட்டது என்றும் நினைவுகூர்ந்து, இத்தகையவர்களிடம் நான் பொறுமையோடு இருக்கின்றேனா?

நான் நடந்து கொள்ளும் விதங்களும், பேசும் தொனியும் வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயங்களிலும் மிகவும் முக்கிய பங்குவகிக்கின்றது என்று அறிந்து, அவைகளை அடக்கி ஆண்டு என்னுடைய நடந்து கொள்ளும் முறைகளில் அன்பாக இருக்கின்றேனா? இவ்விதமான அன்பு என்னுடைய ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும், சிந்தையிலும் தொனிக்கின்றதா? நான் மற்றவர்களை கருத்தில் கொள்கின்றேனா? நான் என் வார்த்தையில், என் பார்வையில், என் கிரியையிலும் கூட மற்றவர்களிடம் அன்பைக் காட்டுகின்றேனா? அதை என்னால் முதலில் உணர முடிகின்றதா? மற்றவர்களைக் காட்டிலும் ஒரு கிறிஸ்தவன் வீட்டிலும், அவன் வேலைப்பார்க்கும் இடத்திலும், சபையிலும் மற்றும் எங்கும் அன்புடனும், மரியாதையுடனும், சாந்தத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். பூரண அன்பு பெருக பெருக, ஒவ்வொரு வார்த்தையிலும், கிரியையிலும், சிந்தையிலும், அன்பும், பொறுமையும் வெளிப்படத்தக்கதாக தொடர்ச்சியான இருதய முயற்சி

காணப்படும். தேவனுடைய பிள்ளைகளிடத்தில் இந்த பண்புகள் வெளித்தோற்றமாக இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது. மாறாக அவைகள் ஆவியின் கனிகளாக இருந்து, தேவனுடன் நெருக்கமான ஐக்கியத்திற்குள் வந்ததினாலும், அவரைக் குறித்து கற்றுக் கொள்வதினாலும், அவருடைய அன்பு மற்றும் பரிசுத்தத்தின் ஆவியைப் பெற்றுக் கொண்டதினாலும் வளர்கின்றது.

"பொறாமை கொள்ளாத" அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? என்னுடைய சொந்த விஷயங்களில் செழிப்புக் காணப்படாதபோது, மற்றவர்கள் செழிப்பைக் கண்டு சந்தோஷப்படவும், மற்றவர்கள் செழித்தோங்குவதை பெருந்தன்மையோடு பார்க்கவும் ஏதுவான அன்பு என்னிடத்தில் உள்ளதா? பொறாமைக்கு எதிரானது பெருந்தன்மையாகும். பொறாமையின் வேர் சுயநலத்தில் உள்ளது. பொறாமை, அன்பு என்னும் வேரிலிருந்து தோன்றுவதில்லை. அன்பு சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படும். மேலும் அன்பானது ஒவ்வொரு நல்வார்த்தையிலும், நற்கிரியையிலும் கிறிஸ்தவ கிருபையின் முன்னேற்றத்திலும் தெய்வீக ஆவியினால் இயக்கப்படுபவர்கள் செய்யும் தெய்வீக பணிகளிலும் சந்தோஷப்படும்.

"புகழாத" "இறுமாப்பாயிராத" அன்பு, அதாவது, தாழ்மையான அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? தன்னடக்கத்துடன் இருந்து, உயர்த்திப் பேசாத அன்பு என்னிடத்தில் உள்ளதா? மனுஷர்களுக்கு வெளிப்படையாக தெரியாத வண்ணம் நற்கிரியைகளை செய்வதற்கு ஏதுவாக தூண்டும் அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? மனுஷர்களுக்கு தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி தேவன் அறிந்தால் மாத்திரம் போதும் என்று நற்கிரியைகளைச் செய்ய தூண்டும் அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? என்னுடைய அறிவையோ, குணநலன்களையோ புகழாமல், ஒவ்வொரு நன்மையும் பூரணமான வரமும் பிதாவிடத்திலிருந்து வருகின்றது என்று தாழ்மையாக ஏற்றுக் கொள்ளும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? பிதா எனக்கு அளிக்கின்ற ஒவ்வொரு இரக்கத்திற்காகவும் நான் பதிலுக்கு அன்பையும், ஊழியத்தையும் கொடுக்கின்றேனா? தங்களைப் புகழ்ந்து இருமாப்படைந்தவர்கள் அறிவீனத்திற்குள்ளும், பெரிதான பாவங்களுக்குள்ளும் சிக்கியுள்ளனர். கர்த்தருடைய ஆவி என்பது, தெளிந்த புத்தியுள்ளவர்களின் ஆவியாக இருக்கின்றது. இது மற்றவர்களை மதிப்பதற்கு மாத்திரம் நாடாமல், ஒருவன் தன்னுடைய குணநலன்கள் மற்றும் தான் பெற்ற விஷயங்களைக் குறித்து எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணிவிடாதபடிக்கும் உதவுகின்றது.

"அயோக்கியமானதை" செய்யாத அன்பு என்னிடத்தில் உள்ளதா? பெருமையின் காரணமாகவே, அயோக்கியமான மரியாதையற்ற நடக்கைகள் வருகின்றது. தாங்கள் அறிவில் அல்ல, பணத்தில் பெரியவர்கள் என்று நினைப்பவர்களிடமே இம்மாதிரியான தன்மைகள் காணப்படுகின்றன. சிறிய அர்ப்பத்தனமான விஷயங்களிலும் அன்பாய் இருப்பதே மரியாதையாகும். இருதயத்தில் காணப்படும் அன்பே, மரியாதையான பண்புக்குரிய இரகசியமாகும். விசுவாச வீட்டாரிடத்தில் மட்டுமல்ல, நம்முடைய குடும்பங்களிலும், உலகத்தின் மத்தியிலுமான நம்முடைய நடவடிக்கையிலும் அன்பையும், மரியாதையையும் வெளிப்படத்தக்கதாக இருதயத்தில் அன்பு கிறிஸ்தவனிடத்தில் காணப்பட வேண்டும்.

"தற்பொழிவை நாடாத" சுயநலமற்ற அன்பு என்னிடத்தில் உள்ளதா? அதாவது, என்னுடைய சுய விஷயங்களுக்காக நாடாத சுயநலமற்ற அன்பு என்னிடத்தில் உள்ளதா? அதாவது, மற்றவரின் நலம் கருதி என்னுடைய சில உரிமைகளையே பலி செலுத்தும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? அல்லது ஒவ்வொரு தருணத்திலும் என் உரிமைகளை நாட்ட விரும்பும் சுயநலம், என்னிடத்தில் காணப்படுகின்றதா? அல்லது மற்றவரின் நலம், உரிமை மற்றும் வசதிகளை கருதாமல், நாம் உரிமைகளை நாட்ட விரும்பும் சுயநலம் என்னிடத்தில் காணப்படுகின்றதா? அநீதி செய்வதைக் காட்டிலும் அநீதி அனுபவிக்கும் அன்பு காணப்பட வேண்டும்.

## *"அன்பு வீட்டில் ஆரம்பிக்கின்றது"*

மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று மாம்சத்தின் படி தேவைகளுக்கு நம்மை சார்ந்திருக்கும் நபர்களின் பராமரிப்பை நாம் புறக்கணிக்க வேண்டும் என்பதாக இல்லை. எல்லா கோணங்களிலும் பார்க்கும் போது, அன்பு வீட்டிலேயே ஆரம்பிக்கின்றது. பூரண அன்பின் ஆவியை உடைய புருஷனும் ஸ்திரீயும் ஜீவியத்தின் எந்த விஷயங்களிலும் தங்களுடைய சொந்த பங்கை தள்ளமாட்டார்கள். இவ்விதமான அன்பு செயல்முறைப்படுத்தப்படும்போது, ஜீவியத்தில் அனைத்து விஷயங்களிலும், அதாவது, வீட்டிற்குள்ளும், குடும்பத்திற்கு வெளியேயும் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கும்.

"எளிதில் சினமடையாத" அன்பு என்னிடத்தில் உள்ளதா? எனக்கு தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுத்து கோபம் என்பது, கோபம் காட்டுபவர்கள் மீதும், கோபம் அடைகிறவர்கள் மீதும் காரியத்தை ஏற்படுத்தும் என்று நான் உணர்ந்து கொள்வதற்கும், ஏதுவான அன்பு என்னிடத்தில் உள்ளதா?

கொள்கைகள் விஷயத்திலும், பாடங்கள் புகட்டப்பட வேண்டிய சமயத்திலும் அன்பு கண்டிப்புடன் வளைந்து கொடுக்காமல் இருப்பதும் அவசியமாய் இருக்கின்றது. நீதியான கோபம், அன்பான நோக்கத்திற்காக நன்மை செய்வதற்காக செலுத்தப்படலாம். ஆனாலும் வார்த்தையினாலோ, இருதயத்திலோ பாவம் செய்யாதபடிக்கும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மிகுந்த கோபம் கொள்வது, சிடுசிடுப்பாக இருப்பது, முன் கோபம் அடைதல் என்பவைகள் சினம் அடைதலின் அம்சங்களாகும். இது அன்பின் ஆவிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். யாரெல்லாம் கர்த்தருடைய பட்சத்தில் இருக்கின்றார்களோ, யாரெல்லாம் அவரை பிரியப்படுத்த நாடுகின்றார்களோ, யாரெல்லாம் ஜெயம் கொள்ளுகிறவர்கள் ஆக விரும்புகிறார்களோ அவர்கள் எல்லாரும் கோபம் கொள்ளுதலின் நன்மையிலிருந்து தங்களை வெகுவாய் காத்துக் கொள்ள வேண்டும். சினமடையும் தன்மை நம்மிடத்தில் சீராட்டி வளர்க்கப்பட்டால் அல்லது விருப்பத்துடன் நமக்குள் குடியிருக்கச் செய்தால் அல்லது எதிர்த்துப் போராடப்படாமல் காணப்பட்டால், இவைகள் நம்முடைய பிதாவின் பரிசுத்த ஆவிக்குள் நமக்கு இருக்க வேண்டிய வளர்ச்சி பற்றாகுறையாகவும் நம்முடைய முன்மாதிரியாகிய நமது கர்த்தர் இயேசுவின் சாயலுக்குரிய நம்முடைய வளர்ச்சியில் பற்றாக்குறையாகவும் இருப்பதைக் காட்டுகின்றது.

## *"அன்பு தீங்கு நினையாது"*

"தீங்கு நினையாத" வஞ்சனையில்லாத மற்றவரில் குறைக்காணாத, மற்றவருக்குத் தீமையான தூண்டுதல்களைக் கொடுக்காத அன்பு என்னிடத்தில் உள்ளதா? அன்போடு மற்றவரின் நடக்கையை சீர்த்தூக்கிப் பார்க்கும் தன்மை என்னிடத்தில் உள்ளதா?

## *"அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது"*

அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுகின்ற உண்மையான அன்பு என்னிடத்தில் உள்ளதா? நீதி மற்றும் அநீதியின் கொள்கைகளை என் மனதில் நிறுத்தி, நீதியின் சார்பாக நின்று, அநீதிக்கு எதிராகக் காணப்பட்டு, நடந்திட்ட தீமைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, தீமையில் விழுந்துபோன அல்லது சோதனையில் விழுந்து போனவர்களிடம் என்னால் அனுதாபம் காட்ட முடிகின்றதா? அநீதி எனக்கு சாதகமாக இருப்பினும்/அநுகூலமான விஷயங்களைச் செய்யும் என்றாலும், நான் அவைகளை ஊக்கப்படுத்தாமல், எதிர்க்கின்றேனா? என்னுடைய

பூமிக்குரிய சில விருப்பங்கள்/விஷயங்கள் மறுக்கப்படும் நிலையிலும், நான் நீதியலும் சத்தியத்திலும் சந்தோஷப்படுகின்றேனா?

பரிசுத்த ஆவியை பூரண அன்பை தங்களுடைய இருதயத்தில் வளர்க்க விரும்பும் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். நீதியான அல்லது நல்ல விஷயங்கள் சம்பவிக்காதபோதோ அல்லது ஒருவரின் வீழ்ச்சியிலோ மகிழ்ச்சி ஏற்படும் நன்மைகள் நம்மிடம் சிறதளவு காணப்பட்டாலும், அதை புறம்பாக்கி ஜெயம் கொள்ள வேண்டும். பூரண அன்பு அநியாயத்தில் எந்த சூழ்நிலையிலும் சந்தோஷப்படாது. ஒருவேளை மற்றவருடைய விழுகை தனக்கு சாதகமாக இருப்பினும், பூரண அன்பு துக்கமே அடையும்.

கர்த்தருடைய ஜனங்களின் ஆவியென இங்கு அப்போஸ்தலர் விவரிக்கும் தேவனுடைய அன்பானது, எல்லா சுயநலத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியான கொள்கைகளின் அடிப்படையாகவும் இருக்கின்றது. இந்த உறுதியான கொள்கைகள் நாளுக்கு நாள் தெளிவாக உணர்ந்து கொள்ளப்படவும் வேண்டும். எவ்விதத்திலும் உறுதியாக பற்றிப் பிடிக்கப்பட்டிருக்கவும் வேண்டும். தவறுகள் மூலம் பலன் மிகவும் இலாபமாக இருப்பினும், அன்பு அவைகளில் பங்குக் கொள்ளவும் முடியாது. தீமையின் வெகுமதிகள் மேல் விருப்பமும் காட்டமுடியாது. அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும். அனைத்து சத்தியத்திலும் சந்தோஷப்படும். விசேஷமாக தெய்வீக வெளிப்படுத்தல் குறித்த சத்தியங்களில் சந்தோஷப்படும். சத்தியம் எவ்வளவுதான் பிரபலமற்றதாக இருப்பினும், அதன் மூலம் எவ்வளவுதான் துன்பங்கள் அனுமதிக்கப்பட்டாலும், இவ்வுலகத்தின் தேவனால் குருடாக்கப்பட்ட நண்பர்களின் நட்பை இழக்க வேண்டியதாயினும், அன்பு இவைகளின் மத்தியிலும் சந்தோஷப்படும். அன்பின் ஆவிக்கும், சத்தியத்திற்கும் இடையே மிகுந்த நெருக்கம் இருக்கிறபடியால், அன்பு சத்தியத்திற்கும், அதன் ஊழியக்காரருக்கு எதிராகவும் வரும் இழப்புகள், துன்பங்கள், கஷ்டங்கள் எதுவாயினும் அவைகளில் சந்தோஷப்படும். யாரெல்லாம் கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து வெட்கப்படுகிறார்களோ, அவர்கள் கர்த்தரைக் குறித்தே வெட்கப்படுகின்றார்கள் என்று கர்த்தர் கருதுகின்றார். மேலும் இத்தகையவர்களைக் குறித்தும், அவர் அவருடைய பரிசுத்தவான்களோடு மகிமையில் வரும்போது வெட்கப்படுவார் என கூறியுள்ளார்.

"சகலத்தையும் தாங்கும்" அன்பு என்னிடத்தில் உள்ளதா? தீமையின் தாக்குதல்களை தாங்கும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? கர்த்தருக்கு எதிரான பாவம், அசுத்தம், தீமை போன்றவைகளை எதிர்த்து நிற்கும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? தேவனுடைய நோக்கங்களுக்காக அவமானங்கள், இழப்புகள், கடுஞ்சொற்கள், குற்றச்சாட்டுகள் மரணத்தைக்கூட விருப்பத்துடன் சகிக்கும், தாங்கிக் கொள்ளும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? "உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கின்றது." பூரண அன்பு எல்லா சூழ்நிலைகளிலும் தாங்கிக் கொள்ளும். கர்த்தருக்கான அன்பின் ஆவியே, விசுவாசமாக இருக்கின்றது. பூரண அன்பு நம்மை ஜெயம் கொண்டவர்களாக ஆக்குகின்றது. "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4). "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37).

## *"அன்பு சந்தேகம் கொள்ளாது"*

"சகலத்தையும் நம்பும்" அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? மற்றவருடைய தீமையைக் காட்டிலும் நல்லவைகளை நம்பும் அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? மற்றவர்களின் தீமையைக் குறித்துப் கேட்பதில் சந்தோஷம் கொள்ளாமல், சீற்றம் கொள்ளும் அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? பூரண அன்பு சந்தேகம் கொள்வதில்லை, மாறாக நம்பும்.

சாதகமற்ற சூழ்நிலைகளிலும் சகலத்தையும் விசுவாசிக்கும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? மற்றவரின் நலம் கருதி சகலத்தையும் சகிக்கும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? தொடர்ச்சியாக

சகிக்கும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? பூரண அன்பு எளிதில் ஏமாற்றம் அடைந்து சோர்ந்து போவதில்லை. தேவனை குறித்து நாம் கற்றுக் கொள்ளும் போது, அவருடைய பரிசுத்தத்தில் பங்காளிகளாகும்போது, நம்மிடத்தில் விளங்கும் அன்பானது, அவரை விசுவாசித்து, அவருடைய கிருபை நிறைந்த உடன்படிக்கையின் நிறைவேறுதலுக்காக இருளான சூழ்நிலைகள் மத்தியிலும் எதிர்பார்த்திருக்கும்.

பரிசுத்தவான்கள் விடாமுயற்சியுடன் இருப்பதற்கும், நல்ல போர்ச்சேவகர்கள் போன்று சகிப்பதற்கு "சகலத்தையும் நம்பும்" அன்பின் தன்மை மிகவும் அவசியமானதாகும். சகலத்தையும் நம்பும் தன்மையின் மூலம், ஒருவர் கர்த்தருடைய வேலையை செய்வதிலிருந்து தடைப்பண்ணப்பட முடியாது. மற்றவர்கள் சோர்ந்து போய் பின்மாற்றம் காண்பிக்கும்போது, அன்பின் ஆவி சகிப்பதற்கு உதவி நல்ல போர்ச்சேவகர்களாக இருப்பதற்கும், நம்முடைய இரட்சிப்பின் அதிபதியைப் பிரியப்படுத்துவதற்கும் உதவி செய்திடும். சகலத்தையும் நம்பும் அன்பானது, நம்பிக்கையை இழக்காமல் காணப்படும். காரணம், அதன் நங்கூரம் திரைக்கு அப்பால் உள்ள கன்மலையின் மேல் உறுதியாக நாட்டப்பட்டுள்ளது.

அன்பான சகோதர சகோதரிகளே, நாம் அன்பை வெறும் வார்த்தைகளில் காட்டாமல், கிரியையிலும், சத்தியத்திலும் காட்டுவோமாக. நம்முடைய பரமபிதாவின் அன்பினால் ஜெநிப்பிக்கப்பட்டதும், நம்முடைய அருமையான மீட்பரின் வார்த்தையிலும், கிரியையிலும் மாதிரியாக விளங்கிட்ட அன்பை நம்முடைய புதிய இருதயத்தில் பெற்றுக் கொள்வோம். அன்பை வளர்க்கவில்லையெனில், நாம் நாடி சம்பாதித்த அனைத்தும் வீணே! ஆமென்!!

---

# மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு

*"அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்." (உரோமர் 15:1)*

நம்முடைய ஆதார வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான மாபெரும் கொள்கையானது, அன்பின் கொள்கையாகும், அதாவது தெய்வீக ஆவியின் சாரமாகும். தேவன் அன்பாகவே இருக்கிறார்; மற்றும் அன்பின் ஆவியானது, தேவனுடைய ஆவியாக இருக்கின்றது. தேவனுடைய ஜனங்கள் மத்தியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த ஆவியானது, அவர்களை ஒருவருக்கொருவர் அக்கறைகொள்ளச் செய்கின்றது. இது சுயநலத்தின் ஆவிக்கு எதிர்மாறானதாகும். இது தனது நலனுக்கடுத்தவைகளோடுகூட, மற்றவர்களுடைய நலனுக்கடுத்தவைகளை, அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரின் நலனுக்கடுத்தவைகளை நாடுகின்றது.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், கூடுமானமட்டும் பலவீனருக்கும், உதவி அவசியப்படுபவர்களுக்கும் உதவிடுவது நம்முடைய மனநிலையாய்க் காணப்பட வேண்டும். பலவீனமாய் இருப்பவர்களை ஏளனமாய் அவமதித்து, "அவர்களுக்கு என்னுடைய அனுதாபம் காணப்படுகின்றது" என்று கூறிடுவது, உலகத்தாருடைய பொதுவான மனநிலையாய் இருக்கின்றது. ஆனால் உண்மையில் பெலவீனர்கள் அதிகமாய் அனுதாபங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. மிகவும் வெற்றிகரமானவர்களை, வல்லமை உள்ளவர்களை, ஐசுவரியவான்களை உலகமானது பாராட்டுகின்றது. ஆனால் தேவன் பெலவீனர்களுக்காகவும், எளியவர்களுக்காகவும் அனுதாபம்/இரக்கம் கொண்டிருப்பது போன்று, அனுதாபப்படுவதற்கான அவசியத்தில் இல்லாதவர்களைக் காட்டிலும், அனுதாபப்படுவதற்கான அவசியத்தில் இருப்பவர்களுக்கே நாம் அனுதாபம் காண்பிக்க வேண்டும். சபையில் அறிவில் பலமுள்ளவர்களாகச் சிலரும், அறிவில் பலவீனர்களாகச் சிலரும், சரீரத்தில் பலமுள்ளவர்களாகச் சிலரும், சரீரத்தில் பலவீனர்களாகச் சிலரும், ஆவிக்குரியவற்றில் பலமுள்ளவர்களாகச் சிலரும், ஆவிக்குரியவற்றில் பலவீனர்களாகச் சிலரும் காணப்படுகின்றனர்.

நாம் எந்தளவுக்குப் பலமுள்ளவர்களாகக் காணப்படுகின்றோமோ, அவ்வளவுக்கு மற்றவர்கள் தங்கள் பலவீனங்களை ஜெயங்கொள்வதற்கு நாம் உதவுவது மாத்திரமல்லாமல், அனைவருக்கும் உதவுகிறவர்களாகவும், ஊக்குவிப்பவர்களாகவும் மற்றும் எப்படி அவர்கள் தங்கள் குறைப்பாடுகளை ஜெயங்கொள்ளலாம் என்று சுட்டிக்காண்பிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். எனினும் இந்தச் சுட்டிக்காட்டுதல்களை நாம் மிகவும் வற்புறுத்திடக்கூடாது; ஏனெனில் அநேக ஜனங்கள் தங்கள் சொந்த பலவீனங்களை உணராதவர்களாய் இருக்கின்றனர்; இத்தகையவர்களது, கடினத்தைப் பலமுள்ளவர்கள் சகித்துக்கொள்வதோடுகூட, அவர்களது கண்மூடித்தனமான செயல்கள் சிலவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும். யாராவது தன் சொந்த பலவீனத்தைக் கண்டு கொள்வானானால், அது பிரயாசம் எடுப்பதற்குரிய அருமையான தூண்டுதலாய் இருக்கும். ஆகையால் புண்படுத்தாமல் அல்லது இடறப்பண்ணாமல், மற்றவர்களுக்கு, அவர்களது பலவீனத்தைக்குறித்துக் கவனத்திற்குக் கொண்டுவருவதே பலமுள்ளவர்களுக்கான கடமையாக இருக்கும். ஒருவேளை பலவீனங்களானது தவறான விதத்தில் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அவர்கள் இடறிடுவதற்கு வாய்ப்புள்ளது; ஆனால் ஒருவேளை ஞானமான விதத்தில் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அவர்களுக்கு உதவியாயிருக்கும். இது ஜீவியத்தின் சிக்கல்கள் யாவற்றிற்கும் பொருத்தப்படலாம். நம்முடைய சொந்த பலவீனங்களைக் கண்டுகொள்வதற்கும், அதை ஜெயங்கொள்வதற்கும் நாம் எப்போதும் விழிப்புடன் காணப்பட வேண்டும் மற்றும் காரியங்களைச் சகோதரர்களின் கண்ணோட்டத்திலிருந்துப் பார்த்து, நமது உதவியினை அவர்களுக்கு அளித்து, இப்படியாகச் சகோதரருடைய நலனுக்கடுத்தவைகளில் நாம் ஈடுபடுவதற்கும் மற்றும் ஈடுபடுவதிலும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்.

சபையிலுள்ள மூப்பர்கள், உண்மையில் மூத்தச் சகோதரர்களாக இருந்திட வேண்டும். குடும்பத்தில் மூத்த சகோதரன், தகப்பனுக்கு அடுத்தப்படியாக, மற்ற அங்கத்தினர்களுடைய

நலனுக்கடுத்தவைகளுக்காக, உதவுகிறவராகவும், ஆதரிக்கிறவராகவும், தன்னையே தியாகம் பண்ணுபவராகவும் காணப்படுகின்றார். இப்படியாகவே சபையிலும் ஆகும். சத்தியத்தில் முதிர்ந்தவர்கள், சத்தியத்தில் மிகவும் வளர்ந்திருப்பவர்கள், இளையவர்களை ஊக்குவித்திட, ஆதரித்திட, தூக்கிவிட மற்றும் பாதுகாத்திட வேண்டும். இதை நாம் ஒவ்வொரு குடும்பத்திலும், பூமிக்குரிய ஜீவியத்தின் காரியங்களில் காண்கின்றோம். குடும்பத்தில் மூத்தவர்கள் என்பவர்கள், தங்கள் சொந்த சௌகரியங்களை, தங்கள் சொந்த விருப்பங்களைத் தியாகம்பண்ணி இளையவர்களை ஆதரித்து, குடும்பத்தில் உதவுபவர்களாக இருக்கின்றனர்; குடும்பத்திலுள்ள இளையவர்களுடைய நலனுக்கடுத்தவைகளுக்காக, அவர்களது சொந்த சந்தோஷங்களானது விட்டுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளது. பலமுள்ளவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் இருவருமே தங்களை ஆவிக்குரிய காரியங்களில் பயிற்றுவித்துக்கொள்வதன் வாயிலாகக் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் கருத்தாய் இருக்கின்றது.

## நாம் நமக்கே பிரியமாய் நடவாமல்

"நாம் நமக்கே பிரியமாய் நடவாமல்" எனும் வசனத்தினுடைய பின்பாகமானது கொடுக்கும் கருத்தென்னவெனில் . . . நாம் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளபோதிலும், பாவங்களிலிருந்து நாம் திரும்பி இருக்கின்ற போதிலும், நாம் பாவஞ்செய்திடுவதற்கான மனநிலையை, மனப்பாங்கைப் பெற்றிருக்கின்றோம். புதுச்சிருஷ்டியினுடைய மனநிலையானது, பாவம் செய்யக்கூடாது மற்றும் சரி எதுவோ அதைச் செய்ய வேண்டும் என்றும், தன்னை "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" கட்டியெழுப்ப வேண்டும் என்றும் காணப்படுகின்றது. எனினும் தன்னை "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" கட்டியெழுப்ப நாடுகையில், அவன் தன் மனதில் தன்னலத்தின் சில விஷயங்கள் முதன்மையாய் நிற்பதற்கு அனுமதிக்கக்கூடும். தன்னுடைய நலனுக்கடுத்தவைகளை, தன்னுடைய சொந்த கட்டியெழுப்பப்படுதலை, தனது மனதில் அவன் முதன்மையாய்ப் பெற்றிருக்க வேண்டிய அதேவேளையில், கிறிஸ்துவின் ஓர் அங்கத்தினனாக, தான் பொறுப்பினைப் பெற்றிருப்பதினால், அவன் தன்னைத்தான் பிரியப்படுத்திடுவதற்கு மாத்திரம் நாடாமல், தான் மற்றவர்களுக்கு ஊழியம் புரியத்தக்கதாக, தகுதியான மற்றும் சரியான காரியங்களில் சிலவற்றை விட்டுக்கொடுப்பதற்கு விருப்பம் உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதையும் அவன் நினைவில்கொள்ள வேண்டும் மற்றும் இப்படியாக, கர்த்தருடைய செயலினால் படிப்பினை ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றான். உதாரணத்திற்கு ஊழியக்காரியங்களைப் பற்றி ஆலோசிக்கப்படுகையில், ஆவிக்குரியவற்றில் மிகவும் வளர்ச்சியடைந்திருப்பவர்கள் விட்டுக்கொடுக்கிறவர்களாக இருக்கலாம். மேலும் அவர்கள் தங்கள் சொந்த விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் பார்த்து, சகோதரருக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் விதத்தில் தங்கள் சொந்த காரியங்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள நாடிட வேண்டும் என்பது அப்போஸ்தலனுடைய புத்திமதியாகத் தெரிகின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு சபையார் மத்தியில், வேதமாணவர்களின் சபைகளில், மிகவும் வளர்ச்சியடைந்திருப்பவர்கள் மத்தியில், தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளும், மற்றவர்களிடமிருந்து தங்களை விலக்கிக்கொள்ளும் மனநிலைக் காணப்படுகின்றது. இந்த மனநிலைக்கு எதிராக போராடிடுவதற்கு நாங்கள் பிரயாசம் எடுத்திருக்கின்றோம். குறைவான அறிவுடையவர்கள் சிலர் காணப்படுவார்களானால், கற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பினை அவர்கள் பெற்றுக்கொள்ளட்டும். அவர்கள் நல்லதும், கடினமானதுமான கேள்விகளை எழுப்புவார்களானால், அது மிகவும் நல்லது. கூட்டங்கள் நடத்தப்படும் நேரம் மற்றும் இடம் தொடர்புடைய விஷயத்தில், நாம் நமக்கு மாத்திரம் பிரியமாய் நடவாமல் இருப்போமாக. கடந்து வந்து கலந்துகொள்வதற்கு மிகவும் சிரமமான இடங்களில் கூட்டங்களை நடத்திட சிலர் விரும்பிடுவதை நாம் காணலாம்; ஆனால் நாம் சுயநலமாக அல்லது தன்னலத்தை நாடுகின்றவர்களாய் இராமல், மாறாக பெரும்பான்மையானவர்களின் நலனுக்கடுத்தவைகளில், அவர்களைப் பிரியப்படுத்திட நாடிட வேண்டும். ஒருவேளை இந்த ஆவியானது சபைகளில் காணப்படுமானால், அதிகமான வளர்ச்சிக் காணப்படும்; மற்றும் எல்லாக் கர்த்தருடைய ஜனங்களும் இந்தப் படிப்பினையைக் கற்றுவருகின்றனர்.

இதே கருத்தானது, சபையின் ஊழியக்காரர்களுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. மூப்பர்கள் பின்வருமாறு: அதாவது நாம் ஒன்றுகூடி, நமக்குள்ளாக பல்வேறு காரியங்களைக்குறித்துக் கலந்தாலோசித்திடலாம் என்று கூறிடுவதற்கு ஏதுவான ஒரு மனநிலைக் காணப்படுகின்றது. இது தவறான நோக்கத்தின் பேரில் செய்யப்படுகிறதில்லை.

இப்படியாக எப்போதாவது செய்வது ஞானமாய் இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில் உதவிக்காரர்களும் இணைந்துகொள்ளத்தக்கதாக பொதுவாகவே மூப்பர்கள், உதவிக்காரர்களோடு கூடி, அவர்களை நம்பிக்கையோடு நடத்திட வேண்டும்; அனைவருமே ஒன்று கூடிடுவது நலமானதாய் இருக்கும் மற்றும் சபையிடமிருந்து இரகசியங்களை வைத்துக்கொள்வதற்குப் பதிலாக பெரும்பான்மையான காரியங்களில் சபையாருக்கு அனைத்தையும் தெரியப்படுத்திடுவது நலமாயிருக்கும். சில சமயங்களில் சில விஷயங்கள் வெளிப்படையாக அறிவித்திட முடியாதுதான்; எனினும் சபையில் நேரமும், ஆற்றலுமுள்ள யாவருக்கும் ஆதரவாய்க் காணப்படத்தக்கதாக மூப்பர்களும், உதவிக்காரர்களும் தங்கள் கூட்டங்களை ஒழுங்குப்படுத்திட நாடிட வேண்டும்; இதனால் எவ்விதமான வகுப்பினர்-பிரிவும் இல்லை என்று சபையார் எண்ணிடுவார்கள்.

நூற்றாண்டுகள் முன்னதாக, குருமார் வகுப்பார் என்பவர்கள் சபையில் ஒரு தனிப்பட்ட வகுப்பார் என்றும், மற்றவர்கள் சபையின் குழந்தைகளாக அல்லது பிள்ளைகளாக இருக்கின்றனர் என்றுமுள்ள கோட்பாடானது கத்தோலிக்க நண்பர்களால் துவக்கப்பட்டது. இந்தக் கோட்பாடானது பிற்பாடு புரோட்டஸ்டண்டினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்படியாக குருமார்கள் தங்களைத் தாங்களே ஒரு தனிப்பட்ட வகுப்பாராக ஏற்படுத்தி வைத்துக்கொண்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். கர்த்தர் சபையில் சிலரை மூப்பர்களாக ஏற்படுத்திவைத்துள்ள காரியமானது, அவர்களைப் பிரித்து வைக்கிறதில்லை. நாம் அனைவரும் ஒரே வகுப்பாரே. ஆகையால்தான் கண்ணானது, காலை நோக்கி: "நீ எனக்கு வேண்டுவதில்லை" என்று சொல்லிடமுடியாது என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒவ்வொரு அவயவமும் கவனிக்கப்பட வேண்டும்; மற்றும் ஒருவரும், மற்றவர்கள் மீது ஆளும் ஒரு ஸ்தானத்தினை எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒருவர் மேலான ஊழியத்தினை ஒருவேளைப் பெற்றிருப்பாரானால், அதை அவர் மற்றவர்களுக்காகப் பயன்படுத்திட வேண்டும்; ஒருவேளை ஒருவர் முதன்மையற்ற ஊழியத்தினைப் பெற்றிருப்பாரானால், அதை அவர் பொதுவான நலனுக்காகப் பயன்படுத்திட வேண்டும். ஆகையால் நாம் அங்கத்தினர்களாகக் காணப்படும் அபிஷேகிக்கப்பட்டவரின் சரீரத்தினுடைய, முழுமையான வளர்ச்சியினை அனைவரும் அடைவது வரையிலும், சபையானவள் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எதற்காகவும் கொள்கைகளானது ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்படக்கூடாது; ஆனால் சுயாதீனங்களும், தனிப்பட்ட உரிமைகளும் அடிக்கடியும் மற்றும் தேவனைப் பிரியப்படுத்துவதற்காகவும், மற்றவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்களுக்காகவும் பொருட்படுத்தப்படாமல் இருக்கலாம். கொள்கையை ஆதரிக்க அப்போஸ்தலனாகிய பவுல் இயன்றமட்டும் போராடுவதற்கு ஆயத்தமாய் இருந்தார் (கலாத்தியர் 2:5-11). கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் என்று பூமிக்குரிய உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பலிச் செலுத்திடும் விஷயத்தில், அப்போஸ்தலன் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு அடுத்தப்படியாகக் காணப்பட்டார் மற்றும் முழுச்சபைக்கும் சிறந்த உதாரணமாய்த் திகழ்ந்தார்.

"தேவகட்டளைகள் எத்துணை ஞானமானவைகள்;
அவரது கற்பனைகள் எத்துணை மெய்யானவைகள்!"

# அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும்

**நா**ம் "அறுவடையின் காலங்களில்" இருக்கின்றோம் என்று நாம் அடையாளம் கண்டு கொண்டுள்ளது போன்று, கர்த்தர் இப்பொழுது விசேஷமாய்க் "கோதுமையை" முதிர்வுறப்பண்ணிக் கொண்டிருக்கின்றார் என்றும், அதைக் "களைகளினின்று" பிரித்துக்கொண்டிருக்கின்றார் என்றும் மற்றும் கோதுமையை இருவகுப்பாராகப் பிரித்துக்கொண்டிருக்கின்றார் என்றும் நாம் கருதிட வேண்டும். இந்த அறுவடைகாலத்தினுடைய இந்த விசேஷித்த சோதனையைக் குறித்துதான் வேதவாக்கியங்களானது, குறிப்பாய் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கின்றது மற்றும் தேவனுடைய முழுச்சர்வாயுதவர்க்கங்களை நாம் தரித்துக்கொள்வதின் அவசியத்தினைக்குறித்தும் மற்றும் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருந்து, ஆவியிலே அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியம்புரிதலின் அவசியத்தினைக்குறித்தும் அடிக்கடி அறிவுறுத்துகின்றது.

நாம் எதிர்ப்பார்த்திருக்கும் அந்தச் சோதனைகளானது, கர்த்தருடைய முதிர்ந்த கோதுமை நிலம் எங்கும் வளர்ந்துவருவதை நாங்கள் காவல் கோபுரத்திலிருந்து காண்கின்றோம். தெய்வீக வழிநடத்துதல்களானது, அன்பிற்கான, நேர்மைக்கான, விசுவாசத்திற்கான, கீழ்ப்படிதலுக்கான, சகோதர சிநேகத்திற்கான, பொறுமைக்கான சோதனைகளை அனுமதித்து வருகின்றது. மந்தைக்கு உதவ வேண்டிய, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய, அவர்களை எச்சரிக்க வேண்டிய, ஆதரிக்க வேண்டியவர்களாகிய மூப்பர்கள் வாயிலாகச் சோதனைகளானது சிலசமயம் சபையாருக்கு வருகின்றது. சிலசமயங்களில் மூப்பர்கள் திவ்விய வசனத்திற்கும், மாதிரிக்கும் முற்றிலும் எதிர்மாறாய், இறுமாப்பாய் ஆளும் மனநிலையினைக்கொண்டிருந்து, சகோதரர்களின் பொறுமையையும், அன்பையும் சோதனைக்குள்ளாக்குகின்றனர்.

சிலசமயங்களில் சோதனையானது மறுபக்கத்திலிருந்து வருகின்றது. சபையாரில் சில அங்கத்தினர்கள் மிகவும் பூரணத்தை எதிர்ப்பார்க்கின்றவர்களாக, கொசுவில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குவதற்கு மகிவும் ஆயத்தமாயிருக்கிறவர்களாக, மேலும் மூப்பர் எவ்வளவுதான் உண்மையானவராய் இருப்பினும், அவர் செய்யும் எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிக்க மிகவும் ஆயத்தமாயிருக்கிறவர்களாக இருந்திடலாம். இத்தகைய அனுபவங்களானது இப்பக்கத்திலிருந்து வந்தாலும் சரி அல்லது அந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும்சரி, இவைகள் சோதனைகளாக இருக்கின்றன மற்றும் இது கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவனும் எவ்வாறு இந்தச் சோதனைகளை ஏற்றுக்கொள்கின்றான் என்றும், அவைகள் எத்தகைய தாக்கத்தினை அவனது சொந்த இருதயம் மற்றும் குணலட்சணத்தின் மீது கொண்டிருக்கின்றன என்றும் பார்த்துக்கொள்வதை இன்றியமையாததாக்குகின்றது. ஒருவேளை இவ்வனுபவங்களானது அவனைக் கசப்புக்கொள்ள, கோபங்கொள்ளச் செய்கின்றதானால் அல்லது அவனது பெருமையினை ஆழமாய்த் தொட்டுப் புண்படுத்துகின்றதானால், இது - அவனது குறைவினை அவனுக்கு வெளிப்படுத்துவதற்கும் மற்றும் இரக்கத்திற்காகவும், உதவிக்காகவும் பரலோக கிருபையின் சிங்காசனத்தை அவனுக்குச் சுட்டிக்காட்டி, இத்தகைய கடிந்துகொள்ளுதலின் அனுபவங்கள் அவனுக்கு அவசியமாயிருக்கின்றது என்று நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

இன்னுமாக அருமையான சில சபையார் தவறான உபதேசங்கள் வாயிலாக எதிராளியானவனால் தாக்கப்படுகின்றனர் மற்றும் சத்தியத்தை, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தை ஆதரிப்பதற்கும், அதற்கு இசைவாகத் தங்களுடைய நிலைபாட்டினைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்குமுரிய பிரயாசங்களில் கஷ்டங்களைப் பெற்றிருக்கின்றனர். இல்லையேல் அருமையான நண்பர்களில் சிலர் குற்றம் கண்டுபிடிப்பவர்களாக இருப்பதினாலும் மற்றும் எவ்வித கருத்து வேறுபாடுகள் இல்லாதிருக்க, கருத்து வேறுபாடுகளை உருவாக்கிட முயற்சிப்பதினாலும், இணக்கத்தின் ஆவியைவிட சண்டையின் ஆவியினை - அன்பைவிட உடன்பாடின்மையைத் தூண்டிடுவதினாலும் கஷ்டங்கள் ஏற்படலாம்.

அன்புக்குரிய சகோதரர்களே மற்றும் சகோதரிகளே, நாம் யாவராலும் ஒப்புக்கொள்ள முடிகிற காரியத்தையே நாம் அறிவுறுத்துகின்றோம்; அதாவது நாம் சோதனை காலத்தில் காணப்படுகின்றோம் மற்றும் இந்தப் பல்வேறு காரியங்களானது நமக்கான சோதனைகளாக இருக்கின்றன என்பதேயாகும். சத்தியத்திற்காகவும், சகோதரருக்காகவுமான அதிக அனலான

ஆவியையும், அதிக வைராக்கியத்தையும் நாம் செயல்படுத்துவதினால் மாத்திரமே, நாம் உண்மையாய் நிற்கவும், மற்றவர்கள் உண்மையாய் நிற்க உதவுபவர்களாக இருக்கவும் நாம் எதிர்ப்பார்த்திடலாம். சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் சோர்ந்துபோகாமல் இருப்போமானால், நாம் நம்முடைய பலனைச் சீக்கிரத்தில் அறுப்போம் மற்றும் "நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கூறுவதைக் கேட்போம்.

பரவலாக அமைதியின்மை, அதிருப்தி முதலானவைக் காணப்படும் காலக்கட்டத்தில் நாம் காணப்படுகின்றோம். ஒரு கணம்கூட இத்தகைய அதிருப்திகளையும், முறுமுறுப்புகளையும், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டதான விசுவாசத்திற்கான" போராட்டங்களென எண்ணாதிருப்போமாக. மாறாக பரிசுத்த ஆவியினுடைய கனிகளையும், கிருபைகளையும் அதிகமதிகமாய் வளர்த்துப் பேணிடுவோமாக. இவைகளை "விசுவாச வீட்டாரின்" நமது சகோதரர்கள் தொடர்பாக விசேஷமாய்ச் செயல்படுத்திடுவோமாக; நிச்சயமாய் "நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சகல மனுஷருக்கும் நன்மை செய்வதையும்" புறக்கணியாமல் இருப்போமாக மற்றும் ஒருவருக்கொருவர் பொறுமையாயும், ஒருவரையொருவர் தாங்கியும் இருப்போமாக. "ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய" கிறிஸ்துவின் சரீரத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நன்மையையும், வளமையையும், கிருபையில் வளர்ச்சியையும் அபிவிருத்திச் செய்திடுவதற்கு விசேஷமாய் நாடுபவர்களுக்குக் கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதம் கடந்து வந்திடும்.

---

R 4939

# இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள்

## லூக்கா 1:5-23

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." - எபிரெயர் 11:6.

இன்றைய பாடத்தில் நாம் மீட்பரின் முன்னோடியும், அவரைக் குறித்து அறிவிக்கிறவருமாகிய யோவான் ஸ்நானன் பிறக்கும் வரையிலான காலப்பகுதியில், தேவன் கொடுத்திட்ட வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய செய்கைகளையும் (வழி நடத்துதல்களையும்) ஆராயப்போகிறோம்.

இயேசு பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கு முன்பாக, ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் அறிவித்தார். உரைக்கப்பட்ட இந்தப் மறைப்பொருளானது, உலகத்திலுள்ள பாவமும், அதன் சகல தீமையான விளைவுகளும் ஏற்ற காலத்தில் அழிக்கப்படும் என்பதையும், இவைகளைத் தேவனுடைய வல்லமையானது, கீழ்ப்படியாத ஏவாளிடமிருந்து தோன்றிய ஓர் அருமையான குமாரன் வாயிலாக செய்யும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது என்பதை நாம் இப்பொழுது உணர்ந்துக் கொள்கின்றோம். இவ்வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்குரிய அடையாளம் இல்லாமல், பல நூற்றாண்டுகள் கடந்தோடிவிட்டன. நம்முடைய இனமானது மிகுந்த சீர்கேட்டிற்குள்ளும், மிகுந்த அவநம்பிக்கையான நிலைக்குள்ளும் கடந்து போய்விட்டது. இப்படியாக இருக்கையில் சேத்தின் வம்ச வழியில் ஏனோக்கு பிறந்தார். "இவர் தேவனோடு சஞ்சரித்தார்," மேலும் இவர் தெய்வீக வாய்த்தலமாகப் பயன்படுத்தப்பட்டு மற்றுமொரு தீர்க்கத்தரிசனத்தை உரைத்தார். அதாவது, "இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும் அவர்களில் அவபக்தியுள்ளவர்கள்...பரிசுத்தவான்களோடும் கூட கர்த்தர் வருகிறார் என்றும் முன்னறிவித்தார்" (யூதா 14, 15).

உலகத்திற்கு மீண்டும் ஒரு புதிய நியாயத்தீர்ப்பின் வாய்ப்பைக் கொடுக்கப்போகிறதற்கான தேவனுடைய பெருந்தன்மையான/இரக்கம் நிறைந்த நோக்கத்தைக் குறித்து அவர் இன்னும் வெளிப்படுத்த சித்தம் கொள்வதற்குள், இன்னும் ஓராயிரம் வருடங்கள் கடந்துவிட்டது. இப்படியாக இருக்கையில் உலகத்திற்கான (சுவிசேஷத்தை) நம்பிக்கையைக் குறித்து இன்னும் வெளிப்படையாக/அதிகமாக தேவன் தம்முடைய நண்பனாகிய ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார். தேவன் ஆபிரகாமிடம் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான தம்முடைய நோக்கத்தையும், மனுக்குலத்தின் மீதான இவ்வாசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததி மூலமாகவே வரும் என்பதையும் அறிவித்தார். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:3).

ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்ட இவ்விஷயங்களைப் பரிசுத்தவானாகிய பவுல், முதலாம் சுவிசேஷ செய்தி என்றார்; காரணம், மற்றவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட தீர்க்கத்தரிசனங்கள் மனிதனுக்குரிய மீட்பைத் தெளிவாகக் காட்டவில்லை. ஏனோக்கின் மூலம் கொடுக்கப்பட்ட விஷயங்கள் மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் வரும் என்பதைத் தெளிவாகக் காட்டவில்லை. ஆனால் ஆபிரகாமின் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியோ மிகத் தெளிவாக இருந்தது; அதாவது, "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்பதாகும் (கலாத்தியர் 3:8).

தேவன் தாம் கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தை மாத்திரம் அறிவிக்காமல், தேவன் அதற்கு ஆணையிட்டும் கொடுத்தார் என்பதைப் பரிசுத்தவானாகிய பவுல் நமக்கு நினைப்பூட்டுகின்றார். தேவன் ஆணையிட்டுக் கொடுக்க வேண்டும் என்பது ஆபிரகாமுக்குத் தேவையில்லை. ஆபிரகாம் முழுமையாக விசுவாசித்தார். ஆனால் பரிசுத்தவானாகிய பவுல் சொல்வது போன்று தேவன் நமக்காகவே ஆணையிட்டுக் கொடுத்தார். இவ்வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலானது நீண்டகாலம் தாமதிக்கப்போவதினால், இதன் மேல் விசேஷித்த கவனம் கொண்டுள்ள நாம், தெய்வீக ஏற்பாட்டில் ஏதோ சில மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதோ என்று அஞ்சக்கூடும். ஆகையால், "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் (நற்செய்திகள், வாக்குத்தத்தங்கள்) பற்றிக் கொள்ளும்படி, அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு (சபை), இரண்டு மாறாத விசேஷங்களினால் (தேவனுடைய

வார்த்தை மற்றும் தேவனுடைய ஆணையிடுதல்கள்) நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்'' என்று ஆணையிட்டுக் கொடுத்ததற்கான நோக்கத்தைக் கூறி பரிசுத்தவானாகிய பவுல் நமக்கு உறுதியளிக்கின்றார் (எபிரெயர் 6:18-20). ஆகையால் அப்போஸ்தலனின் வார்த்தைகளிலிருந்து ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை இன்னும் நிறைவேறவில்லை என்பதை நாம் காண்கின்றோம்; என்றாலும் அந்த வாக்குத்தத்தமே நம்முடைய விசுவாசத்திற்கான நங்கூரமாகவும் காணப்படுகின்றது.

## ''ஆபிரகாமின் சந்ததிக்கான தேடல்''

இஸ்மயேல் வாக்குத்தத்தின் சந்ததியாயிராமல், ஈசாக்கே சந்ததியாக இருந்தார். மேலும், ஏசாவும் வாக்குத்தத்தத்தின் சந்ததியாய் இராமல், யாக்கோபே சந்ததியாக இருந்தார். இறுதியாக யாக்கோபின் குடும்பம் முழுவதும் ஆபிரகாமின் சந்ததியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏற்ற வேளையில் அவர்கள் எல்லோரும் மோசேக்குள்ளாகக் கடலிலும், மேகத்திலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார்கள். மேலும், சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவர்கள் வாக்குத்தத்தத்தின் சுதந்தரர்கள் ஆனார்கள். நியாயப்பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்தால், இவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள். மேலும், இதன் மூலம் இவர்கள் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வேலைக்கு தேவனுடைய கருவிகளாக இருக்கமுடியும்.

மரணத் தீர்ப்பின் கீழ்ப் பரிபூரணமற்றவர்களாக இருக்கும் மற்றவர்களைப் போன்று இவர்களும் (இஸ்ரயேலர்களும்) பூரணமற்றவர்களானபடியால், இவர்களால் தேவனுடைய பூரணமான நியாப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாமல் போனதால், மீதமான மனுக்குலத்தைப் போன்று இவர்களும் மரித்தார்கள்; காரணம், இவர்களும் பாவிகளே. ''உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை'' என்று இயேசு கூறினார். மேலும், ''எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை'' என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகின்றார் (ரோமர் 3:20). எனினும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய முயற்சித்த யூதர்கள் மாபெரும் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள். எப்படியெனில், சிலர் மாயக்காரர்களாய் இருந்து, இருதயத்திலிருந்து ஜெபம் ஏறெடுக்காதவர்களாய் இருந்தாலும் கூட, சிலர் கபடற்ற உண்மையான இஸ்ரயேலர்களாகவே இருந்தார்கள்.

''கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களின்'' இருதயப்பூர்வமான நேர்மையைத் தேவன் அங்கீகரித்து, பெந்தெகொஸ்தே நாளன்று, உண்மையுள்ள ஊழியக்காரராகிய மோசேயின் வீட்டாரிலிருந்து, உண்மையுள்ள புத்திரராகிய கிறிஸ்துவின் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கும் சிலாக்கியத்தினைத் தேவன் இவர்களுக்குக் கொடுத்தார் (எபிரெயர் 2:5, 6). ''(கிறிஸ்துவின்) அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து...தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்'' (யோவான் 1:12). இயேசு, தமது ஜீவனை பலிச் செலுத்தி மரணத்திலிருந்து தெய்வீகச் சுபாவத்திற்கு உயிர்த்தெழுப்பப்பட்டு, தூதர்களுக்கும், கர்த்தத்துவங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலாக, தேவனுடைய வலது பாரிசத்தின் இடத்திற்கும் உயர்த்தப்பட்டு, தம்முடைய அடிச்சுவட்டில் நடக்க விரும்பும், ''உண்மையுள்ள இஸ்ரயேலர்கள்'' யாவருக்கும் பரிந்துப் பேசும்படி இயேசு வந்த பின்னர்தான், இவர்கள் புத்திரசுவிகாரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

## ''கிருபை நிறைந்த மற்ற வாக்குத்தத்தங்கள்''

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் (பிரதானமாக மாம்ச சந்ததிக்கும்) உரியதாகும். இதன் காரணமாக, யூத யுகம் முழுவதும் இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம் தங்களை ஆபிரகாமின் வித்தாகும்படி தகுதிபடுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, இவர்களிடம் தீர்க்கத்தரிசனத்தின் வாயிலாக தேவன் பேசிக் கொண்டிருந்தார். மோசே மத்தியஸ்தராக இருந்த உடன்படிக்கையைக் காட்டிலும் மேலான உடன்படிக்கையை இவர்களோடு இறுதியில் தாம் பண்ண சித்தம் கொண்டுள்ளார் என்பதைத் தேவன் இவர்களுக்கு வெளிப்படுத்தினார். புதிய உடன்படிக்கையின் கீழ்த் தேவன் இவர்களின் பாவங்களையும், மீறுதல்களையும்/அக்கிரமங்களையும் எடுத்துப்போடுவார் என்பதை இவர்களிடம் கூறினார். ஆனால், அவைகளை எப்படி எடுத்துப்

போடுவார் என்பதைக் கூறவில்லை; அதாவது, இவர்கள் வருடந்தோறும் செலுத்தி வருகிற பலிகளைக் காட்டிலும், "விசேஷித்த பலிகளின்" புண்ணியத்தினால் பாவங்கள் எடுத்துப் போடப்படும் என்பதைக் கூறவில்லை.

இந்தப் புதிய உடன்படிக்கைக்கு மோசேயைக் காட்டிலும் பெரிய ஒரு மத்தியஸ்தர் இருப்பார் என்பதையும், தேவன் அவர்களுக்குக் கூறி உறுதியளித்தார். இந்த மத்தியஸ்தரைக் குறித்து மோசே தீர்க்கத்தரிசனம் உரைத்ததாவது, "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார் அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்முலமாக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 3:22, 23). இஸ்ரயேலர்கள் தெய்வீகப் பிரமாணங்களைப் பரிபூரணமாய்க் கைக்கொள்ளும் நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கும், பூமி அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக இவர்களைத் தேவன் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கும், இவர்களுக்கு அந்த மாபெரும் மத்தியஸ்தரே உதவுவார் (எரேமியா 31:31).

இஸ்ரயேலர்கள் புதிய உடன்படிக்கைக்காகவும், அதன் மேலான மத்தியஸ்தருக்காகவும் ஏங்கினார்கள். அந்த மத்தியஸ்தரை மேசியா அல்லது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அழைத்தனர். இந்த மகிமையான மேசியாவைக் குறித்த அதாவது, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரைக் குறித்த தேவனுடைய செய்தியை மீண்டும் கவனியுங்கள். அவர் கூறுவதென்னவெனில், "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார் இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார், அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்" (மல்கியா 3:1-3).

இவ்விதமாக வரவிருக்கிற மேசியாவைக் குறித்து, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் வரும் காலங்களில் வாழ்பவர்களுக்கு விசேஷமான சோதனைகள், இடர்பாடுகள் இருக்கும் என்பகைவள் குறித்த அறிவிப்புகளையும் இஸ்ரயேலர்கள் பெற்றிருந்தார்கள். லேவியின் புத்திரர் மீதும், இஸ்ரயேலின் மீதும், மற்றும் இவர்கள் வாயிலாக பூமியின் சகல ஜாதிகள் மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரப் போகிற ஆபிரகாமின் வித்திலுள்ள மகா பெரியவரைப் பெற்றெடுக்க அதாவது, சர்ப்பத்தின் தலையை நசுக்கப்போகிற ஸ்திரீயின் வித்தைப் பெற்றெடுக்கும் கனத்திற்காக இஸ்ரயேலர்களில் உள்ள ஒவ்வொரு தாய்மாரும் ஏங்கினார்கள்.

இந்த வாக்குத்தத்தங்கள் தொடர்ந்துக் கொண்டிருந்து, யோவான் ஸ்நானனின் பிறப்பில் உச்ச நிலையை அடைந்தது. யோவான் ஸ்நானன் மேசியாவாய் இராமல், மேசியாவைக் குறித்து முன்னறிவிக்கிறவராகவே இருந்தார். யோவான் ஸ்நானன் மனித தகப்பன் இல்லாமல் அற்புதவிதமாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர் அல்ல. மாறாக, இவருடைய பிறப்பு விசேஷித்த தேவதூதரால் அறிவிக்கப்பட்டது. சகரியாவின் விசுவாசம் ஒருவேளை சோதிக்கப்பட்டிருந்தாலும், ஒன்பது மாத அளவு ஊமையாக இருந்த அனுபவம், அவருடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்கு அவருக்கு உதவிற்று. இவ்விதமாக, மனுஷர்களுடைய மீட்பராக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்புவதற்கு முன்பு, தேவன் வழியை ஆயத்தம் பண்ணினார்.

**ஆமென்!**

---

# மகா பெரிய தீர்க்கத்தரிசி

## லூக்கா 1:57-80

"இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக...தமது ஜனத்தை சந்தித்து, மீட்டுக்கொண்டு..." - லூக்கா 1:68, 74

"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனும் இல்லை. ஆகிலும் தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாய் இருக்கிறவன், அவனிலும் பெரியவனாய் இருக்கிறான்" என்று யோவான் ஸ்நானனைக் குறித்து இயேசு கூறினார் (லூக்கா 7:28). இந்த வார்த்தைகள் வரவிருக்கிற மேசியாவைக் குறித்தும், மீட்பரோடு அவருடைய ஆயிரவருட அரசாட்சியிலும், மகிமையிலும் பங்குக் கொள்வதற்கென ஓர் உண்மையுள்ள வகுப்பாரைப் பாவிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளும் மாபெரும் வேலையின் ஆரம்பத்தைக் குறித்தும், அறிவிக்கும் தீர்க்கத்தரிசிகளில், யோவானே கடைசியானவர் என்பதை நமக்கு காட்டுகின்றது. யோவான் ஸ்நானன் இராஜ்யத்தின் (ஆவிக்குரிய) வகுப்பாரில் ஒருவராக இருக்க முடியாது. மீட்பரின் பலிச் செலுத்தப்படுவதற்கு முன்பும், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்கள் வந்து சிலரை இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு உடன்சுதந்திரர்களாகும்படிக்கு ஏற்றுக்கொள்வதற்கு முன்பும், யோவான் ஸ்நானனின் மாபெரும் வேலை நிறைவேறி முடிந்துவிட்டது. யோவானே இவைகளைப் புரிந்துக்கொண்டிருந்தபடியால், "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அவர் அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்கு சம்பூரணமாயிற்று" என்று கூறினார் (யோவான் 3:29).

## யோவான் - "தேவனுடைய தயவு"

காபிரியேல் தூதனின் தூது செய்திக்கு இசைவாக யோவான் ஸ்நானன் பிறந்தார். பிறந்த எட்டாம் நாளில் அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டு, பெயரிடப்பட்டார். குடும்ப உறவினர்கள் குழந்தைக்கு தகப்பனுடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தியபோதும், குழந்தையின் தகப்பனும், தாயும் யோவான் என்றே பெயரிட்டார்கள். மேலும், உடனடியாகச் சகரியாவின் ஊமை நிலையும் மாறிவிட்டது. சகரியாவின் விசுவாசம் வலுவூட்டப்பட்டது. காபிரியேல் கூறிய பெயரைச் சகரியா கூறியதின் மூலம் தனது சகல சந்தேகங்களையும், தான் மேற்கொண்டுள்ளதை சகரியா வெளிப்படுத்தினார். யோவான் என்ற பெயர் அருமையான அர்த்தத்தைக் கொண்டுள்ளது; அதாவது "தேவனுடைய தயவு" என்பதாகும்.

தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் குறித்து அறிவிக்கவும், மேசியா வெளிப்படும்போது கடுமையான சோதனைகளும், பரீட்சைகளும் ஏற்படும் என்று மல்கியா தீர்க்கத்தரிசி மூலம் அறிவிக்கப்பட்ட விஷயங்களுக்கு ஜனங்களை ஆயத்தமாக்கும் தேவனுடைய தூதனாய் இருக்கும் நோக்கம் தவிர, வேறு எவ்வித நோக்கமும் யோவான் கொண்டிராதது குறிப்பிடத்தக்கதாகும். மல்கியா தீர்க்கத்தரிசி கூறினது போல, மேசியா வெளிப்படும்போது, "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து... வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" (மல்கியா 3:3). ஆகையால்தான் யோவான் ஊழியம் புரிகையில், "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றும், நற்செய்தியை நம்புங்கள் என்றும், மனந்திரும்புங்கள் என்றும், இராஜ்யத்தில் பங்கடையும் படிக்கு ஆயத்தமாகுங்கள் என்றும் அறிவித்தார்.

எதிர்ப்பார்க்காத வண்ணம் சோதனைகள் வந்தது. மேசியா பூமிக்குரிய ஆஸ்திகளுடையவராகவோ, பிரபலமானவராகவோ பிறக்கவில்லை. மேலும் மேசியாவின் அனுபவங்களும், போதனைகளும் நியாயப்பிரமாண வல்லுநர்கள் எதிர்ப்பார்த்த வண்ணமும் இருக்கவில்லை. இயேசுவின் காலக்கட்டத்தில் உள்ள மாய்மாலங்களையும், தப்பறைகளையும் இயேசு எதிர்த்த காரியம், சிலர் மேல் புடமிடும் நெருப்பின் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை நிஜமான லேவியர்களாக அதாவது, அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக மாற்றிவிட்டது. அவர்களில் அநேகர் நிஜமான ஆசாரியர்களாக மாறி, மீட்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து தங்களுடைய சரீரங்களை ஜீவப்பலியாக ஒப்புக்கொடுத்தார்கள்.

## “சகரியாவின் தீர்க்கத்தரிசனம்”

“தீர்க்கத்தரிசனமானது, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள்” என்று பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கத்தரிசிகளைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பேதுரு நமக்கு தெளிவாகக் கூறுகின்றார். மேலும் தீர்க்கத்தரிசிகள், தங்களால் கொஞ்சமாகப் புரிந்துக்கொள்ளப்பட்டதும், எதிர்க்காலத்தில் மாத்திரமே முழுமையாக வெளிப்படுகிறதுமான ஆழமான சத்தியங்களைக் கூறினார்கள் என்பதையும், பரிசுத்த பேதுரு குறிப்பிடுகின்றார். சகரியாவின் தீர்க்கத்தரிசனத்திலும் இது உண்மையே. “இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்; தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி, உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று, அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கத்தரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்” (லூக்கா 1:68-80). 73 முதல் 75 வரையிலான வசனப்பகுதி, இத்தீர்க்கத்தரிசனத்தின் முதல் பகுதியாகும். நிறைவேறப் போகிற விஷயங்கள் நிறைவேறி விட்டது போன்ற பாணியில் இங்குத் தீர்க்கத்தரிசனத்தில் கூறப்பட்டுள்ளது. யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு ஆறு மாதம் முன்னதாகவே பிறந்துவிடுவதால், இந்தத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்ட காலத்தில் இயேசு ஏற்கெனவே கர்ப்பத்தில் உருவாகிவிட்டார் என்பதை நாம் அறிந்துக்கொள்கின்றோம். ஆரம்பித்துள்ள விஷயங்கள் இன்னும் நிறைவேறித் தீரவில்லை என்றபோதிலும், நிறைவேறிவிட்டது போன்ற பாணியில் பரிசுத்த ஆவியானது, இங்குக் கூறுகின்றது. அதாவது, “அவர் தமது ஜனத்தை சந்தித்து மீட்டுக் கொண்டு” என்பதாகும். இங்கு வரும் மீட்பு என்ற வார்த்தையானது, இயேசு ஞானஸ்நானத்தில் தம்முடைய ஜீவனை அர்ப்பணித்தது முதல் கல்வாரியில் தமது பலியை நிறைவேற்றியது வரையிலான மீட்பின் வேலையை மாத்திரம் உள்ளடக்காமல், மனுக்குலத்தை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் முழு வேலையையும் கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

இந்தச் சுவிசேஷ யுகத்தில் நம்முடைய இனத்திலிருந்து ஒரு சிறு வகுப்பார் தெரிந்துக்கொள்ளப்பட்டுச் சீர்த்திருத்தப்பட்டுள்ளனர். ஆனால், மேசியாவின் ஆயிரவருட அரசாட்சி முழுவதுமே, ஆதாமும் அவருடைய சந்ததியும் தங்களுக்கு முன் வைக்கப்படும் தெய்வீகக் கிருபையை ஏற்க மனதாய் இருக்கும் பட்சத்தில் அவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து/வல்லமையிலிருந்து மீட்டுக் கொண்டுவருவதற்கே பயன்படுத்தப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது. ஆகவே, கர்த்தர் நீண்ட காலத்திற்கு முன்பு வாக்களித்துள்ள மகா பெரும் ஆசீர்வாதங்கள் ஆரம்பிக்கும் காலம் அப்போது வந்துவிட்டதால் கர்த்தரைத் துதிப்பதே, (சகரியாவின்) தீர்க்கத்தரிசனத்தின் முதலாம் பாகத்தினுடைய முக்கியத்துவமாகும்.

## “சத்துருக்களிடமிருந்து விடுதலை”

தீர்க்கத்தரிசனத்தின் இரண்டாம் பாகம் 69, 70, 71, 72, 74-பிற்பகுதி ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது. இது தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய சத்துருக்களின் வல்லமையினின்று விடுவிக்கப்படுவதைக் குறிக்கின்றது. இங்கு மற்றவர்கள் அல்ல, தேவனுடைய ஜனங்களே சத்துருக்களிடமிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று வரும் கருத்து முக்கியமானது. வேண்டும் என்றே செய்யாமல் விழுந்துபோன மாம்சத்தின் இச்சை, ஐஸ்வரியத்தின் மயக்கம், இவ்வுலகத்தின் அதிபதியானவன் குருடாக்கி வைத்த நிலை போன்ற காரணங்களினால் பொல்லாங்குச் செய்கிற அநேகர் சத்துருக்களாக இன்று போல், கடந்த காலங்களிலும் இருந்துள்ளனர்.

மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில் குருடாக்கப்பட்ட சகல கண்களும் திறக்கப்படும்போதும், செவிடாக்கப்பட்ட சகல காதுகளும் திறக்கப்படும்போதும், தேவனுடைய குணலட்சணங்களின் மகிமை குறித்த்தான அறிவு தெளிவாக வெளிப்படுத்தப்படும்போதும், பாவத்தின் அகோரம் முழுமையாக வெளிப்படுத்தப்படும்போதும் இப்பொழுது சாத்தானின் விருப்பப்படி அடிமையாக்கப்பட்டவர்கள், இம்மானுயேலுக்கு முன்பாக முழங்காலிட்டு தேவனுக்கு மகிமை சேர்ப்பார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தற்போதைய காலக்கட்டத்தில் இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களே "சிறுமந்தையாக" இருக்கின்றார்கள்; ஆனால், அவருடைய மகிமையான ஆளுகையின்போது, அவர் மற்றொரு மந்தையைச் சேர்த்துக் கொள்வார். "இந்த தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்" என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 10:16).

"ஒரே (தொழுவமும்) மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்ற வார்த்தைகள் தொழுவத்திலுள்ள ஆடுகள் அனைத்தும் ஒரே சுபாவத்தில்தான் இருக்கும் என்று பொருள் படுவதில்லை. மாறாக பரலோகத்திலும், பூமியிலும் உள்ள சகலமும், இறுதியில் ஒரே தலையின் (மேய்ப்பனின்) கீழ்க் கொண்டுவருவதே தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறுகின்றார் (எபேசியர் 1:9). இந்தச் "சகலமும்" என்பதில் மணவாட்டியாகிய சபை பிரதானமானவர்களாய், அதாவது திவ்வியச் சுபாவம் எனும் தளத்தில் காணப்படுவார்கள். இவர்களுக்கடுத்த வரிசையில், திரள் கூட்டத்தினரும், சேராபீன்களும், தேவதூதர்களும் வருவார்கள். மேலும் மீட்கப்பட்டு, மனுஷீகப் பூரணத்திற்குச் சீர்ப்பொருத்தப்பட்ட மனுக்குலம் தெய்வீகத் தொழுவத்தினுடைய கடைசி வரிசையில் இடம்பெறுவார்கள்.

கடைசியில் சகல தேவனுடைய ஜனங்களும் விடுவிக்கப்படும் சத்துருக்களைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பவுல் நமக்குக் கூறுகின்றார். சாத்தான் ஒரு சத்துரு ஆவார்; இவர் ஆயிரம் வருஷமளவும் கட்டி வைக்கப்பட்டு இறுதியில் அழிக்கப்படுவார். பாவமாகிய சத்துருவும், மேசியாவின் இராஜ்யத்தில் பல்வேறு கட்டங்களில் வெளியேற்றப்படும். "பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்" என்று நாம் வாசிக்கின்றோம். மரணம் கல்லறைக்குப் போகும். பிற்பாடு ஆதாமின் மரணம் என்ற ஒன்று இருப்பதில்லை. அதன் வல்லமையின் கீழ் எவரும் இருப்பதும் இல்லை. உயிர்த்தெழுதலின் வல்லமையானது அனைவரையும் விடுவித்துவிடும். வேண்டுமென்றும், துணிந்தும் பாவம் செய்கிறவர்களே இரண்டாம் மரணத்துக்கும் செல்வார்கள். இரண்டாம் மரணம் ஒரு சத்துரு அல்ல.

## "ஆயத்த வேலைகள்"

இந்தத் தீர்க்கத்தரிசனத்தின் மூன்றாம் பாகமானது, சகல சத்துருக்கள் அழிக்கப்படுவதற்கு முன்பும், தகுதியுடையவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் தேவனுடைய புத்திரர்களாக உயர்த்தப்படுவதற்கு முன்பும், நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு வேலையைக் குறித்து நமக்குக் கூறுகின்றது. இது லூக்கா 1:76-79 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வசனங்கள் யோவான் ஸ்நானன் எவ்வாறு கர்த்தருடைய விசேஷித்த ஊழியக்காரனாகிய இயேசுவின் முன்னோடியாக இருப்பார் என்றும், எப்படி இயேசுவின் மாபெரும் வேலைக்கு வழியைச் செம்மையாக்குவார் என்றும் கூறுகின்றது. தேவனுடைய ஜனங்களாக ஏற்கெனவே காணப்படும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, இரட்சிப்புப் பற்றின அறிவை வழங்குவதும், அத்தகையவர்களுக்கு இந்த யுகத்திற்கான "பரம அழைப்பை" காட்டுவதுமே, இயேசுவின் மாபெரும் வேலையாகும். ஆகவே மேசியாவின் யுகத்தில், நீதியின் சூரியனானது மனுக்குலத்தின் மீதான இருளை அகற்றப் போவதற்கு முன்பு, சபை இப்பொழுது தேவனுடைய தயவினால் "விடிவெள்ளி நட்சத்திரத்தை" கண்டு, அதனால் வெளிச்சமூட்டப்பட்டுள்ளனர். தற்காலத்திலுள்ள இந்தக் குறைவான வெளிச்சம்/சிறு வெளிச்சமானது, பரிசுத்தமாக்கும் வல்லமையுடன் விசுவாசிகளின் இருதயத்திற்குள் பிரகாசித்து, அவர்களுக்குள் ஏற்படுத்தும் சத்தியத்தின் பேரிலான பக்தி வைராக்கியம் எனும் நெருப்பை, பற்றி எரிய வைக்கின்றது. இவர்கள் தங்களிடத்தில் உள்ள இந்த ஒளியை மரணத்தின் நிழலின் கீழ் இருப்பவர்கள் மேல் பிரகாசிக்கின்றனர். புதிய யுகம் வருவதற்கு முன்பு வரையிலும், துன்பத்தின் காலத்தில் பரிசுத்தவான்கள் காணப்படுகையில், அவர்களுடைய பாதங்கள் இந்த "விடிவெள்ளியினால்" சமாதானத்தின் பாதையிலேயே வழி நடத்தப்படுகின்றது.

**ஆமென்!**

R 4942

# "ஆலயத்தில் அர்ப்பணிப்பு"

## லூக்கா 2:22-39

"தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்." - லூக்கா 2:31, 32.

இயேசு பிறந்து, நாற்பது நாட்கள் ஆனவுடன், யோசேப்பும், மரியாளும் அவரை ஆலயத்தில் அர்ப்பணிக்கும் பொருட்டாக, எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முதற்பிறப்பிற்குச் செய்ய வேண்டிய வழக்கத்தின்படி அவருக்கும் செய்யப்பட்டது. முழுத் தேசத்திலும் உள்ள முதற்பேறானவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டபோது முதற்பேறானவர்கள், தேவனுடைய பணிக்கென்று விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு கோத்திரமாகிய லேவியர்களுக்கு அடையாளமாக இருப்பதினால், இந்த முறைமை ஒவ்வொரு தாய்க்குப் பிறக்கும் தலைச்சன் பிள்ளைக்கும் பொருந்தும். முதற்பேறான பிள்ளை தேவனுக்கும், அவருடைய பணிகளுக்கும் விசேஷமாக அர்ப்பணிக்கப்பட வேண்டும்.

இந்த முக்கியத்துவம், இந்தச் சுவிசேஷ யுகத்தில் சேர்க்கப்படும் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையானது, முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுவதிலிருந்து விளங்குகின்றது. மேலும் நம்மைக் குறித்துத் "தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பேறானவர்கள்" என்று பரிசுத்தவானாகிய யாக்கோபு கூறுகின்றார் (யாக்கோபு 1:18). சபை முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பரலோக மகிமைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர், திரும்பக்கொடுத்தலின் முறை மூலம், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதித்து, பூமிக்குரிய தளத்தில் தேவனுடைய புத்திரர்களாகும் வாய்ப்பை மனுக்குலத்திற்கு அளிக்கக் கூடிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் (அப்போஸ்தலர் 3:19-21).

விசுவாசிகளின் முன்னிலையில், சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவனுக்கு அர்ப்பணிக்கும் வழக்கத்தை நாம் பார்த்திருக்கின்றோம். இப்படிச் செய்வதினால், பிள்ளைகள் மேல் நன்மைக்கு ஏதுவான செல்வாக்கே காணப்படும். அதாவது, பிள்ளைகள் எதிர்க்காலத்தில் தங்கள் பெற்றோர்கள் கர்த்தருக்கு மிகச் சிறந்ததை அர்ப்பணித்ததின் மூலம் வெளிப்பட்ட அவர்களின் பராமரிப்பு, அன்பு மற்றும் பக்தியை எதிர்க்காலத்தில் உணர்ந்துகொள்வார்கள். இப்படியாகப் பிள்ளைகள் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணிப்பது தொடர்புடைய விஷயத்தில் அனுகூலமான தாக்கத்தினை அடையப் பெற்றிருப்பார்கள்.

மேலும் தங்களிடத்திலுள்ள சிறந்ததை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் பெற்றோர்களும், மிகப்பெரிய ஆசீர்வாதத்தைத் தங்களுக்கு வருவித்துக் கொள்கின்றார்கள். சோதனைகளும், போராட்டங்களும் நிச்சயமாக வரும். ஆனால், அதன் மத்தியிலும், அவர்களுடைய பிள்ளைகள் தேவனுக்கு உரியவர்களே ஆவார்கள். மேலும் இவர்கள், உம் சித்தமே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினால், மற்றவர்களால் அறிந்துக்கொள்ள முடியாத சமாதானத்தையும், ஆவியில் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இது பிள்ளைகள் பகுத்தறிவு மற்றும் தீர்மானம் பண்ணக்கூடிய வயதை அடையும்போது, அவர்களுடைய தனிப்பட்ட அர்ப்பணிப்பிற்கு அவர்களைத் தகுதியாக்கிடாது என்றாலும், பெற்றோர்களுடைய ஆசீர்வாதமான செல்வாக்கானது, பிள்ளைகள் வயதில் முதிர்ச்சியடைகையில் சத்தியம் மற்றும் நீதியின் விஷயத்தில், தேவனுக்குள் சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவியாகக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

குழந்தையாய் இருந்த இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணிக்க வந்தபோது, வயது முதிர்ந்த தீர்க்கத்தரிசி ஒருவர் வந்து குழந்தையைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டு, தேவனைத் துதித்தார். இவருக்கு, ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற சமீபமாயிருக்கிறது என்றும், இஸ்ரயேலின் இரட்சகரைப் பார்க்காமல், தான் மரிப்பதில்லை என்றும் தேவன் ஏதோ விதங்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஏதோ ஒரு தெய்வீக வல்லமையினால், வயது சென்ற இந்தத் தீர்க்கத்தரிசி, இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற

ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என்றார் (லூக்கா 2:29-32).

## "இஸ்ரயேலில் அநேகர் விழுகிறதற்கும், எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், நியமிக்கப்பட்டவர்"

சிமியோன், மரியாளிடம், இக்குழந்தை, "இஸ்ரயேலில் அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரயேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" என்று தீர்க்கத்தரிசனமாகக் கூறினார். எத்துணை அருமையான தீர்க்கத்தரிசனம்! இது, "அநேகர் விழுவதற்கு ஏதுவாக நமது கர்த்தர் இடறுவதற்கான கல்லாகவும், தவறுவதற்கான கன்மலையாகவும் இருக்கின்றார்" என்ற பரிசுத்தவானாகிய பவுலின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது. மேலும் இடறினவர்கள் எழுந்திருப்பார்கள் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார். "அப்படியானால் என்ன? இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையத்தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" (ரோமர் 11:7). தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய கிறிஸ்துவின் சபை முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நிறைவடையும்போது, இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக தெய்வீகக் கிருபையானது, மாம்சீக இஸ்ரயேலர்களிடத்திற்குத் திரும்பும் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் கூறியுள்ளார்; "...பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:25-33).

முன்குறிக்கப்பட்ட தெரிந்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை நிறைவடைவதற்கு, "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள்" போதுமான எண்ணிக்கையில் இராதபடியால் அழைப்பானது, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியைத் தாண்டி, இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஒவ்வொரு ஜாதிகளிலிருந்தும், பாஷைக்காரரிலிருந்தும் சேர்த்துக்கொள்ளும்படிக்கு கடந்துச் சென்றது. இஸ்ரயேலர்களுக்கு ஆசீர்வாதங்கள் கடந்துபோவதற்கு முன்பும், மீதமுள்ள மனுக்குலம், மனித பூரணத்தை அடையும்பொருட்டுச் சீர்த்தூக்கப்படுவதற்கு முன்பும் சபை முழுமை அடைய வேண்டும்.

பரிசுத்தமான ஸ்தீரியாகிய அன்னாள் என்னும் தீர்க்கத்தரிசியானவள், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக எருசலேமில் குடியிருந்து, ஆலயத்தின் பிரகாரங்களில் காணப்பட்டாள். பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட அவளும், குழந்தையை அடையாளம் கண்டுகொண்டு, தேவனைத் துதித்து, ஆபிரகாமின் வாக்குத்தத்தினுடைய நிறைவேறுதலுக்காக, அதாவது, இஸ்ரயேலின் ஆறுதலுக்காகக் காத்திருக்கும் மற்றப் பரிசுத்தமானவர்களிடம் இதை அறிவித்தாள்.

குழந்தையாய் இருந்த இயேசுவைக் கண்டதற்கே நன்றியும், துதியும் ஏறெடுத்தார்கள் என்றால், இயேசுவை அவருடைய முப்பதாவது வயதில், தம்மை மரணம் வரையிலுமான ஜீவப்பலியாக அர்ப்பணித்ததைப் பார்த்தவர்கள் எவ்வளவு அதிமாய் நன்றியை ஏறெடுத்திருப்பார்கள். இவ்வயதில் தம்மை அவர் அர்ப்பணிக்கும்போது அவர், தாம் திவ்வியச் சுபாவத்திலுள்ள புதுச் சிருஷ்டி ஆகுவதற்குப் பரிசுத்த ஆவியினால், மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார் என்பதை உணர்ந்திருந்தார். மேலும், இயேசு தமது 3 ½ வருட ஊழிய காலத்தின்போது தமது அர்ப்பணிப்பின் பலியை நிறைவேற்றுவதில் காண்பித்த உண்மையைக் கண்டவர்கள் இன்னும் அதிகமாய்த் தேவனைத் துதித்திருப்பார்கள். மேலும், அவர் தமது ஓட்டத்தைக் கல்வாரியில் நிறைவு செய்து, மரண நிலையிலிருந்து மூன்றாம் நாள் உயிர்ப்பிக்கப்பட்டு, தாம் முன்பு சந்தோஷமாய் இருந்த பரத்திற்கு நாற்பது நாட்களுக்கு பின் எடுத்துக் கொள்ளப்பட்டதைப் பார்த்தவர்கள், மனுஷனுக்கான இரட்சிப்பின் தெய்வீகத் திட்டம் நடந்தேறுவதை உணர்ந்து இன்னும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

பெந்தெகொஸ்தே நாளன்று, ஜெநிப்பிக்கும் வல்லமையாகப் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொண்டவர்களும், தாங்கள் தேவனுடைய புத்திரராக்கப்பட்டுள்ளதை உணர்ந்து கொண்டவர்களும் அதிகம் பாக்கியவான்கள் ஆவர், "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய

சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17).

## "விழுகையும், மீண்டும் எழுந்திருத்தலும்"

இயேசுவின் சீஷர்களாகிய சொற்பமானவர்கள் தவிர மற்றப்படி, முழு இஸ்ரயேல் தேசமும், இயேசு, தேவனால் அனுப்பப்பட்டவர் என்று அடையாளம் கண்டுகொள்வதற்குத் தவறி, இடறினார்கள். பத்து அல்லது பதினைந்தாயிரம் பேரே பதிவுகளின்படி அவருடைய சீஷர்களாக இருந்திருக்கலாம். "ஆதலால் அவர்கள் போய், பின்னிட்டு விழுந்து, நொறுங்கும்படிக்கும், சிக்குண்டு பிடிபடும்படிக்கும்" (ஏசாயா 28:13). பரிசுத்தவானாகிய பவுல், ஏசாயா தீர்க்கத்தரிசியின் வார்த்தையை மேற்கோள் இட்டாலும், பின்னர் சுவிசேஷ யுகத்தில் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடையும்போது, இஸ்ரயேல் மீண்டுமாக தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். அப்போது இஸ்ரயேல், தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்ளும் காலம் வரும். ஏசாயா 8:15; ரோமர் 11:9-11 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

மேலும் பரிசுத்த பவுல், இஸ்ரயேலுக்கு ஏற்பட்டுள்ள மனக்கடினம், நிரந்தரமானது இல்லை என்றும், புறஜாதிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை நிறைவடையும் வரையிலுமே காணப்படும் என்றும் கூறியுள்ளார். அப்பொழுது, இடறிப்போன இஸ்ரயேலர்கள் மீட்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார். இதுவே, அவர்களுடைய எழுதலாகும். இதுவே, மாம்சீக இஸ்ரயேலோடு தேவன் பண்ணும் உடன்படிக்கை என்றும், அவர்கள் பாவம் அகற்றப்படும் என்றும், சபையின் இரக்கத்தின் மூலம், இஸ்ரயேலர்கள் இரக்கம் பெறுவார்கள் என்றும் பரிசுத்த பவுல் அறிவித்துள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சபை, முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமை அடையும்போது, பின்னர் தெய்வீக ஆசீர்வாதம் இஸ்ரயேலை நோக்கி வந்து, பின்னர், பூமியின் குடிகள்மேல் கடந்து செல்லும். எல்லார் மேலும் இரக்கமாய் இருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார். (ரோமர் 11:25-32).

**ஆமென்!**

---

# வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான...

**ச**த்தியமே தரநிலையாகக் காணப்பட வேண்டும். மற்றவை அனைத்தும் திவ்விய சித்தத்திற்கு முற்றிலும் முரணானவைகளாக இருக்கின்றன; மற்றும் சத்தியத்தினைத் தனது அன்றாட ஜீவியத்தில் கடைப்பிடிக்க தவறுகின்ற நபர், தான் சரியான அளவில் கர்த்தருடைய ஆவியினைப் பெற்றிருக்கவில்லை என்பதை நிரூபிக்கின்றவராய் இருப்பார். ஆகையால் நம்மில் எவரேனும், நம்முடைய அன்றாட ஜீவியங்களில், நம்முடைய உதடுகளைக்கொண்டு நாம் போதித்தவைகளுக்கு இசைவாக நாம் ஜீவிக்கவில்லை என்பதைக் கண்டுகொள்வோமானால், அது கவலைக்கிடமான காரியமாயிருக்கும்; ஏனெனில் தன்னுடைய இருதயத்தில் கர்த்தருக்கு இசைவாக இல்லாதவர் எவரும், சீக்கிரத்தில் தன்னால் போதித்தவைக்கும் இசைவுற்றுப் போய்விடுவார் என்பது நமக்குத் தெரியும்.

ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையார் மத்தியில் வெளிப்புறத்தில் போதகனுக்குரிய மிகுந்த திறமைப்பெற்றிருந்து, ஆனால் தனது அன்றாட ஜீவியத்தில் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதற்கும், மாம்சத்தின்படி இல்லாமல், ஆவியின்படி நடக்க நாடுவதற்கும் சான்று பகராதவராய் காணப்படும் ஒருவர், மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முன்மொழியப்பட்டிருப்பாரானால், அவர் மூப்பர் அல்லது உதவிக்காரர் எனும் உயர் ஊழியங்களுக்கு நியமிக்கப்படுவதற்கு மிக ஆபத்தான நபராக கருதப்பட வேண்டும். எவ்வளவுக்குச் சீக்கிரமாய் அவர் தனிமையில் விடப்படுகின்றாரோ, அவ்வளவுக்கு நலமாயிருக்கும். இப்படிப்பட்ட நபர்கள் அநேகர் ஊழியத்திற்கு முன்கொண்டுவரப்படும்போது, அது அவர்களுக்கும், அவர்கள் ஊழியம் புரியவேண்டியதான சபையாருக்கும் பாதகமாய் அமையும்.

---

# சிலவேண்டாமே, சில வேண்டுமே

**சோதோமின் சமவெளியைத் திரும்பிப் பார்க்க வேண்டாமே,**
**பாபேலின் மனதுக்கொவ்வா முயற்சி செய்ய வேண்டாமே,**
**எகிப்தின் ஆடல் பாடல்களும் உங்களுக்கு வேண்டாமே,**
**கிடைக்கவில்லை என்றெண்ணித்தான்**
**கண்ணீர் சிந்த வேண்டாமே,**
**அங்கே பாயும் நைல்நதிக்காய்**
**தாகம் கொண்டலைய வேண்டாமே**
**கலப்பையின்மீதே வைத்தபின்னே,**
**திரும்பிப் பார்ப்பதும்வேண்டாமே,**
**நமக்குக் கொடுக்கும் பரிசை வேண்டி**
**சிறுமுயற்சி செய்திடல்வேண்டுமே,**
**அழிந்துபோகும்பொருளுக்காக**
**ஆண்டவரிடம் ஜெபிக்க வேண்டாமே,**
**நமது வீடு, நமது கிரீடம், இன்னும் கொஞ்ச காலத்திலே,**
**நாமோ நமது வனாந்தரத்தை கடந்துவந்தே சேர்ந்திட்டோம்,**
**கடும் உழைப்போ முடிவு பெற்றதே,**
**ஓய்வும்கூட ஆரம்பமானதே,**
**யுத்தம் செய்தே முடிந்துவிட்டதே**
**வெற்றிக்கனியும் பறிக்கப்பட்டதே!**

**--1757--**

# நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல்

*"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெய்யைப்போல் இருக்கும்; அது என் தலையை நொறுக்கிப் போடுவதில்லை." (சங்கீதம் 141:5; சரியான மொழியாக்கம்)*

வேதவாக்கியங்களில் நீதிமான் என்ற வார்த்தையானது இரண்டு விதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விதத்தில் அது முற்றும் முழுமையான நீதியான நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; உதாரணத்திற்கு, "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." நம்முடைய ஆதார வசனத்தில், நமது கர்த்தர் இயேசு குட்டுகிற நீதிமானாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இப்படியான விதத்தில் பார்க்கும்போது, சிட்சைகள் என்பது நமது கர்த்தரிடத்திலிருந்து வருகின்றதாய் இருக்கின்றது; மற்றும் சிட்சையைப் பெற்றுக்கொள்கின்றவன், இப்படியான கண்டித்தலிலுள்ள தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அறிந்தவனாக, அதை உணர்ந்துகொண்டுள்ள நிலையில் ஏற்றுக்கொள்வான். ஆனால் இன்னொரு விதத்தில் நீதிமான் என்ற வார்த்தையானது, மனுக்குலத்திற்குப் பொருந்தும் வகையிலும் பயன்படுத்தப்படுகின்றது. வேதவாக்கியங்களில் பல்வேறு நபர்கள் நீதிமான்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர்; காரணம் அவர்கள் பூரணமானவர்கள் என்பதினால் இராமல், மாறாக அவர்கள் சரியான நோக்கமும், சரியான சித்தமும் உடையவர்களாய் இருந்து, தங்கள் நடக்கையில் தேவனுடைய ஆவியை, நீதியின் ஆவியை வெளிப்படுத்தினதினாலேயே ஆகும்.

இப்படியாக நீதிமான் என்ற இந்த வார்த்தையை, ஆதார வசனத்தில் பொருத்திப் பார்க்கும்போது, அது கர்த்தருடைய ஜனங்களாய் இருப்பவர்கள் அனைவரும் யாரை திருத்திட முயற்சிக்கின்றார்களோ, அவர்களுக்கு உதவியாகவும், அவர்களுடைய நன்மைக்காகவும் இருக்கும் வகையில், நீதியாய்க் கண்டித்தலையும், நெறிப்படுத்துதலையும் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும், புத்துணர்வையும் கொண்டுவரும் விதத்தில் செய்ய முடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நறுமணம் கொண்டுள்ள நறுமண எண்ணெய் போன்று இருக்கும் விதத்தில் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இந்தக் கருத்துக்களை நம்முடைய மனங்களுக்கு முன்பாகக் கொண்டிருக்கும்போது, இதில் நமக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகள் கிடைக்கின்றதாய் இருக்கும். முதலாவதாக நாம் கர்த்தரிடமிருந்து வரும் சரிப்படுத்துதல்களை ஏற்றுக்கொள்பவர்களில் அடங்குகின்றவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும் ஏதேனும் காரியத்தில் நாம் தவறு செய்திருந்தால், அதனை சரிசெய்துகொள்வதில் மகிழ்ச்சியாய் இருப்பவர்களாக இருத்தல் வேண்டும்; அடுத்தப்படியாகக் கண்டித்தல் வழங்கப்படுவது ஏற்றதாக இருக்குமென்றால், அது பாதிப்பை ஏற்படுத்துகிற விதமாய் இராமல், மாறாக ஆவிக்குரியதாகவும், தூக்கிவிடுவதாகவும், புத்துணர்வு ஊட்டுவதாகவும் காணப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்படியாகக் காணப்பட வேண்டுமெனில், கண்டித்தல் என்பது அனுதாபத்துடன்/ இரக்கத்துடன்கூடிய ஒன்றாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் மாம்சத்தில் விழுந்துபோனவர்களாகவும், ஆனால் கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டிகளாகவும் காணப்படுகின்றனர் என்றும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகள் என்றால் அவர்கள் கர்த்தருடைய மனதையும், அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தையும் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் நினைவில் கொண்டிருத்தல் வேண்டும். இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து கண்டித்தலை வழங்கக்கூடிய எந்த ஒரு சகோதரரும், தான் யாரைக் கண்டிக்கின்றாரோ அந்நபர் தீமையான நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதை அடையாளம் கண்டுகொண்டு, முடிந்தமட்டும் தயவாயும், இரக்கமாயும், உண்மை விவரங்களை விளக்கிக்கொடுப்பவராய்க் காணப்படுவார். இம்மாதிரியான கண்டித்தலானது திடீரென்று கொடுக்கப்படக்கூடாது; மற்றும் கண்டித்தலை வழங்கும் நபர், வழங்கப்படவேண்டிய தண்டனை மற்றும் அதற்கான ஏற்றவேளை முதலானவைகள் கர்த்தருக்குரியது என்பதையும் நிதானித்துக்கொள்ள வேண்டும். இப்படியாகவே நீதிமானாய்க் காணப்படும் யாவரும்,

மற்றவரைக் கண்டிக்கும்போது காணப்பட வேண்டும். ஜாக்கிரதையாய்க் கருதிக்கொண்டும், ஜெபத்தில் வைத்த பிற்பாடும்தான், கண்டித்தல் பண்ண வேண்டும் மற்றும் இப்படிக் கண்டிப்பதே ஒரு சகோதரனுக்கு (அ) சகோதரிக்கு உதவி செய்வதற்கு இருப்பதிலேயே மிகச் சிறந்த வழியாய் இருக்கும் என்ற முடிவிற்கு வந்த பிற்பாடே கண்டிக்க வேண்டும். இப்படியான நிலைமையில் கண்டிப்புகள் யாவும் கொடுக்கப்பட்டால், இது சாதாரணமாய் வழங்கப்படும் கண்டிப்புகளைக் காட்டிலும், மிகவும் உதவிகரமானதாகக் காணப்படும் என்று நம் அனைவராலும் ஒத்துக்கொள்ள முடியும்.

## நொறுக்கும் விதமான கண்டித்தல் என்பது அநீதியானதாகும்

ஆதார வசனத்தில் இடம்பெறும் "அது என் தலையை நொறுக்கிப்போடுவதில்லை" என்பதான வார்த்தைகளானது, கண்டித்தல் துன்பத்தைக்கொடுக்கிறதாகவோ, நொறுக்கிப்போடுகிறதாகவோ காணப்படாமல், ஆசீர்வாதமாய்க் காணப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவருடைய தலையை நொறுக்கிப்போடுதல் என்பது, அந்நபரைக் கொன்றுபோடுவதான காரியமாகும். மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்துவதற்கான (அ) மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்திற்காக நீதிமான்கள் உலகத்தில் காணப்படாமல், மாறாக உலகத்தில் நன்மை புரிவதற்கான நோக்கத்திற்காகவே காணப்படுகின்றனர். மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றவர்கள், இப்படிச் செய்ததற்கு ஏற்ப அநீதிமான்களாய் இருப்பார்கள். தங்களால் கண்டிக்கப்படுபவர்களை நொறுக்கிப்போடத்தக்கதாக தங்களது விமர்சனங்களையும்/ குற்றஞ்சாட்டுதல்களையும் மற்றும் கண்டனங்களையும் பயன்படுத்துகின்றவர்கள் நீதிமான்கள் அல்ல. இப்படிப்பட்டவர்கள் குற்றங்களைச் சரியாய் எப்படிச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலனின், "கடிந்துகொள்ளுதல்," "கண்டனம்பண்ணுதல்" முதலான வார்த்தைகள், தேவனுடைய ஜனங்கள் அனைவரிடமும் கூறப்படாமல், மாறாக மூப்பனாகிய தீமோத்தேயுவிடம் கூறப்பட்டதை அறிந்துகொள்ள வேண்டும். இதனால்தான் சாந்தகுணமுள்ள மனிதர்களாகவும், வளர்ச்சியடைந்துள்ள மனிதர்களாகவும், தங்களது சொந்த ஜீவியங்களையும், சொந்த நாவுகளையும் கட்டுப்படுத்தியுள்ள மனிதர்களாகவும் இருப்பவர்கள் மாத்திரமே மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்; இதினிமித்தம் இவர்கள் மற்றவர்களை நொறுக்கிப்போடுகின்றவர்களாய் இராமல், மாறாக இவர்களது கடிந்துகொள்ளுதலானது, மற்றவரைக் கர்த்தரிடம் நெருக்கமாய்க் கொண்டுவருவதற்கு நோக்கமாயும் மற்றும் இதற்கு உதவியாயும் மற்றும் உற்சாகமூட்டுகிறதாயும் மற்றும் துணைப்புரிகின்றதாயும் காணப்படும்.

## முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல்

முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல், அவரைத் தகப்பனைப்போன்று பாவிக்கும்படிக்கு, பரிசுத்தவனாகிய பவுல், தீமோத்தேயுவுக்குப் புத்திமதி கூறினபோது, அப்போஸ்தலன் இங்குச் சபையிலுள்ள மூப்பரைக் குறித்துக் குறிப்பிடாமல், மாறாக ஒரு நபரைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவராய் இருப்பவரைக் குறித்துக் குறிப்பிடுகின்றார். உன்னைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவரைக் கடிந்துகொள்ளாதே என்றும், அவரைத் தகப்பன்போன்று பாவிக்க வேண்டும் என்றும், இதுபோலவே முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய புருஷர்களைச் சகோதரர்கள்போலவும், பாலிய ஸ்திரீகளைச் சகோதரிகள்போலவும், நடத்தவேண்டும் என்றும் உள்ள விதத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடுள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், மற்றவர்களுடைய சுயாதீனங்களை நசுக்கிடுவதற்கோ (அ) மற்றவர்களை அச்சுறுத்துவதற்கென்றோ, சபையில் மூப்பர்கள் நியமிக்கப்படவில்லை. தயவு, காருண்யம் முதலானவைகளின் ஆவியே பரிசுத்த ஆவியாய் இருக்கின்றது. இவைகள் அல்லாத வேறே ஆவியில் ஒரு மூப்பர் கடிந்துகொள்வாரானால், அவர் தன்னால் கடிந்துகொள்ளப்படும் நபர் ஒரு குழந்தை அல்ல என்பதையும், அந்நபர் குழந்தை போன்று நடத்தப்படக்கூடாது என்பதையும், அந்நபர் கடிந்து கொள்ளப்படவோ (அ) தாக்கிப்பேசப்படவோ (அ) "இவைகள் அனைத்துமே தவறு!" என்று கூறப்படவோ கூடாது என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஞானமற்ற விதங்களில் வழங்கப்படும் கடிந்துகொள்ளுதலானது, பிரச்சனைக்கான பலமான காரணமாய் அமைகின்றது.

வயதில் முதிர்ந்த ஒருவர், ஒரு காரியத்தை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது என்று, வயதில் குறைந்த ஒரு நபர் எண்ணி, "இவைகளையெல்லாம் நீங்கள் அறிய வேண்டியிருக்கிறது, நான் உங்களுக்குப் பாடம் புகட்டுகிறேன்" என்று வயதில் குறைந்தவர் கூறுவதும், பொறுமையை இழந்துபோவதும், ஞானமுள்ள காரியமாகவோ (அ) இரக்கமுள்ள காரியமாகவோ (அ) தயவுள்ள காரியமாகவோ இருந்திடாது. இம்மாதிரியான ஆவியானது, அநேக இடங்களில் பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளது. இம்மாதிரியான நடக்கைகளுக்கு எதிர்மாறாகவே அப்போஸ்தலனுடைய புத்திமதி காணப்படுகின்றது மற்றும் அவர் இரக்கத்தையும், தயவையும், வயதை கருத்தில்கொள்ளும் தன்மையையும் மற்றும் இது விஷயத்தில் தேவையான அனைத்தையும் அறிவுறுத்துகின்றவராய்க் காணப்படுகின்றார். அநேக வேதவாக்கியங்களைப் பார்க்கும்போது, நம் நாட்களில் நாம் காணமுடியாத அளவு, முற்காலங்களில் குடும்பத்தின் மீதான ஓர் அனுதாபம் காணப்பட்டுள்ளது என்பது நிச்சயமே; இதுவே அப்போஸ்தலனின் பின்வரும் வார்த்தைகளிலும் வெளிப்படுகின்றது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு" (1 தீமோத்தேயு 5:1-2).

இன்றைய நாட்களில் அந்நியர்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில் நடந்துகொள்வதும், ஒருவருடைய சொந்த குடும்பத்தாரிடம் மிகவும் பரிவற்ற/பண்பற்ற விதத்தில் நடந்துகொள்வதும் வழக்கமாய்க் காணப்படுகின்றது; சிலர் வெளியாட்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில் நடந்துகொள்வார்கள், ஆனால் தாங்கள் யாருக்கு இரக்கமும், உதவியும் மற்றும் அனுதாபமும் காண்பிக்க வேண்டுமோ அத்தகையவர்களிடம் மிகவும் பரிவற்று/பண்பற்று நடந்துகொள்வார்கள். இதே கருத்தே, "சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள்" என்ற புத்திமதியில் வெளிப்படுகின்றது. ஆனால் இன்றைய நாட்களில் நீங்கள் உண்மையான நண்பர்களைத் தேடுகையில், நீங்கள் நண்பர்களுக்காக சொந்த குடும்பத்திற்குள் பெரும்பாலும் தேடிடுவதில்லை. இந்த விஷயத்தில் நம்முடைய வளர்ச்சி என்பது பரிணாம வகையாய் நிச்சயமாய்க் காணப்படுவதில்லை. தகப்பன், தாய், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் அக்கறையுடனும், இரக்கத்துடனும், அன்புடனும் நடத்தப்பட வேண்டும். மேலும் இந்தக் கொள்கையானது விசுவாச வீட்டாரிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

## அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குச் செய்யாது

2 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில், தேவனுடைய கிருபையின் ஊழியக்காரனாக அப்போஸ்தலன், சுவிசேஷம் அறிவிக்கப்படும் விஷயத்தில் அடங்கும் மூன்று அம்சங்களை அதாவது: (1) கண்டனம்பண்ணுதல்; (2) கடிந்துகொள்ளுதல்; (3) புத்திசொல்லுதல் எனும் அம்சங்களைக் குறித்து விவரிக்கின்றார். ஆனால் முதல் இரண்டு அம்சங்களைத் தாராளமாய்ப் பயன்படுத்தும் விஷயத்திற்கு எதிராக, கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் எச்சரிக்கப்படுவது பாதுகாப்பானதாகும். சரியாய்க் கண்டனம் பண்ண வேண்டுமெனில் இருதயமானது, அன்பினாலும், அனுதாபத்தினாலும் மிகவும் நிரம்பிக் காணப்பட வேண்டும்; இல்லையேல் கண்டனங்களும், கடிந்துகொள்ளுதல்களும் கூர்மையுடன் கடந்துவருகின்றதாய் இருந்து, நன்மையைப் பார்க்கிலும், பாதகத்தையே உண்டுபண்ணுகிறதாய் இருக்கும். இருதயம் முழுக்க அன்பினால் நிரம்பி இருந்தாலும், யாருக்கு உண்மையில் அவசியப்படுகின்றதோ, அப்படிப்பட்டவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக கடிந்துகொள்ளுதல்களையும், கண்டித்தல்களையும் பயன்படுத்த முடிகின்றதான மிகுந்த சீரான தலையும்கூட அவசியமாய் உள்ளது. இதில் தேவனுடைய ஜனங்கள், "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாகவும், புறாக்களைப்போலக் கபடற்றவர்களாகவும்" காணப்பட வேண்டும். "புத்திசொல்லும்" வகை ஊழியமானது, பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களினால் நன்கு பயன்படுத்தப்படலாம். இந்த வகை பிரயாசங்களும், மற்ற வகை பிரயாசங்களும், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும், சகோதர சிநேகத்துடனும் கையாளப்பட வேண்டும்.

## எப்போது மன்னிப்பு ஏற்றதாய் இருக்கும்?

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்கா 17:3-4).

நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு, தேவனிடம் மன்னிப்புக் கேட்காதது வரையிலும், அவர் நம்முடைய பாவங்களை மன்னிப்பதில்லை. நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்திருப்பவர்கள் விஷயத்தில், நாம் நமது முழுமையான மன்னிப்பை வெளிப்படுத்துவதற்கு முன்னதாக, அவர்கள் தங்கள் தவறைக் கொஞ்சம் ஒப்புக்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்ப்பது ஏற்புடையதென நமது கர்த்தர் தெளிவாய்த் தெரிவிக்கின்றார். "ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக."

நாம் தெய்வீகக் கட்டளையினுடைய ஒரு பாகத்தை ஏற்றுக்கொண்டு, மற்றொரு பாகத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்படக்கூடாது. "அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர் கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தம் கொண்டிருந்தார் என்றும், "அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர் கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தங்கொள்ளவில்லை என்றும் நாம் கூறக்கூடாது. தவறுசெய்கின்றவர்கள் மனஸ்தாபப்படுவது, அவர்களுக்கான கடமையாய் இருக்கின்றபடியால், பெரும்பான்மையான ஜனங்களின் விஷயத்தில் மனஸ்தாபப்படுவது ஏற்புடையது என்று வலியுறுத்திக் கொண்டிருப்பது அவசியமற்றதாய் உள்ளது. தங்களிடம் மன்னிப்புக் கேட்பது வரையிலும், மன்னிப்பு வழங்குவதற்கும் பெரும்பான்மையான ஜனங்கள் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர்.

## நாம் அற்பத்தனங்களுக்கு அப்பாற்பட்டு ஜீவிக்க வேண்டும்

இன்னொரு பக்கத்தில் ஜாக்கிரதையும் அவசியமாய் உள்ளது. கிறிஸ்தவன் என்பவன் அன்பான, பெருந்தன்மையுடன் கூடிய இருதயதன்மையை உடையவனாகவும், பரம பிதாவினுடைய பண்புகளின் சாயலாகவும் காணப்பட வேண்டும். அறிந்து செய்யாமலும் மற்றும் துணிகரம் இல்லாமலும் இருக்கும் பட்சத்தில், எப்படித் தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மைக் கையாளுகின்றாரோ அதுபோலவே மற்றவர்களின் சிறு தவறுகளைக் கிறிஸ்தவனும் கவனியாமல் விட்டுவிடத்தக்கதாக அவன், முக்கியத்துவம் இல்லாதவைகளின் விஷயத்தில் மிகவும் அனுதாபமும், அன்பும் கொண்டவனாக இருக்கவேண்டும். இப்படியான கொள்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுமானால், அதாவது வேண்டுமென்றே செய்யப்படாத எதையும் குற்றமென அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது என்ற உறுதியான தீர்மானம் காணப்படுமானால், இது அனைவருக்கும் மாபெரும் ஆசீர்வாதமாய்க் காணப்படும் மற்றும் தேவனுக்கொத்த நடக்கையாகவும் காணப்படும். நமது கர்த்தரால் அவ்வசனத்தில் குறிப்பிடப்படும் பாவங்களானது, முக்கியத்துவமில்லாத காரியங்களாகவோ, பின்விளைவுகள் உண்டுபண்ணாத காரியங்களாகவோ, கற்பனைகளாகவோ (அ) பொல்லாத அனுமானங்களாகவோ, கற்பனைபண்ணப்பட்ட அவமதிப்புகளாகவோ இராமல், நமக்கு எதிராய்ச் செய்யப்படும் உண்மையான தவறுகளாய் இருக்கின்றது; இப்பாவங்கள் ஏற்கத்தக்க நிரூபணங்களை உடையவைகளாய் இருப்பதினால், இதன் காரணமாக நாம் தவறை அடையாளம் கண்டுகொண்டுள்ளோம் என்றும், அது நம்மைத் துன்பப்படுத்தியுள்ளது என்றும், நமக்கு வலியுண்டாக்கியுள்ளது என்றும் கொஞ்சம் சுட்டிக்காட்டும் வண்ணம், கொஞ்சம் ஏற்றவிதமான கடிந்துகொள்ளுதலை ஞானமாயும், அன்பாயும், இரக்கமாயும் வழங்குவது நமக்கான கடமையாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளுதல் வழங்கப்படுவதற்கான ஒரே ஓர் ஏற்ற வழிமுறை குறித்ததான திவ்விய பிரமாணமானது, நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு 18:15-17) மற்றும் இதைக்குறித்து விவரமாய் நம்முடைய வெளியீடுகளில் பார்த்திருக்கின்றோம். நமது கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் காணப்படுவது என்பது, சீஷத்துவத்திலுள்ள குறைப்பாட்டிற்கான ஆதாரமாகுகின்றதாகக் கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தர் வெகு சில குறிப்பிட்ட கட்டளைகளைக் கொடுத்திருந்தபோதிலும், மனக்குறைகளைச் சரிச் செய்துகொள்வதற்கான ஒரே ஒரு

வழியென, அவர் இந்த ஒரு கட்டளையைக் கவனமாய்க் கொடுத்திருக்க, இது அநேக வளர்ந்துள்ள கிறிஸ்தவர்களினால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது.

## கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல

மன்னிப்பதற்கான மனப்பாங்கு எப்போதும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும் மற்றும் அது அனைத்து நேரங்களிலும் நம்மால் வெளிப்படுத்தவும் படவேண்டும். நம்முடைய அன்புடன்கூடிய பெருந்தன்மையும், இரக்கமும், கொஞ்சமும் தீங்குநினைக்க விரும்பாத தன்மையும், நம்முடைய வார்த்தைகள் மற்றும் ஜீவியத்தின் கிரியைகள் அனைத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது தேவனுக்கொத்த நடக்கையாகக் காணப்படும். நாம் பாவிகளாகவே இருந்தபோதிலும், தேவன் நம்மிடத்தில் இரக்கமுள்ள, பரந்த மனப்பான்மையுள்ள பெருந்தன்மையுடன்கூடிய உணர்வினையே கொண்டிருந்தார். பாவிகள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அவர் காத்திருக்கவுமில்லை, மாறாக இசைவிற்குள்ளாக வந்திடுவதற்கான தமது விருப்பத்தையும், மன்னிப்பதற்கான தமது ஆயத்தத்தையும் உடனடியாக வெளிப்படுத்தினவராகவே காணப்பட்டார். இதற்கு இசைவான ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் செய்தியானது, "தேவனோடே ஒப்புரவாகுங்கள்" என்பதாகும். நம்முடைய முகங்களானது, கடினமான பார்வையைக் கொண்டிராத அளவுக்கு, நம்முடைய வார்த்தைகளில், கடுமையான வலிக்கொடுக்கும் கண்டித்தல் காணப்படாத அளவுக்கு, நம்முடைய இருதயங்களானது மன்னிக்கும் இந்த மனப்பாங்கை முழுக்கக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய முகங்களும், வார்த்தைகளும், அனைத்துச் சமயங்களிலும் நம்முடைய இருதயங்களில் நாம் பெற்றிருக்க வேண்டிய, அன்புடன்கூடிய மன்னிப்பை வெளிப்படுத்திட வேண்டும்.

இதமான வார்த்தைகளுடன்கூடிய வெளித்தோற்றமான மற்றும் சம்பிரதாயமான மன்னிப்பிற்கும், இருதயத்திலிருந்து கடந்துவரும் உண்மையான மன்னிப்பிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கு நேராக நமது கர்த்தர் குறிப்பாய் நமது கவனத்தைத் திருப்புகின்றார். வெளித்தோற்றமான மன்னிப்பு என்பது, உதட்டளவு மாத்திரமானதாகவும், மற்றும் உள்ளுக்குள் எரிச்சல் காணப்படுவதையும், மன்னிப்பு வழங்காத ஆவி காணப்படுவதையும் மற்றும் அடக்கிவைக்கப்பட்டதான குரோதம் மற்றும் பகைமையின் உணர்வுகளானது, இன்னும் கொஞ்சம் காலத்திற்குள்ளாக அவதூறு வார்த்தைகளாக வெளிப்படும் என்பதையும் அர்த்தப்படுத்துகிறதாகவும் இருக்கும். தேவன் இருதயத்தைப் பார்க்கின்றவர் ஆவார் மற்றும் உதட்டளவிலான அறிக்கைகள் என்னவாக இருப்பினும், அவ்வார்த்தைகளுடன் இருதயமும், ஜீவியமும் இசைவாய்க் காணப்படாதது வரையிலும், அவர் அதைக் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. ஆகையால் "என் சகோதரனை நான் அன்புகூருகின்றேன்" என்று ஒருவர் கூறிக்கொண்டு, மற்றும் அதே வேளையில், வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ சகோதரனுக்குப் பாதிப்புண்டாக்க நாடும்போது, அவ்வார்த்தைகள் வீணானதேயாகும். தீமை பேசுதல், குரோதம், பகைமை, பொறாமை, வாக்குவாதம்/சண்டை ஆகிய அனைத்தும், இருதயத்திலுள்ள பொல்லாப்பிடமிருந்தே கடந்துவருகின்றது; ஆகையால் கர்த்தருடைய சரீரமாக இருப்பதற்கு விரும்புகின்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது புளிப்பில்லாத அப்பத்தில் அங்கத்தினர்களாகத்தக்கதாக, "துர்க்குணம் எனும் புளித்தமாவை" அப்புறப்படுத்துவது அவசியமாய் உள்ளது.

"உங்கள் இருதயங்களில்" மன்னித்தல் என்பது, எப்போதும் நீங்கள் அடையப்பெற வேண்டிய ஒரு நிலையாகும். மற்றவர்கள் நமக்கு எதிராக எவ்வளவு கடுமையாகக் குற்றம் புரிந்திருந்தாலும், நாம் அனைவருக்குமான நல்லெண்ணத்தையும், மன்னிப்பையுமே நம் இருதயங்களில் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, வேறு எந்த எண்ணங்களுக்கும் நாம் புகலிடம் கொடுக்கக்கூடாது. இப்படியாக இருக்கும் பட்சத்தில், மனந்திரும்புகிறவர்களை நாம் வெளிப்படையாய் மன்னிப்பதற்கும் மற்றும் அதை வெளிப்படுத்துவதற்கும், நாம் ஆவலும், ஏக்கமும் உள்ளவர்களாய்க் காணப்படுவோம். ஆகையால் தவறுக்காக மனம் வருந்துபவரின் சார்பிலிருந்து மிகவும் விளக்கமான அறிக்கையினை வற்புறுத்திக் கேட்பதற்கு நாம் நாடுகின்றவர்களாய் இருக்க மாட்டோம்; மாறாக கெட்டக் குமாரனுடைய தந்தையைப்போன்று நாமும், மனம் வருந்துகிறவர் தாழ்மையான மனநிலையோடு வருகிறதைக் காண்கையில், நாம் இருதயங்கள் தொடப்பட்டவர்களாக இருந்து, நாமும் பாதித் தூரம் சந்திக்கச் செல்லத்தக்கதாகவும், அவரை மன்னிக்கத்தக்கதாகவும், அவரை அன்போடு வரவேற்கத்தக்கதாகவும் மற்றும் முழுமையான ஐக்கியம் மற்றும் சகோதரத்துவத்தின் வஸ்திரத்தை உடுத்துவிக்கத்தக்கதாகவும் தூண்டப்படுகிறவர்களாக இருப்போம்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:15).

## பாவத்தை வெறுத்துவிடுங்கள், பாவியையல்ல

"காயப்படுத்தாதே" எனும் வார்த்தையானது, நாம் சரீரப்பிரகாரமாக நமது சத்துருக்களைக் கொல்லவோ (அ) காயப்படுத்தவோ கூடாது என்பதைக் குறிப்பதாக நாம் முற்காலங்களில் அர்த்தம் எடுத்துக்கொண்டோம்; ஆனால் போதகரை நாம் பார்க்கும்போதும், அவரது வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்கும்போதும், அவர் "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறுவதைக் கேட்கின்றோம் மற்றும் அவர் பாவம் எதுவும் செய்யாமலும், அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படாமலும் இருந்தபோதிலும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:22-23) என்று அப்போஸ்தலரோடுகூட நாமும் கவனிக்கின்றோம்.

நாம் உண்மையுள்ள மாணாக்கர்களாகக் காணப்படுவோமானால், இருதயத்தினுடைய எண்ணங்களையும், நோக்கங்களையும் பகுத்தறியத்தக்கதாக, கிறிஸ்துவின் பிரமாணத்தை, சுயாதீனத்தின் பூரண பிரமாணத்தைப் பெற்றிருக்கத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்வோம் மற்றும் நாம் பாவம் அனைத்தையும் வெறுக்க வேண்டியவர்களாயிருக்க, நாம் எந்தப் பாவியையும் வெறுக்க முடியாதவர்களாகக் காணப்பட்டு, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் பூரணப்பட்டிருக்க நாம் பார்த்துக்கொள்வோம். நம்முடைய சத்துருக்களை நாம் பழிக்குப் பழி வாங்கவும் மற்றும் தூஷிக்கவும் கூடாது என்பது மாத்திரமல்லாமல், இப்படியாகச் செய்வதற்கு நாம் விரும்பவும் கூடாது. தீமையான விருப்பங்கள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இம்மாதிரியான விருப்பங்களைக் கொடுத்திட்டதான சுயநலமான நிலைமைகளும், முற்றிலுமாய் அழிக்கப்பட்டு மற்றும் அவைகளுக்குப் பதிலாக அன்பு, அதாவது கிறிஸ்துவின் ஆவி நிரப்பப்பட வேண்டும்.

## தேவனுடைய அன்பின் குமாரனைப் பின்பற்றுதல்

யோவான் ஸ்நானன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு ஆகிய இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்களில் ஒவ்வொருவரும், தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப தங்களுக்கான பணிகளை நிறைவேற்றினார்கள். ஆனாலும், அவர்களுக்கு வெவ்வேறு பணிகள் இருந்தது எனும் உண்மையிலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். யோவானுடைய பணி என்பது பிரதானமாகக் கண்டிப்பவராகவும், சீர்த்திருத்தவாதியாகவும் இருப்பதேயாகும் மற்றும் அவர் மேற்கொண்டுள்ள பணி தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் பற்றின காரியங்களில், அவர் தீர்க்கத்தரிசியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நமது கர்த்தருடைய பணியோ, வேறுபட்ட ஒன்றாகும்; யோவானுடைய ஊழியமானது யாரிடத்தில் நீதியையும் மற்றும் கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கும், அதைச் செய்வதற்குமான வைராக்கியத்தையும் தூண்டினதோ, அத்தகையவர்களைத் தம்மிடமாய்ச் சேர்த்துக்கொள்வதே கர்த்தருடைய பணியாய்க் காணப்பட்டது.

கிறிஸ்துவினுடைய சரீரமாயிருப்பதற்கும் மற்றும் அவரைப் பின்பற்றுவதற்குமென்று அழைக்கப்பட்டுள்ள நாம், மேற்கூறிய விஷயத்திலிருந்து, நமக்கான சரியான நடக்கை தொடர்புடைய பாடம் ஒன்றினைக் கற்றுக்கொள்ளலாம். வனாந்தரத்தில் தங்குவதற்கும் மற்றும் ஜீவிப்பதற்கும் மற்றும் விநோதமாய் வஸ்திரம் உடுத்திக்கொள்வதற்கும் மற்றும் அனைத்தையும் மற்றும் அனைவரையும் பற்றி வெளிப்படையாய்க் கண்டனம் பண்ணுவதற்கும் மற்றும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் என்று நாம் யோவான் போன்று அனுப்பிவைக்கப்படவில்லை. இம்மாதிரியான பணிகள் விசேஷமானவைகளாகவும், மிகவும் அபூர்வமானதாகவும் காணப்படுகின்றன என்று கர்த்தருடைய அருமையான சில ஜனங்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்; மற்றும் சில சமயங்களில் தங்களுக்குரியதல்லாத மாதிரியைப் பின்பற்றுவதன் மூலம், இவர்கள் கர்த்தருடைய காரணங்கள் மீது திட்டமிடாமலேயே அவதூறைக் கொண்டுவருகின்றனர்.

தேவனுடைய அன்பின் குமாரனாகிய நமது கர்த்தரையே நாம் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும் மற்றும் நாம் யோவான் ஸ்நானனைப் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. மற்ற ஜனங்களுடைய காரியங்களில் தலையிடுவதற்கு முயல்வதின்

மூலமாகவோ, இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு நாடுவதின் மூலமாகவோ, சக்கரவர்த்திகள், இராஜாக்கள், அதிபதிகள் முதலானவர்களைக் கண்டிக்க முற்படுவதன் மூலமாகவோ நாம் சண்டைகளைத் தூண்டிவிடக்கூடாது; மாறாக அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரமானவைகள் எவைகள் என்று தேவன் காண்கின்றாரோ, அவைகள் சகிக்கப்படுவதற்கும் பாத்திரமானவைகள் என்பதாக நாமும் காணலாம் என்பதை நினைவுகூருவதற்கு, அப்போஸ்தலனால் நாம் அறிவுறுத்தப்படுகின்றோம். நம்மால் அங்கீகரிக்க முடியாத அநேகக் காரியங்கள் இருந்திட்டாலும், அவைகள் அனைத்தையும் அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய வார்த்தைகளை நிறைவேற்றும் விஷயங்களில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாதவைகளை, விசேஷித்த விதத்தில் வெளிப்படையாய்க் கண்டிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (உரோமர் 12:18) என்று கூறி, அப்போஸ்தலன் சரியான நிலையைக் குறித்துச் சுட்டிக்காட்டுகின்றார். "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9) என்று நமது கர்த்தர் கூறி, இதே கருத்தை வலியுறுத்தினவராகக் காணப்படுகின்றார்.

## ஞானமற்ற நடக்கை

மேற்கூறப்பட்டுள்ள காரியம் தொடர்புடைய விஷயத்தில், தங்கள் சொந்த குடும்பத்தின் காரியத்தில் கர்த்தருடைய ஜனங்களிலேயே பரிசுத்தமானவர்களாய்க் காணப்படும் சிலர் தவறு செய்தவர்களாகிப்போய், தேவையற்ற தப்பான அபிப்பிராயங்களையும், எதிர்ப்புகளையும் உருவாக்கிக் கொண்டு, பரிசுத்தத்திற்குரிய நியமங்களின் அளவுக்கும், சிலுவை சுமத்தலுக்குரிய அளவுக்கும் உயர்வானதாய் இராத காரியங்களிலும், அதே வேளையில் இயல்பில் பொல்லாங்கானதாகவோ (அ) நல்லொழுக்கமற்றதாகவோ காணப்படாத காரியங்களிலும் தொடர்ந்து குறைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் இல்லங்களை மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடுகின்றனர். ஒழுக்கக்கேடுகள் முதலானவைகள் தொடர்புடைய விருப்பங்கள் அனைத்திற்கும் எதிராக, பெற்றோர்களும், பாதுகாவலர்களும் நிச்சயமாய்ப் பாதுகாத்திடவே வேண்டும், ஆனால் தாங்கள் அன்புகூருகின்றவர்கள் பெயர்க் கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலும் மற்றும் உலகப்பிரகாரமான ஆவியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதினாலும், அவர்களிடத்தில் குற்றங்கண்டுபிடிப்பது என்பது நிச்சயமாய் ஞானமற்ற காரியமாகவே காணப்படும். பரிசுத்த ஆவிக்குள்ளான சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலுமான ஜீவியம் ஜீவித்தல் என்பதே கர்த்தருடைய ஜனங்கள் கொடுக்க முடிந்த, உலகப்பிரகாரமான ஜீவித்தலுக்கு எதிரான மிகச் சிறந்த கண்டனமாகவும், அவர்கள் அறிக்கைப்பண்ணுகின்றதான மகிமையான சுவிசேஷத்திற்கான மிகச் சிறந்த சிபாரிசாகவும் காணப்படுகின்றது. இந்த நிருபமே வாசிக்கப்படும் மற்றும் இதுவே இருளைக் கண்டிக்கிறதான ஒளியாகவும் காணப்படும்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்மிடமுள்ள சுயத்தை வெறுத்தலுக்கான அம்சங்களை நாம் அர்ப்பணம்பண்ணாதவர்களிடம் எதிர்ப்பார்க்கவும் முடியாது மற்றும் அதை அவர்களிடத்தில் திணிக்கவும் நாம் முற்படக்கூடாது. முழுமையான அர்ப்பணிப்பு என்பது, அவர்கள் செலுத்தக்கூடிய "புத்தியுள்ள ஆராதனை" என்று அவர்கள் கண்டுகொண்டு, அவர்கள் தங்கள் சரீரங்களை, தேவனுக்கான ஜீவப்பலிகளாக ஒப்புக்கொடுப்பது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். பரிசுத்தம் மற்றும் அர்ப்பணிப்பிற்கான அளவுகோல்களைக் குறைத்துப் போடத்தக்கதாக அநேக செல்வாக்குகள் தொடர்ச்சியாகச் செயலாக்கத்தில் காணப்படுகின்றன என்பதை உணர்ந்த நிலையில், மேய்ப்பர்களும், போதகர்களும், கர்த்தருடைய அர்ப்பணம்பண்ணியுள்ளதான "மந்தைக்கு" முன்னதாக, தொடர்ந்து உயர்ப்பட்ச வேதவாக்கியங்களின் அளவுகோல்களை வைத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

## நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?

சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், இந்த யுகத்திற்கான சிலாக்கியங்களையும் மற்றும் வாய்ப்புகளையும் உயர்வாய் மதித்தவர்களாக, "நம் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு" நாடிட வேண்டும்! (2 பேதுரு 1:4-11). "பணிவிடை வீட்டாராகும்படிக்கு," பூமிக்குரிய அழைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளவர்கள், (உதாரணத்திற்கு யோவான் ஸ்நானன் போன்று) கர்த்தருடைய வேலையில் வைராக்கியமாய் ஈடுபட்டதின் வாயிலாக, ஒரு புத்தியுள்ள ஆராதனையைச் செலுத்தி உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டார்களானால், மிகவும் அதிகமாய்த் தயைப் பாராட்டப்பட்டவர்களாகிய நாம், எத்தனை அதிகமான வைராக்கியத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்திட வேண்டும்? "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

இந்தப் "பரம அழைப்பானது," இராஜ்யத்தில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரர்களாகும்படிக்கான இந்தப் "பரலோக அழைப்பானது," மிகவும் விசேஷமானது என்பதையும், மிகவும் வரையறைக்குட்பட்ட அழைப்பு என்பதையும், சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்பதையும், தெய்வீக வெளிப்படுத்தல்களின்படி, இனி மீண்டுமாக அழைப்பு வராது என்பதையும் நாம் நினைவில் கொள்வோமாக. இப்படியான கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக, "மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

**R 4979**

# "அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார்"

## மாற்கு 1:29-45

"அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்."
மத்தேயு 8:17

இயேசு, கப்பர்நகூமின் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், பரிசுத்தவானாகிய பேதுருவின் வீட்டிற்குப் போனார். அங்கே பரிசுத்த பேதுருவின் மாமி ஜுரத்தினால் படுத்துக்கிடந்தாள். அவளைக் கரம் பிடித்து எழுப்பி, அவளுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்தது என்பது கணநேர வேலையாக இருந்தது. இயேசுவைக்குறித்த புகழ் பரவிக்கொண்டிருந்தபடியால், அவருடைய சொஸ்தப்படுத்தும் வார்த்தைகளுக்கும், தொடுதுலுக்கும் வேண்டி மாலை வேளையில் திரளான ஜனங்கள் அவரை விடாப்பிடியுடன் தொடர்ந்துகொண்டு வந்தார்கள். "பலவிதமான வியாதிகளினாலும் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை" (மாற்கு 1:34).

ஆனால் இயேசுவோ தாம் செய்த காரியங்களை இன்னும் அதிகமாய்ச் செய்வதற்கும் (நோய் சொஸ்தப்படுத்துவதற்கும்), தமக்கு ஆதரவாக அந்த ஜனங்களுக்குள் ஏற்பட்ட தாக்கத்தை இன்னும் ஆழமாக்குவதற்கும் தக்கதாக அவர் அவ்விடத்தில் தங்கவில்லை. அவர் தேவனிடம் ஜெபம் பண்ணுவதற்கும், அவரோடு உறவு கொள்வதற்குமென அடுத்த நாளில், விடியும் முன்பதாகவே கப்பர்நகூமை விட்டு, வனாந்தரமான இடத்திற்குச் சென்றுவிட்டார். அவருடைய சீஷர் ஆகுவதற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டிருந்த பரிசுத்தவானாகிய பேதுருவும், மற்றவர்களும் அவரைத் தொடர்ந்துபோய், "அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி; கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்" (மாற்கு 1:37-39).

நோய்களைச் சொஸ்தப்படுத்தும் அற்புதமான வல்லமையைக் காட்டிலும் வேறு எதுவும் மனித மனதிற்கு அவ்வளவு கவர்ச்சியாக இருக்க முடியாது. யாரும் வியாதிகளில், வலிகளில், பாடுகளில் சந்தோஷமடைவதில்லை. ஒருவேளை சொஸ்தமாக்கப்படுதல்கள் சாத்தானுடைய வல்லமையினால் நடக்கிறது என்று காணப்பட்டால் கூட, ஜனங்கள் அவனுடைய வல்லமையினாலாகிலும் சொஸ்தமடைவதில் சந்தோஷமடைவார்கள். இன்றைய நாட்களிலும் கூடத் தவிக்கும் பாவப்பட்ட சிருஷ்டிகளுக்கு மருந்துகள் இல்லாமலேயே வியாதிகளிலிருந்து சரீர சுகம் அளிப்பதாகவும், இன்னுமாக இவைகள் தேவனுடைய வல்லமையினாலும், தயவினாலும் செய்யப்படுகின்றன எனவும் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கொஞ்சமும் இசைவில்லாத அநேக தவறான உபதேசங்கள் வாக்களித்துக்கொண்டுக் காணப்படுவதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால் இப்படிச் சொஸ்தப்படுத்துகின்றவர்கள், பல்வேறு எதிர்மறையான உபதேசங்களைப் பற்றிக்கொண்டிருப்பதினால் இவர்கள் கொண்டுள்ள இந்த உபதேசங்கள் தேவனுடையது அல்ல என்பது தெரிகின்றது. நாம் புரிந்துக்கொண்டுள்ள வரையிலும், தற்காலத்தில் வியாதியஸ்தர்களை அற்புதமான விதத்தில் சொஸ்தப்படுத்துவதற்கெனத் தேவனுடைய வார்த்தைகள் அதிகாரம் கொடுக்கவில்லை என்றே வேதாகமம் போதிக்கின்றது. ஆதிசபையினருக்கு அருளப்பட்டதும் மற்றும் இயேசுவினாலும், அப்போஸ்தலதர்களினாலும் செயல்படுத்தப்பட்டதும் மற்றும் அப்போஸ்தலர்களுடன் நெருக்கமாய் இருந்தவர்களுக்கு அவர்கள் அருளினதுமாய் இருந்த வரங்கள் ஒழிந்துபோம் எனப் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட பரிசுத்தவானாகிய பவுல் தெரிவிக்கின்றார். அவ்வரங்கள் ஓய்ந்து போய்விட்டன என்று நாம் நம்புகின்றோம். அதாவது, தெய்வீகக் கிருபையின் வெளிப்படுத்தலின் வரிசையில் இடம்பெறும் அடுத்த விஷயமும், மேன்மையான விஷயமுமாகிய பரிசுத்த ஆவியின் கனிகளுக்கு இந்த வரங்கள் இடம் விட்டுக்கொடுத்துப் போய்விட்டன. பரிசுத்த ஆவியின் கனிகளாகிய சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, அன்பு ஆகியவை தேவனுடைய கிருபைக்கும், முதற்பேறானவர்களாகிய சபையின் அங்கங்களுக்கும் உள்ள ஆதாரங்களாக இருக்கும்படிக்கு இந்த வரங்கள் இடம்கொடுத்துப்

போய்விட்டன. ஆதிசபை நிறுவப்படுதற்கான நோக்கத்திற்கு என மாத்திரமே இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் செய்யப்பட்டன. இந்த யுகத்திலேயே சகல ஜனங்களும் வியாதியிலிருந்து சொஸ்தமாக்கப்பட வேண்டும் என்பதே தெய்வீகச் சித்தமாக இருக்கின்றது என எங்கும் குறிப்பிடப்படவில்லை.

மேசியாவின் மகிமையான இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு ஜனங்கள் அனைவரும் சொஸ்தமடையப்படும் காரியமானது, மேசியாவின் இராஜ்யத்திற்குரிய வேலையில் முக்கியமான அம்சமாகத்திகழும் என்பதில் ஐயமில்லை. மாம்சத்தின் குறைபாடுகள் மாத்திரம் சீர்ப்பொருத்தப்படுவதோடு அல்லாமல், சீர்த்திருத்தலின் வேலையானது படிப்படியாக மனுக்குலத்தை, பாவம், நோய் மற்றும் பூரணமற்ற நிலைகளிலிருந்து தூக்கிவிட்டு, முற்றும் முழுமையான பூரண நிலைக்குக்கொண்டு சேர்க்கும்; ஆனால் தெய்வீக ஏற்பாடுகளைத் துணிந்தும், வேண்டுமென்றும் எதிர்ப்பவர்கள் ஏற்றகாலத்தில் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள். பின்னர் வேதவாக்கியங்களில் குறிப்பிட்டிருக்கின்ற பிரகாரம் மீதியான மனுக்குலம் முழுவதும் பூரணத்தின் மகிமையான நிலையை அடைவார்கள், "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்" (வெளிப்படுத்தல் 21:4,5).

## "ஒளியின் தூதனுடைய வேடத்தில் சாத்தான்"

சாத்தானும், அவனுடைய ஊழியர்களாகிய விழுந்துபோன தூதர்கள் "ஒளியின் தூதனுடைய" வேஷத்தைத் தரிப்பித்துக் கொள்ள நாடுவார்கள் என்றும், இதன் வாயிலாக மனுக்குலத்தின் மீது அதிக ஆதிக்கம் செலுத்தத்தக்கதாகவும், இன்னுமாக தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளின் மேல் வைக்கப்படும் உண்மையான விசுவாசத்திற்கு எதிரான தவறான உபதேசங்களை வெற்றிகரமாக மனுக்குலத்தின் மனதில் பதிய வைத்துவிடலாம் என்றும் நாடுவார்கள் எனப் பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ளார். அப்போஸ்தலருடைய இந்த வார்த்தைகள் குறிப்பாக நம்முடைய நாட்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது என நாம் நம்புகின்றோம்; அநேக நல்ல ஜனங்களும், நல்ல மனசாட்சியுள்ள ஜனங்களும் இன்று வஞ்சிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுவதை நம்மால் பார்க்கப்படுகின்றது; மேலும் இவர்களை வஞ்சிப்பதற்கு அற்புதவிதமான வியாதி சொஸ்தமாக்கப்படுதலையே, எதிராளியானவன் இரையாக/ஆயுதமாகப் பயன்படுத்துகின்றான். வஞ்சிப்பதற்கு இரையாக (தூண்டிலாக) பயன்படுத்தப்பட்ட பல்வேறு உபதேசங்களை இங்கு நாம் விவரிப்பது தேவையில்லை என நாம் கருதுகின்றோம்; மாறாக, தற்காலத்தில், தேவனிடமிருந்து எவ்விதமாக அற்புதகரமான வியாதி சொஸ்தமாக்கப்படும் காரியங்களை நாம் எதிர்பார்க்கக்கூடாது என்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்களை முன்வைப்பதிலேயே நாம் திருப்திக்கொள்கின்றோம்.

## "உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றவர்"

தேவன் இஸ்ரயேலுடன், நியாயப்பிரமாண உடன்படிக்கைப் பண்ணுகையில், அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறும்போது தண்டனையாக வியாதியையும், பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது ஆரோக்கியத்தையும் அருளுவதாக கூறியிருந்தது உண்மையே ஆகும். "உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றவர்" என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைகளானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்படும் இஸ்ரயேலர்களுக்குச் சரீர ரீதியாக பொருந்தக்கூடிய ஒன்றாகும். மேலும் புதுச் சிருஷ்டியாகிய சபைக்கு இது ஆவிக்குரிய ரீதியிலும் பொருந்தக்கூடியதாயும் உள்ளது.

ஆனால் புதுச் சிருஷ்டி சொஸ்தமாக்கப்படுவதும், அவனுடைய மாம்சம் சொஸ்தமடைவதும் வெவ்வேறான காரியங்களாகும். புதுச் சிருஷ்டியின் ஆத்தும வியாதிகளும், இருதயத்தின் பாரங்களும்/பிரச்சனைகளும், அவனுடைய மாம்சம் ஒருவேளை பாடுகள்/வலிகள் அனுபவித்தும், மரணத்திற்குள் கடந்து போய்க் கொண்டிருந்தாலுங்கூட நல்ல வைத்தியனால் சொஸ்தமாக்கப்படும். மாம்சத்தை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதும், அதைத் தேவனுக்குப் பிரியமான மற்றும், புத்தியுள்ள ஆராதனையாகக் காணப்படுகின்றதாக உள்ள ஜீவபலியாகவும் ஒப்புக்கொடுப்பதுமான

நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நாம் புதுச் சிருஷ்டிகளாக, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (ரோமர் 12:1).

இன்னுமாக, ஆதிமுதல் கர்த்தர் சபையைக் கையாண்ட விதத்திலும், எவ்விதமான வித்தியாசத்தையும் நம்மால் பார்க்க முடியவில்லை. இயேசுவினாலும், அப்போஸ்தலர்களாலும் சொஸ்தமாக்கப்பட்டவர்கள், "பாவிகள்" என்றுதான் அனைத்துப் பதிவுகளும் தெரிவிக்கின்றது. எந்த ஓர் அப்போஸ்தலரும் எவ்விதமான வியாதியிலிருந்தும் சொஸ்தமாக்கப்பட்டார் என்பதான எவ்விதமான சம்பவங்களுக்கான பதிவுகளும் இல்லை. பரிசுத்தவானாகிய பவுல் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கியிருந்த போதிலும், எப்பாப்பிரோதீத்து வியாதியாய் மரணத்திற்குச் சமீபமாயிருந்த போது, இவரை அற்புதமான விதத்தில் சொஸ்தப்படுத்துவதற்கான எந்தப் பிரயாசமும் எடுக்கப்பட்டதாக பதிவுகள் காணப்படவில்லை. (பிலிப்பியர் 2:25-27).

அதுபோலவே, தீமோத்தேயுவின் விஷயத்திலுங்கூட, இவருடைய வியாதி நீங்கும்படிக்குப் பரிசுத்தவானாகிய பவுல் இவருக்குக் கைக்குட்டைகளையோ, துண்டுகளையோ அனுப்பி வைக்கவில்லை, அல்லது தான் அவருக்காக ஜெபம் பண்ணுவேன் என்றும் கூறவில்லை அல்லது தீமோத்தேயு தனது சொஸ்தமாக்கப்படுதலுக்காக ஜெபம் பண்ணும்படிக்கு ஆலோசனையை அவருக்குப் பவுல் கொடுக்கவுமில்லை அல்லது இவருக்காக ஜெபம் பண்ணும்படிக்குப் பரிசுத்தவானாகிய பவுல் மற்றவர்களிடத்தில் வேண்டிக்கொள்ளவுமில்லை. மாறாக இவருக்கு ஏற்படும் வயிற்றின் பெலவீனங்களுக்காக சில குறிப்பிட்ட மருந்துகள் எடுத்துக்கொள்ளும்படியாகவே, பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 5:23). தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் சரீர சொஸ்தப்படுதலுக்காக ஜெபம் பண்ணும் காரியமானது, அவர்கள் கர்த்தரிடம் மரண பரியந்தம் வரையிலும் விசேஷமாக அர்ப்பணித்தவைகளை மீண்டும் திருப்பி எடுத்துக்கொள்வதற்குச் சமமாகிவிடும். ஆனால் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஜனங்களில் உள்ள அநேகரின் விஷயத்தில், அவர்கள் வேண்டிக்கொள்ளாமலேயே, கர்த்தரின் ஊழியத்திற்கென, அவர்கள் ஊழியம் புரிவதற்கு அவசியமான பலத்தையும், வியக்கத்தக்க ஆரோக்கியத்தையும் அவர்களுக்கு அளிக்கும் விதத்தில் கர்த்தர் விசேஷமாகச் செயல்படும் விஷயங்களும் உண்டு. சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் மேசியாவின் இராஜ்யத்தின் கீழ் மனுக்குலம் மீது பொதுவாக வரவிருக்கும் ஆசீர்வாதங்களுக்கு முன்மாதிரியாகவே தேவன் அர்ப்பணம் பண்ணாத ஜனங்கள் மத்தியில் அற்புதங்கள் செய்தார்.

சகல வியாதிகளைச் சொஸ்தமாக்கப்படுவதற்கு வலியையும், துக்கத்தையும் புறம்பாக்கிப் போடுவதற்குமென இயேசுவும், அப்போஸ்தலர்களும் அற்புதங்களை நிகழ்த்தவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அற்புதங்கள், சுவிசேஷச் செய்தியின் மேல் கவனம் ஈர்க்கப்படுவதற்கு மாத்திரமே செய்யப்பட்டன. வெளிப்படுத்தல் 21:4-ஆம் வசனத்தின் விஷயங்கள் அனைத்திற்குமான காலம், மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சிக்கான காலமாக இருக்கும்.

கவனத்தை ஈர்க்கும் நோக்கத்திற்காக மாத்திரமே, இயேசு கப்பர்நகூமில் பல பலத்த கிரியைகளைச் செய்தார் என்று பார்க்கின்றோம். அநேக வியாதியஸ்தர்களை ஏமாற்றத்துடன் கப்பர்நகூமில் விட்டுவிட்டு, இயேசு வேறு பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் புறப்பட்டுப் போனார். இதுபோலவே சொஸ்தமாக்கப்படுவதற்கெனத் தண்ணீருக்குள் இறங்குவதற்கான வாய்ப்பிற்காக சீலோவாம் குளத்தண்டையில் காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் இருந்த குளத்தை இயேசு கடந்து போகையில் அக்கூட்டத்தில் ஒருவனைக் கவனித்து, "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ" என்று கூறினார் என நாம் வாசிக்கின்றோம் ( 1 யோவான் 5:1-9).

## "சொஸ்தமடைந்த குஷ்டரோகி, நன்றியுடன் இருந்தான்"

யூதர்கள் மத்தியில் குஷ்டரோகம், சொஸ்தப்படுத்த முடியாத வியாதியாகவும், பாவத்திற்கான நிழலாகவும் கருதப்பட்டது. இப்பாடத்தில் நாம் பார்க்கும் குஷ்டரோகியானவனுக்கு, இயேசுவின் வல்லமை மீது விசுவாசம் இருந்தபடியால், அவரிடத்தில் வந்து, முழங்கால் படியிட்டு, சொஸ்தமாக்கப்படுவதற்காக, சுத்திகரிக்கப்படுவதற்காக வேண்டிக்கொண்டான். இந்தக் குஷ்டரோகி, இயேசுவின் சீஷர்களில் ஒருவனாக இருந்த காரணத்தினாலோ அல்லது அவருடைய சீஷனாகுவேன் என்று இவன் வாக்களித்த காரணத்தினாலோ சொஸ்தப்படுத்தப்படாமல், மாறாக இந்தக் குஷ்டரோகி தனது விசுவாசத்தைக் காட்டினதற்காகவும், மேலும் இக்குஷ்டரோகியின் சம்பவமானது, இயேசு தெய்வீக வல்லமையைச் செயல்படுத்தினதற்கான சாட்சியாக

ஆசாரியர்களுக்கு இருப்பதற்காகவுமே இவனுடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுக்கப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட குஷ்டரோகியை, நியாயப்பிரமாணத்தின்படி, தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக பலிகளைச் செலுத்தவும், தான் சொஸ்தமாக்கப்பட்டதை ஆசாரியனிடத்தில் அறிவிக்கவும், நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியன் அவன் சொஸ்தமாகிவிட்டானா என்பதைச் சோதித்துப் பார்க்கவும் தக்கதாக இயேசு போகச் சொன்னார்.

இந்த மாபெரும் அற்புதத்தைக்குறித்து யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கர்த்தர் அக்குஷ்டரோகியை எச்சரித்தார். ஆனால் நன்றியின் நிமித்தம் அக்குஷ்டரோகி தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல், எல்லாவிடத்திலும் அதை அறிவித்தான். இதன் விளைவாக அவரால் பெரிய பட்டணங்களுக்குப் போக முடியவில்லை. காரணம் அவர் சொஸ்தமாக்கும்படிக்கு அவரிடத்தில் வியாதியஸ்தர்கள் வந்து குவிந்து விடுவார்கள் என்பதினாலேயாகும். ஆகவே அவர் சிறு பட்டணங்களுக்குக் கடந்து சென்றார் என்ற போதிலும், எல்லா திசைகளிலும் இருந்து சொஸ்தமடையத்தக்கதாக ஜனங்கள் அவரைத் தேடினார்கள்.

ஆனால் அந்தோ! இவர்கள், கர்த்தரின் அடிச்சுவடுகளில் நடக்கும் பின்னடியார்கள் ஆகுவதற்கும், இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்குமான, கர்த்தரால் விசேஷமாக அழைக்கப்படும் மாபெரும் சிலாக்கியத்தை ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களையே அதிகம் ஏற்றுக்கொண்டவர்களாய் இருந்தார்கள். அதாவது ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாக தண்டிக்கப்பட்டு, கல்வாரியின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்ட ஆதாமின் சந்ததியில் உள்ள ஒவ்வொருவரின் மேலும் மேசியாவின் இராஜ்யத்தினால் படிப்படியாக அருளப்படப்போகும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களையும், சொஸ்தமாக்குதல்களையுமே இந்த ஜனங்கள் நன்கு புரிந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

**ஆமென்!**

R 4984

## மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான வேதவாக்கிய விதி

கர்த்தர் மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கொடுத்துள்ளவைகளைப் பார்க்கிலும் வேறொரு ஆலோசனையும், ஆறுதலும் சராசரியான அறிவுள்ள ஒரு சகோதரனுக்குத் தேவைப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்தினை நம்மால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க இயலாது. ஒருவேளை சகோதரன் ஒருவன் வீண் அலுவற்காரனாய் இருக்கும் விதத்தில் அனுதாபத்தினைப் பெற்றிட நாடும் பழக்கமுடையவனாய் இருப்பானாகில், சீக்கிரத்தில் தனது போக்கானது தவறு என்று அறிந்துகொள்வான். அவன் வேதவாக்கியங்களில் பின்வருமாறு தெளிவான அறிவுரைகள் காணப்படும் விஷயத்தில், அறிவுரைகளுக்கு இசைவாக தனது மனதினைப் பயன்படுத்திட கற்றுக்கொள்ள வேண்டும்; தனது சகோதரனுக்கு எதிராக எதையேனும் பெற்றிருக்கும் யாருக்கும் கர்த்தர் கூறுவதாவது: "அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து;" ஒருவேளை அக்காரியம் சகோதரனிடத்தில் கூறுமளவுக்கு பெரிய காரியம் இல்லையெனில், அது கருத்தில் எடுத்துக் கவனிக்குமளவுக்குப் பெரியக் காரியம் இல்லை மற்றும் அது மறக்கப்பட வேண்டும்.

மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான கட்டளையின் விஷயத்திற்கு எந்த விதிவிலக்குமில்லை; எனினும் சில சந்தர்ப்பங்களில் அக்கட்டளைக்கு விளக்கம் கொடுக்கப்படலாம். உதாரணத்திற்கு அது குடும்பக் காரியமாக இருக்கும் பட்சத்தில், சூழ்நிலைகளின் நிமித்தம் குடும்பத்தின் தலைவரை அணுகுவது தகுதியானதாய்க் காணப்படும். ஒருவேளை காரியம், ஓர் அமைப்பில் காணப்படும் ஒரு நபர் பற்றினதாக இருக்கும் பட்சத்தில், அந்நபர் அக்கழகத்தினுடைய பிரதிநிதியாக மாத்திரம் காணப்படுகையில், கழகத்தினுடைய தலைவரை அணுகுவது தகுதியானதாய்க் காணப்படும். இப்படியாகச் செய்வது என்பது மத்தேயு 18:15-ஆம் வசனத்தினை நியாயமான பாணியில் பின்பற்றிடுவதாக இருக்கும். ஆனால் இவைகள் சிறு விஷயங்கள்தான்; இவைகள் தவிர்க்கவும்படலாம்; ஆனால் இவைகள் விஷயத்தில் இக்கட்டளைச் செயல்படுத்தப்படும் பட்சத்தில் ஞானம் பயன்படுத்தப்பட வேண்டும்.

உலகத்தில் பெரும்பான்மையான பிரச்சனைக்குக் காரணம் மனஸ்தாபம்/பிணக்கு என்பதில் ஐயமில்லை. ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்வதும் மற்றும் மற்றவர்கள் செய்கிற அநேகவற்றை மன்னித்துவிடுவதும் ஏற்புடையதாயிருக்கும் (கொலோசெயர் 3:14). எனினும் தனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யப்பட்டுள்ளது என்று எண்ணுகிறவர், குற்றஞ்செய்துள்ள சகோதரனிடத்திற்குச் செல்வதும், மனஸ்தாபத்தைச் சரிச்செய்துகொள்வதும் சரியானதாகவே இருக்கும். இப்படியாகச் செய்வது என்பது அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நன்மையாகவே இருந்துள்ளது.

மத்தேயு 18:15-17-வரையிலான வசனப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான அறிவுரையானது சகோதர சகோதரிகளுக்கு மாத்திரமே, சபைக்கு மாத்திரமே உரியதாகும் மற்றும் இதன் காரணமாக, வெளியிலுள்ளவர்களுக்குச் செயல்படுத்தப்படக்கூடாது. எனினும் இந்த ஒரு பிரமாணத்தினைச் சகோதர சகோதரிகள் விஷயத்தில் செயல்படுத்திடுவதற்குக் கற்றுக்கொள்பவன், இதுவே ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்படுவதற்குரிய ஞானமுள்ள நடவடிக்கையாக இருக்கும் என்று கணித்துக்கொள்வான். இப்படியாக அவன் இயல்பாகவே இதே கொள்கைகளை உலகத்தின் காரியங்கள் மற்றும் உலகப்பிரகாரமான ஜனங்கள் விஷயத்திலும் செயல்படுத்த முற்படுகின்றவனாய் இருப்பான். எனினும் உலக விஷயத்தைக் கையாளும் காரியத்தில், எது ஞானமுள்ள வழிமுறையாக இருக்கும் என்று சிந்திக்கிறதற்கு அவன் ஞானத்தைப் பயன்படுத்துகிறவனாய் இருக்க வேண்டும். சபைக்குரியதான சில ஆழமான மற்றும் விலையேறப்பெற்றக் காரியங்களானது, உலகத்திற்குச் சினமூட்டுகின்றதாயிருக்கும். ஆகவேதான், "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்" என்று கர்த்தர் எச்சரிக்கின்றார்.

நாம் சகல மனுஷருக்கும் நன்மை செய்ய பிரயாசம் எடுக்கையில், சகோதர சகோதரிகளின் விஷயத்தில் இக்காரியம் தொடர்பாக எந்த வேற்றுமை காணுதலும் இருத்தல் கூடாது. எனினும் கர்த்தருடைய ஜனங்களில் சிலர், சில விஷயங்களில் சரியற்ற விதத்திலும், நியாயமற்ற விதத்திலும், எண்ணுகின்றனர் என்று நாம் சொல்லலாம். உதாரணத்திற்கு ஒரு

சகோதரன், சத்தியத்திலுள்ள மற்றொரு சகோதரன் அவனது உணர்வுகளின் விஷயத்தில் வேற்றுமைகளைப் பெற்றிருப்பதையும், அவன் தன்னைக் காட்டிலும் இன்னொருவரை அதிகமாய் மதிக்கிறவராய் இருப்பதையும் உணருவாரானால், இதைக் குற்றமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர் தனக்குள்ளாக பின்வருமாறு கூறிட வேண்டும்: "குணலட்சணத்திலும், மனப்பாங்கிலும் வித்தியாசங்கள் உண்டு; மற்றும் மற்றவரைக் காட்டிலும் சகோதரன் "B" அவர்களே, சகோதரன் "A" அவர்களுக்கு உயர்வாய்த் தோன்றலாம். சகோதரன் "A" அவர்கள் என்னை அன்புகூர்ந்திடவும், அவர் என்னைப் பகைக்காமல் இருப்பதையும், அவர் எனக்குப் பாதகம் பண்ணாமல் இருப்பதையும்தான் நான் எதிர்ப்பார்க்கின்றேன்." சகோதர சகோதரிகள் அனைவருமே ஒன்றுபோல் எண்ணப்பட வேண்டும் என்று தேவனுடைய வார்த்தைகளில் எதுவும் சுட்டிக்காட்டுகிறதில்லை!

நமது கர்த்தர்கூடத் தம்முடைய அன்பில், இம்மாதிரியான வேற்றுமைகளைக் கொண்டிருந்தார். எனினும் பட்சப்பாதமில்லாமலும் மற்றும் மாய்மாலம் இல்லாமலும், இப்படியாகச் செய்தார். ஆனால் நம்முடைய விழுந்துபோன சுபாவத்திலுள்ள வேறுபாடுகள் காரணமாக, சகோதர சகோதரிகள் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் நம்முடைய மனதிற்கு ஒத்துப்போகிறவர்களாய் இருப்பார்கள். ஆகையால் சகோதர சகோதரிகளுடைய அன்பைப் பெற்றுக்கொள்வதில் நாம் மனநிறைவு கொண்டிட வேண்டும் மற்றும் அதை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பிரயாசம் எடுத்திட வேண்டும். நம்முடைய வார்த்தைகளும் மற்றும் நடத்தையும் சகோதர சகோதரிகளுக்கு நாம் மிகவும் பிரியமானவர்களாகத்தக்கதாகக் காணப்பட வேண்டும் மற்றும் இப்படியாக அவர்களது நன்மதிப்பை அதிகமாய்ப் பெற்றிட வேண்டும். மிகுதியான அளவில் நம்மை அன்புகூராதவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்காமல், மாறாக முழுமையாய் அன்புகூரப்படுவதற்கு ஏதுவான குணலட்சணத்தினை வளர்த்திடுவதற்கு நாம் முயற்சித்திட வேண்டும்.

இப்படியான சூழ்நிலையானது மத்தேயு 18:15-ஆம் வசனத்தின்படி கையாளப்படவில்லையெனில், ஆலோசனையானது பின்வருமாறு கொடுக்கப்பட வேண்டும்: "அன்பான சகோதரனே, சகோதரன் 'A'-அவர்கள் உங்களிடத்தில் வேறு எதையுமல்ல அன்பின் உணர்வையே கொண்டிருக்கின்றார்." ஆனால் ஒருவேளை சகோதரன் 'B'-அவர்கள்:- "சகோதரன் 'C'-அவர்கள், 'A' -அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதுபோல், சகோதரன் 'A' அவர்களின் அன்பும், தோழமையும் எனக்குக் கிடைக்கவில்லையென்று" சொல்வாரானால், இவரிடம்: "என் அன்பு சகோதரரே, நாம் ஒருவருக்குப் பாதகம் செய்யாத நிலையில், இன்னொருவருடன் விசேஷித்த ஐக்கியம் கொண்டிருப்பதற்கான உரிமையினைப் பெற்றிருக்கிறோமல்லவா? உரிமைப்பெற்றிருக்கின்றோம் என்றும், இந்த விஷயத்திற்கு கர்த்தருடைய உதாரணத்தையும் பெற்றிருக்கின்றோம் என்றும் நாம் எண்ணுகின்றோம். இது நான் உங்களை அன்பற்ற விதத்தில் நடத்திட வேண்டுமென்று குறிப்பதாகாது. ஒரு சகோதரன் விருப்பு வெறுப்புகள் பெற்றிருப்பதில், அதுவும் இந்த விருப்பு வெறுப்புகளை அவர் இன்னொருவரை வேண்டுமென்றே தாக்குவதற்கு எனப் பயன்படுத்தாமல் இருக்கையில் - இத்தகைய விருப்பு வெறுப்புகளைப் பெற்றிருப்பதில் தவறில்லை" என்று ஒருவர் பதில் கொடுத்திடலாம்.

## அன்பின் பல்வேறு அளவுகள்

அன்பு என்பது நீதியல்ல. அன்பு கட்டளையிடப்பட முடியாது; அது தூண்டப்பட வேண்டும்; மற்றும் அன்பிற்கு ஒரு காரணமும் இருத்தல் வேண்டும். ஒருவேளை தேவன் அன்புகூரத்தக்கவராய் இல்லாமல் இருப்பாரானால் அவரை நாம் அன்புகூர வேண்டுமென்று ஒருவர் நம்மிடம் கூறுவது என்பது முறையற்ற ஒன்றாய் இருக்கும். அதுபோலவே அன்புகூரத்தகாத ஏதேனும் ஒரு சிருஷ்டியினை நம்மால் எப்படி அன்புகூர இயலும்? நாம் சகோதர சகோதரிகளை அன்புகூருவதற்கான காரணம், நாம் அவர்களது நல்நோக்கங்களிலும் மற்றும் அவர்கள் தங்கள் இருதயங்களைக் கர்த்தருக்குக் கொடுத்துள்ளார்கள் எனும் உண்மையிலும், தேவசாயலுக்கொத்த ஏதோ சிலவற்றைக் காண்பதினாலேயே ஆகும்.

அதிகமாய் விழுந்துபோன நிலையிலுள்ள மாம்சத்தை உடைய சகோதரன் விஷயத்தில், அன்புடன்கூடிய பாசம் கொள்வதற்குப் பதிலாக, இரக்கத்துடன்கூடிய அன்பையே நாம் அதிகமாய்ப் பெற்றிருப்போம்; ஏனெனில் கிறிஸ்துவுக்கு ஒத்த குணலட்சணத்தின் சாயலை நாம் காணுமளவுக்குத்தக்கதாக மாத்திரமே, நம்மால் அவரது பின்னடியார்களை உண்மையாய்

அன்புகூர்ந்திட முடியும். மேலும் நன்மை செய்வதற்கான உண்மையான வாஞ்சையுடனே நாம் ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியையும் கவனித்திட வேண்டும்; மற்றும் அதே அன்பானது, கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாகப் பொதுவாயுள்ள உலகத்தாருக்கும் செலுத்தப்பட வேண்டும்.

மனஸ்தாபம் ஏற்பட்டுள்ள அநேக சந்தர்ப்பங்களில் காணப்படும் பெரிய பிரச்சனை - கர்த்தருடைய ஆலோசனையானது அப்படியே கடைப்பிடிக்கப்படாமல் காணப்படுவதேயாகும். நல்ல மற்றும் கனம்பொருந்திய சகோதரர்கள், சரியானவற்றைச் செய்ய விரும்புபவர்கள், மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுப்பதில் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள் - தங்களுடைய சூழ்நிலையானது வேறுபட்ட சூழ்நிலை என்று எண்ணுகின்றவர்களாய் இருக்கின்றனர் - சரியாய்ப் பகுத்தறியாதவர்களாய் இருக்கின்றனர். இத்தகையவர் குறிப்பிட்ட சகோதரனிடத்திற்குப் போய்ப் பின்வருமாறு சொல்வதற்குப் பதிலாக, அதாவது "மத்தேயு 18:15-ஆம் வசனத்தினுடைய ஆலோசனையைப் பின்பற்றினவனாக, ஒரு சிறு காரியம் தொடர்பாக, சகோதரனே உங்களைச் சந்திக்க வந்துள்ளேன்" என்று சொல்வதற்குப் பதிலாக, குறிப்பிட்ட சகோதரனைச் சந்தித்து, "சகோதரா, நீங்கள் இன்னின்ன விதமாய்ச் செய்திருக்கின்றீர்கள்" என்று சொல்லுகின்றார். இவர் ஒப்புரவாகுவதற்கெனச் சகோதரனிடத்தில் செல்லாமல், மாறாக ஏதோ தவறு நடந்துள்ளது என்று சகோதரனுக்குக் காண்பிக்கத்தக்கதாகச் சர்வாதிகாரி போன்று செல்கின்றார். இது சரியான வழிமுறையல்ல. நீதியானது, தேவனுடைய சிங்காசனத்திற்கு ஆதாரமாய் இருக்கின்றபடியால், மேற்கூறிய சரியற்ற வழிமுறையின்படி நடந்துகொள்பவர்கள் நீதியின் கொள்கைகளைப் பின்பற்றிடுவதற்குத் தவறுகின்றவர்களாய் இருப்பார்கள்; கர்த்தருடைய குணலட்சணத்தை வளர்க்க தவறுகின்றவர்களாய் இருந்து, பரிசை வெல்ல தவறிப்போய்விடுவார்கள்.

கர்த்தருடைய கட்டளையின் ஆவியானது, சகோதரனுக்கு உதவி செய்வதையே சுட்டிக்காட்டுகின்றதேயொழிய, மாறாக சகோதரனை ஏளனம் செய்வதையோ, சகோதரனைக் கோபம் மூட்டுவதையோ, அவரைக் கேலி செய்வதையோ சுட்டிக்காட்டவில்லை; அவர் சொல்லிடுவதற்கு நோக்கம் கொள்ளாதவைகளை அவரைச் சொல்லவைத்து அவரைச் சிக்கிவைப்பதையோ, அவர் சொல்லியுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தினைத் திரித்துக்கூறிடுவதையோ சுட்டிக்காட்டவில்லை. இது சரியான ஆவியல்ல. எந்தச் சகோதரனையும், இப்படியான விதத்தில் அணுகிடக்கூடாது. மாறாக காரியமானது மிகவும் இரக்கமான விதத்தில் கையாளப்பட வேண்டும்; மற்றும் ஒருவேளை ஒருவரால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்து முடித்தப் பிற்பாடு தவறானது தொடர்கின்றது என்றால், நமக்குச் சொல்வதற்கு எதுவுமில்லை. சிலர் "அவர் மன்னிப்புக் கேட்கவில்லை" என்று சொல்லலாம். சகோதரன் மன்னிப்புக் கேட்பது குறித்து எதுவும் கர்த்தர் கூறிடவில்லை. ஆனால் ஒருவேளை சகோதரன் தனது தவறினை உணர்ந்தும், மன்னிப்புக் கேட்க தவறுவானாகில், அவன் தனக்கே பாதிப்பு உண்டுபண்ணுகிறவனாய் இருப்பான்.

## அந்நியக் காரியங்களில் தலையிடுவது குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக

ஒருவேளை மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களில் இடம்பெறுகின்றதான இரண்டாம் படியானது அவசியப்படுமாயின், அது - கர்த்தருடைய சித்தத்தைத்தான் செய்கின்றோமா என்பதை உறுதிப்படுத்துவதற்கான விருப்பத்துடன், மிகவும் ஆழமாய் ஆராய்ந்து, ஜெபம்பண்ணின பிற்பாடு செய்யப்பட வேண்டும். முதலாவதாக - சகோதரர்களைத் தன்னோடுகூடக் கூட்டிக்கொண்டு போவதற்குக் கேட்குமளவுக்குக் காரியம் முக்கியமானதா என்றும், காரியம் வேறொருவருக்கு எதிரானதாய் இராமல், நமக்கு எதிரான ஒன்றாய் இருக்கின்றதா என்றும், காரியமானது அந்நியக் காரியங்களில் தலையிடுதலாக இல்லையென்றும், (கடந்த காலத்தில் இல்லாமல்) இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஒரு காரியமாக இருக்கின்றதா என்றும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படியாகக் காரியம் இருக்குமாயின், இரண்டு பேரை அழைத்துச் செல்லுங்கள். "என்னோடுகூட வரும்படிக்கு நான் உங்களிடத்தில் கேட்பதால், என் பக்கமாய்க் காணப்படும்படிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறாதீர்கள். சிலசமயம் நாமே தவறுசெய்தவர்களாய் இருப்போம் மற்றும் இப்படியிருக்கும் பட்சத்தில் மற்றச் சகோதரன் சரியாக வேண்டுமென்பதற்குப் பதிலாக நாம் சரியாகுவதற்கே நாம் மிகவும் ஆவல் கொள்வோமாக.

ஒருவேளை காரியம் முக்கியமானது என்று நாம் உறுதிப்படுத்திக்கொள்வோமானால், நமக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற சகோதரனுக்கு நண்பர்களாய் இருப்பவர்கள் - நியாயமானவர்களாகவும், சபையில் கனமிக்கவர்களாகவும் இருப்பவர்கள் - என்று நாம் கருதுகின்ற இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்கள் இருவரோடுகூட நமக்கெதிராய்க் குற்றம்புரிந்த சகோதரன் சந்திக்கப்பட்டு, விஷயத்தை கலந்தாலோசனைப்பண்ணின பிற்பாடு, இந்தச் சகோதரர்கள் நமக்கு அறிவுரை வழங்குவது தகுதியானதாய் இருக்கும். ஒருவேளை அறிவுரையானது, நாம் பின்பற்ற முடிகின்றதாய் இருக்குமானால், நாம் அப்படியாகவே செய்து, சமாதானத்தையும், இணக்கத்தையும் கொண்டுவர வேண்டும்.

ஆனால் ஒருவேளை இப்படியாகச் செய்தும், பிரயோஜனம் ஏற்படாமல், பாதகச் செயல்கள் தொடருமானால், அப்பொழுது காரியத்தினைச் சபையாரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருவது தகுதியானதாய் இருக்கும். தீங்கு செய்கிறவன், தனது செய்கையினைச் சரிச்செய்துகொள்ளத்தக்கதாக அவனை இணங்கவைக்க முடியவில்லையென்று நம்மோடுகூடத் தீர்மானித்தவர்களாகிய - நம்மோடுகூட வந்த இரு சகோதரர்களும், சபையின் மூப்பரிடத்தில், விசாரிக்கப்படுவதற்குரிய வழக்கு ஒன்றினைத் தாங்கள் பெற்றிருப்பதாகக் கூறவேண்டும்; ஆனால் அவர்கள் குற்றஞ்சாட்டிடக்கூடாது. குற்றச்சாட்டிற்கு உண்மையான காரணம் ஏதேனும் உள்ளதா என்று காணத்தக்கதாகச் சபையார் காரியத்தைச் செவிகொடுத்துக் கேட்கின்றவர்களாக மாத்திரம் காணப்பட வேண்டும். இந்த ஒரு கட்டத்தில், சபையார் விசாரிப்பதற்கு ஒரு வழக்கு இருக்கின்றது என்று மாத்திரமே அறிந்துகொண்டவர்களாக காணப்படவேண்டும். பின்னர் மூப்பர்கள் இந்த நோக்கத்திற்காக விசேஷமாய்க் கூடி, சபையாருக்கு முன்பாக ஒரு வழக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், காரியத்தினைக் கேட்பதற்கு எந்த நேரம் அவர்களுக்குச் சௌகரியமாய் இருக்கும் என்றும் சபையாரிடம் கேட்டிட வேண்டும். பின்னர் வழக்கினை விசாரிக்கத்தக்கதாக எப்போது கூடிடலாம் என்று தீர்மானித்திடவேண்டும்.

இக்காலக்கட்டத்தில் யாருக்கு எதிராய்க் குற்றச்சாட்டானது சாட்டப்பட்டுள்ளதோ, அவர் மூப்பர்களிடத்தில் பின்வருமாறு கூறிடலாம்: "அந்தச் சகோதரனாலும், பிற்பாடு அவரோடுக்கூட வந்திட்டதான அந்த இரண்டு சகோதரர்களினாலும் எனக்கு எதிராய்க் குற்றச்சாட்டுகள் சொல்வது உண்மைதான். ஆனால் சகோதரரே அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவை அல்ல. அக்காரியம் என்னுடைய தனிப்பட்ட விஷயமாய் இருக்கின்றது; மற்றவர்களுக்கு அதில் எந்தச் சம்மந்தமும் இல்லை" என்று நான் கூற விரும்புகின்றேன் அல்லது அவர் கூற விரும்பும் எதையும் சொல்லிடலாம். பின்னர் அவ்விஷயமானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவருமளவுக்குரிய விஷயந்தான் என்பதற்கும், அது அந்நியக் காரியங்களில் தலையிடும் விஷயமல்ல என்பதற்கும் சான்றுகள் பகரப்பட வேண்டும்; ஏனெனில் அந்நியக் காரியங்களில் தலையிடுவதற்குச் சபையார் ஒன்றுகூடிடக் கூடாது.

அந்த மனுஷனுடைய காரியத்தில் சபையாரின் தலையிடுதல் அந்நிய காரியத்தினுடைய தலையிடுதலாக இருக்குமா அல்லது இல்லையா என்று தீர்மானிக்கத்தக்கதாக - அக்காரியமானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்படத்தக்கதான காரியமாய் இருக்கின்றதா எனத் தாங்கள் புரிந்துகொள்வதற்கு மாத்திரம் - காரியத்தினைக் குறித்துத் தெரிந்துகொள்வது மூப்பர்களுக்குத் தகுதியானதாய் இருக்கும். ஒருவேளை சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவதற்குரிய காரியமாக அது இல்லையென்று மூப்பர்கள் கருதுவார்களானால், அவர்கள் குற்றஞ்சாட்டும் சகோதரனை நோக்கி: "இந்தச் சகோதரன் உங்களுக்குத் தீங்குச் செய்யவில்லை" என்று சொல்லிட வேண்டும். ஆனால் ஒருவேளை இரு சாராரில் எவரேனும், வழக்கானது சபையாருக்கு முன்பாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இக்கட்டம் வரையிலும் மத்தேயு 18:15-17 வரையிலான ஆலோசனையானது முடிந்தமட்டும் கைக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இன்னமும் எண்ணுவார்களானால் - ஒருவேளை அச்சபையாருக்கான மூப்பர்கள் காரியத்தினைச் சபையாருக்கு முன்பாகக் கொண்டுவருவதற்கு விருப்பமற்று இருப்பார்களானால், அப்போது வழக்கினைத் தாங்கள் விசாரிக்க வேண்டுமா அல்லது இல்லையா என்று சபையார் முடிவெடுப்பது தகுதியானதாய் இருக்கும் மற்றும் அவர்களது விசாரித்தலே இறுதியானதாகக் காணப்பட வேண்டும்.

## சபையார் எப்படி விசாரித்திட வேண்டும்

சபையார் முன்னிலையில் விசாரிக்கப்படும் எந்தக் காரியத்தின் விஷயத்திலும், வழக்கில் தனதுபக்கத்தின் விளக்கத்தினை முன்வைப்பதற்கு விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும்

வாய்ப்பானது அளிக்கப்பட வேண்டும் - ஒருவர் தனது பிரச்சனையைக்கூற, மற்றவர் அதற்குப் பதிலளிக்க வேண்டும். நடவடிக்கையின் எந்த ஒரு கட்டத்திலும், அன்பற்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. இப்படியான வார்த்தைகளைப் பயன்படுத்திடுவதற்கு முற்படுபவர், இதினிமித்தம் கண்டனத்திற்குரியவராகவும் மற்றும் அவரது நடத்தையானது, தவறாய் உள்ளது என்று தீர்க்கப்படுவதற்கு ஏதுவானதாகவும் கருதப்பட வேண்டும். இம்முறைமையே பின்பற்றப்படுவதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளார் என்பதில் உறுதியே. மனதில் எப்போதும் கொண்டிருக்க வேண்டிய கருத்தென்னவெனில்: ஜனங்கள் மற்ற மனுஷருடைய காரியங்களில் உண்மையில் தலையிடுகின்றார்களா என்பதேயாகும் - இம்மாதிரியான நடக்கையானது சபையாரால் அல்லது மூப்பரால் ஆதரிக்கப்படக்கூடாது. பொன்னான பிரமாணத்திற்கும் மற்றும் மத்தேயு 18:15-ஆம் வசனத்தின் காரியத்திற்கும் நேர்மாறான விதத்தில் பொல்லாத ஆலோசனைகளில் ஜனங்கள் அதிகளவிலான நேரத்தினை வீணடிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

முக்கியமான, உறுதியான, தெளிவான குற்றச்சாட்டுகளைப் பொறுமையாய்ச் சபையார் கேட்டப் பிற்பாடும் மற்றும் இந்தப் பல்வேறு முயற்சிகளுக்குப் பிற்பாடும், குற்றஞ்சாட்டப்படும் சகோதரன் உண்மையில் தவறு செய்தவராய் இருக்கின்றார் என்றும், அதைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றார் என்றும் கண்டுகொள்வார்களானால், குற்றஞ்சாட்டப்பட்டபடியே, அவர் குற்றம் புரிந்தவராய் இருக்கின்றார் என்ற தீர்மானத்திற்குள் வர வேண்டும். சபையாருடைய வாக்கானது (vote) ஏகமனதானதாக இருக்க வேண்டும்; கூடுமானமட்டும் பட்சபாதங்கள் அனைத்தும் புறக்கணிக்கப்பட வேண்டும். சபையார் யாரையும் நித்திய சித்திரவதைக்குள்ளாகத் தீர்க்காதபடியினாலும், எந்த விதத்திலும் சகோதரனை நியாயந்தீர்க்காதபடியினாலும், அவர்களது அறிவுரையில் எந்தத் தண்டனையும் இணைந்து காணப்படக் கூடாது. அச்சகோதரனுடைய நடத்தையானது, வேதவாக்கியங்களுக்கு எதிராய் இருக்கின்றது என்றும், அவர் தனது நடத்தையினை மாற்றிக்கொள்ளவில்லையெனில், அவரைக் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவராக தங்களால் இனிக் கையாள முடியாது என்றும் அச்சகோதரனுக்கு அறிவுரை மாத்திரம் வழங்குகின்றனர்.

சகோதரனை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைக்கையில், அவர்கள் சகோதரனைத் துன்பப்படுத்திட/இழிவுப்படுத்திடக் கூடாது; ஏனெனில் நாம் இப்படியாக ஆயக்காரர்களையும், பாவிகளையும் இழிவுப்படுத்துவதில்லை. மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ அல்லது வேறு ஏதேனும் விதத்திலோ ஊழியம் புரியும்படிக்கு நாம் பாவிகளிடத்திலோ, ஆயக்காரர்களிடத்திலோ வேண்டிக்கொள்வதில்லை; இதுபோலவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சகோதரனும், ஜெபம் ஏறெடுக்க கேட்டுக்கொள்ளப்படக்கூடாது அல்லது வெளியாட்களிடம் செய்யும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படாத எதுவும், அச்சகோதரன் செய்யும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படக்கூடாது. இப்படியாகச் சபையார் தங்கள் ஐக்கியத்தினை ஒதுக்கி வைத்துக்கொள்வார்கள். அவர் இன்னமும் சகோதரன்தான், ஆனால் நல்ல உறவு நிலைமையில் இல்லாமல் காணப்படுகின்றார்; ஏனெனில் கர்த்தர் வழிக்காட்டியுள்ள விதத்தில், அவர் சகோதரருடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்க மறுத்தவராய் இருக்கின்றார்.

சபையார் அனைவருமே ஒரு காரியத்தில் தங்களது கணிப்பில் தவறிப்போவதற்கும், சரியாய்ச் செயல்பட்டுள்ள சகோதரனுக்கு எதிராய்த் தீர்மானிப்பதற்கும் வாய்ப்புள்ளது. அத்தகைய சகோதரன் பின்வருமாறு கூறிடலாம்: "என்னுடைய அருமையான சகோதர சகோதரிகளே, இக்காரியத்தின் மீதான உங்களது கண்ணோட்டத்தினை நான் மதிக்கின்றேன்; மற்றும் என்னுடைய நடத்தையில் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாய் எதுவாகிலும் இருக்குமாயின், அதற்காக நான் மனம் வருந்துகின்றேன். என்னால் முடிந்தமட்டும் காரியத்தினை மாற்றிக்கொள்வேன் என்று நான் உங்களுக்கு வாக்களிக்கின்றேன். எனக்கே நான் நீதியாய் நடந்துகொள்ள வேண்டுமெனில், என்னால் என்னுடைய கண்ணோட்டத்தினை மாற்றிக்கொள்ள முடியாது; எனினும் உங்களுடைய ஒருமித்தக் குரலை மதித்து, சரியென்று நான் எண்ணுகின்ற என்னுடைய பகுத்துணர்வின்படி, இக்காரியத்தில் நடந்துகொள்வதில்லை. ஆகையால் நான் அநியாயத்திற்கு ஆளாகுவேனானால், இதைக் கர்த்தர் அவரது சரீரமாகிய சபைக்கான பலி என்ற விதத்தில் எடுத்துக்கொள்வார். ஆகவே அன்பு சகோதர சகோதரிகளே, உங்களுடைய அன்பான உணர்வுகளின் நிமித்தமாக, உங்களுக்கு நன்றி ஏறெடுக்கும் அதேவேளையில், இதனால் எனக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று நீங்கள் அறிய விரும்புகின்றேன். ஒருவேளை எப்போதேனும் இக்காரியங்களில் உங்கள் மனம் மாறுமாகில், அதை நீங்கள் எனக்குத் தெரியப்படுத்துவீர்கள் என்று நான் எண்ணுகின்றேன்."

ஒருவேளை அச்சகோதரன் உண்மையிலேயே தவறு செய்திருந்திருப்பாரானால், அவர் "சரி - என்னை வெளியே தள்ளுங்கள்!" என்று சொல்லக்கூடும். சபையார் பின்வருமாறு கூறிடலாம்: "நாங்கள் உம்மை வெளியே தள்ளவில்லை. எங்களிடமிருந்து உம்மை ஒதுக்கிக்கொள்வதாகக் கூறிட வேண்டாம். உம்முடைய வார்த்தைகளை, உம்முடைய பதில் என்று நாங்கள் எடுத்துக்கொள்வதில்லை. எங்களுடைய செயல்பாடுகளானது, மிகவும் இரக்கமானவைகள், சகோதரத்துவமானவைகள் என்றும், சபையாரின் நிலைப்பாட்டிற்கு இசைந்திடுவது இப்பொழுது நமக்கான கடமையின் பாகமாக இருக்கின்றது என்றும் நீர் கண்டுகொள்ள கர்த்தர் செய்திடுவார் என்று நாங்கள் நம்புகின்றோம். நாங்கள் தவறு செய்துள்ளோம் என்று கர்த்தர் ஒருவேளை எங்களுக்குக் காண்பிப்பாரானால், அதை ஒப்புக்கொள்வதற்கு நாங்கள் மிகவும் மகிழ்வுறுவோம். ஆனால் அதற்கிடையில் அன்பான சகோதரனே, உம்மைக் குற்றஞ்சாட்டிட விரும்பவில்லை, மாறாகக் கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் எங்களது கடமையைச் செய்திட மாத்திரம் விரும்புகின்றோம்."

இப்படிச் செய்வது தகுதியானதாய் இருக்கும்; நாம் சகோதரருக்குள் தடை அரண்களை எழுப்பிடக்கூடாது. "நல்லது, நீர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நீர் திரும்ப எடுத்துக்கொள்வது வரையிலும் உம் முகத்தை எங்களுக்குக் காண்பியாதேயும்" என்று சொல்லி, அச்சகோதரனுக்குப் பாதகம் பண்ணிடுவது சுலபம். பெரும்பான்மையான ஜனங்கள் தங்களைப் பற்றி மிகவும் உயர்வாய் எண்ணுவதினால், இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு திரும்பிட முடியாதவர்களாய் இருப்பார்கள்; எனினும் கர்த்தருடைய ஆவியும், அன்பின் ஆவியும், நீதியும் வெளிப்படும் பட்சத்தில் திரும்புகிறவர்களாய் இருப்பார்கள்.

---

R 4994

# சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும்

*"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?"*
*(சங்கீதம் 133:1)*

சங்கீதம் 133-ஆம் அதிகாரமானது, தீர்க்கத்தரிசனமான ஒன்றாகவும், "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள" சகோதரரைக் குறிப்பதாகவும் இருக்கின்றது என்பதில் நிச்சயமே. இக்கருத்தானது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் மீது வடிகிற பரிசுத்த ஆவியினை அடையாளப்படுத்திக் காண்பிக்கிறது. "அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் . . . ஒப்பாயிருக்கிறது" என்று இரண்டாம் வசனத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுவது இன்பமான காட்சியாக எப்போதும் இருப்பினும், இந்தச் சங்கீதமானது விசேஷமாய் நம்முடைய நாட்களுக்குப் பொருந்துகின்றதாய்த் தெரிகின்றது. துன்புறுத்தப்படும் காலங்களில், ஒருமித்திருத்தல் பெரிதும் காணப்படும்; ஏனெனில் சபையுடன் தாங்கள் ஒருமித்துக் காணப்படுவதற்குச் சொற்பமானவர்களே காணப்படுவார்கள்; உண்மையில் அர்ப்பணம் பண்ணியிருப்பவர்களைத் தவிர, மற்றப்படி அனைவரையுமே வெளியிலிருந்து வரும் துன்புறுத்தல்களானது அச்சமூட்டி தடுத்துவிடும். இம்மாதிரியான துன்புறுத்துதல்களின்போது, அனைவருமே இப்படியாகத்தான் எண்ணுவார்கள் மற்றும் ஒரே நோக்கமும், ஒரே காரணங்களும் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே ஒருமித்துக் காணப்பட இழுக்கப்படுவார்கள்.

ஆனால் துன்புறுத்தல்கள் ஓயும்போதும், சபைக்குள் மிகவும் வைராக்கியம் அற்றவர்கள் அநேகம் பேர் வந்திடும்போதும், சச்சரவு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் பெருகிடும். இன்றும் வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு எதிராக எதிர்ப்புகள் அநேகம் காணப்பட்டாலும், துன்புறுத்துதல்கள் என்பது குறைவாகவே உள்ளது. சத்தியத்தினால் ஈர்க்கப்பட்டவர்களில் சிலர், அநேகமாக அவர்கள் என்னவாகக் காணப்பட வேண்டுமோ, அப்படியாக இல்லை. உண்மையைச் சொல்லப்போனால், அவர்களில் எவருமே, தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலாகுவதற்கான தங்களது விருப்பத்தின்படி ஆகவில்லை; மாறாக ஒவ்வொருவரும் மற்றும் அனைவருமே அந்நிலையினை அடைய நாடிக்கொண்டிருக்க வேண்டும்.

## பிணக்குகளுக்கான காரணங்கள் பெருகிவருகின்றன

தேவ தயவு பெற்றிருக்கும் பிள்ளைகளுக்கிடையே பிணக்குகள் ஏதேனும் ஏற்படுதல் என்பது முதலில் விநோதமாய்த் தோன்றிடலாம். அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்த ஆவியினால் மிகவும் நிரம்பிக்காணப்படுவதினால், அவர்கள் இருதயத்தில் பகைமை, பொறாமை, சண்டை எனும் களைகள் காணப்படுவதற்கு இடமிராது என்றும், பரிசுத்த ஆவியின் கனிகள் குவிந்து காணப்படும் என்றும் ஒருவர் எண்ணக்கூடும். அநேகமாக இப்படித்தான் நாம் முதலாவது அர்ப்பணம்பண்ணினபோது நிலைமை காணப்பட்டது; மற்றும் மாம்சத்தின் இந்தக் கிரியைகளுக்கு இடம் இல்லாதிருந்தது. ஆனாலும் பிணக்குகளுக்கான காரணங்கள் குறைவதற்குப் பதிலாகப் பெருகிவருவதாகவே தெரிகின்றது. ஆகையால் பிரச்சனைக்கான காரணத்தினை நாம் கவனிப்பது ஏற்றதாயிருக்கும் மற்றும் இப்படியாக அபாயத்தினைத் தவிர்த்திடுவதற்கும், சகோதரர் மத்தியில் சமாதானம்பண்ணுகிறவர்களாகுவதற்கும் நாம் உதவப்பட முடியும். "பலமுள்ளவர்களாகிய நாம் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்" (உரோமர் 15:1). இவ்வசனத்தின் நிலைமையானது அளவுகோலாய் வைத்துப் பார்க்கப்பட்டால், நாம் எதிர்ப்பார்க்கிற அளவுக்குப் பலமுள்ளவர்கள் அதிகமாய்க் காணப்படமாட்டார்கள்; ஆகையால் இது நாம் ஒவ்வொருவரும் பலமுள்ளவர்களாகுவதற்கும், சபையில் பெலவீனமான சகோதரருக்கு உதவியாய் இருப்பதற்கும் ஏவுகின்றதாய் இருக்கின்றது.

உலகத்தில் இருப்பவர்கள் மத்தியில் இருப்பதைக் காட்டிலும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச்சிருஷ்டிகளாக இருப்பவர்கள் மத்தியிலேயே பிணக்குகள் ஏற்படுவதற்கான அதிகப்படியான வாய்ப்புகள் இருக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாய் இருக்கின்றது; அதாவது அதிகமாய்ப் பிரகாசிக்கப்பட்டவர்களும், சத்தியத்தினால் பெலமடைந்தவர்களுமான ஜனங்கள் அடங்கின கூட்டத்தாரைப் பார்க்கிலும், பெயர்ச்சபையில் காணப்படும் ஜனங்களுக்கு ஒற்றுமையிலும், சமாதானத்திலும் ஒன்றாய் ஜீவிப்பது என்பது சுலபமானதாய் இருக்கும். இந்தக் கருத்தானது முதலில் விநோதமாய்த் தோன்றலாம்; ஆனால் அதைக்குறித்து நாம் ஆராயும்போது, அது மிகவும் தெளிவடைகின்றது. பெயர்ச்சபையில் தேவபக்தி என்பது பெரிதும் ஆச்சாரமாகவே இருக்கின்றது. பெயர்க் கிறிஸ்தவர்களுக்கு ஆடை உடுத்திக்கொள்வதும், கூடுகைகளில் கலந்துகொள்வதும், அங்கு அமைதியாய் அமர்ந்துவிட்டு, பின்னர் வீடு திரும்புவதும் வழக்கமான காரியமாக இருக்கின்றது. இனிமையானவைகள், அதாவது உதாரணத்திற்குச் சூரிய ஒளி, மலர்கள், பெண்களின் தலையணிகள் (bonnets), முதலானவைகள் அவர்களால் கவனிக்கப்படுகின்றது; இப்படியாக நாளானது அவர்களுக்குக் கடந்து செல்கின்றது. ஆனால் மிகவும் பிரகாசிக்கப்பட்டவர்களுடைய மனதிற்கும், சிந்தனைகளுக்கும் அதிக சுறுசுறுப்புக் காணப்படும். நாம்கூட மலர்களையும், நம்முடைய பரம பிதாவினால் நமக்கு அருளப்பட்டுள்ளதான அனைத்தையும் விரும்புகின்றோம். இவைகள் குறித்து நாமும் கலந்துரையாடுகின்றோம் மற்றும் கலந்துரையாடுவதற்கு அதிகமான வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றது; ஏனெனில் எந்த இரண்டு மனிதர்களுமே துல்லியமாய் ஒன்றுபோல் தோற்றத்தில் இல்லாததுபோலவே, எந்த இரண்டு மனிதர்களும் துல்லியமாய் ஒன்றுபோல் சிந்திக்கிறதில்லை.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் தாங்கள் சுயமாய்ச் சிந்தனைச் செய்வதாக தற்பெருமையடித்துக் கொள்கின்றனர். ஆனால் எதையும் உறுதிப்படுத்திக் கொள்வது நமக்கு ஞானமான காரியமாய் இருக்கும். சில கருத்துக்களானது அறிவு சம்பந்தப்பட்டதாக இராமல், மாறாக அனுமானம் சம்பந்தப்பட்டதான காரியங்களாய் இருக்கின்றன. நாம் தேவனால், போதிக்கப்பட்டிருக்கின்றோம். அவர் இப்படியாகவே நமக்குக் கூறுகின்றார் மற்றும் இப்படியாகவே அவருடைய வார்த்தைகளிலும் காணப்படுகின்றது மற்றும் ஒருவேளை இந்தப் புதுக் கருத்துக்களானது, கர்த்தரிடமிருந்து வந்ததாக நாம் ஏற்றுக்கொள்வோமானால், அதை நாம் அதிகம் விவாதம்பண்ணாமல் ஏற்றுக்கொண்டிடலாம். தேவனுடைய வார்த்தைகள் போதிப்பவைகளைக் குறித்து ஆழ்ந்து ஆராய்வது உண்மையில் இன்பமானதே; நமக்குக் கர்த்தர் தெரிவித்திருப்பவைகளை விசுவாசிப்பது என்பது நமக்கான சிலாக்கியமாகும். ஆனால் நாம் எந்த ஆழ்ந்த ஆராய்ச்சிப் பண்ணினாலும் சரி, அது தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவுடனும் மற்றும் கட்டுப்பாட்டுடனும் காணப்பட வேண்டும். நாம் ஆழ்ந்து ஆராய்ச்சிப் பண்ணும்போது, மற்றவர்களும்கூட ஆழ்ந்து ஆராய்ச்சிப் பண்ணுகிறார்கள் என்பதை நாம் நினைவில்கொள்கையில், உபதேச ரீதியிலான இடர்பாடு எப்படித் தோன்றுகின்றது என்பதை நாம் அறிகிறோம்.

இந்த வெவ்வேறான உபதேச ரீதியான கருத்துக்களானது வேதவாக்கியங்களிலிருந்து எடுக்கப்படுகின்றது. ஆனால் (வேதவாக்கியங்களில்) எழுதப்படாத கருத்துக்களை நாம் பகுத்தறிகையில், சண்டை சச்சரவிற்கான அபாயம் ஏற்படுகின்றது. தேவவார்த்தைகளில் மிகவும் ஊன்றிக் காணப்படுபவன், இதினிமித்தம் தான் நன்மை அடைகிறதோடல்லாமல், மற்றச் சகோதரர்களோடும், அவர்களது பகுத்தறிவு சிந்தித்தல்களுடனும் வாக்குவாதம்பண்ணுவதைத் தவிர்த்துக்கொள்ள முடிகிறவனாகவும் இருப்பான். சில விஷயங்கள் குறித்துச் சில கருத்துக்களை நாம் வெளிப்படுத்துவதில் கர்த்தர் வெறுப்புக்கொள்வதில்லை என்று நாம் எண்ணுகின்றோம். நாம் ஒரு கருத்தைப் பெற்றிருந்து, அதைச் சகோதரருக்கு முன்வைத்து, அது அவர்களுக்கு முன்பின் முரணானதாய்த் தோன்றும் பட்சத்தில், நாம் அதை அவர்களிடத்தில் திணிக்கக்கூடாது என்பதும், அவர்களும் அவர்களது கருத்தினை நம்மீது திணிக்கக்கூடாது என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். இம்மாதிரியான விஷயங்களில் அடக்கத்துடன் காணப்பட்டு, காரியத்தினை அமைதியாய் விட்டுவிடுவது சரியான வழிமுறையாக இருக்க, இதற்குப் பதிலாக முடிவுபரியந்தமும் அக்கருத்திற்காகப் போராடும் மற்றும் அனைவரையும் நம் கருத்தினை ஒப்புக்கொள்ளச் செய்வதற்குப் போராடும் - மனப்பான்மை காணப்படுவதே பிரச்சனையாக இருக்கின்றது.

ஒவ்வொரு சகோதரனுக்கும், தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உரிமை இருக்கின்றது. ஆனாலும் நம்முடைய கண்ணோட்டங்களை - பரீட்சைகளாக மாற்றிடுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. பரீட்சைகள் என்பவைகள், வேதவாக்கியங்களில் நமக்குக்

கொடுக்கப்பட்டுள்ளவைகளேயாகும்; உதாரணத்திற்கு: இயேசு கிறிஸ்துவை அபிஷேகிக்கப்பட்டவர் என்றும், உலகத்தின் இரட்சகர் என்றும் விசுவாசிக்க வேண்டும் என்பதும், நாம் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகவும், அவருடைய சுதந்தரத்தில் பங்கடைபவர்களாகவும் இருக்கப்போகின்றோம் என்று விசுவாசிக்க வேண்டும் என்பதும், நாம் விலைக்கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், இந்தத் தற்காலத்திலுள்ள பாடுகளிலும் மற்றும் பின்தொடரும் மகிமைகளிலும் நமது கர்த்தரோடு நாம் பங்கடையப் போகிறதை விசுவாசிப்பது என்பதும் - நமக்கும் மற்றும் சகோதரருடனான நம்முடைய உறவு நிலைக்கும் பரீட்சையாக இருக்கின்றது.

இத்தகைய எளிமையான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்திற்கான அடிப்படையாக இருக்க வேண்டுமே ஒழிய, இவைகளுக்குச் சிலரால் கொடுக்கப்படும் கற்பனையான வியாக்கியானங்களல்ல. சிலர் பொதுவான முக்கிய அம்சங்களையே (outlines) அதிகம் கண்நோக்குகின்றனர்; சிலர் நுணுக்கங்களைப் பார்க்கின்றனர் மற்றும் பொதுவான முக்கிய அம்சங்களைப் பார்க்கத் தவறுகின்றனர். வேறுப்பட்ட மனப்பார்வைகளைக் கொண்டிருப்பவர்கள் குற்றஞ்சாட்டப்படவோ, பாராட்டப்படவோ முடியாது என்றாலும், இவர்கள் பின்வருபவற்றைக் கிரகித்துக்கொள்ள வேண்டும் - அதாவது நமது தேவனுக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான நேர்மையின் காரணமாக, சத்தியத்திற்காக பாடுபட நாம் விருப்பமுள்ளவர்களாய் இருக்கின்றோம் எனும் கருத்தினைக் கிரகித்திட வேண்டும்.

## சத்தியம் பலமான பாத்திரங்களைக் கவருகின்றது

ஒருமித்து வாசம்பண்ணுவதற்குச் சிரமப்படுகின்றதான இந்தச் சகோதரர்களின் சிரமத்திற்கான ஒரு காரணம், இவர்களது உண்மையான உள்ளியல்பான குணலட்சணமேயாகும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். களிமண் போன்ற குணலட்சணத்தினை உடையவர்களாகச் சிலர் காணப்படுகின்றனர்; ரப்பர் பந்தில் செய்ய முடிகிறதுபோல, சிலரில் நீங்கள் சிக்கிரத்தில் மனத்தளர்வு ஏற்படுத்திடலாம்; இன்னும் சிலர் வைரங்கள் போன்று காணப்படுகின்றனர். வைரம் போன்றிருக்கும் வகுப்பார் உறுதியான தன்மையை, குணலட்சணத்தை அடைந்தவர்களாய் இருக்கின்றனர். நாம் களிமண்ணாலான அநேகம் பந்துகளையும், அநேகம் ரப்பர் பந்துகளையும் மற்றும் அநேகம் வைரங்களையும் ஒரு பாத்திரத்தில் போட்டு குலுக்குவோமானால், வைரமானது அது தொடும் அனைத்தையும் உரசிடும், காரணம் அவைகள் மிகக்கடினமான தன்மை உடையதாக இருக்கின்றன. ரப்பர் பந்து வகுப்பாரையோ, களிமண் பந்து வகுப்பாரையோ கர்த்தர் இப்பொழுது தேடுகிறதில்லை. நியமிக்கப்பட்ட காலத்தில் அனைத்து வகையான வகுப்பார்களையும் - அதாவது களிமண் வகையான ஜனங்களையும் மற்றும் ரப்பர் பந்து வகையான ஜனங்களையும் கர்த்தர் கையாளுவார். ஆனால் இப்பொழுதோ அணிகலன் வகுப்பாரை, வைரம் வகுப்பாரை மாத்திரமே சத்தியமானது கவருகின்றதாய் இருக்கின்றது.

ஒருவருக்கொருவர் இடறல் உண்டுபண்ணுவதற்கு, ஒருவரையொருவர் காயப்படுத்துவதற்குரிய அபாயம் இருக்கின்றது என்பதை அறிந்துகொள்கையில், அறிவானது நமக்கு ஞானத்தினைத் தந்திட வேண்டும். இந்தச் சகோதரர்கள் உறுதியான குணலட்சணத்தைக் கொண்டிருக்கின்றனர் என்றும், இவர்கள் களிமண் வகையினர் இல்லை என்றுமுள்ள உண்மையினை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இவர்களது வித்தியாசங்கள்கூடக் குணலட்சணத்தினை வெளிப்படுத்துகின்றது. இவ்வுண்மையினை உணர்ந்துகொள்ள நாம் முயற்சித்து, அவர்களுக்கு எரிச்சலூட்டாமல் இருப்பதற்கு நாம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். நாம் அவர்களுக்குப் புத்திமதிக் கூறவேண்டும் மற்றும் அவர்களும் புதுச்சிருஷ்டிகளென, நம்மைப் போலவே கர்த்தரைப் பிரியப்படுத்த விருப்பம் கொண்டவர்களாய் இருக்கின்றனர் என்று நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் நாம் ஒருவரோடு ஒருவர் பொறுமையுடன் காணப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டில் ஒரு வசனம் பின்வருமாறு கூறுகின்றது: "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்" (1 யோவான் 3:14). இது தெரிவிப்பது என்னவெனில்: சகோதரரில் சிலரை அன்புகூருவது என்பது கடினம் மற்றும் நாம் மரணத்தைவிட்டு ஜீவனுக்குட்படாதது வரையிலும், நாம் அவர்களை அன்புகூர முடியாமல் காணப்படுவோம் என்பதேயாகும்.

சத்தியமானது பெலவீனமானவர்களைக் காட்டிலும், பலமான பாத்திரங்களையே பற்றிக் கொள்கின்றதாய் இருக்கின்றது. ஜெயங்கொள்ளும் சிறுமந்தையின் அங்கத்தினர்களெனக் கர்த்தரால் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு மிகவும் வளையும் தன்மை உடையவர்களாகவும் மற்றும் பலமற்றவர்களாகவும் காணப்படும் மற்ற அநேகரைக் காட்டிலும், இந்தப் பலமான பாத்திரங்களானவர்கள் தங்களது மாம்சத்தில் உறுதியானவர்களாகவும், மனோதிடம் கொண்டவர்களாகவும், போராடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படியாக நம்மைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நம்மை ஆளாக்கின அந்த ஒரு பண்பே மற்றும் ஜெயங்கொள்ளும் நிலைமைக்கு அவசியமான அந்த ஒரு தகுதியே - இத்தகைய பண்புள்ளவர்கள் அநேகர் சபையாக ஒன்றுகூடுகையில், சில விதங்களில் கடுமையான பாதிப்பு ஏற்படுத்தும் காரியமாய்க் காணப்படுகின்றது.

சேற்றினால் சூழப்பட்டிருக்கும் ஒரு வைரமானது, எதையும் வெட்டாது, எதையும் உரசிடுவதில்லை; ஆனால் திரளான வைரங்களைச் சேர்த்துவைத்துப் பாருங்கள். சேறானது அதிகம் அப்புறப்படுத்தப்படும்போது, உராய்வுகளும், உரசும் சத்தங்களும், வெட்டுதல்களும் அதிகமாய்க் காணப்படும். இப்படியாகவே கர்த்தருடைய சம்பத்தானவர்கள் - அதிகமதிகமாய் ஒன்றுகூடி வருகையில், அதிகமதிகமாய் விழிப்படைகையில், பிணக்குகள் ஏற்படுவதற்கான அதிகம் வாய்ப்புகளும் ஏற்படுகின்றது மற்றும் அனைவருமே பரிசுத்த ஆவியினால் முழுமையாய் நிறைந்திருப்பதற்கும் மற்றும் மூடியிருப்பதற்கும் அதிகம் அவசியமாகுகின்றது; எண்ணெய் மிருதுவானதாகவும், வழுவழுப்பானதாகவும் காணப்பட்டு, உராய்வுகளைத் தவிர்ப்பது போன்று, இந்தப் பரிசுத்த ஆவியும் காணப்படுகின்றது.

---

# உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு

**மத்தேயு 5:33-37; யாக்கோபு 3:1-12; 5:12**

*"அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்." (எபேசியர் 4:25)*

நம்முடைய கடந்த பாடத்தில் நாம் நியாயப்பிரமாண கடமைகள் தொடர்புடைய விஷயத்தில் பரிசேயருடைய போதனைகளிலிருந்து, இயேசுவினுடைய போதனையை வேறுபடுத்திப் பார்த்தோம். "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்ற தீர்மானத்திற்குள் நாம் வந்தோம். இன்றைய பாடத்தில் அவருடைய போதனைகளுக்கும், அவரது நாட்களில் காணப்பட்ட மதத்தலைவர்களுடைய போதனைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தினை வேறுபடுத்திப் பார்க்கப்போகின்றோம். சத்தியம்பண்ணும் பழக்கத்தினைக் கட்டுப்படுத்த மற்றவர்கள் முற்பட்டவர்களாய் இருந்தனர், ஆனால் மாபெரும் போதகரோ: "சத்தியம் பண்ண வேண்டாம்" என்றார். சத்தியம் பண்ணுதல் யாவும் எத்துணை மதியீனமான காரியமாய் இருக்கின்றது! சட்டத்தினால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதான சட்டரீதியான சத்தியம் செய்தல்களுக்கோ அல்லது சூளுரைகளுக்கோ நாம் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள் "தெளிந்த புத்தியுள்ள ஆவியினைப்" பெற்றிருப்பார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் சொல்லியுள்ளது உண்மையே. இவர்கள் சத்தியம் பண்ணுதலின் அல்லது தங்களது வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்குச் சத்தியம்பண்ணுவது அவசியமென எண்ணிக்கொள்ளுதலின் மதியீனத்தையும் மற்றும் இழிவான தன்மையையும் உணர்ந்துகொள்ள சீக்கிரம் ஆரம்பிப்பார்கள். ஒருவன் தான் பேசுவது உண்மை என்று கடுமையாய்ச் சத்தியம்பண்ணும் காரியமானது, தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர் தனது எளிமையான வார்த்தையை நம்பமாட்டார் என்று உணர்வதைச் சுட்டிக்காட்டுகின்றது; மேலும் இது தனது வார்த்தைகள் சாதாரணமாகவே நம்பிக்கைக்குப் பாத்திரமற்றது என்பதைக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றதாகவும் இருக்கின்றது.

"உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்ற ஆண்டவருடைய கட்டளையைக் கவனியுங்கள் (மத்தேயு 5:37). ஆம் என்று நீங்கள் சொல்லும்போது, அது ஆம் என்பதாகவே இருப்பதாக; இல்லை என்று நீங்கள் சொல்லும்போது, அது இல்லை என்பதாகவே இருப்பதாக! என்பதே ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தமாய் இருக்கின்றது என்பதில் உறுதியே. உண்மையைச் சொல்லுங்கள்! போகப்போக உங்களது நண்பர்களும் மற்றும் அயலகத்தார்களும் உங்களது வார்த்தைகளை எப்படி மதிப்பிடுவது என்று கற்றுக்கொள்வார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், உங்கள் வார்த்தையினுடைய உண்மையினை உறுதிப்படுத்துவதற்குச் சத்தியம் பண்ணவோ அல்லது உங்களது உண்மையை நிரூபிப்பதற்கு - நீங்கள் உண்மையற்றோ, உண்மைக்கு மிஞ்சியோ பேசவில்லை என்பதை நிரூபிப்பதற்கு, எவ்வகையான விசேஷித்த பலமான வார்த்தைகளைப் பயன்படுத்தவோ அவசியமிராத அளவுக்கு உங்களது பேச்சனைத்திலும் மிகவும் உண்மையாய்க் காணப்படுங்கள்.

## ஊழியர்கள் உண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்

நம்முடைய ஆராய்ச்சியினுடைய இரண்டாம் பகுதியில், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று பரிசுத்த யாக்கோபு புத்திமதி கூறுகின்றார் (யாக்கோபு 3:1, 2). கிறிஸ்தவர்கள் அனைவருமே தங்கள் நாவுகளுக்குக் கடிவாளமிட வேண்டியது அவசியமாய் இருப்பினும், மிகவும் உயர்த்தப்பட்ட ஸ்தானங்களில் இருப்பவர்களே இது தொடர்புடைய விஷயத்தில் மிகவும் தவறிடுவதற்கு ஏதுவானவர்களாய்

இருப்பார்கள் என்று பரிசுத்த யாக்கோபு கூறுவதுபோன்று தெரிகின்றது. மிகவும் உயர்வான ஸ்தானங்களில் இருப்பவர்கள் பேச்சாற்றல் எனும் விசேஷித்த வரம் கொண்டவர்களாகவும், இந்தப் பேச்சாற்றலைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பு எனும் விசேஷித்த ஈவினைக் கொண்டவர்களாகவும் இருப்பதினிமித்தம், மிகுந்த செல்வாக்கினை உடையவர்களானபடியால், இதற்கேற்ப இவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பார்கள்.

ஊழியக்காரர்களையோ அல்லது மற்றவர்களையோ நியாயந்தீர்ப்பது நமக்கடுத்தக் காரியமல்ல; நியாயந்தீர்க்க ஒருவர் இருக்கின்றார்; அவர் கர்த்தர் ஆவார். தாங்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் அல்லது பேச வாய்ப்புப்பெற்ற ஒவ்வொரு வார்த்தைகளுக்குமான தங்களது பொறுப்புக் குறித்து அநேகம் ஊழியக்காரர்களும், எளிமையான நிலைகளில் காணப்படும் கிறிஸ்தவர்களும் முழுமையாய் உணர்ந்துகொள்ளத்தவறுகின்றனர் என்று நாம் பெரிதும் அஞ்சுகின்றோம். தாங்கள் விசுவாசிக்காதவைகளைத் தாங்கள் வருடக்கணக்காகப் பிரசங்கித்ததாக, அநேகர் நம்மிடம் கூறினதுண்டு. எவ்வளவு பயங்கரமாய்க் காணப்படுகின்றது! அவர்களால் செய்யப்பட்டது பொருளற்றதாகிவிட்டதே! அவர்களது கிறிஸ்தவ அடையாளம் எத்துணைப் பழிக்கிடமாகிவிட்டது! எனினும் இறுதியில் அவர்களது மனசாட்சிகளானது ஜெயம் கொண்டுள்ளதற்காக நாம் களிகூர வேண்டும்.

## சிறு தீக்குச்சிப் பெரிய தீயைக் கொளுத்திவிடும்

பரிசுத்த யாக்கோபு சில பலமான விளக்க உதாரணங்களைக் கொடுக்கின்றார். தங்களது குதிரைகளின் வாய்களில் கடிவாளம் போடுவதுபோன்று, கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வாய்க்கும் கட்டுப்பாடு எனும் கடிவாளம் போட்டிட வேண்டும். கப்பலுக்குச் சுக்கானைப் பயன்படுத்துவதுபோன்று, ஜீவியத்தில் தங்கள் சொந்த வாழ்க்கைப் போக்கினைத் திசையறிந்து திருப்புவதற்குச் சுக்கானை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். சரீரத்தினுடைய அவயவங்களிலேயே நாவானது சிறியதாய் இருப்பினும், அதுவே அனைத்திலும் மிகுந்த ஆதிக்கமுடையது என்பதை அவர்கள் நினைவில் கொண்டிருக்க வேண்டும். கைமுட்டினால் குத்தும்போது, அது அருகாமையில் இருக்கும் ஒரு நபரை வேண்டுமானால் காயப்படுத்திடலாம்; ஆனால் கசப்பான வார்த்தையோ, விஷமுள்ள அம்புபோன்று தொலைவில் போய்த் தாக்கும்; ஆம் அது பெரிய துப்பாக்கியிலிருந்து குண்டுவெடித்து, பெரிய சேதத்தை ஏற்படுத்துவதுபோன்று, ஏற்படுத்திவிடும். ஆம்! இன்னும் அதிகமாய்ச் செய்திடும்; அதன் செல்வாக்கானது தொலைப்பேசிகள், தந்தி (telegraph) கம்பிகள் மற்றும் கம்பியில்லா கருவிகள் வாயிலாக, பூமியினுடைய மூலை, முடுக்கெல்லாம் கடந்துசெல்லும் மற்றும் உலகமெங்குமுள்ள செய்தித்தாள்களில் கொண்டுவரப்பட முடியும். அதற்கு எத்துணை ஆற்றல்மிக்க வல்லமை காணப்படுகின்றது! அது நமக்குக் கொடுக்கப்பட்டதான எத்தகையதொரு புனிதமான சொத்தாயுள்ளது! சரியாய் அல்லது தவறாய்ப் பயன்படுத்துவதற்குரிய எத்தகையதொரு தாலந்தாய் அது காணப்படுகின்றது!

மேலே கூறப்பட்டுள்ளது போன்று, நன்மை அல்லது தீமைக்கு ஏதுவான பரந்த அளவிலான வாய்ப்புகள் நம் அனைவருக்கும் இருப்பதில்லை; எனினும் நம்முடைய சொந்த இல்லங்களில், நாம் வேலை பார்க்கும் ஸ்தலங்களில், கடைகளில், சந்தைகளில் - ஒன்றில் சந்தோஷத்தை அல்லது துயரத்தை உண்டுபண்ணுகிறதற்கு ஏதுவாக, ஒன்றில் குணலட்சணத்தைக் கட்டியெழுப்புகிற அல்லது சீர்க்குலைக்கிறதற்கு ஏதுவாக, ஒன்றில் உதவிசெய்வதற்கு அல்லது சோர்வுபடுத்துகிறதற்கு ஏதுவாக - நாம் நன்மையான அல்லது தீமையான செல்வாக்கினை/தாக்கத்தினைப் பரப்பிடக்கூடும். எந்தக் கிறிஸ்தவனும் தனது மிகவும் ஆற்றல்மிக்க இந்த அவயத்தின் விஷயத்தில் அலட்சியமாய் இருத்தல் கூடாது. சிறு தீக்குச்சியானது பெரிய காட்டையே கொளுத்திவிடுவதுபோல, நாவும்கூட பெரிய தீயைக் கொளுத்திவிடும், பெரிய குழப்பத்தினை ஏற்படுத்திடும் மற்றும் பெரிதளவில் பாதகம் பண்ணிடும் என்று பரிசுத்த யாக்கோபு தெரிவிக்கின்றார். தற்பெருமையடித்துக்கொள்வது என்பது நாவினுடைய மிகவும் அபாயகரமான பயன்பாடுகளில் ஒன்று என்று தெரிவிக்கின்றார். இதற்கு நம்முடைய அனுபவங்களும் சாட்சிப்பகர்கின்றன. பெருமையாய்ப் பேசுதல் என்பது - நம்மைப் பெரும்பாலும் தப்பறைக்குள் நடத்தி, அதில்தானே நம்மை இறுக்கிக்கட்டிப்போட்டுவிடுகின்றது; காரணம் தவறை ஒப்புக்கொள்வதற்கு நாம் தாழ்மையற்றவர்களாய் இருப்போம்; அது நாம் தப்பித்துக்கொள்வதற்குச் சிரமப்படுகின்றதான அசத்தியத்திற்குள் நம்மைப் பெரும்பாலும்

நடத்திவிடும். இது பெருமைக்கான அறிகுறியாகும் மற்றும் இதினிமித்தம் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயல் அற்றவர்களாகவும், சரியற்றவர்களாகவும் காணப்படுவோம்.

கோபமான வார்த்தைகள், கசப்பான வார்த்தைகள், ஏளனமான வார்த்தைகள், வசைமொழிகள் முழு வாழ்க்கைச் சக்கரத்தையும் கொளுத்திவிடுகிறதாய் இருந்து, வாழ்க்கையைக் கோபத்தின் சக்திகளினால் இரண்டாம் மரணத்திற்கு, கெஹன்னாவிற்கு நேராக இயக்குகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் தீமையில் பிறப்பிடம் கொண்டுள்ள வார்த்தைகளானது, அழிவுக்கு நேராய் வழிநடத்தும் கெஹன்னாவின் நெருப்பாய் இருக்கின்றது என்று பரிசுத்த யாக்கோபு தெரிவிக்கின்றார்.

## நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது

மிருகங்கள், பறவைகள் மற்றும் மீன்கள் யாவும் மனுஷனுடைய கட்டளையின் கட்டுப்படுத்தும் வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது, ஆனால் எந்த மனுஷனாலும் இன்னொரு மனுஷனுடைய நாவினை அடக்கமுடியாது என்று அப்போஸ்தலன் நமக்கு நினைப்பூட்டுகின்றார். ஆம், எந்த விழுந்துபோன மனுஷனாலும் தன் சொந்த நாவினை அடக்கமுடியாது என்று கூறிடலாம் அல்லவா? தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கும் நிலைக்கும், சத்தியம் மற்றும் நீதி மற்றும் அன்பிற்கான வேலையாளாகப் பயன்படும் நிலைக்கும் நம்முடைய நாவுகளானது கொண்டுவரப்படுவதற்குரிய ஒரேயொரு வழி, நாவை மாற்றமடைந்த நிலைக்குக் கொண்டுவருவதேயாகும். நாவானது இருதயத்தின் உணர்வுகளுக்கான பேசும் பிரதிநிதியாய் இருப்பதினால், இருதயமே மாற்றத்திற்குள்ளாக வேண்டும். "எல்லாம் புதிதாகத்தக்கதாக" குணலட்சணத்தினுடைய உண்மையான மாற்றத்திற்குரிய வல்லமையானது, தேவனுடையதேயாகும்.

பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளதான தேவனுடைய பிள்ளையானவன், தனது நாவை அடக்கி ஆளும் விஷயத்தில், ஜெனிப்பிக்கப்படாதவர்களுக்கு இல்லாத உதவியினைப் பெற்றிருப்பவனாய் இருக்கின்றான். "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா!" இருதயத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்; இருதயத்தினுடைய நிறைவினால், இருதயத்தினுடைய தியானத்தினால் வாய்ப் பேசும் எனும் செய்தியானது எத்துணை முக்கியமானதாய்க் காணப்படுகின்றது.

சுபாவ மனுஷனுடைய நாவானது, முழுக்க சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது என்று பரிசுத்த யாக்கோபு கூறுகின்றார். அவர் அதைச் சர்ப்பத்திற்கு ஒப்பிடுவதுபோன்று தெரிகின்றது. நமது விழுந்துபோன நிலையில், "உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது!" என்று நாவைக் குறித்துக் கூறுவது மிகவும் உண்மையே (உரோமர் 3:13). சுயநலத்திற்குப் பதிலாக நாம் அன்பின் ஏவுதலையும், இயக்கும் புதிய ஆற்றலையும் உடைய புதுச்சிருஷ்டிகளாகும்போதுதான், அந்த விஷப்பற்கள் பிடுங்கப்படுகிறது. பின்னர் புதிய மனமானது, புதுச்சிருஷ்டியானது, உதடுகளைத் தேவனுடைய துதிகளை அறிவிக்கவும், சகமனுஷனை ஆசீர்வதிப்பதற்கும் பயன்படுத்தமுடியும்.

## தேவனைத் துதித்தலும் - மனுஷனுக்குப் பாதகம் பண்ணுதலும்

தேவனுடைய ஜனங்களாகியுள்ள சிலர் தேவனுக்குப் பயபக்தியுடன் காணப்படுபவர்களில் சிலர், தெய்வீகத் துதித்தலைப் பாடிடுவதற்கும், தெய்வீக இரக்கத்தை அறிவித்திடுவதற்கும் தாங்கள் பயன்படுத்துகிற அதே நாவையே, தங்கள் சகமனிதர்களைக் குறித்துப் புறங்கூறவும், தீமைபேசவும், அவதூறு பேசவும், நசுக்கிடவும், அவமானப்படுத்தவும், காயப்படுத்தவும், வன்மையாய்க் கண்டிக்கவும் பயன்படுத்துகின்றனர் எனும் உண்மையினைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர் என்ற காரியத்தை அப்போஸ்தலன் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றார் என்பதைக் கவனியுங்கள்! அந்தோ! இக்குற்றச்சாட்டினுடைய உண்மையினை நாம் உணர்ந்துகொள்கின்றோம்! இப்படி உணர்ந்துகொள்ளுதல் என்பது, தெய்வீகத் திட்டத்தின்படி செய்திடவும், மீட்பருடைய உண்மையுள்ள சீஷர்களாக இருக்கவும் நாடுகின்றவர்கள் தங்களைச் சரிச்செய்துகொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தூய்மையான தண்ணீரும், கசப்பான தண்ணீரும் புறப்பட முடியாது. ஆகையால் நம்முடைய நாவுகளினால் நாம் நம்முடைய சகமனிதர்களுக்குத் தீங்குபண்ணுகிறோம் என்றால், தேவனுடனான நமது உண்மையான மனநிலை தொடர்புடைய விஷயத்தில், நாம் நம்மையே வஞ்சித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை நாம்

அறிந்திருப்போம். கசப்பினாலும், கோபத்தினாலும், துர்க்குணத்தினாலும், பகைமையினாலும், பொறாமையினாலும், வாதினாலும் முழுக்க நிரப்பப்பெற்றும் மற்றும் இவைகளைக் கடுமையானப் பேச்சினால் வெளிப்படுத்தும் இருதயத்திலிருந்து வரும் ஜெபங்களையும், ஆராதனையையும் தேவன் ஏற்க மறுப்பார் என்பதை நாம் அறிந்திருப்போம்.

வசைமொழி என்பது, "பிசாசின் இயற்கைப் பாஷையாகும்" என்று கார்லைல் அவர்கள் விவரித்துள்ளார். "வசைமொழியினால் எவருமே திருந்தினதாக இல்லை; வெளிப்படையான வசைமொழிகளினால் நொறுக்கப்பட்டிருக்கின்றார்களேயொழிய, தேவன் அருகே ஒருபோதும் அதனால் இழுக்கப்பட்டதில்லை" என்று பேபர் அவர்கள் எழுதியுள்ளார். "புறங்கூறுதலுக்கு அன்பே மருந்தாகும்" என்று ராபர்ட்சன் அவர்கள் எழுதியுள்ளார். நிச்சயமாகவே பொன்னான பிரமாணமானது, நம்முடைய பேச்சு விஷயத்திலும், நமது கிரியைகள் விஷயத்திலும் செயல்படுத்தப்படுவது அவசியமாகும். "சமாதானத்திற்கும் மற்றும் அன்பிற்கும் தூதுவனாக இருப்பதற்குப் பதிலாக, நாவானது பொறாமை மற்றும் தீய எண்ணங்களைத் தூண்டிவிடுகிறதாகவும் மற்றும் இரக்கமின்மையின் கசையடியாகவும் மற்றும் பகைமையின் போர்க்கருவியாகவும் மாறியுள்ளது" என்று ஆயர் ஜேக்சன் அவர்கள் உண்மையாய் எழுதியுள்ளார்.

R 5021

# “ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும்”

## மத்தேயு 6:1-18

“மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.” மத்தேயு 6:1

இன்றைய பாடத்தில் ஆண்டவர், தர்மம் கொடுப்பதிலுள்ள சரியான விதம் மற்றும் சரியில்லாத விதம் குறித்துக் கூறுகின்றார். பிற்பாடு அவர் சரியான மற்றும் சரியில்லாத ஜெபம் குறித்தும், சரியான மற்றும் சரியில்லாத உபவாசம் குறித்தும் விளக்குகின்றார். இவைகள் அனைத்தையும் பேசுகையில் அவர் மாய்மாலத்தையும், நாடகமிட்டுக் காட்டுவதையும் குற்றப்படுத்திப் பேசினார். பரமப் பிதாவைப் பிரியப்படுத்துவதற்கும், அவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குமான விருப்பத்தினால் மாத்திரமே, கர்த்தருடைய பின்னடியார்கள் இயக்கப்படுகின்றவர்களாய் இருக்க வேண்டும். சில நேரங்களிலும், இடங்களிலும் மற்றவர்கள் சூழ்ந்திருக்கும்போதுங்கூட, அவர்களுடைய முன்னிலையில் தர்மம் வழங்குவது சரியான காரியமாக இருப்பதுண்டு. சில நேரங்களிலும், இடங்களிலும் மற்றவர்கள் முன்னிலையில் ஜெபம் பண்ணுவது சரியான காரியமாக கருதப்படுவதற்குங்கூட வாய்ப்புண்டு. சில சந்தர்ப்பங்களில் மற்றவர்கள் நாம் உபவாசம் இருப்பதை அறிய நேரிட்டாலுங்கூட அவர்களுடைய பழிதூற்றுதலுக்கு இடமிராது.

மாபெரும் போதகர் குறிப்பிடும் கருத்தானது, நம்மை இயக்கும்/தூண்டும் தூண்டுதலாகக் காணப்படுகின்றது. ஒருவேளை நாம் சுயநலமான நோக்கங்களினால்/தூண்டுதல்களினால் இயக்கப்படுகின்றவர்களாய்க் காணப்படுவோமானால், ஒருவேளை நாம் பாராட்டையோ, பூமிக்குரிய ஆதாயத்தையோ, பிரபலத்தையோ நாடுபவர்களாய்க் காணப்படுவோமானால், அதன் வாயிலாக நாம் தெய்வீக அங்கீகரிப்பையோ அல்லது ஆசீர்வாதத்தையோ பெற்றுக்கொள்ள முடியாது. “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.” நாம் நன்மைகள் செய்கிறதோ அல்லது ஜெபம் பண்ணுகிறதோ அல்லது உபவாசம் பண்ணுகிறதோ மற்றவர்களால் அறியப்படலாம். ஆனால், மற்றவர்களால் அறியப்பட வேண்டும் என்ற விதத்தில் நாம் நன்மைகளை, அல்லது நம்முடைய ஜெபங்களை, உபவாசங்களைச் செய்கின்றவர்களாய்க் காணப்படக்கூடாது. இப்படிப்பட்டவர்களுக்கு (மற்றவர்கள் அறிய வேண்டும் என்று செய்பவர்களுக்கு) “தங்களுக்கான பலனை அடைந்து தீர்ந்தார்கள்” என்று கர்த்தர் கூறுகின்றார். இவர்கள் நாடின விளம்பர பிரபலத்தைத் தவிர வேறெதையும் அடைவதில்லை.

### ‘‘ஜெபம் எனும் சிலாக்கியம்’’

ஜெபம் ஒரு சிலாக்கியமாகும். ஜெபம் பண்ணும்படி, இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளைக்கொடுக்கவில்லை. ஜெபம் பண்ணுவது எப்படி என்று அவர்கள் வேண்டிக்கொள்ளாதது வரையிலும், ஜெபம் பண்ணுவதற்கான மாதிரியையும் அவர்களுக்குக் கர்த்தர் அருளவில்லை. “வார்த்தைகளினால் உச்சரிக்கப்படுகின்ற அல்லது உச்சரிக்கப்படாத ஆத்துமாவின் உண்மையான வாஞ்சையே ஜெபமாகும்.” பரலோகக் கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்குரிய சிலாக்கியத்தை நாம் உணர்ந்துக்கொள்வதற்கு முன்னதாக, நமக்குத் தெய்வீகக் கிருபை மற்றும் உதவி, தேவையாய்யுள்ளது என்பதை நாம் முதலாவது உணர்ந்துக்கொண்டவர்களாய் காணப்பட வேண்டும். ஜீவியத்தின் போராட்டங்கள், துக்கங்கள், பரீட்சைகள், சோதனைகளானது, தேவனுடைய பிள்ளைகளை அடிக்கடி ஜெபம்பண்ணத் தூண்டுகின்றது. தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய வேதனையான சூழ்நிலைகளில் மாத்திரமல்லாமல், தங்களுடைய சந்தோஷமான சூழ்நிலைகளிலும் கூட நன்றி செலுத்துவதற்கும், துதி ஏறெடுப்பதற்கும், தொழுது கொள்வதற்கும் கிருபையின் சிங்காசனத்திற்குச் செல்ல விரும்புவது என்பது உயர்தரமான கிறிஸ்தவ வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது.

உலகத்தார் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கர்த்தர் கூறாமல், தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரமே . . . “நீங்கள் ஜெபம் பண்ணும்போது” என்று கூறினதைக் கவனிக்க வேண்டும். புறஜாதிகள், மனுக்குலத்தின் உலகம், பொதுவாக கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்கான வாய்ப்பில்லாமல் இருக்கின்றார்கள். தேவனுடன் உடன்படிக்கை உறவினைக் கொண்டிருந்தவர்கள்

(யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்) மாத்திரமே, தங்களுடைய விண்ணப்பங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற தெய்வீக வாக்குறுதியைப் பெற்றிருந்தார்கள். இது எல்லோரையும் ஜெபம் செய்யும்படிக்கு ஊக்குவிக்கும் பழக்கத்தையுடைய சிலருக்கு, ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஜெபத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள கொள்கையை, நாம் சுருக்கமாக சூழ்நிலையைப் பார்ப்பதின் மூலமே அறிந்துவிடலாம். அதைப்பற்றி இப்பொழுது பார்க்கலாம். ஆதாமின் சந்ததியாராகிய உலகத்தார், பொல்லாத கிரியைகளின் நிமித்தம், தேவனிடமிருந்து தூர விலக்கப்பட்டார்கள். ஆதாம், தேவனுடன் ஓர் உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டார். மேலும், இந்த உடன்படிக்கையின் காரணமாக ஆதாம், தேவனுடைய குமாரனுக்குரிய சிலாக்கியங்களை அனுபவித்தார். இந்தச் சிலாக்கியங்களானது, உறவையும், ஐக்கியத்தையும், ஜெபத்தையும், தெய்வீக மேற்பார்வை மற்றும் பராமரிப்பையும் உள்ளடக்கினது. ஆனால், ஆதாமினுடைய கீழ்ப்படியாமை அந்த உடன்படிக்கையை முறித்துப்போட்டு, அந்த உடன்படிக்கை உறவையும், அதன் அனைத்துச் சிலாக்கியங்களையும் அழித்துப்போட்டது (ஓசியா 6:7). தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாக மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே இன்று ஜெபமாகிய சிலாக்கியத்தை அனுபவிக்கின்றார்கள். இப்படியாகவே மாம்சீக இஸ்ரயேலர்கள், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஆகவே, எருசலேமிலுள்ள ஆலயம், ஜெபவீடு என்று அழைக்கப்பட்டது. இது விசேஷித்த விதமாக யூத தேசத்தாருக்குக் காணப்பட்டது. ஆனால், மற்ற அனைத்துத் தேசத்தாருக்கும் யூதமார்க்கத்தமைந்தவர்களாகுவதற்கான (யூத மதத்திற்கு மாறும்) சிலாக்கியம் இருந்தது. மேலும், இப்படி யூதமார்க்கத்தமைவதன் மூலமாக, ஜெபத்தின் சிலாக்கியத்தையும் உள்ளடக்கியுள்ள யூதர்களுக்கான அனைத்துச் சிலாக்கியங்களுக்குள் இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பு இருந்தது.

நமது கர்த்தருடைய சீஷர்களாக, அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பின்னடியார்களாக வந்தவர்களை, பாவங்களுக்கான தம்முடைய மேலான பலியின் மூலம் இவர்கள், ஜெபத்தினுடைய மேலான சிலாக்கியங்களை அடையத்தக்கதாக, இவர்களைப் பரிசுத்தம்பண்ணி, பாத்திரவான்களாக ஆக்கினார். இவர்கள் பெந்தெகொஸ்தே நாள் முதல் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர், மேலும் இவர்கள் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஜெநிப்பித்தலையும் அனுபவித்தார்கள். முதலில் யூத விசுவாசிகள் மாத்திரமே காணப்பட்டார்கள். ஆனால், ஏற்றவேளையில் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்குமிடையே இருந்த சுவர் உடைக்கப்பட்டது. பின்னர், கொர்நேலியு முதல், அனைத்துப் புறஜாதி விசுவாசிகளும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜெபத்தின் அனைத்துச் சிலாக்கியங்களும் அருளப்பெற்றார்கள் (அப்போஸ்தலர் 10).

இந்தப் புறஜாதிகள், மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக தேவனுடன் ஓர் உறவிற்குள் வராமல், பலியின் உடன்படிக்கையின் மூலமாகவே வந்தார்கள். இந்த உடன்படிக்கையின் கீழ்தான் இவர்கள் கிறிஸ்துவுடன் உடன் பலிச்செலுத்தும்படிக்கு அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங்கீதம் 50:5). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இந்தப் பலியின் உடன்படிக்கையை அவரோடு பண்ணும் புறஜாதிகள் மாத்திரமே இந்த யுகத்தில் தேவனுடைய புத்திரர்களாகி, ஜெபம் எனும் சிலாக்கியத்தை உள்ளடக்கியுள்ள புத்திரத்துவத்திற்கான சிலாக்கியங்களை அனுபவிக்கின்றன்றவர்கள் ஆகின்றார்கள். தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் வராதவர்களை ஜெபம் பண்ணும்படி அழைக்கும் பழக்கமானது, வேதவாக்கியங்களின்படியான காரியமும் இல்லை, சரியானதும் அல்ல. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்பதில்லை (யோவான் 9:31). கிறிஸ்து மூலம் தேவனிடத்திற்கு வருபவர்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். ஏனெனில், இயேசு அவர்களுக்குப் பரிந்து பேசுபவராக இருக்கின்றார். ஆகவே, தங்களுடைய சொந்த நாமங்களில்/நாமங்களின் மூலம் தேவனை அணுகுபவர்கள் அதாவது, பரிந்து பேசுபவராகிய கர்த்தரையும், சீஷத்துவத்திற்கான அவருடைய நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் பிதாவை அணுகுபவர்களுக்கு, பிதாவினிடத்தில் எவ்விதமான உறவும் இல்லை. மேலும், அவர்களுடைய ஜெபங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது.

ஆகவே, நம்முடைய நண்பர்களையும், அயலார்களையும், தேவனிடத்தில் ஜெபம் ஏறெடுப்பதற்கும், அவர்கள் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள் நிறைவேறும் என நம்பிக்கைக்கொள்வதற்கும் நாம் புத்திமதிச் சொல்வதற்குப்பதிலாக, வேதவாக்கியங்களுக்கு இசைவாக அவர்கள் பாவங்களுக்காக மனம் வருந்தவும், தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளவும், இயேசுவின் அடிச்சுவடுளைப் பின்தொடரும்

பின்னடியார்களாக ஆகுவதற்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணவும் நாம் ஆவிக்குரிய ஆலோசனை வழங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்படியாகச் செய்த பின்னர் அவர்கள் தேவனுடைய புத்திரர்களாகி, தற்காலத்திலும், மகிமையான எதிர்க்காலத்திலும், புத்திரத்துவத்திற்குரிய அனைத்துச் சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வார்கள் என்றும் ஆவிக்குரிய ஆலோசனை வழங்க வேண்டும்.

## ''அந்நிய தேவர்களை வணங்குபவர்களின் வீணான அலப்பல் வார்த்தைகள்''

உலகத்தை விட்டுவிட்டு, கிறிஸ்து மூலம் தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் வராத அனைவரும் புறஜாதிகளும், அந்நிய தேவர்களை வணங்குகின்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட அந்நியர்கள் தேவனுடைய கிருபை பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழியை, வாசலைப் புரிந்துக்கொள்ளாததினால், அநேக வார்த்தைகளைப் பயன்படுத்துவதினாலும், தங்கள் ஜெபங்களைத் திரும்பத் திரும்ப கூறுவதினாலும், தங்கள் ஜெபங்கள் கேட்கப்படும் என்று எண்ணிக்கொள்கின்றனர். சிலர் ஜெப சக்கரங்களைப் (prayer wheels - China) பயன்படுத்துகின்றனர். இன்னும் சிலர் ஜெபமாலைகளைப் பயன்படுத்துகின்றனர். வேறு சிலர் குறிப்பிட்ட வார்த்தைகளைப் பல நூறுமுறை கூறி ஜெபிக்கின்றனர்.

இயேசுவின் பின்னடியார்களாகாத எவர்களுடைய ஜெபமும் கேட்கப்பட மாட்டாது. நீண்ட ஜெபம் ஏறெடுப்பதினால், தங்களுடைய ஜெபங்கள் பிதாவினால் அங்கீகரிக்கப்படும் என்று இயேசுவின் பின்னடியார்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம் எனப் புத்திமதி இயேசு கூறுகின்றார். இவர்கள் நீண்ட நேரம் ஜெபம் ஏறெடுக்க வேண்டியதில்லை. ஏனெனில், "நீங்கள் கேட்பதற்கு முன்னதாகவே உங்களுக்கு என்ன தேவை என்பதை உங்கள் பிதா அறிந்திருந்கின்றார்" என இயேசு கூறியுள்ளார். இப்படிப் பிதா அறிவார் என்றால், பின்னே நாம் ஏன் கேட்க வேண்டும்? என்று கேள்விகள் எழலாம். நம்முடைய விசுவாசத்தைத் தூண்டிவிடுவதற்கும், நமக்கு அதிகமான ஆசீர்வாதங்களை அடிக்கடி கொடுப்பதற்கும்தான் இந்த ஜெபம் எனும் தெய்வீக ஏற்பாடு ஒழுங்குப்பண்ணப்பட்டிருப்பதற்கான நோக்கமாகும். தம்மை மிகவும் அன்பு செய்யும் அருமையான பிள்ளைகளாக தேவன் நம்மைக் கையாண்டு, நமக்கு மிகவும் உதவியாக இருக்கும் ஜீவியத்தின் அனுபவங்களினால் நம்மைப் பயிற்றுவிக்கும் விதமாகவும் வழிநடத்துகின்றார். இயேசுவுக்கு நீண்ட ஜெபங்கள் ஏறெடுக்க வேண்டியிருந்தபோதெல்லாம், அதை அவர் வெளியரங்கமாக, பொதுவிடங்களில் செய்யவில்லை. அவர் மலைக்குப் போய் ஜெபம் பண்ணினார். இப்படியே அவருடைய பின்னடியார்களுடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் கூடுகையின் மத்தியில் பொதுவாக ஜெபம் ஏறெடுக்க வேண்டியது இருந்தாலுங்கூட, இது அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தாலுங்கூட, நாம் பிதாவுடன் தனிமையில் உறவு வைத்தக்கொள்ள பிரதானமாக நாட வேண்டும்.

## ''முறையான வார்த்தைகள்''

இயேசு தம்முடைய சீஷர்களுடைய விண்ணப்பத்திற்கு இணங்கி சரியான ஜெபத்திற்கான ஒரு மாதிரியை அவர்களுக்குக்கொடுத்தார். அந்த மாதிரி ஜெபத்தில் நாம் அதன் சுருக்கத்தையும், அதன் எளிமையையும், அதன் வழிக்காட்டுதலையும், அதன் ஒழுங்கையும் காண முடிகின்றது.

(1) பிதாவிடம் பிள்ளைகள்போன்று, நாம் துதி ஏறெடுப்பதுடன் ஜெபமானது ஆரம்பமாகுகின்றது. "நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (மத்தேயு 6:9). தேவனுடைய நாமம் என்பது அவருடைய குணலட்சணத்திற்கும், அவருடைய இராஜ்யத்திற்கும், அவருடைய தனித்துவத்திற்கும் அடையாளமாக இருக்கின்றது. முதலாவதாக, நம்முடைய மாபெரும் சிருஷ்டிகருக்கு கனத்தையும், மதிப்பையும், மகத்துவத்தையும், மகிமையையும் செலுத்த வேண்டும். தேவன் நியமித்துள்ள வழியில், பரலோகத்தில் இருக்கும் அவரை அழைப்பதில் நாம் பிரியப்பட வேண்டும்.

(2) வரிசையில் அடுத்ததாக, நாம் தெய்வீக அதிகாரம் மற்றும் ஆளுகையை நம்புவதாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதாவது, இப்படிச் சொல்வது என்பது சந்தோஷமோ, துக்கமோ, இன்பமோ, வலியோ, ஜீவனோ, மரணமோ, எதுவாக இருப்பினும், நம்முடைய இருதயங்கள்

தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது. இன்னுமாக, இப்படிச் சொல்வது என்பது இப்பொழுது பரலோகத்தில் செயல்பட்டு வருவதுபோன்று, இறுதியில் தெய்வீகச் சித்தமானது பூமியில் முற்றும் முழுமையாகச் செய்யப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தம் மற்றும் வல்லமை மீது நாம் நமது நம்பிக்கையைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதையும் குறிக்கின்றது. "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10). மேலும், இதை ஜெபத்தில் கூறுவதின் மூலம் நாம் வரவிருக்கின்ற மேசியாவின் இராஜ்யத்தை ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றோம். மேலும், அந்த இராஜ்யத்துடன் தொடர்புடைய நம்முடைய சொந்த நம்பிக்கைகளையும் ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றோம். அதாவது, நாம் இறுதிவரை உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவோமாகில், நாம் கர்த்தருடன் அவருடைய மகிமையான சிங்காசனத்தில் பங்கடைவோம் என்றும், தெய்வீக வல்லமை மற்றும் இரக்கத்தின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்திற்கு வழங்கி, விருப்பத்துடனும், கீழ்ப்படிதலுடனும் காணப்படும் மனுக்குலத்தைச் சீர்த்திருத்துவதில் பங்கடைவோம் என்றுமுள்ள நம்முடைய நம்பிக்கைகளையும் ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருப்போம்.

(3) அடுத்தது நம்முடைய அன்றாட தேவைகள், நம்முடைய ஆகாரம் பற்றின விண்ணப்பமாகும். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11). எவ்வளவு எளிமையான வார்த்தைகள்! தேவன் நம்மையும், நம்முடைய தேவைகளையும் மறக்க மாட்டார் என்றவிதத்தில் நமக்கு அப்பமும், தண்ணீரும் தருவார் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். நாம் விண்ணப்பிக்கையில், நாம் கர்த்தர்மேல் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்; அதாவது, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குக் கொண்டுள்ள வல்லமை மற்றும் விருப்பத்தின் விஷயத்தில் எவ்விதமான சந்தேகமும் இல்லாமல், அவர்மேல் நம்பிக்கையுடன் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்று மாத்திரமே தெரியப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றோம். ஆஸ்தி, ஐசுவரியம் போன்றவைகளைத் தேவன் வாக்களிக்கவுமில்லை, நாமும் அவைகளுக்காக ஜெபம் பண்ணக்கூடாது. நல்ல உயர்தரமான ஆகாரம், சொகுசுகளையும் நாம் குறிப்பிட்டு ஜெபத்தில் கேட்கக்கூடாது. நமக்குச் சிறந்தது என ஜீவியத்தின் தேவைகளினுடைய விஷயத்தில், தந்தையே நீர் காண்கிறது எதுவோ, அதையே எங்களுக்கு அனுதினம் அருளியருளும் என்றவிதத்திலேயே நம்முடைய ஜெபம் காணப்பட வேண்டும். மேலும், ஒருவேளை இந்தத் தேவைகளைத் தெய்வீக ஏற்பாடு/வழிநடத்துதல் நமக்கு சந்திக்கவில்லையெனில், தேவன் கவனம் செலுத்தாதால் அல்லது அவருக்கு வல்லமை இராததினால் நம் தேவை சந்திக்கப்படவில்லை என்று நாம் எண்ணாமல், இப்படிச்செய்வதே நமக்குச் சிறந்தது எனத் தெய்வீக ஞானம் கண்டதினாலேயாகும் என்று நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும்.

(4) "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12). இவ்வார்த்தைகளில் இரக்கம் காட்டுபவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வார்கள் என்ற கர்த்தருடைய போதனையும், மன்னிப்பு வழங்குகிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள் என்ற கர்த்தருடைய போதனையும் வெளிப்படுகின்றது. இங்கு ஆதிப்பாவம் பற்றிப் பேசப்படவில்லை. இரத்தத்தின் கீழ்க் காணப்படுபவர்களுக்கும், அதாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கும், அவருடன் உடன்படிக்கை உறவிற்குள் வந்தவர்களுக்கும் இந்த ஆதிப்பாவம் மூடப்பட்டு உள்ளது. இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் பாவமானது, நம்முடைய அன்றாட குறைவுகள், பெலவீனங்கள், தவறுகள், தெய்வீகப் பிரமணாத்திற்கு எதிரான மீறுதல்கள் ஆகும். பிதா நம்மை மன்னிக்கிற விஷயத்தை, நாமும் மற்றவருடைய விஷயத்தில் செய்யவேண்டும் என்ற விஷயத்தை நாம் ஆழமாக உணர்ந்துக்கொண்டு, ஜெபம் பண்ணும்போதுதான் நாம் மன்னிக்கப்படுவோம் என்றவிதத்தில் தெய்வீக ஏற்பாடு காணப்படுகின்றது.

(5) "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் (சோதனையில் கைவிட்டுவிடாமல்) தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (மத்தேயு 6:13). நம்முடைய சொந்த பெலவீனங்களையும், பூரணமின்மையையும் நாம் உணர்கின்றோம். ஆகவே, தெய்வீக வழிநடத்துதலின்படி பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்குள் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை அறிந்துள்ள நாம், நம்முடைய சொந்த பலத்தினால், சோதனையில் போராடுவதற்கு விடப்படாமல், அவருடைய கிருபை நமக்கு போதுமானதாய் இருக்கின்றபடியால், அக்கிருபையை நமக்கு அருளும்படிக்கு நாம் ஜெபம்பண்ண வேண்டும்.

(6) பொல்லாங்கன் ஒருவன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு ஜனங்கள் மத்தியில் மிகுந்த வல்லமையும், செல்வாக்கும் இருக்கின்றது என்றும், அவன் இந்த யுகத்தில் தேவனாய்

இருக்கின்றான் என்றும், ஆகாயத்து அதிகாரப் பிரபுவாய் இருக்கின்றான் என்றும் வேதம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. ஆகவே, சாத்தானின் தந்திரங்களை எதிர்த்துப்போராடும் விஷயத்தில் நம்முடைய சொந்தபலத்தினால் போராடுவதற்கு நாம் கைவிட்டுவிடப்பட வேண்டாம் என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பிப்பது எத்துணைச் சரியானக் காரியமாக உள்ளது!

"இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" என்ற வார்த்தைகள், பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இல்லை. ஆகையால், Revised Version மொழியாக்கத்தில் இவ்வார்த்தைகள் தவிர்க்கப்பட்டுள்ளது. தற்காலத்தின் இராஜ்யமோ, ஆளுகையோ தேவனுடையதல்ல. அவருடைய இராஜ்யத்தையும், வல்லமையையும், மகிமையையும் தற்காலத்தில் பார்க்க முடியவில்லை. சாத்தானுடைய சாம்ராஜ்யம் தகர்க்கப்படுவதற்கும், எதிராளியானவன் ஆயிரவருஷம் அளவும் கட்டப்படுவதற்கும், மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட நாம் காத்திருக்கின்றோம். அப்போதுதான் தெய்வீக இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் காணப்படும்.

**ஆமென்!**

R 5047

# "இராஜ்யம் ஒரு பரிசு"
## மத்தேயு 13:44-53

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." - **மத்தேயு 6:33**

இப்பாடத்தில் மாபெரும் போதகர், தம்முடைய இராஜ்யம் தொடர்பாகக் கொடுக்கும் இன்னும் விலையேறப்பெற்ற படிப்பினைகளைக்குறித்து நாம் பார்க்கப் போகின்றோம். "நிலத்தில் புதைக்கப்பட்டப் பொக்கிஷம்" பற்றின உவமையும், "விலையுயர்ந்த முத்து" பற்றின உவமையும், உலகத்தின் ஆசீர்வாதத்திற்கென இறுதியில் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் மகிமையின் இராஜ்யத்தினுடைய மகா முக்கியத்துவத்தை நமக்குக் காட்டித் தருகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக, இந்த இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக எதை இழக்க வேண்டும் என்பது தொடர்பான படிப்பினைகளையும் இந்த உவமைகள் அளிக்கின்றன. மூன்றாவதாக ஓர் உவமை, கருநிலையிலுள்ள இராஜ்யத்தைக் குறித்துத் தெரிவிக்கின்றது; அதாவது, "கடலில் வீசப்படும் வலை" பற்றின உவமையானது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் (அ) இராஜ்யத்தின் வகுப்பாராகிய மணவாட்டி கண்டடையப்பட்டு, கர்த்தருடைய ஏற்பாட்டின்படிச் சேர்க்கப்படும் இந்தத் தற்கால யுகத்தின் நிலைமையைக் காட்டுகின்றது.

### "நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட பொக்கிஷம்"

இது இயேசுவால் விளக்கம் அளிக்கப்பட்ட உவமைகளில் ஒன்றல்ல. ஆகையால், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினாலும், இவ்வுவமையின் மீது மற்ற வேதவாக்கியங்கள் செலுத்தும் வெளிச்சத்தினாலும், கர்த்தருடைய ஜனங்கள் இவ்வுவமையின் அர்த்தத்தைக் கணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதற்குப் பல கோணங்களில் விளக்கம் கொடுக்கலாம் என்பது உண்மையே. உதாரணத்திற்கு, இந்த உவமையை நமது கர்த்தர் இயேசுவுக்குக்கூட பொருத்தி பார்த்துவிட்டு, இயேசு தம்முடைய எல்லாவற்றையும் விலையாகக் கொடுத்து முழு உலகத்தை வாங்கினார் என்றும், உலகத்தில் காணப்படும் "பொக்கிஷத்திற்காக" இயேசு உலகத்தை வாங்கினார் என்றும் கூறலாம். மேலும், அந்தப் பொக்கிஷமானது பல்வேறு மதிப்புள்ள பல்வேறு பொக்கிஷங்களாகும். உதாரணமாக, சபையாகிய மணவாட்டி வகுப்பார் கர்த்தருடைய விசேஷமான பொக்கிஷமாக இருக்கின்றனர், மற்றும் மேசியாவின் இராஜ்யத்தினால் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்படப் போகும் உலகத்தாருங்கூட ஒரு பொக்கிஷமாவார்கள்.

ஆனால், மாபெரும் போதகர் தம்மைக்குறித்து இந்த உவமையில் குறிப்பிடாமல் மாறாக, தாம் அறிவுரைக் கொடுத்தவர்களைப் பற்றியே குறிப்பிடுகின்றார் என்பது நமது எண்ணமாக இருக்கின்றது. கர்த்தர் தாம் பண்ணியிருந்த பலியின் உடன்படிக்கைக்கு உண்மையாய் இருந்தபடியால், அவருக்கு ஏற்கெனவே இராஜ்யம் வாக்களிக்கப்பட்டது. மேலும், கர்த்தர் இயேசுவோ பிதாவின் நாமத்தில் கேட்கும் செவியுடையவர்களையும், உணர்ந்துக்கொள்ளும் இருதயம் உடையவர்களையும் தம்முடைய மணவாட்டி வகுப்பாரில் அதாவது, தம்முடைய இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கங்களாகும்படிக்கு அழைக்கின்றார்.

இப்படியாக, அழைக்கப்படுபவர்கள் இந்த உவமையில் விவரிக்கப்பட்டுள்ளபடி இராஜ்யத்தைக் கண்ணோக்குகிறவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட நிலம், ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கப்படுவதற்கு உள்ளது என வைத்துக்கொள்ளுங்கள். மேலும், அந்த நிலத்தைக்குறித்து விசாரித்துப் பார்த்ததில், அந்த நிலத்தில் ஒரு மாபெரும் பொக்கிஷம் இருக்கின்றது என நீங்கள் காண்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பொக்கிஷம் ஒருவேளை உங்கள் நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமாய் இருக்கும், மிகச் சிறந்த மண் வளமாக இருக்கலாம் அல்லது ஏதோ விலையேறப்பெற்ற உலோகங்கள் அந்த நிலத்திற்குள் காணப்படலாம் அல்லது பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக, பணம் அந்நிலத்தில் புதைத்து, பின்னர் மறந்துப் போகப்பட்டதாகவும் இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் சராசரி அறிவுள்ள எவரும் இந்நிலத்தைப் பெற்றிட தன்னிடத்திலுள்ள அனைத்தையும் முதலீடு பண்ணுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள் என்ற கருத்தை இந்த உவமை முன்வைக்கின்றது.

ஆகவே, அன்று கர்த்தர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும், இன்று அதே அவருடைய வார்த்தைகள் வரும்போது, அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் நமக்கும், ஆண்டவர் ஒரு மாபெரும் பொக்கிஷம் அதாவது, மிகுந்த பிரயாசத்தினாலும், முக்கியத்துவம் வாய்ந்தது எனச் சொல்லப்படும் யாவையும் முதலீடு செய்வதினாலும் மாத்திரமே அடைய முடிகின்ற ஒரு விலையேறப்பெற்ற பொக்கிஷம் குறித்த தகவலை வைத்திருக்கின்றார் எனக் கூறுகின்றார். மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைவது அதாவது, சீஷத்துவத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் தேவனுடைய புத்திரர்களாக மாத்திரம் இல்லாமல், புத்திரர்களானால் தேவனுடைய சுதந்தரர்களாகவும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் அவருடைய பரலோக சுதந்தரத்தில் உடன் சுதந்தரர்களாயும் இருப்பதே அந்த மாபெரும் பொக்கிஷமாகும். இந்தச் சுதந்தரம் ஆபிரகாமின் சந்ததியாருக்கு வாக்களிக்கப்பட்டிருந்த அதே விஷயங்களே; மேலும் நாம் சொல்லர்த்தமாக/உண்மையாக (சுபாவத்தின்படி) ஆபிரகாமின் சந்ததியாகவும், இராஜ்யத்தின் உண்மையான சுதந்தரர்களாகவும் இருந்தபடியினால் இல்லாமல், மேசியாவின் மணவாட்டியாகவும், உடன் சுதந்தரர்களாகவும் நாம் மாறினபடியினாலே அந்தச் சுதந்தரத்தில் நமக்கும் பங்குக் கிடைத்தது.

சில சிறு விஷயங்களுக்காக, முக்கியத்துமற்ற உலகப் பிரகாரமான புகழ்ச்சிக்குரிய, பூமிக்குரிய கனத்தை அடைவதற்காக எவ்வளவு நேரமும், பெலனும் பிரயோகிக்கப்படுகின்றது என்பதையும், எவ்வளவு பணமும், செல்வாக்கும் செலவழிக்கப்படுகின்றது என்பதையும் நாம் எண்ணிப் பார்ப்போமானால் மற்றும், இவைகள் அதிகபட்சமாக சில வருடங்கள் மாத்திரமே நீடிக்கின்றது என்பதையும், முழுத் திருப்தியை அளிக்காதது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், "அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு மற்றும் உண்மையுள்ளவர்களாகிய" மணவாட்டியாகிய, ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்காக தேவன் வைத்துள்ள மகிமை, கனம் மற்றும் அழியாமையைக்குறித்து நம்மால் நன்கு உணர்ந்துக்கொள்ள முடியும்.

## "மகா மதிப்புள்ள முத்து"

நம்முடைய இரட்சகருடைய நாட்களில், மிகவும் விலையேறப்பெற்ற மற்றும் மிகவும் விரும்பத்தக்க சம்பத்துகளில் ஒன்று முத்தாகக் காணப்பட்டது; மேலும் எந்தளவுக்கு முத்துப் பெரியதாகவும், கிட்டத்தட்ட பூரணம் உடையதாகவும் இருக்கின்றதோ, அந்தளவுக்கு முத்தினுடைய மதிப்பும் அதிகமாகக் காணப்படும். இந்தப் பிரபலமாய் இருந்த முத்தை, இராஜ்யத்தின் முக்கியத்துவம் தொடர்பான பாடத்திற்காக மாபெரும் போதகர் பயன்படுத்துகின்றார். இவ்வுவமையில் வரும் வியாபாரி, மற்ற அனைத்து முத்துக்களுக்கும் எல்லாவிதத்திலும் மிகவும் மேலான ஒரு முத்தைக் கண்டுபிடித்தபடியினால் இந்த முத்தை அடைவதற்கென, தான் கொடுக்கும் தன்னிடத்திலுள்ள யாவும் அற்பமானது என்று கருதினார்.

இதுவே தெரிந்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களாகிய சிறுமந்தையினர் தம்மோடு கூட பங்கடையும்படி தாம் அழைக்கும் இராஜ்யம் மற்றும் அதன் மகிமை, கனம் மற்றும் அழியாமையின் முக்கியத்துவம் என ஆண்டவர் கூறுகின்றார். யார் இதன் மதிப்பைச் சரியாகக் கணிக்கின்றார்களோ, அவர்கள் இதற்கான விலையை அளிப்பதிலுள்ள தங்களுடைய விருப்பம் மற்றும் மகிழ்ச்சியின் அளவின் மூலம் தங்களின் உணர்ந்துக்கொள்ளுதலை வெளிக்காட்டுகின்றவர்களாக இருப்பார்கள். ஒரு மனிதன் பணக்காரனாகவோ (அ) ஏழையாகவோ, படித்தவனாகவோ (அ) கல்வியறிவு இல்லாதவனாகவோ, செல்வாக்கு உள்ளவனாகவோ (அ) அற்றவனாகவோ இருந்தாலும் சரி மிகவும் விலையேறப்பெற்ற முத்தாகிய இந்த இராஜ்யத்தின் விலையானது, அவனிடத்திலுள்ள அனைத்தையும் கேட்கின்றதாய் இருக்கும். இதைவிட குறைவான விலைக்குக் கிடைக்காது.

உலகத்தில் ஐசுவரியவானோ (அ) மிகவும் திறமை உள்ளவனோ, ஒருவேளை அவன் தன்னுடைய உடமைகளில் ஒரு சிறியதை, தனக்கென வைத்துக்கொள்வானானால், அவனால் அந்த இராஜ்யத்தில் பங்கடைய முடியாது. இராஜ்யத்திற்கான விலை என்பது, மரணம் வரையிலான சுயத்தைப் பலிச் செலுத்துதல் ஆகும். இதை விட குறைவான எதுவும் இராஜ்யத்தைப் பெற்றுத்தராது. அதேசமயம் நமது மீட்பரால் கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட பலியினுடைய விலையேறப்பெற்ற புண்ணியத்தின் மூலம், நமது பலியானது முதலாவதாக தேவனுடைய பார்வையில்

அங்கீகரிக்கப்படாதது வரையிலும், நாம் ஏறெடுக்கும் எந்தப் பலியும் இந்த இராஜ்யத்தில் நமக்குப் பங்கைப் பெற்றுத்தராது.

## "மீன் வலை பற்றின உவமை"

இராஜ்யம், வலையைப் போன்று இருக்கும் என நாம் எண்ணக்கூடாது. மாறாக, கரு நிலையிலுள்ள இராஜ்யமே, சகலவிதமான மீன்களையும் வாரிக் கொள்ளப்பட்டு, கரைக்குக் கொண்டு வரப்பட்டு, பிரித்தெடுக்கப்படும் வலையுடனான மீன் பிடிக்கும் அனுபவத்திற்கே ஒத்தது என நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இது கரு நிலையிலுள்ள இராஜ்யம் பற்றின உவமையாகும். ஏனெனில், மகிமையிலுள்ள இராஜ்யத்திற்குரியவர்களாக இருக்கப்போகின்ற "சிறுமந்தையினர்" கண்டுபிடிக்கப்படுவது தொடர்பான, இந்த யுகத்தில் நடைபெறும் வேலையை விவரிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் இந்த யுகத்தில் சகலவிதமான மீன்களுக்காக, மீன்பிடிக்கவில்லை; அவர் சகல ஜனங்களையும் நாடித் தேடவில்லை. அவர் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை மாத்திரமே, பரிசுத்தவான்களை மாத்திரமே கையாளுகின்றார், அழைக்கின்றார் மற்றும் விசேஷமாக தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கின்றார்.

ஆனால், தற்செயலாகப் பல்வேறுவிதமான மீன்களும், சுவிசேஷத்தின் வலைக்குள் வந்துவிட்டன. சிலர் உலகப்பிரகாரமான பேராசைகளினாலும், சிலர் மத அமைப்புகளைத் திருமணம் புரிவதற்கான நல்ல களம் எனக் கருதினதாலும், சிலர் சமுதாயச் சிலாக்கியங்களையும், புகழையும் கருதினதாலும், சிலர் ஒழுக்கமாக வாழ விரும்புவதினாலும், சிலர் தொழிலுக்கென மதம் எனும் போர்வையைப் போர்த்திக்கொள்ள விரும்பியதினாலும், இவ்வலைக்குள் வந்துள்ளனர். ஆனால், கர்த்தர் தேடுகிறதும், இராஜ்யத்தின் அங்கங்களாக இருப்பதுமாகிய பொருத்தமான மீன் என்பது அவருடைய செய்தியை மகிழ்ச்சியுடன் கேட்டு, விலையைக்குறித்து சிந்தித்து, சூழ்நிலையை உணர்ந்தவர்களாக, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அடிமை வேலைக்காரர்களாக" ஆகுவதற்கு விரும்புபவர்களைக் குறிக்கின்றது. இவர்கள் அவரோடு கூட சேர்ந்து அவருடைய இராஜ்யத்தில் மகிமையடையத்தக்கதாக, இப்பொழுது அவரோடு கூட பாடுப்பட விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

"வலை நிறைந்தபோது, அது கரையில் இழுக்கப்பட்டு," மீன்கள் பிரிக்கப்பட்டன என்று உவமை நமக்குக் கூறுகின்றது. இது கர்த்தர் தம்முடைய நோக்கத்திற்காக போதுமான எண்ணிக்கையில் பரிசுத்தவான்களைச் சேர்த்திருக்கும் ஒரு காலம், அதாவது, மகிமையிலுள்ள தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் அங்கங்களாக இருக்க வேண்டுமென பிதாவின் முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடையும் ஒரு காலம், இந்த யுகத்தின் முடிவில் வரும் என்பதைத் தெரிவிக்கின்றது என்பது உறுதியே. அப்பொழுது மீன் பிடித்தல் முடிவு பெறும். கர்த்தர் நாடிக் கொண்டிருக்கின்ற உண்மையான "மீன்" வகையில் ஒருவராக, "வலைக்குள்" பிரவேசிப்பதற்கான வாய்ப்பு நிறைவடையும் நிலையில் இல்லை என யாரால் சொல்ல முடியும்? பலவகையான கிறிஸ்தவர்களால் நிரம்பியுள்ள சுவிசேஷத்தின் வலையானது, தகுதியான மாணவர்களை இராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொள்ளத்தக்கதாக, சீக்கிரத்தில் வலை கரைக்கு இழுக்கப்படாது என்று யாரால் சொல்லக் கூடும்?

இந்த உவமையில் இடம்பெறும் தகுதியற்ற "மீனானது" நாம் முந்தின பாடத்தில் பார்த்திட்ட "களைகளுக்கு" ஒத்ததாகும். "அக்கினி சூளை" என்பது சீக்கிரத்தில் மனுக்குலத்தின் உலகத்தின் மீது வரவிருக்கும் "மகா உபத்திரவக் காலத்தையே" குறிக்கின்றது. வலையில் காணப்படும் தகுதியற்ற மீன்கள் அனைத்தும் (பெயர்) சபை அங்கத்தினர்கள் ஆவார்கள். உலகத்தார் இவ்வுவமையில் குறிப்பிடப்படவே இல்லை.

"பின்பு, இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்துக்கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்துக்கொண்டோம் ஆண்டவரே, என்றார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும், பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்." (மத்தேயு 13:51-52)

நமது பாடத்தின் ஆதார வசனம், இந்தப் பாடத்திற்கு முக்கியத்துவம் சேர்க்கின்றது. ஆண்டவர் சுட்டிக்காட்டுகிற பிரகாரமாக ஒருவேளை இராஜ்யமே முத்தாகவும், பொக்கிஷமாகவும் இருக்குமானால், ஒருவேளை நாம் அவருடைய சாட்சியை நம்புவோமானால், அப்பொழுது நம்மால் முடிந்தமட்டும் நமது விசுவாசத்தைக் காட்டுவோமாக, அதுவும் வெறும் அறிக்கையாயிராமல் மாறாக, ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும் காட்டுவோமாக. இராஜ்யத்தையே நமது ஜீவியத்தில் பிரதானமான விஷயமாக நாம் நாடுவோமாக. இதனோடு ஒப்பிடுகையில், மற்ற அனைத்தும் பரிசுத்தவானாகிய பவுல் "ஒப்பிடத்தக்கவைகள்" அல்ல என்று கூறுவது போல், அற்பமானதாகக் கருதுவோமாக. ஒருவேளை இராஜ்யத்தை நாடும் விஷயமானது, நமது சில பூமிக்குரிய காரியங்களுக்குத் தடையாக இருக்குமானால், அது மிகவும் நல்லதே. நம்முடைய அனைத்தையும் இழக்க வேண்டியுள்ளது என்று ஆண்டவர் கூறியுள்ளார். நமது பூமிக்குரிய தேவைகளை நாம் அவருடைய கரங்களில் விட்டிருக்கின்றோம். இராஜ்யத்தில் நாம் இடம் பெறத்தக்கதாக, நமது "அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும்" நாம் உறுதிப்படுத்திக்கொள்ளத்தக்கதாக நமக்கு மிகவும் உதவியாக இருக்கும் என அவருடைய ஞானத்தில் அவர் காண்பதற்கு ஏதுவான பூமிக்குரிய ஆசீர்வாதங்களை அவரே பங்கிட்டுக் கொடுப்பாராக.

**ஆமென்!**

---

# புளித்தமா பற்றின உவமை

## மத்தேயு 13:33

வேதவாக்கியங்கள் எங்கும் புளிப்பு என்ற வார்த்தையானது, பாவத்திற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவேதான் தூய்மையுள்ள இயேசு "வானத்திலிருந்து இறங்கின அப்பம்" என்று அடையாளப்படுத்தப்படத்தக்கதாக, யூதர்கள் புளிப்பில்லாத அப்பத்தினைப் பயன்படுத்திடுவதற்குக் கட்டளையிடப்பட்டனர். மீண்டுமாக அவர்களது வருடாந்தர பஸ்கா காலத்தின்போதும், யூதர்கள் தங்கள் வீடுகளிலிருந்து புளிப்பை அப்புறப்படுத்தி, அதைச் சுட்டெரித்து, அழித்துப்போடும்படிக்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். இங்கும் மீண்டுமாக புளிப்பு என்பது பாவத்திற்கு, சீர்க்கேட்டிற்கு அடையாளமாய் இருக்கின்றது. இதைக் குறித்துப் பரிசுத்த பவுல் அடிகளார் சபைக்கு எழுதுவதாவது: "எனவே புளிப்புச் சத்துள்ள பழைய மாவைத் (பாவம், பகைமை, விரோதம், துர்க்குணம் முதலானவைகளை) தூக்கி எறிந்துவிடுங்கள். அப்போது நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருப்பீர்கள்" - அதாவது கிறிஸ்துவோடுகூட ஒரே புளிப்பற்ற அப்பத்திலுள்ளவர்களாய் இருப்பீர்கள் என்பதாகும். இந்த அப்பத்தைக் குறித்தே அவர் "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" என்று குறிப்பிடுகின்றார். (1 கொரிந்தியர் 5:7 திருவிவிலியம்; 1 கொரிந்தியர் 10:17)

ஒரு குறிப்பிட்ட பலியில் அப்பமானது, புளித்த மாவுள்ளதாகச் சுடப்பட வேண்டும் என்பது உண்மைதான்; எனினும் இது சபையாகிய நம்மையும் மற்றும் நாம் சுபாவத்தின்படி பாவிகளாகவும், மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாகக் காணப்பட்டோம் என்ற உண்மையையும், சுடும்போது, புளிப்பினுடைய கெடுக்கும் தன்மையானது நிறுத்தப்படுகின்றது என்பதையும் அடையாளப்படுத்துவதற்கேயாகும் என்று நாம் நம்புகின்றோம்; இந்தச் சுடுதலானது, நமக்குள் பாவமான மற்றும் சீர்க்கேடான தன்மைகள் முற்றிலுமாய் அழிக்கப்படத்தக்கதாக, சபையானது கடந்துபோக வேண்டிய அனுபவங்களை அடையாளமான விதத்தில் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த உவமையில் ஒரு ஸ்திரீ குடும்பத்திற்கான உணவு/மாவில் புளித்த மாவைக் கலப்பதாகவும் மற்றும் இதன் காரணமாக மாவு முழுவதும் புளிப்பேறினதாகவும் கர்த்தர் குறிப்பிடுகின்றார். இதன் காரணமாகக் குடும்பத்தில் எவரேனும் சுத்த மற்றும் புளிப்பற்ற அப்பத்தை விரும்பினாலும், பெற்றுக்கொள்ள முடியாது; காரணம் புளிப்பு முழுவதும் பரவிவிட்டது. இது எதனை அடையாளப்படுத்துகின்றது? வேதவாக்கிய அடையாளங்களினுடைய விஷயத்தில் ஸ்திரீ மத அமைப்புக்கு அடையாளமாய் இருக்கின்றாள். உவமையில் இடம்பெறும் ஸ்திரீயானவள், ஆரம்பக்காலத்தில் அதிகாரமுடைய மற்றும் சுத்த அப்பத்தை அதாவது கர்த்தரினால் விசுவாச வீட்டாருக்கு அளிக்கப்பட்டதான தூய அப்பத்தைப் பெற்றிருந்த ஓர் அமைப்பை அடையாளப்படுத்துகின்றாள்.

ஸ்திரீ உணவனைத்துடன், புளிப்பை, தப்பறையை, போலி உபதேசத்தினைக் கலந்துவிட்டாள். புளிப்பேற்றப்படாமல் எதுவும் விடப்படவில்லை. விளைவு அஜீரணமாகும். தூய்மையானதான தேவவார்த்தையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை. புளிப்பானது பரவியுள்ளபடியால், இன்றைக்கு இறையியல் உபதேசங்கள் அனைத்தும், அனைத்துச் சபைப் பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்தவ ஜனங்கள் அனைவருக்கும் வெறுப்பிற்குரியதாகவும், கேடானதாகவும் காணப்படுகின்றது.

நடந்திருப்பவைகளுக்குத் தீர்க்கத்தரிசனமாக இவ்வுவமை காணப்படுகின்றது. உண்மையான கிறிஸ்தவர்கள் அனைவரும் இருண்ட யுகத்தினுடைய விசுவாசப்பிரமாணங்களினின்று, இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளினுடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க திரும்பும் காலம் வந்துள்ளது. வேதாகமத்தின் போதனைகளே, கலப்படமற்ற தேவவார்த்தை என்றும், அதுமாத்திரமே "நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கும்" என்றும், அதுமாத்திரமே "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி" செய்யும் என்றும் மீண்டுமாகச் சுட்டிக்காட்டுபவர்களில் முதன்மையானவராக, புனித போப் அவர்கள் இடம் பெறுவதைக் கண்டு நாம் மகிழ்கின்றோம். (2 தீமோத்தேயு 3:15-17)

*****

# கிறிஸ்துவினுடைய பலி

யோர்தானில் நமது கர்த்தர், மரணபரியந்தம் தம்மை அர்ப்பணம் பண்ணினார். அதாவது அவர் ஞானஸ்நானம், முழுகுதல் பெற்றுக்கொண்டார். அவர்: "இதுமுதற்கொண்டு நான் என் சித்தம் செய்வதில்லை. பிதாவே உம்முடைய சித்தம் எதுவோ, அதுவே என்னுடைய சித்தமாக இருக்கும். நான் செய்யும்படிக்கு நீர் விரும்பும் எதையும் நான் செய்திடுவேன் - திவ்விய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், செய்யும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகிறவைகளைச் செய்யத் தவறுவது பாவமாய் இருக்கும் என்பதினால், அக்காரியங்களைச் செய்வது மாத்திரமல்லாமல், புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் நான் செய்திடுவேன். நான் என் ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டேன். நான் உமது சித்தத்தைக் கண்டுகொள்ளவும், அதைச் செய்யவும்தக்கதாக நீர் உம்முடைய வழிநடத்துதல்கள் மற்றும் உம்முடைய வார்த்தைகள் வாயிலாக என்னை நடத்தியருளும்" என்றார். இது அவர் ஏதோ உலகத்திடம் (உலகத்தின் கைகளில்) ஜீவனைக்கொடுத்துவிடுகிற காரியமாய் இருக்கவில்லை; ஏனெனில் அவர் தம்மையே தேவனுக்குக் கொடுக்கின்றவராய்க் காணப்படுகின்றார். அவர் மரணத்தைச் சந்திப்பதற்கும் மற்றும் தம் ஜீவனைக் கொடுப்பதும்தான் பிதாவின் சித்தமாக இருக்கும் பட்சத்தில் ஜீவனைக்கொடுத்துவிடுவதற்கும் அவர் தேவனுக்குத் தம்மை அர்ப்பணம் பண்ணினபோது, ஆயத்தமாகவே காணப்பட்டார். சங்கீதம் 40:7, 8; எபிரெயர் 10:7.

அவரது அர்ப்பணத்தைத் தொடர்ந்து, அவர் தமது ஊழியத்தினைத் துவங்கினார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தில் அவர் மேன்மேலும் முன்னேறுகையில், அவர் புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருந்த அனைத்திற்கும் தம்மை ஒப்புக்கொடுத்தவரானார். அவரது இருதயத்தின் வார்த்தைகளானது: "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (எபிரெயர் 10:7) மற்றும் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்த விஷயத்தில், பின்வருமாறு லூக்கா 6:18-19 - ஆம் வசனத்தில் - "அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியாலே, பாலஸ்தீனியா மற்றும் சுற்றிலும் உள்ள திரளான ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" என்று சொல்லப்படுமளவுக்கு அவர் தமது ஆற்றலையும், பலத்தையும் கொடுத்தவரானார். அவர் தமது பெலனைத் திரும்பவும் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக, எதையும் தமக்கென்று அவர் வைத்துக்கொள்ளவில்லை, மாறாக பிதாவின் சித்தம் இன்னது என்று தாம் புரிந்திருப்பவைகளுக்குக் கீழ்ப்படிகிறதில், தமது ஜீவனைத் தினந்தோறும் கொடுத்துவந்தவராய்க் காணப்பட்டார்; ஆகையால் தேவனுக்குப் பிரியமானவைகளை அவர் செய்துகொண்டிருந்தார் - அதாவது அவர் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்பினவைகள் யாவற்றையும், நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கின்றவற்றையும்கூட அவர் செய்து கொண்டு வந்தவராய் இருந்தார்.

## முடிந்தது

சிலுவையில் நமது கர்த்தர் "முடிந்தது!" என்று சத்தமிட்டுக் கூறினார். அவர் "தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றிவிட்டார்;" அவர் "தம்முடைய ஆத்துமாவைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்துவிட்டார்" (யோவான் 19:30; ஏசாயா 53:12, 10); பிதாவின் ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், தம்முடைய ஜீவன் தம்மிடமிருந்து எடுக்கப்படுவதற்கு அவர் அனுமதித்தார். இக்காரியங்கள் அனைத்தும், நிழலில் முன்னரே சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட மாதத்தில், பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும். நியாயப்பிரமாணத்தில் - நேரடியான கட்டளையாகவோ அல்லது நிழலாகவோ காணப்படுபவைகளில் அடங்கும் அனைத்தும் தேவனுடைய சித்தமாக இருக்கின்றது என்று நமது கர்த்தர் அடையாளம் கண்டுகொண்டார். ஏதோ தமக்கு விருப்பமற்றிருக்கும் காரியங்களை மனுஷர்கள் தமக்கு நடப்பித்ததுபோன்று, மனுஷர்கள் தம்மிடமிருந்து, தம்முடைய ஜீவனை எடுத்துக்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40:8) என்று அவர் உண்மையாகவே சொல்லியிருந்தார் மற்றும் அவர் தேவனுடைய சித்தத்திற்கு -1794--

தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்திருந்தபடியால், அவர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு அவர் அவர்களை அனுமதித்தார்.

தம்முடைய ஜீவனானது அநீதியான விதத்தில் எடுக்கப்படுகின்றது என்று நமது கர்த்தர் உணர்ந்துகொண்டார். அவர் எதிர்க்கவில்லை; மாறாக இது நடைபெறும்படிக்கு அனுமதித்தார். தாம் எதிர்த்துப் போராடுவதில்லை என்றும், எவற்றையெல்லாம் தாம் நிறைவேற்றும்படிக்குப் பிதாவால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தாரோ, அவற்றையெல்லாம் தாம் செய்வார் என்றும் அவர் ஒப்பந்தம் பண்ணியிருந்தார். அவர் ஒருதரம் அர்ப்பணம் பண்ணின பிற்பாடு, அதிலிருந்து அவரால் பின்வாங்கிடக்கூடுமோ? இல்லை; ஏனெனில் பிதாவின் சித்தமெனத் தெய்வீக வழிநடத்துதலானது சுட்டிக்காட்டிடும் எதற்கும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்திட, அவர் உடன்படிக்கைப் பண்ணியிருக்கின்றார். அவர் ஓர் உறுதியான ஒப்பந்தத்திற்குள் பிரவேசித்திருக்கின்றார் மற்றும் இதன் கீழ் அவர் தேவனுடைய சித்தத்திற்கு உண்மையாய்க் காணப்படும்படிக்குத் தம்மைக் கடமைக்குட்படுத்தியிருக்கின்றார் மற்றும் இந்த உண்மையுள்ள கீழ்ப்படிதலின் காரணமாக, திவ்விய சுபாவத்திற்கு உயர்த்திடும் மகா மேன்மையான மகா பலனை நமது கர்த்தருக்குத் தேவன் கொடுப்பாரென, தேவனும் தம்மைக் கடமைக்குட்படுத்தியிருக்கின்றார். அந்த ஒப்பந்தத்திற்கான வாக்குறுதியெனப் பரிசுத்த ஆவியினைத் தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார்.

## மனுஷீக ஜீவ- உரிமைகள் நமது கர்த்தருக்குச் சொந்தமானவை

ஒன்றைக்கொடுத்து இன்னொன்றை மாற்றிக்கொள்வது (exchange) என்பதற்கும் மற்றும் வெகுமானம் அருளுதல் (reward) என்பதற்கும் இடையே மிகுந்த வித்தியாசம் காணப்படுகின்றது. Exchange என்பது சம மதிப்புள்ள ஏதோ ஒன்றிற்காக, சம மதிப்புள்ள ஏதோ ஒன்றை விட்டுக்கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. Reward என்பது தகுதியின் பொருட்டு ஏதோ ஒன்று அருளப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அருளும் விஷயத்தில் Reward என்ற வார்த்தையானது எந்தக் கடமையையும் சுட்டிக்காட்டுகிறதில்லை. வெகுமானம்/reward அருளுபவர், தனது சுயாதீனத்தின்படி முற்றிலும் செயல்படுபவராய் இருப்பார்.

பிதாவிற்கும், நமது கர்த்தருக்கும் இடையிலாகப் பண்ணப்பட்ட ஏற்பாட்டில், பூமிக்குரிய ஜீவனுக்கான நமது கர்த்தருடைய உரிமையானது சம்பந்தப்படுகிறதில்லை; ஏனெனில் மனிதனாக அவருக்கு இருக்கும் ஜீவனுக்கு மாற்றாக (exchange), ஜீவனுக்கான உயர் தளத்தில், அவருக்கு ஜீவன் கொடுப்பதாகப் பிதா ஒப்பந்தம் பண்ணிடவில்லை. ஒருவேளை இப்படியாகத்தான் காரியம் இருந்திருக்குமானால், மனுஷ ஜாதியில் எவருக்கேனும் - சபைக்கோ அல்லது மனுக்குலத்தின் உலகத்திற்கோ - கொடுத்திடுவதற்கு அவர் எதையும் பெற்றிராதவராய் இருந்திருப்பார்.

மாறாக தமது குமாரனுடைய மரணபரியந்தமான கீழ்ப்படிதலுக்காய், தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும் மற்றும் அதிகாரங்களுக்கும் மேலாக அவரை உயர்த்துவதன் வாயிலாக, நமது கர்த்தருக்குப் பிதா பலனளிக்கவிருந்தார். பூமிக்குரிய ஜீவ-உரிமைகளானது, இன்னமும் நமது கர்த்தருக்கு உரியவையே. அவர் மனுஷீக ஜீவனை மனுக்குலத்திற்குக் கொடுக்கப்போகின்றார் என்ற உண்மையானது, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை அவர் பெற்றிருக்கின்றார் என்பதற்குச் சான்றுபகர்கின்றது.

நமது கர்த்தர் இயேசு வெறுமனே தம்முடைய ஜீவனை ஒப்படைத்துவிட ஒப்புக்கொண்டார் என்று நாம் புரிந்துகொள்கிறதில்லை. யேகோவா தேவன் மீதான அவரது அன்பும், யேகோவா தேவனிடத்திலான அவரது நம்பிக்கையும் மிகவும் அதிகமாய் இருந்தபடியால், மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்கான பிதாவின் திட்டத்தை நடந்தேற்றுவதில், தாம் என்ன விலை கொடுக்க வேண்டியிருப்பினும், அத்திட்டத்தை நடந்தேற்றுவதில் அவர் ஆவலாய் இருந்தார். அர்ப்பணிப்பின்போது அவரது நிலைப்பாட்டினை, "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்" என்ற வேதவாக்கிய வார்த்தைகளானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த வலியுறுத்தலானது, எந்தமட்டிலுமான தேவசித்தத்தை உள்ளடக்கினது? "புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிற" ......புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருக்கும் அனைத்தையும் செய்யும்படிக்கு நான் ஆயத்தமாய் வருகிறேன் என்றார். தேவனுடைய பிரமாணத்தினைத் தம்முடைய இருதயத்தில் எழுதப்பெற்றவராக மாத்திரம் அவர் வராமல், இன்னுமாகப் புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் செய்யும்படிக்கு அவர் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார்.

--1795--

புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டவைகளை இயேசுவினால் எப்படி அறிந்துகொள்ள முடியும்? அவர் தம்மை அர்ப்பணம் பண்ணின தருணத்தின்போது, புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கவில்லை என்று நாம் தாராளமாய் நம்பலாம். புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள், பழைய ஏற்பாட்டினுடைய நிழல்களிலும், அடையாளங்களிலும் எழுதப்பட்டிருப்பவைகள், யூதர்களால் மாத்திரமே புரிந்துகொள்ளப்பட்டவையாகும். இவைகளில் அநேகவற்றை, சந்தேகத்திற்கிடமின்றி நமது கர்த்தர் தம்முடைய ஞானஸ்நானத்திற்கு முன்பு முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிழல்களில், தேவனுடைய சித்தமானது தெரிவிக்கப்பட்டுள்ளது. "புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும்" என்று நமது கர்த்தர் கூறியிருக்கின்றார். ஆனால் அத்தருணத்தின்போது, எவ்வளவு காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்று அவர் அறிந்திருந்தார் என யாரால் சொல்லக்கூடும்? அவரது ஞானஸ்நானத்திற்கு முன்புவரை - அதாவது ஞானஸ்நானத்தின்போது, மேலான காரியங்கள் அவருக்குத் திறக்கப்பட்டு, அவருக்குத் தெரியப்படுத்தப்படுவதற்கு முன்புவரை - அவர் அறியாதவராய் இருந்தார்; இந்தப் பிரகாசிப்பித்தலைத் தொடர்ந்து, அவர் கற்றுக்கொள்வதற்கும், அவைகளைத் தியானிப்பதற்கும் வேண்டி வனாந்தரத்திற்குப் போனார்.

## தேவனுடைய சித்தத்திற்குத் தவிர மற்றப்படி அனைத்திற்கும் மரித்திருந்தார்

தம்மைக்குறித்துப் புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள் அனைத்தையும் குறித்து இயேசு தம்முடைய அர்ப்பணிப்பிற்கு முன்னதாக அறியவில்லை என்றபோதிலும், அவரது அர்ப்பணம் முழுமையானதாகவே காணப்பட்டது. தேவனுடைய சித்தத்தைச் செய்யத்தக்கதாக, அவர் தமது முழு ஜீவியத்தையும் சமர்ப்பித்திருந்தார். அவரது சொந்த சித்தமானது மரித்துப்போயிருந்தது. பிற்பாடு, ஒரு குற்றவாளியெனத் தாம் உண்மையில் மரிப்பதையும் தமது உடன்படிக்கையானது குறிக்கின்றது என்று உணர்ந்துகொண்டார்.

இயேசுவின் மனுஷீக ஜீவ-உரிமைகளானது, மரணத்தில் இழக்கப்படவில்லை என்ற உண்மையின் காரணமாக அல்லது "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக" அவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையின் காரணமாக, அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அவர் மனுஷீக ஜீவ-உரிமைகளைப் பெற்றிருந்தாரா? என்று கேள்வி கேட்கப்படுகின்றது. (எபிரெயர் 1:2).

இதுவும் மற்ற அநேகம் பாடப்பொருள்களைப்போன்று, வெவ்வேறு சிந்தனைகள் மற்றும் கருத்துகள் கொடுக்கப்படுவதற்கு ஏதுவானவையாகும். மனுஷீக ஜீவனுக்கான மற்றும் சகல பூமிக்குரிய காரியங்களுக்கான உரிமையினை நமது கர்த்தர் உடையவராய்க் காணப்பட்டார். இந்த ஜீவன் மற்றும் அதன் சகல ஆசீர்வாதங்களுக்கான இந்த உரிமையினை, ஆதாம் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோயிருந்தார்; ஆனால் கீழ்ப்படிதலின் காரணமாக இயேசு அதைப் பாதுகாத்துக்கொண்டார் மற்றும் இழந்துபோகும் அபாயம் முற்றிலும் அற்ற நிலையில் அதை வைத்திருந்தார். ஆகையால் ஒருவேளை யாரேனும் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக, அவரது உரிமைகளிடமிருந்து அவரை அறுப்புண்டுபோகப் பண்ணினாலும், இந்த அறுப்புண்டுபோகப் பண்ணுதலானது, அவருக்கு இருந்த உரிமைகள் எதையும் இழந்துபோய்விடச் செய்யவில்லை.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சட்டப்பூர்வமாக நமது கர்த்தரிடமிருந்து அவரது ஜீவ-உரிமைகளை எப்படி ஒருவரால் பறிமுதல் செய்திட முடியும் என்று எங்களால் காணமுடியவில்லை. எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, விழுந்துபோன மனுஷர்கள் அடங்கின மதவெறி கொண்ட ஒரு கூட்டத்தாரினால் இயேசுவானவர், அவரது ஜீவனிடமிருந்தும், அது சம்பந்தப்பட்ட உரிமைகள் அனைத்திடமிருந்தும் துண்டிக்கப்பட்டார்; ஆனால் அவர்களது செயல்பாடுகளானது, அவருக்குத் தேவனுடைய நியாயப்பிரமாணமானது அருளின எந்த உரிமைகளையும் அழித்துப்போட முடியவில்லை. ஆகையால், தேவன் அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழப்பண்ணி, மேலான சுபாவத்தையும், அது தொடர்புடைய அருமையான குறிப்பிட்ட ஆசீர்வாதங்களையும் அவருக்கு வெகுமானமாக அருளின போது, இந்த உயர்த்தப்படுதலானது, அவருக்குத் தேவனுடைய நியாயப்பிரமாணம் கொடுத்திட்டதும், அவரால் இழந்து போகப்படாததும் அல்லது பறிக்கொடுக்கப்படாததுமான அந்த உரிமைகள் விஷயத்தில் தலையிடுகிறதில்லை. அவருக்குச் சொந்தமான ஜீவனை அவரிடமிருந்து எடுக்கத்தக்கதாக அவர் மனுஷர்களுக்கு அனுமதி மாத்திரம் வழங்கினார். இப்படியாக அவருடையதாகக் காணப்படும் அவருடைய உரிமைகளிடமிருந்து அவர் பிரிக்கப்பட்டார். --1796--

## எப்படி நமது கர்த்தர் மனுக்குலத்தின் தந்தையானார்?

இப்படியாக நமது கர்த்தர் அந்த உரிமைகளை இழந்துபோகாதவராகவும், அதைப் பறிக்கொடுக்காதவராகவும் காணப்படுவதினால், மரணம் வரையிலுமான இவரது கீழ்ப்படிதலின் காரணமாக, இவரைத் தேவன் உயர்வாய் உயர்த்தினபோது, அப்போது அவர் சொந்தமாய்ப் பெற்றிருந்தவைகள் மத்தியில், மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையும் அடங்கியிருந்தது. பிதா அவருக்கு மற்றவையெல்லாம் அருளியிருந்தபோதிலும், அந்த உரிமை அவருக்கு இன்னமும் சொந்தமானதேயாகும். மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் சொத்தாக - அதாவது ஏதோ பெற்றுக்கொண்ட அன்பளிப்பாக இல்லாமல், சட்டப்பூர்வமாகத் தம்முடையதாக வைத்திருப்பதின் காரணமாகவே, அவர் "ஜீவனளிப்பவராக" கூறப்படுகின்றார்.

ஆயிரவருட யுகத்தின்போது, திவ்விய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக, நமது கர்த்தர் மனுக்குலத்திற்குப் பூரண மனுஷீக சுபாவத்திற்கு நேரான திரும்புதலை அருளுவார். இதைச் செய்கையில், பிதா தமக்குக் கொடுத்த ஏதோ ஒன்றினை அவர் கொடுப்பவராய் இராமல், மாறாக அவர் ஒரு விசேஷித்த விதத்தில், தம்முடைய சொந்த நாமத்திலேயே செயல்படுபவராய்க் காணப்படுவார். நித்திய ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் ஒருவேளை பெற்றிருக்கவில்லையெனில், அவரை "ஜீவனளிப்பவர்" என்று கூறிடமுடியாது. ஆனால் மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் பெற்றிருக்கின்றபடியால், அவர் தம்முடைய ஆயிரவருட ஆளுகையின்போது, அதைக் கொடுத்துவிடுவார்.

ஆயிர வருடங்கள் முடிந்த பிற்பாடு, நமது கர்த்தர் ஜீவனளிப்பவராகக் காணப்படுவதில்லை. அவர் தூதர்களுக்கோ, மனுக்குலமல்லாதவர்களுக்கோ ஜீவனளிப்பவராகக் காணப்பட முடியாது; ஏனெனில் அவரது உரிமையானது, பூரண மனித ஜீவிக்கான உரிமையாக மாத்திரம் காணப்பட்டது; பொதுவான மனுக்குலத்திற்கு அவர் கொடுக்க விரும்புபவைகளைத்தான் இப்போது சபைக்குச் impute/சாற்றுகின்றார் - அதாவது அவரோடுகூடப் பலியின் வேலையிலும், எதிர்க்காலத்தில் அவரது மகிமையான வேலையிலும் பங்கடையத்தக்கதாக நம்மை அனுமதிக்கத்தக்கதாக நமக்குச் சாற்றுகின்றார் அல்லது கடனாய்க் கொடுக்கின்றார்.

## மனுஷீக ஜீவனுக்கான உரிமையானது, மனுக்குலத்திற்கான நமது கர்த்தருடைய தனிப்பட்ட அன்பளிப்பாகும்

நியாயப்பிரமாணத்திற்குத் தாம் கீழ்ப்படிந்ததன் காரணமாய் (ஏற்கெனவே) தமக்குரியதாகின, தம்முடைய பூமிக்குரிய சுபாவம் மற்றும் பூமிக்குரிய ஜீவ-உரிமைகள் விஷயத்தில் எப்படிச் "சர்வத்துக்கும் சுதந்தரவாளியென" நமது கர்த்தர் ஏதேனும் கூடுதலான அதிகாரத்தை அடைய முடியும் என்று எங்களால் காண இயலவில்லை. சர்வத்துக்கும் சுதந்தரவாளியென அவர் நித்திய காலமும் பிதாவின் பிரதிநிதியாய் இருப்பார். அவர் உன்னதமானவருடைய வலது பாரிசத்தின் இடத்தை எடுத்துக்கொள்வார். ஏற்றகாலத்தில் முழங்கால் யாவும் அவருக்கு முடங்கிடும் மற்றும் தூதர்களும்கூட அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள்.

இவைகள் அனைத்தும் பிதா வாக்களித்த வெகுமானத்தின் ஒரு பாகமென நமது கர்த்தருக்குக் கடந்துவந்ததாய் இருக்கின்றது. ஆனால் ஆதாமினால் தொலைத்துப்போடப்பட்ட அனைத்தையும் திரும்பக்கொடுத்தல் எனும் இந்த ஒரு குறிப்பிட்ட அம்சமானது, அவரது பெரும் தியாகத்தினால், அவரால் சம்பாதிக்கப்பட்டு, மனுக்குலத்திற்குக் கடந்துவரும் அவரது சொந்த அன்பளிப்பாய்க் காணப்படுகின்றது; அதாவது அவர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனைக் கொடுத்து வைத்துவிட்டபோது, இதன் அடிப்படையிலேயே புதிய சுபாவத்தையும் மற்றும் மனுக்குலத்தின் சார்பாக திரும்பக்கொடுத்தலில், பயன்படுத்தப்படப்போகும் அந்தப் பூமிக்குரிய ஜீவனை ஆளும் உரிமையையும் அவர் பெற்றுக்கொண்டார் என்று சொல்லலாம்.

ஒருவேளை அவர் ஏற்கெனவே அந்த ஜீவனைப் பிரயோகித்திருப்பாரானால் மற்றும் உண்மையிலேயே அதைக் கைநெகிழவிட்டிருப்பாரானால், அவரால் மனுக்குலத்திற்கு எப்படி விசேஷமாக எதையேனும் நிறைவேற்றிட முடியும் என்று எங்களால் காணமுடியவில்லை. ஆனால் கொடுப்பதற்கென்று அவர் பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எனும் இச்சொத்தினைப் பெற்றிருக்கின்றபடியால், ஆயிரவருட ஆளுகையின்போது கொடுத்துவிடும் வேலை நடைபெறும்; மேலும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாக தாம்

பெற்றுக்கொண்டது எதுவோ அதையே அவர் கொடுத்துவிடுபவராய் இருப்பார் (லேவியராகமம் 18:5).

## பலி என்ற வார்த்தைக்குக் காணப்படும் வேதவாக்கிய பயன்பாட்டின்படியான அர்த்தம்

"பலி" என்ற வார்த்தையானது பல்வேறு கோணங்களில் பயன்படுத்தப்படலாம். ஒரு விலங்கானது ஏதோ ஓர் இரக்கமான காரணத்திற்காக அல்லது நோக்கத்திற்காகக் கொல்லப்பட்டால், அதுவும் அது குறிப்பாக ஒருவேளை திவ்விய ஏற்பாட்டிற்கு இசைவாக நடைபெற்றதாக இருக்கும்பட்சத்தில், அது பலி என்று சொல்லப்படலாம். ஆனால் வெறுமனே ஒரு விலங்கு கொல்லப்படுவது என்பது பலியாகாது. பலியாக்கப்படாமலேயே ஒரு நாயானது கொல்லப்படலாம். ஆனால் ஒருவேளை அறிவியல் சோதனை ஒன்றிற்காக நாயினுடைய ஜீவனானது கையளிக்கப்படுகிறதென்றால், அறிவியலுக்காக அது பலி செலுத்தப்பட்டுள்ளது என்று நாம் சொல்லலாம். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நாம் பலியின் காரியத்தினை கண்ணோக்க வேண்டும். அர்ப்பணிக்கப்பட்டுள்ள தேவனுடைய ஜனங்களின் ஜீவியங்களானது ஒரு நோக்கத்திற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

நம்முடைய அர்ப்பணிப்பின்போது, நமது சரீரங்களை நாம் ஜீவனுள்ள பலிகளாக ஒப்புக்கொடுக்கின்றோம். நம்முடைய ஜீவியங்களை, நம்முடைய மனித சரீரங்களை மற்றும் நமக்குரிய அனைத்தையும் நாம் கர்த்தருக்குக் கொடுக்கின்றோம். எனினும் இந்தப் பலியானது சில **விசேஷித்த விதத்தில்** மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படத் தேவன் விடுகிறதில்லை. சிலர் கர்த்தருடைய சத்தியத்திற்கு ஊழியம்புரிவதில் தங்கள் ஜீவியங்களைச் செலவழிப்பதுண்டு மற்றும் அவர்கள் ஏதோ தொழு மரத்தில் மரித்ததற்கு ஒப்பாகப் பலியானதாகவும் சொல்லப்படலாம். "என் ஜீவியம் முழுவதும் உமது கரத்தில் இருக்கின்றது; உமக்குப் பிரியமானபடி, அதைப் பயன்படுத்திடும்" என்று நாம் கர்த்தரிடத்தில் சொல்லுகின்றோம். அது சந்தோஷம் அல்லது வலி நிறைந்ததாகவும், தியாகமாக/பலியாக அல்லது இன்பம் நிறைந்ததாகவும் இருப்பினும், இது விஷயத்தில் எங்கள் சொந்த சித்தங்களை நாங்கள் கையளித்துவிட்டு, "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்" (யோவான் 6:38) என்று சொன்ன இயேசுவைப் போன்று ஆகுகின்றோம்.

## நாம் எதைப் பலிசெலுத்துகின்றோம்?

இயேசுவின் பலியானது யோர்தானில் ஏறெடுக்கப்பட்டது. ஆனால் அது கல்வாரியில் நிறைவடைந்தது. அவரது அர்ப்பணிப்பானது முழுமையானதாய் இருந்தது. காளை கொல்லப்படுகிற காரியமானது, இயேசு தம்முடைய சித்தத்தைக் கையளித்தப்போது அவர் செய்ததை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அதுபோலவே நம் விஷயத்திலும் காணப்படும். அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகையில், நாம் நமது சித்தங்களைப் பலி செலுத்துகிற விதத்தில் மரித்தவர்களாகுகின்றோம். ஆனால் பலி செலுத்தப்பட்ட அந்தச் சித்தத்தைக் கர்த்தர் எந்த விதத்தில் ஏற்றுக்கொள்ளப்போகின்றார் என்பது அவருடைய காரியமாய் இருக்கின்றது. நாம் அதை - அதாவது நம்மிடத்தில் கிறிஸ்துவின் சிந்தையானது சம்பூரணமாய் வாசம் செய்யத்தக்கதாக, நாம் அதைக் கையளித்துவிடுகின்றோம்.

நம்முடைய சித்தங்களைக் கையளித்துவிடுவது என்பது இறுதியில் நம்முடைய ஜீவியங்களையும் நாம் கையளித்துவிடுவதற்கு நம்மை நடத்திடும் என்பதை நாம் அறிந்திருந்தபோதிலும், நம்முடைய சொந்த சித்தங்களுக்கடுத்த உரிமைகளை நாம் என்றென்றுமாக விட்டுப் பிரிந்துவிடுகின்றோம்; எனினும் நம்முடைய ஜீவனைப் பலியிடும் வேலையை நாம் செய்கிறதில்லை. நம்முடைய சொந்த உரிமைகளை விட்டுப்பிரியும் விஷயத்தில் நாம் எதையும் செய்கிறதில்லை. இயேசு நமக்காகப் பரிந்துபேசுகிறவராகும்போது, அவர் நம்மைப் பொறுப்பேற்றுக்கொள்கின்றார். நம்முடைய சித்தங்களை நாம் கையளித்தது முதற்கொண்டு, நம்முடைய சரீரங்களானது, அவரது சரீரமாகக் கருதப்படுகின்றது. இவ்விஷயத்தில் நாம் நமது சித்தங்களைக் கையளிக்க மாத்திரம் செய்து, அனைத்தையும் அவர் செய்யத்தக்கதாக, விட்டுவிடுகின்றோம். அவர் பலியிடும் வேலையைப் பார்த்துக்கொள்கின்றார்; ஏனெனில் அவரே பிரதான ஆசாரியனாய் இருக்கின்றாரே ஒழிய, நாமல்ல.

இதுபோலவே மாபெரும் பலனானது, கர்த்தருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது. சுவிசேஷ யுகத்தின் போது, அவர் தம்முடைய புண்ணியத்தினை (merit) சபைக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார். பலியிடும் வேலையினை அவர் நிறைவேற்றி

முடிக்கையில், தம்முடையதென்று அவர் அழைத்திடும் இந்த மாபெரும் பலியின் புண்ணியத்தினை - உலகத்திற்கான புதிய உடன்படிக்கையினை முத்திரிக்கத்தக்கதாகப் பயன்படுத்துவார். ஆனால் பலியிடும் பணியில், நாம் செய்வதற்கொன்றுமில்லை. அவை அனைத்தையும், நமக்காகப் பரிந்துபேசுபவரிடத்தில் நாம் விட்டுவிடுகின்றோம்.

புதிய சிருஷ்டிதான் சரீரத்திற்கு எஜமானாக அல்லது அதிகாரியாக நிச்சயமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்படியாகத்தான் கர்த்தரும் ஏற்பாடு பண்ணியுள்ளார். புதுச்சிருஷ்டிகளென நம்முடைய சரீரத்தை வைத்து நிறைவேற்றும்படிக்கு நாம் ஒரு வேலையைப் பெற்றிருக்கின்றோம். நமது கர்த்தர் நம்மை, அவரது ஊழியக்காரர்களென ஏற்றுக்கொள்ளும்போது, நாம் அவரது உக்கிராணக்காரர்களென நம்முடைய தாலந்துகள் அனைத்தையும் பயன்படுத்திட வேண்டும். இந்த விதத்திலேயே சரீரமானது மரணம் வரையிலும் புதுச்சிருஷ்டியினுடைய கட்டுபாட்டின் கீழ்க் காணப்படும்.

## ஜீவ - உரிமைகள் சபைக்குச் சாற்ற மாத்திரமே படுகின்றது

நமது கர்த்தருடைய நிலைமையிலிருந்து நம்முடைய நிலைமையானது வேறுபடுகின்றது. முதலாவதாக நம்மிடத்தில் பூமிக்குரிய ஜீவ-உரிமைகள் ஏதும் இல்லை; ஆகையால் give away/கொடுத்துவிடுவதற்கென்று நாம் எதையும் பெற்றிருக்கவில்லை. நாம் அதை ஆதாமினுடைய பாவத்தின் காரணமாக இழந்திருக்கின்றோம். ஆனால் ஒருவேளை நாம் கர்த்தருடைய சீஷர்களாகுவோமானால், அனைத்தையும் அவரிடத்திற்குக் கையளித்துவிட்டு, அவர் நமக்குச் சாற்றிடுவதற்கு விருப்பமாய் இருக்கின்ற புண்ணியத்தினை ஏற்றுக்கொள்வோமானால், நமக்கான மகா பரிந்துபேசுபவர் நம்மை அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனக் கருதி, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கு நம்மை அனுமதிப்பார். அவர் தம்முடைய புண்ணியத்தினை நமக்குச் சாற்றும்போது, அனைத்து உரிமைகளும் கடந்துவந்தது. தமது அங்கங்களுக்குரியதான உரிமைகளையும், அவர்களுக்கு வரும் பூமிக்குரிய உரிமைக்கடுத்த சிலாக்கியங்களையும், அவர்களுக்கு அவர் கொடுக்கின்றார்.

உலகத்திற்கென்று எதிர்க்காலத்தில் இந்த உரிமைகளை நமது கர்த்தர் பயன்படுத்துவதற்கான அவசியம் ஏற்படுகையில், அப்படிச் செய்ய அவர் முற்றிலும் ஆற்றலுடையவராகவும் மற்றும் வல்லமையுடையவராகவும் காணப்படுவார். அவர் திவ்விய பிரமாணத்தினை ஒருபோதும் மீறாததினால், தமது பூமிக்குரிய உரிமைகளைப் பயன்படுத்துவதற்கும், அது தொடர்பாகக் கட்டளையிடுவதற்கும் அவர் முழு உரிமையுடையவராய் இருப்பார்; இந்தத் தமது பூமிக்குரிய உரிமைகளை அவர் forfeited/பறிக்கொடுக்கவில்லை/ இழந்துபோகவில்லை, மாறாக மனுக்குலத்தினுடைய எதிர்க்கால ஜீவன் தொடர்புடைய விஷயத்தில், மனுக்குலத்தின் தந்தையெனத் தாம் அழைக்கப்படத்தக்கதாக, உலகத்திற்கு ஜீவன் கொடுப்பதற்கு வேண்டி தாம் இந்த உரிமைகளை மறுபடியுமாகப் பயன்படுத்திட வேண்டும் என்ற புரிந்துகொள்ளுதலில், அந்த உரிமைகளை அவர் laid down/கொடுத்து வைத்துவிட்டார்.

தம்மையே பலிசெலுத்தும்படியாகக் கிறிஸ்து வந்ததாக வேதவாக்கியங்களில் எங்குமே சொல்லப்படவில்லை. அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாக வந்தார் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. பிதா அவருக்கென்று ஆயத்தம் பண்ணி ஊற்றின "பாத்திரத்தில்" பானம்பண்ணுவதற்கு அவர் மறுப்புத் தெரிவித்திடாமல், அடிமண்டி மட்டும் அதைப் பருகினார். அந்த ஜீவன் கொஞ்ச காலம் அல்லது நீண்ட காலம் காணப்படுவது பிதாவின் விருப்பமாக இருப்பினும், எப்படி இருப்பினும் - மரணபரியந்தமுமான அந்தச் சித்தத்திற்கான அவரது கீழ்ப்படிதலுக்காய், அவர் பலனைப் பெற்றுக்கொண்டார். அவர் அனைத்தையும் பிதாவின் கரங்களில் கொடுத்துவிட்டார். இது ஒரு பலியாகும்; ஏனெனில் அவரது ஜீவனைப் பயன்படுத்துவதற்கான உரிமை அவரிடத்தில் காணப்பட்டது. ஆனால் அவரது பிதாவின் சித்தத்திற்கான அவரது கீழ்ப்படிதலானது, பலிக்கு நேராய் வழிநடத்தினதாய் இருக்கின்றது; இதற்கே அவர் பலனைப் பெற்றுக்கொண்டார்.

R 5096

# "தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல"

## மாற்கு 7:1-13

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது." - ரோமர் 14:17

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், தெய்வீக நியாயப்பிரமாணங்களைக் கவனமாகக் கைக்கொள்வதாக அறிக்கைப் பண்ணிக்கொண்டும், கைக்கொள்ளும் விஷயத்தில் காணப்படும் தங்களது உண்மைத் தன்மையைக்குறித்துத் தற்பெருமையடித்துக் கொண்டும் இருந்த பரிசேயர்கள், படிப்படியாக, தேவனுடைய வார்த்தைகளிடமிருந்து விலகிப்போய், மனித பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறவர்களுமானார்கள் என்பதையே இன்றைய நமது பாடம் காட்டுகின்றது. இப்படியாகவே இன்றைய யூதர்களும் காணப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தமான வேதவாக்கியங்களை இன்றைய யூதர்கள் வாசித்தாலுங்கூட, அது அவர்கள் புரிந்துக்கொள்ள முடியாத முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாகக் கருதப்படுகின்றது. மேலும், இதைப் புரிந்துக்கொள்வதற்கு முயற்சி எடுப்பதற்குப் பதிலாக, இவர்கள் தல்மூது (Talmud) என்ற யூத வேதாகமத்தைப் படித்துக்கொண்டு, இதன்படித் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர். இந்த Talmud எனும் யூத வேதாகமமானது, ஞானம் மற்றும் ஞானமற்ற வாக்கியங்களைக் கொண்டுள்ளது; புத்தியுள்ள மற்றும் மடத்தனமான அறிவுரைகளைக் கொண்டுள்ளது; இதன் அடிப்படையிலேயே ஆச்சாரமான யூதர்கள் தங்களுடைய மதசம்பந்தமான உணர்வுகளை வனையப்பெற்றிருக்கின்றனர்.

இன்றைய கிறிஸ்தவர்களுடைய விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது. வேதாகமம்தான் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டாலும், ஒவ்வொரு கிறிஸ்தவப் பிரிவுகளுக்கும், சொந்த கொள்கைகளும், சொந்த புஸ்தகங்களும், சொந்த வினாவிடை புஸ்தகங்களும் உள்ளது. வேதாகமம் வாசிக்கப்பட்டாலுங்கூட, அவரவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விசுவாசப் பிரமாணத்தின் விளக்கங்களே கிறிஸ்தவர்களின் மனதில் காணப்பட்டு, வேதாகமத்தைத் திரையிட்டு மூடிவிடுகின்றது. ஆகவேதான் வேதாகமத்தை நமது கரங்களில் கொண்டிருந்த போதிலும், பயபக்தியை நமது இருதயங்களில் கொண்டிருந்த போதிலும், ஒன்று சேர்வதற்கு வாய்ப்பற்ற நிலையில், 600 பல்வேறு பிரிவினர்களாகக் கிறிஸ்தவர்களாகிய நாம் பிரிந்திருக்கின்றோம். காரணம், ஒவ்வொரு பிரிவினரும், வேதாகமத்தை ஆராயும் விஷயத்தில் தங்கள், தங்கள் சொந்த விசுவாசப் பிரமாணம் எனும் மூக்குக் கண்ணாடியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று விடாப்பிடியாய்க் காணப்படுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் உண்மையாய் ஞானமுள்ளவர்கள் என்றால், அவர்களை நீண்ட காலமாகப் பிரித்து வைத்ததும், தேவனுடைய வார்த்தைகள் அநேகவற்றிற்குத் தவறான அர்த்தம் கொடுத்ததும், நமது மனங்களைக் குழப்பி வைத்திருந்ததுமான இந்த விசுவாச பிரமாணம் எனும் மூக்குக் கண்ணாடிகளைக் கிறிஸ்தவர்கள் தள்ளி வைத்துவிடவும், அழித்து விடவும் முற்படுவார்கள் அல்லவா? கிறிஸ்தவர்கள் உண்மையாய் ஞானமுள்ளவர்கள் என்றால், அவர்கள் பரம ஆலோசனைகளையும், பரம ஞானத்தையும் எடுத்துக்கொண்டு, வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் பிரகாசிக்கும் ஒளியில், தேவனுடைய வார்த்தைகளைப் புதிதாய்ப் படிக்க/ஆராய ஆரம்பிக்க முற்படுவார்கள் அல்லவா? இதனை கோட்பாடு/வார்த்தை அளவில் அனைவரும் நிச்சயமாய் ஒத்துக்கொள்வோம்; இந்த நமது தீர்மானத்தை நாம் நடைமுறையிலும் செயல்படுத்தலாம் அல்லவா ?

## "கழுவப்படாத கைகளினால் புசித்தல்"

இயேசுவைப் போன்ற ஒரு திறமிக்க நபரைத் தங்களுடைய கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதிலும் அதாவது, தங்களுடைய செய்கைகளுக்கு ஒத்த செய்கை செய்பவராக, தங்களுடைய கூட்டத்தில் ஒருவராகச் சேர்த்துக்கொள்வதிலும், இப்படியாக அவராலும் தாங்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று காண்பித்துக்கொள்வதிலும் பரிசேயர்கள் பிரியப்பட்டிருப்பார்கள்.

நீதி, இரக்கம் மற்றும் அன்பின் அடிப்படையிலுள்ள, அவருடைய போதனைகளிலுள்ள உயர்வான தன்மையை அவர்கள் கவனிக்காமலும் இருக்கவில்லை. ஒருவேளை அவர் அவர்களது சடங்காச்சாரங்களுக்கும் ஆதரவு கொடுத்திருப்பாரானால், ஒருகாலத்தில் அவர்களை நடுங்கச் செய்யும் அளவுக்கு அவர் பேசின உண்மைகளைக்கூட அவருக்கு மன்னித்து விட்டிருப்பார்கள். அவருக்கு நிகராக யாரும் இருக்கவில்லை. அசுத்தத்துடன் காணப்பட்டவர்களுக்கு அவர் மிதமிஞ்சின பரிசுத்தத்தை கொண்டவர் போன்று தோன்றினார்; மாய்மாலமாய் அறிக்கைப் பண்ணிக்கொண்டு திரிந்தவர்களின் பார்வையில், அவர் மிதமிஞ்சின நேர்மையைக் கொண்டவர் போன்று தோன்றினார்; உலக ஞானிகளென இருந்தவர்களுடைய பார்வையில், அவர் வெளிப்படையாய்ப் பேசும் தன்மையை மிதமிஞ்சின அளவில் கொண்டவராகவும், மிதமிஞ்சின உண்மையுள்ளவர் போன்றும் தோன்றினார்.

இயேசுவின் பின்னடியார்கள் ஏன் தல்மூது (Talmud) எனும் யூத வேதாகமத்திற்கு இசைவாகப் போதிக்கப்படவில்லை. அதாவது, புசிப்பதற்கு முன்னதாக, மத ரீதியான கடமையாக/சடங்காக எப்பொழுதும் கைகளைக் கழுவிக்கொள்ளும் விஷயத்தில் ஏன் மிகவும் கவனமாய் இருக்கும்படிக்குப் போதிக்கப்படவில்லை என்று பரிசேயர்கள் கேள்வி கேட்கும் விஷயமே இப்பாடத்தில் காணப்படுகின்றது. அசுத்தமாக இருப்பது தொடர்பான எந்த மாதிரியையும், இயேசு தம்முடைய பின்னடியார்களுக்கு முன்பாக வைக்கவில்லை என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. எந்தளவுக்கு ஒருவருடைய இருதயத்திற்குள் சத்தியம் பிரவேசிக்கின்றதோ, அவ்வளவாக அச்சத்தியமானது, முழு வாழ்க்கையின் மீது மனரீதியிலும், ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் சுத்திகரிப்பிற்கு ஏதுவான தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை நாம் அறிவோம். பரிசேயர்கள் இங்குக் குறிப்பிடுவது, கைகள் சுத்தமாகவோ (அ) சுத்தமில்லாமலோ காணப்பட்டாலும், சடங்காச்சாரமாகக் கைகளைக் கழுவுதல் என்ற மதத்தின் அம்சத்தையே ஆகும். இதையே இயேசு மறுத்தார். இப்படியாக, அவரால் போதிக்க முடியாது. ஏனெனில், இப்படிச் செய்வது என்பது, சடங்காச்சாரமான மாய்மாலமாகிவிடும். வேறு ஒரு தருணத்தில், இப்படியாகப் பரிசேயர்கள் தங்களையும், தங்களது பாத்திரங்களையும், கடமையானவிதத்திலும், சடங்காச்சாரமானவிதத்திலும் அருமையாகக் கழுவிக்கொள்வது என்பது, அவர்களுடைய அதிகப்படியான நேரத்தை எடுத்துக்கொள்கின்றது என்றும், இம்மாதிரியாக ஏழைகள் தங்களைக் கழுவிக்கொள்வதற்கு, வேலையாட்களைக் கொண்டிராததால், இவ்விஷயம் ஏழைகளுக்குப் பாரமாக உள்ளது என்றும் இயேசு கூறியுள்ளார். இப்படியாகக் கழுவிக்கொள்ளாதவர்கள் அசுத்தமாய், பரிசுத்தமில்லாமல் இருக்கின்றார்கள் எனவும், தெய்வீக ஒழுங்குகளுக்கு எதிராக இருக்கின்றார்கள் எனவும், உண்மையான யூதர்களல்ல எனவும் ( யூதர்களால்) கருதப்படுகின்றனர்.

இவ்விஷயம் தொடர்பாக இயேசு, பரிசேயர்களுக்கு "இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார்" (மாற்கு 7:6-8).

தேவனால் கட்டளையிடப்படாமல், மனிதனால் கட்டளையிடப்பட்டுள்ள தல்மூது (Talmud) எனும் யூத வேதாகமத்தின் சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கு, ஸ்நானம் பண்ணுவதற்கு அதிக கவனம் செலுத்திக்கொண்டு, பரிசேயர்கள் எப்படி, தெய்வீகக் கட்டளைகளைப் புறக்கணிக்கின்றார்கள் என்பதற்கான உதாரணத்தை, இயேசு அவர்களுக்குக் கூறினார். தாய், தகப்பனைக் கனம் பண்ண வேண்டும் என்பதும், இவர்களில் எவரையேனும் நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்பதும், மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டளையிட்ட காரியமாகும். ஆனால், தல்மூது (Talmud) மூலம் இந்தக் கட்டளை மாற்றப்பட்டுள்ளது; தேவனுக்கும், மத அனுசரிப்பிற்கும் சில பொருள்களையும், தன்னையும் காணிக்கையாக்குவதன் வாயிலாக ஒரு மனுஷன், தனது பெற்றோர்களிடமிருந்து விடுதலையாகின்றான் என்று தல்மூது கூறுகின்றது. இப்படியாகச் செய்வதன் மூலம், ஒருவன் தனது பெற்றோருக்கான சகல கடமைகளிலிருந்தும் விடுதலையாகின்றான். இப்படியாக பெற்றோருக்கான கடமை தொடர்புடைய தேவனுடைய நேரடியான கட்டளையை, தல்மூது வீணானதாக்குகின்றது; இதைச் செய்வதற்கு இவர்களுக்கு அதிகாரம் இல்லை.

இதுவே இயேசுவின் போதனைகளுக்கும், பரிசேயர்களின் போதனைகளுக்குமிடையேயுள்ள முரண்பாடாகும். இவர்கள் இருவருமே பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்றும், தெய்வீகப் பிரமாணங்களைக் கவனமாய்க் கடைப்பிடிக்கின்றார்கள் என்றும், உரிமை கோரிக்கொண்டார்கள்; ஆனால், இயேசுவோ தேவனுடைய வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டவராகவும், முன்னோர்களுடைய பாரம்பரியங்களையும், தல்மூதையும் (Talmud) புறக்கணித்தவராகக் காணப்பட்டார். மேலும், பரிசேயர்களோ தேவனுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துப்போட்டு, பாரம்பரியங்களைப் பிடித்துக் கொண்டிருந்தவராகக் காணப்பட்டனர். கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று என்ன செய்கின்றோம்? "உண்மையுள்ள வார்த்தைகளை நாம் பற்றிக்கொள்வோமாக." நம்மை ஞானமுள்ளவர்களாக்கும், "தேவனுடைய வசனத்தை" பற்றிக்கொள்வோமாக. வேத வாக்கியங்களைத் தினந்தோறும், கருத்தாக ஆராய்வோமாக, மற்றும் வேதவாக்கியத்திற்கு முரண்பாடாயுள்ள அனைத்தையும் நாம் புறக்கணித்து விடுவோமாக.

## "தேவனுடைய இராஜ்யம் எது?"

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமும்தான் தேவனுடைய இராஜ்யம் என்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இது முற்றிலும் தவறான கருத்து என்று இவ்வசனத்தில் உரைக்கப்பட்ட சந்தர்ப்பமானது காட்டுகின்றது. இதை நாம் பார்க்கலாம்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜ்யம் தொடர்பாக, நாம் ஏற்கெனவே பார்த்துள்ளதை, அதாவது மனுக்குலத்தைச் சீர்த்தூக்குவதற்குரிய, மேசியாவின் ஆயிரம் வருஷம் ஆளுகையே அந்த இராஜ்யம் என்பதையும், அந்த இராஜ்யத்தில் சபை, இயேசுவுடன் அவருடைய இராஜ்யத்தின் மகிமையிலும், வல்லமையிலும், கனத்திலும் பங்கடைந்திருப்பார்கள் என்பதையும் நாம் நினைவில் கொண்டிருப்போமாக. இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான அழைப்பானது, இந்த மணவாட்டி வகுப்பாரைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, அவர்களை வளரச்செய்து, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்குவதற்குமே" ஆகும்.

இந்தக் காலத்தில் இப்படியாக அழைக்கப்படுபவர்கள், மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி ஆகத்தக்கதாகவே அழைக்கப்படுகின்றனர்; இவர்கள் கருநிலையில் அல்லது முழுவதும் வளர்ச்சியடையாத நிலையிலுள்ள இராஜ்யமாக இருக்கின்றனர். இராஜ்யத்தின் இந்தத் தேர்வுக்கு உட்பட்டிருக்கும் அங்கங்களைக்குறித்து வேதவாக்கியங்கள், இவர்கள் பத்துக் கற்பனைகளில் வெளிப்படும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை என நமக்குக் கூறுகின்றது; இவர்கள் நியாயப்பிரமாணத்தின் வாயிலாக நித்தியஜீவனை எதிர்ப்பார்க்கவில்லை. மாறாக, கிருபையின் கீழே இவர்கள் காணப்படுகின்றனர்; கிறிஸ்துவின் மரணத்தினுடைய புண்ணியத்தின் வாயிலாக, தேவன் இவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள ஒரு கிருபையான ஏற்பாட்டின் கீழாகவே இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் யூதர்களுடைய நியாயாப்பிரமாணத்தினுடைய பல்வேறு கட்டளைகளிலிருந்து விடுவிக்கப்பாட்டாலும், இவர்கள் பிரமாணம் கொண்டிராமல் இல்லை என்றும், இவர்கள் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்களாக மாபெரும் திவ்விய பிரமாணத்தின் கீழேயே காணப்படுகின்றனர் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். நம்முடைய மாம்சத்தின் பெலவீனம் காரணமாக, நம்மால் பிரமாணத்தின் ஆவிக்கேற்ப முழுமையாக நடக்க முடியாவிட்டாலுங்கூட, நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கும்" போது, புதுச் சிருஷ்டிகளாக நாம் திவ்வியப் பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தை நிறைவேற்றுகின்றவர்களாக இருப்போம் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார். புதிய சிந்தை அதாவது, வாஞ்சைதான் நியாயந்தீர்க்கப்படுகின்றதே ஒழிய, மாம்சம் அல்ல.

இப்படியாக, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்திற்குள் வந்திட்ட புறஜாதிகளுக்கு, யூதர்களுடைய நியாயப்பிரமாணம் கேட்கும் விஷயங்களுக்கு ஒத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. உதாரணத்திற்கு, யூதனைப் பொறுத்தமட்டில், நியாயப்பிரமாணத்தின்படி அவன், செதிள் இல்லாத மீன்கள், முயல், பன்றி முதலானவற்றின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது. மேலும், அவன் புசிக்கும் மற்றும் பானம் பண்ணும் விஷயங்களில் பல்வேறு விதங்களில் அவனுக்குக் கட்டுப்பாடு உள்ளது. ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளில் எதுவும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஒருபோதும் இராமல், கிறிஸ்தவர்களாக மாறியுள்ள புறஜாதியினருக்குப் பொருந்தாது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில், புசிப்பதிலும், பானம் பண்ணுவதிலும் கிடைத்துள்ள இந்தச் சுயாதீனங்கள் என்பது, இந்தக் கருநிலை இராஜ்ய வகுப்பாருக்கு தற்காலத்து ஜீவியத்திற்குரிய உண்மையான ஆசீர்வாதங்களாகக் கருதப்படக்கூடாது என்பதையே பரிசுத்த பவுல் வலியுறுத்துகின்றார். இவைகளுக்கும் மேலாக, இவ்வகுப்பாருக்குரிய உண்மையான ஆசீர்வாதங்கள் என்பது, நீதியிலும், சமாதானத்திலும், பரிசுத்த ஆவியின் சந்தோஷத்திலுமுள்ள இவர்களது களிகூருதலிலேயே அடங்குகின்றது. இவர்களுடைய மனங்கள் புதிதாகிறதினாலே, மறுரூபமடைந்த இவர்கள் நீதியையும், சத்தியத்தையும் உணர்ந்துக்கொண்டு, அதை விரும்பும் நிலைக்கு வந்துள்ளனர்; தீமையைப் பார்க்கிலும் நல்லவைகளையும், அசுத்தத்தைப் பார்க்கிலும் சுத்தமானதையும், பூமிக்குரியவைகளைப் பார்க்கிலும் ஆவிக்குரியவைகளை விரும்பும் நிலைக்கு இவர்கள் வந்துள்ளனர்; பூமிக்குப்பதிலாக இவர்களுடைய குடியுரிமை இன்று பரலோகத்தில் காணப்படுகின்றது. "எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானத்தை" இவர்கள் உணரும் நிலைக்குள் வந்துள்ளனர்; மேலும், இந்தச் சமாதானம், இவர்களுடைய இருதயத்தில் ஆளுகை செய்வது என்பது, கருநிலையிலுள்ள இராஜ்ய வகுப்பாரின் அங்கங்களாக, இவர்கள் அனுபவிக்கும் பிரம்மாண்டமான ஆசீர்வாதங்களில் ஒன்றாகும்.

"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." "துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல்....." (ஏசாயா 48:22; 57:20). கிறிஸ்துவுடன், அவருடைய இராஜ்யத்தின் வகுப்பாருக்குரிய அங்கங்களாக நாம் இணைந்ததின் விளைவே, நமக்கான பரம சமாதானமும், தேவனிடத்திலுமான நம்பிக்கையுமேயாகும். இதையே நாம் உயர்வாகக் கருதுகின்றோமே ஒழிய, பன்றியின் மாம்சத்தைப் புசிக்கும் சிலாக்கியத்தை அல்லது யூதர்களுக்குத் தடைப்பண்ணப்பட்ட ஏதோ ஒன்றைப் புசிக்கும் சிலாக்கியத்தை நாம் விசேஷமானதாகக் கருதுவதில்லை. பரிசுத்த ஆவியால் உண்டாகும் சந்தோஷம், அதாவது பிதாவுடனும், குமாரனுடனும், நீதியின் ஆவியையுடைய அனைவருடனுமுள்ள ஐக்கியம் என்பது கரு நிலையில் இருக்கும் இராஜ்ய வகுப்பாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்குக் கிடைத்திட்ட ஆசீர்வாதமான சிலாக்கியமாகும்.

இப்படியாக, இவ்வகுப்பார் பெற்றுள்ள பல்வேறு தயவுகளுக்குரிய தகுந்த மதிப்பை, அப்போஸ்தலர் முன்வைக்கின்றார். ஆகையால், கர்த்தருடைய நோக்கத்தினுடைய நலனுக்கடுத்த காரியங்களுக்காக அல்லது கிறிஸ்துவுக்குள்ளான சகோதரருடைய நலனுக்கடுத்தக் காரியங்களுக்காக, இவர்கள் உணவு மற்றும் பானம் சம்பந்தமான விஷயங்களில் தங்களது சுயாதீனத்தை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில், இவர்கள் கிறிஸ்துவினிமித்தமாகவும், சகோதரர்களினிமித்தமாகவும் செய்யும்/மேற்கொள்ளும் இப்படியான சுயத்தில் வெறுத்தல்கள், ஒரு பெரிய விஷயமாகக் (இவர்கள்) கருதக்கூடாது; அதாவது, சந்தோஷத்துடன் ஏறெடுக்கும் தியாகங்களாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், இப்படியான தியாகங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்துவுக்குள்ளான நமது ஆசீர்வாதங்களின் மற்றும் சிலாக்கியங்களின் உண்மையான மதிப்பைக் குறிக்கிடவோ அல்லது தொந்தரவோ செய்வதில்லை.

**ஆமென்!**

---

R 5103

# "அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்"

## மாற்கு 7:31-8:10

"எல்லாவற்றையும் நன்றாய்ச் சொய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்." (வசனம் 37)

இயேசு தம்முடைய அற்புதங்கள் வாயிலாக, தனிப்பட்ட விதத்தில் சொஸ்தமடைந்தவர்களிடத்திலும், பொதுவான விதத்தில் சொஸ்தமாக்கப்பட்டதைக் கண்ட ஜனங்களிடத்திலும், இந்தச் சொஸ்தப்படுத்தும் வல்லமை தேவனுடையது என்ற உண்மையைப் பதியப் பண்ணினார் என்றும், இப்படியாக தேவனிடத்திலான விசுவாசத்தை நிறுவினார் என்றும் கடந்த பாடத்தில் நாம் பார்த்துள்ளோம். கொன்னை வாயும், செவிடாயும் இருந்த ஒரு மனுஷனைச் சொஸ்தப்படுத்தும்படி, அவனை இரட்சகரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.

இதிலிருந்து பெரும்பான்மையான அற்புதங்கள் கையை வைப்பதின் மூலமாகவே செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது; சிலர் இயேசுவைத் தொடுவதின் மூலமாகவும் (அ) அவருடைய வஸ்திரங்களைத் தொடுவதின் மூலமாகவும் சொஸ்தமடைந்ததாகவும் பதிவுகள் காணப்படுகின்றது. அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுச் சொஸ்தமடைந்த விஷயத்தில், அந்த ஸ்திரி விசுவாசத்தைக் காட்டினாள் என்பது நிச்சயமே, இல்லையேல் சொஸ்தமடையும் நம்பிக்கையில் வஸ்திரத்தைத் தொட்டிருந்திருக்கமாட்டாள். வேறு ஒரு தருணத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள ஜனங்களுடைய அவநம்பிக்கைக் காரணமாக, அவ்விடத்தில் இயேசுவினால் அநேக வல்லமையான செய்கைகளைச் செய்யமுடியவில்லை என்று நாம் வாசிக்கின்றோம். ஆகவே, எப்படியிருப்பினும் சொஸ்தப்படுத்தும் வல்லமையானது, விசுவாசம் செயல்படுத்தும் காரியத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது; விசுவாசம் ஒன்றில் வியாதியஸ்தரின் சார்பில் (அ) வியாதியஸ்தனுக்காக அவனுடைய நண்பர்களுடைய சார்பில் செயல்படுத்தப்பட வேண்டும்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் சம்பவம் கொஞ்சம் விநோதமானதாகும். (1) ஏனெனில், இயேசு, மக்கள் கூட்டத்தாரிடமிருந்து, அம்மனுஷனைத் தனியே கூட்டிக்கொண்டு சென்று, இரகசியமாகச் சுகப்படுத்தினார் மற்றும் (2) அவர் பயன்படுத்தின விஷயங்களும் விநோதமாக இருந்தது. அவர் தமது விரல்களை அவன் காதுகளில் வைத்தார். அதாவது, ஜீவனுக்கான மின்னோட்டம் விரல்களிலிருந்து ஏதோ பாய்வது போன்று, அவன் காதுகளில் வைத்தார். பின்னர் அவர் உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டார். இவ்வளவுதான் இயேசுவினுடைய வல்லமை என்று நாம் எண்ணி விடக்கூடாது, வேறு தருணங்களில் வேறுவிதத்திலும் அவருடைய வல்லமை செயல்பட்டிருக்கின்றது. அம்மனுஷனுடைய கவனத்தை ஈர்ப்பதற்கும், விசுவாசம் அவன் கொள்ளத்தக்கதாக, அவனுக்கு உதவுவதற்கும்தான் இம்மாதிரியாகச் செயல்பட்டார் என்று புரிந்துக்கொள்வது தகுதியானதாக இருக்கும்.

அம்மனுஷனுக்குக் கேட்கும் திறன் இல்லாதபடியினால், சூழ்நிலைகளை/காரியங்களை விவரிப்பதற்காக அம்மனுஷனிடம் எதுவும் கூறமுடியாது; உமிழ்வதை அம்மனுஷனால் காண முடியும், அவர் தொடுவதை அம்மனுஷனால் உணர்ந்துக்கொள்ள முடியும். மேலும், என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது என்பதை அம்மனுஷன் புரிந்துக்கொண்டான்; அம்மனுஷன் சொஸ்தமடைந்தான். இவைகளெல்லாம் அவனுடைய மனதின் கீழ்ப்படிதலை அல்லது விசுவாசத்தைக் குறிக்கின்றது. இந்தப் படிப்பினைகளைக் கொடுத்தப் பிற்பாடு, அம்மனுஷன் இயேசுவைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இயேசு வானத்தை அண்ணாந்துப் பார்த்தார்; இப்படியாக நோயாளிக்கு மூன்றாவது படிப்பினையாக, தான் சொஸ்தப்படுவதற்கான வல்லமை, தேவனிடமிருந்தே எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பது வழங்கப்பட்டது. இயேசு பெருமூச்சுவிட்டு எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்பது அர்த்தமாகும்; உடனடியாக அம்மனுஷனுடைய செவிகள் திறக்கப்பட்டன, மற்றும் பேசுவதில் அம்மனுஷனுக்கு இருந்த பிரச்சனையும் போய்விட்டது.

இயேசு பெருமூச்சு விட்ட காரியம் கவனிக்கப்பட வேண்டியதாகும்; இது இயேசுவின் முன் காணப்பட்ட மனஷன் மீதும் மற்றும் தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டிகள் மீதுமுள்ள அவருடைய ஆழ்ந்த அனுதாபத்தையே சுட்டிக்காண்பிக்கின்றது. இயேசு, "ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்" என்று பதிவு செய்யப்பட்டுள்ள வேறொரு தருணத்தையும் நாம் நினைவுகூருகின்றோம். அது அவருடைய நண்பனாகிய லாசருவின் கல்லறைக்கு முன்பாக அவர் நின்று கொண்டிருந்தபோது சம்பவித்தது; "மரியாள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து" (யோவான் 11:33). தீர்க்கத்தரிசனத்தில் உரைக்கப்பட்டுள்ளபடி அவர், மனிதனுடைய பலவீனங்கள் குறித்தும் பரிதபிக்கக்கூடியவராக காணப்படுகின்றார் என்பதே நமக்கான பொதுவான படிப்பினையாகும். உண்மை என்னவெனில், அவர் பரிபூரணமானவர் ஆவார்; வலிகளும், வேதனைகளும், குறைவுகளுமுள்ள பூரணமற்ற சரீரத்தை அவர் பெற்றிருக்கவில்லை; ஆனால், இதற்கென்று அவர் உணர்ச்சியற்றவராகவும், அனுதாபமற்றவராகவும் இராமல், எதிர்மாறாகவே காணப்பட்டார். அவருடைய பரிபூரணமான மனமானது, நம்முடையதைக் காட்டிலும், அவருடைய உணர்வுத் திறன்கள் அனைத்தையும் விழிப்பாக வைத்தது; அவருடைய அனுதாபம் பலமாய்க் காணப்படும். மற்றும் வலியை உணரக்கூடிய அவருடைய திறன் அதிகமாகவும் இருக்கும். விழுந்துபோன சந்ததியாகிய நாம், நம்முடைய அநேக சுற்றுச் சூழல்களுக்கு மிகவும் பழக்கப்பட்டிருப்பதினால், அவைகள் சர்வ சாதாரணமாக நமக்குத் தோன்றுகின்றது. மற்றும் அவைகளை இயல்பென எண்ணிக்கொள்ளத்தக்கதாகவும் நாம் காணப்படுகின்றோம். அதாவது பூரணமான ஒழுங்குமுறையே, மனிதனுக்கான இயல்பான ஒழுங்குமுறை என்றும், குறைபாடுள்ள நிலை என்பது மனிதனுக்கான இயல்பில்லா ஒழுங்குமுறை என்றுமுள்ள காரியத்தை நாம் மறந்து விடுமளவுக்குச் சர்வ சாதாரணமாகிவிட்டது.

அற்புதம் பண்ணும் ஒவ்வொரு தருணத்திலும், நமது ஆண்டவர் தமது சத்துவத்தை இழப்பதன் வாயிலாகவும், நம்முடைய ஆண்டவர், நம்முடைய பலவீனங்களினால் தொடப்பட்டுள்ளார் என்றும் நாம் எடுத்துக்கொள்ளலாம். இதுவே, "அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்" என்று கூறும் வேதவாக்கியத்தின் அர்த்தமல்லவா? தினந்தோறும், ஒவ்வொரு மணிநேரமும் அவருடைய உயிர் ஆற்றலானது, அவர் சந்தித்தவர்களைச் சொஸ்தப்படுத்தியதிலும், ஆசீர்வதித்ததிலும், ஆறுதல் படுத்தியதிலும், போதித்ததிலும் செலவழிக்கப்பட்டது. இதை நாம் மாற்கு 5:25-34 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவத்தில் பார்க்கலாம்.

ஆண்டவர், தேவனுடைய பிரதிநிதியாக, தெய்வீக வல்லமையை மாத்திரம் பயன்படுத்தாமல், மனிதனுடைய துயரத்தை முடிப்பதற்கென அவர் தமது சரீரத்தின் வல்லமையையும்/சத்துவத்தையும் பயன்படுத்தியுள்ளார் என்ற காரியத்தைக் குறித்த எண்ணமானது, அவரிடத்திற்கு நமது இருதயங்களை நெருங்கச் செய்திடும், மற்றும் இரட்சகருடைய அன்பைக்குறித்த தெளிவானக் கண்ணோட்டத்தையும் நமக்குக் கொடுத்திடும்; மேலும், நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் அவர்மேல் நாம் நம்பிக்கை வைக்கத்தக்கதாக, சிறப்பான அஸ்திபாரத்தையும் அமைத்துத் தருகின்றது.

இப்பாடத்தில் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் அற்புதம் நடந்திட்ட சம்பவத்தில், நமது கர்த்தர் பெருமூச்சுவிட்ட விஷயமானது, அவருடைய சரீரத்தில் ஏற்பட்டுள்ள சோர்விற்கான ஆதாரமாகவும் இருக்கலாம். அதாவது, நோயாளியைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவர் தமது உயிர் ஆற்றலையும், சக்தியையும் அளித்ததின் காரணமாக ஏற்பட்ட உடல் சோர்வாகவும் இருக்கலாம். இயேசுவின் மரணமானது, முற்றிலுமாகக் கல்வாரியில்தான் நிறைவேறினது என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. மாறாக, அவர் தமது முப்பதாம் வயதின்போது, யோர்தானில் தம்மை அர்ப்பணம் பண்ணினது முதல் ஆரம்பித்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருஷமும் தொடர்ந்து நடைபெற்றது, கல்வாரியில் நிறைவு மாத்திரமே அடைந்தது என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

இதைக் குறித்து நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்குரிய முந்தின தினத்தில் கூறினார். மரணம் வரையிலான தம்முடைய அர்ப்பணிப்பைக் குறித்துப் பேசுகையில், அவர் "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது.ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்று கூறினார். (மத்தேயு 26:38; லூக்கா 12:50) இதைப் பேசின நாளுக்கு, அடுத்த நாள் அன்று, கல்வாரியில், அவர் "எல்லாம் முடிந்தது" என்று உரக்க கத்தினபோதுதான், முழுமையாய் நிறைவடைந்தது; அதாவது, மரணத்துக்குள்ளான அவரது ஞானஸ்நானம் நிறைவடைந்தது.

## “அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்”

இந்த அற்புதம் நடைபெற்றப் பிற்பாடு, ஜனக்கூட்டத்தார் “இத்தலைப்பிலுள்ள” இவ்வார்த்தைகளைக் கூறினார்கள். இந்த ஒரே ஒரு அற்புதத்தின் காரணமாகத்தான், இவ்வார்த்தைகள் கூறப்பட்டது என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில், இதே அற்புதத்தின் சம்பவத்தைப் பதிவு செய்துள்ள பரிசுத்தவானாகிய மத்தேயு, அவ்விடத்தில் அநேக சப்பாணிகளுடனும், குருடர்களுடனும், ஊமையர்களுடனும், முடமானவர்களுடனும், திரளான ஜனக்கூட்டத்தார் கூடி வந்து, நோயாளிகளை அவர் பாதத்தருகே வைத்தார்கள் என்றும், அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார் என்றும், ஊமையர்கள் பேசுகிறதையும், சப்பாணிகள் சொஸ்தமடைகிறதையும், முடவர்கள் நடக்கிறதையும், குருடர்கள் கண் பார்வை அடைகிறதையும், ஜனங்கள் கண்டு, இஸ்ரயேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்றும் தெரிவிக்கின்றார் (மத்தேயு 15:29-31).

## “தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்”

நமது கர்த்தருடைய அற்புதங்கள் தொடர்புடைய மாபெரும் மையக் கருத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதும், பிசாசுகளைத் துரத்துவதும் அவருடைய ஊழியமாக இராமல் மாறாக, “எல்லாரையும் மீட்கும் விலைப் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுக்கவே வந்தார்.” அவருடைய வேலையின் இரண்டாவது அம்சமானது, “கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களை” தம்முடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களாக அழைப்பதாகும்; இவர்கள் பெந்தெகொஸ்தே நாள் அன்றும், அது தொடர்ந்தும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள். செய்யப்பட்ட அற்புதங்களும், சொஸ்தப்படுத்துதல்களும் இடைநிகழ்வுகள் மாத்திரமே ஒழிய, அவருடைய உண்மையான வேலையல்ல. இவைகள் அவருடைய ஆயிர வருஷம் ஆளுகையின்போது, அவருடைய இராஜ்யமானது நிறைவேற்றி தீர்க்கூடிய மாபெரும் வேலைகளுக்கான, சிறிய அளவிலான உதாரணங்கள் என்றவிதத்தில், இவைகள் இடைநிகழ்வுகளாகும். “அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்” (ஏசாயா 35:5).

தெய்வீகத் திட்டத்தை விளக்குவதும், ஜனங்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பதும், ஜனங்களுடைய செவிடான காதுகளைத் திறப்பதும், (இப்பொழுது அவரால் செய்யப்பட்ட அற்புதங்களைக் காட்டிலும்) மிகவும் பெரியதும், மிகவும் பிரம்மாண்டமானதுமாகிய வேலையாகக் காணப்படும்; ஆனால், இவ்வேலையை, அவர் உன்னதத்திற்கு ஏறிச்சென்று, தம்முடைய பலியின் புண்ணியத்தை, விசுவாசிகள் நீதிமானாக்கப்படுவதற்கென ஒப்புக்கொடுப்பதுவரையிலும் நிறைவேற்ற முடியாது. ஆகையால்தான், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, “நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்” என்றார் (யோவான் 14:12).

இன்றும்கூட இயேசுவின் பின்னடியார்கள், அவர் செய்ததைக்காட்டிலும் பெரிய கிரியைகளை, அதாவது அந்த அற்புதங்களைக்காட்டிலும் பெரிய கிரியைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். காரணம் மாம்ச கண்களைத் திறப்பதைவிட, மனதின் கண்களைத் திறப்பது நிச்சயமாக பெரிய அற்புதமேயாகும்; மாம்சக் காதுகளைத் திறப்பதைவிட, மனதின் செவிகளைத் திறப்பது என்பது, பெரிய அற்புதமாகும்; மாம்ச வாயைப் பேச வைப்பதைப்பார்க்கிலும், ஊமையனை தனது மனதின் ஆவியில் தேவனைத் துதிக்கப்பண்ணுவது என்பது, மாபெரும் கிரியையாகும். நாம் சுயமாக இயேசுவைக்காட்டிலும் மாபெரும் கிரியைகள் செய்துவிட முடியாதது மாத்திரமல்ல, அவரைப்போன்று அப்படியே பெரிய கிரியைகளையும் நம்மால் செய்துவிட முடியாது. அவர் இல்லாமல் நம்மால் எதையும் செய்துவிட முடியாது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும்படிக்கும், பிசாசுகளைத் துரத்தும்படிக்கும் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைத்தபோது, அவர்களால் நிகழ்த்தப்பட்ட குணமாகுதல்கள் இயேசுவாலேயே செய்யப்பட்டதுபோல, இன்றும் இயேசுதான் தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக, இந்த மாபெரும் கிரியைகளைச் செய்து வருகின்றார்.

## "இன்னும் ஒருமுறை திரளான ஜனங்களுக்கு அற்புதகரமாகப் புசிப்பதற்கு உணவு கொடுக்கப்பட்டது"

ஏழு அப்பங்களைக்கொண்டு, நான்காயிரம் ஜனங்களைப் போஷித்துவிட்டு, மீதியானவைகள் ஏழு கூடைகளில் சேர்த்து வைக்கப்பட்ட பதிவானது இயேசுவின் வல்லமைக்கான, அதாவது அவரிடத்தில் இருக்கும் தெய்வீக வல்லமைக்கான மற்றுமொரு வெளிப்படுத்தல் ஆகும். ஐயாயிரம் பேர் போஷிக்கப்பட்டபோது, ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் பயன்படுத்தப்பட்டன. இவைகள் ஒரு சிறுவனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்திலோ, சீஷர்களிடமே ஏழு அப்பங்கள் இருந்தது. மேலும் அதை, ஜனக்கூட்டத்தாரைப் போஷிக்கும்படிக்கு முழுவதும் கொடுத்து விட்டார்கள்; மற்றும் அனைவரும் திருப்தியாய்ப் போஷிக்கப்பட்டார்கள்; மேலும், ஆண்டவரின் அறிவுரையின்படி மீதியான துண்டுகள், மீண்டுமாகச் சேர்த்துக் கூடையில் எடுக்கப்பட்டன.

இரண்டு சம்பவங்களிலுமே, ஆண்டவர் சிக்கனமான தன்மையை வெளிப்படுத்தி, தம்முடைய பின்னடியார்களுக்குச் சிக்கனமாக விவேகத்துடன் செலவுச் செய்யும் காரியத்தை ஊக்குவித்தார். பல்வேறு வகையான, மிகவும் சுவையான உணவுகளை உருவாக்குவது அவருக்குச் சுலபமான காரியமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அன்று பயன்படுத்தப்பட்ட அதே அப்பங்கள், இன்றும் பாலஸ்தீனியா குடிமக்களால் பயன்படுத்தப்படுகின்றது. அவைகள் நம்முடைய பெரிய பன்களின் (bun) அளவு போன்றே காணப்படும்; மற்றும் அவைகள் அரைக்கப்பட்ட கோதுமையினாலேயே முழுமையாய்ச் செய்யப்படுகின்றது. எகிப்து மற்றும் பாலஸ்தினியாவின் பலசாலிகளான குடிமக்கள் இந்த அப்பத்தினாலேயே பெரும்பாலும் ஜீவியத்தைக் கழிக்கின்றனர்; இரண்டு அப்பங்களை இவர்கள் உணவாக எடுத்துக் கொள்கின்றனர். இப்படியான எளிமையான உணவுகளினால் நம்மில் சிலர் கூட ஆரோக்கியமாகவும், பலசாலிகளாகவும் காணப்படுகின்றோம். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, நமக்கான அனுதின ஆகாரங்களை நன்றியுள்ள இருதயங்களுடன் புசிப்பது நமக்கான காரியமாகும்; உணவு எவ்வளவுதான் எளிமையாக இருப்பினும் அதில் ஆசீர்வாதம் காணப்படும்.

**ஆமென்!**

R 5111

# "வானத்திலிருந்து ஓர் அடையாளம்"
# மாற்கு 8:11-26

"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்."

- யோவான் 8:12.

இயேசுவின் நாட்களில் மதவாதிகளாகவும், போதகர்களாகவும் முன்னணியில் காணப்பட்ட பரிசேயர்களும், வேதபாரகர்களும் இயேசுவின் செய்தி, ஜனங்களைச் சென்றடைவதில், இயேசு அடைந்த வெற்றியினிமித்தமாக திகைத்துப்போய் எரிச்சலுடன் காணப்பட்டார்கள். இது உண்மைதான். இயேசுவின் செய்தியை மகிழ்ச்சியுடன் கேட்டவர்கள் பிரதானமாக, பொது ஜனங்களாக இருந்தனர். அதாவது, யூதமத போதகர்களால் இழிவாகப் பார்க்கப்பட்டு, "ஆயக்காரார்கள் என்றும் பாவிகள் என்றும்" அழைக்கப்படுகின்றவர்களும், சகோதரர்கள் என்று கருதுவதற்கு யூதமத போதகர்களால் மறுக்கப்படுகின்றவர்களுமான பொது ஜனங்கள் ஆவர். பரிசேயரும், வேதபாரகரும், இயேசுவைப் போட்டிப் போடுகிறவராகவும், வெற்றிப் பெற்றவராகவும் கருதினார்கள். மேலுமாக, இயேசுவினுடைய ஜீவனுக்கேதுவான அருமையான வார்த்தைகள், அநேகருடைய இருதயங்களைத் தொட்டிருப்பதினிமித்தம், ஒரு போதகராக இயேசுவிடம் காணப்பட்ட மேம்பட்ட நிலையானது, போதகர்கள் என்று தங்களுக்கு இருக்கும் கீர்த்தியை மங்கச்செய்கின்ற காரணத்தினால், இவர்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

இயேசுவை "சோதித்து" அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்றே இந்தப் பரிசேயர்கள், இயேசுவினிடத்திற்கு விசேஷமாக வந்தார்கள். "வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத்" தங்களுக்குக் கொடுக்கும்படியாக, இவர்கள் இயேசுவினிடத்தில் கேட்டார்கள். வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தல் முதலியவைகள் மூலம் இயேசு, ஜனங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் அநேக அடையாளங்களைச் சிறுமைப்படுத்துவதே, இவர்களுடைய உண்மையான நோக்கமாக இருந்தது. இந்த அநேகமான அடையாளங்களை இவர்கள் புறக்கணித்துவிட்டு, "வானத்திலிருந்து வரும் எந்த ஓர் அடையாளத்தை நீர் எங்களுக்குக் கொடுப்பீர்? என்றும், எங்களுக்கு வானத்திலிருந்து ஓர் அடையாளம் வேண்டும், இதை எங்களுக்குக் கொடுத்தருளும், அப்பொழுது நாங்கள் உம்மை நம்புவோம் என்றும் கூறினார்கள்.

மேசியா என்ன செய்வார் என இவர்கள் எண்ணிக் கொண்டிருந்த விஷயங்களிலிருந்து, இயேசு தம்முடைய மேசியாத்துவத்தை நிரூபிக்கத்தக்கதாகச் செய்த காரியங்கள் எவ்வளவு வித்தியாசமாய் இருந்தது என்பதை நாம் நினைவில் கொண்டிருந்தால், அந்நாட்களில் காணப்பட்ட யூதர்களுக்கான பிரதான அதிகாரிகள் மீது நாம் ஓரளவுக்கு அனுதாபங்கொள்ள முடியும். மேசியாவைக் குறித்த அநேக காரியங்களைத் தீர்க்கத்தரிசனங்கள் தெரிவிக்கின்றன. ஆயினும், இவர்கள் தீர்க்கத்தரிசனங்களை வாசிக்கையில், இவர்கள் அவருடைய மகிமையைக் குறித்தும், யூத தேசத்தாருக்கு வரும் வல்லமை/அதிகாரம் குறித்தும், மேசியாவின் இராஜ்யத்தின்போது, உலகத்தை ஆசீர்வதிப்பதற்கென, சகல தேசங்கள் மீது, இறுதியில் யூத தேசமானது வழங்கப் போகும் ஆசீர்வாதங்குறித்தும் பேசப்பட்ட விஷயங்களுக்கே விசேஷமான கவனம் கொடுத்தனர். முற்றிலும் வேறுவகையான மற்ற வேதவாக்கியங்களை இவர்கள் கவனிக்கவும் தவறி, போதுமானளவுக்கு அல்லது ஆழமான கவனத்துடன் கற்கவும் தவறிவிட்டனர்.

இந்த மற்ற வேதவாக்கியங்கள், மேசியா எப்படி "ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்படுவார் என்றும், மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருப்பார் (அவர் தாம் குற்றவாளியாகத் தீர்க்கப்படுவதையும், மரித்துப் போவதையும் தவிர்ப்பதற்கெனத் தம்முடைய வாயைத் திறக்கமாட்டார்)" என்றும் தெரிவிக்கின்றது. இன்னுமாக, எப்படி அவர் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைப் பிரசித்தப்படுத்துவார் என்றும், குருடர்களின் கண்களை எப்படித் திறப்பார் என்றும் தெரிவிக்கின்ற வேதவாக்கியங்களானது மகிமையான இராஜ்யத்தோடு தொடர்புடையவைகளாக இருக்கின்றனவே ஒழிய மேசியா, "மனுஷரால் நிந்திக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு" மற்றும் அவரிடமிருந்து மனுஷர்கள் தங்களது முகத்தைத் திருப்பிக்கொள்ளும் காலப்பகுதி தொடர்புடையதாக இல்லை.

உண்மைதான், இவர்கள் வேதவாக்கியங்களைச் சரியாகப் படித்திருக்க வேண்டும். இந்தத் தவறைச் செய்ததில், இவர்களுடைய தவறு எதுவுமில்லை என்று சொல்லப்படலாம்; ஒருவிதத்தில் இது உண்மையாகக்கூட இருக்கலாம். மற்றொரு விதமாகப் பார்க்கையில், இருதயத்தின் பெருமையும், எல்லாம் தெரியும் என்ற சிந்தையும்தான் உண்மையில் இவர்களுக்கான பிரச்சனை என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் தாழ்மையில்லாமல் காணப்பட்டார்கள்; ஆகவே இவர்கள் கற்பிக்கப்படத்தக்கதான நிலையில் இல்லை. இவர்களைப் போலவே இயேசுவின் செய்தியை ஏற்றுக்கொண்டிருந்த, "உத்தம இஸ்ரயேலர்களும்" தீர்க்கதரிசனங்களைத் தவறாகவே புரிந்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்த உத்தம இஸ்ரயேலர்களோ தவறாய்ப் புரிந்திருந்ததை மறைக்காமல் ஒப்புக்கொண்டு, வழிநடத்தப்படுவதற்கும், வழிக்காட்டப்படுவதற்கும் ஆயத்தமாகவும் காணப்பட்டார்கள். மேலும், இத்தகையவர்களுக்கு ஆண்டவரின் போதனைகள் கவருகின்றவைகளாகவும், ஆசீர்வாதமாகவும், அற்புதமானதாகவும் காணப்பட்டது. தெய்வீகத் திட்டம் வெளிப்படுத்துவதற்கான ஏற்ற காலமாய் (அப்போது) இருந்தபடியால், இத்தகையவர்கள் படிப்படியாக, தெய்வீகத் திட்டத்தினுடைய ஒவ்வொரு அம்சத்தையும் சரியாய்ப் புரிந்துக்கொள்ளப்படுவதற்கு ஏதுவாய் வழிநடத்தப்பட்டார்கள். மேலும், இப்படியாக இத்தகையவர்கள் ஏற்றவேளையில் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்திற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டு, மேசியாவின் மணவாட்டியாகவும், மேசியாவின் இராஜ்யத்தின் உடன் சுதந்தரராகவும் இருக்கும்படிக்குத் தேவன் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரில் தங்களை அங்கங்களாக வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

## "யோனாவின் அடையாளமேயல்லாமல் வேறே அடையாளம் இல்லை"

"அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஓர் அடையாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை விட்டு மறுபடியும் படவில் ஏறி, அக்கரைக்குப் போனார்" (மாற்கு 8:12, 13). இவர்களுக்கு அடையாளத்தைக் கொடுக்க இயேசு மறுத்துவிட்டார். பரிசுத்தவானாகிய மத்தேயு, இவர்கள் அடையாளம் கேட்டதையும், அதற்குப் பெற்றுக் கொண்ட பதிலையும் குறித்து விவரமாக பதிவு செய்துள்ளார் (மத்தேயு 16:1-4). இயேசு தாம் அதுவரையிலும் கொடுத்து வந்த அடையாளங்களின் மீது பரியோர்களின் கவனத்தைக் கொண்டு வந்தார். பின்னார் ஒரு மாபெரும் அடையாளம் இந்த ஜாதியாருக்குக் கொடுக்கப்படும் என்று கூறினார்; ஆயினும், கல்வாரியில் காரியங்கள் சம்பவிப்பதுவரையிலும், இவ்வடையாளம் கொடுக்கப்படுவதில்லை. அந்த அடையாளமானது பல ஆயிரக்கணக்கான யூதர்கள் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தினது; இவ்வடையாளத்தின் தாக்கமானது, பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்தவானாகிய பேதுரு, இயேசுவின் மரணத்தைக்குறித்தும், அவர் மூன்று நாள் கல்லறையில் இருந்ததுகுறித்தும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததுகுறித்தும் பண்ணின பிரசங்கத்தின் காரணமாக, அன்று பல்லாயிரம் நபர்கள் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டதாக அப்போஸ்தலரின் நடபடிப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களிலிருந்து உறுதிப்படுகின்றது.

யோனாவின் அடையாளத்தை இயேசு மேற்கோள் காட்டினார்; யோனா மூன்று நாள் இரவும், பகலுமாக, மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இதே காலளவு, பூமிக்குள் காணப்படுவார் என்றும், பிற்பாடு யோனா வெளியே வந்ததுபோல, மனுஷகுமாரனும் வெளியே வருவார் என்றும் தெரிவித்தார்.

நமது கர்த்தருடைய இவ்வறிக்கைக்கு எதிராக, உயர் விமர்சகர்கள் எழுப்பும் புதுக் கருத்துக்கள் தொடர்பான விஷயங்களில் அவர்கள், அவர்களுக்குள்ளாகவே சண்டைப் போட்டுக்கொள்ளட்டும் என நாம் விட்டுவிடுகின்றோம். உயர்விமர்சகர்களைப் பொறுத்தமட்டில், இயேசுவும், அப்போஸ்தலர்களும் எல்லா விதத்திலும் மிகவும் வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாக இருக்கின்றனர்; ஆனால், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களைப் பொறுத்தமட்டில், உயர்விமர்சகர்களே மிகவும் மோசமாக வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். நாம் தேவனுடைய வார்த்தைகளின் பக்கமாகவே நிற்க விரும்புகின்றோம்; "மனித ஞானத்தின்" பக்கமாக நிற்க விரும்புகின்றவர்கள் அதன் பக்கமாகவே நிற்கட்டும்.

## ‘‘பரிசேயர்களுடைய புளித்த மாவு’’

இயேசு படகில் ஏறின பிற்பாடு, பரிசேயர்களுடைய உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்கும்படிக்குத் தம்முடைய சீஷர்களை எச்சரித்தார்; பரிசேயர்களுடைய உபதேசத்தை அவர் புளித்தமாவுக்கு ஒப்பிட்டுக் கூறினார். புளிப்பு என்பது, அப்பம் பண்ணுவதற்கெனப் பிசைந்துள்ள மாவில் பரவக்கூடிய ஒன்றாகும். தேவனுடைய வார்த்தை என்பது சத்தியமாகும்; அதாவது தேவனுடைய ஜனங்கள் புசிப்பதற்குரிய அப்பமாக இருக்கின்றது. ஆனால், தேவனுடைய ஜனங்கள் புளிப்பில்லாத அப்பத்தை அதாவது, மனித கோட்பாடுகள் என்னும் புளிப்பினால் கலப்படம் பண்ணப்படாத தூய்மையான அப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். தூய்மையான அப்பமானது தூய்மையான சத்தியமாகும்.

இந்த எச்சரிப்பு அவசியமானது. காரணம், பரிசேயர்கள், யூதர்கள் மத்தியிலே மிகவும் பரிசுத்தமான அமைப்பினராகக் காணப்பட்டு வந்தனர். யூதர்களிலேயே மிகுந்த உண்மையும், மிகுந்த பக்தி வைராக்கியமும், மிகுந்த திறமையும் உள்ளவர்கள் இவ்வமைப்பிடத்திற்குக் கவரப்படுவது இயல்பே. இவ்வமைப்பானது, அது உன்னதமான மற்றும் சிறப்பானவைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது என்று கூறும் காரியங்களும்,அதன் போதனைகளும் மிகவும் அபாயமானதாகும். காரணம், அதன் அப்பம், அதன் சத்தியம், மனித பாரம்பரியங்களுடன் கலக்கப்பட்டுள்ளதாக இருக்கின்றது; மேலும், அதன் அப்பம், உடல் நலக்குறைவையும், அஜீரணத்தையும் ஏற்படுத்துகின்றது. மேலும், அதை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருடைய மனங்களையும் விஷமுமாக்கி விடுகின்றது.

இதே பாடம் இன்றுள்ள நமக்கும் கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ சபை பிரிவுகளில், ஏதேனும் சபைப் பிரிவானது மிகவும் பரிசுத்தமாய் இருப்பதாக கூறிக்கொண்டாலும் அல்லது ஒருவேளை பரிசுத்தமாய் இருப்பினும் கூட, நாம் அவர்களது புளித்த மாவை, அதாவது தவறான உபதேசத்தைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.அதாவது அதற்கு விழிப்பாய் இருந்து, அதனை தவிர்த்துவிட வேண்டும். தேவனுடைய வார்த்தைகளில் உள்ள தூய்மையான சத்தியமே, நம்மை “இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்கள் ஆக்குவதாக” இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலர் கூறுவது போன்று தூய்மையான சத்தியமே, நம்மை “எல்லாவற்றிலும், எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும்” ஆக்குகின்றது (2 கொரி 9:8; 2 தீத்து 3:15).

ஆகவே, அனைத்துப் பிரிவுகளிலும் காணப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாம், நமது மனங்களையும், நமது இருதயங்களையும், பரம பிதாவின் சித்தத்தைச் செய்வதற்குமென, நமது கர்த்தரும், மீட்பருமானவருக்கு முழுமையான அர்ப்பணம் பண்ணுவதில் இணைத்துக் கொள்வோமாக. இன்னுமாக, கடந்த காலங்களில் கர்த்தருடைய ஜனங்களை 600 பிரிவினர்களாகப் பிரித்ததில் முக்கிய பங்கு வகிக்கும், பல்வேறு விசுவாசப் பிரமாணங்களாகிய, சகல புளிப்பிலிருந்தும் சுதந்திரமாகவும், தெளிவடைந்தவர்களாகவும் விலகி நிற்போமாக. எங்குமுள்ள தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த மார்க்கப்பேதங்களை/பிரிவினைகளை நாங்கள் எதிர்த்துப் பேசுகின்றோம். மற்றும் ஒரே கர்த்தர் கீழும், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் கீழும், ஒரே தேவனும், ஒரே பிதாவின் கீழும், பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள முதற்பேறானவர்களாகிய ஒரே சபையின் கீழும் உண்மையான இருதயங்கள் இணைவதையே நாம் அதிகமதிகமாய் வாஞ்சிக்கின்றோம்.

## “இன்னும் சிந்தியாமல் இருக்கிறீர்களா?’’

பரிசேயருடைய புளித்தமாவு குறித்த இயேசுவின் உவமையான வார்த்தைகளின் அர்த்தத்தைச் சீஷர்கள் மிகவும் மந்தத்தனமாகத் தவறவிட்டார்கள். சீஷர்கள் உடனடியாகச் சொல்லர்த்தமான புளிப்பையும், சொல்லர்த்தமான அப்பத்தையும் எண்ணிக்கொண்டு, தங்களுடன் ஓர் அப்பத்தை மாத்திரம் எடுத்து வந்துள்ளதைச் சீஷர்கள் கவனித்து, இதன் காரணமாகத்தான் தங்களை ஆண்டவர் கடிந்துக்கொள்வதாக அனுமானித்துக் கொண்டார்கள். சீஷர்களது புரிந்துக்கொள்ளுதலின் கண்களாகிய மனக்கண்கள் மிக அகலமாகத் திறக்கப்படவில்லை. இவ்வளவு போதனைகளைத் தாம் அவர்களுக்குக் கொடுத்தப் பிற்பாடுங்கூட, தம்முடைய வார்த்தைகளின் கருத்தைப் புரிந்துக்கொள்வதில் இவ்வளவுக்கு மெதுவாகக் காணப்படுகின்றார்களே எனச் சீஷர்களை உடனடியாகக் கடிந்துக் கொண்டார்.

ஐந்து அப்பத்தைக் கொண்டு ஐயாயிரம் பேருக்குப் போஷித்த அற்புதத்தைச் சீஷர்களுக்கு நினைப்பூட்டி, மீதியானவைகளை எத்தனை கூடைகளில் சேர்த்துக் கொண்டதாகக் கேள்விக் கேட்டார். அவர்கள் "பன்னிரண்டு" என்று பதிலளித்தனர். பின்னர் ஏழு அப்பங்களைக் கொண்டு நான்காயிரம் பேருக்குப் போஷித்த அற்புதத்தை நினைப்பூட்டி, மீதியானவைகளை எத்தனை கூடைகளில் சேர்த்துக் கொண்டார்களெனக் கேள்விக் கேட்டார். அவர்கள் "ஏழு" என்று பதிலளித்தனர். பின்னர் அவர்கள் ஓர் அப்பம் மாத்திரம் கொண்டிருந்ததற்காக, தாம் அவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவில்லை என்று ஏன் அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை என்றும், அப்பத்தை உண்டுபண்ணுவதற்குத் தமக்கு முன்பு வல்லமை இருந்ததானால், இன்னமும் உண்டுபண்ண வல்லமை தமக்கு உண்டு என்று புரிந்துக்கொண்டு, அவர்கள் குறைவாக அப்பம் வைத்திருப்பதை, தாம் குறிப்பிடவில்லை என்பதை ஏன் புரிந்துக்கொள்ளவில்லை என்றும் இயேசு அவர்களிடம் கேட்டார்.

இதே காரியம் வேத ஆராய்ச்சியில் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் இன்று அடிக்கடி பார்க்கப்படலாம்; நமது கர்த்தருடைய போதனைகளின் கருத்தானது, சில சிறு முக்கியத்துவமற்ற விஷயங்கள் மீது மாத்திரம் ஈடுபாடுடைய மனங்களையுடைய சிலரால் முற்றிலும் புரிந்துக்கொள்ள தவறப்படுகின்றது. இதற்கான தீர்வு, தேவனோடு கொஞ்சங்கூட நெருங்கி நடப்பதேயாகும்; கொஞ்சங்கூட கவனமாக தெய்வீக வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, ஆண்டவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களென ஆண்டவருடைய மற்றும் அவரது வேலையினுடைய ஆவியை அடைய வேண்டும். இவ்விஷயத்தில் "முட்கள்" எனும் பிரச்சனையையும் நாம் மறந்துவிட வேண்டாம்; வேறொரு உவமையானது, "முட்கள்" எவ்வாறு தேவனுடைய ஜனங்களின், இருதயங்களையும், மனங்களையும் அடிக்கடித் தாக்கி, சத்திய வார்த்தையானது, அதற்குரிய பலனை இவர்களிடத்தில் கொண்டு வருவதைத் தடுக்கின்றது என்று தெரிவிக்கின்றது. இயேசு கூறியுள்ள பிரகாரம், "முட்கள்" இந்த ஜீவியத்தின் கவலைகளாகவும், ஐசுவரியத்தின் மயக்கங்களாகவும் காணப்படுகின்றது.

"பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்" (மாற்கு 8:22-25). இப்படியான ஒருமுறையை இயேசு கையாண்டதற்கான நோக்கம், நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எனினும், அநேகமாக அம்மனுஷன் விசுவாசத்தில் குறைவுப்பட்டிருந்தான் என்றும், விசுவாசத்தை, இயேசு படிப்படியாக அம்மனுஷனுக்குள் வளர்த்தினார் என்றும் நாம் எண்ணுகின்றோம். இந்த நமது கருத்தை நாம், அம்மனுஷன் ஏறெடுத்துப் பார்த்து, கொஞ்சம் நேரமாகப் பார்த்துக் கொண்டே இருந்து, பின்னர் அனைத்தையும் தன்னால் தெளிவாகப் பார்க்க முடிகின்றது என்றுள்ள பதிவிலிருந்தே எடுத்துக்கொள்கின்றோம். அம்மனுஷன் அவனது சித்தத்தின் முழு வல்லமையையும் செயல்படுத்த வேண்டும் என்றும், காரியங்களைப் பார்ப்பதற்குப் போராடவும்/முயற்சிக்கவும் வேண்டும் என்றும் கர்த்தர் எதிர்ப்பார்த்தார்.

**ஆமென்!**

---

# "மாபெரும் கேள்வி"
# மாற்கு 8:27-9:1

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." - மத்தேயு 16:16

நமது கர்த்தருடைய ஊழிய நாட்களில் ஒரு குறிப்பிட்ட காலம்வரையிலும், அவர் தம்முடைய சீஷர்களுக்குக்கூட தாம்தான் மேசியா எனத் தம்மைக்குறித்துக் கூறவில்லை. நமது கர்த்தர் ஞானமான வழியைத் தெரிந்துக் கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்று ஜனங்கள் கூறும்வரையிலும் அவர் ஒரு மாபெரும் போதகராக, ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். "மேசியா வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ?" (யோவான் 7:31) என ஜனங்கள் சொல்வது வரையிலும், அவர் ஜனங்களைச் சொஸ்தப்படுத்திக் கொண்டிருந்தார். அவர்தான் மேசியா என அவரே கூறுவதற்குப் பதிலாக ஜனங்களே அவரைக் குறித்துக் கூறுவது சிறப்பாயிருக்கும், மற்றும் அவரே அறிவிப்பதற்கு முன்னதாக, அவருடைய பின்னடியார்களின் மனதில் இந்த எண்ணம் படிப்படியாக உணரப்படுவது சிறப்பாயிருக்கும்.

எனினும் தம்முடைய சீஷர்கள் இதை அறிய வேண்டும் என்று கர்த்தர் எண்ணினார். மேலும், "ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?" என்ற கேள்வியைக் கேட்டார். அதற்குப்பதிலாக, சிலர் அவரை மரணத்திலிருந்து எழுந்த யோவான் ஸ்நானன் என்றும், சிலர் அவரை மரணத்திலிருந்து எழுந்த எலியா என்றும், வேறு சிலர் அவரைத் தீர்க்கத்தரிசிகளில் ஒருவர் என்றும் எண்ணுவதாகக் கூறினார்கள்.

அடுத்ததாக, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கர்த்தர் கேட்டார். இதற்குப் பிரதியுத்தரமாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பரிசுத்த பேதுரு பதில் கூறினார். பேதுருவின் பதில் சரியானது என்று இயேசு கூறி, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறினார் (மத்தேயு 16:17).

உடனடியாக இயேசு தமக்குப் பிரியமான பன்னிரண்டு சீஷர்களிடத்தில், தமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள அனுபவங்களைக்குறித்து விவரிக்கத் தொடங்கினார்; அதாவது, எவ்வாறு இராஜ்யம் யூதர்களுக்கு அன்புடன் வழங்கப்பட்டது என்றும், எப்படி யூதர்களுடைய பிரதிநிதிகளாகிய மூப்பர்களும், பிரதான ஆசாரியர்களும் தம்மைப் புறக்கணிப்பார்கள் என்றும், எப்படி தாம் கொலை செய்யப்படுவார் என்றும், மூன்று நாளுக்குப் பின் மீண்டும் எப்படி தாம் உயிர்த்தெழுவார் என்றும் விவரிக்கத் தொடங்கினார்.

இயேசு தம்முடைய மரணத்தைக்குறித்து, மிகவும் அழுத்தம் கொடுத்துத் தெரிவித்தார். மேலும், சீஷர்களும் அதைத் தெளிவாய்ப் புரிந்துக் கொண்டார்கள். யூதாஸ் கோபமும், ஏமாற்றமும் அடைந்தவராக, இப்படியாக இயேசு தம்முடைய எதிர்க்காலத்தைக்குறித்த கண்ணோட்டம் கொண்டிருப்பது என்பது கர்த்தருக்கும், அப்போஸ்தலர்களுக்கும் அவமானமாக இருப்பதாகக் கருதினார்; காரணம், இப்படியாகவெல்லாம் இயேசு எதிர்ப்பார்ப்புக் கொண்டிருப்பாரானால், அது அவருடைய போக்கை மாற்றி அமைக்கும், மற்றும் விரைவில் அவர் மேல் விபரீதத்தைக் கொண்டு வரும், மற்றும் கர்த்தரால் சீஷர்களுடைய மனதில் பதிய வைக்கப்பட்ட அவர்களது அனைத்து நம்பிக்கைகளையும் தகர்த்துவிடும், அதாவது கர்த்தரோடு அவருடைய சிங்காசனத்தில் உட்காருதல் முதலிய நம்பிக்கைகளைத் தகர்த்து விடுகின்றதாக இருக்கும் என யூதாஸ் கருதினார்.

சந்தேகத்திற்கிடமின்றி, அப்போஸ்தலர்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்தவர்களாக இருந்தர்கள். ஆனால், பரிசுத்தவானாகிய பேதுரு மாத்திரமே பேசுவதற்குத் துணிவு கொண்டு, பின்வருமாறு பேசினார்: "ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை. நாங்கள் அனைவரும் அறிந்திருக்கிறபடி, நீர் மேசியாவாக, இஸ்ரயேலின் சிங்காசனத்தை அடைவீர். பிற்பாடு உலகத்தின் சிங்கசானத்தையும் அடைந்து, மனுஷ சந்ததி

முழுவதற்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவீர். மேலும், நீர் வாக்களித்துள்ள பிரகாரமாக, நாங்களும் உம்முடைய சிங்காசனத்தில் உம்மோடுக் கூட காணப்படுவோம்" என்றார்.

## "எனக்குப் பின்னாகப்போ சாத்தானே"

இப்படியாக, பரிசுத்தவானாகிய பேதுரு நடந்துக்கொண்டதின் காரணமாக அவர் தெய்வீகத் திட்டத்தையும், சித்தத்தையும் எதிர்க்கின்றவராக இருந்தார்; தெய்வீகத் திட்டத்திற்கு மையமாக இருக்கும் இயேசுவின் மரணத்தில்தான், முதலாவது சபைக்கும், அடுத்து இஸ்ரயேலுக்கும், இறுதியில் சகல ஜாதிகள், ஜனங்கள், பாஷைக்காரர்கள், கோத்திரத்தாருக்குமுள்ள பல்வேறு வாக்குத்தத்தங்கள் நிறைவேறும். இயேசுவை அவருடைய அர்ப்பணிப்பின் ஆரம்பத்தில் சாத்தான் தடைபண்ண முற்பட்டதுபோல, இப்பொழுதும் தம்முடைய பலியில், தாம் முழுமையாகப் பட்சிக்கப்படுவதைத் தடைப்பண்ணுவதற்கு ஏதுவாக (பேதுருவிடமிருந்து வெளிப்பட்ட) இந்தச் வார்த்தைகள் காணப்படுவதை இயேசு உணர்ந்தார்.

இவ்விஷயத்திற்கு மிகவும் அழுத்தம் கொடுக்கும் விதத்தில், இயேசு, பரிசுத்தவானாகிய பேதுருவை நோக்கி, "எனக்கு பின்னாகப்போ சாத்தானே என்றும், உன்னுடைய வார்த்தைகள், தேவனுடைய திட்டத்திற்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மாறாக, மனித கணிப்பு மற்றும் விருப்பத்திற்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறதைச் சுட்டிக்காட்டுகின்றது" என்றும் கூறினார். பிற்பாடு "ஏற்ற காலத்திற்குரிய உணவாக" இன்னும் காணப்படாதிருந்த காரியத்தை எளிமையான விதத்தில் இயேசு, தம்முடைய பின்னடியார்களுக்குத் தெளிவுப்படுத்திட ஆரம்பித்தார்; அதாவது, அவருடைய வேலையின் எந்த ஒரு பாகத்திலும், அவருடன் பங்கடைய விரும்புகின்றவர்கள் மட்டுமே தாங்கள் கொண்டிருக்கும் பூமிக்குரிய அனைத்தையும் இழக்க வேண்டியிருக்கும் என்றும், தன்னைத்தான் வெறுத்து, தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, மீட்பரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர வேண்டும் என்றுமுள்ள விஷயங்களை எளிமையான வார்த்தைகளில் இயேசு தம்முடைய பின்னடியார்களுக்குத் தெளிவுப்படுத்த ஆரம்பித்தார்.

யாரொருவர் தனது உரிமைகளைத் தக்க வைப்பதிலும், தற்கால ஜீவியத்தைப் பற்றிப்பிடிப்பதிலும் அக்கறைக் கொண்டிருந்து, அனைத்தையும் தியாகம் செய்திட விருப்பமற்று காணப்படுகிறாரோ அவர், சிலுவையைச் சுமந்துக் கொண்டு, பூமிக்குரிய நன்மைகளை முழுமையாகத் தியாகம் பண்ணுபவர்களாய் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் மாபெரும் "பரிசாகிய" திவ்வியச் சுபாவத்தை இழந்துவிடுவார். ஆனால், யாரொருவர் இயேசுவினிமித்தமாக தனது ஜீவனை உண்மையாக இழந்துபோவாரோ, அவர் அதனை இரட்சித்துக் கொள்வார். அதாவது, ஆவிக்குரிய தளத்தில் ஜீவனைப் பலனாகப் பெற்றுக்கொள்வார்.

இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் இதே கொள்கைதான், என்றென்றும் செயல்படும். அதாவது, யாரொருவர் சுயநலமாகக் காணப்பட்டு, தனது சொந்த ஜீவனையும், தனக்கான சுயநன்மைகளையும் அன்புகூருகிறாரோ, அவர் நித்தியஜீவன் பெறுவதற்குப் பாத்திரமாகக் கருதப்படுவதில்லை; ஆனால், யாரொருவர் கர்த்தருடைய காரணங்களுக்காக, தனது நன்மைகளைத் தியாகம் பண்ணுவாரோ, அவர் நித்தியஜீவன் பெறுவதற்கு ஏதுவாக குணலட்சணத்தில் பாத்திரமானவராகக் கருதப்படுவார்.

## "மனுஷனுக்கு இலாபம் என்ன?"

இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பின் மூலமாக, ஒவ்வொரு மனுஷனுக்கும் தேவன் ஓர் எதிர்க்கால வாழ்க்கையை அளித்துள்ளார். ஆனால், தேவனால் நியமிக்கப்பட்டுள்ள வழியின் வாயிலாக, இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்கின்றவர்களாகிய இருதயத்திலும், குணலட்சணத்திலும், ஜீவியத்திலும் உயர்தன்மையுள்ளவர்கள் மாத்திரமே எதிர்க்கால ஜீவியத்தை அடைவார்கள். ஒருவேளை மனுஷன் சுயநலத்துடன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலுங்கூட, இந்தச் சுயநலம் அவன் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமற்றுப் போகச் செய்திடும். மனுஷன் தன்னுடைய ஜீவனை இழந்துவிட்டு, அதற்கு ஈடாக என்னத்தை எடுத்துக்கொள்வான்? நித்திய மகிமையையும், நித்திய ஜீவனையும் இழக்கும் பட்சத்தில், மனுஷன் இந்த இழப்பிற்கு ஈடாக அல்லது ஆதாயமாக, சொற்பகாலமான தற்கால ஜீவியத்தின் ஆஸ்தியைக் (அ) கீர்த்தியை (அ) பிரபலத்தைக் கருதுவானோ? நிச்சயமாக இல்லை. தேவன் தம்முடைய குமாரன் வாயிலாக, எந்த ஒரு தளத்திலும் நமக்கு அருளப்போகும் நித்திய காலத்திற்குமுரிய ஜீவனை

அடைவதற்கு, குணலட்சணத்தை வளர்த்தல் என்பது முற்றிலும் அவசியமான காரியமாக உள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

யாரொருவன் கர்த்தருடைய பின்னடியாராகி, ஆவிக்குரிய தளத்தில் நித்திய காலத்திற்குரிய ஜீவன் மற்றும் மகிமை எனும் பரிசை அடைய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றானோ, அவன் அனைத்தையும் முழு இருதயத்தோடே செய்ய வேண்டுமே ஒழிய, நயவஞ்சகமாக அல்லது இரகசியமாயல்ல. அவன் முழுமையாகவும், தைரியமாகவும், சரியான விதத்திலும், இயேசுவையும், அவருடைய வார்த்தைகளையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இயேசு தம்மையும், தம்முடைய வார்த்தைகளையும் சமநிலையில் வைத்துப் பேசுகின்றார். "என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ" என்று குறிப்பிடுகின்றார். இயேசுவின் வார்த்தைகள் என்பது, இயேசுவின் உபதேசங்கள் (அ) போதனைகளைக் குறிக்கின்றது. மனுஷர்கள் மத்தியில் பிரபலமில்லாமல் காணப்படும் காரணத்தினால், சத்தியத்தைக்குறித்து வெட்கப்படுவதும், தெய்வீகத் திட்டம் குறித்து வெட்கப்படுவதும், தேவனுடைய வார்த்தைகளின் போதனைகளென நாம் காண்பவைகளைக் குறித்து வெட்கப்படுவதும், கர்த்தரை அவமதிப்பதையும், அவருடைய தயவுக்கு நாம் அபாத்திரர்கள் என்று நிரூபிப்பதையும் குறிக்கின்றதாக இருக்கும்.

கிறிஸ்துவின் சபையாக இருப்பவர்கள், அவரால் பிதாவுக்கு முன்னதாகக் குற்றமற்றவர்களாக நிறுத்தப்படுவதுவரையிலும் தொடர்ந்து, கிறிஸ்துவைத் தங்களுக்கான பரிந்து பேசுபவராகப் பெற்றிருப்பது அவர்களுக்கு அவசியமாகும். ஒருவேளை அவர் தங்களுக்காகப் பரிந்துப் பேசுவதை அவர்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனில், அவர்கள் மனுஷர் மத்தியில் அவருடைய நோக்கத்தை ஆதரிக்கின்றவர்களாகவும், அவரைக்குறித்தும், அவருடைய உபதேசங்களாகிய, அவருடைய வார்த்தைகள் குறித்தும் வெட்கமடையாமலும் காணப்பட வேண்டும் (கொலோ. 1:22).

தம்முடைய சீஷர்கள் செய்ய வேண்டிய ஓர் அர்ப்பணிப்பைச் செய்திடாத மற்றத் தேசத்தார் பற்றிக் கர்த்தர் குறிப்பிடுவதை வைத்து, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை விசேஷமாகச் சீஷர்களுக்குக் கூறினார் என்பது தெரிகின்றது. மற்றவர்கள், "விபச்சாரமும் பாவமுமுள்ள சந்ததியாகக்" கூறப்படுகின்றனர். கிறிஸ்துவின் பின்னடியார்கள் சத்தியத்தின் வெளிச்சத்தை, உலகத்திற்கு உயர்த்திப் பிடிக்க வேண்டும். மேலும், இப்படியாக உண்மையாய்ச் செய்யும்போது, இவர்கள், கர்த்தர் தமது பிதாவின் மகிமைப் பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களுடன் வருகையில், ஏற்றவேளையில், கர்த்தர் இயேசுவினால் அங்கீகரிக்கப்படுவார்கள்; இவர்களை அங்கீகரிப்பதில் கர்த்தர் இயேசு வெட்கமடையமாட்டார்; இவர்களைக் கர்த்தர் தம்முடைய பிதாவுக்கும், பரிசுத்த தூதர்களுக்கும் முன்பும் நிறுத்துவார்.

## "மாபெரும் கேள்வி"

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகக் கேட்கப்பட்ட இதே மாபெரும் கேள்வியானது, இன்றும் மாபெரும் கேள்வியாக இருக்கின்றது. யார் இந்த இயேசு? சிலர் கூறுவது போன்று, அவர் ஒரு நல்ல மனுஷனாகவும், மிகவும் திறமிக்கப் போதகராகவும் மாத்திரம் இருந்திருப்பாரானால், அவர் கிறிஸ்து அல்ல. ஏனெனில், கிறிஸ்துவிடம் இந்த அனைத்துப் பண்புகளும் காணப்பட்டாலுங்கூட, இதிலும் மேலானவரே கிறிஸ்து ஆவார். கிறிஸ்துவாக இருப்பதற்கு, அவர் அனைவருக்காகவும், தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்திட்ட மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக இருந்திருக்க வேண்டும். "மற்றும் இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோத்தேயு 2:5, 6). இது அவர் சாதாரணமான பிறப்பைக் கொண்டிராமல் மாறாக, பரத்திலிருந்து பிறந்தவராக, அசாதாரணமான பிறப்பைப் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது; ஏனெனில், அவர் சாதாரணமான விதத்தில் பிறந்திருப்பாரானால், அவரும் ஆதாமின் மற்றக் குமாரர்களைப்போன்று, மரணத் தீர்ப்புக்குக் கீழ்ப்பட்டவராக இருந்து, தம்மையோ (அ) மற்றவர்களையோ இரட்சிக்க முடியாதவராகக் காணப்பட்டிருந்திருப்பார். ஆனால், அவர் கிறிஸ்துவாக, தேவனால் அனுப்பப்பட்டவராக ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்குப் பிதாவின் மகிமையைத் துறந்து, மாம்சமாக்கப்பட்டவராக இருப்பாரானால் அப்பொழுது, நாம் அவரை உலகத்திற்கான மாபெரும் மீட்பராக பார்க்க வேண்டும். அதாவது, மனுக்குலத்தை மரணத்தீர்ப்பிலிருந்து விடுவிப்பதற்கும், ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் உயிர்த்தெழுதலைச் சாத்தியமாக்குவதற்குமென ஈடுபலியாக (அ) சரிநிகர், சமான பலியாக ஆகிடுவதற்குமென மரிக்க வேண்டியது அவசியமாய் இருந்த, உலகத்திற்கான மாபெரும் மீட்பராக அவரைப் பார்க்க வேண்டும்.

இதற்கும் மேலாக, கிறிஸ்து எனும் வார்த்தையின் அர்த்தம் அபிஷேகம் பண்ணப்பட்டவர் ஆகும். அபிஷேகிக்கப்பட்ட கர்த்தர் மாபெரும் இராஜாவாகவும், தீர்க்கத்தரிசியாகவும், ஆசாரியராகவும் இருப்பார் என்றும், அவருடைய இராஜ்யம் ஆயிரம் ஆண்டுகள் காணப்படும் என்றும், பாவத்தையும், பாவத்தை விரும்புகின்றவர்களையும் அவரது இராஜ்யம் அழித்துவிடும் என்றும், தேவனுடன் நல்உறவுக்குள் திரும்ப விரும்பும் மனுக்குலத்தை அவரது இராஜ்யம் தூக்கிவிடும் என்றும் வேதாகமம் தெரிவிக்கின்றது. வேதவாக்கியங்களின்படி, இந்த இயேசுவே, மேசியா ஆவார். அவருடைய தற்கால வேலை என்பது, அவருடைய மகிமையான இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரர்களாக இருக்கத்தக்கதாக ஒரு மணவாட்டி வகுப்பாரைச் சேர்த்துக்கொள்வதேயாகும். இந்த இராஜ்யமானது, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தில் நிறைவடைந்த பிற்பாடு, உடனடியாக ஸ்தாபிக்கப்படும்.

மேசியாவைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? அவருடைய மகிமையிலும், இராஜ்யத்திலும் அவருடன் காணப்படத்தக்கதான இந்த அவருடைய அழைப்பைக்குறித்து என்ன எண்ணுகின்றீர்கள்? சுயத்தை வெறுத்தல், சுயத்தைப் பலிச்செலுத்துதல் எனும் விலையைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? மாபெரும் பலனைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? அர்ப்பணிப்பைப் பண்ணியுள்ளவர்கள் நிபந்தனைகளை மறுபடியும் சிந்தனைச் செய்து பார்க்கக்கடவர்கள்; இந்த அர்ப்பணிப்பை இன்னமும் பண்ணாதவர்கள், தீர்மானம் எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக, ஒருவேளை தாங்கள் சீஷர்களானால், தங்களுடைய பாதையில் நேர்மையுடனும், உண்மையுடனும் காணப்படுவதற்கும், புத்தியாய்ச் செய்வதற்குமென, இயேசு சொன்னது போன்று, "உட்கார்ந்து, செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்க்கக்கடவன்."

"கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பைப் புரிந்துக்கொள்பவர்கள் மாத்திரமே, தாங்கள் அர்ப்பணிப்புப் பண்ணினது முதல், ஆரம்பித்த ஓட்டத்தைப் பொறுமையுடன் ஓடுவதற்கு அவசியமான உற்சாகத்தைப் பெற்றிருப்பார்கள். மேலும், ஓட்டத்தை உண்மையாய் ஓடுகிறவர்கள் மாத்திரமே பரிசை அடைவார்கள்; மேலும், மாபெரும் பரிந்துப் பேசுபவரின் உதவியால் மாத்திரமே, ஒருவரால் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக ஜெயங்கொள்பவராகுவதற்கும், முற்றிலும் ஜெயங்கொள்பவராகுவதற்கும் முடியும்.

**ஆமென்!**

---

கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மூப்பர்களாகவும் மற்றும் இதனால் மற்றவர்களுக்குப் போதிப்பதற்குத் தகுதியானவர்களாகவும் காணப்படும் கிறிஸ்தவர்கள் வெளிப்புறமாய் மாத்திரமல்லாமல், உள்ளேயும் சுத்தமானவர்களாய் இருப்பார்கள். மாம்சத்தின் அசுசிகள் மற்றும் அருவருப்புகளிலிருந்து இவர்கள் திருவசனமாகிய தண்ணீரினால் கழுவப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இனிப் பாவத்திற்கு அடிமைகளாக இல்லாதபடியால், இவர்கள் விழுந்துபோன மாம்சத்தினுடைய பெலவீனங்கள், ஆசைகள் மற்றும் உலகத்தின் ஆவி முதலானவைகளினால் கட்டுப்படுத்தப்படுகிறதில்லை. இவர்கள் அநீதியின் கனிகளாகிய - கோபம், துர்க்குணம், பகைமை, வாக்குவாதம், புறங்கூறுதல், தீமை பேசுதல், பொல்லாத சம்சயங்களைக்கொண்டிருப்பதில்லை (2 கொரிந்தியர் 7:1).

---

# சுவாரசியமான கடிதங்கள்

## *சபை ஒழுங்குத் தொடர்பான கேள்விகள்*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

எங்களில் சிலர் பின்வரும் இரண்டு காரியங்களில் உங்களது ஆலோசனை வேண்டுமென விரும்புகின்றனர்; அவை:

(1) சபையால் அங்கீகரிக்கப்படாத அல்லது நியமிக்கப்படாத சிறு கூட்டங்களை நடத்திடும் அச்சபையின் சகோதரர்கள்பால் நாம் எத்தகைய மனோநிலையைக் கொண்டிருக்க வேண்டும்?

(2) சாட்சிக்கூட்டங்கள் நடத்துவதற்கான உங்களது பரிந்துரையையும், அவைகள் குணலட்சணத்தின் வளர்ச்சியில் பிரயோஜனமாய் உள்ளன என்று நீங்கள் தெரிவித்துள்ளதையும் நாங்கள் கவனித்திருக்கின்றோம். ஆனால் இத்தகையக்கூட்டங்கள் நடத்திடுவதற்கு மூப்பர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கையிலும், சபை இக்கூட்டங்களைப் பெற்றிருக்க விரும்புகையிலும், நாங்கள் என்ன செய்திட வேண்டும்?

### இதழாசிரியரின் பதில்:

சபையில் ஓர் அங்கத்தினனாக உரிமைபாராட்டிடும் ஒரு சகோதரன், கூட்டங்கள் நடத்துவது தொடர்புடைய விஷயத்தில் அச்சபையாரை முற்றிலும் புறக்கணிப்பது என்பது ஞானமற்றக் காரியமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம். அவர் கூட்டங்களைத் துவங்குவதும், அது குறித்து விளம்பரமிடுவதும், மற்றும் சபைகூட்டம் வழக்கமாய் நடைபெறும் நேரங்களில் அவைகளை நடத்துவது என்பதும், சபையைப் புறக்கணிப்பதாகும்; மற்றும் ஒரே மணி நேரத்தில் கூட்டங்களை நடத்துவது என்பது எதிர்ப்பாகவே கருதப்படலாம். இப்படியெல்லாம் நடைபெற்றாலும் கூட, இவை குற்றத்திற்கான அல்லது சபையில் நீக்கப்படுவதற்கான காரணமாகாது. இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறதினால், அது பரிசுத்த பவுலடிகளார் தெரிவிப்பதுபோன்று, சுவிசேஷமானது விரோதமான மற்றும் எதிர்க்கிற விதமாய் பிரசங்கிக்கப்பட்டாலும், அது பிரசங்கிக்கப்படுகிறதினால் சபையார் களிகூர வேண்டும் (பிலிப்பியர் 1:15-18). எந்த ஒரு கிறிஸ்தவ பிரிவிலுள்ள கிறிஸ்தவ ஊழியக்காரனையும், அவரது பிரயாசத்தையும்குறித்துத் தீமையாய்ப் பேசிடுவதற்கு அல்லது சிந்திப்பதற்கு உரிமையில்லாததுபோல, அச்சகோதரனையும், அவரது பிரயாசங்களையும் குறித்துத் தீமையாய்ப் பேசிடுவதற்கு அல்லது சிந்தித்திடுவதற்கு சபையாருக்கு உரிமையில்லை.

ஒருவேளை வழக்கமான கூட்டமாக இல்லாமல், எதிர்க்கும் விதமான கூட்டமாக இல்லாமல், ஒரே கால நேரங்களில் நடத்தப்படும் கூட்டமாக இல்லாமல், மாறாக தனிமையில் ஒருவரைச் சந்திக்கையில் அல்லது கொஞ்சம் பேரைச் சந்திக்கையில், சிலருக்குச் சிறு உரைக்கொடுப்பதற்கென ஒரு சகோதரன் அழைக்கப்படுவாரானால், இதில் கண்டனம்பண்ணுகிறதற்கு எந்த முகாந்தரமுமில்லை. மாறாக நாம் அனைவரும் அவருடைய அன்பையும், வைராக்கியத்தையும் பாராட்டிட வேண்டும் மற்றும் சகோதரனுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும் மற்றும் நமக்கான நன்மைகளை நாடிட வேண்டும்.

கர்த்தருடைய வேலையை மேற்பார்வையிடுவதற்கான மற்றும் சுவிசேஷத்தை இன்னொருவர் பிரசங்கிப்பதைத் தடுப்பதற்கான உரிமையினை, அவர் நம்மில் யாருக்கும் கொடுக்கவில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். முற்காலத்துச் சீஷர்கள் ஒருமுறை இப்படிச் செய்தார்கள் மற்றும் அவரோ: "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" (மாற்கு 9:39) என்று கூறிக் கடிந்துகொண்டார் (மாற்கு 9:38-40). மீண்டுமாக "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20) என்றும் கூறினார். அவர் அந்த இரண்டு அல்லது மூன்று பேர், மனிதரால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்

என்று கூறவில்லை. ஆகையால் அன்பின் அடிப்படையில், ஞானத்தின் அடிப்படையில், திவ்விய சித்தம் மற்றும் சபையின் ஒருமைப்பாட்டிற்கான மதிப்பின் அடிப்படையில் மாத்திரமே, சபையினுடைய எந்த ஒத்துழைப்பும் காணப்பட வேண்டும்.

நாம் மிகவும் வலியுறுத்தியுள்ளதான வாராந்தர சாட்சிக்கூட்டங்களுக்கு எதிர்ப்பவர்கள் இருக்கின்றார் என்று கேள்விப்படுகையில், நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது. இவ்வகையான கூட்டமானது, எங்களுடைய அனுபவத்தின்படி, ஆவிக்குரியவற்றில் மிகவும் உதவிகரமானவைகளில் ஒன்றாகும். அநேகம் இடங்களில் ஒரு கூட்டம் நடத்தப்படும் அவசியம் என்று கருதப்பட்டால், சபையார் சந்தேகத்திற்கிடமின்றி வாராந்தர சாட்சிக் கூட்டத்தையே அனைத்திலும் சிறந்தது மற்றும் மிகவும் உதவிகரமானது என்பார்கள். புதன்கிழமை மாலை வேளையானது இவ்வகைக் கூட்டங்களுக்கு மிகப் பொருத்தமானதாக இருக்குமென்று நாம் பரிந்துரைக்கின்றோம். முந்தின வியாழக்கிழமைக்கான மன்னாவானது வாராந்தர ஆய்வுபொருளாக இருக்கும்படிக்கு நாம் ஏற்கெனவே பரிந்துரைத்திருக்கிறோம். இதைக் கடைப்பிடிக்கையில், உலகமெங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் ஒரே விஷயத்தின் அடிப்படையில் ஆராய்ந்திட முடியும் மற்றும் சிந்தித்திட முடியும் மற்றும் அதே அடிப்படையிலான அனுபவங்களைப் பகிர கேட்டிடலாம் மற்றும் இதனால் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

எங்குமுள்ள சபையார் இம்முறையை நடத்திப்பார்க்க நாங்கள் பரிந்துரைக்கின்றோம். ஜீவியத்தின் அனுபவங்களில் கர்த்தருடைய வழிநடத்துதலை எதிர்ப்பார்க்கும் பழக்கம் வந்திடுமானால் மற்றும் அனுபவங்களையும், படிப்பினைகளையும் கவனித்து, அவைகளைத் திவ்விய வார்த்தைகளுடைய அறிவுரையுடன் ஒப்பிட்டுப் பார்த்திடும் பழக்கம் வந்திடுமானால், அவர்கள் சாட்சிப் பகிர்ந்திடுவதற்கு அநேகவற்றைப் பெற்றிருப்பார்கள். இவ்வழிமுறையினைப் பின்பற்றுபவர்கள், முந்தையக் காலங்களைக் காட்டிலும் இப்பொழுது எப்படி ஒவ்வொரு நாளும் மிகவும் விலையேறப் பெற்றதாய் உள்ளது என்று கவனிக்கையில் ஆச்சரியமே அடைவார்கள்.

அநேகருக்கு வாழ்க்கை என்பது அன்றாடக் கடமையாக அல்லது ஒரு கனவாகக் காணப்படுகின்றது. புதுச்சிருஷ்டிகளென நாம் ஒவ்வொரு நாளையும், கிறிஸ்தவ அனுபவங்களினாலும் மற்றும் திவ்விய வார்த்தைகளினால் வழிநடத்தப்படும் மற்றும் வனையப்படும் எண்ணங்களினாலும் நிரம்பினவையாகப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம். இந்தப் பாக்கியமான நிலைமையானது, நாம் சுட்டிக்காட்டியுள்ளதான வழிமுறையினால் பெரிதும் அடையப்பெறுகின்றது. நாம் வாசித்திருக்கும் வசனங்களின் மற்றும் அதிகாரங்களின் எண்ணிக்கை அடிப்படையில், கிருபையிலுள்ள நம்முடைய வளர்ச்சியானது காணப்படாமல், மாறாக தேவனுடைய சித்தம் குறித்து நாம் ஏற்கெனவே அறிந்திருப்பவைகளை மற்றும் தினந்தோறும் கற்றுக் கொண்டிருப்பவைகளை நம்முடைய இருதயங்களும், மனங்களும், சித்தங்களும் செயல்படுத்துவதின் அடிப்படையிலேயே காணப்படுகின்றது.

மூப்பர்கள் அல்ல, சபையாரே, தாங்கள் என்ன கூட்டங்கள் நடத்த விரும்புகின்றார்கள் என்பதைத் தீர்மானித்திட வேண்டும். மேலும் சபையார் தீர்மானித்திடும் போதும்கூட, மூப்பர்கள் ஊழிய பொறுப்பினின்று விலகுவதற்குரிய (resigning) உரிமையினை உடையவர்களாகவே நிச்சயமாகக் காணப்படுகின்றனர். கர்த்தருடைய வீட்டாருக்கு ஊழியஞ்செய்ய விரும்புவதற்குப் பதிலாக, அதை ஆளுவதற்கு விரும்பிடும் இத்தகைய மூப்பர்கள் ஊழியத்தினின்று விலகுவது என்பது மூப்பருக்கும், சபையாருக்கும் நலம் பயக்கின்றதாய் இருக்கும்.

எங்களது அனுபவங்களின்படி, பெரும்பாலும் எதிர்ப்புகள் என்று தோன்றுகிறவைகள், தவறான புரிந்துகொள்ளுதல்களாய்க் காணப்படுகின்றன. மீண்டுமாக வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியினைக் கவனமாய் ஆராய்ந்திடும்படிக்கு நாம் ஆலோசனைக் கூறுகின்றோம். நம் அனைவரின் ஞாபகங்களானது எத்தனை ஓட்டை ஒழுக்காக இருக்கின்றது என்பதை அருமையான நண்பர்களே, உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம்; வேதாகம பாடங்களினுடைய முழு ஆறு தொகுதிகளையும், ஒவ்வொரு வருடமும், நாளொன்றிற்குப் பன்னிரண்டு பக்கங்கள் வைத்து வாசிப்பதாகிய அநேகரால் பின்பற்றப்பட்டுவரும் வழிமுறையின் ஞானத்தை அருமையான நண்பர்களே, உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். இவ்வழிமுறையினைப் பின்பற்றுபவர்கள் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதாகத் தகவல் கொடுத்துள்ளனர் மற்றும் சத்தியத்தில் மிகுந்த தெளிவாகியுள்ளதற்கு இவர்கள் சான்றும் பகர்கின்றனர்.

---

[R5128]

# மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள்

"என் கட்டளைகளையும், என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள், அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்" என்றும், "நியாயப்பிரமாணத்தின்படி செய்கிற மனுஷன், இவைகளால் பிழைப்பான" என்றும் நியாயப்பிரமாணத்தைக் குறித்த அறிக்கை திட்டவட்டமாகக் காணப்படுகின்றது. (லேவியராகமம் 18:5; ரோமர் 10:5) ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தை, தேவன் யூதர்களுக்கு அளித்தபோது, அதை நாம் எந்தவிதத்தில் நிறைவேற்றுவார் என்பது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கவில்லை. யூதர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையில், நிழல்களைக் குறித்து புரிந்து கொள்ளவில்லை என்றாலும், உடன்படிக்கையை காத்துக் கொள்வதன் மூலம், அதாவது, பலியின் மூலம் நித்திய ஜீவன் கிடைக்கும் என்பதை தேவன் காட்டியுள்ளார்.

யுகங்களைக் குறித்த தேவனுடைய மாபெரும் திட்டத்தில், தேவன் ஏற்கனவே ஒரு மீட்பரை அளித்துள்ளார் (எபேசியர் 1:4). ஆகவே இந்த தெய்வீக கிருபையின் வாயிலாகவே, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம், வாக்களிக்கப்பட்ட ஜீவன் ஏற்படுத்தப்பட முடியும். ஆனால் நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கொடுத்ததில், தேவன், மீட்பின் வேலைக்கு நிழலாய் காணப்படும் மாபொரும் பாவநிவாரணபலியை தவிர்க்கவில்லை.

நமது கர்த்தர் மாம்சம் ஆக்கப்படுவதற்கு முன்பு, அவர் சில விஷயங்களை புரிந்திருந்தார் என்பதற்கான ஆதாரம், அவர் விருப்பத்துடன் சுபாவ மாற்றத்திற்குள் கடந்துப்போன விஷயமாகும் (பிலிப்பியர் 2:8). அவர் தேவதூதர்களின் சுபாவத்தை/சாயலை எடுக்காமல், ஆபிரகாமின் சந்ததியாருடைய சுபாவத்தை எடுத்துக் கொண்டார் (எபிரெயர் 2:16). ஆபிரகாமின் சந்ததியாருடைய சுபாவத்தை எடுத்துக் கொள்வதற்கு, கர்த்தருக்கு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அவர் "தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு" இப்படியாக செய்தார் (எபிரெயர் 12:2). இவைகள், அவர் நிறைவேற்ற வேண்டிய வேலையின் தன்மை குறித்த அறிவு அவருக்குக் கொஞ்சம் காணப்பட்டது என்பதை காட்டுகின்றது.

நமது கர்த்தர், மாம்சத்தில் வருவதற்கு முன்பு, தாம் பிற்காலங்களில் "நிஜமாக" இருக்கப் போகிற பல்வேறு "நிழல்கள்" முதலியவற்றையும் அவர் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், தாம் ஆவிக்குரிய சுபாவத்திலிருந்து தாழ்ந்து, பூமிக்குரிய சுபாவத்தில் மனுஷனாக வேண்டும் என அறிந்திருந்தார். மேலும் இந்த மாபெரும் அடியை முன் எடுத்து வைப்பதற்கு, கர்த்தர் இயேசுவுக்கு, தம்முடைய பிதா தமக்கு பாதகமாக எதையும் செய்யாமல், தம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே செய்வார் என தன் பிதா மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருப்பது அவசியமாயிருந்தது. மேலும் அவருடைய விசுவாசம் பிதாவின் மீது அதிகமாக இருந்தபடியால், பிதாவின் சித்தத்தை எதை இழந்தாகிலும் நிறைவேற்ற விருப்பம் கொண்டவராகக் காணப்பட்டார்.

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் முதற்படியாக, அவர், ஆவிக்குரிய தளத்தில் காணப்படும் அனைவரைக் காட்டிலும் கீழான சுபாவமாகிய, மனித சுபாவத்தை எடுக்க வேண்டி இருந்தது. பின்னர் மனிதனாக்கப்பட்ட அவர், மரணம் வரை, அதாவது சிலவையின் மரணபரியந்தம்

தம்மைத் தாழ்த்தினார். (பிலிப்பியர் 2:8) அவர் மனிதனாவதற்கு முன்பு தம்மை தாழ்த்தாமல், பின்னரே தாழ்த்தினார். அவர் சிறுவனாக இருந்தபோது, தம்முடைய ஊழியத்தை ஆரம்பிப்பதற்கான சரியான காலம் எதுவாக இருக்கும் என அறிந்து கொள்ளும் பொருட்டு, நியாயசாஸ்திரிகளிடம் விசாரித்தார். மேலும் தற்போது செய்வதற்கு எதுவும் இல்லை என்று இயேசு, தமது விசாரணையின் மூலம் அறிந்த திருப்தியில், தமது தாய் மற்றும் தாயின் கணவரோடு, வீடு திரும்பி, 30-ம் வயதை அடையும்வரை அவர்களுக்குக் கீழ்படிந்திருந்தார். (லூக்கா 2:51).

30-ம் வயதை அடைந்தபோது, இயேசு தம்மை அர்ப்பணிக்கும் வண்ணமாக, யோர்தானுக்குக் கடந்து போனார். அவர், தாம் மனுஷனுடைய மீட்பராக உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றார் என்றும், தமது மீட்பின் வேலையைக் குறித்த தேவசித்தம், வேதவாக்கியங்களில் உள்ள நிழல்களில் அவர் எழுதி இருக்கின்றார் என்றும், இந்த சித்தத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் தொடர்பில்லை, காரணம் இம்மீட்பின் வேலையானது, நியாயப்பிராணத்தைக் கைக்கொள்ளுகிறவர் மேல் கடமையாகக் காணப்படவில்லை என்றும் அறிந்திருந்தார். மேலும் இந்த மீட்பின் வேலையை தாம் செய்வதற்கு, அவர் தம்மையே பலி செலுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார் (சங்கீதம் 50:5). "இதோ... என் தேவனே உம் சித்தம் செய்ய வருகிறேன்" என்று மகிழ்ச்சியுடன் தம்மை ஒப்புக் கொடுத்தார்.

## "இதுவரையிலும், மீட்பின் வேலையில் ஒரு பாகமே நிறைவேறியுள்ளது"

பாவநிவாரணநாள் அன்று, பிரதான ஆசாரியன் காளையை அடித்துக் கொல்வது, நமது கர்த்தருடைய அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகின்றது. இந்த நிழலில் காளை மற்றும் ஆசாரியன் இரண்டு பேரும் நமது கர்த்தருக்கு அடையாளமாக இருக்கின்றனர். புதிய மனம், புதிய சித்தம், புதிய சிருஷ்டி மாம்சத்தை ஒப்புக்கொடுக்கின்றது. அவர் தம்மை மனுஷருடைய மீட்பராக ஒப்புக்கொடுக்கவில்லை, மாறாக அவர் தம்மை பலியாக ஒப்புக்கொடுத்தார். மேலும் அவர் தம்மை மனுக்குலத்திடமோ, சாத்தானிடமோ, உலகத்திடமோ ஒப்புக்கொடுக்காமல், தேவனிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் மிகவும் உண்மையுள்ளவராகக் காணப்பட்டபடியால், தம்மிடத்தில் உள்ள யாவற்றையும், பிதாவுக்கு பலி செலுத்த ஆயத்தமாய் காணப்பட்டார். மரணம் வரையிலுமான, அவருடைய உண்மையையும், நேர்மையையும் நிரூபித்துக் காட்டுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டார்.

மரணம் வரையிலுமான, அதாவது, அவமானமான சிலுவை மரணம் வரையிலுமான, அவருடைய கீழ்ப்படிதலின் நிமித்தமாக, நமது கர்த்தர், மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, மிக உயர்ந்த சுபாவமாகிய, திவ்விய சுபாவம் கொடுக்கப்பட்டது. இன்னும் ஏற்றக் காலத்தில், அவர் தமது பலியின் புண்ணியத்தை, முழு மனுகுலத்திற்கான பாவத்திற்குரிய ஈடுபலியாக அர்ப்பணிக்க அனுமதிக்கப்படுவார். இவ்விதமாக அவர் உலகத்தின் மீட்பர் ஆவார்.

மீட்பர் என்ற வார்த்தை பரந்த அர்த்தம் கொண்டதாகும். ஒருவர், ஏதோ ஒன்றின் மீது ஆளுகைப் பெற்றுக் கொண்டு, அதை சட்டப்பூர்வமாகவும், திருப்திகரமாகவும் மீண்டும் அதின் முந்தின சீருக்கு கொண்டு வருவதே, இவ்வார்த்தையின் அர்த்தமாகும். நமது கர்த்தர் இவ்வேலையை செய்ய ஆரம்பித்தார். அவர் இவ்வேலையின் முதற் பாகத்தை நிறைவேற்றியுள்ளார். மேலும் இது ஏற்றக் காலத்தில் உலகத்தின் பாவத்திற்கான விலையாக மாறும். அவர் ஏற்கனவே உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டவராகவும், தேவனுக்கும், மனுஷருக்கும் இடையே மாபெரும் மத்தியஸ்தர் வேலைக்கு

தகுதியடைந்தவராகவும் காணப்படுகின்றார். அவர் தமது சரீர அங்கங்கள் தம்முடைய மகிமையில் பங்கடைந்து, தம்மோடு இணைந்து கொள்ளும்வரை காத்திருக்கின்றார். பின்னர், மனுகுலத்தின் திரும்பக்கொடுத்தல் வேலை ஆரம்பமாகும்.

இந்த மீட்பின் வேலையில் உள்ள இரண்டாம் பாகத்தை ஆயிரம் வருடமளவும் நமது கர்த்தர் செய்வார். ஆயிரவருடத்தின் முடிவில், இவ்வேலை நிறைவடையும். அவர் அந்த வேலையை செய்து முடித்ததினால், தற்போது மீட்பராக இராமல், அதை செய்வதற்கான அதிகாரமும், வல்லமையும் அவரிடத்தில் இருப்பதினாலேயே, அவர் தற்போது மீட்பராக கருதப்படுகின்றார். ஆயிரவருட அரசாட்சியின் முடிவில், அவர் இந்த திரும்பக்கொடுத்தலின் வேலையை நிறைவேற்றினவராக காணப்படுவதின் காரணமாக, அவர் என்றென்றும் மீட்பராக அழைக்கப்படுவார். மீட்பின் வேலை முடிவு பெற்றிருந்தாலும், என்றென்றும் மீட்பராக அழைக்கப்படுவார்.

நமது கர்த்தர் தாம் உலகத்திற்கு வந்த பின்னர், எப்படி பிதாவை பிரியப்படுத்த வேண்டும் என்று அறிந்துகொண்டதை விளக்கும்விதமாக, எவ்வித வேதவாக்கியங்களும் காணப்படவில்லை. ஆகையால், இவ்விஷயத்தில் நாம் பிடிவாதமாகக் காணப்படக் கூடாது. எனினும், தாம் மாம்சத்தில் இருக்கும் போது தாம் கடந்துசெல்ல வேண்டிய அனைத்து அனுபவங்களை, அவர் அறிந்திருக்கவில்லை. சில விஷயங்கள் பின்னர் தான் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. நாம் வாசிக்கிறபடி, அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்னரே, அவருக்கு வானங்கள், அதாவது உன்னதமான விஷயங்கள், அதாவது ஆவிக்குரிய விஷயங்கள் திறக்கப்பட்டது (மத்தேயு 3:16). அது முதற்கொண்டு தான், அவரால் தெய்வீக திட்டத்தின் ஆழமான அம்சங்களை உணர்ந்துகொள்ள முடிந்தது. **ஆமென்!**

# “எல்லாம் கூடும்”

## மாற்கு 9:14-29

“இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்”- மாற்கு. 9:23.

இயேசுவும், அவருடைய அபிமான மூன்று அப்போஸ்தலர்களும் மறுரூப மலையில், மகிமையின் விஷயங்களைக் கண்டுவிட்டு, மலையிலிருந்து இறங்கி வந்தபோது, மலையின் அடிவாரத்தில் திரளான ஜனக்கூட்டம், அவருடைய மீதமுள்ள ஒன்பது அப்போஸ்தலர்களைச் சூழ்ந்திருக்கக் கண்டார்கள். ஒரு தகப்பன், தன்னுடைய குமாரனிடத்தில் காணப்பட்ட அசுத்த ஆவியை வெளியே அனுப்பும்படிக் கேட்க வந்தபோது, அப்போஸ்தலர்கள் அதைத் துரத்த முயற்சித்தும், கூடாமற்போயிற்று.

இப்படியே சில கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் நடக்கின்றது. அதாவது, அவர்கள் அடிக்கடி விசுவாசத்தில் மலைகளுக்கு அதாவது, இராஜ்யத்திற்குப் போவதுண்டு. மேலும், விசுவாசத்தில் அவர்கள் மகிமையின் கர்த்தரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைய வேண்டுமெனில், அவரோடு கூடப் பாடுபட வேண்டும் என்ற வார்த்தைகளைக் கேட்பதுண்டு. அவர்கள் மகிமையான விஷயங்களைக் குறித்த சிந்தனையின் உச்சக்கட்டத்திற்குப் போய்விட்டு, கீழே இறங்கி, தற்காலத்திலுள்ள (நிஜவாழ்க்கையின்) உண்மைகளை எதிர்க்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது; அதாவது, எதிராளியானவன் இன்னும் உலகத்தை தன் வசத்திலேயே வைத்திருக்கின்றான் என்றும், அநேகர் அவனுக்கு அடிமைகளாகவும், அவனுடைய ஏமாற்றத்துக்கு ஆளானவர்களாகவும் காணப்படுகின்றார்கள் என்றும், அவனை வெளியேற்றுவதற்கு எந்தப் பூமிக்குரிய வல்லமைகளும் போதுமானதாக இல்லை என்றுமுள்ள நிஜவாழ்க்கையின் உண்மைகளை எதிர்க்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது. ஒருவேளை போதகர் சபையோடு காணப்படும்போது, இறுதியில் அனைத்திலும் வெற்றிக் கிடைக்கும்.

சிலரில் அசுத்த ஆவி எப்போதும் குடிக்கொண்ட நிலையில் காணப்பட்டாலும், இச்சம்பவத்தில் வரும் சிறுவன் அவ்வப்போது, ஒரு தீய ஆவியினால் ஆட்கொள்ளப்படுகின்றான். தீய ஆவி இந்தப் சிறுவனுக்குள் வரும்போது, அவனை அலைக்கழித்து, நுரைத்தள்ளச் செய்து, அவனைக் கொல்லும்படி, சில சமயம் தீயிலும், தண்ணீரிலும் தள்ளிப் போட்டது. அவனுடைய பெற்றோர்கள், அவன் சுகம் பெறுவதற்கென, இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ஆனால், இயேசு இல்லாத காரணத்தினால் அவர்கள், அங்கிருந்த மீதமுள்ள ஒன்பது அப்போஸ்தலர்களின் உதவியை நாடினார்கள். ஆனாலும், அப்போஸ்தலர்களின் முயற்சி பலனளிக்கவில்லை. தீய ஆவியை அவர்களால் துரத்தக் கூடாமற்போயிற்று.

துரத்த முடியாத சீஷர்கள் தடுமாறினார்கள். அதுவரையிலும் தங்களுடைய போதகரின் நாமத்தினால், தீய ஆவிகளைத் துரத்துவதில் முடியாமற்போனதில்லை. வேதபாரகர்களும் அவர்களுடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவும், மூன்று சீஷர்களும் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறதைக் கண்டு, திரளான ஜனங்கள், இயேசுவுக்கு வந்தனஞ் சொல்லி, அவரைச் சூழ்ந்துக் கொண்டார்கள். இயேசு அப்போஸ்தலர்களுக்கு உதவும்படி, அவர்களுடைய பிரச்சனையை வினவினார். “அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைத்தள்ளி, பல்லைக் கடித்து, சோர்ந்துப்போகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால் கூடாமற்போயிற்று என்றான். அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார். அவனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையிலே விழுந்து, நுரைத்தள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும்

தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றான்" (மாற்கு 9:17-22).

## "விசுவாசிக்கிறவனுக்கு"

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்" (மாற்கு 9:23). தெய்வீக வல்லமையின் மேலுள்ள விசுவாசத்தைச் செயல்படுத்தும்/காட்டும் விஷயத்தில் கர்த்தர் எவ்வளவு அழுத்தம் கொடுக்கின்றார். "விசுவாசமில்லாமல், தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியமாகும்." விசுவாசத்தைச் செயல்படுத்தாதவர்களுக்கு, ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள முடியாது. அதாவது, விசுவாசத்தைச் செயல்படுத்துகிறவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதத்தை, விசுவாசிக்காதவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய விசுவாசத்தை எந்தளவுக்குச் செயல்படுத்துகின்றோமோ, அந்தளவுக்கு ஆசீர்வாதங்கள் பெருகுகின்றது. இவ்விதமாக, இந்தக் குணலட்சணங்களுக்கு உயர் மதிப்பைக்கொடுத்து, தம்முடைய தயவைப் பெற்றுக்கொள்ள இது அவசியமானது என்று கர்த்தர் காட்டுகின்றார்.

தற்போது விசுவாசத்தைச் செயல்படுத்தாத ஜனங்கள், ஒருபோதும், எவ்வித ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, இவர்களுக்கும் சில மகா மேன்மையான வாக்குத்தத்தங்களை அருளியுள்ளார். இத்தகையவர்களுக்கு மேசியாவின் இராஜ்யத்தில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பாதை மிக எளிமையாகக் காணப்படுவதால், இவர்கள் அனைவரும், அதில் பிரவேசித்துப் பலனை அதாவது, தற்காலத்திலேயே விசுவாசமும், கீழ்ப்படிதலும் காட்டுகிறவர்களைக் காட்டிலும் குறைவான பலனை அடைவார்கள்.

இதற்கான காரணம் வெளிப்பட்டுள்ளது. இயேசுவுடன் உடன்சுதந்தரவாளிகளாக இருப்பதற்கும், அவருடைய மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைவதற்குமென, உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ள ஒரு விஷேசித்த வகுப்பாரைத் தேவன் இப்பொழுது தேடிக் கொண்டிருக்கின்றார். உலகம் முழுவதும் தம்முடைய ஆசீர்வாதத்தைப் பரப்புவதற்கு, தேவன் இக்காலத்தில் ஒரு வகுப்பாரைத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார். மேலும், தம் மீது முழுமையான விசுவாசம் காட்டக் கூடியவர்களை மாத்திரம், இவ்வகுப்பாரின் அங்கங்களாகத் தெரிந்துக்கொள்ள தேவன் விரும்புகின்றார். "உன்னுடைய விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது" எனும் விதமே, சபையினிடத்தில் தேவன் கையாளுகிறவிதமாக உள்ளது.

இந்த அற்புதத்திலும் சரி, மற்ற அற்புதங்களிலும் சரி, சுகம் கொடுப்பதற்கு, கர்த்தர் விசுவாசத்தையே எதிர்ப்பார்த்தார். இவ்விதமாகத் தமக்கு வரவிருக்கிற மகிமையையும், தமது இராஜ்யத்திற்குரிய வல்லமையையும், வெளிப்படுத்தினார். இராஜ்யத்தின் காலகட்டத்தில், சாத்தானையும் மற்றும் பாவத்தின் ஒவ்வொரு வல்லமையையும் வெளியேற்றுவதற்கும், தங்களுடைய மாம்சத்தில் சுகமாக்குதலை அனுபவிக்கிறதற்கும் ஏதுவாக, தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்த விரும்புகிற யாவருக்கும் உதவி கொடுக்கப்படும் மற்றும் தெய்வீக வல்லமை செயல்படுத்தப்படும்.

இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அந்த ஏழை தகப்பன், பிரச்சனை தன்னிடத்தில் இருக்கின்றது என்றும், தான் விசுவாசம் காட்டவில்லையெனில், தன்னுடைய குமாரன் சுகம்பெற முடியாது என்றும் உணர்ந்துக் கொண்டு, "உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்" (மாற்கு 9:24). அவருடைய விசுவாசத்துக்குரிய பலனைப் பெற்றுக்கொண்டார். அந்தத் தீய ஆவி, அவனிடத்திலிருந்து வெளியேறவும், அவனிடத்தில் இனி ஒருபோதும் பிரவேசிக்கக் கூடாது என்றும் இயேசு கட்டளையிட்டார். இதுவே சுகம் பெற்றதற்கான விசேஷமான அறிகுறியாகும். அந்தத் தீய ஆவி, அவனைவிட்டு அநேகந்தரம் வெளியே போனாலும், மீண்டும் அவனுக்குள் திரும்பி வந்தது. அவனை விட்டு வெளியேறவும், மீண்டும் ஒருபோதும் வரக்கூடாது என்பதே கர்த்தருடைய கட்டளையாக இருந்தது.

தீய ஆவி வெளியேறும்போது, அது அவனை அழ வைப்பதற்கும், அவனுக்கு வலி முதலியவற்றை ஏற்படுத்துவதற்கும் போதகர் ஏன் அனுமதித்தார் என்று யோசிக்கலாம். அதை வெளியேற்றுவதற்கே கர்த்தருக்கு வல்லமை இருக்குமாயின், அது வெளியேறும் விதத்தை,

கட்டுப்படுத்தும் வல்லமையும் அவரிடத்தில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்தத் தீய ஆவியானது எவ்வளவு வன்மமும், தீமையும் கொண்டது என்று விவரித்துக் காட்டுவதற்கு, அது வெளியேறும் விதத்தைத் தெரிந்துக்கொள்வதற்கு இயேசு அனுமதித்தார் என்று நாம் அனுமானிக்கின்றோம்.

## "அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொன்னார்கள்"

சிறுவன் செத்த நிலையிலிருப்பதுபோன்று காணப்பட்டான். இயேசு, அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கிவிட்டார். எதிராளியானவனும், அவனுடைய வல்லமையும் உலகத்திலிருந்து துரத்தப்படுவதோடல்லாமல், உலகமானது பாவம் மற்றும் மரணத்திலிருந்து தூக்கி எடுக்கப்படுவதற்கு, தெய்வீக வல்லமையின் கரங்கூட அவசியப்படுகின்றது என்ற பாடம் நமக்கு இங்குள்ளது. வேத வாக்கியங்களின் அடிப்படையில் நாம் பார்க்கும்போது, சாத்தான் கட்டப்படும் காலத்திற்கும், மனுகுலத்தின் மீதான அனைத்துத் தீமையின் ஆதிக்கங்களும் எடுத்து மாற்றப்படுவதற்குமான காலம் சமீபித்துள்ளது. வேத வாக்கியங்களின் அடிப்படையில் நாம் பார்க்கையில், இந்தச் சாத்தான் கட்டப்படுங்காலம், மகா உபத்திரவக் காலத்தில் அதாவது, ஒரு ஜாதியாரும் பார்த்திராத உபத்திரவக் காலத்தில் நிறைவடையும். மேலும், மனுக்குலம் அப்பொழுது செத்த நிலையில் விடப்பட்டிருக்கும். மனுஷருடைய பெருமை, நம்பிக்கை, இலட்சியங்கள், அந்தப் பயங்கரமான உபத்திரவக் காலத்தில் மறைந்துவிடும். ஆனால், அப்போது அவர்களைத் தூக்கி விடும்படிக்கு, போதகர் தமது இராஜ்யத்தில் காணப்படுவார்.

மேசியாவின் இராஜ்யமானது எதிராளியானவனைக் கட்டி, அவன் மீண்டும் மனுக்குலத்திற்குள் பிரவேசியாதே என்று கட்டளையிடுவதோடல்லாமல், விழுந்துபோனவர்களை ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வீக நியமங்களுக்கு ஒத்த நிலையில் திரும்பக் கொண்டு வரத்தக்கதாக படிப்படியாக உயர்த்துவதற்கு ஏதுவாகவும், இராஜ்யத்தின் வல்லமையானது செயல்படும்.

சீஷர்கள் தங்களால் ஏன் அந்தத் தீய ஆவியை, வெளியேற்ற முடியாமற் போயிற்று என்று இயேசுவினிடத்தில் கேட்டார்கள். இதைப்போலவே, அநேக தேவனுடைய ஜனங்கள் அநேகந்தரம் தங்களிடத்திலேயே சில கேள்விகள் கேட்டிருக்கின்றார்கள். அதாவது, சாத்தானையும், பாவத்தையும், அதன் ஆளுகையையும் எதிர்க்கிற விஷயத்தில், ஏன் எங்களால் இன்னும் அதிகமாகச் செய்ய முடியவில்லை என்று கேட்கலாம். இயேசு அன்று அவர்களுக்குக் கூறிய பதில், நம் கேள்விகளுக்கும் பதிலாக அமைகின்றது. அதாவது, "இவ்வகை பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது" என்றார் இயேசு (வசனம் - 29). பாவம் மற்றும் சாத்தானைத் தாங்கள் எதிர்த்துப் போராடுகிற விஷயத்திலும், மற்றவர்களைப் பாவத்தின் வல்லமையினின்று விடுவிக்க உதவுகிற விஷயத்திலும், தேவனுடைய ஜனங்கள் அதிகம் செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை. எப்படியெனில், நாம் ஒருவேளை எப்போதும் முழுமையான விசுவாசத்தைச் செயல்படுத்தினவர்களாகவும், மாம்சத்தில் குறைவாகவும், ஆவியில் அதிகமாகவும் தொடர்ந்து ஜீவிக்கிறவர்களாகவும் இருப்போமானால், நம்மால் அதிக விஷயங்களை நிறைவேற்ற முடியும். அதாவது, உபவாசத்தில் அல்லது சுயத்தை வெறுத்தல் மற்றும் தேவனிடத்தில் ஜெபம் அல்லது ஐக்கியம் கொள்வதினால் ஆகும். விசுவாசிக்கிறவர்களுக்கு, தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வாக்குத்தத்தம் பண்ணியுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் கிடைக்கும். ஆனால், நமக்கு ஒரு நிபந்தனையும் உள்ளது. அதென்னவெனில், "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்பதேயாகும்.

**ஆமென்!**

---

# "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்"

**(1தெசலோனிக்கேயர் 5:19)**

வேத வாக்கியங்களில், பரிசுத்த ஆவியின் வெளிச்சமூட்டும் வல்லமையை அடையாளப்படுத்துவதற்கு வெளிச்சம்/ஒளி என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசாரியர்கள் அபிஷேகம் பண்ணப்படுவதற்குப் பயன்படும் எண்ணெய் மாத்திரமல்லாமல், பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படும் பொன் குத்து விளக்கின் வெளிச்சமும் கூட, தேவனுடைய ஆவிக்கு அடையாளமாக இருக்கின்றது. சத்தியத்தின் அறிவை நாம் பெற்றுக் கொண்டு, நாம் நம்மை அர்ப்பணித்த போது, கர்த்தர் நம்முடைய அர்ப்பணிப்பை ஏற்றுக்கொண்டு, நமக்கு பரிசுத்த ஆவியை அருளினார். இந்த ஆவி நம்முடைய இருதயங்களை வெளிச்சமூட்டும் வல்லமையாக விளங்கினது. சுவிசேஷ யுகம் முழுவதும், சபையானது, உலகத்தின் ஒளியாக இருந்துள்ளது. இதை தான் நமது கர்த்தர், தம்முடைய சீஷர்களை நோக்கி,"நீங்கள் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றீர்கள்" என்றார். (மத்தேயு 5:14).

ஒளி அணைக்கப்படுவதற்கு பல்வேறு வழிகள் காணப்படுவது போன்று, நமக்குள் காணப்படும், இந்த பரிசுத்த ஆவியின் ஒளியும் அவித்துப் போடபடுவதற்கு அநேக வழிகள் காணப்படுகின்றன. ஒளி கொடுப்பதற்கு தேவையான எண்ணையோ வாயுவோ தீர்ந்துபோனால், அல்லது காற்றில் உள்ள பிராண வாயு (ஆக்ஸிஜன்) குறைவுபட்டால், அல்லது ஒளியின் மீது ஏதாகிலும் பொருட்கள் கொண்டு மூடப்பட்டால், வெளிச்சம் அணைந்து போகும். இப்படியே நம் விஷயத்திலும் கூட, நம்மிடத்தில் காணப்படும் ஆவியின் ஒளி/வெளிச்சம் வெளியிலிருந்து வரும் சில ஆற்றல்களின் தொடர்பு காரணமாகவோ அல்லது மீண்டும் நிரப்பப்படாத காரணத்தினாலும் அணைந்து போவதற்கு அனுமதிக்கப்படலாம்.

பரிசுத்த ஆவியை நாம் அதிக அளவில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் கர்த்தரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஒரு வேளை நாம் அவரை விட்டு தூரம் போனால் நம்மிடத்தில் உள்ள வெளிச்சம் போய்விடும். ஒருவேளை நாம் ஜெபம் என்னும் சிலாக்கியத்தை புறக்கணித்தோமானால், அல்லது வேத வாக்கியங்களை ஆராயவில்லை என்றால், அல்லது அவரை குறித்து சிந்திக்கத் தவறி, அவருடனான ஐக்கியத்தை குறைத்தால், நமக்குள் காணப்படும் பரிசுத்த ஆவியின் வெளிச்சம் மங்கிப் போக ஆரம்பித்து விடும். ஆனால் நாம் எந்த அளவிற்கு நம்முடைய சொந்த பெலவீனங்களை உணர்ந்து கொள்கின்றோமோ, மற்றும் கர்த்தருக்கான நம்முடைய அர்ப்பணிப்பு எந்த அளவு காணப்படுகின்றதோ, அந்த அளவுக்கு ஏற்றவாறு, இந்த ஒளி நமக்குள் பிரகாசித்து வரும். இது நாம் அவருடைய வார்த்தைகளிலிருந்து வெளிப்படும் அவருடைய சித்தத்தைக் கற்றுக்கொள்வதில் நாம் காட்டும் வைராக்கியத்திலும், அந்தச் சித்தத்தை நம்முடைய ஜீவியத்தில் செயல்படுத்த நாம் முயற்சிப்பதில் உள்ள வைராக்கியத்திலும் வெளிப்படுகின்றது. இவ்வழிகள் மூலம் நம்முடைய ஒளி, மிகவும் பிரகாசிக்கத்தக்கதாக, எண்ணெய் ஊற்றுவதாகும். நாம் இவைகளை செய்ய முற்படுகையில், நம்முடைய இருதயங்களில் உள்ள பரிசுத்தமான அன்பு எனும் தீயை அணைத்துப்போட முயற்சிக்கும் யாதொன்றோடும் தொடர்பு வராதபடிக்கும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உலகம், மாம்சம் மற்றும் பிசாசு பரிசுத்த ஆவியின் வெளிச்சத்திற்கு எதிராக காணப்படுகின்றது. இவைகள் நமக்குள் காணப்படும் வெளிச்சத்தோடு, எந்த அளவிற்கு தொடர்புக்குள் வருகின்றதோ, அந்த அளவிற்கு அவைகள் வெளிசத்தை அணைத்து போடுகின்றது. ஒரு வேளை உலகத்தின் ஆவி நமக்குள் வருமாயின், இது நம் இருதயத்திற்குள் காணப்படும் பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தை அணைத்து போடுகின்றது. ஒரு வேளை சுயநலத்தின் ஆவி அல்லது சிந்திக்காமல் செயல்படும் தன்மைகள் நம் இருதயத்திற்குள்

பிரவேசிக்குமாயின், இது நம்முடைய ஒளியை மங்கி போகச் செய்து, இறுதியில் அணைத்துப் போட்டு விடுகின்றது. நற் காரியங்களைச் செய்வதில் ஏற்படும் சலிப்புத் தன்மையும் இதே மாதிரியான நிலைமைக்கு வழிநடத்துகின்றது. நாம் ஒரு வேளை மாம்சத்தின் சந்தோஷங்களை அனுபவித்தால், இவைகள் ஆவியை அவித்துப்போட்டுவிடும். பாவ சந்தோஷம் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டும். மாம்சீக மனுஷனுக்கு பாவமற்றதும், நியாயமானதுமாய் காணப்படும் சில சந்தோஷங்களும் உண்டு. என்றாலும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் இவைகளில் ஈடுபட்டு, எந்த அளவுக்குத் தங்களின் மாம்ச ஏக்கங்களை திருப்திசெய்துக் கொள்கின்றார்களோ, அந்த அளவுக்கு புதிய சுபாவம் பாதிப்புக்கு உள்ளாகும்.

பரிசுத்த ஆவியின் ஒளியை தக்க வைத்துக் கொள்வதற்கு, கிறிஸ்தவனின் ஐக்கியம் ஒரு சிறந்த உதவியாக காணப்படுகின்றது. என்றாலும் இதிலும் கூட ஒரு ஆபத்து உள்ளது. இந்த ஆபத்து பொதுவாக அடையாளம் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஒரு வேளை இந்த ஆபத்து கவனிக்கப்படாவிட்டால் இதுவும் ஆபத்தையே உண்டு பண்ணுகின்றது. கடற்கரைக்குப் போவதோ அல்லது கடலில் குளிக்கச் செல்வதோ, சில சமயம் பயன்தரக்கூடியதாக இருந்தாலும், சில சமயம் புதிய சுபாவத்திற்கே ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகவும் அமைந்துவிடுகின்றது. ஆவிக்குரிய விஷயங்கள் மீதான தங்கள் கவனத்தை திசைதிருப்பக்கூடிய கவர்ச்சிகரமான ஒன்றை வேறு திசைகளில் கண்டடைந்தவர்கள் மாத்திரமே, நற்கிரியைகளைச் செய்வதில் சலிப்புத் தன்மை அடைந்திருப்பார்கள்.

## "தெய்வீக திட்டம் பற்றின தெளிவான அறிவு அவசியம்"

கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள், தங்கள் ஒளியை தக்கவைத்துக் கொள்வதற்கும், அதை பிரகாசிக்கச் செய்வதற்கும், தேவன் பண்ணின பல்வேறு ஏற்பாடுகளில் ஒன்று சபை கூடிவருதலாகும். எப்போதெல்லாம் முடிகின்றதோ அப்போதெல்லாம் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள் என்று அப்போஸ்தலர் பவுல் சபைக்கு புத்தி சொல்லியுள்ளார் (எபிரேயர் 10:25). சபை கூடிவர வாய்ப்பு இல்லாத போது, அந்த குறைவை கர்த்தர் வேறுவிதத்தில் நிறைவு செய்கின்றார். சில சமயம் சபை கூடிவருவதற்கான வாய்ப்பகளற்ற அன்பான சகோதர சகோதிரிகள் காணப்பட்டாலும் அவர்கள் தெய்வீகத் திட்டத்தைத் தெளிவாகவும், மிக ஆழமாகவும் உணர்ந்துகொண்டவர்களாகவும் இருப்பார்கள். மற்றவர்களுடன் ஐக்கியம் வைத்துக்கொள்ள வாய்ப்புகள் இல்லாதிருந்தும் இத்தகையவர்கள் அதிகம் வாசிப்பதிலும், படிப்பதிலும் நேரம் செலவிட்டுள்ளனர்.

சகோதர ஐக்கியத்திற்கான வாய்ப்புகள் இருந்தும், அதை உணராமல் காணப்படுபவர்கள், பரிதாபத்திற்குரியவர்கள் ஆவார்கள். மேலும் திருப்திகரமற்ற நிலையிலும் இவர்கள் காணப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களின் விஷயத்தில் எண்ணெய் பிரகாசமாக எரியவில்லை. இல்லையேல் உடன் சகோதரர்களோடு நேரம் செலவிடுவதில் சந்தோஷம் கொண்டிருப்பார்கள். நம்முடைய சரீரத்தின் விஷயத்தை கவனிப்பது போன்று, நாம் நம்முடைய ஆவிக்குரிய விஷயத்தையும் கவனிக்க வேண்டும். நாம் சரியாக உணவு உட்கொள்ள முடியவில்லையெனில், நமக்கு உடல்நிலை சரியில்லை என கருதுவது போல சபை கூடுகைக்கு நாம் போகாமல் இருந்தால், நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியம் குறைவுபட்டிருக்கின்றது என நாம் அறிந்து கொள்ள வேண்டும். விலையேறப்பெற்ற விசுவாசத்தில் உள்ள மற்றவர்களை சந்திக்க, நமக்கு ஒருவேளை விருப்பம் இல்லாமல் காணப்பட்டால், நமக்கு உதவி செய்யும் மாபெரும் மருத்துவரிடம் செல்ல வேண்டும் என்பதற்கான அறிகுறியாக உள்ளது என நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிலருடைய விஷயங்களில், அந்த நபர்கள் முதலாவது கூடுகைக்குப் போகாமல், கொஞ்சங் காலம் வாசிப்பதிலும், படிப்பதிலும் செலவிடுவது நலமாயிருக்கும். அநேகர் அரைகுறையான சத்திய அறிவு பெற்றுக்கொண்டு, கூடுகையில் கலந்து கொள்வதன் காரணமாக, தங்களுடைய

ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தாங்களே தடையாக காணப்படுகின்றனர். சிலர் தங்களுக்கு தாங்களும், மற்றவர்களுக்கும் தடுக்கலின் கற்களாகக் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு ஒருவேளை படிப்பதற்கும், கூடுகைகளில் கலந்து கொள்வதற்கும் நேரம் இல்லையெனில், இவர்கள் ஸ்திரப்படும் வரையிலும் கற்றுக்கொண்டு, பின்னர் அவரைப் போன்று இந்த அருமையான விசுவாசத்தில் காணப்படும் மற்றவர்களோடு வந்து கூடுகையில் கலந்து கொள்வது நலமாயிருக்கும்.

வழி நடத்தும் வகுப்பார் கூட அநேகர் சத்தியத்தில் மிகத் தெளிவாக இல்லை (போதுமான அளவு இல்லை). இவர்களில் சிலர் தாங்கள் எதைக் குறித்து பேசுகின்றோம் என்று தங்களுக்குத் தெரிவது போன்று எண்ணிக்கொண்டாலும், இவர்கள் தாங்கள் எதைப் பேசுகின்றோம் என்பதை அறியாமல் காணப்படுகின்றார்கள். படிப்பதற்கு நேரம் உருவாக்கிக் கொள்ள பல்வேறு வழிகள் உள்ளது. ஒருவர் தன்னுடைய அன்றாட பணிக்குச் செல்லும் போது, புத்தகத்தை எடுத்துக் கொண்டு, பிரயாணத்தில் வாசிக்கலாம். ஆறு தொகுதிகளையும் (volumes) இவ்விதமாக பிரயாணத்திலேயே படித்து முடித்த ஓர் அருமையான சகோதரனை நாம் அறிவோம்.

இந்த விஷயத்தில் தெளிந்த புத்தியின் ஆவியைக் கொண்டிருப்பது சரியான வழிமுறையாகும். நம்முடைய முதலாம் எண்ணம், தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்றும், இரண்டாம் எண்ணம், நம்முடைய சொந்த ஆதாயம் பார்க்க வேண்டும் என்றும், மூன்றாம் எண்ணம், மற்றவரின் நலம் கருத வேண்டும் என்றும் காணப்பட வேண்டும். முதலாவது நாம் நம்மைப் பார்த்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம். காரணம் ஒரு வேளை நாம் ஊழியம் புரிவதற்கு தகுதியடைவோமானால், பின்னர் மற்றவருக்கு உதவும் பெரும் வாய்ப்பு நமக்கு வரும். முதலாவது நாம் தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது". (மத்தேயு 6:33; 1 தெசலோனிக்கேயர் 4:3).

ஒருவன் தான் கற்றுக் கொள்வதை தான் மற்றவருக்குப் போதிக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்னர் புரிந்துகொள்கின்றான். ஆகவே நாம் அனைவரும் தேவனால் போதிக்கப்படக்கடவோம். மேலும் நாம் எந்த அளவுக்கு படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய சொந்த இருதயங்களில் செயல்படுத்துகின்றோமோ, அந்த அளவுக்கு மற்றவர்களுக்கு போதிக்கப்பட பயன்படுவோம். கூடுகையில் கலந்துக் கொள்ளும் விஷயங்களில், எவ்வகையில் தேவனை மகிமைப்படுத்தலாம் என்று ஒவ்வொருவனுடைய மனசாட்சியும் தீர்தானித்துக் கொள்ள வேண்டும்.

நெருப்பானது முழுமையாக அணைக்கப்பட்டாலும், மீண்டும் பற்றி எரியவிடப்படலாம். மெழுகுதிரி அனைக்கும் வரையும், அது மீண்டுமாக காற்றினால் எரிவதையும், நம்மில் அநேகர் கண்டிருப்போம். நம்முடைய விஷயத்திலும் கூட இப்படியாக தான் இருக்கின்றது. வெளிச்சத்தை அணைக்கும் சில விஷயங்கள் நம்முடைய ஜீவியத்தில் காணப்படலாம். ஆனாலும் ஒளியானது முற்றிலுமாக அணைந்து போவதில்லை. கர்த்தருடைய காற்று அதை மீண்டுமாக எரியச் செய்கின்றது. கர்த்தருக்காக மிகுந்த வைராக்கியம் கொண்ட சிலர், தங்களுடைய அன்பையும், வைராக்கியத்தையும் இழந்து போனாலும், அவர்கள் பிற்பாடு மீண்டும் வைராக்கியம் கொண்டு ஓடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். சிலருடைய வாழ்க்கையில் ஒளி/வெளிச்சம் முற்றிலுமாக அணைக்கப்பட்டும் இருக்கின்றது. கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும் உள்ள நம்முடைய அன்பையோ, நம்முடைய பரிசுத்தத்தையோ, கிறிஸ்துவுக்கு ஒத்து வளரும் நம்முடைய சாயலையோ மங்க செய்கின்ற அல்லது அவித்துப் போடுவதற்கு அனுமதியாதபடிக்கு நாம் விழித்திருக்க வேண்டும். ஆமென்!

---

# அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை

வேத மாணவர்கள் அடங்கிய சில சபைகள், class extension work/புதிய வகுப்புகளை உருவாக்கும் (அறுவடை) பணியில் அருமையாய்ப் பணியாற்றுகின்றனர் மற்றும் தவறாமல் விவரங்களையும் தெரிவித்து வருகின்றனர். புதிய வகுப்புகளை உருவாக்குவதற்கான கூடுகைகளில் கலந்துகொள்பவர்களின் வருகையினுடைய எண்ணிக்கையும் நன்றாகவே இருக்கின்றது. பெரும்பாலும் முதல் மூன்று கூட்டங்களானது, அடுத்த மூன்று கூட்டங்களுக்கும் வழிவகுக்கின்றது மற்றும் பின்னர்ப் புதிய சபையானது நிறுவப்படுகின்றது. கூடுமானமட்டும் இப்படிப் புதிதாய் ஏற்படுத்தப்பட்டுள்ள சபையார் தங்கள் உள்ளூர் கூடுகைகளை வாரத்தினுடைய இரவு வேளைகளில் கொண்டிருக்கவும், ஞாயிற்றுக் கிழமைகளிலாகிலும் அறுவடை பணியினை மேற்கொண்ட, ஏற்கெனவே காணப்படும் சபையாரோடு கூடிட பிரயாசம் எடுக்கவும் நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

இந்த வேலைகளுக்கான தகுதியுடைய அநேகம் சகோதரர்களைப் பெற்றிருக்கின்ற சில இடங்களில் காணப்படுகின்றதான பெரிய எண்ணிக்கையிலுள்ள சபைகளானது, புதிய வகுப்புகளை உருவாக்கும் பணியில் எதையும் செய்யாமல் இருப்பதை அல்லது கொஞ்சமே ஈடுபடுகிறதைக் கண்டு நாங்கள் ஆச்சரியமடைகின்றோம். அறுவடை வேலையில் காணப்படுகின்றதான இந்த வைராக்கிய குறைவிற்கான காரணம் என்னவென்று நாங்கள் சிந்தித்துணர முயற்சிக்கின்றோம். இந்த அருமையான சகோதரரர்கள் வைராக்கியம் உடையவர்கள் என்பதை அறிந்தவர்களாகவும், அவர்களது தாலந்துகளானது செயலற்று அடங்கிக்கிடப்பதை அறிந்தவர்களாகவும், நாம் பின்வருமாறு முன்வைக்கும் விஷயங்களே காரணங்கள் என்று எண்ணும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருக்கிறோம்: அதாவது இம்மாதிரியான சபைகளில் காணப்படுகின்ற புதிய வகுப்புகளை உருவாக்க திறமைக்கொண்டுள்ளதான சகோதரர்கள் - சபையார் தங்களை மூப்பர்களாக தேர்ந்தெடுக்கத்தக்கதாக மற்றும் புதிய வகுப்புகளை உருவாக்கும் பணியினைத் தாங்கள் மேற்கொள்ளத்தக்கதாக, சபையார் தங்களை அங்கீகரிக்கத்தக்கதாக தாங்கள் முயற்சிப்பவர்களாகச் சபையாருக்குத் தோற்றமளித்திடக்கூடாது என்பதினால், இப்பணியினைக் குறித்து முன்வைக்கும் விஷயத்தில் மிகவும் தன்னடக்கத்துடன் காணப்படுகின்றனர். தன்னடக்கம் என்பது எப்போதுமே அருமையான பண்பாய்க் காணப்படுகின்றது; ஆனால் விசேஷமாக சில தாலந்துமிக்க சகோதரர்களுக்கு, நற்செய்தியைப் பிரகடனம் பண்ணுவதிலிருந்து தங்களைக் கட்டுபடுத்திக்கொள்வதும் - முன்னேறிச்சென்று, தாங்களாகவே சிறு கூட்டங்களை ஏற்படுத்துவதிலிருந்து தங்களைக் கட்டுபடுத்திக்கொள்வதும் மிகவும் சிரமமான காரியமாய் இருக்கும்.

சில சபையார் மத்தியில், புதிய வகுப்புகளை உருவாக்குவதற்குரிய தாலந்துடையவர்கள் இல்லாமல் இருப்பதும் உண்மையே - அதாவது தாலந்துடைய சகோதரர்கள் அனைவரின், அவசியமுடைய சபையார் காணப்படுகின்றனர். ஆனால் விழித்தெழுவதற்கும், சில தாலந்துடைய சகோதரர்களைக் கவனிப்பதற்கும், இவர்கள் தங்கள் நேரத்தையும், பெலத்தையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் பணிகளில் பயன்படுத்தத்தக்கதாக இவர்களை உற்சாகமூட்டுவதற்குரிய நிலையில் சில சபையார் காணப்படுகின்றனர். ஆகையால் சபையார் தாங்கள் பெற்றிருக்கின்றதான தாலந்துடையவர்களை, விலையேறப்பெற்றச் சொத்துக்களாகக் கருதவும் மற்றும் இந்தச் சொத்துக்களைப் பயன்படுத்தி, கர்த்தரை மகிமைப்படுத்த நாடவும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைக்கான தாலந்துடைய சகோதரர்கள், புதிய வகுப்புகளை உருவாக்கும் வாய்ப்புகளைக் காண்கையில் மற்றும் தாங்களே சமாளிக்கத்தக்கதான நிதி நிலையினைக் கொண்டிருக்கையில், கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். எனினும் கூடுமானால் அனைவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அனைவரும் நற்பணியிலும், அதன் விளைவான சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களில் இணைந்து கொள்ளத்தக்கதாகவும் முதலாவதாக இவர்கள் காரியத்தினைச் சபையாருக்குத் தெரிவிப்பதற்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

---

R 5134

# "ஏழெழுபது தரம் மன்னித்தல்"
# மத்தேயு 18:15-35

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

- எபேசியர் 4:32

இன்றைய பாடமானது, ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனுக்கும் மிகவும் ஆசீர்வாதமானதாய்க் காணப்படும்; இன்னுமாக, இப்பாடமானது அவன் தெய்வீக எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய்க் காணப்படுவானானால், அவனுக்கு நித்தியத்திற்குரிய ஜீவனையும் உறுதிப்படுத்துகின்றது. இப்பாடமானது மற்றவர்களுக்கும் நன்மை கொடுக்கிறதாக இருப்பினும், விசேஷமாக இது அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுக்கு அதாவது, கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டிருக்கும் சபைக்கு அதாவது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு உரியதாகும்.

ஆண்டவருடைய பின்னடியார்களுக்குரிய அவரது சட்டம் பின்வருமாறு . . . ஒருவேளை ஒரு சகோதரன், உனக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால், அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரத்தக்கதாக, ஓர் புரிந்துகொள்ளப்படுதலுக்குள் வருவதற்கென இவ்விஷயத்தோடு, அவனிடம் தனிமையில் சென்று முயற்சிக்க வேண்டும். ஆனால், இது போதுமானதாக இராமல், விஷயம் அலட்சியம் செய்ய முடியாதது என நீ கருதினால், காரியம் எதையும் விவரிக்காமல், உன்னோடு கூட இரண்டு நபர்களை அழைத்துக் கொண்டு, குற்றம் புரிந்தவரிடத்தில் செல்ல வேண்டும்; அதாவது, உனக்கும் அவனுக்கும் அறிவுரைக் கூறத்தக்கதாக, காரியத்தை அந்த இரண்டு நபர்களும் கேட்கத்தக்கதாக, முன்கூட்டியே அவர்களிடம் விஷயத்தைக் கூறாமல் அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்த இரண்டு நபர்களின் முடிவும், இவர்களின் அறிவுரையும் உன்னாலும், அவனாலும் பின்பற்றப்பட வேண்டும். ஒருவேளை இந்த இரண்டு நபர்களும் நீ தவறு செய்துள்ளதாகக் கூறினால், தவறு செய்துள்ளதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை நீ தவறு செய்யவில்லை என்று இந்த இரண்டு நபர்கள் கூறியும், உனக்குப் பாதகம் பண்ணினவன், இவர்களது ஆலோசனைக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டு, உனக்குப் பாதகம் செய்வதில் தொடர்ந்துக் கொண்டிருந்தால், மேலும் இதனை சபைக்குத் தெரிவிக்குமளவு முக்கியமானதாகக் கருதினால், அதைத் தெரிவிக்கும் சுயாதீனத்தில் நீ காணப்படுகின்றாய். உங்கள் இருவர் மீதான சபையின் முடிவே இறுதியானதாகும். சபைக்குச் செவிசாய்க்க மறுப்பவர் வெளியாளாகக் கருதப்பட வேண்டும். அதுவும் இப்படிச் செய்வது அவனுக்குப் பாதகம் பண்ண வேண்டும் என்றில்லாமல் மாறாக, அவனது போக்கு மாற்றப்படுவது வரையிலும் சபையில் அவன் ஏதேனும் ஸ்தானங்களில் நியமிக்கப்படுவதிலிருந்து அவன் விலக்கி வைக்கப்படுகின்றான்.தெய்வீக வழிநடத்தல் எவ்வளவு எளிமையாய் உள்ளது. இதனை பின்பற்றுகையில் எத்துணை ஆசீர்வாதம் கடந்து வரும்!

## "ஏழெழுபது தரம் மன்னித்தல்"

ஒரு சகோதரன் எத்தனைமுறை மீறுதல் பண்ணி மன்னிப்பைக் கேட்கலாம் என்றும், அவன் எத்தனைமுறை மன்னிக்கப்படலாம் என்றும், ஏழுமுறை மன்னித்தல் வரையறையாக வைத்துக்கொள்ளலாமா என்றுமுள்ள கேள்வியைப் பரிசுத்தவானாகிய பேதுரு கேட்டார். எவ்விதமான வரையறையும் இல்லை என்றும், தவறை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கும் எந்தச் சகோதரனும் மன்னிக்கப்பட வேண்டும் என்றும், ஒருவேளை 490 முறை மன்னிப்பு மீண்டும் மீண்டுமாகக் கேட்கப்பட்டாலும், மன்னிக்கப்பட வேண்டும் என்றும் ஆண்டவர் கூறினார். வேறு எதுவும் வழியில்லை; மன்னிப்புக் கேட்கப்பட்டால், அது வழங்கப்படுவது கடமையாகும். ஆண்டவருடைய இந்த அறிவுரையைப் பின்பற்றுவதினால் வரும் பின்விளைவுகளைக்குறித்து நாம் மிகவும் பயந்தவர்களாகக் காணப்படக்கூடாது; அவருடைய ஞானம் நம்மைத் தவறாய் வழிநடத்தவில்லை என்ற உறுதியுடன் பொறுப்பை நாம் அவர்மேல் வைத்துவிட வேண்டும்.

பின்னர் நமது கர்த்தர், பரலோக வகுப்பாராகிய இராஜ்யம் குறித்து அதாவது, தற்போது கருநிலையில் காணப்படும் சபை தொடர்பான விஷயத்தில், இக்காரியத்தை விவரிக்கும் வண்ணமாக

ஓர் உவமையைக் கூறினார்; ஒரு குறிப்பிட்ட இராஜா தம்முடைய ஊழியக்காரர்களிடம் கணக்கை விசாரித்தார். இப்படிக் கணக்குப் பார்த்தபோது, ஒருவன் பதினாயிரம் தாலந்துகள் தனக்குக் கடன் பட்டிருப்பதை அறிந்தார். ஆகையால், அவனையும் அவனுடைய பெண் ஜாதியையும், அவனுக்குண்டான யாவற்றையும் கடனைத் தீர்க்கத்தக்கதாக விற்கும்படி, அவனுக்கு இராஜா கட்டளையிட்டார். அந்த ஊழியக்காரனோ, இராஜாவின் பாதங்களில் விழுந்து, தம்மிடத்தில் இரக்கம் காட்ட வேண்டும் என்று கேட்டு, தான் கடனை அவருக்குக் கொடுத்துத் தீருவதாகக் கூறினான். இராஜா மனமிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டார்.

## "தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்த..."

இப்படியாக விடுதலையாகி வெளிவந்த அந்த ஊழியக்காரன், அவனிடத்தில் கடன்பட்டிருந்தவர்களைத் தேடிச் சென்றான்; இவ்வூழியக்காரன் இராஜாவினிடத்தில் கடன்பட்டிருந்த தொகையோடு ஒப்பிடுகையில், மிகவும் குறைவான தொகையாகிய நூறு வெள்ளிப்பணம் தன்னிடத்தில் கடன்பட்டிருந்த தன்னுடைய சக ஊழியக்காரனைக் கண்டுபிடித்தான். "அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காராகள் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்" (மத்தேயு 18:28-34).

## "இங்குள்ள முக்கியமான படிப்பினை"

இங்கு என்ன பாடம் உள்ளது? கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மீது மனமிரங்க வேண்டுமென நாம் விரும்புவதுபோன்று, நாமும் ஒருவர் மீதொருவர் மனமிரக்கம் கொண்டிருக்க வேண்டும் என்பதே பாடமாக உள்ளது. நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில், நமக்கான இந்தப் படிப்பினை உள்ளது. நாம், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32) என்ற வசனத்தின்படி நாம் காணப்பட வேண்டும். நம்முடைய குற்றங்களை அவர் தினந்தோறும் தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருப்பதுபோன்று, நாமும் ஒருவருக்கொருவர் காணப்பட வேண்டும். நாம் கர்த்தருக்குட்பட்டிருக்கும் கடனுக்கு முன்பாக, மற்றவர்கள் நமக்கு எதிராகச் செய்துள்ள குற்றங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், அவைகள் அற்பமானவைகளாகவே காணப்படுகின்றன. ஆகவே, நம்மிடத்தில் மன்னிப்புக் கேட்கும் யாவருக்கும் நாம் "ஏழெழுபது தரம்" மன்னிப்பதற்கு விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இப்படியாக, நாம் இரக்கத்தைக் காட்டும்போது, நாம் தெய்வீகக் குணலட்சணத்தைப் பின்பற்றுகிறவர்களாகக் காணப்படுவோம். மேலும், நம்முடைய இருதயங்கள் மற்றும் ஜீவியங்கள் மீதான இதன் தாக்கம் நம்மைக் கண்ணியப்படுத்தக் கூடியதாகக் காணப்படும். நமது கர்த்தர் இயேசு, பிதாவின் தற்சொரூபமாக இருக்கின்றார்; மேலும், நாம் அன்பு, பெருந்தன்மை எனும் பண்புகளைப் பின்பற்றுகையில், நாம் அதிகமதிகமாய்க் கிறிஸ்துவின் சாயலில் காணப்படுவோம் மற்றும் இப்படியாகத் தேவனின் சாயலிலும் காணப்படுவோம்.

## "தேவனும் உங்களுக்கு இப்படியே செய்வார்"

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்களாகிய சபையின் விஷயத்தில், பரம பிதா கையாளும் கொள்கையை அவருடைய உவமை போதிப்பதாக நமது கர்த்தர் இயேசு விவரிக்கின்றார். இவர்கள் அனுதாபமற்றவர்களாகவும், கடுமையானவர்களாகவும் ஒருவேளை காணப்பட்டார்களானால், ஒருவேளை இவர்கள் நீதியின் விஷயங்களில் தங்களது சகோதரர்களைக் கடுமையாகக் கையாளுவார்களானால், பரம பிதாவும் இவர்களை இப்படியே கையாளுவார் மற்றும் இவர்களுடைய

குறைவுகள் அனைத்திற்கும் இவர்களைக் கணக்கு விசாரிப்பவராகக் காணப்படுவார். இப்பாடத்தின் முக்கியத்துவத்தைக்குறித்து, தேவனுடைய ஜனங்கள் உணர்ந்துக்கொள்வார்களானால், சகோதரர்களின் குற்றங்களையும், குறைபாடுகளையும் மன்னிக்கும் தன்மையானது அவர்களுக்கு மிகவும் தாராளமாகவும், மிகவும் சர்வ சாதாரணமான பழக்கமாகவும் ஆகிவிடும். பரம பிதாவிடம் இருந்து கடந்துவரும் நம்முடைய ஒவ்வொரு பரிபூரணமின்மைக்கான முழுமையான தண்டனையையும், அத்தண்டனையை இரத்துச் செய்யப் பிதா மறுத்துவிடுவதையும் நம்மில் எவரால் சகிக்கக்கூடும்?

தேவனுடைய குணலட்சணத்தில் நாம் பயிற்சி பெறுவதன் மூலமாகவும், விசுவாச வீட்டார் அனைவரிடமும் நாம் அதிகமதிகமாக இரக்கமும், தயாளமும் கொண்டவர்களாக ஆகுவதன் மூலமாகவும், நம்மீது பாராட்டப்பட்ட தேவனுடைய இரக்கத்தை நாம் உணர்ந்துள்ளதைத் தெரிவிக்கின்றவர்களாகக் காணப்படுவோம். நாம் சகோதர சகோதரர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாகக் காணப்படும்போது, இயல்பாகவே நாம் சகல மனுஷர்களிடத்திலும் பெருந்தன்மையுள்ளவர்களாகக் காணப்படுவோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய பெலவீனங்களையும், குறைவுகளையும் நாம் உணர்ந்து, நினைவில் கொண்டிருக்கையில், இது நம்மை, சகோதரர்களிடத்திலும், சகல மனுஷர்களிடத்திலும் அனுதாபம் கொள்ளச் செய்திடும். இரக்கத்திலும், தாராளத்தன்மையிலும்/பெருந்தன்மையிலும், அனுதாபத்திலுந்தான் தேவன் பிரியப்படுகின்றார். இந்த ஆவியின் கிருபைகளை விருத்திச் செய்கின்றவர்கள், கர்த்தருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்படுவார்கள்; மற்றும் இயேசுவோடு, அவருடைய மகிமையின் சிங்காசனத்தில் பங்கடைவதற்கும் ஆயத்தப்படுத்தப்பட்டுத் தகுதியாக்கப்படுவார்கள்; ஏனெனில், தெளிவான அறிவின் கீழ் மற்றும் இராஜ்யத்தில் அருளப்படும் உதவியுடன் தெய்வீகக் கிருபை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் திரும்பிடும் ஆயிரமாயிரமான மனுக்குலத்திற்கு இரக்கம் காட்டுவதே, மாபெரும் மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படப் போவதற்கான நோக்கமாகும்.

## "ஆதாமின் பாவம் குறிப்பிடப்படவில்லை"

இந்த உவமையானது, ஆதி பாவத்திற்கான தெய்வீக மன்னிப்பைக் குறிப்பிடுவதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. இரக்கத்திற்காக நாம் கூக்குரலிடுவதற்கென, ஆதாமின் பாவம் ஒன்றும் மன்னிக்கப்படுவதில்லை. ஆதாமும், முழுச் சந்ததியும் இரக்கத்திற்காகக் கேட்டாலும், தெய்வீக வழியாகிய இயேசுவின் மூலம் அதாவது, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக அல்லாமல், மற்றபடி எந்த இரக்கத்தையும் அடைந்திருக்க முடியாது. இயேசு தம்முடைய பலியை நிறைவேற்றி, பரத்திற்கு ஏறி, தம்முடைய புண்ணியத்தின் வாயிலாகப் பிதாவிடத்திற்கு வருபவர்கள் சார்பாக அவர் பிதாவின் முன்னிலையில் தோன்றாதது வரையிலுங்கூட, இந்த மன்னிப்பு (ஆதாமின் பாவத்திற்கான மன்னிப்பு) அருளப்படவும் முடியாது.

"நாங்கள் எங்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட தப்பிதங்களை மன்னிக்கிறதுபோல, எங்களுடைய தப்பிதங்களையும் மன்னியும்" என்று ஜெபத்தில், நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்டுள்ள பாவங்கள் குறித்தே அதாவது, பின்னர் ஏற்படும் பாவங்கள் குறித்தே இவ்வுமையானது குறிப்பிடுகின்றது. இவ்வுமையில் இவர்கள் ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்; ஆனால், பாவிகளாகிய உலகத்தாரோ, தேவனுடைய ஊழியக்காரர்கள் என்றில்லாமல், அந்நியர்கள், பரதேசிகள் என்று அழைக்கப்படுகின்றனர். விசுவாசத்தின் மூலமாகவும், அர்ப்பணிப்பின் மூலமாகவும், இயேசுவின் வழியாகவும், தேவனுடன் மீண்டும் உறவிற்குள் வந்தவர்களையே, தேவன் ஊழியக்காரர்கள் என்று கருதுகின்றார். இந்தத் தேவனுடைய ஊழியக்காரர்களே, தங்களது சகல ஊழியர்களாகிய, மற்றச் சகோதர சகோதரிகளிடத்தில் இரக்கம் பாராட்டுவதற்கென எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்.

இயேசுவின் புண்ணியத்தின் வாயிலாக, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேவனுடைய புத்திரர்கள், புதிய சிருஷ்டிகள் ஒவ்வொருவரும் தனது பெலவீனங்களுக்குப் பொறுப்பாளியாகக் கருதப்படுகின்றனர்; ஆயினும், இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கும் பொழுதோ, கிறிஸ்துவினிமித்தமாக இவர்களுடைய தப்பிதங்கள் இலவசமாய் இரத்துச் செய்யப்படுவதற்கென, தெய்வீக வல்லமையானது ஏற்பாடு பண்ணியுள்ளது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளுடைய இந்தத் தப்பிதங்கள் மன்னிக்கப்படுதல் என்பது, இவர்கள் தங்களது சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான ஆவியைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது; ஏனெனில், "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." "ஏனெனில்,

நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" (மத்தேயு 18:35; 7:2). தெய்வீக ஏற்பாடுகள் எத்துணை அருமையாய் உள்ளது! இவைகள் எத்துணை ஆசீர்வாதமாகவும், இராஜ்யத்திற்கான நமது ஆயத்தமாக்குதல்களில் நமக்கு எத்துணை நன்மையாகவும், எத்துணை உதவியாகவும் உள்ளது!

**ஆமென்!**

R 5142

# பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

உங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதான வேலையினைக் குலைத்துப் போடத்தக்கதாக, உங்களை எதிர்க்கின்றவர்கள் தங்கள் பிரயாசங்களை அதிகரித்து வருகின்றனர் என்பதை நான் கவனிக்கையில், இந்தத் தற்போதுள்ள தகவலை (Tabernacle) டேபர்நாக்கிளின் முகவரிக்கு நான் அனுப்பிவைக்கையில், உங்களுக்கு என்னுடைய உள்ளார்ந்த கிறிஸ்தவ அன்பைத் தெரிவிக்க நான் நெருக்கி ஏவப்படுவதை உணர்கின்றேன். உங்களுக்கு விரோதமாய்ப் பொது நாளிதழ்களில் செய்யப்படும் பல்வேறு தாக்குதலுக்குரிய சோதனைகளில், உங்களுக்கு எங்களுடைய ஜெபங்களும், எங்களுடைய அனுதாபங்களும் காணப்படுகின்றது. கடந்தகாலங்களில் உங்களைத் தாங்கிட்டதான அதே கிருபையானது, முடிவுபரியந்தம் உங்களுக்குப் போதுமானதாயிருக்குமென நான் நம்புகின்றேன்.

ஏதோ கடந்தகாலங்களில் காணப்பட்ட மந்தத்தை ஈடுசெய்வது போன்று, பெரும்பாலான சபைகள், ஆவிக்கடுத்த காரியங்களில் முன்னுக்குத் துள்ளிக்குதிப்பது போன்று தோன்றுகின்றது.

"செய்ததையே திரும்பத்திரும்பச் செய்யாமல் இருப்பதற்கு," தொடர்ந்து மாற்றம் செய்வது அவசியமெனச் சில சபையார் மிகவும் தவறாய் எண்ணுகிறதை நான் கவனிக்கின்றேன். ஒரு சபையில் கர்த்தர் மிகவும் திறமையுள்ள வழிநடத்துபவரின் அவசியத்தைக் கண்டார் மற்றும் தேவையான தகுதிகளுடைய ஒரு சகோதரனை அங்கு ஊழியம்புரியும்படிக்குக் கர்த்தர் அனுப்பி வைத்தார். இரண்டு ஆறுமாதக் காலப்பகுதிகள் அச்சகோதரன் ஊழியம்பண்ணின பிற்பாடு, மாற்றம் வேண்டும் என்ற அந்த ஆவியானது, அச்சகோதரனைத் தேர்ந்தெடுக்க மறுத்தது அல்லது அச்சகோதரன் மறுபடியுமாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்று எண்ணங்கொள்ளச் செய்தது. தற்போதுள்ள மூப்பர் ஒரு நல்ல சகோதரன்தான்; ஆனால் இருவரும் மூப்பர்களாகக் காணப்பட்டால், அவர்கள் ஒன்றிணைந்து அதிகமான ஊழியம்புரிந்திருக்க முடியும் (பிரசங்கி 4:9-12).

மாற்றம் வேண்டும் என்ற அதே கருத்தானது, இந்தச் சபையார் தங்கள் கூடுகைகளையும், ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளையும்கூட இடமாற்றம் செய்யக் காரணமாயிற்று; இதனால் அவ்வப்போது கலந்து கொள்பவர்களில் சிலர் தாங்கள் ஓர் இல்லத்திற்குச் சென்று, அங்குக் கூட்டம் நடத்தப்படவில்லை என்ற நிலைமைக் காணப்படுமோ என்ற அச்சத்தில், கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று முடிவெடுக்கின்றனர். இது இவர்கள் தவறாமல் கலந்துகொள்பவர்களாக இராமல்போவதற்கான ஒரு காரணமாய் இருக்கின்றது.

இன்னொரு விஷயம் என்னவெனில், சில சபைகளுக்குப் பெரோயா வகுப்புகள் நடத்துவது பற்றின ஆலோசனை தேவையாயிருக்கின்றது; அதுவும் பெரோயா வகுப்புகளைத் தாங்கள் பெற்றிருக்கும்போது, தாங்கள் உண்மையில் பிரசங்க ஆராதனையையே பெற்றிருப்பதாக எண்ணிடும் சபைகளுக்கு ஆலோசனை தேவையாயிருக்கின்றது. மூப்பர் கேள்விக் கேட்கின்றார்; ஒன்று அல்லது இரண்டு நண்பர்கள் மிகவும் சுருக்கமான பதிலைக் கொடுக்கின்றனர் மற்றும் பின்னர் மூப்பர் 10 முதல் 15 நிமிடங்கள் பிரசங்கம்பண்ணுகின்றார்; இப்படியே அடுத்துக் கேள்விக்கும் மற்றும் இறுதிவரைக்கும் தொடரப்படுகின்றது.

சில மிகச்சிறிய எண்ணிக்கையிலுள்ள மற்றும் பெலவீனமான சபைகளில் இப்படிச் செய்ய அனுமதிக்கப்படலாம் என்று நான் கற்பனை பண்ணிக்கொள்கின்றேன்; ஆனால் இப்படிச் செய்வதைத் தங்கள் வழிமுறையாகப் பெற்றிருப்பதை நான் கண்ட ஒவ்வொரு சபையிலும், இப்படிச் செய்திடுவதற்குக் காரணங்கள் சொல்லிடுவதற்கு ஏதும் இருப்பதில்லை.

இலினோனிசிலுள்ள சகோதரர்களுடன் நாம் விலையேறப்பெற்ற ஐக்கியத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் மற்றும் தேவனுக்கு மகிமை சேர்க்கும் காரணங்களுக்கடுத்த ஊழியத்தின் சிலாக்கியங்களிலும் பெரிதும் களிகூர்ந்துகொண்டிருக்கின்றோம். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன் அவரது விலையேறப்பெற்ற நாமத்தில் தங்கள்

- பென்ஜமின். H. பார்டன்.

## இதழாசிரியரின் பதில்

மேலே கொடுக்கப்பட்டுள்ளதான சகோதரர் பார்டன் அவர்களின் அறிக்கையினை ஒப்புக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தினை நான் பயன்படுத்திக்கொள்கின்றேன். நாம் சீரான நிலைமையில் காணப்படுவது அவசியமாகும். சபையார் தங்கள் காரியங்களின் மீதான முழுக்கட்டுப்பாட்டினைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும், எனினும் இது தெய்வீக வழிக்காட்டுதல் என்று தாங்கள் நம்புகின்றவைகளின் கீழ்த்தங்களது மூப்பர்களாக அல்லது வழிநடத்துபவர்களாக இருக்கும்படிக்குத் தங்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களை மரியாதைக் குறைவாகப் பேச அல்லது எண்ண வேண்டும் என்று குறிப்பதாய் இருப்பதில்லை. "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்வோமாக (எபிரெயர் 13:17).

சபையாரின் கரங்களினின்று அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்காத ஓர் உண்மையுள்ள வழிநடத்துபவர் பெரிதும் நம்பப்படலாம் மற்றும் நம்பப்பட வேண்டும். அவருடைய ஊழியம் அன்பின் ஊழியமாக இருக்கின்றதே ஒழிய இழிவான ஆதாயத்திற்காகவல்ல மற்றும் ஊழியத்தில் அவரது உண்மைக்கான பலனாக, முழுச்சபையாருடைய அன்பானது, அவருக்கு இலவசமாகச் செலுத்தப்பட வேண்டும். இது - அதிகாரமானது ஒரு மூப்பருடைய கரங்களில் விடப்பட வேண்டும் என்று; அவர் மிகவும் திறமையுள்ளவராக இருப்பினும், மற்றவர்களும் முன்னுக்குக்கொண்டு வரப்பட்டால், இதன் நிமித்தம் அவர் கோபமடைய வேண்டும்/அவமதிக்கப்பட்டதாய் எண்ண வேண்டும் என்று குறிப்பதாய் இராது. இளைய சகோதரர் யாவருக்கும் உதவிசெய்திடுவதற்காகவும், உற்சாகமூட்டிடுவதற்காகவும், வழிகாட்டிடுவதற்காகவும் வழிநடத்துபவர்கள் மூத்த சகோதரர்களெனக் கவனித்திருக்க வேண்டும் மற்றும் அவர்களை உதவிக்காரர் ஊழியத்திற்கும், பிற்பாடு மூப்பர் ஊழியத்திற்கும் என்றும் ஆயத்தப்படுத்துவதற்காகவும் கவனித்திருக்க வேண்டும்.

கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலர் மிதமிஞ்சி செயல்படுகிறவர்களாகக் கொஞ்சம் காணப்படுகின்றனர். பலமான பாத்திரங்கள் எப்போதுமே மிதமிஞ்சிப் போவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். நம்முடைய காரியங்களை நல்லொழுக்கமாயும், கிரமமாயும் நடத்திடுவது என்பது, பாபிலோன் போன்று எந்தத் தீமையான விதத்திலும் இருக்காது. பரலோகத்தை விதிகளும், ஒழுங்குகளும், கட்டுப்பாடுகளும் இல்லாத ஒன்றாக நம்மால் கற்பனைப்பண்ணக் கூடுமா? ஒழுங்குதான் பரலோகத்தின் முதல் பிரமாணம் என்று நாம் அறிந்திருக்கிறோமல்லவா? தேவன் தமது சித்தத்தின்படி, பல்வேறு அவயவங்களைச் சரீரத்திலே வைக்கின்றார் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டினார் அல்லவா? அவரது சித்தத்தினை அங்கீகரிப்பதிலும், அதை நடந்தேற்றுவதிலும் நாம் தேவனோடு ஒத்துழைப்பது தவறாய் இருக்குமா? நிச்சயமாக இல்லை! நியாயமானதொரு எண்ணிக்கையிலுள்ள பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் மீது அடக்குமுறைப்பண்ணுவது மோசமான காரியமாய் இருப்பது போலவே, சிறிய எண்ணிக்கையிலுள்ள சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் மீது அடக்குமுறைப்பண்ணுவதும் மோசமான காரியமாகவே இருக்கும். பொன்னான பிரமாணத்தினை நினைவில் கொள்வதற்கும், மற்றவர்கள் நம்மிடத்தில் தயவாய் இருக்க வேண்டுமென நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களிடத்தில் தயவாய் இருப்பதற்கும் அன்பின் ஆவியானது நம்மை ஏவிடும்.

மாற்றத்திற்கான மிகுந்த விருப்பம் தொடர்புடையதான சகோதரர் பாட்டன் அவர்களின் யோசனைகளுக்கு நான் முழுச்சம்மதத்தைத் தெரிவிக்கின்றேன். ஒரு சபையார் தங்களுக்கான வழிநடத்துபவர்களை வாராவாரம் சுழற்சி முறையில் பெற்றிருக்கின்றனர் என்று சமீபத்தில் நாங்கள் கேள்விப்பட்டோம். ஒரு மாதக்காலம் அல்லது ஒரு காலாண்டுக்காலம் என்பது ஒவ்வொரு வழிநடத்துபவருக்கும் சரியாய் இருக்கும் என்று தோன்றினாலும், இப்படி வாராவாரம் சுழற்சி என்பது ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களுக்கு மிகவும் ஆகாததாய் இருப்பதில்லை. ஆனால் பெரோயா வேதப்பாடங்களைப் பொறுத்தமட்டில் வாராவாரம் மாற்றம் செய்வது என்பது வழிநடத்துபவருக்கும், சபையாருக்கும் மிகவும் ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும். முந்தையை பாடங்களின் தொடர்ச்சி, தொடர்பு இருப்பது என்பது மிகவும் விரும்பத்தக்கதாகும். பெரோயா வேதப்பாட நடத்துனர்கள் குறைந்தப்பட்சம் மூன்று மாதக்காலம் தொடர்ந்து பொறுப்பு வகிக்கும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

## பெரோயா வேதப்பாடங்கள் தொடர்பாக

சபையாரிடமிருந்து பதில்களை வரவழைப்பவரே ஒரு வெற்றிகரமான போதகர் ஆவார் என்ற சகோதரர் பார்டன் அவர்களின் கருத்துப் பொருத்தமானதே. இந்த விஷயத்தில்தான் பெரோயா வேதப் பாடங்களானது, கர்த்தருடைய ஜனங்களுக்கு அதிகமதிகமாய் உதவி செய்கின்றதாய் இருக்கின்றது. உரையாற்றிடுவதற்கு அல்லது பிரசங்கம்பண்ணிடுவதற்கு தாலந்துடைய சில நபர்கள் போதிப்பதற்கு, சபையாரிடமிருந்து பதில்களை வரவழைப்பதற்குப் போதுமான தாலந்தற்றவர்களாய் இருப்பார்கள் என்பது உண்மைதான். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக அப்போஸ்தலனால் விவரிக்கப்படுகின்ற போதகசமர்த்தத்தைத் தாங்கள் பெற்றிருக்கின்றார்களெனக் காட்டுவதற்கு, வேறு மூப்பர்களுக்கு வாய்ப்புக்கொடுக்கப்படுவது சரியாய் இருக்கும்.

முன்கூட்டியே சகோதரர்களைப் பாடங்களைப் படித்து வரவைக்க முடியவில்லை என்று அநேகம் சபை வழிநடத்துனர்கள் தெரிவிக்கின்றனர். இப்படிக் காணப்படுவது வருந்தத்தக்கதே, ஆனாலும் பாடங்களைப் படித்து வராததற்காக யாரையேனும் அவமதிப்பதோ அல்லது கடுமையாய்த் தாக்கிப் பேசுவதன் மூலம் யாரையேனும் கூட்டத்தில் கலந்துகொள்வதிலிருந்து தடைப்பண்ணுவதோ ஞானமற்றதாய் இருக்கும். நாங்கள் வேறொரு நடைமுறையைப் பரிந்துரைக்கின்றோம்: ஒவ்வொரு வகுப்பின் துவக்கத்திலும் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான வேதாகமப் பாடங்களின் (Volume) அந்தப் பக்கங்களானது, தெளிவாயும், அழுத்தத்துடனும் வாசிப்பதற்குத் திறமையுள்ள ஒருவரால் வாசிக்கப்படுவதாக; பின்னர்ப் புத்தகங்களை மூடி வைத்து, கேள்விகளின் அடிப்படையில் பாடம் கலந்துரையாடப்படுவதாக. வழிநடத்துபவர் துண்டு துண்டாய்க் காணப்படும் பதில்களைச் சேர்த்து, அவைகளை ஒன்றாய் ஒன்றிணைக்க உதவுவது, மிகவும் உதவிகரமான ஒரு வழியாயிருக்கும். இப்படியாகப் பதிலளிப்பவர்களை அடுத்த தருணத்தில் பதில் அளிக்க ஊக்குவிப்பதும், பதில்களை அப்போது மிகவும் பிரயோஜனமானதாக்கிடுவதும்தான் நோக்கமாகும். ஆக மொத்தம் பெரோயா வேதப்பாடங்களானது, சத்தியத்தில் உறுதிப்படுத்தும், ஸ்திரப்படுத்தும் வேலையை மிகவும் திறம்படச் செய்கின்றது.

பெரோயா வேதப்பாடங்கள் அல்லாமல், மற்றப்படி வேதாகமப்பாடங்களில் (Volumes) பத்து முதல் பன்னிரண்டு பக்கங்களை வழக்கமாய் வாசிப்பதைத் தொடரும்படிக்கு அருமையான சகோதரர்கள் யாவருக்கும் நாம் வலியுறுத்துகின்றோம். நாம் வாசிப்பவைகளானது, வேதப்பாடங்கள் வகுப்புகளுக்கு மிகவும் உதவியாய்க் காணப்படும்.

---

# எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன்

**Adversary's Tactics**

அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே .

**2கொரிந்தியர்2:11**

அறுவடையின் நிறைவுக்கு நேராக நாம் கடந்து போகுகையில், எதிராளியானவன் எல்லா விதங்களிலும் தன்னுடைய தாக்குதலை விடாமுயற்சியுடன் செய்து கொண்டு வருவதை நாம் பார்க்கும் போது நாம் ஆச்சரியம் அடைய வேண்டியதில்லை. யுகங்களைக் குறித்ததான தெய்வீக திட்டத்திற்கு எல்லா இடங்களிலும்,எதிர்ப்புகள் பெருகிக்கொண்டே இருக்கின்றது.நாம் ஊழியம்புரியும் நோக்கத்திற்குப் பாதிப்புண்டாகும்படிக்கு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவதுாறான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வருகின்றது.

வேதாகமம், வாதமுறை மற்றும் பகுத்தறிவு விஷயங்களின் மூலம் சாத்தானால் சத்தியத்திற்கு எதிராக செய்ய முடியாதவைகளை சத்தியத்தின் பக்கமாக நின்றுகொண்டிருப்பவர்கள் அனைவரையும் அவதுாறான விதத்தில் தவறாய் எடுத்துகாட்டுவதன் மூலம் செய்ய நாடுகின்றவனக இருக்கின்றான். மேலும் சத்தியத்திற்கு ஊழியம் புரிபவர்களின் செயல் நடவடிக்கைகள் எவ்வளவாய் இருக்கின்றதோ, அவ்வளவாய் சாத்தானின் எதிர்ப்பும் கூட காணப்படுகின்றது. இந்த எதிர்ப்பு அவர்களுடைய விசுவாசத்திற்கும் மற்றும் பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மைக்கும் பரீட்சையாக காணப்படுகின்றது. இது இவர்கள் தேவனிடத்திலும் சத்தியத்தினிடமும் சகோதரர்களிடமும் கொண்டிருக்கும் உண்மையைப் பரீட்சிக்கின்றதாய் இருக்கின்றது. அதேசமயம் இது(இந்த எதிர்ப்பானது)இவர்கள் விசுவாச வீட்டாரிடத்தில் கொண்டுள்ள சகோதர அன்பிற்கும் பரீட்சையாகக் கூடக் காணப்படுகின்றது. இது(இந்த எதிர்ப்பானது) ஒரு சலித்தெடுக்கும் வேலையை (அ) பிரித்தெடுக்கும் வேலையைச் செய்கின்றது உங்கள் தேவனகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார். உபாகமம் 13:3.

இந்தத் தாக்குதல்கள்/எதிர்ப்புகள் பெயரளவிலான சபைக்கும் கூட, அதாவது கோதுமைக்கும், களைக்கும், விசேஷமான சோதனைகளைக் கொண்டு வருகின்றது. இந்தத் தாக்குதல்கள்/எதிர்ப்புகள் இவர்கள் பொறாமை, கோபம், வன்மம், பகை, சண்டை, தீமை பேசுதல்களையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெற்றும் கொள்கின்றனர். இவ்விதமாக இவர்கள் சோதிக்கப்பட்டு அநீதியின் மீதான இவர்களுடைய அன்பு,விருப்பம் வெளிப்படுகின்றது.மத்தேயு7:20-ஆம் வசனம் வாசிக்கவும். முட்கள் மற்றும் முட்புதர் வகுப்பார், எவ்வளவுதான் மதக்காரியங்களை ஏற்றுக்கொண்டவர்களாகஇருப்பினும்,அவர்கள் திராட்ச செடியின் கிளைகள் அல்ல. இவர்கள் திராட்ச பழங்களைப் பெற்றிருக்காமல் மாறாக கர்த்தருடைய ஜனங்களுக்குத் துன்பம் விளைவிக்கின்றவர்ளாய் இருக்கின்றனர். "அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கின்றது." (ரோமர்-3:13)இவர்கள் சிலர் பொய்களை உருவாக்கும் அளவுக்குத் தைரியம் உள்ளவர்களாக இருக்கின்றனர். வேறு சிலரோ கொஞ்சம் தைரியமற்றவர்களாகவும், அதேசமயம் பொய்யை விரும்புகின்றவர்களாவும், அந்தப் பொய்களைப் பரப்புவதற்குக் காரணிகளாகவும் காணப்படுகின்றனர். கர்த்தருடைய நாள்வரும் போது, இறுதியில் உண்மையான நிலவரம் வெளியரங்கமாக்கப்படும், அப்பொழுது சிலர் (பெயர்கிறிஸ்தவர்கள்) வெட்கமும்,அவமதிப்பும் அடைவார்கள். ஆனால் மற்றவர்களாகிய உண்மையான கிறிஸ்தவர்களோஎன்றென்றும் நட்சத்திரங்களாக பிரகாசிக்கின்றவர்களாய் இருப்பார்கள்.

கர்த்தருடைய ஆவியையும், சாந்தம், நிதானம், பொறுமை, நீடியபொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பின்ஆவியையும் உடையவர்கள் அனைவரும் முன்கூறப்பட்டுள்ளவிதங்களில் சோதிக்கப்படுவார்கள். இவர்களை எந்த அளவுக்கு எதிர்மாறான சோதனைகள் தாக்குகின்றதோ,

அவ்வளவாய் இவர்கள் (விசுவாசம், உண்மை, பொறுமை,சகோதரசிநேகம் எனும்) முன்கூறப்பட்டுள்ளவைகளின் அடிப்படையிலான தங்களுடைய குணலட்சணங்களை ஆழமடையவும்,விரிவடையவும் செய்ய வேண்டும் என்பதே இவர்களுக்கான கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது. இவ்விதமாக இவர்கள் தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக அதிகமதிகமாய் மாறுவார்கள். மேலும் இவர்கள் இராஜ்யத்திற்குப்/பாத்திரவான்களாக்கும்படிக்கு, இவர்களுக்குப் பரீட்சைகள்/ சோதனைகள் உதவிபுரிகின்றன.

**சகோதர சகோதிரிகளைக் குற்றம் சாட்டுபவன்**

கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளவதற்கும், அதைச்செய்வதற்கும் நாடிக் கொண்டிருக்கும் கர்த்தருடைய உண்மையான சீஷர்களை அதைரியப்படுத்துவது என்பது சாத்தானுடைய முறைகளில் ஒன்றாகும். இவர்கள் எந்த அளவுக்கு மனசாட்சிக்குக் கட்டப்பட்டவர்களாக இருக்கின்றார்களோ, அவ்வளவாய் பாத்திரமற்றுபோய்விட்டாய், புறம்பாக்கப்பட்டுவிட்டாய், குற்றவாளியாகஇருக்கின்றாய், இரண்டாம் மரணத்திற்கு ஏதுவாகிவிட்டாய் என்பதான சாத்தானுடையகருத்துக்களுக்கு ஆளாகுவார்கள். இதை இவர்களது விசவாசத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென தேவன் அனுமதிக்கின்றார். விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துவது என்பது கூடாதகாரியம் வளர்ச்சியை அடைவதற்கு விசுவாசமானது எதிர்ப்புகளினால் பரீட்சிக்கப்பட வேண்டும். நம்முடைய விசுவாசம் அதிகமாய் வளர்க்கப்படும்போது நாம் பிதாவின் பார்வையில் மிகவும் அதிகமாய் பிரியமானவர்களாய் காணப்படுவோம். அவர் மீதான நம்முடைய விசுவாசத்தை முழுமையானதாகவும், ஊசலாட்டம் இல்லாததாகவும் ஆக்குகின்றவராக அவர் இருக்கின்றார்.

மாறாக எதிராளியானவனோ, நம்முடைய விசுவாசத்தை அழித்து போடக்கூடியவானக இருக்கின்றான். இதை அவன் தேவனுடைய குணலட்சணங்களைத்திரித்து அவரை அன்பற்றவராகவும் அநீதியானவராகவும், இரக்கமற்றவராகவும் தவறாய் காட்டுவதன் மூலம் செய்ய முற்படுகின்றான். இன்னும் இதைச் சிலசமயம் தெய்வீகஅங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற இலக்கை அடைய முயல்வதை நாம்நிறுத்திவிடத்தக்கதாக நம்முடைய பெலவீனங்களைவும், தப்பிதங்களையும் மிகைப்படுவதின் மூலமும் செய்ய முற்படுகின்றான். அதாவது நம்பிக்கையின்மையின் காரணமாக நாம் நம்முடைய பிரயாசத்தை நிறுத்திவிடச் செய்துவிடுகின்றான்.

தீய ஆவிகளினால் (உலகத்தார்) ஆட்கொள்ளப்பட்டவார்கள் சொல்லும் காரியம் என்னவெனில், ஆரம்பத்தில் இந்த ஆவிகள் தங்களை தேவன் என்றும், அவருயை துாதர்கள் என்றும் சொல்லி, ஜெபம் மற்றும் இதர காரியங்களைச் செய்யும்படிக்கு ஆலோசனை வழங்கினதாகவும், பிற்பாடு தீய ஆலோசனைகளைக் கொடுத்ததாகவும், பின்னர் போக போக நன்மையான மற்றும் தீமையானஇரண்டு விதமான ஆலோசனைகளைக் கொடுத்தாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் அவைகள் அளிக்கும் தீமையான ஆலோசனைகளுக்கு அவர்கள் இணங்கின பிற்பாடு, அடுத்ததான இப்படித் தீமையான ஆலோசனைகளுக்கு இணங்கினதின் நிமித்தம் அவர்களை குற்றம் சாட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர். இறுதியில் அவைகளின் போலி பாவனைகளையெல்லாம் அவைகள் களைந்து போட்டுவிட்டு அவர்கள் தெய்வீக தயவை பெறமுடியாத அளவுக்குப்பாவம் செய்துவிட்டார்கள் எனவும், இப்பொழுது அவர்கள் தீய ஆவிகளாகிய தங்களின் காலடியில்தான் இருக்கின்றார்கள் என்றும், அவைகள் தங்களுக்கு அறிவிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். பின்னர் தீமையான கிரியைகள் (அ)தற்கொலை செய்து கொள்வதற்கான ஆலோசனைகளை அவைகள் தங்களுக்குக் கொடுக்கும் என்றும், தங்களை முற்றிலுமாய் ஆட்கொள்ளத்தக்கதாக தங்களுடைய மனம் மற்றும் எண்ணங்களை முற்றிலும் அவைகளுக்கு ஒப்புக்கொடுப்பதற்கான பிரயாசங்களை அவைகள் தங்களிடத்தில் எடுக்கின்றன என்று தெரிவிக்கின்றனர்.


**--1837--**

இப்படியான கவலைக்கிடமான நிலையில் காணப்படுவர்கள் இப்படியான தவறான ஆலோசனைகள் அனைத்தையும் எதிர்ப்பதற்கு தங்களுடைய முழு பலத்தையும் பயன்படுத்துவதே இவர்களுக்கான ஒரே தீர்வாகும் இம்மாதியான சூழ்நிலைகளில் தேவனுடையஅன்பு மற்றும் கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய கிருபையான இரக்கமுள்ள எற்பாடுகள் தொடர்பான தெய்வீக போதனைகள் குறித்த சரியான அறிவை போன்று வேறு எதுவும் பயனுடையாதாய் காணப்படாது. மேலும் இம்மாதிரியான சூழ்நிலைகளில் காணப்படுபவர்கள் மனதளவில் தங்களுடைய ஆவியை முற்றும் முழுமையாக சிலுவையின் பாதத்தடியில் ஒப்புவித்து விடும்படிக்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும் அவர்கள் எந்த அளவுக்கு விசுவாசம் வைக்கின்றார்களோ, அவ்வளவாய் எதிராளியானவனுடைய வல்லமையினின்று முழுமையான விடுதலையடையும்படிக்கு ஜெயத்தில் கர்த்தரை பற்றிப்பிடித்துக் கொள்ளாலம். தீய ஆவிகளை வெளியேற்றுவதற்கு இதைத்தவிர வேறு எந்த வழியும் நமக்குத் தெரியாது. சிலர் அர்ப்பணம் பண்ணினவர்களின் விஷயத்தில், சந்தேகம், பயம் மற்றும் கர்த்தரிடமிருந்து விலகி போகுதல் ஆகியவைகளை உண்டுபண்ணத்தக்கதாக,எதிராளியானவன் தீமையான செல்வாக்கை மனதின் மேல் செலுத்துகின்றவனாக காணப்படுகின்றான். அதாவது பாவம் வாசற்படியில் கிடக்கும் போது, அதாவது கர்த்தருடனான ஆத்தும நீதியில் செய்யப்பட்ட உடன்படிக்கையில் எதாகிலும் மீறுதல் செய்யப்படும் விஷயத்தில் இப்படியாக காணப்படுகின்றது. இப்படியான நிலையில் காணப்படுவார்கள் விசுவாசம்,நம்பிக்கை அதாவது அனைத்தையும் இழந்து போவதற்கும், மிகுந்த மனச்சோர்விற்கும் போவதற்கான அபாயம் உள்ளது. இப்படியான நிலையில் காணப்படுபவர்கள் தேவனுடைய உண்மையான குணலட்சணம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதே இவர்களுக்குரிய மருந்தாகும், அதாவது தங்களுடைய ஜீவியத்தை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவருக்கும் தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஏற்படுத்தியுள்ள மற்றும் வழங்கியுள்ள தேவனுடைய மாபெரும் அன்பு மற்றும் அனுதாபம் குறித்த அறிவே இவர்களுக்குரிய மருந்தாகும்.விசுவாசம் ஜெயம் கொள்ள வேண்டும், இல்லையேல் சந்தோஷமும், வெளிச்சமும், ஆசீர்வாதமும் இல்லாமல் போய்விடும்.உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு ஆகக்கடவது என்பதே தெய்வீக சட்டமாக உள்ளது. விசுவாசம் காட்டாத எவரையும் இராஜ்ய வகுப்பாரில் அங்கத்தினராக பிதா சேர்த்து/ஏற்றுக் கொள்வதில்லை. இப்படியாக விசுவாசம் இல்லாதவர்கள் அடுத்த யுகத்திற்காகதான் காத்திருக்க வேண்டும். இப்பொழுது கர்த்தர் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கும். சிறுமந்தையினராகிய தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் விசுவாசம் உடையவர்களாக /உண்மையுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

**பொல்லாங்கன் அவனைத் தொடான்**

எதிராளியானவன் நம்மை தொடமுடியாமல் இருப்பதற்கு ஒரு குறிப்பிட்ட வழிமுறை இருக்கின்றது என அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகின்றார்.(1யோவான்5:18) அற்புதமான சக்தியுள்ள ஒரு கோட்டுக்குள், தேவனுடைய ஜனங்கள் உள்ளே வந்துள்ளனர் என்ற காட்சியை நம்முடைய மணக்கண்களுக்கு முன்பாக கொண்டு வருவோமாக.இந்த வட்ட கோடு, வேலியாக இருக்காமல் வெளிச்சமுள்ள கோடாக மாத்திரமுள்ளது, அதாவது கடந்து வெளி செல்வதற்கு வாய்ப்புள்ள ஒரு வெளிச்சமுள்ள கோடாக மாத்திரமுள்ளது. இந்தக் கோட்டிற்கு உள்ளே கர்த்தருடைய தயவு காணப்படுகின்றது. அக்கோட்டின் நடுமையத்தில் சபையின் தலையாகிய கர்த்தர் தாமே காணப்படுகின்றார். வேதவாக்கியங்கள் அளிக்கும் புத்திமதியும், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும் கர்த்தருடைய வழிநடத்துதலுமாகிய அனைத்தும் அவரிடத்தில் நெருங்கி கொள்ளும் படியே அவருடைய பின்னடியார்களை ஊக்குவிக்கின்றன.

**--1838--**




இந்த அற்புதமான சக்தியுள்ள கோட்டிற்கு வெளியே தீமையில் சக்திகள்/ வல்லமைகள் காணப்படுகின்றன. இந்த தீமையான வல்லமைகள் சிலசமயம் ஒளியின் பிள்ளைகளுடைய பூமிக்குரிய நன்மைகள் மற்றும் உலகுக்கடுத்த காரியங்களைத் தொடும்படிக்கு அனுமதிக்கப்படுகின்றன,ஆனாலும் அந்தக் கோட்டிற்குள்ளாக காணப்படும் கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளை உண்மையாய் தொடும்படிக்கு இந்தப் பிசாசுத்தமான செல்வாக்குள்அனுமதிக்கப்படுவதில்லை. இந்தக் கோட்டிற்குள் தீய ஆவிகளால் தங்களுடைய செல்வாக்கைச் செலுத்த முடிவதில்லை.ஆனால் அந்தோ! சிலசமயம் உலகத்தினாலும்,மாம்சத்தினாலும்,பிசாசினாலும் இழுக்கப்படும் போது சில பரிசுத்தவான்கள் அநேகமாக சில பூமிக்குரிய கனத்தை (அ) துாண்டிலில் வைக்கப்படும் சில மாம்சீக இரையை நாடுவதினால் மையத்திலிருந்து பின் நோக்கி இக்கோட்டிற்கு மிக அருகாமையில் சென்றுவிடுகின்றனர். இப்படிக் கோட்டின் அருகாமையில் மிகவும் நெருங்கி வருபவர்கள் மீது எதிரியாளியானவன் கைப்போடுவதற்கும், அவர்களை பாவம், சந்தோஷம், நம்பிக்கையின்மை எனும் இருளுக்குள் இழுத்து செல்வதற்கும், அதாவது இன்னும் அதிகதிகமாய் கர்த்தரிடமிருந்து துார இழுத்துச் செல்வதற்கும் ஆயத்தமாய் காணப்படுகின்றான்.

இக்காட்சியின் மூலம் ஆவியின் ஜெநிபிக்கப்பட்டடுள்ள தேவனுடைய அனைத்து ஜனங்களுக்கும் கடந்து வரும் படிப்பினை அவருக்குள் நிலைத்திருங்கள் பொல்லாங்காய்த் தோன்கிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் தேவனிடத்தில் சேரக்கடவோம். மேல் நோக்கியும் தொடருங்கள் உங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். பின்னானவைகளை மறந்துவிடுங்கள். உங்கள் மாம்சத்தையும், பூமிக்குரிய ஆசைகளையும்,இலட்சியங்களையும்அழித்து விடுங்கள். பொல்லாங்கன் உங்களைத் தொடாதப்படிக்கு ஆண்டவருடன்/கர்த்தருடன் நெருங்கு காணப்படுங்கள் என்பவைகளேயாகும். (1 யோவான் 2:6/ 1 தெசலோனிக்கியர் 5:22/1 சாமுயேல் 14:36/ அப்போஸ்தலர் 20:28/கொலோசெயர் 3:5/ பிலிப்பியர்3:14,13)

**--1839--**

ஆனால் எதிராளியானவனால் தொடப்பட்டவர்களுக்கும் தற்காலிமாக கண்ணியில் சிக்கினவர்களுக்கும் நாம் மீண்டும் நினைப்பூட்டுவது என்னவெனில் தேவனோடு இசைவாக வாழ்வதற்கான விருப்பம் கொண்டுள்ள அனைவரிடமும் தேவனுடைய இரக்கமானது என்னென்றும் சகிப்புத்தன்மையுடன் காணப்படுகின்றது என்றும், தேவன் அன்புடன் கூடிய இரக்கத்தினால் நிரம்பினவராய் இருக்கின்றார் என்றும் உள்ள காரியங்களே ஆகும். நம்மை பிரித்து வைத்துள்ள கோட்டிற்கு நாம் எவ்வளவு துாரம் மையத்திலிருந்து அருகாமையில் செல்கின்றாமோ, அவ்வளவுக்கு நாம் எதிராளியானவனுடைய வல்லமை மற்றும் செல்வாக்கிற்குள் கடந்து வருகின்றவர்களாக இருந்தாலும் மற்றும் நம்மிடத்தில் உள்ள சத்தியம் மற்றும் கர்த்தருடைய ஆவியின் ஆற்றல் குறைந்துவிடுகின்றதாய் இருந்தாலும் கூட மனந்திரும்புகிற ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் ஏற்படுகின்றது. இன்னுமாக கர்த்தர் இந்தச் சோதனையான அனுபவங்களைத் தற்காலிகமாக அனுமதித்திருந்தாலும் கூட, வழி விலகி போய் பின்னர் திரும்பி வரும் ஆட்டை, கர்த்தர் வரவேற்பார். இறுதியில் மனந்திரும்பி மீண்டுமாக கர்த்தரிடத்திற்குத் திரும்பி வரும் நபருக்கும் கூட இந்த அனுபவங்களை விலையேறப்பெற்றப் படிப்பினைகளாகவும் இன்னும் எதிர்காலத்தில் பூமிக்குரிய காரியங்கள் நிமித்தமாக வழிவிலகிப் போகாதப்படிக்குப் பாதுகாப்பாகவும் காணப்படும்.

ஆமென்!!!

--------------------------------

--1840--

## நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது

நீதிமானின் குணம் புனிதமான அப்பம் மற்றும் பாத்திரத்தின் மூலம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது?
பிட்கப்பட்ட அப்பம், ஒரு கோப்பை செந்நிற இரசம் மேசையின் மேலே இருக்கிறதே,
அவர் செலுத்தின விலையுயர்ந்த ஆச்சர்யமான பலிக்கு ஓர் அடையாளச்சின்னமாய் ஆக்கப்பட்டதே,
மதிப்புமிக்க அந்த இரத்தம் ஒருமுறை எனக்காக சிந்தப்பட்டதே, மதிப்புமிக்க அந்த சரீரம் ஒருமுறை எனக்காகப் பிட்கப்பட்டதே.
ஏனக்காக, அவர் மூலம்தான் நான் விடுதலையாக்கப்பட வேண்டுமே, பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் எக்காலத்தும் எப்போதும் நான் விடுதலை அடைந்தேனே.
இன்னும் வேறேதேனும் இந்த பிட்கப்பட்ட அப்பத்திற்கும் சிந்தப்பட்ட இரத்ததிற்கும் அர்த்தம் உள்ளதோ?ஹா. ஆமாம், கிருபையினாலேநானும் அவருக்குஉடன்பிறந்தோன்ஆனேன்,
அவர் பாடுகளை முழுமையாக்கிடவே,
என் சரீரம் கூட என் எஜமானுடன் பிட்கப்படவேண்டுமே,என் இரத்தம் கூட அவருடனே சிந்தப்படுதல் வேண்டுமே,
அவருடனே நான் இறக்கின்றேனே, அவருடனே நானும் பிழைத்திருக்கின்றேனே,
என்றும் எனது மகிமையின் தலையே,
ஓ. ஆச்சர்யமான இரகசியமே, ஓ.மகிமையின் நினைவுகளே,
இறப்பின் மூலமே, அவருடன் நான் உயிர்த்தெழுவேனே.
அவருடன் நானேபாடுபடுகின்றேனே, அவருடன்நானே ஆளுகை செய்வேனே,
வானாதி வானங்களிலே வெற்றி விழாவில் வாகை சூடுவோம்,
இருப்பினும் இந்த இரவினிலே, இப்பனிபடர்ந்த வெண் மேசையின்மேலே, அப்பமும் இரசமும் பரப்பியேவைத்தே, நீர் சொல்ல மாட்டீரோ, என் ஆத்துமமே, என் ஆத்துமமே,
இந்த வாக்குத்தத்தங்கள் என்னுடையவை என்றே,
உம்முடைய எல்லா சித்தங்களும் முழுவதும் அவரில்கலந்ததுவோ? அது என்ன சித்தங்கள்? நசுக்க வேண்டியே சித்தம் கொண்டிருப்பினும், அதன் மூலம்தான் உம் வாழ்க்கையின் இரசமே வழிந்தோடி வந்தே நிரம்பச் செய்யவே,
உம் உடைக்கப்பட்ட வாழ்க்கையே மகிழ்ச்சியாகவும் நன்றிபலியாகவும் பிரதான ஆசாரியனுக்காக உள்ளதோ?
கண்ணீர் கண்ணளில் தளும்பியேமறைத்தாலும், வேதனையால் என் உதடுகள் மினுமினுத்தே சுடர்விட்டே துடித்திடினும்,இதயம் கூட வேகமாக தடதடவெனவே துடிதுடித்திடினும்,
அவருடைய அன்பு மறுத்த்திடினும், புரிந்துகொள்ள இயலாத அனுபவங்கள் நடக்கும் பாதையில் கிடைத்திடினும்,நீரும் அப்போதும் அவர்மீதே நம்பிக்கை வைத்தே சொல்வீரோஆமென் என்றே? போதும் என் குழந்தாய், மேலேயிருக்கும் நம் வீட்டிற்குள்ளே வந்துவிடு என்று பிதா உன்னை அழைக்கும்வரை அமைதியாக அன்பினிலே காத்திருக்க வேண்டுமே.

# சுவாரசியமான சில கடிதங்கள்

என் அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நான் கடந்த இளவேனிற் காலத்தின்போதுதான் தற்கால சத்தியத்தினுடைய அறிவிற்குள்ளாக வந்திருந்தபடியால், என்னை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை; நான் நீண்ட காலமாகச் சத்தியத்திற்குப் பசியாய் இருந்தபடியால், ஜீவ அப்பம் இல்லாமல் நீண்ட காலம் பட்டினிகிடந்தவர்கள் மாத்திரம் அறிந்திருக்கும் வைராக்கியத்துடனும், பேரார்வத்துடனும் வேதாகமப்பாடங்களிலுள்ள அனைத்தையும் ஏற்றுக்கொண்டேன்.

நான் அர்ப்பணம்பண்ணினேன், வாக்குறுதியை எடுத்துக்கொண்டேன் மற்றும் இவை இரண்டையும் ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளப்படுத்தினேன்.

நான் சத்தியத்திற்குள்ளாக வந்திருந்த காலக்கட்டத்தில், மக்கள் சமுதாய வாழ்க்கை/சோஷியாலஜி - குறித்து (பெண்கள் மாத்திரமேயுள்ள) ஒரு வகுப்பிற்கு உரையாற்றிக் கொண்டிருந்தேன்; இதற்கு முன்னதாக வரலாறு குறித்தும், வாழ்க்கைக் கோட்பாடு குறித்தும், மனிதநேய பாடங்கள் குறித்தும் விரிவுரை ஆற்றிவந்தேன். கடந்த 25 ஆண்டுகளாக மனித மேம்பாடு தொடர்புடைய பாடங்களில் பெண்களுக்கு விரிவுரை ஆற்றுவதில் என்னுடைய பெரும்பான்மையான நேரத்தை நான் செலவழித்துக்கொண்டிருந்தேன்.

எனக்கு காது அவ்வளவுக்குக் கேட்காததினாலும் மற்றும் விரிவுரையாற்றும் பாடங்களைத் தெளிவாய் முன்வைத்திடும் தாலந்தே நான் கொண்டிருக்கும் ஒரேயொரு தாலந்தாய்க் காணப்படுகின்றதினாலும், நான் ஆற்றிடும் பணியானது பிரயோஜனமானதாகவும், மேம்படுத்தும் விதமாகவும் இருக்கின்றதென எனது நண்பர்கள் நம்புகின்றனர். இப்பொழுதோ எங்கள் அருமை சகோதரி கால்கின்ஸ் அவர்களின் அறிவுரையின்படி, தீர்வுகாண வேண்டுமென்றுள்ள எனது பிரச்சனை ஒன்றிற்கு நான் தங்களது அறிவுரையைக் கேட்க விரும்புகின்றேன். நான் அர்ப்பணம்பண்ணின உடனே, என்னுடைய இருளான ஜீவியத்திற்குள்ளாகக் கடந்துவந்திட்டதான ஆச்சரியமான ஒளியைக்குறித்தும் மற்றும் "தேவனுடைய இராஜ்யமே" தற்காலத்தின் பிரச்சனைகளுக்கான ஒரேயொரு தீர்வாய் இருக்கின்றது என்றும் என்னுடைய வகுப்பில் நான் சாட்சிபகர்ந்து, இனிமேல் அந்த இராஜ்யத்தைத் தவிர வேறெந்தப் பாடத்தைக்குறித்தும் என்னால் விரிவுரையாற்ற முடியாது எனவும் தெரிவித்தேன்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணமாக, "சத்தியத்தில் காணப்படும்" சகோதரிகளில் சிலரை, என்னுடைய இல்லத்தில் வேதப்பாட வகுப்பிற்கு வரும்படியாக அழைத்தேன் மற்றும் படிப்படியாக நம்முடைய பாடத்தில் விருப்பத்தினைக் கொண்டிருக்கும், வெளியில் காணப்படும் அப்பெண்களை வரவேற்கலாம் என்று நான் எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் சபையில் ஸ்திரீகளின் செயல்எல்லைத் தொடர்பான வேதவாக்கியங்களின் போதனைகளைக் கற்றுக்கொண்டபோது, என்னுடைய எதிர்க்கால வேலை தொடர்புடைய விஷயத்தில் தங்கள் ஆலோசனையைப் பெறவேண்டுமென நான் எண்ணினேன்.

அனைத்தையும் அர்ப்பணம்பண்ணிட நான் முழுவதுமாய் விரும்புகின்றபடியால் மற்றும் இதில் எனக்கிருக்கும் ஒரே தாலந்தும் உள்ளடங்குகின்றது என்றே நான் எண்ணியுள்ளேன் - ஆனால் என்னால் அமைதியாயிருக்க முடிகிறதில்லை - நான் சந்திக்கும் அனைவரிடமும், நான் பேசினேன்; கிட்டத்தட்ட 20 பெண்களின் கரங்களில் "தெய்வீகத் திட்டத்தினை" நான் கொடுத்தேன்; முன்பு அடர்த்தியான இருளில் காணப்பட அநேக ஜனங்கள், வெளிச்சத்தைக் காணவருகின்றனர்.

ஆனால் கடந்த குளிர்க்காலத்திலும், அதற்கு முன்புள்ள குளிர்க்காலத்திலுமுள்ள எனது வகுப்பிலுள்ள பெண்கள், அவர்களுக்கு நான் மறுபடியுமாக விரிவுரையாற்றும்படிக்குக் கெஞ்சிக் கேட்கின்றனர். நான் எனது சொந்த பாடத்தைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம் மற்றும் நான் "வேதாகமத்தின்மீது சில விளக்கவுரை" கொடுக்க விரும்புகின்றேன். இங்குள்ள ஓர் அருமையான சகோதரன் மற்றும் சகோதரியிடம் நான் ஆலோசனை கேட்டேன் மற்றும் விளக்கவுரை கொடுக்கும்படிக்கு அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கினார்கள் - இது அருமையான ஒரு வாய்ப்பு என்று அவர்கள் எண்ணுகின்றனர். இறுதியில் உங்களிடம் கேள்வியினை முன்வைத்திடலாமென நாங்கள் முடிவுசெய்தோம்.

சூழ்நிலையை முழு விவரங்களுடன் விளக்குவது சிரமமான காரியமாகும். ஆனால் முக்கிய காரியங்களை நான் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று நான் எண்ணுகின்றேன்.

நான் பேசுவதற்குச் செவிக்கொடுப்பவர்கள், அவர்களாகவே வேதாகமப் பாடங்களை வாசிக்கப்பண்ணப் பிரயாசம் எடுப்பதே எனது முழு நோக்கமாகும்.

அருமையான சகோதரனே, நீங்கள் முழு நேரமும் வேலையில் காணப்படுகின்ற சகோதரன் என்று நான் அறிவேன் மற்றும் உங்களது விலையேறப்பெற்ற நேரத்தை எடுத்துக்கொண்டதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்; ஆனால் இக்காலத்தில், என்னால் செய்ய முடிகின்ற எந்த வேலையையும் செய்திடுவதற்கு நான் ஆவலாய் இருக்கின்றேன்; ஏனெனில் "ஒருவரும் கிரியைச் செய்ய முடியாத இராக்காலம் வருகின்றது." அதேவேளையில் நான் ஒழுங்கற்று நடக்கிறவளாய் அல்லது சபை மீது நிந்தையைக் கொண்டுவருபவளாய் இருக்க விரும்பவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தயவாய்ச் சொல்லிடுவீர்களா?

நீங்கள் விரும்பினால் என்னுடைய பாடங்களினுடைய பட்டியலையும், அவைகள் ஒவ்வொன்றின் பொருள் சுருக்கத்தையும் நான் உங்களுக்குக் கொடுக்கின்றேன்.

இந்த விஷயத்திலும் மற்றும் எல்லா விஷயத்திலும் சத்தியத்தின் ஆவியினால் நான் நடத்தப்படுவதற்கு மாத்திரம் ஜெபம் ஏறெடுக்கின்றேன்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரி,
Chariotte C. Heineman.

## பதில்

கிறிஸ்துவுக்குள்ளான அருமை சகோதரியே:-

உங்கள் கடிதத்தை நாங்கள் பெற்றுக்கொண்டு, முழுவதையும் வாசித்தோம். சத்திய அறிவைப் பெற்றுக்கொள்வதற்குக் கர்த்தர் உங்களைப் பாத்திரமாகக் கருதியுள்ள காரியத்திற்காக உங்களோடுகூட நாங்களும் சந்தோஷப்படுகின்றோம். அவரது வழிகாட்டுதலும், ஆசீர்வாதமும் எப்போதும் உங்களோடு காணப்பட்டு, உங்களுக்கு வரும் ஒவ்வொரு அனுபவங்களினாலும் நீங்கள் பிரயோஜனமடைவீர்களாக.

நீங்கள் பெற்றிருக்கும் தாலந்தை நீங்கள் பயன்படுத்தினால் கர்த்தர் பிரியப்படுவார் என்பது என்னுடைய எண்ணமாகக் காணப்படுகின்றது. நீங்கள் வேலை புரிவதற்கான ஒரு பகுதியினை அவர் உங்களுக்குத் தெளிவாய்க் கொடுத்திருக்கின்றார் மற்றும் அது விஷயத்தில் உங்களுக்கு அவரிடத்தில் பொறுப்புகள் காணப்படுகின்றது. ஆகையால் சத்தியத்தினை நீங்கள் முழுமையாய் அறிந்துகொண்ட பிற்பாடு, பெண்களுக்கான உங்களது விரிவுரையாற்றுதல்களை நீங்கள் மறுபடியுமாகத் துவங்கி, சத்தியத்தைத் தவிர வேறெதையும் விவாதிக்காமல், வேதாகமப் பாடங்கள் தொகுதியினுடைய போதனைகளுக்கு இசைவாய்ச் செயல்படும்படிக்கு நான் பரிந்துரைக்கின்றேன். ஸ்திரீகள் போதித்தல் தொடர்பாக பரிசுத்த பவுலடிகளார் வைக்கும் கட்டுப்பாடானது, சபைகூட்டங்கள் சம்பந்தப்பட்டதாகும்; இக்கூட்டங்களானது பொதுவாகப் புருஷர்களையும், ஸ்திரீகளையும் உள்ளடக்கும் கூட்டங்களாகும். நீங்கள் பெற்றிருக்கும் கூட்டங்களானது, சபைகூட்டங்களாக இருப்பதில்லை மற்றும் என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி உங்கள் சந்தர்ப்பமானது எந்தவிதத்திலும் பரிசுத்த பவுலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளதான தடையின் கீழ் வருகிறதில்லை. இன்னுமாக ஒருவேளை ஏதேனும் சில புருஷர்கள் ஸ்திரீகளோடு வந்து, உங்களது விரிவுரையாற்றுதல்களில் பங்கெடுத்தாலும், இதுவும் உங்களை எந்தக் குற்றச்சாட்டிற்கும் கீழாய்க் கொண்டுவருகிறதில்லை.

நீங்கள் உங்களது விரிவுரையாற்றுதல்களைத் திரும்பவும் தொடர்வது மாத்திரமல்லாமல், ஒருவேளை உங்களது பொருளாதாரம் அனுமதிக்கும் பட்சத்தில், நீங்கள் முன்பு ஊழியம் புரிந்திட்டதான மற்றப் பட்டணங்களிலுள்ள ஸ்திரீகளை மறுபடியுமாகச் சந்திக்கவும், பேசிடுவதற்காகவுமுள்ள வழி ஒருவேளை திறக்கும்பட்சத்தில், நீங்கள் உங்கள் வேலையை இதற்கேற்ப விரிவாக்கும்படிக்கும் நான் பரிந்துரைக்கின்றேன்.

கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்திடுவதற்கான உங்களுடைய பிரயாசங்களில் கர்த்தருடைய வழிகாட்டுதலும், ஞானமும், ஐசுவரியமான ஆசீர்வாதமும் காணப்படும்படிக்கு உங்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும், ஊழியக்காரன்.

# சுவாரசியமான கேள்விகள்

## *பயண ஊழியர்களுக்கான சரியான வழிமுறை*

கேள்வி:- சபையின் மூப்பராக இருந்தும், வாக்குறுதியோடும் (vow), சொசைட்டியின் (society) ஊழியங்களோடும் உடன்பாடு கொண்டிராத ஒருவரால், பிரயாணம் மேற்கொண்டுள்ள பயண ஊழியர் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்படுவது ஞானமான அல்லது சரியான காரியமாய் இருக்குமா?

**பதில்:-** மிகவும் உறுதியாய் இல்லை என்பதே பதில். இன்னுமாக இப்படியான மூப்பர் ஒருவரைத் தேர்ந்தெடுத்ததில் சபையார் பெரிதும் தவறுசெய்துள்ளனர் என்று சபையாருக்குப் பயண ஊழியர் தெளிவுப்படுத்திட வேண்டும் மற்றும் முடிந்தமட்டிலும் விரைவாய்த் தவறைச் சரிசெய்திடுவதற்கு அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சொசைட்டியினுடைய ஊழியங்களின் மீது உடன்பாடில்லாத அந்த மூப்பரை ஒருவேளை தொடர்ந்து சபையார் விரும்புவார்களானால், சபையார் பயண ஊழியர்களின் ஊழியத்திற்காக சொசைட்டியிடம் வேண்டிக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய அருமையான செம்மறியாடுகளில் சிலர் மிகவும் மதியீனமாய்க் காணப்படுகின்றனர். சாந்தமும், தயவும் பாராட்டத்தகுந்தவைகளே; ஆனால் சிலசமயங்களில் அவைத் தேவனுக்கு நேர்மையற்றிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

---

# மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை

*"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)*

தெய்வீகக் கிருபை மற்றும் தெய்வீக நோக்கம் குறித்த அறிவைப் பெற்றிருப்பவர்களாகிய கர்த்தருடைய ஜனங்கள் சரியானதும், தகுதியானதும், முறையாய்ச் செயல்படுத்தப்பட வேண்டியதும், ஒழுங்கிற்கு உட்படுத்தப்பட வேண்டியதும் மற்றும் நெறிப்படுத்தப்பட வேண்டியதுமான சில குறிக்கோள்களைப் பெற்றிருப்பார்கள். யாருமே நலமார்ந்த குறிக்கோள்கள் இல்லாமல் இருக்கக்கூடாது. குறிக்கோள்கள் எதுவும் இல்லாமல் தேவன் இருப்பார் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாது. குறிக்கோள்கள் இல்லாதவர்கள் வாழ்க்கையில் சுற்றிக்கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டு, தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எதையும் சாதித்திடாதவர்களாகக் காணப்பட்டு, தாங்கள் ஏறெடுக்கிற பிரயாசம் அனைத்திலும் தோற்றுப்போகிறவர்களாக இருப்பார்கள்.

மேன்மையான மற்றும் கனவீனமான குறிக்கோள்கள் இருக்கின்றன. சில ஜனங்கள் பெரியவர்களாக, புகழ்மிக்கவர்களாக ஆகிவிட வேண்டும் என்று குறிக்கோளுடையவர்களாய் இருக்கின்றனர்; சிலர் ஆளவேண்டுமென்ற குறிக்கோளுடையவர்களாகவும்; இன்னும் சிலர் ஆஸ்தியுடையவர்களாக, சமுதாயத்தில் அந்தஸ்து உடையவர்களாக அல்லது மனுஷர் மத்தியில் கனங்களும், பெயர்களும் பெறுபவர்களாக ஆகிடவேண்டும் என்ற குறிக்கோளுடையவர்களாகவும் இருக்கின்றனர். இவைகள் அனைத்தும் சுயநலமான குறிக்கோள்களாகக் காணப்படுகின்றன; எனினும் இவைகள் இன்று உலகத்தை - தொழில், சமுதாயம், அரசியல் மற்றும் மதவட்டாரங்களில் இயக்கும் வல்லமையாக இருக்கின்றன. இவைகள் அனைத்தும் தவறான குறிக்கோள்களாய் இருக்கின்றன மற்றும் இவைகள் அனைத்துமே தீமையை விளைவிக்கவில்லை என்றாலும், இவைகள் அனைத்தும் சுயநலமானவைகளாகவும், தீமைக்கு ஏதுவானவைகளாகவும் காணப்படுகின்றன. செய்திடுவதற்குத் தங்கள் மனசாட்சியானது சம்மதித்திடாதவைகளைச் செய்திடத்தக்கதாக அநேகர் சுயநலமான குறிக்கோள்களினால் வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

கிறிஸ்தவன் தனக்கு முன்பாக மிகவும் மேன்மையான குறிக்கோளை வைத்திருக்கின்றவனாய் இருக்கின்றான். தேவன் தம்முடைய நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை உலகத்திலிருந்து அழைக்கின்றார். இவர்களுக்கு முன்பாக அவர் நலமார்ந்த குறிக்கோள்களை வைத்திருக்கின்றார். இவர்கள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் குறிக்கோளானது, இவர்கள் பரலோக தந்தை மற்றும் கர்த்தருடனான ஐக்கியத்திற்கு, நட்புறவிற்கு, தோழமைக்குத் தங்களை ஆயத்தப்படுத்தத்தக்கதாக - குணலட்சணம் மற்றும் மனதின் உயர் பண்புகள் யாவற்றையும் வளர்த்துக்கொள்வதற்கு ஏவுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பதற்கு மிகவும் உண்மையான பிரயாசம் எடுப்பதற்கு உந்துதலாகக் காணப்படத்தக்கதாக - இந்த மேலான குறிக்கோளை நம்முன் வைத்துக்கொள்வோமாக.

இப்போக்கினை மேற்கொள்பவர்கள் பிதாவுக்கு மிகவும் பிரியமானவர்களாகக் காணப்படுவார்கள். நிறைவேற்றிடுவதற்கு அவர் ஒரு மாபெரும் பணியினைப் பெற்றிருக்கின்றார் மற்றும் அதைச் செய்திடும் ஜனங்களுக்காக அவர் நாடித்தேடிக்கொண்டிருக்கின்றார். கிறிஸ்து இயேசு அந்த மாபெரும் வேலைக்குத் தலையாக இருக்கின்றார் மற்றும் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் தேவன் விளங்கச்செய்வதற்காக, அவருடைய இராஜ்யமானது உலகத்தை ஆளவும், ஆசீர்வதிக்கவும் இருக்கின்றது (எபேசியர் 2:6). இந்தப் பரம அழைப்பினை உணர்ந்து மதிப்பவர்கள், தேவன் தங்களை எங்கு அழைத்துள்ளாரோ, அங்குக் காணப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள். தேவன் அருளியுள்ளவற்றைப் பொருட்படுத்தாதவர்கள் அல்லது நிபந்தனைகளுக்கு உட்பட விருப்பமற்றவர்கள், பரிசைப் பெறுவதற்குரிய ஓட்டத்திற்குள் பிரவேசிக்க முடியாதவர்களாய் இருப்பார்கள்.

பரம குறிக்கோளினைப் பெற்றிருப்பவர்கள், தாங்கள் புதிய சுபாவத்தினை மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த வகுப்பாருக்கே, ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பும் விஷயத்தில், ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்வது என்பது நலமார்ந்த குறிக்கோளாகிறது. மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணினாள் (வெளிப்படுத்தல் 19:7). ஆகையால் இவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்வதற்கும் மற்றும் தேவனுடைய அருமையான குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு உதவிசெய்திடுவதற்கும் நாடிட வேண்டும்.

## மூப்பத்துவத்தில் காணப்படும் அபாயம்

கண்காணிக்குரிய, மேய்ப்பனுக்குரிய பணியினை விரும்புவது என்பது நல்லதொரு விருப்பமாகும்/குறிக்கோளாகும் (1 தீமோத்தேயு 3:1). ஒருவர் மந்தையை மேய்த்துப் பேணும் பணியைச் சரியாய்க் கவனித்துக்கொள்வாரானால், மற்றக் காரியங்களுக்கு அவருக்கு நேரமிராது. கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலிருந்து மூப்பர் ஊழியத்திற்கென்று அழைக்கப்படுபவர்கள், அதனை கர்த்தரிடமிருந்து வந்துள்ள சிலாக்கியமாகவும், கனமாகவும் கருதிட வேண்டும்; மற்றும் அதனை இழிவான ஆதாயத்திற்காக அல்ல, மாறாக ஆயத்தமான மனநிலையுடன் ஜாக்கிரதையாய் நாடிட வேண்டும் (1 பேதுரு 5:1-4). ஆனாலும் இந்த ஊழியத்தை நாடுகையில், அதில் பெருமை வளர்ந்திடுவதற்கும், அதிகார கர்வம் கொள்ளுவதற்குமான அபாயம் உள்ளது என்று ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளுவார்களாக.

மூப்பராக ஊழியம் புரிவதற்கான மேலான சிலாக்கியத்தினை உடையவர்கள், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளாமல், "ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல்" இருக்கத்தக்கதாக தங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும் (1 பேதுரு 5:3; திருவிவிலியம்). தாங்கள் பிரதான மேய்ப்பனல்ல என்றும், தாங்கள் உடன் மேய்ப்பர்களாய் மாத்திரமே இருக்கின்றனர் என்றும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். யாரேனும் ஒருவர் மந்தையினை அடக்கியாள முற்படுவாரானால், அவர் தனக்கும், சபைக்கும் தீங்கு விளைவிக்கிறவராய் இருப்பார்; ஏனெனில் அடக்கியாள முற்படுகையில் அவர் பெருமையின் ஆவியினை வளரப் பண்ணுகிறவராய்க் காணப்படுவார்.

"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்று பரிசுத்த பேதுரு அடிகளார் நமக்குக் கூறுகின்றார் (1 பேதுரு 5:5). ஆகையால் ஒருவர் கர்த்தருடைய ஊழியத்தில் தாழ்மையுடன் காணப்படுவாரானால், அவரது நடத்தையானது சபையாருக்கு நன்மை பயக்கின்றதாய் மாத்திரம் இராமல், அது இராஜ்யத்தில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான ஒரே வழியாகவும் காணப்படுகின்றது. மாபெரும் சிலாக்கியங்களை மாத்திரமல்லாமல், மகா சோதனைகளையும், மகா அபாயங்களையும் உடைய கனமிக்க ஊழியமாக, மூப்பர் ஊழியம் காணப்படுகின்றது. "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று பரிசுத்த யாக்கோபு அடிகளார் கூறுகின்றார் (யாக்கோபு 3:1).

செய்யவேண்டிய அவசியமுள்ள ஒரு பணியினைச் செய்பவர்களாகிய மூப்பர்களுக்கு, "தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்கும்படிக்கு" அப்போஸ்தலன் அறிவுரை கூறுகின்றார். யாவும் தேவனுடைய பலத்த வல்லமையினால் செய்யப்படுகின்றது மற்றும் அந்த வல்லமையினாலேயே அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாய்ச் செய்கின்றார். நம்மால் தெய்வீகச் சித்தத்தினைக் குறுக்கிட முடியாது. பெருமை அல்லது பேராசைகளை அனுமதிப்பதின் மூலம் நாம் நம்முடைய சொந்த வளர்ச்சியினைத் தடைப்பண்ணிடலாமே ஒழிய, தேவனுடைய திட்டத்தினை நம்மால் தடைப்பண்ணிடமுடியாது.

நாம் அனைவருமே மற்றவர்களுக்குச் சிறந்த விதத்தில் ஊழியம் புரிந்திடுவதற்கும் மற்றும் மாபெரும் பலனை அடையவும் நாடுகின்றோம். பரிசுத்த பேதுரு அடிகளார் அந்த வழியினை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார்; அது -- "உங்களைத் தாழ்த்துங்கள்" என்பதாகும். கவிஞன் ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"என்னை அதிகம் அபாயத்திற்குள்ளாக்குபவைகளில்
இறங்கிட நான் அஞ்சுகின்றேனே."

இந்த ஆவியானது, பெருமையையோ அல்லது ஆரவார பேச்சையோ அல்லது மற்றவர்களை அடக்கி ஆளுவதற்கான ஆசையையோ வளர்த்துவதற்கு நம்மை மிகவும் அச்சம் கொள்ளச் செய்திடும். ஆகையால் நாம் நம்மைத் தாழ்த்திக்கொண்டு, மிகவும் தாழ்மையுடன் காணப்படுபவர்களையும், கர்த்தரில் மிகவும் விசுவாசம் கொண்டுள்ளவர்களையும் தேவன் விசேஷமாய் ஆசீர்வதிப்பார் என்றும், ஏற்றகாலத்தின்போது - நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது உயர்த்திடுவார் என்றும் நினைவில் கொள்வோமாக.

சபையில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள தாழ்மையுள்ளவர்கள், சிலசமயங்களில் இந்த முக்கியமான குணலட்சண பண்பில் குறைவுபட்டிருப்பவர்கள் சிலரைப் பார்க்கிலும், குறைவாய் மதிக்கப்படுவார்கள். மனுக்குலத்தாருக்குப் பொதுவாகவே அச்சுறுத்துபவர்கள் மீதே நாட்டம் காணப்படுகின்றது. சாந்தத்துடனும், கனிவுடனும் காணப்படுபவர்களைப் பார்க்கிலும், தங்களைக் கடுமையாய் நடத்துபவர்கள் யாரேனும், தங்கள் மீது காணப்படுவதையே மனுஷர்கள் விரும்புகின்றனர். ஆகையால் அவர்கள் நம்மை விரும்புவதில்லை. நம்மில் அவர்களுக்கு நன்றாய்ப் பிடிக்கும் காரியத்தினை நாம் அடைய நாடுகிறவர்களாய் இருத்தல் கூடாது. மாறாக நாம் கர்த்தரை அவருடைய வழியில் சேவிக்க வேண்டும் என்றும், கர்த்தருடைய பார்வையில் நம்முடைய பிரதான பொறுப்பு நம்மைப் பற்றினதாக இருக்கின்றது என்றும் நினைவில் கொள்வோமாக. தேவன் நம்மை ஏற்றகாலத்தில் உயர்த்தத்தக்கதாக, அவரது பலத்த கரத்தின் கீழ் நம்மைத் தாழ்த்திக் கொள்வோமாக.

## சத்திய அறிவின் நிமித்தம் பெருமைகொள்ளுதல் பாதகமானதாகும்

இந்தக் காரியங்கள் அனைத்தும், தாழ்மையே நமக்கான தகுதியான மனநிலையாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய இருதயத்தின் உணர்வுகளானது பெருமையானதாகக் காணப்படாமல், மாறாக சாந்தமானதாகவும், தாழ்மையானதாகவும், உண்மையானதாகவும் காணப்பட வேண்டும்.

பெருமை என்பது சுயநலம் விதைக்கப்பட்டுள்ளதின் விளைவைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. சுயநலத்தின் ஆவியானது, அதனால் நல்லது மற்றும் விலையேறப்பெற்றது என்று காண்பவைகளை - அதாவது ஆஸ்தி, அறிவு, கனம், கீர்த்தி மற்றும் மனுஷர் மத்தியில் அந்தஸ்து ஆகியவைகளைப் பேராசையுடன் சேர்த்துக்கொள்கின்றது. இந்தப் பொக்கிஷங்களைச் சம்பாதிப்பதில் ஓரளவுக்கு வெற்றிக் காணுதல் என்பது சுயநலமுள்ள ஆன்மாவை மனநிறைவு கொள்ளவும், பிறர் ஆதரவு சாராமல் காணப்படவும் மற்றும் மற்றவர்களுடைய நலனுக்கடுத்தக் காரியங்களில் அக்கறையற்று இருக்கவும் செய்கின்றது. படிப்படியாக ஆனால் வேகமாக, இறுமாப்பாகவும், தன் கருத்தினை நிலைநாட்டுகிற பெருமையாகவும் வளர்கின்றதான இந்த ஆவியானது, பூமிக்கடுத்த ஐசுவரியத்தினுடைய சூரிய வெளிச்சத்தின் ஒவ்வொரு கதிர்களிலும் கனியத் தொடங்குகின்றது. சுயநலமானது கனியும்போது, அது கேலிக்கிடமாகும் அளவிற்கு அதிகரித்து, தன்னைக் குறித்தே பெருமையாய்ப் பேசுவதில் மகிழும் மற்றும் தான் கனப்படுத்தப்படுவதற்கும், பாராட்டப்படுவதற்கும் பாத்திரவானாய் இருப்பதாகவும், தனக்கு முக்கியத்தும் இருப்பதாகவும், கற்பனை கோட்டைக்கட்டி இருப்பவைகளில் மகிழும்.

தாழ்மையின் போக்கானது எத்துணை எளிமையானதாகவும் மற்றும் எத்துணை ஞானமானதாகவும் காணப்படுகின்றது! தாழ்மையின் ஆவியானது, தனக்கானவைகளை நாடுவதில்லை; இறுமாப்பு அடையாது; கற்பனை கோட்டையான முக்கியத்துவங்களை ஊகித்திட முற்படுவதில்லை; தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணிடாது; மாறாக தெளிந்த எண்ணத்துடன் எண்ணிடும் - அதாவது அது அடைந்திருப்பவைகளை அல்லது சம்பாதித்திருப்பவைகளை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மதிப்பிடாமல் இருக்கும்; (கற்பனை கோட்டை அடிப்படையில் இல்லை மாறாக) தாழ்மையானது ஸ்திரமான ஆதாரத்தின் அடிப்படையிலேயே செயல் புரிய எப்போதும் நாடினாலும், அது உண்மையான தகுதி நிலையை அடைவதற்கும், தெய்வீகப் பாராட்டு மற்றும் தயவின் உண்மையான மகிமையைச் சம்பாதிப்பதற்கும் நியாயமாய்ப் போராடுகின்றதாய் இருக்கின்றது.

ஏதோ சத்தியத்தினை நாம்தான் தோற்றுவித்ததுபோன்று, அநேகர் சத்தியத்தின் நிமித்தமாக தற்பெருமையடித்துக் கொள்கின்றனர். இது எத்துணை அறிவீனம்! நாம் சத்தியத்தினைத் தோற்றுவிக்கவில்லை. நம் கண்களைக் கடந்தகாலங்களில் குருடாக்கி வைத்த சில தப்பறைகளை நாம் அப்புறப்படுத்த மாத்திரமே செய்தோம். சத்தியம் தேவனுடையதாகும். அவரே அறியாமை மற்றும் மூடநம்பிக்கை எனும் இருளினின்று, அவரது திட்டம் குறித்த சத்தியத்தினைக் காண நம்மை அனுமதித்துள்ளார். ஒரு மனுஷன் ஓர் அழகான ஓவியத்தைப்

பார்த்துவிட்டு, அதைத் தான்தான் வரைந்ததாகத் தற்பெருமையடித்துக்கொள்வானானால், நாம் அவனை நோக்கி: "மூடனே! நீ இந்த ஓவியத்தினை வரையவில்லை. நீ அதைப் பார்க்க மாத்திரமே செய்துள்ளாய். அது தொடர்பாகத் தற்பெருமையடித்துக் கொள்வதற்கு உனக்கு எதுவுமில்லை" என்று சொல்லுவோம்.

யுகங்களுக்கடுத்த தேவனுடைய திட்டத்தின் எந்தவொரு பாகத்தினையும் நாம் உருவாக்கிட வில்லை. அப்படி உருவாக்க முயற்சித்திருப்போமானால், நாம் தோல்வியையே அடைந்திருப்போம். ஆகையால் நம்முடைய மனநிலையானது, "தேவன் என்ன ஏற்பாடு பண்ணியுள்ளார், தேவன் என்ன திட்டம் தீட்டியுள்ளார் என்று நாங்கள் உங்களுக்கு காண்பித்துத் தருகின்றோம், வாருங்கள்" என்றே காணப்பட வேண்டும். இப்படியாக நாம் தேவனை மகிமைப்படுத்துகின்றவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவுபவர்களாகவும் இருப்போம்; ஏனெனில் சத்தியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் எவ்வளவாய்ப் பெருமையை அல்லது தன்னிறைவை வெளிப்படுத்துகின்றோமோ, அவ்வளவாய் நமக்கும், மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிப்பவர்களாக இருப்போம். "எங்களுக்குச் சத்தியத்தினைப் போதிக்கத்தக்கதாக, உங்களது சபையில் ஞானமுள்ளவர்களை நீங்கள் பெற்றிருப்பது போலவே, நாங்களும் திறமிக்க நியாயசாஸ்திரிகளைப் பெற்றிருக்கிறோம்" என்று உலகம் கூறிடும்.

ஆகையால் நாம் சரியான ஆவியில் - அதாவது ஆண்டவருடைய சாந்தத்தின், தாழ்மையின் ஆவியில் காணப்படுகின்றோமா என்பதை ஆரம்பத்திலே உறுதிப்படுத்திக்கொள்வது, தகுதியான காரியமாக இருக்கும். தேவன் தம்முடைய வார்த்தைகள் தொடர்புடைய விஷயத்தில், எவற்றிற்கு வெளிச்சத்தினைச் சுடர்விடப்பண்ணுவதற்கான ஏற்றவேளை வந்துள்ளதோ, அவற்றை நாம் காண்பதற்கு அனுமதிக்கின்றார். படமானது (திட்டம்) முன்பிலிருந்தே இருந்துவருகின்றது; ஆனால் மேகங்களும், இருளும், அதன் அழகினை நாம் காணமுடியாதபடிக்கு, படத்தினை மிகவும் மங்கலாகக் காண்பித்தது. இப்பொழுது விளக்கு எரிகின்றது மற்றும் கவிஞன் சொல்லியுள்ளதுபோன்று.....

"வேதத்தில் நாம் அருமையானவைகளைக் காண்கின்றோமே."

சுயநம்பிக்கைக் கொள்வதற்குப் பதிலாக, ஞானமானது - சுயத்தினுடைய பெலவீனத்தையும் மற்றும் பூரணமின்மையையும் நினைவுகூரப்பண்ணி, சுயத்தின் மீது நம்பிக்கையின்மைக் கொள்ளச் செய்கின்றது மற்றும் தேவன் மீது மிகுந்த பக்திவைராக்கியம் கொள்ளச் செய்கின்றது மற்றும் தேவன் மீது சார்ந்து நிற்க செய்கின்றது; தேவன் மீது சார்ந்து இருத்தல் என்பது எல்லாவற்றைப் பார்க்கிலும் நம்மைப் பெலப்படுத்துகிறதாகவும், நம்முடைய விழுந்துபோன சுபாவத்தினுடைய தீமையினின்று விலகவும் உதவி செய்கின்றது.

தாழ்மையின் பாதையில் நடப்பதும், மனுஷீக விருப்பங்களைத் தொடர்ந்து கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதும் மற்றும் முழுமையாய்ப் பட்சிக்கப்படுவது வரையிலும் பலியினைப் பலிபீடத்தில் தக்கவைத்துக்கொள்வதும் உண்மையில் சுலபமானக் காரியமல்ல. ஆனால் இப்படித்தான் - அதுவும் சாந்தமும், தாழ்மையுமுள்ள இருதயமுடைய ஸ்தோத்திரத்திற்குரிய நம்முடைய முன்னோடியானவரின் அடிச்சுவடுகளில் கவனமாய் நடப்பவர்களாகிய உண்மையுள்ள ஜெயங்கொண்டவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதான பரிசை நாம் அடையாமல் போகாதப்படிக்கு, பயத்தோடும், நடுக்கத்தோடும் தெய்வீகச் சுபாவத்திற்கான நம்முடைய சொந்த இரட்சிப்பினை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (பிலிப்பியர் 2:8, 12).

இப்படியாக நாம் தாழ்மையுடனும், உண்மையுடனும் காணப்படும்போதுதான், கர்த்தர் தம்முடைய நாமத்தை மற்றவர்களுக்குப் பிரஸ்தாபப்படுத்துவதற்குரிய அவரது தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாக நம்மை ஏற்படுத்துவார். இப்படியாகச் சுயத்தினை வெறுமையாக்கி, அவரது ஆவியினாலும், அவரது சத்தியத்தினாலும் நாம் நிரப்பப்படும்போது, நாம் சேனைகளின் கர்த்தருடைய பெலத்திலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பலத்துடன் முன்னேறி, சிலுவையின் போர்ச் சேவகர்களென வல்லமையான ஊழியங்களைச் செய்திடுவோம்.

---

# தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம்

*"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1)*

ஞானி சொல்லர்த்தமான பாதங்களையோ அல்லது சொல்லர்த்தமான நடைகளையோ குறித்துப் பேசவில்லை என்பதிலும், மாறாக தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நாம் ஏற்றுக்கொள்வது போன்று, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, ஞானமுள்ள ஆலோசனை சிலவற்றைக் கொடுக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. தங்களுடைய அன்றாட ஜீவியத்தில் தாங்கள் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும் என்று அவர் கூறுவதாக, அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் புரிந்து கொண்டனர்.

"உன் நடையைக் காத்துக் கொள்." நீ போய்க்கொண்டிருக்கிற இடத்தைக் கவனி. சந்தைக்கோ அல்லது கேளிக்கை இடங்களுக்கோ செல்வது போன்று, நீ தேவாலயத்திற்குச் செல்லாதே. தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்திக்கிற இடத்திற்குச் செல்வது போன்று அங்குச் செல்வாயாக. மேலும் தொடர்ந்து தேவாலயத்தில் என்ன கேட்கும் என்று ஞானி கற்பனைப்பண்ணுகின்றார். "மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதற்கு" ஆயத்தமாய் இராதே என்று அவர் கூறுகின்றார். இது நகைப்பை, விளையாட்டு தன்மையை, புத்தியீனமான பேச்சை மற்றும் பரியாசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்த வேதவாக்கியமானது, தற்காலத்திலுள்ள தேவஜனங்கள் யாவருடைய இருதயத்திற்குள்ளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாய் இருக்கின்றது. பயபக்தி என்பது மிகவும் தகுதியானதாகும். தேவன் நம்மை நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளிடுவார் என்ற பயம் நமக்கு இப்போதில்லை. இப்படிப்பட்ட தீமையான நோக்கத்தினை அவர் தம்முடைய சிருஷ்டிகள் யாதொன்றின் மீதாகிலும் கொண்டிருக்கின்றார் என்று ஊகிப்பதைப்பார்க்கிலும், நம்முடைய பரம பிதாவைக் குறித்து நாம் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனாலும் சந்தைக்குப் போவதுபோன்று, நாம் தேவாலயத்திற்குச் செல்லக்கூடாது. தேவனைத் தொழுதுகொள்ளும் எல்லா இடங்களிலும் நல்லொழுக்கம் அவசியமாய் இருக்கின்றது என்ற உண்மையினைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் புரிந்துகொள்வதில்லை.

நிழலான ஆலயத்தில் தேவன் காணப்படாத ஒரு விதத்தில், நாம் தேவனைச் சபையில் பெற்றிருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சபையின் அங்கத்தினர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ, அங்குத் தாம் காணப்படுவதாகக் கர்த்தர் உரைத்துள்ளார். சொல்லர்த்தமான கற்களினாலான ஆலயத்தைப் போலவே, ஜீவனுள்ள கற்களினாலான தேவனுடைய ஆலயமும் முழுக்க பயபக்தியுடன் பார்க்கப்பட வேண்டும்.

நாம் அறையிலோ அல்லது சபையிலோ அல்லது கொட்டகையிலோ கூடினாலும் சரி, தேவனுடைய ஜனங்கள் அங்குக் கூடியுள்ள காரியமானது, அக்கட்டடத்தினைப் பரிசுத்த இடமாக்குகின்றது. ஆகையால் அங்குக் கூடுவதற்கு வரும் எவரும், தன் நடையினைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் வரும்போது, தான் இருக்கும் இடம் யாது என்று உணர்ந்தவராய் இருக்க வேண்டும் மற்றும் கேட்பதற்கு - செவிக்கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டுமே ஒழிய, ஆரவாரம் பண்ணுவதற்கல்ல. சம்பாஷணைகள் யாவும், ஆவிக்குரிய காரியங்களின் அடிப்படையில், கட்டியெழுப்பும் - பக்திவிருத்தி உண்டுபண்ணும் விதத்தில் காணப்பட வேண்டும். இப்படியாகப் பேசமுடியவில்லையெனில், தேவ செய்தியினைக் கேட்டுவிட்டு, கூடிப்பாடி, கலைந்து செல்வது நலமாயிருக்கும்.

என்ன உரையாடல் காணப்பட்டாலும், அவ்விடத்திற்காக மாத்திரமல்லாமல், அத்தருணத்திற்காகவும் என்றுள்ள பயப்பக்தியுடன் உரையாடப்பட வேண்டும். இங்குமங்குமாக திரும்பிப் பார்த்து, "இந்தச் சகோதரர், அந்தச் சகோதரர், இந்தச் சகோதரி, அந்தச் சகோதரி வருகின்றார்; அவர்கள் பாடுவதை நாங்கள் கேட்கின்றோம்" என்று சொல்லக்கூடாது. இத்தகைய நடத்தை என்பது மிகவும் தகுதியற்றதாகும்.

பயபக்தியைவிடக் கர்த்தருடைய ஜனங்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் வேறு எந்தப் பாடத்தையும் நாம் அறியோம். பயபக்தி இல்லாத எவரையும் கர்த்தர் அழைக்கிறதில்லை மற்றும் அந்தப் பண்பானது, பலமடைய அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். ஆனால் பயம் துரத்தப்படும்போது, பயபக்தி குறைவு ஏற்பட வாய்ப்பாகுகின்றது. இந்த விஷயத்திற்கு - நாம் தேவாலயத்திற்கோ அல்லது திவ்விய ஆராதனை நடைப்பெறும் எந்த

ஓர் இடத்திற்கோ செல்லுகையில் - விசேஷித்த கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## மற்றவர்களுடைய உரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல்

தேவாலயத்திற்குச் செல்லுகையில் நம்முடைய நடையை நாம் கவனித்துக்கொள்வது மாத்திரமல்லாமல், நாம் நம்மோடு எடுத்துச் செல்பவைகளைக் குறித்தும், நாம் கவனிக்க வேண்டும். நாம் அங்குச் சுத்தமாய்ச் செல்வதற்குக் கவனிக்க வேண்டும்; நம்முடைய வஸ்திரங்களில் பூச்சிகளைக் கொண்டுபோகாதபடிக்குக் கவனிக்க வேண்டும்; நம்மிடமிருந்து கெட்ட வாசனைகள் வராதபடிக்குக் கவனிக்க வேண்டும். சரிவர பயிற்சியளிக்கப்படாத பிள்ளைகளை அங்குக் கூட்டிச் செல்லாதபடிக்கு நாம் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்வோமானால், மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இருக்கும் அபாயத்திற்குள்ளாகாதிருப்போம்.

பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுவரும் வாய்ப்புகள் இருக்கலாம். இப்படிச் செய்ய முடியாவிட்டால், கூடுகைகளுக்கு வரும் விஷயத்தில், பெற்றோர்கள் சுழற்சி முறையில் வருவது நலமாயிருக்கும். பிள்ளைகள் கூடுகைகளில் கலந்துகொள்வது என்பது மற்றவர்களுடைய ஆவிக்குரிய நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாய் இருக்கும் பட்சத்தில், அத்தகைய பிள்ளைகளைக் கூடுகைகளுக்குக் கொண்டுவருவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. வகுப்பிற்குத் தொந்தரவு உண்டுபண்ணாத வயதை அடைவது வரையிலும், அவர்களை வீட்டில் விட்டுவருவதற்கு வழி ஒன்று ஏற்பாடு பண்ணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடைய வழக்கங்களுக்குப் பழகிப்போனவர்களாய் இருப்பதினால், குழந்தையினுடைய ஒவ்வொரு சலனங்களினாலும் அநேகமாக மற்றவர்கள் தொந்தரவிற்குள்ளாகுகையில், பெற்றோர்கள் இதனை உணரமுடியாதவர்களாய் இருக்கின்றனர். நம்மால் உண்டாகும் இத்தகைய சோதனைகள் தவிர, மற்றப்படி மற்றவர்களுக்கு அவர்களது பொறுமையினைச் சோதனைக்குள்ளாக்கும் சொந்த சோதனைகளும் காணப்படவே செய்கின்றது.

## காலந்தவறாமை குணலட்சணத்திற்கான ஒரு சான்று

சிலர் தங்களது நடையை மாத்திரமல்லாமல், தங்கள் கைக்கடிகாரத்தினையும் கவனிப்பது அவசியமாய் இருக்கின்றது. கூடுகைக்குக் காலதாமதமாக வருதல் என்பது நீதி மற்றும் அன்பு, இரண்டின் கொள்கைகளுக்கும் முரணானவையாகும். கூடுகையில் கலந்துகொள்பவர்கள் யாவரும், மற்றவர்களுக்கு நீதியாய்க் காணப்படும் வகையில், தாங்கள் சரியான நேரத்திற்கு வரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்திற்குக் கூடுகைக்குத் தாங்கள் தாமதமின்றி வரத்தக்கதாக, தங்கள் அலுவல்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காலந்தவறாமல் காணப்படுவதற்கும் மற்றும் மற்றவர்களுக்குத் தொந்தரவளிக்காமல் இருப்பதற்குமான நம்முடைய பிரயாசங்களானது, கர்த்தரினால் கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கான சான்றுகளாகச் சந்தேகத்திற்கிடமின்றி பார்க்கப்படும் மற்றும் இவைகள் அவரால் அங்கீகரிக்கப்படும் மற்றும் இவைகள் இராஜ்யத்திற்கு நாம் ஆயத்தமாகுவதற்கு உதவுகிறதாக இருக்கும். மற்றவர்களுடைய உரிமைகளின் விஷயத்தில் அலட்சியமாய் இருப்பவன், தான் அன்பின் ஆவியில், கிறிஸ்துவின் ஆவியில் குறைவுப்பட்டிருப்பதை வெளிப்படுத்துபவனாய் இருப்பான். கிறிஸ்துவின் ஆவியில்லாமல், நன்கு வளர்ச்சியடையாமல் இருப்பவன் எவனும், இராஜ்யத்தில் இடம் பெறான்.

ஆகையால் இவ்விஷயங்கள் - அதாவது ஒழுங்கற்ற பிள்ளைகள், கூடுகைகளுக்குத் தாமதமாய் வருதல் முதலானவைகள் - இராஜ்யத்தில் இடம்பெறுவதற்குரிய நம் தகுதி நிலையினைப் பாதிப்பவைகளாய் இருக்கின்றன. இதனிமித்தம் நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்படுகின்றோம் அல்லது மற்றவர்களை அவர்களது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்ப்பதற்கு நாம் உரிமை பெற்றிருக்கின்றோம் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லுகின்றோம் என்பதாகாது. "குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கர்த்தர் கூறியுள்ளார். கர்த்தருடைய சித்தத்தைச் செய்திடுவதற்கான நம்முடைய பிரயாசங்களானது, நம்முடைய இருதயங்களுடைய விருப்பங்களுக்குச் சமமாய் இருக்கின்றது என்பதை நாம் காட்ட வேண்டும். இப்படியாக ஜீவிப்பதற்கான தீர்மானங்களைச் செயல்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நம்முடைய மறுரூபமடைதலை நாம் அனுபவிக்கும்போது நாம் மகிழ்ச்சியடைபவர்களாய் இருப்போம்.

# வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம்

***"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 11:24, 25***

நம்முடைய பாவங்களுக்கான, அதாவது நம்முடையதற்காக மாத்திரமல்லாமல் சர்வலோகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலிக்கான நினைவுகூருதலாக, அவரால் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, அதன் எளிமையிலும், அதன் சிறப்பிலும் கவனத்தை ஈர்க்கின்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. உலகத்தின் மாமனிதர்கள் தங்களைப்பற்றின நினைவுகளை நீடித்திருக்கப்பண்ணுவதற்கென மிக வித்தியாசமான வழிவகைகளை எப்போதும் நாடினதுண்டு. இவர்கள் தங்கள் மகத்துவங்களையும், தங்கள் சிறப்புகளையும், தங்கள் பின்னடியார்களுக்கு நினைப்பூட்ட முயன்றிட்டாலும், நிச்சயமாய் தங்கள் மரணத்திற்கான - அதிலும் விசேஷமாக நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்படுகின்றதுபோல, அவமானமான, நிந்தனையுள்ள, குற்றவாளியாக மரிக்கும் மரணத்தைப்போன்றதொரு மரணத்திற்கான நினைவுகூருதலையும், ஞாபகார்த்தத்தையும் ஏற்படுத்திடவேமாட்டார்கள். இயேசுவின் இடத்தில் இன்னொருவன் காணப்பட்டால், அநேகமாக தனது பராக்கிரமிக்கச் செயல்களுக்கான ஞாபகார்த்தமாகப் பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்; உதாரணத்திற்கு லாசருவை உயிர்த்தெழப்பண்ணினதற்கு (அ) சீறும் கடலை அமைதிப்படுத்தினதற்கு (அ) ஜனங்கள் குருத்தோலைகளுடன், இராஜாவுக்கு ஓசன்னா என்று சத்தமிட, எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட வெற்றி பிரவேசத்திற்கு ஞாபகார்த்தமான பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்.

ஆனால் நமது கர்த்தரோ, அவருடைய கணிப்பிலும், தேவனுடைய கணிப்பிலும், அவரது மகத்துவமான வேலையாகக் காணப்பட்ட காரியத்தையே, அதாவது நம் சார்பிலான அவரது பாவநிவாரண பலியையே, தமது பணியிலுள்ள மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் அதிகமாய், அவரது உண்மையான பின்னடியார்களால் மற்றும் அவர்களால் மாத்திரமே உணர்ந்துகொள்ளப்படப்போகின்ற காரியத்தையே, தமக்கு நினைவுகூருதலாகத் தெரிந்துகொண்டார். அவரது பின்னடியார்கள் அவரது ஆச்சரியமான வார்த்தைகள் அல்லது கிரியைகளுக்கு ஏதோ ஒன்றினை நினைவுகூருதலாக மதித்திருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால் உலகத்தாரால்கூட இவைகளை உணர்ந்துகொள்ளவும் முடியும். ஆனால் நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், பாவநிவிர்த்திக்கும் அடிப்படையாகக் காணப்படும் நமக்கான ஈடுபலியென, அவரது மரணத்திற்கு இருக்கும் மதிப்பின் விஷயம் அப்படியல்ல. இது அர்ப்பணம் பண்ணினவர்களாகிய சிறுமந்தையினரை — தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தவிர, வேறு எவராலும் இதுவரையிலும் முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை. மேலும் இவர்களுக்காகவே நினைவுகூரும் சின்னங்களானது ஏற்பாடுபண்ணப்பட்டு, நிறுவப்பட்டது. யூதாஸ் அங்குக் காணப்பட்டாலும், அவனுக்குத் துணிக்கையானது கொடுக்கப்பட்டது மற்றும் போஜனம் நிறைவுபெறுவதற்கு முன்னதாக, அவன் மற்றவர்களை விட்டுவிட்டு வெளியேறினான்; இது இந்த யுகத்தின் முடிவில் சிறுமந்தையினர் தங்கள் கர்த்தரோடுகூட, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கான தங்களது பங்கினை நிறைவேற்றிடுவதற்கு முன்னதாக, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினால் நிறைவேற்றப்பட்டதான ஈடுபலியினைச் சரியாய் மதிப்பிடாதவர்களும், உணர்ந்துகொள்ளாதவர்களுமாகிய அனைவரும், உண்மையுள்ளவர்களின் கூட்டத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் வெளியேற்றப்படுமளவுக்குச் சத்தியம் எனும் துணிக்கையானது மிகவும் பலமிக்கதாகியிருக்கும் என்பதைக் குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை (1 யோவான் 2:19).

## பஸ்கா இராப்போஜனத்தின் தியதி

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான தங்களது விடுதலையையும், அக்காலத்தில் தங்களது முதற்பேறானவர்கள் தப்புவிக்கப்பட்டதையும், நினைவுகூரும் வண்ணமாக யூதர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றதான பஸ்கா இராப்போஜனத்தினுடைய தியதியானது, யூதர்களுடைய காலக்கணக்கீட்டு முறைமையின்படியே, அதாவது சந்திர காலக்கணக்கீட்டு முறைமையின்படியே கணக்கிடப்படுகின்றது (யாத்திரயாகமம் 12:2-14). நாம் மாதங்களைப் பிரிப்பதுபோல் பிரிப்பதற்குப்பதிலாக, அவர்கள் அமாவாசையை, புதிய மாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறிப்பதற்கு அனுமதித்தனர்; சூரிய காலத்திற்கும், சந்திர காலத்திற்கும் இடையிலான வித்தியாசமானது,

எப்போதும் வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையுடன் புதிய வருடத்தை ஆரம்பிப்பதன் மூலம் சரிப்பண்ணப்படுகின்றது. தங்கள் மதம் சார்ந்த விழாக்களை ஆசரிக்கும் விஷயத்தில், யூதர்கள் இன்னமும் இந்தக் கணக்கீட்டு முறைமையையே கைக்கொள்ளுகின்றனர். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் இதே ஒரு விதியை, நமது கர்த்தருடைய இறுதி இராப்போஜனத்திற்குரிய வருடாந்தர ஆசரிப்பிற்கான தியதியினை நிர்ணயிக்கும் விஷயத்திற்கும் பயன்படுத்தினதால், நாமும் அதையே பின்பற்றுகின்றோம்.

வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் அமாவாசையானது, இந்த வருடத்தில் (1913), ஏப்ரல் 8-ஆம் தேதியில் நிகழ்வதாக எபிரெய ஆண்டு குறிப்பேட்டில் (almanacs/calendar) கணக்கிடப்பட்டுள்ளது . . . அநேகமாக இது எருசலேமின் ஆய்வு கருத்து அறிவிப்பாகும். மாலை 6 மணிக்கு, யூதருடைய புனிதமான வருடத்தினுடைய முதலாம் மாதமாகிய, நீசான் மாதத்தின் முதல் நாள் ஆரம்பமாகுகின்றது. நீசான் முதலாந்தேதி துவங்கி 10-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது, மந்தையிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றது. 14-ஆம் நாளில் (பௌர்ணமி அன்று*) "சாயங்காலங்களுக்கு நடுவில்" (நீசான் 13-ஆம் தேதி மாலை 6 மணி முதல், நீசான் 14-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் ஏதேனும் ஒரு நேரத்தில்) ஆட்டுக்குட்டியானது அடித்து, புசிக்கப்பட வேண்டும். பதினைந்தாம் தேதி அவர்களது பஸ்கா பண்டிகையானது ஆரம்பித்து, ஏழு நாட்கள் நீடிக்கின்றது; இதன் முதலாம் மற்றும் ஏழாம் நாட்களானது விசேஷித்த விதமாய்ப் பரிசுத்தமானவைகளாக, ஓய்வுநாட்களாக (அ) "பிரதான" நாட்களாக ஆசரிக்கப்படுகின்றன (யாத்திராகமம் 12:16). பதினாறாம் தேதியில் வாற்கோதுமை அறுவடையின் முதற்பலன்கள், ஓமர் அளவு கர்த்தருக்குச் செலுத்தப்பட்டன மற்றும் 50 நாட்கள் கழிந்து (பெந்தெகொஸ்தே நாளில்) அவர்கள் கர்த்தருக்கு இரண்டு அப்பங்களை அசைவாட்டும் காணிக்கைகளாக்கினார்கள் (லேவியராகமம் 23:17). [* சூரியன் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கான அடையாளமாய்க் காணப்படுவதினால், சந்திரனும் இஸ்ரயேல் ஜாதிக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. (வெளிப்படுத்தல் 12:1) பன்னிரண்டு மற்றும் சிலசமயம் இடம்பெறும் பதிமூன்று சந்திர மாதங்களானது, அந்த ஜாதியின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, சந்திரனானது பௌர்ணமி நிலையில் காணப்பட்டது. பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது மற்றும் பௌர்ணமிக்கு முன்பு சந்திரன் வளர்வதற்குரிய காலத்தைப்போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக்கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரத்தினுடைய இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையிலான திருப்புமுனையாகக் காணப்பட்டது. தொகுதி-2, ஆங்கிலத்தில் பக்கம் - 218, தமிழில் பக்கம் - 235 பார்க்கவும்.

அசுசியடைந்த யூதர்கள், இதன் காரணமாக பஸ்காவினை அதற்குரிய காலத்தில் கைக்கொள்ள முடியாமல் போவதால், அப்படியானவர்கள் இரண்டாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் - எண்ணாகமம் 9:8-13) அதைக் கைக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்; இதன் படிப்பினை என்னவெனில் – (அறியாமையின் காரணமாக) மேசியா தங்களுக்கு முன்வைக்கபட்டபோது, அவரைத் தங்கள் மீட்பர் என்று ஏற்றுக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட்டவர்கள், அனைத்தும் திரும்பிக்கொடுக்கப்படும் காலங்களில், தங்கள் ஜாதியானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாத நிலையில், பின் அறுவடையில் வரும்போது, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்பதேயாகும்.]

யூதர்களால் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டுவந்ததான இவைகள், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, மாபெரும் மற்றும் பிரம்மாண்டமான நிகழ்வுகளுக்கு நிழலாய் இருக்கின்றன. பத்தாம் தேதியில் ஆட்டுக்குட்டியானது தெரிந்துகொள்ளப்படுவது என்பது, இஸ்ரயேலானது நிஜமான கடந்துபோகுதலிலுள்ள முதற்பேறானவர்களுடைய சபையென ஆசீர்வதிக்கப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டுமெனில், அவர்கள் எவ்வாறு பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக இயேசுவை ஏற்றிருக்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அந்த நாளில்தான் கர்த்தர் அவர்களது இராஜாவென, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்குள் வந்தபோது, இறுதியாக அந்த ஜாதியாருக்கு தம்மை முன்வைத்தார் (யோவான் 12:12-16 ஒப்பிட்டுப்பார்க்கவும்). ஆனால் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்வதை அலட்சியப்படுத்தினவர்கள், உடனடியாக மறுக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் நிழலான முதற்பிறப்புகளாக இருப்பதிலிருந்து ஓயப்பண்ணப்பட்டார்கள்.

(இந்த வருடத்தில் [1913] ஏப்ரல் 20-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, 21-ஆம் தேதி, மாலை ஆறு மணிவரை நீடிக்கின்றதான) 14-ஆம் தேதியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும் மற்றும் புசிக்கப்பட வேண்டும். (அநேகமாக இந்த ஒரு நோக்கத்திற்கான தெய்வீக ஏற்பாட்டின் காரணமாகவே) எபிரெய காலக்கணக்கிடுதலானது, "கடைசி இராப்போஜனத்தினுடைய" புசித்தலானது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிகழ்வதற்கு அனுமதித்ததாய் இருக்கின்றது. (சிலுவையில் அறையப்படுவது வரையிலும் முடிவடையாத, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஆசரிக்கப்பட்டதான)

ஆட்டுக்குட்டியும், கசப்பான கீரைகளும், புளிப்பில்லாத அப்பமும் உள்ள பஸ்கா இராப்போஜனமானது, மாலை ஆறு மணிக்குமேல் புசிக்கப்பட்டது. பின்னர்த் தொடர்ந்து நிஜமான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதான அப்பமும், திராட்சரசமும் உள்ள நினைவுகூருதலின் இராப்போஜனத்தினுடைய நிறுவுதல் நடந்தது. ஆகையால் இதுவே வருடந்தோறும், அந்தத் தருணம் வருகையில், அவரது பின்னடியார்களால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்குப்பதிலாக, நிஜமான ஆட்டுக்குட்டிக்கும், நிஜமான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கும் — அவரது இரத்தத்தின் பயனான மாபெரும் கடந்துபோகுதலுக்கும் நினைவுகூருதலாக ஆசரிக்கப்பட வேண்டும்.

(ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய அல்லது 15-ஆம் தேதியின் பஸ்கா பண்டிகைக்கு மறுநாளாகிய) நீசான் 16-ஆம் தேதியில் முதல் பலன்களாகிய வாற்கோதுமையினுடைய கதிர்கட்டை அசைவாட்டுதலானது, "நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக" நமது கர்த்தராகிய கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 23: 5, 6, 11, 15-17; 1 கொரிந்தியர் 15:20).

ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரண்டு அப்பங்கள் அசைவாட்டுக் காணிக்கையாக்கப்படுவது என்பது, சபையைத் தேவனுக்கு முன்னாக நிறுத்துவதையும், சபை மாபெரும் பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்த ஏற்றுக்கொள்ளுதலானது பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த பரிசுத்த ஆவியினாலான அபிஷேகிக்கப்படுதலால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சபை உண்மையில் "ஒரே அப்பமாகக்" காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 10:17); இரண்டு அப்பங்களானது, பாவநிவாரண நாளில் இடம்பெறும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களினால் அடையாளப்படுத்தப்படுகின்ற அதே காரியங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது முன்னிறுத்தப்படும் அனைவரும், கிறிஸ்து இயேசுவின் மூலமாகத் தேவனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய் இருந்தாலும், முன்னிறுத்தப்படும் அனைவரும் முடிவுவரையிலும் உண்மையாய்க் காணப்படும் நிலைக்கு வரமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு அப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது ஜெயங்கொள்ளுகிற சிறுமந்தையையும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்வதின் மூலம், "பரம அழைப்பினை" உறுதிப்படுத்திக்கொள்ளாதவர்களாகிய திரள் கூட்டத்தினர் எனும் அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பணிவிடைக்காரர்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

புனித வெள்ளிக்கும், ஈஸ்டர் ஞாயிறுக்குமான தேதிகளைக் கணக்கிடுவதற்கென எபிஸ்கோப்பலியன்ஸ் (Episcopalians) மற்றும் உரோமன் கத்தோலிக்கர்கள் மத்தியில் நடைமுறையில் காணப்படுகின்ற கணக்கிடும் முறைமையானது, முன்பிருந்த முறைமையிலிருந்து வேறுபடுகின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் முதல் பௌர்ணமியைத் தொடர்ந்துவரும் முதல் ஞாயிறை, இவர்கள் ஈஸ்டர் ஞாயிறு என்றும், இதற்கு முன்வரும் வெள்ளியை, புனித வெள்ளி என்றும் கொண்டாடுகின்றனர். இப்படியான கணக்கீட்டுமுறைமையானது, நாம் அங்கீகரிக்கின்றதான யூத முறைமைக்குப்பதிலாக கி. பி. 325-இல், நைஸ் ஆலோசனைக்குழுவினால் நிறுவப்பட்டது. ஆனால் "பஸ்கா" என்ற பெயரானது (ஈஸ்டர்* ஞாயிறு என்றில்லாமல்) நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது; போப்மார்க்கமானது அரசியல் செல்வாக்கில் உறுதியடைந்தப்பிற்பாடு, அறியாமையிலுள்ள புறமதத்தார், அரசினுடைய சலுகையினை அனுபவித்துக் கொண்டிருந்ததான இந்த அமைப்பிற்குள் குவிய ஆரம்பித்தப்பிற்பாடே "பஸ்கா" என்ற பெயருக்குப்பதிலாக, "ஈஸ்டர்" என்ற பெயர் நிறுவப்பட்டது; ஏனெனில் பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலப்பகுதியில், புறமதத்தினரும், இளவேனிற் தேவதையாகிய ஈஸ்டெரா (Estera), ஜெர்மனியில் ஒய்ஸ்ட்ரா (Ostara) என்று அழைக்கப்படும், அதாவது தங்கள் ஈஸ்டர் தேவதைக்குப் பண்டிகை கொண்டாடும் வழக்கத்தில் காணப்பட்டனர். இதுவும் அதிக எண்ணிக்கையிலான ஜனங்களைக் கூட்டுவதற்கும், செல்வாக்கினை அதிகரிப்பதற்கும் என்று, பேராசை மிக்க "குருமார் வகுப்பினர்" (clergy) கையாண்ட அநேக முறைமைகளில் ஒன்றாகும். [* அப்போஸ்தலர் 12:4-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஈஸ்டர் எனும் வார்த்தையானது, தவறான மொழிப்பெயர்ப்பாகும்; அது பஸ்கா என்றே மொழிப்பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். (Revised) ரிவைஸ்ட் மொழியாக்கம் பார்க்கவும்.]

சிலசமயம் யூத கணக்கிடுதல் முறைமையும், உரோம கணக்கிடுதல் முறைமையும், ஒரே நாட்களைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் எப்போதும் இப்படியாகக் காணப்படுவதில்லை; சிலசமயங்களில் இவைகளின் கணக்கிடுதலானது கிட்டத்தட்ட ஒரு சந்திர (அ) மாத அளவு வித்தியாசப்படுகின்றது.

யூதர்கள் பஸ்கா வாரத்தினை, நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 22-ஆம் தேதியில் (அதாவது ஏப்ரல் 21-ஆம் தேதி மாலை ஆறு மணிக்கு) ஆரம்பமாகும் "பண்டிகையாக" கொண்டாடுகின்றனர். நினைவுகூருதலினுடைய இராப்போஜனத்தில் நாம் பண்டிகை வாரத்தினை ஆசரியாமல், மாறாக பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கும், புசிக்கப்பட்டதற்குமான நாளுக்கான ஆண்டுநிறைவு நாளாகிய, அதாவது முதற்பேறானவர்களின் சபையானது மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமைப்பெறுகின்றதான ஜீவனுக்குள்ளாகக் கடந்துபோவதற்குக் காரணமாய் இருந்த பலியை ஏறெடுத்த தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியாகிய, நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளும், நீசான் 15-ஆம் தேதிக்கு முந்தின நாளும், 1913-ஆம் வருஷத்தில் ஏப்ரல் 20-ஆம் தேதி மாலை ஆரம்பமாகும் நீசான் 14-ஆம் நாளையே நாம் ஆசரிக்கின்றோம். பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய நிஜமானது, உண்மையான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவருடைய இருதயத்தின் சந்தோஷத்தில் காணப்படுகின்றது; ஏழு நாட்கள் என்பது சந்தோஷம் மற்றும் இரட்சிப்பினுடைய பூரணத்தை (அ) முழுமையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கணக்கிடுதல் தொடர்புடையதான அநேகம் கேள்விகளுக்கு நாம் பொதுவான பதிலாக, விவரங்களைக் கொடுத்துவிட்டோம்; இதற்குக் காரணம் இதற்கு ஏதேனும் மிகுந்த முக்கியத்துவம் இருப்பதினாலோ அல்லது துல்லியமான ஆண்டுநிறைவு நாள் ஆசரிப்பில் காணப்படும் அடிமைப்படுத்துதலோ அல்ல. கிறிஸ்துவினால் விடுதலைப் பண்ணப்பட்டவர்கள்மீது இப்படியாக எந்த ஓர் அடிமைத்தனமும் இல்லையென்று நாம் அடையாளம் கண்டுள்ளோம். "என்னை நினைவுகூரும்படி இதைச் (இந்த வருடாந்தர நினைவுகூருதலை நீங்கள் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறுகையில், அவர் நோக்கம் கொண்டுள்ளதுபோன்று, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அதன் சரியான ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்கு விருப்பங்கொண்டவர்களாக நாம் இருப்பினும், இதை நாங்கள் கடமையாகப் பார்ப்பதைவிட சிலாக்கியமாகவே பார்க்கின்றோம்; ஒருவேளை அறியாமை (அ) தவறானப் புரிந்துகொள்ளுதலின் காரணமாக நாளைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் நாம் தவறு இழைத்தாலும், கர்த்தர் நம் நல் நோக்கங்களை ஏற்றுக்கொள்வார் என்றும், தவறை மன்னிப்பார் என்றும், தமது ஆசீர்வாதத்தை அருளுவார் என்றும் நாம் நம்புகின்றோம். தவறானப் போதனைகள் மற்றும் மனித பாரம்பரியங்களின் காரணமாக, அவரது மரணத்திற்கான இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கென, அவர் நியமித்துள்ளதான அதன் ஆண்டுநிறைவு நாளை தெரிவு செய்வதற்குப்பதிலாக வேறு காலங்களையும், நேரங்களையும் தெரிவுசெய்யும் அவரது பிள்ளைகளாகிய அநேகருடைய நல் நோக்கங்களைக் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் நாம் நம்புகின்றோம். இதுபோலவே ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தத் தேதியை மறந்தவராக (அ) ஜூலை 4-ஆம் தேதியே இந்நிகழ்வினுடைய ஆண்டுநிறைவு நாள் என்றும், இந்தத் தியதியே, இதைக் கொண்டாடுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளதான பொருத்தமான தேதி என்றுமுள்ள உண்மைகளை அறியாதவராக வருடத்திற்கு மூன்று, நான்கு (அ) ஐம்பது முறைகள் சுதந்திரத்தைக் கொண்டாடிடும் ஒரு மனிதனுடைய தேசப்பற்று நோக்கங்களை நாம் ஒத்துக்கொள்கின்றோம்.

மற்றச் சத்தியங்களைப்போலவே, இருண்ட யுகங்களையுடைய குப்பைகளின் கீழ் நீண்டகாலமாய்ப் புதைக்கப்பட்டுக் கிடந்த இதையும் இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார். அவரது ஜனங்களாக உண்மையில் காணப்படுபவர்கள் அனைவரும் சத்தியத்திற்காக ஆவலாய்க் காணப்படுகின்றனர் மற்றும் மற்றப் பாடங்களைப்போலவே இப்பாடத்திலுமுள்ள சத்தியங்களானது, தேவவார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).

கர்த்தருடைய மரணம் என்ற வார்த்தை எதைக்குறிக்கின்றது மற்றும் எதைக் குறிக்கவில்லை என்பதை நேர்மையான மனமுடையவர்களிடத்தில் விவாதித்திடுவதற்கு எந்த அவசியமும்

இருப்பதில்லை. ஈடுபலிபற்றின உபதேசத்தினின்று அல்லது ஈடுபலி உபதேசத்துடன் சம்பந்தப்பட்டதான நியாயமான ஊகங்களின்று தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் சிலர் வேதவாக்கியங்களுக்கு முரணாக, நமது கர்த்தருக்கு இரண்டு மரணங்கள் சம்பவித்தன என்றும், ஒன்று அவர் உலகத்திற்கு வந்தபோது நிகழ்ந்தது என்றும், மற்றொன்று கல்வாரியில் நிகழ்ந்தது என்றும், முதல் மரணத்திற்கு முன்னதாக, கல்வாரியில் "எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினுடைய" மரணமானது அவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்றும் வலியுறுத்திக் கூறுகின்றனர். இவர்கள் "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று வேதவாக்கியம் தெரிவிக்கும் உண்மையினையும், நமது கர்த்தரினாலோ (அ) அவரது அப்போஸ்தலர்களாலோ குறிப்பிடப்பட்டுள்ளதான ஒரே மரணம், கல்வாரியில் நிகழ்ந்த மரணமே ஆகும் என்ற உண்மையினையும் வேண்டுமென்றே அறியாதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

எருசலேமில் தாம் அடையப்போகின்றதான மரணத்தைக்குறித்து அவர் பேசினதாக அப்போஸ்தலர்கள் தெரிவிக்கின்றனர். நம்முடைய மீட்பருடைய இந்த ஒரே ஒரு மரணம் மாத்திரமே, இந்த நினைவுகூரும் அடையாளங்களினால் அடையாளப்படுத்தப்படுகின்றது; அவரது சரீரம், அவரது மாம்சம் நமக்காகப் பிட்கப்பட்டுள்ளது மற்றும் நித்திய ஜீவன் அடைய வேண்டுமெனில் இதன் புண்ணியத்திலும், ஜீவனிலும் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இந்த முக்கியமான கேள்வி தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்.

எப்படித் தண்ணீர் ஞானஸ்நானமானது, முக்கியமான ஞானஸ்நானமாகக் காணப்படாமல், உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்தும் அடையாளமாக மாத்திரம் காணப்படுகின்றதோ, அதுபோலவே அடையாளங்களாகிய அப்பத்திலும், திராட்சரசத்திலும் பங்கெடுத்தல் என்பது மிக முக்கியமான விருந்திற்கு/காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது; அதாவது அவரது பிட்கப்பட்ட சரீரத்தின் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் வாயிலாக நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகின்றதான கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை நம்முடையதாக்கிக்கொள்ளும் காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது. அவரால் நிறைவேற்றப்பட்டதான பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, அதே விசுவாசத்தினால், அவரால் போதிக்கப்பட்டுள்ளபடி மனிதனாகிய கிறிஸ்து இயேசு பெற்றிருந்ததும், நமக்காக மரணத்தில் கையளிக்கப்பட்டதுமான புண்ணியங்கள், பரிபூரணங்கள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் நமதாக்கிக்கொள்வதன் மூலமாக நமது இருதயங்களானது உண்மையில் நித்திய ஜீவனுக்கான அப்பத்தை, பரலோகத்திலிருந்து தேவன் நமக்கு அனுப்பிவைத்ததான அப்பத்தைப் புசிக்கின்றதாய் இருக்கின்றது. இதுதான் உண்மையான அப்பம் மற்றும் இதைப் புசிப்பது என்பது நித்தியமான ஜீவனைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதுவே சொல்லர்த்தமான அப்பமானது அடையாளப்படுத்துகின்றதான அடிப்படையான அர்த்தமாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்திலேயே அதில் சரியாயும், புரிந்த நிலையிலும் பங்கெடுக்கும் அனைவருக்கும் காணப்படுகின்றது. அது பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆதாமையும், அவரது குடும்பத்தையும் மீட்ட ஈடுபலிக்கான நினைவுகூருதலாகும்.

## அப்பம் மற்றும் பாத்திரம்

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக . . . விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளம் கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப்பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசெயர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்.)

"'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்) "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்கால

மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/ரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதுமாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

## கர்த்தர் வருமளவும்

இவ்வார்த்தைகளினுடைய முழுமையான அர்த்தம் என்ன?

நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவின நமது கர்த்தர், அதன் ஆசரிப்பு விஷயத்தில் எவ்விதமான எல்லைகளை வைக்காததினால், நமக்கான ஈடுபலியாக நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கும், அவரோடுகூடப் பலிச்செலுத்திடுவதற்கான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை — ஒரு குறிப்பிட்டக் காலளவில் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கால அளவை எல்லைக்குட்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது கால வரம்பிற்குட்பட்ட, அதாவது கொஞ்சம் வருடங்களுக்குரிய ஏற்பாடு என்று கருதப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசுகையில், உலகத்தை ஆளுகைச்செய்து, ஆசீர்வதிக்கப்போகின்றதான கிறிஸ்துவின் இராஜ்யம் (அ) சபையினுடைய கூட்டிச் சேர்க்குதலையும், உயர்த்தப்படுதலையும் உள்ளடக்கின விதத்திலேயே, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்களை, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாய்ப் பேசுவது இன்றும் பொதுவான மற்றும் பொருத்தமான வழக்கமாய் இருக்கின்றது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் வல்லமையிலும், மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு வந்துகொண்டிருக்கின்றனர். கர்த்தர் (அ) தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அடுத்து அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருக்கும் அங்கத்தினர்களின் சலித்தெடுத்தலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச்சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜா தம்முடைய மாபெரும் வல்லமையை 1878-ஆம் வருடத்தில் செயல்படுத்தத் துவங்கின காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டது என்று கருதப்படுகின்றதாய் இருப்பினும் (வெளிப்படுத்தல் 11:17), இராஜ்யத்தினுடைய கடைசி அங்கத்தினன் மறுரூபமடைவது (அ) மகிமைப்படுத்தப்படுவது வரையில், அப்பமாகிய கிறிஸ்து எனும் தலை மற்றும் சரீரத்தினுடைய பிட்கப்படுதல் நிறைவடைவது வரையில், அது முழுமையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்காது. ஓர் அங்கம் பாடுபடுகையில், சரீரம் பாடுபடுகின்றது; ஓர் அங்கத்தினன் மகிமையடையாமல் இருக்கையில், இராஜ்யமானது வல்லமையிலும், ஆளுகையிலும் முழுமையாய் வரவில்லை என்பதாகும்.

"ஆகையால் நீங்கள் இந்த (பஸ்காவில்) அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதி என்று) தெரிவிக்கின்றீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், கிறிஸ்துவினுடைய சபை (அ) இராஜ்யத்தினுடைய முழுமையான உயர்த்தப்படுதலை உள்ளடக்கின கிறிஸ்துவின் வருகையையே குறிப்பிட்டார் என்பதில் உறுதியே. இராஜ்யத்தின் மகிமையே, அடையாளத்தினுடைய முடிவு என்ற இதே கருத்தானது, நினைவுகூருதலை நிறுவினப்போதான நமது கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படலாம்: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29).

நமது கர்த்தருடைய மரணமானது ஈடுபலி விலைக்கிரயமாக இருந்தது என்று நம்புகிறவர்கள் அதை அறிக்கைப்பண்ணுவது, அதைத் தங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்குமான அடிப்படை என்று தெரியப்படுத்துவது ஏற்றக்காரியமாகவும், நலமளிக்கிற காரியமாகவும் இருக்கும். இதற்கான ஏற்றக்காலமானது, இக்காலத்திலேயே, அதாவது தேவ வார்த்தையினுடைய இந்த அடிப்படையான உபதேசமானது, திரித்துக் கூறப்படுவதும், தவறாய் விவரமளிக்கப்படுகிறதுமான இக்காலத்திலேயே ஆகும்.

## சிலாக்கியத்தினை உணர்ந்துகொள்ளுதல்

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப்படுதலைக்குறித்தப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக்குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் — ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றக்காலத்தில்" ஏற்றுக்கொள்பவர் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக் கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும் (1 கொரிந்தியர் 5:7, 8).

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப்போடப்பட முடியாது என்பதையும், அன்பு — பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப் போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப் போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## உங்கள் எதிராளியான பிசாசு

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் "கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி," வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப் பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம்

பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்புக்கொண்டிராததாலேயே ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்படுகின்றான்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் (திருப்தி) செய்கிற கிருபாதார பலியாய், அதாவது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாய், அவரது விலையேறப்பெற்ற இரத்தம் காணப்படுகின்றது என்ற விசுவாசத்தின் நம்பிக்கையை உடையவர்கள் அனைவரும், இந்த உண்மையை அறிக்கைச் செய்வதில் முன்பில்லாதளவுக்கு அதிக வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் காணப்படுவார்களாக; "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (பலியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." பெயரளவிலான எந்த முதற்பிறப்புகளும் கடந்து போகப்படுவதுமில்லை, மகிமையிலுள்ள முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்களும் ஆகுவதில்லை; அந்த இரவில், நிழலில் நடந்ததுபோலவே இரத்தத்தின் கீழ்க் காணப்படாதவர்களும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்காதவர்களுமானவர்கள் எவரும் முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்கள் ஆகுவதில்லை.

## யார் பங்குகொள்ளலாம்

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, உலகத்துக்குரியதாயும், பெயரளவிலான விசுவாசிகளுக்குரியதாயும் இராமல், (1) கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும், தங்களுடைய பாவத்தைச் சுமந்தவராகவும், ஏற்றுக்கொண்டவர்களும் மற்றும் (2) அவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எனத் தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுமாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். ஆனால், இதில் யார் பங்குகொள்ளலாம் அல்லது பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானம் பண்ணுவது நமக்குரிய அல்லது எந்த மனுஷனுக்குரிய அல்லது ஒரு கூட்டத்தாருக்குரிய வேலையல்ல. "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்வதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும், "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" என்று அப்போஸ்தலன்போன்று கூறுவதும் நமக்குரிய கடமையாகும் (1 கொரிந்தியர் 11:28).

இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகங்களினுடைய தவறான உபதேசங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பதினாலும், இப்பொழுது இந்த நினைவுகூருதலின் விஷயங்கள் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படுவதினாலும், ஒருவர் தன்னைச் சுய பரிசோதனைப் பண்ணிக்கொள்ளும் அல்லது நிதானித்துக்கொள்ளும் காரியம்கூட முன்பைக்காட்டிலும் இப்பொழுது மிக முழுமையாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் பின் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களைத் தன்னிடத்திலேயே கேட்டுக்கொள்ளவார்களாக :

(1) மனித குடும்பத்தில் நான் ஓர் அங்கமாக இருக்கின்றபடியால், ஆதிப்பாவத்தின் காரணமாக எல்லார்மேலும் கடந்துவந்த மரணத்திற்கு ஏதுவான அந்த ஆக்கினைத் தீர்ப்பின் கீழ், நானும் காணப்பட்டேன் என்று வேதவாக்கியங்கள் போதிக்கும் காரியங்களை நான் நம்புகின்றேனா?

(2) இந்தப் பாவம் மற்றும் மரணத் தண்டனையினின்று நான் தப்பித்துக்கொள்வதற்கு எனக்கு இருக்கும் ஒரேவழி, என்னுடைய கர்த்தராகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் வழியாகவே உள்ளது என்று நான் நம்புகின்றேனா?

(3) அவர் நம் பொருட்டு தம்மையே அதாவது, அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும், மனுஷீகத்தையும் ஈடுபலிக்கான கிரயமாகக் கொடுத்தார் என்றும், அவர் தமது ஆத்துமாவை

மரணத்தில் ஊற்றி, தம்முடைய ஆத்துமாவை பாவத்திற்கான பலியாகக் கொடுத்தார் என்றும் நான் நம்புகின்றேனா? (ஏசாயா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்தப்போது ஆரம்பமான, மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணமானது, மனுக்குலத்திற்காக அவர் தம்மையே பலிசெலுத்தினது மூலம், சிலுவையில் அவர் மரித்தபோது, நிறைவேறி முடிந்தது என்று நான் நம்புகின்றேனா?

(5) நியாயப்பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் காரணமாக அவர் சுதந்தரித்துக்கொண்ட (நித்தியஜீவன் மற்றும் உலகத்தின்மீது ஆளுகை எனும்) உரிமைகளை அவர் இப்படியாக, பலியானதின் மூலம் — இறுதியில் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் — விழுந்துபோன மற்றும் மரித்துக்கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு — கொடுத்துவிட்டார் என்பதை நான் புரிந்துள்ளேனா?

(6) இவ்விதமாக பலிச் செலுத்தப்பட்ட அவருடைய மாம்சமும், இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(7) அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய இரத்தத்திற்கும் அடையாளச் சின்னங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குகொள்ளும் காரியமானது, என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும், அனைவருக்காகவும் பெற்றுத்தந்த அந்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் நான் ஏற்றுக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(8) ஒருவேளை இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான ஈடுபலியை நான் இருதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இருப்பேனாகில், இந்த ஈடுபலியின் மீதான விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்ட என்னை — என்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கும், அவரோடுகூடப் பாடுபடும்படிக்கும், அவரோடுகூட மரிப்பதற்கும் கர்த்தருக்கென்று முழுமையாய் நான் அர்ப்பணம் பண்ணியுள்ளேனா?

ஒருவேளை இக்கேள்விகளுக்கு நம்மால் தீர்க்கமான பதில் கொடுக்க முடியுமெனில், நாம் கர்த்தருடைய சரீரத்தைக்குறித்து முழுத் தெளிவுடனும், மற்றும் அவருடைய பலிக்கு மரியாதைக் கொடுக்கிறவர்களாகவும் காணப்படுகின்றோம். மேலும், நாம் அதைப் புசிக்கலாம் — கண்டிப்பாய்ப் புசிக்க வேண்டும் — "நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்."

பாவத்திற்கும், பாவிகளுக்கும் ஓர் ஈடுபலி அவசியம் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கடைவது தங்களுக்குத் தேவையில்லை என்றும் *எண்ணுபவர்களும்,* ஒருவருடைய புண்ணியம், மற்றவருக்குத் தரிப்பிக்க முடியும் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் நீதியினால் கிடைத்திட்ட கலியாண வஸ்திரத்தைக் *களைந்து போட்டவர்களும்,* தங்களுடைய சொந்த நீதியாகிய அழுக்கான கந்தைகளை அணிவதில் "சந்தோஷத்துடனும்," "சுதந்திர உணர்வுடனும்" *காணப்படுபவர்களும்,* தங்களைப் பரிசுத்தம்பண்ணின விலையேறப்பெற்ற இரத்தத்தை இப்பொழுது பரிசுத்தமற்றது அல்லது சாதாரணமான ஒன்றாக *எண்ணுபவர்களும்* — தாங்கள் விசுவாசிக்க இனி மறுப்புத் தெரிவிக்கின்ற இந்த நினைவுகூரும் காரியத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பங்குகொள்வது அவர்களது, விசுவாசமற்ற நிலையில் இன்னும் மாய்மாலத்தைக்கூட்டி வழங்கிவிடுவதாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் பங்குகொள்வது என்பது, தங்கள்மீதும், ஈடுபலி இல்லை என்ற தங்களுடைய கோட்பாடுகளின்மீதும் கண்டனம் சுமத்திக்கொள்வதற்கு ஏதுவாகிவிடும்.

## தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம்

மாபெரும் எதிராளியானவனுடைய பல்வேறு வழிகள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட தவறான வாதங்கள் மூலமாக, இந்தத் தப்பறைகளுக்குள் சிக்கினவர்களாக மாத்திரம் காணப்படும் அனைவருக்கும் நாம் அறிவுரை கூறுவது என்னவெனில்: வீணான அனைத்து மனித தத்துவ ஞானங்களை/கோட்பாடுகளை உதறித்தள்ளி, மீண்டுமாக எளிமையான தேவ வார்த்தைகளையும், அதினால் முன்வைக்கப்படும் சத்தியங்களையும் ஏற்றுக்கொள்வதுமாகும்; தேவ வார்த்தைகளினால் முன்வைக்கப்படும் சத்தியங்கள் என்னவெனில்: அனைவரும் விழுந்துள்ளனர் என்பதும், தெய்வீகப் பிரமாணத்திற்கும், தீர்ப்பிற்கும் இசைவாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், சீர்தூக்கப்படுதலுக்குமான ஒரே வழி நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியை (அ) முழுமையான மற்றும் துல்லியமான சரிநிகர்சமான விலையைக் கொடுப்பதேயாகும் என்பதும், இதுதவிர வேறெந்த வழியிலும் அவரால் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாயும் காணப்பட முடியாது என்பதும் ஆகும். மேற்கூறப்பட்டவர்கள் நமது கர்த்தர் இயேசு தேவ ஆட்டுக்குட்டியென, நம்முடைய

பாவங்களுக்கான முழுத் தண்டனையை அவர் மரத்தில், தம்முடைய சரீரத்தில் சுமந்தார் என்றும், அனைவருக்குமான முழுமையான ஈடுபலியை அவர் கொடுத்தார் என்றுமுள்ள உண்மைகளை அடையாளம் கண்டுகொள்வார்களாக.

கொள்கை மிகவும் எளிமையானதாகும்; ஆனால் ஒருவேளை அதைச் சிலரால் கிரகித்துக்கொள்ள முடியவில்லையெனில், இப்படியானவர்கள் தேவன் இப்படியாய்த் தெரிவித்துள்ளார் என்ற உண்மையையாகிலும் கிரகித்துக்கொள்வார்களாக மற்றும் கர்த்தரிடத்தில் திரும்புவார்களாக மற்றும் அவரும் திரளாய் மன்னிப்பார். இப்படியானவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான நமது தேவனுடைய கிருபை அனைத்திற்குமான இந்த அஸ்திபாரத்தை இன்னதென்று சகல பரிசுத்தவான்களோடுங்கூட உணர்ந்துகொள்ளத்தக்கதாகப் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலையும், கண்களின் அபிஷேகிக்கப்படுதலையும் கேட்பார்களாக. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் உண்மையாய் ஏற்றுக்கொண்டு, அதாவது தங்கள் பாவங்களுக்காகவே பலிச்செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிந்தப்பட்ட இரத்தமானது (கொடுக்கப்பட்ட ஜீவனானது) அனைவருக்குமான மன்னிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, இப்படிப்பட்டவர்கள் சரித்திரத்தின் மாபெரும் நிகழ்வை, அதாவது நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நேசக்குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதையும், அவரது விலையேறப்பெற்ற ஜீவன் பலிச்செலுத்தப்பட்டதையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழிலிருந்து அறிந்தும், மனப்பூர்வமாகவும் வெளியேறுகிறவர்களை, இந்த வார்த்தைகளும் சரி (அ) வேறெந்த வார்த்தைகளும் சரி — வழியினிடத்திற்கும்/சத்தியத்தினிடத்திற்கும், ஜீவனிடத்திற்கும் திருப்புவது என்பது கூடாதகாரியம் என்று தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் அறிகின்றோம். அப்படியானவர்களுக்கு எந்தக் கடந்துபோகுதலும் கிடையாது. "மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபிரெயர் 6:4-10; 10:26-30). நம்மிடமிருந்து வரும் இந்த அன்புடன்கூடிய புத்திமதியும், வேதவாக்கியங்களை உண்மையாய்ச் சுட்டிக்காட்டுதலுங்கூடக் கர்த்தருக்கும் மற்றும் சத்தியத்திற்கும் மற்றும் பகுத்தறிவில்லாமல் இடறுகிற சகோதரர்கள் (அ) சகோதரிகளுக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான வாஞ்சை எனும் உண்மையான நம்முடைய நோக்கத்தின் காரணமாய்க் கொடுக்கப்படுகிறது என்று பார்க்கப்படுவதற்குப் பதிலாக, (நம்முடைய) பகைமை, துர்க்குணம், பொறாமை மற்றும் அனைத்து விதமான பொல்லாப்புகளினால் உண்டானது என்று கருதப்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஈடுபலியினுடைய கொள்கையினை முழுமையாய் உணர்ந்துகொள்ளாத நிலையில், ஆனால் நமது மீட்பருடைய மரணமானது, நம்மை நம்முடைய குற்றங்களிலிருந்து நிவிர்த்திபண்ணி, குற்றத்திற்கான தண்டனையினின்று நம்மை விடுவித்தது என்ற உண்மைக்குறித்த பயபக்தியுடன்கூடிய உணர்ந்துகொள்ளுதலுடன் கடந்தகாலங்களில் அநேகர் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அடையாளங்களில் பங்கெடுத்துள்ளனர். இப்படியானவர்கள் நினைவுகூருதலின் உண்மையான அர்த்தத்தினை உய்த்துணர்ந்துள்ளனர்; எனினும் சத்தியத்துடன்கூடக் காணப்படும் மிகுதியான தப்பறைகளின் காரணமாக, இவர்களால், நாம் இப்பொழுது உணர்ந்துள்ளதான அதன் எளிமையான கொள்கையினை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

## ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்கள் மாத்திரம்

சில பேப்டிஸ்ட் (Baptist) சகோதரர் பின்வருமாறு குறிப்பிடலாம்: நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு, ஞானஸ்நானம் அவசியமான தகுதியாய் இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

இல்லை, நாங்கள் ஞானஸ்நானத்தை மறந்துபோகவில்லை. ஞானஸ்நானம் என்பது அவசியம் என்றும், நினைவுகூருதல் இராப்போஜனமானது சபைக்கு மாத்திரமே உரியது என்றும், சபையாகுவதற்கு முன்னதாகவே, ஒருவருக்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும், நாங்கள் உங்களோடுகூட ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் சபை என்றால் என்ன என்பது தொடர்புடைய விஷயத்தில், நாங்கள் உங்களிடமிருந்து வேறுபடுகின்றோம். பேப்டிஸ்ட் சபையானது (Baptist Church) சபையல்ல என்று நாங்கள் எண்ணுகின்றோம். மற்றெல்லா சபைகளானது விழுந்துபோன மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்படுவதுபோலவே, பேப்டிஸ்ட் சபையும் "கோதுமைகளையும்", "களைகளையும்" கொண்டிருக்கின்றது; ஆனால் சபையானது, கோதுமையை மாத்திரமே பெற்றிருக்கும். கிறிஸ்தவ மண்டலத்தினுடைய எந்த ஒரு பிரிவும், அதினிடத்தில் எந்தக் "களைகளும்" இல்லாமல், அனைத்துமே "கோதுமைகளாக" இருக்கின்றது என்று கூறமுடியாது.

பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதான சபையானது "கோதுமைகள்" அனைத்தையும் கொண்டிருக்கின்றது மற்றும் "களைகளை" அதன் பட்டியலில் பெற்றிருப்பதில்லை. இந்த ஒரு சபையையே, நமது கர்த்தர் ஸ்தாபித்தார் மற்றும் இதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும் — கடந்துபோகப்பட்டவர்களாகிய சபை — "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையே" — அங்கத்தினர்களாய் இருப்பார்கள் (எபிரெயர் 12:23).

இதுபோலவே ஞானஸ்நானத்தைக்குறித்த உங்களது வலியுறுத்தலும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. வேதவாக்கியங்களுடைய கண்ணோட்டமானது, உங்களுடையதைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. "முதற்பேறானவர்களின் சபையினுடைய" அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்களை எல்லாம், உங்கள் பேப்டிஸ்ட் சபையில் நீங்கள் அங்கத்தினர்களாகப் பெற்றிருக்கின்றீர்கள். அப்படியானவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற உங்களது பரீட்சையினைக் கடந்துவிட்டனர்; ஆனால் அவர்கள் பரலோகத்தில் தங்கள் பெயர்களை எழுதப்பெற்றவர்களாகிய சபையினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவசியமான மாபெரும் ஞானஸ்நானம் எனும் பரீட்சையினைக் கடக்காதவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையான ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான முழுகுதலின் மூலமும், அவரது சாயலிலான உயிர்த்தெழுதலின் மூலமும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக, சபைக்குள்ளான ஞானஸ்நானமாகும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளான மனித சித்தத்தினுடைய உண்மையான முழுகுதலுக்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் மரணம்வரையிலுமான பலிச்செலுத்துதலுக்கு அருமையான விளக்கமாகவும் காணப்படுகின்றது; எனினும் எப்படி இராப்போஜனத்தில் நாம் புசிக்கின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய பலியின் உண்மையான ஜீவன் கொடுக்கும் அம்சங்களாக இல்லாமல், மாறாக அவைகளின் அடையாளங்களாக மாத்திரம் காணப்படுவதுபோன்று, தண்ணீர் ஞானஸ்நானமும் வெறும் அடையாளமேயாகும்.

ஆகையால் சபையாகிய, முழுகப்பட்டவர்கள் மாத்திரமே இராப்போஜனத்தில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம்; இன்னுமாக உண்மையில் முழுகினவர்கள் என்பவர்கள் தங்கள் சித்தங்களை மரிக்கப் பண்ணினவர்களாகவும், கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் பண்ணினவர்களாகவும், அவருக்குள் புதிய சிருஷ்டிகளெனப் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு எழுந்தவர்களாகவும், தங்களது ஓட்டமானது சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவுபெறுவதற்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் உண்மையான புதிய ஜீவன்களாக விழித்தெழுவதற்கும் காத்திருப்பவர்களாகவும் இருப்பவர்கள் என்று நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். இப்படியானவர்கள் அனைவரும் யாராக இருந்தாலும் சரி, எங்குக் காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஞானஸ்நான அடையாளத்தைப் பண்ணியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவர்களே கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் உண்மையான அங்கத்தினர்கள் ஆவர். ஆம் இப்படியான அர்ப்பணிக்கப்பட்டவர்கள், தங்கள் சொந்த சித்தத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் சித்தத்திற்கு மாத்திரமாக ஜீவனுடையவர்களாய் இருப்பவர்கள், நமது கர்த்தருடைய அறிவுரையானது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் (அ) அடக்கம்பண்ணுதலையும், மற்றும் தங்கள் சித்தங்களை அடக்கம் பண்ணுவதையும் உள்ளடக்குவதைக் காண்கையில், தங்கள் தலையும், கர்த்தருமானவரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்; அதிலும் விசேஷமாகத் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது, தாங்கள் "விசுவாசிகளாய்" இருக்கவில்லை" என்பதையும், தண்ணீர் துளிகள் தெளிக்கப்படுவது என்பது எந்த விதத்திலும் அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தாது என்பதையும் இப்பொழுது இவர்கள் உணர்ந்திருக்கையில் கர்த்தரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். இவர்கள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்னதாக (நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் நமக்குச் சுட்டிக்காட்டப்பட்டதுபோல) கூடுமானால் தண்ணீரிலும் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று தேவனுடைய வார்த்தைகளில் இடம் பெறுகின்றதான இந்தக் கட்டளையின் மதிப்பையும், அருமையையும் கண்டுகொள்வார்கள். வேதாகமப் பாடங்களினுடைய ஆராய்ச்சியின் தொகுதி-VI-இல் (Volume-6), அத்தியாயம் 10-இல், இடம்பெறும் "புதுச் சிருஷ்டியினுடைய ஞானஸ்நானம்" எனும் பாடத்தைப்பார்க்கவும்.

உண்மையான "கோதுமை" மாத்திரமே கர்த்தருடைய பந்தியில் காணப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; எப்படி யூதாஸ் முதல் கூடுகையில் கலந்துகொண்டானோ அப்படியே சில "களைகள்" கூட வருவார்கள் என்றே நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆனால் நம்மால் இருதயத்தைக் கணிக்கமுடியாது என்பதினாலும், "களைகளினின்று," "கோதுமையை" நம்மால் பிரிக்க முடியாது என்பதினாலும், இந்தப் பாடம் தொடர்புடையதாகத் தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டதான "தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் அறிவிப்பதன்" மூலமாக எங்கள் கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, ஒப்புரவாகுதலின் இரத்தத்தின் மீதான தனது

விசுவாசத்தைக்குறித்தும், மீட்பரிடத்திலான தனது அர்ப்பணிப்புக்குறித்தும் அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றதான ஒவ்வொருவனும் தான் பங்கெடுக்கலாமா அல்லது வேண்டாமா என்கிறதை முடிவுபண்ணும் விஷயத்தினை அவனவனிடத்திலேயே விட்டுவிடுகின்றோம்.

## எப்படிப் பங்கெடுப்பது?

உங்களைத்தவிர, உங்கள் அயலகத்தார் மத்தியில் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எவரேனும் இருப்பார்களானால், அதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்காகவும், சத்தியத்திற்காகவுமான உங்களது உண்மையான அன்பானது, நீங்கள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் நாடிடுவதற்கு உங்களை வழிநடத்தியிருந்திருக்கும். நீங்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கும் அப்படியானவர்கள், உங்களோடுகூட நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு நீங்கள் அழைத்திடலாம்; ஆனால் அவர்கள் ஈடுபலியை மறுக்கிறவர்கள் என்று நீங்கள் அறிவீர்களானால், அத்தகையவர்கள்மீது கூடுதல் ஆக்கினைத் தீர்ப்பு வருவதற்கு நீங்கள் உதவுகிறவர்களாக இராதபடிக்கு, அவர்களை அழைக்க வேண்டாம்.

சூழ்நிலைகளுக்கேற்ப கொஞ்சமானவர்களோடு அல்லது அநேகருடன் கூடிக்கொள்ளுங்கள்; ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான உறவின் மற்றும் ஐக்கியத்தின் ஆவி இல்லாத கும்பலோடு கூடிக்கொள்வதற்குப்பதிலாக, உங்களோடுகூட நினைவுகூருதலின் சிந்தையில் காணப்படுபவர்களாகிய கொஞ்சம் பேருடன் கூடிக்கொள்வது சாலச்சிறந்தது.

இந்த ஒரு தருணத்திற்குக் கர்த்தர் பயன்படுத்தினது போன்றதும், இப்பொழுது எபிரெயர்களால் பயன்படுத்தப்படுகின்றதுமான புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டி-crackers) ஏற்பாடு பண்ணிக்கொள்ளலாம்; ஏனெனில் தூய்மையான/இனிப்பான, புளிப்பற்ற அப்பமானது (புளிப்பு அடையாளப்படுத்தும்) பாவம் அறியாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான, தேவ ஆட்டுக்குட்டியினுடைய பாவமற்ற மாம்சத்தினை நன்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோன்று "திராட்சப்பழரச" பானத்தை ஏற்பாடு பண்ணிக்கொள்ளுங்கள். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தரும், சீஷரும் லைட் வைன்சை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) பயன்படுத்தினார்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி திராட்சரசமானது (wine) மிகப் பொருத்தமான அடையாளம் என்று கருதுகின்றோம். ஆனால் நமது கர்த்தர் திராட்சரசத்தை (wine) நிபந்தனை விதியாமல் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்று குறிப்பிடுவதால், திராட்சப்பழங்களை உலர வைப்பதன்மூலம் கிடைக்கும் உலர் திராட்சைகளைக் கொதிக்க வைத்து, வடிக்கட்டி எடுக்கும் இரசத்தினைப் பயன்படுத்துவதற்கு, மறுப்புத் தெரிவிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நிச்சயமாய் இதுவும் (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம் (wine) போன்று, திராட்சப்பழரசமே (fruit of the vine) ஆகும்.

(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசத்தை (wine) பயன்படுத்திடுவதனைக் கடமை உணர்வின் காரணமாக விரும்புகிறவர்களிடத்தில், இந்த உலர் திராட்சப்பானத்தை (Raisin-liquor) நாம் வற்புறுத்துவதில்லை; ஆதித் திருச்சபையினரிடமிருந்து நம்முடைய சூழ்நிலைகள், பழக்கங்கள், தட்பவெட்ப நிலைகள் முதலானவைகள் மிகவும் வேறுபடுகின்றது என்பதை அனைவருக்கும் நாம் நினைப்பூட்டுவதற்கு மாத்திரம் விரும்புகின்றோம்; மற்றும் பரிசுத்தவான்களில் சிலர் மாம்சத்தின் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், ஒருமுறை சுவைத்தல் என்பது மாபெரும் சோதனைக்கு ஏதுவாய் மீண்டும் தூண்டிவிடுகிறதாய் அமையும் என்றும் விசேஷமாய் அறிந்த நிலையில், நம்முடைய நாட்களிலுள்ள அநேக வெறியூட்டும் திராட்சரசங்களைக் (wines) கர்த்தருடைய இரத்தத்திற்கு அடையாளமாய் நாம் பயன்படுத்திடுவதற்கு அவர் சித்தமாய் இருப்பாரோ என்று நாம் ஐயப்படலாமோ. "ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலை போடலாகாது என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (உரோமர் 14:13). ஒருவேளை (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசமானது மனமாற விரும்பப்படுகிறதெனில், லைட் வைனை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) தெரிவு செய்யுங்கள் அல்லது உலர் திராட்சரசத்துடன் சிறிதளவு திராட்ச ரசத்தை (wine) கலந்துகொள்ளுங்கள்.

நினைவுகூருதலின் ஆராதனையானது, மிகவும் எளிமையாய்க் காணப்பட வேண்டும்; அது பிரதானமாய் ஐக்கியத்திற்கான காலப்பகுதியாகும். அப்பம் மற்றும் திராட்சரசத்திற்கென்று சபையார் நடுவில் ஒரு மேஜையை ஏற்பாடு பண்ணிடுங்கள். ஒரு துதிப்பாடலைப் பாடின பிற்பாடு, சகோதரரில் ஒருவர் ஆராதனையின் நோக்கத்தினை, குறிப்பிட்ட சில வார்த்தைகளில் கூறிவிட்டு, இக்காரியம் தொடர்புடையதாக வேதவாக்கியங்களிலிருந்து சில வசனங்களை வாசித்திட வேண்டும். இன்னொருவர் நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரமாகிய ஜீவ அப்பத்திற்காக ஸ்தோத்திரித்திட வேண்டும்; இதன் பின்னர்ப் புளிப்பில்லாத அப்பமானது (அல்லது வசதியாக இருக்குமானால் சோடா

ரொட்டியானது - soda biscuits) கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவரிடத்திலும் கொடுக்கப்படுவதாக. ஜீவ அப்பத்தைக்குறித்துக் கருத்துக்கள் குறிப்பிடுவதற்கு (அ) வேதாகம பாடங்களின் ஆராய்ச்சியில், தொகுதி-VI-இல் (Volume-VI), XI-ஆம் அத்தியாயத்தின் சாராம்சம் சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இப்பொழுது வழங்கப்படலாம். அடுத்ததாக "பாத்திரத்திற்காகவும்," அது அடையாளப்படுத்தும் விலையேறப்பெற்றதான இரத்தத்திற்காகவும் ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். "திராட்சப்பழரசமுள்ள" பாத்திரமானது பரிமாறப்படுவதாக. இப்பொழுது விலையேறப்பெற்ற இரத்தம்பற்றின கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படலாம். ஆனால் இந்தக் கூடுகையில், கலந்தாய்வுகளானது தவிர்க்கப்படுவதாக. விசுவாசத்திற்காக உண்மையாய்ப் போராடுவது மற்றத் தருணங்களிலெல்லாம் எவ்வளவுதான் ஏற்றதாய்க் காணப்பட்டாலும், இது அப்படியான ஒரு தருணமல்ல. இது கர்த்தரும், நம்முடைய மீட்பரும், வந்திருக்கும் இராஜாவுமானவரிடத்தில் ஐக்கியம் மற்றும் உறவுக்/அந்நியோனியம் கொள்வதற்கானத் தருணமாகும். எவனாகிலும் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், அவன் பேசட்டும்; மற்றவர்களோ நம்முடைய ஆசீர்வாதத்திற்கென ஆண்டவர் நியமித்த அவருடனான விசேஷித்த ஐக்கியத்திற்கான பரிசுத்தமான தருணங்களானது கெடாதபடிக்கு விவாதத்திலிருந்து விலகிக்கொள்வார்களாக.

நினைவுகூருதலை உண்மையான, வஞ்சகமற்ற இருதயங்களுடன் ஆசரிப்பவர்கள், மாபெரும் மற்றும் புத்துயிர் அளிக்கின்றதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இதற்காகவே ஆராதனையின் நடுவில், யாருமே சத்தமாய்ப் பேசாதபோது, அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்; அதாவது ஐக்கியத்தினாலும் கடந்தகாலங்களிலும், தற்போதுமுள்ள அவரது அன்பினை உணர்ந்துகொள்ளுதலினாலும், மரணம்வரையிலுமாக அவரது உண்மையான பின்னடியார்களாக இருப்பதற்கெனப் பண்ணப்பட்டதான வாக்குறுதியினைப் புதுப்பித்துக்கொள்ளுதலினாலும், கடந்த வருடத்தில் எவ்வாறு அந்த வாக்குறுதியானது காப்பாற்றப்பட்டது (அ) மீறப்பட்டது என்று சிந்திப்பதினாலும், நமது கர்த்தரோடுகூட உடன்சுதந்திரர்களெனப் பரிசினைப் பெற்றுக்கொள்வதற்கென நாம் அழைக்கப்பட்டதான ஓட்டத்தில் பொறுமையோடுகூட ஓடிடுவதற்கு மீண்டும் தீர்மானிப்பதினாலும், அனைவருடைய இருதயங்களானது ஆண்டவருடன் மிகவும் நெருங்கிவர முடிகிற அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்.

நம்முடைய பாடல் புஸ்தகத்திலுள்ள, 276-ஆம் துதிப்பாடலானது, நினைவுகூருதலை நிறைவு செய்வதற்கு அருமையாய்ப் பொருந்துகின்ற துதிப்பாடலாய்க் காணப்படுகின்றது. நமக்கொத்த விசுவாசத்தில் உலகமெங்கும் காணப்படும் சிலர் இதே மாபெரும் பலியை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர் என்றும், அதே கிருபையான கர்த்தரை நினைவுகூருகின்றனர் என்றும், அதே மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களினால் தேற்றப்படுகின்றனர், ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும், அதே கிருபையான இராஜாவினுடைய கிருபையினால், மாபெரும் பணிவிடைகள் புரிந்திடுவதற்கும், அவரது ஊழியத்திலும், அவரது ஜனங்களுக்கான ஊழியத்திலும் மாபெரும் பலிகளை ஏறெடுத்திடுவதற்கும் தீர்மானம் எடுக்கின்றனர் என்றும், அதே துதி, ஆராதனை பாடலினால் நிறைவு செய்கின்றனர் என்றும் நாம் உணர்கையிலும், நமது சந்தோஷம் பெருகுகின்றது.

"சிலுவை முன்தனிலே நாம் செலவழித்த
ஆசீர்வாதம் நிறைந்த தருணங்கள் இனிமையானதே;
பாவிகளுக்காக உயிர்த்தெழுந்த நண்பனிடமிருந்தே
ஜீவனையும், ஆரோக்கியத்தினையும், சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோமே."

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, புறப்பட்டுப்போனார்கள்" என்று முதலாம் இராப்போஜனம் குறித்து எழுதப்பட்டுள்ளது. நாமும் அவ்வாறே செய்வோமாக. ஒவ்வொருவனும் நிறைவான இருதயத்துடன் தனது வீடு திரும்புவானாக. பொதுவாய், வழக்கமாய்க் கூடுகைகளுக்குப்பின் சொல்லப்படும், அதாவது சொல்வது ஏற்றதாய்க் காணப்படுகின்றதான வாழ்த்துதல்களையும், வழக்கமாய் இடம்பெறும் அனைத்து விதமான கருத்துத் தெரிவித்தல்களையும், அபிப்பிராயம் தெரிவித்தல்களையும் இந்தத் தருணங்கள்போது தவிர்த்து விடுங்கள் என்று நாம் யோசனைக் கூறுகின்றோம். இப்படியாக ஆண்டவருடனான நமது ஐக்கியத்தினையும், அந்நியோன்யத்தையும்/உறவையும் நீட்டித்துக்கொள்ளலாம். அடுத்தநாள் முழுவதும் அவரைப் பின்தொடர்ந்துப் பார்த்துக்கொண்டிருங்கள். வஞ்சனையற்றவருக்கு எதிராக ஜனங்களுடைய கூச்சலைக் கவனியுங்கள். ஜனங்கள் எருசலேமின் குருமார் வகுப்பினரால் தூண்டப்படுவதைக் கவனியுங்கள். ஏரோதுக்கு முன்னிலையிலும், அவனது போர்ச்சேவகர்களின் முன்னிலையிலும் அவர் நிற்பதைப் பாருங்கள். அவர் கேலியாய் இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதையும், முள்ளினாலான கிரீடம் தரிப்பிக்கப்படுவதையும், குட்டப்படுவதையும், உமிழப்படுவதையும் பாருங்கள்.

அவர் குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதையும், அவர் செய்திட்டதான மிகவும் கிருபையான கிரியைகளினாலேயே, அவர் பழித்துரைக்கப்படுவதையும், அதாவது "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று கூறிப் பழித்துரைக்கப்படுவதையும் பாருங்கள். அவரால் தம்மை இரட்சித்துக்கொண்டிருக்க முடியும் என்றும், அவர் வேண்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தம்மை விடுவிப்பதற்கும், தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், "பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை" பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும், தம்முடைய சத்துருக்களுக்காக, தம்மை பழித் தூற்றுபவர்களாகக் காணப்படுபவர்களுக்காக மரிப்பதற்குப்பதிலாக, அவர்களை அவரால் அழித்துப்போட்டிருக்க முடியும் என்றும், நமக்கான ஈடுபலி கிரயமென அவர் தம்மை மனமுவந்து கொடுத்தக் காரியத்திலேயே உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவனுக்கான நமது நம்பிக்கை சார்ந்துள்ளது என்றும் நினைவுகூருவோமாக. நமக்காகவும், அனைவருக்காகவுமான அவரது அன்பை எண்ணிப்பார்க்கையில், அது சிலுவையின் நல்ல போர்ச் சேவகர்களென அதிகமதிகமாய்ச் சகித்துக்கொள்வதற்கு, அவரது பின்னடியார்களாகிய நம்மை நிச்சயமாய்ப் பலப்படுத்துகின்றதாய் இருக்கும். உண்மையாய்ச் சகிக்கப்படும் பட்சத்தில், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகின்றதும், நமக்கான சோதனையாக மற்றும் சிட்சையாகக் காணப்படுவதற்கு இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுமான இலேசான உபத்திரவங்களின் கீழ், நாம் இளைப்புள்ளவர்களாய் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே, எப்பொழுதும் நினைத்துகொள்வோமாக.

## புரூக்லினில் நினைவுகூருதல் ஆசரிப்பு

வழக்கம்போல புரூக்லினிலுள்ள சபையார், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறதை ஆசரிப்பார்கள். எப்படி ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சரி, எந்தச் சபைப் பிரிவில் அவர்கள் காணப்பட்டாலும் சரி அல்லது அனைத்திலிருந்து சுதந்திரமாய்க் காணப்பட்டாலும் சரி, இயேசுவின் மாபெரும் - பாவநிவாரண பலியில் விசுவாசமுள்ள பக்தியுள்ள விசுவாசிகள் அனைவரும் நம்மோடுகூடக் கூடிடுவதற்கும், இந்த நினைவுகூருதலில் பங்கெடுப்பதற்கும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய பந்தியானது, அவருடையவர்களாய்க் காணப்படும் அனைவருக்குமானதாகும்.

வியாதிப்பட்டிருக்கின்ற அல்லது முடமான நிலையிலுள்ள சகோதர, சகோதரிகள் புரூக்லின் டேபர்நேக்கலுக்கு (Brooklyn Tabernacle) அஞ்சல் அட்டை மூலம் விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, அடையாளச் சின்னங்களை அவர்களது வீடுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

*****

# கெத்சமனே

வைகறைப்பொழுதின் மந்தமான ஒளியினிலே நான் பயணிக்கும்போதில்,
எல்லாமும் இருளாகவும், கவர்ச்சியற்றும் தோன்றுகின்றதே,
என் இரட்சகர் என் என் அருகிலில்லை என்றே ஆச்சர்யமாக எண்ணிடும்போதில்
வழியோ, பனியினில் ஊறி நனைநதே காணப்படுகிறதே,
தடுமாறி நானும், செவிடாகி, குருடாகி,
என்பாரமான சுமைகள் அழுத்திடும் பாரத்தின் கீழாக நின்றேன்,
என் மனத்துன்பம் நிறைந்தே, கண்ணீர்கண்களை மறைத்துநிற்க,
அந்த முகத்திரை மறைப்பினூடே என் கிறிஸ்துவின் முகத்தைக்கூடஎன்னால்
பார்க்கமுடியவில்லையே,
பரலோக அன்பின் உயரத்தின்மீதே கடைசீயில் என்பார்வையில் அகப்பட்டதே,
அவரதுமுகமோ சூரிய ஒளியினில் என்றும் பிரகாசமாய்காணப்படுதே,
இப்படித்தான நானும் அஜாக்கிரதையாய் கவனமின்றி அலைகின்ற போது,
முட்கள், நெருஞ்சில்கள்மீது கவனம்கொள்ளாமலே சென்றேன்,
அவை என் பாதங்களைக்குத்திக்கிழித்தனவே,
கடைசீயில் முற்றிலும் கிழிக்கப்பட்டே,களைப்புடனே நான் கீழே விழுந்தேனே,

R 5195/475.

## சம்பிரதாய கடமை ஜெபம்.

அடிக்கடிநான் ஜெபம் செய்கிறேன், ஆனால் நான் எப்போதும் ஜெபிக்கின்றேனா?

என் இருதயத்தின் ஆழத்திலுள்ள மனவிருப்பங்கள்

நான் கூறும் வார்த்தைகளுடனே ஒத்துப்போகின்றதா?

நான் மண்டியிடலாம், கல்லைக்கூட வணங்கிடலாம்

ஜீவனுள்ளதேவனுக்குக்காணிக்கை என்பது

வெறும் வார்த்தைகள்மட்டுமே ஜெபம் இல்லை,

இதயம்கலந்த வார்த்தைகள்இல்லையென்றால்

இறைவன் அதனைக்கேட்டிட மாட்டார்,

உதட்டின்அசைவுகள்மட்டுமே என்றஉண்மையற்ற ஜெபம் என்றால்

அவர் கூர்ந்து கவனித்துகேட்டிடமாட்டார்.

R 5208:

# கெத்சமனே.(Gethsamane)

கெத்சமனே- தோட்டத்தின் தனிமையான நிழல்பகுதியை
உலகத்தின் இரட்சகர் அந்த இரவினில் தெரிந்தெடுத்தாரே,
அவர்மாத்திரம் தனிமையில் ஜெபிக்கச்சென்றாரே,
கிருபை, இரக்கம், பெலன்தேவைக்காக தம் பாத்திரத்தின் கடைசீசொட்டு இரசத்தினை பருகிடச்சென்றாரே,

மகாத்துமாக்கள் துன்பவேளையிலே தனித்திருக்கவே விரும்புவாரே,
அவர் மிக அன்புசெய்த அம்மூன்று சீடர்களுக்கும் கூட அந்தப்புனிதப்பகிர்தல் அளிக்கப்படவில்லையே,
அந்த ஆழ்ந்த துன்பக்கலத்தினின்று அவர்களை சற்றுவிலக்கியே வைத்தாரே,
சற்றே அப்புறம்போய், முகம்குப்புற விழுந்தே ஜெபித்தாரே.
கேத்சமெனே, ஓர் தனிமையான இடம்,ஓர் ஒதுக்கப்பட்ட பகுதி,
அழிந்துபோகும் மனிதன் எவரும் அந்த இரவின்இருளில்,
அந்த பழுப்பான கருஞ்சிவப்புநிற நிலத்தினில் கால்பதிக்கவில்லையே,
எந்த ஒருமனிதப்பிறவியோ, இல்லைஎந்தவொரு இருதயமோ
அந்த வேதனையைப் பகிர்ந்துகொள்ள இயலாதே,
ஜுரம்கொதிக்கும் அக்கரத்தை எவரும் பற்றிக்கொள்ள இயலவில்லையே,
எந்த சந்தடியோ சத்தமோ இல்லை, ஆனால் தேவனின் சப்தம் மட்டுமே அந்த நிசப்தத்தை உடைக்கக்கூடும்,
ஒவ்வொரு இதயமும் தனிமையில் குடிக்கும் ஓர் இடம்தானே,
தந்தை தம்கரத்தினால் ஊற்றிக் குழந்தைக்கு அளித்தாரே,

கெத்சமெனே,ஒரு தனிமைப்பட்ட பாலைவனப்பகுதியா,
இல்லை,இல்லை, துன்பப்பட்ட இருதயம் அங்கே வீணாகக்கதறுவது இல்லையே,
இறந்துவிழும்சிறுஅடைக்கலான்குருவிகூட அவர் கண்பார்வையினின்றே தவறுவதில்லையே,
பயம்வேண்டாம், திகில்வேண்டாம்,நான் உன்தேவன், நான் உன்னோடு இருப்பேன்,
உன்னை மீட்டுக்கொண்டேன்,நான் உன்னைக்கைவிடுவதில்லை,
உன்னைத்தோற்கவிடுவதில்லை, என் வலக்கரத்தினால் உன்னைத்தாங்குவேன்,
என்அன்பே, உன்னை நான் மறப்பதில்லை,
என் வலதுகையினால் உன்னைப்பிடித்துக்கொண்டு,
என்பராக்கிரமத்தினால் உன்னைப்பற்றிக்கொண்டேன்,
வாழ்க்கையின் கடைசீஎல்லைவரை.

# கெத்செமனே

KETHAMANE

முன்னிரவு இருட்டினிலே, நான் பயணிக்கும்போதினிலே,
கண்ணில் படுவதெல்லாம் கருப்பாயும் இருட்டாயும் தோன்றியதே,
இரட்சகர் ஏன் என்னருகினில் இல்லை, என்றே நோக்கி நின்றேன்,
பாதை மிகவும் செங்குத்தானதாய், கரடுமுரடாய், ஏற்ற இறக்கமாய்,
முள்ளும் கல்லும் நிறைந்திருந்ததுவே.

சுமக்கவியலா பாரத்தின் கீழே, செவிடாகிக் குருடாகித் தடுமாறி நின்றேன்,
துன்பம் மிகுந்த கண்ணீர் தளும்பி, பார்வையை மறைத்து நின்றதுவே,
அந்த மங்கலான மறைப்பினூடே பார்க்கையிலே - என்
கர்த்தரின் முகத்தினைப் பார்க்கவியலாமலே தவறவிட்டேனே.
கடைசியில் பார்வையைப் பரலோகத்தின் அன்பின் மீதே நிலைநிறுத்தினேனே,
அவர் கூறும் ஆலோசனைகளோ, பரத்திலிருந்துவரும் வெளிச்சத்திலே
எப்போதும் பளிச்சிடுமே, இதைப் பார்த்துக்கொண்டு நடக்கையிலே,
நான் ஆர்வமுடன் முன்னோக்கிக் கடந்துவந்தேன்.
முட்களும், கற்களும் குத்தி பாதம் கிழிந்து களைப்படைந்ததுவே,
நான் பூமியின்மீதே விழுந்துவிட்டேனே.
காலத்தாலும், புயலாலும் கிழிக்கப்பட்ட ஒரு சலவைக்கல் சிலுவைதனை,
கண்டேன் என் சிரசை அதன்மீதே சாற்றினேனே,
என் துன்பங்கள் கலந்த மகிழ்ச்சியையும் நான் கொடுத்துவிட்டேன்,
திடீரென சக்கரத்துக்குள் சக்கரம் சுழலும் ஒலி, காற்றில் வந்ததே,
ஆ, என்னருகினில் மண்டியிட்ட பரலோக தூதரை நான் கண்டேன்,
நடு இரவில், அந்தத் தோட்டத்திலே பகலைப்போன்றே வெளிச்ச மிகுந்ததே,
அந்த நிழல்களினூடே பார்த்தபோதில் கிறிஸ்து அங்கே
நின்றிருந்தாரே என்னுடைய கெத்செமனேயின் அனுபவங்களிலே.

- Birla I. Morris (R5214)

---------------------

**--1869--**

R 5214

# "முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்"

## ஆதியாகமம் 37-ஆம் அதிகாரம்

"அன்புக்குப் பொறாமையில்லை."—1 கொரிந்தியர் 13:4

எளிமையான பதிவுகளில், அருமையாய்க் காணப்படுகின்றதான யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் பற்றின கதையானது, மிகவும் சுவாரஸ்யமாகவும், பல்வேறு கோணங்களில் பாடம் கற்பிக்கின்றதாகவும் காணப்படுகின்றது. மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பிள்ளைக்கு மிகவும் அதிகமான முன்னுரிமைக்கொடுத்து, இப்படியாகப் பிள்ளைகள் மத்தியில் பொறாமையின் ஆவியை வளர்த்திவிடும் விஷயத்திலுள்ள பெற்றோருடைய ஞானமின்மையைப் பற்றியதாக ஒரு பாடம் காணப்படுகின்றது. யோசேப்பு தனது சொப்பனங்களை, தனது சகோதரர்களிடத்தில் தெரிவித்ததுபோல, நம்முடைய சொப்பனங்களை நாம் இரக்கமற்ற செவிகளை உடையவர்களிடத்தில் சொல்லுவதிலுள்ள ஞானமின்மை தொடர்புடையதான இன்னொரு பாடம் காணப்படுகின்றது. ஒரு சொப்பனத்தில் பதினொரு அரிக்கட்டுகள், தன்னுடைய கட்டிற்கு முன்பு வணங்கி நின்றதாக யோசேப்பு கண்டார். மற்றொரு சொப்பனத்தில் சூரியனும், சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்குவதாக யோசேப்பு கண்டார்.

இந்தச் சொப்பனங்களைக் கண்டதற்காக யோசேப்பு குற்றஞ்சாட்டப்பட முடியாது. அஜீரணத்தின் காரணமாக ஏற்படும் பெரும்பான்மையான சொப்பனங்களைப் போலல்லாமல், யோசேப்பிற்கு இச்சொப்பனங்கள் கர்த்தரிடமிருந்து வந்ததாக இருந்தது. வஞ்சனை இல்லாமல், சொப்பனத்தைத் தனது சகோதரர்களிடம் கூறினதற்காகவும், யோசேப்பு குற்றஞ்சாட்டப்பட முடியாது; ஏனெனில் யோசேப்பு இப்படியாகச் செய்ய வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமாயிருந்தது. யோசேப்பின் சகோதரருடைய பொறாமையையும் மற்றும் அவர்கள் மனதில் எவ்வாறு பொறாமை வளர்ந்திருக்கும் என்பதையும் கர்த்தர் முன்னமே அறிந்திருந்தார் மற்றும் அதற்கான வாய்ப்பையும் கொடுத்தார்; ஏனெனில் அவர் யோசேப்பிற்கு அடுத்துவரும் அனுபவங்களை ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார் மற்றும் இது நிறைவேற்றப்படுவதற்கென யோசேப்பின் சகோதரர்களுடைய பொறாமையானது உதவியாக மாத்திரம் அமைந்தது.

மற்றவர்கள் அறிந்துகொள்ள அவசியமாய் இராததும், அறிந்தால் எதிர்ப்பை மாத்திரமே உருவாக்குவதற்கு ஏதுவானதுமான உண்மைகளை அறிவியாமல் இருப்பதிலுள்ள ஞானம் பற்றின பாடத்தை நாம் இங்குக் கற்றுக்கொள்ளலாம். இதே கருத்தையே இயேசுவும், "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்" என்று கூறி ஆதரித்தார். தெய்வீகத் திட்டம் மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கைத் தொடர்புடையதான மிகவும் ஆழமான சத்தியங்களை, கர்த்தர் அறிவிப்பதற்குச் சித்தங்கொண்டுள்ளவர்களாகிய சாந்தமுள்ளவர்களைத் தவிர, மற்றவர்களிடம் சொல்லாமல் இருப்பது நலமாக இருக்கும்.

## "மேசியாவிற்கு நிழலான யோசேப்பு"

நாம் மேற்கூறியவைகளோடுகூட, யோசேப்புக் கிறிஸ்துவாகிய மேசியாவிற்கு நிழலாய் (அ) தீர்க்கத்தரிசனமான நிழலாய் இருக்கின்றார் என்று அடையாளங்கண்டுகொள்வது இன்றைய நமது வேத ஆராய்ச்சியினுடைய மிக முக்கியமான அம்சமாக இருக்கின்றது. யோசேப்பு தனது சகோதரர்களிடத்தில் அன்பாய் இருந்தார் மற்றுமாக அவர்களது பொறாமையானது தன்னை மரிக்கப்பண்ணுவதற்குத் திட்டமிட்டு, பின்னர்த் தன்னை எகிப்தில் அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்டபோது, அவர் நலன் பயக்க நெடும் பயணம் மேற்கொண்டவரானார். அவரது சகோதரர்கள் அவரைக் காரணமின்றி பகைத்தார்கள்; அவர் நல்லவராக இருந்தார் என்ற காரணத்திற்காக மாத்திரம் பகைத்தார்கள்; மற்றும் யோசேப்பின் தந்தை அவரை அன்புகூர்ந்ததற்காகவும், யோசேப்பு எதிர்க்காலத்தில் உயர்த்தப்படப்போவதை முன்கூட்டியே தேவன் சொப்பனத்தின் வாயிலாக யோசேப்பிற்குத் தெரிவித்ததற்காகவும் அவரைப் பகைத்தார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் பின்வருமாறு சொல்லியிருந்திருக்க வேண்டும் அதாவது, "நமக்கு இவ்வளவு நல்ல ஒரு சகோதரன் காணப்படுவதினால் நாம் களிக்கூருவோமாக. இவர் மிகவும் உயர்வாய் உயர்த்தப்படுவது தேவனுடைய சித்தமாக இருக்குமானால், நாம் சந்தோஷம் கொள்வோமாக. நம்முடைய தாத்தாக்களாகிய ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் மற்றும் நம்முடைய தந்தையாகிய யாக்கோபுக்கும் பண்ணப்பட்டதான தேவனுடைய வாக்குத்தத்தமானது, இப்படியாக

நிறைவேறுவதாக. தேவன் நலமானதெனக் காண்கிற எவ்வழியிலும், அவரது ஆசீர்வாதங்கள் கடந்து வருவதாக. நமது சகோதரன் தேவனுக்கும், நம்முடைய தந்தையாகிய யாக்கோபிற்கும் பிரியமாய்க் காணப்படுவதினால் நாம் சந்தோஷங்கொள்வோம். யோசேப்பின் குணலட்சணத்தை நாமும் அடைந்திடுவதற்கு அதிகமதிகமாய் நாடிடுவோமாக." ஆனால் அவர்களோ அவரை முதலாவதாகக் கொன்றுபோடுவதற்கும், பிற்பாடு வந்த வெறும் மாற்று யோசனையின் பிரகாரமாக அவரை அடிமையாக விற்றுப்போடுவதற்கும் கொடூரமாய்ச் செயல்படுமளவுக்குப் பொறாமையுடன் காணப்பட்டார்கள்.

## "முகாந்தரமில்லாமல் அவரைப் பகைத்தார்கள்"

ஆனால் தேவனுடைய வழிநடத்துதலானது யோசேப்போடுகூடக் காணப்பட்டு, அவர் அடிமையாக இருந்தபோதும் அவரை ஆசீர்வதித்தது மற்றும் அதிகமான உபத்திரவங்கள் வாயிலாக அவரை இறுதியில் எகிப்தின் சிங்காசனத்தில், பார்வோனுக்கடுத்த வல்லமையிலும், செல்வாக்கிலும் கொண்டுவந்தது. தேசத்தில் காணப்பட்ட பஞ்சமானது, கோதுமை வாங்கும்படிக்கு யோசேப்பின் சகோதரர்களை எகிப்துக்குக்கொண்டு வந்தது. இப்படியாக யோசேப்பின் சகோதரர்கள் அவர் முன் வணங்குவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமான பதினொரு அரிக்கட்டுகள், யோசேப்பின் அரிக்கட்டை வணங்கினதான சொப்பனம் நிறைவேறினது.

பிற்பாடு யோசேப்பின் தந்தையும், முழுக்குடும்பமும், கோசேனில் குடியேறுவதற்கென எகிப்துக்கு வந்தபோது, இவர்கள் அனைவரும், யோசேப்பிற்கு, எகிப்து அரசாங்கத்தினுடைய பிரதிநிதியென மரியாதைச் செலுத்தினார்கள்; இப்படியாக இரண்டாம் சொப்பனமும் நிறைவேறினது. ஆனால் இந்த அனுபவங்கள் அனைத்துமே ஒரு காலக்கட்டத்தில் புரியாத புதிராகவே இருந்தது. யோசேப்பு சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுகின்ற நேரம் வருவது வரையிலும், இவர்கள் அனைவரும், யோசேப்பின் குடும்பத்திலுள்ள மற்ற அனைவரையும் காட்டிலும், யோசேப்பைக் கர்த்தர் குறைவாகவே நேசித்தார் என்பதாகவே பார்த்தார்கள். பிற்பாடு அனைத்துமே மாறிப்போனது.

## "இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்/உருவகம்"

யோசேப்பு தொடர்பான இந்தச் சம்பவம் அனைத்திற்குமான ஞான அர்த்தம், அவரும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் என்பதாகும். "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்" என்று சங்கீதம் 69:4-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். இதே வார்த்தைகளை இயேசுவும் மேற்கோளிட்டு, அதைத் தமக்கே பொருத்தி, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று கூறினார் (யோவான் 15:25). இயேசுவின் சகோதரர்களாகிய யூதர்களே, அவரைச் சிலுவையில் அறைந்தனர். இயேசு கொல்லப்படுவதற்கான எந்தக் (குற்றமும்) காரணமும் அவரிடத்தில் காணப்படவில்லை.

பொறாமையின் காரணமாகவே அவர் கையளிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார் என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம், ஏனெனில் அவரது கிரியைகள் நல்லவையாகவும், அவர்களது கிரியைகள் பொல்லாதவையாகவும் காணப்பட்டது; ஏனெனில் அவர்களைக் காட்டிலும் இயேசு தேவனுடைய பாதையை மிகவும் பூரணமாய்ப் போதித்தவராய்க் காணப்பட்டார்; ஏனெனில் வல்லமையிலும், மகா மகிமையிலும் மேகங்கள்மேல் வருகின்றதான மேசியாவெனத் தம்மை அவர்களும், மற்ற அனைவரும் அடையாளங்கண்டுகொண்டு, தமக்கு முன்பாக முட்டுகள் முடக்குவதற்கான காலம் வரும் என்று இயேசு கூறினார்.

யோசேப்பின் விஷயத்தில் எப்படி அவமானமும், விபரீதங்களும்/துன்பங்களும் மற்றும் நம்பிக்கைத் துரோகங்களும் எகிப்தினுடைய சிங்காசனத்திற்கு நேரான மகிமைக்கும் மற்றும் கனத்திற்குமான வழியினை ஆயத்தம் பண்ணினதோ, அப்படியாகவே இயேசுவின் விஷயத்தில் காணப்பட்டது. இயேசுவுக்கு நேரிட்டதான சோதனையான அனுபவங்களானது, அவரைத் தேவனுக்கு உண்மையுள்ளவரென நிரூபித்துக் காண்பித்தது மற்றும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்படுவதற்கு வழிநடத்தினதாய் இருந்தது. இயேசுவைக் குறித்துக் கூறுகையில், மேற்கூறியவற்றை உறுதிப்படுத்தும் வண்ணமாக, "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்"; மீண்டுமாக, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே"

என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளார் (எபிரெயர் 12:2; 2 கொரிந்தியர் 8:9). அதாவது யோசேப்பு கடந்துசென்ற தாழ்வுபடுத்துவதான அனுபவங்களானது, அவர் பார்வோனால் உதவப்படுவதற்கும், கனப்படுத்தப்படுவதற்குமான வழியினை ஆயத்தப்படுத்தினதுபோலவே, இயேசுவின் விஷயத்திலும் காணப்பட்டது. மீண்டுமாக இயேசுவைக் குறித்து நாம் வாசிப்பது என்னவெனில், "தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்" (எபிரெயர் 5:9).

## "அவருடனேகூடப் பாடுபட்டால்"

தேவனுடைய மாபெரும் திட்டத்தில், இயேசு மாத்திரமே உலகத்தின் மேசியாவெனச் சிங்காசனத்தினிடத்திற்கு உயர்த்தப்படாமல், அவரோடுகூட, ஒரு சகோதரர் கூட்டத்தாரும் அதே மகிமையில், கனத்தில் மற்றும் அழியாமையில் பங்கடைபவர்களாகவும் இருக்கப்போகிறார்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயமளிக்கின்றன. மேலும் தேவனுடைய மாபெரும் திட்டத்தில் இந்தச் சகோதரர்களும், அவர்களது மூத்த சகோதரனாகிய இயேசு கடந்துசென்ற அதே அனுபவங்கள் வாயிலாகக் கடந்துசெல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றனர். ஆகவே இவர்களது அனுபவங்களும் கூட, யோசேப்பின் அனுபவங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் மூத்த சகோதரனுக்குச் சமமானவர்களல்ல. இயேசு இவர்களது தலை என்றும், இவர்களது இரட்சிப்பின் அதிபதி என்றும் குறிப்பிடப்படுகின்றார். ஆகவேதான், தேவன் "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கென, அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" என்று நாம் மீண்டுமாக வாசிக்கின்றோம் (எபிரெயர் 2:10).

இந்த மாபெரும் தளபதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தப் பிள்ளைகள் கூட்டத்தார் அனைவரும், அவரைப்போன்று உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட வேண்டும்.

சபைக்கான இந்தச் சோதனையான அனுபவங்களானது, கடந்த 19 நூற்றாண்டுகளிலும் காணப்பட்டதல்லவா? "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என்றும், மீண்டுமாக "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" என்றும் அப்போஸ்தலனாகிய யோவான் கூறியுள்ளார் (1 யோவான் 3:1; 4:17). தங்கள் சகோதரனாகிய யோசேப்பு பஞ்சகாலத்தில் தங்களுக்கு இரட்சகராகவும், எகிப்தியர்களுக்கு இரட்சகராகவும் இருக்கப்போகின்றார் என்ற உண்மைக்கு யோசேப்பின் சகோதரர்கள் குருடர்களாய்க் காணப்பட்டதுபோன்று, மேசியாவின் மூலமாகவே ஒருவரால் நித்திய ஜீவனை அடைய முடியும் எனும் உண்மையை உணர்ந்துகொள்ளுவதற்கு உலகம் தவறிவிடுகின்றது.

தாம் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் என்று இயேசு குறிப்பிட்டபோது, தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட பின்னடியார்கள் அனைவரும் கூடத் தாங்கள் இப்படி அநியாயமாய்ப் பகைக்கப்படுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம் என்று முன்னெச்சரிக்கைச் செய்கின்றார். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று." (யோவான் 15:18-25).

நமது கர்த்தர் மேற்கோளிட்ட சங்கீதங்களிலுள்ள வசனங்களை நாம் இங்கு முன்வைக்கின்றோம், "நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்; சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப்போகாதிருப்பார்களாக; இஸ்ரயேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக. உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று. என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின்

பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது. நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" (சங்கீதம் 69:4-9, 20, 21).

## "இவ்வுண்மைகளில் அடங்கியுள்ள ஞானம்"

நாம் இந்த உண்மைகளைப் பார்த்துள்ளோம் அதாவது இயேசுவும், அவரது பின்னடியார்கள் அனைவரும் தெய்வீக நோக்கத்தின்படி அவமானமும், அவமதிப்பும் அனுபவித்திட்டார்கள். இயேசு மற்றும் ஆதி திருச்சபையினருடைய விஷயத்தில், துன்புறுத்தல்களானது அவர்களது மாம்சத்தின் பிரகாரமான சகோதரர்களாகிய யூதர்களிடமிருந்து வந்தது என்று நாம் அறிந்துகொள்கின்றோம். அதுமுதல் துவங்கி, சுவிசேஷ யுகம் முழுவதிலும், சபைக்கான துன்புறுத்தல்களானது, இவர்களது சகோதரரும், இயேசுவின் சகோதரருமான விசுவாச வீட்டாரிடமிருந்து வந்துள்ளது. இந்தச் சகோதரர்கள் யூதர்களாய் இராமல், கிறிஸ்தவர்களாய் இருக்கின்றனர். இயேசுவின் நாட்களில் காணப்பட்ட யூத மதவாதிகள், மிகவும் நீதியாய்க் காணப்பட்ட தங்கள் சகோதரர்களைத் துன்புறுத்தியதுபோல, இப்பொழுது பெயரளவிலான கிறிஸ்தவர்களே, கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்களைத் துன்புறுத்தும் பிரதான நபர்களாய் இருக்கின்றனர்.

இந்தத் துன்புறுத்துதலானது, கிட்டத்தட்ட அனைத்துச் சபை பிரிவுகளிலுமுள்ள உண்மையுள்ள ஆத்துமாக்கள் மீது கடந்துவந்துள்ளது. இந்தத் துன்புறுத்தல்களானது, கிட்டத்தட்ட அனைத்து சபை பிரிவுகளிலுமுள்ள உண்மையற்ற ஆத்துமாக்களிடமிருந்து வந்துள்ளது என்று கவலையுடன் கூறுகின்றோம். ரோமன் கத்தோலிக்கர்கள், மெத்தடிஸ்டியர்கள், பேப்டிசியர்கள், பிரெஸ்பைட்டீரியர்கள், எப்பிஸ்கோப்பியர்கள், கவனன்டியர்கள் (Roman catholics, Methodists, Baptists, Presbyterians, Episcopalians, Covenanters) அனைவரும் குருடாக்கப்பட்ட சகோதரர்களிடமிருந்து துன்புறுத்தல்களை அனுபவித்துள்ளனர் மற்றும் இவர்கள் மத்தியிலான குருடானவர்களே இவர்களைத் துன்புறுத்தினர். கிட்டத்தட்ட அனைத்துத் தருணங்களிலும், தேவனுடைய மகிமைக்காகவே துன்புறுத்தல்கள் செய்யப்பட்டதாக அறிக்கைப் பண்ணப்பட்டது. இதைக் கர்த்தர் தீர்க்கத்தரிசி மூலம் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார் அதாவது, "கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 66:5).

பொதுவான உலகம் மற்றும் யூதர்கள் உட்பட, இயேசுவை மரணத்துக்கு ஏதுவாய்த் துன்புறுத்திய விஷயத்தில் மாபெரும் தவறு செய்யப்பட்டுள்ளதாக ஏற்கெனவே உணர்ந்துள்ளனர். இதைப்போலவே, இயேசுவின் உண்மையுள்ள பின்னடியார்களுக்கு எதிராகவும் செய்யப்பட்ட இதுபோன்றதான தவறுகள் குறித்தும் கொஞ்சம் ஏற்கெனவே உணர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. எனினும் அதே பொறாமையின் காரணமாக வந்த அதே குருட்டுத்தனமானது, நம்முடைய நாட்களிலுங்கூடத் துன்புறுத்தல்களுக்கு நேராக வழிநடத்தவே செய்துகொண்டிருக்கின்றது.

தேவனைக் குறித்தோ (அ) வேதாகமம் குறித்தோ தங்களுக்குத் தெளிவாய் அதிகம் தெரியாது என்று பெரும்பான்மையானவர்கள் ஒத்துக்கொள்கின்றனர். இவர்கள் வெளிச்சத்திற்காக ஜெபம் ஏறெடுத்து, "சூழ்ந்திருக்கும் அரையிருட்டான நிலை மத்தியில், தயவாய் ஒளியை அனுமதித்திடும்" என்று பாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏதேனும் ஒளி தோன்றினால், புதிய நாளின் விடியலுக்கு நேராக வழிநடத்தத்தக்கதாகவும், தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களையும் அவரது இரக்கத்தின் நீளங்களையும், அகலங்களையும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டத்தக்கதாகவும் ஏதேனும் அன்பின் சத்தம் கேட்கின்றதானால், இவர்கள் வெளிச்சம் வேண்டும் என்பதான இவர்களது பாடலை உடனடியாக நிறுத்திவிடுகின்றனர் மற்றும் ஏளனம், அவதூறாகிய இவர்களது கற்களை வேகமாக இவர்கள் சுழற்றி எறிகின்றனர். ஏன்? தற்செயலாக எந்த மாற்றமும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக; இன்னும் மேலான வெளிச்சத்தை எவரும் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக; தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறி, புதிய விடியல் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஆகும்.

ஆனால் வரலாற்றின் இவ்வுண்மைகளில் அடங்கியுள்ள ஞானம் என்ன? கிறிஸ்து பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்கள் அனைவரும், அவரோடுகூடப் பாடுபட வேண்டும் என்றும், அவருடைய அனுபவங்களாகிய அவமானம், நிந்தனை மற்றும் பழிகளில் பங்குகொள்ள வேண்டும் என்றும் தேவன் ஏன் அனுமதித்திருக்கின்றார், ஆம் நியமித்திருக்கின்றார்? இயேசுவின் விஷயத்தில் பிதா இந்தச் சோதனையான அனுபவங்களை, தமது குமாரனுடைய அன்பு மற்றும் நேர்மையைப் பரீட்சிப்பதற்கும் மற்றும் தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் குமாரனுடைய கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கும் என்று பயன்படுத்தினார். குமாரனுக்கு மிகவும் பெரிதான மகிமை மற்றும் கனத்தைக் கொடுப்பதற்குப் பிதா நோக்கம் கொண்டிருந்தபடியால், குமாரன் லோகாசாக இருந்தபோதும், பிற்பாடு இயேசுவாக இருந்தபோதும், பாத்திரமானவராகக் காணப்படுகின்றார் என்று தாம் கண்டதை அனைவரும் காண வேண்டும் என்ற சித்தங்கொண்டவராய் இருந்தார்.

அடையாள காட்சியில் பரம சேனையானது, "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று கூறுவதன் மூலம், இயேசு மரணம்வரை உண்மையாய்க் காணப்பட்டதின் காரணமாக, அவர் உயர்வாய் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரமானவராய் இருக்கின்றார் என்பதை அங்கீகரிப்பதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுவினுடைய, லோகாசினுடைய பாத்திரத் தன்மையானது நிரூபிக்கப்படுவது அவசியமானால், விழுந்துபோன சந்ததியினின்று சேர்க்கப்படுகின்ற, தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, தேவனுக்கு உண்மையாய், கடைசி பரியந்தமும், அதாவது மரணபரியந்தமும் காணப்படுவதை நிரூபிப்பது எவ்வளவுக்கதிகமாய் அவசியமானதாக இருக்கும். எனினும் இருவருக்கும் இடையே வித்தியாசமும் உள்ளது.

ஆண்டவருடைய விஷயத்தில், அவர் பரலோக மகிமையைத் துறந்து வருவதற்கு முன்னதாகப் பூரணமானவராகக் காணப்பட்டார் என்பதையும், மனிதனாகிய கிறிஸ்துவான போதும் பூரணமானவராக, அதாவது "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" ஆவார் என்பதையும் நிரூபிப்பதாகக் காணப்பட்டது. "அவரிடத்தில் பாவம் இல்லாதிருந்தது." அவரது பின்னடியார்களின் விஷயத்தில், மாம்சத்தினுடைய பூரணமின்மை இன்னமும் காணப்படுகின்றது; ஆனால் அவர்கள் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனத்தின் அடிப்படையில், அதாவது சுதந்தரித்துக்கொண்டிருப்பவைகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படாமல், மாறாக அவர்களது இருதயத்தின் அன்பு மற்றும் பக்திவைராக்கியத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுகின்றார்கள். இந்த அன்புடன்கூடிய பக்திவைராக்கியமானது, அவர்கள் அவர்களது தலைவரும், இரட்சகருமானவருடைய அடிச்சுவட்டில் உண்மையாய் நடப்பதற்குப் பிரயாசம் எடுப்பதிலும், அவர்களால் முடிந்தமட்டும் அவர்களது மாம்சத்தினுடைய பெலவீனங்களை ஜெயங்கொள்வதிலும் மற்றும் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதிலும்" வெளிப்படுகின்றது.

ஆமென்!

---

R 5216

# "துன்பப்பட்டவர், எனினும் தேற்றுபவர்"

## ஆதியாகமம் 40 மற்றும் 41-ஆம் அதிகாரங்கள்

"தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார்."—1 பேதுரு 5:5

யோசேப்பு பழைய ஏற்பாட்டின் காலங்களிலுள்ள முன்மாதிரியான வாலிபன் என்று சொல்லப்படலாம். சில விஷயங்களில் அவர் அனைத்துக் காலங்களுக்குரிய முன்மாதிரியாகக் காணப்படுகின்றார், எனினும் வித்தியாசம் உள்ளது. யோசேப்பு ஆவியினால் ஜெநிபிக்கப்படுவதற்குரிய காலங்களுக்கு முன்னதாக வாழ்ந்தவர், ஆகையால் அவர் கிறிஸ்தவனாய் இராமல், சுபாவத்தின் படியான மனுஷனாக மாத்திரமே காணப்படுகின்றார். அவர் வேதாகமங்கள் வருவதற்கு முன்னதான காலங்களிலும், பிரசங்கங்கள் பண்ணப்படுவதற்கும், ஓய்வுநாள் பள்ளிகள் நடத்தப்படுவதற்கும் முன்னதான காலங்களிலும் வாழ்ந்தவர் ஆவார். அனைத்து ஜனங்களும் யாக்கோபின் சந்ததியார் வழியாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்களித்துள்ள ஆபிரகாமின் தேவனிடத்தில் ஒரு பலமான விசுவாசத்தை யோசேப்பு தனது தந்தையினிடத்திலிருந்து சுதந்தரித்துக்கொண்டவராக இருந்தார். யாக்கோபின் குடும்பத்திலுள்ள ஓர் அங்கத்தினனாகிய யோசேப்பு, தேவனிடத்தில் பயபக்திக்கொண்டிருந்து, தாழ்மையுடனும், உயர் பண்புகளுடனும் வாழ்வதற்கு நாடினார். தேவனிடத்தில் அவர் கொண்டிருந்த உண்மையும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசமும், அவரது ஜீவியத்தில், அனைத்துக் காரியங்களிலும் அவரை வழிநடத்திடுவதற்கும், வழிகாட்டிடுவதற்கும் உரிய சுக்கானாகக் காணப்பட்டது. தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் மற்றும் அவரது அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கண்ணோட்டத்திலேயே, யோசேப்பு அனைத்துக் காரியங்களையும் செய்தார்.

இன்றுபோல் அன்றும், இப்படிப்பட்டதான உண்மைத்தன்மை என்பது அநேகமாக அபூர்வமானதாகவே இருந்தது மற்றும் யோசேப்பினுடைய உண்மையின் பலனாக, யோசேப்பு தனது எஜமானுடைய வீட்டில், உயர் ஸ்தானத்திற்கு, அதாவது விசாரணைக்காரனாகப் பணி உயர்த்தப்பட்டார். அவரது கடமை உணர்ச்சியானது, அவரை ஜாக்கிரதையாய் இருப்பதற்கும், ஞானமாய் இருப்பதற்கும், விவேகத்துடன் இருப்பதற்கும்/சிக்கனத்துடன் இருப்பதற்கும் வழிநடத்தினது மற்றும் அவரது எஜமான் அனைத்தையும் யோசேப்பின் பொறுப்பில் விட முடிந்தது மற்றும் விட்டார். யோசேப்பைப் போன்றுள்ள வாலிபர்கள் இன்று எங்கும் மிகவும் மதிக்கப்படுகின்றனர்; ஆம் அப்படிப்பட்டவர்கள் உலகத்தினுடைய வரலாற்றின் அனைத்துக் காலக்கட்டங்களிலும், நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதர்களாக, உண்மையுள்ள மனிதர்களாக, விவேகமுள்ள மனிதர்களாக மதிக்கப்பட்டுள்ளனர். யோசேப்பின் விஷயத்தில் இந்தப் பண்புகளுக்குத் தேவனிடத்திலான விசுவாசம் மற்றும் தேவபக்தி மற்றும் தேவனுக்குக் கடமைபட்டிருப்பதைப்பற்றின உணர்ந்துகொள்ளுதல் ஆகியவை காரணமாகுகின்றது.

ஆனால் யோசேப்பு இப்படியாகச் செழித்தோங்கிக் காணப்படுகையில், பெருந்துன்பம் அவர்மேல் கடந்துவந்தது. யோசேப்பு கொள்கைகளுக்கு உறுதியாய் இருந்ததான விஷயமானது, அவரது எஜமாட்டியைக் கோபப்படுத்தியது. அவள் அவரைத் தவறாய்க் குற்றஞ்சாட்டினாள்; மற்றும் அவர் சிறையில் அடைக்கப்பட்டார் மற்றும் அவர் அவரது எஜமானும், உபகாரியுமானவருக்குத் துரோகம் எனும் வெறுக்கத்தக்க குற்றம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார். எனினும் அவர் குற்றமற்றவராக இருந்தார்; ஆனால், தான் குற்றமற்றவர் என்பதை யோசேப்பும், தேவனும் மாத்திரமே அறிந்திருந்தனர். யோசேப்பு தவறு செய்தாரா (அ) இல்லையா என்று கேள்வி எழுப்பப்படாத அளவுக்கு, எதிராளி குற்றம் பற்றின விபரங்கள் அடங்கின சாட்சியத்தை மிகவும் பலமானதாகக் காண்பித்துக்கொண்டாள். மனித பெலவீனத்தினுடைய இந்தத் தன்மையைக் **கவிஞனான ஷேக்ஸ்பியர்** (Shakespeare) அவர்கள், பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டுள்ளார்: **"நரகத்தைவிட பெண்ணிற்கு ஏற்படும் வெறுப்பின் நிமித்தமான சீற்றமே பெரிது."**

நீதியின் பாதையில் நடப்பதற்கு நாடுகின்ற ஒருவருடைய ஜீவியம் இவ்வளவு கொடிதான தீமைக்குள்ளாவதற்குத் தேவன் அனுமதித்தது என்பது எத்துணை விநோதமாய்த் தோன்றுகின்றது! ஏன் இந்தத் தீமை தன் மீது வந்தது என்று யோசேப்பு கேள்வி எழுப்புவதையும், "தீமை செய்கிறவர்கள் திடப்படுகின்றார்களே, அவர்கள் தேவனைப் பரீட்சைப் பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே, நீதியாய் நடக்க நாடுபவர்கள் துன்பப்படுகின்றார்களே" என்று

தீர்க்கத்தரிசியுடன் கூடச் சொல்லுவதையும் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது (மல்கியா 3:15).

தன்னை எகிப்தின் சிறைக்குக் கொண்டுபோன தெய்வீக வழிநடத்துதலிலுள்ள ஞானத்தைக் குறித்துக் கேள்வி கேட்பதற்கும், தன்னை எகிப்தில் அடிமையாக விற்கப்படுவதற்கு அனுமதித்திட்ட அதே தெய்வீக வழிநடத்துதலிலுள்ள ஞானத்தைக் குறித்துக் கேள்வி கேட்பதற்கும், யோசேப்பு தன்னை அனுமதித்திடவில்லை என்பது உறுதியே. தேவன் மீதான அவரது விசுவாசம் பரீட்சையில் நிலைநின்றது. பூமிக்குரிய நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்கள் அனைத்தினின்றும் தான் தள்ளப்பட்டுள்ளதை, அதாவது உலகத்திற்கு மரிக்க வைக்கப்பட்டுள்ளதைக் கண்டபோது, அவர் பலம் கொண்டவரானார். சர்வ வல்லமையுள்ளவர் மீதான விசுவாசத்தை அதிகமாய் வளர்த்திக் கொண்டார் மற்றும் என்ன நடந்தாலும் தான் நீதியாயும், கலக்கமுறாமலும், பயபக்தியாயும் வாழ வேண்டுமென மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டார். சிறைச்சாலையிலுங்கூட அவரது உண்மைத்தன்மையும், அறிவும் மற்றும் பொதுவான நற்குணங்களும் அடையாளங்கண்டுகொள்ளப்பட்டது. யோசேப்பு சிறைச்சாலையின் தலைவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதனாகவும், உதவியாளனாகவுமானார். இப்படிப்பட்டதான (நல்ல) குணங்கள், எவ்வளவுதான் தவறாய்த் தூற்றப்பட்டாலும், திரித்துக்கூறப்பட்டாலும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டாலும், இக்குணங்களை உடையவர்களிடத்தில் நெருங்கி பழகுபவர்களால், இவர்களது பண்புகள் உணர்ந்துகொள்ளப்பட்டுப் பாராட்டப்படும். இக்காரியம் அன்றுபோல், இன்றும் உண்மையாகவே இருக்கின்றது.

## ‘‘சுயம்பாகி மற்றும் பானபாத்திரக்காரனுடைய சொப்பனங்கள்’’

முற்காலங்களிலுள்ள சிறைச்சாலை விதிகளானது இக்காலங்களில் இருப்பதைப்போல், முறையாக இருப்பதில்லை. யோசேப்பு வருடக்கணக்காகச் சிறையில் காணப்பட்டார் மற்றும் அவர் அநேகமாக மறந்துபோகப்பட்டுள்ளார் மற்றும் ஒருவேளை அவரது வழக்கானது, அதிகாரிகளுடைய கவனத்திற்குக்கொண்டு வருவதற்கென ஏதேனும் நிகழவில்லையெனில், அவர் வருடக்கணக்காக சிறையிலேயே இருந்திருக்க வேண்டியிருந்திருக்கும். யோசேப்பிற்கு இருபத்தெட்டு வயது இருக்கும் போது, இரண்டு உயர் பணியாளர்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள், ஏனெனில் அவர்களது நடத்தையின் விஷயத்தில் பார்வோன் ஏதோ அதிருப்தியடைந்து இருந்தார். இவர்களில் ஒருவர் இராஜாவினுடைய காரியத்தரிசியும், பானபாத்திரக்காரனும் ஆவார்; மற்றவர் இராஜாவினுடைய சமையல் சார்ந்த விஷயங்களுக்குரிய சுயம்பாகிகளின் தலைவன் ஆவார்.

சிறையின் பொதுவான மேற்பார்வையாளரான யோசேப்பு, இந்த மனிதர்களைக் கண்டு, அவர்கள் முகங்களில் துக்கம்/கலக்கம் தெரிவதைக் கவனித்து, அவர்களை இரக்கத்துடன் விசாரித்தார். எத்துணை சிறந்த மாதிரி! மனச்சோர்வுடன் காணப்படுவதற்கும் மற்றும் தன் நிலைமையைக் குறித்துப் புலம்பித் திரிவதற்கும் பதிலாக, யோசேப்பு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் மற்றும் தனக்கு முன்பாக தேவன் இறுதியாக வழியைத் திறந்து வைப்பதற்குரிய சில சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்தார். இப்படிப்பட்ட உயர்ப் பண்புகளை உடையவர், பிரச்சனையில் இருக்கும் மற்றவர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளைப் பேசிடுவதற்கு நேரத்தை உடையவராக எப்போதும் காணப்படுவார். இது இன்றுள்ள உலகப்பிரகாரமான மனிதனுக்கு எத்துணையான மாதிரியாகக் காணப்படுகின்றது! யோசேப்பைக்காட்டிலும் அநேக விதத்தில் அதிக அநுகூலங்களைப் பெற்றவனாகக் காணப்படுகின்ற இன்றைய கிறிஸ்தவனுக்கும், யோசேப்பு எத்துணை மாதிரியாக விளங்குகின்றார்.

நம்முடைய இனமானது, பரிணாம வளர்ச்சியின் மூலமாக, விலங்குகளிலிருந்து தோன்றி வருகின்றது என்று நம்மிடம் சொல்லுகிறவர்களும் மற்றும் இதன் காரணமாகக் கிட்டத்தட்ட 4000 வருடங்களுக்கு முன்னதாக வாழ்ந்தவரும், ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து 2000 வருடத்திற்குப் பின்பாக வாழ்ந்தவருமான யோசேப்பு, கிட்டத்தட்ட ஒரு விலங்காகவே, அதாவது குரங்கிலிருந்து சில விஷயங்கள் மாத்திரமே நீக்கப்பட்ட நிலையிலுள்ள விலங்காகவே இருந்திருக்க வேண்டுமென்று மறைமுகமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு. ஆனால் அவருடைய அனுபவங்கள் சார்ந்த நன்னெறியை குறிப்பிடுவதற்கு முயற்சிக்காமல், அவைகளை உண்மை தகவல்களாக மாத்திரம் பதிவு செய்கிற முற்றிலும் வேறுபட்ட ஒரு கோணத்தையே, யோசேப்பைப் பற்றின இந்தச் சிறிய பதிவில் நாம் காண்கின்றோம்.

அந்த இரண்டு இராஜ கைதிகளும், சொப்பனங்களினால் கலங்கியிருக்கின்றார்கள் என்பதை யோசேப்பு அறிந்தபோது, அச்சொப்பனங்களுக்கு விளக்கங்களைக் கொடுத்தார். ஒரு சொப்பனத்தின் அர்த்தமானது நம்பிக்கையூட்டுகின்றதாகவும், மற்றொரு சொப்பனத்தின் அர்த்தமானது, நம்பிக்கையிழக்கச் செய்கின்றதாகவும் காணப்பட்டது. இன்னும் மூன்று நாட்களுக்குள்ளாக, பானபாத்திரக்காரன், இராஜாவினுடைய தயவை மறுபடியும் பெற்றுக் கொள்வான் என்றும், இன்னும் மூன்று நாட்களுக்குள்ளாக சுயம்பாகி தூக்கிலிடப்படுவான் என்றும் யோசேப்பு அறிவித்தார். தான் சுதந்திரம் அடையப்போகிற விஷயத்தில் தனக்கும் கடமை இருப்பதை உணர்ந்தவராக யோசேப்பு, தன்னால் மிகவும் உற்சாகமூட்டப்பட்டவரும், தன்னால் நண்பன்போன்று நடத்தப்பட்டவருமான பானப்பாத்திரக்காரனிடம் வேண்டிக்கொண்டார்; அதாவது பானப்பாத்திரக்காரன் விடுதலையாகும் போது, ஆறுதலளித்த தன்னை நினைவுகூர வேண்டும் என்றும், தன்னுடைய வழக்கு விசாரிக்கப்படத்தக்கதாகவும், கூடுமானால் தான் விடுதலைப்பண்ணப்படத்தக்கதாகவும், தன்னுடைய வழக்கை அதிகாரிகள் முன் கொண்டு செல்லத்தக்கதாக, தனக்கு ஏதாகிலும் செய்ய வேண்டும் என்றும் பானப்பாத்திரக்கானிடம் யோசேப்பு வேண்டிக்கொண்டார்.

ஆனால் அந்தோ பரிதாபம்! கடின இருதயமே காணப்பட்டது! பானப்பாத்திரக்காரன் தனது சிறை நண்பனான யோசேப்பைப் பற்றி முழுவதுமாக இரண்டு வருடங்கள் மறந்துபோய்விட்டான்! பார்வோனின் சொப்பனமானது, பானப்பாத்திரக்காரனுக்கு, யோசேப்பை நினைவில் கொண்டு வந்தது; ஏனெனில் எகிப்தினுடைய சாஸ்திரிகள் எவராலும் பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லக்கூடாமல் போயிற்று. தான் மறந்துபோனதைப் பானப்பாத்திரக்காரன் ஒப்புக்கொண்டு, தனக்கும், சுயம்பாகிக்கும் சிறையில் உண்டான சொப்பனம் பற்றியும், அங்கிருந்த அருமையான வாலிபனான யோசேப்பு பற்றியும், யோசேப்பு எப்படித் தேவனால் அருளப்பட்டதான வல்லமையினால் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறினது பற்றியும், யோசேப்பு சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது என்பது பற்றியும், இராஜாவிடம் விளக்கினான்.

அந்த இரண்டு வருடங்களில் யோசேப்பு மிகுந்த எதிர்ப்பார்ப்புகளுடன் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தன் வழக்கில் சில மாற்றங்கள் ஏற்படுமென ஏக்கத்துடன் காத்திருந்திருக்க வேண்டும் என்பதிலும் சந்தேகமில்லை. தேவன் மீதான விசுவாசத்தில் பெலவீனமடைந்து போவதற்குப் பதிலாக, அவர் கர்த்தரை மிகவும் உண்மையாய்ப் பற்றிக்கொண்டிருந்திருப்பார் என்பதிலும், தனது அனுபவங்கள் நன்மைக்காகவே இருக்கும் என்று உணர்ந்துகொண்டிருப்பார் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. இந்த அனுபவங்கள் நன்மைக்காகவே காணப்பட்டது; ஏனெனில் யோசேப்பு முப்பது வயதாய் இருக்கும்போது, அதாவது முற்காலத்தினுடைய பிரமாணத்தின்படியாக, அவர் புருஷனுக்குரிய வயதை அடைந்திருக்கையில், பார்வோன் தனது சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்கென, யோசேப்பை வரவழைத்தார், மற்றுமாக யோசேப்பிற்கு மிக உயர்வான வெகுமதியை அளித்தார்.

## "பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டது"

பார்வோன் தனது இரண்டு சொப்பனங்களையும் விவரித்தார். முதலாம் சொப்பனத்தில் பார்வோன் ஏழு ஆரோக்கியமான மற்றும் பலமுள்ள பசுக்களைக் கண்டார் மற்றும் பிற்பாடு ஏழு அவலட்சணமும், கேவலமுமான பசுக்களையும் கண்டார்; வாழ்நாட்களிலேயே, அவர் கண்ட இந்தப் பசுக்கள் தான் (மிகவும்) அவலட்சணமாய் இருந்தது. இந்தச் சொப்பனத்தில் கேவலமான பசுக்கள், அந்தப் புஷ்டியான பசுக்களைப் பட்சித்துப்போட்டது; புஷ்டியானதைப் பட்சித்தப் பிற்பாடும், அந்தக் கேவலமான பசுக்கள் புஷ்டியாய்க் காணப்படவில்லை. இரண்டாம் சொப்பனத்தில் இராஜா நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து, பூமியில் ஓங்கி வளர்ந்ததைக் கண்டார்; பிற்பாடு சாவியானதும், ஒன்றிற்கும் பயனற்றதுமான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து வளர்ந்ததையும் கண்டார். சாவியான கதிர்கள் செழுமையான கதிர்களை விழுங்கிப்போட்டது; செழுமையானதை விழுங்கிப்போட்ட பிற்பாடும் சாவியான கதிர்கள் செழுமையாய்க் காணப்படவில்லை.

வாலிபனான யோசேப்பு உடனடியாகச் சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தெரிவித்தார்; ஆனால் அர்த்தத்தைத் தெரிவிப்பதற்கு முன்னதாக, அர்த்தமானது தன்னிடமிருந்து வராமல், தேவனிடமிருந்து வருகின்றதென மிகத் தெளிவாக யோசேப்பு இராஜாவிடம் தெரிவித்தார். இப்படியாக யோசேப்பு, "உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்" மற்றும் "அவர் உன்

இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" என்ற வேதவாக்கியங்களினுடைய போதனைகளுக்கு எடுத்துக்காட்டானார் (நீதிமொழிகள் 3:6; சங்கீதம் 37:4).

இரண்டு சொப்பனங்களுமே ஒரே காரியத்தைத்தான் குறிக்கின்றதென யோசேப்பு விவரித்தார்; அதாவது இரண்டு சொப்பனங்களுமே எகிப்து தேசத்தில் ஏழு வருடங்கள் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் என்பதையும், இந்த வருடங்களைத் தொடர்ந்து ஏழு வருடங்கள் கொண்டதும், செழிப்பான வருடங்களினுடைய விளைவுகள் அனைத்தையும் முழுமையாகத் தீர்த்துப்போடுகின்றதுமான பஞ்சம் வரும் என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது என்று விவரித்தார். இந்தத் தகவலைப் பார்வோன் பயன்படுத்திக்கொள்வதற்குத் தேவன் சித்தம் கொண்டுள்ளார் என்ற யோசனையை யோசேப்பு பார்வோனுக்குத் தெரிவித்தார் மற்றும் பரிபூரணமான ஏழு வருடங்களின், செழுமையான தானிய விளைவுகள் அனைத்தையும் வாங்குவதற்கும், ஏழு வருட பஞ்சகாலத்தின் பயன்பாட்டிற்கென அதைச் சேமித்து வைப்பதற்குமென, இராஜாவுக்கு விசேஷமான ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட வேண்டும் என்றும் யோசேப்பு பரிந்துரைத்தார்.

பார்வோன் மிகவும் விவேகத்துடன் சம்மதித்தார் மற்றும் தனது ஜனங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்காகப் பணிபுரிவதற்குரிய தனது விருப்பத்தையும், தனது பரந்த மனப்பான்மையையும் பார்வோன் வெளிப்படுத்தினவராக, பூரண விளைவின் வருஷங்களுடைய திரளான தானியங்களை வாங்கிடுவதற்கும், காரியங்களின் முழுப்பொறுப்பை எடுத்துக்கொள்வதற்கும் மற்றும் பின்னர் வரும் பஞ்சத்தின் காலங்களில், சேமித்து வைக்கப்பட்டிருந்த தானியங்களைச் செலவு செய்வதைக் கவனித்துக்கொள்வதற்கும் என்று யோசேப்பையே உடனடியாக நியமித்துவிட்டார்.

இப்படியாக யோசேப்பு சிறையிலிருந்து பதினான்கு வருடங்களுக்குரிய ஒப்பந்தத்திற்குள் நுழைந்தார். பொய்யான குற்றச்சாட்டினால் அடைந்திட்ட பாடுகளிலிருந்து, யோசேப்பு திடீரென அந்நாட்களிலுள்ள மாபெரும் சாம்ராஜ்யத்தில், பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள உயர் அதிகாரத்திற்கு அடியெடுத்து வைத்தார். யோசேப்பின் வெற்றியிலும், உயர்த்தப்படுதலிலும், தேவனுடைய கரம் இருக்கவில்லை என்று யாராகிலும் சொல்லக்கூடுமோ? நிச்சயமாய் இல்லை! யோசேப்பினுடைய துன்பமான அனுபவங்களில், தெய்வீகத் தயவு காணப்படவில்லை என்றும் நாம் அனுமானித்துவிடக்கூடாது. மாறாக யோசேப்பிற்கு வந்த துன்பத்தினாலான பாடங்களானது, அவர் பார்வோனின் வாய்க்கருவியாக, இராஜ்யம் எங்கும் அடையப்போகின்ற அடுத்துவரும் அனுபவங்களுக்குரிய ஆயத்தங்களாக மாத்திரமே காணப்பட்டது என்பதில் நமக்கு நிச்சயமே.

யோசேப்பின் அனுபவங்களானது, இயேசுவுக்கும், அவரது பின்னடியார்களாகிய சபைக்கும் நிழலாய்க் காணப்படுகின்றதை நாம் மீண்டுமாக நினைப்பூட்டப்படுகின்றோம். தாழ்மை மற்றும் பொறுமை எனும் பண்புகளானது, அன்பு மற்றும் உண்மை/நேர்மைக்கு நெருங்கின தொடர்புடையவையாக இருக்கின்றது என்று வேதாகமம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இதைப் பரிசுத்தவானாகிய பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கூறுவதன் மூலம், நமக்கு நினைப்பூட்டுகின்றார், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே" (எபிரெயர் 12:6-8).

இப்படியாகவே இயேசுவின் விஷயத்திலும், உண்மையுள்ள அப்போஸ்தலர்கள் அனைவரின் விஷயத்திலும், இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள இயேசுவின் பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இப்படியாகவே அர்ப்பணிக்கப்பட்ட சபை அங்கத்தினர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். இந்தப் பாத்திரங்களைக் கர்த்தர் இயேசு அன்புகூருகின்றபடியால், இவர்களைப் பரீட்சிப்பதற்கும், சோதிப்பதற்கும், சிட்சிப்பதற்கும் பாத்திரவான்களாகக் கருதுகின்றார். இந்தப் பரீட்சைகளும், சோதனைகளும், சிட்சைகளும், பிதாவானவர் இயேசுவையும், அவரது சகோதரராகிய சபையையும் அழைப்பித்துள்ள கனம், மகிமை, அழியாமைக்குரிய ஸ்தானத்திற்கும், மாபெரும் பொறுப்பிற்கும் தகுதிப்படுத்திடுவதற்கு இவர்களுக்கு அவசியமானதாய்க் காணப்படுகின்றது.

## "துன்பத்தின் முக்கியத்துவம்"

யாக்கோபு தனது குமாரனாகிய யோசேப்பிற்காகக்கொண்டிருந்த விசேஷித்த அன்பானது, பாரபட்சத்தில் அதாவது பலவருண இராஜ அங்கியின் மூலம் வெளிப்பட்டது. தெய்வீக வழிநடத்துதலானது, ஒருவேளை குறுக்கிட்டு, யோசேப்பை அவரது தகப்பனுடைய கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலுமாக எடுக்கவில்லையெனில், யாக்கோபு அவரது இந்தக் குமாரனைச் சீரழித்துப் போட்டிருந்திருப்பார். அநேக தகப்பன்மார்கள், அதிலும் விசேஷமாக ஐசுவரியமான தகப்பன்மார்கள் இதுபோன்ற தவறுகளைச் செய்திருக்கின்றனர். ஆகவேதான் ஐசுவரியவான்களின் குமாரர்கள் தங்கள் தகப்பன்மார்களுக்கு மதிப்புச் சேர்ப்பவர்களாய் எப்போதும் காணப்படுவதில்லை.

ஆனால் மாபெரும் பரம பிதாவானவர், இப்படிப்பட்டதான தவறுகளைச் செய்வதில்லை. பரீட்சைகள், சிரமங்கள் என்பது, தேவனுடைய ஜனங்களுக்கு, அவர்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவிற்கும், அவர்கள் மீதான அவரது அன்புடன் கூடிய பராமரிப்பிற்குமான அடையாளங்களாக இருக்கின்றது என்று தேவனுடைய ஜனங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தெய்வச் செயலான பராமரிப்பானது வரையறைக்கு உட்பட்டது என்பது உண்மையே; "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19). அவரது விசேஷித்த கையாளுதலானது, அவரது அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களுடன், அதாவது அவருடன் ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தவர்களுடன், அதாவது அவரது ஊழியக்காரர்களாகவும், அவரது பிள்ளைகளாகவும் ஆகியுள்ளவர்களுடன் காணப்படுகின்றது. இவர்களுக்கு மாத்திரமே, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற வாக்குத்தத்தம் உரியதாகக் காணப்படுகின்றது (ரோமர் 8:28).

இந்த விசேஷித்த அழைப்பானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள சபைக்குக் குறிப்பாகப் பொருந்துகின்றதாய் இருப்பினும், இன்னொரு விதத்தில் அழைப்பு என்பது ஆபிரகாம் காலம் முதலான எபிரெயர்களுக்கும் கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. தேவனுடன் உடன்படிக்கை உறவில் காணப்படுகின்ற அந்த எபிரெயர்களிலேயே, யோசேப்பு காணப்படுகின்றார். இதுவே ஆபிரகாம் குடும்பத்தார் அல்லாத மற்றக் குடும்பத்து வாலிபர்களோடு தேவன் தொடர்பு கொள்ளாமல், மாறாக யோசேப்புடன் தொடர்பு கொண்டதற்கான காரணமாகும். இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தபடியால், அவர்கள் அநேக கடுமையான அனுபவங்களுக்குள் சென்றவர்களானார்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும். அவர்கள் ஒருவேளை தேவனுடனான உடன்படிக்கையின் உறவிற்குள் வரவில்லையெனில், இந்த அனுபவங்கள் அநேகவற்றிலிருந்து அவர்கள் தப்பியிருந்திருப்பார்கள். ஆனால் ஒருவேளை அவர்கள் சோதனைகளுக்கும், சிரமங்களுக்கும் தப்பியிருந்திருப்பார்களானால், அவர்கள் சில சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் அடையாமல் போயிருந்திருப்பார்கள். அவர்களை ஆயத்தப்படுவதற்கென வந்திட்ட துன்பங்களைக்காட்டிலும், தேவன் அருளும் ஆசீர்வாதங்கள் எப்போதும் அதிகமானதாகக் காணப்படுகின்றது.

## "யூத மற்றும் கிறிஸ்தவ தெரிந்துகொள்ளுதல்கள்"

இது யூத ஜனங்களும், பிற்பாடு கிறிஸ்தவர்களும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களாக, ஆபிரகாமின் சந்ததியாக, மாம்சீக மற்றும் ஆவிக்குரிய சந்ததியாகக் காணப்படுகின்றனர் என்று வேதாகமம் தெரிவிப்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றது. இரண்டு பேருக்குமே, மற்ற ஜனங்களுக்கு அருளப்படாத தேவ ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றன; மற்றும் இருவரின் விஷயத்திலும் சோதனையான அனுபவங்களானது, தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அழைக்கப்பட்டதான எதிர்க்கால மகிமைகளுக்கு அவர்களைத் தகுதியாக்குகின்றதாய் இருக்கின்றது.

தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கும்கூடத் தேவன் மாபெரும் ஆசீர்வாதங்களை வைத்திருக்கின்றார். மேசியாவினுடைய ஆளுகையின் ஆயிர வருடங்களின்போது, பரிசுத்தவான்களாகிய தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, தேவனுடைய மாபெரும் இராஜ்யத்தில் மேசியாவின் உடன் சுதந்தரர்களாக இருந்து, பூமியின் மீதான ஆளுகையை எடுத்துக்கொள்வார்கள்.

எபிரெயர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களுங்கூட அப்போது, கிறிஸ்தவ சபையுடன் இணைந்து, இன்னொரு வேலை பாகத்தில் பயன்படுத்தப்படுவார்கள்; இவர்கள் இருவரில் சபையானது, பரலோகத் தளத்தில் காணப்படுவார்கள், மற்றவர்களோ பூமிக்குரிய தளத்தில் காணப்படுவார்கள். இந்த இரண்டு இஸ்ரயேலர்கள் வாயிலாக தேவ ஆசீர்வாதங்களானது சகல ஜாதியார்கள், பாஷைக்காரர்கள், கோத்திரத்தார்கள் மீது பொழியப்படும்.

இந்த இரண்டு வகுப்பாருடைய காரியங்களைத் தவிர, வேறு எவருடைய காரியங்களையும் தேவன் விசேஷமாய் மேற்பார்வையிடவில்லை என்றாலும், ஒட்டுமொத்த மனித குடும்பத்தின் மீதும், துன்பத்தினாலான பெரும் படிப்பினைகள், பொதுவான விதத்தில் வருவதற்குத் தேவன் அனுமதித்திருக்கின்றார் என்று நாம் காண்கின்றோம். தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களுக்கான விசேஷித்த சோதனைகளும், சிரமங்களும், அவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அருளுவதற்கும், தேவனுடைய பிரதிநிதிகளென அவர்களைத் தகுதிப்படுத்திடுவதற்கும் நோக்கம் கொண்டிருந்ததுபோன்று, உலகத்தின் மீது வருகின்றதான பொதுவான உபத்திரவங்களுங்கூட, பாவம் மற்றும் மரணம் தொடர்பான அனுபவங்கள் அனைத்தையும் கொடுப்பதன் மூலமும், பாவத்தினுடைய மோசமான பாவத் தன்மையை அனைவருக்கும் கற்றுக்கொடுப்பதன் மூலமும், அனைத்து ஜனங்களுக்கும் உதவிகரமான பொதுவான படிப்பினைகளை அருளுகின்றதாய் இருக்கின்றது.

மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, சாத்தான் கட்டப்படும்போது, நீதியின் ஆளுகை ஆரம்பமாகும்போது, சாபம் அகற்றப்படும்போது, ஆசீர்வாதங்கள் பொழியப்படும்போது, அப்போது துக்கம், கண்ணீர், அழுகை, மரணம் தொடர்பான படிப்பினைகள் அனைத்தும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படும். எதிர்காலத்தில் தேவன் அருளும் மாபெரும் ஆசீர்வாதங்களை அவர்கள் தற்காலத்தினுடைய தீமைகளுடனும், துக்கங்களுடனும் ஒப்பிட்டுப்பார்த்து, தேவன் அருளின மாபெரும் ஆசீர்வாதங்களின் மதிப்பை உணர்ந்துகொள்வார்கள். மேலும் இந்தத் துக்கங்கள், கண்ணீர்கள் அனைத்தும், தேவனுடைய பிரமாணங்களை மீறினதன் காரணமாகவும், அவரது கட்டளைகளைப் புறக்கணித்ததன் காரணமாகவும் ஏற்பட்டதென மனுக்குலம் போகப்போக முற்றும், முழுமையாகக் கற்றுக்கொள்கையில், இந்தப் பாடம் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை என்பதில் நிச்சயமே.

உபத்திரவத்தின் ஏர் எங்கெல்லாம் உழுதிருக்கின்றதோ, அங்கெல்லாம் அது பயிரிடப்படாத நிலத்தை உழுது, தெய்வீகச் சத்தியம் மற்றும் கிருபை எனும் விதை தூவப்படுவதற்கென ஆயத்தப்படுத்தியுள்ளது. மேசியாவின் அனுகூலமான ஆளுகையாகிய அடுத்த யுகமானது, தேவன் பற்றின அறிவு மற்றும் அவரது மகிமையான குணலட்சணம், திட்டம் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளுதல் எனும் விதைகளை விதைப்பதற்கான காலமாகும். வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோன்று, விளைவுப்பலன்கள் மகிமையானதாய்க் காணப்படும். சத்தியஅறிவு அனைவருக்கும் வழங்கப்படும் நாட்களில், மற்றும் நீதியாய் நடப்பதற்கு உதவி வெளிப்படையாய்க் கொடுக்கப்படும் நாட்களில், ஆசீர்வாதங்கள் வேண்டாம் என்று துணிந்து மறுப்பவர்களும், நீதிக்குப் பதிலாகப் பாவத்தைத் தெரிந்துகொள்பவர்களும் தவிர, மற்றப்படி அனைவருமே இந்த ஆசீர்வாதங்களில் நித்திய காலமும் பங்குகொள்பவர்களாய்க் காணப்படுவார்கள்.

---

R 5225

# "விதைத்தலும் அறுத்தலும்"

## ஆதியாகமம் 42-ஆம் அதிகாரம்

"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."—கலாத்தியர் 6:7

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதையைப் பார்க்கவிருக்கின்றோம். பொறாமையினால் ஏவப்பட்டதினிமித்தம் தங்கள் சகோதரனுக்குச் செய்திட்ட கொடூரங்கள் பற்றின ஞாபகங்களானது, எவ்வாறு தீமை செய்தவர்களைப் பல வருடங்களாகக் கஷ்டப்படுத்திக் கொண்டுவந்தது என்பது பற்றி இன்றைய பாடமானது விளக்கப்போகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய ஆதார வசனமானது, தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கு மாத்திரமல்லாமல், பொதுவான மனுக்குலத்திற்கும்கூட ஒரு பொதுவான கொள்கையாக அமைகின்றது. துணிகரமாயும், அறிந்து உணர்ந்த நிலையிலும், எவராகிலும் விதைக்கப்படுகின்ற எதுவும், நல்லது (அ) தீயதான அறுவடை ஒன்றைக் கொண்டுவரும்.

பஞ்சமானது உலகத்தின் அந்தப் பாகம் முழுவதும் பரவலாகக் காணப்பட்டது. பாலஸ்தீனியாவையும், எகிப்தையும் உள்ளடக்கின நிலையில் பஞ்சம் காணப்பட்டது. எகிப்தில் உணவு பற்றாக்குறை இல்லை என்றும், அங்குத் தானியங்கள் உள்ளது என்றும், மிதமான விலைகளில் தானியங்கள் அங்கு விற்பனை பண்ணப்படுகின்றது என்றும், தானியங்கள் எகிப்தில் முன்னமே சேகரித்து வைக்கப்பட்டன என்றுமுள்ளதான செய்தி பரவியது. சொந்தமாகத் தனித்தனி குடும்பங்களைப் பெற்றிருந்த தனது குமாரர்களை நோக்கி, எகிப்துக்குப் போய்க் கோதுமையை விலைக்கு வாங்கி வரும்படிக்கு யாக்கோபு கட்டளையிட்டார்.

இவர்கள் எகிப்தியராய் இராமல் அந்நியர்களாய் இருந்தபடியால், இவர்கள் யோசேப்பினிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்; யோசேப்பு இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. யோசேப்பு துபாசி வழியாய் இவர்களிடத்தில் பேசி, இவர்கள் சேனையோடு வந்து கோதுமையைத் திருடிப்போகத்தக்கதாக, எகிப்தில் எவ்வளவு கோதுமை காணப்படுகின்றதெனப் பார்ப்பதற்கு வந்திட்ட வேவுகாரர்களாக இருக்கின்றார்களா என்று வினாவினார். இவர்கள் தங்கள் நிலவரத்தை உண்மையாய் விவரித்தார்கள். யோசேப்பு தனது தந்தையைக் குறித்தும், தனது இளைய சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் விசாரித்துக் கொண்டார். இறுதியில் இவர்களில் ஒருவரைச் சிறையில் அடைத்து, மீதமானவர்களைத் தானியங்களுடன் அனுப்பி வைத்தார்; அதுவும் இவர்களுக்கு இன்னும் தானியம் தேவைப்படும் என்றும், இவர்கள் தங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவந்து, தாங்கள் வேவுகாரர்கள் இல்லை என்று நிரூபிக்கும் பட்சத்தில், பஞ்சம் முடிவது வரையிலும் திரளான தானியங்களை வாங்கிச் செல்லலாம் என்றும் இவர்களுக்குப் புரியவைத்து அனுப்பினார். அதுவரையில் சிமியோன் பிணைக் கைதியாக வைக்கப்பட்டார்.

இந்தச் சகோதர்களுடைய குற்ற மனசாட்சியானது, தங்களுக்கு வந்திட்ட பல்வேறு அனுபவங்களை, முற்காலத்தில் தாங்கள் செய்திட்ட தவறுகளுடன் சம்பந்தப்படுத்த ஆரம்பித்தது. "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரியும் என்று அறியாதிருந்தார்கள்" (ஆதியாகமம் 42:21, 23). யோசேப்பு அவர்களை விட்டு அப்புறம் போய் அழுதார். அவருடைய இருதயமானது, கடினமானதாக இருக்கவில்லை. இன்னும் வரவிருக்கின்ற வருடங்களில் அவர்களுக்கு நன்மை பயக்கின்றதான ஒரு படிப்பினையை மாத்திரமே யோசேப்பு அவர்களுக்குக் கொடுத்தவராய்க் காணப்பட்டார்.

மேசியாவின் இராஜ்யமானது, அதன் ஆசீர்வாதங்களைப் பொழியும்போது, நிஜமான யோசேப்பாகிய மேசியாவும், ஜனங்களிடத்தில் மகா உபத்திரவக் காலத்தின்போது யோசேப்பைப் போன்று கடுமையாகப் பேசிடுவார் என்றும், என்ன சம்பவிக்கப்போகின்றதோ என்று கவலைக்கொள்ளவும், மிகுந்த மனவேதனை அடையவும் அனுமதித்திடுவார் என்றும்

வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இப்படியாகக் கர்த்தர் கடுமையாகக் காணப்படும் வேளைகளில், அவரது இருதயமானது, தவிக்கும் சிருஷ்டியின் மீது முழுக்க அன்பும், அனுதாபமும் கொண்டிருக்கும்; இந்தத் தவிக்கும் சிருஷ்டிக்காகவே அவர் ஏற்கெனவே மரித்திருக்கின்றார் மற்றும் இவர்களுடைய நலனுக்காகவே அவரது இராஜ்யமும் ஸ்தாபிக்கப்படுகின்றது. மேசியாவின் ஆளுகையினுடைய ஆரம்பத்தின் போது காணப்படும் உலகத்தின் மீதான உபத்திரவக் காலமானது, கர்த்தர் அருளுவதற்குச் சித்தங்கொண்டுள்ள ஆசீர்வாதங்களுக்காக, மனுக்குலத்தின் இருதயங்களை ஆயத்தம் பண்ணுகிறதற்காகவே என்பது நிச்சயமே.

## "அநேகம் அடிகள் மற்றும் கொஞ்சம் அடிகள்"

யாக்கோபின் பத்துக்குமாரர்களும் தங்கள் கோதுமை தானியத்துடன் திரும்பிவந்த போது, அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் அனைத்தையும், தங்கள் தகப்பனிடத்தில் கூறினார்கள். ஏன் தங்களுடன் சிமியோன் காணப்படவில்லை என்பதையும், சிமியோன் பிணைக் கைதியாக வைக்கப்பட்டிருக்கின்றார் என்பதையும் விவரித்தார்கள். இன்னுமாகக் கோதுமைக்கான பணம் வாங்கப்படாததைக் கண்டபோது, அவர்கள் திகைத்துப் போனார்கள். அவர்கள் விலையாகச் செலுத்தியிருந்த பணமானது, தங்கள் ஒவ்வொரு சாக்கிலும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது/வைக்கப்பட்டிருந்தது. அனைத்தும் அவர்களுக்கு விநோதமாகக் காணப்பட்டது மற்றும் அந்தச் சகோதரர்களின் மனங்களின் கவனமானது அவர்களது சகோதரனாகிய யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் பல வருடங்களுக்கு முன்னதாகச் செய்திருந்த குற்றத்தின் மீது திரும்பினது. யோசேப்பிற்குக் குற்றம் புரிந்தது முதல், இதுவரைக்கும் இடைப்பட்ட வருடங்களில், தங்கள் சகோதரனுக்குத் தாங்கள் செய்தது போன்று எத்தகைய ஓர் உபத்திரவத்தை நீதியுள்ள தேவன் தங்களிடத்தில் அனுமதிக்கப்போகின்றார் என்பது தொடர்புடையதான பயம் கலந்த அனுமானங்கள் மற்றும் துக்கங்கள் எனும் கதிர்களை அவர்கள் அநேகந்தரம் அறுத்தார்கள்.

இந்தக் கொள்கையானது பொதுவாய் அங்கீகரிக்கப்படுமானால், அதாவது ஒவ்வொரு மீறுதலுக்கும், நீதியான பலனுண்டு! எனும் தேவ வார்த்தையினுடைய உண்மைத் தன்மையை அனைவரும் உணர்ந்துகொள்வார்களானால், ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கும் அது எவ்வளவு நன்மை பயக்கின்றதாய் இருக்கும். பரவிக்கிடக்கும் மிகவும் தவறான உபதேசங்களுடைய மூடுபனியில், நாம் நீதியைப் பற்றின மேற்கூறப்பட்டுள்ள உணர்ந்துகொள்ளுதலையும், தவறு செய்தமைக்கான நீதியான தண்டனைப்பற்றின எதிர்ப்பார்த்தலையும் இழந்துபோயுள்ளோம். இந்தத் தவறான உபதேசமானது, அனைத்துப் பாவங்களுக்கும் ஒரே ஒரு தண்டனையைச் சாற்றுகின்றது, அதுவும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத தண்டனையை, அதாவது நித்திய சித்திரவதையைச் சாற்றுகின்றது. எத்தனை சொற்பமானவர்கள் மாத்திரமே, இந்த உபதேசத்தை நம்புகின்றார்கள் அல்லது அதனால் உண்மையாய்த் தாக்கத்திற்குள்ளாகிக் காணப்படுகின்றார்கள் என்பது முதலாவது கவனிக்கப்படத்தக்கதாகும்! இவ்வுபதேசத்தின் இரக்கமற்ற தன்மையானது, இதை நம்பத் தகாததாக்குகின்றது மற்றும் தேவன் முன்னறிவித்துள்ள உண்மையான தண்டனைகளைப் பற்றின சரியான கண்ணோட்டத்திலிருந்து மனதைத் திசைத்திருப்பிவிடுகின்றதாய் இருக்கின்றது.

இந்த முதலாம் முரண்பாடு மற்றும் இதன் தீமையான பலனோடுகூட, இன்னும் காணப்படும் முரண்பாடுகள் பின்வருமாறு: சபையில் அங்கத்துவம் வகிப்பதன் மூலமாக, நித்திய சித்திரவதைக்குத்தப்பி, கொஞ்சம் குறைவான சித்திரவதையை அடையலாம் என்று நமது கத்தோலிக்க நண்பர்கள் கூறுகின்றனர். இந்தக் கூற்றானது, புரோட்டஸ்டாண்டினரைக் காட்டிலும் மிகவும் நியாயமானதாகத் தோன்றுவதினால், இந்த இரண்டு தீங்குகளிலும், இது குறைவான தீங்காய் இருக்கின்றதென அநேகர் ஏற்றுக்கொள்கின்றனர். மரணத்திற்குக் கொஞ்சம் முன்னதாக, "தேவனே என்னை மன்னியும்!" என்று ஓர் ஆணோ (அ) பெண்ணோ கூறி உடனடியாகப் பரதீசுக்குச் செல்வார்கள் என்பதும், பாவங்களுக்கான அனைத்துத் தண்டனைகளிலிருந்தும் தப்பிக்கொள்வார்கள் என்பதும் புரோட்டஸ்டாண்டின் கூற்றாகக் காணப்படுகின்றது. இந்தக் கூற்றுகள் அனைத்தும் பாதகமானதாகவும், முரண்பாடானதாகவும் காணப்படுகின்றதென நாம் கூறுகின்றோம். வேதவாக்கியங்களுடைய கூற்றானது, பிரசங்கிக்கப்பட்டு, விசுவாசிக்கப்படுமாகில், அது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

வேதவாக்கியங்களினுடைய கூற்றானது, நம்முடைய ஆதார வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது; "மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்." மனுஷன் ஒருவேளை கொடுமை செய்வதற்கான விருப்பத்தை, வஞ்சகமான வார்த்தைகளை, அநியாயத்தை,

சுயநலத்தை, தீமை பேசுதலை, பழித்தூற்றுதலை விதைப்பானானால், இதற்கான அறுப்புக் காலத்தையும் அவன் நிச்சயமாய்க் கொண்டிருப்பான் மற்றும் அவன் விதைத்திருந்ததான விருப்பங்களுக்கு இசைவான பலன்களைச் சேகரித்துக்கொள்வான்.

தெய்வீக ஏற்பாட்டினை மேம்படுத்துவது/மாற்றி அமைப்பது என்பது மனுக்குலத்தினால் இயலாத ஒன்றாகும். ஆகையால் அனைத்துக் கிறிஸ்தவ ஜனங்களும் நீதியைக் குறித்தும், தேவனுடைய அன்பைக் குறித்தும் உலகத்திடம் சொல்வதற்குப் புதிதாய் ஆரம்பிக்க வேண்டும்; பாவத்திற்கு எதிரான தேவனுடைய நீதியான தண்டனை மரணம் என்றும், ஆனாலும் கிறிஸ்துவினுடைய ஆயிரவருட மேசியா ஆளுகையின்போது இந்தத் தண்டனையினின்று விடுவிக்கப்படுவதற்குக் கிறிஸ்து மூலமாய்த் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும் உலகத்திடம் சொல்வதற்கு ஆரம்பிக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய ஆயிரவருட ஆளுகையின்போது, ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கமும், தேவனுடன் ஒப்புரவாகிடுவதற்கும், தந்தையாகிய ஆதாமின் பாவத்தினால் இழந்து போகப்பட்டதான தேவசாயலுக்கும், ரூபத்திற்கும் மீண்டுமாகச் சீர்ப்பொருந்திடுவதற்குமான முழு வாய்ப்பை அருளப்பெற்றுக்கொள்வார்கள்.

ஆனால் இதற்கிடையில் ஒவ்வொரு மனிதனும் தனது ஒவ்வொரு கிரியை, வார்த்தை மற்றும் எண்ணம் தொடர்புடைய விஷயத்தில் பொறுப்பாளியாகக் காணப்படுகின்றான். அவன் எந்தளவுக்கு வெளிச்சத்திற்கும், அறிவிற்கும், பொன்னான சட்டத்திற்கும் எதிராகப் பாவம் செய்கின்றானோ, அவ்வளவாய் அவன் தன் குணலட்சணத்தைச் சீரழிக்கின்றவனாய் இருக்கின்றான் மற்றும் இப்படியாக தேவசாயலுக்கும், ரூபத்திற்குமான திரும்பிவருதலுக்குரிய தனது வாய்ப்பினைச் சிரமம் நிறைந்த ஒன்றாக்குகின்றான். யாரொருவனுடைய மனசாட்சியானது மிகவும் சீரழிந்து போய்க் காணப்படுகின்றதோ, அவன் தனது போக்கினின்று திரும்புவதற்கான தனது வழியினை மிகவும் சிரமமானதாகவும், செங்குத்தானதாகவும் (ஏறுவதற்குக் கடினமானதாகவும்) இருப்பதை உணருவான்.

இந்தத் திவ்விய பிரமாணத்தின்படி, ஆயிர வருட அரசாட்சியின்போது, இன்று கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படும் தேசங்களிலுள்ள ஜனங்களைக் காட்டிலும், அந்நிய ஜனங்கள், பெரும்பாதையான வழியில் நடந்துச்செல்வதற்கு மிகவும் ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படும் தேசங்களிலுள்ள ஜனங்கள் மிகுந்த வெளிச்சம், மிகுந்த சிலாக்கியம், மிகுந்த வாய்ப்பு உடையவர்களாய் இருந்து, மாபெரும் அறிவிற்கு எதிராய்ப் பாவம் புரிந்தவர்களாய் இருந்து, தங்கள் மனசாட்சிகளை மிக ஆழமாய் மழுங்கச் செய்துவிட்டவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்டவர்களிலுள்ள சிலரைக் குறித்தே, "நரகாக்கினைக்கு (இரண்டாம் மரணத்திற்கு) எப்படித் தப்பித்துக்கொள்வார்கள்?" என்று இயேசு குறிப்பிட்டுள்ளார்.

## "யாக்கோபின் நரைமயிர்கள் ஷீயோலுக்குள் இறங்குதல்"

கோதுமை அடுத்தமுறை வாங்க வேண்டுமானால், பென்யமீனும் செல்ல வேண்டும் என்பதைப் பாவப்பட்ட வயதான யாக்கோபு கேட்டபோது, இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்து, இது ஒருக்காலும் நடக்காது என்று கூறினார். யோசேப்பும் மரித்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவரது இளைய குமாரனாகிய பென்யமீனையும் அவர் இழந்துபோக நேரிட்டால், அந்தத் துயரமானது, அவரது நரைமயிரை வேகமாய் ஷீயோலுக்கு, அதாவது கல்லறைக்கு, அதாவது மரண நிலைக்குக் கொண்டுபோய்விடுவதாக இருக்கும்.

நம்முடைய பொதுவான ஆங்கில வேதாகம மொழியாக்கத்தில், இந்த ஷீயோல் எனும் வார்த்தையானது, அடிக்கடி **hell, pit** மற்றும் **grave** என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. முற்காலங்களில் இந்த மூன்று ஆங்கில வார்த்தைகளுமே, ஒரே பொருளை உடையவைகளாகக் காணப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு மனிதன் தான் உருளைக்கிழங்குகளைப் புதைப்பதைப் பற்றிக்கூறுகையில், புதைப்பதற்கு **"helling"** என்ற வார்த்தையைப் பயன்படுத்துவான். இந்த வார்த்தையானது, மனுக்குலம் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்படுகையில், சிலசமயம் சவக்குழி **(grave)** எனும் வார்த்தைப் பயன்படுத்தப்படுகின்றது. ஷீயோல் எனும் வார்த்தையானது 66 முறைகள் வேதாகமத்தில் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இவ்வார்த்தையானது பாதிக்கு மேற்பட்ட இடங்களில் குழி **(pit)** என்றும், பாதாளம் **(grave)** என்றும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

ரிவைஸ்டு **(Revised)** மொழியாக்கம் ஆயத்தமாக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவ்வேலையில் ஈடுபட்டிருந்த கல்வி அறிவுள்ள மனிதர்கள், ஷீயோல் எனும் வார்த்தையினை, (சவக்குழி எனும் அர்த்தத்தில்) hell என்று மொழிப்பெயர்த்திடுவதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களாய் இருந்தனர், ஏனெனில் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் அவ்வார்த்தையானது அதன் ஆதி அர்த்தத்தைப் படிப்படியாக இழந்துபோய், அக்கினியும், சித்திரவதையும் உள்ள இடம் எனும் அர்த்தத்தை உடையதாக மாறிவிட்டது. இப்படியான அர்த்தம் எதுவும் எபிரெய வார்த்தைக்கான ஷீயோலுக்கு இல்லாதிருப்பதினால், இந்த மொழிப்பெயர்ப்பாளர்கள், இப்படியான அர்த்தத்தில் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பதற்கு மறுத்தனர். இந்த உண்மைகள் பற்றின விஷயத்தை இவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர், பின்னர் இவ்வார்த்தையானது என்னவாக மொழிப்பெயர்க்கப்பட வேண்டும் என்பதில் வாக்குவாதம் எழும்பினது. அனைவருமே ஒன்றுபோல் ஷீயோலை, grave (அ) tomb (பாதாளம்) எனும் ஆங்கில வார்த்தையாக மொழிப்பெயர்க்கும் விஷயத்தில், இப்படிச் செய்வது என்பது சில கிறிஸ்தவ ஜனங்களுக்கு அடிப்படைகளில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதுபோன்று தோன்றுமென அஞ்சி, இப்படியாக மொழிப்பெயர்க்கப்படுவதற்குச் சிலர் ஒத்துக்கொள்ளவில்லை.

இறுதியாக இந்த வாக்குவாதத்தை முடித்துவைப்பதற்கான சமாதான ஏற்பாடாக, நமது பொது **(common)** மொழியாக்கத்தில் எங்கெல்லாம் ஷீயோல் என்ற வார்த்தையும் மற்றும் அதற்கு இணையான கிரேக்க வார்த்தையாகிய ஹேடிசும், **hell** என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் எபிரெய வார்த்தையான ஷீயோல் (அ) கிரேக்க வார்த்தையான ஹேடிசுக்கும் மாற்று வார்த்தை போடப்பட்டு, மொழிப்பெயர்க்காமல் விட்டுவிடப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது; ஒருவேளை ஏதேனும் ஜனங்கள் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பார்களானால், பரவாயில்லை. ஒருவேளை எவரும் கண்டுபிடிக்கவில்லையெனில், அவர்கள் அறியாமையிலேயே இருந்து, ஷீயோல் மற்றும் ஹேடிஸ் என்பது சித்திரவதை ஸ்தலத்தைக் குறிப்பதாகவே எண்ணிக் கொண்டிருக்கட்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. நமது பேப்டிஸ்ட் **(Baptist)** நண்பர்கள் சமீபத்தில் இதைப்போன்றதான சிரமத்தைச் சந்தித்தவர்களாகக் காணப்பட்டு, ஷீயோல் மற்றும் ஹேடிசை (கீழ் உலகம்) **"under world"** என்று மொழிப்பெயர்த்தனர். ஆம் இந்த வார்த்தையானது பாதாளத்தை, கல்லறையை, மரண நிலைமையைச் சுட்டிக்காட்டுவதாகத்தான் உள்ளது மற்றும் இவ்வார்த்தையில் எவரும் குற்றமும் கண்டுபிடிக்க முடியாது.

யாக்கோபு தனது நரைமயிர்கள், பாதாளத்திற்கு (ஷீயோலுக்கு) இறங்குவதாகக் கூறினபோது, தான் நித்தியமான சித்திரவதைக்குள் போவதாக தனது குமாரர்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனும் அர்த்தத்தில் கூறவில்லை என்பதை நாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்பது தெளிவாய் உள்ளது. அவர் பின்வரும் அர்த்தத்தில் கூறினார்: அதாவது, "**என் குமாரர்களே, எனக்கு இப்பொழுது மிகவும் வயதாகிவிட்டது மற்றும் தலைமயிர் நரைத்துவிட்டது, மற்றும் நான் என்னுடைய இந்த இளைய குமாரனையும் இழப்பது என்பது, என்னுடைய மரணத்தைத் துரிதப்படுத்துகின்றதாய் இருக்கும்; அதாவது என் நரைமயிர்களை ஷீயோலுக்கு, கல்லறைக்குக்கொண்டு செல்வதாக இருக்கும்**" என்பதேயாகும். யாக்கோபினுடைய நரைமயிர்கள் எங்கே செல்லும் என்று யாரும் கேள்வி கேட்க அவசியமில்லை. யாக்கோபின் நரைமயிர்கள் இறுதியில் ஷீயோலுக்குச் சென்றன, ஆயினும் துக்கத்தின் காரணமாக அல்ல. யாக்கோபினுடைய முதிர்வயதானது, அவரது குமாரர்களுடனான ஐக்கியத்தின் காரணமாகவும், யோசேப்பைத் தேவன் எகிப்தினுடைய அதிபதியாக மிகவும் உயர்வாய் உயர்த்தி வைத்துள்ளார் என்ற உணர்ந்துகொள்ளுதலின் காரணமாகவும் மிகவும் மகிழ்வுடன் காணப்பட்டது.

## "நம்முடைய ஆதார வசனத்தினுடைய படிப்பினை"

பரிசுத்தவானாகிய பவுல், நாம் இதுவரை பார்த்து வந்துள்ளதான பொதுவான கண்ணோட்டத்தை, அதாவது ஒரு மனுஷன் எதை விதைப்பானோ, அதையே அவன் அறுப்பான் என்பதை முன்வைத்திருந்தபோதிலும், இவ்வார்த்தைகளை அவர் குறிப்பாய்ச் சபையினுடைய அனுபவங்கள் தொடர்புடையதாகவே பயன்படுத்தியுள்ளார் என்பது நிச்சயமே. இவ்வசனத்தினுடைய முன், பின் பாகங்கள் சபைக்கே பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தின் முன், பின் பாகங்களானது தேவனுடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்களுக்கு நேரடியாகப் பொருந்துகின்றதாய்க் காணப்பட்டு, கிறிஸ்துவுடன் மரிப்பதற்கான அர்ப்பணம் பண்ணுதல் மாத்திரம் போதாது என்று அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் என்றும், தேவனை ஏமாற்ற முடியாது என்றும், தேவனிடத்தில்

விளையாட முடியாது என்றும் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவன் நம்முடன் உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருக்கின்றாரெனில், நாமும் அதற்கு உடன்பட்டிருப்பதே ஏற்புடையதாகும்.

கர்த்தரோடு கிறிஸ்தவர்கள் பண்ணியுள்ள உடன்படிக்கையினை அப்போஸ்தலன் விவரிக்கின்றார். கிறிஸ்தவர்கள் தாங்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவும் காணப்படுவதற்கு ஏதுவாயும் மற்றும் ஆவியின் ஜீவிகளென, கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளெனத் திரைக்கு அந்தப் பக்கத்தில் அடையப்பெறும் அழியாக் காரியங்களில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாகுவதற்கு ஏதுவாயும், அனைத்துப் பூமிக்குரிய விஷயங்களையும், நம்பிக்கைகளையும், இலட்சியங்களையும் பலிச்செலுத்திடுவதற்கு உடன்படிக்கைப் பண்ணியுள்ளனர். "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்" என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகின்றார். ஆகையால் மாம்சத்தினுடைய சித்தத்திற்கென்று மரிப்பதற்கும், மற்றும் தேவனுடைய சித்தத்திற்கென்று பிழைப்பதற்கும் என்று தேவனுடன் இந்த உடன்படிக்கைக்குள் பிரவேசித்துள்ள ஒரு கிறிஸ்தவன், மாம்சத்தின்படி ஜீவிப்பானானால், அதாவது மாம்சத்தினுடைய விருப்பங்களுக்கும், அதன் தூண்டுதல்களுக்கும், அதன் வழிநடத்துதல்களுக்கும், அதன் ஆசைகளுக்கும் இசைவாக ஜீவிப்பானானால், அந்த மனிதனுடைய வழியின் முடிவானது மரணம், அதாவது எருசலேம் நகரத்திற்கு வெளியே கழிவுப்பொருட்களை அழித்துப்போடுகின்றதான கெஹன்னா நெருப்பினால் அடையாளப்படுத்தப்படும் இரண்டாம் மரணமாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் விவரிக்கின்றார்.

ஆனால் ஒரு மனிதன் ஆவிக்கென்று விதைத்தால், சரியான திசையை நோக்கின ஆரம்பத்தை மாத்திரம் எடுக்காமல், தனது அர்ப்பணத்தின் உடன்படிக்கைக்கு இசைவாக ஜீவிப்பதின் மூலமாக புதுச் சிருஷ்டிக்கு ஏற்றபடி ஜீவித்தானானால், இதற்கேற்ப அறுப்பவனாய் இருப்பான். இதுவரையிலும் வாழ்ந்ததிலேயே சிறந்த தேவ ஜனங்களாகக் காணப்பட்டவர்களில் சிலர், மாம்சத்தினுடைய சோதனையின் கீழ் ஏறக்குறைய கடுமையான பிழைகளைச் செய்திருக்கின்றனர். ஆனால் பாவத்திற்குள் இடறிவிழுதல் என்பது மாம்சத்திற்கேற்ப ஜீவித்தலாகாது; இது மாம்சத்திற்கேற்ப ஜீவித்தலுக்கான ஆரம்பமாக மாத்திரமே காணப்படும். தனது பாவம் மற்றும் பெலவீனம் காரணமான அனுபவங்களைச் சரியாய்ப் பெற்றுக்கொள்கின்றதான ஆத்துமாவானது, குணமடைந்து, பரலோகக் கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குத் திரும்பி, இயேசுவின் நாமத்தில் இரக்கத்தை அடைந்து மற்றும் எதிர்க்காலத்தின் போதான, தேவைக்குக் கிருபையைக் கண்டடைகின்றதாய் இருக்கும். ஆனால் இந்த வாய்ப்புகளும், சிலாக்கியங்களும் பயன்படுத்தப்படவில்லையெனில், மற்றும் மாம்சத்திற்கேற்ற ஜீவிய போக்கானது தொடரப்படுமாகில், விளைவு மரணமாகவே இருக்கும்.

ஆகையால் நீதியாய் ஜீவிப்பதற்கும், சுயத்தைப் பலிச் செலுத்தும் ஜீவியம் ஜீவிப்பதற்கும் ஆரம்பிப்பது மாத்திரம் போதாது; ஒரு தவறு செய்த பிற்பாடு நீதியான பாதைக்கு நேராய்த் திரும்புவது என்பதும், மனம் வருத்தத்திற்கான சில கண்ணீர்களைச் சிந்துவது என்பதும் மாத்திரம், ஒருவர் குணமடைவதற்குப் போதாது. ஆனால் நாம் ஆவிக்கேற்றப்படி ஜீவித்து, ஆவியினால் மாம்சத்தின் கிரியைகளை அழித்துப்போடுவோமானால், அப்பொழுது நாம், உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ளதான நித்திய ஜீவனை அடையலாம். ஆவிக்கேற்றப்படி ஜீவிப்பது என்பது ஒரு மாபெரும் ஒப்பந்தமாகும் மற்றும் நாம் தவறில் விழுந்துவிடாதபடிக்கும், தேவனுடைய வாக்குத்தத்திலுள்ள இந்த விலையேறப் பெற்றவைகளை நாம் நழுவ விட்டுவிடாதபடிக்கும், இந்தத் தற்கால ஜீவியத்தின் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் அமிழப்பட்டுப்போகாதபடிக்கும், நம்முடைய விசுவாசம் பெலவீனமடைந்து, நாம் வழியிலே வலுவிழந்து போகாதபடிக்கும், காணப்படத்தக்கதாக தொடர்ச்சியான விழிப்பும், ஜெபமும் அவசியப்படுகின்றதான ஓர் ஒப்பந்தமாகும்.

பின்வரும் எண்ணத்தை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் தெளிவாய்க் கொண்டிருப்பது அவசியமாகும்; அதாவது ஒவ்வொரு கிரியையும், வார்த்தையும், சிந்தனையும், ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தின், இறுதி விளைவுகள் மீது அதன் தாக்கத்தை கொண்டிருந்தாலும், எந்த ஒரு கிரியையும், எந்த ஒரு வார்த்தையும், எந்த ஒரு சிந்தனையும் மாத்திரமே நன்மைக்கு ஏதுவானதையோ (அ) தீமைக்கு ஏதுவானதையோ தீர்மானிக்க காரணமாய் அமைந்துவிடாது. நாம் எந்தளவுக்கு நேர்மையாய்க் காணப்படுகின்றோமோ, எந்தளவுக்கு உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுகின்றோமோ, அப்போது நாம் குறைவான இடறிவிழுதல்களை

உடையவர்களாய் இருப்போம் மற்றும், நம்முடைய மீட்பரைப்போன்று அதிகமாய்க் காணப்படுவோம் மற்றும் நம்முடைய பலனும் பிரகாசமானதாய்க் காணப்படும், ஏனெனில், "மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

உலகத்தார் தங்கள் ஒவ்வொரு நன்மை மற்றும் ஒவ்வொரு தீமையான கிரியைகளானது, மேசியாவின் இராஜ்யத்தினுடைய ஒழுங்குகளின் கீழான ஜீவன் (அ) மரணத்திற்கான தங்களது பரீட்சைத் தொடர்புடைய விஷயத்தில் தாக்கம்கொண்டிருப்பதை அக்காலத்தில் அறிந்துகொள்வார்கள். கிறிஸ்துவோடுகூடப் பிழைக்கத்தக்கதாகவும், கிறிஸ்துவுடன் மரிக்கத்தக்கதாகவும், அவரோடுகூடப் பாடுபடத்தக்கதாகவும், உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும், தனது ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு கிரியையும், மாபெரும் விளைவுகளுடன் சம்பந்தம் உடையதாய்க் காணப்படுகின்றது என்பதை அறிந்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, இவர்கள் தேவனுக்குப் பிரியமானவைகளை அறிய நாடுவதற்கும், அவைகளைச் செய்திடுவதற்கும் மற்றும் உயர்வான பலனை அடைந்திடுவதற்குமென்று, ஞானத்துடனும், கவனத்துடனும், ஜீவியத்தில் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

ஆமென்!

---

R 5231

# "பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு"
## ஆதியாகமம் 43

"தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்."
—1 யோவான் 2:10

எகிப்திலிருந்து வாங்கிவந்த தானியங்கள் தீர்ந்து போய்க்கொண்டிருக்கையில், தானியங்களை இன்னுமாக வாங்கிவரும்படிக்கு, யாக்கோபு தனது குமாரர்களை வற்புறுத்தினார். ஆனால் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீன் தங்களோடுகூட வராததுவரையிலும், தங்களால் போகமுடியாது என்று அவர்கள் உறுதியாய் மறுத்துவிட்டனர். சகோதரர்களில் ஒருவராகிய யூதா, பென்யமீனுக்கு உத்தரவாதமானார். இறுதியில் யாக்கோபு சம்மதித்து, "அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் (சிமியோனையும்), பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப்பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப்போனவனைப்போல் இருப்பேன்" என்று கூறி, அவர்களோடுகூடத் தேன், கந்தவர்க்கங்கள் முதலான காணிக்கைகளையும், இரட்டிப்பாய்ப் பணத்தையும் மற்றும் பென்யமீனையும் அனுப்பிவைத்தார் (ஆதியாகமம் 43:14).

அவர்களை மீண்டுமாக எதிர்ப்பார்த்தவராக யோசேப்பு காணப்பட்டார் மற்றும் இம்முறை தன்னுடைய சமுகத்திற்கு முன்பாக அவர்களுக்கு விருந்து பரிமாறும்படிக்குக் கட்டளையிட்டிருந்தார். அவர்களோ பயத்தில் காணப்பட்டார்கள், ஏனெனில் அவர்கள் முன்பு வந்துபோனபோது, அவரவர் பணம், அவரவர் சாக்கின் வாயில் வைக்கப்பட்டிருந்தது. யோசேப்பினுடைய வீட்டின் வாசற்படியில், அவர்கள் வந்து யோசேப்பினுடைய விசாரணைக்காரனைத் தொடர்புகொண்டபோது, அவர்கள் இக்காலங்களில் எகிப்தில் (அ) வேறு தேசங்களில் அநேகமாகக் கொடுக்கப்படும் பதிலில் இருந்து, மிகவும் வித்தியாசமான ஒரு பதிலைப் பெற்றுக்கொண்டார்கள்; அதாவது "அதற்கு அவன்: உங்களுக்குச் சமாதானம்; பயப்படவேண்டாம்; உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது என்று சொல்லி, சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விட்டான்" (ஆதியாகமம் 43:23). பின்பு விசாரணைக்காரன் அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளும்படிக்கும், புத்துணர்வு அடையும்படிக்கும் அவர்களுக்குத் தண்ணீரும், அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனமும் கொடுத்து, அவர்களுக்கு மதிய உணவை ஆயத்தம் பண்ணினான்.

யோசேப்பு எகிப்திய பிரபு என வஸ்திரம் தரித்தவராக உள்ளே வந்தார். அவர்கள் தரைமட்டும் குனிந்து, வணங்கி, காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவர்களது தகப்பன் குறித்தும், அவர்களது இளைய சகோதரனாகிய பென்யமீன் குறித்தும் யோசேப்பு அன்பாய் விசாரித்தார். அவர் மிகவும் ஆழமான உணர்ச்சி வசத்திற்கு உள்ளானப்படியால், சந்தோஷத்தின் கண்ணீர்களைச் சிந்தும்படிக்கு, அவர் கொஞ்சம் நேரம் தனியே போவதற்கான கட்டாயத்திற்குள்ளானார். தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவராக, திரும்பிவந்தார் மற்றும் போஜனம் தொடர்ந்தது. யோசேப்பின் பதினொரு சகோதரர்களும் அவரவரின் வயதின்படி அமர்த்தப்படும்படிக்கு ஏற்கெனவே கட்டளையிட்டிருந்த பிரகாரம் அமர்த்தப்பட்டிருந்தனர் மற்றும் தனது தனி மேஜையிலிருந்து யோசேப்பு தனது பதினொரு சகோதரர்களுக்கும் போஜனத்தைப் பங்கிட்டு அனுப்பினார். இப்படியாக தாங்கள் அமர்த்தப் பண்ணப்பட்டிருப்பதினிமித்தம் அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள் மற்றும் போஜனத்தில் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனுக்கு ஒரு பங்கு கிடைப்பதற்குப் பதிலாக, ஐந்து மடங்கு பங்கு, விசேஷித்த தயவிற்கு/அன்பிற்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டதைக் கண்டு, இன்னும் அதிகம் ஆச்சரியமடைந்தார்கள்.

குழந்தைகளுக்கும், முதிர்ச்சியடைந்த மனமுடையவர்களுக்கும் இக்கதையானது மிகவும் எளிமையானதாகவும், மிகவும் உருக்கமானதாகவும், மிகவும் அருமையானதாகவும் காணப்படுகின்றது. கதை அமைப்பானது, உண்மை நிகழ்வு என்று உறுதிப்படுத்துமளவுக்கு மிகவும் இயற்கையாகவும் மற்றும் தேவனுடைய புத்தகத்தில் ஒருவர் எதிர்ப்பார்க்கக்கூடியவைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுமளவுக்கு மிகவும் வஞ்சனையற்றதாகவும் அமைந்துள்ளது.

## ‘‘கற்பிக்கப்பட்ட ஆவிக்குரிய பாடம்’’

மேசியாவிற்கு யோசேப்பு நிழலாகக் காணப்படுகின்றார் என்று உணர்ந்துள்ள வேதமாணவர்கள், ஒரே தாய்க்குப் பிறந்தவரும், யோசேப்பினுடைய இளைய சகோதரனாகவும் காணப்படுகின்றவருமான பென்யமீனும், ஒரு நிழலாக இருக்கின்றார் என்று கருதுகின்றனர். ஆபிரகாமின் மனைவிகள் பல்வேறு உடன்படிக்கைகளுக்கு நிழலாய் இருக்கின்றதுபோல, யோசேப்பு மற்றும் பென்யமீனுடைய தாயாகிய ராகேலும், பலியின் உடன்படிக்கையாகிய விசேஷித்த உடன்படிக்கைக்கு நிழலாய் இருக்கின்றாள் என்று வேதமாணவர்கள் கருதுகின்றனர்; இந்தப் பலியின் உடன்படிக்கையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் செயல்படுகின்றதாகவும், இரண்டு வெவ்வேறான பரிசுத்தவான்கள் அடங்கின வகுப்பினர்களைக் கொண்டுவருகின்றதாகவும் காணப்படுகின்றது. பரிசுத்தவான்கள் அடங்கின இந்த இரண்டு வகுப்பார்களுக்கு யோசேப்பு மற்றும் பென்யமீன் நிழலாய்க் காணப்படுகின்றனர்.

மேசியாவாகிய இந்த உயர்ந்த வகுப்பினர் யோசேப்பில் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; இவ்வகுப்பினர் இந்தச் சுவிசேஷ யுகத்தின் உண்மையுள்ள தேவனுடைய ஜனங்களை உள்ளடக்கினவர்களாகக் காணப்படுகின்றனர்; அதாவது இயேசு மற்றும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்கள் அனைவரையும் உள்ளடக்கின வகுப்பினராகும். யோசேப்பைப் போன்று, இந்த வகுப்பினர் இறுதியில் சாம்ராஜ்யத்தின் சிங்காசனத்தை அடைந்து, பார்வோன் அடையாளப்படுத்தும் சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு அடுத்த நிலையில், அண்டசராசரத்தின் இராஜாவாகுவார்கள். இந்தப் பார்வோனே யோசேப்பை மரணம் எனும் சிறைச்சாலையிலிருந்து வெளியே எடுத்து, வல்லமையிலும், மகா மகிமையிலும், தனக்கடுத்த நிலையில் உயர்த்தி வைத்தார்.

பரிசுத்தவான்களாகிய கிறிஸ்தவர்களை உள்ளடக்கின இந்த இரண்டு வகுப்பாரும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றும், மேலான வகுப்பார் யோசேப்பினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் மற்றும் கீழான வகுப்பார் பென்யமீனால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் என்றும் சமீபக் காலங்கள் வரைக்கும், வேதத்தின் மாணவர்கள் அறியாதவர்களாகவே காணப்பட்டனர். பென்யமீன் எனும் பெயருடைய அர்த்தம் ‘‘என் வலது கரத்தின் மகன்’’ என்பதாகும். பெனொனி என்ற பெயரானது, அவரைப் பெற்றெடுக்கையில் மரித்துப்போன அவரது தாயார் சூட்டின பெயராகும் மற்றும் இதன் அர்த்தம், ‘‘என் உபத்திரவத்தின் மகன்’’ என்பதாகும்.

ராகேல் நிழலாய்க் காணப்படுகின்ற இந்த விசேஷமான உடன்படிக்கையானது, இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள தெரிந்துகொள்ளப்பட்ட சபையாகிய மேசியாவைப் பெற்றெடுப்பதும், மற்றும் இன்னொரு வகுப்பாரைப் பெற்றெடுப்பதும் மற்றும் அதன் பிற்பாடு இல்லாமல் போவதை, அதாவது பிள்ளைப் பெற்றெடுக்காமல் இருப்பதும், இங்குள்ள நிஜமான பாடமாகக் காணப்படுகின்றது. இரண்டாவது வகுப்பார் உபத்திரவப்படும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர் மற்றும் இவர்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு முன்னதாக, ‘‘மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருவார்கள்’’ என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக இந்த வகுப்பார் யோசேப்பு நிழல்படுத்தும் அதிக கனமுடைய வகுப்பாரைக் காட்டிலும், மிகவும் அதிகமான எண்ணிக்கையுடையவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘‘சிறு மந்தை’’--‘‘திரள் கூட்டம்’’

இந்தக் கண்ணோட்டத்தைத் தெளிவாக முன்வைப்பதற்கு நாம் வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தை மேற்கோள் காட்டுகின்றோம். இங்குத் தங்கள் நெற்றிகளில் முத்திரிக்கப்பட்டவர்களென 1,44,000 பேர் காணப்படும் காட்சி ஒன்று கொடுக்கப்படுகின்றது. இவர்களும், வேறொரு இடத்தில் சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்பவர்களாகவும், வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாமல், தாங்கள் மாத்திரமே பாடமுடிந்தவர்களாகவும் காணப்படுகின்றவர்களும் ஒரே வகுப்பாரே ஆவர் (வெளிப்படுத்தல் 14:1-3). இன்னுமாக இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடன், கண்ணாடிக்கடலின்மேல் நிற்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்

(வெளிப்படுத்தல் 15:2,3). இப்படியாக பல்வேறு விதங்களில் இந்த வகுப்பார் உண்மையுள்ளவர்களும், பரிசுத்தவான்களுமான சிறு மந்தையுமானவர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்; இந்தச் சிறு மந்தையினருக்கே, அதாவது தங்கள் கர்த்தரும், மீட்பருமானவருடன் உடன் சுதந்தரர்களாய் இருக்கப்போகிறவர்களுக்கே, பிதா ஆயிர வருட இராஜ்யத்தைக்கொடுக்க பிரியமாய் இருக்கின்றார்.

வெளிப்படுத்தல் 7:4-இல் இவர்கள் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்தும், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து பன்னீராயிரம் பேர் வருபவர்களாய் இருக்கின்றனர் எனவும் நாம் வாசிக்கின்றோம். இதன் அர்த்தமாவது, மாம்சீக இஸ்ரயேலர்கள் கர்த்தரைப் புறக்கணித்து, அவரைச் சிலுவையில் அறைந்துபோடுவார்கள் என்பதைத் தேவன் ஏதோ அறிந்திராதவர் போன்று, அவர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழு எண்ணிக்கையானவர்களும் மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலிருந்து எடுக்கும்படிக்கு ஆதியிலேயே அவர் திட்டம் பண்ணியிருந்தார் என்பதாக இருக்கின்றது என்று வேதமாணவர்கள் புரிந்துகொண்டுள்ளனர். இஸ்ரயேலானது பிரதான ஆசீர்வாதத்தை அடையாது என்றும், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அதை அடைவார்கள் என்றும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சேர்க்கப்படுவது நிறைவேறுவது வரையிலும் மீதமான இஸ்ரயேல் தேசத்தார் தற்காலிகமாகக் குருடாக்கப்பட்ட நிலையில் காணப்படுவார்கள் என்றும் தேவன் முன்னமே அறிந்திருந்தபோதிலும், இஸ்ரயேலரை அடிப்படையாகக் கொண்டே திட்டம் போடப்பட்டது (ரோமர் 11:7, 25-33).

இஸ்ரயேலர்களில் அநேகர் சுற்றியுள்ள தேசங்களில் சிதறிக்காணப்பட்டாலும், அவர்கள் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பினப்பிற்பாடு, அனைத்துக் கோத்திரமும், அதாவது முழுத்தேசமும், பாலஸ்தீனியாவினால் அடையாளப்படுத்தப்படுகின்றது என்பது வேதவாக்கியங்களுடைய பதிவுகளிலிருந்து உறுதியாய்த் தெரிகின்றது. ஆகவே இயேசு தம்முடைய வேலை, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்காகக் காணப்பட்டது என்று குறிப்பிட்டார் மற்றும் அப்போஸ்தலர்களும் இப்படியாகவே குறிப்பிட்டார்கள். அழைப்பைக் கேட்டு, அதற்கு செவிக்கொடுத்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகவும், தேவனுடைய புத்திரர்களாகவுமான யூத பரிசுத்தவான்கள் பல்வேறு கோத்திரங்களிலிருந்து வந்தவர்களாகவும், சில கோத்திரங்களிலிருந்து அதிகமாயும் மற்றும் சில கோத்திரங்களிலிருந்து கொஞ்சமாயும் வந்தவர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் முன்குறிக்கப்பட்ட 1,44,000 பேரில், அநேகராய்க் காணப்பட்டனர்.

ஆனாலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழுமையான எண்ணிக்கை நிறைவடைவதற்குப் போதுமான பரிசுத்தவான்கள் இல்லை. ஆகவே தெய்வீகக் கிருபையினால் செய்தியானது, புறஜாதிகளினிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது; கொர்நேலியு எனும் புறஜாதியே, முதலாவது கிறிஸ்தவராக மாறினார். இடைப்பட்ட நூற்றாண்டுகளில் தேவனுடைய அழைப்பிற்குச் செவிக்கொடுத்த புறஜாதிகள், ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, உத்தம இஸ்ரயேலர்களென, ஆபிரகாமினுடைய சந்ததியின் ஆவிக்குரிய அங்கத்தினர்களென, தேவனால் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு ஏற்ப முதலாம் உயிர்த்தெழுதலுக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களுடன் சுதந்தரர்களெனக் கருதப்பட்டனர்; மாம்சீக இஸ்ரயேலர்கள் இன்னமும் தேவனுடைய அடுத்த வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளிகளாகவே காணப்படுகின்றனர்.

இப்படியாகவே தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முத்திரையிடுதலானது கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றது. யூதர்கள் மற்றும் புறஜாதியார்களிடமிருந்து ஒட்டுமொத்தமாக 1,44,000 பேர், தேவனுக்கான ஆசாரியர்களாகவும் மற்றும் இராஜாக்களாகவும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்களாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடனான உடன் சுதந்தரர்களாகவும் காணப்படுவார்கள். பன்னிரண்டு கோத்திரங்களிலுள்ள ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 12,000 பேர் இந்தப் பணிக்கென்று நியமிக்கப்படுதலானது, இந்தியாவில் பிரிட்டிஷ் படைப்பிரிவுக்கான வீரர்கள் தேர்வுச் செய்யப்படும் விதத்திற்கு ஒத்த தேர்ந்தெடுக்கப்படுதலாய் இருக்கும் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். இதற்கான பெயர்ப்பதிவு மாபிரிட்டனிலிருந்து முழுவதுமாக நடைபெறுகிறது, ஆயினும் பெயர்ப்பதிவு செய்யப்பட்டவர் - அவர் எந்த நகரம் (அ) தேசம் என்ற பாகுபாடில்லாமல் - எந்தப் படைப்பிரிவில் எண்ணிக்கைக் குறைவாக உள்ளதோ, அதில் அங்கத்தினராக இணைக்கப்படலாம்.

## "இவைகளுக்குப் பின்பு நான் பார்த்தபோது"

உண்மையுள்ளவர்களாகிய 1,44,000 பேர் முத்திரையிடப்பட்ட சம்பவம் பற்றின பதிவிற்குப் பிறகு, அதே அதிகாரத்தில் திரள்கூட்டம் குறித்தும் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான (சிறுமந்தையினர் போன்று எண்ணிக்கையின் விஷயத்தில் முன்குறிக்கப்படாத) திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வெளிப்படுத்தல் 7:9, 10).

தெரிந்துகொள்ளப்பட்ட இராஜாக்களும், ஆசாரியர்களுமானவர்களுக்கான வாக்குத்தத்தமானது, சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் ஆசீர்வாதமாக இராமல், மாறாக சிங்காசனத்தில் இருக்கும் ஆசீர்வாதமாக இருப்பது பற்றியதாகவே காணப்படுகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டும். இன்னுமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஜெயங்கொள்ளுதலானது குருத்தோலைகளின் மூலமாகக் காண்பிக்கப்படாமல், மாறாக மகிமையின் கிரீடத்தினால் காண்பிக்கப்படுகின்றது. இவைகளனைத்தும் குருத்தோலைப் பிடித்தவர்களாகச் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் இந்தத் திரளான கூட்டத்தினர், மேசியாவின் சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடையும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய, மணவாட்டி வகுப்பாரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்தத் திரள்கூட்டத்தினர் வேறொரு இடத்தில் அடையாள வார்த்தையில் "கன்னிகைகள்" என்றும், மணவாட்டியின் பின்செல்லும் மணவாட்டியினுடைய தோழிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் மணவாட்டியுடன் அரமனைக்குள், மகா இராஜாவின் சமுகத்தில் செல்வார்கள், ஆனால் இவர்கள் மணவாட்டிகளாகக் காணப்படுவதில்லை (சங்கீதம் 45:14, 15).

இந்தத் திரள் கூட்டத்தினரைக் குறித்து வெளிப்படுத்துபவராகிய யோவானுக்கு விவரிக்கப்பட்டது; "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 7:14, 15).

இங்குச் சிறு மந்தையினர் "தேவனுடைய ஆலயம்" என்றும், ஜீவனுள்ள கற்கள் என்றும் குறிப்பிடப்படுவதையும், இந்தத் திரள் கூட்டத்தினரோ அந்த ஆலயத்தில், அதாவது சபைக்குள்ளாகவும் மற்றும் சபையின் மூலமும் தேவனுக்கு ஊழியஞ்செய்வார்கள் என்றும் குறிப்பிடப்படுவதையும் வேதமாணவர்கள் கவனிக்கின்றனர். மகா உபத்திரவத்தின் காலத்தில், தங்களது வஸ்திரத்தை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தோய்த்து வெளுக்கும் இந்த வகுப்பார், மணவாட்டியிடமிருந்து வேறுபட்ட வகுப்பினராகவே கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பதையும் வேதமாணவர்கள் கவனிக்கின்றனர், ஏனெனில் மணவாட்டிகளோ, இராஜாவின் முன்னிலையில் கறைதிறையற்றவர்களாக தாங்கள் நிற்கத்தக்கதாக, தங்கள் வஸ்திரங்கள் உலகத்தினால் கறைப்படாதபடிக்குக் காத்துக்கொள்பவர்களாகவும், விழிப்பாய் இருப்பவர்களாகவும் இருப்பார்களென விவரிக்கப்பட்டுள்ளது.

## "உபத்திரவப்படும் இரண்டு வகுப்பார்"

கிறிஸ்துவைத் தலையாகப் பெற்றுள்ள சிறு மந்தையினர், அதாவது இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினர், அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது நிச்சயமாய் உபத்திரவங்களின் வழியாகவே செல்கின்றவர்களாய் இருப்பார்கள். ஆகவேதான் அவர்களைக் குறித்து, "அநேக உபத்திரவங்களின் வழியாய் இராஜ்யத்தில் நீங்கள் பிரவேசிக்க வேண்டுமென்று" எழுதப்பட்டுள்ளது. கர்த்தர்கூட மிகுதியான உபத்திரவங்கள், அவமானம், பாடுகள் மற்றும்

மரணத்தின் ஊடாய்க் கடந்து சென்றார் என்று நாம் அறிவோம். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களாகிய அப்போஸ்தலர்கள் மற்றும் மற்றவர்களின் விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது என்பதையும் நாம் அறிவோம்.

எனினும் இவர்கள் வேதத்தில் உபத்திரவப்படும் வகுப்பார் என்று விவரிக்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்களது மகா விசுவாசத்தின் காரணமாக, இவர்கள் தங்களுடைய உபத்திரவங்களில் களிக்கூருவதற்கு முடிகின்றவர்களாகவும், இந்த உபத்திரவங்கள் அனைத்தும் மகா மேன்மையான நித்திய கன மகிமையை உண்டுபண்ணுகிறதை அறிந்து, உபத்திரவங்களை மகிழ்ச்சியுடன் கருதிக்கொள்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் உபத்திரவங்கள் மத்தியில் மகிழ்ச்சியுடன் கடந்து செல்கின்றனர், ஏனெனில் காண்கிறவைகள் அனைத்தும் தற்காலிகமானவைகள் என்று இவர்கள் கருதிக்கொள்கின்றனர். தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அவர் வைத்துள்ள நித்தியமானவைகளை, கண்கள் காணாதவைகளை இவர்கள் விசுவாசத்தின் கண்கள் மூலம் பார்க்கின்றனர்.

உபத்திரவப்படுகின்ற பரிசுத்தவான்கள் (திரள் கூட்டத்தினர்) தங்கள் நேர்மையில் குறைவுபட்டவர்களாய் இராமல், தங்கள் வைராக்கியத்தின் விஷயத்தில் குறைவுப்பட்டவர்களாய் இருப்பார்களென வேதவாக்கியங்களில் பல்வேறு விதங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இந்த உபத்திரவப்படுகின்ற பரிசுத்தவான்களானவர்கள் பலிக்கான தங்கள் வாக்குறுதிகளில் முன்னேறிச் சென்று நிறைவேற்றிடுவதற்குத் தவறிவிடுகின்றவர்களாகவும், உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிரான யுத்தத்தில் வீரர்களாய் இருப்பதற்குத் தவறிவிடுகின்றவர்களாகவும் காணப்படுவார்கள். "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளாகுதல்" என்று வேதவாக்கியங்கள் கூறுவதுபோன்று இவர்கள் தாங்கள் பண்ணின உடன்படிக்கைத் தொடர்புடையதான பலியின் அனுபவங்கள் குறித்து அச்சங்கொண்டவர்களாக, மாம்சத்திற்கும், சமுதாயத்தின் வழக்கங்களுக்கும் அடிமைத்தனத்திற்குள்ளானவர்களாகக் காணப்படுவார்கள் (எபிரெயர் 2:15).

இந்தக் காரணத்தினிமித்தமாக, இவர்கள் தேவனால், அவரது நேசகுமாரனுடைய சாயலை உடையவர்களாகவும், குமாரனுடைய கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகவும் ஏற்றுக்கொள்ளபட முடியாது. எனினும் கர்த்தர் மிகவும் இரக்கமுடையவராகக் காணப்பட்டு, தம்மிடத்திலான இவர்களது நேர்மையைக்குறித்துப் பரீட்சிக்கின்றவராய் இருப்பார். இவர்களில் அநேகர் இறுதியில் உண்மையுள்ளவர்கள் என்றும், நேர்மையுள்ளவர்கள் என்றும் நிரூபிக்கப்படும்போது, இவர்கள் தாங்கள் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கென அழைக்கப்பட்ட, அந்த உடன்சுதந்தரத்தை இழந்துபோனாலுங்கூட, இவர்கள் நித்திய ஜீவன் அருளப்படும்படிக்கு, கர்த்தர் செய்வார். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே, நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" (எபேசியர் 4:4).

இந்த வகுப்பார் (திரள் கூட்டத்தினர்) சுவிசேஷ யுகம் முழுவதும் உருவாகிக் காணப்பட்டாலும், இந்த யுகத்தினுடைய முடிவின்போது, உலகத்தின்மீது வரவிருக்கின்ற உபத்திரவக் காலம் தொடர்புபடுத்தியே இந்த வகுப்பார் விசேஷமாய் வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டனர். உதாரணத்திற்கு, இவர்கள் (திரள் கூட்டத்தினர்) மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளார். பொன்னினாலும், வெள்ளியினாலும், விலையேறப்பெற்ற கற்களினாலும் கட்டியிருப்பவர்கள் (சபை) பரீட்சையில் நிலைநிற்பார்கள் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார்; மேலும் இப்படியாகக் கட்டியிருப்பவர்களின் விஷயத்தில், அந்நாளின் அக்கினியானது, அவர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுக்காது, அதாவது அவர்களது விசுவாச கட்டிடத்தை அழித்துப்போடாது. பின்னர் பவுல் திரள் கூட்டத்தினரை விவரிக்கும் விதத்தில், மற்றவர்கள் மரம், புல், வைக்கோல் முதலியவற்றால் சரியற்ற நிலையில் கட்டியிருக்கின்றார்கள் என்றும், அந்நாளின் அக்கினியானது, இப்படியான சரியற்ற வேலைப்பாடுகள் அனைத்தையும் முற்றிலும் அழித்துப்போடும் என்றும் கூறியுள்ளார். இப்படியாக உண்மையான அஸ்திபாரத்தின் மீது, சரியற்ற விதத்தில் அவர்கள் கட்டியிருந்தாலும், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், அதுவும் அக்கினியில் அகப்பட்டுத்தப்பினது போலிருக்கும் என்று குறிப்பிடுகின்றார்; அதாவது மகா உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக, மகா உபத்திரவத்தின் மூலம் தேவனுடைய தயவைப் பெற்றுக்கொள்பவர்களாக மற்றும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையவில்லையென்றாலும், நல்லதொரு உயிர்த்தெழுதலில் பங்கடைபவர்களாக இருப்பார்கள் என்ற விதத்தில் குறிப்பிடுகின்றார்.

ஏனெனில் "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (வெளிப்படுத்தல் 20:6).

## "பென்யமீனுடைய ஐந்து மடங்கு பங்கு"

யோசேப்பு தனது வெகுமதிகளை வழங்கும்போது, தனது சகோதரர்கள் அனைவருக்கும் அதிகமாய்க் கொடுத்தார். ஆனால் தனது தாயின் குமாரனாகிய, தனது சொந்த சகோதரனான பென்யமீனுக்கு, யோசேப்பு ஐந்துமடங்கு பங்குகொடுத்தார். யோசேப்பு, மேசியாவிற்கும், அவரது இராஜரிக வல்லமைக்கும், மகிமைக்கும் நிழலாய் இருப்பது தெளிவாய்த் தெரிகின்றபடியால் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கு வழங்கின ஆசீர்வாதங்களானது, மேசியா, மாம்ச பிரகாரமான தமது சகோதரர்களாகிய மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது அருளும் கடாட்சங்களைக் குறிக்கின்றது. அதாவது எகிப்தியர்கள் அடையாளப்படுத்தும் ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கு மேசியாவின் ஆளுகையானது அருளவிருக்கும் பொதுவான ஆசீர்வாதத்தோடுகூட, மாம்சீக இஸ்ரயேலர்கள் மீதுங்கூட மேசியா கடாட்சம் அருளுவதைக் குறிக்கின்றது என்பதாக வேதமாணவர்களுக்குத் தெரிகின்றது.

இந்த நிழலில், உபத்திரவத்தின் மகனாகிய பென்யமீன், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலான திரள் கூட்டத்தின் வகுப்பாருக்கு நிழலாய் இருக்கின்றார்; மீதமான உலகத்தைக் காட்டிலும், உயர்வான தளத்திற்கும், உயர்வான நிலைமைக்கும், உயர்வான ஆசீர்வாதத்திற்கும் மகா உபத்திரவத்திலிருந்து கடந்துவரும் திரள் கூட்டத்தாருக்குப் பென்யமீன் நிழலாய் இருக்கின்றார். சபை போன்று பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள இவர்கள், ஒருவேளை ஜீவன் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவான்களாய் இருப்பார்கள் என்றால், இவர்களுங்கூட ஆவியின் ஜீவிகளாகக் காணப்படுவார்கள். நிஜமான யோசேப்பை விற்றுப்போட்ட சகோதரர்களும் யோசேப்பினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

---

R 5232

# "யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள்"

## ஆதியாகமம் 44-ஆம் அதிகாரம்

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்."—யாக்கோபு 5:16.

யோசேப்பைக் கொன்றுபோடுவதற்குத் திட்டம்பண்ணி, பிற்பாடு அவர் சாகும்படிக்கு, அவரைக் குழியில் போட்டுவிட்டு, பின்னர் அவரை அடிமையாக அவரது சகோதரர்கள் விற்றுப்போட்டபோது மிகவும் கடின நெஞ்சம் உடையவர்களெனத் தோன்றின அளவுக்கு, அவர்கள் கடின இருதயம் உடையவர்கள் இல்லையென்பதை இந்தப் பாடமானது நமக்குக் காட்டுகின்றது. நம்முடைய இளமைப் பிராயங்களில் நம்மில் அநேகருக்குக் கற்பிக்கப்பட்டதான முழுச்சீர்க்கேடு குறித்த உபதேசமானது, நம்முடைய சொந்த குணலட்சணங்களுடைய விஷயங்களிலும், மற்றவர்கள் தொடர்புடைய நம்முடைய அனுபவங்களின் விஷயங்களிலும் மீண்டும், மீண்டுமாக தவறென நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளது. அனைவரும் முழுமையாய்ச் சீரழிந்துவிட்டனர் என்று கருதுபவன், தவறான கண்ணோட்டத்திலேயே தனது சக மனிதனை அணுகுபவனாக இருப்பான்; சீரழிவு குறித்த எண்ணம் உடையவன், சீரழிவையே எதிர்ப்பார்த்து நோக்குபவனாக இருந்து, சீரழிவையே கண்டுபிடிப்பவனாக இருப்பான் மற்றும் அவன் எந்த நல்லவற்றையும் எதிர்ப்பார்த்து நோக்காததினால், அவன் நல்லவற்றைப்பார்க்க தவறுகிறவனாகிறான்.

மனிதர்கள் அனைவரும் சீர்க்கெட்டுப் போயுள்ளனர் என்றும், எவரும் பூரணர் இல்லையென்றும், ஒருவர் கூடப் பூரணர் இல்லையென்றும், அனைவரும் பாவஞ்செய்துள்ளனர் என்றும், அனைவரும் ஆதி பாவத்தினுடைய விளைவில் பங்கடைந்துள்ளனர் என்றும், இதன் காரணமாக அனைவரும் தகப்பனாகிய ஆதாமினுடைய பரிபூரணத்தில் விளங்கின தேவமகிமையின் விஷயத்தில் தேவமகிமை அற்றவர்களாகியுள்ளனர் என்றுமுள்ள வேதவாக்கியங்கள் அடிப்படையிலான கூற்றுச்சரியானதேயாகும். பரிபூரணமாய்க் காணப்படும் ஒன்றுடன்தான் தேவன் தொடர்புவைத்துக்கொள்வார் என்றும், தமது சொந்த பூரணத்திற்கு முழு இசைவுடன் காணப்படுபவர்களுக்கு மாத்திரமே, தேவனால் தமது கிருபையையும், நித்திய ஜீவனையும் அருளமுடியும் என்றும் உள்ளதுதான் வேதவாக்கியங்களின் கருத்தாக இருக்கின்றது. ஆகையால் விழுகையின் காரணமாக அனைத்து மனிதர்களும் பாவிகளானப்படியால், அனைவருக்கும் மீட்பு தேவையாய் உள்ளது மற்றும் ஒப்புரவாகுதலும் தேவையாயுள்ளது.

இப்படியான ஒப்புரவாகுதலுக்குரிய வாய்ப்பானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் சொற்பமானவர்களுக்கு வருகின்றதாய் இருக்கின்றது மற்றும் இவர்களுக்கு மாத்திரமே வருகின்றது. இவர்கள் இருதயத்திலும், சித்தத்திலும், நோக்கத்திலும் பூரணமாய்க் காணப்பட வேண்டும் மற்றும் தங்கள் குறைவுகள் அனைத்திற்குமான மூடலாக, கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் தேவன் இவர்களது மாம்சத்தின் வேண்டுமென்றே இல்லாத பெலவீனங்களைப் பொருட்படுத்தாமல், இவர்களைப் புதிய சிருஷ்டிகளென ஏற்றுக்கொள்கின்றார். இப்படியாக கிறிஸ்துவின் மூலம், அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகளாகிய உண்மை சபை மாத்திரமே, தேவனுடைய குமாரர்களென எண்ணப்படுகின்றனர் மற்றும் கையாளப்படுகின்றனர் மற்றும் தேவனுடைய குமாரர்களுக்குரிய சிலாக்கியங்களையும், ஜெபத்தில் பிதாவுடனான ஐக்கியத்தையும் பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் அனைத்துமே இவர்களது உயர்ந்த பட்ச நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும் என்று உத்தரவாதம் அளிக்கின்ற தெய்வீக மேற்பார்வையை, இவர்கள் தங்கள் காரியங்களில் பெற்றவர்களாய் இருக்கின்றனர். எனினும் இவர்களும் தேவனைப் பார்க்கப்போவதற்கு முன்பாகவும், தேவன் இவர்களுக்காக வைத்திருக்கும் மகிமையானக் காரியங்கள் அனைத்தினிடத்திற்கு முழுமையாய்க் கொண்டு சேர்ப்பதற்கு முன்பாகவும், முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூரணப்படுத்தப்படுவது அவசியமாய் இருக்கின்றது.

உலகத்தார் நீதிமானாக்கப்படும் காரியமானது முற்றிலும் வேறான விதத்தில் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. அதற்கான வேளையானது, வேதவாக்கியங்களின்படி, வரவிருக்கின்ற யுகமாக

இருக்கின்றது. அப்போது மேசியாவின் இராஜ்யமானது, சாத்தானின் செல்வாக்கைக் கட்டிப்போட்டு, சாபத்தை அகற்றிப்போட்டு, சாபத்திற்குப் பதிலாக முழுச்சந்ததிக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும். இப்பொழுது உண்மையுள்ளவர்களைக் கையாளுவது போன்று, அக்காலத்தில் விருப்பத்துடன் கீழ்ப்படிபவர்களைத் தேவன் கையாளுவதில்லை. மாறாக அந்த ஆயிரம் வருஷங்களில் அவர்கள் மாபெரும் மத்தியஸ்தரின் பொறுப்பில் விடப்படுவார்கள் மற்றும் நீதிமானாக்கப்படுவார்கள் அல்லது உண்மையில் நீதிமானாக்கப்படுவார்கள். விருப்பத்துடன் கீழ்ப்படிபவர்கள் ஆதாமினுடைய ஆதி பூரணத்திற்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டு, மாபெரும் போதகரினால் முழுமையாய்க் கற்பிக்கப்பட்டுக் காணப்படுபவர்கள். ஆயிர வருடத்தின் முடிவில், பிதாவின் முன் நிறுத்தப்படுவதற்கும், அவரால் குமாரர்களென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் ஆயத்தமாய் இருப்பார்கள். இதற்கிடையில் ஒப்புரவாகுவதற்குரிய விருப்பமும், வாஞ்சையும் இல்லாதவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

நாம் இங்கு வலியுறுத்த விரும்பும் கருத்தென்னவெனில், தேவன் எங்குமே மனிதன் முழுமையாகச் சீர்க்கேடு அடைந்துவிட்டான் என்று சொல்லவில்லை, மாறாக சிறிய அளவிலான பூரணமின்மையைக்கூட அவரால் சகித்துக்கொள்ள முடியாது என்றுதான் அவர் சொல்லியுள்ளார். ஆகையால் அநேகமோ (அ) கொஞ்சமோ, நம் குறைவுகள் அனைத்தும், தவறுகள் அனைத்தும், நம் ஒவ்வொருவருக்காகவும், மாபெரும் மீட்பராகிய, திரும்பக்கொடுப்பவராகிய இயேசுவின் மூலம் நிறைவாக்குவது தெய்வீக ஏற்பாடாக இருக்கின்றது; மாபெரும் மீட்பரானவருடைய பலி மற்றும் உதவி இல்லாமல், பூரணமடைவதும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் கூடாத காரியமாகும்.

## ''யோசேப்பின் சகோதரர்கள் உருக்கமான இருதயம் உடையவர்கள் ஆவர்''

யோசேப்பு கொண்டிருந்த விசுவாசமும், அவரது அனுபவங்களும், அவருக்குள் பிரமாண்டமான/உயரிய குணலட்சணங்களையும், நிறைவான பரிவிரக்கத்தையும் மற்றும் தேவனுக்கான முழுமையானக் கீழ்ப்படிதலையும் உருவாக்கியது என்பதை நம்முடைய இப்பாடம் காண்பிக்கின்றது. ஆனால் வித்தியாசமான ஒருமுறையில், யோசேப்பினுடைய பத்துச் சகோதரர்களும் தவறுகளின் நிமித்தமான மன உளைச்சலுக்குள்ளானவர்களாகி மிகவும் பரிவிரக்கம் உடையவர்களாகவும், மிகுந்த சகோதர சிநேகம் உள்ளவர்களாகவும், தங்கள் தகப்பனாகிய யாக்கோபிற்கு மிகவும் உண்மையுள்ளவர்களாகவும் மாறினார்கள். ஜீவியத்தின் அனைத்து அனுபவங்கள், அதாவது கசப்பான மற்றும் இனிமையான அனுபவங்கள், நமது சரியான கிரியைகள் மற்றும் தவறுகள் ஆகிய அனுபவங்கள் அனைத்தின் பலன்களானது, நம்மைத் திருத்துவதற்கும், நமக்கு உதவியாக இருப்பதற்கும் ஏதுவாய்க் காணப்படத்தக்கதாக, தெய்வீக மேற்பார்வையின் கீழ்த் திட்டம் பண்ணப்பட்டுள்ளது. இப்படியான எந்த ஆசீர்வாதத்திற்கும், தேவன் மீது நம்பிக்கை என்பது அவசியமானதாகும். யோசேப்பினுடைய நம்பிக்கையைக் குறித்து நாம் பார்த்திருக்கின்றோம் மற்றும் இன்றைய பாடமானது அவரது சகோதரர்கள் வித்தியாசமானவர்களாய்க் காணப்பட்டாலும், இன்னமும் சர்வவல்லவரை அங்கீகரித்தவர்களாகவும், அவருக்கான பயபக்தியைக் கொண்டவர்களாகவும், அவர் அனைத்துத் தீமையான கிரியைகளுக்கும் நியாயமான கைமாறு அளிப்பவர் என்று உணர்ந்துகொண்டவர்களாகவும் அவர்கள் காணப்பட்டார்கள் என்பதை நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பு ஏற்பாடு பண்ணினதும், பென்யமீன் ஐந்து மடங்கு பங்கு பெற்றுக்கொண்டதுமான, விருந்துக்குப் பிற்பாடு, பதினொரு சகோதரர்களும், தங்கள் அனுபவங்கள் நிமித்தமாகவும், எகிப்திய அதிகாரியிடம் கிடைத்த தயவினிமித்தமாகவும் மகிழ்ச்சியுடன், வீடுகளுக்குத் திரும்பப் புறப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம். தங்கள் தகப்பனாருக்காக அவர்கள் கொண்டிருக்கும் இரக்கத்தையும், தங்கள் இளைய சகோதரன் மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்புடன்கூடிய அக்கறையையும் சோதித்துப்பார்க்க விருப்பம் கொண்டவராக, அவர்கள் புறப்படுவதற்கு முன்னதாக, யோசேப்பு தனது வெள்ளிப்பாத்திரத்தை பென்யமீனுடைய சாக்கின் வாயிலே போட்டு, அனுப்பும்படிக்குக் கட்டளையிட்டிருந்தார். கானானை நோக்கி வெகுதூரம் போவதற்கு முன்னதாக யோசேப்பு தனது வீட்டிலிருந்து வேலைக்காரர்களை அவர்களிடத்தில் அனுப்பி கேட்கச் சொன்னதாவது, "நீங்கள் உங்களுக்கு உதவியவருக்கு இப்படி மோசம் செய்தது என்ன? ஏன் நீங்கள் அவரது வெள்ளிப்பாத்திரத்தை எடுத்தீர்கள்? நீங்கள் எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகிகள்/ஏமாற்றுக்காரர்கள்!" அவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும், தங்கள் வசத்தில் ஒருவேளை பாத்திரம் கண்டுபிடிக்கப்படுமானால், தாங்கள் அனைவருமே தானாகவே

அடிமைகளாகிக் கொள்வார்கள் என்றும் கூறினார்கள். யோசேப்பு கட்டளையிட்டிருந்த பிரகாரம், பாத்திரத்திற்கான தேடுதல் மூத்த சகோதரனிடத்தில் தொடங்கப்பெற்று, பென்யமீனுடைய சாக்கோடு முடிவுபெற்றது. பென்யமீனுடைய சாக்கில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. மிகுந்த வேதனையில், அவர்கள் அனைவரும், மீண்டும் அரமனைக்குத் திரும்பி நடந்தார்கள்.

மீண்டுமாக யோசேப்பு கடினமாக நடந்துகொண்டு, அவர்கள் தங்கள் சுயநலத்தை வெளிப்படுத்துவதற்கும், பென்யமீனைக் கைவிட்டுவிடுவதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத்தக்கதாக அவர்களைக் கடிந்துகொண்டார். மீண்டுமாக அவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று தெரிவித்து, தாங்கள் யோசேப்பினுடைய அடிமைகளாக இருப்பதற்கு விரும்புவதையும் தெரிவித்தார்கள். ஆனால் யோசேப்போ, "அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாக இருப்பதாக; எவன் (பென்யமீன்) வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாய் இருப்பான்; நீங்கள் உணவுகளோடு, உங்கள் குடும்பங்களிடத்திற்கும், உங்கள் தகப்பனிடத்திற்கும் திரும்பிச் செல்லுங்கள் மற்றும் எகிப்தின் சலுகைகளையும் நீங்கள் தொடர்ந்து அனுபவித்துக்கொள்ளுங்கள்" என்றார்.

இந்தக் கட்டளையானது, அவர்களைப் பரீட்சிக்கும் என்று யோசேப்பு அறிந்திருந்தார். பென்யமீனை அடிமையாக விட்டுவிட்டு, தாங்கள் அடிமைத்தனத்தினின்று தப்பித்துக்கொண்டு, தங்கள் சொந்த குடும்பங்களினிடத்திற்குச் சென்றுவிடுவதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்களா? யோசேப்பின் விஷயத்தில், அதாவது அவரை அடிமையாக விற்றுப்போட்டபோது, அவர்களிடமிருந்த அதே கல்லான இருதயந்தான், இன்னமும் அவர்களிடத்தில் காணப்படுகின்றதா? யோசேப்பின் விஷயத்தில் நடந்தது போலவே, இப்பொழுதும் அவர்கள் தங்கள் பரிதாபமான தகப்பனாருடைய சந்தோஷத்தையும், நலனையும் அலட்சியப்படுத்தப் போகின்றார்களா?

பாதுகாப்பாய்ப் பென்யமீனைத் திரும்பக் கொண்டுவருவதாக தனது தந்தையினிடத்தில் உத்தரவாதம் அளித்து வந்திருந்த யூதா, யோசேப்பிடம் வேண்டுகோள் வைத்தார். பென்யமீன் எப்படி எகிப்துக்குக் கொண்டுவரப்பட்டார் என்பதையும், எப்படித் தங்கள் முதிர்வயதான, பரிதாபமான தகப்பன் பென்யமீன் மீது அன்பு வைத்திருக்கின்றார் என்பதையும், தான் எப்படிப் பென்யமீனை மீண்டும் திரும்பக் கொண்டுவருவதாக உத்தரவாதம் அளித்துள்ளார் என்பதையும் யூதா விளக்கினார். தான் அடிமையாக வைக்கப்படுவதற்கும், தனது சகோதரனாகிய பென்யமீன் போகும்படிக்கு அனுமதிக்கப்படுவதற்குமான கெஞ்சுதலுடன் யூதா மன்றாடினதாவது, "இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:33, 34).

இருதயம் மாற்றம் அடைந்துள்ளதற்கான ஆதாரங்கள் யோசேப்பிற்கும், நம் அனைவருக்கும் இங்குத் திருப்திகரமாய் இருக்கின்றது. பாவத்தை விரும்புபவர்கள் பாவத்தில் களிக்கூருவது போன்று, நீதியை விரும்புகின்ற அனைவரும் நீதியில் களிக்கூருகின்றவர்களாய்க் காணப்படுவார்கள். இப்படியான ஒரு மாற்றத்தை நாம் இந்த மனிதர்களிடத்தில் உணர்ந்துகொள்ளும்போது, நாம் அவர்களுக்காக மாத்திரம் களிக்கூராமல், அவர்களது அனுபவங்களானது கொடுக்கின்ற பொதுவான படிப்பினைகளின் நிமித்தமாகவும் களிக்கூருகின்றோம். தற்காலத்தின் பாவங்களில் பெரும்பான்மையானவைகள், கீழ்த்தரமான நடத்தைகளில் பெரும்பான்மையானவைகள், கொடூரங்களில் பெரும்பான்மையானவைகள், சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்கள் மற்றும் போதிய அனுபவம் இல்லாமையின் காரணமாகவே நிகழ்கின்றன என்ற நம்பிக்கையில் நாம் காணப்படுகின்றோம். நாம் நம்மைப் பற்றியும் மற்றும் ஒருவருக்கொருவரையும் நன்கு, ஆழமாய் மற்றும் தெளிவாய்ப் புரிந்துகொள்வோமானால், எத்தகைய ஒரு பெரிய மாற்றமே நடந்திருக்கும் என்று நாம் நமக்குள்ளே சொல்வதுண்டு.

ஜீவியத்தின் அன்றாட அனுபவங்களானது, நம்முடைய இரக்கத்தன்மையை விரிவாக்கி, இப்படியாகக் குணலட்சணத்தை வளர்க்கின்றதல்லவா? இது உண்மையாய் இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். அனைத்துக் கொள்கைகளின் விஷயத்திலும் மறுப்பிற்கிடமான காரியங்கள் உண்டு என்பதில் ஐயமில்லை என்றாலும், நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், அவ்வப்போதாகிலும் நல்லதும், உண்மையானதும், தூய்மையானதும், சிறந்ததுமானவைகளை உணர்ந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுமளவுக்குப் போதுமான தேவ சாயலானது இன்னமும் ஒவ்வொரு அங்கத்தினனிலும் காணப்படவே செய்கின்றது என்பதே நம்முடைய நம்பிக்கையாய்க்

காணப்படுகின்றது. அவன் பாவத்தினாலும், சுயநலத்தினாலும் சூழப்பட்டிருக்கின்றபடியினாலேயே, இந்தத் தேவனுக்கொத்த உணர்வுகளானது, மிகவும் அபூர்வமாய்ச் செயல்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தற்கால அனுபவங்களின் கீழாக நூறு வருடங்கள் கொடுக்கப்பட்ட பிற்பாடு, புதியதாய் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கொடுக்கப்பட்டால், கிட்டத்தட்ட அனைவருமே அனுபவங்களினால் மிகவும் பலனடைந்து, தெளிந்த மனதுடன் வாழ்பவர்களாகவும், நேர்மையான வாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருப்பார்கள் என்று யூகிப்பது நியாயமாய்த் தோன்றுகின்றது. கிட்டத்தட்ட அனைவருமே மிகவும் பெருந்தன்மை உடையவர்களாகவும், மிகவும் நீதியாயும் காணப்படுவார்கள் என்று எண்ணுகின்றோம். ஆட்சேபம்/மறுப்புகள் இருக்கும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம். தற்கால சூழ்நிலைகளின் கீழ் மனித ஜீவியத்தை (மரணத்தின் மூலம் கால) வரையறைக்குள்ளாக்கும் தெய்வீக ஏற்பாடானது, மிகவும் ஞானமான காரியம் என்ற கருத்தை நாங்கள் தெரிவிப்பதை யாரும் தடைப்பண்ணிட முடியாது.

மனித குடும்பத்தின் அங்கத்தினர்கள் சிலர் சுயநலமான தன்மைகளை மாத்திரம் வளர்க்கின்றவர்களாகவும், மிகவும் அரிதாக நல்ல தன்மைகளை/உணர்வுகளைச் செயல்படுத்துகின்றவர்களாகவும் இருக்கின்றனர். இப்படியான நபர்களை, ஒரு நூற்றாண்டிற்கு மேலாக வாழ அனுமதிப்பது என்பது, தங்கள் சக மனிதர்களைச் சுயநலத்துடன் அடிமைப்படுத்துவதற்குரிய வாய்ப்புகளை இவர்களுக்கு அதிகம் கொடுக்கின்றதாய் இருக்கும். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" என்றுள்ள ஞானியினுடைய வார்த்தைகளின் அடிப்படையில், தேவன் நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் விலையேறப்பெற்றப் பாடங்களைக் கொடுப்பதற்கு ஞானமும், வல்லமையையும் கொண்டவராக இருக்கின்றார் (நீதிமொழிகள் 14:34).

## "மனிதர்கள் எப்போது பயனடைவார்கள்?"

ஆனால் சிலர் பின்வருமாறு கேட்கலாம்: "ஜீவியத்தின் சோதனைகளும், அடிகளும், அதாவது விவேகமான அடிகளும், மனிதனுக்குப் பாவத்தினுடைய தீங்கையும், நீதியிலுள்ள ஞானத்தையும் குறித்துக் கற்பிக்கின்றது என்று ஒத்துக்கொள்கின்றோம்; மேலும் யோசேப்பின் சகோதரர்களைப் போன்று, நமது சந்ததியாரும் ஏற்றவேளைகளில் இந்த மாபெரும் பாடம் தொடர்புடையதானச் சிலவற்றைக் கற்றுக்கொள்வார்கள் என்பதையும் ஒத்துக்கொள்கின்றோம், ஆனால் இயேசுவின் அடிச்சுவடுகளில், சுயத்தைப் பலிச்செலுத்தும் உடன்படிக்கையின் கீழ் நடந்து செல்லும் பரிசுத்தவான்களாகிய சிலர் மாத்திரமே, இராஜ்யத்தின் மகிமையான பலனில் பங்கடைபவர்களாய் இருப்பார்களானால், நமது சந்ததியினர் இப்படியான பாடம் கற்றுக்கொள்வதிலுள்ள பயன் என்ன? நமது சந்ததியில் பரிசுத்தவான்கள் தவிர மீதமுள்ளவர்களுக்கான நம்பிக்கை அனைத்தையும், மரணம் முற்றுப் பெறச் செய்யுமானால், இவர்கள் எப்படித் தங்கள் அனுபவங்களினால் பயனடைவார்கள்? பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு முன்னதாக மரித்துப்போகின்றவர்கள் அல்லது பரிசுத்தவான்கள் ஆகாதவர்கள் அல்லது தேவனுடைய இராஜ்யத்திற்குத் தகுதியாகுவதில் தவறுகின்றவர்கள் விஷயத்தில் ஜீவியத்தின் பாடங்கள் எப்படி உபயோகப்படும்?"

வேதத்தின் போதனைகள் தொடர்புடைய விஷயத்தில் நாம் அனைவரும் தவறு செய்துள்ளோம் என்பதே பதிலாகும். நாம் மரணத்தில் நித்திரைக்குள்ளாகும்போது, இரட்சிப்படைவதற்கான நம்பிக்கை அனைத்தும் முற்றுப்பெறுகின்றது என்று வேதாகமம் எங்குமே தெரிவிப்பதில்லை. சபை வகுப்பார் தொடர்புடைய விஷயத்தில், மரணமானது தகுதிக்காண் தேர்விற்கு அவர்கள் உட்படுத்தப்படும் காலத்தை முற்றுப்பெறச் செய்கின்றது. ஆனால் இப்படியாக உலகத்தாரின் விஷயத்தில் இருப்பதில்லை. சபை, உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, பொதுவான மனுக்குலத்திற்கு முன்னதாகவே, நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணம் பெற்றுக்கொள்வதற்கான பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விசேஷித்த வகுப்பாராய் இருக்கின்றனர் என்று அப்போஸ்தலன் காண்பித்துத் தருகின்றார். இவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருப்பார்களானால், இவர்கள் நித்தியமான ஜீவனை மாத்திரம் அல்லாமல், மனித தளத்தைக் காட்டிலும் உயர்வான தளத்தில் அந்த ஜீவனைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இவர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாக, பூரணத்தை உயிர்த்தெழுதலில் அடைகின்றவர்களாய் இருப்பார்கள்.

இந்தச் சபை வகுப்பாருக்கே, ஒருவேளை அவர்கள் துணிகரமாய்ப் பாவஞ்செய்யும் பட்சத்தில், மரணமானது அனைத்தையும் முற்றுப்பெறச் செய்திடும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கும் விதத்தில், "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின்

செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என்று கூறியுள்ளார் (ரோமர் 8:13). இவ்வசனத்தில் இடம்பெறும் "சாவீர்கள்" மற்றும் "பிழைப்பீர்கள்" என்பதானது சபையைக் குறிக்கின்றதே ஒழிய, உலகத்தாரையல்ல.

மீண்டுமாக, "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" என்றும், "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார் (எபிரெயர் 10:26, 27; 6:4-6).

இந்த வேதவாக்கியங்களும், சபைக்கு மாத்திரமே விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் சபை மாத்திரமே இப்பொழுது/தற்காலத்தில் பரீட்சையின் கீழ்க் காணப்படுகின்றனர். உலகமானது பரீட்சைக்கு உட்படுத்தும் காலமானது, அடுத்த யுகத்திலாகும். கிறிஸ்துவினுடைய ஆயிரவருட காலமானது, உலகத்திற்கான ஆயிரவருட நியாயத்தீர்ப்பு நாளாகக் காணப்படுகின்றது. அப்போதுதான் மனுக்குலம் அனைவரும் நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவர்களா அல்லது இல்லையா என்று முடிவு பண்ணப்படுவார்கள். பாத்திரமானவர்கள் என்று கண்டுகொள்ளப்படுகின்ற அனைவரும் இறுதியில் பூரணப்படுத்தப்பட்டு, நித்திய ஜீவன் எனும் தெய்வீக ஆசீர்வாதத்தை அருளப்பெறுவார்கள். உலகத்தினுடைய நியாயத்தீர்ப்பின்/ பரீட்சையின் நாளில் அபாத்திரர்கள் என்று கண்டுகொள்ளப்படுபவர்கள், ஜீவன் பெறுவதற்கு அபாத்திரர்கள் என்று தீர்க்கப்பட்டு, இரண்டாம் மரணம் எனும் தண்டனை வழங்கப்படுவார்கள்.

தற்கால ஜீவியத்தின் நல்லதும், கெட்டதுமான அனுபவங்களானது, உலகத்தினுடைய எதிர்கால பரீட்சையில் தாக்கத்தை ஏற்படுத்தும், ஆனால் எவருக்கும் அது காரியங்களை நிர்ணயிக்கின்றதாய் இருக்காது. தற்காலத்தின் வாய்ப்புகளையும், அறிவையும் தவறாய்ப் பயன்படுத்துவதினால், சிலர் தவறாய்ப் பயன்படுத்தினதற்கேற்ப அநுகூலங்கள் அற்றவர்களாய் எதிர்கால ஜீவியத்திற்குள்ளும், அதன் நியாயத்தீர்ப்புகளுக்குள்ளும் பிரவேசிக்கின்றவர்களாய் இருப்பார்கள். அவர்களுக்கான அநுகூலமற்ற நிலை என்பது தற்காலத்தின் தவறுகளுக்கான அடிகளாகவும், சிட்சைகளாகவும் இருக்கும். தற்கால ஜீவியத்தினுடைய சிரமங்கள் மற்றும் சோதனைகளினால் சரியாய்ப் பயிற்சியளிக்கப்பட்டவர்களோ, யோசேப்பின் சகோதரர்கள் போன்று, இவைகளினால் மிகவும் இரக்கமுடையவர்களாகவும், மிகவும் அன்புடையவர்களாகவும், மிகவும் சாந்தமானவர்களாகவும், மிகவும் நேர்மையானவர்களாகவும் ஆக்கப்படுகின்றனர்; இப்படியாக இவர்கள் மேசியாவின் இராஜ்யமாகிய மகா நியாயத்தீர்ப்பின் நாளினுடைய பரீட்சைகளில் பிரவேசிப்பதற்கு நன்கு ஆயத்தம் பண்ணப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

யோசேப்பை எகிப்தின் அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்ட அவரது சகோதரர்களுக்கு, யோசேப்பு நியாயாதிபதியாக இருந்ததுபோன்று, கிறிஸ்துவாகிய இயேசுவும், சபையும் உலகத்திற்கான நியாயாதிபதிகளாகக் காணப்படுவார்கள்; "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார் (1 கொரிந்தியர் 6:2).

தனது சகோதரர்கள் தனக்கு முற்காலத்தில் செய்த காரியங்களின் அடிப்படையில் யோசேப்பு நியாயந்தீர்க்காமல், மாறாக தற்போது அவர்களிடத்தில் காணப்பட்ட இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையில் நியாயந்தீர்த்ததுபோலவே, எதிர்காலத்திலுள்ள உலகத்தாரின் நியாயத்தீர்ப்பானது, முற்காலங்களிலுள்ள அவர்களின் தவறான இருதய நிலையைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், மாறாக நியாயத்தீர்ப்பின் காலகட்டங்களின்போதுள்ள அவர்களுடைய இருதய நிலைமையே கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றதாய் இருக்கும். எனினும் நீதியின் கொள்கையும் தொடர்ந்து செயல்படுகின்றதாய் இருக்கும்; பாவம் செய்பவர்கள் கஷ்டம் அநுபவிப்பார்கள். யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்புக்குச் செய்த தவறுகள் நிமித்தம் கஷ்டம் அநுபவித்தார்கள் மற்றும் அவர்கள் தங்களுக்கு வந்த பல்வேறு உபத்திரவங்களை, தாங்கள் பல வருடங்களுக்கு முன்பாகச் செய்திருந்த மாபெரும் பாவத்துடன் சம்பந்தப்படுத்தி பார்த்தவர்களாகவே காணப்பட்டனர். இப்படியாகவே மனுக்குலத்தின் விஷயத்திலும் காணப்படும்.

ஒவ்வொரு பாவமும், ஒவ்வொரு மீறுதலும் நீதியான பலனைப் பெற்றுக்கொள்ளும், ஆனால் அநீதியான பலனையோ, நித்தியமான சித்திரவதையோ பெற்றுக்கொள்வதில்லை.

மனுக்குலத்தின் நல்ல கிரியைகளும், தீமையான கிரியைகளும், அவர்களது குணலட்சணத்திலும், மனப்பான்மையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாய்க் காணப்படுகின்றது மற்றும் அந்தக் குணலட்சணமும், மனப்பான்மையும் மரணம் எனும் நித்திரையில் தொலைந்துபோவதில்லை. தங்கள் பிரேத குழிகளில் காணப்படுகின்ற அனைவருக்கும் ஓர் உயிர்த்தெழுதல் உள்ளது. அவர்கள் அனைவரும், மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, தங்கள் தங்கள் வரிசையின்படி வெளிவருவார்கள். பரிசுத்தவான்கள் உலகத்திற்கான நியாயாதிபதிகளாகக் காணப்படத்தக்கதாக, ஆயிரவருட யுகத்தின் ஆரம்பப் பகுதிகளில், ஜீவனுக்கான பூரணத்திற்குள் கடந்து வருவார்கள். பரிசுத்தவான்கள் அல்லாதவர்களும், சத்திய அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்படத்தக்கதாக, (மரணத்திலிருந்து) கொண்டுவரப்படுவார்கள். அனைவரும் தங்கள் கடந்த காலத்தின் கிரியைகள் மற்றும் கற்றுக்கொண்ட படிப்பினைகளினால் நன்மை அடைவதற்கும், மேசியாவினுடைய இராஜ்யத்தின் மகிமையான ஒளியினாலும்/வெளிச்சத்தினாலும் நன்மை அடைவதற்கும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வார்கள்; மேசியாவினுடைய இராஜ்யத்தின் இந்த மகிமையான வெளிச்சமானது, அனைத்து அறியாமையையும், மூடநம்பிக்கைகளையும், இருளையும் அகற்றிப்போட்டு மற்றும் நித்திய ஜீவனிடத்திற்கும், தேவனிடத்திலான ஐக்கியத்திற்கும் திரும்பிவருவதற்கான வழியில் வெளிச்சம் வீசுகின்றதாய் இருக்கின்றது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, சரீரப்பிரகாரமான சொஸ்தமாக்குதலைக் குறிப்பதாகச் சிலரால் கருதப்படுகிறது. ஆனால் இந்த வார்த்தைகளானது, ஆவிக்குரிய குணமாக்குதலை விசேஷமாய்க் குறிக்கின்றது என வேறுசிலர் புரிந்துகொண்டுள்ளனர். இந்த ஆவிக்குரிய குணமாக்குதல்களைக் குறித்துச் சங்கீதக்காரன், "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்" என்று குறிப்பிடுகின்றார் (சங்கீதம் 103: 3, 4). தங்கள் பாவங்களைத் தங்களிடமிருந்து மறைத்து, கர்த்தரிடமிருந்தும் மறைப்பதற்குச் சிந்திப்பவர்கள் மகா தவறு செய்கின்றவர்களாக இருக்கின்றனர் மற்றும் இப்படிப்பட்டவர்கள் எந்த முன்னேற்றமும் அடைவதில்லை.

---

R 5234

# "பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது"

## ஆதியாகமம் 45:1-46:7

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது."—சங்கீதம் 133:1

தனது சகோதரர்கள் எவ்வளவு மாற்றம் அடைந்துள்ளனர் என்பதைக் கண்ட யோசேப்பு, அவர்கள் மீது அனுதாபம்/இரக்கம் கொண்டார். யோசேப்பின் விஷயத்தில் தாங்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதை அவர்களது இருதயம் இப்பொழுது உணர்ந்துகொண்டிருப்பதையும், தங்கள் மீதான தெய்வீக நிராகரிப்பை அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பதையும் மற்றும் அவர்கள் தவறுகளுக்காக வருந்துவதையும் யோசேப்பு கண்டபோது, அவர் அவர்கள் மீது அனுதாபம் கொண்டார். வயதான தங்கள் தகப்பன் மீது அவர்கள் அக்கறைக்கொண்டிருந்ததையும், அன்பற்ற செயல்பாட்டினாலோ (அ) வார்த்தையினாலோ தங்களது தகப்பனை மரிக்கப்பண்ணுவதில் துரிதப்படுத்துவதற்கான அவர்களது விருப்பமின்மையையும், யோசேப்பு கண்டபோது, மிகவும் அனுதாபம் கொண்டார். யோசேப்பு தன்னை யார் என்று வெளிப்படுத்தும் காரியத்தை எகிப்தியர்கள் காணக்கூடாது என்று விரும்பினார். தன்னுடைய உணர்வுகளைத் தன்னால் இனிக் கட்டுப்படுத்த முடியாது என்று உணர்ந்த யோசேப்பு, எகிப்தியர்கள் அனைவரும் அறையைவிட்டு வெளியேறும்படிக்கு அவசரமாய்க் கட்டளையிட்டார். பின்னர், "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்" என்று கூறித் தன்னை வெளிப்படுத்திக்கொண்டார்.

அவரது சகோதரர்கள் அடைந்திருக்கும் திகைப்பை நம்மால் நன்கு கற்பனை செய்துகொள்ள முடிகின்றது. தங்கள் சிரமங்களும், சோதனைகளும் பெருகிக்கொண்டு வருவதாக அவர்களுக்குத் தெரிந்தது மற்றும் தங்களுக்கான பிரச்சனைகள் அனைத்தின் விஷயத்திலும் எப்படியோ யோசேப்பு சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இப்பொழுது யோசேப்பின் முன்னிலையில் காணப்படும்போதும், யோசேப்பு துபாசியைக்கொண்டு தங்களிடத்தில் பேசாமல், நேரடியாக தங்கள் சொந்த மொழியில், தான்தான் யோசேப்பு என்று கூறினதைக் கேட்கும்போது, அவர்கள் எவ்வளவு அதிர்ச்சியடைந்திருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

ஆனால் யோசேப்பு இரக்கத்தினாலும், அனுதாபத்தினாலும் முழுக்க நிரம்பினவராக, அவர்களை அமைதிப்படுத்திட துரிதப்பட்டார். அவர்களை அவர் கொடூரமாய் அச்சுறுத்தவில்லை அல்லது அவர்கள் தவறுகளுக்காக அவர்களைத் தண்டிக்கவுமில்லை. அவர்களது தவறுக்காக அவர்களை அவர் கடிந்துகொள்ளக்கூட இல்லை. மாறாக பாவமானது ஏற்கெனவே அவர்களுக்குத் தண்டனைக் கொடுத்துள்ளதை உணர்ந்த யோசேப்பு, அவர்களை ஆறுதல்படுத்தும் வண்ணமாக," நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பினார்; பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்.ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" என்றார் (ஆதியாகமம் 45:5-8).

கேட்காமலேயே வழங்கப்பட்ட மன்னிப்பையும், இரக்கத்தின் வெளிப்படுத்தல்களையும், யோசேப்பு தனது சகோதரர்கள் மீது குவித்தார். (யோசேப்பினுடைய) பழிவாங்குதல் எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! அந்தோ, எத்துணை சொற்பமான கிறிஸ்தவர்களே இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் இவ்வளவுக்குப் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வார்கள்! கிறிஸ்தவர்கள் எல்லா விதத்திலும், யோசேப்பைக்காட்டிலும் மிகவும் அநுகூலமுடையவர்களாய் இருக்கின்றனர். அதாவது கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், வேதவாக்கியங்களுடைய அறிவுரையைப் பெற்றுக்கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். கிறிஸ்துவுக்கும், அவரது ஆவிக்கும், யோசேப்பு எத்துணை அருமையான நிழலாய் இருக்கின்றார். இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவரது சீஷர்களாகுவதற்குப் பதிலாக, அவரைச் சிலுவையில்

அறைந்துபோட்ட யூதர்களாகிய, கிறிஸ்துவின் சகோதரர்கள் நித்தியகாலமும் சித்திரவதைப்படுத்தப்படுவார்கள் என்று நாம் நம்பிக்கைக்கொள்ளத்தக்கதாக, நமக்குக் கற்பித்த இருளான யுகங்களுடைய விசுவாச பிரமாணங்களானது, நம்மைத் தவறாகவே வழிநடத்தியுள்ளது!

ஒன்றன்பின் ஒன்றாக இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் வேதாகமத்தினுடைய பக்கங்களின் வெளிச்சத்தில், யூதர்களை நித்திய காலம் சித்தரவதைக்குட்படுத்த மேசியா நோக்கம் கொண்டிருக்கிறார் என்பதற்குப் பதிலாக, நேர்மாறாக மேசியா நோக்கம் கொண்டிருப்பதாக தேவனுடைய ஜனங்கள் பார்க்கின்றனர்; அதாவது யூதர்கள் தெய்வீக இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதாக தேவனுடைய ஜனங்கள் பார்க்கின்றனர். பரிசுத்தவானாகிய பவுல் சுட்டிக்காட்டுவது போன்று, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டப்பின்னர், உடனடியாக இந்த இரக்கமானது, யூதர்களுக்குக் காண்பிக்கப்படும்; "உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:25-33). இதே கருத்தானது, இஸ்ரயேலரைக் குறித்துத் தீர்க்கத்தரிசியினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). யூதர்களும் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நடந்திட்ட துயரத்திற்கு இடமான தவறை உணர்ந்துகொள்ளுகையில், உண்மையான துக்கத்துடனே துக்கிப்பார்கள். அவர்கள் நித்திய காலத்துக்கும் உரிய சித்தரவதையினால் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக கர்த்தர், "நான் அவர்களுக்குக் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்" என்று கூறியுள்ள பிரகாரமாய், அவர்களிடத்தில் கிருபை பாராட்டுவார். இவ்விஷயமும் மற்றும் நம் பாடத்தில் இடம்பெறும் நிழலும், எத்துணை அருமையாயும், எத்துணை இசைவாயும் காணப்படுகின்றது! யோசேப்பின் பத்துச் சகோதரர்கள் இஸ்ரயேலர்களுக்கு நிழலாய் இருக்கின்றனர்; எகிப்தியர்கள் புறஜாதிகளுக்கு நிழலாய் இருக்கின்றனர்; பென்யமீன் திரள் கூட்டத்தினருக்கு நிழலாய் இருக்கின்றார்; யோசேப்பு மேசியா வகுப்பாருக்கு, அதாவது தலையாகிய இயேசுவையும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய ஜெயங்கொள்ளும் சபையையும் உள்ளடக்கின மேசியா வகுப்பாருக்கு நிழலாய் இருக்கின்றார்.

## "எருசலேமுடன் பட்சமாய்ப் பேசுங்கள்"

வேதாகமத்தின் பதிவுகள் அனைத்துமே வேதாகமத்திற்கும், தெய்வீகக் குணலட்சணத்திற்கும் இசைவாய்க் காணப்படுகின்றது. இருண்ட யுகங்களினுடைய விசுவாசப் பிரமாணங்களுக்கு நாம் செவிக் கொடுத்ததினாலேயே நமக்குப் பிரச்சனை ஏற்பட்டது. இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று நம்பி, இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தை அடையத்தக்கதாகச் சுயத்தை வெறுத்தலின் மூலமும், தற்காலத்தின் பாடுகளில் பங்கெடுப்பதன் மூலமும், அவருடன் இணைந்து கொள்வதன் மூலமுமாய் அல்லாமல் மற்றபடி யாரும், ஆவிக்குரிய இஸ்ரயேலில் அங்கத்தினராக முடியாது என்று வேதாகமம் சொல்வது உண்மைதான். ஆனால் இந்த எளிமையான செய்தியுடன், யூதர்களிடமும், உலகத்தாரிடமும், (ஆவிக்குரிய இஸ்ரயேலர் அல்லாத) மீதியான அனைவருக்குமே நித்திய சித்திரவதை உள்ளது என்று நாம் சேர்த்துக் கூறினதிலேயே நம்முடைய தவறு காணப்படுகின்றது.

ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலானது, இராஜ்யத்தை அடைகின்றது என்றும், இந்த உயர்ந்த மகிமையையும், ஆசீர்வாதத்தையும் அடைய தவறுகின்றதே மாம்சீக இஸ்ரயேலர்கள் மற்றும் உலகத்தாருடைய இழப்பாய் இருக்கின்றது என்றும் இப்பொழுது நாம் அறிந்துகொள்கின்றோம். மாம்சீக இஸ்ரயேலர்களுக்குத் தேவையான ஆசீர்வாதங்களை அவர்களுக்கு அருளுவதும் மற்றும் அவர்கள் மூலமாய் இறுதியில் அனைத்து ஜனங்கள் மீதும் ஆசீர்வாதங்களை அருளுவதுமே, இப்படியான ஓர் இராஜ்யத்தை ஏற்பாடு பண்ணினதிலுள்ள தேவனுடைய நோக்கமாய் இருக்கின்றது என்பதையும் நாம் காண்கின்றோம்.

இதுவே யோசேப்பினுடைய சகோதரர்கள் முழுமையாய் மன்னிக்கப்பட்ட விஷயத்திலிருந்து, கற்பிக்கப்பட்ட பொதுவான பாடமாகக் காணப்படுகின்றது. யோசேப்பின் சகோதரர்கள் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்ற மாத்திரமே செய்திருக்கின்றார்கள் என்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிச்சயமானது, யூதர்களுக்கு இறுதியில் கொடுக்கப்படப்போகின்ற செய்திக்கு நன்கு இசைவானதாக

உள்ளது; அதாவது யூதர்கள் மேசியாவைச் சிலுவையில் அறைந்துபோட்டதான காரியமானது, அவர்கள் தெய்வீக நோக்கத்தினை நிறைவேற்றினதாகவும் மற்றும் அதன் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதமானது, பூமியின் குடிகள் அனைத்திற்கும் கிடைக்கப்பண்ணினது என்பதாகவும் உள்ள செய்தி இறுதியில் யூதர்களுக்கு அறிவிக்கப்படும். இதற்கு இசைவாகவே பரிசுத்தவானாகிய பேதுருவும் பெந்தெகொஸ்தே நாளில் பேசிட்ட வார்த்தைகள் காணப்படுகின்றது. மனம்வருந்தின யூதர்கள் சிலரிடம் பரிசுத்தவானாகிய பேதுரு இக்காரியத்தை விவரிக்கும் விதத்தில், "சகோதரர் நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்றார் (அப்போஸ்தலர் 3:17). "அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 2:8).

யோசேப்பினுடைய சகோதரர்களுக்கு, நிஜமாய்க் காணப்படும் யூதர்களிடத்திலான, தேவனுடைய மனப்பான்மையானது, ஏசாயா 40:1, 2 ஆகிய வசனங்களிலுள்ள தீர்க்கத்தரிசனத்தில் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது, விசேஷமாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு பகுதிகளில் நிறைவேறப்போவதாக இருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது, அவர்களுக்கு நித்தியமான சித்திரவதை உள்ளதென ஒரு வார்த்தைக்கூடக் குறிப்பிடுவதில்லை, மாறாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் தேவனுடைய கிருபையானது யூதர்களுக்குக் கடந்துவரும் என்றும், இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள, மேசியாவின் சரீரமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக அவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகிற காரியங்கள், பரிசுத்தவானாகிய பவுலின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" (ஏசாயா 40:1, 2).

இஸ்ரயேலானவள் தனது மீட்பரை மரிக்கப்பண்ணத்தக்கத்தாக, அவரை உரோமர்களிடம் விற்றுப்போட்டது துவங்கி, கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் காலமாக அவமானம், நிந்தை மற்றும் துக்கத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணும் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டாள். இயேசுவின் பின்னடியார்களெனத் தவறாய்த் தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களின் கரங்களிலிருந்து, இஸ்ரயேலானவள் இவ்வளவுக்கு உபத்திரவம் அடைந்ததற்காக நாங்கள் வருந்துகின்றோம்! கிறிஸ்துவின் ஆவியைத் தவறாய்ப் புரிந்துகொள்வதற்கு அநேகக் காரணங்கள், யூதர்களுக்குக் கிடைத்துள்ளதற்காகவும் நாங்கள் வருந்துகின்றோம்! உண்மையுள்ள யூதர்களும், போலி யூதர்களும் காணப்பட்டதை யூதர்கள் நினைவுகூர்ந்தால் மாத்திரமே உண்மை கிறிஸ்தவர்களும், போலி கிறிஸ்தவர்களும் காணப்பட்டிருப்பதை யூதர்களால் புரிந்துகொள்ள முடியும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" (ரோமர் 8:9).

## "யோசேப்பு நீண்ட காலம் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டார்"

யோசேப்பினுடைய சகோதரர்கள் அவரைப் புரிந்துகொள்ள தவறினவர்களாய் இருந்தனர்; அவருக்கும், அவர்களுக்குமுரிய குணலட்சணத்தில் மிகவும் பெரிய வித்தியாசங்கள் இருந்தது. அவர்கள் மிகவும் இரக்கமுள்ளவர்களாகவும், உருக்கமான இருதயம் கொண்டவர்களாகவும் மாறியிருந்தாலும், அவர்களிடத்தில் இன்னமும் கொஞ்சம் கசப்பின் ஆவியும், வன்மத்தின் ஆவியும் காணப்படவே செய்தது; இம்மனநிலையில் அவர்கள் ஒருவேளை யோசேப்பின் ஸ்தானத்தில் காணப்பட்டிருந்தால், அவர்கள் எதிர்க்காலத்தில் ஏதோ சில தண்டனைகளை அளிப்பதற்குத் திட்டம் பண்ணினவர்களாக இருந்திருப்பார்கள். ஆகையால் இரக்கமும், சகோதர சிநேகமும் நிறைந்திருந்த யோசேப்பினுடைய வார்த்தையினால் அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர் மற்றும் அவர் சொன்னப்படி எல்லாம் செய்வார் என்று அவர்களால் நம்பவும் முடியவில்லை. தங்களது தகப்பனாகிய யாக்கோபின் நிமித்தமாக, தங்களிடத்தில் யோசேப்பு இப்படித் தயவாய் நடந்துகொள்கின்றார் என்ற முடிவிற்குள்ளாக அவர்கள் வந்தார்கள்.

ஆகையால்தான் பல வருடங்களுக்குப் பின்பாக, யாக்கோபு மரித்தபோது, யோசேப்பு தங்களை இப்பொழுது பழிவாங்கிவிடுவார் என்று அந்தப் பத்துச் சகோதரர்களும் மிகவும் நடுங்கிப்போனார்கள். அவர்கள் மீண்டுமாக யோசேப்பினிடத்திற்குப் போய், அவரது மன்னிப்பைத் தொடர்ந்து காண்பித்தருளும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் யோசேப்போ,

“பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்” என்றார் (ஆதியாகமம் 50:19-21).

## “யோசேப்பு தேவனால் கற்பிக்கப்பட்டிருந்தார்”

யோசேப்பு படிப்பினைகளைக் கற்றுக்கொண்டவராக இருந்தாலும், அவர் தேவனால் கற்பிக்கப்பட்டிருந்தார் என்பது மிகவும் தெளிவாய்த் தெரிகின்றது. தனது சகோதரர்களுக்கு எதிராக, பழிவாங்குவதற்குரிய எந்த எண்ணமும் அவரிடத்தில் இருக்கவில்லை. அவர்களுடைய பாவத்தினிமித்தமாக எந்த ஒரு தண்டனையும் அளிப்பது யோசேப்பின் காரியமாய் இராமல், மாறாக தேவனுடைய காரியமாக இருந்தது. அந்தத் தண்டனையை, அவர்கள் பல வருடங்களாக தீமை சம்பவிக்குமென எதிர்ப்பார்த்த விதத்திலும், மனவேதனை அடைந்த விதத்திலும், பயந்துகொண்டிருந்த விதத்திலும் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். ஒவ்வொரு தவறுகளுக்கும் நீதியானது, தண்டனை அளிக்கத்தக்கதாக, தெய்வீக ஏற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவது, யோசேப்புடைய காரியமாய் இருக்கவில்லை. அன்பாயும், இரக்கமாயும், தயாளமாயும், மாபெரும் மீட்பருக்கும், அவரது இராஜ்யத்திற்கும் மாதிரியாய்க் காணப்படுவதுந்தான் யோசேப்பினுடைய காரியமாய் இருந்தது.

நம்முடைய சொந்த அனுபவங்களின் விஷயத்திலும் நாம் இப்படியாகவே காணப்பட வேண்டும். மிகவும் சொற்பமான வாய்ப்புள்ள இந்த மனுஷன் எந்தளவுக்குக் கிறிஸ்துவின் ஆவியை/சிந்தையை, சத்தியத்தின் ஆவியை விரிவாய்க் கிரகித்துள்ளதை நாம் வியப்போடே கவனிக்கின்றோம். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை மாதிரியாகப் பெற்றவர்களும், கடந்த யுகங்களினுடைய வரலாற்றினைப் பெற்றவர்களுமான நாம் யோசேப்பின் பாதத்தில் அமர்ந்துகொண்டு, எப்படி அவர் தேவனால் முற்றும் முழுமையாகக் கற்பிக்கப்பட்டார் என்பதை வியப்போடு கவனித்து, அந்தப் படிப்பினைகளை நம் விஷயத்திலும் செயல்படுத்திடுவோமாக. தனக்கு நேரிட்ட கசப்பான நிகழ்வுகளுக்கு எதிராக யோசேப்பு ஒருபோதும் முறுமுறுக்கவில்லை, ஒரு வார்த்தைக்கூடக் கூறிப் புலம்பவில்லை. ஒவ்வொரு வார்த்தையிலும், அனைத்து விஷயங்களிலும், யோசேப்பு தேவனுடைய ஞானத்தை, அன்பை, வல்லமையை மற்றும் தயவைக் குறித்துச் சாட்சிப் பகர்ந்தவராகவே இருந்தார். தனக்கு வந்திட்ட அனுபவங்களில் ஒரு மாற்றத்தையாகிலும் ஏற்படுத்துவது (அ) திருத்தம் பண்ணுவது என்பது, ஒட்டுமொத்த திட்டத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தனக்கு அவசியமாய் இருக்கும் ஜீவியத்தின் சில படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள, தான் தவறிப்போவதற்கு ஏதுவாகவும் இருக்கும் என்றும் யோசேப்பு உணர்ந்திருந்தார்.

ஓ! கர்த்தருடைய பின்னடியார்கள் எவ்வளவாய்த் தங்களுக்குரிய சோதனையான அனுபவங்கள் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தரை நோக்கிப்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்! நாம் தேவனை அன்புகூருகின்றபடியினாலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருக்கின்றபடியினாலும் மற்றும் “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குவதும்,” நம்முடைய மீட்பருடன் உடன் சுதந்தரராக்குவதுமான, குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் மூலம், நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திடுவதற்கு நாம் நாடுகின்றபடியினாலும், அனைத்தையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றுவதற்குத் தேவன் விருப்பமும், வல்லமையும் உடையவராக இருக்கின்றார் என்றும், தேவன் அனைத்தையும் அறிவார் என்றும், தேவன் அனைத்தையும் காண்கின்றார் என்றும், நாம் அனைவரும் தேவன் பேரில் விசுவாசம் கொண்டிருப்பது அவசியம் மற்றும் விசுவாசம் கொண்டிருக்கவும் வேண்டும்.

## “எகிப்தில் யாக்கோபு”

மீதியிருக்கிற இன்னும் ஐந்து வருட பஞ்சகாலங்கள் மாத்திரமாவது தனது தகப்பனாகிய யாக்கோபும், முழுக்குடும்பமும் எகிப்தில் காணப்பட வேண்டுமென்று யோசேப்பு திட்டம் பண்ணினார். கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலப்பகுதியாக கோசேன் நாடு காணப்பட்டபடியால், இப்பகுதியே அவர்களுக்கு ஏற்றதாய் இருக்குமென யோசேப்பு எண்ணினார். தனது பிரதான

ஊழியக்காரனாகிய யோசேப்புடன், பார்வோனின் இருதயம் இசைந்திருந்தபடியாலும், யோசேப்பினுடைய நிர்வாகத்தின் கீழ், காரியங்கள் செழித்தோங்கியிருப்பதின் நிமித்தம் பார்வோன் திருப்தியடைந்திருந்தபடியாலும், பார்வோன் முழுச்சம்மதம் தெரிவித்து, வயதான யாக்கோபினாலும், பெண்களினாலும், குழந்தைகளினாலும், ஒட்டகங்கள், கழுதைகள் மீது சவாரிச் செய்ய முடியாததினால், அவர்களைக் கொண்டுவரும்படிக்கு எகிப்திய வண்டிகளை அனுப்பி வைக்கும்படிக்குப் பார்வோன் கருத்துத் தெரிவித்தார். யோசேப்பு பிரயாணத்திற்கென்று பதார்த்தங்களை ஆயத்தம்பண்ணி, தனது அன்பைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக சிறு அன்பளிப்புகளையும் கொடுத்து அனுப்பினார். "எகிப்திலே எனக்கு உண்டாயிருக்கிற சகல மகிமையையும், நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு அறிவித்து, அவர் சீக்கிரமாய் இவ்விடத்துக்கு வரும்படி செய்யுங்கள் என்று சொல்லி; யோசேப்பு தனது தகப்பனுக்கு விசேஷித்த செய்தியையும் அனுப்புவித்தார் (ஆதியாகமம் 45:13). பின்னர் அவர்கள் அனைவரையும் யோசேப்பு முத்தஞ்செய்து வழியனுப்பிக் கூறினதாவது,

## "வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்"

மனித சுபாவத்தைக் கூர்ந்து கவனிப்பவராக யோசேப்பு தோன்றுகின்றார். அனைத்துச் சூழ்நிலைகளிலும் வாக்குவாதங்களுக்கு எதிராக, சகோதரர்களை எச்சரிப்பது அவசியமற்றது என்று அநேகர் எண்ணிக்கொண்டிருக்கலாம். "அச்சகோதரர்கள் தங்கள் அனுபவங்களின் பலனாக வந்திட்ட தேவ ஆசீர்வாதங்கள் காரணமாக மிகவும் சந்தோஷத்தோடு காணப்படுவதினால், அவர்கள் மத்தியில் அன்பே நிலவுமேயொழிய, எவ்வித சண்டையும்/வாக்குவாதமும் நிலவாது" என்று கூட அநேகர் கூறியிருந்திருக்கலாம். ஆனால் இதற்கு எதிர்மாறானக்கருத்தே எப்பொழுதும் உண்மையாய் இருந்துள்ளது. செழிப்பு/வளமை வரும்போது, கிடைத்திட்ட பொருள்களின் விஷயத்தில் சண்டை பண்ணுவதற்கும், பொறாமைக்கொள்வதற்கும் மற்றும் சுயநலமாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

பழைய நிலைமையிலேயே காணப்பட்ட அச்சகோதரர்கள், பென்யமீன் யோசேப்பிடமிருந்து பெற்றுக்கொண்ட "அதிகப்படியான கவனித்தல்" நிமித்தமாகவும், பென்யமீனுக்குக் கொடுக்கப்பட்ட முந்நூறு வெள்ளிக்காசுகளின் நிமித்தமாகவும், பென்யமீன் மீது பொறாமை அடைந்திருக்கலாம். கோசேன் நாட்டிலுள்ள தங்களுக்கான சுதந்தரவீதத்தைக் குறித்தும் அவர்கள் விசாரித்திருந்திருக்கலாம். தாங்கள் யோசேப்பினுடைய ஆதிக்கத்தின் கீழ்த்தான் காணப்படப் போகின்றார்கள் என்றும், யோசேப்பு பென்யமீனுக்கே அதிகமாய்த் தயவு புரிவார் என்றும், இதுபோன்று இன்னும் சில எண்ணங்களும் அவர்களில் சிலருக்குத் தோன்றியிருக்கும். "வழியிலே சண்டை பண்ணிக்கொள்ளாதிருங்கள்" என்பதான யோசேப்பினுடைய எச்சரிப்பு, அத்தருணத்திற்குப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது.

இப்படியாகவே கர்த்தருடைய சகோதரர்களின் விஷயத்திலும் காணப்படும் என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம். உபத்திரவத்தின்போது அவர்களது இருதயங்களானது கர்த்தரை நோக்கி கதறுகின்றது, ஆனால் வளமையின்போது, அவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக அதிருப்தி/விரோதம் கொள்வதற்கும் மற்றும் ஒருவருக்கொருவர், ஒருவருக்கொருவருடைய வாய்ப்புகள், ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மீது பொறாமைக்கொள்வதற்கும் ஏதுவான நிலைக்குள்ளாகுகின்றனர். இது எத்துணை பெரிய தவறாய்க் காணப்படுகின்றது! கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலில், தனது வளர்ச்சியினுடைய முன்னேற்றத்தினை, ஆண்டவருடைய கண்களானது கவனிக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். சகோதர சிநேகம் என்பது குணலட்சணத்திற்குரிய பரீட்சைகளில் ஒன்றாய் இருக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

மற்றவர்களைக் காட்டிலும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளே சில சமயம் நமக்கு அதிகமானப் பிரச்சனைகளை உருவாக்குகின்றவர்களாய் இருப்பார்கள் என்பது உண்மையே. (சகோதரர்களாகிய) நம்முடைய நெருங்கின உறவும், ஒருவரையொருவர் பற்றின பெருமளவிலான அறிவும், தீமையாய்ப் பேசுவதற்கும், விமர்சிப்பதற்கும், அதிகமான வாய்ப்புகளை நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; ஆனால் (சகோதரர்களல்லாத) மற்றவர்கள் விஷயத்தில் இப்படியாக வாய்ப்புகள் இருப்பதில்லை. தேவனுடைய ஜனங்கள் அனைவரும், "போகும் வழியிலே சண்டை பண்ணிக்கொள்ளாதிருங்கள்" என்ற யோசேப்பின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது நலமாயிருக்கும். கர்த்தரினால் இவ்வழியே நமக்கு ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. அது இடுக்கமான வழியாகவும், சிரமமான வழியாகவும், மாம்சத்திற்கு முழுக்கத் துன்பம் நிறைந்த

வழியாகவும், ஆவிக்கு/சிந்தைக்குச் சோதனைகளும், பரீட்சைகளும் முழுக்க நிறைந்த வழியாகவும் காணப்படுகின்றது; ஆகையால் இந்தச் சிரமங்களுக்கு ஏற்ப, அன்பும், இரக்கமும், ஒத்துழைப்பும் மற்றும் உதவிக்கரம் அளித்தலும்/ஆதரவும் காணப்பட வேண்டும். நம்முடைய பாடத்தில் ஆதார வசனத்திலுள்ள சங்கீதக்காரனுடைய வார்த்தைகளானது, கர்த்தருடைய சகோதரராகிய சபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனமாய் எழுதப்பட்டதாய் இருக்கின்றது; "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1).

சபையாகிய சகோதர சகோதரிகளினுடைய இந்த ஒற்றுமையை, இராஜா மற்றும் பிரதான ஆசாரியன் தங்கள் பணிக்கென ஏற்படுத்தப்படும் பொழுது, நல்ல தைலம் அவர்கள் தலையின் மீது ஊற்றப்படும் காரியத்துடன் சங்கீதக்காரன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். அபிஷேகத்தைலமானது பரிசுத்த ஆவியைக் குறிப்பதையும், இத்தைலமானது பிரதான ஆசாரியனுடைய தாடியில் வடிந்து, அவரது அங்கியில் இறங்கி வடிந்து, ஆசாரியனுடைய முழுச்சரீரத்தையும் அபிஷேகிப்பதையும் இங்குப் பார்க்கலாம். இந்த ஆசாரியன் தலையாகிய இயேசுவையும், அவரது சரீரமாகிய சபையையும் உள்ளடக்கினதுமான இராஜரிக ஆசாரியனாகிய மெல்கிசெதேக்கைக் குறிக்கின்றார். பெந்தெகொஸ்தே நாளன்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மீது கடந்துவந்த பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகமானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் தொடர்ந்து வருகின்றது மற்றும் அவரது உண்மையான அங்கங்கள் அனைவரையும் அபிஷேகிக்கின்றது. இந்த அபிஷேகத்தினாலேயே, இந்த அங்கத்தினர்கள், கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டவர்களாக அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். "நீங்கள் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றீர்கள்" (1 கொரிந்தியர் 12:13).

---

R 5241/531

# எத்தனை காலம் தேவனே? எத்தனை காலமோ?

பலவீனர் பலவான்களுக்கு ஊழியம் செய்வது இன்னும் எத்தனை காலமோ?
எத்தனைகாலம்தான், வலியவர் தாம் நினைத்தது சரி என நிலைநிறுத்திடுவார்?
எத்தனைகாலம்தான், ஒளியை இருள் வெறுத்தொதுக்கும்?
இன்னும் எத்தனை காலம் தான், சத்தியம் தீமையை நசுக்குவதற்கே?
இன்னும் எத்தனை காலம் தான், இருள் பகலாய் மாறுவதற்கே?
இன்னும் எத்தனை காலம் தான், துன்பங்கள் பறந்து ஓடுதற்கே?
இன்னும் எத்தனை காலம் தான், சண்டைகள் ஓய்ந்து முடிவதற்கே?
இன்னும் எத்தனை காலம் தான், இந்த சீர்கேடு முடிந்து அமைதி நிலைபெற்றிட?
இன்னும் எத்தனை காலம் தான், இந்த சபிக்கப்பட்ட பூமி இரண்டாம் பிறப்பெடுக்க?
இன்னும் எத்தனை காலம் தான்,
பெருமையுள்ளவர் சிறுமையுள்ளவர் குதிகாலை மிதித்திருப்பார்?
இந்த நீண்ட இரவால் நான் களைப்படைந்து போகின்றேனே,
காலை ஒளிக்காய் ஏங்குகின்றேனே,
உம்முகம் காண்பதற்கே நாள் எந்த நாளோ?
நீர் என்னை அணைப்பதற்கே ஏக்கம் கொண்டுள்ளேனே,
நீர் எனக்கு வாக்குத்தத்தம் செய்த வீட்டை வந்து சேர்வதற்கே
எத்தனை காலம் ஆகுமென்றே ஏக்கம் கொள்கின்றேன்,
அதிககாலம் இல்லை என் மகனே, அதிக்காலம் இல்லை,
வீரம்கொண்டே, உண்மையுடனே திடமனதாயிருப்பாய்,
பகலின் நட்சத்திரம் விரைவில் ஒளிர்ந்திடுவார்,
கண்ணுக்குப் புலப்படும் ராஜ்ஜியம் விரைவில் நெருங்கிடுதே,
நிமிர்ந்து பார் என் மகனே, நீயும் நிமிர்ந்து பார்த்திடுவாய்,
உன்னால் பார்க்க முடியவில்லை என்றால் விசுவாசம் கொண்டிடுவாய்,
நான் விரைவில் உன்னை வீட்டுக்குள் அழைத்துக்கொள்வேன், நம்பிக்கை இழக்காதே.

--1905--

R 5255

# பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக்கூட்டங்கள்

பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் மற்றும் சாட்சிக்கூட்டங்களின் மகா முக்கியத்துவத்தைப் பற்றின சரியான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வரத்தக்கதாக, பயண ஊழியர்கள் தாங்கள் சந்திக்க வாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் வெவ்வேறு சபையாருக்குத் தங்களாலான உதவியினைச் செய்யும்படிக்கு நாம் பயண ஊழியர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளோம். இப்படியாக நாம் ஆலோசனை வழங்கியும், வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதியில், இவற்றை விவரித்தும்கூட, அருமையான நண்பர்களில் சிலர், இவற்றை முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகத் தோன்றுகின்றது. இதற்குக் காரணம், அவர்கள் அவற்றை முறையாய் நடத்தப்படுவதை ஒருபோதும் கண்டதில்லை என்று நாம் எண்ணுகின்றோம். எங்கு நல்ல பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளும், சாட்சிக்கூட்டங்களும் சரியாய் நடத்தப்படுகின்றதோ, அங்குப் பிரசங்கங்களைக் கேட்பதற்கு வாய்ப்பு இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நிச்சயமாய் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சிக் காணப்படும்.

பயண ஊழியர்களாகிய சகோதரர்கள் - மிகவும் கவனத்தோடும் மற்றும் அவர்கள் கிறிஸ்தவ அனுபவங்களினால் நன்கு வனையப்பெற்றவர்களாகவும், பெரோயா ஆராய்ச்சிகளையும், சாட்சிக்கூட்டங்களையும் நடத்துவதில் அனுபவமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள் என்கிற எண்ணத்தோடும் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஆகையால் ஒரு பயண ஊழியக்காரர் இப்படியான கூட்டம் நடத்தப்படாத ஓர் இடத்திற்குப் போகையில், சுவாரசியமான விதத்திலும், பிரயோஜனமான விதத்திலும், ஆறாம் தொகுதியில் சுட்டிக்காண்பிக்கப்பட்டவைகளுக்கேற்ப எப்படி இத்தகையக் கூட்டங்கள் நடத்தப்படலாம் என்பதற்கான மாதிரிகளைக் கொடுத்திடுவதின் மூலம், நண்பர்களுக்குச் சிறப்பாய் ஊழியம்புரிந்திடலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது.

எங்கெல்லாம் இத்தகைய கூட்டங்களானது ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு மற்றும் ஆர்வமுள்ளவர்களால் கலந்துகொள்ளப்பட்டு வருகின்றதோ, அங்குப் பயண ஊழியர்கள் மாதிரி கூட்டங்களை நடத்திக் காண்பிக்க அவசியமில்லை. எனினும் ஓர் இடத்தில் அவர்கள் ஒரு மாலைக் கூட்டத்திலும் மற்றும் வழக்கமாய் நடைப்பெற்றுவரும் மாலை நேர சாட்சிக்கூட்டத்திலும் பங்கெடுக்க வாய்ப்பு ஏற்படும்போது, பயண ஊழியர் ஆறாம் தொகுதியின் அடிப்படையில் சாட்சிக்கூட்டத்தினை நடத்தி, ஒரு மணி நேரத்தில் முடித்துவிட்டு, பின்னர்ச் சபையாருக்கு மிகவும் உதவிகரமாய்க் காணப்படும் விதத்தில் காலம், இடம் மற்றும் சூழ்நிலைக்கேற்ப கூடுதலாக அரை மணி நேரம் எடுத்து மனம்விட்டுப் பேசுவது நலமாய் இருக்கும். பொதுவில் பேசுகிற சகோதரர்கள் யாவரும் தங்கள் செய்தியினை 60-நிமிடங்களுக்குள்ளாக முடித்துக்கொள்ளவும் மற்றும் கண்டிப்பாக 70-நிமிடங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் நாம் வலியுறுத்தியுள்ளோம் மற்றும் ஏதேனும் காரணத்தினால் அவர்கள் பேசிடுவதற்கு இதற்குமேல் நேரம் எடுப்பார்களானால், அந்தக் குறிப்பிட்ட காரணங்களை அவர்கள் எங்களுக்குத் தயவாய் விவரிப்பார்களாக.

இது சகோதரர்களைத் தடைப்பண்ண வேண்டும் என்பதற்காக இல்லாமல், மாறாக நீண்ட நேர செய்திக்கொடுப்பது என்பது ஜனங்களுக்குக் கடினமாகக் காணப்படும் மற்றும் இது நாம் ஊழியம் புரிந்திட நாடுகின்றதான கர்த்தருடைய காரணங்களுக்கு இடையூறுபண்ணுகின்றதாய் இருக்கும் என்பதினாலேயே ஆகும். இதற்கு விதிவிலக்கு, இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் வழக்கமாய்க் கொண்டிருக்கும் தொடர்க் கூட்டங்களாகும்; ஏனெனில் ஜனங்களைக் கொண்டுவருவதற்கென விசேஷித்தப் பிரயாசங்கள் ஏறெடுக்கையில், இதற்குக் கொஞ்சம் கூடுதல் நேரம் தேவைப்படும்; மேலும் விசேஷமாகக் சுவாரசியமாய்ப் பேசக்கூடிய பேச்சாளர்கள் நீண்ட நேர செய்திக்கொடுப்பது ஞானமான காரியமாகும். சராசரியான பேச்சாளனால், இரண்டு மணி நேரங்களில் செய்வதைக் காட்டிலும், ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்ளும்போதே அதிக நன்மை உண்டுபண்ணிடலாம்.

இந்த ஆலோசனைகளிலும் மற்றும் அனைத்து ஆலோசனைகளிலும் மற்றும் ஒழுங்குகளிலும், கர்த்தரை மகிமைப்படுத்துவதும், அவரது ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதும்தான் எங்களது நோக்கமாகவும், குறிக்கோளாகவும், விருப்பமாகவும் காணப்படுகின்றது என்று நீங்கள் உறுதியாக எடுத்துக்கொள்ளலாம்.

# இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்துபோகப்பட்டது

## யாத்திராகமம் 12:21-31

***"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." மத்தேயு 20:28***

யூதருடைய பஸ்கா என்பது ஓர் ஏற்பாடு என்றும், அது கடந்த காலங்களிலுள்ள ஒரு நினைவுகூருதல் என்றும், அதில் தங்களுக்கு எவ்விதமான விசேஷித்த கவனமும் இல்லை என்றும் கிறிஸ்தவ ஜனங்கள் கூறுவதுண்டு. பஸ்காவின் அர்த்தம் பொதுவாய்ப் புரிந்துகொள்ளப்படாததே, இப்படிப் பார்க்கப்படுவதற்கான காரணமாய் இருக்கின்றது. யூதனைக் காட்டிலும் உண்மையில் கிறிஸ்தவனே பஸ்காவின்மீது மிகுந்த ஆழமான கவனம் கொண்டவனாய் இருக்கின்றான். ஆனால் ஒருவிதத்தில் முழு உலகமே, அதன்மீது கவனம் கொண்டிருக்கின்றது மற்றும் அதை நாம் நம்முடைய இந்தப் பாடத்தில் பார்ப்போம்.

எபிரெயர்களுக்குப் பண்ணப்பட்டதான விடாப்பிடியான துன்புறுத்தல்களின் நிமித்தமாக எகிப்தியர்கள் மீது தண்டனையாக வந்த பத்தாவது வாதையானது, அவர்களது முதற்பேறானவர்களுடைய மரணத்தைக்கொண்டுவந்ததாய் இருந்தது. எகிப்தினுடைய ஒவ்வொரு வீட்டிலும் மரணம் வந்தது; அவர்களது குடும்பங்களினுடைய மலராகிய முதற்பேறான புத்திரன் (அ) புத்திரி மீது மரணம் வந்ததாய் இருந்தது. அந்த இரவினுடைய பீதி குறித்து விளக்குவதைக்காட்டிலும், நன்கு கற்பனை செய்து பார்க்கப்படலாம்.

மரணமானது எப்போதும் வேதவாக்கியங்களில் மனிதனுடைய சத்துரு என்றும், பாவத்திற்கான தண்டனை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவத்தின் காரணமாக மரணத்தீர்ப்பானது நம்முடைய முதலாம் பெற்றோர்கள்மீது கடந்துவந்ததாய் இருந்தது மற்றும் அவர்கள் மூலம், முன்னோர் வழிவரும் பிரமாணங்கள் வாயிலாக, அது அவர்களது பிள்ளைகள் அனைவரின்மீது, மனுக்குலம்மீது கடந்துவந்ததாய் இருந்தது. நாம் அனைவரும் மரித்துக்கொண்டிருக்கின்றோம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கான ஒரே நம்பிக்கையானது, தேவன் நாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார் என்றும், "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" உள்ள இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக, அவர் தம் நீதி திருப்திப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றுமுள்ள உண்மைகளில் அடங்கியுள்ளது என்று வேதாகமம் தெரிவிக்கின்றது. பாவம் மற்றும் மரணத்திற்கான மாபெரும் தீர்வானது சீக்கிரத்தில் மனுக்குலத்திற்காகச் செயல்படுத்தப்படும் என்றும் வேதாகமம் கூறுகின்றதாய் இருக்கின்றது. மேசியாவினுடைய ஆளுகையின்போது, மரணத்தண்டனையானது இரத்துச் செய்யப்படும்; சாபமானது மாற்றிப்போடப்படும். மற்றும் அழுகையோ (அ) சஞ்சலமோ (அ) மரித்தலோ இருக்காது.

சாபம், மரணம் மாற்றிப்போடப்படுவது என்பது மகிமையடைந்த மீட்பர் வாயிலாக ஜீவனுடைய ஆசீர்வாதம் கடந்துவருவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். அப்போது முழுமையாய் வெளிச்சமூட்டப்பட்டு, அவரது கரங்களினின்று தெய்வீகத் தயவினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் அவர் ஜீவன் அளிப்பவராக இருப்பார். மனுக்குலத்தில் விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்கள் அனைவரும் தகப்பனாகிய ஆதாமினுடைய மகிமையான பூரணத்திடத்திற்கும், நித்திய ஜீவனுக்கான சிலாக்கியத்திடத்திற்கும், முழுமையாய்ச் சீர்ப்பொருந்துவதற்கான உயிர்த்தெழுதலின் பணி ஆரம்பமாகும்.

எகிப்தியர்கள்மீது தேவன் அந்த இரவில் வர அனுமதித்ததானது, ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலம் அனைத்திற்கும் எதிராக காணப்பட்டு வருகின்றதான அதே தண்டனை மாத்திரமேயாகும். தண்டனை மரணமாக மாத்திரமாய்க் காணப்படாமல், சடுதியான மரணமாய்க் காணப்பட்டது. நல் ஆரோக்கியமான நிலையிலிருந்த முதற்பேறானவர்கள் ஓய்வு எடுக்கப்போனபோது, காலைக்கு முன்னதாக அவர்கள் பிணங்களானார்கள்; அவர்கள் சாதாரணமாய் மரிப்பதுபோல் இல்லாமல், மரணத்தண்டனையானது அவர்கள்மீது சடுதியாய் வந்தது. அவர்கள் நித்திரையடைந்தனர்.

இந்த வாதையானது இஸ்ரயேலின் வீடுகளைத் தீண்டவில்லை. இவர்களது முதற்பேறானவர்கள் சர்வ வல்லமையுள்ளவரால் தப்புவிக்கப்பட்டனர், கடந்துபோகப்பட்டனர், பாதுகாக்கப்பட்டனர்; ஆகையால்தான் பஸ்கா/கடந்துபோகுதல் என்ற இந்தப் பெயர் வழங்கப்பட்டது. தெய்வீகக் கட்டளையின் பேரில் இஸ்ரயேலர்கள் இந்தச் சரித்திர நிகழ்வினுடைய ஆண்டு நிறைவு நாளினைத் தொடர்ந்து ஆசரித்தனர். ஒவ்வொரு இஸ்ரயேலனும் பஸ்காவினை ஆசரிக்கும்போது,

தனது முற்பிதாக்களினுடைய இந்தத் தெய்வீக விடுதலைப்பற்றின இந்தப் பதிவின் மீதான தனது நம்பிக்கையையும், தேவனிடத்திலான விசுவாசத்தையும் வெளிப்படுத்துகின்றவனாய் இருக்கின்றான் – இப்படியில்லையெனில் அவன் வஞ்சகம் பண்ணுகிறவனாய் இருப்பான்; ஏனெனில் இதற்கு வேறெந்த அர்த்தமும் இல்லை.

## பஸ்காவினுடைய உண்மையான அர்த்தம்

இஸ்ரயேல் கடந்துபோகப்பட்டதான அனுபவமானது ஓர் உருவகமாகும். நிழலில் இவைகள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய – ஆவிக்குரிய இஸ்ரயேலுடைய அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அனைத்து ஜாதிகளிலிருந்தும், பிரிவுகளிலிருந்தும் – யூதர்கள், உரோமர்கள், பிரஞ்சு மக்கள், பிரிட்டிஷ் மக்கள் முதலானவர்களிடமிருந்தும் – சகல ஜாதிகளிலிருந்தும், கோத்திரத்தாரிடமிருந்தும், பாஷைக்காரரிடமிருந்தும் கூட்டிச்சேர்க்கப்படுகின்ற பரிசுத்தவான்களாகிய தேவ ஜனங்கள் அடங்கிய கூட்டத்தாரே இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர் என்பது கவனிக்கப்பட வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலின் பிரதான அங்கத்தினர்கள் மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து வந்தனர். எனினும் எந்த ஜாதியாரும் தள்ளிவைக்கப்படுவதில்லை. இது ஒரு தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் வகுப்பாராகும்; இவர்கள் ஜாதியின் அடிப்படையிலோ அல்லது குணலட்சணத்தைத் தவிர மற்றபடி வேறெந்த முன்னுரிமைகளின் அடிப்படையிலோ தெரிந்தெடுக்கப்படுவதில்லை.

ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்த வகுப்பார், அந்த இரவில் கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின், அதாவது மாம்சீக இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். அடுத்தநாள் காலையில் இஸ்ரயேல் அனைத்தும் முதற்பேறானவர்களுடைய தலைமையின்கீழ் வெளியேறினார்கள்; இந்த முதற்பேறானவர்கள் பிற்பாடு ஆசாரியக்கோத்திரத்தில் அடையாளப்படுத்தப்பட்டனர்; இந்த ஆசாரியக்கோத்திரத்தார் மகிமையடைந்த மேசியாவை, இராஜரிக பிரதான ஆசாரியனாகப் பெற்றிருக்கும் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரை அடையாளப்படுத்துபவர்களானார்கள். அவரும், அவரது "முதற்பேறானவர்களின் சபையும்," அவரது உயிர்த்தெழுதலில், அதாவது முதலாவது (அ) பிரதான உயிர்த்தெழுதலில் பங்கடைவதன் மூலமாக சீக்கிரத்தில் மகிமையடைந்து, தேவனுடன் இசைவிற்குள் திரும்ப விரும்புகின்ற அனைவரையும் ஆசீர்வதிக்கின்றதான மேசியாவின் இராஜ்யத்தில், வல்லமையிலும், மகிமையிலும் நிறுத்தப்படுவார்கள். (எபிரெயர் 12:23)

கடந்த காலங்களில், வேதத்தின் மாணவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் குறைவான வேகத்திலேயே காணப்பட்டனர். படிப்படியாக, தற்போதுள்ள சிலாக்கியங்களினுடைய வெளிச்சத்தில், தெய்வீக அன்பினுடைய, ஞானத்தினுடைய, வல்லமையினுடைய நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும், அவர்கள் கற்பனைக்கூடப்பண்ணிப்பார்க்காத அளவுக்குத் தேவனுடைய வார்த்தைகளானது முன்வைக்கின்றது என்ற உண்மையினை அவர்கள் உணர்ந்துகொள்ளும் நிலைக்கு வருகின்றனர். தேவன் முதற்பேறானவர்களின் சபை என்று பேசும்போது, அவர் மற்றக் குமாரர்களையும் கொண்டிருக்க நோக்கம் கொண்டுள்ளார் என்றும், இவர்கள் முதலாவது குமாரர்கள் மாத்திரமே என்றும் அவர் சுட்டிக்காட்டுவதாக இப்பொழுது வேதத்தின் மாணவர்கள் பார்த்து வருகின்றனர். கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரம் எகிப்தினுடைய அடிமைத்தனத்தினின்று தப்புவிக்கப்படாததுபோன்று, எகிப்தின் அடிமைத்தனமானது அடையாளப்படுத்துகின்றதான பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து முதற்பேறானவர்களின் சபை மாத்திரமே காப்பாற்றப்படுவதில்லை. முதற்பேறானவர்கள் காப்பாற்றப்படுவது என்பது, மீதியானவர்களுடைய விடுதலையையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

இரவு மற்றும் காலைக்கும்கூட நிஜங்கள் காணப்படுகின்றன. தேவனுக்குள் இசைவிற்கு வரவிரும்பின அநேகரைப் பாவம் மற்றும் மரணம் அடிமைப்படுத்தி, கட்டுப்படுத்திக்கொண்டிருந்ததான ஆறாயிரம் ஆண்டுகள் காலத்தை, இரவுவேளை என்று வேதாகமம் குறிப்பிடுகின்றது. இந்த இரவுவேளையில், தேவனுடைய ஜனங்கள் அதிகமதிகமாய்ப் பார்வோன் மற்றும் எகிப்தியர்கள் அடையாளப்படுத்துகின்ற சாத்தான் மற்றும் அவனது ஊழியர்களினால் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இது ஆறாயிரம் வருடங்களுள்ள நீண்ட இரவுவேளையாகும் மற்றும் இது குறித்துத் தீர்க்கதரிசி, "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்று குறிப்பிடுகின்றார். (சங்கீதம் 30:5)

காலை என்பது மாபெரும் நிஜமான ஓய்வுநாளாகிய, ஏழாம் ஆயிரவருட நாளினுடைய விடியலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அப்போது தெய்வீக வல்லமையினால் மரணத்திலிருந்து, ஜீவனுக்குக் கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்களின் சபையும்,

மேசியாவும் இராஜ்யத்தின் மகிமையில் நிறுத்தப்படுவார்கள் மற்றும் தேவனுடன் இசைவிற்குள் வரவிரும்புகின்றவர்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் பணி ஆரம்பமாகும்.

தற்போதுள்ள யுகத்திலிருந்து, புதிய யுகமானது முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படும் என்பதினால், அடையாளத்தில் புதிய யுகமானது, இரவு என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளதான தற்கால யுகத்தினுடைய இருளுக்கு எதிர்மாறான, காலை வேளையினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேசியாவின் இராஜ்யமாகிய காலையில், அவரே மாபெரும் இராஜாவாக ஒளியின் அதிபதியாகக் காணப்படுவார். அப்போது இருளின் அதிபதி கட்டப்பட்டிருப்பான். ஆயிரவருட காலங்களைக் கொண்டதான அந்த மகிமையான யுகத்தின்போது, தேவனுடன் இசைவிற்குள் வரவிரும்புகிறவர்கள் அனைவரும், இஸ்ரயேலர்கள் ஆகுவார்கள் மற்றும் படிப்படியாக மோசேக்கு நிஜமானவரால் சீர்ப்பொருந்தப்பட்டதான பரதீசின் பூரணத்திற்கு நேராக வழிநடத்தப்படுவார்கள். ஏதேனில் ஆதாமினால் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் இயேசுவின் மரணத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதுமான அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் விருப்பமற்றவர்களும், கீழ்ப்படியாதவர்களுந்தான் தவறிப்போவார்கள்.

## என் முதற்பிறப்பாகிய இஸ்ரயேல்

எந்த ஓர் ஆசீர்வாதமும், பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான எந்த ஒரு விடுதலையும் தேவனுடைய கிருபையினால் உண்டானதாக இருக்கின்றதாலும், நீதியினுடைய கட்டாயத்தின் பேரில் உண்டானதாக இராததினாலும், தாம் நோக்கம் கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களானது, ஆபிரகாமின் சந்ததி (அ) பிள்ளைகள் வாயிலாக மனுக்குலத்தை அடைய வேண்டுமென்று நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தேவன் தீர்மானித்திடுவதற்கு முழு உரிமையையும் கொண்டவராய் இருந்தார். இதைக் குறித்து அவர் தெளிவாய், ஆனால் மறைமுகமான விதத்தில் தெரிவித்துள்ளார். ஆபிரகாமுக்கு இரண்டு வெவ்வேறு சந்ததியினர் காணப்பட்டார்கள் என்றும், ஒன்று பரலோக சந்ததியினர், மற்றொன்று பூமிக்குரிய சந்ததியினர் என்றும் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார்; ஆனால் யூதர்கள் இதைக் கவனிக்கவில்லை. அவர் "உன் சந்ததி (1) வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், (2) கடற்கரை மணலைப்போலவும்" காணப்படும் என்றும் கூறினார்.

தேவன் இப்படியாக ஆபிரகாமிடம் விவரித்துக்கூறவில்லை, ஆனால் வாக்குத்தத்தத்தினுடைய இவ்வம்சத்தினை நாம் இப்பொழுது பார்க்கின்றோம். நட்சத்திரங்களானது ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியாரை – மேசியா மற்றும் அவரது மணவாட்டி என்று அடையாளமாய் அழைக்கப்படுகின்றதான சபையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எண்ணமுடியாத – கடற்கரை மணலானது, இறுதியில் பாவம் மற்றும் மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுபவர்களும், "முதற்பேறானவர்களின் சபையை" ஆவிக்குரிய சந்ததியாகப் பெற்றிருக்கின்றதான மேசியாவின் இராஜ்யத்தில் தெய்வீகத் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் சீர்ப்பொருந்தப்படுபவர்களுமான ஜனங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆவிக்குரிய சந்ததியாரைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில், தேவன் ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியினரை மறந்துபோகவுமில்லை, தம்முடைய தயவை விலக்கிக்கொள்ளவுமில்லை; ஏனெனில் அவர்களுக்கே முதலாம் சிலாக்கியம் அல்லது வாய்ப்புக் கிடைத்ததாய் இருந்தது மற்றும் இவர்களிடமிருந்தே இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலரின் – ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியின் முதலாம் அங்கத்தினர்கள் கூட்டிச்சேர்க்கப்பட்டனர். இவர்களைக் குறித்துப் பரிசுத்த பவுல், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்றார். (கலாத்தியர் 3:29) அதாவது ஆபிரகாமின் இந்த ஆவிக்குரிய சந்ததியார் வாயிலாக மனுக்குலம் அனைத்தும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் – பாவம் மற்றும் மரணத்தினுடைய சாபம் நீக்கப்படும் என்று ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான "வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்றார். (வெளிப்படுத்தல் 21:4, 5; 22:3)

இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர் பூமிக்குரிய சுபாவத்தினின்று, பரலோக சுபாவத்திற்கு மறுரூபமடைந்து, நிறைவடையும்போது, தேவனுடைய ஆசீர்வாதங்களானது, மீண்டுமாக ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததியினிடத்திற்குக் கடந்துவர ஆரம்பிக்கும் என்றும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்படியாக ஆவிக்குரிய சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஏற்பாடுகள் யூதர்களுக்கென்று முதலாவதாகக் காணப்பட்டது மற்றும் பூமிக்குரிய சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்திலும், அதாவது மனிதப் பூரணத்திற்குச் சீர்ப்பொருந்தும் விஷயத்திலும் யூதர்களுக்கே தேவனுடைய ஏற்பாடுகளானது முதலாவதாகக் காணப்படும். (உரோமர் 11:25-33; அப்போஸ்தலர் 3:19-21)

## முதற்பேறானவர்கள் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டனர்

இஸ்ரயேலின் முதற்பேறானவர்களிடத்தில் பாராட்டப்பட்டத் தெய்வீகக் கிருபையானது, இரத்தத்தினாலேயே ஆயிற்று என்பதைக் கவனிக்க நாம் தவறிட வேண்டாம். ஆம் பரிசுத்த பவுல் சுட்டிக்காட்டுவதுபோன்று, பழைய ஏற்பாட்டினுடைய வேதவாக்கியங்களுடைய முழுப் பாடமுமே, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்பதேயாகும். தெய்வீகக் கட்டளையின் பேரில் இஸ்ரயேலர்கள் ஒரு வயதுள்ள பழுதற்ற ஆட்டுக்குட்டியினைத் தெரிந்துகொண்டு, அதை அடித்து, அதன் இரத்தத்தினைத் தங்கள் வீட்டுவாசலின் நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும், தெளித்து, உள்ளிருந்து அதன் மாம்சத்தைப் புசிப்பதன்வாயிலாக, கர்த்தரிடத்தில் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட்டனர்.

பஸ்கா எப்படி நிழலாகக் காணப்படுகின்றதோ, அப்படியே ஆட்டுக்குட்டியும், இரத்தம் தெளிக்கப்படுதலும்கூட நிழலாய்க் காணப்படுகின்றது. ஆட்டுக்குட்டியானது, தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவை – கறைதிறையற்றவரும், மாசில்லாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவருமான இயேசுவை அடையாளப்படுத்துகின்றது. அவரது மரணம் என்பது அவருடைய சொந்த பாவங்களுக்கென்று இல்லாமல், மாறாக மனுக்குலத்தினுடைய பாவத்திற்காகவேயாகும். இன்னுமாகக் கிறிஸ்து சபைக்காக மாத்திரம் மரியாமல், வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோன்று முழு உலகத்தினுடைய பாவத்திற்காகவும் மரித்தார் என்பதையும் கவனிப்பது அவசியமாயுள்ளது. சபை என்பவர்கள், உலகத்தில் ஒரு சிறு எண்ணிக்கையினரே; அதாவது முதற்பேறானவர்களின் எண்ணிக்கையினரேயாகும். பரிசுத்த யாக்கோபு சொல்வதுபோன்று நாம், தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாய் இருக்கின்றோம். (யாக்கோபு 1:18) சபையோ இரவில் கடந்துபோகப்படுகின்றனர் மற்றும் மற்றவர்களுக்கெல்லாம் முன்னதாக விசேஷமாய் இரட்சிக்கப்படுகின்றனர்; ஆனால் இரத்தத்தினுடைய புண்ணியத்தின் மூலமே தப்பித்துக்கொள்கிறார்களே ஒழிய மற்றப்படியல்ல. முதற்பேறானவர்களை மாத்திரம் இரத்தம் மூடுகிறதில்லை எனும் காரியமானது நிழலில் இரத்தமானது முதற்பேறானவர்களுக்கென்று மாத்திரம் தெளிக்கப்படாமல், விசுவாச வீட்டாரைக் குறிக்கின்றதான வீட்டின்மீதும் தெளிக்கப்படும் காரியத்தின்மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

*****

# தேவசமாதானம்

***"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." பிலிப்பியர் 4:7***

சமாதானம் என்பதின் அர்த்தம், அமைதியான அல்லது மனம் கலக்கமற்ற நிலைமையாகவும், அமைதிக் குலைவிலிருந்து (அ) கலகத்திலிருந்து விடுதலைபெற்ற நிலைமையாகவும் – சாந்தமான நிலைமையாகவும், மன அமைதியுடன் இருக்கும் நிலைமையாகவும் உள்ளது. இப்படியான மன நிலைமையில்தான் தேவன் காணப்படுவதாக, நம்முடைய ஆதார வசனம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தேவன் மனக்கலக்கமுறாதவராகவும், அமைதல் உள்ளவராகவும், அமைதி குலைவு பெறாதவராகவும், தம்முடைய பரந்த ஆட்சிப்பகுதி பற்றின எந்த அக்கறைகளினாலும் ஒருபோதும் கலக்கம் அடையாதவராகவும், சோர்வடையாதவராகவும், திகைப்புறாதவராகவும் காணப்படுகின்றார். எனினும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற தேவனுடைய இந்தப் பூரணமான சமாதானத்திற்கான காரணம், அவரது பரந்துவிரிந்து காணப்படும் ஆட்சி பகுதியில் எவ்விதமான ஒழுங்கீனங்களும் இல்லை என்பதாகவோ அல்லது அவர் விருப்பு வெறுப்பு அற்றவர் என்பதாகவோ இல்லாமல், மாறாக அவரது மகிமையான பண்புகள் பூரண சமநிலையில் காணப்படுவதினால், அவர் ஒட்டுமொத்த அண்டசராசரத்தின் இராஜாவாக, தமது சூழ்நிலைகளை அடக்கி ஆளுபவராகக் காணப்படுகின்றார் என்பதேயாகும்.

குழப்பமும், போரினுடைய புகை மேகத்தின் மத்தியிலும் மாபெரும் தளபதிகளாகிய கிராண்ட் மற்றும் நெப்போலியன் போன்றவர்கள் கொண்டிருந்த அமைதியையும், சாந்தத்தையும், தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? அல்லது தேசிய குழப்பங்கள் மற்றும் ஆபத்துக்கள் மத்தியில் மாபெரும் ஆட்சி வல்லுநர்களாகிய கிலாட்ஸ்டோன் (அ) பிஸ்மார்க் போன்றவர்களும் அல்லது ஆபத்தான நேரங்களிலும், இடங்களிலும் திறமிக்க மருத்துவர்களும், இன்னும் மற்றவர்களும் தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும், சாந்தத்தையும், அமைதலையும் கொண்டிருப்பதைக் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? இவர்கள் அனைவரும், தேவனுடைய மனதை ஆண்டிடும் தன்னம்பிக்கை மற்றும் தமது உணர்வுகளைத் தாமே கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் விளைவான சமாதானத்திற்கான இலேசான உதாரணங்களே ஆவார்கள். தேவன் ஒருபோதும் குழப்பம் அடைவதில்லை, திகைப்பதில்லை, தடுமாறிவிடுவதில்லை, கவலைப்படுகிறதில்லை அல்லது தமது திட்டங்கள் தோல்வியடைந்து விடுமோ என்றோ அல்லது தமது நோக்கங்கள் தோல்வியடைந்துவிடுமோ என்றோ பயப்படுவதும் இல்லை; காரணம் அவரிடம் அனைத்து வல்லமையும், ஞானமும் காணப்படுகின்றது.

எந்த ஒரு காரியத்தின் விஷயத்திலும், அது நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளின் உச்சக்கட்டங்கள்வரை, நோக்கிப்பார்க்கும் அளவுக்கு, அவரது திறமிக்க அறிவு/ஞானம் காணப்படுகின்றது. மேலும் அவரது அறிவானது, அனைத்துக் காரணங்களையும் புரிந்து கொள்கின்றது மற்றும் சகல விளைவுகளையும் துல்லியமாய் உய்த்துணர்கின்றது; இதன் காரணமாக அவர் ஆதிமுதல் அந்தம் வரையிலுமானவைகளை, ஞானக்கொள்கைகளின் அடிப்படையில் மாத்திரமல்லாமல் உள்ளுணர்வினால் அறிந்தவராகவும் காணப்படுகின்றார். சகலவற்றின் சிருஷ்டிகராக மற்றும் சகல பிரமாணங்களைத் தோற்றுவித்தவராக அவர், சரீரம் மற்றும் மனம் அறிவு சார்ந்த பிரமாணங்களையுடைய சிக்கலான நுட்பங்களுக்கு முழுமையாய்ப் பழக்கப்பட்டவராகக் காணப்பட்டப்படியினால், அவரது மனதிற்குத் தெரிந்திராத தீர்வையுடைய எந்தப் பிரச்சனையும் எழும்புவதில்லை. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5).

சகலவற்றின் சிருஷ்டிகராகிய தேவன் அனைத்தையும் தாங்கிடுவதற்கும்/அழியாமல் தடுத்து நிறுத்துவதற்கும் ஆற்றல்மிக்கவராய்க் காணப்படுகின்றார். ஆபத்தின் (அ) குழப்பத்தின் எவ்விதமான ஐயமில்லாமல், கடந்த யுகங்களிலெல்லாம் ஒட்டுமொத்த அண்டசராசரமும் அவருடைய சித்தத்தை

அமைதலான கம்பீரத்துடன் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றது; மற்றும் அவர் வல்லமையானது சதாகாலங்களிலும் அண்டசராசரத்தினைத் தாங்கிடுவதற்கு வாக்குறுதியும் அளித்துள்ளது.

ஆகவே திரளாகவும் மற்றும் தமக்குள்ளாகவும் காணப்படுகின்ற வல்லமை மற்றும் ஞானம் என்னும் ஆதாரத்திலிருந்தே, தேவனுடைய சமாதானம் தோன்றியுள்ளது. ஆனால் இந்த ஆதாரங்களிலிருந்து மாத்திரமே தெய்வீகச் சமாதானம் தோன்றிடவில்லை; ஏனெனில் சமாதானம் என்பது உள்ளான நற்பண்புகளுடன் இணைந்துவரும் ஒன்றாகும். தேவனே சகல பண்புகளுக்கும், சகல கிருபைகளுக்குமான உருவமாக இருக்கின்றார்; இதன் காரணமாக அவர் தம்முடைய உள்ளான ஞானம் மற்றும் வல்லமையினாலும் மற்றும் நன்மைத் தீமை பற்றின பூரண உணர்வினாலும் , பாக்கியமான சமாதானத்தையும், திருப்தியையும் கொண்டிருக்கின்றார்.

## உணர்வு பூர்வமான தேவன்

அதிகமான குழப்பங்களும், பிரச்சனைகளும் இருந்தபோதிலும், தேவனுடைய சமாதானமும் காணப்பட்டே வருகின்றதை நாம் பார்க்கின்றோம். ஒரு தகப்பனாக, அவர் தமது அறிவுள்ள சிருஷ்டிகள் அனைத்தின் மீதிலும், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள முழுக் குடும்பத்தின்" மீதிலும் தகப்பனுக்குரிய அன்பைக்கொண்டிருப்பதாகவும், மற்றும் "சிருஷ்டிக்கப்பட்டவைகள் அனைத்தும் அவருடைய சித்தத்தினாலேயே உண்டாக்கப்பட்டவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாக" இருக்கின்றது என்பதாகவும் நமக்குக் காட்டித்தருகின்றார் (எபேசியர் 3:14; வெளிப்படுத்தல் 4:11). அவர்களை அவர் தமது சாயலில் சிருஷ்டித்தார், அதாவது புத்திரர்கள் என அவர்களிடம் தாம் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கவும் மற்றும் பிதாவென தம்மிடம் அவர்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கத்தக்கதாகவும், மற்றும் இப்படியான பரஸ்பர உறவு மற்றும் ஐக்கியத்தின் காரணமாக சிருஷ்டிகரும், சிருஷ்டிகளும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் இன்பமும் அடையத்தக்கதாகவும் அவர்களைத் தம்முடைய சாயலில், அதாவது அதே மனம் மற்றும் நன்னெறித் தன்மைகளில் சிருஷ்டித்தார்.

தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட காரியமானது, ஒரே மனதின் தன்மைகளை மாத்திரம் உள்ளடக்குவதாக இராமல், இன்னுமாகக் குணலட்சணம் உருவாகுவது தொடர்புடைய விஷயத்தில், ஒரேமாதிரி சுயமாய்ச் செயல்படும் விஷயத்தையும் உள்ளடக்குவதாக இருக்கின்றது. குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ளும் விஷயத்தில் சுயமாய்ச் செயல்பட முடியாத சிருஷ்டி, தேவனுடைய சாயலில் காணப்படாத சிருஷ்டியாக இருக்கும். குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ளும் நோக்கத்திற்காக, நன்மையும், தீமையும், இரண்டுமே சிருஷ்டியின் முன் வைக்கப்பட வேண்டும். சிருஷ்டியானவன் நடவடிக்கைகள் சார்ந்த சரியான மற்றும் தவறான கொள்கைகளை உய்த்துணர வேண்டும்; மேலும் நீதியானவைகளைச் சிருஷ்டியானவன் சுயமாய்த் தேர்ந்துகொள்வதன் விளைவாக உண்டாகும் நற்பண்புகளில் தேவன் பிரியமாய் இருப்பதை உணர்ந்துகொள்ளத்தக்கதாக, சிருஷ்டியானவன் சுயமாய்ச் செயல்படுவதற்கு/தெரிந்துகொள்ளும்படிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கபடற்ற குழந்தையினிடத்தில்/சிசுவினிடத்தில் பூமிக்குரிய பெற்றோர் கொண்டிருக்கும் அன்பைப்போன்று, இதனிலும் பலமானதுமாக புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டு, கபடற்ற சிருஷ்டிகளாய் இருப்பவர்களிடத்தில் தேவனுடைய அன்பு காணப்படுவதினாலும், மற்றும் சிருஷ்டி வயதில் வளருகையில், அச்சிருஷ்டியின் மீதான அந்த அவருடைய அன்புடன்கூடிய அக்கறையும், கவனமும் குறைந்துபோகாமல், மாறாக கொள்கைகளினுடைய மற்றும் நீதியின் கனிகளினுடைய வளர்ச்சியினை ஆர்வமாய்க் கவனிப்பதாலும், பூமிக்குரிய பெற்றோர்களைப் போலவே, தேவனும் சுயாதீனமுள்ள, அறிவுடைய தமது சிருஷ்டிகள் சரியானப் போக்கையோ அல்லது தவறான போக்கையோ தெரிந்துகொள்ளும்போது மிகிழ்ச்சியையோ அல்லது வேதனையையோ அனுபவிக்கின்றார். இது தொடர்புடைய விஷயத்தில் அவரது தகப்பன்துவம் பற்றின உண்மையை வைத்து நாம் நியாயமாக கணித்த விஷயங்களினால் மாத்திரம் முழுமையாய் உறுதிபடுத்தப்படாமல், இன்னுமாக அவருக்கு வெறுப்பாகவும், விசனமாகவும், அருவருப்பாகவும் சில விஷயங்கள் இருப்பதாகவும், அவைகள் அவருக்குப் பிரியமாய் இருப்பதில்லை என்பதாகவும், அவைகளுக்கு எதிராக அவருடைய கோபம் தீவிரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும், அவைகளை

உடையவர்களை அழித்துப்போடுமளவுக்கு, அவரது சினமும், கோபமும் தீவரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும் கூறும் வேத வாக்கியங்களினாலும் நாம் மேற்கூறிய காரியங்களில் முழுமையாய் உறுதியடைகின்றோம். இன்னும் மற்றச் சில வேதவாக்கியங்களானது அவர் நீதியின் கொள்கைகளிலும், அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களிடத்திலும் பிரியமும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் கொள்வதாகத் தெரிவிக்கின்றது; அதாவது வேதனைக்கு எதிரான இன்ப உணர்வுகளையும் அவர் கொண்டிருப்பதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன; வலியும், மகிழ்ச்சியும் ஒரே உணர்வுகளின் இறக்கமும், ஏற்றமுமாக இருக்கின்றது என்று கருதப்படலாம்.

தெய்வீக மனம் பற்றின இந்த வெளிப்பாடுகள் அனைத்தும், தெய்வீகமானவர் உணர்வுகள் உடையவர் என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது மற்றும் மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளபடியால் நாம் உணர்வுகளுடைய சுபாவமுடையவர்கள் என்பதை வைத்தே, தெய்வீகமானவரும் உணர்வுகள் உடையவர் என்பதை நிதானித்துக்கொள்ளலாம். அன்புக்குரியவர்களே தேவன் உணர்வுகள் அற்றவர் அல்ல; அவர் வேதனை மற்றும் மகிழ்ச்சி எனும் உணர்வுகளின் விஷயத்தில் உணர்விழந்தவர் அல்ல; மாறாக அவரது குணாதிசயங்கள்/இயல்புகள் முழுமையாய்ச் சமநிலையில் காணப்படுவதின் காரணமாக, வேதனையான (அ) ஆனந்தமான சூழ்நிலைகளிலும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் சீரான சமாதானம் தக்கவைக்கப்படுகின்றது.

## கண்களுக்குப் புலப்படுகின்ற பிரச்சனைகள் தேவனுடைய சமாதானத்தைக் குலைத்துப்போடுவதில்லை

இந்த ஒரு கருத்தை மனதில்கொண்டவர்களாக, பிரம்மிக்கத்தக்கதான தேவனுடைய சமாதானமானது, நிரந்தரமாய்த் தக்கவைக்கப்படுகின்ற சூழ்நிலைகளைக் குறித்துப் பார்க்கலாம். தேவனுடைய சகல சிருஷ்டிப்பின் கிரியைகளில் காணப்படும் ஆழமான அவரது திட்டங்கள் நிறைவேறுவதற்கு நீண்ட யுகங்கள் (aions) தேவையாய் இருக்கின்றது. யுகங்களின் ஊடே அவரால் தம்முடைய மகிமையின் திட்டத்தின் வாயிலாக, நீதியில் ஸ்திரப்படுத்தப்பட்டு மற்றும் தமது ஈவாகிய நித்திய ஜீவனுக்குப் பாத்திரமான நிலையிலும், தம்முடைய சாயலிலும் (இறுதியில்) அறிவுள்ள சிருஷ்டிகள் காணப்படுவதைப் பார்த்திட முடிந்தது. இன்னுமாகச் சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்கும் இடையிலான பரஸ்பர மகிழ்ச்சியுங்கூட தமது திட்டத்தின் வாயிலாக ஏற்படப்போவதை யுகங்களின் ஊடே அவரால் பார்க்கமுடிந்தது; ஆகவே அந்த மகிமையான நிறைவேறுதலுக்காகக் காத்திருப்பதற்கென, அவர் சமாதானத்துடன்கூடிய பொறுமையுடன் உறுதி கொண்டு காணப்பட்டார்.

திட்டங்கள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கையில் மற்றும் காலங்கள் கடந்துபோய்க் கொண்டிருக்கையில் அவருடைய சிருஷ்டிகளுக்குக் கொடுக்கப்பட்டதான சுயாதீனம் சிலரால் தவறாய்ப் பயன்பட்டதினிமித்தம், அந்தச் சிலர் பொல்லாப்பான குணலட்சணங்களை வளர்த்திக் கொண்டவர்களானார்கள். இதன் காரணமாக அவருடைய குடும்பத்திற்குள், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுகுடும்பத்திற்குள்," அதாவது அவரது சகல சிருஷ்டிகளாகிய மனிதர்கள் மற்றும் தூதர்களாகிய அவரது குடும்பத்திற்குள் பிரச்சனைகள் வந்தது; குடும்பமே பிரிந்தது; சிலர் நீதியின் பக்கமாய் நின்றார்கள் மற்றும் சிலரோ தீமை செய்வதையே தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். ஆனால் இந்த எதிர்பாராத நிகழ்வானது நடைப்பெற்றுவரும் திட்டத்திற்கு அவசியமான ஒன்றாக முன்கூட்டியே தேவனால் அறியப்பட்டதாகும்; தெய்வீகக் கணிப்பின்படி தெய்வீகத் திட்டத்தின் மகிமையான பலனுக்கு, இந்த அனைத்துப் பிரச்சனைகளும், இழப்புகளும் அவசியம் என்பதைத் தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார்.

குடும்பத்தில் பிரச்சனை என்பது எத்துணைப் பயங்கரமானதொரு காரியமாகும்! கெட்டக் குமாரனும் அல்லது சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொள்ளும் பெண் பிள்ளைகளும் எவ்வளவாய் மனுஷீக பெற்றோர்களின் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுகிறார்கள்! ஆ! இப்படிப்பட்டதான ஒரு துயரத்தைப் பற்றிப் பரமபிதாவும் அறிந்திருக்கின்றார்; ஏனெனில் அவரது குமாரர்களில் ஒருவனும், ஒளியின் ஒரு தூதனுமாய் இருந்த சாத்தான், மின்னலைப்போல் பரலோகத்திலிருந்து விழுந்ததைப் பிதா பார்த்தார். ஆறாயிரம் ஆண்டுகளாக அந்தக் குமாரன், தேவனுக்கு எதிராக பகிரங்கமாய் எதிர்த்து நின்று, கலகம் புரிந்துகொண்டு வருகின்றான் மற்றும்

இன்னும் கலகத்தையும், பொல்லாப்பையும் தூண்டிவிடுவதில் மிகவும் சுறுசுறுப்புடனும், மோசமான சூழ்ச்சியுடனும் ஈடுபட்டிருக்கின்றான் (ஏசாயா 14:12; லூக்கா 10:18). தேவதூதர்களில் அநேகர் தங்களது, ஆதிமேன்மையை விட்டுவிட்டுச் சென்றதையும், சாத்தானுடன் கூட்டாளிகளானதையும், பிதா பார்த்தார் (யூதா 6); பின்னர் முழு மனுக்குலமும் பாவத்திற்குள் விழுந்ததையும் பிதா பார்த்தார். எந்த ஒரு மனுஷீக பெற்றோராகிலும் தனது குடும்பத்திற்குள் இவ்வளவுக்கு வெறுக்கத்தக்கதான மற்றும் கடுமையான சதி எழும்பியுள்ளதைக் கண்டதுண்டோ/எதிர்கொண்டதுண்டோ? நிச்சயமாய் எந்த மனுஷனும் இல்லை.

பிற்பாடு சிட்சித்தல் எனும் இனிமையற்ற கடமையைச் செயல்படுத்துவதற்குரிய அவசியத்தைத் தேவன் கண்டார். அவருடைய நீதியின்படி, அவர் உண்மையற்ற குமாரர்களை, தம்முடையவர்கள் அல்லவென்று மறுக்க வேண்டும் மற்றும் அவர்களைச் சத்துருக்கள்போல் கையாள வேண்டும். இவ்வளவு காலமும் தேவனுடைய தகப்பனுக்குரிய அன்பானது, வஞ்சிக்கப்பட்டவர்களையும், விழுந்துபோனவர்களையும், ஆசீர்வதிப்பதற்கென ஆயத்தங்களைப் பண்ணிக்கொண்டிருந்தபோதிலும், மீட்பினுடைய நோக்கமானது, மனம் திரும்புகிறவர்களை அவருடைய கிருபையினிடத்திற்குச் சீர்ப்பொருந்தப் பண்ணுவதாக இருந்தபோதிலும், அன்பு திரையிட்டு மூடப்பட்டிருக்க வேண்டும், மற்றும் இரக்கமற்ற, கண்டிப்பான/கடுமையான நீதி மாத்திரமே வெளிக்காட்டப்பட வேண்டும். இது ஓர் இனிமையான கடமையும் அல்ல, இதினிமித்தம் பாவியும் அவரிடத்தில் பிரியப்படுவதும் இல்லை.

இந்தத் துரோகிகள் எத்தகைய அன்பிற்கு எதிர்த்துப் பாவம் புரிந்திட்டார்கள் என்பது குறித்துச் சிந்தித்துப்பாருங்கள். தேவனிடத்திலிருந்து நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் வந்திட்டாலுங்கூட, அவரது கிருபைகள் இழிவாகப் பார்க்கப்படுகின்றது; அவரது அன்பு வெறுப்புடன் உதைத்துத் தள்ளப்படுகின்றது; அவரது நீதியான அதிகாரத்திற்கு எதிராக சதித்திட்டம் போடப்படுகின்றது மற்றும் எதிர்த்து நிற்கப்படுகின்றது; அவரது குணாதிசயங்கள் தவறாய்க் காட்டப்படுகின்றது, அவதூறாய்ப் பேசப்படுகின்றது மற்றும் வெறுக்கத்தக்கதாயும், அநீதியானதாயும், இழிவானதாயும் காண்பிக்கப்படுகின்றது. எனினும் இவைகள் அனைத்தின் மத்தியிலுங்கூட, தேவனுடைய சமாதானம் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது மற்றும் ஆறாயிரம் ஆண்டுகளாக தேவன் தமக்கு விரோதமாகப் பாவிகளால் செய்யப்பட்டுவரும் இந்த விபரீதங்களைச் சகித்தவராகவே காணப்படுகின்றார். ஆனால் இன்னமும் அவரது ஆச்சரியமான கிருபையும், அவரது அன்பும் பெருகிக்கொண்டே இருக்கின்றது; மேலும் அவர் உலகத்தை மிகவும் அன்புகூர்ந்தபடியால், உலகம் பாவிகளாக இருந்தபோதிலும் அவர்களுக்காக மரிப்பதற்கெனத் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளினார் என்றும், இந்த ஒரே பேறான குமாரன் வாயிலாக, நியாயத்தீர்ப்பானது (பரீட்சை/தேர்வாய்வு) பொய்க்குப் பிதாவும், ஒட்டுமொத்த சதிதிட்டத்திற்குத் தலைவனும், பின்னிருந்து தூண்டிவிடுபவனுமான சாத்தானைத் தவிர, மற்றப்படி விழுந்துபோன தூதர்களுக்கும் அருளப்படும் என்றும் வேத வாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது (யோவான் 3:16; 1 கொரிந்தியர் 6:3; யூதா 6; எபிரெயர் 2:14; வெளிப்படுத்தல் 20:10, 14).

## துயரத்துடன் இசைந்து செல்லும் தேவனுடைய சமாதானம்

தெய்வீக அன்பினுடைய இந்த அன்பளிப்பானது, நமது பரம பிதா, தம்முடைய மாபெரும் மற்றும் ஆச்சரியமான திட்டத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் கொடுக்க வேண்டிய விலைக்கான மற்றுமொரு அடையாளமாகும். தம்முடைய குடும்பத்தில் ஒரு பெரும்பகுதி பாவத்திற்குள் விழுந்ததை மாத்திரமாக அவர் பார்க்க வேண்டியதாய் இராமல், இன்னுமாக அவர்களை மீட்பதற்கு, அவர் தமது இருதயத்திற்கு அருமையான பொக்கிஷமானவராய்க் காணப்பட்டவரைப் பலிச் செலுத்தவும், இந்தப் பிரியமான குமாரனை மிகவும் கீழாக அவமானத்திற்கும், நிந்தனைக்கும், பாடுகளுக்கும், மரணத்திற்கும் கீழ்ப்படுத்தவும் வேண்டியிருந்தது. மீண்டுமாக மனுஷீக பெற்றோரின் அன்பானது, தேவனுடைய அன்பின் இந்த வெளிப்பாட்டிற்கான விலையினைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாய் இருக்கின்றது. தமக்குப் பிரியமாய் இருந்த குமாரனை, அவரது நேசக்குமாரனை அன்பின் எத்துணை மென்மையான மற்றும் ஆழமான உணர்வுகளுடன் இப்படியாகப் பலிச் செலுத்தியிருக்க வேண்டும்! லோகோஸ் சிருஷ்டிக்கப்பட்டது முதற்கொண்டு வெளிப்பட்டிருந்த குணலட்சணங்களோடுகூட, அவருக்கு அவமானம் மற்றும் வலியின் பாதை சுட்டிக்காட்டப்பட்ட போது, அவர் தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படித்தி, ஒப்புக்கொடுத்ததினால் வந்த குணலட்சணமும் இப்பொழுது சேர்ந்தது/வெளிப்பட்டது.

ஆ! இரக்கத்தைச் சுமந்துசென்ற இயேசுவை, பிதாவானவர் கொஞ்சமேனும் வேதனையான உணர்வுகள் இல்லாமலா அனுப்பி வைத்தார்? மரணத்தின் அம்புகளானது, தமது நேசக் குமாரனுடைய இருதயத்தை ஊடுருவினபோது, தகப்பனுக்குரிய அன்பின் நோவு/வலி தேவனுக்கு இல்லாமலிருந்ததா? "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றும், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்றும் நமது அருமை கர்த்தர் கூறினபோது இவ்வார்த்தைகளானது, நித்தியமானவருடைய இருதயத்தின் அனுதாபம் என்னும் நரம்பை தொடவில்லையா? பிதாவினுடைய உண்மையான அன்பானது, கர்த்தருடைய வேதனையில், பரிவிரக்கத்துடன் பங்குகொண்டது (மத்தேயு 26:38, 39).

உண்மையான அன்பானது, அழுவாரோடு அழும் என்றும், சந்தோஷப்படுவாரோடு சந்தோஷப்படும் என்றும் திவ்விய வார்த்தைகளில் போதிக்கப்பட்டக் கொள்கையானது, தெய்வீகமானவரிடத்திலும் உதாரணமாய்க் காட்டப்படுகின்றது. அழிவில்லாத தேவனால், நமக்காக மரிக்க முடியாது; அவரது திவ்விய சுபாவமானது, மரணம் அவருக்குச் சம்பவிப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஒருவேளை தேவன் மரிப்பாரென்றால், அவரை மரணத்திலிருந்து எழுப்புவதற்கு அவரைக் காட்டிலும் வல்லவர் எவருமில்லை; ஆகவே அனைத்துச் சிருஷ்டிகளும் அதிகாரி இல்லாமல் விடப்பட்டிருக்கும் மற்றும் அழிவும், சீர்க்குலைவுமே தொடர்ந்திருக்கும். ஆனால் தேவனால் தம்முடைய அன்புக்குரிய, தகப்பனுக்குரிய சுபாவத்தில் மிகுந்த வலியுடன், தம்முடைய இருதயத்திற்கு அருமையான பொக்கிஷத்தைப் பலிச் செலுத்திட முடியும் மற்றும் செலுத்தவும் செய்தார்; இவ்வாறாக வஞ்சிக்கப்பட்ட மற்றும் விழுந்துபோன தம்முடைய சிருஷ்டிகள் மீது வைத்த அன்பின் மூலமாக, தேவன் மாபெரும் அன்பை வெளிப்படுத்திட்டார் (1 யோவான் 4:9). ஒருவேளை இந்தப் பலியானது, அவருக்கு எந்த வலியையும்/இழப்பையும் கொடுக்கவில்லையெனில், ஒருவேளை இம்மாதிரியான பலியின் ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய மனதில் எவ்விதமான வலியின் உணர்வு ஏற்படுவது சாத்தியமற்றதெனில், அப்போது அவரது குமாரனை அவர் தந்திட்டதானது, அவரது அன்பின் வெளிப்படுத்துதலாக இருக்காது; ஏனெனில் இழப்புகள் இல்லாத எதுவும், எதையும் வெளிப்படுத்துகிறது இல்லை.

பிதா பல யுகங்களாக மிகவும் பொறுமையுடன் தம்முடைய குணலட்சணம் தவறாய்க் காட்டப்பட்டதைச் சகித்து வந்த காரியத்திற்காக, நமது கர்த்தர் இயேசுவும் தமது மாபெரும் அனுதாபத்தை வெளிப்படுத்தினார். பிதாவை மகிமைப்படுத்துவதும், மனுஷர் மத்தியில் பிதாவின் மகிமையான குணலட்சணம் பற்றின தவறான கருத்துகளைச் சரிசெய்வதும், மனுஷர்களுக்கு அவரது நற்பண்புகளையும், பரிவையும், அன்பையும் கிருபைகளையும் காட்டுவதும், தாங்கள் பாவிகளாக இருந்தபோதிலும், தங்களைப் பாவத்திலிருந்து வெளிக் கொண்டுவருவதற்கும், தங்களுக்கான நித்திய இரட்சிப்பைத் திட்டமிடுவதற்கும் நாடினதன் மூலம், தங்களை அன்புகூர்ந்த இரக்கமுள்ள தேவனை, மனிதர்களும் அன்புகூரத்தக்கதாக, வழிநடத்துவதுமே இயேசுவின் ஜீவியத்தினுடைய ஒரே பிரயாசமாகும்.

## தேவனுடைய சமாதானம்
## அவருக்குள் மையம் கொண்டிருக்கின்றது

உடைந்துபோன தேவனுடைய குடும்பத்தில் மாபெரும் குழப்பம்/அமைதியின்மை ஏற்பட்டது; இந்தக் குழப்பத்தில் தமக்குப் பிரியமில்லையென்று தேவன் தெரிவித்துள்ளார் (சங்கீதம் 5:4); எனினும் தேவனுடைய சமாதானம் ஒருபோதும் குலைக்கப்படவில்லை. தமது பூரணமான நன்னெறி பற்றியும், தவறிழைக்காத தமது ஞானம் பற்றியும், தமது ஆற்றல்மிக்க வல்லமைப்பற்றியுமான உணர்வுடனும் மற்றும் நீதி பற்றின முழுமையான உணர்ந்துகொள்ளுதலும், பரிசுத்த அலங்காரமுடைய மிகுந்த தீவிரமான அன்புடனும், பொறுமையுடனும், சமாதானத்துடனும், உபத்திரவத்தின் மத்தியிலான மகிழ்ச்சியுடனுங்கூடப் பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்களை ஆறாயிரம் வருடங்களாகத் தேவன் சகித்திருக்கின்றார்.

ஆனால் ஏழாம் ஆயிரவருடத்திலோ, தெய்வீக நோக்கங்களின்படியே, பிதாவின் மகிமையான குணலட்சணங்களை, பரலோகத்திலும், பூமியிலும் உள்ள சகல சிருஷ்டிகளுக்கு முழுமையாய்

வெளிப்படுத்துவது, நமது கர்த்தர் இயேசுவுக்கான சந்தோஷகரமான சிலாக்கியமாகக் காணப்படும். பிற்பாடு நிறைவடைந்துள்ள தம்முடைய வேலையினுடைய மகிமையிலும், "ஒரே தலையின்கீழ் மீண்டும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள" அவரது குடும்பத்தின் நித்தியமான சமாதானத்திலும், மகிழ்ச்சியிலும், பிதாவானவர் களிக்கூருவார் (எபேசியர் 1:10; Diaglott).

இந்த ஆசீர்வாதமான நிறைவேறுதலானது, தேவனுடைய விழுந்துபோன குமாரர்களில், திருத்தப்பட முடியாதவர்கள், அநீதியை விரும்பினதின் காரணமாக தேவனால் ஏற்க மறுக்கப்பட்டவர்களும், தீமையினின்று மீண்டுவராதவர்களும், அறுப்புண்டு போகாதது வரையிலும் நடைபெறுவதில்லை. இதுவே சிருஷ்டிகரும், அனைவருக்கும் பிதாவுமானவரால் செய்யப்படும், இனிமையற்ற கடைசி கடமையாகும்; இது ஒரு வேதனையான கடமை எனினும், உலகளாவிய நீதி மற்றும் சமாதானத்தின் நலன் கருதி, இதனால் உண்டாகுபவைகளைச் சகித்துப் பொறுமையுடன் தம்மால் இக்கடமையை நிறைவேற்ற முடியும் என்று தேவனே தெளிவாய்க் கூறியுள்ளார். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு" (எசேக்கியேல் 33:11).

இப்படியாகத் தேவனுடைய சமாதானமானது, மாபெரும் குழப்பங்களுடனும், எல்லா விதமான துக்கம் மற்றும் துயரங்களுடனும் இசைந்து செல்கின்றதை நாம் பார்க்கின்றோம்; ஏனெனில் தேவனுடைய சமாதானமானது வெளிப்புறமான சூழ்நிலைகளைச் சார்ந்ததாய் இராமல், மாறாக மனதை சரியாய்ச் சமநிலையில் கொண்டிருப்பதையும், பூரணமான இருதயத்தினுடைய நிலைமையையும் சார்ந்ததாய் இருக்கின்றது. இத்தகைய சமாதானத்தை, அதாவது தேவனுடைய சமாதானத்தை நமது கர்த்தர் இயேசுவும்கூட, அவருடைய பூமிக்குரிய ஜீவியத்தில் ஏற்பட்ட அனைத்துக் குழப்பங்கள் மற்றும் கொந்தளிப்புகள் மத்தியில் அனுபவித்தார். இக்காரியமானது, நமது கர்த்தர் உலகைவிட்டுப் பிரிவதற்கு முன்னால், தம்முடைய சீஷர்களுக்கு விட்டுச் சென்ற சொத்தைக்குறித்து நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது:

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் (குறைவான அளவிலோ அல்லது நீடித்திராத விதத்திலோ இல்லை) , என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27).

## நமது கர்த்தருடைய இறுதி உயிலும், மரணச் சாதனமும்/விருப்ப ஆவணமும்.

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவில் மிகுந்த பரிவுடனும், கருணையுடனும் தம்முடைய பிரியமான சீஷர்களுக்கு, தம்முடைய இறுதி ஆசியாக, தமது சொத்தாக/சாதனமாக, சமாதானத்தை அருளினார். இது அவர் சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஐசுவரியமான சொத்தாகவும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது. இது இயேசுதாமே பெற்றிருந்த அந்த ஆத்தும அமைதி, அந்த மன அமைதி, அதாவது தேவ சமாதானம் பற்றின வாக்குத்தத்தமாகும். இந்த ஒரு சமாதானமானது, தீமையின் அனுமதியினால் வந்திட்ட குழப்பங்கள் அனைத்தின் மத்தியிலுங்கூட தேவனால் எப்போதும் அனுபவிக்கப்பட்ட அதே சமாதானமாகும்; ஆனால் இந்தச் சமாதானமானது அதே ஆதாரத்திலிருந்து வரவில்லை. தேவனுடைய விஷயத்தில் இந்தச் சமாதானம், அவரிலேயே மையம் கொண்டிருந்தது; தேவன் தம்மிலே சர்வ வல்லமையுள்ள ஞானமும், வல்லமையும் இருப்பதை உணர்ந்தவராய் இருந்தார்; ஆனால் கிறிஸ்துவின் சமாதானமோ, அவரில் மையம் கொண்டிராமல் மாறாக தேவனுடைய ஞானத்தின் மீதும், வல்லமையின் மீதும், கிருபையின் மீதுமான விசுவாசத்தின் மூலமாக, தேவனிலேயே மையம் கொண்டதாய் இருக்கின்றது. ஆகவே நாமும் தேவனுடைய சமாதானத்தை, கிறிஸ்துவின் சமாதானத்தைக்

கொண்டிருப்போமானால், "இந்த நம்முடைய சமாதானமும்," விசுவாசத்தின் மூலமாய்த் தேவனில் மையம் கொண்டிருக்கவேண்டும்.

ஆம், கிறிஸ்துவின் சமாதானம் என்பது பெரும் மதிப்புள்ள சொத்தாகும். எனினும் இயேசு இவ்வார்த்தைகளை அப்போஸ்தலர்களிடத்தில் நேரடியாய்க் கூறின பிற்பாடு, எத்தனை சீக்கிரமாய், அதுவரை கருமையாகிக்கொண்டே வந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகம், அப்போஸ்தலர்கள்மேல் சீறி வெடித்தது. கிருபையான இந்தச் சொத்துக்குரிய உயில் கொடுக்கப்பட்டவுடனே, இந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகமானது, திகைப்பையும், தடுமாற்றத்தையும், குழப்பத்தையும் அப்போஸ்தலர்களுடைய இருதயத்தில் ஏற்படுத்தி, அவர்களது விசுவாசத்தை வேர் வரையிலும் உலுக்கிப்போட்டது. எங்கே போயிற்று இந்தச் சமாதானம்? கர்த்தர் இந்தச் சமாதானம் குறித்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தபோது, வெறுக்கத்தக்க துரோகியான யூதாஸ், தன்னுடைய கொலைப்பாதகத் திட்டத்தை நிறைவேற்றிட போயிருந்தான்; பின்னர் கெத்செமனேயின் வியாகுலம் தொடர்ந்தது; தங்கள் அருமை கர்த்தரின் வாழ்க்கையினுடைய முடிவை அப்போஸ்தலர்கள் உணர ஆரம்பித்தபோதோ, திகைப்பும், பீதியும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இன்னுமாக பிலாத்துவின் அரண்மனையிலும், ஏரோதின் அரண்மனையிலும் கர்த்தர் தம்மேல் இரக்கமற்ற நிலையில் குற்றஞ்சாட்டுகிறவர்களின் முன்னிலையிலும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்களின் முன்னிலையிலும் தனிமையில் நின்றபோது, கர்த்தரைப் பாதுகாத்திட அப்போஸ்தலர்களும் வல்லமையற்றுக் காணப்பட்டபோது, அப்போஸ்தலர்களை அதுவரையிலும் திணறவைத்திட்டக் கவலையுடன்கூடிய நிச்சயமின்மையானது, இப்பொழுது வரப்போகும் தீமையை நடுக்கத்தோடு ஆழமாய் அறிந்துகொள்ளும் உணர்ந்துகொள்ளுதலாயிற்று; பிற்பாடு சோகமான முடிவாகிய, சிலுவையில் அறையப்படுதல் எனும் பேரச்சங்களுக்குரிய நிகழ்வுகள் வந்தன.

## எங்கே போயிற்று அந்தச் சமாதானம்?

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், வாக்களிக்கப்பட்டச் சமாதானம் எங்கே போயிற்று, அப்போஸ்தலர்கள் பயத்தினாலும், திகிலினாலும் மேற்கொள்ளப்பட்டுக் கர்த்தரைத் தனிமையில் கைவிட்டுவிட்டு, ஓடிப்போனப்போதும் மற்றும் பேதுரு கர்த்தரைக் காப்பாற்ற ஆவல் கொண்டிருந்தபோதிலும், பயத்தினால் நிரம்பியிருந்ததின் காரணமாக இயேசுவை மூன்றுதரம் மறுதலித்தப்போதும், கர்த்தரைத் தெரியாது என்று கூறி, சபித்தப்போதும், எங்கேபோனது அந்த வாக்களிக்கப்பட்டச் சமாதானம்? சமாதானம் இன்னும் வரவில்லை என்பதே பதிலாகும்; ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகின்றதுபோல், "ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபிரெயர் 9:16, 17). ஆனால் சோகமான சம்பவம் முடிவடைந்து, "எல்லாம் முடிந்தது" என்னும் கூக்குரல், அப்போஸ்தலர்களுடைய ஆவலுள்ள காதுகளில் விழுந்திருக்கும்போது, அது விநோதமாய் இருப்பினும் அவர்களுடைய துயரப்பட்டுக்கொண்டிருக்கும் இருதயத்திற்குள், சமாதானம் புகுந்திருக்க வேண்டுமென்பது உறுதியே. இருண்ட வானங்களும், அதிரும் பூமியும், பிளந்த கன்மலைகளும், கிழிந்துபோன ஆலயத்தின் திரைச்சீலையும், இவைகளனைத்தும், உலகத்தினால் அடையமுடியாத ஆறுதலின் ஒரு செய்தியை அப்போஸ்தலர்களுக்கு, சீஷர்களுக்குத் தெரிவித்ததாய் இருக்கின்றது.

(இயேசுவின் கொலைக்குற்றத்தில் பங்குகொள்ளும் யூதர்களும், புறஜாதியாருமான) உலகத்திற்கு, இச்சம்பவங்களின் பொருளானது, அவர்களுக்கு எதிரான தெய்வீகக் கோபாக்கினையும், கோபமுமாகும். ஜனங்களைப் பயம் ஆட்கொண்டபோது, மற்றும் அந்தப் பயங்கரமான நாளினுடைய கூச்சல்களும், கிளர்ச்சிகளும் தணிந்தபோது, அவர்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். உரோம நூற்றுக்கதிபதியும், இவரோடுகூடக் காணப்பட்டவர்களும் மிகவும் பயமடைந்து, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்றார்கள் (மத்தேயு 27:54).

ஆனால் கர்த்தருடைய சீஷர்களுக்கோ, இச்சம்பவங்கள் மிகவும் வேறான பொருளைக் கொண்டதாய் இருந்தது. இவர்களுடைய ஆண்டவருடைய நோக்கங்கள்/காரணங்கள், இவர்களுடைய நோக்கங்களாகவும், தேவனுடைய நோக்கங்களாகவும் இருந்தது. இயற்கைக்கு

அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட இச்சம்பவங்களானது, தேவன் இக்காரியங்களை அலட்சியமாகக் கருதவில்லை என்பதற்கான சாட்சியமாக சீஷர்களுக்குக் காணப்பட்டது; இருளின் திரைஊடாய் அவர்களால் தேவனுடைய பிரகாசமான திட்டங்களைப் பார்க்கமுடியவில்லை என்றாலும், (இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட) இச்சம்பவங்களில் நம்பிக்கைக்கான மெல்லிய சத்தம் காணப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினாலும், அவருடைய உயிர்த்தெழுதலானது, சீஷர்கள் நடுவில் அவர் தோன்றி காட்சியளித்து உறுதிப்படுத்தப்பட்டதாலும் மீண்டும் புத்துயிர் பெற்றது. மீண்டுமாக நாற்பது நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, அவர் இறுதி ஆலோசனையை வழங்கி மற்றும் ஆசீர்வாதம் அருளி மற்றும் திரும்பிவருதல் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி மற்றும் பிதாவினால் வாக்களிக்கப்பட்டுள்ள தேற்றரவாளனாகிய, புத்திரசுவிகாரத்தின் பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளுவது வரையிலும், அவர்கள் எருசலேமிலேயே தங்கி இருக்கும்படியான அறிவுரைகளை வழங்கினப் பிற்பாடு, அவர் பரமேறினது காரணமாகப் பலப்படுத்தப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த பரிசுத்த ஆவி வந்தது. பிறகே கிறிஸ்துவினுடைய ஐசுவரியமான சொத்தாகிய, கிறிஸ்துவின் சமாதானமானது உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கப்பட்டது மற்றும் அவர்கள் ஜெபத்துடனும், எதிர்பார்ப்புகளுடனும் காத்துக்கொண்டிருந்த நாட்களானது, நிரந்தரமான சமாதானமுடைய நாட்களாகும்; அதாவது நதிபோல் பாயும் சமாதானமாய்க் காணப்பட்டது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின்போது, வாக்களிக்கப்பட்டத் தேற்றரவாளன் வந்தபோது, அவர்களுடைய சமாதானம் என்னும் நதியானது, ஆழமான நதிப்படுகையை/ஆற்றின் அடித்தரையைக் கண்டடைந்தது; மேலும் அவர்களுடைய சந்தோஷத்திற்கும் எல்லையில்லாமல் போயிற்று.

"மகிமையான நதிபோன்றுள்ளதே தேவனுடைய பூரண சமாதானமே,
ஜெயம்கொண்டவர்கள் அனைவரிடத்திலும், அதன் ஆனந்தம் பெருகுகின்றதே.
பூரணமாய் உள்ளதே; எனினும் அது ஒவ்வொரு நாளும் பொங்கிப் பொங்கி வழிந்திடுதே
பூரணமாய் உள்ளதே; எனினும் ஆழமாய் ஆழமாய் வளருதே."

## சமாதானம் எனும் நம்முடைய ஐசுவரியமான சொத்து

ஆதித் திருச்சபையாருக்கு மாத்திரமாக, சமாதானம் எனும் இந்தச் சொத்து, உயிலாக்கப்படவில்லை. இது யுகத்தின் முடிவுவரையிலுமான முழுச் சபையாருக்கும் உரியதான ஆசீர்வாதமான சுதந்திரமாகும். நம் அனைவருக்குமான கர்த்தருடைய எண்ணத்தை அவர், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபம் பண்ணினதின் மூலமாய் வெளிப்படுத்தியுள்ளார் (யோவான் 17:20).

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தின் குறுகிய கால சமாதானமாக இல்லையென்பதைக் கவனிக்கவும்; உலகத்தினுடைய இந்தக் குறுகிய கால சமாதானமானது, அதிர்ஷ்டம்/நல்ல காலம் இருக்கும்போதும், திரளான நண்பர்கள் காணப்படும்போதும், ஆரோக்கியம் நீடித்திருக்கும்போதும் காணப்படும், ஆனால் தரித்திரம் உள்ளே வரும்போதும், நண்பர்கள் கைவிட்டுச் செல்லும்போதும், ஆரோக்கியம் பாதிக்கும்போதும், மரணமானது நம் இருதயத்திற்கு அருமையானவர்களைத் திருடிச்செல்லும்போதும், இந்தக் குறுகிய கால சமாதானம் மறைந்துபோய்விடும். கிறிஸ்து ஐசுவரியவானாக இருந்தப்போதிலும், நம் நிமித்தம் தரித்திரரானார்; அவர் தம்முடைய நண்பர்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்தார்; அவரது இறுதிவேளையில், அவருக்கு இருந்த கொஞ்சமானவர்களும், அவரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; விசுவாசத்தின் காரணமாகக் கிறிஸ்துதாமே அனுபவித்திட்டச் சமாதானமானது, இழப்புகளின் மத்தியிலும், துன்புறுத்துதல்களின் மத்தியிலும், ஏளனங்களின் மத்தியிலும், இகழ்ச்சிகளின் மத்தியிலும், சிலுவையினுடைய பலிகளின் மத்தியிலும் சகித்துக்காணப்பட்டது. இந்தவொரு சமாதானத்தைத் தற்கால ஜீவியத்தின் எந்தக் காரியங்களினாலும்/சூழ்நிலைகளினாலும் அழித்திடமுடியாது. மற்ற எந்தச் சத்துருவும் இந்தச் சமாதானத்தை நம்மிடமிருந்து திருடவும் முடியாது.

எத்துணை ஐசவரியமான சொத்தினைக் கர்த்தர் தம்முடைய பிரியமான ஜனங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்? ஒருவேளை கர்த்தர் இயேசு, தமது பூமிக்குரிய ஜீவியத்தின்போது, பணத்தைச் சம்பாதித்து, சேர்த்துக்கொள்ளத்தக்கதாக தம்முடைய சக்தியையெல்லாம் பிரயோகித்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; ஒருவேளை இப்படியாக அவர் செயல்பட்டு, தாம் சீஷர்களை விட்டுப் பிரியும்போது சுவிசேஷ யுகத்திற்குரிய மாபெரும் வேலையினை நடத்தும்படிக்கு, திரளான பணங்களை, சீஷர்கள் வசத்தில் விட்டுச்சென்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போஸ்தலர்களுடைய போக்குவரத்துச் செலவிற்கும், பல்வேறு இடங்களில் (அறுவடை) வேலை தொடங்குவதற்குரிய அதிகளவிலான செலவுகளாகிய பிரசங்கம் பண்ணுவதற்குரிய அறைகளுக்கான வாடகை, பயணம் மேற்கொள்ளும் சகோதரர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் இதுபோன்ற பல தேவைகளுக்குப் பணம் தேவையாய் இருக்கும். ஒருவேளை கர்த்தர் சீஷர்களைப்பிரியும்போது தாம் சேர்த்து வைத்தப் பணத்தைச் சீஷர்கள் வசத்தில் கொடுத்திருந்திருப்பாரானால், இத்தனை தேவைகள் இருக்க, அந்தப் பணங்கள் எத்தனை சீக்கிரமாய்க் குறைந்துபோயிருக்கும், மற்றும் இன்றுள்ள நமக்கு அச்சொத்தில் மிகக் கொஞ்சமே கிடைத்திருக்கும். "பாவ மனுஷனும்" ஏதாவது விதத்தில் இந்தச் சொத்தில் (பணத்தில்) கொஞ்சத்தைக் கைவசப்படுத்தியிருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:3); மேலும் இந்த யுகத்தின் முடிவில் உள்ளவர்களால், அச்சொத்தின் தடயத்தைக் கூடப்பார்த்திருந்திருக்க முடியாது. ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாகுவதாக, சமாதானம் எனும் அவரது ஐசவரியமான சொத்தானது, இன்னமும், அவருடைய ஜனங்களுக்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது!

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தினால் அடையாளம் கண்டு கொள்ளவோ, உணர்ந்துகொள்ளவோ முடியாத ஒன்றாகும்; ஏனெனில் இச்சமாதானத்தை உடையவர், கர்த்தரைப்போன்றும், பரமபிதாவைப்போன்றும், புயல் நிறைந்த பாதைகளையே பெற்றிருப்பார்கள். உண்மைதான், தீமையை அனுமதிப்பதிலுள்ள தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறி முடிவதுவரையிலும், உண்மையுள்ளவர்கள் அனைவரின் விஷயத்திலும் இப்படிப் புயல் நிறைந்த பாதைகளே காணப்பட வேண்டும்; எனினும் அனைத்துப் புயல்களின் மத்தியிலும், இந்தச் சமாதானம் காணப்படும் என்ற வாக்குறுதியுடன்கூட முன்னெச்சரிப்பு வழங்கப்பட்டிருக்கிறோம்; "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33).

## சமாதானத்திற்கு அஸ்திபாரமாகிய விசுவாசம்

ஜீவியத்தின் கடுமையான புயல்களின் மத்தியிலும், தொடர்ந்து காணப்படுகின்ற இந்த நிரந்தரமான சமாதானத்திற்கான அஸ்திபாரத்தையும், பாதுகாப்பு ஏற்பாட்டினையும் நாம் ஒருவேளை அறிய வேண்டுமெனில், நாம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும், மாதிரியையும் மாத்திரமே நோக்க வேண்டும். இவர்கள் பாடுகள் படும்போது, இவர்களை உறுதியாய் வைத்திட்டதும், இவர்களுக்கு அத்தகைய ஒரு மன அமைதியையும் கொடுத்ததும் எது? அது இவர்களுடைய விசுவாசமாகும், அதாவது தேவனுடைய அன்பிலும், வல்லமையிலும், ஞானத்திலுமான இவர்களுடைய விசுவாசமாகும். தேவன் வாக்களித்துள்ளவைகளை, தேவனால் நிறைவேற்ற முடியுமென்றும், தேவனுடைய நீதியான மற்றும் கிருபையான திட்டமானது தோல்வியடைவதில்லை என்றும் இவர்கள் நம்பினார்கள். "முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக்கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" ஆகிய வசனங்களைத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுடைய வாயின் மூலம் அறிவித்துள்ளார். (ஏசாயா 46:9-11; 14:27) தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இவர்கள் இளைப்பாறினார்கள். அவருக்குள் இவர்களுடைய விசுவாசம் நங்கூரமிடப்பட்டிருந்தது; இவர்களுடைய நங்கூரமானது, தேவனுடைய சிங்காசனத்தில்

நங்கூரமிடப்பட்டிருக்கையில், இவர்கள் மீது புயல்கள் எத்தனை சீற்றத்துடன் வீசினாலும் சரி அல்லது ஜீவயத்தின் சூறாவளிகளினால் இவர்கள் எவ்வளவாய்த் தூக்கி, தூக்கி எறியப்பட்டாலும், இவைகள் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

நமது கர்த்தருடைய விசுவாசத்தின் பாஷையானது . . . "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்" என்பதேயாகும் (யோவான் 17:25). கர்த்தர் ஆரம்பம் துவங்கி பிதாவுடன் காணப்பட்டிருந்திருக்கிறார் மற்றும் பிதாவின் அன்பையும், அவரது கருணையையும் கர்த்தர் உணர்ந்திருக்கிறார் மற்றும் பிதாவின் வல்லமையைக் கண்டிருக்கின்றார் மற்றும் பிதாவின்அனைத்துக் கிரியைகளிலும், பிதாவின் நீதியையும், அவரது அன்புடன்கூடிய இரக்கத்தையும், தகப்பனுக்குரிய பராமரிப்பையும் கர்த்தர் அடையாளம் கண்டிருக்கின்றார். ஆகவேதான், "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 53:11). பிதாவைக் குறித்துக் குமாரன் கொண்டிருந்த அறிவானது, எதிர்காலம் குறித்த தேவனுடைய நோக்கங்கள்/திட்டங்கள் அனைத்தின் விஷயத்திலும் விசுவாசம் வைப்பதற்குக் குமாரனுக்கு உதவினது/ஆதாரமாய் இருந்தது. ஆகையால் குமாரனால் விசுவாசத்தினால் நடக்கமுடியும் மற்றும் நடக்கவும் செய்தார். இந்த விசுவாசமானது அனைத்துத் தடைகளை/இடற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், மரணத்தின் மீது ஜெயங்கொள்ளுவதற்கும் குமாரனுக்கு உதவியாய் இருந்தது.

ஆகவேதான் நமக்கு அறிவுரையாக, "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்றும் எழுதப்பட்டுள்ளது (1 யோவான் 5:4); அதாவது தேவன் மீதுள்ள விசுவாசம், அதாவது நமது கர்த்தரால் பிதாவைக்குறித்துக் கொடுக்கப்பட்ட சாட்சியின் மீதான விசுவாசமே ஜெயிக்கும்; மீண்டுமாக "விசுவாசமில்லாமல், தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்" என்றும் எழுதப்பட்டுள்ளது. உறுதியான, அசைவுறாத விசுவாசத்தின் மூலமாய் மாத்திரமே, தேவ சமாதானமானது, கிறிஸ்துவின் சமாதானமானது அவருடைய ஜனங்களில் நிலைத்திருக்கும். கர்த்தர் சீஷருடன் காணப்பட்டபோது, கர்த்தரில் பிதாவின் வெளிப்படுத்தலைச் சீஷர்கள் கண்டபோது, அவர்களுடைய விசுவாசம் பலமாய் இருந்தது மற்றும் அவருக்குள் அவர்கள் சமாதானம் கொண்டிருந்தனர் மற்றும் இதனாலேயே, "நான் அவர்களுடனேகூட உலகத்தில் இருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்" என்று கர்த்தர் கூறினார் (யோவான் 17:12). ஆனால் அவர்களை விட்டுக் கர்த்தர் பிரிந்துபோனப் பின்னரே, அவர்களுடைய விசுவாசமானது, தேவனில் நங்கூரமடைந்தது. பெந்தெகொஸ்தேவிற்குப் பிறகு, அவர்கள் கிறிஸ்து அனுபவித்த அதே சமாதானத்தை அனுபவித்தார்கள்; அதாவது தாங்கள் ஒருவேளை மீட்பருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடருவதில் உண்மையாய்க் காணப்பட்டார்களானால், தங்களைத் தேவன் குமாரர்களென, சுதந்திரர்களென, கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களென அங்கீகரிப்பார் என்ற உண்மைப்பற்றின அறிவின் காரணமாக, ஆசீர்வாதமான சமாதானம் அவர்களுக்குக் கடந்துவந்தது.

## அசைவுறா விசுவாசத்தை வளர்த்துதல்

இதுவும் நம்முடைய சமாதானத்திற்கான அஸ்திபாரமாகும். ஜீவியத்தின் சூறாவளிகள் எவ்வளவுதான் நம்மைத் தாக்கினாலும், நம்முடைய நங்கூரத்தை நாம் ஒருபோதும் கைவிடக் கூடாது; நாம் காற்றுப்போக்கில் இழுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மாறாக "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது" என்றும், "அவருடைய சத்தியம் நமக்குப் பரிசையும், கேடகமுமாயிருக்கிறது" என்றும், நமக்கு மனுஷீக பூரணமின்மைகளும், வலுவின்மைகளும் காணப்பட்டாலுங்கூட, தேவன் வாக்களித்துள்ளவைகளை, அவர் நிறைவேற்றிட வல்லவராய் இருக்கின்றார் என்றும், நம்முடைய மனுஷீக பூரணமின்மைகளை மூடுவதற்கு நமக்குப் பரிந்துபேசுபவரும், நமக்கு மீட்கும்பொருளாகவும் இருக்கும் கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படும் நீதி காணப்படுகின்றது என்றும், "பிதா தாமே நம்மைச் சிநேகிக்கிறார்" என்றும், "அவர் நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்துள்ளபடியால்" அவர் தம்முடைய குமாரர்களிடத்தில் இரக்கமும், அன்பும் கொண்டிருக்கின்றார் மற்றும் மிகுந்த அனுதாபமும், மிகுந்த இரக்கமும் கொண்டிருக்கின்றார் என்றும் நாம் எப்போதும் நினைவுகூர வேண்டும் (சங்கீதம் 103:14; 2 தீமோத்தேயு 2:19; யோவான் 16:27; சங்கீதம் 91:4). பலியினுடைய இடுக்கமான பாதையின் சோதனைகள் மற்றும் போராட்டங்கள் மத்தியில் பொறுமையாய்ச் சகிக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களைப் பெலப்படுத்திடவும், உறுதிபடுத்திடவும் மற்றும் நம்முடைய விசுவாசத்தை

உறுதிபடுத்திடவும், தேவனால் நமக்குக் கூறப்பட்டவைகளிலும் அதிகமாய் வேறு என்ன தேவனால் சொல்லக் கூடும்.

கிறிஸ்தவன் தனது விசுவாசத்தின் நங்கூரத்தை விட்டுவிடுவது, அதாவது தற்காலிகமாகக் கூட அதன் பிடியை விட்டுவிடுவது என்பது, அவனது சத்துருக்களின் முன்னிலையில், அவனுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். இப்படியாக அவன் கணநேரம் விட்டுவிடுவானானால் இருள் அவனைச் சூழ்ந்துகொள்ளும். அவனால் பிதாவின் முகத்தினுடைய பிரகாசத்தைப் பார்க்க முடியாது; ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியமாகும்;" மேலும் அவன் நங்கூரத்தை மீண்டும் பிடித்திட போராடுகையில், இருளின் வல்லமைகளானது, பயங்களினாலும், சந்தேகங்களினாலும், அவனைக் கடுமையாய்த் தாக்குகின்றன. இந்தத் தாக்குதல்களானது அவனது மனுஷீகப் பூரணமின்மைகள் பற்றிய பயங்கள்/சந்தேகங்களாகவே பொதுவாக காணப்படுகின்றது; ஆனால் இந்த மனுஷீக பூரணமின்மைகளானது, கிறிஸ்துவின் நீதி எனும் வஸ்திரத்தினால் மூடப்பட்டுள்ளது என்பதை அவன் எப்போதும் மனதில் கொண்டிருக்க வேண்டும்.

தேவ சமாதானம் நம்முடைய இருதயங்களை ஆள வேண்டுமெனில், நாம் நம்முடைய நங்கூரத்தின் பிடியை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது மற்றும் சாத்தானுடைய கடுமையான தாக்குதல்களானது, நம்முடைய தைரியத்தை நலிந்துபோகப் பண்ணுவதற்கு நாம் அனுமதித்திடவும் கூடாது. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்பதே நம்முடைய இருதயங்களுடைய வார்த்தைகளாக இருக்க வேண்டும். இந்த ஒரு விசுவாசம் காணப்படும்போது, தேவசமாதானம், அதாவது ஆண்டவரால், நமக்குச் சொத்தாகக் கொடுக்கப்பட்டச் சமாதானமானது, என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வாறாகவே "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமானது, நமது இருதயங்களையும், நமது சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்;" ஏனெனில் "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரணசமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 26:3; பிலிப்பியர் 4:7; யோபு 13:15).

கிறிஸ்தவ போராட்டங்கள் மத்தியில், நம்முடைய இருதயங்களானது, தெய்வீக நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் என்ற உறுதியினால் மாத்திரமல்லாமல், தனிப்பட்டத் தயவுகள் பற்றின வாக்குத்தத்தங்களினாலும் களிக்கூர்ந்து, நம்முடைய மனங்கள் உறுதியடைந்து காணப்படுவதாக.

தனிப்பட்டத் தயவுகள் தொடர்புடைய வாக்குத்தத்தங்களானது பின்வருமாறு:- "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்." "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (சங்கீதம் 103:13, 14; ஏசாயா 49:15, 16); "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான் 16:27); "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32); "உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதிமொழிகள் 11:20); "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்கீதம் 37:4). ஆம் புயல் மற்றும் சூறாவளியின் மத்தியிலுங்கூட தேவசமாதானத்தை அருள்செய்வார்.

*****

# உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை

*"கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்." (சங்கீதம் 75:6, 7)*

## சபையினுடைய ஒழுங்குகள் குறித்த காரியங்கள்

நம்முடைய ஆதார வசனத்தைக் குறிப்பாக சபைக்கு - கர்த்தரினால் விசேஷமாய் நடத்தப்படுகின்றவர்களும், அவர் விசேஷமாய் அக்கறைக்கொண்டிருப்பவர்களுமாகிய சபைக்குப் பொருத்திப் பார்த்திடலாம். அவர் சபையினுடைய இந்த அங்கத்தினர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைத்திடுவதற்கு ஏற்பாடுகளை அருளியுள்ளார். "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்." "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும் . . . ஏற்படுத்தினார்" - இவைகள் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள பற்பல அலுவல்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று தேவன் அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இருபதுபேர் அல்லது முப்பதுபேர் அல்லது முந்நூறுபேர் அல்லது ஐந்நூறுபேர் அல்லது ஆயிரம்பேர் தங்களை அவர் சித்தத்துடன் இசைய பண்ணிடும்போது, அவர் சிலரை மூப்பர்களாக, சிலரை உதவிக்காரர்களாக, இன்னும் சிலராக வைப்பார். அவர் எப்படி அவர்களை வைப்பார்? சபையினுடைய வாக்கின் (vote) மூலமாகவேயாகும். சபையில் உதவிக்காரனாக நியமிக்கப்படுகிறவன் எவனும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும். மூப்பனாக நியமிக்கப்படுகிற எவனும், இதை ஒரு சிலாக்கியமாகக் கருதிட வேண்டும் மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் அவன் சபைக்கு நன்மை பயக்கும் விதமாயும், சகோதரருக்குப் பிரியமாயும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்குப் பிரியமாயும் காணப்படலாம்.

இந்த ஒரு கருத்தையே அப்போஸ்தலன் எபேசு சபையின் மூப்பர்களுக்கு விடைகொடுக்கும்போது பேசிய வார்த்தைகளில் தெரிவிக்கின்றார் (அப்போஸ்தலர் 20:17-38). அவர்கள் மந்தையைப் போஷிக்கத்தக்கதாக, தங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு அவர்களுக்குக் கூறுகின்றார். கர்த்தரிடமிருந்தும், சகோதரரிடமிருந்தும் வருகின்றதெனத் தங்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டியதான, தங்கள் வாய்ப்புகளுக்காகவும் மற்றும் பொறுப்புகளுக்காகவும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களெனத் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் எப்படிக் காணப்பட வேண்டுமென்று பல ஆலோசனைகளை அப்போஸ்தலன் கொடுத்திட்டார்.

சிலசமயம் கர்த்தருடைய அனுமதியின் காரணமாக - நிச்சயமாய் அவரது அனுமதி இல்லாமல் அல்ல, அவரது அனுமதியின் காரணமாகவே - கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கான தங்களது பிரயாசத்தில் சபையார் பின்வருமாறு கூறிடலாம்: 'இந்தச் சகோதரன் கடந்தமுறை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் இம்முறை நாம் அவரை மூப்பராகத் தேர்ந்தெடுக்க வேண்டாம்'; இல்லையேல் அவர்கள் பின்வருமாறு கூறிடலாம்: 'இவர் கடந்தமுறை உதவிக்காரனாக இருந்தார் மற்றும் இம்முறை நாம் அவரை உதவிக்காரனாகத் தேர்ந்தெடுக்க வேண்டாம், அவரை விட்டுவிடலாம்.' இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படும் சகோதரனுடைய மனோநிலை என்னவாக இருக்க வேண்டும்?

## கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல்

தங்கள் திறமையை சபையார் அடையாளம் கண்டுகொள்ளாததிலும், தங்களை மீண்டுமாகத் தேர்ந்தெடுக்காத விஷயத்திலும் சபையார் தவறு செய்துள்ளனர் என்று தாங்கள் எண்ணுவதாக, தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்பட்டவர்களிடமிருந்து கடிதங்கள் நமக்கு வந்த அனுபவங்கள் நமக்குண்டு. சபையாரின் இத்தகைய செய்கைக்குப் பின்னாக இருக்கும் கருத்து

என்ன என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், சபையார் ஞானமாய் நடந்துகொண்டார்களா அல்லது இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், ஆனாலும் அச்சகோதரன் இந்தத் தீர்மானம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததென ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது என்றும் எங்களுடைய பதில் காணப்பட்டது.

அப்படியான சகோதரன் தன்னிடம் பின்வருமாறு கூறிக்கொள்ள வேண்டும்: 'நான் இந்தச் சபையாருடைய ஊழியக்காரனாக இருந்திருக்கிறேன் மற்றும் இது குறித்து நான் நன்கு உணர்ந்தும் இருந்திருக்கின்றேன். அந்த ஊழிய உயர்வானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும், எனக்குக் கொடுக்கப்பட்டதான ஊழியமானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும் நான் உணருகின்றேன். ஆனால் இப்பொழுது தேவனுடைய வழிநடத்துதலின்படி நான் ஒரு வருடக் காலமாக (அ) ஆறுமாதக் காலமாக (அ) சில காலமாகக் கண்காணியாக இருக்கப்போவதில்லை. அநேகமாகக் கர்த்தர் எனக்கு இதில் நல்லதொரு பாடம் வைத்திருப்பார். அநேகமாகத் தாம் யாரை உயர்த்துவார் மற்றும் யாரை உயர்த்தமாட்டார் என்பதைக் காண்பிப்பதற்குக் கர்த்தர் விரும்புகின்றார். ஆகையால் இது விஷயம் குறித்துக் காயமடைவதற்கு அல்லது கொஞ்சம் கோபமடைவதற்கு அல்லது வருத்தமடைவதற்குப் பதிலாக நான் என்னிடம் சொல்லப்போவதென்னவெனில்: ஒருவேளை என்னுடைய கடமையைச் செய்வதில் நான் எதிலாகிலும் தவறியுள்ளதாக நான் காண்கின்றேன் என்றால், இது கர்த்தரிடமிருந்து எனக்கு வந்த சிட்சை எனக் கருதிடுவேன். "சகோதரர் தாங்கள் உயர்வு பெறும்போது மகிழ்ச்சியடைவார்களாக! மற்றும் சகோதரர் தாங்கள் தாழ்நிலை அடையும்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக!" என்னும் வேத வாக்கியத்தின் வார்த்தைகளை நான் நினைவில்கொள்வேன் (யாக்கோபு 1:9, 10 திருவிவிலியம்) கர்த்தருடைய சித்தம் என்னவென்று தாங்கள் கருதுவதைச் செய்திடும் விஷயத்தில் சபையார் சுதந்தரமாய்ச் செயல்படுவதைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாச் சூழ்நிலையிலும் உயர்வானது கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் வராது என்றும், தேவனே நியாயாதிபதியாக, தீர்மானிப்பவராக இருக்கின்றார் என்றும், அவருக்குப் பிரியமாய் இருக்கும் எவரையும், அவர் சபையின் காரியங்கள் மீது வைப்பார் என்றும் நான் அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்பேன்' என்பதேயாகும்.

---

# ஒரு நல்ல மனிதனின் பாவம்

**எண்ணாகமம் 20:1-13**

## *ஆவிக்குரிய வழிநடத்துபவர்களுக்கான பாடங்கள்*

“பூமியிலேயே சாந்தமானவராகக் காணப்பட்ட மனுஷனே” பல வருட அனுபவங்கள் மற்றும் பயிற்சிக்குப் பிற்பாடு தவறிடுவாரானால், இதினிமித்தமான ஆவிக்குரிய வழிநடத்துனர்களுக்கான பாடமானது ஆழப்பதியக்கூடிய ஒன்றாயிருக்கும். இது “தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்” என்று நமக்குக் கூறுகின்றது(1 கொரிந்தியர் 10:12). மோசே மற்றும் ஆரோனுடைய பாவம், அவிசுவாசமாகக் காணப்பட்டது என்று 12-ஆம் வசனத்தில் கர்த்தர் தெரிவித்துள்ளார். “பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரயேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்” (எண்ணாகமம் 20:12).

கற்பாறையை அடிக்கும் விஷயத்தில் மோசேக்கு தேவனிடத்தில் விசுவாசம் இருந்தது. அவருக்கு ஜனங்களிடத்திலேயே நம்பிக்கை இல்லாமல் இருந்ததாக தெரிகின்றது. அவர் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்திட - அவர்கள் மனதில் என்றும் அழியாப் பாடம் ஒன்றினைப் பதியப்பண்ணிட விரும்பினார் என்பதாகத் தெரிகின்றது. ஜனங்கள் மோசேயைப் பார்த்து மலைத்துப் போய் நின்றிருந்திருக்க வேண்டும்; எனினும் அவ்விஷயத்தைக் கையாளுவதற்குரிய சிறந்த வழி இதுவல்ல; ஏனெனில் இது தேவனுடைய வழியாய் இருக்கவில்லை. மோசே தன்னை மறைத்து - தன்னைத் தாழ்த்தி, யேகோவாவின் நாமத்தில் கன்மலையிடம் தண்ணீர் கேட்டிருந்திருப்பாரானால், அது நலமாயிருந்திருக்கும்.

சபையின் வழிநடத்துனர்களும், மூப்பர்களும், கிறிஸ்துவினுடைய சபையின் ஊழியக்காரர்களும் - தேவனால் ஆயத்தம்பண்ணப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்களானது அடிக்கப்பட்ட இயேசுவிடமிருந்தே, அவருடைய ஜனங்களுக்குக் கடந்துவரும் மற்றும் அது வேண்டிக்கொள்ளப்படும் போது வரும் என்றும், “கன்மலையை”அடிப்பதற்கோ அல்லது கிருபை மற்றும் சத்தியத்தின் தண்ணீர்கள் வந்திடுவதற்குத் தாங்கள் அவசியமானவர்கள் என்று தேவ ஜனங்களுக்கு முன்பாகக் காண்பித்துக்கொள்வதற்கோ தங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றும் நினைவில்கொண்டிருப்பது நலமாயிருக்கும்.

இன்னொரு பக்கத்தில் இப்பொழுது காணப்படுகின்றதான சத்தியத்திற்காகவும், கிருபைக்காகவும் தாகம்கொண்டிருக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேல், போதக ஊழியங்களில் காணப்படுபவர்களிடத்தில் மிகுந்த அனுதாபம் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரருடைய நேர்மையும், உண்மையும் இப்போது கடுமையாய்ப் பரீட்சைக்குள்ளாவதைப் போன்று, வேறு எப்போதும் காணப்பட்டதில்லை. அனைவருக்கும் சாந்தமும், பொறுமையும், நீடிய பொறுமையும், சகோதர சிநேகமும், அன்பும், தேவனுக்கான நேர்மையும் - தங்களது உடன்படிக்கைக்கான உண்மையும் கொண்டிருப்பது அவசியமாயிருக்கின்றது.

---

# சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி

*"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." (மத்தேயு 20:27)*

சரியான விருப்பங்களானது, அதை உடையவருக்கும் மற்றும் அவர் தொடர்புக்குள் வருகிறவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமானதாகும். நம்முடைய கர்த்தர் விருப்பம் ஒன்றினைப் பெற்றிருந்தார். அவரைக் குறித்து, "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்" என்று நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 12:2). தகுதியான தூண்டுதல்கள் என்பவைகள் இருக்கின்றன; இல்லையேல் பிதா இப்படியான ஒன்றைத் தம்முடைய குமாரனுக்கு முன்பாக வைத்திருக்க மாட்டார். இந்தத் தற்காலத்தினுடைய காரியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தோமானால், கர்த்தர் நம்மை அநேகவற்றின்மீது அதிகாரியாக வைப்பார் என்ற சிந்தையே நம்மை ஊக்குவிக்கின்றதாய் இருக்க வேண்டும். தேவனை அன்பு கூருகிறவர்களுக்கெனத் தேவன் வைத்து வைத்துள்ளதானவைகளை அடைவதற்கான தீவிரமான விருப்பம் என்பது நலமார்ந்ததேயாகும்; ஏனெனில் இவைகள் தேவனுடைய ஆசீர்வாதங்களாய்க் காணப்படுகின்றன.

ஒவ்வொரு புதுச்சிருஷ்டியும் உயர்வான விருப்பங்களைக் கொண்டிருக்கின்றனர். உண்மையைச் சொல்லப்போனால், ஒவ்வொருவனும் தான் நாடுகின்ற காரியத்திற்கு நேரான குறிக்கோள் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதை அடைவதற்கான இவ்விருப்பத்தினைக் கொண்டிருப்பது என்பது, விருப்பத்திற்குப் பின்னாக ஒரு நோக்கம் காணப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மனதிற்கு முன்பாகச் செயல் தூண்டுதல்களைப் பெற்றிருப்பது சரியே மற்றும் எவைகள் நாம் பிரயாசங்கள் எடுப்பதற்குப் பாத்திரமானவைகள் என்று அறிந்துகொள்வதும் சரியே; இல்லையேல் தவறானவைகள் நம்மைத் தவறான வழிக்கு வழிநடத்திவிடும். நம்முடைய ஆதார வசனத்தில் மிகவும் நலமார்ந்த விருப்பம் ஒன்று நம்முன் வைக்கப்படுகின்றது.

கிறிஸ்துவின் பிரதிநிதியாகக் காணப்படும் சபையானது, மாம்சத்தில் இருக்கும் நமது கர்த்தருடைய சபையாக இருக்கின்றது. விருப்பங்கள் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசுகையில், தாங்கள் மந்தைக்குப் போதகர்களாக, அறிவுரை வழங்குபவர்களாக ஆகத்தக்கதான மிகவும் பிரயோஜனத்திற்கு ஏதுவான விருப்பங்களைக் கொண்டிருக்கும்படியாகச் சபைக்கு அறிவுரை கூறுகின்றார்; ஏனெனில் இது சபையில் மிகவும் பயனுள்ள ஊழியமாய்க் காணப்படுகின்றது. பரிசுத்த பவுல் அடிகளாரின் நாட்களில் காணப்பட்ட வரங்களில் ஒன்று, அந்நிய பாஷையில் பேசுதல் என்பது தெரிந்த விஷயமாகும். அது மிகவும் குறிப்பிடத்தக்க வரமாகும். ஆனாலும் சபையில் பிரயோஜனமுள்ளதாய்க் காணப்படும் வரங்களை நாடுகிறது போல், இந்த அந்நிய பாஷை பேசும் வரமானது அவ்வளவுக்கு நாடப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அற்புதகரமான வரங்களைத் தற்காலத்தில் நாம் பெற்றிருக்கிறதில்லை; ஆனாலும் நாம் தேவவசனத்தையும் மற்றும் கர்த்தருடைய சத்தியத்தினை அறியப்பண்ணிடுவதற்கான விருப்பத்தையும் பெற்றிருக்கின்றோம். ஆகையால் பேச்சாற்றலுக்கான வரமானது இன்னும் விரும்பத்தக்கதாகவே காணப்படுகின்றது. மேலும் ஆவியின் கனிகளானது, நம்மேல் அடக்கியாளும் தாக்கத்தினைச் செலுத்தத்தக்கதாக, நாம் ஆவியின் கனிகளைப் பெற்றுக்கொள்ள வாஞ்சித்திட வேண்டும் என்று அப்போஸ்தலன் அடுத்ததாகச் சுட்டிக்காட்ட முற்படுகின்றார்.

## ஒவ்வொரு சபையாரின் மீதான பொறுப்பு

சபையில் ஊழியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தாம் அதை ஏற்படுத்துவார் என்று கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார். "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18). சரீரத்தில் இப்படியாக தேவன் ஏற்படுத்தியுள்ளார்; உதாரணத்திற்குக் கண்ணினுடைய பணியினைப் பார்க்கலாம். கண் எனும் அவயம் மனித சரீரத்திற்கு உதவி செய்கின்றபடியால் சபையின், கண் அவயமென இருப்பவர்கள், கிறிஸ்துவின் சரீரத்திற்கு மிகவும் உதவியாய் இருப்பார்கள். காது எனும்

அவயங்களும், கால் எனும் அவயங்களும், கைகள் எனும் அவயங்களும் மற்றும் நாவு எனும் அவயங்களும் இருக்கின்றனர். இந்த வெவ்வேறு அவயங்களானவர்கள் முழுச்சரீரத்திற்கான நலனுக்கடுத்த விஷயங்களில் வெவ்வேறான ஊழியங்களைப் புரிகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். கையானது, காலை நோக்கி: நீ எனக்கு வேண்டுவதில்லை என்றோ அல்லது மாறி மாறி இப்படியாகச் சொல்லக் கூடாது (1 கொரிந்தியர் 12:14-31).

ஒருவேளை சரீரமானது கையைக்கொண்டு நடக்க முற்படுமானால், அது திவ்விய ஒழுங்காய் இராது. சரீரமானது காலினாலேயே நடக்க வேண்டும். இப்படியாகவே சபையாரிலும் இருத்தல் வேண்டும். ஆனால் ஒருவேளை சபையார் மிகுதியாய்க் கால் அவயங்களாய் இருப்பவர்கள் மீது சார்ந்து இருப்பார்களெனில், சபையார் கை அவயங்களாய் இருப்பவர்களின் பிரயோஜனத்தை இல்லாமலாக்கி விடுபவர்களாய் இருப்பார்கள். பல்வேறு அவயங்களானது, மிகுந்த பலனுக்கேதுவான ஊழியத்தினைச் செய்வதற்கு ஏதுவான ஊழியங்களில் காணப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் ஒவ்வொரு நபர் செய்யத்தக்கதாக தேவன் ஆயத்தம் பண்ணியுள்ளதான ஊழியத்தினைக்குறித்து அறிந்துகொள்வதற்குச் சபையார் நாடிட வேண்டும். சரியான நபரை, சரியான இடத்தில் வைப்பதற்குத் தங்களது சிறந்த பகுத்துணர்தலைப் பயன்படுத்திடுவதற்கு அவர்கள் நாடிட வேண்டும்.

கால்களைக்கொண்டு இல்லாமல், கைகளைக்கொண்டு நடக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் சபையார்களை நாம் அவ்வப்போது காண்கின்றோம். அந்தச் சபையார் தெய்வீக வழிநடத்துதலினால் ஒவ்வொரு அங்கத்தினனும் விசேஷமாய்த் தகுதிப்படுத்தப்பட்டுள்ள ஸ்தானத்தில், ஒவ்வொரு அங்கத்தினனையும் வைத்திடுவதற்குத் தவறியுள்ளனர். இப்படியாகச் செய்வது சபையாருடைய கடமையாக இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையார் சரீரத்தைக் கால்களைக்கொண்டு நடப்பதற்குப் பதிலாக, கைகளைக்கொண்டு நடக்கப்பண்ணுவதற்கு முயற்சிப்பார்களானால், காலப்போக்கில் கைகளை அதற்குரிய இடத்தில் வைத்திடுவதற்கும் மற்றும் கால்களை அதற்குரிய இடத்தில் வைத்திடுவதற்கும் சபையார் கற்றுக்கொள்வார்கள் மற்றும் இறுதியில் ஒவ்வொரு அங்கத்தினனும் தான் எப்பணிக்குப் பொருத்தமானவனோ, அப்பணியினைச் செய்திடுவான்.

## தேவனுடைய ஊழியத்திற்கு இன்றியமையாததான தாழ்மை

அங்கத்தினர்கள் தவறான ஸ்தானங்களில் காணப்படுவது மாத்திரம் சபையாருக்குப் பாதகமாய்க் காணப்படுவதில்லை; தாங்கள் செய்ய வேண்டிய ஊழியங்களை விட்டு மற்ற ஊழியங்களைச் செய்திட அங்கத்தினர்கள் முயற்சிப்பதும் தவறான காரியமாகும். நாம் எதைச் செய்ய முடிகிற சுபாவமுடையவர்களாய் இருக்கிறோமோ, அதிலிருந்து நம்மையே மாற்றிக்கொள்வது நம்முடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல. சரீரத்தில் இன்னொரு பாகத்தில் ஊழியம் புரிவதற்குத் தெய்வீக வல்லமை மாத்திரமே நம்மை ஆயத்தப்படுத்த முடியும். கிறிஸ்துவின் சரீரத்திற்கு உண்மையில் ஊழியம் புரிய வேண்டும், கர்த்தருக்கு ஊழியம் புரிய வேண்டும் என்பதே நம்முடைய சரியான மனப்பான்மையாகக் காணப்பட வேண்டும். நம்மால் செய்ய முடிகின்றதான ஊழியம் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ, அதை நாம் கவனித்திட வேண்டும். "உங்கள் கைக்கு அகப்படுவதெதுவோ, அதை முழுப்பெலத்தோடு செய்யுங்கள்."

வேறு யாரோ செய்துகொண்டிருப்பவைகளை, அதாவது தங்களால் மற்றவர்களிடத்தில் பாராட்டப்படுகின்றவைகளைத் தாங்கள் செய்திடுவதற்கு விருப்பங்கொள்வதே, சபையில் அநேகருடைய பிரச்சனையாக இருக்கின்றது. சமயம் வாய்க்கும் போது சகல மனுஷருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு - தங்களால் எப்போதும் செய்ய முடிகிறவைகளைச் செய்திடுவதற்கு இவர்கள் கவனித்திருப்பதில்லை. இவர்கள் சீஷத்துவத்தின் சரியான ஆவியினைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால் நம்முடைய ஆதார வசனத்தினுடைய கட்டளையானது, அவர்களைத் தங்களுக்குள்ளாகப் பின்வருமாறு சொல்லிட வழிநடத்திட வேண்டும்: "கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் ஊழியம் செய்வதே என்னுடைய உயர்ந்த குறிக்கோளாய் இருக்க வேண்டும் மற்றும் நான் எவ்விடத்தில்/எந்த ஸ்தானத்தில் ஊழியம் புரியலாம் என்பதை அவரே பார்த்துக்கொள்ளட்டும். இங்கு ஒரு சிறு இடம் இருக்கின்றது, ஒரு சிறு மூலை (corner) இருக்கின்றது; இங்கிருந்து என்னுடைய ஸ்தானத்தில் அவசியமாய்ச் செய்ய வேண்டியதாய்க் காணப்படுவதை நான் செய்திடுவேன். ஒருவேளை கர்த்தர் வழியைத் திறந்து, மிகவும் முக்கியமானதாய்த் தோன்றும் எதையேனும் எனக்குக் காண்பிப்பாரானால், அதை நான் கையில் எடுத்துக்கொள்வேன். நான் செய்யக் கடமைப்பட்டுள்ளதானவைகளை - அது துடைப்பத்தால் பெருக்குவதாகவோ அல்லது கூட்டத்திற்காக அறையை ஒழுங்குப்படுத்துவதாகவோ காணப்பட்டாலும், அதை என்

முழுப்பலத்தோடு செய்திடுவேன். எந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திட்டாலும், அதை நான் செய்திடுவேன்" என்பதேயாகும்.

இது நாம் விருப்பங்களைக் கொண்டிருக்கக்கூடாது என்பதைக் குறிப்பதாகாது. சபைக்கு ஊழியம் புரிய வேண்டும் என்பதே நம்மைக் கட்டுப்படுத்தி ஆளும் தூண்டுதலாகக் காணப்பட வேண்டும். இங்கு நாம் நலமார்ந்த நோக்கத்தினை, தகுதியான விருப்பத்தினைப் பெற்றிருக்கின்றோம். ஆனால் சிலர் முதன்மையானவர்கள் ஆகிடுவதற்கான குறிக்கோளை உடையவர்களாய் இருக்கின்றனர். முதன்மையான இடத்தை விரும்புகின்றவனை, அவன் நாடிடும் இடத்தினை அடைவதற்கு உதவிடக் கூடாது என்பது நம்முடைய குறிக்கோளாய் இருத்தல் வேண்டும் (மற்றும் இது கர்த்தருடைய சிந்தையாக இருக்கும் என்றும் நாம் நம்புகின்றோம்). அவனது இத்தகைய நடவடிக்கையில் அவனுக்கு உதவுதல் என்பது, அவனுக்கும் மற்றும் கர்த்தருடைய நோக்கத்திற்கும் ஊறு விளைவிக்கின்றதாய் இருக்கும். ஆனால் தன் கைக்கு அகப்படுவது எதுவோ, அதைத் தன் முழுப்பலத்தோடு செய்ய நாடுகின்ற யாரையேனும் நாம் காண்போமானால், அது கர்த்தரினால் அங்கீகரிக்கப்படும் என்று நாம் உறுதிக்கொள்ளலாம் மற்றும் தமக்கு உண்மையாய் ஊழியம் புரிந்துள்ளதைக் கர்த்தர் அங்கீகரித்தவராக, பிற்பாடு அவனுக்கு ஏதேனும் சில மிக முக்கியமான ஊழியங்களை அநேகமாகக் கொடுத்திடுவார்.

## தன்னல நாட்டமானது எதிர்க்கப்பட வேண்டும்

கர்த்தரால் தனக்குத் தரப்படுபவைகளில் ஒவ்வொருவரும் திருப்தியடைந்திருக்க வேண்டும். அவன் தன்னல நாட்டம் உடையவனாய் இருத்தல் கூடாது. "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 18:14). தன்னை உயர்த்துகிறவனெவனும் சபையால் உயர்த்தப்படக்கூடாது; ஏனெனில் அவன் கர்த்தரால் உயர்த்தப்படுகிறதில்லை. தன்னைத் தாழ்த்துகிறவன் சபையாருடைய வாக்கினாலோ (vote) அல்லது கர்த்தருடைய சித்தத்தினாலோ உயர்த்தப்படுவான்.

நம்முடைய ஆதார வசனத்தினைக் கர்த்தர் பின்வரும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டார் என்று நாம் எண்ணுகின்றோம்: உங்களில் சிலர் நிச்சயமாகவே முதன்மையானவர்களாக அடையாளம் கண்டு கொள்ளப்படுவீர்கள். பல்வேறு வகையான ஊழியங்கள் காணப்படுகின்றன மற்றும் ஒவ்வொரு சபையாருக்கான ஊழியங்கள் தொடர்பான விஷயத்தில் முதன்மையானவர்களைப் பெற்றிருப்பதும் அவசியமாய் இருக்கின்றது. இதைத் தேவன் தாமே அங்கீகரித்துள்ளார். தேவன் இயேசுவை முதன்மையானவராக்கினார். தன்னலத்தினை நாடினவராகிய சாத்தானைப் புறக்கணித்தார். அவர் இயேசுவைத் தெரிந்துகொண்டு, அவருக்குப் பாதையினை மிகவும் நெருக்கமானதாக்கினார்! ஆனால் இயேசு தம்முடைய தாழ்மையினை நிரூபித்தப் பிற்பாடு, பிதா அவரை உயர்வாய் உயர்த்தி, வாக்களித்த மாபெரும் பலனை அவருக்குக் கொடுத்திட்டார்.

கர்த்தர் இயேசு வெளிப்படுத்திட்டது போன்றதான தாழ்மையின் அதே ஆவியினை, ஊழியத்தின் அதே ஆவியினைப் பெற்றிருப்பவர்களை இப்பொழுது பிதா தேடிக்கொண்டிருக்கின்றார். அவரைக் கவனித்துப் பார்க்கையில், முதன்மையானவராகிடுவதற்கான நிலையினைப் பிதா முன்வைத்தபோது, ஊழியக்காரனாய் இருக்கும் நிபந்தனையை முன்வைத்ததையும்கூட நாம் காண்கின்றோம். இயேசு எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருந்தார் என்று பார்க்கின்றோம். ஆகையால் தேவன் அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தினை அவருக்குத் தந்தருளினார்.

இப்படியாகவே சபையிலுள்ள ஒவ்வொரு சிறு சிறு சபையாரிடத்திலும் காணப்பட வேண்டும். சபையாரின் முதன்மையான ஊழியர்களாய்க் காணப்படும் அனைவரும், முதன்மையானவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது. சகோதரருக்காக ஒருவன் செய்துள்ள ஏதாகிலும் காரியத்தில், தன்னைத் தாழ்மையுள்ள மனம் உடையவனாக வெளிப்படுத்துபவனையே கர்த்தர் முதன்மையானவனாக அடையாளம் கண்டு கொள்வார், அப்படியானவர்கள் உங்கள் ஊழியக்காரர்களாய் இருப்பார்களாக. உங்கள் மத்தியில், கர்த்தருடைய சகோதரர் மத்தியில், ஊழியக்காரனாய் இருப்பதே பிரதானமான கனமாய்க் காணப்படுகின்றதென ஒவ்வொருவனும் கவனித்துக்கொள்வானாக. மிகவும் உண்மையுள்ளவனாய் இருப்பவனுக்கே, ஊழியம் புரிவதற்கான வாய்ப்பானது கொடுக்கப்பட வேண்டும். இவ்விதத்திலேயே அவன் உங்களுக்கு முதன்மையானவனாகக் காணப்படுவான்.

---

R 5323/298/483.

## அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிடார்,

அவர் ஏற்படுத்திவைத்த முடிவில்லாத உடன்படிக்கையை மீறிட மாட்டார்,
அவர் வாக்குத்தத்தங்கள் மீதே சார்ந்திருந்தால் நாமெதற்கு அச்சப்படுவோம்?
தேவன்நமக்குப்போதுமானவர், எதிர்வரும் ஆண்டினுக்கே.
பயம் வேண்டாம், திகில் வேவண்டாம்,
தொடர்ந்து முன்னேறிச்சென்றிடுவீர், இந்நாளின் பிள்ளைகளே.
அவர்வார்த்தை எப்போதும், ஒருபோதும் தவறிழைக்காது,பொய்க்காது,
காவற்காரரே, ஜாமக்காரரே,
சீயோனின் மகிமை நிறைந்த காலைப்பொழுது
புலர்ந்துவிட்டதே,உலகுக்கதனைக்கூறிடுவீரோ?
அது புலர்ந்ததற்கான அடையாளங்கள் அதன்வழிகளின்மீதே
ஒளிர்வதைக்கண்டீரோ?
யாத்ரீகரே, யாத்ரீகரே,எழும்பும், உம்மைச்சுற்றித்திரும்பிப்பார்ப்பீர்,
வானத்தைப்பிளந்து ஒளிவெள்ளம் வருகுதே,
மணவாட்டி ஆடைதனை உமைச்சுற்றி அணிந்திடுவீர்,
பொழுது புலர்ந்துவிட்டதே, எழுந்திடுவீர், விரைந்திடுவீர்.

# இடமிருக்குது, இடமிருக்குது

## STILL THERE IS ROOM

பகல்பொழுது குறைந்துகொண்டே போகின்றதே,
சூரிய வெளிச்சம் மங்கலாகின்றதே,
நமது நிழல் நமக்குப்பின்னே நீண்டு காணலாகிறதே,
கதிரவன் ஒளியோ துரிதமாய் ஓடுதே,
இருக்குது இருக்குது இன்னும் இடமிருக்குது,
இப்போதே நுழைந்திடுவீரே,
திருமண மண்டபம் விரைந்து நிறையுதே,
விருந்தும்கூட ஆரம்பமாகப் போகுதே,
உள்ளே வருவீர், உள்ளே வருவீர்,
மணமகன் உறவாய் உள்ளே நுழைவீர்,
இருக்குது இன்னும் இடமிருக்குது,
இப்போதே நுழைந்திடுவீரே,
யூபிலி மண்டபம் நிறைந்து வருகுதே,
நிறைந்துவருகுதே, விரைந்து உள்ளே நுழைவீரே,
துரிதம் காட்டுவீர், விரைவு காட்டுவீர்,
நிறைந்துவிட்டதாய் நினைத்திடவேண்டாம்,
இடமிருக்குது, இன்னும் இடமிருக்குது,
இந்தக்கணமே நுழைந்திடுவீரே,
முடிவே இல்லா அன்பின் கோப்பை
இன்னும் நிரம்பி வழியவில்லையே,
இடமிருக்குது இன்னும் இடமிருக்குது,
இந்தக்கணமே நுழைந்திடுவீரே,
அனைவரையும் அன்புசெய்யும் ஆண்டவரின் குரலோ,
அதிகமாயும் சப்தமாயும்
அங்கலாய்த்தும் உரத்தும் ஒலிக்கலாகுதே,
தயங்கி நிற்கும் அன்புச் சகோதரா,
தயக்கம் ஏனோ? தாமதம் ஏனோ?
வருவீர் வருவீர்,வருவீரே,
நுழைவீர் விருந்து சாலைக்குள்ளே,
தேவனின் விருந்தை உண்பீரே, தாமதம்செய்தால்
வேலியருகே உள்ள மாந்தர்
விருந்தினை உண்ணவே வந்திடுவாரே,
அழைக்கப்பட்டவர் நீர்தாமே,
அழைப்பை அசட்டை செய்யாதீர்,
நீதியின் வஸ்திரம் தரித்தவரே,
திருமண வஸ்திரம் அணிந்துகொண்டே
கலியாண சாலைக்குள் நுழைந்திடுவீரே
கலியாண விருந்தை உண்டிடுவீரே!

-------------

**--1929--**

# மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர, மற்றபடி சபையில் - ஒரு vote/வாக்கில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில், 51 பேர்கள் சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில் தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு நபர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்க குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளதான தரநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைப்பாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாகத் தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

இங்கும் அங்குமாக எழும்பி தலையிடுகிறதான இன்னொரு கேள்வி, - நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை/vow எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படலாமா? என்பதேயாகும். கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும் முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் (vow) தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதினிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. ஒருவேளைச் சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர்களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாகத் தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த

வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்துகொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

---

# நமது “ஆசீர்வாதத்தின் பாத்திரம்”

***“கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.”***
**(1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)**

தேவனைப் போற்றிக்கொண்டு, நாம் பானம்பண்ணுகின்றதான ஆசீர்வாதத்தின் பாத்திரமானது உண்மையில் அநேக விதத்தில் ஆசீர்வாதத்தின் பாத்திரமாகவே இருக்கின்றது. அது கிறிஸ்துவோடு பாடுபடுவதற்கான பாக்கியமான சிலாக்கியத்தையும், அந்தப் பாடுகளுக்கான பலனாகக் கடந்துவரும் ஆசீர்வாதமான காரியங்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. வாக்குத்தத்தங்களானது இராஜ்யத்தில், நாம் இராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கடையும்போது நிறைவேறுதலை அடையும் என்று கர்த்தர் தெரிவித்துள்ளார்.

தேவனால் நாட்டப்பட்டதான மாபெரும் திராட்சச்செடியின் பாகமாக சபை அடையாளப்படுத்தப்படுகின்றாள்; இதை இயேசு, “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்” என்று கூறிக் குறிப்பிடுகின்றார் (யோவான் 15:5). இந்தத் திராட்சச்செடியினுடைய அருமையான கனிக் குறித்து நமது கர்த்தர் நம்மிடம் கூறுகின்றார்; மற்றும் கனி வளருதல் என்பது, நமது அனுபவங்களினுடைய துக்கமான பாகத்தைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு விதத்தில் பாத்திரமானது சந்தோஷத்தைக்குறிக்கின்றதாய் இருக்கும்; இதை நாம் இந்தத் தற்காலத்தினுடைய பாடுகளைக்கடந்து, மகிமைக்குள் பிரவேசிக்கும்போது அடைகின்றவர்களாய் இருப்போம் (மத்தேயு 26:29). “தேவனைப் போற்றுதல்/ஸ்தோத்திரித்தல்” [திருவிவிலியம்] (நாம் ஆசீர்வதிக்கிற – KJV மொழிப்பெயர்ப்பில்) என்று ஆதார வசனத்தில் இடம்பெறுகின்றதான வார்த்தைகளானது, கர்த்தருக்கு நன்றி மற்றும் துதி ஏறெடுத்தலைக்குறிக்கின்றதாய் இருக்கும் எனப் புரிந்துகொள்ளப்படலாம். இருதயத்தில் நன்றி இல்லாமலும், மதிப்பினை உணர்ந்துகொள்ளாமலும் பாத்திரத்தைப் பெற்றுக்கொள்பவர்கள், பலனை அடையமாட்டார்கள். ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், கிறிஸ்துவோடு பாடுபடுவதற்கான இந்த மாபெரும் சிலாக்கியத்திற்காக, நன்றியுணர்வோடு பாத்திரத்தினை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

“கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?)” எனும் அப்போஸ்தனுடைய இந்தக் கேள்வியைக் கவனிக்கையில், நாம் நம் மனங்களுக்கு முன்பாக இரண்டு கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; *முதலாவதாக* கிறிஸ்துவினுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகிறதும், அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படுகிறதுமான சொல்லர்த்தமான பாத்திரத்தை, சொல்லர்த்தமான திராட்சப்பழரசத்தை மனதின் முன்பாகக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் *இரண்டாவதாக* அவரது பாத்திரத்தில், பலியின் பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருக்கின்றோம் என்ற உண்மையை மனதின் முன்பாகக்கொண்டிருத்தல் வேண்டும். அவரது மரணத்தில் பங்குகொள்வதற்கு, அவரது பாடுகளில் பங்குகொள்வதற்கு நாம் சிலாக்கியமடைந்திருக்கின்றோம். இந்த ஒரு கருத்தானது,மற்ற வேதவாக்கியங்கள் மூலமாகவும் முன்வைக்கப்படுகின்றது — இயேசு தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார் போன்றவைகள் முன்வைக்கப்படுகின்றது. அவர் உலகத்திற்கான மாபெரும் தீர்க்கத்தரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் மற்றும் ஆசி வழங்குபவராகவும் காணப்படப்போகின்றார்.

வேத வாக்கியங்களின்படி, மாபெரும் தலையானவர், மரணம்வரையிலும் பாடுகள் அனுபவித்திட்டப் பிற்பாடு, உலகத்திற்காக தம்முடைய ஜீவனை கையளித்த பிற்பாடு மகிமைப்படுத்தப்பட்டார். நாம் அவரது அங்கத்தினர்களாக, அதாவது சீக்கிரத்தில் மகிமையில் அவரது அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாக, மாம்சத்தில் இப்பொழுது அங்கத்தினர்களாக ஏற்றுக்கொண்டுள்ளார். நாம் ‘அங்கத்தினர்கள்’ எனும் வார்த்தையினை, பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் குறித்துப் பேசும் விதத்திலேயே குறிப்பிடுகின்றோம். பாராளுமன்ற குழுவில் அநேக அங்கத்தினர்கள் காணப்படுவதுபோலவே, கிறிஸ்துவினுடைய சரீரத்தில் அநேக அங்கத்தினர்கள் காணப்படுகின்றனர். கிறிஸ்துவை விசுவாசித்தல் மற்றும் தங்களையே தேவனுக்குக் கொடுத்தல் எனும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இவர்கள் தங்கள் அழைப்பையும்,

தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். அப்போது நமது கர்த்தர் இவர்களைத் தம்முடைய அங்கத்தினர்களாக — இப்பொழுது பூமியில் அங்கத்தினர்களாகவும், பிற்பாடு மகிமையில் அவருடைய அங்கத்தினர்களாகவும் ஏற்றுக்கொள்வார்.

## நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்

ஆகையால் இந்தப் பாத்திரத்தில் நாம் உண்மையாய்ப் பானம்பண்ணும்போதே, நாம் நமது "அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திட" முடியும் (மத்தேயு 26:27; 2 பேதுரு 1:10). "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" எனும் கட்டளையானது, இரண்டு அர்த்தங்கள் கொண்டவையாக இருக்கின்றது; முதலாவது அர்த்தம், சுவிசேஷ யுகம் முடிவடைவதற்கு முன்னதாக அது முழுவதுமாகப் பானம் பண்ணப்பட வேண்டும் மற்றும் இரண்டாவது அர்த்தம், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய அனைவரும் அதில் பானம்பண்ணிட வேண்டும் என்பதாகும். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இப்பொழுது காணப்பட்டுக் கொண்டிருக்கின்றதான சரீரம் மற்றும் தலையாகிய கிறிஸ்துவின் பாடுகள் குறித்தும், பின் தொடரும் மகிமை குறித்தும் பரிசுத்தவானாகிய பேதுரு பேசியிருக்கின்றார் (1 பேதுரு 1:8-12; 4:1; 5:1). கடைசி அங்கத்தினன் பரலோக நிலைக்குள் கடந்து போனவுடனே, கிறிஸ்துவின் பாடுகள் அனைத்தும் முடிவடைந்துபோனதாக இருக்கும் மற்றும் அதற்குமேல் எவருக்குமே "கிறிஸ்துவின் பாடுகளில்" பங்கடைவதற்கான சிலாக்கியமும், அவருடைய மகிமையில் பங்கடைவதற்கும், அவரது மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகுவதற்குமான சிலாக்கியமும் கிடைக்காது.

அநேக திராட்சப்பழங்களுடைய இரசத்தை உடையதாக இருப்பினும், அது ஒரே பாத்திரம்தான் மற்றும் அநேக கோதுமை மணிகளினால் உண்டுபண்ணப்பட்டிருந்தாலும், அது ஒரே அப்பம்தான். உலகத்திற்கான அப்பமாக வேண்டுமெனில், மணிகளானது அதன் தனித்துவத்தையும் மற்றும் அதன் ஜீவனையும் தக்கவைத்துக்கொள்ள முடியாது. ஜீவன் வழங்குகிற ஒன்றாகக் காணப்பட வேண்டுமெனில் திராட்சப்பழங்களானது, தங்களைத் திராட்சப்பழங்களாகத் தக்கவைத்திட முடியாது. இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்குகொள்பவர்களாய் இருக்கின்றனர் என்பதான அப்போஸ்தலனுடைய வார்த்தைகளிலுள்ள அழகை நாம் பார்க்கின்றோம். அவரது பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களாக, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலமாகவும், புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமே ஒழிய மற்றபடியல்ல; அவரது மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதின் மூலமாகத்தான் அவரோடுகூட, மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்குமான உயர்த்தெழுதலை — முதலாம் உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஒரே அப்பத்தில் சபையின் பங்கு

அப்பமானது முதலாவதாக, நமக்காகவும், பொதுவான உலகத்துக்காகவும் வேண்டி பிட்கப்பட்டதான கர்த்தராகிய இயேசுவினுடைய சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. விரிவான கண்ணோட்டத்தில் பார்க்கையில், அது கிறிஸ்துவினுடைய சரீரம் முழுவதையும், அவரது அங்கத்தினர்களாகுபவர்கள் அனைவரையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அப்பம் பிட்கப்படுதலானது, சரீரம் பிட்கப்படுதலானது, 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கர்த்தருடைய இராப்போஜனம் நிறுவப்பட்டபோது, இயேசு அப்பத்தைப் பிட்டார் என்று நாம் வாசிக்கின்றோம். சொல்லப்போனால், அப்போது அவரால் மாத்திரமே அப்பத்தைப் பிட்க முடியும். இயேசு தம்முடைய பலியின் மூலமாகவும், உயர்த்தப்படுதலின் மூலமாகவும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருடைய குறைவினை நிறைவாக்குவதுவரையிலும், மனுக்குலத்தில் மீதியானவர்கள் அனைவருமே, தேவனுடைய பார்வையில், நீதிமான்கள் அல்லாதவர்களாகவே காணப்பட்டனர். ஆகவே இயேசுவே முதலாவதாக அப்பத்தைப் பிட்டார். இன்று புளிப்பில்லாத அப்பமானது, நினைவுகூருதலின் காலக்கட்டத்தில், நம் ஒவ்வொருவரிடத்திலும் கடந்துவரும்போது மற்றும் நாம் ஒவ்வொருவரும் அதில் ஒரு பங்கை/பாகத்தை எடுத்துக்கொள்ளும்போது, அவனவன் தனக்காகவே அதைப் பிட்டுக்கொள்கின்றான்.

நமது கர்த்தர் முதலாவது அப்பத்தைப் பிட்டக் காரியமானது, நமக்குத் தனிப்பட்ட பங்கு இல்லை என்பதைக்குறிப்பதாகாது. நமது கர்த்தருடைய சரீரத்தை (பிட்குதலை) நொறுக்குவதை பரம பிதா செய்ய வேண்டியிருந்தது என்பதை நாம் நினைவுகூருகின்றோம். எழுதப்பட்டிருக்கிறபடியே, "யேகோவாவோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசாயா

53:10). இது நமது கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராக செய்யப்படவில்லை. குமாரனை நொறுக்கும்/பிட்கும் காரியத்தினை பரம பிதா செய்ய வேண்டியிருந்ததுபோன்று, தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக, அப்பத்தில் பங்குபெறுகிறவர்களாகிய நம்முடைய நொறுக்குதலையும் பரம பிதா செய்கின்றார்.

அடுத்த அதிகாரத்தில் அப்போஸ்தலனால், "கர்த்தருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறப்பட்டுள்ளதான வார்த்தைகள், இயேசுவினுடைய மரணத்திற்கே குறிப்பாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. வார்த்தைகளினுடைய பின்னணி அமைப்பானது, இங்குக் கர்த்தர் இயேசுவே தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26). "அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" (சங்கீதம் 45:11). சபை எங்குமே ஆண்டவர் என்று குறிப்பிடப்படவில்லை.

இன்னுமாக "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று இயேசு கூறியுள்ளதையும் நாம் நினைவுகூரவேண்டும் (லூக்கா 22:19). அவர் "உங்களை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றும், பலியிலுள்ள உங்கள் பங்கினை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றும் சொல்லவில்லை. நாம் அவரோடுகூட மரித்தவர்களாய்க் காணப்பட வேண்டும். பின்வரும் மகிமைகளில் பங்கடைய வேண்டுமெனில், இந்தத் தற்காலத்தின் பாடுகளில், நாம் அவரோடுகூடப் பங்குகொள்ள வேண்டும் என்பதை நினைவுகூருகின்றோம். பிதா குமாரனைத் தலையாகத் தந்தருளினார்; "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" ஆவார் (எபிரெயர் 3:1; உரோமர் 8:17, 18; 9:5).

## இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றது

இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றதென வேதவாக்கியங்கள் கூறுகின்றன (லேவியராகமம் 17:11). இதற்கு இசைவாகவே, யூதர்கள் இரத்தத்தைப் புசிப்பதற்கு எப்போதும் தடைப்பண்ணப்பட்டவர்களாய் இருந்தனர். மிருகங்களினுடைய மாம்சம் புசிக்கப்படுவதற்கு முன்னதாக, அவைகளின் இரத்தம் சிந்தப்பண்ணப்பட வேண்டும். யூதர்களின் நடுவே தங்கியிருக்கின்றதான எந்த அந்நியர்களும்கூட, எந்த இரத்தத்தையும் புசிக்க அனுமதிக்கப்படவில்லை (லேவியராகமம் 17:10-14). இப்படியாக ஜீவன் என்பது மிகவும் புனிதமான ஒன்று என்று தேவன் தெரியப்படுத்தினார். மனிதனுக்குத் தேவன் கொடுத்ததான இந்த ஜீவ ஆக்கக்கூறானது, இரத்தத்தில் காணப்படுகின்றதாய் இருக்கின்றது. இரத்த நாளங்களில் இரத்தம் ஓடிக்கொண்டிருப்பது வரையிலும், ஜீவன் காணப்படுகின்றதாயிருக்கும்; ஆனால் இரத்தம் சிந்தும்போது, அந்த ஜீவராசி மரிக்கின்றது.

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனை ஒப்புக்கொடுத்தபோது, அந்த ஜீவனைத் தமக்காகப் பயன்படுத்தும் வண்ணமாக, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையை அவர் தம் வசமாய் வைத்துக்கொள்ளவில்லை. "விலையுயர்ந்த முத்தை" அடைய விரும்புபவர்கள் அனைவரும், தங்களிடத்திலுள்ள யாவற்றையும் விற்க வேண்டும், அதாவது தாங்கள் அனுபவிக்கின்றதான பூமிக்குரிய ஜீவன் (அ) சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்திட வேண்டும் என்று அவர் நமக்கு உவமை ஒன்றில் கூறியுள்ளார் (மத்தேயு 13:45, 46). நமது கர்த்தர் பரிபூரணமான பூமிக்குரிய ஜீவனை உடையவராய் இருந்தார். அவர் அந்த ஜீவனை ஒப்புக்கொடுத்தார். "அவர் தம்முடைய ஆத்துமாவை (ஜீவனை) மரணத்திலூற்றினார்" (ஏசாயா 53:12). இது எதன் அடிப்படையில் ஆகும்? நமக்கு முன்பாக அவர் முன்வைத்ததான அதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அதாவது "நாம் பிழைத்திருக்க வேண்டும் எனில், நாம் மரித்தாக வேண்டும்; நாம் ஆளுகைசெய்ய வேண்டுமெனில், நாம் பாடுபட வேண்டும்; நாம் அவரோடுகூட மரித்திருக்க வேண்டும்" என்பதாக அவர் நம் முன் வைத்ததான இதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும் (2 தீமோத்தேயு 2:11, 12). ஆகையால் அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடருகின்றவர்களாகிய நாமும், அவர் செய்த வண்ணமாகவே செய்ய வேண்டும்.

நாம் அவரது சீஷர்களெனச் சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்போமானால், நாம் இயேசு செய்ததையே செய்கிறவர்களாக இருப்போம். இவை அனைத்தும் உலகத்துக்காகச் செயல்படுத்தப்படப்போகின்றது. அந்தப் பூமிக்குரிய ஜீவனை அவர் கையளித்தது என்பது, பாதுகாத்து வைத்துக்கொள்வதற்காக இராமல், மாறாக இறுதியில் அதை மனுக்குலம் அனைத்திற்கும் (கைமாற்றிவிடுவதற்கே) கொடுத்துவிடுவதற்கே ஆகும். மனித

ஜீவனுக்கான உரிமை இன்னும் அவரது கட்டுப்பாட்டின்கீழாக இருக்கின்றது. அவரே மாபெரும் மத்தியஸ்தராக, தம்மால் ஊற்றப்பட்டதான ஜீவனை, மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுத்தருளுவார்.

சபையாகிய நாம் அவரோடுகூட, அவரது பாடுகளில் பங்கடையத்தக்கதாகவும், ஆவிக்குரிய தளத்தில் அவரது மகிமையான இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாகவும், அவர் இப்பொழுது நமக்கு, தம்முடைய புண்ணியத்தை/தகுதியைத் தரிப்பிக்கின்றவராய் இருக்கின்றார். ஆகையால் இந்தப் பாத்திரமானது, பூமிக்குரிய ஜீவனையும், அதனுடன் உள்ள உரிமைகள் அனைத்தையும் முழுமையாய்த் துறந்துவிடுதலைக் குறிக்கின்றதாயிருக்கும். நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனானது பறிமுதல் செய்யப்படவில்லை, மாறாக ஒப்புக்கொடுக்க மாத்திரந்தான் பட்டது (யோவான் 10:17, 18). அதை ஒப்புக்கொடுத்ததற்கான நோக்கம் என்னவெனில், மனுக்குலம் அதனை பெற்றுக்கொள்ளத்தக்கதாக அதை அவர் தனிப்பட்ட விதத்திலும், என்றென்றுமாகவும் துறந்துவிடுவதாக இருந்தது. அவர்கள்வசம் கைமாற்றும் காரியத்தினை, அவர் இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை, எனினும் இந்த நோக்கத்திற்காகவே, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டார்.

## பறிமுதல் செய்யப்படாத, பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமை

உலகத்தை மீட்டுக்கொள்வதற்கான தெய்வீகச் சித்தத்தை நிறைவேற்றும் பணியை நமது கர்த்தர் மேற்கொண்டார் மற்றும் அதை நிறைவேற்றும் காரியத்தினைத் தொடர்ந்தார், எனினும் அவர் நோக்கத்தினை இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை. அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார், ஆனால் அதன் உரிமையை அவர் இழக்கவில்லை. அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டபோது, அவருக்கு இன்னமும் அந்தப் பூமிக்குரிய ஜீவன்மீது உரிமை இருந்தது மற்றும் அந்த ஜீவனைத் தமக்காக அவர் பயன்படுத்தக்கூடாது என்றும், அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய உலகம் அனைத்திற்கும், தம்முடைய சபை தம்மோடுகூட ஆளுகை செய்யும் ஆயிர வருடங்களடங்கிய தம்முடைய ஆளுகையின் முடிவில், ஒப்படைக்கப்பட/கொடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலை உடையவராய் இருந்தார்.

ஆகையால் அவரது ஜீவன், அவரிடமிருந்து பிடுங்கப்படவில்லை; அவரது கீழ்ப்படியாமையினால் மாத்திரமே அவரிடமிருந்து, அவரது ஜீவன் பிடுங்கப்பட முடியும் (லேவியராகமம் 18:5; எசேக்கியேல் 20:11; லூக்கா 10:28; உரோமர் 10:5). அவர் தாமாய் முன்வந்து, தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். தம்முடைய ஜீவனானது தெய்வீக நீதியினுடைய கரங்களில் சொத்தாகக் காணப்படத்தக்கதாகவும், இதினிமித்தம் காலங்கள் வரும்போது, அந்தச் சொத்தை தாம் மனுக்குலத்திற்காகப் பயன்படுத்தத்தக்கதாகவும், அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 6:51).

நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவனானது என்றென்றும் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்பதும், அதை அவர் திரும்ப எடுக்கக்கூடாது என்பதும் தெய்வீக நோக்கமாய்க் காணப்பட்டது. அவர் தம்முடைய ஜீவியத்தை யோர்தானில் அர்ப்பணம் பண்ணி, அந்தப் பலியைக் கல்வாரியில் முடித்தார். சுவிசேஷ யுகம் முழுவதிலும், அவர் தம்முடைய மறைபொருளான சபையைப் பலிச்செலுத்திக் கொண்டுவருகின்றார். இந்தச் சரீர அங்கத்தினர்களுடைய பலியினை அவர் நிறைவேற்றின உடனே, மகா பிரதான ஆசாரியனுக்குச் சொந்தமான, அவர்களது ஜீவனுக்கான உரிமைகளானது, புதிய உடன்படிக்கையை முத்திரிப்பதின் மூலமாக உலகத்தை வாங்குவதற்காக, மீட்டுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். இதன்பின் உடனடியாக, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவரது புண்ணியமானது, அவரது ஜீவன்-உரிமையானது முழுச் சபையும், திரைக்கு அப்பால் கடந்து போகாததுவரையிலும் அடுத்தக் கட்டமாகச் செயல்படுத்தப்படாது என்பது, கிருபாசனம் ஆட்டினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. நமது கர்த்தருடைய இரத்தமும், அவரது சரீரத்தினுடைய இரத்தமும், அனைத்தும் ஒரே இரத்தமாயிருக்கின்றது. அநேக அங்கத்தினர்கள் அடங்கின ஓர் ஆசாரியன் ஆகும். அது அனைவருக்கும், அதாவது சர்வலோகத்தினுடைய பாவங்களுக்குமான ஒரே பாவநிவாரணம் ஆகும் (1 யோவான் 2:2).

இரத்தம், கிறிஸ்துவினுடைய மரணத்தை மாத்திரம் குறிக்காமல், புண்ணியம்/தகுதி தரிப்பிக்கப்பட்டதான அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருடைய மரணத்தையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது தொடர்பாகவே அப்போஸ்தலன் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் (ஐக்கியம் (அ) பங்குகொள்ளுதல்) ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?" நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (ஐக்கியம் (அ) பங்குகொள்ளுதல்) ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?" அதாவது பாத்திரத்திலும், அப்பத்திலும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுபோல, அவருடன் ஓர் ஐக்கியம்/பங்கெடுத்தல் ஆகும். காரியம் முழுவதுமே அவரைப்பற்றியதுதான்; ஆனாலும் கிறிஸ்துவின் அங்கத்தினர்களென, மாம்சத்தைப் பலிச்செலுத்துவதில், கிறிஸ்துவினுடைய பாடுகளிலான நமது பங்கெடுப்பில், நமக்கான தனிப்பட்ட பங்கினையும்கூட நாம் நினைவுகூருகின்றோம்.

*****

# இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றது

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனைக் laid down/கொடுத்து வைத்தபோது, அந்த ஜீவனைத் தமக்காகப் பயன்படுத்தும் வண்ணமாக, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையை அவர் தம் வசமாய் வைத்துக்கொள்ளவில்லை. "விலையுயர்ந்த முத்தை" அடைய விரும்புபவர்கள் அனைவரும், தங்களிடத்திலுள்ள யாவற்றையும் விற்க வேண்டும், அதாவது தாங்கள் அனுபவிக்கின்றதான பூமிக்குரிய ஜீவன் (அ) சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்திட வேண்டும் என்று அவர் நமக்கு உவமை ஒன்றில் கூறியுள்ளார் (மத்தேயு 13:45, 46). நமது கர்த்தர் பரிபூரணமான பூமிக்குரிய ஜீவனை உடையவராய் இருந்தார். அவர் அந்த ஜீவனை ஒப்புக்கொடுத்தார். "அவர் தம்முடைய ஆத்துமாவை (ஜீவனை) மரணத்திலூற்றினார்" (ஏசாயா 53:12). இது எதன் அடிப்படையில் ஆகும்? நமக்கு முன்பாக அவர் முன்வைத்ததான அதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அதாவது "நாம் பிழைத்திருக்க வேண்டும் எனில், நாம் மரித்தாக வேண்டும்; நாம் ஆளுகைசெய்ய வேண்டுமெனில், நாம் பாடுபட வேண்டும்; நாம் அவரோடுகூட மரித்திருக்க வேண்டும்" என்பதாக அவர் நம் முன் வைத்ததான இதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும் (2 தீமோத்தேயு 2:11, 12). ஆகையால் அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடருகின்றவர்களாகிய நாமும், அவர் செய்த வண்ணமாகவே செய்ய வேண்டும்.

நாம் அவரது சீஷர்களெனச் சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்போமானால், நாம் இயேசு செய்ததையே செய்கிறவர்களாக இருப்போம். இவை அனைத்தும் உலகத்துக்காகச் செயல்படுத்தப்படப்போகின்றது. அந்தப் பூமிக்குரிய ஜீவனை அவர் கையளித்தது என்பது, பாதுகாத்து வைத்துக்கொள்வதற்காக இராமல், மாறாக இறுதியில் அதை மனுக்குலம் அனைத்திற்கும் (கைமாற்றிவிடுவதற்கே) கொடுத்துவிடுவதற்கே ஆகும். மனித ஜீவனுக்கான உரிமை இன்னும் அவரது கட்டுப்பாட்டின்கீழாக இருக்கின்றது. அவரே மாபெரும் மத்தியஸ்தராக, தம்மால் ஊற்றப்பட்டதான ஜீவனை, மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுத்தருளுவார்.

சபையாகிய நாம் அவரோடுகூட, அவரது பாடுகளில் பங்கடையத்தக்கதாகவும், ஆவிக்குரிய தளத்தில் அவரது மகிமையான இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாகவும், அவர் இப்பொழுது நமக்கு, தம்முடைய புண்ணியத்தைத் தரிப்பிக்கின்றவராய்/சாற்றுகின்றவராய் இருக்கின்றார். ஆகையால் இந்தப் பாத்திரமானது, பூமிக்குரிய ஜீவனையும், அதனுடன் உள்ள உரிமைகள் அனைத்தையும் முழுமையாய்த் துறந்துவிடுதலைக் குறிக்கின்றதாயிருக்கும். நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனானது பறிமுதல் செய்யப்படவில்லை, மாறாக laid down/கொடுத்து வைக்க மாத்திரமே பட்டது (யோவான் 10:17, 18). அதைக் கொடுத்து வைப்பதற்கான நோக்கம் என்னவெனில், மனுக்குலம் அதனை பெற்றுக்கொள்ளத்தக்கதாக அதை அவர் தனிப்பட்ட விதத்திலும், என்றென்றுமாகவும் துறந்துவிடுவதாக இருந்தது. அவர்கள்வசம் கைமாற்றும் காரியத்தினை, அவர் இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை, எனினும் இந்த நோக்கத்திற்காகவே, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டார்.

## பறிக்கொடுக்கப்படாத, பூமிக்குரிய ஜீவ-உரிமை

உலகத்தை மீட்டுக்கொள்வதற்கான தெய்வீகச் சித்தத்தை நிறைவேற்றும் பணியை நமது கர்த்தர் மேற்கொண்டார் மற்றும் அதை நிறைவேற்றும் காரியத்தினைத் தொடர்ந்தார், எனினும் அவர் நோக்கத்தினை இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை. அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார், ஆனால் அதை அவர் பறிக்கொடுத்து இழந்துபோகவில்லை. அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டபோது, அவருக்கு இன்னமும் அந்தப் பூமிக்குரிய ஜீவன்மீது உரிமை இருந்தது மற்றும் அந்த ஜீவனைத் தமக்காக தாம் பயன்படுத்தக்கூடாது என்றும், அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய உலகம் அனைத்திற்கும், தம்முடைய சபை தம்மோடுகூட ஆளுகை செய்யும் ஆயிர வருடங்களடங்கிய தம்முடைய ஆளுகையின் முடிவில், அது கொடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலை உடையவராய் இருந்தார்.

ஆகையால் அவரது ஜீவன், அவரிடமிருந்து பிடுங்கப்படவில்லை; அவரது கீழ்ப்படியாமையினால் மாத்திரமே அவரிடமிருந்து, அவரது ஜீவன் பிடுங்கப்பட முடியும் (லேவியராகமம் 18:5; எசேக்கியேல் 20:11; லூக்கா 10:28; உரோமர் 10:5). அவர் தாமாய் முன்வந்து, தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகத் தமது ஜீவனைக் laid down/கொடுத்து வைத்தார். தம்முடைய ஜீவனானது தெய்வீக நீதியினுடைய கரங்களில் சொத்தாகக் காணப்படத்தக்கதாகவும், இதினிமித்தம் காலங்கள் வரும்போது, அந்தச் சொத்தை தாம் மனுக்குலத்திற்காகப் பயன்படுத்தத்தக்கதாகவும், அவர் தமது ஜீவனைக் கொடுத்து வைத்தார் (யோவான் 6:51).

நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவனானது என்றென்றைக்குமாய்க் கொடுக்கப்பட வேண்டும் என்பதும், அதை அவர் திரும்ப எடுக்கக்கூடாது என்பதும் தெய்வீக நோக்கமாய்க் காணப்பட்டது. அவர் தம்முடைய ஜீவனை யோர்தானில் அர்ப்பணம் பண்ணி, அந்தப் பலியைக் கல்வாரியில் முடித்தார். சுவிசேஷ யுகம் முழுவதிலும், அவர் தம்முடைய மறைபொருளான சரீரத்தைப் பலிசெலுத்திக் கொண்டுவருகின்றார். இந்தச் சரீர அங்கத்தினர்களுடைய பலியினை அவர் நிறைவேற்றின உடனே, மகா பிரதான ஆசாரியனுக்குச் சொந்தமான, அவர்களது ஜீவனுக்கான உரிமைகளானது, புதிய உடன்படிக்கையை முத்திரிப்பதின் மூலமாக உலகத்தை வாங்குவதற்காக, மீட்டுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். இதன்பின் உடனடியாக, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவரது புண்ணியமானது, அவரது ஜீவ-உரிமையானது முழுச்சபையும், திரைக்கு அப்பால் கடந்து போகாததுவரையிலும் அடுத்தக் கட்டமாகச் செயல்படுத்தப்படாது என்பது, கிருபாசனம் ஆட்டினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. நமது கர்த்தருடைய இரத்தமும், அவரது சரீரத்தினுடைய இரத்தமும், அனைத்தும் ஒரே இரத்தமாயிருக்கின்றது. அநேக அங்கத்தினர்கள் அடங்கின ஓர் ஆசாரியன் ஆகும். அது அனைவருக்குமான, அதாவது சர்வலோகத்தினுடைய பாவங்களுக்குமான ஒரே பாவநிவாரணம் ஆகும் (1 யோவான் 2:2).

---

# நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம்

***“நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.” யோவான் 6:53***

இந்த அதிகாரத்தில், கர்த்தர் தம்மைப் பரலோகத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் என்று கூறினதன் நிமித்தமாக, முறுமுறுத்தவர்களாகவும், தம்மை விசுவாசியாதவர்களாகவும் காணப்பட்ட யூதர்களிடம் அவர் பேசியவைகள் இடம்பெறுகின்றது. “மாம்சத்தைப் புசியாமலும், . . . இரத்தத்தைப் பானம்பண்ணாமலும்” எனும் அவரது வார்த்தைகளானது, ஆழமான ஆவிக்குரிய அர்த்தம் உடையவையாகவும், உத்தம இஸ்ரயேலர்களால் மாத்திரம் பெற்றுக்கொள்ள முடிகின்றவையாகவும் காணப்படுகின்றது. மேலும் இது இன்றுங்கூட உண்மையாகவே இருக்கின்றது. உலகமானது அடுத்த யுகத்தில், இயேசுவினால் கையாளப்படும்போது, அவரது மாம்சத்தைப் புசிப்பதற்கு — அவரது பலியினுடைய புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக் கொள்வதற்குரிய வாய்ப்பினை நிச்சயமாய்ப் பெற்றுக்கொள்ளும்; எனினும் அவர்கள் அவரது பாத்திரத்தில் பங்குகொள்வதற்கு — அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்குரிய எந்த வாய்ப்பினையும் அடையமாட்டார்கள். அடையாளப் பாஷையில் பாத்திரமானது, பலியாக்கப்பட்ட ஜீவனைக்குறிக்கின்றது. பாத்திரத்தினால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்துவினுடைய பாடுகளில், உலகத்திற்கு எந்தப் பங்கெடுப்பும் கிடைக்கப்பெறாது.

நமது கர்த்தருடைய வார்த்தைகளின் அர்த்தம் என்னவெனில் . . . “சுவிசேஷ யுகத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட காரியத்தினை நீ ஏற்றுக்கொள்வாயானால், நீ ஜீவனை அடையலாம் மற்றும் அந்த ஜீவனை மனிதன் இதுவரையிலும் பெற்றிராத (அ) பெறமுடிந்த அளவைக்காட்டிலும் மிக அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். நீ தன்னில்தான் ஜீவனை உடையவனாகலாம் — உனக்குள்ளே ஜீவனை உடையவனாகலாம்.”

## இரண்டு இரட்சிப்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன

கர்த்தருடைய மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்திற்கும், அவரது இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதான திராட்சரசத்திற்கும் இடையில், வேத வாக்கியங்களில் வேறுபாடு நிலைநாட்டப்பட்டுள்ளது என்று நாம் நம்புகின்றோம். சபையானது அவரது மகிமையடைந்த சரீரத்தின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, மேற்கூறப்பட்டுள்ள இரண்டிலும் பங்கெடுப்பதன் வாயிலாக, அவைகளில் பங்கடைபவர்களாக இருக்க வேண்டும். அப்பமானது, அப்போஸ்தலன் விவரிப்பதுபோன்று, நமக்கு அவசியமான ஜீவ அப்பமென, நமது கர்த்தரை மாத்திரம் நமக்கு அடையாளப்படுத்துகின்றதாய் இராமல், இன்னுமாக நமது கர்த்தர் பிட்கப்பட்டதுபோன்று அவருடைய அங்கத்தினர்களெனப் பிட்கப்படப் போகின்ற நம்மையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மேலும் திராட்சரசமானது நமது கர்த்தருடைய இரத்தத்தை மாத்திரம் குறிக்காமல், இன்னுமாக சபையினுடையஇரத்தத்தையும் — நாம் அவரது தியாகமான பாடுகளில், அவரோடுகூடப் பங்காளிகளாக இருப்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (1 கொரிந்தியர் 10:16, 17).

நமது கர்த்தருடைய பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான சிலாக்கியமானது, உலகத்திற்குரியதல்ல. அவர்கள் கிறிஸ்துவினுடைய பாடுகளில் பங்கடைபவர்களாக இருக்கமாட்டார்கள்; ஏனெனில் சபை மகிமையடைவதோடு, அவருடைய பாடுகளிலும், மகிமையிலும் பங்கடைவதற்கான வாய்ப்புகள் அனைத்துமே முடிவடைந்துவிடும். “நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்” — முழுவதையும் பானம்பண்ணுங்கள் என்று கர்த்தர் கூறினார். உலகம் பானம்பண்ணுவதற்கு எதுவுமிராது. சபை வகுப்பாராகிய நாம், “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகின்றவர்களாய்” இருப்போம் (கொலோசெயர் 1:24).

“மனுஷகுமாரனுடைய மாம்சமானது,” மனித சிலாக்கியங்கள் திரும்பக் கொடுக்கப்படுதலை, அதாவது அதை அடைவதற்கான வழிவகையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும், மனிதன் இழந்துபோனதான ஜீவனை, அதாவது ஆதாமில் இழந்துபோகப்பட்டதான ஜீவனை

— மனுஷ ஜீவனை — பூமிக்குரிய ஜீவனை மனுஷனுக்கு திரும்பக்கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது கிறிஸ்து மூலமான தேவனுடைய ஈவாகும். ஆனால் இந்த அப்பம் அளிக்கப்படுவது மாத்திரம்போதாது. உலகம் அந்த அப்பத்தைப் புசிப்பதும், கர்த்தருடைய இராஜ்யத்தின் வாயிலாக அவர்களுக்கு அவர் அளிக்கப்போகின்றதான உதவியைப் பெற்றுக்கொள்வதும், அவசியமாகும். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" (யோவான் 6:51) என்று இயேசு கூறினார்.

ஒரு கோணத்தில் பார்க்கும்போது, உலகம் மரிக்கவில்லை என்று சொல்லப்படலாம். அவர்கள் ஜீவனுக்கான தங்களது உரிமையை இழந்துள்ளனர்; எனினும் ஜீவன் திரும்பக் கொடுக்கப்படத்தக்கதாக தேவன் இயேசுவின் மூலம் ஏற்பாடுகள் பண்ணியுள்ளார். ஜீவன் ஆதாமில் இழந்துபோகப்பட்டது, எனினும் அது இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் வாயிலாக திரும்பக்கொடுக்கப்படும். இந்த 6000 ஆண்டு காலங்களாக உலகமானது, உணவின்றியும், விழுந்துபோன நிலையிலும் இருந்து வந்துள்ளது. ஆனால் தேவன் இந்த அப்பத்தைத் தயார் பண்ணியுள்ளார் மற்றும் இதை அவர்கள் ஆயிரவருட யுகத்தின்போது பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

உலகமானது, இரத்தத்தில் பங்குகொண்டு, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுக்கும் என்று வேதவாக்கியங்களில் எங்குமே, அடையாளமான விதத்தில் காண்பிக்கபடவில்லை. வெகு சொற்பமானவர்களே இரத்தத்தில் பங்கெடுப்பதாக அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது லேவியராகமம் 16-ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம்முறையாகக் கிருபாசனத்தில் தெளிக்கப்படுகின்றதான இரத்தமானது, ஜனங்கள் அனைவருக்காகவுமிருந்து, இப்படியாய் நீதியைத் திருப்திப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது மனுக்குலம் அனைத்தும் மரணத் தீர்ப்பினின்று விடுதலையாக்கப்பட்டு, அனைவருக்கும் அப்பத்தைப் புசிப்பதற்கும், மரியாமல் இருப்பதற்குமான வாய்ப்புக் கொடுக்கப்படுவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இன்னொரு காட்சியில் பயன்படுத்தப்பட்ட இரத்தமானது, தெய்வீக ஏற்பாட்டினை மனிதன் ஏற்றுக்கொள்ளும் காரியத்தினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. புது உடன்படிக்கைக்கு நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையை முத்திரையிடுகையில், நீதியைத் திருப்திப்படுத்துதலை அடையாளப்படுத்தும் விதத்தில் மோசே முதலாவதாக நியாயப்பிரமாண புத்தகத்தின்மீது இரத்தம் தெளிக்கின்றார். பின்னர் அதே இரத்தத்தினை ஜனங்கள் அனைவரின்மேலும் தெளித்தார் (எபிரெயர் 9:19; யாத்திராகமம் 24:8). நியாயப்பிரமாண புத்தகத்தின்மீது தெளிப்பதற்குச் சில நொடிகளே ஆனது; ஆனால் ஜனங்கள்மீது தெளிப்பதற்கு நெடு நேரம் தேவைப்பட்டது.

ஆயிரவருட யுகத்தினுடைய ஆரம்பத்தில் — சபையானவள் அவளது தலையானவருடன் திரைக்கப்பால் இணைந்த உடனே — உலகத்திற்காக, நீதியினைத் திருப்திப்படுத்துவதற்கென, இரத்தமானது தெளிக்கப்படும். பின்னர் கிறிஸ்து மத்தியஸ்தரென, யாவருக்குமாக ஒரு வேலை செய்யத் தொடருவார். அந்த வேலையானது, ஜனங்கள் இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் மத்தியஸ்தர் ஆயிரவருட ஆளுகையின்போது முன்வைக்கின்றதான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், மத்தியஸ்தர் வாயிலாக நம் இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும், தேவனுடன் ஓர் உடன்படிக்கை உறவிற்குள் வருவதற்குரிய சிலாக்கியமடைவான்.

## அறியப்பெற்றதிலேயே மிகவும் விலையேறப்பெற்ற உணவும், பானமும்

அவர்கள் மேசியாவின் ஆளுகையின்போது எதிர்ப்பார்க்கப்படுபவைகளை நிறை வேற்றினார்களானால், அந்த ஆளுகையினுடைய இறுதியில் அவர்கள் பரிபூரணமாவார்கள் மற்றும் அவர்களைக் கிறிஸ்து பிதாவின் முன்னிலையில் ஒப்படைப்பார் மற்றும் அப்போது முன்வைக்கப்படும் பரீட்சையில் உண்மையாய் நிலை நிற்பவர்கள், பிதாவுடன் முழுமையான உடன்படிக்கை உறவிற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் **பானம்பண்ணுகிறவனுக்கு** நித்தியஜீவன் உண்டு" (யோவான் 6:54). நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, அநேகம் தருணங்களில் சிறு மந்தையினரை மாத்திரமல்லாமல், திரள் கூட்டத்தினரையும் உள்ளடக்கின விதத்தில் மிகவும் பரந்த விதத்தில் இடம்பெற்றுள்ளது மற்றும் இதிலே மாபெரும் ஞானம் விளங்குகின்றதாய் இருக்கின்றது.

இவ்வசனத்தில் கர்த்தர் "**பானம் பண்ணுகிறவனுக்குள்** ஜீவன் உண்டு" என்று சொல்லவில்லை; ஏனெனில் இக்காலத்தில் பலியினாலான உடன்படிக்கையைப் பண்ணி, பாத்திரத்திலும், அப்பத்திலும் பங்காளிகள் ஆகுகிறவர்களில் சிலர் தன்னில்தானே ஜீவனுடைய நிலையை — அழியாமையை அடையமாட்டார்கள்; இவர்கள் மிகுந்த உபத்திரவங்கள் வாயிலாகக் கடந்துவந்து, ஆவிக்குரிய தளத்திலுள்ள கீழ்த்தளத்தில் ஜீவனை அடைகின்றவர்களாய் இருப்பார்கள். இவர்கள் நித்திய ஜீவனை அடைந்தாலும், அது அழியாமை ஜீவனாக/தன்னில்தானே ஜீவனுடைய நிலையாக இருக்காது. அழியாமையை அடைபவர்கள் உயர்த்தளத்தில் நித்திய ஜீவனை உடையவர்களாக இருப்பார்கள். திரள்கூட்டத்தினர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள், ஆனாலும் அது அழியாமையல்ல — தன்னில்தான் ஜீவனுடைய நிலையல்ல.

நமது கர்த்தர், "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" (யோவான் 6:55) என்று கூறினதிலிருந்து, இது அறியப்பெற்றதிலேயே மிகவும் விலையேறப் பெற்ற உணவாகவும், பானமாகவும் உள்ளது என்பதாக அவரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் புரிந்துகொள்கின்றோம். வேறெந்த அப்பத்திற்கும் இத்தனை முக்கியத்துவம் இருந்ததில்லை மற்றும் இதைக்காட்டிலும் மிகவும் விலையேறப் பெற்றதான வேறெந்த பானமும் இல்லை; இதில் பங்கெடுப்பதன் மூலம் மகிமை, கனம் மற்றும் அழியாமை — திவ்வியச் சுபாவம் — தன்னில்தான் ஜீவனுடைய நிலையை அடையப் பெறலாம்.

## நிஜமான மன்னா பொழிதல்

உலகத்தின் ஜீவனுக்காக நமது கர்த்தரால் கொடுக்கப்படவிருந்த அவரது மாம்சமே, பரலோகத்திலிருந்து வந்த அப்பமாய் இருக்கின்றது. மேலும் இதற்குத்தான் வனாந்தரத்தில் பொழிந்த மன்னா நிழலாய்க் காணப்படுகின்றது என்று இயேசு விவரித்தார். "உங்கள் பிதாக்கள் (வனாந்தரத்தில்) மன்னாவை உண்டார்கள் மற்றும் அவர்கள் மரித்தார்களே. இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றார். அவர் பின்வருமாறு கூறினார்: "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்." (யோவான் 12:24). அவர் பூமியில் விழுந்து மரித்தார். மேலும் அவருடைய மரணத்தில், நாம் அவரோடுகூடப் பங்காளிகளானோம். நாம் அவரது பாடுகளிலும், மரணத்திலும் பங்கெடுத்தோம்; இப்படியாக உலகத்தால் ஒருபோதும் பங்கெடுக்க முடியாது. அவர்கள் இவைகளின் பலன்களில் மாத்திரம் பங்கடைபவர்களாக இருப்பார்கள்.

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய வேலை அனைத்தும், உலகத்திற்கான ஆகாரத்தையும், அவர்கள்மீது தெளிக்கப்படவிருக்கின்ற இரத்தத்தையும் ஆயத்தப்படுத்தும் வேலையாகக் காணப்படுகின்றது. ஆனால் நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறுகின்றதான நமது கர்த்தருடைய செய்தியானது, உலகத்திற்குரியதல்ல. அவர் நம்மிடம் கூறுவதுபோன்று, "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி நமக்கே அருளப்பட்டது."

இந்த 19 நூற்றாண்டுகள் காலம் முழுவதிலும், தேவனுடைய இரகசியங்களை, ஒரு விசேஷித்த வகுப்பார் மாத்திரமே அறியமுடிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இக்காரியங்கள் பொதுவான உலகத்திடமிருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அக்காரியங்கள் உலகத்திற்கு அருளப்படுவதற்கும், அவர்களுக்காக தேவன் வைத்து வைத்திருக்கின்றதான ஆசீர்வாதங்களை அவர்கள் அறிந்துகொள்வதற்குமான காலம் வந்துள்ளதென நாம் இப்பொழுது நம்புகின்றோம். ஏழாம் எக்காளம் தொனிக்கையில், இரகசியங்கள் வெளிப்படுத்தப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன; அந்த ஏழாம் எக்காளம் இப்பொழுது தொனிக்கின்றது. இந்தச் சத்தியங்களை இப்படி வெளிப்படப்பண்ணுவதே, மன்னா பொழியப்பண்ணுதலாகும்.

*****

# நாம் சகோதரரிடத்தல் அன்புகூருகிறபடியால்

*"நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3:14)*

**ந**ம்முடைய வாசகர்களில் பெரும்பான்மையானவர்களாகக் காணப்படும் வேதமாணவர்கள், கடந்த சில வருடங்களாகக் கிருபையில் வளர்ந்து வருகின்றார்கள் என்று நம்பிக்கைக்கொள்வதற்கு அநேகம் காரணங்கள் இருக்கின்றன என்பதைத் தனிப்பட்ட விதத்திலும், கடிதங்கள் வாயிலாகவும் அறிந்திருக்கின்றோம் என்பதைச் சாட்சியாகக் கூறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். தற்போதுள்ள நிலைமையை மூன்று அல்லது ஆறு அல்லது பத்து வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையுடன் வேறுபடுத்திப் பார்க்கும்போது, ஆவிக்குரிய விஷயத்தில் - கர்த்தருடைய ஆவியில் - அன்பின் பரிசுத்த ஆவியில் மகா அபிவிருத்தியை நாங்கள் காண்கின்றோம்.

இது சத்தியத்திற்கடுத்த ஊழியங்களிலுள்ள நடவடிக்கைகளில் மாத்திரம் வெளிப்படாமல், ஒருவருக்கொருவர் மற்றும் கிறிஸ்தவர்கள் அனைவருக்காகவும் மற்றும் தவிக்கும் சர்வ சிருஷ்டிக்காகவும் கொண்டுள்ளதான பரந்த அளவிலான அனுதாபங்களிலும்கூட வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது. மேலும் "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்பதினால், ஏற்ற குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கு அவசியமான அடிகள் மற்றும் சிட்சைகளின் விளைவாக, எந்த ஒரு குறைவான ஆசீர்வாதத்தை ஒருவன் பெற்றவனாக இருந்தாலும், இராஜ்யத்தில் பங்கிருக்காது என்பதை நினைவில் கொண்டு, கிறிஸ்துவுக்கொத்த சாயலில் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வாரமும் வளர்ச்சியடைய வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் குணலட்சணத்தின் விஷயத்தில், தனித்தனியாக நமது கர்த்தருக்கு ஒத்திருக்க வேண்டும் என்பதே சபை தொடர்புடைய விஷயத்திலுள்ள திவ்விய முன்தீர்மானம் காணப்படுகின்றது என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையுங்கூட நாம் நினைவுகூருகின்றோம் (உரோமர் 8:29). நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தெய்வீகச் சித்தம் குறித்த இத்தகைய தெளிவான வார்த்தைகளானது, நிச்சயமாகவே நம்மை ஊக்குவிக்கிறதாக இருக்கும்.

இப்படியான வளர்ச்சிகள் எல்லாம் இருக்கின்றபோதிலும், சிறு எண்ணிக்கையிலுள்ள சபைகள் அநேகவற்றில் உராய்வுகள்/பிணக்குகள் ஏற்பட்டு, இதனால் ஏறத்தாழ கவலையையும், மகிழ்ச்சியின்மையையும் உண்டாக்குகின்றது. சத்தியம் நம்மை விடுதலைப்பண்ணி, நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறப்பதினால், அது நம்முடைய சொந்த அபூரணங்களையும், சகோதர சகோதரிகளுடைய அபூரணங்களையும் மற்றும் உலகத்தாருடைய அபூரணங்களையும் முன்பில்லாதளவுக்கு மிகவும் தெளிவாய் நாம் காண உதவுகின்றது. அதிகமாய் அன்பில்லாவிடில், இப்படி அபூரணங்களைக் காணும் காரியமானது, குற்றம் கண்டுபிடிப்பதற்கும், குறைகூறுவதற்கும் உரிய தன்மைக்கு ஏதுவாகிவிடும்.

இப்படி நம்முடைய சொந்த குணலட்சணங்களை நாம் கையாளும் விஷயத்தில் அதிகப்படியான சுதந்தரத்தை நாம் அனுமதிப்பது பாதுகாப்பானதே. நன்மைக்கேதுவாய் நாம் நம்மிடத்தில் குற்றங்கண்டுபிடிக்கலாம் மற்றும் நம்முடைய குறைகளை நாமே நமக்குச் சுட்டிக்காண்பித்திடலாம். எனினும் நம்முடைய அபூரணமான கிரியைகளின்படியாக இல்லாமல், நம்முடைய இருதய நோக்கத்தின்படியே கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார் எனும் அவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை நாம் மறந்துபோகுமளவுக்கு, அளவுக்குமீறியும் நம்மில் நாம் குற்றம் கண்டுபிடிக்கக்கூடாது. அநேகமாக நம்முடைய சொந்த குறைவுகள் குறித்தும் மற்றும் அவைகள் வேண்டுமென்றே செய்யப்படாதவைகள் என்றும் நம்மால் நன்கு உணர்ந்துகொள்ள முடிகின்றது; ஆனால் குறைவுகள் மற்றவர்களுடையதாயிருக்க, அவை நம்முடைய அன்பு, பொறுமை, சகோதர சிநேகம், சாந்தம், நற்பண்புகள்/நிதானம் முதலானவற்றைப் பரீட்சிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இம்மாதிரியான பரீட்சைகள் மிகவும் நன்மைக்கேதுவானதாகும். பரிசுத்த ஆவியின் கிருபைகளில் வளர்வதற்குக் கர்த்தர் நமக்கு உதவும்படிக்கு நாம் கர்த்தரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கின்றோம். இவ்விஷயங்களில் தேவன் பரீட்சைகள் கொடுப்பதே, நமக்கு உதவுவதற்கான ஒரே வழியாகக் காணப்படுகின்றது என்பதை

நாம் நினைவில் கொள்வோமாக. நாம் எந்தளவுக்குச் சரியான ஆவியில் இந்தப் பரீட்சைகளை ஏற்றுக்கொள்கின்றோமோ, அவ்வளவாய் நமது குணலட்சணத்தினுடைய பெலமும், இந்த ஆவியின் கிருபைகளிலுள்ள நம்முடைய வளர்ச்சியும் காணப்படும்.

## புதுச்சிருஷ்டிகள் என்ற உறவிற்கான நிரூபணம்

சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, கிறிஸ்தவனுடைய மிக அருமையான அனுபவங்களில் ஒன்றாயிருக்கின்றது என்று நமது ஆதார வசனம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. யார் ஒருவன் தன்னிடத்தில் சகோதர சகோதரிகளுக்கான அன்பும், அவர்களுக்கான அனுதாபமும் முழுக்கக் காணப்படுகின்றது என்று காண்கின்றானோ, அவன் - புதுச்சிருஷ்டியாக இருக்கின்றான் என்பதற்கும், தான் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்பதற்கும் வேதவாக்கியத்தின்படியான பலமான நிரூபணத்தை விசேஷமாகப் பெற்றிருக்கிறான். யாரொருவன் சகோதரர் எவரிடத்திலாகிலும் அன்பிற்குப் பதிலாக வேறேதேனும் உணர்வுகளைப் பெற்றிருப்பானாகில், அவன் தேவனுடன் தனக்குப் புதுச்சிருஷ்டி எனும் விதத்தில் இருக்கும் தனது உறவிற்கான நிரூபணத்தில் குறைவுப்பட்டவனாய் நிச்சயம் இருப்பான்.

இதை எப்போதும் நாம் மனதில் கொண்டிருப்போமானால், இதன் உதவி நமக்கு எத்துணை விலையேறப்பெற்றதாகக் காணப்படும்! கர்த்தருடைய தயவு குறித்தும், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கும் புதுச்சிருஷ்டிகளென அவருடனான நம்முடைய உறவு தொடர்ந்து கொண்டிருப்பதைக்குறித்தும் நாம் மறுபடியும் உறுதிப்பெற்றிடுவதற்கு அடிக்கடி நாம் விரும்புகின்றோமல்லவா? நாம் விரும்புவோமானால், ஆதார வசனம் இதோ நமக்குள்ளது மற்றும் நாம் சரியான நிலைமையில் காணப்படும் பட்சத்தில், ஆதார வசனத்தின் காரியமானது, சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும். ஒருவேளை நாம் சரியான நிலைமையில் காணப்படவில்லையெனில், ஆதார வசனத்தின் காரியமானது புதுச்சிருஷ்டிகளென நம்முடைய சொந்த பாதுகாப்பிற்கான அபாய அறிவிப்பைக் கொடுக்கிறதாய் இருக்கும்.

அநேகம் சபைகளில் ஊராய்வுகள்/பிணக்குகள் ஏற்படும் காரியங்களில் ஒன்று சபையாருக்கும், அதன் ஊழியக்காரர்களுக்கும் இடையிலான உறவின் விஷயமாகும். நம்மால் நிதானிக்க முடிந்தவரையிலும் தவறானது சிலசமயம் (இவர்கள் இருவரில்) ஒருவரிடத்திலும் மற்றும் சில சமயம் மற்றவரிடத்திலும் காணப்படுகின்றது. மூப்பர்களுடைய கடமைகள் குறித்தும், சபையாருடைய பொறுப்பு முதலானவைகள் குறித்தும் கேள்விகள் நம்மிடத்தில் அடிக்கடி கேட்கப்படுகின்றது. இத்தகைய கேள்விகள் அனைத்திற்கும், வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியிலுள்ள, இவ்விஷயம் குறித்ததான நம்முடைய முழுமையான ஆய்வுரையையே பரிந்துரைப்பதற்கு நாம் பொதுவாய் விரும்புகின்றோம். ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை இன்னும் அபிவிருத்தி செய்வது எப்படி என்பது நமக்குத் தெரியவில்லை.

அத்தொகுதியில் எங்களால் எழுதியுள்ள காரியங்கள் முழுவதுமாய் ஆராயப்படுமாயின், அதில் கொடுக்கப்பட்டுள்ளதான அறிவுரைகளானது, ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் போதுமானதாய்க் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

உபதேச ரீதியான விஷயங்களில் தனிப்பட்ட விதத்தில் நாம் கடிதம் எழுதுவதை விரும்பவில்லை; ஏனெனில் எங்களிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள், ஒன்றில் காரியங்களைத் தவறாய்ப் புரிந்துகொண்டவர்களாகவோ அல்லது காரியங்களை விவாதிக்கையில் கடிதங்களில் உள்ளவைகளின் பகுதியை மாத்திரமே மற்றவர்களுக்குத் தெரிவிப்பவர்களாகவோ காணப்பட்டிருந்த சம்பவங்கள் சிலவற்றை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இன்னுமாக சிலர்: "சகோ. ரசல் அவர்கள் இன்னென்ன விதமாய் வேதாகம பாடங்களினுடைய தொகுதியில் எழுதியிருக்கின்றார்; ஆனால் எங்களிடம் அவர் பிற்காலங்களில் எழுதியுள்ள கடிதம் ஒன்றுள்ளது மற்றும் அக்கடிதமானது அவர் வேறு கருத்துக் கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது" என்று கூறியிருக்கின்றனர். ஏதேனும் முக்கியமான சத்தியங்கள் குறித்த எங்களுடைய கண்ணோட்டம் மாறும் பட்சத்தில், அந்த மாற்றத்தை முடிந்தமட்டும் விரைவாக நாம் வாட்ச் டவர் இதழின் வாசகர்கள் அனைவரின் முன்பாகவும் முன்வைத்திடுவோம் என்று அருமையான நண்பர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென நாம் விரும்புகின்றோம். வாட்ச் டவர் வெளியீட்டில்/இதழில் இம்மாதிரியான மாற்றங்கள் குறித்துக் குறிப்பிட்டிருப்பதை நீங்கள் காணாதது வரையிலும், எதையும் பொருட்படுத்திட வேண்டாம்; வேதாகம பாடங்களினுடைய தொகுதிகளிலுள்ள வார்த்தைகளை,

ஏதோ அவைகள் நேற்றைய தினம்தான், உங்களுக்கே நேரடியாய் எழுதப்பட்டு உங்களுக்கு வந்ததுபோன்று மதித்திடுங்கள்.

## சபை நிர்வாக முறைக்கான கொள்கைகள்

கிறிஸ்துவின் சபையை நிர்வகிக்கும் கொள்கைகளைச் சுருக்கமாய்ப் பார்க்கையில், சபை நிர்வாகம் குறித்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் இரண்டு கண்ணோட்டங்கள் நிலவி வருகின்றன; அவை பின்வருமாறு:

(1) கிறிஸ்தவ சபை சார்ந்த கண்காணிகளின் ஆட்சிகொள்கை எனும் (Episcopal View) கண்ணோட்டத்தின்படி, சபையானது கண்காணிகளால் நிர்வகிக்கப்பட மற்றும் நடத்தப்பட வேண்டும்; ஏனெனில், இந்தக் கண்காணிகள் அப்போஸ்தல கண்காணிகள் என்று வலியுறுத்தப்படுகின்றது; அதாவது இவர்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும், சபை மற்றும் அதன் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதற்கென அப்போஸ்தல ஞானமும், ஏவுதலும் மற்றும் அதிகாரமும் வழங்கப்பெற்றவர்கள் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தை உரோம கத்தோலிக்கர்களும், கிரேக்க கத்தோலிக்கர்களும் மற்றும் எபிஸ்கோப்பல் திருச்சபையினரும் உடையவர்களாய் இருக்கின்றனர்.

(2) மற்றுமொரு கண்ணோட்டம் (Congregationalist) சபையார் ஆட்சி கொள்கையாகும் மற்றும் இது - கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய ஒவ்வொரு சபைகூட்டமும் ஒரு குழு என்றும், அது அதனை நிர்வகிப்பதற்கும் மற்றும் தெய்வீக வழிநடத்துதலின் கீழ் அதன் நலனுக்கடுத்தக் காரியங்களுக்காக ஒழுங்குகள் பண்ணிடுவதற்கும் உரிமை கொண்டிருக்கின்றது என்றும் வலியுறுத்துகின்றது. காங்கிரிகேஷனலிஸ்ட், பேப்டிஸ்ட் மற்றும் இன்னும் சில பிரிவினர்கள் இக்கண்ணோட்டத்தின்படி தாங்கள் நிர்வகிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இன்னுமாக ஏறக்குறைய குழப்பத்திலும் மற்றும் உறுதியற்ற நிலையிலும் காணப்படும் சில சபை பிரிவினர், நிர்வகிக்கும் அதிகாரத்தினை ஊழியர்கள் மற்றும் சபை அங்கத்தினர்களுக்கிடையே பங்கிட்டுக்கொள்கின்றனர்.

எபிஸ்கோப்பல் மற்றும் காங்கிரிகேஷனல் எனும் இரண்டு கொள்கைகளையும் இணைந்து ஒருசேர கொண்டிருப்பதே வேதாகம ஏற்பாடு என்று நாம் வலியுறுத்துகின்றோம். பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் கண்காணிகளாக இருந்தார்கள் - இவர்கள் மட்டுமே தெய்வீக ஏவுதலின் பேரிலான மற்றும் அதிகாரமுடைய அப்போஸ்தல கண்காணிகளாக இருந்தார்கள் மற்றும் இன்னும் தொடர்ந்து இப்படியாகக் காணப்படுகின்றனர் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்களால் பூமியில் கட்டப்படும் எதுவும், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் கட்டப்பட்டதாக இருக்கும். இவர்களால் கட்டவிழ்க்கப்பட்டதாக அறிவிக்கப்படும் எதுவும், பரலோகத்தின் முன்னிலையில் சபையாரின் மீது கட்டாயமாக்கப்படுவதில்லை. இந்தக் கண்ணோட்டத்தின்படி, அப்போஸ்தல கண்காணிகளென அழைக்கப்பட்டு வரும் மற்றவர்கள் அனைவர் குறித்ததான இயேசுவின் வார்த்தைகள் மிகவும் திட்டவட்டமாய்க் காணப்படுகின்றது. அப்படிப்பட்டவர்கள் "கள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் பொய்யரென்று" அவர் குறிப்பிடுகின்றார்; அவர்கள் எந்த விதத்திலும் அப்போஸ்தலர்களல்ல (வெளிப்படுத்தல் 2:2; 2 கொரிந்தியர் 11:13). ஆகையால் தங்களுக்கு அப்போஸ்தல வல்லமை இருக்கின்றது என்றும், தாங்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும் எண்ணிக்கொள்ளத்தக்கதாகச் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாகிய இந்தக் கண்காணிகளுடைய வலியுறுத்தல்களுக்கு நாம் செவிச்சாய்க்கவும் கூடாது மற்றும் இவர்களின் வலியுறுத்தல்களை எவ்விதத்திலும் அங்கீகரிக்கவும் கூடாது.

தேவனுடைய ஜனங்கள் அதிகாரத்திற்கும், வழிகாட்டுவதற்குமென்று, உண்மையான கண்காணிகளாகிய, ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைப் பெற்றிருப்பதினால், அவர்கள் இப்படியாக ஆயர் நிர்வாகத்தின் அல்லது அப்போஸ்தல கண்காணிகளினுடைய நிர்வாகத்தின் கீழ்க் காணப்பட்டாலும் - உண்மையில் அவர்களது நிர்வாகம் சபையார் சார்ந்ததேயாகும். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அடங்கின ஒவ்வொரு கூட்டத்தாரும் முற்றிலுமாகச் சுதந்தரமானவர்களாய் இருக்கின்றனர் மற்றும் வேதத்திலும், அதிலுள்ள விலையேறப்பெற்ற சகல சத்தியத்திலும் சொந்தமாய் விசுவாசத்தைப் பெற்றிருக்க வேண்டும். எந்தச் சபையாரும் மற்றும் எந்தத் தனி நபரும், வேறொரு சபையாரின் அல்லது வேறொரு தனி நபரின் vows/வாக்குறுதிகளினால் கட்டப்பட முடியாது.

ஒன்றாய்ச் செயல்படுவதற்கும், ஒன்றுகூடித் தொழுதுகொள்வதற்கும், தேவக் காரணங்களுக்கு/நோக்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கும் என்று ஒன்றுகூடி வரும் சபையார்,

பிரித்தெடுக்கப்பட்டவர்கள், சபை இப்படியாகவே செயல்பட வேண்டும்; காரணம் தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்ததான அவர்களது பரஸ்பர புரிந்துகொள்ளுதலாகும். வேதாகம கண்காணி நிர்வாகமாகிய, அப்போஸ்தலரின் போதனைகளின் கீழ்த் தவிர மற்றப்படி, சபை யாருடைய நிர்வாகத்தின் கீழும் காணப்படுவதில்லை. ஒவ்வொரு சபையிலுமுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அந்தந்தச் சபையாரால் வேதாகமத்தின் அறிவுரைகளுக்கேற்ப, தங்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டும். தெய்வீக நியமனத்தின்படியான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய அறிவுரைகள் விஷயத்திலும் மற்றும் அப்போஸ்தலரின் அறிவுரைகளுக்கு இசைவாகக் கூடிடுவதற்கு உடன்பட்டுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தார்கள் விஷயத்திலும் தலையிடுவதற்கு, எந்தப் பூமிக்குரிய வல்லமைக்கும் உரிமையில்லை. இக்கருத்தானது, போப்மார்க்கத்தின் சகல அதிகாரங்களையும் மற்றும் அப்போஸ்தல கண்காணிகளெனப் போலியாய் அழைக்கப்படுபவர்களுடைய சகல அதிகாரங்களையும் ஒரேயடியாக ஒழித்துவிடுகின்றது.

சகோதர சகோதரிகளுடைய வாக்குகள் (Votes) மூலமாக உதவிக்காரர்களும், மூப்பர்களும், மேய்ப்பர்களும், போதகர்களும் ஊழியம் மற்றும் கனமிக்க ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகிறதினால், இது சபையாரையே, அதன் ஊழியக்காரர்களைக் காட்டிலும் மிகுந்த அதிகாரமுடைய நிலைமையில் வைக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் அதற்கென்று சபையார் தங்கள் விருப்பங்களை திணிப்பதற்கு முற்படாமல், மாறாக வேதாகமத்தில் அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டதான தெய்வீக வழிகாட்டுதலுக்கு இசைவாக உண்மையாய்ச் செயல்படுகிறவர்களாக மாத்திரம் காணப்பட வேண்டும். இப்படியாகப் பார்க்கும்போது இவ்விஷயம் குறித்த தெய்வீக நிலைப்பாட்டின்படியான சத்தியமானது, பல நூற்றாண்டுகள் காலமாகப் பெருமளவில் கவனிக்கப்படாமல் போய்விட்டப்படியால், சபைக்கு அனுகூலமற்ற நிலைமையே நிலவுகின்றது - சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தை உள்வாங்கியும் மற்றும் வேறுசிலர் வேறு பாகத்தை உள்வாங்கியுமுள்ளனர்; முழுமையாய்ச் சத்தியத்தை உள்வாங்கியுள்ளவர்கள் சிலராகிலும் காணப்படுகின்றார்களா என்பதில் ஐயமே. ஆம், உண்மைதான், இந்நிலைமையே கிட்டத்தட்ட ஒவ்வொரு உபதேசத்தின் விஷயத்திலும் காணப்படுவதாக நாம் காண்கின்றோம்.

விவரங்கள், வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், நாம் மேலே சொல்லியுள்ளவைகளிலேயே கொள்கைகள் காணப்படுகின்றன. கொள்கைகளை முற்றும் முழுமையாகக் கிரகித்துத்துக்கொள்ள முடிகிறவர்களால், விவரங்களையும் புரிந்துகொள்ள முடியும். ஆகையால் வேதவாக்கியங்களுக்கு இசைவாக எந்த ஒரு சிறு சபையாரின் காரியங்கள் குறித்த விவரங்கள் அனைத்தின் விஷயத்திலும் தெளிவாகுவதற்கு - சிந்தித்தலும், பொறுமையுடன்கூடிய நிதானமான ஆராய்தலும்தான் காரியமாயுள்ளது. இப்படியாகச் சபையின் மூப்பர்களாக இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கரங்களில் சபையானது சில அதிகாரத்தையும், ஊழியத்தையும் கொடுத்து, மூப்பர்களுக்கு வேலையில் உதவியாய் இருக்கத்தக்கதாக மற்றச் சிலரை உதவிக்காரர்களாகச் சபையானது நியமித்திட்டாலும், மூப்பர்களும், உதவிக்காரர்களுமாகிய இருவரும் சபையாருக்கு - பிரித்தெடுக்கப்பட்ட சபைக்கு எதிலும் பதில் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

## சபையார் தங்கள் ஊழியக்காரர்களிலும் மேம்பட்டவர்கள்

ஏதேனும் தர்க்கத்தின் சந்தர்ப்பங்களில், சபையாரின் கணிப்பே (அ) தீர்மானமே அப்போதைக்குச் சரியானதென்று காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடு அத்தீர்மானம் ஞானமற்றதாகக் காணப்படும் பட்சத்தில், கணிப்பிலுள்ள தவற்றை நன்மைக்கு ஏதுவாய் - அதாவது அறிவுரையாகக் காணப்படும் விதத்தில் கர்த்தரால் மாற்றிவிட முடியும். உதாரணத்திற்கு: மூப்பர் அல்லது மூப்பர்களுடைய கணிப்பிலிருந்து எப்போதேனும் சபையாருடைய கணிப்பு வேறுபடும் பட்சத்தில், மேல் அதிகாரமாகக் காணப்படும் சபையாருக்கு, சபைக்கு, பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் அடங்கிய கூட்டத்திற்கு (Ecclesia) மூப்பர்கள் இணங்கிடுவதே சரியான காரியமாய் இருக்கும்; நியமிக்கிறவன் நியமிக்கப்படுகிறவனுக்கு மேலானவனாகக் காணப்படுவதினால், சபையாரே மேல் அதிகாரம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சபையாருக்கு அல்லது Ecclesias/பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் அடங்கின கூட்டங்களுக்கான நமது கர்த்தருடைய ஏற்பாடானது: "இரண்டுபேராவது,

மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்பதேயாகும். கர்த்தர் சபையாரோடு இருப்பதாக வாக்களித்துள்ளார். அவர் பின்வருமாறு: "எங்கே மூப்பர் இருக்கின்றாரோ, அங்கே நான் இருப்பேன் மற்றும் மூப்பரிடத்திற்குச் சபையார் கூடிக்கொள்ளுங்கள்'' என்று கூறவில்லை. மாறாக அவர் பின்வருமாறே: "எங்கே சபையார் இருக்கின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்; மற்றும் அவர்கள் மூப்பரை நியமித்திடலாம்; மூப்பர் எவ்வளவாய் அந்தச் சபையாரை ஆசீர்வதிப்பதில் என்னுடைய ஊழியக்காரனாய் இருப்பதற்குரிய பொருத்தமான பாத்திரமாயிருப்பதற்கு முயற்சிக்கின்றாரோ, அவ்வளவாய் அவரைச் சபைக்கும், அதன் நலன்களுக்குமான பிரதிநிதியென நான் அங்கீகரித்து, ஆசீர்வதிப்பேன்'' என்று கூறியுள்ளார்.

மூப்பருக்கும், சபையாருக்கும் இடையிலான இந்த உண்மையான உறவைப் பற்றின இந்தப் புரிந்துகொள்ளுதலானது, பரிசுத்த பவுலடிகளால் பரிசுத்த ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகள் என்று விவரிக்கப்படும் சாந்தத்தை, பொறுமையை, சகோதர சிநேகத்தை, நீடிய பொறுமை, நற்குணம், அன்பு முதலானவைகளைத் தங்களுக்குள் அபிவிருத்திச் செய்திடுவதற்கு, மூப்பர்களுக்கு உதவுகிறதாய் இருக்கும். ஆனால் இன்னொரு பக்கத்தில் தங்களுக்கு மூத்த ஒரு சகோதரனாக இருந்து ஊழியம் புரிந்திடுவதற்கும் மற்றும் தங்களுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக் கொள்வதற்குமென்று, தங்கள் மத்தியிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்துள்ள சபையார், தாங்கள் கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இசைவாக ஞானமாய்த் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும். இப்படியாக நம்பிக்கைக் கொண்டிருக்கையில், அவர்கள் எந்தளவுக்குத் தங்கள் மூப்பர் கர்த்தரின் சித்தத்தை அறிவதற்கும் மற்றும் அதைச் செய்திடுவதற்கும் மற்றும் தனது நேரத்தையும், தாலந்துகளையும் சபையாருக்கான ஊழியங்களில் உண்மையாய்ப் பயன்படுத்திடுவதற்கும் நாடிடுவதைக் காண்கின்றார்களோ, அவ்வளவாய் மூப்பருக்கு ஆதரவையும், உற்சாகத்தையும் கொடுப்பதற்கு ஆயத்தத்துடன் காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடோ மூப்பரின் தேர்ந்தெடுத்தல் தொடர்புடையதான அப்போஸ்தலனின் அறிவுரைகளைத் தாங்கள் முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை மற்றும் பின்பற்றிடவில்லை என்று அறிந்து கொள்வார்களானால், இப்படியாக இருப்பினும், அவரைத் தேர்ந்தெடுத்ததிலுள்ள தவறு தங்களுடையது என்றும், தவறு அடுத்த தேர்தலிலேயே சரிப்பண்ணப்பட முடியும் என்றும் நினைவுகூர்ந்து, அடுத்த தேர்தலில் கர்த்தருடைய சித்தத்தைத் தாங்கள் அதிகமாய் அறிந்துகொள்வார்கள் மற்றும் தேர்தலில் ஞானமாய் இருப்பார்கள் என்று நம்பிக்கொண்டும், ஜெபம்பண்ணியும், அந்த மூப்பரிடத்தில் - இரக்கத்துடனும், கனிவுடனும்/சாந்தத்துடனும் சபையார் காணப்பட வேண்டும்.

## சபையாரின் கடமைகள்

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, எத்தனை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும், எங்கு அவைகள் நடத்தப்பட வேண்டும், யாரால் நடத்தப்பட வேண்டும், எவ்வகையான பாடங்கள் (அ) ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் முதலானவைகள் தொடர்புடையதான அனைத்தையுமே சபையாரே உறுதிப்படுத்திட வேண்டும். சபையின் அங்கத்தினர்களில் ஒருவராக, சக அங்கத்தினர்களுக்குக் காணப்படுவது போன்று, மேற்கூறிய விஷயங்களில் தனது கருத்துகளை மூப்பர் சொல்லிடுவதற்கு உரிமை கொண்டிருந்தபோதிலும் - இவைகள் மூப்பரானவர் தீர்மானம்பண்ணுவதற்கடுத்த காரியங்கள் அல்ல. எந்தளவுக்கு அவர் உயர்வாய் மதிக்கப்படுகின்றாரோ, அவ்வளவுக்கு அவரது கருத்துகளுக்குச் சபையாரிடத்தில் (அ) சபையிடத்தில் (அ) பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களடங்கிய கூட்டத்தில் (Ecclesia) மதிப்புக் காணப்படும்; எனினும் எவ்வளவுதான் மூப்பர் உயர்வாய் மதிக்கப்படுபவராக இருப்பினும், அவர் தங்களது வழிகாட்டியல்ல என்கிற விஷயத்தை, சபையார் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. பரிசுத்தமான வேதவாக்கியங்களினுடைய போதனைகளை இந்த மூப்பர்களும், மற்றவர்களும் ஞானமாய்க் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்று கண்டுகொள்ளப்படுவதற்கேற்ப, அவர்களுக்குச் செவிசாய்க்கப்பட வேண்டும்.

இந்தக் கொள்கையானது கண்டுகொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு மற்றும் இவைகளே எதிர்ப்பார்க்கப்பட்டால், சபைகளில் உராய்வுகள்/பிணக்குகள் குறைந்துவரும் என்று நாம் நம்புகின்றோம். தங்களுக்குரியதான எல்லையில் காணப்பட்டு மற்றும் அவ்வெல்லைக்கு இசைவாகவே மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு ஊழியம்புரிவதற்கு நாடுகின்றதான மூப்பர்கள் - சபை அங்கத்தினர்கள் மத்தியில் பிரச்சனைகளை ஏற்படுத்திடுவதற்கு ஏதுவானதும், தங்கள்

எல்லைக்குட்படாததுமான அநேகக் காரியங்களைச் செய்வதிலிருந்தும், பேசுவதிலிருந்தும் கட்டுப்படுத்தப்படுவார்கள்.

## கருத்துவேறுபாடுகள் அனைத்திற்குமான பெரிய காரணி

சபையாரின் கருத்துவேறுபாடுகள் அனைத்திற்கும் பெருமையே பெரிய காரணியாகக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். மூப்பர் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று சபையார் விரும்புகிறதற்கு அதிகமாகவும், மூப்பருக்குச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதற்கு அதிகமாகவும், சபையாருக்குச் செய்திடுவதற்கெனச் சில சமயங்களில் மூப்பர் முற்படுகின்றார். அல்லது கிறிஸ்தவ மண்டலம் எங்கும் நிலவும் கருத்துகளினால் தவறாய் வழிகாட்டப்பட்டவராகி, தனது மூப்பத்துவத்தை, சபை மீதான அதிகாரத்தின் ஸ்தானம் என்று எண்ணிவிடுகிறவராகவும், அது கனமிக்க ஊழியம் என்றும், அதிகாரம் சபையாரிடத்தில் உள்ளது என்றும் எண்ணாதவராகவும் காணப்படுகின்றார். சில சமயங்களில் பிரச்சனை சபையாரிடத்திலுள்ள ஓர் அங்கத்தினனிடத்தில் காணப்படுகின்றது; இந்த அங்கத்தினன் சபையாருடைய உரிமைகளையும், அதிகாரத்தையும் தக்கவைப்பதற்கென நாடுகையில், மிதமிஞ்சி போய், தேவையில்லாமல் மூப்பருக்குத் தொல்லைக் கொடுத்து, மூப்பர் சரியான காரியத்தைச் செய்திருந்தபோதிலும், மூப்பர் எப்படியாகச் செய்திருக்க வேண்டுமென்று இந்த நல்நோக்கமுள்ள சகோதரன் எண்ணுகின்றானோ அவ்விதத்தில் மூப்பர் செய்யவில்லை என்பதினால், மூப்பரை விமர்சித்துக்கொண்டிருப்பான்.

அன்பானது பொன்னான சட்டத்தைச் செயல்படுத்திட வேண்டும். நாம் ஒருவேளை மூப்பருடைய இடத்தில் காணப்பட்டால், நாம் செயல்படுத்துவதற்காக அனுபவிக்க விரும்பும் நியாயமான சுயாதீனத்தை - தேவ வார்த்தைகளுக்கு முழு இசைவுடன் காணப்படும் அந்த நியாயமான சுயாதீனத்தை ஊழியத்தில் காணப்படும் மூப்பருக்கும் கொடுத்திடுவதற்கு நாம் விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இன்னுமாக மூப்பர் அந்தந்த சபைகூட்டத்தார் யாவருக்கும் ஊழியக்காரனாய் இருக்கிறாரே ஒழிய, சபையில் விசேஷமாய் ஏதோ ஓர் அங்கத்தினனுடைய ஊழியக்காரன் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால் மூப்பருடைய நடத்தைக்குறித்த எந்த விமர்சனமும் சபையாரிடமிருந்து வரவேண்டும் மற்றும் சபையாரிலுள்ள தனிப்பட்ட அங்கத்தினரிடமிருந்து மாத்திரம் வரக்கூடாது. ஒருவேளை ஒரு தனிப்பட்ட அங்கத்தினன் ஏதேனும் முக்கியமான கருத்தைக் கொண்டிருந்து, அதை மூப்பர் பொருட்படுத்தவில்லையெனில், இவ்விஷயம் தொடர்பாக தனக்கு அறிவுரையாகக் காணப்படுவதற்கு ஏதுவாகவும் மற்றும் மூப்பருக்கு அறிவுரையாகக் காணப்படுவதற்கு ஏதுவாகவும், இது விஷயம் குறித்த சபையாருடைய கணிப்பைக் கேட்பதற்கு அந்த அங்கத்தினன் உரிமை உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் எந்தத் தனிப்பட்ட அங்கத்தினனும் மூப்பரைக்குறித்து விமர்சிப்பதற்கோ அல்லது அவரது வழிமுறைகளில் குற்றம் கண்டுபிடிப்பதற்கோ முற்படக்கூடாது.

ஒருவேளை இதுவிஷயத்தில் சபையார் மூப்பரை அங்கீகரிப்பார்களானால், மாற்றுக் கருத்துக் கொண்டிருக்கும் அந்தத் தனிப்பட்ட அங்கத்தினர்கள், தொடர்ந்து தாங்கள் விரும்புகிறபடியே எண்ணிக்கொண்டு காணப்படுவதற்கான சுயாதீனமுடையவர்களாய் இருக்கின்றனர், எனினும் அவர்கள் பெரும்பான்மையானவர்களுடைய கருத்திற்கு விட்டுக்கொடுத்திட வேண்டும். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சபையார் மத்தியில், சமாதானம், ஒழுங்கு என்பவைகளை வளர்த்திக்கொள்வது என்பது, வேதாகம ஆராய்ச்சிகளின் விஷயத்தில் மிகவும் விலையேறப்பெற்ற காரியங்களாய்க் காணப்படுகின்றன. ஒரு காரியம் தொடர்புடைய விஷயத்தில் உண்மையிலேயே தவறு இருந்தால், அது வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி சமாதானத்தையும், ஒழுங்கையும் குலைத்துப் போடும் எதுவும் செய்யப்படக்கூடாது. வேதவாக்கியங்களுக்கு முரண்பட்டதென, தான் கருதும் காரியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவரும் சகோதரனோ அல்லது சகோதரியோ, தனது சொந்த கருத்தைக் குறித்து அதிகமாய்ச் சொல்லாமல், மீறப்பட்டுள்ளதாக, தான் நம்புகின்றதான வேதவாக்கியங்களின் கட்டளைகளையே பிரதானமாய்க் கையாண்டிட வேண்டும்.

## சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது

இந்தப் பத்திரிக்கைக் கடந்துபோகும் இடங்களிலெல்லாம், இந்த யோசனைகளானது, கர்த்தருடைய சகோதர சகோதரிகள் மத்தியில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்ற நோக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே ஆவியினால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சரியானவைகளை - தேவனுக்குப் பிரியமாயும், அவரால் அங்கீகரிக்கப்படுகிறதாயும் மற்றும் அவரது நோக்கங்களுக்கடுத்தவைகளாயும் உள்ளவைகளை - அறிந்திடுவதற்கும் மற்றும் செய்திடுவதற்கும் விரும்புகின்றார்கள் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கின்றோம். "ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு இருக்கின்றோம்." "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." நாம் அனைவருமே கர்த்தருடன் ஒன்றுபட்டுள்ளதால் - ஒரே இருதயம், ஒரே சித்தம் உடையவர்களாகியுள்ளதால் - நம்முடைய சிரமம்/பிரச்சனை முழுக்க நம்முடைய தலைகளிலேயே - திவ்விய ஏற்பாடுகளை நிர்வகிக்கும் கொள்கைகள் சிலவற்றை நாம் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளதிலேயே காணப்படுகின்றது என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. இந்தக் கொள்கைகளானது, பூரணமானவைகள், சரியானவைகள் என்பதில் நமக்கு நிச்சயமே. எந்தளவுக்கு நம்மால் இந்தக் கொள்கைகளுக்கு இசைவாய் வரமுடிகின்றதோ, அவ்வளவாய் நாம் ஒருவரோடு ஒருவர் சமாதானமாய்க் காணப்பட முடியும் மற்றும் நமது கர்த்தரோடுகூட நாம் பங்கடையப் போகின்றதான இராஜ்யத்திற்கு நேராக ஒருவரையொருவர் சந்தோஷத்துடன் வழிநடத்திடுவதில் உதவிட முடியும்.

சகோதர சகோதரிகள் யாவரிடத்திலுமான அன்பானது, நாம் புதுச்சிருஷ்டிகளென அன்புகூருகின்றோம் என்பதற்கான நிச்சயமான அறிகுறியாக இருக்கின்றது என்பதை எப்போதும் நினைவில் கொள்வோமாக. சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, நாம் அவர்களுக்கு எந்தத் தீமையையும் செய்யாமல் இருப்பதை, கண்டிப்பான அவசியம் ஏற்படும் கட்டம் தவிர மற்றப்படி எந்தத் தீமையையும் பேசாமல் இருப்பதை மற்றும் இறுதியாக அவர்களது வார்த்தைகள் மற்றும் கிரியைகள் குறித்து எவ்விதமான தீமையான சம்சயங்கள்/ ஊகங்கள்கூட நாம் பண்ணாமல் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் (தமது ஆவியின் மூலம்) நிலைத்திருக்கிறார்." நமக்கு உண்டான யாவற்றையும் நாம் அன்னதானம்பண்ணினாலும், நீதியின் நலனுக்கடுத்த விஷயங்களுக்காக நம்முடைய சரீரங்களைப் பலியாக நாம் சுட்டெரிக்கக்கொடுத்தாலும், அன்பு - அன்பின் ஆவி நமக்கிராவிட்டால், நாம் தேவனுடைய பார்வையில் ஒன்றுமில்லாதவர்களாய் இருப்போம் (உரோமர் 13:10; 1 யோவான் 4:16; 1 கொரிந்தியர் 13:3).

---

# மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல்

சபை கூடுகைகளில் வாக்களிப்பதற்குரிய உரிமை பெற்றவர்கள் ஒப்புரவாகுதலின் விசுவாசிகளாகவும், தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர்களாகவும் மற்றும் அந்த அர்ப்பணிப்பினை அடையாளத்தின் மூலம் செய்துகொண்டவர்களாகவும் இருப்பவர்கள் மாத்திரமே என்று சமீபத்தில் இதழாசிரியர் தெரிவித்தபோது, அவர் ஒன்றைக்குறித்து எழுத சித்தங்கொண்டிருக்க, அதற்குப் பதிலாக அவர் வேறொன்றை எழுதிய காரியமாகிவிட்டது. *அடையாளப்படுத்துதல்* எனும் வார்த்தைச் சேர்த்ததிலேயே தவறு காணப்படுகின்றது. தண்ணீர் முழுகுதலினுடைய உண்மையான அர்த்தத்தினையும், முக்கியத்துவத்தையும் காண்பதற்கு முன்னதாக, நம்மில் அநேகர் உண்மையாகவே கிறிஸ்தவர்களாகவும், கர்த்தரினால் உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையின்" அங்கத்தினர்களாகவும் உண்மையில் காணப்பட்டிருந்தோம் (எபிரெயர் 12:23). இத்தகையவர்கள் யாவரும் சபையின் தேர்ந்தெடுத்தல்களில் வாக்களிப்பதற்கு உரிமைப் பெற்றிருக்கின்றனர் என்று நாம் எப்போதுமே கருத்துக்கொண்டவர்களாக இருக்கின்றோம். (வேதாகம பாடங்கள், தொகுதி 6-ஐ பார்க்கவும்). ஆம், வாக்களிப்பது - தங்களது பகுத்தறிதலின்படி சபைக்கான ஊழியக்காரர்கள் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்தினை வெளிப்படுத்துவது - அவர்களது கடமையாக இருக்கின்றது.

ஆனால் நாங்கள் வலியுறுத்த விரும்பிட்டது என்னவெனில், தனது அர்ப்பணிப்பினை முறையாய் அடையாளப்படுத்துவது தொடர்புடையதான வேதாகம போதனைகளை இதுவரையிலும் ஏற்றுக்கொண்டிராத எந்தச் சகோதரனும், சபையில் உதவிக்காரராகவோ அல்லது மூப்பராகவோ முறையாய் நியமிக்கப்படும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கமாட்டார் என்பதேயாகும். முழுக்கக் கவனக்குறைவின் காரணமாகவே, அதில் நாங்கள் அத்தகையவர்கள் வாக்களிக்கக்கூடாது என்று குறிப்பிட்டவர்களானோம்.

முன்மொழிதல்கள் தொடர்புடைய விஷயத்தில் சில சபைகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது. முன்மொழியும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, சகோதரன் ஒருவரின் தகுதிகள் முறையாய்க் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாமலேயே மூப்பராக அல்லது உதவிக்காரராக முன்மொழியப்படுகின்றது. அவருக்கான முன்மொழிதலானது, வழிமொழியவும் படுகின்றது; மற்றும் முழுச்சபையாரும் அச்சகோதரனை அன்புகூருவதினால், தங்கள் மீது மனஸ்தாபம் ஏற்படக்கூடாது என்பதற்காக, அச்சகோதரனுக்கு எதிராக தங்கள் வாக்குகளை அளிப்பதற்கு மனமில்லாமல் காணப்படுகின்றனர்.

சபையில் எந்த ஓர் ஊழியத்திற்கும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்படும் காரியத்தில், ஒரு காரணம் இருத்தல் வேண்டும். மூப்பர் ஒருவர் போதிக்க வல்லவராகவும், பரந்த மனப்பான்மையுடையவராகவும், ஆலோசனை தேவைப்படுபவர்களுக்கு உதவிகரமான ஆலோசனை வழங்க முடிகிறவராகவும், தேவனுடைய வார்த்தைகளை ஆழமாய் ஆராய்கிறவராகவும், சபையில் நல் செல்வாக்குடையவராகவும் மற்றும் ஞானமுள்ள ஆலோசகராகவும் இருத்தல் வேண்டும். யாருமே இந்த நற்பண்புகள்/தகுதிகள் யாவற்றையுமே சரிசமமான அளவில் பெற்றிருக்க முடியாது. சிலர் ஒன்றை அதிகமாகவும், வேறு சிலர் மற்றொரு தகுதியினை அதிகமாகவும் பெற்றிருப்பார்கள்; ஆனால் அவைகளில் சிலவற்றையாகிலும் அனைவரும் பெற்றிருக்கவேண்டும்; ஒருவரின் தேர்ந்தெடுத்தலில் பழிச்சொல்லுக்கு இடமிருக்கக்கூடாது. இதுபோலவே உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், ஊழியம் புரிய நேரம் ஒதுக்கமுடிகிறவராகவும் மற்றும் வருங்காலத்தில் மூப்பராகுவதற்கு ஏதுவான சில திறமைகளைப் பெற்றிருப்பவராகவும் மற்றும் சபைக்கு ஊழியம் புரிவதற்குரிய விருப்பம் உடையவராகவும் காணப்படவேண்டும்.

மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்களை **முன்மொழியும் விஷயத்தில்**, ஒருவேளை ஏதேனும் சிரமம் காணப்படும் பட்சத்தில் அல்லது பெரும்பான்மையானவர்கள் விரும்பும் பட்சத்தில் - வாக்குச்சீட்டு முறைமையைப் பயன்படுத்துவது மிகவும் நல்லதொரு முறையாக இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது. இதனை செயல்படுத்திடுவதற்கு எழுதுகோலும் (Pencil), காகிதத் துண்டுகளும் தேவைப்படும். வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும், பின்வருமாறு எழுதிட வேண்டும்: "நான் _________ என்ற சபையில், பின்வரும் _________ மாத

காலங்கள் மூப்பர்களாகுவதற்கு பின்வருபவர்களை முன்மொழிகின்றேன்." பிற்பாடு பெயர்கள் இடம்பெற வேண்டும். எண்ணிக்கையினைச் சபையார் கூட்டவோ அல்லது குறைக்கவோ விரும்புகிறார்களெனில், இது முன்மொழிதலுக்குப் பிற்பாடு, தேர்ந்தெடுத்தலின்போது செய்யப்படலாம்.

வாக்குச்சீட்டுகளானது சேகரிக்கப்பட்ட பிற்பாடு, முடிவுகளானது பட்டியலிடப்பட்டு, சபையாருக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். சபையாருக்கு எத்தனை மூப்பர்கள் தேவையாய் உள்ளது என்று சபையார் முடிவு செய்திட வேண்டும். ஒருவேளை மூன்று பேர் தேவை என்று சபையார் தீர்மானிப்பார்களானால், அதிகமான முன்மொழிதல் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருக்கின்றதான ஆறு சகோதரர்களுக்கு வாக்குகள் அளிக்கப்பட வேண்டும். கைகளை நீட்டுவதன் மூலமான வாக்குகளை அதிக எண்ணிக்கையில் பெறும் மூன்று பேர், சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட வேண்டும். அல்லது இன்னொரு வழி என்னவெனில்: வாக்குச்செலுத்தினவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குச் சமமான எண்ணிக்கையில் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருப்பவர்களாகிய முன்மொழியப்பட்டிருப்பவர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்வதும் மற்றும் இவர்கள் யாவரையும் முடிந்தமட்டும் ஏகமனதான வாக்குகளுடன் தேர்ந்தெடுப்பதாகும்; இந்த ஏற்பாடானது சிறுபான்மையானவர்கள்கூட மூப்பர்கள் மத்தியில் இடம் பெறுவதற்கு வாய்ப்பளிப்பதற்கு நோக்கம் கொண்டதாகும்.

எப்போதும் மனதில் நிறுத்தப்பட வேண்டிய சிந்தை என்னவெனில்: சபையார் யாவருடைய பகுத்துணர்தலும்/தீர்மானமும் முடிந்தமட்டும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். பெரும்பான்மையானவர்களே தீர்மானிக்கிறவர்களாய் இருப்பினும், சபையாருடைய மூப்பர்கள் விஷயத்தில், அங்கத்தினர்கள் யாவருடைய உணர்வுகளும் பிரதிபலிக்கத்தக்கதாக பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்களுக்குச் சிலவற்றில் இணங்குவது எப்போதும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். எப்படி இந்த முடிவானது அடையப்பெற்றாலும், நாம் ஞானமாய் நடந்துகொண்டவர்களாய் இருப்போம்; மற்றும் வேறே முடிவானது அடையப்பெற்றால், அது ஞானமற்றதாகவும், சபையாருடைய சமாதானம் மற்றும் ஒற்றுமைக்கு இடர் உண்டாக்குகிறதாகக் காணப்படும். சகோதர சிநேகமானது எப்போதுமே, அனுதாபத்தையும், இரக்கத்தையும், அன்பையும் மற்றும் முக்கியமான கொள்கையுடன் தொடர்புபடாத பட்சத்தில், இணங்கிச் செல்வதற்கு விரும்புவதையும் குறிக்கின்றதாகக் காணப்படும்.

---

R 5358

# "கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல்"

"நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் . . . அவர்களும் ஒன்றாயிருக்கும்படி . . . நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் . . . வேண்டிக்கொள்ளுகிறேன்."—யோவான் 17:9, 20-23.

இந்த வசனங்களின் வார்த்தைகளானது, நமது காத்தர் காட்டிக்கொடுக்கப் பெற்ற இரவில், பஸ்கா அனுசரிக்கப்பட்ட "மாடி வீட்டறையிலிருந்து," கெத்செமனே தோட்டத்திற்குப் போகிற வழியில், கர்த்தரினால் உரைக்கப்பட்ட வார்த்தைகளாக இருக்க வேண்டும். அவர் பதினோரு அப்போஸ்தலருக்குத்தான் இங்கு ஜெபம் ஏறெடுத்திருக்க வேண்டும். ஏனெனில், இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கர்த்தர், "கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" என்று கூறினார் (யோவான் 17:12). ஆனால் நம்முடைய ஆதார வசனத்தின்படி, அவருடைய ஜெபமானது, சுவிசேஷ யுகம் முழுவதும் வரும் அவருடைய உண்மையுள்ள பின்னடியார்களை உள்ளடக்கி இருந்தது. "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20). தாமும், தம்முடைய பிதாவும் ஒன்றாய் இருப்பது போன்று, அதாவது ஒத்த மனமுடையவர்களாய் இருப்பதுபோன்று, தம்முடைய பின்னடியார்களும் ஒன்றாய் இருக்கும்படிக்குக் கர்த்தர் ஜெபம் பண்ணினார்.

இவ்வசனமானது, கர்த்தர் இயேசுவும், பிதாவும் நபரில் ஒருவராக இல்லை என்பதற்கான சிறந்த நிரூபணமாக இருக்கின்றது. சபை அனைவரும், ஒரு நபராக இருக்கும்படிக்குக் கர்த்தரினால் ஜெபம் ஏறெடுக்க முடியாது. அது சித்தத்தில் ஒருமைப்பாடும், சித்தத்தில் முழுமையான இசைவும், நோக்கத்தில் ஒருமைப்பாடும் ஆகும். "என் சித்தம் அல்ல, மாறாக உம்முடைய சித்தமே நடக்கக்கடவது" என்று கர்த்தர் கூறினார். கர்த்தர் இப்படியாகப் பிதாவுடனும், பிதாவின் சித்தத்துடனும், பிதாவின் திட்டத்துடனும் முழுமையான ஒருமைப்பாட்டிற்குள்ளாகவும், இசைவிற்குள்ளாகவும் வந்தார். இது ஒன்றுபடுவதற்கென ஒருவருக்கொருவர் தங்களது சில உரிமைகளை விட்டுக்கொடுக்கும், பரஸ்பர விட்டுக்கொடுத்தல் அல்ல.

உலகத்தின் இரட்சகராகவும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் அவர் ஆகுவதற்கு முன்னதாக, மனுக்குலத்தின் உலகத்தினைக் கையாளும் விஷயத்தில் அவரது முதல் வேலை, சபையைத் தெரிந்துக்கொள்ளுதலாகும். இந்த வேலையைத்தான் கர்த்தர் இப்பொழுது ஆரம்பித்துள்ளார்; மற்றும் அவர்களிடம் சாட்சியை அளிக்கின்றார். சபை முழுவதும் நோக்கத்தில் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்முடைய சித்தத்துடன் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமெனக் கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இப்படியாக சித்தத்தில் ஒருமைப்பாடு என்பது, நம்முடைய சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுப்பதாகிய, ஒரே வழியின் மூலமாகவே அடையப் பெறக்கூடிய காரியமாக இருக்கின்றது; இந்த ஒப்புக்கொடுத்தல் என்பது வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோல, மரித்துப் போகிறவர்களாய் ஆகும்போது செய்யப்படுகின்றதாய் இருக்கின்றது.

## "வாக்குவாதத்திற்கான இரண்டு காரணங்கள்"

ஒரு மனுஷன் (அ) மனுஷியைப் பொறுத்தமட்டில், அவர்களது சித்தம் என்னவாக இருக்கின்றதோ மற்றும் அந்தச் சித்தமானது சரீரத்தையும், சூழ்நிலையையும் கொண்டு என்ன நிகழ்த்துகின்றதோ, அது அம்மனுஷனுடைய இயல்பாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய சீஷத்துவத்தின் ஆரம்பத்திலேயே, பார்க்கப்பட வேண்டிய முதல் காரியம், நாம் நம்முடைய சித்தங்கள் தொடர்புடைய விஷயத்தில் மரித்துவிட்டோமா என்பதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவனுடையவர்களாக இருக்கின்றோமா என்பதும்தான்; இப்படியாகச் செய்கிறவர்கள் அனைவரையும் அவர் புதிய சிருஷ்டிகளென அழைக்கின்றார். அவர் அவர்களுக்குப் புதிய மனம், புதிய சித்தம் காணப்படத்தக்கதாக, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளுகின்றார். அவர்கள் எந்தளவுக்குப் புதிய மனதை, புதிய சித்தத்தை உடையவர்களாய் இருக்கின்றார்களோ, அவ்வளவாய் ஒருவரோடு ஒருவருக்கு ஒருமைப்பாடும் காணப்படும்.

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் வாக்குவாதம் உருவாகுவதற்கான காரணம், ஒன்றில் உண்மையில் குறைபாடாக அல்லது அறிவில் குறைபாடாக இருக்க வேண்டும். ஒருவேளை உண்மையில் குறைவுப்பட்டிருந்தால், அவர்கள் படிப்படியாக பின்னாக இழுக்கப்பட்டுப் போய்விடுவார்கள். தேவன் தம்முடைய குடும்பத்தார் எவரிடமும், வற்புறுத்துதலைக் காண்பிப்பதில்லை. தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையும், அனைத்து விஷயங்களிலும் உண்மையுள்ளவர்களையும் தேவன் தெரிந்தெடுக்கின்றார். இந்த முழுச் சுவிசேஷ யுகத்தையுமே, தேவன் இந்த வகுப்பாரைத் தெரிந்தெடுக்கும் நோக்கத்திற்காகவே ஒதுக்கியுள்ளார். இந்தத் தெரிந்தெடுக்கும் வேலையானது கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளாக நடைப்பெற்றுக் கொண்டு வருகின்றது. இந்த வகுப்பார் சிறுமந்தையினராக இருப்பார்கள் இவர்கள் மிகவும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாராகவே இருப்பார்கள். இவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்.

அநேகருக்கு அந்த வழியில் நடப்பதற்கும், உலகத்தைக் குப்பையும், தூசியுமாக எண்ணுமளவுக்கும், தேவனிடத்திலும், நீதியனிடத்திலும் உண்மை கொண்டிருப்பதில்லை. உண்மையற்றவர்கள் (உண்மையுள்ளவர்களை விட்டு) இடம் விட்டுப் போய்விடும்போது, உண்மையுள்ளவர்கள் (ஒருவருக்கொருவர்) அதிகமதிகமாய் ஒன்றாய் ஈர்க்கப்பட்டு காணப்படுகையில், இந்த உண்மையுள்ளவர்கள் மத்தியில் அதிகமதிகமாய் ஒருமைப்பாடு காணப்படும். இது எல்லா காலத்திலும், எல்லா தேசங்களின் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படும். முற்றும் முழுமையாக உண்மையுள்ளவர்கள் அனைவரும், பிதாவின் சித்தத்தைச் செய்கிறதற்கு விரும்புகிறவர்களாகவும், பிதாவுக்கான ஊழியத்தில் தங்களுடைய ஜீவியங்களையே ஒப்புக்கொடுத்துவிட விரும்புகிறவர்களாகவும் காணப்படுவார்கள். மேலும் இந்த விருப்பமானது, அவர்களை ஒருமைப்பாட்டில் காணப்படச்செய்யும்.

## ''முதிர்ச்சி வரும்போது பிணக்குக் குறையும்''

"ஒருமைப்பாட்டில் அவர்கள் **தேறினவர்களாயிருக்கும்படிக்கு**" என நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார் (யோவான் 17:23). ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் முன்னேறிச் செல்லும்போது, ஒவ்வொருவனும், தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினைப் பயன்படுத்துவதற்கு அதிகம் தகுதியுடையவனாகுகிறான்; இப்படியாக (கிறிஸ்துவின்) சரீரமானது மிகவும் பயனுடையதாகிறது. ஆனால் இங்குக் கர்த்தர் தேறின நிலையை, முழுமையடைந்த நிலையைக் குறிப்பிடுகின்றார். கர்த்தர் யுகத்தினுடைய முடிவின்போது, வேலை நிறைவடையும்போது, முழுமையடையும்போது, அவர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டில் காணப்படுவதைக்குறித்தே குறிப்பிடுகின்றார். ஆனால் மகிமையான நிறைவைக் கர்த்தர் தாமே கொண்டு வருவார். நம்முடைய மாம்சத்தினுடைய வேற்றுமைகளினால், நம்மால் அனைத்திலும் இப்பொழுது முற்றிலுமாய் ஒருமைப்பாட்டுடன் காணப்பட முடியாது. இப்பொழுது நம்மால் ஏறக்குறைய தெளிவில்லாமல்தான் காரியங்களைப்பார்க்க முடிகின்றது.

இப்பொழுது நம்மால் காரியங்களை முற்றும் முழுமையாகக் காண முடியாது. இதன் விளைவாகக் கர்த்தருடைய சித்தம் செய்தவற்கெனத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மத்தியிலும் கூட, எப்போதும் பிணக்குகள்/உராய்வுகள் காணப்படவே செய்கின்றது. நாம் முதிர்ச்சி அடைய அடைய, இந்தப் பிணக்குகள்/உராய்வுகள் குறைந்துக் கொண்டுவர வேண்டும். நாம் இமைப்பொழுதிலே உயிர்த்தெழுதலின் மாற்றங்களை அனுபவிக்கும் மகிமையான நிறைவு அடைவதுவரையிலும், நம்மால் கண்ணார காண இயலாது. "மாம்சமும், இரத்தமும், தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை." இந்தப் பூரணமற்ற சரீரங்களில்தான் நமக்கான பரீட்சை நடைப்பெற வேண்டியுள்ளது. முடிவு பரியந்தம் உலகத்திற்கும், மாம்சத்திற்கும், எதிராளியானவனுக்கும் எதிரான போராட்டத்தில் தங்களது நேர்மையை/உண்மையைக் காண்பிப்பவர்கள், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாயிருந்து, அவருடைய இராஜ்யத்தில் பங்கடைந்து, மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கும் தெய்வீகத் திட்டத்தைச் செய்து முடிப்பவர்களாய் இருப்பார்கள்.

## ''பிரமிக்க வைக்கும் வாக்கியம்''

கர்த்தருடைய வெளிப்படுதலில் உள்ள, epiphania காலத்தின்போது, தேவன் சபையை வழிநடத்தும் தம்முடைய தற்போதைய வேலையை, நிறைவேற்றி முடித்தவராகக் காணப்படுவார்; மற்றும் உலகமானது வேறே யுகத்தின் கீழ்க் காணப்படுகின்றது என்று உலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கும். உலகமானது காரியங்களைக் குறித்து முழுமையாய்ப் புரிய வரும்போது,

அவர்கள் அப்போது, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் ஏறெடுத்த கடைசி ஜெபத்தில், பிதா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அன்புகூருவது போன்று, பிதா சபையையும் அன்புகூருகின்றார் என்று கூறின வார்த்தைகளிலுள்ள உண்மையை அறிந்துக்கொள்வார்கள். இது பிரம்மிக்க வைக்கும் ஒரு வாக்கியமாகும். இது நமது கர்த்தரிடத்தில் சுயநலம் எதுவும் இல்லை என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. "அவர்கள் எனக்குக் கீழாகத்தான் இருப்பார்கள். நான் கொண்டிருக்கும் மகிமையை, அவர்கள் ஒருபோதும் அடைவதில்லை"என்று கர்த்தர் கூறவே இல்லை.

மாறாக கர்த்தர் இயேசுவோ, கொள்கை மற்றும் குணலட்சணத்தின் அடிப்படையிலேயே பரம பிதா, தம்முடைய அன்பைச் செயல்படுத்துவார் என அறிந்திருந்தார். இந்த மகிமையான கூட்டத்தாரில் அங்கத்தாராய் இருப்பவர்கள் அனைவரும், நமது கர்த்தர் கொண்டிருந்த அதே மகிமையான குணலட்சணத்தைக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும்; அதாவது, வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர்கள் மனதின் அடி ஆழம் வரை, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அவர்கள் தாங்கள் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுப்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 1:9). கர்த்தர் சபை வகுப்பாரின் தலையாக இருக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார். ஆனால் சபை வகுப்பார் இந்த வேதவாக்கியத்தில் (எபிரெயர் 1:9) அவருடைய தோழர்கள்/துணையாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்; அதாவது, அவர்கள் கீழானவர்கள் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படாமல், ஒரே தளத்தில், அவரோடு கூட இருப்பவர்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளனர். அப்போது உலகமானது, பிதா இயேசுவை அன்புகூர்ந்ததுபோலவே, சபையையும் அன்புகூருகின்றார் என்று அறிந்துக்கொள்ளும். சபையானவள் தனது கர்த்தராகிய இயேசுவுடன் கூட, ஒரே தளத்தில் காணப்படுவாள் என்று நாம் புரிந்திருக்கின்றோம். எனினும் தேவன் கர்த்தரை, "எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்" என்றும், தேவன் இப்படியாக அவரை என்றென்றும் இருக்கும்படிக்கு ஆசீர்வதித்துள்ளார் என்றும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சபை ஒருபோதும் கிறிஸ்துவுக்குச் சரிசமமானவளாக இருப்பதில்லை.

நம்முடைய பரம பிதாவானவர், கிறிஸ்துவை அன்பு கூர்ந்தது போன்று, நம்மையும் அன்புகூருகின்றார் என்பதும், புளுதியில் காணப்படும் வைரத்தைக் கர்த்தர் அன்புகூருகின்றார் என்பதும் நமக்கு மிகவும் ஆச்சரியமாய் இருக்கின்றது! மனிதனுடைய பாவமாகிய சேற்றிலிருந்து, கர்த்தர் இயேசு இந்தப் பாத்திரங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருகின்றார். கர்த்தர் இயேசு உண்மையாய் இருந்ததுபோன்று உண்மையுள்ளவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் இருப்பதை நிரூபித்து காண்பிக்கும் வகுப்பாரைப் பிதா, கர்த்தர் இயேசுவை அன்புகூருவதுபோன்று அன்புகூர்ந்து, தம்முடைய குமாரனுடன் கூட அவர்களையும் மகிமைப்படுத்துவார்.

**ஆமென்!**

---

R 5362

# "எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல்"

## லூக்கா 10:1-24

"பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்." - மத்தேயு 10:20

ஊழியர்களின் நியமித்தல் என்பது நூற்றாண்டுகள் காலமாக விவாதத்திற்குரிய ஒரு காரியமாகவே காணப்பட்டு வருகின்றது. இது மறைமுகமாக, கடந்த காலங்களில் இரத்தம் சிந்தப்படுவதற்கு ஏதுவான துன்புறுத்தல்களுக்கு நேராகவும் வழிநடத்தியுள்ளது. அந்தக் காலங்கள் கடந்துப் போய்விட்டப்படியினால், தேவனுக்கு நன்றி! எனினும் அநேக ஜனங்கள் இன்னமும் நியமித்தல் தொடர்பான விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ளாத காரணத்தினால், இந்த நியமித்தல் தொடர்புடைய விஷயத்தில், துன்புறுத்தல் மீண்டுமாகத் தொடர்வதற்குரிய அபாயம் எப்பொதுழுமே காணப்படுகின்றது. ஊழியர்கள் நியமித்தல் தொடர்புடைய விஷயத்திலுள்ள, தவறான கருத்துகளின் அடிப்படையிலுள்ள துன்புறுத்தல்களில் பேப்டிஸ்ட்டினர், மெத்தடிஸ்ட்டினர், லுத்தரேனியர், எபிஸ்கோப்பலியர், பிரஸ்பைடேரியினர் அனைவரும் பங்குக்கொண்டுள்ளனர்; இக்காரியம் தொடர்புடைய விஷயங்களில் இவர்கள் முற்காலங்களில் ஒருவரையொருவர் துன்புறுத்தியுள்ளனர்.

ஒருவர் விசேஷித்த விதமாய் (ஊழியத்திற்கு) நியமிக்கப்படாதது வரையிலும் ஒருவரால் போதகராக அல்லது பிரசங்கியாளராக இருக்க முடியாது என்பதும், நியமிக்கப்படாமல் பிரசங்கம் பண்ணுவது அல்லது போதகம் பண்ணுவது என்பது தெய்வீக ஏற்பாட்டிற்கு எதிராகக் கலகம் செய்வதாக இருக்கும் என்பதும், இப்படியாக நியமிக்கப்படாமல் போதிப்பவரின் போதனையைப் பின்பற்றுகின்ற அல்லது அப்படிப்பட்ட ஒருவருக்கு ஆதரவு கொடுக்கின்ற அனைவரும் (Heretics) எதிரான கொள்கையை உடையவர்களாகவும், எவ்விதமான அனுதாபத்திற்குப் பாத்திரமற்று, துன்பப்படுதலுக்கு ஏதுவானவர்களாய் இருப்பார்கள் என்பதும்தான் வாதமாய்க் காணப்படுகின்றது.

அநேகர் எண்ணிக்கொள்வது போன்று ஊழியத்திற்கு நியமிக்கப்படுதல் என்பது சடங்கு, ஆச்சாரம் தொடர்புடையதல்ல. அது பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படுதலையும், பிரசங்கிப்பதற்கான கடமை ஒப்படைக்கப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பேப்டிஸ்ட்டினர்கள் தங்களுடைய விசுவாசப்பிரமாணத்தை ஒப்புக்கொள்பவர்களிடம், அந்த விசுவாசப்பிரமாணத்தைப் பிரசங்கிப்பதற்கான கடமையை ஒப்படைக்கின்றனர். இப்படியாகவே பிரஸ்பைடேரியினர்கள் தங்களுடைய சீஷர்களிடம் கடமையை ஒப்படைக்கின்றனர்; இப்படியாகவே லுத்தரேனியர்களும், மெத்தடிஸ்ட்டினர்களும் செயல்படுகின்றனர். ரோம கத்தோலிக்கர்களும், எபிஸ்கோப்பலியர்களும் தேவனிடமிருந்து, நியமித்தல் வருவதாகக் கூறுகின்றனர்; அதாவது இவர்களுடைய கண்காணிகள் அனைவரும் அப்போஸ்தலர்களின் பின்வரும் வாரிசுகள் என்றும், அப்போஸ்தல அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும் உரிமைப் பாராட்டிக்கொள்கின்றனர்; இன்னுமாக இவர்களுடைய கண்காணிகள் மூலம் நியமிக்கப்படாத அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்படாத எவருக்கும், பிரசங்கம் பண்ணுவதற்குரிய உரிமை இல்லை என்றும், இப்படி நியமிக்காமல் பிரசங்கிக்கும் பட்சத்தில் அப்படிப்பட்டவர்கள் (Heretics) கொள்கைகளுக்கு எதிரானவர்கள் என்றும் கூறுகின்றனர். இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி, அதிகாரம் அளிக்கப்படாமல், பிரசங்கித்துக்கொண்டுவரும் புராட்டஸ்டன்ட்டினர் அனைவரும் (Heretics) கொள்கைகளுக்கு எதிரானவர்களே ஆவர்.

ஆனால் விட்டுக்கொடுத்தலின் ஆவியும் வளர்ந்துக்கொண்டு வருகின்றது; கடந்த இரண்டு வருடங்களுக்குள்ளாக எபிஸ்கோபலின் ஊழியக்காரர் ஒருவர், வேறு ஒரு சபை பிரிவின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம் அல்லது எபிஸ்கோபியினர்களினால் நியமிக்கப்படாத ஓர் ஊழியக்காரன், எபிஸ்கோபல் சபையின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம் எனும் அளவுக்கு, எபிஸ்கோபியினர்கள் மற்றப் புரோட்டாஸ்டன்டினர் மீதான தங்கள் தடைவிதிகளை விலக்கிப் போட்டுள்ளனர். எனினும் இவை அண்மை காலத்திற்குரிய சலுகையாகவே உள்ளது.

இன்றைய பாடத்தில், ஊழியத்திற்கான நியமித்தல் குறித்த சரியானக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இயேசு தம்முடைய விசேஷித்த அப்போஸ்தலர்களாய் இருக்கும்படிக்கு ஏற்கெனவே பன்னிரண்டு பேரை நியமித்துவிட்டார்; இப்பொழுது அவர் மேலும் எழுபது பேரை

அப்போஸ்தலர்களாய் இருப்பதற்கு அல்லாமல் மாறாக பொதுவான ஊழியர்களாய் இருக்கும்படிக்கு நியமித்தார். பதிவுகள் தெரிவிக்கின்றதை வைத்துப் பார்க்கும் பொழுது, இவர்களுடைய நியமனத்தின் விஷயத்தில் எவ்விதமான சடங்குகள் அனுசரிக்கப்படவில்லை. அவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று மாத்திரமே அவர்களிடம் கூறி, இயேசு அவர்களை அனுப்பி வைத்தார். நமது பாடத்தின் ஆதார வசனம் இவைகளைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. "பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத்தேயு 10:20).

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், அப்போஸ்தலர்கள் அதுவரையிலும், நேரடியாக பிதாவின் ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. பிதாவின் ஆவி, குமாரனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; மேலும் குமாரன், தம்முடைய நாமத்தில் பிரசங்கம் பண்ணும்படிக்கு அனுப்பி வைத்தவர்களுக்கு, அந்தத் தம்முடைய ஆவியைப் பகிர்ந்தார். பெந்தெகொஸ்தே வரையிலும், சுவிசேஷத்தின் செய்தியைப் பிரசங்கிப்பதற்குப் பிதா எவரையும் நேரடியாய் அங்கீகரிக்கவில்லை, மற்றும் அதிகாரம் கொடுக்கவில்லை அல்லது நியமிக்கவில்லை. பிதாவிடமிருந்து, குமாரன் மூலமாக பரிசுத்த ஆவியானது பொழியப்பட்டது குறித்து அப்போஸ்தலர் 2:32-33-ஆம் வசனத்தில் பரிசுத்தவானாகிய பேதுரு விவரிக்கின்றார்.

முன்பு பரிசுத்த ஆவி கொடுக்கப்படவில்லை, காரணம் இயேசு இன்னமும் மகிமையடைவில்லை என்று வேறு ஓர் இடத்திலும் கூட விவரிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் சீஷர்களைப் பிதாவானவர் புதிய ஏற்பாட்டின் கீழ்ப் புத்திரர்களாக ஏற்கும் முன்பும், அதாவது, உலகத்தில் அவருடைய ஸ்தானாதிபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும், அவர்கள் காணப்படத்தக்கதாக மற்றும் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் சாபத்தை மாற்றிப்போட்டு, பூமியை ஆசீர்வதிப்பதற்குரிய ஆயிரம் வருடங்களுக்குப் பரலோக இராஜ்யத்தில், இயேசுவுடன்கூடத் துணையாளர்களாகவும் காணப்படத்தக்கதாக பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலையும், பரிசுத்தராலே அபிஷேகத்தையும், அதிகாரத்தையும் (அ) நியமித்தலையும் கொடுப்பதற்கு முன்பும் இயேசு பாடுபட்டுப் பரமேறிச் சென்று, தம்முடைய சீஷர்களின் சார்பாக தம்முடைய புண்ணியத்தை முன்வைப்பது அவசியமாய் இருந்தது.

தேவன் யாருக்குப் புத்திர சுவிகாரத்திற்குரிய பரிசுத்த ஆவியைக் கொடுத்திருக்கின்றாரோ, அவர்கள் மாத்திரமே கர்த்தருடைய நாமத்தில் பிரசங்கிக்கத்தக்கதாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர் (அ) பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றுள்ளனர். தேவனுடைய நாமத்தில் பேசத்தக்கதாக எவருக்கும், பூமியில் நடைபெறும் சடங்கு ஆச்சாரங்கள் அனைத்தினாலும், மற்றும் கண்காணிகள் அனைவரின் கரங்கள் அனைத்தினாலும் அதிகாரம் கொடுக்க முடியாது. தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது வரையிலும், நமது கர்த்தர் இயேசுவும் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கவில்லை. அவருடைய ஞானஸ்நானம் மற்றும் அர்ப்பணிப்பின் போது, பரிசுத்த ஆவி அவர் மீது வந்து, அவரை அபிஷேகித்து, அவரைப் பிரதிஷ்டைப்படுத்தி, அவர் "சிறுமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், நொறுங்குண்டவர்களின் காயம் கட்டவும், சிறையிலிருப்பவர்களுக்கு விடுதலையைப் பறைசாற்றவும், துக்கப்படுகின்றவர்களை ஆறுதல் படுத்துவதற்குரிய கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் அவருக்கு அதிகாரம் கொடுத்தது" (ஏசாயா 61:1, 2).

அதே பரிசுத்த ஆவிதான், இதைப் பெற்றுக்கொண்டுள்ள எவருக்கும், தெய்வீகத் திட்டம் தொடர்பாக தான் புரிந்துள்ள அனைத்தையும் கேட்க செவியுடையவர்களுக்கு, அதிலும் விசேஷமாகச் சிறுமைப்பட்டவர்களுக்கும், நொறுங்கின இருதயம் உடையவர்களுக்கும், தேவனைத் தேடுபவர்களுக்கும் கூறுவதற்கான அதிகாரமாய்க் காணப்படுகின்றது. சபையின் பெண் அங்கத்தினர்கள் பொதுவிடங்களில் பிரசங்கிக் கூடாது என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பாகத் தெரிவித்திருந்தாலும், இது பரிசுத்தாவியைப் பெற்றிருப்பவர்கள் அனைவரும் அவரவர்க்குரிய (ஆண்/பெண்) . . . பால் பாகுபாட்டிற்குரிய வாய்ப்புகள் மற்றும் வரம்புகளுக்கு ஏற்ப பிரசங்கம் பண்ணுவதற்கும், போதிப்பதற்குமான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்ற உண்மையில் தலையிடுவதில்லை. சிலசமயங்களில் தனி அறைகளுக்குள்ளாகப் பண்ணப்படும் போதனைகளானது, பொதுவிடங்களில் பண்ணப்படுவதற்கு ஒத்த பலனைக் கொடுக்கின்ற அளவிலும் காணப்படுகின்றது.

யோவான் ஸ்நானகன் துவங்கி, எருசலேம் அழிக்கப்படும் கிபி 70 வரையிலுமான, யூத யுகத்தை நிறைவு செய்திட்ட 40 வருடங்களானது, நிழலான இஸ்ரயேலர்களுக்கான அறுவடை காலமாய் காணப்பட்டது. இதில் உண்மையான கோதுமை அனைத்தும் சுவிசேஷ களஞ்சியத்தில்

திரட்டப்பட்டது, மற்றும் மீதமான பதர் அனைத்தையும் அக்கினி அடையாளப்படுத்தும் மகா உபத்திரவக் காலத்தில் ஒதுக்கப்பட்டது. இதைப் போலவே மத்தேயு 13-ஆம் அதிகாரத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலும், அறுவடை காணப்படும் என்று கர்த்தர் தெரிவிக்கின்றார். அநேகர் இது 1874-ஆம் வருடத்தில் துவங்கி விட்டது என்றும், 1915-ஆம் வருடத்தில் முடிவடையும் என்றும் நம்புகின்றனர்.

யூத யுகத்தின் முடிவிலுள்ள கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும், அறுவடை வேலையில் ஈடுபடுவதற்குரிய மாபெரும் சிலாக்கியத்தை அடையாளம் கண்டுகொள்ள வேண்டியிருந்தது போன்று, இப்பொழுதும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியிருக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களை, கபடற்ற ஆட்டுக்குட்டிகளுடனும், ஆடுகளுடனும் ஒப்பிடப்படுகின்றனர், ஆனால் சுயநலமானதும், சீரமைக்கப்படாததுமான உலகத்தாரை அவர் ஓநாய்களைக்கொண்டு அடையாளப்படுத்துகின்றார். யூதர் அறுவடையின்போது, சீஷர்கள் வீடு வீடாய்ப்போய் இரந்து திரிய வேண்டும் என்பது அவருடைய விருப்பமாய் இருக்கவில்லை, மாறாக ஒவ்வொரு கிராமத்திலும், மிகுந்த தகுதியான ஜனங்கள் யார் என்று விசாரிக்கப்பட வேண்டும் என்றும், மேலும் சீஷர்களை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அந்தக் கிராமத்தில், சீஷர்கள் தங்களது சாட்சியைப் பகர்வது வரையிலும், அங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் விரும்பினார். சீஷர்கள் முழுமையாகவே கர்த்தரைச் சார்ந்திருந்து, தங்களுடைய தேவைகளைச் சந்தித்துக்கொள்வதற்குத் தாங்களே முற்படக்கூடாது. இவைகளெல்லாம் அவர்களுடைய எதிர்காலத்தின்போது, அவர்களுக்கு உதவுகின்ற பாடமாய் இருந்தது. பிற்பாடு ஒருமுறை இயேசு தம்முடைய சீஷர்களை அனுப்பி வைக்கும்போது, அவர்களால் முடிந்தமட்டும் அவர்களுடைய தேவைகளைச் சந்தித்துக்கொள்ளும்படிக்குக் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்; இதிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதலாம் அனுபவமானது விசேஷித்த விதமான ஒன்று என்றும், அவர்கள் பிரதிநிதிப்படுத்தும் தெய்வீக வல்லமையின் மீது சார்ந்தவர்களாகவும், அதில் நம்பிக்கைக்கொண்டிருப்பவர்களாகவும் அவர்களை ஆக்குவதற்கு, என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

அவர் செய்தது போன்று, அவர்களும் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும் தக்கதான அளவில் ஆண்டவருடைய ஆவி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்படியாகவே இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. சூழ்நிலைகள் மாறியுள்ளது. அன்றிருந்ததைக் காட்டிலும், மாபெரும் கிரியைகளாகிய ஆவிக்குரிய வியாதிகளை, குருட்டுத்தன்மையை, செவிட்டுத்தன்மையைச் சொஸ்தப்படுத்துவது என்பது இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கான சிலாக்கியமாகும்.

தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்பதே, சீஷர்களுடைய ஒரே செய்தியாய் இருந்தது. யாரெல்லாம் அந்த ஒரு செய்தியினால், தாக்கத்திற்குள்ளாகக் காணப்பட்டார்களோ, அவர்களெல்லாம் தாக்கத்திற்குள்ளானார்கள். இஸ்ரயேலர்கள் பல நூற்றாண்டுகள் காலமாக தேவனுடைய இராஜ்யத்திற்காக் காத்திருந்தார்கள். அந்தோ பரிதாபம், இராஜ்யம் முன்வைக்கப்பட்ட போதோ, அதை ஏற்றுக்கொள்வதற்குச் சொற்பமான யூதர்களே ஆயத்தமாய்க் காணப்பட்டனர்! பின்னர், இராஜ்யம் அளிக்கப்படும் காரியமானது, அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டு, அன்றுமுதல், முழு உலகத்தாருக்கும் கொடுக்கப்பட்டு, மேசியாவின் மணவாட்டியாகவும், உடன் சுதந்தரராகவும் இருக்கத்தக்கதாக அனைத்துத் தேசங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார் திரட்டப்பட்டனர்; இந்த மேசியா மற்றும் அவருடைய மணவாட்டி மூலமாகவே பூமியில் சீக்கிரமாய் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் ஆசீர்வாதங்கள் பூமியின் இனத்தார் அனைவர் மேலும் அருளப்படும்.

கப்பர்நகூமிலும், பெத்சாயிதாவிலும், கோராசீனிலும், ஆண்டவர் தாம் பண்ணிய பிரசங்கத்தையும், பலத்த கிரியைகளையும் குறிப்பிடுகின்றார். சிலாக்கியத்தின் விஷயத்தில், இப்பட்டணத்தார் உயர்த்தப்பட்டுள்ளதாக அடையாள வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது; மேலும் இவர்கள் கர்த்தருடைய தயவுகளைப் புறக்கணித்துப் போட்டபடியால், இவர்கள் பாதாளமட்டும் தள்ளுண்டுவிடப்பட்டார்கள் என்றும் அடையாளமான வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீதோன் மற்றும் தீருவுங்கூட இப்படியாக பாதாளமட்டும், தூசியின் நிலைமையில்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நமது கர்த்தர் தம்முடைய பிரசங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தியுள்ள பரீட்சை (அ) போதனை (அ) நியாயத்தீர்ப்பானது இறுதியானது அல்ல என்றும், எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சை இருக்கின்றது என்றும் சுட்டிக் காண்பிக்கின்றார். பரிசுத்தவானாகிய பவுலின் கூற்றுப்படி, ஆயிரவருட யுகம் என்பது ஆயிரவருட நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கின்றது. இன்னுமாக அக்கால கட்டத்தில் முழு உலகமும், சத்தியத்தைப் பற்றின அறிவிற்குள்ளாகவும், தேவனைப் பற்றின அறிவிற்கு வருவதற்குரிய முழுமையான வாய்ப்பிற்குள்ளாகவும் கொண்டுவரப்படுவார்கள் (அப்போஸ்தலர் 17:31). எனினும் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டும், அசைவுறாமல், தங்களுடைய இருதயத்தில் கடினப்பட்டுப் போனவர்கள், இதற்கேற்ப, நியாயத்தீர்ப்பின் நாளில் அனுகூலமின்மையையும் அடைவார்கள். இக்காரியத்தை, இப்படிக் கடினப்பட்டிருக்கின்ற ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளானது இலகுவாயிருப்பினும், இவர்களைக் காட்டிலும் சோதோமின் ஜனங்களுக்கு மிகவும் இலகுவாயிருக்கும், காரணம் சோதோமியர்கள், குறைவான வெளிச்சம் மற்றும் சிலாக்கியத்திற்கு எதிராகவே பாவம் செய்துள்ளனர் என்று கூறுவதின் மூலம் இயேசு சுட்டிக்காட்டினார் (எசேக்கியல் 16:48-63).

இறுதியில் சீஷர்கள் கூறுவதைக் கேட்டும், அவர்களை இழிவாகப் பார்ப்பவர்கள், கர்த்தரையும், பிதாவையும் இழிவாகப் பார்ப்பதாக இருக்குமென ஆண்டவர் நம்முடைய திருத்தூதர்களுக்கு உறுதியளித்தார். இது கர்த்தரால் நியமிக்கப்பட்டு, சுவிசேஷத்தின், சத்தியத்தின் ஊழியர்களென அனுப்பி வைக்கப்படும் அனைவரின் விஷயத்திலும் சந்தேகத்திற்கிடமின்றி உண்மையாகவே இருக்கின்றது.

**ஆமென்!**

# அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள்

I. B. S. A-இன் அன்புக்குரிய நண்பர்கள் சபையாருக்காக மூப்பர்களை மற்றும் உதவிக்காரர்களைத் தாங்கள் தேர்ந்தெடுப்பது தொடர்புடைய விஷயத்திலும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் தாங்கள் செய்யும் அனைத்துக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலும் பொறுப்புணர்வினை முறையாகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அநேகமாக பாராளுமன்ற பிரமாணங்களைக் குறித்து வெகு சிலரே நன்கு அறிந்தவர்களாய் இருப்பதினால், சபைகூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் பாராளுமன்ற பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவது என்பது அன்பற்றதாகவும், ஞானமற்றதாகவும் காணப்படும் என்று ஏற்கெனவே நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். பாராளுமன்ற பிரமாணங்களானது உண்மையில் நல்லவைகளாகவும், ஞானமானவைகளாகவும் மற்றும் பொதுவாய் நன்மை பயக்கிறதாகவும் காணப்படுகின்றது. பாராளுமன்ற பிரமாணங்களின் ஆவியானது, எல்லாவிடத்திலும் பொருந்தக் கூடியதாகும்; காரணம் அவைகள் அனைவருடைய நலனுக்கடுத்தவைகளைப் பாதுகாத்தல் எனும் பொன்னான பிரமாணத்தின் அடிப்படையிலும் மற்றும் குறைந்தபட்ச பிணக்குடனும், தாமதத்துடனும் காரியங்களைச் செய்யும் விதத்திலும் இயற்றப்பட்டவைகளாகும்.

கர்த்தருடைய ஜனங்களைப் பொறுத்தமட்டில், அன்பானது எப்போதுமே முதன்மையான இடத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அன்பானது எப்போதுமே பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருப்பினும், அது நேர்மையான நீதிக்கும் மேலாகச் செய்திடுவதற்கு எப்போதும் சுயாதீனம் உடையதாய் இருக்கின்றது. ஆகையால் கர்த்தருடைய சகோதரர்கள் யாவரும் கொள்கை உட்படாத விஷயத்தில், மற்றவருடைய நலனுக்காக தங்கள் சிறு விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவதற்கு முற்றிலும் விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அன்பும், சந்தோஷமும், சமாதானமும் ஒவ்வொரு சபையிலும் மேலோங்கிக் காணப்பட வேண்டும். இவைகள் சார்புடைய யாவும் மற்றும் தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும் உண்மையாய் இருத்தலுக்கு முழு இசைவுடன் காணப்படும் யாவும் ஆதரிக்கப்பட வேண்டும்.

சமீபத்தில் வந்திட்டதான அநேகம் கடிதங்களில், சபை தேர்ந்தெடுத்தல்கள், முன்மொழிதலுக்கான வழிமுறைகள் முதலானவைகள் குறித்த கேள்விகளும் மற்றும் இன்னுமாக வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் **முன்மொழிதல்** முறைமையினின்று சற்று வித்தியாசமான முறைமையைப் பின்பற்றிடுவது முறையாக இருக்குமா அல்லது இல்லையா என்பது பற்றியும் உள்ள கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான விஷயங்கள் அனைத்திலும் சபையாருடைய விருப்பமே பிரமாணமாக இருக்கும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். கர்த்தர் காரியத்தினைச் சபையினுடைய கரங்களிலேயே விட்டிருக்கின்றார்; மற்றும் சபையின் ஒவ்வொரு சிறுசிறு பாகங்களும், அதன் பகுத்துணர்தலின்படி திவ்விய ஏற்பாட்டினைப் பின்பற்றிடுவதற்கான முழு அதிகாரத்தையும் உடையதாய் இருக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் **முன்மொழிதலை**, வாக்குச்சீட்டு மூலம் முன்மொழிவது மிகவும் நல்லதொரு திட்டமாயிருக்கும்; இதற்கு முதலில் எத்தனை பேர்கள் அவ்வருஷத்திற்கு ஊழியம்புரிய விரும்பப்படுகிறார்கள் என்பது குறித்துத் தீர்மானிக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையாருக்கு இரண்டு மூப்பர்களும், ஐந்து உதவிக்காரர்களும் அவசியம் என்று கருதப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது வாக்குச்சீட்டில் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவனும், தான் முன்மொழிகிற விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்திற்குக் கருத்தூன்றிட வேண்டும். அவன் மூப்பர்களாக தன்னால் முன்மொழியப்படுகிற இரண்டு பேரின் பெயர்களையும் மற்றும் உதவிக்காரர்களாக தன்னால் முன்மொழியப்படுகிற ஐந்து பேரின் பெயர்களையும் எழுதிடலாம். இல்லையேல் அவன் தனது இரண்டு வாக்குகளை (votes) ஒரு மூப்பருக்கும் மற்றும் தனது ஐந்து வாக்குகளை ஓர் உதவிக்காரருக்கும் அல்லது அவன் விருப்பப்படி அந்த வாக்குகளைப் பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த விதத்தில் சபையாரிலுள்ள சிறுபான்மையானவர்கள், மூப்பர்கள் மத்தியில் இடம்பெறுவதற்கு வாய்ப்பினைப் பெற்றிடலாம்.

வாக்குச்சீட்டு பதிவு முடிந்து, கணக்கிட்ட பிற்பாடு, அதிக எண்ணிக்கையில் முன்மொழிதல் வாக்குச்சீட்டினைப் பெற்றிருக்கும் மூப்பர்களுக்கான இரண்டு பேரும் மற்றும் இப்படியாகவே உதவிக்காரர்களுக்கான ஐந்து பேரும் சபையாரின் தெரிவாகக் கருதப்பட

வேண்டும். பின்னர் வாக்களித்தல் (vote) முறையாக இருக்கும். அதிக எண்ணிக்கையில் வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருப்பவர்களுக்கு, கைகளை நீட்டுதல் மூலம் வாக்களித்து ஏகமனதுடன் தேர்ந்தெடுப்பது என்பது பொதுவாகவே திருப்திகரமாயும், பொருத்தமாயும் காணப்படும்.

உங்களுடைய சித்தத்தை எப்படி நிறைவேற்றிடலாம் என்பதல்ல, மாறாக கர்த்தருடைய சித்தம் செய்ய வேண்டும் என்ற கண்ணோட்டத்தில், ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரிக்கு உங்களால் எப்படி முழுமையாய் வாய்ப்பினைக் கொடுக்கவும், அதை நீங்களும்கூடப் பெற்றிருக்கவும் முடியும் என்பதுதான் எப்போதும் நோக்கமாகக் காணப்பட வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். எவ்வகையில் முடிவுகள் அடையப்பட்டாலும், அவைகள் ஒருவேளை பெரும்பான்மையானவர்களின் அல்லது சபையார் அனைவரின் பகுத்துணர்தலைத் திருப்திகரமாய் வெளிப்படுத்துகிறதாய் இருக்குமானால், அப்போது காரியமானது முற்றிலும் நீதியானதாகவும், வேதாகமத்தின் கொள்கைகளுக்கு இசைவானதாகவும் இருக்கும்.

"சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது." சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கு நாடிடுவோமாக. நம்மால் கர்த்தருக்கு நேரடியாய் ஊழியம் புரிய முடியாது, ஆனால் சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் புரிவதன் மூலமும், நம்முடைய பொறுமையையும், அனுதாபத்தையும் மற்றும் அன்பையும் அவர்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலமும், கர்த்தருக்கு மறைமுகமாக நாம் ஊழியம் புரிந்திடலாம்.

---

# அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள்

**His servants shall serve him**

## லூக்கா 8:1-3; 9:57-62; 10:38-42

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்." - மத்தேயு 25:40

இவ்வாராய்ச்சிக்கான ஆரம்ப வசனமானது, இயேசு பேசின சகல பிரசங்கத்திற்கான, திறவுகோலை நமக்கு அளிக்கின்றது. அவருடைய ஒரு செய்தி, தேவனுடைய இராஜ்யம் பற்றின நற்செய்தியாகும். இது இன்றும் நற்செய்தியாகவே உள்ளது. மேலும், கர்த்தருடைய ஜனங்களில் எவரேனும், தேவனுடைய இராஜ்யமே சபைக்கான நம்பிக்கை மற்றும் உலகத்திற்கான நம்பிக்கையின் மையமாகவும், சாரமாகவும் இருப்பதை இன்னமும் கற்றுக்கொள்ளவில்லையெனில், அவர் போதுமானளவுக்கு வேதாகமத்தை வாசித்து, நம்பிக்கைக்கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். யூதர்கள் இராஜ்யத்திற்கு ஆயத்தமாகக் காணப்படாததினால், அவர்கள் அந்த இராஜ்யத்தில், மேசியாவின் துணைவர்களாக இருப்பதிலிருந்து, தேசமாகவே புறக்கணிக்கப்பட்டு விட்டனர். ஆனால், அனைவரும் புறக்கணிக்கப்படவில்லை; ஆகவேதான், இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் எத்தனை பேரோ, அவர்களுக்கு தேவனுடைய புத்திரர்கள் ஆகுவதற்குரிய சுதந்திரத்தை அவர் கொடுத்தார் என்று நாம் வாசிக்கின்றோம்; இந்தச் சுதந்திரத்தை, பெந்தெகொஸ்தே நாளில் வந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் ஜெநிப்பித்தல் வாயிலாக அவர்கள் அடைந்தார்கள்.

### "உண்மையில் இது நற்செய்தியே"

இந்தத் தேவனுடைய புத்திரர்கள், ஒருவேளை உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்களானால், இவர்கள் இயேசுவுடன் காணப்படுவார்கள். அதாவது, இந்தப் பரலோக இராஜ்யத்தில் தேவனுடைய சுதந்தரர்களாகவும், இவர்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகவும் காணப்படுவார்கள். இவர்களுக்கான கனமும், ஆசீர்வாதமும் பெரியதாய் இருக்கும்; ஏனெனில், இவர்கள் தங்கள் ஆண்டவர் போன்றுக் காணப்படுவார்கள், மற்றும் அவர் இருக்கின்ற வண்ணமாக அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைவார்கள். இவைகள் மாத்திரமல்ல. ஒருவேளை இவர்கள் இந்த அன்பின் ஆவியை வளர்த்துக்கொள்வார்களானால், உலகத்தை ஆசீர்வதிப்பதும், சாபத்தை அப்புறப்படுத்துவதும், பாவம் மற்றும் மரணத்தின் சூழ்நிலைகளிலிருந்து மனுக்குலத்தைத் தூக்கிவிடுவதுமாகிய ஆண்டவருடைய மாபெரும் வேலையில், இவர்களும் இணைவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

நிச்சயமாக இது நற்செய்திதான்! இதே நற்செய்திதான் ஆண்டவருடைய பிறப்பின்போது தூதர்களால் அறிவிக்கவும் பட்டது; "தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்கா 2:10). இது, இதுவரையிலும் தேவனுடைய ஊழியக்காரர்களும், ஊழியக்காரிகளுமான சபைக்கு மாத்திரமே நற்செய்தியாய் இருந்துள்ளது. ஆனால், இது சகல செவிடான காதுகள் திறக்கும்போதும், சகல குருடான கண்கள் திறக்கும்போதும், அனைவருக்கும் நற்செய்தியாகக் காணப்படும். மேலும், அவர்கள் மேசியாவின் இராஜ்யத்தினுடைய மகிமைகளைக் காண்பார்கள்.

இயேசு இப்படியாக இராஜ்யத்தை அறிவித்து வந்தபோது, அவர் யாரிடமும் பணத்தை வருந்தி கேட்கவில்லை. அவர் எவ்விதத்திலாவது பணத்தைக் கெஞ்சிக் கேட்டார் அல்லது பணத்தைத் திரட்டினார் என்ற கருத்து நமக்கில்லை. இதை வைத்தே, கிறிஸ்துவின் பின்னடியார்களும் பணத்தைக் கேட்காமல், தங்களுக்கு உள்ளதை அல்லது மற்றவர்களால் தானாக விரும்பிக் கொடுக்கப்படும் பணங்களையே பயன்படுத்த வேண்டும் என்று அநேகர் எண்ணுகின்றனர். எனினும், இது ஒவ்வொருவரும் தனக்குள் முடிவெடுக்க வேண்டிய காரியமாக உள்ளது.

சொஸ்தப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர், மகதலேனா மரியாள் ஆவாள்; இவளிடமிருந்து கர்த்தர் ஏழுப் பிசாசுகளைத் துரத்தினார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இன்று மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான விடுதிகளில் காணப்படும் அநேகரின் நிலையில்தான் இந்தப் பாவப்பட்ட ஸ்திரீயும் காணப்பட்டிருந்தாள். இவளுக்குப் பிரச்சனை உடலில் இல்லை; மாறாக, இவளை ஆட்கொண்டிருந்த ஏழு விழுந்துபோன தூதர்களின் தொல்லையே இவளுக்கான பிரச்சனையாக இருந்தது. வேதாகமத்தின் செய்தியை நம்புகின்றவர்கள், விழுந்துபோன தூதர்கள்

இருக்கின்றார்கள் என்பதை நம்ப வேண்டும். அதாவது, இந்த ஆவிக்குரிய ஜீவிகளானது, இவைகளால் முடிந்தமட்டும் மனுக்குலத்தின் மீது தீமையான செல்வாக்குக் கொண்டிருக்கின்றது என்றும், இவைகள் மனதின் கட்டுப்பாட்டினால் எதிர்த்துப் போராடப்பட வேண்டும் என்றும் நம்பவேண்டும். மரியாள் ஆஸ்திகளுள்ள ஸ்திரீ போன்று தெரிகின்றது. பிசாசுகளின் வல்லமைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட மரியாள், இயேசுவுக்கு மிகவும் நன்றியுடன் காணப்பட்டபடியால், இயேசுவுக்கு ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னால் முடிந்தமட்டும் ஊழியம் புரிந்திட்டாள். வேறு கனமிக்க ஸ்திரீகளும் இயேசுவுக்கு உதவிச் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ணட்டும்"

இயேசு மிகுந்த வரங்களையுடையவராக இருக்கின்றார் என்றும், அவருடைய ஜீவியத்தின் தேவைகளெல்லாம் சந்திக்கப்படுகின்றபடியால், அவர் ஐசுவரியவானாக இருப்பார் என்றெண்ணி, சிலர் அவரிடத்திற்குக் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் ஒருவன், கர்த்தரிடம், "ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்" என்று கூறினான். ஆனால், தம்மை (இயேசு) வரவேற்பதற்கு அநேக வீடுகள் தமக்கு இருந்திட்டாலும், தமக்கெனச் சொந்தமாக வீடு இல்லை என்றும், தம்மிடத்தில் எந்த ஆஸ்தியும் இல்லையென்றும் தெரிவித்தப் போதோ, இவனுடைய ஆவல் தணிந்துப் போய்விட்டது போன்று தோன்றுகின்றது. "இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்" (லூக்கா 9:58). இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் காணப்படும் ஒரு தலைவரைப் பின்பற்றுவதற்கு மிகவும் உண்மையுள்ளவர்களே ஈர்க்கப்படுவார்களே ஒழிய, மற்றபடி எவரும் ஈர்க்கப்படுவதில்லை. ஆஸ்தி/ஐசுவரியம் அநேகரைக் கவர்கின்றது. ஆனால், தரித்திரம் சிலரையே கவர்கின்றது.

இன்னொருவன் இயேசுவினிடத்தில் பின்வரும் அர்த்தத்தில் கூறுகின்றான், "ஆண்டவரே, உம்முடைய சீஷர்களில் ஒருவனாக என்னை நீர் எண்ணிக்கொள்ள வேண்டும்; ஆனால் எனக்குத் தகப்பன் இருக்கின்றார், மேலும் அவர் மரித்துப்போவது வரையிலும், அவரோடு நான் காணப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன்." அதற்கு இயேசு கொடுத்த பதிலானது, பரம பிதாவின் நோக்கங்களுக்காக, நாம் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஊழியத்திற்கும் உரிய முக்கியத்துவத்தை நமக்கு வெளிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்" (லூக்கா 9:60).

## "விழிப்பதற்கு நேரமாகி விட்டதல்லவா?"

தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி முழு உலகமும் ஏற்கெனவே மரித்துவிட்டதாகக் காணப்படுகின்றது. ஆதாமின் மீது செலுத்தப்பட்ட மரணத் தீர்ப்பானது, அவருடைய அனைத்துப் பிள்ளைகளையும் உள்ளடக்கியது. ஜீவன் கொடுப்பவராகிய இயேசுவுடன் தற்காலத்தில் தொடர்புக்குள் வந்தவர்களையே, வேதவாக்கியங்கள் ஜீவனுடையவர்கள் என்று தெரிவிக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களிடமிருந்து வித்தியாசமான கண்ணோட்டத்தில் ஜீவனைப்பார்க்க வேண்டும் என்று ஆண்டவர் சுட்டிக்காட்டுகின்றார். பூமிக்குரிய காரியங்களைக் கவனிப்பதற்கு, உலகத்தில் அநேகர் காணப்படுகின்றனர்; இராஜ்யத்தை அறிவிப்பதற்கும், இராஜ்ய வகுப்பாரைச் சேர்ப்பதற்குமான மாபெரும் மற்றும் மிக முக்கியமான வேலையைச் சிலரே செய்ய முடியும்.

இதுதான் உலகத்திலேயே மிக முக்கியமான வேலையாகும். காரணம், இது தேவனுடைய வேலையாக இருக்கின்றது. மேலும், இவ்வேலையில் ஈடுபடுகின்றவர்கள், தேவனுடன் உடன் வேலையாட்களாகக் காணப்படுகின்றனர். தேவனுடைய இராஜ்யமே பிரசங்கிக்கப்பட வேண்டுமென்றும், இதற்காகவே பலிச் செலுத்த வேண்டுமென்றும், மீண்டுமாகக் கவனிப்போமாக. அந்தோ பரிதாபம்! இந்தப் பிரசங்கம் இந்தக் காலத்தில் மிகவும் குறைவாகக் காணப்படுவது எவ்வளவு விநோதமாகத் தோன்றுகின்றது! வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், இயேசுவும், அவருடைய சீஷர்களும் கொடுத்திட்ட சுவிசேஷச் செய்தியானது தொலைந்துப் போய்விட்டது, மறக்கப்பட்டுவிட்டது, புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ஆண்டவரும், அவரால் நியமிக்கப்பட்டவர்களும் முதலாம் வருகையின் காலத்தில் பிரசங்கித்த அதே செய்தியைப் பிரசங்கிப்பதற்குரிய மாபெரும் சிலாக்கியத்திற்கு, வேத மாணவர்கள் அனைவரும் விழித்துக்கொள்வதற்கு இது காலம் அல்லவா?

## "கற்கப்பட வேண்டிய பாடங்கள்"

"பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் **1962--**

முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்" (லூக்கா 9:61-62). நாம் மற்றவர்களை நியாயம் தீர்க்கக்கூடாது. மாறாக, நாம் ஒவ்வொருவரும் நம்மையே நிதானித்துக்கொள்ள வேண்டும். எனினும், அநேகர் பின்னாகத் திரும்பிப்பார்த்து, ஜீவியத்திற்கான சமுதாய வசதிகளுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்வது மாத்திரமல்லாமல், இதோடு கூட உலகத்தின் அநேக இன்பங்கள், அற்பத்தனமான காரியங்கள் மற்றும் ஆடம்பரங்களில் பாய்கின்றார்கள்/மூழ்குகின்றார்கள் அல்லவா? இக்கேள்வி சோதித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நம்மில் எத்தனை பேரை, கர்த்தர் இராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள் என்று கருதுவார்? சமீபத்தில் வாசலருகே வந்துள்ளதென நாம் நம்பும் மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் கர்த்தரோடு கூட இருப்பதற்கென, நம்மில் எத்தனை பேரைத் தகுதியுடைவர்கள் என்று கர்த்தர் கருதுவார்? இங்கு ஒரு கொள்கைக் காணப்படுவது போன்று தோன்றுகின்றது. இராஜ்யத்தின் மீதான கவனத்தில் மூழ்காமலும், அதன் ஆசீர்வாதங்களை விரும்பாமலும், மற்றவர்கள் மீது ஆசீர்வாதங்களை வழங்குவதில் பங்கடைய விரும்பாலும் இருப்பவர்கள், மனுக்குலத்திற்குச் செய்யப்பட வேண்டும் என்று அவர் வடிவமைத்துள்ள வேலையை நிறைவேற்றுவதற்கென உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரமாய்க் காணப்படமாட்டார்கள்.

மார்த்தாள் மற்றும் மரியாள் சம்பவத்துடன் பாடம் நிறைவடைகின்றது. இருவரும் இரட்சகரை அன்புகூர்ந்தார்கள். ஆனால், இவர்கள் இருவரும் தங்களது அன்பை வித்தியசமாக வெளிப்படுத்தினார்கள். மார்த்தாளையும், கர்த்தருடைய சௌகரியத்திற்காக உணவை அளிப்பதில் அவள் கொண்டிருந்த கவனத்தையும் இயேசு நிராகரிக்கவில்லை; மாறாக, ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளைக் கேட்கும்படிக்கு மரியாளை தம் பாதத்தண்டைக்கு ஈர்த்திட்ட, மரியாளின் ஆவியையே அவர் விசேஷமாகப் பாராட்டினார். மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துக்கொண்டாள் என்று இயேசு கூறினார். ஆகவே, நாம் அவருடைய வார்த்தைகளுக்கு உண்மையான கவனம் செலுத்தும் போதும், அவருடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கும், வழிநடத்தப்படுவதற்கும் நாடும்போதும், அவர் விசேஷமாகப் பிரியங்கொள்வார் என்பதை, ஆண்டவருக்காக நாம் ஊழியம் செய்கையில், நாம் மனதில் வைத்துக்கொள்வோமாக.

இன்றைய பாடமானது, நமது கர்த்தருடைய ஊழிய நாட்களின் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏறெடுக்கப்பட்ட விசேஷமான ஊழியங்கள் பற்றியதாகும். அங்கீகரிக்கப்படத்தக்கதான ஊழியங்களானது, அங்கீகரிக்கப்படத்தக்கதான துதியைப்போன்று, கர்த்தரிடத்தில் கொண்டிருக்கும் அன்பின் பலனாக வந்திட வேண்டும். அவரை அதிகமாய் அன்புகூருகின்றவன், அதிகமாய் ஊழியம் செய்வான். இவ்வகையான ஊழியங்களைச் சம்பளங்களால் விலைக்கு வாங்கவும் முடியாது, அதேசமயம் இதைத் துன்புறுத்தல்களால் தடைப் பண்ணவும் முடியாது.

கர்த்தர் இயேசுவுக்காகத் தனிப்பட்ட விதத்தில் ஊழியம் புரிவதற்கான சிலாக்கியம் பெற்றவர்கள், நிச்சயமாக உன்னதமான சிலாக்கியமே அடைந்துள்ளனர். எனினும், கர்த்தரினால் தம்முடைய சகோதரர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்குச் செய்யப்படும் ஊழியங்கள், உண்மையில் கர்த்தருக்குச் செய்ததாகவே இருக்கின்றது என்று ஆதார வசனத்தில் காணப்படும் பொதுவான கொள்கையானது உண்மையே ஆகும். அவ்வூழியத்தைக் கர்த்தர் தமக்குச் செய்ததாகவே ஏற்றுக்கொள்கின்றார். இக்கருத்து எத்துணை விலையேறப்பெற்றக் கருத்தாகும்! கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய் நம்புகின்றவர்கள், தங்களுடைய சகோதரர்களுக்குப் புரிந்திடும் ஊழியங்களில் வைராக்கியமாய்க் காணப்பட வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, கிறிஸ்து நம் அனைவருக்காகவும் மரித்ததுபோன்று, நாமும் சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய ஜீவியங்களை/ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

**ஆமென்!**

---------------------------------------------

**--1963--**

# மார்த்தாள் மற்றும் மரியாள்

**Marthal and Mary**

மார்த்தாள், மரியாள் இருவரும் இரட்சகரை நேசித்தனர். ஆனால் அவர்கள், தங்கள் அன்பை வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்தினர். தம்முடைய தேவையை பூர்த்தி செய்வதற்காக மார்த்தாள் ஒரு சமையல்காரியாக ஜாக்கிரதையுடன் செயல்பட்டதையோ அல்லது மார்த்தாளையோ கர்த்தர் இயேசு கண்டனம் பண்ணவுமில்லை. மாறாக, ஆச்சரியமான ஜீவ வார்த்தைகளைக் கேட்பதற்கு, மரியாளை அவருடைய பாதத்திற்கு அருகில் கொண்டு வந்து சேர்த்த அவளது ஆவியை விசேஷமாக மெச்சிக்கொண்டார் கர்த்தர். இவளுடையதே நல்ல பங்காக இருந்தது என கர்த்தர் கூறினார். ஆகையால், கர்த்தருக்காக நாம் செய்யக்கூடிய பணியில்/ஊழியத்தில் நாம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டியது என்னவெனில், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உண்மையான கவனம் கொடுத்து, அவருடைய பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டு, அந்த ஆவியினால் வழிநடத்தப்படுதலை எதிர்நோக்கி இருப்பவர்கள் மேலேயே விசேஷமாகப் பிரியப்படுகிறார் என்பதாகும்.

<u>1908 Convention Report:</u>

நமது கர்த்தர், மார்த்தாள், மரியாள் வீட்டிற்கு அழைக்கப்படும்போதெல்லாம், மரியாள், கற்றுக் கொள்ளும்படி இயேசுவின் பாதத்தண்டையில் அமர்ந்திருப்பார். மார்த்தாளோ, தனக்கு நலம் என்று கண்ட அல்லது தோன்றின காரியத்தைச் செய்ய சென்றிருப்பார். இது கர்த்தரை பிரியப்படுத்துமா என்று அவள் கேட்கவில்லை. அது அவளுக்கென்று நியமிக்கப்பட்ட கடமை என்று அவள் நினைத்தாள். மார்த்தாளுக்கு மரியாளின் கிரியை பிடித்தமில்லாதிருந்தது. இப்படியே உட்கார்ந்திருப்பதைத் தவிர மரியாளுக்கு வேறு வேலையே இல்லை, என்னோடு சேர்ந்து எனக்கு உதவியாக இருக்கலாம் அல்லவா, இந்த விஷயத்தைக் குறித்து மார்த்தாள் கர்த்தரிடத்தில் நான் போய் கூறுகிறேன் என்றாள். இதைக்குறித்து மார்த்தாள் கர்த்தரிடத்தில் பேசினபோது, அவர் அதை மிகவும் பொறுமையாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

"மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காக கவலைப்படுகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டு எடுப்படாத நல்ல பங்கினைத் தெரிந்துக்கொண்டாள்."

தற்போது இவ்வுலகில் வெகு சொற்ப மரியாள்களே உள்ளனர். ஆனால் மார்த்தாளைப் போல ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். மரியாளைப் போல் உள்ளவர்கள் "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." என்று 2 தீமோத்தேயு 2:15 ல் அப்போஸ்தலர் கூறின எச்சரிப்புக்கு கவனம் கொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

மார்த்தாள் வகுப்பாரோ, இதுவரை என்றுமே அக்கறையே இல்லாதது போல், "உலகத்தை நம் கரங்களில் பெற்றிருக்கிறோம், ஆகையால் அதை அப்படியே மாற்ற வேண்டும்" என்று கூறுகின்றனர்.

அதற்குக் கர்த்தர் "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காக கவலைப்படுகிறாய்" என்று கூறுகிறார்.

மார்த்தாள்: "ஆம் கர்த்தரே, இந்த உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவித்து மாற்ற நீர் எண்ணவில்லையா?" என்று கேட்கின்றனர்.

கர்த்தர்: "ஆம் மார்த்தாளே"

"நல்லது தான், அப்படியென்றால் ஏன் அது இன்னும் நிறைவேறவில்லை?

**--1964--**

" மார்த்தாளே, என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல: உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று" கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகையால் தேவனுடைய வழிகளே சிறந்தது என நிரூபிக்கப்படும்.

------------------------

## To Serve or to Listen

### மார்த்தாள் மற்றும் மரியாள்

கர்த்தர் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும், மார்த்தாள் அவரை சந்திக்க எதிர்கொண்டு ஓடினாள். அச்சமயத்தில் மார்த்தாள் அவரை வரவேற்பதை தவிர்த்து விட்டு, அவளது முதல் வார்த்தைகளே கடிந்துகொள்ளும் வண்ணம் புறப்பட்டது. "நீர் இங்கு இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்." என்றாள். அதைத் தொடர்ந்து வந்த வாக்கியங்களில் கர்த்தர் மேல் அதிக விசுவாசம் கொண்டிருந்தவளாக இருந்தாள்.

இவள் ஒரு விசுவாசியாயிருந்தாலும், கர்த்தருடைய ஞானத்தையும், விதங்களையும் உணர்ந்துக் கொள்வதில் குறைவு பெற்றவளாக இருந்தாள்.

ஆனால் மரியாளின் கிரியையோ வித்தியாசமாக இருந்தது. மரியாள் கண்டிக்கவோ திட்டவோ செய்யாமல், கர்த்தரைக் கண்டதும் நேராக அவருடைய பாதத்தில் விழுந்து, கண்ணீர் விட்டாள்.

மார்த்தாளுடைய பேச்சு, கர்த்தரைக் குற்றப்படுத்தும் வண்ணமாக இருந்தது.

மரியாளின் அழுகையும், அதோடுகூட அங்கிருந்தவர்களின் துக்கமுமே கர்த்தரை ஆவியில் கலங்கி கண்ணீர்விட வைத்தது.

மரியாளின் ஆவிக்குரிய அர்ப்பணிப்பின் சிந்தையிலிருந்து மார்த்தாளின் சிந்தை வேறுபட்டிருந்தது.

லூக்கா 10:38-42 ல் நடந்த சம்பவம்:

தங்கள் வீட்டிற்கு விருந்தாளியாக வந்த கர்த்தர் இயேசுவின் தற்காலிகமான தேவைகளை சந்திப்பதில் எவ்வித தவறும் இல்லை. இங்கு பிரச்சினை என்னவெனில், செய்யும் அந்த பணியில், மார்த்தாள் வெளிப்படுத்திய குணலட்சணமே பிரச்சினையாக இருந்தது.

மார்த்தாள், "ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என கர்த்தரைக் குற்றப்படுத்தினாள்.

கர்த்தர் இந்த சூழ்நிலையை கையாள திறமை உள்ளவர் என்பதில் விசுவாசக் குறைவு இருந்ததை இங்கு சுருக்கமாகக் காணலாம். இந்த சூழ்நிலையில் மரியாள் ஒரு வார்த்தையுமே பேசாதிருந்ததையும் காணலாம். பிறகு கர்த்தர் மிகவும் கனிவாக அதே சமயம் நன்கு உணர்த்தக்கூடிய வகையில் "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காக கவலைப்படுகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டு எடுப்படாத நல்ல பங்கினைத் தெரிந்துக்கொண்டாள்."

மார்த்தாள் உணவு தயாரித்தது குறித்து கர்த்தர் அவளை கடிந்துக் கொள்ளவில்லை; அது ஒரு தேவையான வேலையே; மாறாக "கவலைப்பட்டு" "துக்கப்பட்டு" செய்யக் கூடிய குணத்தையே தவறு என்று கூறுகிறார். "நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் "பாடுபோதும்" என்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தமானது, கவலையினின்று விடுவிக்கப்பட விசுவாசிகளுக்கென்று அருளப்பட்டதாகும் (மத்தேயு 6:34). அதுபோலவே,

--1965--

அப்.பவுல் "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என எச்சரிக்கிறார் (பிலிப்பியர் 4:6 RSV). விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள், நாம் பயன்படுத்த நமக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இயேசு, மரியாள் "நல்ல பங்கைத் தெரிந்துக் கொண்டது" (அ) ஒரு உயர்ரக பணியைத் தெரிந்துகொண்டதை கவனித்து, மார்த்தாளின் சேவையை மரியாளின் சேவையோடு வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறார். இந்த அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தில், ஆவிக்குரியவர், தற்காலிகமான தேவைகளைச் சார்ந்தே உள்ளனர். (உதாரணம்) வேதத்தை தியானிக்கவோ அல்லது சாட்சி பகரவோ நமக்கு தற்காலிகமான போஷாக்கு அவசியமாகவே உள்ளது. ஆவிக்குரிய மற்றும் மாம்சீக தேவைகள் இரண்டுமே முக்கியமானது. இருந்தபோதிலும், ஒரு புதுசிருஷ்டியானவர், தன்னுடைய ஜீவியம் செழிக்கவும், வளர்ச்சி அடையவும் கூடுமானமட்டும் பூலோகக் கடமைகளை தன்னுடைய ஒவ்வொரு முயற்சியிலும் குறைத்துக் கொள்வது கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். இது நாம் சீர்தூக்கிப் பார்க்கவும், முதன்மை ஸ்தானம் கொடுக்கக் கூடிய விஷயமாகவும் இருக்கிறது. நம்முடைய நேரங்களை நாம் எவ்விதம் செலவழிக்கிறோம் என்பதிலிருந்து, கர்த்தரோடு கூட நடந்து செல்வதில் நாம் எங்கு இருக்கிறோம் என்பது வெளியாகும்.

போதகருடனான மரியாளின் தொடர்பு குறித்துப் பார்க்கும்போது. மேலும் நாம் சிந்தையில் வைக்க வேண்டியது என்னவெனில், இயேசுவோடு ஐக்கியம் கொண்டிருப்பது, கடுமையான வீட்டு வேலை அல்லது அவ்வப்போது ஏற்படும் சிறு வேலைகளிலிருந்து நம்மை விடுவிக்கும் ஒரு சுலபமான அடைக்கலமாகும் என்பதே.

வேதவாக்கியங்களின்படி, "இயேசுவின் வார்த்தைகள் ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபிரெயர் 4:12) "அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்." (யோவான் 6:60)

அவருடைய பரிபூரண நிலையின் விளைவாகவும், பரலோகப் பிதாவுக்குக் கீழ்ப்படிந்ததன் விளைவாகவும் இயேசுவுக்குக் கிடைத்த ராஜரீக பிரசன்னம், அவரோடு உடனடியாக ஐக்கியம் என்ற வட்டத்திற்குள் வருவதற்கு சிலருக்கு சற்று சாதகமற்ற சூழ்நிலையாகவே உள்ளது. மத்தேயு 8:8 ல், ஒரு நூற்றுக்கு அதிபதி கர்த்தரிடம் "நீர் என்னுடைய வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரனல்ல." என்று கூறினார்.

தேவனுடைய சித்தம் செய்வதற்கு புறம்பே ஜீவிப்பவர்களைப் பார்க்கிலும், நீதியின் தரத்திற்குக் கீழ்ப்படிபவர்கள் இரட்சகரின் தோழமையை சந்தோஷமாக எண்ணுவதை நாம் எளிதில் புரிந்துக் கொள்ளலாம். நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தில் மேற்கொள்ளும்போது,

நாம் தெய்வீக சித்தத்தின் இசைவுக்குள் நாம் வரும்போது, நீதியன் உயர்தரத்தில் அதிகம் அதிகமாக சுகமாய் இருப்பாதை நாம் காணலாம்.

மார்த்தாளோடு தொடர்பு கொண்ட விதத்தில் கர்த்தரின் அனுகுமுறையிலிருந்தும் நாம் பாடம் கற்றுக் கொள்ளலாம். யதார்த்தமாக, அதே சமயம் மிக ஆழ்ந்த முறையில், தெளிவான ஆலோசனையோடு மென்மையான கடிந்துகொள்ளுதலைக் கலந்து மார்த்தாளிடம் உத்தரவு கூறினார். இரட்சகரின் வார்த்தைகள், அவர்களுடைய தன்மைக்குக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இது நாமும் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும்போது தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய ஒரு நல்ல உதாரணமாக உள்ளது.

மார்த்தாள் மற்றும் மரியாள் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடம்:

இந்த இடுக்கமான பாதையில் நாம் செய்யும் எவ்வித பணியானாலும் "கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய்ச்" செய்ய வேண்டும். அநாவசியமான தற்காலிக பொறுப்புகளை குறைத்துக் கொண்டு, ஆவிக்குரிய பணிகளை அதிகரிக்க வேண்டும்.

நாமும் நம்முடைய ஜீவியத்தை இவ்விதமாக ஒழுங்குபடுத்தி, சரியான மனநிலையோடு, கர்த்தருடைய பெரிதான தூண்டுதலில் ஒவ்வொரு வாய்ப்பிலும் மகிழ்ந்து களிகூறுவோமாக.

**--1966--**

------------------------------

R 5374

# காலம் சமீபித்திருக்கிறது

## THE DAYS ARE AT HAND

தேவனுடைய தெய்வீகத் திட்டமானது "கடந்தோடுகிறவன் வாசிக்கும்படியாக, பலகைகளில் தீர்க்கமாக வரை" என்று தீர்க்கதரிசியாகிய ஆபகூக்கிற்கு தரிசனமாக காண்பிக்கப்பட்டு, அவற்றை எழுதிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டான்(லீசர் மொழிபெயர்ப்பு). முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக்காத்திரு. அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை".

தேவனுடைய தெய்வீகத் திட்டமானது அனைவருக்கும் நீண்டகால தாமதமாவதைப்போல தோன்றுகிறது. பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியானது பரலோகப்பிதா மிகவும் மந்தமாக செயல்படுகிறார் என நினைக்கக்கூடும். அநேகர் ஆபிரகாமின் வித்து சம்பந்தமான விசுவாசத்தை இழக்கக்கூடியவர்களாகவும், மேலும் ஆபிரகாமினிடத்தில் தேவன் செய்த வாக்குத்தத்தத்தை அவர் மறந்துவிட்டார் எனவும் நினைக்கக்கூடும். தேவனுடைய ஜனங்களுக்கும் இது போன்றே ஏமாற்றங்கள் வந்திருக்கின்றன என நாம் அறிகிறோம். யூதர்களும் தங்களுடைய எதிர்பார்ப்புகளில் ஏமாற்றமடைந்தார்கள். இலவோதிக்கேயா காலத்திலுள்ள கிறிஸ்தவர்களும் எதை எதிர்பார்ப்பதென்ற தெளிவான புரிந்துகொள்ளுதலின்றி, முதலாவதாக ஏமாற்றமடைந்தனர்.

ஆதிகால சபையின் உபத்திரவங்களின்போது, உபத்திரவப்படுகிற அனைவரும் சீக்கிரமே பிரவேசிப்பார்கள் என நம்பப்பட்டது. இராஜ்யமானது மிக அருகாமையில் உள்ளது என அவர்கள் நினைத்தனர். அப்போது ஏமாற்றமடைந்தவர்களில் சிலர் நம்பிக்கையுடன் தொடர்ந்து காத்திருந்து ஜெபித்தனர். மற்றவர்களோ, சபையானது தன்னுடைய மகிமையை அடையும் நேரம் இதுவே என பிரகடனப்படுத்தி, மேசியாவின் இராஜ்யம் இப்போதே உள்ளது எனவும், மேசியாவின் பிரதிநிதிகளானவர்கள் அவரையே பிரதிபலித்து, சிங்காசனத்தின்மேல் அமர்ந்து, உலக இராஜ்யங்களை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவார்கள் எனக்கூறி மாபெரும் போப்பு அமைப்பை ஏற்படுத்தினர். அவர்கள் எதிர்பார்த்த நேரத்தில் மேசியா வராததால் இம்மாதிரியான செயல்களுக்குள் வழிநடத்தப்பட்டார்கள். மேலும் வேதத்தில் முன்னறிவிக்கப்பட்ட அவருடைய வருகையையும் ஆளுகையையும் தாங்களே நிறைவேற்ற வேண்டுமென எண்ணினர்.

**பிரபலமற்ற தீர்க்கதரிசன கால அம்சங்கள்**

இது அநேக வகைகளில் பேரழிவைக் கொண்டுவந்தது. இது கிறிஸ்தவமண்டலத்தையே "குடிவெறியுள்ளவர்களாக்கியது" (வெளி17:2). இன்றைக்கும் அநேகர் இம்மனக் குழப்பத்திலேயே இருக்கின்றனர். சிலர் இந்த இருளிலிருந்து வெளியேறினாலும், மற்ற தவறுகளினால் இடறி விழுகின்றனர். பெரும்பான்மையானோர் தீர்க்கதரிசனத்தின் மேலான எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். தேவன் இவை எல்லாவற்றையும் முன்னறிந்தவராக, அவருடைய தெய்வீக விஷயங்களில் அவர்கள் தலையிடமுடியாது என்று அவர்களுக்கு முன்னறிவித்தார். நம்முடைய கர்த்தர் நாசரேத் ஊரில் பிறந்ததினால், அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என அநேகர் ஏற்றுக்கொள்ளாமல், அவர்மீது தவறான அபிப்பிராயத்தை கொண்டிருந்ததுபோல, இவர்களும், தீர்க்கதரிசனங்களிலிருந்தாவது, அல்லது மேசியாவினுடைய இரண்டாம் வருகை சம்பந்தமான ஏதொன்றிலிருந்தாவது நன்மை வரக்கூடுமோ ? என கூறுகின்றனர். இவர்கள் இரண்டாம் வருகையைக்குறித்து வெளிப்படையாக அறிவித்தாலும், மாயமான ஊழியமே செய்கின்றனர். சீயோனை திரும்பக்கட்டுதலும், எருசலேமை மறுசீரமைப்பதும் தீர்க்கதரிசனங்களில் எழுதப்பட்டிருந்தாலும் அவைகள் மனிதருடைய கலைநயமிக்க கனவுகளே என்கின்றனர்.

இவ்வகையில் இவர்கள் அவற்றை பரிகாசம் செய்கின்றனர். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது நிறைவேற்றப்படவேண்டிய முன்னுரைக்கப்பட்ட வேலையைக் குறித்தான, வேதாகமத்தின் எல்லாப் பகுதிகளையும் எதிர்க்கும் ஒரு மனநிலைக்குள் இருக்கின்றனர், நமக்கோ, தரிசனம் தாமதித்தாலும், நாம் நம்முடைய விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும் என கர்த்தர் கூறுகிறார். ஏனெனில் முடிவிலே அது விளங்கும், பலரால் கேட்கப்படும்படி வெளிப்படுத்தும், அது பொய் சொல்லாது, அப்போது அது சத்தியமாக காணப்படும். தேவனுடைய தெய்வீகத் திட்டமானது பலகைகளில் தீர்க்கமாக வரையப்பட்டு, கடந்தோடுகிறவன் மிகவும் எளிமையாக வாசிக்கும்படி செய்யப்படவேண்டும். ஆனால் தூங்குகிறவர்களால் அதை வாசிக்கமுடியாமல் போகும். கள்ள போதனைகளினால் வெறிகொண்டிருக்கிறவர்களும், பாவிகளுடைய வழிகளில் நிற்பவர்களும் அதை வாசிக்கமுடியாமற்போகும். ஆனால் போதிக்கப்படத்தக்க சுத்தமான இருதயமுள்ளவர்களாக ஓடுகிறவர்களால் அதை வாசிக்கமுடியும்.

**கர்த்தருக்குக் காத்திரு**(Rest in the Lord)

ஏற்றகாலத்தில் இத்தரிசனம் தெளிவாக்கப்படும். உபதேசங்களை வாசித்தறிவதுபோல, அதே துல்லியமான நிச்சயத்தன்மையோடு காலதீர்க்கதரிசனங்களை வாசித்தறியமுடியாமற்போகக்கூடும். ஏனெனில் அடிப்படை

உபதேசங்களைப்போல காலங்கள் வேதத்தில் உறுதியாக குறிப்பிடப்படவில்லை. நாம் இன்னும் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இருந்தபோதிலும், நாம் நம்பிக்கை மற்றும் விசுவாசமில்லாதவர்களாக இல்லாதபடிக்கு, விசுவாசத்துடன் காத்திருக்கிறோம். அக்டோபர் 1914ல் சபையானது மகிமையடையவில்லை என பிறகு காண்பிக்கப்படும்போது, தேவசித்தம் எதுவாயினும் அதில் மனநிறைவுள்ளவர்களாக இருக்க முயற்சிப்போம். பந்தயப்பொருளை நோக்கி பந்தயசாலையில் ஓடிக்கொண்டிருக்கிற அநேகர், துல்லியமான வருடத்தை நிரூபிக்க முடியாவிட்டாலும், அல்லது இன்னும்அநேக வருடங்களைக் கொண்டதாயிருந்தாலும், தரப்பட்ட காலக்கணக்கிற்காக தேவனுக்கு நன்றி செலுத்துபவர்களாயிருப்பார்கள் என நாம் நம்புகிறோம். காலக்கணக்கு ஒரு ஆசீர்வாதமானது என நாம் நம்புகிறோம். வழக்கத்திற்கு மாறாக, அது விடியற்காலையில் நம்மை சில நிமிடங்களுக்கு அல்லது சில மணிநேரங்களுக்கு முன்னரோ எழுப்பிவிடுமாயின், உத்தமும் நன்மையுமானதே! அவ்வாறு விழித்திருப்பவர்களே ஆசீர்வாதத்தைப் பெறுவர்.

1915ம் வருடம் சபைக்கான மகிமையின் பாதை இல்லாமலோ அல்லது உபத்திரவத்தின் காலம் இல்லாமலோ போய்விடுமானால் சிலருக்கு அது பேராபத்தாக இருக்கும். நமக்கோ அவ்விதமாக இருக்காது. 1915ம் வருடத்திற்கு முன் பூமிக்குரிய நிலைமையிலிருந்து ஆவிக்குரிய நிலைமைக்கு நாமெல்லாரும் மாறியிருந்தால் அதுவே நம் மகிழ்ச்சி, இது நம் எதிர்பார்ப்பு. ஆனால் இது கர்த்தருடைய சித்தமாயிராவிட்டால், பின் இது நம்முடைய சித்தமாயும் இராது. தேவ வழிநடத்துதலின்படி 25 வருடங்களுக்கு பின்பு அந்நேரம் வருமாயின், அதுவே நமது சித்தமாயுமிருக்கும். இவ்விஷயம், தேவகுமாரன் பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதையும், குமாரன்தாமே நம் சந்ததியினரின் மீட்பர் என்பதையும் மாற்றாது. மேலும் அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் எனவும், தமது மணவாட்டியாக சபையை தெரிந்தெடுத்துவருகிறார் என்பதையும் மாற்றாது. மேலும் அந்த வரிசையின் அடுத்தபடியாக, மகிமையுள்ள இராஜ்யத்தை இந்த மாபெரும் மத்தியஸ்தரது கரங்களினால் ஸ்தாபித்து, அந்த மத்தியஸ்தம் பண்ணும் அவரது ஆளுகையில் பூமியின் முழு குடும்பங்களையும்அதுசமயம் ஆசீர்வதிப்பார். இவ்வுண்மைகள் நிலைத்திருக்கும். ஆனால் இராஜ்யம் ஸ்தாபனத்துக்கான நேரத்தில் மட்டுமே சில வருடங்கள் வித்தியாசம் இருக்கலாம்.

அக்டோபர்1915 கடந்துபோய், பின் நாமும் இவ்வுலகத்திலே இன்னும் இருந்தாலும், அல்லது நிகழ்வுகள் தற்போது இருப்பதைப்போன்றே போய்க்கொண்டிருக்குமானால், அநேக பிரச்சனைகளை உலகமானது தீர்க்க முற்பட்டுக் கொண்டிருக்குமானால், மகா உபத்திரவக்காலத்தின் எந்தவொரு சாட்சியும் இல்லாமல் இருக்குமானால், மேலும் பெயர்க்கிறிஸ்து அமைப்புக்கள் ஒன்றிணையாமல் இருக்குமானால், நாம் யூகித்திருக்கிற காலக்கணக்கில் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து வெளியே இருந்திருக்கிறோம் என ஆதாரப்பூர்வமாகச் சொல்லலாம். அம்மாதிரியான நிகழ்வில், இன்னுமுள்ள தீர்க்கதரிசனங்களை நாம் நோக்கிப்பார்த்து, எங்கே தவறு நேர்ந்திருக்கிறது என கண்டறியலாம். அப்படி நேரிடும் பட்சத்தில், சரியான நேரத்தில் தவறான காரியத்தை நாம் எதிர்பார்த்திருக்கிறோம் என யோசிக்கலாமா? கர்த்தருடைய சித்தம் ஒருவேளை இதை அனுமதித்திருக்கலாம். நம்முடைய மாறுதல் சமீபித்திருக்கிறது என்பதே சபையாக நம்முடைய எதிர்பார்ப்பாகும். சபையானது மகிமையடையும்வரை, திரும்பக்கொடுத்தலின் காலங்களுக்குரிய எந்தவொரு ஆசீர்வாதமும் இவ்வுலகிற்கு வராது.

கருத்திற்கொள்ளவேண்டிய மற்றுமொரு காரியம் என்னவெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பாராக நாம் இருப்போமானால், நாம் எதிர்பார்ப்பதைப்போன்று நம்முடைய நம்பிக்கைகள் உடனடியாக புரிந்துகொள்ளப்படாது. ஆனாலும் நம்மைக்குறித்து ஒருபோதும் நாம் கவலையற்றவர்களாயிருக்க வேண்டும். ‘‘அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்’’. சத்தியத்தை பெற்றிருப்பவர்களையும் மற்றும் அதற்கென்று ஊழியம் செய்கிறவர்களையும்போல, ஆசீர்வாதம் பெற்றவர்கள் உலகில் வேறு எவரும் இல்லை. செய்வதற்கு ஏராளமான ஊழியங்கள் உள்ளன.

**எப்பக்கத்திலும் அமைதியின்மை**

மீதமுள்ள மனுக்குலம் திருப்திகரமாக இருக்கமாட்டார்கள், பெயர்கிறிஸ்தவ சபை மற்றும் தங்களை தேவபக்தியுள்ளவர்கள் என எண்ணிக்கொள்கிறவர்கள் மாத்திரமல்ல, மற்ற எல்லா ஜனங்களும் இதில் அடங்குவர். அவர்கள் செய்ய எடுக்கும் எல்லாவற்றிலும் எப்பக்கத்திலும் ஏமாற்றமடைவர். எப்பக்கத்திலும் தோல்வியை சந்திக்கிறார்கள். சிறிதுகாலத்துக்கு முன்பாக நாங்கள் ஒரு வியாபாரியிடம் பேசிக்கொண்டிருந்தபோது, எங்களுடைய உரையாடல் மதரீதியாக திரும்பியது. அவர் ஒரு அருமையானவர், அவர் ஒரு கிறிஸ்தவரோ அல்லது மற்றவரோ எங்களுக்குத் தெரியாது. கிறிஸ்துவராக இல்லாத அநேக ஜனங்கள் மனதிற்கிதமானவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் இருக்கின்றனர் என அப்போது அறிந்தோம். இந்த வியாபாரியாகிய மனுஷன் சபைகளைப் பற்றி பேசும்போது, ‘‘சபைகளுடைய நிலைமை வருத்தத்திற்குரியதாக உள்ளது. மெத்தடிஸ்ட் சபைப்பிரிவில் நான் ஆர்வமுடையவராக இருக்கிறேன். சிலகாலம் முன்பு எங்களுடைய சபையின் சொத்தை நல்ல விலைக்கு வாங்கி, அதில் அழகான சபைக்கூடத்தை அவர்கள் கட்டினர். மேலும் அறுபதுபேர் ஆராதனையில் கலந்துகொண்டால் அதுவே ஒரு பெரிய சபையாக தற்போது எண்ணுகின்றனர். இதே

நிலைமைதான் எங்கும் உள்ளது. ஜனங்களெல்லாரும் உல்லாச பிரியராய் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திற்கு , அதாவது கடற்கரைக்கோ அல்லது ஏதாவதொரு இடத்திற்கோ உல்லாசப்பயணம் மேற்கொள்ளவே ஆசைப்படுகின்றனர். ஒருவரும் தேவனுடைய காரியங்களில் கவனம் செலுத்துபவராக இப்போது தெரியவில்லை'' என கூறினார். இம்மனிதர் பொதுவான ஏமாற்றத்தின் ஆவியைக் குறித்துப் பேசினார்.ஆனால் நல்ல நாள் சமீபித்திருக்கிறது.

ஒரு வருடத்துக்கு முன்பு சான்ஃபிரான்சிஸ்கோவில் நடைபெற்ற குழந்தைகள் ஞாயிறு மாநாட்டில், குழந்தைகளை ஆலயத்துக்கு வரவழைக்கும் பொருட்டு ஒரு நீண்ட பிரசங்கத்தை உரையாற்றினார். அதற்கென்றே அந்த முழு ஆலயம் கட்டப்பட்டது என்றும் கூறினார். சபைகளுக்கு அழைத்து வரப்படும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அதற்கான செலவுத்தொகை 650டாலர்களாகும். மேலும் எத்தனை ஊழியர்கள் அதற்காக பணியமர்த்தப்பட்டார்கள் எனவும், ஆனாலும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவர் ஆலயத்துக்கு குறைந்த எண்ணிக்கையிலானவர்களையே கொண்டுவருகின்றனர் எனவும் கூறினார்.

நமக்குத் தெரிந்தபடி அழைத்தவரப்பட்ட பெரும்பான்மையானோர் தங்களை பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படவேண்டும் என்பதைக்குறித்தோ, அல்லது அர்ப்பணிப்பைப் பற்றியோ எண்ணிக்கூட பார்ப்பதில்லை. இந்த மனிதரை கவனிக்கும்போது, ஒரு முதிர்ச்சிபெற்ற மனதுள்ளவருக்கு சுவிசேஷத்தில் அதிகமாக ஒன்றும் விஷயமில்லை என்று எண்ணுவதுபோல் தோன்றுகிறது. சபைக்காக ஒரு குழந்தையை தயார்செய்துவிட்டால், பின் அதைவிட்டு அவன் வெளியே செல்லமுடியாது என்றும் அவர் கூறினார். இருந்தபோதிலும் ஆயிரக்கணக்கானோர் ஞாயிறு வேதபாட உபதேச பள்ளிக்கு வந்தாலும், வெகு குறைந்த எண்ணிக்கையுள்ளோரே ஆலயத்துக்கு வருகின்றனர்.

**நம் ஊழியத்தின்மீது பெரிய அளவிலான வருத்தம்**
(Sorrow at magnitude of our work)

நம்முடைய சத்திய உரைகள் அமெரிக்க நாடு முழுவதும் மற்றும் இங்கிலாந்திலும் உள்ள செய்தித்தாள்களில் அச்சடிக்கப்பட்டு வருவதைக் குறித்து தாங்கள் வருந்துவதாக சிலர் தெரிவிக்கின்றனர். மேலும் கூட்டங்களில் கலந்துகொள்வோருக்கு இடங்கள் இலவசமாகவும், காணிக்கைகள் எடுக்கப்படாததையும் சுட்டிக்காட்டி, அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ஒரு ஊழியக்காரர் கூறும்போது, "இப்படியே செய்தால் காணிக்கை எடுப்பது, கடும் குற்றமாக ஜனங்கள் எண்ணும் நிலை ஏற்படும், பின்பு நாங்கள் எங்கே செல்வது ? பாஸ்டர் ரசல் அவர்கள் எங்களுக்கு அவமரியாதை மட்டுமே தேடித்தருகிறார்'' என்றார். வேறொரு காரியத்தை அவர்கள் கூறும்போது, "அப்படிப்பட்ட போதனைகள் பிரசங்கிக்கப்படும்போது, நம்மிடமுள்ள சிறந்த மனிதர்களை அவைகள் கவர்ந்திழுக்கும்'' என்கின்றனர்.

ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம்குறைவான எண்ணிக்கையுள்ளவர்களாய் இருந்து, குறைந்தஅளவு பணத்தை செலவுசெய்து, வெகுசிலரே ஆண்டவருடைய ஊழியங்களை செய்யும் மாபெரும் சிலாக்கியங்களையும் வாய்ப்புக்களையும் பெற்றிருப்பது, மிகமிக அருமையானது என உணருகிறோம்.

**ஆகாரத்தினால் உண்டான பஞ்சமல்ல**

நாங்கள் சில நாட்களுக்கு முன்பு போஸ்டன் நகரில் இருந்தபோது, எங்களுடைய சத்திய உரைக்கு அடுத்துவந்த திங்கட்கிழமையன்று போஸ்டன் நகர மதரீதியான பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் கூறும்போது, "நேற்று உங்களுடைய கூடுகையில் நான் இருந்தேன். அங்கு மிகப்பெரிய கூட்டத்தைப் பார்த்தேன்.எல்லாரையும் பார்த்துவிட்டு, எது இந்த ஜனங்களை கொண்டுவந்தது என எனக்குள் கேட்டேன் ? ஜனங்களை இவ்விடம் வராதபடி தூண்டும் அழகிய கடற்கரை, பூங்காக்கள் போன்றவற்றை நினைவுகூர்ந்தேன். இருந்தபோதும் உஷ்ணமான இந்த மாலைப்பொழுதிலே, 2000பேர் திரும்பச் சென்றிருந்தாலும் 4000பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். போஸ்டன் நகரத்தில் நாங்கள் நிறைய ஊழியக்காரரையும், சிறப்பான பாடற்குழு மற்றும் ஜனங்களைக் கவர்ந்திழுக்கும் எல்லாவற்றையும் பெற்றிருந்தாலும், அந்த ஊழியர்கள் வருடம்முழுவதும் 40 முதல் 50பேரை மாத்திரமே அவர்களுடைய கூடுகையில் வைத்திருக்கின்றனர். அவ்வாறிருக்க, எவ்வாறு அநேகர் உங்களுடைய கூடுகைக்கு வந்து 2 மணிநேரம் அமர்ந்திருக்கின்றனர் ? எனக் கூறினார்.

தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலைக் காண்பதுபோல் எங்களுக்குத் தோன்றுகிறது என நாங்கள் பதிலுரைத்தோம். "இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல...''(ஆமோஸ் 8:11,12). மேலும் நாங்கள் குறிப்பிடும்போது, ஜனங்கள் திருப்தியில்லாத உணவு ஊட்டப்படுகிறார்கள். அவர்கள் பெற்றுவருகிற சத்தில்லாத உணவினால் திருப்தியடையவில்லை. மேலும் நித்திய எரிநரக போதனையின்மேல் நம்பிக்கையில்லாததினால் ஆலயங்களுக்கு செல்வதில்லை. ஏனெனில் பிரசங்கிமார்களோ அல்லது எவரும் நம்ப மறுக்கிற உபதேசமாக அது இருக்கிறது. வெகு சிலரே அதை நம்பினாலும் அதிலும் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்துகொண்டுவருகிறது.

இந்த ஜனங்கள் நித்திய வேதனையைப்பற்றி கேட்பதைவிட, அவர்களுடைய முன்னோர்கள் குரங்குகளாக இருந்தார்கள் என கல்லூரிகளில்

ஆலோசனைகள் தரப்படும்போது, அவர்களுடைய மனதில் எழும் பெரிய பெரிய கேள்விகளே, சத்தியத்தை அறிவதற்கான பசியுள்ளவர்களாகின்றனர் என அவருக்கு நினைப்பூட்டினோம். அவர்கள் இதற்குமுன் கேட்டறிந்ததைவிட இப்போது கேட்பவைகள் வேத ஆதாரப்பூர்வமாகவும், பகுத்தறிவுக்கு உட்பட்டதாகவும் இருப்பதாலேயே அதிக எண்ணிக்கையிலானவர்கள் இங்கு வருகிறார்கள் என நம்புகிறோம் எனவும் கூறினோம். ஆகவே எங்களிடம் இருக்கும் எல்லாவற்றிற்காகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

**நம்முடைய மீட்பு சமீபமாயிருக்கிறது(**Our Deliverance draweth nigh)

நம்மால் முடிந்தஅளவு, தற்காலம்வரை பார்க்கும்போது, கிபி 1915 அல்லது அதற்கு முன்போ முழு வளர்ச்சியடைந்திருக்கவேண்டிய காரியங்கள் நிறைவு அடையவில்லை. இது நம்முடைய காலக்கணக்கு சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளும், அறுவடை உட்பட எல்லா பார்வைகளும் தவறானவை என்றே தோன்றுகிறது. மேலும்அவைகள் தவறானவை என்று நம்புவதற்கு சரியான காரணமும் நம்மிடம் இல்லை. நாம் தவறிழைக்காதவர்களல்லர் என்பதையும், நமது நிதானிப்பும் தவறா நிலையுடையதல்ல என்றும் நினைவுகூர்கிறோம். ஆனால் தற்கால அருமையான கண்டுபிடிப்புகளும், எத்திசையிலும் இருந்துவரும் வெளிச்சமும், அதேபோல உலகமுழுவதும் ஏற்படுகிற அமைதியின்மை, நம்முடைய காலக்கணக்கிற்கு ஏற்றாற்போல ஒரு புதுயுகத்தின் ஆரம்பத்தில் நாம் இருக்கிறோம் என்று தோன்றுகிறது. ஆனால் எவ்வளவு தூரம் செல்லவேண்டும் என முற்போக்காக நாம் கூறமுடியாது. நீதியின் சூரியன் தோன்றுவதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

உண்மை என்னவெனில், பலகைகளில் எழுதப்பட்ட தரிசனம் தற்போது பேசுகிறதும், நம்பிக்கை ஏற்படுத்துகிறதுமாயிருக்கிறது. ‘‘நாட்களும், தரிசனத்தின் பொருளும், சமீபித்து வந்தன’’ என உண்மையாகவே நம்புகிறோம்–எசேக்கியேல் 12:21–23.

———————————

R 5375

# உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம்

## THE GREAT PRIVILEGE OF TRUE SERVICE

"மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" – மத்தேயு 20:28

ஊழியக்காரர் என்ற வார்த்தை, தொண்டாற்றுதல் என்ற வார்த்தையைப்போலவே அதே உட்கருத்தை உடையதாயிருக்கிறது. நம் போதகர், இந்த உலகத்திற்கு, தான் வந்ததன நோக்கம் சுயநலமுடைய ஒன்று அல்ல என்கிறார். உலகத்தோற்றத்துக்கு முன்பு, பிதாவுடன் கொண்டிருந்த மகிமை மற்றும் கனத்தோடு அவர் மிகவும் திருப்தியடைந்திருந்தார்(யோவான் 17:5). மீட்பரின் முந்தைய மகிமையைக்காட்டிலும், தற்போது மிகவும் அதிக உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார் என்பது உண்மையாயிருக்கிறது என்றாலும், தான் அவ்வாறு உயர்த்தப்படவேண்டும் என்ற விருப்பத்தோடும், அந்த ஆவியோடும் இந்த பூமிக்கு வரவில்லை என்று நமக்கு உறுதியளிக்கிறார். அதற்கு மாறாக, அவர் ஊழியம்செய்யவே விரும்பினார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைசெய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்–பிரமாணம் என் உள்ளத்தில் இருக்கிறது" என்று சொன்னார் – சங்40:8.

இந்த தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்படிவதற்காக நம் கர்த்தர் பிதாவுடன் தான் கொண்டிருந்த மகிமையைவிட்டு, பூமிக்கு இறங்கி வந்து, தன்னை மரணத்திற்கு, அதுவும் சிலுவையின் மரணத்திற்கு கையளித்தார். தாம் காட்டிக்கொடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்ட அந்த இராத்திரியில், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணாதிருப்பேனோ ?" என்று கூறினார். அவர் முடிவு பரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவராக இருந்தார்.

ஒரு மீட்பர் தேவை என்ற நிலையில் இந்த மனுக்குலம் இருப்பதை, இந்த உலகத்திற்கு வருவதற்குமுன், நம் ஆண்டவர் உணர்ந்திருந்தார். இதன் காரணமாக, தெய்வீக ஏற்பாட்டை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார் என்பதில் சந்தேகம் இல்லை. விழுந்துபோன மனிதனைக்குறித்த பிதாவின் நோக்கத்தினை ஓரளவு அவர் கண்டார். மேலும் அவர் தன் பூமிக்குரிய ஜீவியத்தின்போது, பரிதவிக்கக்கூடிய இந்த சிருஷ்டிகள் பாவத்தில், சீரழிவில், பெலவீனத்தில் இருப்பதைப் பார்த்தபோதிலும், அவர்களை அடிமைகளாக்க முயற்சி செய்யவில்லை. அவர் தன்னுடைய வல்லமையையும் விவேகத்தையும் தன்னுடைய சொந்த வசதிக்காக சுயநலத்தோடு பயன்படுத்த முயற்சிக்கவில்லை. மாறாக, அவர் சுயநலமின்றி தன்னுடைய ஜீவியத்தையே கொடுத்தார். பிதா ஏற்பாடு செய்திருந்த திட்டத்தை நிறைவேற்றி முடிக்க அவர் தன்னை நிலைநிறுத்திக்கொண்டார்.

நம் கர்த்தர் ஊழியம் கொள்ளும்படி வரவில்லை. பணியாளர்களை பெற்றிருக்கவும், தன்னுடைய சொந்த ஆற்றலின் சிறிய அளவை செலவழித்து, அதற்கீடாக எல்லாவற்றையும் திரும்பப்பெற அவர் இந்த பூமிக்கு வரவில்லை. அவர் எந்த சுயநல காரணத்திற்காகவும் வரவில்லை. மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், நன்மை செய்யவுமே வந்தார். அவர் தன்னைக்குறித்து சாட்சியாக,"ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்கிறார். இதை அவர் பிதாவின் திட்டத்துக்கு இசைவாக செய்தார்.

இருப்பினும் யார் ஒருவரும் தனக்கு ஊழியம் செய்வதை நம் கர்த்தர் மறுத்துவிட்டார் என நாம் புரிந்துகொள்ளக்கூடாது. அவர் மற்றவர்களிடமிருந்து வரும் ஊழியத்தை ஏற்றுக்கொண்டார். நம் ஆதார வசனத்தின் கருத்து என்னவெனில், அவர் வந்தது ஊழியம் செய்வதற்காகவே; ஊழியம் கொள்வதற்காக அல்ல என்பதாகும். மேலும் அவர் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு ஊழியக்காரனாயிருப்பது அவருக்கு அவசியமாயிருந்தது. இந்த ஊழியம் செய்தவற்கான தேவை எதுவும் இல்லையெனில், நம் கர்த்தர் தன்னைத் தாழ்த்தி அடிமையின் ரூபமெடுத்திருப்பாரா அல்லது தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடுமையான சோதனைகளுக்குள் சென்றிருப்பாரா என்று நாம் எண்ணக்கூடாது. மாறாக, அவர் முழு மனுக்குலத்தின் மெய் வாழ்க்கைக்கும், நலனுக்கும், மகிழ்ச்சிக்கும் அவசியமான ஒரு ஊழியத்தை அளிப்பதற்காகவே வந்தார்.

ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாக பாவம் இவ்வுலகத்திற்குள் நுழைந்தது. அந்த பாவத்திற்கான தண்டனை மரணம் என்று தேவனுடைய பிரமாணம் தீர்மானமாய் உரைக்கிறது. இவ்வாறு முழு மனுக்குலமும்அழிவுக்குள்ளாகினர். அவர்கள் முன்பு எப்போதாவது மீட்கப்பட்டிருப்பர்களானால், அறிவற்ற மிருகங்களைப்போல் அழிந்திருக்கமாட்டார்கள். ஆகவே அவர்கள் மீட்கப்பட்டாகவேண்டும். தெய்வீகப் பிரமாணத்தைப் பொறுத்தவரை, பாவம் செய்த முதல் பரிபூரண மனிதனுக்கான ஒரு சரிநிகர் சமானவிலை(ஈடுபலி) கொடுக்கப்படவேண்டும். இந்த தேவையை ஒரே பேரானவர் மாத்திரமே நிறைவேற்ற சித்தமாயிருந்தார். இந்த வேலைக்கான அவசியத்தின் நிமித்தமாக, இந்த நோக்கத்திற்கான தேவனுடைய ஊழியக்காரனாக இருந்து, அந்தப் பணியை செய்வதற்கு அவர் மகிழ்ச்சியடைந்தவராக இருந்தார். ஏனென்றால் இது மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்பதற்காக அப்படி இருந்தார்.

இந்த ஆவியே நம் ஒவ்வொருவரையும் ஏவுவதாக இருக்கவேண்டும். ஊழியத்தின் இந்தக் கொள்கையை நம்முடைய குணலட்சணத்திற்குள் நாம் இணைத்துக் கொள்ள விரும்பவேண்டும். நாம் வேலை செய்ய விரும்புகிறோம். பரபரப்பாக இருக்க விரும்புகிறோம் என்பதற்காக நாம் வெறுமனே வேலைசெய்யக்கூடாது. மாறாக, அங்கு ஒரு அவசியமான பணி இருப்பதை, இந்த ஆசீர்வாதமான ஊழியத்தில் நாம் நம் ஜீவனைக் கொடுப்பதற்கு மகிழ்ச்சியடையவேண்டும்.

**உண்மையான அர்ப்பணிப்பின் மனப்பாங்கு**

மற்றவர்களின் கால்களைக் கழுவுவது அவசியம் என்று நினைக்கும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு சடங்கால் உண்மையான நன்மை எதுவும் அடையாத நிலையில் விரும்பத்தகாத அது செய்யப்படவேண்டும் என்பதற்கான காரணம் எதுவுல்லை. கழுவப்படுதல் தேவைப்படாமலேயே இயேசு தம் சீஷர்களுக்கு கால்களைக் கழுவினார் என்ற நாம் எண்ணமுடியாது. ஆனால் இவ்வாறு ஒரு உண்மையான ஊழியத்தைக் கொடுக்கமுடியுமென்றால், நம்மில் எவரும் கால்களைக் கழுவுவதனாலோ அல்லது வேறு எந்தமுறையிலோ கிறிஸ்துவின் சரீரத்தின் உடன் அங்கத்திற்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்பிற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். இந்தக் கருத்து வெறுமனே ஒரு பணியாள் என்றமுறையில் ஏதோ சிலவற்றை செய்வதற்கான வாய்ப்பு என்பதைவிட, உண்மையான ஊழியத்தின் சிலாக்கியத்தை உணர்ந்துகொள்வதற்கே ஆகும். இயேசு என்ன செய்யவேண்டுமோ அதை செய்தார், ஏனென்றால் அது உதவிகரமான ஊழியமாகவும், பிதாவினுடைய சித்தமாகவும் இருந்தது. சகோதரர்களாக ஒருவருக்கொருவர் இந்த தாழ்மையான ஊழியத்தை செய்வதைக் காட்டிலும் தங்களை மேலானவர்களக எண்ணக்கூடாது என்பதை தன் சீஷர்களுக்கு கற்றுத் தருவதற்கும் அவர் விரும்பினார். அதோடுகூட, இந்த சந்தர்ப்பத்தில் அவருடைய சீஷர்கள் பூமிக்குரிய கறைகளிலிருந்து அனுதினமும் கழுவப்படுவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்துவதாக இயேசுவின் வார்த்தைகள் காணப்பட்டது –யோவான்13:6–10பார்க்கவும்.

நம்முடைய ஆண்டவருடைய ஜீவியத்தைக் கையளிப்பது ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நாளும் நிறைவேற்றப்பட்டது. போதிப்பதிலும், சுகவீனமுள்ளவர்களை சுகப்படுத்துவதிலும், செவிடரையும் குருடரையும் குணமாக்குவதிலும், அவருடைய சீஷர்களுக்கு அறிவுறுத்துவதிலும் கையளிக்கப்பட்டது. இவையனைத்திலும் அவர் தனக்கு ஊழியம் செய்ய விரும்பவில்லை. எனவே "அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் பயன்பாட்டை நாம் நமக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அவர் இருந்த பிரகாரமாகவே நாமும் இவ்வுலகில் இருக்கிறோம். உண்மையான அர்ப்பணிப்பு மனப்பான்மை என்பது நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதும், நம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அதை அறிந்துகொள்ள நாடுவதும் ஆகும். வேதமாணவர்களாகிய நாம் "தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த", ஆதிகால பெரேயா பட்டணத்தாரைப் போல இருக்கிறோம் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

நாம் போதகரின் ஆவியை உடையவர்களாயிருந்தால், "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும் நன்மை செய்ய" விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும்(கலாத்6:10). இது அப்.பவுல் கிறிஸ்துவை பின்பற்றுவதுபோல, அவரைப் பின்பற்றுகிற நம்மைத் தூண்டுகிற அவருடைய அறிவுரையாக இருக்கிறது. இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் வாழ்க்கைகள், மற்றவர்களுக்கான அவர்களுடைய தன்னலமற்ற ஊழியத்தைக் குறிப்பிடும்படியாக, வரலாற்றின் பக்கங்களில் மிகுந்த தனித்துவம் வாய்ந்ததாக நிற்கிறது.

அநேகர் தேவனுடைய உரிமைக்கும் மேலாக ஆண்டுகொண்டிருக்கிறார்கள். நம் ஆண்டவர் இந்த வகுப்பாரை மனதில் கொண்டுள்ளார் என்பதை இச்சூழ்நிலை காண்பிக்கிறது. புறஜாதிகளின் ஆட்சியாளர்கள் தங்கள் ஜனங்களின்மீது அதிகரத்தை நடைமுறைப்படுத்தினர் என்று அவர் அறிவிக்கிறார். மேலும் இது ஆட்சியாளர்களின் நடைமுறை செயலாகவும், ஜனங்களுக்கு சேவை செய்வதற்கான விருப்பம் இதில் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

**சுயநலம் இராஜ்ஜியத்திற்கு தகுதியற்றதாக்கும்**

நம் ஆதாரவசனத்தின் வார்த்தைகளை நம் போதகர் எவ்வாறு பயன்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். சீஷர்கள் மனிதர்களின் கனத்தை விரும்புதல், மற்றும் தேவனிடத்திலும் கனம்பெற விரும்புதல் என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இருவர் அவருடைய இராஜ்ஜியத்தில் விசேஷித்த மேன்மை பெறுவதற்கு மனமார்ந்த வேண்டுதலை வைத்தனர். அவர்களுடைய விண்ணப்பம் மற்ற பத்துப்பேர் மத்தியில் கோபஉணர்ச்சியின் ஆவியைத் தூண்டியது. அதனால் ஒரு முரண்பாடு விளைந்தது. இராஜ்ஜியத்தில் பங்குபெறுவீர்கள் என்று இயேசு வாக்குறுதி கொடுத்திருக்கிறார் எனற கருத்தை அவர்கள் தங்கள் சிந்தைகளில் நிரந்தரமாக வைத்திருந்தனர்(மத்19:27–29). இந்த வாக்குத்தத்தத்தை சிந்தையில் கெண்டிருப்பது அவர்களுக்கு தவறாக இருக்குமானால், அவர்களுக்கு இந்த வாக்குத்தத்தத்தை நம் கர்த்தர் கொடுத்ததும் தவறாயிருந்திருக்கும். ஆனால் தமக்கும் தம் வார்த்தைக்கும் முழு உண்மைத்தன்மையை

வெளிப்படுத்தாத யாருக்கும் இந்த இடத்தைக் கொடுக்க மாட்டார் என்பதை அவர்கள் காணத்தவறிவிட்டனர்.

அதே சமயத்தில் சீஷர்கள் ஒரு குறிப்பிட்டஅளவு, தவறான தகுதியை அல்லது பெருமையைக் கொண்டிருந்தனர். அது, சிங்காசனத்தின் ஸ்தானத்திற்கு அவர்களைத் தகுதியற்றதாக உருவாக்கும். இதனால் நம் கர்த்தர் அந்த சிங்காசனத்திலுள்ள ஸ்தானத்தை யார் ஒருவருக்கும் கொடுக்க அதன் நிபந்தனைகளாக, அந்த நபர் தேவனுடைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு பெருமளவில் உண்மைத் தன்மையையும் மிகுந்த மனத்தாழ்மையின் ஆவியையும் வெளிப்படுத்தி காண்பிக்கவேண்டும். அப்படிப்பட்டவரே தேவைப்படும் எவருக்கும் ஊழியம் செய்வதற்கு மகிழ்ச்சியுடன் இருப்பார் என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டினார். மேலும் அவர் தம்மையே ஒரு முன்மாதிரியாக அமைத்துக்கொண்டார்.

நம் கர்த்தருடைய வார்த்தைகளை வேறு வார்த்தைகளில் நாம் விளக்குகிறோம். ஜனங்கள் எனக்கு சேவை செய்யவேண்டும் என்பதற்காக நான் பரலோகத்தைவிட்டு கீழேஇறங்கி பூமிக்கு வந்தேன் என்றா நினைக்கிறாய்? இல்லை. நான் விட்டுவந்ததைவிட, நான் வந்திருக்கும் நிலைமைகள் மிகவும் தாழ்ந்தவை. ஆனால் இந்த விஷயத்தில் பிதா எனக்கு ஊழியத்தின் இந்த சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார், நானும் இதைப்பெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் இது பிதாவின் சித்தமாக இருக்கிறது. நான் ஊழியம்செய்வதற்கு, பணிவிடைசெய்வதற்கு, அனைவருக்கும் ஈட்டுக்கிரயமாக என் ஜீவனைக் கொடுக்கவுமே வந்திருக்கிறேன்.

எனவே இந்த சிந்தையை– அதாவது, ஊழியத்தின் சிலாக்கியத்தில் அவர்கள் மகிழ்ச்சியடையவேண்டும் ... என்ற சிந்தையை அவர்களுக்கு முன்பாக அவர் ஏற்படுத்தியிருக்கிறார். மற்றவர்களுக்கு உதவ, அதிலும் குறிப்பாக கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள சகோதரர்களுக்கு உண்மையாக உதவிசெய்வதற்கான சலுகையை பெற்றிருப்பதில் மகிழ்ச்சியடையவேண்டும் என்ற சிந்தையை அவர்களுக்கு முன்பாக நியமித்திருக்கிறார். இந்தக் கொள்கையை நாம் பரந்தஅளவில் பயன்படுத்தும்போது, இந்த உலகத்தில் அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளில் இது எப்படி முன்மாதிரியாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். முழு மனிதக்குடும்பமும் பணியாளர்களாக இருக்கின்றனர். ஒருவர் நகை செய்பவராக பணிபுரிகிறார்; மற்றொருவர் கம்பளி துணிகளை தயாரிப்பவராக வேலைசெய்கிறார். இவர் கம்பளியிழைகளை வாங்கி அதை துணியாகவும், பிறகு ஆடைகளாகவும் மாற்றும் பணிபுரிகிறார். மற்றொருவர் மளிகை வியாபாரியாக, உணவு வழங்குகிறவராக பணிபுரிகிறார். சிலர் எலும்புசார்ந்த மருத்துவர்களாக, சிலர் முடிதிருத்துபவர்களாக, சிலர் தையல்காரர்களாக, சிலர் மருத்துவர்களாக பணிபுரிகின்றனர். ஒவ்வொரு விஷயத்திலும் இது மற்றவர்களுக்கான ஒரு சேவையாக இருக்கிறது.

இந்தக் காரியத்தை இன்னும் கீழே சென்றுநோக்கும்போது, இந்தக்கொள்கை, ஊமையான மிருகங்கள் செய்யும் வேலைஅளவுற்கு விரிவடைந்திருப்பதாக நாம் பார்க்கிறோம். ஒரு குதிரை தன்னையே தேய்த்து சுத்தம் செய்துகொள்ளமுடியாது. இன்னும் பன்றிக்குகூட சேவை தேவையாயிருந்து, படுக்கை, உணவு ஆகியவை தேவையாயிருக்கிறது. நாம் விலங்குகளிடமிருந்து சேவையையும் ஏற்கிறோம். சேவை செய்வதன் இந்த ஏற்பாடுகளிலிருந்து யாரேனும் தன்னைப் பிரித்துக்கொள்வது என்பது, அவருடைய சொந்த நன்மையிலிருந்து வெளியேறி, இந்த பிரபஞ்சத்தின் பிரமாணத்தை மீறுவதாக இருக்கிறது. யாரேனும் வேலைசெய்யாமல், மற்றவர்கள் அவருக்கு சேவைசெய்யக்கூடிய இடத்திற்கு வருவது பரிதவிக்கப்படத்தக்கதாக இருக்கும். அவர் எப்பொழுதும் மிகுந்த செல்வத்துடன் இருந்தாலும், மகிழ்ச்சியற்று இருப்பார். பிடிவாதமாக சுயநலமாக இருக்கும் இந்த மனப்பான்மையை எடுக்கும் எவரும், அவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் அழகற்றதாகவும் பயனற்றதாகவும் இருக்கும்.

**ஊழியம் செய்தல் கிறிஸ்தவர்களுக்கு பெருமகிழ்ச்சியானது**

ஊழியத்தின் ஆவிக்குள் நுழைந்திருக்கிற உண்மை கிறிஸ்தவன், தன் போதகர் செய்ததுபோல, கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாக யாவருக்கும் நன்மை செய்வதற்கு பெருமகிழ்ச்சியடைவார். உதவியற்றும் நோயுற்றும் யாரேனும் இருந்தால், இவர்கள் அவன் திறமையும் திராணியும் பெற்றிருப்பதால், ஊழியங்களுக்காக அழைக்கும்போது, அவனும் உதவிக்கரம் நீட்டுவதற்கு இயலும். கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக நாம் யாவருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மைசெய்யவேண்டும்.

எங்கே இந்த கோட்டை நாம் வரையவேண்டும்? நாம் சாந்தகுணத்தைப பயன்படுத்தவேண்டும் என்பதே அதற்கான பதில். மற்றவர்களுக்கு ஊழியங்கள் தேவைப்படுகிறதை, நாம் அனுதினமும் அவைகளைச் செய்து கடந்துசெல்லும்போது காண்கிறோம். ஆனால் நம்மால் செய்யமுடியமற்போகிறது. நாம் செய்யநினைக்கும் எலலாவற்றையும் செய்யமுடிவதில்லை என்பதால், இந்த விஷயத்தை எவ்வாறு நாம் முறைப்படுத்துவது? நம்முடைய சொந்த குடும்பம் நம்முடைய முதல் கடமையாக அல்லது பொறுப்பாக இருக்கவேண்டும். தன் சொந்தக் குடும்பத்தைப் புறக்கணிக்கிறவன் அவிசுவாசியிலும் கேடுள்ளவன். அன்பிணக்கம்(

charity) வீட்டில் துவங்குகிறது. அங்கே நாம் பொறுப்புக்களைப் பெற்றிருப்போமானால் நம் சொந்த குடும்பத்தாருக்கு கொடுப்பதைப்போன்று, மற்றவர்களுக்கு அதிக சௌகரியத்தை, அதிக நேரத்தை, அதிக பணத்தை கொடுக்கமுடியாது.

**சோம்பேறித்தனம் ஊக்குவிக்கப்படலாகாது**

பணத்தை பெற்றிருக்கிறவர்கள் ஒரு தாலந்து பெற்றிருக்கின்றனர், அதை நன்மைசெய்வதில் பயன்படுத்தலாம். இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் அவர்களால் மிகுந்த வாய்ப்புக்களை கண்டடையமுடியாது. நாம் மில்லியன் கணக்கில் டாலர்களை வைத்திருந்தால்கூட, அதை செலவிடுவதில் தெளிந்த புத்தியின் ஆவி நம்மை ஆளவேண்டும். வீணானவற்றில், சோம்பலானவற்றில், சும்மாயிருப்பதில் எவரையேனும் உற்சாகப்படுத்துவதற்கு பணம்கொடுப்பது அதை தவறாக பயன்படுத்துவதாகும். இது நன்மைசெய்தல் ஆகாது. "உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" என்று தேவனே கூறியிருக்கிறார். வேலை செய்கிறவர்களே மகிழ்ச்சியான ஜனங்களாயிருக்கிறார்கள்; எதையும்செய்யாதவர்களாக இருக்கிறவர்கள் மிகவும் கவலையுள்ள ஜனங்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு எந்த குறிக்கோளும் இல்லை.

நம் சொந்த குடும்பங்களுக்கே நாம் செய்யவிரும்பும் அனைத்தையும் செய்யமுடியாது, நம்முடைய சொந்தவிஷயத்திலே அடிக்கடி பாராட்டப்படுவதில் குறைவுபடுதல் நேரிடுகிறது. நம் உறவினர்களில் சிலர் போதுமானவற்றை ஒருபோதும் பெற்றிருக்கமாட்டார்கள். அவர்களுக்கு போதுமானவற்றை செய்ய நம்மால் ஒருபோதும் இயலாது. எனவே நாம்தெளிந்தபுத்தியின் ஆவியைப் பயன்படுத்தி யோசித்தபிறகு, என்ன செய்வது என்று முடிவெடுக்கவேண்டும். நாம் கர்த்தருடைய ஊழியத்தில் நுழைந்திருந்த சமயம், நமக்கு புதிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது, அதாவது உலகத்தில் செய்வதற்கான விசேஷித்த வேலை கொடுக்கப்பட்டுள்ளதை நாம் எப்போதும் ஞாபகத்தில் கொள்வோமாக.

எவ்வகையான ஊழியம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? இது கர்த்தருடைய தூதுவர்களுக்கான வேலையாகும். எங்கெல்லாம் கேட்கிற செவியும், உணர்ந்துகொள்ளும் கண்களும் இருக்கிறதோ, அங்கெல்லாம் சத்தியத்தை நாம் பிரசங்கிக்கவேண்டும். நம் போதகர் முன்னுரைத்தபடி, கேட்கிற காதுகளும் காண்பதற்குக் கண்களும் இல்லாதவர்கள் நம்மை பீறிப்போடுவார்கள்(மத்7:6). எனவே நாம் சத்தியத்திற்கான நல்ல நிருபங்களாக இருக்கிறவர்களுக்கும், அப்படி இல்லாதவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கண்டறிவதில் தெளிந்த புத்தியின் ஆவியை பயன்படுத்தவேண்டும்.

ஆண்டவரே, எங்களுடைய எல்லா நேரத்தையும் உமக்காகவும் உம்முடைய சத்தியத்துக்காகவும் கொடுப்போம் என்ற போதகரிடத்தில் நாம் சொல்வோமாக. பின்பு அவர் பதிலுரையாக; ஆனால் நீங்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி செல்லும்போது, கிழிந்தஆடையையோ, அல்லது ஆடையின்றியோ செல்லக்கூடாது என்று பதிலளிப்பார். நீங்கள் தேவையானவற்றை பெற்றிருப்பது என்பது முறையானதாக இருக்கிறது. ஆனால் உங்களுக்காக முதலில் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை சேர்க்க முயற்சித்து பெற்றபிறகே, இராஜ்ஜியத்தின் செய்தியை அறிவிக்க செல்ல எண்ணக்கூடாது.

ஆண்டவரே, எங்கள் உடனாளிகளுக்கும் எங்கள் சொந்த குடும்பங்களுக்கும் எதையாவது செய்வதிலிருந்து இது எங்களை மன்னிக்குமா ? என்று நாம் கேட்கலாம். நாம் நம் சொந்தக் குடும்பங்களை புறக்கணிக்கக் கூடாது. மாறாக அவர்கள் தேவைகளுக்கேற்ப அவர்களை கவனிக்கவேண்டும் என்று அவர் பதிலளிக்கிறார். ஆயினும் நம் அன்றாட நிகழ்வுகளை சிக்கனத்துடன் செய்ய வழிநடத்தப்படுகிறோம். நம் குடும்பம் அவர்கள் பங்கை செய்வதற்கு தவறினால், மேலும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக சம்பாதிக்க போதுமான வயதும் திறமையும் இருந்தும், எந்தவித முயற்சிகளையும் எடுக்காமல் இருந்தால், பின்னர், நாம் அவர்களுக்கு ஒன்றும் செய்யவேண்டியதில்லை. அவர்கள் தங்கள் சொந்த பலத்தை பெற்றிருக்கிறபடியால், நம்முடைய உதவி அவர்களுக்கு தேவையில்லை. நாம் அவர்களுக்குத் தேவையான காரியங்களை மட்டும் செய்யவேண்டும். இது நம் ஆண்டவரின் சிந்தையாக இருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

**உக்கிராணக்காரராக நம்முடைய பொறுப்பு**

நாம் எல்லாருக்கும் நன்மை செய்கிறவர்களாக இருக்கவேண்டும் என்றபோதிலும், இதற்குமேலும், நம்முடைய விசேஷஊழியம், பிதாவின் பணியாகிய நம் கர்த்தரின் வேலையில் – சத்தியத்தை பகிர்ந்தளிப்பதில் நம்மைக் கொடுப்பதில் உள்ளது. நாம் அப்படிச் செய்யும்போது நாம் யாரிடம் தொடர்பில் இருக்கிறோமோ, அவர்களிடம் அன்பான வார்த்தையைப் பேசக்கூடும். நாம் பணம் உடையவர்களாக இருந்தால்அந்த வழியில் உதவலாம். ஆனாலும், நாம் உடைமையாகப் பெற்றிருப்பதில் ஒரு பணம்கூட நம்முடையதல்ல அல்லது ஒரு கணநேரமும் நம்முடையதல்ல என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவை எல்லாம் கர்த்தருக்குரியவை. பூமிக்குரிய விதத்தில் உண்மையான தேவைஇருக்கும்போது தவிர, நாம் அவற்றை ஆவிக்குரிய விதத்திலேயே செலவழிக்கவேண்டும். இந்த

உலகத்திற்குரிய விதத்தில் அதிகமாக செய்தாலும், இந்த உலகம் நம்மை உயர்வாகப் போற்றாது என்பது நிச்சயமாயிருக்கிறது. ஆனாலும் நாம் இந்த உலகத்திடமிருந்து நமக்கான பொறுப்பைப் பெறவில்லை.

கர்த்தராகிய இயேசுவின் ஆவி இந்த உலகத்தில் மாபெரும் செல்வாக்கை பெற்றிருந்தது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். இது உயர்குணமுடைய ஆத்துமாக்களின்மீது ஆழமான தாக்கத்தை பதித்திருக்கிறது. அவர்கள் அனாதை இல்லங்கள், பார்வையற்றோருக்கான மருத்துவமனைகள், குணமாகாதவருக்கான இல்லங்கள் இது போன்றவற்றை நிறுவ வழிவகுத்துள்ளது. இந்த நிறுவனங்கள் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தங்களுக்குத் தாங்களே ஏற்பாடுசெய்ய இயலாதவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்பது இன்று அங்கீகரிக்கப்பட்டதாகவும், முறையானதாகவும் இருக்கிறது. இந்த உலகம் இந்த விஷயத்தை ஒரு வியாபாரக் கண்ணோட்டத்திலிருந்து நிலைப்படுத்திக்கொள்வதன் காரணமாக, தேவனுடைய தூதுவராக நியமிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள், தனிப்பட்ட பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர். உடல்நலக்குறைவு உள்ளவர்களையும், முடமானவர்கயையும் கவனிப்பது என்பது முறையான காரியமாக உள்ளது; ஆனால் நகரமும் மாநிலமும் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், தனிப்பட்டவர்களின் பொறுப்பு பெரும்பாலும் அகற்றப்பட்டுள்ளது.

என்னுடைய உடல் நலமற்ற நண்பர்களை நானே கவனித்து, அவர்களை அதிக கட்டணமுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு விரும்புகிறேன் என கூறும் வசதிபடைத்தவரும் இருக்கிறார்களே. எவரேனும் இவ்வாறு செய்வார்களானால், அது அவர்களுடைய சொந்த விஷயம். அதே அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வீட்டில் வசிக்க தெரிவுசெய்வேன் என்றும்கூட சொல்லலாம். அதுவும்அவர்கள் சொந்த விஷயம். அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமை உள்ளது. மேலும் அவர்கள் தங்கள் மோட்டார் வாகனங்கள் மற்றும் சந்தோஷத்திற்காக தனிப்பட்ட உல்லாசப் படகுகள் போன்றவற்றைக்கூட உடையவராயிருக்கலாம். ஆனால் கிறிஸ்தவர்களிடத்தில் இது வேறுபட்டதாயிருக்கிறது. அவர் பெற்றுள்ள அனைத்தும் கர்த்தரையே சார்ந்தது. எனவே அவர் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டநிலையில் இருக்கிறர்கள். அவர்கள் உலகத்தாரைப் போன்று அல்ல, அவர்கள் செய்வதெல்லாம் தேவனுக்காகவே இருக்கிறது. ஏனென்றால் அவருடனான இவர்களது உறவு ஒரு குமாரனுடைய உறவுபோன்றது.“இப்போது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்”

**தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்**

நம் ஆதாரவசனத்தில், நம் போதகர் தம்முடைய சீஷர்கள் ஆளுகை செய்வதற்கு விரும்பக்கூடாது என்று அறிவுறுத்துகிறார். அவருடைய தாழ்மை மற்றும் ஊழியத்தின் ஆவியை யார் அதிகமாகக் கொண்டுள்ளனரோ அவர்களே தம் சீஷர்களாக இருக்கவேண்டுமென அவர் விரும்புகிறார். எவரேனும் தன்னை உயர்த்தினால் அதற்கேற்றவாறு அவர்கள் அவரால் தாழ்வாக மதிப்பிடப்படுவர். “தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்”. உயர்த்தப்படுகிற அல்லது தாழ்த்தப்படுகிற அனுபவங்களை கர்த்தர் அனுப்புவார். சரியான கொள்கைகள் செயல்பாட்டில் இருப்பதை நாம் பார்த்து, நம்முடைய பாராட்டை காண்பிக்கவேண்டியது நமக்குரியது. யாரெல்லாம் கிறிஸ்துவின் ஆவியை பெருமளவில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்களோ, அவர்கள் நம்முடைய மதிப்பீட்டில் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். யாரெல்லாம் குறைவான அளவு கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தாழ்ந்தவர்களாக இருப்பர். இந்த குணலட்சணங்கள் நம்மால் அமைதியாக கவனிக்கப்படும்.

இந்த உலகம் இயங்குவதற்கான ஆதாரமாக சுயநலம் இருக்கிறது. இதுவே போர், கிளர்ச்சி, புரட்சி போன்றவற்றின் இரகசியமாக இருக்கிறது. ஒரு குழுவினரும் மற்றவர்களும் செல்வங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், மற்றும் மதிப்பையும், ஆற்றல் அல்லது அதிகாரத்தையும் சுயநலமாகத் தேடுகின்றனர். கிறிஸ்தவர்களாக நாம் இருக்கும் ஆவியின் நிலையிலிருந்து, வித்தியாசத்தைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறோம். நாம் சுபாவத்தின்படி “மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்” என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். நாம் உடனடியாக மாறிவிடுவோம் என்று நம்மைநாமே கருதக்கூடாது. மாறாக சிந்தை மாற்றப்பட்டு, நாம் இன்னும் அதிகமாக கிறிஸ்துவின் சாயலில் வளரவேண்டியுள்ளது. மேலும் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகளாக, நாம் மிகுந்த விருப்பத்துடன் கர்த்தருக்கு அளித்த ஊழியம், இந்த உலகத்தின் ஆவியின் வழக்கத்தினால் கொஞ்சம்குறைய பயனற்றுப்போகாதபடிக்கு விழிப்புடன் கவனிக்கவேண்டும்.

**ஆயிரவருடஅரசாட்சி ஒரு ஊழியம்**

நம் ஆண்டவர் ஆட்சி செய்வதற்குரிய தன்னுடைய மாபெரும் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்போது, வெறுமனே தன் சொந்த மகிமைக்காகவும், தன்னை பெருமைப்படுத்திக் கொள்வதற்காக அதிகாரமாகக் கருதும், இந்த தற்கால ஆட்சியாளர்கள் கொண்டுள்ளதைப்போன்று அதே நோக்கத்தைக் கொண்டிருக்கமாட்டார். உண்மையிலேயே அவர் மாபெரும் வல்லமையையும் அதிகாரத்தையும் உடையவராயிருப்பார். அதேசமயம், பரலோகப்பிதா என்ன ஏற்பாடு செய்திருக்கிறாரோ அதோடு இசைவாக இருக்கும்படியாக அது இருக்கும். மகிமையையும்

வல்லமையையும் வெளிப்படுத்துவது இந்த உலகத்தை நொறுக்குவதற்காக அல்ல, மாறாக அதை ஆசீர்வதிப்பதற்காகவும், உயர்த்துவதற்காகவுமே. இந்தப்பணி, உலகின் ஆட்சியாளர்களாக மனுக்குலத்தைக் காப்பாற்றுவதற்கான நோக்குடன் இருந்து, ஊழியத்தின் நிலைப்பாட்டின்படி நிறைவேற்றப்படும். இந்த மேசியாவின் இராஜ்ஜியமானது இந்த உலகம் தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலும்போது முடிவடையும்.

இந்த வழிதான் ஆதியிலிருந்தே தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம். பரலோகப்பிதா மனிதனை பூமியின் இராஜாவாக உருவாக்கியிருந்தார். தேவன் மனிதனை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி அவருடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனுக்கு அதிகாரம் தந்தார்(சங்8:5,6;எபி2:7). மனுக்குலத்தை எப்போதும் இருப்புக்கோலின்கீழ் வைத்திருப்பது அவருடைய நோக்கமல்ல. அந்தக்கோல் மனிதனின் உண்மையான வளர்ச்சிக்காக, அதாவது, இந்த சந்ததி பூமியின் இராஜாக்களாக அவர்களுடைய சிலாக்கியத்தின் முழு ஆசீர்வாதத்திற்கு கொண்டுசெல்ல இயலும் வளர்ச்சிக்கான தற்காலிக ஊழியமாகவே இருக்கும்.

கர்த்தருடைய இராஜ்ஜியம் இதுவரை நிறுவப்பட்ட மற்ற எந்த இராஜ்ஜியத்திலிருந்தும் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும் என நாம் காண்கிறோம். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய நம்முடைய ஊழியம் அவர் செய்ததுபோலவே இருக்கும். நாம் இந்த மனுக்குலத்தை உயர்த்துவதில் அவருடன் பங்குகொள்வோம்.“கிறிஸ்துஇயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில்(ages to come) விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்துஇயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடேகூட உட்காரவும்செய்தார் – எபே2:6,7.

---

R 5377

# "அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி"

## லூக்கா 11:14-26, 33-36

"ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு."
- லூக்கா 11:35

தனிப்பட்ட விதத்தில் பிசாசு என்று ஒருவன் இருக்கின்றான் என்றும், அவன் ஆவியின் ஜீவிகளாய்க் காணப்படும் அசுத்த ஆவிகளின் சேனைக்கூட்டத்திற்கு அதிபதியாய் இருக்கின்றான் என்றும், அவன், தேவனுடைய அரசாளுகைக்கு எதிராக எதிர்ப்பவன் என்றுமுள்ள வேதாகமத்தின் போதனைகளை உலக ஞானிகள் எவ்வளவுதான் இகழ்ந்தாலும், இதுவே ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையிலான வேதாகமத்தின் போதனையாக இருக்கின்றது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்வோமாக. உலக ஞானிகளின் விஷயத்தில் அவர்களது (நல்ல) சிந்திக்கும் திறனானது, தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படாததே அவர்களுக்கான பிரச்சனையாகும். மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாத ஒரு தேவனிடத்திலும், ஒரு தேவதூதர் சேனையாகிய, ஆவிக்குரிய ஜீவிகளான அவருடைய ஊழியக்காரர்களிடத்திலும் நம்பிக்கை வைப்பது கடினமாய் இருக்கின்றது என உலக ஞானிகள் கூறுகின்றனர். இதைக் காட்டிலும் இன்னும் இவர்களுக்குக் கடினமாக, ஆம் காரணகாரியத்திற்கு உட்படாததாய் இருப்பது என்னவெனில், தேவனுக்கு எதிராளிகளாக இன்னுமொரு ஆவிக்குரிய அதிபதியும், இன்னுமொரு ஆவிக்குரிய சேனையும் இருப்பதுதான்; தேவன் தம்மை எதிர்க்கக்கூடிய, சிருஷ்டிகளைச் சிருஷ்டிப்பது என்பது அல்லது ஒருவேளை பரிசுத்தமானதாகவே அவர் சில சிருஷ்டிகளைச் சிருஷ்டித்திருக்க, அந்தச் (சில) சிருஷ்டிகள் நீதிக்கு எதிராளிகளாக மாறியிருக்க, சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர், அந்தச் சிருஷ்டிகளை அழிக்காமல், அப்படியே தீமையாக எதிர்ப்பதைத் தொடர்வதற்கு அனுமதிப்பது என்பது நினைத்தே பார்க்க முடியாத காரியமாக இருக்கின்றது என்பதே இந்த உலக ஞானிகளுடைய வாதமாக இருக்கின்றது.

சாத்தான்தான் முதலாவதாக மீறுதலுக்கு உட்பட்டார் என்றும், மீறுதலுக்கு உட்படுவதற்கு முன்னதாக அவர் உயர்வான நிலையில் இருக்கும் கேரூபாக இருந்தார் என்றும், பெருமை மற்றும் பேராசையின் காரணமாகத் தேவனிடத்திலான தன்னுடைய உண்மையை இழந்து போனார் என்றும், இன்று அசுத்த ஆவிகளின் சேனைகள் என்று வேதாகமம் கூறும் இவர்கள் கீழ்ப்படியாமைக்குள் வரத்தக்கதாக, இவர்களைச் சாத்தான் வஞ்சித்தார் என்றும் வேதாகமம் விவரிக்கின்றது. இந்த அசுத்த ஆவிகளின் சேனைகளானது, நமது பூமியுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறதாகவே வேதவாக்கியங்கள் கூறுகிறதே ஒழிய, எங்கோ தீச்சூளையில் காணப்பட்டு, மரித்த மனிதர்களைச் சித்திரவதைப்படுத்துவதாகக் கூறவில்லை.

இந்த எதிர்ப்புகளையெல்லாம் சமாளிப்பதற்குத் தேவனிடம் பலம் இல்லை என்று வேதாகமம் சுட்டிக்காட்டாமல், மாறாக இவர்களைச் சிலகாலம் அனுமதித்துள்ளார் என்றும், மனிதர்களுக்கும், தேவதூதர்களுக்கும் படிப்பினையாக, பாவம், கோபம், வன்மம், பகைமை, பொறாமை ஆகியவற்றின் பலனை வெளிப்படுத்துவதற்கென இவர்களை அனுமதித்துள்ளார் என்றும் வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றது. இவர்கள் சில கட்டுப்பாடுகளின் கீழ்க் காணப்படுகின்றனர்; இது குறித்து அப்போஸ்தலர், "அந்தகார சங்கிலிகள்" எனக் குறிப்பிடுகின்றார். ஜலப்பிரளயத்தினுடைய அழிவிற்குப் பிற்பாடு, இவர்கள், மனித உருவம் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இவர்கள் மனுக்குலத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ள நாடுகின்றனர்; மேலும் இதில் இவர்கள் எந்தளவுக்கு ஜெயம் அடைகின்றார்களோ, அந்தளவுக்கு, இவர்களுக்குப் பலியாடாக இருக்கும் மனுஷன் தீய ஆவிகளினால் ஆட்டுவிக்கப்படுபவனாக இருப்பான். முழுமையாய் இவர்கள் ஒரு மனுஷனிடத்தில் ஜெயம் அடைந்துவிட்டார்களெனில், அம்மனுஷன் பிசாசினால் பிடிக்கப்பட்டவனாக, பித்துப்பிடித்தவனாகி இருப்பான்.

பித்து/பைத்தியம் பிடித்தவர்களுடைய காப்பகங்களில் காணப்படுபவர்களில் பாதிப்பேர், பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது; இந்தப் பிசாசுகள் நமது கர்த்தருடைய ஊழிய காலங்களில் தொடர்புடையதாக அடிக்கடி (வேதாகமத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள பிசாசு கூட்டங்களிலுள்ள பிசாசுகள்தான்; முந்தின காலங்களில் சூனியக்காரிகள், மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள், முதலானவர்கள் மூலமாகவே இவர்கள், மனுக்குலத்துடன் தொடர்பு வைக்க முயன்றனர்; இன்றோ, ஆவியுலக ஊடகங்கள், ஆவியுலக

தொடர்பு பலகைகள் மூலம், இவர்கள் மனுக்குலத்துடன் தொடர்பு வைக்க நாடுகின்றனர். இருண்ட யுகத்தின் போது, மனதில் பதிய வைக்கப்பட்ட இந்தப் பிசாசுகளின் உபதேசங்களினால் வஞ்சிக்கப்பட்ட மனுக்குலமானது, மரித்தவர்கள் நித்தரையில் இருக்கின்றனர் என்றும், மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும் வேதாகமம் கொடுக்கும் சாட்சியினைப் புறக்கணித்துவிட்டது (1 தீமோத்தேயு 4:1; பிரசங்கி 9:5). ஆயிர வருட காலங்களில், "திரும்பக்கொடுத்தலின் காலங்களில்," "கிறிஸ்துவின் நாளில்," புதிய யுகத்தின் காலைப்பொழுதில் மரித்தவர்கள் விழித்துக்கொள்வது வரையிலும், மரித்தவர்களுடைய, "யோசனைகள் அழிந்தே" இருக்கும் (அப்போஸ்தலர் 3:21; பிலிப்பியர் 1:10). இன்றைய பாடத்தில், பிசாசினால் பீடிக்கப்பட்ட மனுஷனை ஆண்டவர் விடுவிப்பதை நாம் பார்க்கப் போகின்றோம். பிரச்சனையை, சூழ்நிலையை ஜனங்கள் நன்கு உணர்ந்துக்கொண்டனர், ஆயினும் ஆண்டவருக்கு எதிராக இருந்த காரணத்தினால், ஜனங்களில் சிலர், பிசாசுகள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்ததற்கான காரணம், இயேசு பிசாசுகளின் அதிபதியாகிய சாத்தானாக, பெயல்செபூலாக இருக்கின்றதாக, தீமையாய்ப் பேசினார்கள். இன்னும் சிலர், "உம்முடைய அற்புதங்கள் அனைத்தும் பூமிக்குரியவைகளுக்குத் தொடர்புடையவைகளாக இருக்கின்றது; பரலோகத்தில் /வானத்தில் ஏதேனும் ஓர் அடையாளத்தைக் காண்பியும்" என்று கேட்டார்கள்.

சாத்தான் தன்னுடைய சொந்த சேனையையே விரட்டுவது என்பது, தீயவர்களின் பாளையத்திற்குள்ளாகவே யுத்தம் ஏற்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருந்து, சாத்தானுடைய இராஜ்யம் பிரிந்துப்போய், வீழ்ந்துப்போவதைச் சுட்டிக்காண்பிக்கின்றது என்று கூறி, தாம் பிசாசுகளின் அதிபதியாய் இராமல், வெளிச்சத்தின் அதிபதியாக இருப்பதைக் காண்பிப்பதின் மூலம், அவருக்கு எதிராக உரைக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு இயேசு பதில் கொடுத்தார். சாத்தான், சாத்தானையே துரத்தியடிப்பது என்பது, முட்டாள்தனமான காரியமாய் இருக்கும்; மேலும் இப்படியாகக் கூறுவது என்பது, அர்த்தமற்ற ஒன்றாகவும் இருக்கும். "பிசாசுகளைத் துரத்துவதற்கு வேறே யூதர்களும், இதே வல்லமையைச் செயல்படுத்தியிருக்க, அந்த யூதர்கள் ஜனங்களால், பிசாசுகளின் அதிபதி என்று ஒருபோதும் குற்றம் சாட்டப்படவில்லை என்றும், பிசாசுகளுக்கு அநேகம் அதிபதிகள் எவ்வாறு இருக்கக்கூடும்? என்றும், தமக்கு விரோதமான அவர்களது பேச்சு நியாயமானதா என்று ஜனங்கள் நிதானித்துக்கொள்ள வேண்டும் என்றும் இயேசு கூறினார். இன்னுமாக தாம் தேவனுடைய வல்லமையைக் கொண்டு, தேவனுடைய விரலைக்கொண்டு, பிசாசுகளைத் துரத்துகின்ற உண்மையை உணர்ந்துக்கொள்பவர்களுக்கு, மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் தம்மிடத்தில் காணப்படுவதும், தம்முடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும் தம்மால் செயல்படுத்தப்படுவதுமான இவ்வல்லமையானது, தேவனிடமிருந்து, வந்துள்ள விசேஷித்த ஈவிற்குச் சாட்சியாகவும், தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது, அதாவது தேவனுடைய இராஜ்யம் உங்கள் மத்தியில் உள்ளது என்ற தம்முடைய சாட்சிக்குக் கூடுதல் சாட்சியாகவும் இருக்கின்றது என்று இயேசு கூறினார்."

ஆனால் அந்தத் தேசம், கிறிஸ்துவைப் புறக்கணித்தப்போது, தேவனால் அளிக்கப்பட்ட இராஜ்யமானது, அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஈவானது நிறுத்தப்பட்டது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தேவனுடைய கிருபையினின்று விலக்கி வைக்கப்பட்டனர்; பிற்பாடு அதுமுதல், கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தியானது வேறொரு இஸ்ரயேலரைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது; முதலாவதாக யூதர்கள் மத்தியில் கபடற்ற இஸ்ரயேலர்களாய் இருப்பவர்களை இச்செய்தியானது இழுத்துக்கொண்டது, பிற்பாடு இங்கும், அங்குமாய்ச் சென்று ஒவ்வொரு தேசத்திலுமிருந்து, இந்த வகுப்பாருக்கு, அங்கங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது.

பிசாசுகளைத் துரத்துவதற்கான இயேசுவின் வல்லமையானது, அவர் இவ்வுலகத்தின் அதிபதியானவனை, அந்தகாரத்தின் அதிபதியானவனாகிய சாத்தானைக் கையாளுவதற்கு, முற்றிலும் திறமிக்கவர் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக அக்காலத்தில் ஒருவேளை இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டிருக்குமாயின், சாத்தானும், அவனுடைய தூதர்களும் கட்டப்பட்டு வைத்திருக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் காட்டுகின்றதாய் இருக்கின்றது. எனினும் இயேசுவும், இராஜ்யமும் அச்சமயம் புறக்கணிக்கப்படும் என்று முன்னறிந்து, தேவனால் முன்னறிவிக்கப்பட்டுள்ளபடி, சாத்தானைக் கட்டும் வேலை அச்சமயம் நடைபெறவில்லை, மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலும் அவ்வேலையானது காத்திருப்பில் வைக்கப்பட்டது. இதற்கிடையில் இராஜ்யத்தில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாய்க் காணப்படும்படிக்கு, அவருடைய மணவாட்டி வகுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க, அவர் இராஜ்யத்தின் காலத்தில் தமது மாபெரும் வல்லமையையும், ஆளுகையையும் கையில் எடுத்துக்கொள்வார். அப்பொழுது அவர் பிசாசையும், அவனுடைய தூதர்களையும் கையாளுவார்; ஆம் விழுந்துபோன மனுக்குலத்தை மிகவும்

ஆட்டுவித்துள்ள சாத்தானின் ஆவியையும், பாவத்தையும் விருத்தியாக்கின அனைவரையும் கர்த்தர் கையாளுவார்.

## ''சாத்தான் கட்டப்படுதல்''

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் சாத்தான் ஆயிர வருடமளவும் கட்டப்படுவார் என்றும், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளைக் காண்பித்து, பரம பிதாவை மிக மோசமானவராக தவறாய்க் காட்டி, மில்லியன் கணக்கான மனுஷர்கள் பிறந்து, அவர்கள் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துப்போக வேண்டும் என்று பிதா திட்டம் பண்ணியுள்ளதாக அவரைத் தவறாய்க் காட்டி, ஆறாயிரம் வருடங்களாக சாத்தான் மனுக்குலத்தை வஞ்சித்து, ஏமாற்றிக்கொண்டிருந்தது போன்று, அவன் இனிமேல் மனுக்குலத்தை வஞ்சிக்கமாட்டான் என்றும் நமது கர்த்தர் கூறியுள்ளார்.

தற்காலத்தில் உலகத்தின் மீதான சாத்தானுடைய கட்டுப்பாட்டை, ஆயுதம் தரித்த பலவான் தன்னுடைய அரண்மனையைப் பாதுகாத்துக்கொண்டிருப்பதற்கு ஒப்பிட்டு, கர்த்தர் இயேசு சித்தரிக்கின்றார். சாத்தானைக் காட்டிலும் பலமானவர் வந்து, சாத்தானை மேற்கொண்டு, சாத்தானால் அபகரித்து வைக்கப்பட்டுள்ள உடைமைகளை எடுத்துக்கொள்வது வரையிலும், சாத்தான், உலகத்தின் மீதான தனது கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக்கொள்வார். தம்முடைய மேசியா - இராஜ்யம், சாத்தானுடைய இராஜ்யத்தைக் காட்டிலும் பலமானதாகவும், அவனுடைய இராஜ்யத்தைக் கட்டுப்படுத்தி, அவனைக் கட்டும் என்று இயேசு முன்னுரைத்தார். இதன் விளைவாக, ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலத்தின் மீது காணப்பட்ட பாவம் மற்றும் மரணத்தினுடைய சாபத்தினின்று, மனுக்குலம் விடுவிக்கப்படும். மேசியாவின் இராஜ்யம் மாபெரும் ஏழாம் நாளில் அல்லது ஓய்வுநாளில் காணப்படும்; அப்பொழுது இரட்சகரை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்.

இதற்கிடையில், இந்தச் சுவிசேஷ யுகத்தில், பிதாவின் திட்டத்திற்கு ஏற்ப, இயேசு தம்முடைய செய்தியின் மூலமாகவும், அப்போஸ்தலர்களுடைய செய்தியின் மூலமாகவும், இராஜ்யத்தில் தம்முடன் உடன் சுதந்தரர்களாகவும் இருக்கும்படிக்கு, உலகத்திலிருந்து ஒரு மணவாட்டி வகுப்பாரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இந்த வகுப்பாரிலுள்ள அனைவருடைய உண்மையையும் பரீட்சிக்கும்படிக்கு, சாத்தானுக்கு அதிகமான சுதந்தரம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு எஜமான்கள் மாத்திரமே இருக்க முடியும். ஜனங்கள் ஒன்றில் அறிந்து அல்லது அறியாமையில் இவர்களுள் ஒருவரைச் சேவிக்கின்றனர். "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" என்று இயேசு கூறினார்.

## ''முழு உலகமும் (சாத்தானால்) ஆட்டுவிக்கப்பட்டுள்ளது''

இந்த உலகத்தின் அதிபதியானவனாகிய சாத்தான், "இன்று கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியைச் செய்து வருகின்றான்" என்று பரிசுத்தவானாகிய பவுல் தெரிவிக்கின்றார். இயேசுவும் கூட இதே கருத்தைக்கொண்டிருந்து, இச்சம்பவத்தில் தம்மால் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பிசாசு பிடித்திருந்த மனுஷனை, உலகத்திற்கு ஒப்பிடுகின்றார். இப்படியாகவே, கிறஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், பிசாசின் வல்லமையினின்று விடுவிக்கப்படுகின்றனர். பாவமானது உங்களுடைய அழிவுக்கு ஏதுவான சரீரங்களில் ஆளுகைச் செய்யாதிருப்பதாக" (ரோமர் 6:12).

இவர்களுடைய இருதயங்கள், பெருக்கி, ஜோடிக்கப்பட்டிருந்ததாக, அதாவது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்ட இருதயங்களாக இருப்பதாக இயேசு குறிப்பிடுகின்றார். ஆனால் உலகத்தின் ஆவி மூலம், அதாவது பெருமை, கோபம், வன்மம், பகை, சண்டை, மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் மூலம் இப்படியான இருதயமுடையவர்களிடத்தில் மீண்டும் ஆதிக்கம் பெற்றுக்கொள்வதற்குச் சாத்தான் நாடுவான் என்றும் இயேசு கூறுகின்றார் (மத்தேயு 12:43-45). "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று அப்போஸ்தலர் எழுதுகின்றார் (1 பேதுரு 5:9). ஒருவேளை சாத்தான் எதிர்க்கப்படவில்லையெனில், தேவனைப் பற்றும் அறிவினால் உண்டான வெளிச்சமும், ஆசீர்வாதமும் சாபமாகவும், பாதிப்பாகவும்

ஆகிவிடும், மேலும் அந்த நபர், கிறிஸ்துவுடனான உறவிற்குள் வருவதற்கு முன்பாக இருந்ததைக் காட்டிலும், கேடான நிலையில் காணப்படுவார்.

இதை வலியுறுத்தும் வண்ணமாக, விளக்கானது, மரக்காலால் மூடி வைக்கப்படாமல், மாறாக நன்மை உண்டாகத்தக்கதாக, அதாவது வெளிச்சம் கொடுக்கத்தக்கதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறினார்; இதுபோலவே பெற்றுக்கொள்ளப்பட்ட சத்தியத்தின் வெளிச்சமும், தேவனுடைய கிருபையும், மறைத்து வைக்கப்படாமல், மாறாக தேவன் மகிமைப்படத்தக்கதாக, பிரகாசிக்கப் பண்ண வேண்டும் என்று இயேசு கூறினார். இப்படிச் செய்யவில்லையெனில் ஒளியானது அணைந்துப்போய், இருள் காணப்படும். கண் என்பது அறிவைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் எதுவரையிலும் நாம் உண்மையான பிரகாசத்தை (அ) அறிவைப் பெற்றிருக்கின்றோமோ, அதுவரையிலும் முழுச்சரீரமும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்; ஒருவேளை அறிவானது அழிக்கப்பட்டுவிட்டால், ஒருவேளை கண்ணானது குருடாகிவிட்டால், முழுச்சரீரமும் பாதிப்படைந்து இருளில் காணப்படும்.

வெளிச்சத்தை அடைகின்ற ஒவ்வொருவரும் அதனை இழந்துப்போய், இருளை அடையாதபடிக்கு, அந்த வெளிச்சத்தினுடைய விலையேறப்பெற்றவைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். கண், ஒளி என்பது இங்கு, நம்மை ஆசீர்வதிப்பதற்கு அதிகமான வல்லமையைக் கொண்டிருக்கும் பரிசுத்தஆவியினால் உண்டாகும் பிரகாசிப்பித்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை இழந்துப்போவது என்பது, கர்த்தரைப் பற்றின அறிவை நாம் அடைவதற்கு முன்பு, நாம் அடைந்திருந்த இருளைக் காட்டிலும், அதிகமான இருள் அடைவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

**ஆமென்!**

R 5377

# ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர்

## NAMES WRITTEN IN THE LAMB'S BOOK OF LIFE

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்"– வெளிப்படுத்தல் 3:5.

இந்த சுவிசேஷயுகத்தில் ஒரு விசேஷ வகுப்பாருக்காக தரப்படுகிற ஒரு அழைப்பானது, தற்போதைய நிலைமைகளிலிருந்து வெளியே வந்தவர்கள் – அதாவது பாவத்திற்கு இசைவாக இல்லாதவர்களுக்காக தரப்படுகிறது.

இந்த வகுப்பாராக ஆனவர்களுக்கு கிறிஸ்துவின்மூலம் தேவஏற்பாடுகளைக் குறித்த அறிவு அருளப்பட்டிருக்கிறது. மேலும் இவர்கள் கர்த்தரோடுகூட அர்ப்பணிப்பு செய்வதன்மூலம், இந்த சிலாக்கியங்களை தாங்களாகவே தாமதமின்றி பயன்படுத்தலாம்.

பிதாவினுடைய ஊழியத்திற்காகவும், சத்தியத்தின் ஊழியத்திற்காகவும் எவ்வாறு இயேசு தம்முடைய பூலோக வாழ்க்கையை கொடுத்து, அதினால் தவறாக புரிந்துகொள்ளப்பட்டாரோ அதுபோல இயேசுவினுடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்களும், கனம் அழியாமையில் பங்கு பெறுகிறவர்களானால் இவ்வுலக காரியங்களில் ஏமாற்றங்களினால் உபத்திரவப்படுவர். இயேசு எவ்வாறு ஜெயங்கொண்டு பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்தாரோ, அதுபோலவே ஜெயங்கொள்ளுகிறவர்களும் இயேசுவின் சிங்காசனத்தில் அமருவர்.

இயேசுவின் ஜெயங்கொள்ளுதலையும், அவரை பின்பற்றுகிறவர்களின் ஜெயங்கொள்ளுதலையும் அவற்றின் தனித்தன்மைகளோடுகூட பகுத்துப் பார்க்கவேண்டும். அவருடைய ஜெயங்கொள்ளுதல் பரிபூரணமான ஜெயங்கொள்ளுதல் ஆகும். ஏனெனில் அவர் பிதாவினால் போதிக்கப்பட்டவராகவும், தூதர்களுடைய உதவியை பெற்றவராகவும், பாவமில்லாதவராகவும், நீதிமானாகவும் இருந்ததினால் அவருடைய ஜெயங்கொள்ளுதல் முற்றிலும் முழுமையானதாக இருந்தது. ஆனால் அவருடைய பின்னடியார்கள், மாம்சத்தில் அபூரணராக இருப்பதால், பரிபூரணமான ஜெயங்கொள்பவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் அவர் இருதயத்தில் நீதியை வெளிப்படுத்துபவராக, ஜெயம்கொள்ள விருப்பமுள்ள ஆவியுடையவராயிருப்பின், கிறிஸ்துவின் மூலமாக இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்படியாக தேவனுடைய கிருபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் ஜெயங்கொள்ளவேண்டும் என்ற இந்த ஆவியை உடையவராக இருப்பதை வெளிப்படுத்தவேண்டும். இல்லையெனில் கர்த்தரோடுகூட அவருடைய இராஜ்யத்தில் இணையமுடியாது. அவர்கள் மாம்சத்தில் அபூரணராக இருப்பினும், ஆவியில் கர்த்தருடைய சாயலை உடையவர்களாக இருக்கவேண்டும்.

அந்த வகையில், எந்த கணப்பொழுதில் நம்மை அர்ப்பணிக்கும் படிக்குள்ளாக வந்து, ஏற்றுக்கொள்ளப் படுகிறோமோ, அத்தருணமே நம்முடைய கறைதிரைகளும் அபூரணங்களும் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரங்களினால் மூடப்படுகிறது. நாம் பெற்றிருந்த கறைதிரைகள் மூடப்படுவதற்கு மட்டுமல்லாமல், வேதத்தில் அடையாளமாக சொல்லப்பட்ட, பிரதிநிதிகளாக இருப்பவர்களும் இவ்வாறு உடுத்தியிருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவனைப்பற்றிய அடையாளங்களிலும், கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய அடையாளங்களிலும் அவர்கள அந்த வஸ்திரத்தை உடுத்தியிருக்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளங்களில் நம்முடைய கர்த்தரும், பரிசுத்தவான்களும் வெண்வஸ்திரம் தரித்தவர்களாக காண்பிக்கப்படுகின்றனர். நம்முடைய கர்த்தரின் உயிர்த்தெழுதலின்போது தோன்றின தூதர்கள் வெண்மையான உடையை தரித்திருந்தனர். நம் கர்த்தர் சொல்லும்போது, "தன் மானம் காக்கப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரத்தை காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்".

மகிமையடைந்த சபையைப் பற்றி குறிப்பிடும்போது, நீதியின் வஸ்திரத்தை அகற்றிப் போட்டவர்களாக அல்ல, ஆனால் வெண்வஸ்திரந்தரித்து தொடர்ந்து நடப்பவர்களாக இருப்பர். அது இனிமேலும் நம்மேல் போடப்பட்ட நீதியின் வஸ்திரமாக அல்ல, நம்முடைய சொந்த நீதியாகவே இருக்கும். வெண்வஸ்திரம் தரித்தவர்களாக இருப்பது என்பது, அப்போது பரிசுத்தமுள்ளவர்களுக்கு மட்டுமே உரியதாக புரிந்துகொள்ளப்படும். தற்போதுபோல நீதியின் வஸ்திரமாக கருதப்படுவதுபோல் இல்லாமல், நிஜமான நீதியின் வஸ்திரமாக இருக்கும்.

"அழிவுள்ளதாக விதைக்கப்படும், அழிவில்லாததாக எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், கனமுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்".

### இரு ஜீவ புஸ்தகங்கள்

வேதாகமம் இரு ஜீவ புஸ்தகங்களைப் பற்றி கூறுகிறது, அவை தற்கால யுகத்திற்கான ஒன்றும், ஆயிரவருட யுகத்திற்கான மற்றொன்றும் ஆகும். நாம் வாசிக்கிறபடி "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிக்கப்படும். அவனுடைய பேரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடமாட்டேன்". மேலும்

“புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது” – வெளி 3:5; 20:12.

தற்போது திறக்கப்பட்டதாக இருக்கும் இந்த விசேஷமான ஜீவ புஸ்தகத்தில், இந்த சுவிசேஷயுகத்தில் ஜெயங்கொண்டவர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது. நாம் அர்ப்பணிப்பின் படியை எடுத்து, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படும்போது, தெய்வீகக் குடும்பத்தில் ஒருவராக கருதப்படுவது பொருத்தமானது. எவ்வாறு யோசேப்பு, மரியாள், மார்த்தாள் போன்றோர் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களாக பதியப்படுகிறார்களோ, அவ்விதமாகவே கிறிஸ்துவின்மூலம் தெய்வீகக் குடும்பத்தில் அங்கத்தினராக வருபவர்களின் பெயர்களும் பதிவுசெய்யப்படுகிறது.

இவ்விதமான பேரெழுதப்படுதல் தற்கால யுகமுழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் பொருள் என்னவெனில், இவ்வாறாக பேரெழுதப்பட்டவர்கள் தெய்வீகக் குடும்பத்தின் அங்கத்தினராக மட்டுமல்ல, மணவாட்டி வகுப்பாரும் ஆவர். இந்த நிலையை தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டு, அவர்கள் ஜெயம்கொண்டவர்களாக வேண்டும்.சில வேதப் பகுதிகளில் திரளான கூட்டத்தாரும் ஜெயங் கொண்டவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தோற்றமளிக்கிறது. வேறு சில பகுதிகளில அவ்வாறில்லை. சிறுமந்தை வகுப்பாராகவோ அல்லது திரள் கூட்டத்தாராகவோ அல்லது பூமியில் பரிபூரண மனிதர்களாகவோ இடம்பெற இருப்பவர்கள், படிப்படியாக இவர்களெல்லோரும் ஜெயங்கொண்டவர்களாகவேண்டும். மணவாட்டி வகுப்பாரோ, “முற்றிலும் ஜெயங் கொண்டவர்கள்” என்று குறிப்பிடப்படுகின்றனர். அவர்களின் பரலோக இராஜ்யத்தின் பிரவேசத்தை அபரிதமாக பெற்றுக்கொள்வர்” – 2பேதுரு1:10,11.

நம்முடைய ஆதார வசனப்பகுதியில் திரள்கூட்டமும் சேர்க்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதை நாம் உறுதிப்படுத்தமுடியாது. ஒருவகையில் பார்த்தால் அவ்விதமாகவும், வேறுவகையில் பார்த்தால் அவ்வாறில்லாததாகவும் தோன்றுகிறது. நம்முடைய மனதில் இதைப்பற்றி உறுதியாக பதியாவிட்டாலும், கர்த்தருடைய நோக்கத்திற்காக காத்திருப்போம். நமக்குத் தெரிந்தபடி சில பெயர்கள் கிறுக்கிப் போடப்படும். இரண்டாம் மரணத்திற்கு போகும் எல்லாரும் இந்த விசேஷமான பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டு, ஜீவ புஸ்தகத்திலிருந்து அவர்களுடைய பெயர்கள் எடுத்துப்போடப்படும். திரள்கூட்ட ஜனங்களின் பெயர்களும்கூட இந்த விசேஷ பதிவேட்டிலிருந்து ஒருவேளை கிறுக்கிப் போடப்படலாம். ஆனால் நாம் இவ்வாறு கருத்துக்களை சுட்டிக்காட்டுவது நம் விருப்பமல்ல. அவர்கள் நம்முடைய சகோதரரும், கர்த்தருடைய சகோதரருமாயிருப்பதினால், முடிந்தளவு அவர்களுக்கு ஆதரவாகவே சிந்திக்க விரும்பலாம்.

**பிதாவினிடத்தில் அறிமுகம்**

“அவனுடைய பெயரை நான் அறிக்கை செய்வேன்”. முதலாவதாக இதன்மூலம் நமக்கு கொடுக்கப்படுகிற சிந்தை என்னவென்றால், நாம் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய நேரடியான சமூகத்தில் ஒருபோதும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நம்முடைய கர்த்தர் நம் மணவாளனாக மாத்திரம் குறிப்பிடப்படாமல், நம் மூத்த சகோதரராகவும் இருந்து, நாமும் அவருடைய சகோதரராக கடந்துசெல்வதற்காக, திரைக்கு அப்பால் காத்திருப்பதாக அடையாளப்படுத்தப்படுகிறது. நாம்அவ்வாறு திரையை கடந்துசெல்லும்போது, பிதாவின் பிரதிநிதியாக இருந்து, கிறிஸ்துவின் பள்ளியில் நமக்கு கற்றுக்கொடுக்கும் வேலையை நம்முடைய கர்த்தரிடம் பிதாவானவர் அளித்திருப்பதனால், பிதாவினிடத்தில் நம்மை அறிமுகப்படுத்துவது சரியானதாகவும், பொருத்தமாயும் இருக்கும்.

வேறொரு இடத்தில் கர்த்தர் கூறும்போது, நாம்அவரைக்குறித்து வெட்கப்பட்டால், அவரும் நம்மைக் குறித்து வெட்கப்படுவார் என்கிறார். இந்த வார்த்தையானது திரள்கூட்டத்தாரை இவ்விடத்தில் சேர்த்துரைப்பதில்லை என்பதை குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் சிறுமந்தை வகுப்பாரைப்பற்றி பிதாவினிடத்திலும், அவருடைய பரிசுத்த தூதர்கள் மத்தியிலும் கிறிஸ்துவின் மணவாட்டியாக அறிக்கை பண்ணுவார் என்று நமக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. இது சங்கீதம் 45இல் அழகாக அடையாளப்படுத்தப்படுகிறது. “சித்திரத் தையலாடை தரித்தவளாய் இராஜாவினிடத்தில் கொண்டுவரப்படுவாள். அவளுக்கு பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கொண்டுவரப்படுவார்கள்”. மணவாட்டி வகுப்பாரே விசேஷமாக அறிக்கை பண்ணப்பட்டும், அறிமுகப்படுத்தப்பட்டும் இருப்பர். ஆக, அந்த வகுப்பார் மத்தியில் இடம்பெற நம்பிக்கையோடு போராடுவோமாக. நாம் நமக்கு தேர்ந்தெடுக்கிற அதே இடத்தையே பிதாவானவர் நமக்கு முன்தேர்வு செய்திருந்தார்.

---

R 5378

# யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்?

# WHO MAY PRAY AND FOR WHAT?

**ஆதார வசனங்கள்** : லூக்கா 11 : 1–13.

**திறவுகோல் வசனம்** : "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் " – லூக்கா 11 : 9.

இயேசு தனிமையிலேயே வழக்கமாக ஜெபித்துவந்தது வெளிப்படையாகத் தெரிகிறது. நாம் வாசிக்கிறபடி சில சமயங்களில் இரவு முழுவதும் தேவனிடத்தில் ஜெபிப்பதற்காகவே செலவிட்டார் என்று நாம் வாசிக்கிறோம். அவரே பிதாவாக இருந்திருப்பாரென்றால், பின் சிலகாலம் மனிதர் மத்தியில், "கிறிஸ்துஇயேசு என்ற மனிதனாக" வெளிப்படையாகத் தோன்றி வாசம்பண்ணினார் என்பது எந்தளவு பொருந்தாததாக இருக்கிறது. ஆனால் இயேசு பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது வெளிப்பட்ட கருத்துக்களைப் பார்க்கிறோம்;

"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்"(யோவான் 14:28).

"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தை செய்யவே நான் வந்தேன்"– யோவா6:38;

"எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்கு சித்தமானதையே நான் தேடுகிறபடியால், என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" – யோவான் 5:30. போன்ற அவரது சொந்த வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமானதாக உள்ளது.

பிதாவே மனிதனாக வேடமிட்டு வராமல், இயேசு லோகோஸாக( The Logos), தேவனுடைய வார்த்தையாக அல்லது தேவனுடைய செய்தியாகவே வந்தார். அவரை பிதாவே பரிசுத்தப்படுத்தி உலக இரட்சகராகும்படி உலகிற்கு அனுப்பினார். மேலும் உலகை சாத்தான் மற்றும் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாக்கி,தெய்வீக சாயலையடைய விருப்பமுள்ளவர்கள் மற்றும் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களை, பிதாவினுடைய தயவு பெற்றவர்களாகவும், நித்தியஜீவனை பெற்றுக்கொள்கிறவர்களாகவும், திரும்பக் கட்டும்படி படிப்படியாக அதின்மேல் இராஜாவாக இருக்கும்படியாகவும் அனுப்பினார் – ஏசாயா25:6–8; ரோமர்8:21.

தன்னுடைய ஊழியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக இயேசு, இரட்சிப்பின் திட்டத்தின் மாபெரும் ஆசிரியரான அவருடைய பிதாவினிடத்தில் முறையான தொடர்பு கொண்டிருந்தார். அவருடைய ஜெபங்கள் வேடிக்கையானவைகளல்ல, மாறாக நேர்மையானவைகளாயிருந்தன. அவர் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டதைப்போலவே, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட விரும்புபவர்களும் செய்யவேண்டும் என கூறினார்.

சீஷர்களும், தங்களுடைய போதகரால் அடிக்கடி செய்யப்படும் ஜெபங்களையும் அதினால் அவர் பெற்ற ஆசீர்வாதங்களையும் கவனித்திருப்பர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இயேசு அவர்களை ஜெபம் செய்யும்படி வலியுறுத்தாமல், தம்முடைய உதாரணத்தின்மூலம் ஜெபம் செய்வதன் சிலாக்கியத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற போதித்தார். ஏற்ற சமயம் வந்தபோது தங்களுக்கு "ஆண்டவரே ஜெபம் பண்ணக் கற்றுத்தாரும்" என அவர்கள் வேண்டினர். யார் ஜெபிக்கலாம் ? மாபெரும் சிருஷ்டிகரிடத்தில் எவற்றிற்காக ஜெபிக்கலாம் ? என நாம் கேட்பது நலமே. இல்லையெனில், தங்கள் இச்சைக்கேற்றபடி அல்லது எவ்வித அதிகாரமுமின்றி சிலர் ஜெபிப்பதுபோல் நாமும் செய்வதுபோலாகும் என்று அப்.யாக்கோபு கூறுகிறார் .

ஆராதித்தல் மற்றும் புகழுதலைக் குறிக்கக்கூடிய – தொழுது கொள்வதற்கும், ஜெபிப்பதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. யாரொருவர் கர்த்தரைப் புகழுகிறாரோ, அவர் முழங்கால்படியிட்டு தம்முடைய நன்றிகளையும் போற்றுதல்களையும் தெரியப்படுத்துவார். ஆனால் தேவனிடத்தில் விண்ணப்பங்களை, ஜெபங்களை ஏறெடுக்கிற அந்த சிலாக்கியமானது, முற்றிலும் வெகு சிலருக்காகவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. யூதர்கள் ஜெபிக்க சிலாக்கியம் பெற்றிருந்தனர். ஏனெனில் அவர்கள் ஒரு தேசமாக நியாயப்பிரமாணத்திற்கு கீழாக, "தேவனுடைய வீட்டின் ஊழியராக" தேவனோடு ஒரு நிழலான உறவைக் கொண்டிருந்தனர். ஆனால் புறஜாதியாரோ, யூதர்களுக்கான தேவனுடைய தயவு முடிவடையும்வரை ஜெபத்தின்மூலம் தேவனை நெருங்க சிலாக்கியம் பெற்றிருக்கவில்லை. அதாவது இயேசுவின் சிலுவை மரணத்திற்கு மூன்றரை ஆண்டுகள் பின்புவரை, அவர்கள் அச்சிலாக்கியத்தை பெறவில்லை.

வேதாகமத்தின்படி, முதல் புறஜாதி மனிதரின் ஜெபங்களாக கொர்னேலியுவின் ஜெபங்களே ஏற்றுக்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் இயேசுவைப்பற்றியும் அவருடைய இரட்சிப்பின் ஊழியத்தையும் பற்றி போதிக்கப்பட்டு, இயேசுவைப் பின்பற்றுகிறவராக மாறுகின்றவரைக்கும் அவருடைய ஜெபங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன்பின்பே அவருடைய ஜெபங்களும் அவருடைய அர்ப்பணிப்பும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தெய்வீகக் குடும்பத்தில் புத்திரராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். மேலும் தேவபுத்திரராக

தேவனிடத்தில் ஜெபிக்கும் சிலாக்கியத்தையும் அல்லது உரிமையையும் பெற்றார்(அப்10:25–48).

அதேபோல, இந்நாளில்கூட யாரொருவர் தேவனிடத்தில் பக்தியுடையவராக ஆராதனை செய்ய வருகிறாரோ, அவர் இயேசுவினுடைய அர்ப்பணிக்கப்பட்ட சீஷராகாதவரை ஜெபிக்க சிலாக்கியம் பெறஇயலாது. எனினும், அந்த அர்ப்பணிக்கப்பட்டவர்களது முதிர்ச்சிபெறாத குழந்தைகள் இதற்கு விதிவிலக்காக இருந்து, ஜெபிக்க சிலாக்கியம் பெற்றுள்ளனர். இப்பாடத்தைப்பற்றி உலகம்முழுவதும் தவறாக போதிக்கப்பட்டு வருகிறது. ''நம்முடைய பிதா'' என்ற இயேசுவின் வார்த்தைகள், ''தேவனுடைய தகப்பன் ஸ்தானத்தையும், அதேவேளையில் அவரே மனிதனாக சகோதரத்துவத்தையும் அடையாளப்படுத்துகிறது என தவறாக போதிக்கப்படுகிறது. இக்கருத்து நிராகரிக்கப்படவேண்டும். உண்மை என்னவெனில், அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக இவர்களே ''எங்கள் பிதாவே'' என ஜெபிக்க போதிக்கப்பட்டிருக்கிறார்களேயன்றி, தள்ளப்பட்டிருக்கிற உலக பொது மனுக்குலமல்ல.

மீட்கப்படும் இரத்தத்தின்மேல் வைக்கப்படவேண்டிய தனிப்பட்ட விசுவாசத்தை புறக்கணிக்கக்கூடிய ஒரு மனப்பாங்கு பொதுவாகவே உள்ளது. அதாவது ''என்னையல்லாமல் ஒருவனும் என் பிதாவினிடத்தில் வரான்''(யோவா14:6) என்பது நிராகரிக்கப்படுகிறது. உண்மையாகவே ஆதாம் தேவ குமாரனாக சிருஷ்டிக்கப்பட்டார். ஆனால் அவரது கீழ்ப்படியாமையும் மரணத்தீர்ப்பும் அந்த உறவை துண்டித்தது. கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்படுத்திய வழியைத்தவிர மீண்டும் அந்த உறவு சீர்ப்படுத்தப்பட முடியாது. ஜெபம் என்பது ஒரு ஆச்சரியமான சிலாக்கியம். இது பாவிகளுக்கானது அல்ல, மாறாக, பிதாவினால் நியமிக்கப்பட்ட இயேசு என்னும் மாபெரும் பரிந்து–பேசுகிறவரால் நீதிமானாக்கப்பட்டவர்களுக்கானதாகும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அளித்த மாதிரி ஜெபம் மிகவும் எளிமையானது. அது முற்றிலும் சுயநலமில்லாதது. ''நான்'' மற்றும் ''எனக்கு'' என்பதற்கு பதிலாக, தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக உள்ள எந்த வகுப்பாரும் புரிந்துகொள்ளும்வகையில், ''நாங்கள், நமக்கு, நம்முடைய'' என உள்ளது. இது சுயநலமற்றதாக இருப்பதோடு, பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபமல்ல. ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் என்ற ஒரேயொரு விண்ணப்பம் மட்டுமே பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் எளிமையானதாக உய்த்துணர முடிகிறது. மேலும் குறிப்பாக இது ஆவிக்குரிய வகையில் போஷிக்கப்படுதலைக் குறிக்கிறது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஜெபம் பரலோகப்பிதாவின் நாமம் அல்லது குணாதிசயங்களின் மகத்துவம் மற்றும் புனிதத்தன்மையை பயபக்தியுடன் ஏற்றுக்கொள்ளும் விதமாக ஆரம்பிக்கிறது. அடுத்து உலகத்தில் தற்போது உள்ள பாவத்தின் நிலைமையை அறிக்கை செய்வதுடன், தேவன் அருளிய வாக்குத்தத்தமாகிய பூமியிலே நிறுவப்படப்போகும் இராஜ்யத்தின் மேல் வைக்கப்படும் விசுவாசத்தையும்அறிக்கை செய்கிறது. மேலும் 6000 வருட பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையானது வீழ்த்தப்பட்டு, இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தானும் கட்டப்படுவான் என்பதையும் அறிக்கை செய்கிறது(வெளி20:1–3).''உம்முடைய இராஜ்யம் வருவதாக'' என்ற வேண்டுதல் தேவனிடத்திலும், பாவத்தை நீக்கி நீதியான இராஜ்யத்தின் நிறுவுதலில் வைக்கும் விசுவாசத்தை மாத்திரமல்ல, அதைவிட இன்னும் அதிகமான அர்த்தமுடையதாகும். என்னவெனில், விண்ணப்பம் செய்கிறவர் தன் இருதயத்தில் தேவனிடத்திலும் அவருடைய நீதியின்மேலும் பட்சதாபம் உள்ளவராகவும், பாவம் மற்றும் மரணத்தின்மீது அநுதாபம் இல்லாதவராகவும் இருக்கவேண்டும்.

அடுத்த விண்ணப்பம் என்னவெனில், உமது சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக'' ஆகும். இது தேவனுடைய வாக்குத்தத்தமாகிய, தோல்வியடையாத இராஜ்யத்தின்மேல் வைக்கும் முழு நம்பிக்கையாகும். அந்த இராஜ்யத்தின்போது சாத்தான் கட்டப்படுவான். பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகை முடிவுக்கு வந்து, பூமியானது தேவனுடைய மகிமையை அறியும் அறிவாகிய வெளிச்சத்திற்குள் வரும். அப்போது இறுதியில் தேவனுடைய மகிமைக்கு முன்பாக முழங்கால் யாவும் முடங்கி, நாவுகள் யாவும் அறிக்கை பண்ணுகிறவரைக்கும், துணிகரமாக எதிர்ப்பவர்களை அது அழித்துவிடும்.

மேலும் இது, இராஜ்யமானது பூமியை முழுஅளவில் மறுசீரமைப்பு ஏற்படுத்தி அதனுடைய முந்தைய ஏதேனின் நிலைமைக்கு மாற்றி, மனிதனை அவனுடைய ஆதி பரிபூரணமாகிய தன் சிருஷ்டிகரது சாயலுக்கு கொண்டுவரும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது. அம்மாதிரியான நிலைமைகள் பூமியில் நிலவும்வரை, தேவசித்தமானது பரலோகத்திலே தற்போது இருப்பதுபோல பூலோகத்திலும் பரிபூரணமாக இருக்காது. மேலும் இன்னுமொரு கருத்து என்னவெனில், பாவமும் மரணமும் நீக்கப்படும்போது, முழு மனுக்குலமும், தற்போது தூதர்கள்போல, தேவனுடைய தயவைப்பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். இதையே இயேசு பின்பு தெளிவாக கூறி உறுதிப்படுத்தும்போது,''இனி துக்கமில்லை, அலறுதலுமில்லை, மரணமுமில்லை, ஏனெனில் முந்தைய பாவம் மற்றும் மரணம் ஒழிந்துபோயின என்கிறார்– வெளி21:4.

அன்றன்றுள்ள ஆகாரம் தாரும் என்ற வேண்டுதல், நம்முடைய பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய வாழ்வாதாரமானது தேவனிடத்திலிருந்து வரவேண்டும்

என்பதை நாம் உணர்ந்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும் எவ்வகையான உணவு என்று தெளிவாய்க் குறிப்பிடாதிருந்து தவறு செய்தால், நமக்கு பசியில்லை என்பதையும், விருப்பம் இல்லை என்பதையும் குறிக்கிறதோடு, தெய்வீக ஞானம் ஏற்பாடுசெய்யும் என்ற நம்பிக்கையும் இல்லாதிருப்பதைக் காட்டுகிறது.

நீதிமானாக்கப்பட்ட நிலையில், ''எங்கள் மீறுதல்களை எங்களுக்கு மன்னியும்'' என்று ஏறெடுக்கும் ஜெபமானது ஆதி பாவத்தைக் குறிப்பதில்லை. ஏனெனில் அவர் நீதிமானாக்கப்பட்டபோது அந்த ஆக்கினையிலிருந்து விடுவிக்கப்பட்டாயிற்று. பாவங்கள் அல்லது மீறுதல்கள் என்பது எல்லாரிடத்திலும் உள்ள உள்நோக்கமில்லா அபூரணங்களைக் குறிப்பதுடன், இயேசுவின் பின்னடியார்கள் அவைகளை மேற்கொள்ள போராடவேண்டும். நம்முடைய மாசு மற்றும் கறைகளுக்கான மன்னிப்பைப் பெற வேண்டும்போது, நாம் நமக்கு விரோதமாக பாவம் செய்தவர்களை பெருந்தன்மையோடு மன்னிக்கவேண்டும். இதுவும் தேவனோடுகூட உறவில் இருப்பதற்கு பொதுவான நிபந்தனைகளுக்கான நினைவூட்டல் ஆகும். தேவனுடைய ஆவியாகிய அன்பின்ஆவியை வளர்க்காமல், நாம் கிருபையில் வளரமுடியாது. மேலும் தேவனுடைய தயவாகிய சூரிய வெளிச்சத்தில் நிலைத்திருக்கமுடியாது. இந்த ஆவியானது, மற்றவர்களோடு சம்பந்தப்படும்போது காண்பிக்கின்ற பெருந்தன்மையான ஆவி அல்லது மன்னிக்கின்ற ஆவியாகும். விசேஷமாக இம்மாதிரியான தேவகிருபையின் இரக்கத்தை முன்மாதிரிகளாக வெளிப்படுத்த முயற்சிக்கிறவர்களிடம் தேவன் தம் தயவைத் தர தீர்மானமாயிருக்கிறார்.

''எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல்'' என்கிற வார்த்தை, நம்மைச்சுற்றிலும் இருக்கிற தீமையின் வல்லமைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவும், மேலும் புது சிருஷ்டிகளாக தெய்வீக உதவி இல்லாமல் இவைகளை நம்மால் வெற்றிகரமாக எதிர்த்து நிற்க இயலாது என்பது அடையாளப்படுத்துகிறது.

''தீமையினின்று எங்களை இரட்சியும்'' என்பது சாத்தான் நம்முடைய மாபெரும் எதிராளி என்பதை அடையாளங்கண்டிருந்து. அவனை எதிர்த்துநிற்க நாம் எப்போதும் விழிப்புள்ளவர்களாக இருக்கும் அதேசமயம், நம்முடைய இயலாமையை உணர்ந்தவர்களாக, தெய்வீக உதவி நமக்குத் தேவை என்பதை உணரவேண்டும். ''சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே''(2கொரிந்2:11). ''மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு'' – எபேசி6:12.

**“தேடுங்கள், தட்டுங்கள், கேளுங்கள் – பெற்றுக்கொள்வீர்கள்”**

இப்பாடத்தின் இறுதி வசனங்களில், ஜெபமானது வைராக்கியத்துடனும், வாஞ்சையுடனும் செய்யப்படவேண்டுமே தவிர, உயிரோட்டமில்லாத, வீண்வார்த்தைகளால் இருக்கக்கூடாது என இயேசு அறிவுறுத்துகிறார். இதை ஒரு உதாரணத்தின்மூலம் விளக்குகிறார். முதலில் தன் நண்பனாக இருந்தும், தான் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று நினைத்த ஒரு மனிதனை குறிப்பிடுகிறார். ஆனால் இறுதியாக தன் நண்பனுடைய வாஞ்சையுள்ள வேண்டுதலினால் தொடப்பட்டு உதவிசெய்தார் என பார்க்கிறோம். அதேபோல, தேவனுடைய இராஜ்யம் வரவும், அவருடைய சித்தம் செய்யப்படவும் ஜெபிக்கும்போது, அது நீண்டகாலமாக தாமதித்தாலும், நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை என நினைக்கக்கூடாது. தேவனுடைய வாக்குத்தத்ததுக்கு இசைவானதாக நம்முடைய ஜெபமானது இருந்தபோதிலும், நம்முடைய ஜெபத்தினால் இராஜ்யம் வர துரிதப்படுத்தாவிட்டாலும், விசுவாசத்தின் மூலமாக நாம் ஒரு இளைப்பாறுதலின் ஆசீர்வாதத்திற்குள் நுழைந்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை தொடர்ந்து நம் மனதிற்கு கொண்டுவந்து, அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக காத்திருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு நிஜமாகவே தர விரும்புவது பரிசுத்த ஆவியாகும். ஏனெனில் மாம்சீக பெலவீனங்களினால் நம்மில் ஒருவரும் நம்முடைய பரிபூரண போதகரைப்போன்று, முதலில் ஆவியினால் நிரப்பப்படமுடியாது. ஆனால் அவருடைய ஆவியினால் நிரப்பப்படும்பொருட்டு, தேவனிடத்தில் வரவிரும்புகிறவர்களாக, அவரோடு இசைவாய் இருக்க விரும்புகிறவர்களாக, அவருடைய குணாதிசயங்களுக்கு ஒத்தவர்களாக வர விரும்புகிறவர்கள், அவர்களுடைய தேடுதலினால் கிடைக்கப்பெற்றும், தட்டுவதினால் கதவு திறக்கப்பட்டும் இருக்கிறது.

நம்முடைய பரமபிதா நம்முடைய வேண்டுதல்களுக்கு மோசமான பதிலளிப்பார் எனவும் அச்சப்படக்கூடாது. ஒரு பூமிக்குரிய தந்தை, பசியில் இருக்கும் தன் குழந்தை அப்பம் கேட்டால் கல்லைத் தருவாரா ? மீனைக் கேட்டால் பாம்பைத் தருவாரா ?முட்டையைக் கேட்டால் தேளைத் தருவாரா ? நிச்சயமாக இல்லை. நம்மைவிட நம்முடைய பரலோகப்பிதா சிறந்தவர், இரக்கமுள்ளவர், அதிக நீதி மற்றும் அன்புள்ளவர் என்றும் அறியவேண்டும். அர்ப்பணிக்கப்பட்ட இயேசுவின் சீஷராகி, வாஞ்சையோடு தேடுகிறவர்களுக்கு, தம்முடைய நன்மையான ஈவுகளை, பரிசுத்த ஆவியை தருவதில் மிகவும் களிகூறுகிறவராயிருக்கிறார்.

———————————————

R 5379

# ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம்

# THANKSGIVING WITH PRAYER AND SUPPLICATION

கீழ்க்காணும் வேதவசனங்கள், நம் தியானத்திற்காக சகோ.டேனியல் டூல் என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது;

### ஜெபிக்க நேரம் ஒதுக்குங்கள்

என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள்; நானோ ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் –சங்109:4.

நாங்களோ "ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்– அப்6:4

அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் – லூக் 6:12.

தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக – பிரச5:2.

### இரகசிய ஜெபம்

நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார் – மத் 6:6

அவர் ஜனங்களை அனுப்பிவிட்டபின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார் – மத் 14:23

### தேவ சமுகத்தில் ஜெபித்தல்

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள் – யாக் 4:8

தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் – மாற்கு 12:22,24.

எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது – 2நாளா 20:6

### தகப்பனின் ஒரு புத்திரனாக

உங்கள் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா ? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பானா ? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா ? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார் – லூக்11:11–13.

### ஜெபத்துக்கு பதில் நிச்சயம்

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்– மத் 7:7,8.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் – யாக்கோபு 1:5.

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன் – யோவான் 14:13.

### தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து ஜெபியுங்கள்

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்திலே விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் – மாற்கு 11:22.

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் –1யோவான் 5:14,15.

அவர்களோடே எதிர்க்கத் துணை பெற்றபடியினால், ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்; அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கை வைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார் – 1நாளா 5:20.

பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் – 1யோவா 3:21,22.

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்..– எபி 10:19,20.

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன்

காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக – யாக்1:6,7.

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் –மாற்கு 11:24.

**குற்றத் தீர்ப்பிலிருந்து விடுதலையாகி, ஜெபியுங்கள்**

நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். ஜெபம் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு உம்மை மேகத்தால் மூடிக்கொண்டீர் – புலம்பல்4:40,44.

தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள்; அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன். அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார். என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார் – சங் 66:16–18.

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் –1பேது3:7.

நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் பிதாவினிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் – 1யோவா 3:2–22.

**முழு இருதயத்தோடு ஜெபியுங்கள்**

முழு இருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்; உம்முடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன் – சங்119:145.

அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர் – சங்21:2.

**தேவனுடைய உண்மைத்தன்மையின்மேல் நம்பிக்கை**

நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளக்கடவோம் – எபி10:23.

ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் – உபா 7:9

கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்... பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா ? – உபாகமம் 23:9,19.

விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள் – எபிரேயர் 11:11.

அவர்கள் பிள்ளைகளை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, சுதந்தரித்துக்கொள்ளும்படி நீர் அவர்கள் பிதாக்களுக்குச் சொன்ன தேசத்திலே அவர்களை அழைத்துவந்தீர் – நெகேமியா 9:23.

**தேவ வல்லமையின் மேல் நம்பிக்கை வைத்து ஜெபித்தல்**

கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பாள் என்றார் – ஆதி 18:14.

ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், தீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர், உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை – எரேமியா 32:17.

தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்1:37

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும் என்றான் – 2நாளாக 14:11.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும்அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.. – எபேசி3:20

**தேவ அன்பு மற்றும் இரக்கத்தின்மேல் நம்பிக்கை**

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரித்தருளும் – சங்51:1.

என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத்திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம் – தானியேல் 9:18.

கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார். கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங்களையும் நினைத்தருளும், அவைகள் அநாதி காலமுதல் இருக்கிறதே – சங்25:8,6

நீர் உமது முகத்தை உமது ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உமது கிருபையினாலே என்னை இரட்சியும் – சங்31:16.

நீர் உமது அடியேனுக்குக் கொடுத்த உமது வாக்கின்படி, உமது கிருபை என்னைத் தேற்றுவதாக – சங்119:76

அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் – ரோமர்4:19–21.

**நம் தேவைகளுக்காக கெஞ்சி மன்றாடுதல்**

என்னைவிட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை – சங்22:11.

என் கூக்குரலுக்குச் செவிகொடும்; நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள் – சங்142:6

கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும் – சங்72:12–14.

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை. என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும் – சங்62:1,2,5.

**தேவ மகிமைக்காக வாதாடி ஜெபித்தல்**

மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும் உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும் நீர் இவர்களுக்கு முன்செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள். இந்தத் தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள். ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால் அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே – எண் 14:13–16.

ஆ, ஆண்டவரே, இஸ்ரயேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; இப்பொழுது நான் என்ன சொல்லுவேன். கானானியரும் தேசத்துக் குடிகள் யாவரும் இதைக்கேட்டு, எங்களை வளைந்துகொண்டு, எங்கள் பேரைப் பூமியிலிராதபடிக்கு வேரற்றுப்போகப் பண்ணுவார்களே; அப்பொழுது உமது மகத்தான நாமத்துக்கு என்ன செய்வீர் என்றான் – யோசுவா 7:8,9.

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரயேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள இருதயத்தைமறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், எனனைக் கேட்டருளும் என்றான் – 1இராஜா18:36,37.

என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும் – சங்31:3.

இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும் கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம். ஆண்டவரே, கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன் – தானி 9:17–19.

**தேவ நீதிக்காக ஜெபத்தில் வாதாடுதல்**

துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ– ஆதி18:25.

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும்; உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும் – சங்31:1

**நமது நீதிக்காக இரைஞ்சுதல்**

ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான் – 2இராஜா 20:3.

என் தேவனே, நான் இந்த ஜனத்துக்காகச் செய்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும் – நெகே5:19.

இதற்குமுன்னே எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப் தொபியாவோடே சம்பந்தம் கலந்தவனாயிருந்து – நெகே 13:4.

**விடாமுயற்சியோடு ஜெபித்தல்**

பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக, என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா ? மீனைக் கேட்டால் மீனுக்கு பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா ? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா ? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா – லூக்11:5–13.

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்.; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவன் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோககி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்–லூக்18:18

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி எடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். அநேகர் அதைக்கண்டு பயந்து, கர்த்தரை நம்புவார்கள் – சங்40:1–3.

பின்பு யாக்கோபு; என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே, உன் தேசத்துக்கும், உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும். அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.தேவரீரோ, நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து,உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான் – ஆதி32:9–12.

அவன் தன் சகோதரி தரித்திருந்த அந்தக் காதணியையும் அவள் கைகளில் போட்டிருந்த கடகங்களையும் பார்த்து, இன்ன இன்னபடி அந்த மனிதன் என்னோடே பேசினானென்று தன் சகேதாதரி ரெபேக்காள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், அந்த மனிதனிடத்தில் வந்தாள். அவன் துரவு அருகே ஒட்டகங்கள் அண்டையில் நின்று கொண்டிருந்தான்– ஆதி24:30.

அவன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்தான்; தன் பெலத்தினால் தேவனோடே போராடினான். அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான். பெத்தேலிலே அவர் அவனைக்கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார். கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம். இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு இடைவிடாமல் உன்தேவனை நம்பிக்கொண்டிரு– ஆதி 12:3–6

**தூய நோக்கத்தோடு ஜெபியுங்கள்**

நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள் – யாக்4:3.

**ஸ்தோத்திரத்தோடே ஜெபியுங்கள்**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் – கொலோ 4:2

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் – பிலிப் 4:6.

ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் – எபி 13:15.

நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன் – சங்116:17.

தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப்பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும் – சங்69:30,31

**விழிப்புணர்வு அடையுங்கள்**

உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை; தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர் – ஏசாயா 64:7.

இல்லாவிட்டால் அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான் –ஏசா 27:5.

இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் – 2தீமோ 1:6

**வாக்குத்தத்தங்களை தியானிப்பதனால் உன் விசுவாசம் பலப்படட்டும்**

கன்னான் ஒரு சுரூபத்தை வார்க்கிறான், தட்டான் பொன்தகட்டால் அதை மூடி, அதற்கு வெள்ளிச் சங்கிலிகளைப் பொருந்தவைக்கிறான். அதற்குக் கொடுக்க வகையில்லாதவன் உளுத்துப்போகாத மரத்தைத் தெரிந்துகொண்டு, அசையாத ஒரு சுரூபத்தைச் செய்யும்படி நிபுணனான ஒரு தச்சனைத் தேடுகிறான். நீங்கள் அறியீர்களா ? நீங்கள் கேள்விப்படவில்லையா ? ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா ? பூமி அஸ்திபாரப்பட்டதுமுதல் உணராதிருக்கிறீர்களா ? அவர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார். அவர் பிரபுக்களை மாயையாக்கி, பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குகிறார். அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில்லை, விதைக்கப்படுவதுமில்லை; அவர்களுடைய அடிமரம் திரும்ப பூமியிலே வேர்விடுவதுமில்லை; அவர்கள்மேல் அவர் ஊதவே பட்டுப்போவார்கள்; பெருங்காற்று அவர்களை ஒரு துரும்பைப்போல் அடித்துக்கொண்டுபோகும். இப்படியிருக்க, என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள் ? எனக்கு யாரை நிகராக்குவீர்கள் ? என்று பரிசுத்தர் சொல்லுகிறார். உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார் ? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகாபெலத்தினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது. யாக்கோபே, இஸ்ரயேலே : என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன் ? பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ ? இதை நீ கேட்டதில்லையோ ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் – ஏசா 40:19–31.

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் – சங்50:15

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார் – சங் 34:15–17.

ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர் – சங் 86:5.

கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார் – சங் 145:17.

யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் – ரோமர் 10:12.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் – யாக்1:5.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் – எபி4:16.

மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் – லூக்11:9,10.

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன் – யோவான் 14:13.

இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள் – யோவா16:24

**பரிசுத்தவான்கள் தங்கள் ஜெபத்தினால் உற்சாகத்தையும் அறிவுரைகளையும் பெற்றனர்**

மோசே இஸ்ரயேலை நியாயந்தீர்க்க உதவிகேட்டல்
–எண்11:11–15.

மோசே இஸ்ரயேலரை மன்னிக்கக்கோரி தேவனிடம் கேட்டல்
– யாத் 32:11–13.

மோசே மிரியமுக்காக ஜெபித்தல் – எண் 14:13–19.

மோசே பாரவோனுக்காக ஜெபித்தல் – யாத் 8:12,13,30,31; 9:33.

கொள்ளிவாய் சர்ப்பங்களின் விஷயத்தில் மோசேயின் ஜெபம்
– எண் 21:7,8

ஆரோனுக்காக மோசே ஜெபித்தல் – உபா 9:20

சாமுயேல் இஸ்ரயேலருக்காக ஜெபித்தல் – 1சாமு7:5–10

எலியா விதவையின் மகனுக்காக ஜெபித்தல்
– 1இராஜா 17:20–23.

அசீரிய இராஜாவுக்கு எதிராக எசேக்கியா
– 2இராஜா19:15–20, 32–37.

குழந்தைக்காக அன்னாளின் ஜெபம் – 1சாமு1:9–11, 27.

ஆபிரகாமின் ஜெபம் – ஆதி18:23–33; 20:17.

லோத்தின் ஜெபம் – ஆதி19:17–22, 29

ஈசாக்கின் ஜெபம் – ஆதி 25:21.

யோவாகாஸ் இஸ்ரயேலுக்காக ஜெபித்தல் – 2இராஜா13:4,5.

ஆசாவின் ஜெபம் – 2நாளா14:11,12.

யோசபாத்தின் ஜெபம் – 2நாளா20:1–24, 26.

மனாசேயின் ஜெபம் – 2நாளா33:10–13.

யோபு தன் சிநேகிதருக்காக ஜெபித்தல் – யேபு 42:7–10.

எஸ்றாவின் ஜெபம் – எஸ்றா 8:21–23, 31. அதி. 9; 10:1–19.

நெகேமியாவின் ஜெபம் – நெகே. அதி.1; 2:1–8.

தாவீதின் ஜெபங்கள்
– சங்18:6; 28:6,7; 31:22; 34:1–10; 118:5; 116:1,2; 138:3.

பவுலும் சீலாவும் – அப்16:25,26.

மனாசேயின்ஜெபம் – நியாயாதி 13:8,9.

மேலும் காண்க ; சங்கீதங்கள் 62:1–5; 145:15; யாக்கோபு 1:17

ஜெபம் அத்தியாவசியமானது – லூக் 21:36; 1பேது4:7; எபேசி6:18.

"நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்" –2தீமோத்2:7.

*ஜெபம் உனக்கு மிகக்குறைவான சந்தோஷம் தருகிறதா ?*

*இவ்வாறு சொல்ல கற்றுக்கொள்;*

*நான் ஜெபிக்க இப்போது மாபெரும் அவசியம் நேரிட்டிருக்கிறது*

அவரை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் கர்த்தர் அளவற்ற ஆசீர்களைப் பொழிகிறார்– ரோம10:12

---------------

R 5383

# நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம்

## A PROPHECY NEARING FULFILMENT

**"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள்முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்"–ஆபகூக் 3:17,18**

ஆபகூக்கின் முழு ஜெபம், அவரது தீர்க்கதரிசனமாக இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வசனப்பகுதியை நாம் எளிமையான வார்த்தைகளால் விளக்க எண்ணினாலும், இது அவ்வாறாக தரப்படாமல் அடையாளங்களாக தரப்பட்டுள்ளது. எளிமையாகக் கூறவேண்டுமெனில், பஞ்சமான சூழ்நிலைகள் எப்புறமும் தீ விரித்திருந்தாலும், பூமியில் வாழ்வதற்குரிய நம்பிக்கை அற்றுப்போயினும், தேவபிள்ளைகள் எந்நேரத்திலும் எல்லா இடங்களிலும் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருந்து, அவருக்கு மகிமை சேர்ப்பார்கள் என்பதே இந்த வசனத்திற்கான விளக்கமாகும்.

தீர்க்கதரிசி இம்முழு அதிகாரத்தில் ஏதாவதொன்றை தெளிவாகவும் நேரடியாகவும் கூறிவிட்டு, மற்றவைகளை ஒட்டுமொத்தமாக, மிக மேலான அடையாளங்களால் முடித்திருப்பாரானால், மிக விசித்திரமாய்த் தோற்றமளித்திருக்கும். தன் சிந்தையில் அதிக கற்பனை ஆற்றலை வைத்துக்கொண்டு, தீர்க்கதரிசியின் வார்த்தைகள் சில ஆழமான சத்தியங்களை வெளிப்படுத்துகிறதை நாம் மனதில் நிறுத்தவேண்டும். வேதாகமத்தின் மொழிநடையானது அதிகமாக உருவகங்களால் எழுதப்பட்டுள்ளது. நாம் பொதுவாக, அதிக அடையாள அர்த்தமுள்ள வார்த்தைகளை பேச்சுவழக்கில் உபயோகிக்கிறோம். உதாரணமாக, வேதாகமத்தில் திராட்சச்செடி சபைக்கு அடையாளமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" என்று நம் கர்த்தர் கூறியிருக்கிறார்(யோவான்15:5).

தேவனுடைய மந்தை –செம்மறியாடு என்று இதே வகுப்பாரைப்பற்றி அடையாள அர்த்தத்தில் பொதுவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுமந்தையைக்குறித்து நம் கர்த்தர் பேசியிருக்கிறார், நாம் அவரது ஆடுகள், தேவனுடைய ஆடுகளாக யூதர்களும் சங்கீதக்காரன் தாவீதால் சங்74:1; 79:13இல் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவ்வாறே ஒலிவம் என்ற வார்த்தையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த பவுல் ஒலிவமரத்தை தேவனுடைய விசேஷித்த ஜனங்களுக்கு – அவரோடு உறவில் உள்ள விநோதமான ஜனங்களுக்கு ஒப்பிட்டு கூறியிருக்கிறார். இயற்கையான ஒலிவமரத்தைக்குறித்து அவர் பேசியிருக்கிறார். யூத தேசத்துக்கே ஆதியில் இவ்வாக்குத்தத்தம் பொருந்தக்கூடியது என; "உனக்குள்ளும்(ஆபிரகாம்) உன் வித்துக்குள்ளும் பூமியில் எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்". அவிசுவாசத்தின் காரணமாக சுபாவ கிளைகள் வெட்டப்பட்டன என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். இவ்வாறாக வேறுபட்ட கண்ணோட்டத்தின்கீழ், கிறிஸ்துவின் சபையை திராட்சச்செடி மற்றும் ஒலிவமரம் குறிப்பதாக நாம் பொருத்திக்காட்டுகிறோம்.

சிறுமந்தை வகுப்பார் திரைக்கு அப்பால் சென்றபிறகு கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், திரள்கூட்டமாக இங்கு விடப்படுகிறார்கள். இவர்களில் அநேகர், மகா உபத்திரவத்தின் காலமானது பாபிலோனை வீழ்ச்சிக்குள்ளாக்கும்வரை தொடர்ந்து பாபிலோனில் நிலைத்திருக்கிறார்கள். பாபிலோனின் வீழ்ச்சியினால் இவர்கள் விடுதலையடைகிறார்கள். அவர்களுக்கு அனைத்தும் வெளியாக்கப்படும்வரைக்கும், நம் திறவுவசனத்தின் அடையாளமொழியை அவர்கள் பயன்படுத்துவார்கள், அதன்பின்பு தெளிவாகக் கண்டுகொள்வார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில், பாபிலோன் விழுகையைக் குறித்து இக்கூட்டத்தார் சந்தோஷமடைவதாகக் கூறப்பட்டுள்ளது; "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்"( 19:7). இவர்களுக்கு எல்லாக் காரியங்களும் தோல்வியடைவதாகவே தோற்றமளித்திருந்தது. தற்போது, தேவதிட்டம் தோல்வியடைவதில்லை, மாறாக நிறைவேறி வருகிறது என்று காண்பார்கள்.

### பூமிக்குரிய அரசாங்கங்கள் தோல்வியே

சபையானது இன்னும் உலகத்தை ஆசீர்வதிக்கவில்லை. திராட்சக்கொடியின் கனியானது வரவிருக்கின்ற யுகத்தில் உலகத்தை போஷிப்பிக்கும். ஒலிவமோ அல்லது திராட்சையோ தற்காலத்தில் உலகிற்கு ஜீவனை அளிப்பதில்லை. மேசியாவின் ஆளுகையின்போதே அந்த புதிய அருளாட்சி வரும்.

உலகை குறிக்க நிலம் என்ற வார்த்தையை கர்த்தர் உபயோகித்திருக்கிறார்."நிலம் உலகம்"(மத்13:38). உலகம் தன் ஜனங்களது நடவடிக்கைகளை சிறப்பாக அமைக்கமுடியும் என்ற நம்பிக்கையில் உள்ளது. அவர்கள் தங்கள் காரியங்களை வெற்றிகரமாக நிர்வகிக்கும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவ்வாறே பல்வேறு உலகப்பேரரசுகள் முளைத்தெழும்பின. முதலாவது பாபிலோனியர்கள் உலகிற்கு ஒரு சிறந்த அரசாங்கத்தைக் கொடுக்க முயற்சித்தனர். ஆனால் அவர்களது முயற்சிகள் பிரயாசங்கள் பயனளிக்கவில்லை. அதன்பிறகு, மேதியர்களும் பெர்சியர்களும் முயற்சித்தனர், அவர்களும் தோல்வியே கண்டனர். அடுத்ததாக கிரேக்கர்களும், அதன்பின்பு ரோமானியர்களும் உலக அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை ஏற்றனர், அவர்களும் தோல்வியையே

தழுவினர். இறுதியாக, போப்பு மார்க்கம் உலகை ஆளுகைசெய்யும் கிறிஸ்துவின் இராஜ்யத்தை தான் அமைப்பதாகவும் முன்னுக்கு வந்தது, அவளும் தோல்வியுற்றாள். பிந்தைய வருடங்களில் சோஷியலிசம் (பொதுநலக்கூட்டு தத்துவம்) பிரபலமாகி, தன்னால் உலகை சிறந்ததாக்க முடியும் என்று கூறி முன்னுக்கு வந்தது, ஆனால் சமுதய முன்னேற்றத்துக்கான மேம்பாட்டில் அதனால் வெற்றி பெறமுடியவில்லை.

**"தொழுவங்களில் மாடுகள் இல்லாமற்போனாலும்"**

தொழுவங்களில் மாடுகள் இல்லாமற்போனாலும் என்ற சொற்றொடர் சிறிது கருகலானதாய் தோற்றமளிக்கிறது. நம் கர்த்தராகிய இயேசுவை காளைக்கு ஒப்பிட்டு வேதாகமம் கூறுகிறது, வரவிருக்கின்ற யுகத்தில், மனுக்குலம் பரிபூரணத்தை அடையும்போது காளைக்கு உருவகமாக சொல்லப்பட்டுள்ளது. அவ்வேளையில் மனுக்குலம் தேவனுடைய பலிபீடத்தில் காளைகளை பலிசெலுத்துவார்கள் என்று தாவீது தீர்க்கதரிசி கருத்துத் தெரிவிக்கிறார்(சங்51:19). தற்காலத்தில் உள்ள சபையை இத்தோடு தொடர்புபடுத்தமுடியாது. ஏனெனில் ஒப்புரவாக்கும் நாளில், சபையானது வெள்ளாட்டை அடையாளமாகக் கொண்டுள்ளது, ஒரு பரிபூரண மனிதராகிய நம் கர்த்தர் பலிசெலுத்தும்போது, அது காளைக்கொப்பானதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் அடுத்தயுகம் முடிவுறும்போது, உலகம் பரிபூரணப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அவர்கள் பலிபீடத்தின்மேல் காளைகளை பலிசெலுத்துவர். மனுக்குலம் எப்படி தங்களை முழு அர்ப்பணிப்பு செய்வர் – அதாவது தங்களது பரிபூரண வல்லமைகளைக் கொடுப்பர் என்பதைக் குறிக்கக்கூடியதாக இது உள்ளது.

காளையைக் குறித்த இந்த விளக்கத்திற்கு, சங்கீதக்காரனால் பரிந்துரைக்கப்பட்டதைவிட மேலான விளக்கத்தை நாம் அறிந்திருக்கவில்லை. இந்த சுவிசேஷயுக முடிவில் சபையார் அனைவரும் இரண்டாம் திரைக்கப்பால் கடந்துசென்றபிறகு, எந்த பரிபூரண மனுஷனும் இங்கு இருப்பதில்லை. வேறுவார்த்தைகளில் கூறுவோமாகில், சபை மகிமையடைந்தபிறகு, அந்தகுறிப்பிட்ட நேரத்தில், முற்பிதாக்கள் இன்னும் வெளிப்பட்டிருக்க மாட்டார்கள். ஜனங்கள் தங்கள் உபத்திரவங்களிலிருந்து தப்பிக்க வழிவை தெரியாமல் திகைப்படைந்து நிற்பர். கர்த்தரது வார்த்தையின் வெளிச்சம் பெற்றிருப்போரால் மட்டுமே அந்நிலைமையை உணர்ந்து மதிப்பிட முடியும்.

அவ்வேளையில் திரள்கூட்டத்து வகுப்பார் நிலைமையை புரிந்துகொண்டு, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பர். உலகம் கடும் துன்ப நிலையிலிருந்தபோதிலும், முற்பிதாக்கள் காரியங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இன்னும் இங்கு வந்திராதபோதிலும், திரள்கூட்டத்தாரால் தேவனிடத்தில் நம்பிக்கையோடிருக்கமுடியும். இந்நிலைமைகள் மாபெரும் ஆசீர்வாதத்திற்கு தயாராகும்படி வழிநடத்திச்செல்லும் என்று அவர்கள் கண்டுகொள்வர். "நாம் கர்த்தருக்கு மகிமை செலுத்தி சந்தோஷமாயிருப்போமாக, ஏனெனில் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" என்று அப்போது அவர்கள் கூறுவர். சபை மகிமையடைவது மாபெரும் ஆசீர்வாதத்தின் துவக்கம் என்பதை நாம் காண்கிறோம். வெகுவிரைவில் முற்பிதாக்கள் இங்கு இருப்பதை நாம் எதிர்பார்க்கமுடியும். அதன்பிறகு, தேவனுடைய எல்லா மகிமை நிறைந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலும் வந்துசேரும். ஆகவே நம் இருதயம் சோர்வடையாமல், கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

நம் கர்த்தராகிய இயேசு திரள்கூட்டத்தாரை – புத்தியில்லாத கன்னிகைகளைக்குறித்து, மலைப்பிரசங்கத்தில் பேசியிருக்கிறார்(மத்7:21–23). சிறுமந்தை வகுப்பின் கடைசி அங்கம் திரையைக் கடந்தபிறகு, திரள்கூட்டத்தார் முற்றிலுமாக விழிப்புணர்வடைந்து கூறுவர்; "கர்த்தாவே, கர்த்தாவே, நாங்கள் உள்ளே வரக்கூடாதா ? நேச கர்த்தரே, இப்பொழுது நாங்கள் தயாராகிவிட்டோம்; எங்களது தவறு எங்கே செய்யப்பட்டது என்று நாங்கள் காண்கிறோம். காரியங்களை வித்தியாசமாக நாங்கள் காண்கிறோம்; நாங்கள் முன்பு பலிசெலுத்துவதற்கு என்னென்ன சிலாக்கியங்களையும் வாய்ப்புக்களையும் அனுபவித்திருந்தோம், ஆனால் அதை தவறவிட்டோம் என்று நாங்கள் உணருகிறோம். தற்போதுகூட நாங்கள் உள்ளே நுழையக்கூடாதா ? ஆனால் அவர்கள் பேசியதற்கு மறுமொழியாக கர்த்தர் கூறுவார்; "என்னைவிட்டு அகன்று போங்கள், நான் உங்களை அறியேன்" என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர் கூறியதன் பொருள், நாம் முன்பு எண்ணியிருந்ததுபோல் அவர்கள் நித்திய ஆக்கினைக்குள் சென்றுவிடுவர் என்பதல்ல. "சபிக்கப்பட்டவர்களே, அகன்று போங்கள் " என்று கர்த்தர் கூறவில்லை. சபிக்கப்பட்டோர் என்பதன் அர்த்தம் – தண்டனை அடைவதற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். ஆனால் "என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று மட்டுமே அவர் கூறினார்.

பரலோக இராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் என்று வேறொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது(மத் 25:1–12). அதில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களாயிருந்து தங்கள் விளக்குகளுடன் பாத்திரங்களில் எண்ணெயும் எடுத்துச்சென்றனர். ஆனால் புத்தியில்லாதவர்கள் விளக்குகளோடு எண்ணெய் எடுத்துச்செல்லவில்லை. மணவாளன் வந்தபொழுது, புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களிடம், எங்கள் விளக்குகள் அணைந்துகொண்டிருக்கின்றன, உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள் என்றார்கள். ஆனால் தங்களது சொந்த விளக்குகளுக்குத் தேவையான அளவு மட்டுமே எண்ணெய் பெற்றிருந்தபடியால், புத்தியுள்ளவர்களால் அவர்களது வேண்டுகோளின்படி செய்யமுடியவில்லை. மணவாளனோடு புத்தியுள்ள கன்னிகைகள் சென்றபிறகு,

கதவு அடைக்கப்பட்டது. பிறகு மற்ற கன்னிகைகள் வந்து, கர்த்தாவே கர்த்தாவே எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்'' என்றார்கள். ஆனால் அவரோ மறுமொழியாக, உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

''உங்களை நான் அறியேன்'' என்று கர்த்தர் கூறினது, அவர்கள் கன்னிகைகள் அல்ல என்ற பொருளில் அல்ல. பின்பு அவை எதை அர்த்தப்படுத்துகின்றன ? தமது மணவாட்டியை அங்கீகரித்தபிறகு, மற்ற எந்த ஸ்திரீயையும் அவர் அறியவில்லை. புத்தியில்லாதோர், தாங்கள் மணவாட்டிகளுள் ஒருவராக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்தனர். ஆனால் கர்த்தரோ; நான் உங்களை அங்கீகரிக்கவில்லை என்கிறார். என் மணவாட்டி தெரிந்தெடுக்கப்பட்டு, முழுமையடைந்தாயிற்று என்கிறார் கர்த்தர். ஆகவே புத்தியில்லாத கன்னிகை வகுப்பார், மணவாட்டி வகுப்பாரது ஸ்தானத்திலிருந்து நீக்கப்படுகின்றனர், ஆனாலும் அவர்கள் மணவாட்டிக்கு உதவியாளர்களாக, உடன் இருப்போராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். அவர்களுடைய நிராகரிப்பு அவர்களுக்கு துக்கத்தை வருவிக்கும். வாய்ப்பின் கதவு தங்களுக்கு மூடப்பட்டதை உணர்ந்துகொள்வதால், நாம் மாபெரும் பரிசை இழந்துவிட்டோம் என அவர்கள் கதறி அழுவர். அவர்கள் நம்பிக்கையற்று நிராசை அடையக்கூடும், நாம் அதை அறியோம்.

### துக்கம் சந்தோஷமாய் மாறும்

ஆனால் அதன்பிறகு, இந்த திரள்கூட்டத்தாரைக்குறித்து, காட்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது; நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து, தேவனை மகிமைப்படுத்துவோம், ஏனெனில் மணவாட்டி மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறாள். நீங்கள் மணவாட்டி வகுப்பாரல்ல என்று யாராகிலும் அவர்களிடம் எடுத்துரைக்க வேண்டுமா ? அவர்களது பதிலுரை என்னவாக இருக்குமென்றால், எப்படி இருந்தபோதிலும் எல்லோருக்கும் – எங்களுக்கும்கூட ஆசீர்வாதம்வருகிறது ! தேவனுடைய பிள்ளைகளின் முதற்பலன்களாக, மணவாட்டி வகுப்பார் இருப்பார்கள். நாங்கள் மணவாட்டி வகுப்பாராக தவறியது எங்களது சொந்த பிழையே. நாங்கள் தற்போது காண்பதுபோல், சிறிது காலத்துக்கு முன்பு கண்டிருந்தோமானால், கடினமாய்ப் போராடியிருந்திருப்போம். அதனால் தோல்வியை சந்தித்திருக்க மாட்டோம். பாபிலோன் என்ன கூறுகிறது என்று நாங்கள் அதற்கு செவிசாய்த்திருக்க மாட்டோம், அதற்கு மாறாக ''நமக்கு முன்பாக நியமிக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடு'' ஓடியிருந்திருப்போம். ''பிசாசுகளின் உபதேசங்களால்'' நாங்கள் முட்டாள்களாக்கப்பட்டோம்(1தீமோ4:1). நாங்கள் தற்போது விழித்தெழுப்பப்பட்டிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தேவனுடைய திட்டம் மகிமையாக செயல்பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் சந்தோஷமடைகிறோம். நம் விளக்குகள் தற்போது எரிகின்றன. முன்பு ஒருபோதுமிராத அளவு நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். மணவாட்டி மகிமைப்படுத்தப்பட்டதில் நாம் மகிழ்ச்சியும் சந்தோஷமும் அடைவோமாக.

### ஆடுகள் யாவும் அழிந்துபோயினும்

### Cut off from the fold

''கிடையில் ஆட்டுமந்தை இல்லாமற்போயினும்'' என்கிற சொற்றொடர், பூமிக்குரிய நிலைப்பாட்டிலிருந்து கண்ணோக்கும்போது, தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு பொருந்துவதாயுள்ளது. பூமிக்குரிய மந்தையும் உண்டு, பரலோகத்துக்குரிய மந்தையும் உண்டு. நாம் தற்போது பூமிக்குரிய மந்தையில் இருக்கிறோம். நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளபடி நாம் பரலோகத்துக்குரிய மந்தைக்குள் பிரவேசிப்பதற்கு, மகிமைக்குள் நுழையும்பொருட்டு நாம் மரித்தாக வேண்டும்.

நம் கர்த்தராகிய இயேசு மரித்தபொழுது, பூமிக்குரிய மந்தையிலிருந்து விடுபட்டார். நம் கர்த்தருக்கு நேர்ந்ததுபோலவே நமக்கும் நேரிடும். நாமும் மேலான தொழுவத்திற்குள் நுழையுமுன், இங்கு, இந்த மந்தையிலிருந்து துண்டிக்கப்படவேண்டும். திரள்கூட்டத்தாருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, எல்லாக் காரியங்களும் தோல்வியடைவதாகவும், நிறைவேறாததாகவும் தோற்றமளிக்கக்கூடும், ஆனால் தேவனுடைய நிலைப்பாட்டின்படி, அத்திமரம் துளிர்க்கும், ஒலிவமரம் தன் பலனைத் தரும். தேவனுடைய நோக்கங்கள் ஒருபோதும் தோல்வியடையாது. சபையானது தன் முழு மகிமையடைதலை அடையும், அதன்பிறகு, திராட்சச்செடியானது மகிமையன, முதிர்ந்த பலனை முழு மனுக்குலத்துக்கும் அளிக்கும்.

---

R 5384

# ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை

புதுச்சிருஷ்டிக்குத் தேவபக்தி உண்டாகும் வகையில் வாரம் ஒருமுறை விசேஷித்த கூடுகைகளாக ஜெபம் மற்றும் சாட்சியமளிக்கும் கூடுகைகள் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் காலாண்டிற்கு ஒருமுறை ஒரு இரவுபொழுதாவது ஒதுக்கி, பொதுவான வகையில் ஜெபக்கூடுகைகளை ஏற்பாடு செய்தால் நமது நண்பர்களுக்கு அது மிகவும் ஆதாயமளிப்பதாக இருக்கும் என நாம் நம்புகிறோம். எங்களுடைய ஆலோசனையின்படி இம்மாதிரியான கூடுகைகளுக்கு காலாண்டு ஒன்றின்/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மத்திய புதன்கிழமை மாலைவேளையைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது ஆகும்; இக்கூடுகை சாட்சிபகருதலைவிட பிரத்தியட்சமாக ஜெபத்திற்கு ஒதுக்குவதாக இருக்க வேண்டும். கூடுகையை நடத்துபவர் ஜெபத்தோடுகூடத் துவங்கி, பின் இரண்டு அல்லது மூன்று ஜெபங்களுக்காகச் சகோதரர்களை அழைக்கலாம். அதன்பின்பு அவ்வாரத்துக்குண்டான வசனப்பகுதியை வாசித்து, மூன்று நிமிடங்களாவது அவ்வசனப்பகுதியைக்குறித்து விவரிக்கலாம் அல்லது நபர்கள் மிகக்குறைவாக இருக்கும் பட்சத்தில் ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்பட்சத்தில் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். வசனங்களுக்கு விளக்கம் தரும் நேரமானது சபையின் எண்ணிக்கையின் அளவைப் பொறுத்ததாகும்.

பின்பு கூட்டத்தலைவர்: இந்த மாலைப்பொழுதானது விசேஷமாக ஜெபத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; நாம் அனைவரும் சந்தேகத்திற்கிடமின்றி அறிந்தபடி, ஒரு கிறிஸ்தவன் கர்த்தரை ஆராதிப்பதும், ஜெப துதிகளை ஏறெடுப்பதும் அவனுடைய விசேஷமான சிலாக்கியம் ஆகும். நாம் இருதயப்பூர்வமாக விசுவாசித்து, வாயினாலே அறிக்கை செய்கிறோம். இக்கூடுகையில் ஒவ்வொருவராகப் பெயர்ச்சொல்லி அழைக்காமல், வந்துள்ள அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். ஒரு சில வார்த்தைகளே கூறமுடியுமாயின் அது ஒரு காரியமல்ல. ஆனாலும் ஜெபமானது மிக நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது என்கிற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம். இப்பொழுது நாம் இரு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி எழுந்துநிற்க வாய்ப்புத் தருவோம். அதன்பின்பு ஒரு கீர்த்தனையைப் பாடலாம். கீர்த்தனையைத் தொடர்ந்து ஒரு சகோதரர் மற்றும் சகோதரிக்கு ஜெபிக்க (கூடுகையில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப) வாய்ப்புத் தந்து, இவ்விதமாக அனைவருக்கும் வாய்ப்புத் தரலாம்.

ஜெபிக்கும் இந்த சிலாக்கியத்தைப் பயன்படுத்தும்போது கர்த்தருடைய பிள்ளைகள்மேல் பெருத்த ஆசீர்வாதம் வரும் எனக் காண்கிறோம். இவ்விதமாக அநேகர் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் அநேகர் தங்களுடைய வாழ்க்கையின் இதுபோன்ற அனுபவங்களை முன்பு பெற்றிருக்கவில்லை.

இவ்விதமாக காலாண்டிற்கு ஒருமுறை/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஜெப ஆராதனையானது, மாதம் ஒருமுறை நடத்தப்படுவதைக்காட்டிலும், இந்த நோக்கத்தை அதிகம் நிறைவேற்றுகிறதாயிருக்கிறது என நினைக்கிறோம். காலாண்டு ஒன்றில் ஒருமுறைக்கு மேலாக இக்கூடுகைகள் நடத்தப்படுமாயின் கடினமானதொன்றாயிருக்கும். அம்மாதிரியான ஒழுங்குமுறை எந்தவொரு சபையிலும் பின்பற்றப்பட்டால், அது மாற்றப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கிறோம்.

## மாதிரியான சாட்சியக் கூட்டம்

வார இடையிலான கூடுகை, துதி செய்வதற்கும், சாட்சி பகருதலுக்குமான கூடுகையாக ஒதுக்கப்பட வேண்டும். முன்பு கூறப்பட்டதுபோல தன்னுடைய தனிப்பட்ட அனுபவங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள ஒரு கிறிஸ்தவனுக்கு விசேஷ பக்தியுண்டாக்கும் கூடுகைகள் தேவை. சமீபகால சாட்சிகள் மிகவும் உதவிகரமானது. கர்த்தருடைய எல்லா ஜனங்களுக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் உள்ளது. ஒருவர் மற்றொருவருடைய அனுபவங்களைக் கேட்கும்போது, ஒருவர்மேல் ஒருவர் பரிவிரக்கம் கொள்ளக் கற்றுக்கொள்கிறோம்.

அம்மாதிரியான கூடுகைகள் ஒன்று அல்லது இரு கீர்த்தனைப் பாடல்களோடு ஆரம்பித்து, பின் ஒன்று அல்லது அதிகமான சுருக்கமான ஜெபங்கள் செய்யப்பட வேண்டும். கூடுகையை ஆரம்ப ஜெபத்தோடு துவங்கும் சகோதரர், கூடுகை ஆரம்பிக்கும் முன்பே என்ன

செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். துவக்க ஜெபமானது கூடி வந்திருக்கிறவர்கள் சரியான மனநிலையோடு கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அவர்கள் இருதயத்திலும், மனதிலும் தெய்வீக ஆசீர்வாதத்தை பெறும்படியான விண்ணப்பமாக இருக்கவேண்டும்.

உதாரணமாக, மாலை வேளைக்கான வசனப்பகுதியானது, "ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என இருக்குமாயின், கூட்டத்தலைவர் இவ்விதமாகக் கூறலாம்: இவ்வாரத்திற்கான நம்முடைய வசனப்பகுதியானது இதோ.... (மேற்கூறிய வசனத்தை வாசிக்கவும்) தேவனுடைய பார்வையில், அவருடைய ஜனங்களில் யாரொருவரும் பெற்றிருக்கவேண்டிய குணநலன்களில் தாழ்மையானது மிக முக்கியமான ஒன்றாகும். தாழ்மையை நாம் உடையவர்களாக இருந்தால் தேவனுடைய பார்வையில் அவரை நாம் பிரியப்படுத்துகிறோம் என்று முழு வேதாகமமும் சுட்டிக்காண்பிக்கின்றன. மேலும், நாம் இக்குணத்தை பெற்றிருந்தாலொழிய தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியடைய முடியாது. இக்குணத்தின் தேவையிலுள்ள ஞானத்தையும் நம்மால் கவனிக்கமுடிகிறது. தேவன் ஒருவேளை தாழ்மை இல்லாதவர்களை உன்னத நிலைமைக்கு உயர்த்தவேண்டியிருப்பின், பரலோகத்தில் மேலும் ஒரு பிரச்சனைக்கு அது வழிவகுக்கும்.

சாத்தானானவன் தன்னைத் தேவனுக்கு முன்பாக முறையாக ஒப்புக்கொடுத்து கீழ்ப்படுத்தினவனல்ல எனக் காண்கிறோம். அவன் இந்த மேட்டிமையான நிலையை அடைந்தவுடன், தேவனைவிட தான் சிறப்பாகச் செயல்படமுடியும் என அநேகமாக எண்ணியிருக்கக்கூடும். இவ்வெண்ணத்தை காண்பிக்கும்பொருட்டு அவன் எடுத்த முயற்சியில் தனக்குத்தானே வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், மனுக்குலத்தின்மேல் பாவம் மற்றும் மரணத்தைக் கொண்டுவந்தான். பிதாவின் சித்தத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்த இயேசுவைக் காண்பிக்கவேண்டியது தேவனுக்கு அவசியமாயிற்று. இவ்விஷயத்தில் இயேசுவினுடைய பாதையை நாம் காண்கிறோம், பின் பிதாவானவர் அவரை எவ்வாறு உயர்த்தினார் என்பதையும் காண்கிறோம். நாமும் தெய்வீக வழிநடத்துதலின்படி நமக்கு வருகிற ஒவ்வொரு காரியத்திலும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். "ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

இப்பொழுது, அன்பிற்குரிய நண்பர்களே, நீங்களும்கூட ஒருவேளை இவ்வாரத்தில் தாழ்மையின் அடிப்படையிலும் அல்லது அதன் எதிர்மறையாகிய பெருமையின் அடிப்படையிலும் பெற்ற அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்துகொள்ளலாம். இது வசனத்தின் மீதான விளக்கவுரையாக இருக்கக்கூடாது. இந்த வசனப்பகுதியின் அர்த்தத்தை நாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறோம். உங்களுடைய சொந்த அனுபவங்களையே பகிர்ந்துகொள்ள நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் பெற்ற அனுபவங்களில் எந்த அனுபவம் உங்கள் மனதை இந்த வசனப்பகுதியோடு ஈர்த்ததாக எண்ணுகிறீர்கள்? உங்களுடைய சொந்த அனுபவங்களிலிருந்து சிறுபகுதியை நாங்கள் பெற்றுக்கொள்ளலாமல்லவா! நாம் இப்பொழுது சகோதரர் A-யினிடமிருந்து அறையின் இருபக்கமும் உள்ள சகோதரர்களில், மாறி மாறி எல்லோரும் பங்கேற்கும்படி கடந்துசெல்லலாம். சகோதரரே, இப்பொழுது உங்கள் சாட்சியைத் தருகிறீரா?

## இரட்டிப்பான பலனை எவ்வாறு பெறுவது?

சாட்சிபகர ஒருவரை முன்வரிசையிலும் மற்றொருவரை பின்வரிசையிலுமிருந்து அழைக்கும்போது, இரட்டிப்பான பலனை நாம் பெறலாம். சாட்சியானது ஒருமுனையிலிருந்து ஆரம்பிக்கும்போது, தூரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கான வாய்ப்பானது நீண்ட நேரமாகாமல் வராது என நினைக்கத் தோன்றும். அதினால் அருகிலுள்ள ஒருவரையும், பின் தூரத்திலுள்ளவரையும் அழைக்கும் முறையை கடைப்பிடித்தோமானால், அது எல்லோரையும் ஜாக்கிரதையாக இருக்கச் செய்வதுடன், முழுக்கூடுகையிலும் அவர்களை விழிப்புடன் இருக்கச்செய்யும்.

ஒரு சாட்சியக்கூட்டத்தை நாமே நடத்தும்போது, ஒரு நல்ல சாட்சியத்தோடு ஆரம்பித்து நல்ல சாட்சியத்தோடு முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தை நாம் சிந்தையில் நிறுத்தவேண்டும். ஆகவே நாம் நல்ல மற்றும் பரவலாக எழுச்சியூட்டும் வகையில் சாட்சிபகரும் ஒருவரோடு துவங்கும்போது, ஆரம்பத்திலேயே நல்ல உத்வேகத்தைத் தரமுடியும். துவக்கப்பாடலை நாம் பாடும்போதே எந்தச் சகோதரன், எந்தச் சகோதரி துவங்க அல்லது முடிக்கவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அப்போது நாம் நல்ல துவக்கத்தை மற்றும் நல்ல நிறைவைப் பெற்றிருக்கிறோம் என உறுதிகூறமுடியும்.

சாட்சி பகருகின்றபோது யாரேனும் இடையில் சிறிது ஸ்தம்பித்து, பின் எப்படித் தொடர்வது எனத் தெரியாமல் இருப்பாராயின், நாம் எவ்விதம் நிலைமையைச் சீராக்குவது எனில்: சகோதரரே (அல்லது சகோதரியே) உங்கள் அனுபவம் அப்படியாய் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டோம் என்று கூறலாம். அவர் அந்தச் சாட்சியை முடிக்கமுடியாமல் உள்ளார் என நாம் நினைத்தால், அவரது கருத்துக்கள் என்று நாம் அனுமானிப்பவைகளை அவருக்காக கூறி முடிக்க வேண்டும். நாம் இதைச் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும். கூட்டத்தலைவர் ஒருவர் இதைச் செய்ய முடிபவராக, அச்சகோதரரை அன்புடன் உற்சாகப்படுத்துகிறவராக இருப்பார்.

அந்தச் சகோதரரோ, சகோதரியோ: இதுவல்ல! என்று சொல்லுமளவுக்கு வேறுவிதமான கருத்தை நாம் சொல்லாமலிருக்க கவனமாயிருக்கவேண்டும். மாறாக நாம் கொடுக்க முயற்சிக்கும் கருத்தானது சகோ. ரசல் அவர்கள் என் எண்ணத்தைப் புரிந்துகொண்டார் என்று கூறுமளவுக்கு இருக்கவேண்டும். மாறாக நாம் ஒன்றும் கூறாமலோ அல்லது கடுகடுப்பாகவோ இருந்தோமானால், அந்தச் சகோதரன் (குறிப்பாகச் சகோதரிகள்) அடுத்தமுறை மிகவும் சோர்வடைவதுடன், அமைதியாக இருப்பதே மேல் என்று நினைப்பார்(ள்).

ஒரு சாட்சியக்கூடுகையில், 60-இல் இருந்து 100 பேர் வரைக்கூடிவரும்போது, அது உதவிகரமான கூடுகையாக அமைய வாய்ப்பு இருக்காது. பன்னிரண்டிலிருந்து பதினைந்து வரையே மிகவும் பயனுள்ள எண்ணிக்கையாகும். அப்போது போதுமான அளவு வித்தியாசமான அனுபவங்களும் கிடைக்கும். சாட்சிபகர ஒவ்வொருவருக்கும் அதிகநேரம் கிடைக்காவிட்டாலும், எல்லோருக்கும் சாட்சிபகரப் போதுமான நேரம் கிடைக்கும்.

முதலாவதாகச் சாட்சி பகருகிறவர், அவருடைய சாட்சியில் ஒருவேளை தவறான கருத்தோ அல்லது நடவடிக்கையோ எடுத்திருப்பாராயின், ஒருவேளை அவர் இவ்வாறு கூறலாம்: இவ்வாரம் நான் ஒரு போதகரைச் சந்தித்து உரையாடினேன்; அவர் வேதத்திலுள்ள எல்லாவற்றையும் அறிந்திருப்பவராகத் தன்னை எண்ணிக்கொண்டிருக்கிறார். நான் அவரிடம் பல கேள்விகளைக் கேட்கும்போது அவரால் பதில் சொல்லமுடியவில்லை. மேலும் அதை எல்லா ஜனங்களும் பார்க்க நேர்ந்தது!

இப்பொழுது கூட்டத்தலைவர் அவரிடம் என்ன கூறலாம் என்றால்: "சகோதரரே, நீங்கள் நல்ல நோக்கத்தில் செய்திருக்கிறீர்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை; ஆனால் நீங்கள் ஞானமாகச் செயல்பட்டுள்ளீர்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது. இதை நீங்கள் இதமாகச் செய்திருந்தால் நலமாக இருக்கும். நாம் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. மாறாக நம்மை எதிர்ப்பவரை இதமாகவும், சாந்தமாகவும் அறிவுறுத்த வேண்டும். இம்மாதிரியான காரியங்களை ஏற்றுக்கொள்ள, அநேக வருடம் போதகராக இருப்பவர்களுக்கும், படிப்பிலும் கனத்திலும் உயர்வாக உள்ளவர்களுக்கும் மிகவும் கடினம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே பகைமையைத் தூண்டாத வகையில் நீங்கள் இருமடங்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இதமான, சாந்தமான ஒரு சிறுவார்த்தையைப் பயன்படுத்தலாம். நீங்கள் பேசினதுபோல் பேசி இருந்தால், அந்த ஊழியக்காரர் உங்களிடத்தில் போதுமான அளவு தாழ்மை இல்லை என எண்ணி இருந்திருக்கக்கூடும்" என்று கூறலாம்.

வேறு ஒருவர் ஒருவேளை வேறுவகையில் குழப்பிக்கூறுபவராக இருக்கலாம். நன்கு சாட்சிபகரும் கலையைச் சாட்சிக்கூட்டத் தலைவர்கள் சபையில் வளர்க்கவேண்டும். இதைக்குறித்து அவர்கள் சரியான யோசனைகளை உடையவராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சபை ஜனங்கள் வரக்கூடிய கூட்டங்களில், என்ன நேர்ந்தாலும் முறையான எண்ணங்களோடு கையாளுவர், இந்த வகையில் அவர்களது மனதும் நிலைவரப்படுத்தப்படும்.

## சாட்சிக் கூட்டமானது ஒரு சொற்பொழிவுக்கல்ல

யாராவது ஒருவர் இக்கூடுகையில் பிரசங்கம்பண்ண முற்படுவாராயின், கூட்டத்தலைவர்: "மன்னிக்கவேண்டும் சகோதரா, இது பிரசங்கம் செய்வதற்கான கூடுகையல்ல, இது சாட்சிபகரும் கூடுகை; ஒருவேளை வேறொரு சமயத்தில் நீங்கள் நீண்ட நேரம் சத்தியஉரை நிகழ்த்தலாம்" எனக் கூறலாம்.

சாட்சிபகருதல் என்றால் என்ன என்பதைக்குறித்த விளக்கம் கூட்டத்தலைவர் தந்தால் அது நலமானதாயிருக்கும். அதுகுறித்து பின்வருமாறு: சாட்சியம் என்றால் என்ன என்பதைப்பற்றி ஓரளவிற்கு நாம் தெரிந்திருக்கிறோம். அது ஒரு வசனப்பகுதியின் மேலான சத்திய உரையோ அல்லது விளக்கவுரையோ அல்ல. இக்கூடுகை விசேஷமாகச் சாட்சி

பகருதலுக்கே. நான் இந்த மாலைப்பொழுதிற்கான வசனப்பகுதியின் விளக்கவுரையைத் துவக்கத்திலேயே தருகிறேன் என்று கூறினபின்பு, சகோதரருடைய சொந்த அனுபவங்களை அவர்கள் கூறுவதைக் கேட்கலாம்.

நண்பர்கள் அனைவரும் இவ்விஷயத்தை நன்கு புரிந்திருப்பார்கள் என நம்புகிறோம். யாதொரு விஷயம் துல்லியமான முறைமையின்றி இருப்பின், அது முறைமைக்குப் புறம்பானதாக அவர்களால் காணப்படவில்லை என எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கூட்டத்தலைவரோ அவ்வசனப்பகுதியை வாசித்து, அதின் அர்த்தத்தை, ஒருசில வார்த்தைகளில் குறிப்பிடலாம். அதன்பின்பு சாட்சிகள் கேட்கப்பட்டு, என்ன எதிர்ப்பார்க்கப்பட்டதோ அதை அவர்கள் காண்பர். கூட்டமுடிவில் கூட்டத்தலைவரின் சொந்த அனுபவங்கள் தரப்பட்டால், மற்றவர் அனைவரும் முறையான கருத்தைப் பெற்றுக்கொள்வர்.

நம்முடைய கருத்து என்னவெனில்: சகோதரர்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல முறையற்ற அவசரம் காண்பிப்பது அவர்களுக்கு சிறந்ததல்ல என்பதாகும்; மாறாக நம்முடைய வழக்கத்தின்படி வாழ்த்துத் தெரிவிக்கும்வரைக் காத்திருக்கலாம். இந்த விஷயங்கள் சம்பந்தமாக வசனங்கள் நேரடியாகச் சொல்லப்படவில்லையாதலால், இதை எந்த ஒரு சட்டமாகவோ அல்லது பிரமாணமாகவோ போட நமக்கு உரிமையில்லை. வெறுமனே ஆலோசனை தரமுடியும். என்னவெனில், கூட்டம் முடிகையில் நீண்டநேர சம்பாஷணைகளுக்குள் நுழைவதினால் பிரயோஜனம் இல்லை என்பதேயாகும். கூடுகை முடிந்தபின்பு கூட்டம் போடுவதினால், அக்கூட்டத்தினுடைய பலன்களையும் ஆசீர்வாதங்களையும் இழக்கச்செய்யும் அபாயமும் உண்டு. சகோதரர்கள் கூடுகை முடிந்தவுடன் உடனடியாகச் சென்றுவிடும்போது, ஐக்கியத்திற்கான அதிக வாய்ப்பு இல்லை என்பதும் உண்மையே. கூட்டத்தலைவர் வரும் முன்போ அல்லது கூடுகை ஆரம்பிக்கும் முன்போ வரும்போது, சிறிது நட்பின் பரிமாற்றம் நடைபெறலாம். அவ்வாறு செய்யும்போது ஒரு சிலருக்கு அது வீண்போகாது. இது ஒரு மிகவும் பயனுள்ள வாய்ப்பாகத் தெரிகிறது.

## ஜெபித்தலில் முறையான மனப்பாங்கு

ஜெபத்திலே கர்த்தரிடத்தில் சேருகிற எந்த ஒரு கிறிஸ்தவனும், அவன் உடலை எவ்விதமாக வைக்கவேண்டும் என்பது பற்றி எந்த வரையறையும் வேதத்தில் இல்லை. ஆனால் நின்றுகொண்டும், முழங்காற்படியிட்டும் ஜெபிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் தெளிந்த புத்தியின் ஆவியில் ஒருவர் வழிநடத்தப்படவேண்டும். அவர் வெளியிலே தெருவில் இருக்கும்போது, முழங்காற்படியிடுவது கண்டிப்பாக விரும்பத்தக்கதல்ல. கற்களாலான தரையில் நிற்கும்போது அங்கும் முழங்காற்படியிடுவது விரும்பத்தக்கதல்ல. தனிமையில் இருக்கும்போது முழங்காற்படியிட்டு ஜெபிப்பது சிறந்தது. இருந்தபோதிலும் முழங்காற்படியிட்டு ஜெபிக்கும்போது தூக்கக்கலக்கமடைகிறோம் எனச் சிலர் தெரிவிக்கிறார்கள். நாம் எவ்வாறு செய்தால் சிறப்பாக இருக்கும் என நம் மனப்பாங்கு சொல்கிறதோ, அவ்வாறு செய்வதே நம்முடைய விருப்பமாகும். முழங்காற்படியிடும்போது தூக்கக்கலக்கமாக இருக்கிறது என்று நாம் கண்டால், விழித்திருந்து அதேசமயத்தில் ஜெபத்தில் கவனத்தோடு இருக்க வேறு முறையை மேற்கொள்ளலாம்.

சபையாராக ஜெபிக்கும்போது தலைகளைத் தாழ்த்தி அமர்ந்திருந்து ஜெபிப்பது சிறந்தது என்பது எங்களுடைய கருத்தாயும் உள்ளது. எந்த மனப்பான்மையைத் தெரிவுசெய்வது என்பது பெரும்பாலும் பெற்றிருக்கும் அறிவையும், பழக்கவழக்கத்தையும் சார்ந்ததாகும். எங்கும் இருக்கும் நண்பர்களுக்கு நாம் சொல்ல நினைக்கும் கருத்தானது, பொது ஆராதனையில் மேற்சொன்ன முறையே ஜெபிக்கும்போது சிறந்தது ஆகும். சிறிய கூடுகையாயிருந்து தரையில் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தால் முழங்காற்படியிடுவது நன்று.

சாட்சிக்கூட்டங்களைப் பொறுத்தளவு, நம்முடைய கருத்து என்னவெனில், பெரிய கூடுகையாக இல்லாமலிருந்தாலொழிய, அமர்ந்துகொண்டு சாட்சிபகருவது சிறப்பானதாகும்; காரணம் அமர்ந்திருப்பவர்களுக்குச் சாட்சி பகருவது சுலபமாக இருக்கும். எழுந்து நின்று சாட்சி கூறுதல் சிலருக்குக் கடினமானதாகவும், தர்மசங்கடமானதாகவும் இருப்பதுடன், என்ன சொல்லப்போகிறோம் என்பதையும் மறந்துவிடுவர். ஆகவே அமர்ந்திருப்பது அவர்களுடைய பதட்டத்தைக் குறைக்கிறது. பெரிய அளவிலான கூடுகையில் ஒருவர் எழுந்து நின்று பேசும்போது அவருடைய குரல் அனைவருக்கும் கேட்கும்.

## சபையாகப் பாடும்போது எழுந்து நிற்பது

பாடுவதைப் பொறுத்தமட்டில், கிரேட் பிரிட்டனில் உள்ள வழக்கத்தின்படி நின்றுகொண்டு பாடுவது மிகவும் நன்று. துதி ஆராதனையில் ஒன்றன்பின் ஒன்றாக பல பாடல்கள் பாடப்படும்போது நின்றுகொண்டேயிருப்பது மிகக் கடினமானதாகும். ஆனாலும் நின்றுகொண்டு பாடுவது பொதுவாக அனுகூலமானது. நின்றுகொண்டு ஒருவர் பாடும்போது இது ஏற்ற நிலையாகக் காணப்பட்டு, அவருடைய குரல்வளையங்கள் சரியான நிலையில் இருப்பதால் அவரால் நன்றாகப் பாடவும் முடிகிறது. ஆகவே பாடல் அறிவிக்கப்படும்போது, சகோதரர்கள் நிற்பது விரும்பத்தக்க ஒன்றாகும்.

எப்போதும் பொருத்தமான முறையாக, "எழுந்து நிற்க" அழைக்கவேண்டுமே தவிர, கண்டிப்பான முறையில் அழைப்பு விடுக்கக்கூடாது. கூட்டத்தலைவர், "சபையானது எழுந்து நிற்கவும்" என்று கூறாமல், நாம் எழுந்து ஒரு பாடலைப் பாடலாம் எனக் கூறவேண்டும். உடல் நிலையைப் பொறுத்துச் சிலர் உட்கார்ந்து இருப்பதே நன்று. அதினாலேயே, "நாம் எழுந்து பாடுவோம்" என்ற அழைப்பானது எழுந்து நிற்க விருப்பமுடையவர்களுக்கே சொல்லப்பட்டதாக இருக்கும். எழுந்து பாடவும், பின் நின்றவண்ணமாக இருக்க, "சகோதரர் A" ஜெபிப்பார் என்று சிலரைப்போன்று, நாம் கூறுவது பெரிய தவறு என நாங்கள் நினைக்கிறோம். அநேக வேளைகளில் இது உண்மையிலேயே கடினமான இன்னல்களைச் சுமத்துவதாக இருக்கும்.

## அதிகப்படியான இறுமாப்பு

ஆனால் நிறைவு பாடலின்போது, சபையானது எழுந்து நிற்கையில், முடிவு ஜெபத்திற்காக அவர்களை உட்காரச்சொல்வதற்கு பதிலாக நின்றுகொண்டே இருக்கச் செய்வது நலமானதே. மேலும் அந்த ஜெபமானது ஆசீர் அளிக்கும் விதமாக இருக்கவேண்டுமே தவிர, யாரையும் துன்பப்படுத்தும் வகையில் நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது. ஏற்கெனவே ஒரு ஜெபம் செய்யப்பட்டிருக்குமாயின், அதிக வார்த்தைகளால் ஏறெடுக்கப்படும் ஜெபமும் அவசியமானதல்ல. பெரும்பாலான ஜெபங்கள் மிகவும் நீண்ட ஜெபங்களாகவே உள்ளன.

ஜெபத்தில் வழிநடத்துபவர் நீண்ட விண்ணப்பங்களை ஏறெடுப்பதன் மூலம் முழுச்சபையாரின் சுயாதீனம் மற்றும் உரிமைகளில் தலையிடக்கூடாது. நம்முடைய கர்த்தர் மிக நீண்ட ஜெபங்களை ஏறெடுத்தார் என வாசிக்கமுடியாது. தனிமையில் இராமுழுவதும் சில நேரங்களில் ஜெபித்தார் என்பது உண்மையே. ஆனால் பொது இடங்களில் நீண்ட ஜெபங்களை அவர் ஏறெடுக்கவில்லை. கர்த்தர் சீஷருக்குக் கற்றுக்கொடுத்த ஜெபமானது மிகச் சுருக்கமானதாகவும், புள்ளி விவரமானதுமாகும். அண்ட சராசரத்தையே எவ்வாறு வழிநடத்தவேண்டும் எனக் கர்த்தருக்கே தெரிவிக்க நினைக்கும் சிலர் சுய அக்கறை உடையோராயும், இறுமாப்பும் உடையவராகவும் இருக்கின்றனர். நம்மையே நாம் இயக்குவதற்கு மிகக் குறைவுள்ளவர்களாக இருப்பதைக் கற்றிருக்கும்போது, சர்வ வல்லவருக்கு அவருடைய விஷயங்களில் ஆலோசனை வழங்கமுடியாது.

## சம்பிரதாயமான ஜெபம் கேலிக்குரியது

முக்கியமான ஊழியக்காரர் ஒருவர், ஏறெடுத்த ஜெபம் சம்பந்தமாக அடுத்ததினம் போஸ்டன் நகர நாளிதழில், குறிப்பிடப்பட்டிருந்த செய்தி என்னவெனில்: போதகர் ___________, போஸ்டன் நகர மக்களுக்காக இதுவரை இல்லாத வகையில், விலாவாரியான ஜெபம் ஏறெடுத்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஜெபம் கர்த்தருக்கு ஏறெடுக்கப்படவில்லை என இதழாசிரியர் (சகோ ரஸல்) தெளிவாக அறிந்திருந்தார்! நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியை அதிக அளவில் பெற்றிருக்கவேண்டுவது தேவையான ஒன்று. நம்முடைய இருதயத்தின் நோக்கங்கள் நல்லவையாக இருக்க கர்த்தர் நோக்குகிறார் என நாம் யூகிக்கலாம். ஆனால் நம்முடைய ஜெபம் மனிதரால் கேட்கப்பட வேண்டும் என அவர் நமக்குச் சொல்லவில்லை. நாம் கர்த்தரிடமே ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்.

அந்தரங்கமான ஜெபமானது, "அறைக்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி" என்று நமக்குச் சொல்லப்பட்டிருப்பதால், நம்முடைய சத்தம் கதவுக்கு வெளியே யாராலும் கேட்கப்படக்கூடாது என நாம் நினைக்கலாம். ஜெபமானது, அந்தரங்கமானதாகவோ அல்லது வெளிப்படையாகவோ இருந்தாலும், பயபக்தியோடு அது சர்வ வல்லவரை நோக்கியே இருக்கவேண்டும். மேலும் அது அந்தத் தருணத்துக்கேற்றவாறு இருதயத்தின் விருப்பங்களை வெளிப்படுத்துகிறதாக

இருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் நாம் எதற்காகச் செல்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் சொல்வதற்கென்று ஒன்றுமில்லாத நேரத்தில், கிருபாசனத்தை நோக்கி செல்லாமலிருத்தல் நல்லது.

எந்தக் கூடுகையின் முடிவிலும், செய்தியளித்தவர் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் அல்லது ஐந்து நிமிடங்களாவது ஜெபித்தாலும்கூட அது ஞானமற்ற செயல் என நாம் நினைக்கிறோம். இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே மிக அதிகம் என நாம் நினைக்கிறோம். நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் குறித்துக் கர்த்தர் அறிவார், அதோடு நாம் சபையாரைக் கருத்தில் கொண்டவர்களாயிருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு காரியத்திற்காக ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்த பிற்பாடு, ஆராதனையை நீளச்செய்யும் பொருட்டு நீண்ட ஜெபங்கள் ஏறெடுப்பது ஞானமற்றதாய் இருக்கும். நீண்ட ஜெபங்கள் அந்தரங்கமாகச் செய்யப்பட வேண்டியவை. எனினும் சில கிறிஸ்தவர்கள் ஜெபத்தினால் உற்சாகப்படுத்தப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சிலர் எந்த அளவுக்கு ஜெபிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஜெபிக்காதவர்களாக இருக்கின்றனர். ஜெபம் மிகவும் அருமையான சிலாக்கியம். அதை ஒருவர், ஒரேவித கருத்துக்களை திரும்பத்திரும்ப ஓயாமல் சொல்வதன்மூலம் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

---

# மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை

*"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்." (அப்போஸ்தலர் 20:29-30)*

இந்த வார்த்தைகளானது, எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களுக்குக் கூறப்பட்டவையாகும். பரிசுத்த பவுலடிகளார் எருசலேமுக்குப் போகையில், எபேசு பட்டணத்திற்கு அருகாமையில் காணப்பட்டபோது, தான் அங்குக் கொஞ்சம் காலம் காணப்படப்போவதாகவும், அவர்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பதில் மகிழ்ச்சியாய் இருப்பார் என்பதாகவும் கூறி (எபேசு சபையின்) மூப்பர்களுக்கு ஆளனுப்பி வைத்தார். அவர்களும் வந்து, அவரோடுகூட நீண்டதொரு கலந்துரையாடல் பண்ணினார்கள். நமது ஆதார வசனமானது, அவர்களுக்கு அவரால் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பாகமாய் இருந்தது. அவர்களை மறுபடியுமாக சந்திக்கப்போவதில்லை என்று அவர் அவர்களிடத்தில் கூறி, அவர்கள் தங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறினார். இது மற்றவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருத்தல் என்பதைவிட, தன்னைக்குறித்தே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவருக்கும் கடமையாக்குகின்றது. ஒரு மனுஷன் தன் சொந்த மனதை அடக்குகிறதற்குக் கற்றுக்கொள்ளாதது வரையிலும், அவன் மற்றவர்களை அடக்குவதற்கு ஏதுவான நிலையில் காணப்படான்.

இது மூப்பர்கள் அனைவரின் விஷயத்திலும் குறிப்பாய் உண்மையாகக் காணப்படுகின்றது. அவர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சபையார் அவர்களுக்குக் கொடுத்திடும் கனத்தின் நிமித்தமாக, அவர்கள் தற்பெருமையினால் - இறுமாப்புணர்ச்சியினால் இழுக்கப்பட்டுப் போவதற்குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் கர்வமுள்ளவர்களாகுவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் தங்களைக் குறித்தும் மற்றும் தங்களைக் கண்காணிகளாக வைத்த தேவனுடைய மந்தையைக்குறித்தும் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்குச் செய்தி கொடுக்கப்பட்டது. அவர்கள் சபையாருக்கு மாத்திரமல்லாமல், கர்த்தருக்கும்கூடப் பிரதிநிதிகள் என்ற தங்களது ஸ்தானத்தை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட வழியில் - அதாவது கைகளை நீட்டி தேர்ந்தெடுக்கும் வழி மூலமாய் இந்த ஸ்தானம் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இதை அவர்கள் சபையாருடைய வார்த்தையாக எடுத்துக்கொள்வது மாத்திரமல்லாமல், இன்னுமாக தாங்கள் பரிசுத்த ஆவியினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். சபையை இப்படியாகப் பராமரிப்பது என்பது தங்களுக்கான மாபெரும் ஊழியமென, கர்த்தருடைய நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டிய முக்கியமான ஊழியமென அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

## ஓநாய்களும், கள்ள ஆடுகளும்

ஏன் மூப்பர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாம் காரணமானது, அப்போஸ்தலன் சொல்லியுள்ளது போன்று, மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய் அவர்களுக்குள்ளே வரும் என்பதாகும். ஓநாய்களானது எந்த ஒரு காலப்பகுதியிலும் மந்தையில் அங்கம் வகிப்பவர்களாக இருக்கவில்லை என்பது சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. இவர்கள் தங்களை ஓநாய்கள் என்று காண்பித்துக் கொள்வதில்லை. ஓநாய் சுபாவமுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பார், சபையாருடன் தங்களை இணைத்துக்கொள்ள நாடிடுவார்கள் என்று அப்போஸ்தலனுடைய எச்சரிப்பானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "கள்ளத்தீர்க்கத்தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்று நமது கர்த்தர் எச்சரித்துள்ளார் (மத்தேயு 7:15). இது வஞ்சிப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது - ஆடுகள்போன்று நடந்து, ஆடுகள் மத்தியில் காணப்பட்டு மற்றும் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு, தங்களை ஆடுகள் என்று

காண்பித்துக்கொள்பவர்கள், ஆனால் ஒருபோதும் உண்மையான ஆடுகளாக இராதவர்கள் என்பதை சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. மந்தைக்குள் இவர்கள் வருவதற்கான நோக்கம் சுயநலமானதேயாகும் மற்றும் இவர்களது ஆதிக்கமானது, ஆடுகள் மத்தியில் ஓநாய் கொண்டிருக்கும் ஆதிக்கமாகவே இருக்கின்றது. ஓநாயானது ஆடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றதாய் இருக்கின்றது - ஓநாய் ஆடுகளைக் கொன்று, அவைகளின் இரத்தத்தினை உறிஞ்சிடுவதற்கே நோக்கம் கொண்டிருக்கின்றது.

நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட நிலையில், எந்தக் காரணமுமில்லாமல் சத்தியத்தைப் புரட்டுகிற, மந்தையை பாதிப்பிற்குள்ளாக்குகிற, மந்தையைக் குழப்புவதற்கு ஏதுவாயும், அவர்களைப் புதுச்சிருஷ்டிகளென அழித்துப்போடுவதற்கு ஏதுவாயும், அவர்களை மரணத்திற்கு இழுத்துச்செல்வதற்கு ஏதுவாயும் வாக்குவாதங்களை எழுப்புகிற ஒரு வகுப்பார் காணப்படுவார்கள் என்பதாகத் தெரிகின்றது. அநேகமாக யுகம் முழுவதிலும் இம்மாதிரியான வகுப்பார் காணப்பட்டிருக்கின்றனர். நம்முடைய ஆதார வசனமானது, ஆடு ஓநாய்களாக மாறும் என்று சுட்டிக்காண்பிக்கவில்லை என்றாலும், ஒரு காலத்தில் ஆடுகளாய் இருந்து பிற்பாடு ஓநாய் சுபாவத்தினை வெளிப்படுத்தி மற்றும் மந்தையைப் பாதிப்பிற்குள்ளாக்கும் விஷயத்தில் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்திடுவதில் பிரியம் கொண்ட சில நபர்களை, நம்மில் சிலர் ஒருவேளை அறிந்திருக்கலாம். ஆடுகள் மத்தியில் வந்து தங்களை ஆடுகள் போல் காண்பித்துக்கொள்பவர்களைக் குறித்து நாம் ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்கு கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நம்மை எச்சரிக்கின்றனர்.

ஓநாய்களிடமிருந்து வரும் இந்த அபாயத்துடன்கூட, உள்ளிலும் அபாயங்கள் காணப்படும். இதனை மிகவும் சூழ்ச்சிகரமான அபாயம் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். ஓநாய் சுபாவம் உள்ளவர்கள் ஒருபக்கம் இருக்க, சபையாரில் சிலர் போதகர்களாக ஊழியம் புரிபவர்களாகக் காணப்பட்டு, மாறுபாடானவைகளைப் போதிப்பதன் மூலம், சீஷர்களைத் தங்களிடத்திற்கு இழுத்துக்கொள்வதற்கு நாடிடுவார்கள். ஏதோ சீஷர்கள் அவர்களுக்குச் சொந்தமானவர்கள் போன்று, இழுத்துச் செல்வதற்கு நாடிடுவார்கள். சபை கர்த்தருடைய மந்தையாக இருக்கின்றனர் என்றும், அவர்கள் கர்த்தருடைய ஆடுகளாய் இருக்கின்றனர் என்றும், அடையாளம் கண்டுகொள்ளாமல் - இது என்னுடைய சபையார், என்னுடைய மந்தை என்பது இவர்களது உணர்வுகளாய் இருக்கும். இம்மாதிரியான உணர்வுகளில், கர்த்தருடைய மற்றும் வேதவாக்கியங்களுடைய ஆவிக்கு எதிரான சுயநலமான மனப்பான்மையே காணப்படுகின்றது. "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்பது திவ்விய நிர்வாகத்தின் கொள்கையாகும் (லூக்கா 14:11). உண்மையான மூப்பராகவும், கர்த்தருக்கு உண்மையான ஊழியக்காரனாகவும் இருக்க விரும்பும் எவரும், இவைகளை நினைவில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் சுயநல நாட்டத்தின் ஆவியாயிருக்கும் அனைத்தையும் தவிர்த்திட வேண்டும். இப்படியாக இல்லையேல் அவன் தனக்கு மாத்திரமல்லாமல், இம்மாதிரியான நடக்கையின் வாயிலாக மற்றவர்களுக்கும் பாதகம்பண்ணுகிறவனாய் இருப்பான் என்பதைத் தெரிந்துகொள்வானாக.

## திறமைக்கு ஏற்ப பொறுப்பு

செம்மறியாடுகள் மிகவும் அச்சம்கொள்ளும் விலங்குகளாகும் மற்றும் சில வழிநடத்துதல் அவைகளுக்குத் தேவைப்படுகின்றது. மேய்ப்பன் இல்லாமல் இருக்கையில், அவைகளை வழிநடத்துவதற்கு, அவைகளின் மத்தியிலிருந்து, ஒன்று காணப்படுவது அவசியமாய் இருக்கின்றது. ஆட்டுமந்தையில், ஞானமுள்ள ஆடுகள் - மந்தையின் ஆட்டுக்கடாக்கள், வழிநடத்துபவைகளாக காணப்படுகின்றன; இவைகளை மேய்ப்பன் இல்லாமல் இருக்கையில், பின் தொடருவதற்கு ஆடுகள் கற்றுக்கொள்கின்றன. மந்தையிலுள்ள இந்த மூத்த ஆட்டுக்கடாக்கள், கிறிஸ்துவின் சபையிலுள்ள மூப்பர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றன. ஆட்டுக்கடாக்களின் கொம்புகளானது பாதுகாக்கும் வழிவகையாகக் காணப்படுகின்றது; இதனால் ஆட்டுக்கடாவானது, தாக்குதலின்போது, எதிரியைத் துரத்தமுடியும் மற்றும் செம்மறியாடுகளானது ஆட்டுக்கடாவிற்குப் பின்பாக போய் நிற்கமுடியும்.

ஆனால் மந்தையினுடைய சில ஆட்டுக்கடாக்களைக் குறித்துள்ள - கர்த்தருடைய ஜனங்களுக்கான சில வழிநடத்துபவர்களைக் குறித்துள்ள அபாயம் பற்றி வேதவாக்கியங்கள் கூறுகின்றன (எசேக்கியேல் 34:17-23); இந்த ஆட்டுக்கடாக்களானது, ஓடைக்குள் இறங்கி, அதைச் சேறாக்கி, தண்ணீரை அசுசிப்படுத்துகின்றது. வெள்ளாடுகள்கூடக்

குறிப்பிடப்பட்டுள்ளன; இது கிறிஸ்துவின் சபையிலுள்ள சில மூப்பர்களுடைய மனப்பான்மையைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் இதை நாம் மறந்துபோய்விடக்கூடாது. செம்மறியாடுகளின் சொந்தக்காரர்கள் சிலசமயம் மந்தையை வழிநடத்துவதற்கு வெள்ளாடுகளைப் பயன்படுத்துவார்கள் என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது; காரணம் செம்மறியாட்டைப்பார்க்கிலும் வெள்ளாடானது, எதிர்த்து நிற்கும் தன்மையை அதிகமாய்ப் பெற்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியாக வெள்ளாடானது, செம்மறியாடுகளுக்குத் தேவைப்படும் தைரியம் முதலியனவற்றை அளிக்கின்றதாய் இருக்கின்றது. எத்தனை கர்த்தருடைய மந்தைகள் வெள்ளாடுகளினால் வழிநடத்தப்படுகின்றனர் என்பதை நாம் அறியோம். ஆனால் ஒருவர் வெள்ளாட்டினுடைய சுபாவத்தினை வெளிப்படுத்தும்போது அவரை, வழிநடத்துபவராக்குவதைச் சபையார் கண்டிப்பாய் தவிர்த்திட வேண்டும்.

தகுதியான பண்புகளை வெளிப்படுத்துபவர்களே தகுதியான வழிநடத்துபவர்கள். சபையானது பெரும்பாலும் வழிநடத்துபவர்களைச் சார்ந்திருக்கின்றது; ஆகையால் வழிநடத்துபவர்களே பெரிதளவில் பொறுப்பினை உடையவர்களாய் இருக்கின்றனர். ஆகையால்தான் போதகனாய் இருக்கும் மனுஷன் கடுமையான சோதனைக்குள்ளாவான், கடுமையான பரீட்சைக்குள்ளாவான் என்பதை அறிந்து, என் பிரியமான சகோதரரே, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (யாக்கோபு 3:1). அவன் தன்னுடைய திறமைக்கேற்ப அதிகம் பொறுப்புடையவனாக இருப்பான். ஆகையால் மூப்பர்களின் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருமே ஒருவிதத்தில் மந்தைக்குப் பிரதான மேய்ப்பனாகக் காணப்படுகின்றதான கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகின்றவர்களாய் இருப்பார்கள்.

---

# "பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ!"
## லூக்கா 11:37-54

"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்." - கலாத்தியர் 6:7

நமது கர்த்தருடைய நாட்களில் யூதர்கள் மத்தியில் காணப்பட்ட பல்வேறு பிரிவினர்கள் மத்தியில், பரிசேயர்கள் சிறந்தவர்களாக, தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் மிகவும் நேர்மையாய் இருந்தவர்களாக நாம் எடுத்துக்கொள்வதற்கு நமக்கு அநேகக் காரணங்கள் இருக்கின்றது. சதுசேயர்கள் எதிர்க்கால வாழ்க்கைக்குறித்த எவ்விதமான நம்பிக்கையும் கொண்டிராதவர்களாய் இருந்தார்கள். சதுசேயர்கள் நாத்திகர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் காணப்பட்டனர். Essenes ( எசினிஸ்) எனும் சிறு பிரிவினர், வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை; இவர்கள் விமர்சகர்களாகவும், குறைவான விசுவாசம் உடையவர்களாகவும், யூத மார்க்கத்தை, புறச்சமயத்துடன் இணைத்துக்கொண்டு, குழப்பத்தில் காணப்படும் வகுப்பினராக இருந்தனர். பரிசேயர்கள் ஆச்சாரமிக்க/வைதீகமான யூதர்கள் என்று சொல்லலாம். இவர்களுடைய பெயரின் அர்த்தம், "பரிசுத்தமான ஜனங்கள்" என்பதாகும். மற்ற பிரிவினர்கள் அனைவரும், முற்றிலுமாக தேவனை விட்டுப் போய்விட்டனர் என்பதை இங்குக் குறிப்பிடாமல், பரிசேயர்களை மாத்திரம் நோக்கி, அவர்கள் தங்கள் பரிசுத்தத் தன்மையைக்குறித்துப் பெருமை பாராட்டிக்கொண்டாலும், அவர்கள் தேவன் அங்கீகரிக்கத்தக்கதான தகுதியின்றி இருக்கின்றார்கள் என்பதாக இயேசு சுட்டிக்காண்பித்துத் தெரிவிப்பதை இப்பாடத்தில் நாம் பார்க்கின்றோம்.

ஒரு பரிசேயன், இயேசு தன்னுடைய வீட்டில் வந்து பந்தி அமரும்படிக்கு அழைப்பித்தான். அழைப்பை உடனடியாக இயேசு ஏற்றுக்கொண்டவராக, பரிசேயர்களுடைய கழுவுதல் சடங்காச்சாரங்களை அநுசரிக்காமல், மற்றவர்களுடன் பந்தி அமர்ந்துவிட்டார். இயேசு அஜாக்கிரதையுடன்/நிர்விசாரமாய் நடந்துக்கொண்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக கைகள் கழுவும் ஆச்சாரமானது, வெளிப்படுத்தின ஆவியிலுள்ள குற்றத்தைச் சுட்டிக்காண்பிப்பதற்குரிய வாய்ப்பை அடைவதற்கே, இயேசு விசேஷமாக, பரிசேயர்களுடைய கைகள் கழுவும் ஆச்சாரத்தைப் புறக்கணிக்க விரும்பினார்.

அந்தப் பரிசேயன், இயேசுவை ஆயக்காரனாகவோ அல்லது பாவி என்றோ எண்ணாமல், அவரை ஒரு பரிசுத்தமான மனுஷன் என்று எண்ணியிருந்தபடியால், இயேசு இப்படிக் கைகள் கழுவும் ஆச்சாரமான வழக்கத்தைக் கடைப்பிடிக்காமல் இருந்தது தனக்கு விநோதமாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இப்படியாக குறிப்பிட்டதினிமித்தமாக, இவ்விஷயம் தொடர்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. யூதர்களில் பரிசுத்தமாய் இருப்பவர்களால், அநுசரிக்கப்பட்டதான மதத்தின் பெரும்பான்மையான விஷயங்கள் வெறும் சடங்காச்சாரமான அநுசரிப்புகளாக இருக்கிறதே ஒழிய, உண்மையான பயபக்தியின் விஷயங்கள் அல்ல என்று இயேசு சுட்டிக்காட்டினார். வெளித்தோற்றத்தில் அவர்கள் சுத்தமாக இருந்தார்கள். ஆனால் இருதயத்தின் உள்ளே அசுத்தமாய் இருந்தனர், அதாவது ஆவிக்குரியவற்றில் பொல்லாப்புடையவர்களாய் இருந்தனர் என்று இயேசு சுட்டிக்காட்டினார். இருதயமே, தேவனுடைய பார்வையில் முக்கியமான காரியமாக இருக்கின்றது என்றும், வெளிப்புற சுத்திகரிப்பெல்லாம் இரண்டாம் பட்சமாகவே இருக்கின்றது என்றும் காண்பிப்பதற்குக் கர்த்தர் நாடினார். பாத்திரத்தின் உள்புறமே முதலாவது கவனிக்கப்பட வேண்டும், வெளிப்புறம் பிற்பாடே கவனிக்கப்பட வேண்டும்.

கர்த்தருடன் இருதய பூர்வமான இசைவிற்குள் வருபவர்கள், அதாவது கர்த்தருடைய செய்திக்கும், அச்செய்தியினுடைய ஆவிக்கும், கீழ்ப்படிவதன் மூலம் சுத்திகரிக்கப்பட்டவர்கள், உள்ளும், புறமும் சுத்தகரிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இருதயத்தில் சுத்தமாய் இருப்பவர்கள், தங்களுடைய சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப, சரீரத்திலும், பேச்சிலும், எல்லாவற்றிலும் சுத்தமாய் இருப்பதற்கு நாடுவார்கள். இவர்களுடைய இருதயத்தில் கிரியை செய்யும் கொள்கையானது, இவர்களுடைய அனைத்து வார்த்தைகளில், எண்ணங்களில் மற்றும் செய்கைகளில் எல்லா நேரங்களிலும், எல்லா நாட்களிலும் தாக்கம் ஏற்படுத்துகின்றதாய் இருக்கும்.

இவ்விடத்திலும், இன்னும் அநேகம் தருணங்களிலும், நமது கர்த்தர் குறிப்பிடுவதைக் கவனிக்கும் பொழுது பரிசேயர்களுடைய மாபெரும் தவறுகளில் ஒன்று பண ஆசையாக இருந்ததாகத் தெரிகின்றது. கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில், இயேசு பரிசேயர்களை, "பண

ஆசைக்காரர்களாகக்" கூறினதாகத் தெரிவிக்கின்றார். பணத்தின் மீதான இந்த அவர்களுடைய ஆசையும், பேராசையும், மற்றவர்களுடைய உரிமைகளை நேர்மையற்ற விதத்தில் புறக்கணிப்பதற்கு ஏதுவாக வழிநடத்தினது என்று இயேசு ஒரு தருணத்தில் பரிசேயர்களிடம் கூறினார். "விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்" என்று இயேசு பரிசேயர்களிடம் தெரிவித்ததின் அர்த்தம், இவர்கள் விதவைகளின் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்களுக்கெனச் சொத்துக்களைச் சேர்க்கின்றனர் என்பதாகும். இதன் காரணமாக, பரிசேயர்களில் அநேகர் நன்கு ஐசுவரியான்களாக இருந்தனர்.

பரிசேயர்கள், யூதருக்கான நியாயப்பிரமாண வெளிப்புற ஒழுங்குகளை எவ்வளவுதான் கவனமாய் கைக்கொண்டு வந்தாலும், மேற்கூறப்பட்ட இருதயத்தின் தவறான நிலையானது, தேவனுக்குப் பிரியமற்றதாக இருக்கும் என்று இயேசு சுட்டிக்காட்டினார். பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டிய வெளிப்புறமான விஷயத்தில், இவர்கள் சிறிதளவில் விவசாயம் பண்ணி வரும், சிறு விதைகளின் விஷயத்திலுங்கூட, ஜாக்கிரதையாய் இருக்கின்றனர் என்ற காரியத்தை இவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். எல்லாவற்றிலும் இவர்கள் பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்று ஜாக்கிரதையாய் இருந்தனர், ஆனால் நியாயப்பிரமாணத்தினுடைய முக்கியமான காரியங்களையோ இவர்கள் புறக்கணித்துவிட்டனர், அதாவது தாங்கள் கையாளும் விஷயங்களில் நீதியாய் நடந்துக்கொள்வதையும், மற்றவருக்கு இரக்கம் காட்டும் விஷயத்தையும் புறக்கணித்துவிட்டனர். இவர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பாகத்தைக் கொடுப்பதற்கு ஆண்டவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை, மாறாக மிகவும் முக்கியமானவைகளைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது என்றே தெரிவித்தார்.

இன்னொரு தருணத்தின்போது, "நீங்கள் கொசு இல்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்" என்றார்; அதாவது இவர்கள் எந்தளவுக்கு இவர்களுடைய நியாயங்களிலும், செய்கைகளிலும் முன்னுக்குப் பின் முரண்பாடாகக் காணப்படுகின்றார்கள் என்பதைக் கூறினார். கொசு இல்லாதபடி வடிகட்டுதல் என்பது நெரித்துக்கொல்லப்பட்டவைகளைத் தவிர்ப்பதில், இவர்கள் ஜாக்கிரதையாய் இருந்ததைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒட்டகத்தை விழுங்குதல் என்பது, இவர்கள் சிறிய காரியங்களில் ஜாக்கிரதையாய் இருக்க, இவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திலுள்ள முக்கியமானவைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து விடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் பண ஆசையுடையவர்களாகவும், சுயத்தை நாடுகிறவர்களாகவும் இருப்பதற்குப் பதிலாக, இரக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றும், இப்படியாக இவர்களுடைய இருதயம் இரக்கம் கொண்டதாக இருக்கும் பட்சத்தில், வெளிப்புற சுத்தம் இவர்களுக்கு முக்கியத்துவம் அற்றதாய் இருக்கும் என்றும் இயேசு கூறினார்.

இவர்கள் ஜெப ஆலயங்களில் முதன்மையான இடங்களையும், சந்தை வீதிகளில் வந்தனங்கள் அடையவும் விரும்பினார்கள் என்று இயேசு கூறினார். இவர்களது பண ஆசையானது, பெருமை மற்றும் நேர்மையின்மையின் உருவத்தை எடுத்துக்கொண்டது. மத விஷயங்களில் மிகவும் முக்கியமானவர்களாகவும், மிகவும் பிரபலமானவர்களாகவும் இருப்பதற்கும், ரபீ என்றும் அதாவது ஆண்டவர் என்றும், கல்விமான் என்றும் வாழ்த்தப்படுவதற்கும் விரும்பினார்கள். இவர்கள் வெளிப்புறத்தில் சுத்தமாயும், வெள்ளையடிக்கப்பட்டதும், ஆனால் உள்ளே அசுத்தத்தையும், செத்துப்போனதையும் கொண்டுள்ளதுமான கல்லறைகளாக இருக்கின்றனர் என்று இயேசு கூறினார். இவர்கள் வெளிப்புறத்தில் அல்லது சடங்காச்சாரமான அனுசரிப்பில் மாத்திரம் பரிசுத்தமான ஜனங்களாக இருந்தனர்.

கிறிஸ்தவ மண்டலத்தின் அனைத்துப் பிரிவினர்களை அல்லது ஏதேனும் ஒரு பிரிவினர் நியாயந்தீர்ப்பதும், அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையைப் பொருத்துவதும் நமக்கு அடுத்த வேலை இல்லை. இயேசுவைப் போன்று, மனுஷர்களுடைய இருதயங்களை அறிவதற்கான வல்லமையோ அல்லது மற்றவர்களை மாய்மாலக்காரர்கள் என்று கூறுவதற்கான அதிகாரமோ நமக்கு இல்லை. "காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்" (1 கொரிந்தியர் 4:5) என்பதே நமக்கான கர்த்தருடையச் செய்தியாக இருக்கின்றது. அவருடைய இரண்டாம் வருகையின் போது, அனைத்தும் வெளியரங்கமாகும் என்று கர்த்தர் கூறியுள்ளார். ஒவ்வொருவரின் உண்மையான நிலையானது, அப்பொழுது வெளியரங்கமாக்கப்படும். அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் வந்து, நாங்கள் உம்முடைய நாமத்தினாலே அநேகம் வல்லமையான கிரியைகளைச் செய்தோம் அல்லவா என்று கூறுவார்கள் என்றும், இதற்குப் பதிலாக "உங்களை நான் அறியேன்; நீங்கள் என் நாமத்தில் செயல்பட்ட அநீதியின், அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள்" என்றுதான், கூறுவார் என்றும் கர்த்தர் கூறினார்.

நம்முடைய நாட்களிலுள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் விவரித்துள்ளார். நம்முடைய நாட்களைக் குறித்துப் பேசுகையில், அப்போஸ்தலனாகிய பவுல் "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்கிறார் (2 தீமோத்தேயு 3:5). அதாவது வெளித்தோற்றமாய்க் கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றனர், ஆனால் உள்ளுக்குள் நாத்திகர்களாகவும், பண ஆசைக்கொண்டவர்களாகவும், அநீதியுள்ளவர்களாகவும், கொள்ளையடிக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்மாதிரியான காரியங்களை, இன்று சரியாக மதிப்பிடுவதற்கு மனுஷனால் முடிகிறதில்லை. கர்த்தருக்கு நேர்மையுடனும், வைராக்கியத்துடனும் காணப்படும் சிலர் மாய்மாலக்காரர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் பெயரிடப்படுகின்றனர்; ஆனால் நேர்மையற்றவர்களாகவும், வெறும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகவும் இருக்கும் சிலரோ விக்கிரகங்களாக அல்லது பூமிக்குரிய அமைப்புகளுக்குத் தாராளமாய் நன்கொடை வழங்குபவர்களாக உயர்த்திப் பேசப்படுகின்றனர்.

பரிசேயர்கள் மத்தியில் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்களின் போதனைகளில் நன்கு கைத்தேர்ந்தவர்களாகவும், கல்விமான்களாகவும் விசேஷமாய்க் காணப்பட்ட் சிலர், நியாயசாஸ்திரிகள் என்று அழைக்கப்பட்டனர்; இவர்கள் இன்றுள்ள டாக்டர்ஸ் ஆப் டிவைனிட்டி (Doctors of Divinity) எனும் பட்டம் உடையவர்களுக்குச் சரிசமமானவர்களாய்க் காணப்பட்டனர். இவர்கள், பொது ஜனங்களால் சுமக்க முடியாத கடினமான பாரங்களை, ஜனங்கள் மீது சுமத்தினதாகக் கூறி, இவர்களை இயேசு கடிந்துக்கொண்டார். அதாவது பொதுஜனங்களைச் சோர்வடைய செய்யத்தக்கதாக, தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்குக் கடினமான விளக்கங்களை இவர்கள் கொடுத்தார்கள் என்ற விதத்தில் இயேசு கூறினார்; அதாவது முயற்சி செய்யலாமே என்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாத பூரணமான மற்றும் உயர்வான கொள்கைகளை, ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் முன்பாக இவர்கள் வைத்ததை இயேசு கூறினார். இவர்கள் இப்படிச் செய்வதற்கான நோக்கம் என்னவெனில், இவர்களுடைய பரிசுத்த தன்மையை, பொது ஜனங்களுக்கு அறியப்பண்ணி, இதன் மூலமாக இவர்கள் பொதுமக்களிடையே மிகுந்த பயபக்திக்குரியவர்கள் என்று கருதப்படுவதற்கேயாகும். இவர்களிடம் இருக்கும் அதே ஆவியைப் பெற்றிருந்த இவர்களுடைய பிதாக்கள்தான், தீர்க்கத்தரிசிகளைக் கொன்றுபோட்டார்கள், அதாவது தங்கள் பிதாக்கள் தீர்க்கத்தரிசிகளை மரணத்திற்கு ஏதுவாக துன்பப்படுத்தினார்கள் என்பதை மறந்து, அந்த முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகளுக்குக் கல்லறைகளைக் கட்டினார்கள்.

## "ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ!"

பரிசேயர்களுக்கு எதிராக இயேசு, ஐயோ என்று தீர்க்கத்தரிசனம் உரைத்ததினால், இவர்களை நித்தியமான சித்திரவதைக்குரிய தீர்ப்பிற்குள் தீர்க்கின்றார் என்றோ, நித்தியமான சித்திரவதையின் விதத்தில்தான் இவர்கள் மீது வரும் ஐயோவின் தன்மை காணப்படும் என்றோ கர்த்தர் கூறினதாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. யூத தேசத்தாருக்கென்று தேவனால் வாக்களிக்கப்பட்ட மாபெரும் ஆசீர்வாதங்களை, அதாவது மேசியாவின் இராஜ்யத்தில் பிரதான பங்காளிகளாக இருப்பதற்கான மாபெரும் ஆசீர்வாதத்தை, பரிசேயர் இழந்துப் போக இருக்கின்றார்கள் என்பதே, பரிசேயர்களுக்கு ஐயோ என்று கர்த்தர் கூறினார் (ஆதியாகமம் 12:3). வாக்குத்தத்தமானது முதன்மையாய் இஸ்ரயேலுக்கே உரியதாய் இருந்தது. இதற்கு இவர்கள் ஆயத்தமற்று இருந்ததின் காரணத்தினாலே, இது இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, வேறொரு இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்டது. தேவனால் நிர்ணயிக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டிக்கான எண்ணிக்கையை நிறைவு செய்வதற்குப் போதுமான "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள்" இருந்திருப்பார்களானால், இராஜ்யத்திற்கான வாய்ப்பு, புறஜாதிகளிடம் கடந்துப் போயிருக்காது.

மேசியாவுடன் உடன் சுதந்தரத்தை அடையும் விஷயத்தில், யூதர்கள் மத்தியில் பரிசேயர்கள், மிகவும் அனுகூலமான ஸ்தானத்தில் காணப்பட்டனர்; ஆனால் இவர்கள் தாங்கள் எதை இழக்கின்றார்கள் என்று இயேசு அடையாளம் கண்டது போன்று, இவர்கள் உணர்ந்து/அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை. "உங்களுக்கு ஐயோ" என்ற இயேசுவின் வார்த்தையானது, அனுதாபத்துடனும், பரிதாபத்துடனும் கூடியது என்று கருதப்பட வேண்டும். இயேசு அறிவித்த இவ்வசனத்தின் வார்த்தைகளானது, தெரிவிக்கின்றப் பிரகாரம் இயேசு சிலுவையில் அறையப்படும் காலங்களில், யூத தேசத்தின் மீது கடந்து வரவிருக்கின்ற மாபெரும் உபத்திரவக் காலமானது, இவர்களது தேசமும், அரசாங்கமும் முற்றிலுமாக கிபி 70-இல் அழிக்கப்பட்ட போது நிறைவேறிற்று.

கர்த்தர் அறிவித்தப் பிரகாரமாக, அந்தப் பயங்கரமான உபத்திரவமானது, சிந்தப்பட்ட நீதிமான்களுடைய இரத்தத்திற்காக, அதாவது ஈடுசெய்யப்படாமல் காணப்பட்ட நீதிமான்களுடைய இரத்தம் சிந்தப்பட்ட காரியங்களுக்காக, தேவன் யூத தேசத்தாருடன் கணக்குச் சரிக்கட்டுவதாய் இருந்தது. பரிசேயர்களுடைய இந்த மாய்மாலமானது, மேசியாவின் இராஜ்யத்தில் மேசியாவுடன் உடன் சுதந்தரர்களாகும் விஷயத்தில், தாங்கள் ஆயத்தப்படுவதைத் தடைப்பண்ணுகிறதாய் மாத்திரம் அல்லாமல், போதனைக்காகத் தங்களைச் சார்ந்திருக்கும் ஜனங்களையும் தடை செய்கின்றது என்பதைப் பரிசேயர்கள் அறியாமல் இருந்தார்கள். இதைக்குறித்து, "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" என்று இயேசு குறிப்பிடுகின்றார் (லூக்கா 11:52).

யூத யுகத்தை முடிவு செய்த அந்த மாபெரும் உபத்திரவக் காலமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை முடிவிற்குக்கொண்டு வருகிறதும், நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர்கள் போன்றிருக்கும் அநேகருக்கு, ஐயோவைக் கொண்டு வருகிறதும், மேசியாவின் மகிமையான ஆளுகையில் நீதி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, தற்கால அமைப்புகளைக் கவிழ்ப்பது தொடர்புடைய காரியத்தில், பொல்லாப்புச் செய்கைக்காரர்கள் அனைவர் மீதும் உபத்திரவத்தைக்கொண்டு வருகிறதுமான மாபெரும் மகா உபத்திரக் காலத்திற்கு அடையாளமாக இருக்கின்றது (அ) தீர்க்கத்தரிசனமாக இருக்கின்றது என வேதமாணவர்கள் பரவலாய் நம்புகின்றனர்.

**ஆமென்!**

---

R 5390

# "நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை"

## லூக்கா 12:1-12

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்." (வசனம் 8)

எந்த ஒரு மனுஷனாலும், ஒருக்காலும் பேசப்படாதது போன்று பேசின, இரட்சகரின் பேச்சுக்களைக் கேட்பதற்குப் பெரும் திரளான கூட்டம் அவரைச் சூழ்ந்துக்கொண்டிருந்தது. ஜனங்களைப் பொருட்படுத்தாமல், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "மாயக்காரராகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார். எங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று, தம்முடைய போதனைகளிலும், இயேசு தீமையான செல்வாக்கை அடையாளப்படுத்துவதற்குப் புளிப்பு என்ற வார்த்தையே பயன்படுத்துகின்றார். தூய்மையானதை அல்லது நல்லதை அடையாளப்படுத்துவதற்கென, எங்கேயாவது புளிப்பானது பயன்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு தருணத்தையும் நாம் அறியோம். பஸ்கா காலங்களில், யூதர்கள் புளிப்பைப் பயன்படுத்துவதற்கு விலக்கப்பட்டுள்ளனர்; இது பாவத்தைக் களைந்துப் போடுவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

அந்தக் காலத்திலுள்ள கல்விமான்களாகிய, பரிசேயர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த மாய்மாலங்கள், புளிப்பாகவும், அசுத்தமாகவும், பாவமாகவும் இருந்து, பரிசேயர்களின் செல்வாக்கை அசுசிப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது என்று இயேசு கூறினார். அவருடைய சீஷர்கள் நேர்மையானவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், சுத்தமானவர்களாகவும், வஞ்சனையும், போலித்தனமான பேச்சுகளும் இல்லாதவர்களாகவும் காணப்பட வேண்டும். மூடி மறைப்பதற்குரியதாய் இல்லாத விதத்தில், அவருடைய சீஷர்களின் வார்த்தைகளும், கிரியைகளும் காணப்பட வேண்டும். இறுதியில் அனைத்து மாய்மாலங்களும், பாவங்களும் நிர்வாணமாக்கப்படும், வெளியாக்கப்படும் என்று இயேசு கூறினார். அவருடைய இராஜ்யத்தில், உயிர்த்தெழுதலின் வல்லமை செயல்படுத்தப்படும்போது, இருளின் மறைவான காரியங்கள் அனைத்தும் ஒழித்துக்கட்டப்பட்டு, மனுக்குலத்தின் இரகசியம் வெளியாக்கப்படும் எனும் அர்த்தத்தில் இயேசு கூறினார். முன்னுரைக்கப்பட்டுள்ளபடி, அநேகரின் தண்டனையாக அவமானம் மற்றும் நிந்தனைகள் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாக உயிர்த்தெழுதலில், சிலர் பரலோகத்தின் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பதற்காகவும், மற்றவர்களோ வெட்கமும், நித்தியமான அவமானமும் அடையத்தக்கதாக எழும்பி வருவார்கள் என்று நாம் வாசிக்கின்றோம் (தானியேல் 12:2). எனினும் நித்தியம் என்று இங்கு இடம்பெறும் வார்த்தைக்கான எபிரெய வார்த்தையானது, நித்தியம் என்று அர்த்தம் கொடுக்காமல், நீடித்திருத்தல் எனும் அர்த்தத்தைக் கொடுப்பதினால் ஆறுதலடைகின்றோம். வெட்கமான மற்றும் அவமானமான சூழ்நிலைகள் நீடிப்பது வரையிலும், வெட்கமும், அவமானமும் நீடித்திருக்கும், அதாவது ஒரு நபர் சீர்த்திருந்துவது வரைக்கும் அல்லது தவறும் பட்சத்தில் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவது வரைக்கும் நீடிக்கின்றதாய் இருக்கும்.

## "துன்புறுத்தப்படுதலுக்கு அஞ்சாதிருங்கள்"

வாழ்க்கையில் நேர்மையாய் இருப்பதன் காரணமாக, மாய்மாலக்காரர்களிடமிருந்து, தம்முடைய பின்னடியார்களுக்குத் துன்புறுத்தல்கள் வரும் என்றும் துன்புறுத்தல்கள் அவர்களுக்கு மரணத்தைக் கொண்டு வருவதாக இருப்பினும், அவர்கள் அஞ்சக்கூடாது என்றும் இயேசு குறிப்பிட்டிருந்தார். தற்கால ஜீவியம் என்பது, சிலகாலம் மாத்திரமே வாழ்கின்ற ஜீவியமாக இருக்கின்றது. விருப்பமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் தேவன் ஏற்படுத்தியுள்ளதும், இயேசுவின் பலியினுடைய புண்ணியத்தினால் இறுதியில் அடையப் பெறப்படுகிறதுமான நித்தியத்திற்குரிய ஜீவனே, கருதுவதற்குப் பாத்திரமான ஜீவனாகும். இப்படியாகக் கருதுபவர்கள், மனுஷர் தங்களுக்குச் செய்கிறவைகளைக் குறித்து அஞ்சாமல், மாறாக தேவனிடமிருந்தும், எதிர்க்கால ஜீவியம் குறித்த அவருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்தும் தங்களைப் பிரித்துவிடுவதற்கு ஏதுவானவைகளைக் குறித்தே அஞ்ச வேண்டும்.

"கொலை செய்த பின்பு, நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்," இங்கு இடம்பெறும் நரகம் என்பதற்கான கிரேக்க வார்த்தை கெஹன்னா ஆகும். முதலாவதாக, இது எருசலேமுக்கு வெளியே இருக்கும் பள்ளத்தாக்கினுடைய பெயர் ஆகும்; இதில் பட்டணத்தின் குப்பைகள், முற்றிலுமாய் அழிக்கப்படுவதற்கெனப் போடப்படுகின்றது; இன்னுமாக பயங்கரமான குற்றவாளிகள், மரணத் தண்டனை அடைந்த பிற்பாடு, அவர்களுடைய சரீரம் இங்கு வீசப்படுகின்றன. அவர்களைச் சித்திரவதைப் பண்ணுவதற்காக அல்லாமல், மாறாக பொல்லாதவர்களுக்கு எதிர்க்காலம் இல்லை என்பதை அடையாளமாய்த் தெரிவிப்பதற்கே இப்படியாகச் செய்யப்பட்டது. வெளிச்சத்திற்கும், அறிவிற்கும் எதிராகவும், நன்கு உணர்ந்தவர்களாகவும், வேண்டுமென்றும் பாவம் செய்பவர்களுக்குரிய இரண்டாம் மரணத்திற்கு நிழலாக இயேசு, கெஹன்னாவைப் பயன்படுத்துகின்றார்.

தேவனுக்குப் பயப்படுகின்ற பயம் என்பது, ஞானத்தின் ஆரம்பமாக இருக்கின்றது; பயபக்தியுடன் கூடிய பயம் கொண்டிருப்பது எப்போதும் நல்லதே. ஆனால் தேவனுடைய ஜனங்கள், அவருடன் நெருங்கிப் பழகி, அவருடைய நீதியையும், ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் கற்றுக்கொள்ளும் போது, நீதியை விரும்புகின்ற யாவருக்கும் அவர் நண்பராய் இருக்கின்றர் என்பதை உணர்ந்துக்கொண்டு, தேவனை அன்புகூருகின்றனர்; அப்போஸ்தலர் கூறுவது போன்று, "பூரண அன்பானது, (வெறுப்பு மூட்டிவிடுவோமே எனும் அச்சத்தை) பயத்தைப் புறம்பே தள்ளுகின்றது" . . . இது இளைப்பாறுதலைக் குறிக்கின்றது. கர்த்தருடைய சீஷர்கள், தங்களுடைய பரம பிதா தங்கள் மீது கொண்டிருக்கும் பராமரிப்பையும், அவருடைய ஞானத்தையும், அடைக்கலான் குருவிகளையே அவர் மறக்காமல் இருப்பதினால், தங்களையும் அவர் மறப்பதில்லை என்பதையும், அவருடைய அறிவின்படியும், அனுமதியின்படியும் அல்லாமல் மற்றபடித் தங்களுடைய தலையிலிருந்து ஒரு மயிர்க்கூட, கீழே விழுவதில்லை என்பதையும், அவருடைய ஜனங்களுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் அவர் அனுமதிக்கும் யாவும், ஏதோ ஓர் ஆசீர்வாதத்தையே கொண்டு வருகிறதாய் இருக்குமென அவர் நிச்சயம் அளித்துள்ளார் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## "மனுஷர் முன்பாக என்னை அறிக்கைப்பண்ணுங்கள்"

தேவனுடன் இசைவாகக் காணப்படும் அனைவரும் தேவனையும், தேவனுடைய பிரதிநிதியாக உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இயேசுவையும் அறிக்கைப்பண்ண வேண்டும். இயேசுவை அறிக்கைப் பண்ணுகிறவர்கள் எவரும், அவரை அனுப்பின பிதாவையும் அறிக்கைப் பண்ணுகிறவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய தயவிற்குள்/கிருபைக்குள் காணப்பட்டு, இறுதியில் உயிர்த்தெழுதலில், பிதாவினாலும், பரிசுத்த தூதர்களாலும் கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கங்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களான பிற்பாடு, அவரை மறுதலிப்பவர்களை, அவர் மகிமையில் சீஷர்களாக அங்கீகரிக்கமாட்டார்.

இயேசுவின் வார்த்தைகள் சீஷர்களுக்கே சொல்லப்பட்டதே ஒழிய, ஜனக்கூட்டத்தாருக்கு அல்ல. கிறிஸ்துவை அறிக்கைப் பண்ணுகிறவர்கள், அவருடைய சீஷர்களாகுகின்றனர்; அவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதவர்களால் அவரை மறுதலிக்கவும் முடியாது. ஞானஸ்நானத்தினால் அல்லது வேறு ஏதாகிலும் வெளித்தோற்றமான முறையினால் மாத்திரமாகக் கர்த்தர் அறிக்கைப்பண்ணப்படக் கூடாது. அவருடைய பின்னடியார்களின் ஜீவியத்திலும், வார்த்தையிலும், நடத்தையிலும் அவர் அறிக்கைப்பண்ணப்பட வேண்டும். பின்னடியார்கள் அவருடைய ஆவியைக் கொண்டிருந்து, "இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கின்றவர்களாக" இருக்க வேண்டும். சீஷன் என்று தன்னை ஒருவன் அறிக்கைப் பண்ணிக்கொண்டும், ஆண்டவருடைய போதனைகளைப் புறக்கணித்து, அவரைத் தவறாய்க் காட்டுகின்றவனாகவும், அவரைத் தூஷிக்கின்றவனாகவும், அவரை மறுதலிக்கின்றவனாகவும் இருப்பானானால், இந்த யுகத்தின் முடிவில், மணவாட்டி மகிமையில் (தேவன் முன்பாக) நிறுத்தப்படுவதில் பங்கடையமாட்டான்.

அங்கிருந்த ஜனக்கூட்டத்தார், சீஷர்கள் ஆகவேயில்லை என்பதில் ஐயமில்லை. சிலர் இயேசு பிசாசு பிடித்தவராய் இருந்தார் என்றும், பைத்தியமாய் இருக்கின்றார் என்றும் ஏளனம் செய்தனர். இப்படியாக தம்மைத் தவறாய்க் காட்டினதும், தம்மை இப்படியாக தூஷித்ததும், அறியாமையினால் செய்யப்படும் பட்சத்தில் மன்னிக்கப்படும் என்று ஆண்டவர் கூறினார். ஆனால் சிலர் இதையும் தாண்டிச் சென்று, பரிசுத்த ஆவியினால் செய்யப்பட்ட அவருடைய நற்கிரியைகளை, பெயெல்செபூலாகிய சாத்தானின் வல்லமையினால் செய்யப்பட்டது என்று கூறினார்கள்; இதன்மூலம்

இவர்கள் கண்டுக்கொள்ளப்படாமல் விடுவதற்கு முடியாத, மன்னிக்க முடியாத பாவங்களைச் செய்தவர்கள் ஆனார்கள்.

இப்படிப்பட்ட பாவங்கள் துணிகரமானவைகள்; ஏனெனில் இவர்களுடைய குற்றச்சாட்டிற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. ஆண்டவருடைய போதனைகளானது, தூய்மையானவைகள். அவருடைய நடத்தையும், அவருடைய பேச்சும், அவருடைய அற்புதங்களும் அனைத்தும் நற்கிரியைகளாக இருந்தன. துணிகரமாய்த் தவறாய் இருப்பவர்கள் மாத்திரமே, இயேசுவின் இக்காரியங்கள் சாத்தானால் செய்யப்பட்டது என்று சொல்வார்கள். இத்தகையவர்கள் ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாது என்ற காரியமானது, இந்த அவதூறுகாரர்களுக்கு இனிமேல் நம்பிக்கையே இல்லை என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. இவர்கள் தங்களுடைய துணிகரத்திற்கு ஏற்ப தண்டனை பெறுவார்கள். இத்தண்டனையின் மூலம், இவர்கள் சீர்த்திருந்தினால் நல்லது; ஒருவேளை இல்லையென்றால், இறுதியில் இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்.

பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவம், போன்றதான, சில பாடங்கள் குறைவாகப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது. இவ்விடத்தில் இடம்பெறும் ஆவி எனும் வார்த்தையானது, வல்லமை (அ) செல்வாக்கைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்குச் சாத்தானுடைய ஆவி என்பது தேவனுக்கும், நீதிக்கும் விரோதமான செல்வாக்காகும்; தப்பறையின் ஆவி என்பது தப்பறையின் வல்லமை (அ) செல்வாக்கு ஆகும். இதற்கு எதிர்மாறான சத்தியத்தின் ஆவி, தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி என்பது, தெய்வீக வல்லமையையும், செல்வாக்கையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவர் எந்தளவிற்கு வெளிச்சமூட்டப்பட்டிருக்கின்றாரோ, அந்தளவுக்குப் பொறுப்புடையவராக இருக்கின்றார். மனதளவிலும், ஒழுக்க ரீதியிலும் குருடாய் இருப்பவர்களுக்குக் குறைவாகவே பொறுப்பு இருக்கின்றது/பொறுப்பு இல்லை, காரணம் இவர்கள் சத்தியத்தின் ஆவிக்கும், தப்பறையின் ஆவிக்கும் இடையிலும், தேவனுடைய ஆவிக்கும், சாத்தனுடைய ஆவிக்கும் இடையிலுமுள்ள வித்தியாசத்தைத் தெளிவாக உணர்ந்துக்கொள்வதில்லை.

நன்மை, தீமை என்ன என்பதை உணர்ந்துக்கொள்வதற்கு முடியாமல் இன்றுக் காணப்படும் நிலைமையில், மனுஷன் ஆதியில் சிருஷ்டிக்கப்படவில்லை. அவன் பூரணமாக, தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டான். பாவமானது, மனிதனுடைய சரீரத்திற்கு மாத்திரமாக மரணத்தைக்கொண்டு வராமல், அவனுடைய மனதிற்கும், அவனுடைய மனசாட்சிக்கும் கூட மரணத்தைக்கொண்டு வந்தது. ஆகவே நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான வித்தியாசத்தை உணர்ந்துக்கொள்வதற்கான திறனும் வேறுபட்டிருக்கின்றது. இன்னுமாக சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அறிவுரைகள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தபடியால், இதற்கேற்ப பொறுப்புகளும் அதிகமாயிருந்தது. உலகமானது, தேவனை அறிந்துக்கொள்ளவில்லை, ஆதலால் இரண்டாம் மரணத்திற்கு ஏதுவாக தண்டிக்கப்படத்தக்கதாக, உலகம் பரிசுத்த ஆவிக்கு எதிராய் முழுமையாகப் பாவம் செய்ய முடியாது; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4).

கிறிஸ்து, தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை அறிந்துக்கொள்வதற்குக் கொஞ்சம் அறிவு அவசியமாய் இருக்கின்றது. ஒருவேளை நாம் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக அல்லது பின்னடியார்கள் ஆகும் பட்சத்தில், நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடைகின்றோம். இது நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்குத்தக்கதாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் அகலமாய் அதிகமதிகமாக திறக்கும் அனுகூலமான கட்டத்திற்கு நம்மைக் கொண்டு வருகின்றது. கர்த்தருக்குள்ளான நம்முடைய சந்தோஷத்துடனும், நாம் அழைக்கப்பட்டிருக்கும் பரலோக மகிமைகளுக்கான நம்முடைய ஆயத்தங்களுடனும், நம்முடைய பொறுப்புங்கூடப் பெருகுகின்றது. இந்த வளர்ச்சியடைந்துள்ள இயேசுவின் சீஷர்களே, அவர்கள் முத்திரையிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதற்கும், அவர்களுடைய இருயதங்களிலுள்ள பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப் போடுவதற்குமான அபாயத்தில் காணப்படுகின்றனர் (எபேசியர் 4:30; 1 தெசலோனிக்கேயர் 5:19). அவித்துப் போடுதலும், துக்கப்படுத்துதலும் உடனடியாகச் சம்பவிக்கும் கிரியைகளாக இல்லாதிருந்தாலும், இவைகள் இரண்டாம் மரணத்திற்கு நேராக வழிநடத்தும் பாதைகளாக இருக்கின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஆவியில் நிரம்பி, பரிசுத்தத்தில் பூரணமடைதலுக்கு நேராக முன்னோக்கி தொடர்ந்துக்கொண்டிருக்க வேண்டும்.

தேவனுடைய நல்வார்த்தைகளையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியில் பங்கடைந்தும், பிற்பாடு, கிறிஸ்துவையும், நீதியையும் துணிகரமாயும், வேண்டுமென்றும் வெறுத்து, பாவத்திற்குள்ளாகப் போகிறவர்களை மனந்திரும்புதலுக்கு ஏதுவாய் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் எனும் இக்கருத்தை, அப்போஸ்தலர் எபிரெயர் 6:4-6 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபிரெயர் 10:26-27). இப்படியாக கிறிஸ்துவின் ஒப்புரவாகுதல் பணியைப் புறக்கணிக்கின்றவர்களைக்குறித்து, அப்போஸ்தலர் விசேஷமாகக் குறிப்பிடுகையில், இப்படிப்பட்டவர்கள் தங்களைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தைச் சாதாரணமான ஒன்று என்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கின்றார்கள் என்கிறார்.

பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப்போடுகிறவர்களை (அ) ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களைப் பரிசுத்தவானாகிய யாக்கோபு, ஆவிக்குரிய வாழ்க்கையில் நோய்வாய்ப்பட்டுள்ளவர்களாக விவரிக்கின்றார். (யாக்கோபு 5:14). தேவனிடத்திலுள்ள ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டுள்ள இத்தகையவர்களுக்கு, கடைசியாக ஓர் உதவி காணப்படுகின்றது; அதென்னவெனில், இவர்கள் இவர்களுக்காக ஜெபிக்கவும், பரிசுத்த ஆவிக்கு அடையாளமான எண்ணெயினால் இவர்களை அபிஷேகிக்கவும், இவர்கள் சபையிலுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட மூப்பர்களின் உதவியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். விசுவாசத்துடன் கூடிய ஜெபம் இந்த ஆவிக்குரிய நோயாளிகளை இரட்சிக்கும்; மற்றும் கர்த்தர் இவர்களைத் தூக்கிவிடுவார்; இவர்கள் பாவங்கள் செய்திருந்தாலும், இவர்கள் மன்னிக்கப்படுவார்கள்.

## ''பரிசுத்த ஆவியானது போதிக்கும்''

கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள், அவர்களுக்கு வரும் உபத்திரவங்களில், அவர்கள் தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, துரைத்தனத்தார்களுக்கு முன்பாகக்கொண்டுச் செல்லப்படுவதை எதிர்ப்பார்க்கலாம். சீஷர்களில் பெரும்பாலானவர்கள் கல்லாதவர்களாய் இருந்தபடியினால், அவர்கள் கல்வியறிவுள்ள அதிகாரிகள் முன்பு கொண்டுச் செல்லப்படும் போது, மிகுந்த மனக்கலக்கம் அடையக்கூடும்; அவர்கள் மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படும் என்பதைப் பின்னடியார்கள் அறிந்திருக்க வேண்டும்; மேலும் அவர்களுக்கு இருக்கும் இயல்பான ஞானத்தைப் பார்க்கிலும், உயர்வான ஞானத்தை அடைவார்கள் என்பதையும் பின்னடியார்கள் அறிந்திருக்க வேண்டும்; என்ன பதில் சொல்ல வேண்டும் என்று பின்னடியார்கள் பதட்டத்துடன், முன் கூட்டியே சிந்தித்து வைத்துக்கொள்ளாமல், மாறாக தெய்வீக உதவியினை எதிர்ப்பார்த்து, அனைத்தையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்து விட வேண்டும்.

ஆனால் அதற்கென்று, தங்களுக்கான பாடத்தைப் படிக்காமல், கிறிஸ்துவின் ஊழியர்கள் மேடைகளில் அல்லது பாட வகுப்புகளில் கர்த்தருக்குப் பிரதிநிதியாக நிற்க முற்படக் கூடாது. மாறாக ஒவ்வொருவரும், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரும்" என்ற தீமோத்தேயுவுக்கான பரிசுத்தவானாகிய பவுலினுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 தீமோத்தேயு 2:15). தேவனுடைய ஜனங்களாகிய சபையாரின் முன்பாக தேவனுடைய வாய்க்கருவியாக நிற்பதற்கும், துரைத்தனத்தார்களுக்கு முன்பாக அழைத்துக்கொண்டு போய் நிற்க வைக்கப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

**ஆமென்!**

---

R 5391

# லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள்

# LEVITICUS NINE AND SIXTEEN

இந்த இரண்டு அதிகாரங்கள் போதிக்கும் போதனைகளைக்குறித்து நம் சிந்தையை தெளிவாக்குவதில் நாம் தவறியிருப்பதுபோல் தோற்றமளிக்கிறது. ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகத்தில், இவை இரண்டும் ஒப்புரவாக்கும் நாளை சித்திரப்படுத்துவதாக நாம் கூறின கருத்து தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அதில், ஒப்புரவாக்கும் அந்த குறிப்பிட்ட நாளிலே இரண்டு சடங்குகளும் நடைபெற்றது என்ற பொருளில் நாம் பேசவில்லை. நிஜமான ஒப்புரவாக்கும் நாளாகிய சுவிசேஷயுகத்தில் இந்த இரண்டின் நிஜங்களும் ஒரேசமயத்தில் சம்பவிக்கிறது என்பதே நமது கருத்தாகும்.

லேவியராகமம் 9ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பவை ஆசாரியர்களுடைய பிரதிஷ்டையைத் தொடர்புபடுத்துகின்றன. அங்கே காண்பிக்கப்பட்டுள்ள ஊழியம், ஆரோனின் பிரதிஷ்டையை குறிக்கிறது. ஒவ்வொரு ஆசாரியனும் பிரதான ஆசாரியரின் அலுவலில் பங்கேற்க வரும்போதும், இதே ஊழியம் திரும்பத்திரும்ப செய்யப்படுகிறது. அதாவது, ஒரு பிரதான ஆசாரியன் மரித்து, அவரது இடத்துக்கென அடுத்து அலுவலை ஏற்பவர் புதிதாக அலுவலைத் துவங்கும்வரை இந்த ஊழியம் திரும்ப செய்யப்படவேண்டும். இவ்வாறு இந்த சடங்கு ஒரு வருடத்தில் பல தடவைகள் செய்யப்பட நேரிடலாம் – எப்படியெனில், பிரதான ஆசாரியர்கள் பலர், ஒருவரை அடுத்து ஒருவர் ஒரே வருடத்தில் மரித்து, அவரது இடத்திற்கு பணிபுரிய அடுத்தவர் நியமிக்கப்படும்வேளைகளில்.. அல்லது லேவியர் 9ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சடங்கு பல வருடங்கள் நடைபெறாமலேயே இருக்கவும் வாய்ப்புண்டு. உதாரணமாக, ஆரோன் பணிநியமனம் செய்தபிறகு, ஏறக்குறைய 40 வருடங்கள் உயிர்வாழ்ந்தார். அடுத்து அவரது குமாரன் எலெயேசர் பிரதான ஆசாரியராக நியமிக்கப்படும்போது, இந்த பிரதிஷ்டையின் ஊழியம் திரும்ப செய்யப்பட்டது.அதற்கு முரணாக, லேவியர் 16ம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஒப்புரவாக்கும் நாள் வருடாவருடம் நிகழ்ந்தது.

இந்த இரண்டு சடங்குகளுக்கிடையிலான இசைவு, பலிகளால் அடையாளங்காட்டப்படுகிறது. இரண்டிலும் காளையும் வெள்ளாடும் பலியாகின்றன. நிஜத்தில் இவைகள் ஒரே பலிகளை – காளை பிரதான ஆசாரியரையும், வெள்ளாடு உடன் ஆசாரியர்களையும் குறிக்கின்றன. கிறிஸ்து ஒரேயொருமுறை மரித்தார் – இரு தடவையல்ல. ஆகவே இரண்டு நிகழ்வுகளிலும் காளை மரிப்பது இயேசுவின் ஒரே பலியைக் குறிக்கிறது. சபை ஒரே ஒருமுறை மரிப்பதால், இரு நிகழ்வுகளிலும் வெள்ளாடு பலி செலுத்துவது, அவர்களது மகா பிரதான ஆசாரியரின் தலைமையின்கீழ் நிஜமான ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக சபையின் மரணத்தைக் குறிக்கிறது.

பின்பு ஏன் இரண்டு நிழல்கள் தரப்படவேண்டும் ? என கேள்விகேட்கலாம், இயேசுவின் மரணம் இரண்டு தனித்தன்மை வாய்ந்த அம்சங்களைப் பெற்றுள்ளது, அதுபோலவே சபையின் மரணமும் இரண்டு அம்சங்களைப் பெற்றுள்ளது என்று நாம் இதற்கு பதிலளிக்கிறோம். மேசியாவின் பணியை ஆற்ற தகுதிபெறவும், பரலோகத்துக்குரிய சுபாவத்தையும் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அலுவலை அடையவும், இயேசுவும் சபையும் பூமிக்குரிய சுபாவத்துக்கு மரித்தலின் மூலமே சாத்தியமாயிருந்தது. ஆகவே ஒருவேளை, உலகம் பாவத்திலிருந்து மீட்கப்பட அவசியம் இல்லாதிருந்தாலும், ஆசாரியன் தன் மேலான ஸ்தானத்தை அடைய, அதே துல்லியமான, பொருத்தமான பலியைக் கொடுக்கவேண்டும். அவ்வாறே உடன்ஆசாரியர்களும் தங்கள் ஸ்தானங்களை அடைய பொருத்தமான பலிகளை செலுத்தவேண்டும். மற்றொருபுறம், மனுக்குலம் பாவிகளாயிருக்கிறபடியால், மீட்கப்படவேண்டியது அவசியமாகிறது. ஆகவே உலகின் ஜனங்களுக்கு திரும்பக்கொடுத்தலின் பணி துவங்குவதற்கு முன்பாக, பாவத்துக்கான ஒப்புரவாக்குதல் ஏற்படுத்தப்படுவது அவசியமாயிருந்தது. கிறிஸ்து மற்றும் சபை பரலோக நிலைமைக்கு உயர்த்தப்படுவது முற்றிலும் பொருட்படுத்தப்படாததாயிற்று.

இவ்வாறு மேசியாவின் “பிரியமான பலிகள்”, இரண்டு தனித்தன்மையோடு பிரிந்திருக்கும் முக்கியமான இரு வேலைகளாகும். இயேசுவும் அவரது பின்னடியார்களும் துன்புற்று, அவரவர் மகிமைக்குள் பிரவேசிக்கவேண்டியது அவசியமானது. லேவியர் 9ம் அதிகாரம் இதை வலியுறுத்துகிறது. மேலும் மனுக்குலத்தை திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதத்துக்குள் வரும்படி அனுமதிக்க வேண்டுமானால், அதற்கு பாவநிவாரண பலிகள் செலுத்தப்படவேண்டியதும் அவசியமாயிருந்தது. இதையே லேவியராகமம் 16ம் அதிகாரம் அடையாளமாக எடுத்துரைக்கிறது. ஆகவே சுவிசேஷ யுகமாகிய நிஜமான ஒப்புரவாக்கும் நாளில் நிறைவேறுகின்ற, லேவியராகமம் 9ம் அதிகாரத்தின் பலிகளும், 16ம் அதிகாரத்தின் பலிகளும் ஒரே மாதிரியான பலிகளாகும் என்று நாம் திரும்பவும் கூறுகிறோம்.

---

R 5391

# மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர்

## The Anointed - The Messiah - The Christ

தேவன் ஒரு மாபெரும் ஆசாரியரை எழும்பப்பண்ண தீர்மானித்திருப்பதையும், அவர் ஒரு இராஜாவாகவும் இருப்பார் என்பதையும், நியாயப்பிரமாணத்தில் நிழலாகவும் சாட்சியமாகவும் கூறப்பட்ட போதனைகள் வெளிப்படுத்துகின்றன. இந்த இராஜா நிலையிலுள்ள ஆசாரியரும், ஆசாரிய நிலையிலுள்ள இராஜாவுமானவர் ஜனங்களுடைய பாவங்களை நீக்கவேண்டும், மேலும் மத்தியஸ்தராக இருந்து மனுக்குலத்தை தேவனிடத்திற்கு திருப்புவதற்குத் தேவையான உதவிசெய்து, சேமித்துவைத்துள்ள அதிகாரத்தோடும் வல்லமையோடும் ஆளுகை புரிவார். ஆனால் நிழலான ஜனங்களாகிய இஸ்ரயேலருக்கு ஆச்சரியமளிக்கும்வகையில், அவர் ஆசாரியரும் இராஜாவுமாக அரியணை ஏறுவதற்குப் பதிலாக, அவர் சாதாரண நிலையில் மரித்தார்.

அதற்குப்பிறகு, முன்பு இரகசியமாக இருந்துவந்தவைகளை பரிசுத்தஆவி சபைக்கு வெளிப்படுத்தும் நேரம் வந்தது. மேசியா ஒரு இராஜாவாக அவரது சிங்காசனத்தின்மீது அமர்வதைக் குறித்து தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைத்தவைகள் சபைக்கு வெளிப்படுத்தப்பட்டன. ஜனங்களுக்கோ எளிதில் புரிந்துகொள்ளமுடியாதபடி இது இரகசியமாகவே இருக்கும் என்று அவர் பிரகடனப்படுத்தியிருந்தார். தேவன் தம்திட்டத்தை வெளிப்படுத்த ஏற்றவேளை வரும்வரை இரகசியமாகவே வைத்திருக்க தீர்மானித்திருந்தார். அந்த இரகசியம் என்னவெனில், ''மகிமையின் நம்பிக்கையாக கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே'' – கொலோசெ1:26,27.

வேதாகமம் சாட்சியிடுகிறபடி, நம் கர்த்தராகிய இயேசு, முதன்மையாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்து, மிக உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் பெற்றுக்கொண்ட அபிஷேகத்தைப் பொறுத்தவரை, அவர் தெய்வீக ஏற்பாட்டின்படி முழுமையானவராக ஆகவில்லை. பரலோகப்பிதா இயேசு மட்டுமே அபிஷேகம் பெறுவதை நோக்கமாகக் கொண்டிராமல், அவர் அபிஷேகம் பெற்ற தலையாக, சபையாகிய சரீரத்துக்கு இருக்கவேண்டுமென சித்தம் கொண்டிருந்தார்(எபே1:22,23; 5:29–32; கொலோ1:24). இதுவே இரகசியமாக இருந்தது. நிஜமான தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், இராஜாவாகவும் இருந்து, மாபெரும் மேசியா உலகை ஆசீர்வதிக்கவேண்டும். தேவன் இயேசுவை தலையாகவும் குறிப்பிட்ட சில பரிசுத்தவான்களை அவரது சரீரத்தின் அவயங்களாகவும் ஏற்படுத்தினார். கிறிஸ்துவின் இந்த சரீரம் முழுமையடையும்வரை, ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த ஆசீர்வாதம் உலகிற்கு வராது – கலாத் 3:16, 29.

கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினராக யாராவது வரவிரும்பினால், அதற்கான நிபந்தனைகள் – அபிஷேகம்பெற்ற ஆசாரியரும் இராஜாவுமானவரது உறுப்பினர்களாக இருந்து, அவர்கள் அவரது அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும். இந்த சிலாக்கியத்தை அடையவிரும்புவோர் அவர் தம்மை ஒப்புக்கொடுத்ததுபோல, தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கவேண்டும். அதோடுகூடுதலாக, கிறிஸ்துவின் உபத்திரவங்களுக்கு உட்பட்டவைகளில் குறைவானதை நிறைவுசெய்ய நாம் தகுதியுடையவர்களாகும்படி நமது பரிந்துபேசுபவராக அவரை அடைந்திருக்கவேண்டும். ஆகவே நாம் கிறிஸ்துவோடுகூட ஆளுகைசெய்யவேண்டுமானால் தற்போது துன்பப்பட அழைக்கப்படுகிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் – கொலோ1:24; 2தீமோ2:12.

இந்தப்பணி நிறைவடையும்வரை உலகத்திற்கு திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதம் துவங்காது. இந்த மாபெரும் ஆசாரியரும் இராஜாவுமானவர் முழுமைபெற்று, தங்கள் அலுவலகத்திற்குள் பிரவேசிக்கும்வரை உலகத்துக்கான ஆசீர்வாதம் துவங்காது. அதன்பிறகு அவர் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராக மனுக்குலத்திற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை கொண்டுவருவார். இந்தக் கருத்தை மட்டுமே முழு வேதாகமமும் வெளிப்படுத்துவதாக தோற்றமளிக்கிறது. மீட்பரை அனுப்புவேன் என்று வாக்களித்திருந்தபடி மீட்பர் வந்திருந்து, ''அநீதருக்காக நீதிபரர் மரித்தார்'', என்றாலும் திரும்பக்கொடுத்தலின்வேலை உடனடியாக துவங்கப்படமுடியாதிருந்ததற்கான காரணத்தை நம்மால் வேறு எவ்வழியிலும் விவரிக்கமுடியாது(அப்3:19–21). இந்த யுகம் முழுவதிலும் சபையை தெரிந்தெடுக்கிற பணி நடந்துவருகிறது. திரும்பக் கொடுத்தலின் காலங்கள் வருங்காலத்தில் உடனடியாகத் தொடங்க இருக்கிறது. அப்பொழுது, இரண்டாம் வருகையில் வந்திருக்கிற கர்த்தர் தம் சரீர அங்கங்களை மகிமையில் தம்மிடத்தில் கூட்டிசேர்ப்பார்.

நம் கர்த்தராகிய இயேசு பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார் என்று வேத வசனங்கள் உறுதியாகக் கூறுகின்றன. இதனால் தமக்காக அவர் பாவநிவாரணம் செலுத்தவேண்டியதில்லை. இருந்தபோதிலும், அவர் முதலாவதாக தமக்காகவும், பின்பு ஜனங்களுக்காகவும் ஒப்புக்கொடுக்கவேண்டியது அவசியமென்று வேதவசனங்கள் கூறுகின்றன(எபி7:26,27). இங்கு பொதுவான உலகிலிருந்து பிரிக்கப்பட்ட சபையின்

பங்கு தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

தற்காலத்தில் சபையின் முழுவேலையும், தங்கள் மனித ஜீவனை பலியாக்குவதே ஆகும். இயேசு மகிமையின் இராஜாவாக இருப்பதுபோல, அவரது சரீரஅங்கங்களாகிய நாமும் உடன் இராஜாக்களாக இருப்போம். அவர் பிரதான ஆசாரியராக இருப்பதுபோல் நாமும் உடன் ஆசாரியராக இருக்கிறோம். இந்த ஒத்த சம்பவங்கள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது. இதனைப்பற்றிய புரிந்துகொள்ளுதல் நம்மிடமிருந்து எடுக்கப்படுமானால், நடைமுறையில், நாம் சத்தியத்தை அடையுமுன்பு இருந்த அதே இருளுக்குள் செல்வோம். நாம் வருங்காலத்தில் அவரது மகிமையை அடைய கிறிஸ்துவின் பாடுகளில் தற்போது பங்குபெறுவதே இரகசியமாக இருக்கிறது. இந்த திறவுகோலை யாரெல்லாம் இதுவரை கண்டடையவில்லையோ, அவர்கள் தேவதிட்டத்தை அதன் எளிமை மற்றும் அழகை இன்னும் புரிந்திருக்கவில்லை.

இஸ்ரயேலின் இராஜாக்கள் அபிஷேகம் பண்ணப்பட வேண்டுமென்றும், விசேஷமாக இஸ்ரயேலின் பிரதான ஆசாரியரும் அபிஷேகம் பண்ணப்பட வேண்டுமென்று தேவன் ஏற்பாடுசெய்திருந்தார். முழு மனித குடும்பத்துக்கும் ஆசீரைக் கொண்டுவரும் மாபெரும் தீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவே, நிஜமான இராஜாவும் நிஜமான ஆசாரியருமாயிருக்கிறார் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். அடையாளத்தில் உடன்ஆசாரியத்துவம் இருப்பதையும், அதற்கு நிஜமாக, கிறிஸ்துவோடும் அவரது ஊழியத்தோடும் இணைந்து பணியாற்ற உடன் ஆசாரியத்துவமும் உண்டு என்பதை அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுவதை நாம் புரிந்துகொள்கிறோம்.

எபிரேய வார்த்தையான மேசியா என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர், அதற்கு இணையான கிரேக்கவார்த்தை கிறிஸ்டோஸ் (Christos)கிறிஸ்து. ஆகவே தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய கிறிஸ்துவைநோக்கி நம் எண்ணங்கள் முறையாகத் திரும்புகின்றன. பிதாவால் நியமிக்கப்பட்ட மாபெரும் வேலையை அவர் செய்யவேண்டியவராயிருக்கிறார். அவர் பரலோகப் பிரகாரங்களில் இருந்தபோதல்ல, மனித ஜீவியாக இப்பூமிக்கு வந்தபோதுமல்ல, எப்போது பிதாவினால் அபிஷேகம் பெற்றார் என நாம் அவரைத் திரும்பிப் பார்க்கிறோம். தேவனுடைய பரிசுத்தஆவியோடு அவர் முழு இசைவாக இருந்தபோதிலும், அபிஷேகம் பெற்றிருக்கவில்லை.

அவருக்கு முப்பதுவயதானபோது, நம் கர்த்தருக்கு ஒரு உறுதியான அனுபவம் வந்தடைந்தது. அந்நேரத்தில், பிதாவின் சித்தம் செய்யவும் அவரது ஊழியம்செய்யவும் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவ்வேளையில் ஒருவிசேஷ அபிஷேகத்தை அவர் பெற்றுக்கொண்டார். அது தேவனுடைய அபிஷேகம் பெற்ற ஆசாரியராகவும் இராஜாவாகவும் ஆகும் துவக்கத்தை அவருக்கு உண்டாக்கியது. ஆயினும் அவ்வேளையில் அவர் மாபெரும் வல்லமையையும் ஆளுகையையும் எடுக்குமளவு இன்னும் ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனால் தம் உடன்படிக்கையை உண்மையாய் நிறைவேற்றி முடித்து தகுதியுள்ளவராக தம்மை நிரூபித்தாரானால், தேவனால் மாபெரும் அபிஷேகம் பெற்றவர் என்ற முழுதன்மையை அடைந்து, ஏற்றவேளையில் பூமியை ஆயிரம்ஆண்டுகள் ஆளுகை செய்வார். அதன் தொடர்ச்சியாக மாபெரும் மேன்மைகளையும் சிலாக்கியங்களையும் பெறுவார். நம் மீட்பரைக் குறித்த இவைகளனைத்தும் மிகத் தெளிவாக சித்தரிக்கப்பட்டதை நாம் காணமுடிகிறது.

**கிறிஸ்துவைப் பற்றின இரகசியம்**

1யோவான்2:27இல், ‘‘நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது’’ என்கிற வாக்கியத்தில் ‘‘நீங்கள்’’ என்றும் ‘‘உங்களில்’’ என்றும் யாரை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்? முன்பு உரைத்ததுபோல் அபிஷேகம் பெற்றவராக நம் கர்த்தராகிய இயேசுவை உருவாக்குவதோடு, இன்னும் அதிகமானவற்றை பிதா சித்தங்கொண்டார். மேலும், கர்த்தராகிய இயேசு அபிஷேகம் பண்ணப்படும் கூட்டத்தாருக்கு – அதாவது,அவரது சரீரமாக உருவாகப் போகிறவர்களுக்கு தலையாக இருக்கவும் அவர் தீர்மானித்தார். இது அபிஷேகத்தைலம் ஓரளவு பெற்றவர்களுக்கு நிழலில், உடன் ஆசாரியத்துவத்துக்கு பொருந்துகிறது. அவர்கள் வரவிருக்கிற நிஜமான ஆசாரியத்துவத்துக்கு முன்னுதாரணங்களாக உள்ளனர்;

‘‘ நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்’’– 1பேதுரு2:9.

மேலும் நாம் ஒருபடிமேலாக கற்கும்பொழுது, இது வேத வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இது இரகசியம் என்று காண்கிறோம். நீண்டநாட்களாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மாபெரும் மேசியா என்பது தனிப்பட்ட நபர்களடங்கிய அநேகரை உள்ளடக்கியதாகும். தலையைத் தவிர்த்து, இந்த அநேக நபர்கள் விழுந்துபோன மனுக்குலமாகிய கோபாக்கினையின் பிள்ளைகளிலிருந்து ஒன்றுதிரட்டப்படவேண்டும். இவர்கள் தங்கள் தலையாகிய கிறிஸ்துவின் புண்ணியத்தின்மூலம், அதாவது அவரது மனித ஜீவியத்தை பலிசெலுத்திப்பெற்ற தகுதியின் மூலம் நியாயந்தீர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு கர்த்தரோடு இணைந்திருக்கிற அனைவரும், ஒரே சரீரத்தின் அங்கங்களாக எண்ணப்படுகிறார்கள்," ஜீவனுள்ள தேவனுடைய சபை", "முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபை", இவர்களது நாமங்கள் "பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன"(1தீமோத் 3:15; எபி12:23). சபை ஸ்தாபிக்கப்படுதலைக் குறித்து நாம் திரும்பிப் பார்க்கும்பொழுது, இயேசு தம்மை ஒரு பலியாக ஒப்புக்கொடுக்கும்வரை, அதாவது அவரது சரீரத்தில் அங்கமாகப் போகிறவர்களுக்கு அவரது பலியின் புண்ணியங்களைப் பொருந்தப் பண்ணும்வரை, சபை ஸ்தாபிக்கப்படமுடியாது. சபையின் அங்கமாகப்போகிறவர்களும், அவர் நடந்ததுபோலவே மரணபரியந்தம் தங்களை அர்ப்பணித்து, அவரது அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும்.

இயேசுவின் சீஷர்களாக அவரோடு அந்நேரத்தில் காத்திருந்த இந்த சரீர அங்க வகுப்பாரில் சிலர், அவரது வார்த்தைகளுக்கு செவிசாய்த்துவந்தனர். தங்களது சிலுவையை சுமந்து அவரைப் பின்பற்றினால், அவரது மகிமையிலும் பங்குபெறலாம் என்ற அவரது சாட்சியத்தின்பேரில் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்த வாக்குத்தத்தத்தின்கீழ் அவர்கள் அவரது சீஷராகினர். ஆனால் அவர்களது பாவங்களுக்காக கிறிஸ்து தம்மை பரிகாரபலி செலுத்தும்வரை அவர்களால் அபிஷேகம் பெறமுடியாதிருந்தது. ஆகவே இந்த ஆசீர்வாதம் அவர்கள்மீது பொழியப்படும்வரைக்கும், அவர்கள் எருசலேமில் காத்திருக்கவேண்டுமென நம் கர்த்தர் அவர்களுக்கு அறிவுறுத்தினார். பெந்தெகொஸ்தே நாளின்போது அவர்கள்மீது அபிஷேகம் பொழியப்பட்டதாக வேதவசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அவர் உயிர்த்து, பரமேறினபிறகு, தேவனிடமிருந்து கிறிஸ்து மூலமாக பரிசுத்தஆவி வந்தடைந்தது. மெய்யாகவே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாயிருக்கிற பிதாவிடமிருந்தே அனைத்து ஆசீர்வாதங்களும் வருவதாகவும், இவையனைத்தும்அவரது வாய்க்காலாயிருக்கிற குமாரன் மூலமாகவே வருவதாகவும் பரிசுத்த பவுல் நமக்குக் கூறுகிறார். – 1கொரிந் 8:6.

அபிஷேகம் என்றால் என்ன என்று புரிந்துகொள்வது நமக்கு கடினமாக உள்ளதுபோன்று, அதை விளக்குவதும் கடினமே. நாம் அதைப் புரிந்துகொள்ளும் அளவிற்கேற்பவே மற்றவர்களுக்கு அதை தெளிவாக விளக்கமுடியும். பல்வேறு உருவகங்கள் மற்றும் பேச்சு பாணி மூலம் நமக்கு கூடுமானவரை எளிமையாக விளக்குவதற்கு நம் கர்த்தர் முயற்சித்திருக்கிறார். அதாவது ஒரு புதிய ஜீவியம் துவங்குவதை இது குறிப்பதால், அதை அவர் ஜெனிப்பித்தல் என்று அழைக்கிறார். ஆவிக்குரிய சுபாவம் நம்மில் துவங்கின அத்தருணமே நாம் ஜெனிப்பிக்கப்படுதலை அடைகிறோம். யாரெல்லாம் இதைப் பெறுகிறார்களோ, அவர்கள் அதில் வளர்ந்து, அவர்களுக்குள் இருக்கிற கர்த்தருடைய ஆவியால் பூரணமடையாவிடில் அதை தக்கவைத்துக்கொள்ள முடியாது.

### பரிசுத்தஆவியின் பல்வேறு இயல்புகள்

வேதத்தில் இந்த "ஆவி", பல்வேறு நிலைப்பாடுகளில் பேசப்பட்டிருக்கிறது. நமக்கு கருத்து வடிவம் தரும் வெளிப்படையான கண்ணோட்டத்தில் பேசியிருக்கிறது. இது கிரகிக்க ஒரு கடினமான விஷயமாயுள்ளது. சத்தியஆவி என்றும் இது அழைக்கப்படுகிறது. தேவனைக்குறித்த அறியாமையிலிருந்துகொண்டு, ஒருவனும் பரிசுத்தஆவியைப்பெறமுடியாது. ஒருவன் எந்தஅளவு அறிவில் வளர்ச்சியடைகிறானோ அந்த விகிதாச்சாரப்படியே ஆவிக்குரிய காரியங்களில் அவனது வளர்ச்சியானது, இருக்கும். அறிவில் அவன் வளர்ச்சியடையாவிடில் ஆவியில் அவனால் வளரமுடியாது. ஆகவே இந்த ஆவி சத்திய ஆவி என்று அழைக்கப்படுகிறது.

மேலும் இது தெளிந்த புத்தியுள்ளஆவி என்றும் அழைக்கப்படுகிறது. நமது நிதானிப்புக்களனைத்தும் இயல்பாகவும், மனிதத்தன்மையிலும் அபூரணமாயிருக்கிறது. ஆகவே கர்த்தருடைய சிந்தைக்கு சில காரியங்களில் முரண்பாட்டை ஏற்படுத்துகிறது. பரிசுத்தஆவியின் செல்வாக்கின்கீழ், காரியங்களுக்கு புதிய கண்ணோட்டத்தை நமக்கு தருகின்ற மறுரூபமாகும் ஆதிக்கம், தேவனுடைய நிலைப்பாட்டின்படி காரியங்களைக் கண்ணோக்கும்படி நம்மை இயக்குகிறது. ஆகவே இது தெளிந்த புத்தியின்ஆவி என்றும் அல்லது குணஇயல்பு என்றும் அழைக்கப்படுகிறது.

அன்பின்ஆவி என்றும் இது அழைக்கப்படுகிறது. தேவசாயலுக்கொப்பான இந்தத் தன்மையை உற்பத்திசெய்யும்போது, இந்த ஆவியை நம்மால் பெறமுடியும். இந்த அன்பின் ஆவியைப் பெற்றிராதவன், பரிசுத்தஆவியைப் பெறமுடியாது. இந்த ஆவியைப் பெறுவதற்கு முன்பாக அன்பு அவசியமாயிருக்கிறது – தேவன் அன்பாயிருக்கிறார், ஆகவே அவருடையவர்களாக இருக்க விரும்புவோர் அனைவரும் இந்த குணஇயல்பைப் பெற்றிருக்கவேண்டும். அதாவது அவர்கள் இரங்கும் உள்ளம் கொண்டோராய், அவரோடு இசைவாய் இருக்கவேண்டும்.

இந்த ஆவியை உடையவர்கள் தேவசித்தத்தைச் செய்யும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறபடியால்,

கீழ்ப்படிதலுள்ள ஆவி என்றும் இது அழைக்கப்படுகிறது. என்ன தன்மையில் இது ஒரு அபிஷேகமாக உள்ளது? தேவன் தம் புத்திரராக ஏற்றுக்கொள்ளும் தகுதியை இது தருகிறபடியாலும், அவரது வாக்குத்தத்தங்களுக்கு வாரிசுகளாக அவர்கள் இருக்க, அவரது தூதுவர்களாக தங்களை எண்ணிக்கொள்ளவும் இந்த அபிஷேகம் உரிமையளிக்கிறது. பரிசுத்தஆவியினால் இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களை மட்டுமே அவர் ஏற்றுக்கொள்கிறார். இவர்கள் ஆசாரியர்கள் மற்றும் இராஜாக்களுக்குமான அலுவலை நிறைவேற்றவேண்டும்.

இந்தஆவியின் ஆதிக்கம் மற்றும் வல்லமை பற்றிய பல்வேறு பொருள் வரையறைகளும் விளக்கங்களும் காரியத்தை நன்கு விளங்கிக்கொள்ள நமக்கு ஆற்றல் அளிக்கிறது. தேவனிடமிருந்து வெளிப்படுகிற குணஇயல்பு அல்லது வல்லமை அல்லது எந்த பரிசுத்தஆதிக்கத்தையும் பரிசுத்தஆவி என்ற சொல்லானது பரந்தஅளவில் தாங்கிநிற்கிறது. இந்த சொற்றொடரானது சத்தியஆவி மற்றும் நீதியின்ஆவி என்ற கருத்தையும் உள்ளடக்கியது, ஏனெனில் தெய்வீக ஏற்பாடு மற்றும் ஒழுங்குகள் அனைத்தும் உண்மையும் நியாயமுமானவைகளாகும். . இதுவே பரிசுத்தஆவி அல்லது பரிசுத்தஆதிக்கம் அல்லது பரிசுத்த வல்லமையாயிருந்து,தேவன் தெரிந்தெடுக்கும் எந்த வழியிலும் கிரியை செய்கிறது. இது அச்சடிக்கப்பட்ட எழுத்துக்கள் மூலமாகவோ, சத்தியவார்த்தைகள் மூலமாகவோ, அல்லது தேவனுடைய பிள்ளைகளில் சிலரது முன்மாதிரிகை மற்றும் அவர்களது ஜீவியத்தின் செல்வாக்கு மூலமாக வெளிப்படுத்தப்படலாம். ஆனால் எந்த வழியில் இது இயங்கினாலும் எப்பொழுதும் நன்மைக்காகவே இயங்கும்.

**ஆவியின் கனிகள் Vs கொடைகள்**

இக்காரியம் புரிந்துகொள்ள கடினமாயிருப்பதால், கர்த்தர் ஆதிசபைக்கு முதலாவது ஸ்தானமாக, விசேஷ அடையாளங்களைக் கொடுத்தார். இவை வரங்கள் என்று அழைக்கப்பட்டன. சிலர் பல பாஷைகளைப்பேசும் வரத்தையும், சிலர் அற்புதங்களைச்செய்யும் வரத்தையும், சிலர் குணமாக்கும் விசேஷவரத்தையும் பெற்றுக்கொண்டனர். அப்போஸ்தலத்துவம் போன்ற மேலும் சில வரங்கள் கர்த்தரால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் இந்த வித்தியாசமான வரங்கள் அந்நேரத்தில் பரிசுத்தஆவியின் வெளிப்பாடுகளாக மட்டுமே இருந்தன. அந்த வரங்கள் பரிசுத்த ஆவியல்ல, மாறாக பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளே. ஆதிகால சபையில் அவர்களது ஊழியங்களில் அவ்வரங்கள் நிறைவேற்றப்பட்டபிறகு, அவைகள் இல்லாமறபோயின. இவ்வாறு கூறும்போது, கர்த்தருடைய ஜனங்களிடையே பரிசுத்தஆவி, ஜெனிப்பிக்கும் வல்லமையாக இதுவரை கொடுக்கப்பட்டுவந்தது, நிறுத்தப்பட்டுவிட்டது என்று இதற்குப் பொருளல்ல. மாறாக, ஆதியில் தேவவல்லமையின் சில வெளிப்பாடுகள் கொடுக்கப்படாதிருந்தால், நம்மால் உண்மைகளை நன்றாக புரிந்துகொள்ள ஏதுவில்லாதிருந்திருக்கும். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக, இயேசு தம் சீஷர்களிடத்தில் தம்ஆவியில் தொடர்புகொண்டு, அற்புத கிரியைகளை செய்யும் அதிகாரம் தந்தார் – லூக்10:17–20.

கர்த்தருடைய ஜனங்கள் எல்லாருக்கும் அவர்கள் ஆதாயம் அடையும்படிக்கு குறிப்பிட்டஅளவு ஆவி அருளப்பட்டுள்ளது. ஆகவே பரிசுத்தஆவியின் வரங்கள அகன்றுபோவதை நாம் காணும்போது, ஆவியின் கனிகள் நிலைத்திருந்து, வெளிப்படுத்தப்பட்டு, வளர்ச்சியடையும். ''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்'' – கலாத் 5:22,23.

ஒரு மனிதன் பரிசுத்தஆவியைப் பெற்றபிறகு, இந்த ஆவியின் கனியை வெளிப்படுத்தத் துவங்குகிறார். ஒருவர் இந்த கனியை வெளிப்படுத்தாவிடில், அவர் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறாரா என்று ஐயப்படுவதற்கு எல்லாக் காரணங்களும் உண்டு.

ஒரு மனிதன் இந்த இயல்புகளில் சிலவற்றைப் பெற்றிருப்பாரானால், சிலர் இயல்பாகவே ஓரளவு பெருந்தன்மையும், சாந்தமும் உடையோராய் இருப்பதை நாம் நினைவில் நிறுத்தவேண்டும். ஆகவே ஒருவர் சாந்தத்தையும் தயாளத்தையும் ஓரளவு பெற்றிருப்பாராகில் அதுவே அவர் பரிசுத்தஆவியைப் பெற்றிருப்பதற்கு இது ஒரு தடயம் என்று நாம் நினைக்கக்கூடாது. ஒருவேளை அவர் இயல்பாகவே அந்தத்தன்மைகளைப் பெற்றிருக்கக்கூடும். ஒருவரிடத்தில் சத்தியஅறிவு வரும்போது, தலைக்கனம் உடையவராய், தன்னை மிகைப்படுத்தி எண்ணுபவராய் இருப்பதைக்காட்டிலும், தயாளமும் சாந்தமும் பெற்றிருப்பதை நாம் எதிர்பார்க்கவேண்டும். எங்கெல்லாம் தற்புகழ்ச்சியும், தலைக்கனமும், இறுமாப்புள்ளஆவியும், அன்பற்ற, இரக்கமற்றவை காணப்படுகிறதோ அங்கு பரிசுத்தஆவி பெறப்படவில்லை அல்லது இருதயத்தில் முறையான வளர்ச்சியை அடையவில்லை என்று நாம் புரிந்துகொள்ள காரணமுண்டு.

மற்றவர்களை நியாயந்தீர்க்க கர்த்தர் நமக்கு அனுமதியளிக்கவில்லை, மாறாக நம்மை நாமே நிதானிக்கவேண்டுமென நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறார். இந்த பரிசுத்தஆவியை யார் பெற்றிருந்தாலும் அதை வளர்க்கவேண்டும். பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டிருப்போர், அதைப்பெற்றுக்கொள்ளும் முறையான மனப்பாங்குக்கு ஏற்கனவே வந்திருந்தனர். மேலும் அப்படிப்பட்டோரிடத்தில் நாம் புரிந்துகொள்ள மிகவும் கடினமாயிருந்த வேலையை கர்த்தர் துவங்க பிரியமாயிருந்தார். நாம் தேவனிடத்தில் அர்ப்பணித்திருந்தபடியால், இந்த தேவஆவி, நமக்கு

இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவந்தது. நாம் பரிசுத்தஆவியில் அதிகதிகமாக நிரப்பப்படும்பொழுது, இந்த சமாதானமும் மகிழ்ச்சியும் அதிகதிகமாக அதிகரிக்கும்.

**ஆவியில் முழுமையடைய தடைகள்**

கர்த்தர் அளவில்லாமல் ஆவியில் நிரப்பப்பட்டிருந்தார் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. ஆனால் நாமோ அபூரண நிலையிலிருக்கிறபடியால் அவர் வாங்கின அதே அளவு பரிசுத்தஆவியை வாங்கமுடியாத நிலையிலிருக்கிறோம். நம் இருதயங்கள் முற்றிலுமாக காலி செய்யப்பட்டிருக்குமானால் அப்பொழுது முழுமையாக நிரப்பமுடியும். ஆனால் நம் இருதயத்திலும் சிந்தையிலும் தவறான போதனைகள் இருக்குமானால், பரிசுத்தஆவி முழுமையாக நிரம்பாதபடி அவை தடுத்துவிடும். தடைகளாயிருந்துவந்த பூமிக்குரிய சிந்தையையும் , தவறான போதனைகள் போன்றவற்றிலிருந்தும் புதுசிருஷ்டி படிப்படியாக வெளியேற்றி விடுவிக்கும். இவைகளிலிருந்து நாம் விடுபடும்பொழுது, பரிசுத்தஆவியில் அபரிதமாக பங்குபெறுபவர்களாக மாற்றப்படுவோம்.

நாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்கிற பரிசுத்தஆவியே, நாம் கர்த்தருக்குரியவர்கள் என்று நிச்சயமளிக்கிறது. இந்தஆவி நம்முள் எவ்வளவுகாலம் தங்கியிருக்கிறதோ, அதுவே நாம் தொடர்ந்து கர்த்தருடையவர்கள் என்று நமக்கு சாட்சியமளிப்பதாயும், உத்திரவாதம் தருவதாயும் இருக்கிறது. சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தார் ஆகிய இரண்டு வகுப்பார் கர்த்தருடைய அபி ஷேகத்தைப் பெற்றிருந்து, பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளனர். “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்..”(எபேசி 4:4). நாம் அனைவரும் இந்த பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறோம். அப்படி பெறாவிடில், கிறிஸ்துவின் சரீரத்துக்குரியவர்களாக முடியாது. இது வளர்ச்சியடைவதே தற்போது கருப்பொருளாக இருக்கிறது.

கர்த்தருடைய ஆவியில் வளர்ச்சியடைவதில் தொடர்ந்து நிலைத்திருப்போர், இயேசுவோடு சிங்காசனத்தில் இடம்பெறுவர். ஆனால் அவரோடுகூட ஆளுகை செய்வதற்கு சிலர் தகுதியுள்ளோராக எண்ணப்பட மாட்டார்கள், ஆயினும் அவர்கள் இந்த அபிஷேகத்தை, இந்த ஜெனிப்பிக்குதலை பெற்றுக்கொண்டிருப்பார்கள். இவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினராக மாட்டார்கள். ஏனெனில் தங்களது உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் வைராக்கியத்தில் குறைவுபட்டு, மேம்பாடுஅடையத் தவறினார்கள்.

நிழலாகக் கூறப்பட்ட பிரதான ஆசாரியனுடைய தலையிலிருந்து அபிஷேகத் தைலம்அவரது வஸ்திரங்கள் வாயிலாக வழிந்தோடியது. அதன் நிஜமாக, நம் கர்த்தராகிய இயேசுவின் அபிஷேகம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சரீரம் முழுவதற்கும் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது, இது பரலோகத் தந்தையுடனான விசேஷித்த உறவினை நமக்குத் தந்திருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள்மேல் வரும் அபிஷேகம், அவர்களுடைய வெளிப்புற நடக்கையில் உடனடியாகவோ அல்லது பின்னாளிலோ மாறுதலை ஏற்படுத்தி, வார்த்தையிலும் செய்கையிலும் பெருமளவு சாந்தம், பொறுமை, சகோதரசிநேகம், உள்ளன்பு மற்றும் பெருந்தன்மையை வெளிப்படுத்தும். இவையனைத்தையும் இஸ்ரயேலின் ஆசாரியர்கள் மற்றும் இராஜாக்கள்மீது உபயோகிக்கப்பட்ட நிழலான அபிஷேகத்தைலம் தெளிவாக விளக்குகிறது, அவர்கள் பெற்ற அபிஷேகம் நாம் பெறுகின்ற அபிஷேகம் அல்லது மென்மையான உராய்வுக்கு அடையாளமாயுள்ளது.

ஆனால் எப்படி சிந்தையில் இம்மாறுதல் உடனடியாக ஏற்படாதோ, அதுபோலவே, இந்த மென்மைத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் குணாதிசயத்தில் மென்மையை வருவித்தலானது, உடனடியாக வந்துவிடும் என எதிர்பார்க்கக்கூடாது. அதற்கு மாறாக, படிப்படியாகவே வளர்ச்சியடையும். இருந்தபோதிலும், புதுப்பிக்கப்பட்ட சித்தமானது, தன் கிரியையை செய்யத்துவங்கி, பூமிக்குரிய சரீரத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, கூடுமானவரைக்கும் தன் ஆவியையும் குணஇயல்பையும் வருவிக்கும், இவ்வாறு தன் வேலையை துவங்கும். தேவஅன்பின்ஆவி அல்லது பண்புகள் ஒருவருக்குள் அபரிதமாக வாசம்பண்ணினால், வெகுவிரைவில் அது ஓரளவுக்கு வெளிப்படுத்தும். ஆகவே அன்பின்ஆவியிலும், கீழ்ப்படிதலிலும் வளர்ச்சியடையவும், கிறிஸ்துவின்ஆவி நம்முள் அபரிதமாக வாசம்பண்ணவும், மிகுதியாகப் பெற்றிருக்கவும் எப்போதும் ஜாக்கிரதையாயிருப்போம்.

**அர்ப்பணித்தலும், ஜெனிப்பிக்கப்படுதலும்**

பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெறுவதற்கு முன்பாக அல்லது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுமுன், ஒருவராலும் புதுசிருஷ்டியின் அங்கமாக முடியாது. மாம்சத்துக்கு ஒரு பகுதியைப் பொருத்துவதும், மறுபகுதியை புதுசிருஷ்டிக்குப் பொருத்துவதுமாகிய இரட்டிப்பான வேலை அவசியம் என்பதே வேத வசனங்கள் கூறும் மூலக் கருத்தாகும். புதுசிருஷ்டியானது பலிசெலுத்தப்படவில்லை, மேலும் பழைய சிருஷ்டி அபிஷேகம் பண்ணப்படவில்லை. மறுபடியும் கூறுகிறோம் ; புதுசிருஷ்டியே அபிஷேகம் பண்ணப்பட்டது, பழைய சிருஷ் பலியிடப்பட்டது.

பரிசுத்தஆவியின் அபிஷேகம் மற்றும் பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்படுதல் இரண்டும் நடைமுறையில் ஒன்றே. இது நீதிமானாக்குதலை உடனுக்குடன் கொண்டுவருகிறது. நீதிமானாக்கப்பட்ட

மனிதர்களாக, நாம் மரணத்துக்குள் ஞானஸ்நானம் பெறுகிறோம். மேலும் நியமிக்கப்பட்ட சபையின் அங்கங்களாக அல்லது கிறிஸ்துவின் சரீரமாக புதுசிருஷ்டியின் அங்கங்களாக ஏற்படுத்தப்படுகிறோம். பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்படுதலே – அதாவது அபிஷேகம் பெறுதலே, பிதா நம்மை அங்கீகரிப்பதற்கான அடிப்படையாய் இருக்கிறது.

ஜெனிப்பிக்கப்படுதல் மற்றும் அபிஷேகம் பண்ணப்படுதல் என்கிற இரண்டு சொற்றொடர்களும் நடைமுறையில் ஒரே காரியமாக உபயோகிக்கப்பட்டபோதிலும், அந்த இரண்டும் இரண்டு வேறுபட்ட புள்ளிவிபரங்களைத் தருகின்றன. ஜெனிப்பிக்கப்படுதல் என்ற கருத்து, புதிய ஜீவிய நிலைமையோடு சம்பந்தப்பட்டுள்ளது, புதிய சுபாவத்தின் நிலைமை பற்றியதாகும். அபிஷேகம் பண்ணப்படுதல் என்ற கருத்தானது, அலுவலோடு சம்பந்தப்பட்டதாகும். இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு உடன்சுதந்திரராகும்படி குறிப்பிட்ட ஜனங்களை தேவன் அழைக்கிறார். இராஜாக்களும் ஆசாரியர்களுமாக ஆகும்படியான தெய்வீக அங்கீகாரமாக அபிஷேகம் பண்ணுதல் உள்ளது.

கிறிஸ்து என்ற வார்த்தைக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற பொருளை முக்கியப்படுத்துகிறது. உலகை ஆசீர்வதிப்பதற்கு தம் பிரதிநிதியாக அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாவையும், பிரதான ஆசாரியரையும் தாம் அடையவிருப்பதாக தேவன் அறிவித்திருக்கிறார். அந்த மாபெரும் இராஜா, முதன்மையாக, நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே குறிக்கிறார் என்றும் அவர் அறிவித்தார், ஒட்டுமொத்த அபிஷேகம் பெற்றவராக கர்த்தராகிய இயேசு இருப்பதற்கு பதிலாக, அவரோடுகூட அங்கங்களை சேர்த்துக்கொள்வது அவருக்குப் பிரியமாயிருக்கிறது. சேர்க்கப்படுகிற இந்த அங்கங்கள் மூலம் அபிஷேகம் பெற்ற கிறிஸ்து முழுமையடைகிறார்.

அவரது சரீரத்திற்குள் நாம் வந்துசேர்வது என்பது, அவரது அபிஷேகத்தின்கீழ் வருவதாகும். ஒருவர் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவுடன் அபிஷேகம் பெற்ற கிறிஸ்துவின் அங்கமாகிறார். ஜெனிப்பிக்கப்படுதல் மற்றும் அபிஷேகம் பண்ணப்படுதலைக்குறித்து சிந்திக்கும்போது, இரண்டு வேறுபட்ட கோணங்களிலிருந்து இக்காரியத்தை நோக்கிப்பார்க்கிறோம். 18 நூற்றாண்டுகளுக்கு முன்பாக சபையின்மேல் அபிஷேகம் பொழியப்பட்டபோதிலும், இன்றையநாளில் ஜீவிக்கிற நாம் அந்த அபிஷேகத்தைப் பெறவில்லை. திரள்கூட்டத்தாரது விஷயத்தில், ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட வாழ்க்கையை விட்டுவிடாமல், அபிஷேகம் பண்ணப்பட்ட அலுவல் ஒருவேளை கைவிடப்பட்டிருக்கக்கூடும்.

ஆனால் நாம் அபிஷேகத்தின்கீழ் வந்த அத்தருணமே,அந்த சரீரத்துக்குள் தனிப்பட்டமுறையில் ஏற்கப்பட்டுவிட்டோம். ''நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது''. ஜெனிப்பிக்கப்படுதலைப்போலவே, அபிஷேகத்தில் நாம் அடையும்பங்கும் தனிப்பட்ட காரியமேயாகும். சொற்றொடரை நாம் திரும்பவும் சொல்கிறோம் : நமது ஜெனிப்பிக்கப்படுதல் தனிப்பட்டகாரியம், நமது ஞானஸ்நானம் அல்லது அபிஷேகம் முழுமொத்தமானது, ஆனால் ஜெனிப்பிக்கப்படுதல் எப்படி தனிமனிதருக்கு உரியதோ, அதுபோலவே அபிஷேகமும் தனிமனிதருக்கு உரியதாகும்.

**இயேசுவுக்கும் திருச்சபைக்கும் ஒரேஅபிஷேகம்**

யோர்தானில் இயேசு பெற்றுக்கொண்ட அதே அபிஷேகம், பெந்தெகொஸ்தே நாளில் திருச்சபையின்மேல் ஊற்றப்பட்டது. அதன்பின்னர், அந்தஅபிஷேகம் சபையில் சேர்க்கப்பட்ட யூத அங்கத்தினர்கள்மீது வழிந்தோடியது. அதே அபிஷேகம் பின்னாளில் புறஜாதியார்மீதும் ஊற்றப்பட்டது. அதில் முதலாவதாக கொர்னேலியு மற்றும் அவரது நண்பர்கள்மீது வெளிப்பட்டது. அவ்வேளையில், பேதுரு பேசின ''வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மீதும் பரிசுத்தஆவி இறங்கினது''(அப்10:44). அதே அபிஷேகம், இந்த யுகம் முழுவதுமுள்ள சரீரஅங்கங்கள் அனைவர்மீதும் எல்லோர்க்கும் ஒரே அபிஷேகமாக இறங்கியிருக்கிறது.

ஆனால் இது ஒரே அபிஷேகமாக அல்லது ஞானஸ்நானமாக இருந்தபோதிலும், பெந்தெகொஸ்தே நாளின் அபிஷேகத்தில் அல்லது ஞானத்தில் கொர்னேலியு பங்கடையவில்லை. அதுபோலவே, யோர்தானின் அபிஷேகத்தில் சீஷர்கள எந்த பங்கையும் அடையவில்லை. எந்த ஒரு தனிப்பட்ட நபரும் ஆவியில் ஜெனிப்பிக்கப்படும்வரை அது தனிமனிதருக்குரிய காரியமாகாது. இவ்வாறு ஒரு தனிநபர் ஆவியில்ஜெனிப்பிக்கப்பட்டபிறகே சரீரத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார். இந்த இரண்டு வேறுபட்ட தனிச்சிறப்புக்கள், செயல்முறையின் வேறுபட்ட பகுதிகளை தொடர்புபடுத்தி விளக்குவதையே நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது.

துவக்கத்தில், யேகோவாதேவன், அபிஷேகம்பெற்ற ஒருவரை, ஒருஇலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேரைக்கொண்டு உருவாக்கவேண்டுமென்று முன்னறிந்து, முன் நியமித்தார். இதற்கு இயேசு தலையாயிருக்கிறார். இதன்படி ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும் அந்த சரீரத்திற்குள் வரவேண்டுமென்றும், அதன் அங்கங்களாக எண்ணப்படவேண்டுமென்றும் அவர் ஏற்பாடுசெய்திருந்தார். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் அவர்களது நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் தங்கள் உடன்படிக்கையின் நிபந்தனைகளை எவரேனும் காத்துக்கொள்ளத் தவறுவார்களானால், அந்த சரீர வகுப்பின் அங்கத்தினராவதிலிருந்து தடைசெய்யப்படுவர். சுவிசேஷயுகம் முழுவதும் பல

ஆயிரக்கணக்கானோர் இவர்களோடு இணைந்து இப்பாதையில் நடந்தபோதிலும், அவர்களால் நிலைநிற்கமுடியவில்லை. இறுதியில் 1,44,000பேரை உள்ளடக்கிய இந்த வகுப்பாரே சாட்சியகரமாக மகிமைப்படுத்தப்படுவர். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்"(வெளி3:21). நிலைத்ததன்மை வருங்காலத்தின் காரியமாயிருந்து, உன்னதமான பலனைத்தரும். கர்த்தரிடத்தில் வருகிற எல்லோரும் ஞானஸ்நானத்தின்மூலமே வந்து சேர்ந்து, சிலகாலத்திற்கு இந்த அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பின் அங்கங்களாக எண்ணப்படுவர். இந்த நிலைமையில் தொடர்ந்து கீழ்ப்படிந்திருக்கும்வரை இந்த அபிஷேகம் அவர்களிடத்தில் தங்கியிருக்கும்.

**கிறிஸ்துவுடன் இரட்டிப்பான உறவு**

ஆவியில் ஜெனிப்பிக்கப்படல் என்ற இந்த சொல்லமைப்பு தேவன் புதிய சிருஷ்டியாக புதிய சுபாவத்தைத் துவங்குகிற ஒருவரை ஏற்றுக்கொள்வதன் தனிப்பட்ட அனுபவத்தை விளக்குவதாக வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதன்பின்னர், இந்த புதிய சுபாவம் முன்னேற்றமடைந்து, வளமையுற்று, இறுதிவரை உண்மையுள்ளோராய் இருந்தால், ஆவியில் பிறப்பை அடைவர். ஜெனிப்பிக்கப்படல் மற்றும் பிறப்பு என்ற சொல்லமைப்புக்கள் புதிய சிருஷ்டியின் ஆரம்பத்தையும், அதன் முழுமையையும் அடையாளமாக குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆவிக்குரிய ஞானஸ்நானம் அல்லது ஆவியின் அபிஷேகம், ஒரே பரிசுத்தஆவியைத் தொடர்புபடுத்தியே பேசுகிறது. அதே அனுபவங்களை ஜெனிப்பிக்குதலாக ஓரளவு பேசுகிறது. ஆனால் வித்தியாசமான ஒரு கோணத்திலிருந்து பேசுகிறது. பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் என்பது தனிமனிதருக்குரியதாக நமக்கு வந்துசேர்வதில்லை, மாறாக கூட்டாக வருகிறது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் திருச்சபையின்மேல் வந்தது, ஆனால் அது நாள்தோறும் மீண்டும்மீண்டும் கொடுக்கப்படவில்லை, இதற்கு மனந்திரும்பிய முதல் புறஜாதியானாகிய கொர்னேலியு மற்றும் அவரது இனத்தார் மற்றும் அருகிலிருந்த நண்பர்களின் சம்பவம் ஒரு விதிவிலக்கு. அப்.பேதுருவின் வாயினின்று புறப்படும் வார்த்தைகளைக் கேட்க அவர் தம் குடும்பத்தாரோடு அழைக்கப்பட்டிருந்தார். அந்நேரத்தில் பெந்தெகொஸ்தேவுக்கொப்பான ஞானஸ்நானம் அருளப்பட்டது.– "வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவி இறங்கினது " – அப்10:24,44. புறஜாதியாரும் அபிஷேகம் பெற்றவரது அங்கங்களாகும்படியான வாய்ப்பு அருளப்பட்டது என்பதையே இது அறிவுறுத்துகிறது.

ஞானஸ்நானம் என்ற வார்த்தை மூழ்குதலைக் குறிக்கிறது. நாம் அனைவரும் ஒரே சரீரத்திற்குள், ஒரேஆவியால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம் அல்லது மூழ்கிவிட்டோம் அல்லது அபிஷேகம் பண்ணப்பட்டோம் எனவும் பவுல் விவரிக்கிறார். ஆவியின் அபிஷேகம் அல்லது ஞானஸ்நானம் முதலாவதாக நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு வந்தது, பெந்தெகொஸ்தே நாளில் சபைக்கு அது நீட்டிக்கப்பட்டது, அதுமுதற்கொண்டு அந்த அபிஷேகம் திருச்சபையினிடத்தில் ஒரு அபிஷேகமாக இருந்து வருகிறது. கிறிஸ்துவின்மூலம் தேவனிடத்தில் வந்திருக்கிற நாமனைவரும், அவரது புண்ணியத்தின் மூலமாக நம் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பைவேண்டி, அவரது மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தின் வழியாக அவரோடுகூட நாம் மரித்தவர்களாக ஒப்புக்கொடுக்கும்போது, இவ்வாறு அந்த அபிஷேகத்தின்கீழ் வருகிறோம்.

இந்த செயல்பாட்டின் முடிவு இரு வகைப்பட்டது. முதலாவதாக, நாம் மாம்சத்தில் கிறிஸ்துவின் அங்கங்களாகிறோம். அவரும் நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மை அவரது அங்கங்களாக நடத்துகிறார். நாம் முதலாவதாக ஞானஸ்நானம்பெற்று, அவரது மரணத்துக்குள்ளாக அவரது ஞானஸ்நானத்திற்குள் மூழ்கினோம். அதன்பின்பு நாம் மரணத்துக்குள்ளான இந்த ஞானஸ்நானத்திலிருந்து புதிய சிருஷ்டிகளாக எழுப்பப்பட்டோம். அதிலிருந்து, நம் மாம்சம் அவரது மாம்சமாக எண்ணப்படுகிறது. ஆகவே கிறிஸ்துவுடனான நமது உறவு இரு வகையானது. ஒன்று மாம்சத்தோடு தொடர்புடையது, மற்றொன்று ஆவியோடு தொடர்புடையது.

கிறிஸ்துவுடன், புது சிருஷ்டிகளாகவும் மற்றும் மாம்சத்தின்படியுமான இந்த இரட்டிப்பு உறவை அநேகர் கவனிப்பதில்லை. தர்சூசைச் சேர்ந்த சவுலிடத்தில் மகிமையடைந்த கிறிஸ்துவின் வார்த்தைகள் இதன் வலிமையை நமக்குத் தருகின்றன; "சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் ?... நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" –அப் 9:4,5. இவ்வாறு மாம்சத்திலுள்ள திருச்சபையைத் துன்புறுத்துவது, தம்மையே துன்புறுத்துவது போலாகும் என்று நம் கர்த்தர் பிரகடனப்படுத்தினார். கிறிஸ்துவின் துன்பங்களில் ஒரு பகுதியே திருச்சபை அடையும் துன்பங்களாகும். அவரது சரீரத்தின் கடைசி அங்கம் தன் விசுவாச ஓட்டத்தை ஓடிமுடிக்கும்வரை, கிறிஸ்துவின் துன்பங்கள் பூர்த்தியடையாது.

**கர்த்தருடைய தீர்மானம் வருங்காலத்துக்குரியது**

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் அங்கமாயிருக்கிற நமது நிலையும் இரு வகையானது. முதலாவதாக தற்காலத்தில் நாம், முழுமையடைந்தவர்கள்போல் தேவனால் ஏற்கப்பட்டிருந்தாலும், தற்காலிக உறுப்பினர் நிலைமையையே

பெற்றிருக்கிறோம். இவ்வாறு நமது ஞானஸ்நான உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தருணமே, நாம் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்ட தருணமாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம். புதுசிருஷ்டிகளாக அவரோடுகூட அவரது உயிர்த்தெழுதலில் பங்குபெற அவரோடுகூட எழுப்பப்பட்டோம். ஆயினும் பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டு, இவ்வாறு ஆவிக்குரிய சரீரத்தின் அங்கத்தினர்களாக கிறிஸ்துவோடுகூட இணைந்திருக்கிறவர்களது எண்ணிக்கை மூன்று வகுப்பாரை உள்ளடக்கியுள்ளது:

1. சிறுமந்தை, முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக, திரைக்கப்பால் கிறிஸ்துவின் சரீரமாகப்போகிறவர்கள்.

2. திரள்கூட்டத்தார், மேலான வகுப்பாராகும் வாய்ப்பில் தவறினவர்கள். ஆனால் இவர்கள் மணவாட்டி வகுப்பாருக்கு தோழிகளாக இருப்பார்கள்(சங்45:14).

3. சிலர் நெறிகெட்டவர்களாக, இரண்டாம் மரணத்தை அடைகின்றனர்

தற்காலத்தில் எவர்மீதும் நியாயத்தீர்ப்பை கொடுப்பது நமது உரிமையல்ல. இவர் அல்லது அந்த நபர் சிறுமந்தைக்குரியவர் அல்லது திரள்கூட்டத்தார் என்று கூறுவது நமக்குரியதல்ல. வேதாகம அறிவுரைகளின்படி, இவ்விஷயத்தில் நம் கர்த்தர் இந்த யுகமுடிவு வரைக்கும் தம் தீர்மானத்தை வெளிப்படுத்துவதில்லை என்று நாம் அறிகிறோம். அதன்பிறகே, யார் மேலான சுபாவத்தைப் பெறுகிறார்கள், யார் அதற்குக் கீழான சுபாவத்தைப் பெறுகிறார்கள் என்று அவர் தம் தீர்மானத்தை வெளிப்படுத்துவார்.

"நாம் அனைவரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்"(எபே4:4). ஆகவே நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்தவேண்டியது நம் ஒவ்வொருவரை சார்ந்ததாகும். நமது சோதனைகள், நம் கஷ்டங்கள், நம் பலவீனங்கள் பெரிதும் வேறுபட்டதாயிருப்பதால், கர்த்தர் ஒருவரே, "யார் தகுதியானவன்" என்று தீர்மானிப்பார், அவரே அறிவார். தன்னைக் குறித்தே தான் நிதானிக்கக்கூடாது என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். கிறிஸ்து ஒருவரே நியாயந்தீர்க்கக்கூடியவர்.

**முதற்பேறானவர்களில் இரண்டு வகுப்பார்**

முதற்பேறானவர்களின் சபையில் உள்ளோர் அனைவருமே முதற்பேறானோரின் கூட்டமாக பரிபூரண ஜீவனை அதாவது நித்திய ஜீவனை அடைவர். உலகத்தோடு ஒப்பிடுகையில் இவர்களது எண்ணிக்கை மிக சொற்பமே. விசாலமான பாதையில் அழிவுக்குச் செல்கிற உலக மனுக்குலத்தை, ஒரு சித்திரமாக நம் கர்த்தர் மலைப்பிரசங்கத்தில் கொடுத்தார். பின்பு ஜீவனுக்கு வழிநடத்திச் செல்கிற நெருக்கமான வழியை அவர் நுட்பமாக விளக்கிக் காட்டுகிறார். அந்த வழியை அவரே திறந்து, அதில் வெற்றிகரமாக நடந்து காண்பித்தார். இந்த நெருக்கமான வழியை வெகுசிலரே கண்டடைந்து, அதிலும் அதில் நுழைந்து, நடப்பர் என்றும் நமக்கு கர்த்தர் கூறுகிறார்.

விசாலமான வழியில் நடக்கிற அனைவரும் இறுதியில் சத்தியத்தை அறிகிற அறிவின்கீழ் கொண்டுவரப்படுவர் என்று மற்றொரு வேதவசனத்தில் நமக்குக் கூறப்பட்டுள்ளது. மேசியாவின் இராஜ்யத்தில் வெளிச்சமும் ஆசீர்வாதமும் அருளப்பட்டு, தேவனோடு இசைவாக வர வாய்ப்பு அருளப்படும். அந்நேரத்தில், மனித பரிபூரணத்துவத்திற்கு திரும்பும்படி பெரும்பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும். இப்படியாக, இங்கு நாம் மூன்று வழிகளைக் காண்கிறோம். ஆயினும் தற்கால யுகத்தில் ஜீவனுக்குப் போகிற ஒரேஒரு வழிமட்டும் திறக்கப்பட்டுள்ளது.

தற்கால வாழ்க்கையின் பலனாக, யார் நித்தியஜீவனை ஆதாயப்படுத்துவர் என்று வேதவசனங்களை ஆராய்ந்து பார்ப்போமானால், முதற்பேறானவர்களின் சபை மட்டுமே இந்த ஆசீர்வாதத்தை அடைவர் என்று கண்டடைகிறோம். ஆயிரமாண்டு ஆட்சியின்போது உலகிற்கு ஜீவன் படிப்படியாக வந்துசேரும். அப்பொழுது அவர்கள் படிப்படியாக அடியெடுத்துவைத்து, வளர்ச்சிபெற்று, எழுப்பப்பட்டு, பூரணத்தை அடைவர். ஆனால் தற்போது அருளப்படுகின்ற ஜீவன், அனுகூலமற்ற சூழ்நிலைகளின்கீழ், போராடி அடையவேண்டியது கட்டாயமாகிறது. அதை நாம் அடைய ; 1. ஜெனிப்பிக்குதல் மற்றும் 2.பரிபூரணத்துக்கு உயிர்த்தெழுதல் இவைகள் மூலம் பெற்றுக்கொள்கிறோம். இந்த உயிர்த்தெழுதலை இந்த சுவிசேஷயுக முடிவிலேயே நாம் பெறுவோம்.

இந்த மாபெரும் ஆசீரை இரண்டு வகுப்பார் அடையப்போவதாக வேத வசனங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. ஒரு வகுப்பார் ஜெயங்கொண்டவர்களாகி, ஆவிக்குரிய ஜீவனை அடைந்தாலும், அது உன்னதமான ஜீவநிலைமை அல்ல. மற்றொரு வகுப்பார் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக வெளிப்பட்டு, உன்னதமான நிலையில் உயிர்த்தெழுதலை அடைவர். இவர்கள் தெய்வீக சுபாவத்தில் பங்குபெறப்போகிறவர்கள். இந்த வகுப்பில் இடம்பெற்று, பிரதான உயிர்த்தெழுதலில் கிறிஸ்துவோடு பங்குபெறுவதற்கே நாம் பெருமுயற்சி செய்துவருகிறோம். தங்களுடைய அர்ப்பணிப்பின் பொருத்தனைகளில் அலட்சியமாயிருந்து பின்தங்குகிறவர்கள் இறுதியில் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். நெருக்கமான வழியில் நிறுத்தப்பட்டு, கீழ்ப்படிதல் சோதிக்கப்படுவதன்மூலம், தாங்கள் தேவனிடத்தில் நேர்மையும் உண்மையுமாய் இருக்கிறோமா என நிரூபணமாகும். அவர்களில் மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்கள் இரண்டாம் மரணத்துக்குச் செல்வர். நித்திய ஜீவனுக்காக பெருமுயற்சி எடுப்போர், கிறிஸ்துவோடு உடன்சுதந்திரராகும் மாபெரும் பரிசை இழந்துபோனாலும், மகா உபத்திரவக் காலத்தில் பரிபூரணத்துக்குக் கொண்டுவரப்படுவர்.

---------------

R 5394

# தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும்

# GODLINESS ATTRACTS PERSECUTION

"அன்றியும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"

– 2தீமோத்தேயு 3:12

பொதுவாக தேவபக்தி என்பது நீதியுள்ளவராக இருந்து பாவத்துக்கு எதிராக இருக்கும் நிலையாகும். அதாவது, தேவன் எவ்வாறு நீதியுள்ளவராக, பாவத்துக்கு எதிரானவராக இருக்கிறாரோ, அதுபோலவே நீதியோடிசைந்து இருப்பது போன்றதாகும். மேலும் அவர் எவ்வாறு தயாளகுணமும், இரக்கமும் அன்புமுள்ளவராக இருக்கிறாரோ அதேபோன்று இருப்பதாகும். உலகின் ஜனங்களில் கிறிஸ்தவரல்லாதோர்கூட பரந்த மனப்பான்மையும், இரக்கமும் நற்குணங்கள் படைத்தவர்களாக உள்ளனர். இருள் எப்போதுமே ஒளியைப் பகைக்கிறது போல, இவர்கள் தீமை செய்பவர்களிடமிருந்து ஏறத்தாழ எதிர்ப்பைப் பெறுகின்றார். இருந்தபோதிலும், நல்ல ஜனங்கள் தங்களை முற்றும் நீதிமான்களாக காட்டிக்கொள்ளாமல் ஓரளவுக்கு நீதியைச் செய்கிறவர்களாயிருக்கின்றனர். சில சமயங்களில் குறிப்பிடப்படுவதுபோல அவர்களுடைய மதரீதியான விஷயங்களிலும்கூட அதிகபட்ச நிலைக்கு செல்வதில்லை. இந்த நற்பண்புகளே சிலசமயங்களில்அரசியல்ரீதியாகவோ அல்லது ஏதோவொரு வகையில் சில துன்பங்களை பெறச்செய்கிறது. ஆனாலும் அவர்களுடைய எதிரிகள்கூட அவர்கள்மேல் மரியாதையுள்ளவராயிருக்கின்றனர்.

ஆனால் நம்முடைய வசனப்பகுதியில் கிறிஸ்துயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறவர்களுக்கே துன்பம் என அப்போஸ்தலர் வரையறுத்திருக்கிறார். தேவபக்தியாய் நடப்பதற்கும், கிறிஸ்துயேசுவுக்குள் தேவபக்தியாய் நடப்பதற்கும் வித்தியாசம் என்ன? கிறிஸ்துஇயேசுவோடு கொண்டிருக்கிற விசேஷமான உறவின் காரணத்தினால், தேவபிள்ளைகள் விசேஷமான வெளிச்சத்தை உடையவர்களாய் இருக்கின்றனர் என்று இதற்கு நாங்கள் பதிலளிக்கிறோம். அவர்கள் தேவனுடைய நீதியின் கொள்கையை மிகவும் தெளிவாக காண்கின்றனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஆளுகை செலுத்தும்படியான ஒரு விதியை உடையவர்களாயிருக்கின்றனர். சபையோடு ஏற்படுத்தியிருக்கிற தேவனுடைய விசேஷித்த ஏற்பாட்டையும், தெய்வீகத்திட்டத்தின் ஆழமான காரியங்களையும் மற்றவர்கள் காண்பதில்லை.

கிறிஸ்துஇயேசுவுக்குள் இருப்பவர்கள் பலியினால் உடன்படிக்கை செய்யும்படியாக சிறந்த அறிவைப் பெற்றிருக்கின்றனர். எவ்வகையிலும் அவர்கள் தங்களுடைய தேவபக்திக்குரிய நம்பிக்கையை சமரசப்படுத்துவதில்லை என்று அவர்களே உணர்ந்திருக்கின்றனர் – அதாவது, பாவத்துடனோ அல்லது உலகத்துடனோ சமரசம் செய்வதில்லை. அவர்களுடைய பூமிக்குரிய சொந்தநலன்கள் பாதிக்கப்பட்டாலும் நீதியின் கொள்கைகளை உயர்த்திப் பிடித்தாகவேண்டும்.

கிறிஸ்துயேசுவுக்குள் பற்றுறுதி இல்லாதவர்கள் தேவபக்தியை ஓரளவு உடையவராயிருந்தாலும், உலகத்தின் நோக்கில் பாவமில்லாத, ஒழுக்கமான, இரக்கமுள்ள தவறில்லாத அநேக காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவரோ, தேவனுடைய வார்த்தை எது என்றும், கர்த்தருடைய ஆவி எது என்றும் எந்தளவுக்கு புரிந்துகொண்டாரோ, அதற்கு தன் நேரம், திறமை, செல்வாக்கு, பணம் முதலியவற்றை கர்த்தருடைய ஊழியத்துக்காக தத்தம் செய்வார். ஒரு உலகப்பிரகாரமான நீதிமான் அநேக காரணங்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தன் பணத்தை செலவழிக்க முற்றிலும் சுயாதீனமுள்ளவராக இருந்து, அவ்வாறு செய்வது அவர்களுக்குள்ளாக சரியானதும் முறையானதுமாக யோசிக்கலாம். ஆனால் அதேசமயம் ஒரு கிறிஸ்தவன், எது கர்த்தருடைய சித்தம், எது அவருடைய வழி? என தனக்குத்தானே கேட்டுக்கொள்ளலாம்.

### கிறிஸ்தவ ஊழியக்காரன் வரையறைக்கு உட்படுத்தப்படுகிறான்

ஒரு கிறிஸ்தவன் பணத்தை உபயோகிப்பதிலும் வரையறைக்கு உட்படுத்தப்படுகிறான். அதை எப்படி உபயோகிக்க கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்று அவன் எப்பொழுதும் யோசித்து செயல்படவேண்டும். மற்ற ஜனங்களோ, உபகாரம் பண்ணுவதிலும், கல்லூரிகளுக்கு மானியம் அளிப்பதிலும் தங்கள் பணத்தை செலவழித்தாலும், ஒரு கிறிஸ்தவன் தன் பணத்தை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், பல்வேறு வழிகளில் அதை வெளியிடவும் செலவிடவேண்டும். ஒரு கிறிஸ்தவன் இப்படியாக எண்ணுவான்; "பூமிக்குரிய வழிகளில் கல்விகற்க ஜனங்களுக்கு அநேக வாய்ப்புக்கள் உள்ளன, ஆனால் ஆவிக்குரிய கல்வியை ஜனங்கள் அடையவே, அவரது பிள்ளையாகிய என்னிடத்தில் கர்த்தர் விரும்புவார் என்று நான் நம்புகிறேன்".

அதேபோன்று நேரத்தை செலவழிப்பதையும் உதாரணப்படுத்தலாம். ஒரு ஜென்ம சுபாவமான மனுஷன் ஒருவேளை இவ்வாறு கூறலாம்; நாங்கள் மாலைவேளையில் நடக்கும் நல்லதொரு இசை நாடகத்தில் பங்கேற்கிறோம். நாங்கள் மதிக்கத்தகாத இடத்திற்கல்ல, மாறாக ஒவ்வொரு பருவத்திலும் நடைபெறும் இசைநாடகத்தில் குறிப்பிட்ட பணத்தையும் நேரத்தையும் செலவழிப்போம் அல்லது நாங்கள் கலை, இசை, புத்தகங்களின் ஆதரவாளராக இருப்போம். இவ்வகையில் நாங்கள் ஒரு நடைமுறையைத் தேர்ந்தெடுத்து, சமுதாயத்தின் அங்கீகரிப்பைப் பெறுவோம். அவ்வாறு செய்வது ஒரு ஞானமான காரியமாக இருக்கும். ஆனால் ஒரு கிறிஸ்தவன் கூறும்போது, என் நேரம், என் பணம் கர்த்தருக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. நான்

அவருடைய ஊழியக்காரன், அவைகளை சிறந்தவழியில் பயன்படுத்துவேன் எனக்கூறுவார். மேலும் ஒரு உலகத்தின் மனுஷன் ஓவியத்தின் ஆதரவாளராக, ஓவியக்கலை பெருகவேண்டுமென்ற ஆர்வத்தில், ஆயிரம் அல்லது பத்தாயிரம் டாலர்கள் ஒரு ஓவியத்துக்கு செலவழிக்கலாம். அல்லது தன் வீட்டை அழகுபடுத்தும்பொருட்டு ஒரு அழகிய சிற்பத்தை வாங்கலாம். ஆனால் என் வழி அதுவல்ல. நான் கர்த்தருடைய ஊழியக்காரனாக அவருடைய சித்தத்தை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

ஒரு கிறிஸ்தவனுக்கு உலகத்தாரைப் போன்றில்லாமல் சில வரையறைகள் உள்ளது. ஆனாலும் உலக ஜனங்களில் அநேகர் கிறிஸ்து இயேசுவுக்குள் இல்லாவிட்டாலும் நல்ல ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருப்பதினால் நாங்கள் மகிழுகிறோம். அவர்களை உயர்வாக நினைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். உலகத்தில் நன்மக்களும் இருக்கின்றனர். சபைக்கு வெளியே ஒரு குறிப்பிடத்தக்க அளவு தெய்வபக்தியுடையவர்கள் உள்ளனர். அவர்கள் நற்குணங்களை பெற்றிருப்பார்களானால், சத்தியத்தை அறிந்துகொள்ள முற்படுவார்கள். தேவபக்தியுள்ள உலக ஜனங்கள் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் ஆசீரடைவர். அவர்கள் செய்த தெய்வபக்திக்குரிய ஒவ்வொன்றுக்கும், பெருந்தன்மையான ஒவ்வொரு செயலுக்கும் அதற்குரிய வெகுமதியை அடைவார்கள். அவர்களுடைய உயர்வான உணர்வுகளை வளர்க்கும்போது, தாங்கள் சென்ற நல்வழிக்கே சிலபடிகள் திரும்புவர்.

**விசேஷ தேவபக்தியுள்ளவர்கள் விசேஷமான துன்பத்துக்குள்ளாவார்கள்**

கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருப்பவர்களின் துன்பங்கள், விசேஷமானவைகள். இத்துன்பங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களில் இருந்து வரும் என நாம் எதிர்பார்க்கமுடியாது. ஒரு மனிதன் தன்னுடைய கண்ணை தானே குத்திக்கொள்வான் எனவும், தன் கையை தானே காயப்படுத்திக்கொள்வான் எனவும் எதிர்பார்க்கமுடியாது. ஒரு கையில் உள்ள தோல் கரடுமுரடாக இருந்தால், மற்றொரு கையின்மேல் ஒருவேளை உரசி காயப்படுத்தலாம். ஆனால் நாம் ஒரே சரீர அவயவங்களாய் இருந்துகொண்டு, மற்றவரை துன்பப்படுத்தமுடியாது. துன்புறுத்தல் என்பது உள்நோக்கத்தோடு யோசித்து பின்பு செயல்படுத்துவதாகும். அதாவது, இது ஒரு வார்த்தை அல்லது ஒரு செயல்பாட்டினால் வரும் துன்பமல்ல, ஒருவரை ஒரு கருத்தை கடைப்பிடிக்க செய்யவோ அல்லது அதில் நடக்க வைப்பதற்காகவோ, இரக்கமற்ற வார்த்தைகள் மற்றும் இரக்கமற்ற தொடர்ச்சியான செயல்பாடுகளை செய்வதே துன்புறுத்தலாகும்.

ஆகவே உபத்திரமானது, இயேசு என்கிற பெயரை வைத்துக்கொண்டு இருக்கிற உலகத்தின் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடமிருந்து வருகிறதாயிருக்கிறது. ஆனால் இயேசுவினால் உலகம் என்று அழைக்கப்படுகிறவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாவர். கிறிஸ்துவ மதம் தற்போது பணத்தை தன் போலி மார்க்கமாக பெற்றுள்ளது. ஆகவே அப்போஸ்தலர் இவ்வகுப்பாரைக் குறித்து, கர்த்தரின் நாமத்தை தரித்துக்கொண்டு, அந்த நாமத்தை தவறாக பயன்படுத்துகின்றனர், உலகில் இன்று உண்மைக்கும் போலிக்கும் – அதாவது சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறியாதவர்களாயிருக்கின்றனர். மேலும், அவர்கள் அறிய விருப்பமில்லாதவர்களாயிருப்பதுடன், சொல்லப்பட்ட வழியைவிட்டு விலகி செல்கிறவர்களாயிருக்கின்றனர். எவ்வகையிலேனும் உண்மை விபரங்கள் அவர்களால் அறிந்துணரப்படும்போது, குறிப்பிடத்தக்க அளவு ஆக்கினை தங்கள்மேல் வரும் என அறிந்தும் அவைகளின்படி நடக்காதவர்களாயிருக்கின்றனர்.

அவர்கள் எல்லாரும் எல்லா வகையிலும் பொல்லாதவர்கள் அல்ல, களைகளுக்குள் நன்மக்கள் அதிகம்பேர் உள்ளனர். ஆனால் அந்த களைகளின் மத்தியில் உண்மையான போஷாக்கு உடைய கோதுமை வகுப்பார் இல்லை. ஆனால் இந்த களைகள் கிறிஸ்துவின் சபையாக தங்களை காட்டிக்கொள்கிறது. களைகளடங்கிய அமைப்புக்கள் தங்களை கிறிஸ்துவமாக காட்டிக்கொள்கிறது. இவ்வகுப்பாரிடமிருந்தே வழக்கமாக உபத்திரவங்கள் வருகின்றன. அவர்கள் கோதுமையை சுற்றிவளைத்து, கனிகொடாதபடி தடுத்து விடுகின்றனர். நம் கர்த்தருடைய நாளிலும் இவ்வாறே நடந்தது, உபத்திரவப்படுத்துகிறவர்கள் என கர்த்தர் குறிப்பிட்டது, அவர் காலத்தில் வாழ்ந்த புறஜாதி ஜனங்களை அல்ல, மாறாக தேவனிடத்தில் உண்மையான அர்ப்பணிப்பு செய்யாதவர்களாக இருந்தும், தங்களை அவ்வாறு நினைத்துக்கொண்டிருந்த உலகப்பூர்வமான யூதர்களைக் குறித்தே பேசினார்.

நிக்கோதேமு மற்றும் கமாலியேல் ஆகியவர்கள் சிறந்த பண்புடையவர்களாயிருந்தும், இவர்களைப்போன்ற அநேகர் கிறிஸ்துவின் சீஷர்களாக ஒருபோதும் வரவில்லை. அநேகர் நீதியாய் நடக்கத் தேடினர் என்பது சாட்சியமாக காணப்படுகிறது. உதாரணமாக ஒரு வாலிபன் கர்த்தரிடம் வந்து, ''நல்ல போதகரே நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்? என கேட்டார். கர்த்தர் இதற்கு பிரதியுத்தரமாக, ''கற்பனைகளைக் கைக்கொள்'' என்றார். அதற்கு அவன், ''இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்'' என்றான். அவன் சீஷனாக இல்லாவிட்டாலும், அவனுடைய உயரிய பண்பைக்கண்டு இயேசு அவனைக்கண்டு அன்புகூர்ந்தார். மேலும் இயேசு அவனிடம், ''இன்னும் உன்னிடத்தில் குறைவுஉண்டு, நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு, அப்போது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என் பின்னே வா'' என்றார். ஆனால் அதைக்கேட்டபோது அந்த வாலிபன் துக்கமடைந்தவனாய் போய்விட்டான். அவன் கிறிஸ்துஇயேசுவின் சரீர அங்கத்தினராக இருக்க விரும்பவில்லை. எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க விரும்பவில்லை. அவன் அநேக ஆஸ்திகளுடையவனாய் இருந்ததினால், தன் ஆஸ்தியை வைத்துக்கொள்ள விரும்பினான்– மாற்கு 10:17–22.

இன்னும் அநேகர் அநேக பாரம்பரியங்களிலும், சடங்குகளிலும் சென்று நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட பல்வேறு புத்திமதிகளையும், அதில் உள்ள பண்டிகைகளையும், உபவாசங்களையும் கடைப்பிடித்தனர். ஆனால் அவர்கள் ''கபடற்ற உத்தம இஸ்ரயேலராக'' இருக்கவில்லை. பின்னாளில் அவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய பலியின் பாதையில் சென்றவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களாயினர்.

**கிறிஸ்தவர்கள் என கூறிக்கொள்பவர்கள் துன்பப்படுத்துகின்றனர்**

ஆகவே கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறவர்களுக்கு உபத்திரவங்கள் அதிகபட்சமாக, உலகத்தாரிடமிருந்தல்ல மாறாக, தங்களை கிறிஸ்தவர்கள் என கூறிக்கொள்கிறவர்களிடமிருந்தே வரும். கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு வகுப்பார் தற்போது பெரிய அளவிலான கர்வமும், சுயதிருப்தி உடையவராய் இருக்கின்றனர். அவர்கள் பெரிய ஸ்தாபனத்தை பெற்றிருக்கின்றனர். தங்களுடைய ஸ்தாபனத்துக்கு விரோதமாக ஏதாகிலும் தென்படுமானால், அவர்கள் உக்கிரமடைந்து, துன்பப்படுத்த விரும்புவர். தற்கால சத்தியங்களை சொல்பவர்களைக்குறித்தும், கிறிஸ்து இயேசுவின் அடிச்சுவடுகளில் பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறவர்களைக் குறித்தும் கீழ்க்கண்டவாறு சிலர் கூறும்போது,''இந்த ஜனங்களை இப்படியே விட்டுவிட்டாலோ, அல்லது அவர்களை போதிக்க அனுமதித்தாலோ, அநேக நூற்றாண்டுகளாக நாம் கட்டிக் காத்தவைகளெல்லாம் தூள்தூளாகிவிடும். மேலும் லூத்தர் நமக்கு சத்தியம் தரவில்லையா ? கெல்வின் சபைக்கு சத்தியத்தைத் தரவில்லையா ? வெஸ்லியின் உபதேசங்களை நாம் அடைந்திருக்கவில்லையா ? கூடாது கூடாது ! இம்மாதிரியான புதிய உபதேசங்களை நாம் பெற்றுக்கொள்ளக்கூடாது !

தவறாகப் புரிந்துகொள்ளுதலின் காரணமாக, சத்தியத்தையும் அதன் பிரதிநிதிகளையும் இந்த ஜனங்கள் துன்புறுத்துவதாகத் தெரிகிறது. நாம் அவர்களிடத்தில் பெரிய அளவில் பரிவிரக்கம் காட்டவேண்டுமே தவிர, அவர்களிடம் கோபம் கொள்ள நினைக்கக்கூடாது. உபத்திரவமில்லாமையைக் குறித்தோ, உபத்திரவப்படுதலைக் குறித்தோ நாம் மகிழ்ச்சி கொள்ளவேண்டும் என்பது இதற்கு பொருளாகாது. ஏனெனில் எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாக காணாமல் துக்கமாய்க் காணும் – எபி 12:11. ஆனால் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்களாய் நாம் இருக்கக்கண்டால், தேவஆவி நம்மேல் தங்கியுள்ளது என அறியலாம். கிறிஸ்துவின் நாமத்திற்காக பாடுபட்டு, அது தேவ சித்தமாக இருப்பதை அவர்கள் காண்பார்களானால், அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். ஏனெனில் உபத்திரவம் ஆசீர்வாதமான பலன்களை அவர்களுக்குத் தரும். அவ்வேளையில் நாம் ;

''அவருடைய காருண்யமிக்க கவனத்திற்குள்ளே நிலைத்து நிற்பாய்

கொந்தளிக்கும் கடல்களை அவர் அமரச்செய்வார்

உனக்கு ஏற்பட்டுள்ள எண்ணிலடங்கா மனவலிகளிலிருந்து வெளிக்கொணர்ந்த பிறகே

சமாதானம் அளித்திடுவார்.''

**உங்கள் தேவன் உங்களை சோதிக்கிறார்**

தேவன் ஏன் தம்முடைய ஜனங்கள் துன்பப்பட அனுமதிக்கிறார் ? அன்பான பெற்றோர் தங்கள் குழந்தைகளை பேணிப் பாதுகாப்பதுபோல, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு துன்பம் வராமல் ஏன் பாதுகாப்பதில்லை ? யாரெல்லாம் நீதியைச் செய்கிறார்களோ, அது அவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதே தேவனுடைய மகா பெரிய திட்டமாய் இருக்கிறது என வேதம் பதில் உரைக்கிறது. ஏனெனில் பாவத்தின் தீமையான விளைவுகளையும், அதின் அழிக்கும் தன்மையையும் எடுத்துக்காண்பிக்க தேவன் விரும்புகிறார். பாவம் மற்றும் மரணம் ஆளுகைசெய்யும் ஆறுநாட்கள் முடிந்து ஏழாம்நாள், பிரசவ வேதனைப்படுகிற சர்வசிருஷ்டிக்கும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது.''எல்லா முகங்களிலும்உள்ள கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்'' – ஏசாயா 25:8.

ஏன் தேவன் தம்மிடத்தில் உடன்படிக்கை செய்தவர்கள்மேல் உபத்திரவங்களை அனுமதிக்கவேண்டும் என்பதற்கு குறிப்பிட்ட காரணம் இருக்கிறது.''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை பரிசோதிக்கிறார்''. ஏன் ? எதை பரிசோதிக்கிறார் ? நாம் அவருடைய உண்மையான பிள்ளைகள் என்று கூறுகிறோம், நமக்குண்டான எல்லாவற்றையும் கொடுக்கிறோம் எனவும் கூறியுள்ளோம். இப்போது ''உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் அன்பு கூறுகிறீர்களோ இல்லையோ என அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சோதிக்கிறார்'' – உபாகமம் 8:2; 13:3.

எந்த அளவுக்கு நீங்கள் சகிப்பீர்கள் ? எந்த அளவு பொறுமையோடு சகிப்பீர்கள் ? எந்த எல்லைவரை சகிக்கிறீர்கள் ? யார் மிக அதிகமாக சகிக்கிறார்களோ, மிக அதிக பொறுமையோடு சகிக்கிறார்களோ, அவர்களே சிறந்த குணமுடையோராக சாட்சியமளிப்பர். சிறந்த குணத்தை யார் காண்பிக்கிறார்களோ அவர்களே இராஜ்யத்தில் மிக உன்னதமான இடத்தைப்

பெற்றுக்கொள்வர். அவரவருடைய உண்மைக்குத் தகுந்தபடி அவர்களுக்குரிய ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வர். ஆனால் மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறதுபோல, இராஜ்யத்திலும் இருக்கும். யார் தன் சொந்த சுபாவத்தை எதிர்த்து மிகப்பெரிய போராட்டம் போராடுகிறாரோ, அவருடைய இருதயத்தில் அதிகமான அன்பும் வைராக்கியமும் இருப்பதை வெளிப்படுத்துகிறார். அவரே உன்னதமான ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வார்.

“எப்படிப் போகிறது உன்னுள் போராட்டம் ?

வாழ்நாள் முழுவதும் தீமைகளை எதிர்க்கும் போராட்டம் ?

அது தாழ்ந்த போராட்டமல்ல, சுயநல நோக்கமில்லா போராட்டம்.

அது அரக்கரோடும் அரசர்களுடனுமான போராட்டம்

எதிரிகளின் பெரும் எண்ணிக்கையை கவனித்துப் பார்க்கவேண்டா

எதிரிகளை எதிர்க்கும் சபையின் போராட்டம் இன்னும் ஏராளம்

தேவனிடம் வந்துவிடு, வெற்றி வந்துசேரும் அந்நாளில்,

சாத்தான் யாருடன் போரிடவில்லையோ அவனுக்கு ஐயோ!”

———————————



For More E books and Tracks - Write a E-mail to - victorgnanaraj01@gmail.com Website : www.thestudiesinthescriptures.com,
For Private Circulation Only

# "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ"

## லூக்கா 12:13-34

"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."

(வசனம் 34)

இயேசு யூதர்கள் கூட்டத்தாரால் சூழப்பட்டிருக்க, அவர்களில் ஒருவர் இயேசு செல்வாக்கு மிக்கவர் என்பதை உணர்ந்துக்கொண்டு, தன்னுடைய குடும்ப ஆஸ்தியில் தனக்கு ஒரு பாகம் கொடுத்துவிடும்படிக்கு, தன்னுடைய சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதற்கு, தாம் நியாயாதிபதியாகவும், பங்கிடுகிறவராகவும் இல்லை என்று இயேசு மறுத்தார். இந்த விஷயத்திலும், வேறு விஷயங்களிலும் இயேசுவின் பின்னடியார்கள், தங்களுடைய ஆண்டவரைப் பின்பற்றுவார்களானால் நலமாயிருக்கும். அநேகர், மற்ற மனுஷர்களின் விஷயங்களில் தலையிடுகிறவர்களாக இருந்து, தாங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே தங்களுக்கான கர்த்தருடைய கட்டளை எனும் காரியத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

சமுதாயமானது சில சட்டதிட்டங்களையும், விதிகளையும் ஏற்படுத்தி வழங்கியுள்ளது. இந்த அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டங்களில் எவையெல்லாம் நமக்கு இசைவாக இல்லையோ, அவைகள் விட்டுவிடப்பட வேண்டும். நமக்கு இருப்பவைகளிலும், தெய்வீக ஞானமானது நமக்கு ஏற்படுத்திக் கொடுப்பவைகளிலும் நாம் திருப்திக்கொண்டிருக்க வேண்டும். இயேசு செய்வதற்கு வேறொரு வேலை இருந்தது போன்று, அவருடைய பின்னடியார்களுக்கும் வேறொரு வேலை இருக்கின்றது. மகிமையான மேசியாவின் இராஜ்யத்திற்காக ஆயத்தம் செய்வதே, அந்த வேறொரு வேலையாகும். நமக்கு வாக்களித்துள்ள இந்த ஐசுவரியங்களானது, காணப்படும் பூமிக்குரிய ஐசுவரியங்கள் அனைத்தைக் காட்டிலும் மேலானதாகும்; மேலும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளப்படி பூமிக்குரிய ஐசுவரியங்களானது குப்பையாகவும், தூசியாகவும் காணப்பட்டு, நமது கர்த்தர் வாக்களித்துள்ள ஆசீர்வாதமான காரியங்களோடு ஒப்பிடுவதற்குப் பாத்திரமானவைகள் அல்ல.

இயேசு மறுப்புத் தெரிவிக்கும் வண்ணமாக, பண ஆசைக்கு எதிராக எச்சரித்துப் பேசினார். இதிலிருந்து ஆஸ்தி, அச்சகோதரனுக்கே நியாயப்படிச் சொந்தமானது என்பதும், இயேசுவிடம் வேண்டிக்கொண்ட மனுஷனோ தன்னுடைய நியாயமான உரிமைகளுக்கும் மிஞ்சி ஆசைப்பட்டான் என்பதும் தெரிகின்றது. மற்றவருக்குச் சட்டப்படிச் சொந்தமானதை, இம்மனுஷன் அடைய ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றான். பூமிக்குரிய உடைமைகள், ஆஸ்திகள் திரளாய் இருப்பது என்பது ஜீவன் ஆகாது என்பதை அம்மனுஷனும், நாம் அனைவரும் அறிந்துக்கொள்ளவும் இயேசு விரும்பினார். ஒரு மனுஷன் ஐசுவரியத்தை மிகுதியாய்க் கொண்டிருந்தாலும், அவன் துக்கமாய் இருக்கலாம்; அதேசமயம் ஒருவன் தரித்திரத்தில் இருந்தும், அவன் சந்தோஷமாய்க் காணப்படலாம். ஒருவனுடைய ஆத்துமா தேவனிடத்தில் கொண்டிருக்கும் உறவின் அடிப்படையிலும், தேவனிடத்தில் அவன் கொண்டிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலுந்தான், சந்தோஷம் காணப்படும்.

இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு, மாம்சீக இஸ்ரயேலர்கள் நிழலாய் இருந்தார்கள். மாம்சீக இஸ்ரயேலர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வார்களானால், அவர்கள் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தைச் சுதந்தரித்துக்கொள்ளலாம் என்பதாகவும், அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுவார்கள் என்பதாகவுந்தான் மாம்சீக இஸ்ரயேலர்களுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் காணப்பட்டது. மாம்சீக இஸ்ரயேலர்களும், மீதமான மனுஷர்களைப் போலவே பாவிகளாக இருந்தபடியால், அவர்களால் தெய்வீகப் பிரமாணங்களைக் கைக்கொள்ள முடியவில்லை, என்பதே அவர்களுக்கு இருந்த பிரச்சனை; ஆகவே அனைத்து ஜாதிகள் மீது, தேவன் தம்முடைய இராஜ்யத்தில், ஆசீர்வாதங்களைப் பொழிவதற்கு அவர்களைப் பயன்படுத்துவதற்கு, மாம்சீக இஸ்ரயேலர்கள் தகுியற்றவர்கள் ஆனார்கள். எனினும் இராஜ்யம் பற்றின நம்பிக்கையே அவர்களுடைய மனங்களில் எப்பொழுதும் மேலோங்கி காணப்பட்டு, அவர்கள் அனைவராலும் நாடப்பட்டதாகவும் இருந்தது.

அனைவருக்குமான மீட்கும்பொருளைக் கொடுப்பதற்கும், மேசியாவின் இராஜ்யத்தில் தம்முடன் உடன் அங்கத்தினராய் இருக்கத்தக்கதாக "உத்தம இஸ்ரயேலர்களை" அழைத்து, இழுத்துக்கொள்ளும் வேலையை ஆரம்பிப்பதற்கும் இயேசு உலகத்திற்கு வந்தார் (1 தீமோத்தேயு 2:6). இயேசுவினால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியும், மற்றும் அவர் கைக்கொள்ளவும் செய்தார் மற்றும் இதனோடுகூட ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததிக்காகவும் இயேசு தம்முடைய ஜீவனைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். இந்தப் பலியானது, மாய்மாலமற்ற, "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரின் வேண்டுமென்றே செய்யப்படாத தவறுகளுக்காக, அவர் நன்மை செய்ய (அவருக்கு) அனுமதியை உண்டாக்கிற்று. அவர்களால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு இராஜ்யத்தை அடைய முடியாவிட்டாலும், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதின் மூலமாக, நீதியினால் தரிப்பிக்கப்பட்டு, இவ்வாறாகத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும். ஆகவேதான் அந்த இராஜ்யத்தின் அங்கத்தினராகும்படிக்கு, பல நூற்றாண்டுக் காலமாக, தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதாக முயன்று கொண்டிருக்கும் ஜனங்களுக்கு இயேசுவின் பிரசங்கங்கள், இராஜ்யத்தின் அடிப்படையில் இருந்தது. இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கத்துவம் அடைவதற்காக முதலாவது வாய்ப்பு, யூத ஜனங்களுக்கே அருளப்பட்டது; மேலும் இவர்கள் கிருபையைப் புறக்கணித்த போதுதான் வாய்ப்பானது யூதர்களை விட்டு, புறஜாதிகளிடம் சென்றது. "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" (அப்போஸ்தலர் 13:46). இந்த உண்மைகளின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், இயேசுவின் போதனைகள் உலகத்திற்குக் கொடுக்கப்படாமல், மாறாக உலகத்தினின்று தாங்கள் பிரிந்திருப்பதாகவும், மேசியாவின் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவத்தை அடைவதற்கு தாங்கள் நாடிக்கொண்டிருப்பதாகவும் கூறிக்கொண்ட ஜனங்களுக்காகவே கொடுக்கப்பட்டது.

இப்படிப்பட்டவர்களுக்கே உண்மையில் புதிய ஏற்பாட்டின் முழுப் போதனைகளும் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு மாத்திரமே கேட்கிற செவிகள் இருந்தது; மேலும், "கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவன்" என்று நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக சாந்தமுள்ளவர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும், இருதயம் நொறுங்குண்டவர்களுக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கும்படிக்கு நாம் போதிக்கப்பட்டிருக்கின்றோம்; ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமான நிலைமையில் காணப்படுகின்றனர். மற்றவர்கள் அனைவரும் இராஜ்யத்தின் சுவிசேஷத்திற்குக் குருடர்களாகவும், செவிடர்களாகவும், காணப்படுகின்றனர். இப்பொழுது கேட்கவும், பார்க்கவும் முடியாதவர்கள், மேசியாவின் ஆளுகையின் போது, தங்களுடைய கண்களையும், செவிகளையும் திறக்கப் பெற்றிருப்பார்கள், ஏனெனில் அவர் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்திருக்கின்றார். எனினும் இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மகிமையான பரம அழைப்புத் தொடர்புடைய விஷயத்தில், இழந்துப் போகிறவர்களாக இருப்பார்கள்.

## "ஆத்துமாவே, நீ இளைப்பாறி இரு"

சகல பூமிக்குரிய இலட்சியங்களிலுள்ள முட்டாள்தனத்தை விவரிக்கும் உவமை ஒன்றை நமது கர்த்தர் கூறினார். ஆனால் அதற்கென்று பூமிக்குரிய இலட்சியங்கள் என்பது, மோசமானவைகள் என்பதாக இல்லை; மாறாக இவைகள் இராஜ்யத்திற்கு முன்பு ஒப்பிடுகையில் ஒன்றுமில்லாதவைகளாய் இருக்கின்றது. இராஜ்யம் மிகுந்த விலையேறப்பெற்ற முத்தாகும்; இதை அடையும்படிக்கு, மற்ற அனைத்து முத்துக்களும், அதாவது மற்ற அனைத்து விலையேறப்பெற்றவைகளும், மற்ற அனைத்து இலட்சியங்களும், மற்ற அனைத்து நம்பிக்கைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டு, குப்பை என்று கருதப்பட வேண்டும்.

உவமையானது, ஓர் ஐசுவரியமான விவசாயி இருந்ததாகவும், அவன் தன்னுடைய ஐசுவரியங்களைக்கொண்டு நன்மையைச் செய்வதற்குப் பதிலாக கஞ்சனாக இருந்தான், அதாவது சேர்த்துக் குவித்து வைத்துக்கொள்வதில் பிரியமாய் இருந்தான் என்பதாகவும் கூறுகின்றது. அவன் மாபெரும் களஞ்சியங்களையும், பண்டகசாலைகளையும் கட்டிக்கொண்டு, தனக்கு அநேகமானவைகள் இருக்கிறது என்றும், போதுமானதுக்கும் அதிகமாக இருக்கிறது, ஆதலால், தான் இளைப்பாறி இருக்கலாம் என்ற எண்ணத்தினால் தன்னை மகிழ்வித்துக்கொண்டிருந்தான்.

சீக்கிரத்தில் அம்மனுஷன் மரித்துப்போனதாக உவமை சுட்டிக்காட்டுகின்றது. இவ்வளவாய் அதிகம் ஆஸ்தியைப் பயன்படுத்தாமல், சேர்த்துக் குவித்துக் கொண்டதினால் உண்மையில் அம்மனுஷனுக்கு என்ன நன்மை கிடைத்தது? என்பது நமது கேள்வியாகும். மற்றவர்கள் போட்டிப் போட்டுக்கொள்ளத்தக்கதாக அம்மனுஷன் மற்றவர்களுக்குத்தான் தனது ஆஸ்திகளை விட்டுச் சென்றுள்ளான். அவன் மதிக்கெட்ட ஐசுவரியமான மனுஷனாக இருந்தான். இப்படியாக அம்மனுஷன் தன்னுடைய ஆஸ்திகளை விட்டுச்செல்வதற்குப் பதிலாக, (உயிரோடு இருக்கும்போது) அவன் மற்றவர்களுடைய நன்மைக்காவும், தேவனுடைய மகிமைக்காகவும் ஞானமாய்ச் செலவழித்து, சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். இப்படிச் செய்திருந்தானானால், அவன் தேவனிடத்தில் ஐசுவரியவானாய் இருந்திருப்பான். மாறாக இம்மனுஷன், தேவனிடத்தில் ஐசுவரியமற்றுக் காணப்படுபவர்களுக்கு உதாரணமாய்க் காணப்பட்டான். இவன் சுயத்திற்காகவே, தன்னுடைய பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருந்தான்.

அநேகர் இவ்வுமையில் குறிப்பிடப்படாத காரியங்களை, உட்புகுத்திக் கூறிவிடுகின்றனர். அந்த ஐசுவரியமான மனுஷன் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துப்போனதாக அனுமானித்துக் கூறுகின்றனர்; ஆனால் இப்படியாக எதையும், கர்த்தருடைய வார்த்தைகள் தெரிவிக்கவில்லை. "உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" எனும் வார்த்தைகளானது, "இந்த இரவில் நீ உன்னுடைய ஜீவனை இழக்கப் போகிறாய் . . . நீ தரித்திரனாய் மரிக்கப் போகின்றாய்; எதிர்க்காலத்தில் உன்னை ஐசுவரியவானாக இருக்கப்பண்ணுவதற்கு ஏதுவாக நீ உன்னுடைய இருதயத்தில், மனதில் மற்றும் நற்கிரியைகளில் ஆவிக்குரிய ஐசுவரியங்களைச் சேர்த்து வைக்கவில்லையெனில் பூமிக்குரிய ஐசுவரியங்கள் உனக்கு எதிர்க்காலத்தில் ஒன்றும் உதவாது" என்பதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அந்த ஐசுவரியவான் தனக்கு என்று குவித்துக்கொண்ட ஐசுவரியங்களினால் நன்மையடைவதற்குப் பதிலாக, எதிர்க்கால ஜீவியத்தில் அனுகூலமற்றவனாக இருப்பான். அவன் தன்னுடைய ஐசுவரியங்களைப் பலிச் செலுத்தயிருக்கலாம் அல்லது தன்னுடைய முழு ஜீவியத்தையும் கிறிஸ்து மூலம் தேவனுக்கு அர்ப்பணம் பண்ணி, பின்னர் நேரத்தையும், தாலந்தையும், வாய்ப்புகளையும், ஆஸ்தியையும் உண்மையாய் ஒப்புக்கொடுத்திருக்கலாம். இப்படியாக அவன் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்; இப்படியாக உயிர்த்தெழுதலில் அவன் உண்மையுள்ள பின்னடியாராக, அவருடைய இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கத்தினராக, அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கடையத்தக்கதாக கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பான். இந்த இராஜ்யத்தின் வகுப்பார், இயேசுவின் மரணமானது ஆதாமின் சந்ததி அனைத்திற்காகச் சுதந்தரித்துக்கொண்ட தெய்வீக ஆசீர்வாதங்களை, ஆயிரம் வருடங்கள் அருளுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தனக்கான வாய்ப்புகளை இழந்த அந்த ஐசுவரியவான் கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தில் வருவான், ஏனெனில் பிரேத குழிகளில் உள்ளவர்கள் எல்லாரும் அவருடைய சத்தம் கேட்டு வருவார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். அம்மனுஷன் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டவனாக வராமல், தேவனால் அங்கீகரிக்கப்படாதவனாகவே (பிரேத குழியிலிருந்து) வெளிவருவான், மற்றும் அவனுடைய உயிர்த்தெழுதலின் வாய்ப்புகளானது, யோவான் 5:29-ஆம் வசனத்தின்படியாக இருக்கும். அவன் நிந்தனைக்கும், இகழ்ச்சிக்கும் எழுந்திருப்பான்; மேலும் இந்த இகழ்ச்சியானது அவன் அந்த நியாயத்தீர்ப்பின் காலங்களுக்குக் கீழாக, தனக்கான பாடங்களைக் கற்றுக்கொண்டு நல்ல குணலட்சணத்தை வளர்த்துக்கொள்வது வரையிலும், அல்லது கற்கவும், குணலட்சணத்தை வளர்க்கவும் மறுத்து, இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவது வரையிலும் நீடித்திருக்கும்.

## "முதலாவதாக இராஜ்யத்தைத் தேடுங்கள்"

பூமியின் இராஜ்யங்களைப் பார்த்து, அதில் ஒன்றாக அவருடைய இராஜ்யம் இருக்குமென நாம் எதிர்ப்பார்க்கலாம் என்பதாக நல்ல போதகர் கூறினதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அவருடைய இராஜ்யம் எதிர்க்காலத்திற்கு உரியது என்று அவர் நமக்கு அறிவிக்கின்றார். "இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்" (யோவான் 18:36). அவருடைய இராஜ்யத்திற்காக, தேவனுடைய இராஜ்யத்திற்காக நாம், "உம்முடைய இராஜ்யம்

வருவதாக” என்று ஜெபம் பண்ணுகின்றோம். “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தை” அடையத்தக்கதாக நம்மை ஆகச்செய்வதற்கு ஏதுவானவைகளை நாம் செய்ய நாடுவதே, அவருடைய இராஜ்யத்தை நாம் நாடுவதாகும். நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்க்க வேண்டும். இரட்சகரின் இரண்டாம் வருகையின்போது, அவர் முதலாவதாகத் தம்முடைய ஊழியர்களை அழைத்து, கணக்கு விசாரிக்கும் போது, நாம் அவருடைய ஊழியர்கள் மத்தியில் காணப்படுவது மட்டுமல்லாமல், “நல்லது உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள், இராஜ்யத்தின் சந்தோஷத்திற்குள் பிரவேசி; இரண்டு பட்டணங்கள் அல்லது ஐந்து பட்டணங்கள் மீது அதிகாரம் பெற்றுக்கொள் என்று அவர் கூறுவதைக் கேட்கவுந்தக்கதாக, நமது தாலந்துகளையும், நமது ராத்தல்களையும் நாம் மிகவும் ஞானமாய்ப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இராஜ்யத்தின் சுதந்தரர்களாகுவதற்கு ஒரு வழிமுறை காணப்படுகின்றது. (1) இவர்கள் தங்களைப் பாவிகள் என்றும், தெய்வீகக் கவனம்/பார்வைப் பட தாங்கள் பாத்திரமற்றவர்கள் என்றும் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (2) இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி என்று இவர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (3) இறுதியில் உலகமானது சுத்திகரிக்கப்படுவதற்கும், விருப்பமுள்ளவர்களையும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களையும் தேவனுடன் ஒப்புரவாகுவதற்கும், அவருடைய பலிதான் அடிப்படையாக இருக்கின்றது என்றாலும், அந்த வேலை இன்னமும் ஆரம்பமாகவில்லை என்றும், அந்த வேலையானது அவருடைய இராஜ்யத்தின் ஆயிர வருட ஆளுகையின் போது அவரால் நிறைவேற்றப்படும் என்றும் இவர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (4) இப்பொழுது இராஜ்யத்தின் வகுப்பாருக்கான அங்கத்தினர்களைக் கர்த்தர் தேடிக்கொண்டிருக்கின்றார் என்பதும், அங்கத்துவமாவதற்கான வழி, இடுக்கமான வழி என்பதும், “ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்” (லூக்கா 9:23) என்பதுமான கர்த்தருடைய செய்தியை இவர்கள் கேட்க வேண்டும். இந்த வகுப்பாருக்கான பரீட்சைகள், மிகுந்த உபத்திரவத்தின் வழியாக இருக்கும் என்றும், தேவன் வெறுமனே பரிசுத்தவான்களை அழைக்காமல், மாறாக தேவன் மற்றும் சகோதரரிடத்தில் அன்பு தொடர்பான விஷயத்திலும், மரணம் வரையிலுமான நேர்மை/உண்மை தொடர்பான விஷயத்திலும் கடுமையான பரீட்சைகளையும், சோதனைகளையும் சகித்து நிற்கும் பரிசுத்தத்துவம் உடையவர்களாகிய பரிசுத்தவான்களை அழைக்கின்றார் என்றும் இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்களாக, நீதிக்கடுத்த ஊழியங்களில் மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாக இருப்பதாக முழுமையாய் அர்ப்பணித்தது முதல் இவர்கள், மதிப்புடைய எல்லாவற்றிற்கும் மேலாக, பரலோக இராஜ்யத்தை மாபெரும் பொக்கிஷமாக எண்ணுவார்கள். இவர்கள் இதனை தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும் தேடுவார்கள. பொக்கிஷம் இருக்கும் இடத்தில், இவர்களுடைய இருதயம் காணப்படும். இதுவே இவர்களுக்குப் பகலின் சிந்தனைக்கும் மற்றும் இரவின் தியானத்திற்குமான பொருளாக இருக்கும். இவர்களுடைய தேவைகள் மற்றும் நியாயமான அவசியங்கள் சந்திக்கப்படுவதற்கு, பூமிக்குரிய தொழில்கள் இவர்களுக்கு அவசியமாகவே காணப்படும்; எனினும் இவர்களுடைய கணிப்பில், பரலோக பரிசுக்கு ஒப்பாக எந்தப் பூமிக்குரிய பரிசும் காணப்படுவதில்லை. இப்படிப்பட்டவர்களே, தேவனைத் தங்களுடைய வீடுகள் (அ) நிலங்கள், பெற்றோர்கள் (அ) பிள்ளைகள் (அ) தங்களைக் காட்டிலும் அன்புகூருகிறவர்களுக்கென்று, தேவனால் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தின் சுதந்தரர்களாக, நிச்சயமாய் ஆகுவார்கள்.

**ஆமென்!**

---

R 5399

# உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர்

# THE FAITHFUL ARE WATCHFUL

**ஆதார வசனங்கள்** : லூக்கா 12:35 – 48.

**திறவுகோல் வசனம்** : "எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்" – லூக்கா 12:37

உண்மையுள்ள தம் ஊழியக்காரர்களுக்கு எஜமானின் புத்திமதிகளாக இந்தப் பாடம் இருக்கிறது. அப்புத்திமதிகளால் அவர்கள்; "நல்லது" என்ற அவரது வார்த்தைக்காக தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு, அவரோடுகூட அவரது இராஜ்யத்தில் பங்கு பெறுவார்கள். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்" என்று அவர் முன்பே கூறியிருந்தார்(12:32). அவரது இராஜ்யம் எந்தநேரத்தில் ஸ்தாபிக்கப்படும் என்பதைக் குறிதத தீர்மானமான தகவலை தம் பின்னடியார்களுக்கு கர்த்தர் தெரிவிக்காமல் விட்டுவிட்டதற்குக் காரணமிருந்தது. தாலந்துகள் குறித்த உவமையில், அவர் தூரதேசம் போவதற்கும், திரும்பிவருவதற்கும் இடைப்பட்ட நேரத்தைக் குறித்து விளக்கியிருக்கிறார். எஜமான் ஸ்தானத்திலிருந்து, தூர தேசமாகிய பரலோகத்துக்கு, இராஜ்யத்தின் அதிகாரம் பெறுவதற்கான முதலீட்டைக் கொடுக்க செல்வதற்கு முன்பாக, தம் உடைமைகளுக்கு பொறுப்பாளிகளாக தம் ஊழியக்காரர்களை நியமித்துச் சென்றார். ஏற்றநேரத்தில் அவர் திரும்பிவந்து, தம் ஊழியக்காரர்களிடம் அவர்களது உண்மைத்தன்மையின்படி, அவர்களை தம்மோடு தம் இராஜ்யத்தில் பங்குபெறச்செய்வார். அதன்பிறகு தமக்கு கீழ்ப்பட்ட மனுக்குலத்திடம் அவர்களது பாவம் மற்றும் மரண நிலைமைகளிலிருந்து விடுவித்து, உயர்த்தி, அவற்றின் ஆளுகையிலிருந்து அவர்களை மீட்டு ஆசீர்வதிப்பார்.

**கர்த்தரின் இரண்டாம் பிரசன்னம் தொடர்பாக**

இப்பாடம் உவமையோடு துவங்குகிறது. மாபெரும் வீட்டிற்கு நம் போதகர் தம் மணவாட்டியை திருமணம்செய்து, வீட்டிற்கு கூட்டிவரப்போகிறாரென்றால், அவரது ஊழியர்கள் அந்தகுறிப்பிட்ட இரவில் விசேஷமாக சுறுசுறுப்பாகவும், உறங்காமலும், கவனமாகவும் இருந்து, தங்கள் கர்த்தரை முறையான ஆயத்தத்தோடு வரவேற்பார்கள் அல்லவா! ஆனால் அவர்களது எஜமானனின் வருகையின் நேரத்தை துல்லியமாக அறிந்திராததால்,

அவர்கள் அவர் வந்திருந்து கதவைத் தட்டுவதைக் கேட்டவுடன் திறக்க அவர்கள் தொடர்ந்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமல்லவா! இதன் காரணமாகவே தம் பின்னடியார்கள் அனைவரும் தம் இரண்டாம் வருகையைக்குறித்து விழிப்பாய் இருக்கவேண்டுமென்று அறிவித்தார். அவர் தம்மோடுகூட தம் மணவாட்டியை அழைத்துவருவார் என்றல்ல, மாறாக அவர் தம் மணவாட்டியை சேர்த்துக்கொள்ள இங்கு வருகிறார் என்பதே உண்மை. மெய்யாகவே, உண்மையுள்ள ஊழியக்காரர்களையே அவர் தம் மணவாட்டியாக ஏற்படுத்துவார் என்பது மற்ற வேத வசனத்தின் காட்சியாக உள்ளது.

இயேசுவின் பின்னடியார்கள், பூமிக்குரிய ஊழியத்தில் அடையும் உச்சஅளவிலான அனுபவங்களிலிருந்து, விழித்திருத்தலைக் குறித்த உயர் சிந்தனைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே இதன் கருத்தாகும். வருவேன் என்று அறிவித்திருந்த காலத்துக்கு முன்பாகவே தம் பின்னடியார்கள் தம்மை நோக்கிப் பார்க்கவேண்டும் என்பதை இயேசு அறிவுறுத்தினார். தாம் 2ம் ஜாமத்திலோ அல்லது மூன்றாம் ஜாமத்திலோ அல்லது எவ்வேளையிலோ வந்திருக்கும்போது, எந்த ஊழியர்கள் விழிப்புடன், எச்சரிப்பாக, அவரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதை காண்கிறாரோ, அவர்கள் பாக்கியவான்கள். அப்படிப்பட்ட ஊழியக்காரர்களுக்கு ஒரு விசேஷ கனத்தை அருளிச்செய்வதாக அவர் கூறியிருக்கிறார். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களது ஊழியக்காரராக தம்மைத் தயார்ப்படுத்தி, அவர்களை விருந்துண்ண பந்தியமர்த்தி, அவர்களுக்கு முதல் தரமான விருந்தை அளிப்பார்.

இயேசுவின் இரண்டாம் பிரசன்னமாகிய பரோசியா காலத்தில், பொதுவான உலக ஜனம் அவர் வந்திருக்கிற உண்மையைப் பற்றிய அறிவின்மையில் இருக்கும்போது, தம் உண்மையுள்ள பின்னடியார்களுக்கு மட்டும் முதலாவதாக அறியப்பண்ணுவார் என்று அடையாளப்படுத்துவதை வேதமாணவர்கள் புரிந்திருக்கின்றனர். உலகத்திற்கான வெளிப்படுதல் பின்னர் வரும். "அவர் பற்றி எரிகின்ற அக்கினியாக தம்மை வெளிப்படுத்துவார்" – அதாவது நியாயத்தீர்ப்புக்களை நடப்பிப்பதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்; "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது(உலகிற்கு), நீங்களும்(சபை வகுப்பார்) அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள் – கொலோ3:4.

இப்பாடத்தில் நம் கர்த்தரது பிரசன்னமாகிய பரோசியா – அதாவது அவரது இரண்டாம் வருகையின் ஆரம்ப வெளிப்பாடுகள் விளக்கப்பட்டுள்ளது. உலகமோ அவரை அறியாது, அவரது பிரசன்னத்தை அறியாது, அதே சமயத்தில்அவரது சபைவகுப்பாரோ, இந்ததீர்க்கதரிசனம் நிறைவேறுதலைக் குறித்து வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் மூலம் அவர் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு அவரது பிரசன்னத்தை அறிந்துகொள்வார்கள். அதன்பிறகு, விழித்திருப்பவர்கள் இந்த தீர்க்கதரிசன

நிறைவேறுதலைப் புரிந்துகொண்டு, தங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் முறையாகத் திறந்து, குருவின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்வார்கள். அவரது இராஜ்யம் வெகு சமீபமாயிருக்கிறதையும், உண்மையுள்ளவர்களாகக் காணப்படுபவர்கள் அந்த இராஜ்யத்தில் அவரது மணவாட்டியின் அங்கங்களாக தங்களை நிரூபிக்கவேண்டும் என்பதே அவரது பிரசன்னம் சுட்டிக்காட்டுகிறது.

இப்படியாக அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவர் ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணுவார். அவர்களுக்கு புத்துணர்ச்சியூட்டவும், ஆறுதலளிக்கவும், தெய்வீக வார்த்தையிலிருந்து பழையதும் புதியதுமான காரியங்களை அவர் கொண்டுவருவார். அப்பொழுது வேதாகமம் அவர்களுக்கு ஒரு புதிய புத்தகமாக ஆகியிருக்கும். அவர்கள் தேவகிருபையின் ஐசுவரியங்களை விருந்தாக உண்பார்கள். இருளாகக் காணப்பட்டவைகள் இனி தெளிவாய்த் தெரியும். மறைவான இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். போதகர்தாமே அவர்களுக்கு வெளிப்படுத்துகிற ஊழியக்காரராயும், சுவையான பதார்த்தங்களடங்கிய சத்தியங்களைக் கொடுப்பவராகவும் இருப்பார். அப்படிப்பட்டநேரத்திலேயே நாம் வாழ்ந்துவருகிறோம் என்பதை அநேக வேதமாணவர்கள் நம்புகிறார்கள். ஒவ்வொரு உண்மையுள்ள, விழிப்புள்ள இயேசுவின் பின்னடியாருக்கும் கதவைத்தட்டும் சத்தமும், இந்த விருந்தில் பங்குபெறும் சிலாக்கியமும் அருளப்படும். தற்போது இதை அநேகர் பெற்று மகிழ்வதாக நமக்குத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் திருடன் எந்நேரத்தில் வருவான் என்று வீட்டு எஜமான் முன்னரே அறிந்திருப்பாரானால், அவர் விழித்திருப்பார், அவரது வீட்டைக் கொள்ளையாடவும், அதனால் துன்பப்படவும் விடமாட்டார். இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான் பூமியிலுள்ள தற்கால ஏற்பாடுகளுக்கு எஜமானாயிருக்கிறான் என்று நம் மாபெரும் போதகர் இங்கு நமக்கு அறிவுறுத்துகிறார். அவரது இரண்டாம் வருகையின்போது, இந்த பலமுள்ள மனுஷனை அல்லது தற்கால முறைமைக்கு அதிபதியாக இருப்பவனை கட்டிப் போட்டபிறகு, தற்கால அமைப்புக்களை கவிழ்த்து, அகற்றிப்போட்டு, அதற்குப் பதிலாக, நீண்டகாலமாக வாக்களிக்கப்பட்டுவந்த நீதியின் ஆளுகையை ஸ்தாபிப்பார். பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையிலிருந்து, நீதி மற்றும் ஜீவனுக்கான ஆளுகையாக அந்த மாறுதல் முழுமையானதாய் இருக்கும். இந்த சுவிசேஷயுக முடிவில் நடைபெறவிருப்பதாக வேதாகமத்திலெங்கும் குறிப்பிடப்பட்ட மகா உபத்திரவக் காலத்துக்கு இம்மாறுதல் வழிவகுக்கும்.

''யாதொரு ஜாதியாரும் தோன்றியதுமுதல், அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்'' – தானி 12:1; மாற்கு 13:8; மத் 24:21.

தமது இரண்டாம் வருகை திருடன் வருகிற விதமாய் இருக்கும் என்று இவ்விடத்திலும், மற்ற இடங்களிலும் இயேசு பேசியிருக்கிறார். பூமிக்கு உப்பாயிருக்கிற மணவாட்டி வகுப்பாரால் மட்டுமே அறியப்பட்டவராகவும், உலகத்தாரால் உணரப்படாதபடியும் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பிரசன்னமாவார். இந்த மணவாட்டி வகுப்பாரது பூமிக்குரிய சுபாவத்தை அகற்றி, பரலோகத்துக்குரிய சுபாவத்துக்கு மாற்றுவார் என்பதே கருத்தாக உள்ளது. இந்தக் கருத்தை, 40ம் வசனம் உறுதிப்படுத்துகிறது, மேலும் அவரது பிரசன்னத்துக்கு, கர்த்தருடைய உண்மையுள்ள பிள்ளைகள் அனைவரும் தயாராக இருந்து, எந்நேரத்திலும் தங்கள் கணக்கை ஒப்புவிப்பவர்களாயும், மறுரூபமடையும் அனுபவத்தை அடைவார்கள்.

### “அவர்களுடைய பங்கை அவர்களுக்கு கொடுப்பதற்கு”

இவ்வுவமை விழித்திருக்கும்படியாக விசேஷமாக அப்போஸ்தலர்களுக்கு மட்டுமா? அல்லது எல்லா ஜனங்களுக்குமா? என்று பரிசுத்த பேதுரு குழப்பத்துடன் வினவினார். ஆனால் கர்த்தரோ அவருக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை. பொருத்தமான நேரத்தில், கர்த்தர் தம் வீட்டிற்கு உக்கிராணக்காரனை நியமிப்பார் என்றும், ஏற்றவேளையில் அவர்களுக்கான ஆகாரத்தை அளிப்பார் என்றுமே பரிசுத்த பேதுருவுக்கு உறுதி அளித்தார். கர்த்தர் தம் குடும்பத்தோடு செயல்தொடர்பு கொள்ளும் வழக்கமான முறைமைக்கு மாறானதாக இது இருக்காது. ஒவ்வொருவருக்கும் அவரவரது ஆதாயத்துக்கென ஆவியின் அளவு கொடுக்கப்பட்டுள்ளது. தேவ காரியங்களின் அறிவுக்குள் வழிகாட்டுவதற்கென்றே பரிசுத்த ஆவியை பெறுபவர்களுக்கு அது கொடுக்கப்படுகிறது. இருந்தபோதிலும் பல்வேறு காலகட்டங்களில் விசேஷித்த துணைப்பொருட்களை உபயோகப்படுத்த கர்த்தர் பிரியமாயிருந்திருக்கிறார்.

உதாரணமாக, அப்போஸ்தலர்களிடையே தோற்றத்துக்கு ஒரு தலைவராக குறிப்பிட்ட காலத்துக்கு பரிசுத்த பேதுரு இருந்து, பெந்தெகொஸ்தே கதவைத் திறந்துவைத்தார். பின்பு, முதல் புறஜாதியானாக மனமாற்றமடைந்த கொர்னேலியுவுக்கு பிரசங்கித்து, புற ஜாதியாரின் கதவையும் திறந்தார். அதற்குப்பிறகு, பரிசுத்த பவுலை புறஜாதியாருக்கென தம்மால் நியமிக்கப்பட்டவராக விசேஷித்தவிதமாக தெரிந்தெடுக்கப்பட்டார். அதைக்குறித்து நாம் அப்போஸ்தலர் நடபடிகள் 9:15இல் வாசிக்கிறோம். ''அவன் புறஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக, நான் தெரிந்துகொண்ட

பாத்திரமாயிருக்கிறான்''. அதுபோலவே, இந்த சுவிசேஷ யுகத்தின்போது, ஏனோக்கு ஆபிரகாம், மோசே, தீர்க்கதரிசிகள் மற்றும் மற்றவர்களை கர்த்தர் தம்முடைய ஜனத்தின் கவனத்தை தம்முடைய வார்த்தையினிடத்திற்கு இழுப்பதற்காக, விசேஷமாக பயன்படுத்தியிருப்பதாக தோன்றுகிறது. விசேஷமாக உபயோகிக்கப்பட்டு, அவரது வசனத்தின் மூலம் அவரது ஜனங்களுக்கு எச்சரிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக தோற்றமளிக்கிறது. அப்போஸ்தலர்களது விஷயத்தில் முழு நிறைவான அல்லது விசேஷ தெய்வீகத் தூண்டுதல் அவர்களிடத்தில் இருந்தது. இது இந்த யுகத்தில் அவர்களுக்குப்பிறகு வேறு எவரிடத்திலும் இருந்ததில்லை.

கர்த்தர் தமது விசுவாச வீட்டாருக்கு ஏற்ற வேளையிலான ஆகாரத்தை பல்வேறு காலகட்டங்களில் கொடுப்பதற்கு விசேஷித்த ஊழியர்களை நியமித்திருந்தபோதிலும், அப்பணியில் பங்குபெறும் ஒவ்வொருவரும், இப்போதனை தேவனிடத்திலிருந்து வந்ததா என்று தீர்மானிப்பதும், பரீட்சிப்பதும், நிரூபிப்பதும் அவசியமாயிருந்தது. எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையால் எல்லாவற்றையும் அவன் சோதித்தறிய வேண்டும். தேவ மனுஷன் முற்றிலும் தேறினவனாகக் காணப்பட அது போதுமானது என்று அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். எந்த ஊழியக்காரனாவது உண்மையில்லாதவனாகக் காணப்பட்டால் புறந்தள்ளப்பட்டு, அவனது இடம் வேறொருவருக்கு கொடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த யுகத்தின் முடிவில், போதகர் வந்திருக்கும் வேளையில் உள்ள ஒரு ஊழியன் உண்மையுள்ளவனாகக் காணப்பட்டால், விசேஷித்த ஆசீர்வாதம் பெறுவான். அவன் கர்த்தருடைய குடும்பத்திலுள்ளோர்க்கு ஆவிக்குரிய உணவை ஏற்றவேளையிலான ஆகாரத்தைக் கொடுக்கும் பணியில் அமர்த்தப்படுவார். ஆனால் போதகருடைய பிரசன்னத்தைப் புரிந்துகொள்ளத் தவறி, உண்மையற்றவனாக தன்னை எண்பித்தானானால், விசுவாச வீட்டாரிடத்தில் இரக்கமற்ற ஆவியை வெளிப்படுத்துவானானால், தேவனுடைய குடும்பத்திலுள்ளோரது ஆவிக்குரிய தேவைகளைக் காட்டிலும் தன் சொந்த பூமிக்குரிய தேவைகளுக்காக ஊழியம் செய்வானானால், அந்நாளிலேயே அவன் புறம்பாக்கப்படுவான். தேவ குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு, பொதுவான உலக ஜனங்களோடு புறம்பான இருளுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவான். தன் கர்த்தருடைய காலங்களையும் வேளைகளையும் பற்றின அறிவை இழந்து, முற்றிலும் அறியாமைக்குள் செல்வான். ஒரு ஊழியக்காரன் தன் ஸ்தானத்தை இழப்பது என்பது, விசுவாச வீட்டாருக்கு பகிர்ந்தளிக்க, மற்றவரை அந்த இடத்துக்கு அங்கீகரிப்பது என்று அர்த்தமாகும்.

இந்த உவமையை அடிப்படையாகக்கொண்டு, தம் செயல்தொடர்பு பற்றின ஒரு பொதுவான கொள்கையை கர்த்தர் விவரித்தார். அதன்படி எந்த ஊழியனும் தன் போதகரின் சித்தத்தை அறிந்து, அதற்கிசைவாக செய்யாதவன், தான் அடைந்த அறிவு மற்றும் வாய்ப்புக்கேற்ப அதே அளவு அடிகளையும், தண்டனைகளையும், உபத்திரவங்களையும் பெற்றுக்கொள்வான். மற்றொரு–புறத்தில், எந்த ஊழியக்காரனும் அடிகளைப் பெறத் தகுதியான காரியங்களை செய்தபோதிலும், அறியாமையில் செய்திருப்பாரானால் அதற்கேற்ப சில அடிகளைப் பெற்றுக்கொள்வான். ஆகவே இங்கு கூறப்பட்டுள்ள பொதுவான கொள்கையை ஒரு வார்த்தையில் கூறுவோமானால், யாரிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவனிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்படும்.

**நமது பொன்னான வசனம்**

லூக்கா 12:37 ம் வசனம், இப்பாடத்திற்கு இருதயம் போல் காணப்படுகிறது. கர்த்தருடைய இரண்டாம் வருகையின் காலத்தில் வாழ்கின்ற அவருடைய ஊழியக்காரர்கள் அனைவரையும் இது தொடர்புபடுத்துகிறது. அவரது இரண்டாம் வருகையின் ஆரம்பக் கட்டங்களில் – அதாவது அவரது பரோசியா காலத்தின்போது உண்மையுள்ளோராய் விழித்திருந்து, வேத வசனங்களை ஆராய்ந்துபார்த்து, அதற்குக் கீழ்ப்படிவார்கள். கர்த்தர் நிமித்தமான எந்த நன்மையையும் செய்ய எச்சரிக்கையோடு இருந்து, தங்கள் சிறந்த ஆற்றலைக்கொண்டு, அவரது சித்தத்தைத் தேடி அதன்படி செய்வார்கள். இவர்கள் எந்த நேரத்தில் ஜீவிக்கிறார்கள் என்பது பற்றி, காலத்தைப் பற்றி குறிப்பிட்டளவு இவர்களுக்கு அறிவுறுத்தப்படும். அப்போஸ்தலர் சுட்டிக் காண்பித்துக் கூறுகிறார்;

''சகோதரரே அந்த நாள் திருடனைப் போல் உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள் அல்லவே''. ''நீங்களெல்லோரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்''. ''இரவில் திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்... சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள்(உலகம்) சொல்லும்போது... அவர்கள்(உலகம்) தப்பிப்போவதில்லை(அந்த நாளின் உபத்திரவங்களுக்கு)– 1தெச5:1–8. ஆகையால் இருளில் அல்ல, வெளிச்சத்தில் நடப்போமாக.

இயேசுவின் இரண்டாம் வருகையின் நேரத்தையும் அதன் தன்மையையும் பற்றின இரகசியத்தை உற்றுநோக்குவது, ஒரு பலமான பரீட்சையாக இருக்கும். கர்த்தருக்கென தன்னை அர்ப்பணித்தவர்களில், வியாபாரம், உல்லாசம் போன்ற இந்த ஜீவியத்தின் கவலைகளால்

உள்ளம் பாரமடைந்தவர்களுக்கு, தட்டப்படும் சத்தம் மெதுவாகவே கேட்கும். தட்டும் சத்தம் கேட்கப்படும்போது, செவிமடுப்பதில் அதிகம் மூழ்கிவிடுவர்.

ஆயினும் அந்நேரத்தில் எந்த ஊழியர்களை விழித்திருக்கிறவர்களாக கர்த்தர் காண்கிறாரோ, அவர்கள் மாபெரும் ஆசீரைப் பெறுவர். வானத்தில் தோன்றுவார் என்று இயேசுவை கவனித்துப் பார்ப்பதை இங்கு கூறவில்லை, ஏனெனில் அவர் தற்போது மனுக்குலத்துக்கு காணப்படாதவராக இருக்கிற ஒரு ஆவிக்குரிய ஜீவி. ஆகவே வேதாகம சாட்சியங்களை கவனித்துப் பார்த்தலையும், காலங்களின் போக்கை கவனித்தலையும், தங்கள் சொந்த இருதயங்களை கவனித்துப் பார்த்தலையும், தேவசபையின் நலன்களை கவனித்துப் பார்த்தலையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும், ஒவ்வொரு பாரத்தையும் தள்ளிவிட்டு, மகா பரிசுத்த விசுவாசத்தில் ஒருவரையொருவர் கட்டத் தேடுதலையே இங்குகூறுகிறது. கன்னிகைகள் என்று தங்களை உரிமை பாராட்டுகிற அனைவரும், தூய்மையுள்ளோராக, கர்த்தருடைய ஊழியர்கள் என்றும், அவரது சகோதரர் என்றும் உரிமை பாராட்டுகிற அனைவரும், தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதிகளையும் முதலாவது தேடி, அவரிடத்தில் சமாதானத்தைக் கண்டடையட்டும். இராஜ்யத்தின் செய்தியைப் பறைசாற்றுவதில், அவரால் பயன்படுத்தப்படும் வாய்ப்புக்களில் விழிப்பாயிருந்து, எச்சரிக்கையோடு காணப்படுவோமாக. மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ண உதவுவோராய் இருப்போமாக – வெளிப்படுத்தல் 21:9; 19:7.

---------------

R 5403

# நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல்

# ENDURING HARDNESS AS GOOD SOLDIERS

**"நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி" – 2தீமோத் 2:13.**

வேதாகமத்தில் அநேக எடுத்துக்காட்டுக்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்துமே மிகவும்ஆற்றல் வாய்ந்தவைகளாக உள்ளன. கிறிஸ்தவனை ஒரு போர்வீரனாக சித்தரித்தது, பெருமளவு அர்த்தமுடையது. பரலோகத்திலுள்ள தேவதூதர்களை போர்வீரர்களாக நாம் கற்பனை செய்யமுடியாது. அந்த பதம் அவர்களுக்கு பொருந்தாது, பரலோகத்திலும் எந்தப் போரும் நடைபெறுவதில்லை, ஆனால் இங்கு பூமியில் நடைபெற்று வருகிறது.

நம் ஆதிப்பெற்றோர் 6000 வருடங்களுக்கு முன்பாக கண்ணியில் அகப்பட்டு, முழு மனுக்குலமும் பாவத்திற்கு விற்கப்பட்டு, பாவம் மற்றும் சாத்தானுக்கு ஊழியக்காரராயினர். இந்த ஆதிக்கம் மேலோங்கி அதிகரித்தாலும், சாத்தானுக்கு எல்லோரும் மனப்பூர்வமாகப் பணிந்துவிடவில்லை. அவன் இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளாகவும் காண்பித்தபடியினால், இவ்வாறு மனுக்குலம் வஞ்சிக்கப்பட்டு, அவனது சித்தத்துக்கு சிறைப்பட்டு வழிநடத்தப்பட்டனர்.

தேவனுக்கு இசைவாக விரும்புவோர் அனைவரும், சாத்தானுக்கும் பாவத்துக்கும் இணக்கமாகாதிருப்பர். இவர்கள் சில சமயங்களில் இவைகளை எதிர்த்துநின்று, தேவசித்தத்தை செய்வதில் முயற்சிசெய்தனர். ஆயினும் இயேசு இப்பூமிக்கு வரும்வரைக்கும் பாவத்தை கவிழ்த்துப்போடுவதற்கான எந்த ஒழுங்கமைதலும் ஏற்படுத்தப்படவில்லை. சாத்தானை ஜெயிப்பதும், பாவத்தை ஜெயிப்பதும், எல்லாவற்றையும் தேவனுடைய ஏற்பாட்டுக்கு இணக்கமாகக் கொண்டுவருவதுமே கர்த்தருடைய ஊழியமாயிருந்தது. தேவனுடைய மாபெரும் பேரரசாகிய இப்பூமி, கலகக்கார நிலையை அடைந்தது, இந்நிலை கீழ்ப்படுத்தப்பட்டு, மறுசீரமைக்கப்பட்டு, ஜெயம் கொள்ளப்படவேண்டும். இயேசு தெய்வீக பலத்தினால் இப்பணியைச்செய்ய ஏற்றுக்கொண்டார்.

இதன் முதல்படியாக, முழு உலகின் பாவத்துக்கான ஈடுபலியின் தொகையாக, அவரது சொந்த ஜீவியம் கையளிக்கப்பட்டது. இவ்வாறு ஆதி மீறுதலுக்கான நன்மை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சாத்தானையும் பாவத்தையும் கவிழ்த்துப்போட்டு, இயேசு தம் வல்லமையை பிரயோகிக்கும் முன்பாக, பிதாவின் சித்தப்படி சபை வகுப்பாரைத் தெரிந்தெடுக்கத் துவங்க வேண்டியிருந்தது. இந்த வகுப்பார்க்கு – கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள், அவரது மணவாட்டி, இராஜ்யத்தில் அவரது தோழர்களும் சகோதரர்களும், மாபெரும் ராஜரீக பிரதான ஆசாரியராகிய அவரின் கீழுள்ள அவரது ராஜரீக ஆசாரியக்கூட்டம்... என பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தேவ செய்தியைக் கேட்ட எல்லாரிலும், அதற்கு பதில்வினையாற்றுகிற இருதயமுடையவர்கள், இங்கு நிலவுகின்ற தவறான நிலைமைகளைப் புரிந்துகொண்டு, பாவம் மற்றும் மரணத்துக்கு அடிமைகளாக விற்கப்பட்ட இந்த மனுக்குலத்தின்மீது பரிதாபம்கொண்ட இவர்களனைவரும், இந்த தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பின் அங்கங்களாக ஆகும் அழைப்பை பெற்றிருக்கின்றனர்.

### ஆரம்பத்தில் கூறப்பட்ட யுத்தத்தின் நிபந்தனைகள்

நல்ல போராட்டத்தைப் போராடுவது அவர்களுக்கு அவசியமானது என்ற துவக்கத்திலேயே அறிவுறுத்தப்பட்டது. சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் போரிட ராணுவத்தில் சேர்ந்துகொள்ளும்படி அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் அவர்கள் முழு நம்பிக்கை வைத்திருப்பார்களானால் இறுதியில் அவர்கள் வைத்த விசுவாசம் அதற்கான வெற்றியை அடையும் என்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். உலகத்துக்காக ஜீவிக்காமல், அதற்கு மாறாக, கர்த்தருடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு, பலியின் ஜீவியத்தை நடத்தும் நோக்கத்துக்காக அவரோடுகூட இணைந்து ஜீவித்து, அவர்களது தலையும், தமது ஜீவியத்தை ஒப்புக்கொடுத்து முதலாவதாக ஓடினவருமாகிய அவரைப்போலவே தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுத்து, துன்பப்படவேண்டும் என்றும் அவர்களிடத்தில் கூறப்பட்டது.

தேவன் அவர்களை அழைத்த அழைப்பின் இறுதி மேன்மையானது, அவரது மாபெரும் இராஜ்யத்தில் அவரது குமாரனோடு பங்குபெறுவதேயாகும். ஆட்டுக்குட்டியைப் பின்பற்றுபவர்களாக சிலுவைப் போர்வீரர்களானோர் அனைவரும் சுபாவ மாறுதலை அடைவதையே இது குறிப்பிடுகிறது. "மாம்சமும் இரத்தமும் தேவ ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளாது". இவர்கள் தற்காலத்து சிலாக்கியங்கள் மற்றும் உரிமைகளைப் பெற்றுக்கொண்டு, முன்செல்ல அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களுடைய வாழ்க்கையை உலகிற்கு சாட்சியமாக விளங்கும்படி, மனுக்குலத்தின் ஆதாயத்துக்கென, விசேஷமாக, தேவனுடைய மகிமைக்காகவும், குறுகலான பாதையில் தன்னைப்போலவே நடக்கவிரும்பும் மற்றவர்களை

அழைக்கவும், அவர்கள் அடையாளக்குறியாக விட்டுச்சென்றிருக்கிறார்கள்.

போராடும்படி அழைக்கப்பட்ட இவர்கள், பாவத்துக்கெதிராகவும் இருளின் அதிகாரத்துக்கு எதிராகவும் யுத்தம்பண்ண அழைக்கப்பட்டிருக்கின்றனர் (எபே6:11). அவர்கள் நீதிக்காகவும் சத்தியத்துக்காகவும் நன்மைக்காகவும் கர்த்தரிடத்தில் வாக்குறுதி கொடுத்திருக்கின்றனர். இவ்வாறு இவர்கள் நல்ல போராட்டத்தைப் போராடுகின்றனர். இந்த போர்வீரர்களது மிகப்பெரிய சிரமங்கள் தங்களுடனேயே இருக்கிறதை காண்கிறார்கள். இவர்கள் மனித குடும்பத்தின் அங்கங்களாயிருக்கிறபடியினால், மற்றவர்களைப்போல பாவம் மற்றும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்து, பாவத்தின் மனப்பான்மைகளைப் பெற்றிருக்கின்றனர். புதுசிருஷ்டிகளாக இருப்பதே கர்த்தருடனான அவர்களின் உறவாக இருக்கிறது.

**சுயம் நமது விசேஷித்த எதிரி**

ஒரு புதுசிருஷ்டி மாம்சத்தை அடக்கவும், அதற்கெதிராகப் போராடவும் கடமைப்பட்டிருக்கிறார். தன்னுடனான ஒவ்வொரு போராட்டங்களாக, மிகப்பெரிய யுத்தமாக இது இருக்கிறது. ஒவ்வொரு போர்வீரனும் மற்ற போர்வீரர்களுக்கு ஓரளவு உதவவும், முன்னுதாரணமாக இருக்கவும் முடியும். ஆனாலும் பிரதான போராட்டம் என்பது தன்னுடனேயே இருக்கிறது. ஒரு கைக்கு எதிராக மற்றொரு கை முரண்பாடு ஏற்படுத்துகின்ற போராட்டம் இது. உலகம் மற்றும் சாத்தானின் தந்திரங்களுக்கெதிராக எல்லா நேரங்களிலும் எச்சரிக்கையுடன் இருந்தபோதிலும், அவனது விசேஷித்த போராட்டம் தன் சொந்த மாம்ச எதிரிகளோடேயே இருக்கிறது. பரிசுத்த பவுல், தீயவனின் கொடிய அம்புகளை முறியடிக்க, விசுவாசம் என்னும் கேடகத்தை எடுத்துக்கொண்டதோடு, இரட்சிப்பின் தலைக்கவசத்தையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் பிடித்திருந்தார்.. இளைய போர்வீரனாக இருந்த தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் ஆலோசனை கொடுத்து, திடப்படுத்தினார். கர்த்தருடைய நிலைப்பாட்டுக்குள், அவரது சேனைக்குள் அவர் ஏற்கனவே வந்திருந்தார்.

**ஒரு நல்ல போர்வீரனின் இயல்புகள்**

நம்மில் யாராகிலும் நல்ல போர்வீரனாக அல்லது அதற்கு எதிராக ஒரு மோசமான போர்வீரனாகவோ, ஒரு தரித்திரனான போர்வீரனாகவோ இருக்கமுடியும் என பரிசுத்த பவுல் அறிவுறுத்துகிறார். தளபதியின் கட்டளைக்கு உடனடியாக கீழ்ப்படியாமல், அசட்டை செய்கிற சில வீரர்களை நம்மால் கற்பனை செய்யமுடியும். நல்ல போர்வீரன் என்பவர் (1). தன் இரட்சிப்பின் தளபதியோடு மிகவும் உணர்ச்சி ஒருமைப்பாடுடையவராக நடந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு புத்திக்கூர்மையுள்ள போர் வீரரானபடியால், தான் முறையாக சர்வாயுதவர்க்கத்தில் இருப்பதையும், முறையாக அதைத் தரித்திருப்பதையும் பார்த்து, அந்த சர்வாயுத வர்க்கங்களை நன்கு உபயோகிக்கவும் வேண்டும். அவர் நடக்கும்போது, மாபெரும் ராஜ்யம் மிகவும் சமீபித்திருப்பதால், ராஜாவின் முறையான பிரதிநிதியாயிருந்து, போர்வீரனுக்குரிய நடையுடைத்தோற்றம் உடையவராக அவர் தன்னைப் பார்த்துக்கொள்ளவேண்டும். (2). தன் கொடியைக் குறித்தும், கிறிஸ்துவின் நீதியின் ஆடையைக் குறித்தும் வெட்கப்படாமல் இருக்கவேண்டும். எப்புறமும் நீதியின் நிலைப்பாட்டை உயர்த்துபவனாக இருக்கவேண்டும். இப்போராட்டத்தில் அவர் தன்னை இணைத்துக் கொண்டிருப்பது, தான் மனிதசுபாவத்திற்கு மரித்திருப்பதைக் குறிக்கிறது என்று அவர் அறிந்திருக்கவேண்டும். சீருடை அணிந்திருந்து, வெளிப்படையாக மட்டும் உண்மையும் நேர்மையுமுள்ள நல்ல போர்வீனாக இருப்பது போதாது, அந்த நோக்கத்தின் முழு ஆவியைப் பெற்றிருக்கவேண்டும். அவருக்கு எப்படிப்பட்ட அனுபவங்கள் வந்தாலும் அவைகளை நன்றியோடு ஏற்றுக்கொள்பவராகவும், தன் தளபதிக்காகவும், அவர் நம்பிக்கை ஆணையிட்டுள்ள இராஜ்யத்தின் நலன்களுக்காகவும் சகிப்பதற்கென்று கிடைத்த இந்த சிலாக்கியத்தில் மகிழ்ச்சியடைவதே இதன் அர்த்தமாகும் என்பதை நாம் காண்கிறோம்.

நல்ல போர்வீரர்கள் அனைவரும் தீங்கனுபவிக்கவேண்டும் – அதாவது அசௌகரியமான, வேதனைமிகுந்த, கடினமான சூழ்நிலைகளை சகிக்கவேண்டும் என்பதே அப்போஸ்தலர் வலியுறுத்தும் கருத்து. பூமிக்குரிய போர்வீரர்கள் நீண்ட தூரம் தண்ணீரிலும், சேற்றிலும் மிதிபட்டு நடக்கவும், களைப்படையச்செய்யும் ராணுவ அணிவகுப்பினை செய்யவும் கடமைப்பட்டுள்ளனர். சிலவேளைகளில் அன்றாட உணவு கிடைக்காமற்போகலாம், சிலசமயங்களில் வெட்டாந்தரையில் உறங்க கட்டாயப்படுத்தப்படலாம், சிலநேரங்களில், பெரிய எதிர்ப்பை நேருக்கு நேர் சந்திக்கும் யுத்தங்களாக இருக்கலாம்.

ஆகவே கிறிஸ்தவ போர்வீரன், எப்படிப்பட்ட அனுபவங்கள் வந்தாலும், தன் தளபதியின் வழிகாட்டுதலின்கீழ், மனப்பூர்வமாக மாத்திரமல்ல, மகிழ்ச்சியுடனும் சகிக்கிறவனாக இருக்கவேண்டும். இந்த அனுபவங்கள் தனக்கு நித்திய கனமகிமையை உண்டாக்க வழிநடத்தும் என்று அறிந்து, கர்த்தருடைய இந்த ராணுவத்தில் நுழைய தான் அனுமதிக்கப்பட்டதற்காக சந்தோஷப்படவேண்டும். கிறிஸ்தவன் அடையும் இந்த பல்வேறு கடின அனுபவங்கள் அவனது நன்மைக்காக வடிவமைக்கப்பட்டவையாதலால், அவன் நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளவும், இராஜ்யத்தில் தன் மீட்பரோடு பங்குபெறவும் அனுகூலமடையச் செய்யும்.

———————————

R 5404

# தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை

# CARELESS LIVING A FORM OF PROFANITY

**"உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" – யாத் 20:7.**

கர்த்தர் உலகத்துடன் தொடர்புகொண்டிராததால் இந்தக் கட்டளை புறஜாதியாருக்கு கொடுக்கப்படவில்லை. இது நியாயப்பிரமாண உடன்படிக்கை மூலம் தேவனுடைய உறவுக்குள் வந்திருக்கிற யூத ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. யூதரில் அநேகர் பத்து கட்டளைகளை வெளிப்படையாக கடைப்பிடிப்பதற்கு மிகவும் கடினமாக முயற்சித்தார்கள் என்று நம்புவதற்கு ஒவ்வொரு காரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது ஜீவனும், கடைப்பிடிக்கத் தவறுவது மரணத்தையும் வருவிக்கும். அவர்களுடைய பெருமுயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து, அவர்கள் தொடர்ந்து மரித்துக் கொண்டிருக்கிறார்கள் – ரோமர் 7:10.

நம்முடைய ஆதாரவசனத்தின் இக் கட்டளையைக் கடைப்பிடிக்க அநேகர் பெருமுயற்சி செய்தபோதிலும், பரிசுத்த பவுல் இவர்களைப் பற்றி அறிவிக்கையில், தேவனுடைய நாமம் புறஜாதிகளின் மத்தியில் அவர்களால் தூஷிக்கப்பட்டது என்று கூறுகிறார்(ரோம2:24). அதிக அளவு தூஷிக்கப்பட்டது என்பது அப்போஸ்தலரின் கருத்து என்று நாம்கருதமுடியாது. தேவதூஷணம் யூதர்கள் மத்தியில் பயங்கரமான அச்சம் தருகிற காரியமாயிருந்தது. தன் சொந்த பிள்ளை தேவதூஷணம் செய்ததை கேள்விப்பட்ட பெற்றோர், அவன் அப்படி செய்ததற்காக அவனை கல்லாலெறிந்து கொல்லப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. யூதர்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த வாழ்க்கை முறை, உண்மையில் உலகத்திற்கு முன்பாக தேவனுடைய நாமத்தை தூஷிப்பதாக இருந்தது என்று அப்போஸ்தலர் அர்த்தப்படுத்துவதாக நாம் கருதுகிறோம். அவர்கள் அறிவிக்கப்பட்டபடி தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர். தெய்வீக அறிவுரை, தெய்வீகப் பாதுகாப்பு, தெய்வீக அங்கீகாரத்தின் கீழிருந்த நிலையில், அவர்கள் தேவனுக்கு அவமரியாதையான காரியங்களை செய்தனர். அவர்கள் அவருடைய நாமத்தை தூஷணம் செய்தனர்.

பத்துக் கட்டளைகள் சபைக்கு கொடுக்கப்படவில்லை என்றபோதிலும், அதன் ஒவ்வொரு சிறப்பம்சமும் ஒரு கட்டளையாயிருக்கிறது. நம்முடைய அர்ப்பணிப்பின் சிறப்பியல்பின் மூலம், நாம் அவருடைய வார்த்தையின் வெறும் எழுத்துக்களையும் தாண்டி, தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள நாடுவதற்கு கட்டப்பட்டிருக்கிறோம். இதனால் சபை நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இல்லை என்றபோதிலும், பத்துக்கட்டளைகளின் பொதுவான அறிவுரைக்குள்ளாக நாம் இருக்கிறோம். எனவே, "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி(நியாயப்பிரமாணத்தின் உண்மையான பொருள்) நிறைவேறுகிறது" – ரோமர் 8:4.

தேவனுடைய எந்த உண்மையான பிள்ளையும், அர்ப்பணிக்கப்பட்ட எந்த கிறிஸ்துவின் பின்னடியாரும், பிதாவின் நாமத்தை வீணிலே வழங்குவதற்கான விருப்பம் உடையவராக இருக்கக்கூடும் என்று எண்ணிவிடக்கூடாது. இதனால் இந்த கட்டளையின் வெளிப்படையான அர்த்தம் நமக்குப் பொருந்தாது. தேவனுடைய பிள்ளைகளானதிலிருந்து அவருடைய ஆவியை பெற்றதிலிருந்து, தேவனுடைய நாமத்தை இழிவுபடுத்த விரும்புவது நமக்கு தூரமான, விலக்கப்பட்ட காரியமாக இருக்கும். ஆனால் புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமத்தை யூதர்கள் கவனக்குறைவான ஜீவியத்தினால் இழிவுபடுத்தியதைப்போல, கிறிஸ்தவர்களும் தங்கள் கவனக்குறைவான ஜீவியத்தால் அவருடைய நாமத்தை இழிவுபடுத்தும் மாபெரும் அபாயம் இருக்கிறது. வேதத்தில் இது ஆபத்தானதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நம் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் வந்திருக்கும்போது வாழ்கின்ற இருக்கிற சிலரைப்பற்றி பேசுகையில், "கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா ?என்பார்கள். அதற்கு, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை" என்று அவர் சொல்லுவார். அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள்(மத் 7:21–23). அவர்கள் ஆட்டுமந்தையின் கதவு வழியாக வராதவர்களும், ஒருபோதும் கர்த்தரால் தம்முடைய ஆடுகளக அங்கீகரிக்கப்படாதவர்களுமாய் இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் மத்தியிலும் மனிதர்களை நேசிக்கும் பண்புடையவர்களும், சீர்திருத்த வேலைகளை செய்கிறவர்களும் இருப்பார்கள்.

ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மூலமாக, அவரே ஆளுகை செய்கிற ஆயிரவருடங்களே, தேவன் உண்மையான சீர்திருத்த வேலையை தொடங்கிவைக்கும் காலமாயிருக்கும். தற்போது கர்த்தர் அவருடைய வாக்குத்தத்தங்கள் மூலமாக அவருடைய ஜனங்களின்

இருதயங்களில் கிரியைசெய்து, இந்த வாக்குத்தத்தங்களினால் உந்தப்பட்டு, அதைப் பயிற்சிசெய்துகொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை தேடிக்கொண்டிருக்கிறார். இவ்வாறு தேவன் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் அவரோடு உடன் சுதந்திரர்களாக இருக்க ஒரு சிறு மந்தையை விசேஷித்த ஜனங்களை தேடிக்கொண்டிருக்கிறார்.

**நாம் அவருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்போமாக**

இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, தேவனுடைய எல்லா ஜனங்களும் அவருடைய ஜனங்களாக, அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்று அறிவிக்கும்போது ... அதாவது, இயேசுவின் பின்னடியார்களாக இருக்கிறோம் என்றும், தங்களை கிறிஸ்தவர்கள் என்றும் அழைத்துக் கொள்ளும்போது, அவர்கள் கர்த்தருடைய நாமத்தை வீணாக எடுக்காதபடி மிக அதிகமாக தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிற அநேகர், எல்லா இடத்திலும் கிறிஸ்தவர்களின் நாமத்தை எடுக்காமல் இருந்தால் மிகவும் நலமாக இருக்கும். யார் உண்மையில் அவருடைய சீஷராக ஆகியிருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் நாமத்தை முறையாக எடுத்துக்கொள்ள இயலும். தன் சிலுவையை எடுத்து அவரை பின்பற்றுகிற ஒரே நிபந்தனையின் கீழ், எவரும் அவரது சீஷராகி, தன்னுடைய ஜீவியத்தையும், சித்தத்தையும் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இந்தக் கட்டளை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், இதன் ஆவி எப்படி நமக்குப் பொருந்துகிறது என்பதை நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். நாம் கிறிஸ்துவின் நாமத்தை நம்முடைய நாமமாக எடுத்துள்ளோம். நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிறதாக வெளிப்படையாக கூறுகிறோம். இதனால் தலையின் பரிசுத்த நாமம் அவருடைய சரீரத்தின் எல்லா அங்கங்களையும் சார்ந்ததாயுள்ளது. மணவாளனின் மதிப்பிற்குரிய நாமம், அவருக்கு மனைவியாகும்படி நியமிக்கப்பட்டவர்களை சார்ந்ததாயிருக்கிறது. நமக்கு நாமே எப்பேர்ப்பட்ட எச்சரிப்புணர்வை கொடுக்கவேண்டியுள்ளது! ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நாமத்தை நாம் வீணிலே வழங்கியிருக்கவில்லை என்று நாம் காண்பது எத்தனை பொருத்தமாயிருக்கும். இந்த உலகத்தில் அவருடைய பிரதிநிதிகளாக, தூதுவர்களாக இருக்கிற நம்முடைய ஸ்தானத்தின் பெருமதிப்பு, மேன்மை, பொறுப்பு ஆகியவற்றை நாம் மதித்துப் போற்றவேண்டும். எனவே நாம் விழிப்புடன் நடந்து, அந்த பரிசுத்தமான நாமத்துக்கு அவமதிப்பை கொண்டுவராதபடி உள்ளார்வமிக்க கவனம் எடுப்போமாக. மாறாக, நம்முடைய ஒவ்வொரு சிந்தையிலும் வார்த்தையிலும் செயலிலும் அந்த நாமத்தை நாம் கனப்படுத்துவோம்.

“நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்”. “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே” – 2பேதுரு3:11 ; 1பேதுரு1:15,16.

---

R 5405

# "ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள்"

## லூக்கா 13:10-17

"மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது." - மாற்கு 2:27

ஓய்வுநாள் பற்றின பெரும் குழப்பம், கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்தக் குழப்பத்திற்கு அருமையான ஒரு காரணம் என்னவெனில், வெகு சிலரே நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவன் பண்ணின ஒழுங்கிலிருந்து, இயேசுவின் பின்னடியார்களுக்கெனத் தேவனால் பண்ணப்பட்ட ஒழுங்கானது முற்றிலும் வேறுபட்டது என்று உணர்ந்திருப்பதேயாகும். (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட அனைத்தும் நிழல்களாகவும், கிறஸ்தவர்களுக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன; ஆனால் நிழலை நிஜமாக எடுத்துக்கொள்வது என்பது, நம்முடைய மனங்களைக் குழப்புகின்றதாகவும், நிஜத்தின் அழகையும், ஆற்றலையும் இழந்துவிடுவதாகவும் இருக்கும்.

யூதர்களுக்கான நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு வரையிலும் ஓய்வுநாள் என்ற ஒன்று இருக்கவில்லை; ஓய்வு என்னும் வார்த்தையானது இளைப்பாறுதல் எனும் பொருளை மாத்திரம் கொடுக்கின்றதாய் இருந்தது; மேலும் தேவன் மகா ஏழாம் நாளில் அல்லது சிருஷ்டிப்பின் வாரத்தினுடைய ஏழாம் நாளில் ஓய்ந்து இருந்தார் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கும், தேவனுடைய நண்பனாய் இருந்த ஆபிரகாமும் மற்றும் கர்த்தருக்குப் பிரியமாய் இருந்த அநேகரும் பாவநிவாரண நாளையும், அதன் பலிகளையோ அல்லது இஸ்ரயேலுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையோடு தொடர்புடைய எந்த ஒரு காரியத்தையோ அறிந்திராதது போலவே, ஓய்வுநாளைப் பற்றியும் ஒன்றும் அறிந்திருக்கவில்லை.

இஸ்ரயேலர்கள் மோசேயின் கீழ், பணிவிடைக்காரர் வீட்டாராக இருந்தார்களென, அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கின்றார்; மேலும் சபை கிறிஸ்துவின் கீழ், புத்திரர் வீட்டாராக இருக்கின்றனர் என்றும் விவரிக்கின்றார் (எபிரெயர் 3:1-6). பணிவிடைக்காரர் வீட்டாரைத் தேவன் கையாளும் முறை என்பது, அவர் புத்திரர் வீட்டாரைக் கையாளும் முறையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். ஏன், எதற்கு என்ற விவரங்கள்/விளக்கங்கள் இல்லாமல் பணிவிடைக்காரர்களுக்குக் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் தேவன் நம்மைப் புத்திரர்கள் போல் கையாளுகின்றார் என்று அப்போஸ்தலர் விவரிக்கின்றார்.

பரம பிதாவானவர் தம்முடைய ஆவியையுடைய புத்திரராகிய உண்மை கிறிஸ்தவன் கட்டாயத்தினால் அல்லாமல், மாறாக பிதாவின் சித்தத்தைச் செய்வதிலுள்ள மகிழ்ச்சியினால், சுயத்தைப் பலிச் செலுத்திக் கீழ்ப்படிவதின் மூலம், தம்முடைய திட்டங்களுக்குள் அவன் ஈடுபடத்தக்கதாக, அவனுக்கு தம்முடைய திட்டத்தையும், தம்முடைய நோக்கத்தையும், தம்முடைய ஏற்பாடுகளையும் தெரியப்படுத்துகின்றார்.

இயேசுவும், அப்போஸ்தலர்களும் யூதர்களாய் இருந்தார்கள், மேலும் (இயேசு) தம்முடைய மரணத்தின் மூலமாய், "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாப்பிரமாணத்தின் முடிவாகுவது" வரையிலும் இயேசுவும், அப்போஸ்தலர்களும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய கடமைகளுக்குக் கீழாகவே காணப்பட்டனர். இயேசுவினுடைய மரணத்திற்குப் பிற்பாடு, இயேசுவின் பின்னடியார்கள், எந்த விதத்திலும் யூதர்களுடைய பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கவில்லை. இவர்கள் பத்துக்கட்டளைகளின் மீது விருப்பம் கொண்டிருந்தனர், காரணம் இந்தக் கட்டளைகள், மேலோட்டமாக தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றதாக இருக்கின்றது; தேவனுடைய புத்திரர்கள் அனைவரும் தாங்கள் விரும்பி வந்து செய்யத்தக்கதாக, பிதாவின் சித்தத்தை அறிய ஆவலாய் இருந்தனர். ஆனால் தேவன் புத்திரர் வீட்டாரிடம், "நீ கொலை செய்யாதிருப்பாயாக," "நீ களவு செய்யாதிருப்பாயாக" என்று கூறுவதில்லை; ஏனெனில் இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபடியால், இவர்கள் கொலை செய்வதற்கும், களவு செய்வதற்கும் நிச்சயமாய் விரும்புவதில்லை.

புத்திரர்கள் வீட்டாரைக் கையாளும் விஷயத்தில், தேவன் வீட்டாரின் தலை மூலமாக ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தியுள்ளார்; இந்தப் புதிய பிரமாணமானது, முன்பு கொடுக்கப்பட்ட மோசேயினுடைய பிரமாணங்கள் தெரிவிக்கும் காரியங்களைக் காட்டிலும் அதிகமானதும், விரிவானதுமான அர்த்தங்களைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது அன்பின் பிரமணாமாகும். அப்போஸ்தலர் கூறினது போன்று, "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது;" நியாயப்பிரமாணமானது, அன்பு எனும் ஒரு வார்த்தைக்குள் அடங்குகின்றது, அதாவது தேவனுக்காக மேன்மையான அன்பு, மற்றும் நம்முடைய சக மனுஷருக்கான அன்பு. இறுதியில் இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34) என்று கூறினார். இதை அவர் ஒருவருக்கொருவர் ஜீவனை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கும் நமக்காகக் கூறினார்.

## "ஏழாம் நாள்-முதலாம் நாள்"

சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்ப காலத்தில், இயேசுவினுடைய பின்னடியார்கள், வாரத்தின் முதலாம் நாளில், கூடுகைக் கூடிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இந்த ஒரு வழக்கமானது, இயேசு வாரத்தின் முதலாம் நாளில் உயிர்த்தெழுந்ததும் மற்றும் அதே நாளில் அநேகம் தரம் தம்முடைய பின்னடியார்களுக்கு அவர் தோன்றிக் காட்சியளித்ததும் மற்றும் பின்வந்த மறுவாரத்திலும் அவர் வாரத்தினுடைய முதலாம் நாளில் தோன்றி, காட்சியளித்ததுமான உண்மையின் அடிப்படையில்தான் ஆரம்பமானது. ஆகவே, இந்த வாரத்தின் முதலாம் நாளில் சீஷர்கள் தங்களுடைய ஐக்கியங்களைக் கொண்டிருந்தது, சீஷர்கள் மத்தியில் வழக்கமாயிற்று; இந்த வழக்கம் கர்த்தரினால் கட்டளையிடப்பட்டதினால் வராமல், மாறாக ஆண்டவரை நினைவுகூர்ந்து, ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ள வேண்டும் என்ற அவர்களுடைய ஆசையினாலேயே இப்படிச் செய்தார்கள். இப்படியாகவே இவர்கள் கொஞ்சக்காலம் ஓய்வு நாளையும், முதலாம் நாளையும் அநுசரித்து வந்தார்கள். மோசே மற்றும் அவருடைய நியாயப்பிரமாணத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழிலிருந்து, தாங்கள் எவ்வாறு முழுமையாக, இயேசுவினுடைய தலைமை மற்றும் அவருடைய வழிநடத்துதலின் கீழ் அதாவது, "கிறிஸ்துவினால் உண்டாக்கப்பட்ட சுயாதீன நிலைமைக்கு" வந்தார்கள் என்பதை உணர்ந்துக்கொள்வதில் இவர்களுக்குச் சிரமம் இருந்தது.

கிறிஸ்தவர்கள் இன்று வாரத்தினுடைய முதலாம் நாளிலுள்ள அனுகூலத்தின் நிமித்தமாக, ஏழாம் நாள் கைக்கொள்வதை விட்டுவிட்டாலும், இந்த மாற்றம் தேவனுடைய அங்கீகரிப்பில் உண்டானது என்று அநேகர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்படியாக இல்லை; கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றான். தேவனுடைய அறிவுரையின்படி இல்லாமல் மாறாக, சிலாக்கியத்தின் அடிப்படையிலேயே, ஆதி கால சீஷர்கள், முதலாம் நாளில் ஒன்று கூடினார்கள். இப்படியாகவே இன்னமும் சிலருடைய விஷயத்தில் காணப்படுகின்றது. பரம பிதாவினுடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதற்கும், தங்களுடைய இருதயங்களின் ஆராதனைகளையும், வணக்கங்களையும் அவருக்குச் செலுத்துவதற்கும் என்று ஐக்கியங்கொள்வதற்கான அதிகமான வாய்ப்புகள் உண்மை கிறிஸ்தவர்களுக்கு இருப்பதில்லை.

உண்மை கிறிஸ்தவர்கள் தங்களை முழுமையாய், ஜெபத்திலும், ஆராதனையிலும், துதிச் செலுத்துதலிலும், வேதாகம ஆராய்ச்சியிலும், நற்கிரியைகளைச் செய்வதிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு என்று வாரத்தில் ஒருநாள் விசேஷமாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால், சந்தோஷம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை; இப்படியாக ஒரு ஞாயிற்றுக்கிழமை மனித சட்டத்தினாலோ அல்லது தவாறன கருத்து நிலவும் காரணத்தினாலோ ஒதுக்கிக் கொடுக்கப்பட்டலோ, உண்மைக் கிறிஸ்தவர்கள் சந்தோஷமாய்த்தான் காணப்படுவார்கள். ஒரு வாரத்தில் இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட ஞாயிற்றுக்கிழமைகள் கிடைக்கத்தக்கதாக, கர்த்தருடைய ஜனங்களின் பூமிக்குரிய வேலை காரியங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தாலுங்கூட, கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் ஞாயிற்றுக்கிழமையைச் சரியாக அனுபவிக்க வேண்டுமெனில், பொதுவாய் நிலவும் தவறான கருத்துக்களிலிருந்து, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் விடுவிக்கப்பட்டாக வேண்டும்.

## "இளைப்பாறுதலுக்கான ஓய்வு"

இஸ்ரயேலர்களுடைய பிரமாணத்தின்படி இரண்டு ஓய்வுகள் காணப்பட்டது. ஒவ்வொரு ஏழாவது வருடமும் ஏழு தடவை பெருக்கப்பட்டு, பின்வரும் ஐம்பதாம் வருடமாகிய யூபிலியின் வருடம்

ஓர் ஓய்வாக இருந்தது; ஒவ்வொரு ஏழாம் நாளும், ஏழு தடவை பெருக்கப்பட்டு, பின்வரும் ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாள் மற்றொரு ஓய்வாகும்; இந்தப் பெந்தெகொஸ்தே நாள் என்பது, தேவனுடைய ஜனங்கள் இன்றும் பிரவேசிக்கும் இளைப்பாறுதலுக்கு நிழலாய் இருக்கின்றது.

இந்த இரண்டு ஓய்வுகளையும் எபிரெயர் 4:1-11 வரையிலான வசனங்களில் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். ஓய்வுநாளானது, நிஜமான இஸ்ரயேலர்களால் அனுபவிக்கப்பட்ட இருதயத்தின் சமாதானத்திலும், இளைப்பாறுதலிலும் அதன் நிறைவேறுதலை அடைந்தது. அது இவர்களுக்கு நிரந்தரமான ஓய்வாக இருந்தது. இவர்கள் இளைப்பாறுதலில் பிரவேசித்துள்ளனர். இவர்கள் தங்களுடைய இருதயங்களில் தேவ சமாதானம் ஆளும் கட்டத்தை அடைந்துள்ளனர். இவர்கள் தங்களுடைய சொந்த கிரியைகளிலிருந்தும், அதாவது ஓய்வுநாளையோ (அ) வேறு எதையாகிலும் கைக்கொள்வதாகிய கிரியைகள் மூலமாய் தாங்கள், தங்களுக்காக தேவனிடத்தில் பரிந்துப்பேசலாம் என்பதான அனைத்து நம்பிக்கைகளிலிருந்தும் ஓய்வு அடைந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான அனைத்தையும் இயேசுவுக்குள் தேவன் கொடுத்துள்ளார் என்பதையும் இவர்கள், "அவருக்குள் பூரணமுள்ளவர்களாக" இருக்கின்றார்கள் என்பதையும் இவர்கள் காண்பதினால், இவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தவர்களாய் இருக்கின்றார்கள். இந்தச் சமாதானத்தை (அ) இளைப்பாறுதலை எந்த மனுஷனும் இவர்களிடத்திலிருந்து எடுத்துப்போடுகிறதில்லை. இவர்கள் தேவனிலும், கிறிஸ்துவிலுமுள்ள விசுவாசத்தில் நிலைத்திருப்பது வரையிலும் இந்த இளைப்பாறுதல்/சமாதானம் இவர்களுடையதே.

ஆனால் அப்போஸ்தலர், "தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது" (எபிரெயர் 4:9) என்று சுட்டிக் காண்பிப்பது போன்று எதிர்க்காலத்தில் ஓர் இளைப்பாறுதல் இருக்கின்றது. சபையானது தங்களுடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடையும்போது, தங்களுடைய இரட்சகர் போல் ஆக்கப்பட்டு, தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷங்களுக்குள் பிரவேசிக்கும்போது, அந்த இளைப்பாறுதலுக்குள்ளாகப் பிரவேசிப்பார்கள். அது முழுமையான இளைப்பாறுதலாக இருக்கும். உலகத்தைப் பொறுத்தமட்டில், மாபெரும் மேசியாவின் ஆயிரவருட ஆளுகையானது, உலகத்திற்கான ஓய்வாக இருக்கும்; அக்காலத்தில் எல்லா விதத்திலும் பூரணமடைவதற்குரிய சிலாக்கியத்தை உலகமானது அடைந்து, இப்படியாக தேவனோடு இசைவுக்குள் வருகையில் இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள்.

இயேசு ஓய்வுநாட்களிலேயே தம்முடைய அநேகமான அற்புதங்களைச் செய்தார்; இதற்கான காரணம் மாபெரும் ஓய்வாகிய, ஆயிர வருடமாகிய, பூமியின் சரித்திரத்தினுடைய ஏழாம் நாளானது, அவருடைய இராஜ்யத்திற்கான வேளை என்றும், அக்காலத்தில் பாவம், வியாதி, துக்கம் மற்றும் வலியிலிருந்து ஒட்டுமொத்த மனுக்குலமும் சொஸ்தமாக்கப்பட்டு, ஆதாமினால் இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் மீட்கப்பட்டதுமான அனைத்தையும் அடைவதற்கும், மற்றும் மனுஷீக சுபாவத்தில் முழுமையான பூரணம் அடைவதற்கான சிலாக்கியம் மனுக்குலத்திற்குக் கிடைக்கும் என்றுமுள்ள உண்மையை வலியுறுத்துவதற்கேயாகும்.

## "ஓய்வுநாட்களில் நன்மை செய்வது"

இயேசு மாம்சத்தின்படி யூதனாக இருந்தபடியால், யூதப் பிரமாணத்தினுடைய கட்டளைகள் அனைத்திற்கும் உட்பட்டவரானபடியால், அவரால் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியாது. அவரால் அதைத் தள்ளியும் வைக்கமுடியாது. அதேசமயம் ஓய்வின் உண்மையான அர்த்தத்தை, அவர் யூதர்களுக்கு விளக்குவதும் சரியாக இருக்காது. இந்த உண்மையான அர்த்தங்கள் அனைத்தும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலின் கீழ் வெளிவரும், ஏனெனில் "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). ஆனாலும் இயேசுவினால், இஸ்ரயேலின் ரபிகளினாலும், நியாய சாஸ்திரிகளினாலும், பரிசேயர்களினாலும் போதிக்கப்பட்ட போதனைகள் மூலம் உள்வந்த நியாயப்பிரமாணம் தொடர்பான சில தவறான புரிந்துக்கொள்ளுதல்களைச் சரிச் செய்யவும் முடியும் மற்றும் அப்படியாகவும் செய்தார்.

இவர்கள் நியாயப்பிரமாணத்தினுடைய ஆவியைப் புறக்கணித்தவர்களாக, நியாயப்பிரமாணத்தின் சில விஷயங்களைப் பகட்டிற்காக மிகைப்படுத்தினார்கள். ஆகவேதான் இயேசுவின் சீஷர்கள், வயல் வழியாகப் போய்க்கொண்டிருந்து, சாப்பிடுவதற்கெனக் கதிர்களில்

சிலவற்றைக் கொய்து, உமி நீக்க உள்ளங்கைகளுக்கு இடையே தேய்த்த போது, இவர்கள் ஓய்வுநாளை மீறினார்கள் என்றும், அதாவது கதிரடித்து, புடைத்துவிட்டார்கள் என்றும் பரிசேயர்கள் குற்றம்சாட்டினார்கள். இது நியாயப்பிரமாணத்தினுடைய நோக்கமல்ல என்று இயேசு காண்பித்துக்கொடுத்தார். அவசியமான (அ) நல்ல கிரியைகளைத் தடைப்பண்ணுவதற்காக இல்லாமல், மாறாக ஜனங்களுடைய நன்மைக்காகவே ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டது. நியாயசாஸ்திரிகளைப் பொறுத்தமட்டில் ஓய்வுநாளில், கடிக்கும் கொசுவை விரட்டுவது கூடப் பாவமாக இருந்தது, ஏனெனில் அப்படிச்செய்வது அவர்களைப் பொறுத்தமட்டில் "வேட்டையாடுவதற்கு" சமமாய் இருந்தது. இப்படியாக பல்வேறு விதங்களில், இவர்கள் தேவனுடைய நியாயமான பிரமாணத்தை ஜனங்களுக்கு நியாயமற்றதாக ஆக்கினார்கள்; மேலும் அற்ப விஷயங்களில் கவனமாய் இருந்த இவர்கள், நீதி, அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய நியாயப்பிரமாணத்தினுடைய முக்கியமான காரியங்களைப் புறக்கணித்தார்கள்.

ஓய்வுநாளின்போது, அவர் சொஸ்தப்படுத்தின இரண்டு சம்பவங்களை இப்பாடத்தில் நமக்கு முன்பாகப் பெற்றிருக்கின்றோம். பதினெட்டு வருஷமாய் நிமிரக்கூடாத கூனியாக ஒரு ஸ்திரீ காணப்பட்டார். இயேசு அவளை ஓய்வுநாளன்று விடுவித்தார். அவள்மேல் அவர் கைவைத்து, "உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்" என்றார்; அவள் நிமிர்ந்து நின்று, தேவனை மகிமைப்படுத்தினாள். ஜெப ஆலயத்தலைவனோ, கோபமடைந்து, ஜனங்களை நோக்கி, "வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக்கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்" (லூக்கா 13:14).

இயேசு ஓய்வுநாளின் விஷயத்தில் இருக்க வேண்டிய அளவுக்குப் பரிசுத்தமாயும், கவனமாயும் இருக்கவில்லை, மாறாக அவர் நியாயப்பிரமாணத்தை மீறுகின்றவராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கும் வண்ணமாக அவரை விசேஷமாய்க் கடிந்துக்கொள்ளும் விதத்தில் லூக்கா 13:14-ஆம் வசனத்தின் வார்த்தைகள் பேசப்பட்டது; "கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார். அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக்குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்" (லூக்கா 13:15, 16, 17).

இன்னொரு தருணத்தில், ஒரு மனுஷன் நீர்க்கோவை வியாதியுடையவனாக இருந்தான். இந்தச் சம்பவத்தில், இயேசு பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளின் மனப்பான்மையை அறிந்தவராக, சொஸ்தப்படுத்துவதற்கு முன்பாக, இக்காரியத்தைக்குறித்து விவாதிக்கும் வண்ணமாக, லூக்கா 14:3-6 வரையிலான வசனங்களின் காரியங்கள் நடைபெற்றது; "இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு, அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார். அதற்கு உத்தரவுசொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று."

ஓய்வு, அதாவது தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஏற்படுத்தியுள்ள இளைப்பாறுதலைப் பற்றிச் சரியாய்ப் புரிந்துக்கொள்வது என்பது மாபெரும் ஆசீர்வாதமாகும். விசுவாசிக்கிற நாம் இளைப்பாறுதலுக்குள், நிலையான நிரந்தரமான ஓய்வுக்குள் பிரவேசிப்போம். இப்படிப்பட்டவர்கள் அனைவரும், ஆராதிப்பதற்கும், துதிப்பதற்கும் படிப்பதற்கும், ஐக்கியம் கொள்வதற்குமெனக் கர்த்தருடைய நாமத்தில் ஒன்றுகூடுவதற்கான விசேஷித்த வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபிரெயர் 10:25) என்ற வார்த்தைகள் மூலம் அப்போஸ்தலர் நமக்குக் கூறுவதைச் செய்வோமாக.

**ஆமென்!**

R 5408

# சுவாரஸ்யமான கேள்விகள்
# INTERESTING QUESTIONS

**1. இயேசுவை, தர்சூசைச் சேர்ந்த சவுல் எப்படி தரிசித்தார் ?**

கேள்வி : – “எல்லோருக்கும் பின்பு, அகாலப் பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்” – 1கொரிந் 15:8. இயேசு பரலோகத்தில் இருந்திருப்பாரானால், இந்த யுகமுடிவுவரை அங்கேயே தொடர்ந்து இருப்பாரானால், எப்படி தர்சூசைச் சேர்ந்த சவுலால் அவரைப் பார்த்திருக்கமுடியும் ?

பதில் :– யூதாஸூக்கு பதிலாக சவுல் 12வது அப்போஸ்தலராகும் வாய்ப்பைப் பெற கர்த்தர் வடிவமைத்திருந்தார். ஒரு அப்போஸ்தலராக இருக்க வேண்டுமென்றால், அவர் நம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து சாட்சியளிப்பவராக இருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த கர்த்தரைக் குறித்த உண்மையை நேரடி சாட்சியமாக, தர்சூசைச் சார்ந்த சவுல் செயல்விளக்கம் கொடுக்கும்படி நேர்ந்தது. அவரே தம்மைக் குறித்து கூறும்போது; இயேசு ஒரே சமயத்தில் 500 பேருக்கு மேற்ப்பட்டோர்க்கு தரிசனமாக தம்மைக் காண்பித்ததை விளக்கமாகக் கூறினபிறகு, பரிசுத்த பவுல் கூறுகிறார்; “எல்லோருக்கும் பின்பு, அகாலப் பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்”.

இயேசுவை தரிசிக்கும்படி சவுலுக்கு சக்தி கொடுத்து, நிகழ்த்தப்பட்ட அற்புதத்தில் அவரது கண்கள் காப்பாற்றப்பட முடியாமற்போனது. இயேசு ஒரு மாம்ச ஜீவியாக இருந்திருப்பாரானால், சவுலின் கண்கள் பாதிக்கப்படாமல் தப்பியிருக்கும். ஆனால் உண்மை என்னவெனில், மறைக்கப்படாத கண்களால் அவர் பார்க்க அனுமதிக்கப்பட்டார்(ஒரு ஆவிக்குரிய ஜீவியை மாம்சீகக் கண்களால் காண்பது, இயற்கை விதிமுறைகளுக்கு உட்பட்டதல்ல) என்பதால், கர்த்தரைக் காணக்கூடிய ஏதோ வல்லமை அற்புதமாக பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதே தடயமாகும்.

இயேசு இவ்வுலகைவிட்டு கடந்துசென்றபிறகு, இந்த யுகமுடிவுவரை வானங்கள் அவரை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்பதை எப்படிக் கூறமுடியுமெனில்: அவர் உலகைவிட்டுச்சென்றார், செல்லும்போது அவரது இராஜ்யம் மாபெரும் மகிமையில் ஸ்தாபிக்கப்பட, இந்த யுகமுடிவில் தாம் வரவிருப்பதாக தம் சீஷர்களிடத்தில் கூறினார். ஆனால் அவர் கூறின காலத்துக்கு முன்பாகவே காட்சியளிக்க மாட்டார் என்று இந்த சொற்றொடரில் நமக்கு எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. நிழலான ஒப்புரவாக்கும் நாளின் பலிகளில் இது விளக்கப்பட்டுள்ளது. பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குச் சென்று, காளையின் இரத்தத்தை பலிசெலுத்துவார், பின்பு அவர் மீண்டும் வெளியேவந்து, இரண்டாவது பலியாக வெள்ளாட்டை பலிசெலுத்துவார், அதன்பிறகு மகா பரிசுத்த ஸ்தலத்துக்கு திரும்புவார்.

**வலது பாரிசத்தில் உட்காருதல் – ஒரு உருவகப்படம்(figure)**

நம் கர்த்தர் இப்பூமிக்கு வந்திருந்து, மனிதரிடையே வாசம் பண்ணினார். இங்கு அவர் செய்யவேண்டிய பணிகளை நிறைவேற்றி முடித்தார். பின்பு அவர் பரத்துக்கேறி, நமது நிமித்தமாக, தம் புண்ணியத்தை (நிஜமான காளையின் இரத்தம்) பொருந்தப்பண்ணுவதற்காக, தேவ சமூகத்தில் காணப்பட்டார்(நிஜமான மகா பரிசுத்த ஸ்தலம்). இந்தப் பணியை நிறைவேற்றி முடித்தபிறகு, அவரது எதிராளிகளை தம் பாதப்படியாக்கும் வரைக்கும், இராஜ்ஜியம் அவருக்கு கொடுக்கப்படும் நேரம் வரைக்கும் உன்னதமானவரின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்றும் வாசிக்கிறோம். அவர் உட்கார்ந்திருக்கிறார் என்ற வார்த்தைகளை நேரடி அர்த்தமாக, அரியணைமீது அமர்ந்திருப்பதாகவும், இந்த யுகத்தில் செயலற்றவராக தொடர்ந்து இருந்துவந்ததாகவும் அர்த்தப்படுத்தக்கூடாது. பிதாவின் வலது பாரிசத்தில் அவர் அமர்ந்திருப்பது, மேன்மை, கண்ணியம் போன்ற நிரந்தரமான ஸ்தானங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை இக்கருத்து பொருள்படுத்துகிறது.

அவரது இரண்டாம் வருகையின்போது, நம் கர்த்தர், “மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மீது வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்” என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. இந்த சுவிசேஷயுகம் முழுவதும் அவர் பூமியைவிட்டுவிட்டு, ஒரு மனிதனாக மனுக்குலத்திற்கு நேரடியாக செய்யும் எல்லாப் பணியையும் விட்டுவிட்டு, இந்த யுகமுடிவுவரைக்கும் இப்பூமிக்குரிய காரியங்களிலிருந்து விலகியிருக்கிறார் என்று நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால் சவுலுக்கு தம்மை வெளிப்படுத்தினார், யூதாஸைக் குறித்த வேதவாக்கியங்கள் நிறைவேறும்படி 12வது அப்போஸ்தலராக சவுலை பவுலாக்கி, தகுதிப்படுத்தினார்(சங்109:7,8; அப்1:15–20). சுவிசேஷயுகத்தின்போது, உலகில் பரிசுத்தஆவியின் வல்லமை இயங்குவது,விதிவிலக்கான காரியமாகத் தோன்றுகிறது. தர்சூசைச் சேர்ந்த சவுல், நம் கர்த்தரின் கனநேர தோற்றத்தை மாத்திரமே பெற்றார் என்று நாம் புரிந்துகொள்கிறோம்.

**2. துன்பத்தில் உள்ள ஒருவருக்கு ஆலோசனை தருதல்**

**கேள்வி** :– சிந்தையில் கடுந்துன்பத்தை உடைய ஒருவர் ஆலோசனைக்காக நம்மிடம் வேண்டுகோள் விடுக்கும்நிலையில், பிறர்மேல் அவர் தீயன பேசுகிறார் என்று கருதி, தீயனவற்றை கேட்காமல் நாம் அதைத் தவிர்த்துவிடலாமா ?.

**பதில்** :– சிந்தையில் கடும்வேதனையை அனுபவிக்கும் ஒருவர், நம்மிடம் ஆலோசனைகேட்டுவரும்போது நாம் ஆலோசனை தர மறுக்கக்கூடாது. மாறாக, உபத்திரவத்திலுள்ள அவருக்கு நாம் ஆலோசனைகள் தரவேண்டும். இப்போது ஒருவேளை இக்காரியம் மற்றவர்கள் மீதான பிரதிபலிப்பாகக் கூட இருக்கலாம். “ஒருவேளை

எனக்கு அந்த நபரின் பெயரையும், அவரைப் பற்றி விவரிக்காத வகையிலும், அந்தப் பிரச்சனையை நீங்கள் சொல்லமுடியும். அப்படி விவரித்தால், அந்த விளக்கத்திலிருந்து அவரை நான் அறிந்துகொள்ளமுடியும்.'' என்று இவ்வாறு பாரபட்சமற்ற ஆலோசனையை கூற நம்மால் முடியும். மற்றொரு நபரும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் கண்டோமானால், ''நீங்கள் மத்தேயு 18:15ன் நிபந்தனைகளை நிறைவேற்றிவிட்டீர்களா ? அந்த நபரிடத்தில் பேசியிருக்கிறீர்களா ?'' என்று நாம் அவரிடம் வினவலாம்.

அவர், ''ஆம்'' என்று பதில் கூறினாரானால், நாம் அவரிடத்தில் கேட்கலாம்! ''இது எந்த தாக்கத்தையும் உண்டாக்கவில்லையா ? அவர் இன்னும் தவறு செய்வதைத் தொடர்கிறாரா ? எனற கேள்விக்கு, தன் எதிர்தரப்பார் தற்போது தவறிழைப்பதில்லை அதேசமயம் மன்னிப்பும் கோரவில்லை என்று கூறுவாரானால், அப்போது நாம் பதிலுரையாக; ''எதிர் தரப்பினர் மன்னிப்பு கேட்க நாம் எதிர்பார்க்கவேண்டியதில்லை. எதிர்தரப்பார் காயப்படுத்துவதை நிறுத்தினாலே போதுமானது, நீங்கள் சோதனையின் அழுத்தத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருங்கள்'' என்று கூறலாம். அல்லது அந்த நபர்; நான் வேதவசனங்களின்படியான படியை எடுத்திருக்கிறேன் என்றும், அடுத்தவர் தொடர்ந்து காயப்படுத்தி வருவதாகவும் நம்மிடம் கூறுவாரானால், நாம் அவரிடம் கூறவேண்டியது; நீங்கள் அடுத்தபடியை எடுத்தீர்களா ?இரண்டு சாட்சியங்களை உங்களோடு அழைத்துச்சென்றீர்களா ? அவர் ஆம் என்று கூறுவாரானால், நாம் கொடுக்கும் ஆலோசனை முடிவை நோக்கி தொடர்ந்து செல்லவேண்டும். இம்மட்டுமாக நீங்கள் சிறப்பாகச் செய்துள்ளீர்கள், அவர் இரண்டு சாட்சியங்களை கூட்டிச் சென்றிருந்ததாகவும், மத்தேயு 18:15இல் வடிவமைக்கப்பட்ட வழிமுறைகளை மிக கவனமாகப் பின்பற்றியிருந்ததாகவும் கூறினாராகில், காயமேற்படுதல் நிறுத்தப்– பட்டிருக்குமானால், நாம் ; ''நல்லது இதன்பிறகு நானும் நிறுத்திக்கொள்கிறேன்! என்று கூறலாம். அவரை தண்டிக்க உங்களுக்கு அதிகாரமில்லை, தண்டிக்கும் அதிகாரம் தேவனுக்கு மட்டுமே உரியது.

இரண்டு சாட்சியங்களைக் கூட்டிச்சென்று குற்றவாளியாக இருப்பவரிடம் சென்றேன், ஆனால் அவர் எங்களது வார்த்தைகளுக்கு செவிசாய்க்கவில்லை என்று அந்த சகோதரர் கூறுவாரானால், தவறு இன்னும் தொடர்கிறது என்று பொருளாகிறது. இப்பொழுது நாம் அவருக்கு ஆலோசனை தரவேண்டியது யாதெனில், மீண்டும் அந்த இரண்டு சாட்சியங்களிடம் சென்று, விஷயத்தை சபையாரிடத்தில் கொண்டு செல்ல ஆலோசிப்பதுதான். சபையாரிடத்தில் செல்கையில், அந்த இரு சாட்சியங்களில் ஒருவர் மூப்பராக இருக்க முன்னுரிமை தரவேண்டும். அவர்கள் முதலாவது மூப்பர்களிடத்திற்கு செல்லவேண்டும். இந்த விஷயத்தில் அவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்தமுடியாதவர்களாக மூப்பர்கள் இருப்பார்களானால், அவர்கள் மூப்பர் ஸ்தானத்துக்கு பொருத்தமற்றவர்கள். சபையின் முன்பாக இவ்விஷயத்தைக் கொண்டுசெல்கையில், ஒருவர் மூப்பராக இருந்தால் பொருத்தமுடையதாய் இருக்கும். அதுவரைக்கும், இந்த வழக்கு இந்த இரண்டு சாட்சிகளுக்கு வெளியில் விவாதிக்கப்படக்கூடாது.

### 3. முக மலர்ச்சியுடன் கொடுப்பவனை கர்த்தர் நேசிக்கிறார்

**கேள்வி** :– ''உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக் கடவன்'' – 1கொரிந்16:2. இந்த உத்தரவு கர்த்தருடைய ஜனங்கள் எல்லாருக்கும் பொருந்துமா ?

**பதில்** :– இந்தக் கொள்கை அனைவருக்கும் பொருந்தும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். ஆயினும் இது ஒரு பிரமாணம் அல்ல. சபைக்கு அப்போஸ்தலர் பிரமாணங்களை ஏற்படுத்தவில்லை. பிரமாணங்களை ஏற்படுத்தும் அதிகாரத்தை அவர் பெற்றிருக்கவில்லை. கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் தங்கள் சொந்த கடமையை தரித்திருந்து, அவர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்தியிருந்த காரியங்களை உபயோகிக்கவேண்டும் என்று அப்.பவுல் போதித்தார்.

தேவனுடைய கட்டளைகள் எப்படி மதிப்பிடப்படவேண்டுமெனில், பலிசெலுத்தும் விஷயமாக அல்ல, மாறாக கீழ்ப்படிதலை காண்பிக்கும் நோக்கில் இருக்கவேண்டும். யூதருடைய பிரமாணத்தின்படி, கர்த்தருடைய ஜனங்களாகிய சுபாவ இஸ்ரயேலர் ஒவ்வொருவரும், தசம பாகமாக பத்தில் ஒருபங்கு கொடுக்கும்படி வழிகாட்டப்பட்டனர். ஒரு மாதத்துக்கு ஒருவர் 100 டாலர்கள் சம்பாதிப்பாரானால், அதில் 10ல் ஒருபாகமாக 10 டாலர்களை கொடுத்துவந்தார். அவர் 50 டாலர்கள் ஒரு மாதத்துக்கு சம்பாதிப்பாரானால், பத்தில் ஒரு பாகமாக, 5 டாலர்கள் கொடுக்கவேண்டும். ஆனால் 50 டாலர்கள் அல்லது 100 டாலர்கள் என்பது, ஒவ்வொரு மாதமும் ஒருவர் சம்பாதிக்கின்ற ஒட்டுமொத்த வருமானத்தை உள்ளடக்கினதாகும்.

இஸ்ரயேலன், ஒருவர் 100டாலர்கள் சம்பாதிப்பாரானால், அதிலிருந்து தசம பாகமாக 10 டாலரைக் கொடுத்தபிறகு, வீட்டு வாடகைக்கென 40 டாலர்களும், எரிவாயுவுக்கென 10 டாலர்களும், உணவுக்கென 30 டாலர்களும், 10 டாலர்கள் தனக்கும், தன் மனைவிக்கு 10 டாலர்களும் செலவிட கடமைப்பட்டுள்ளார். அவர் சம்பாதிப்பதற்கும் அதிகமாக 10 டாலர்கள் செலவினம் ஏற்படுகிறது, அவர் தன் மனைவிக்கு கொடுக்கும் ஊக்கத்தொகையை 5 டாலர்களாக குறைத்தும், தனக்கென செலவிடும் 5 டாலர்களைக் குறைத்தும் செலவினங்களை சரிக்கட்டவேண்டும்.

ஆனால் கிறிஸ்தவர்கள் பத்தில் ஒரு பாகம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதில்லை. ஆயினும் பெத்தேல் குடும்பத்தில், சிலர் பத்தில் ஒருபாகம்

கொடுக்கிறார்கள். சமீபத்தில் ஒரு குடும்பத்தார் வருமானத்திலிருந்து 5ல் ஒரு பங்கைக் கொடுத்தனர். இங்கு ஒரு கொள்கை சம்பந்தப்பட்டுள்ளது. அதாவது, அர்ப்பணிப்பின் கொள்கை என்று நாம் நினைக்கிறோம். அதன்படி, அப்போஸ்தலரின் ஆலோசனையை நாம் பின்பற்றும்பொழுது, நிஜமாகவே தேவையில் உள்ளவர்கள் சிலருக்கு கொடுக்க, நாம் ஒவ்வொரு வாரமோ அல்லது ஒவ்வொரு மாதமோ குறிப்பிட்ட தொகையை எடுத்துவைக்கவேண்டும். இவ்வாறு நம் பரலோகப்பிதாவுக்கு ஒப்பாக பரிவிரக்கத்தின் ஆவி பயிற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு நாம் கர்த்தருடைய ஊழியத்தில் ஒத்துழைக்கும்படியாக, ஒரு சிறு பங்கைப் பெறமுடியும். நம் சிந்தையில் எந்தளவு இக்கருத்தைப் பெற்றிருக்கிறோமோ, அதன்மூலம் ஒரு விசேஷ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம் என்று நாம் நம்புகிறோம்.

“எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்” – நீதிமொழி11:25.

---------------

# சில சுவாரசியமான கடிதங்கள்

## *தனிப்பட்ட மற்றும் சபையாரின் உரிமைகள்*

மிகவும் அன்பிற்குரிய பாஸ்டர் அவர்களே:-

என்னுடைய அன்பைத் தெரிவிக்கவும் மற்றும் நான் வாக்குறுதியை (vow) எடுத்துள்ளேன் என்று உங்களுக்குத் தெரிவிக்கவும் விரும்பிட்ட அந்த ஒரே ஒரு தருணத்தைத் தவிர, மற்றப்படி உங்களுக்குக் கடிதம் எழுதுவது ஞானமாகவோ அல்லது உகந்ததாகவோ இருக்குமென நான் ஒருபோதும் எண்ணினதில்லை. உங்களது நேரத்தினை ஞானமற்ற விதத்தில் நான் குறுக்கிடக் கூடாதே என்ற எண்ணமே, இப்பொழுது உங்களுக்கு நான் எழுதும்போதும் எனக்குக் காணப்படுகின்றது; ஆனால் இப்பொழுது எழுவது சரியே என்று உணர்கின்றேன்.

கொஞ்சம் நாட்களுக்கு முன்பாக, சகோதரர்களில் சிலர் தங்களுடைய இல்லங்களில் சபையாரால் ஏற்பாடு பண்ணப்படாத நிரந்தரமான கூட்டங்களை நடத்திக்கொண்டு வந்தனர். சில சந்தர்ப்பங்களில் இக்கூட்டங்களானது மூப்பர்களாகவோ, உதவிக்காரர்களாகவோ இல்லாத சகோதரர்களால் நடத்தப்பட்டு வந்தது. வேறு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சில உதவிக்காரராகிய சகோதரர், தங்களது அன்பின் காரணமாகவும், வைராக்கியம் காரணமாகவும் புதியவர்கள் சிலருக்கு உதவும் வாய்ப்பினைக் கண்டடைந்தனர் மற்றும் கொஞ்சக் காலங்களுக்குப் பிற்பாடு அவர்களது நலன்கருதி, நிரந்தரமான கூட்டங்களை நடத்தத் துவங்கினர்; இந்தக் கூட்டங்களானது, சபையினுடைய நிரந்தர (regular) கூட்டங்களுக்கு இடைஞ்சலாக இல்லாத மாலை வேளைகளில் நடத்தப்பட்டது.

இக்காரியங்கள் சபையாருடைய கவனத்திற்கு வந்து, கலந்தாலோசிக்கப்பட்டு, பின்வரும் தீர்மானமானது வாக்கின் (vote) அடிப்படையில் எடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது; அது பின்வருமாறு:

கலந்து கொண்டவர்களின் சார்பிலான கர்த்தருக்கான மற்றும் சகோதரருக்கான நல்நோக்கங்களையும், அன்பையும் மற்றும் பக்திவைராக்கியத்தையும் நாம் ஒரு கணம்கூடச் சந்தேகிக்கவில்லை என்றபோதிலும், சபையாரால் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கும் கூடுகைகளுக்கு அப்பாற்பட்டு, ------------ அவர்களின் இல்லத்தில் நடைபெறும் நிரந்தர கூட்டங்களானது எங்களது கணிப்பின்படி, ------------ என்ற நம்முடைய இடத்திலுள்ள சபையாருடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு உரியதாய்க் காணப்படாமல், மற்றச் சில காரணங்களோடுகூட, தற்காலத்தில் மிகவும் அவசியமானது என்று நாம் எண்ணுகின்றதான முழுமையான ஐக்கியத்தினைச் சரீரத்தின் மத்தியில் தடைப்பண்ணுகிறதற்கு ஏதுவானதாய் இருக்குமென நாங்கள் முடிவிற்கு வந்துள்ளோம்.

இதற்கு வாக்குக் கேட்கப்பட்டபோது, நானும் தனிப்பட்ட விதத்தில் இத்தீர்மானத்தை ஆதரித்தேன். ஆனால் பிற்பாடு நான் ஞானமாய்த்தான் செயல்பட்டிருக்கின்றேனா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டதினால், இக்காரியத்தினை அதிகம் ஜெபத்தோடு சிந்திக்கத் துவங்கி, உதவிக்காக டவர் (ரீபிரிண்டஸ்) மற்றும் டாண் (volumes) புத்தகங்களில் தேடிப் பார்த்தேன். இறுதியில் நான் தவறு செய்துள்ளேன் என்றும், மற்றவர்களுடைய சுதந்தரம் மற்றும் சுயாதீனத்தில் தலையிடுகிற தன்மையிலுள்ளதாக, என் மனதிற்குத் தோன்றும் தீர்மானம் ஒன்றில் நான் பங்கெடுத்திருக்கின்றேன் என்றுமுள்ள முடிவிற்கு நான் வந்தேன்.

நேற்றைய இரவில் வழக்கமான அலுவல் கூட்டத்தின்போது, அக்காரியமானது மீண்டுமாகக் கலந்துரையாடத்தக்கதாக வந்தது; அக்கூட்டங்கள் சிலவற்றில் அக்கறைக் கொண்டிருந்த சகோதரர்கள், தங்கள் கூட்டங்களுக்குக் கூட்டத்தலைவர் ஒருவரை நியமித்துத் தரும்படிக்குச் சபையாரிடம் வேண்டிக்கொள்ளும் கடிதம் ஒன்றினைச் சபைக்குக் கொடுத்திருந்தனர். மூன்று மணிநேர கலந்தாலோசனை நடந்தும், காரியம் தீர்வுக்குள்ளாக வரவில்லை. மேலும் நான் ஒரு கவலைக்கிடமானப் பிரச்சனையை எதிர்க்கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றேன். நான் மற்ற மூப்பர்களிடமிருந்து மாறான கண்ணோட்டத்தை எடுத்துக்கொண்டவனாகவும், நான் எடுத்துக்கொண்ட நிலைப்பாட்டில் தனித்து நிற்கும் மூப்பனாக நின்றுகொண்டிருக்கின்றேன்; அதாவது எங்களால் எடுக்கப்பட்ட தீர்மானமானது

ஞானமற்றது என்பதும், உகந்ததல்ல என்பதும், தனிப்பட்ட சுயாதீனத்தை அழித்துப்போடுவதற்கு ஏதுவானதாகவும், எங்களுடைய சகோதரரில் சிலருக்கு விசேஷமாய்ப் பாதகமானதாகவும் காணப்படுகின்றது என்பதும் நான் கொண்டிருக்கும் நிலைப்பாடாய் இருக்கின்றது.

எவ்விதத்திலும் மற்றவர்களுடைய உரிமைகளைக் குறுக்கிடுவதற்கோ, அடிமைப்படுத்துகிறதற்கோ இந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்ற கண்ணோட்டம் காணப்பட்டது. ஆனால் எனக்கு அது ஒருவிதத்தில் "பொல்லாங்காய்த் தோற்றமளித்தது;" இத்தீர்மானத்தினால் ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படுகையில் அடையப்பெறுகிற நன்மையானது, வேறொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படுகையில் இதனால் உண்டாகும் பாதகத்திற்கு ஈடுசெய்திட முடியாது எனும் கருத்தினை என் மனதில் பெற்றிருந்து, இதை விட்டுவிலக நான் விரும்புகின்றேன்.

நான் எதிர்த்துச் சண்டைப் போடவில்லை, போடவும் மாட்டேன்; ஆனால் நான் கர்த்தருடைய சித்தத்தை அறியவும், அதையே செய்ய வேண்டுமென்றும் இருக்கிறேன்; மேலும் மற்ற மூப்பர்களிடமிருந்தும், சபையாரிலுள்ள மற்ற அங்கத்தினர்களில் சிலரிடமிருந்தும் எதிர்மாறான கண்ணோட்டத்தினை நான் கொண்டிருப்பவனாக என்னை நான் காண்கின்றபடியினால், நான் மிகவும் கவலையடைந்து, உங்களது அறிவுரையைக் கேட்கின்றேன். சபையாருடைய தற்போதைய மற்றும் எதிர்கால நலனுக்கடுத்த காரியங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்கையில், இக்காரியம் இப்பொழுது மிகவும் முக்கியமானதென நான் எண்ணுகின்றேன். இப்படிக்கு, அவரது ஆசீர்வாதமான ஊழியத்தில் தங்கள்,

- ஜெ. ஜெ. பி.

மேலே இடம்பெறும் கடிதத்திற்கான எங்களது பதில்:

இக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள காரியங்கள் சம்பந்தமான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனைகள் என்று நாம் நம்புகிறவைகளை, வேதாகம பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியில் முன்வைத்திட நாம் பிரயாசப்பட்டிருக்கின்றோம். அதைத் திரும்பவும் கூறி, அதைக் கேள்வியில் இடம்பெறும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்த நாடிடும்படிக்கு நாம் கூறுவதாவது:

ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தான் அபிஷேகிக்கப்பட்டுள்ளதன் காரணமாகப் பேசிடுவதற்கும், பிரசங்கம்பண்ணிடுவதற்கும், தனது பரலோகத் தந்தையின் வார்த்தைகளையும், செய்தியையும் அறிவித்திடுவதற்கும் உரிமை உடையவனாய் இருக்கின்றான். பிரசங்கித்திடுவதற்கான உரிமை என்பது பிஷப்புகளுக்கோ அல்லது அவர்கள் யார்மேல் கைகளை வைக்கிறார்களோ, அவர்களுக்கோ மாத்திரம் எல்லைக்குட்பட்டதல்ல அல்லது சபையாரால் கைகளை நீட்டுதல் என்று வேதவாக்கியம் கூறிடும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களுக்கோ, உதவிக்காரர்களுக்கோ மாத்திரம் எல்லைக்குட்பட்டதல்ல. ஏதேனும் காரணங்களினால் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் கவனத்தைச் சிதறாமல் தக்கவைத்துக்கொள்வதற்குரிய திறமையின்மை எனும் குறைபாடுகள் காணப்படலாம். சகோதரிகள் பொது இடங்களில் பிரசங்கம் பண்ணக்கூடாது எனும் அப்போஸ்தலனின் கட்டுப்பாடு தவிர மற்றப்படி எந்தக் கட்டுப்பாடுமில்லை.

திவ்விய அதிகாரம் அளிக்கப்பட்டிருத்தல், அபிஷேகித்தல் அல்லது பரிசுத்த ஆவியின் அங்கீகாரம் குறித்த இந்தப் பரந்த கண்ணோட்டத்தில், ஒருவருக்கும் இன்னொருவரைத் தடைப்பண்ணிடுவதற்குரிய உரிமையில்லை என்று நாம் புரிந்திருக்கின்றோம். இயேசு அப்போஸ்தலனாகிய யோவானிடம் கூறினது போன்று, "அவனைத் தடுக்க வேண்டாம்" (மாற்கு 9:39).

யாருமே தனது சகோதரனைத் தடைப்பண்ணவோ அல்லது கட்டுப்பாடுபண்ணவோ முடியாது என்றாலும், நாம் நம்முடைய சுயாதீனங்கள் சிலவற்றை விட்டுக்கொடுத்திடலாம். தேவன் ஒழுங்கின் தேவனாய் இருக்கின்றார் என்றும், ஒவ்வொரு நற்கிரியையும் ஒழுங்கினாலேயே வளம்பெறுகின்றது என்றும் அடையாளம் கண்டுகொண்டு மற்றும் தம்முடைய பின்னடியார்கள் ஒரே சரீரமென ஒன்றுகூடிட வேண்டும் என்று கர்த்தர் கொடுத்திட்டதான கட்டளைகளைப் பின்பற்றுகையில், சரீரத்தில் நமக்கான இடத்தை நாம் எடுத்துக்கொள்கையில், நாம் நமது தனிப்பட்ட சுதந்தரம், சுயாதீனங்கள், சிலாக்கியங்களில் சிலவற்றை இழக்கின்றோம் என்று நாம் உணர்ந்து கொள்கின்றோம். இதை நாம் செய்வதில் மகிழ்கின்றோம்; காரணம் அது கர்த்தருடைய சித்தம் என்று நாம் நம்புகின்றோம்; ஏனெனில் அவர், "சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்" என்று நமக்குக் கட்டளையிட்டுள்ளார். ஆகையால் வேதத்தின்

மாணவர்கள் காணப்படும் சபையில் அங்கத்தினர்களாகியுள்ள அனைவரும் தனிப்பட்ட உரிமைகளை ஒப்புக்கொடுத்துவிடுகின்றனர். அவர்கள் ஒரு சபையாராகச் செயல்பட்டு, எந்தக் கூட்டங்கள் தேவையாய் இருக்கின்றது என்றும், எந்தக்கூட்டங்கள் தேவையில்லை என்றும், தங்கள் மத்தியிலுள்ள யார் நன்கு வழிநடத்துபவராகக் காணப்பட்டு, சபையாருக்கு ஊழியஞ்செய்பவர்கள் என்றும், யார் மற்ற ஊழியங்களைச் செய்வார்கள் என்றுமுள்ளவைகளைத் தீர்மானிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், சபையார் மத்தியிலுள்ள சகோதரர்கள், புதிய வகுப்புகளை/சபைகளைத் தொடங்கி மற்றும் இன்னமும் தங்களை அந்தப் பழைய சபையாரின் அங்கத்தினர்களெனத் தொடர்ந்து கருதிக்கொள்வதும் சரியான காரியமாய் இராது. ஒரு சபையார் மத்தியிலுள்ள அங்கத்தினன் ஒருவன், தனது சபையாரால் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளவைகளுக்கு அப்பால் வேறொரு வகுப்பை/சபையைத் தனிப்பட்ட விதத்தில் துவங்குவது என்பது, அந்தப் பழைய சபையாரைப் புறக்கணிப்பதாகவும், பழைய சபையாரோடுள்ள தனது உறவினைத் துண்டிப்பதாகவும் இருக்கும் மற்றும் இனிமேல் அச்சபையின் ஊழியக்காரனாகவோ அல்லது அதன் அங்கத்தினனாகவோ அல்லது அதன் சிலாக்கியங்களில் பங்குகொள்பவராகவோ தான் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். தனது சொந்த தனிப்பட்ட சுயாதீனத்தை மீண்டுமாகக் கையில் எடுத்துக்கொள்ளும்போது, அவன் சபையாரின் ஓர் அங்கத்தினன் என்றுள்ள தனது சிலாக்கியங்களைக் கையளித்துவிடுபவனாக இருப்பான்.

ஆகையால் இந்த நிலைப்பாட்டின்படி, இச்சந்தர்ப்பத்தில் புதிய சபையை/வகுப்பை ஏற்படுத்துவதில் பங்கெடுக்க சகோதரர்களும், சகோதரிகளும், நிச்சயமாகவே சிறந்த நோக்கங்களை மாத்திரம் பெற்றிருந்தனர் என்றும், அநேகமாக சபையை ஏற்படுத்தும் தங்களது செயல்பாட்டின் உண்மையான அர்த்தத்தை மற்றும் தாக்கத்தை அத்தருணத்தில் சிந்தித்துப் பார்க்காதவர்களாய் இருந்துள்ளனர் என்றும் நாம் சொல்லலாம்.

இன்னுமாக பழைய சபையாரும், அதன் மூப்பர்களும், உதவிக்காரர்களும், சபையாருடைய விருப்பங்கள் மற்றும் தேவைகள் யாவற்றையும் முழுமையாய்ச் சந்திக்கவில்லை என்பதும் தெரிகின்றது; இல்லையேல் சபையாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளவைகளுக்கு அப்பால் புதிய வகுப்புகளை/சபைகளை உருவாக்கிடுவதற்கான காரணம் வேறெதுவும் இருக்கமுடியாது. தேவையுடையவர்களுக்கான ஆவிக்குரிய தேவைகளானது சந்திக்கப்படும்படிக்குப் பார்த்துக் கொள்ளத்தக்கதாக எப்போதும் சபையாருடைய ஊழியக்காரர்கள் கவனித்திருக்க வேண்டும்; மற்றும் போதுமான எண்ணிக்கையில் மூப்பர்களும், உதவிக்காரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட வேண்டும்.

அத்தீர்மானத்தை எடுத்திட்ட சகோதரர்களின் உணர்வுகளை நாம் மதிக்கிறோம் என்றாலும், அவர்களது செயல்பாட்டினுடைய ஞானத்தினைக்குறித்து நாம் ஐயம்கொள்ளவே செய்கின்றோம். சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்குமான சிறந்த வழி, அனைத்துத் தரப்பினரும் தங்கள் தவறுகளை அறிக்கையிடுவதாகவே இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். சபையாரும், மூப்பர்களும் பின்வருமாறு கூறிடலாம்: "அன்பான சகோதர சகோதரிகளே, கூட்டங்கள் தொடர்புடையதான சபையாரின் தேவைகளை நாங்கள் சந்தியாமல் போனதின் காரணம், அப்போது நாங்கள் சூழ்நிலையைக் கிரகிக்க முடியாதவர்களாய் இருந்தோம். அதற்காக நாங்கள் வருந்துகின்றோம். எதிர்க்காலத்தில் எங்கள் கடமைகள் விஷயத்தில் நாங்கள் மிகவும் உண்மையாய் இருப்போமென்று நாங்கள் வாக்களிக்கின்றோம்."

புதிய வகுப்பை/சபையைத் தொடங்கினவர்களும் பின்வருமாறு கூறிடுவது நலமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்: அதாவது "அருமையான சகோதர சகோதரிகளே, நாங்கள் இவ்விஷயத்தைக் குறித்துப் போதுமான பரந்த கண்ணோட்டம் பெற்றிராததற்கும், சபையாருடைய நியமித்தலின்படி தேவையானது சந்திக்கப்பட வேண்டும் என்றுள்ள நோக்கத்தில் கூட்டத்திற்கான வேண்டுகோளை முன்வைத்திடாததற்கும் நாங்கள் வருந்துகின்றோம்."

இப்படியாகத் தவறை வருத்தத்தோடு ஒப்புக்கொண்டு மற்றும் பொறுத்துக் கொள்வதோடு, முழுக்காரியமும் சரியாகிவிடும் என்றும், அனைவரும் மனபதற்றத்திலிருந்து விடுதலையடைவதை உணருவார்கள் என்றும் நாம் நம்புகின்றோம் மற்றும் அநேகமாக இந்த விளைவுகளானது, பழைய சபையாருடைய நியமித்தலின் கீழ்ப் புதிய கூட்டங்கள் நடத்தப்படாதது வரையிலும் சிறப்பாய் இராது.

---

# நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி

நம்முடைய பாவங்களுக்கான மீட்பருடைய மரணத்தையும் – அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவது போன்று – மீட்பரோடுகூட மனுஷீக நிலைகளுக்கு மரித்துப்போவதிலும், அவருடைய பாடுகளிலும், அவரோடுகூட உள்ள நம்முடைய பங்கெடுத்தலையும் — நினைவுகூர்ந்திடுவதற்கான சிலாக்கியத்தினையும் எங்குமுள்ள கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களானவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், தம்முடைய மரணம் நிகழ்வதற்கு முன்னதாகக்கூடி, தம்முடைய மரணத்தை அடையாளப்படுத்தினதுபோலவே, நாமும் அவரது பலியை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கென ஆண்டு நிறைவு நாளில் கூடுவதும் ஏற்றதாயிருக்கும்.

யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாகக் கர்த்தர் இந்த நினைவுகூருதலை நிறுவின அவரது நோக்கத்திற்கு இசைவாக, இதை நாம் வருடந்தோறும் ஆசரிப்பது என்பது இத்தருணத்தை, மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது; அதாவது ஆண்டு நிறைவு நாளில், ஆசரிக்கும் அம்சத்தைப் புறக்கணித்து, அவ்வப்போது – மாதந்தோறும், வாரந்தோறும், காலாண்டுதோறும் என ஆசரிக்கப்படும் ஆசரிப்பானது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைக்காட்டிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது. வித்தியாசமாய் ஆசரிக்கின்றவர்களிடத்தில் நாம் தவறு கண்டுபிடிக்காமல் இருப்போமாக; மாறாக வாய்ப்புகள் கிடைக்கும்போது, இந்த மாபெரும் நிகழ்வினை, அதன் ஆண்டு நிறைவு நாளில் நாம் ஆசரிப்பதற்கான நம்முடைய காரணங்களை, நாம் அவர்களுக்குத் தெரிவித்திடலாம்.

நாம் இதை (வருடந்தோறும்) புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம். நமது கர்த்தர் பல வருடங்களாகப் பிரசன்னமாகி – அறுவடையின் காலப்பகுதியில் காணப்படுகின்றார் என்று நாம் நம்புகிறவர்களாய் இருப்பினும் – இது அவரது மரணத்திற்கான ஆசீர்வாதமான நினைவுகூருதலை, நாம் தொடர்வதிலிருந்து, நம்மைத் தடைச் செய்திடுவதில்லை. நாம் அவரது மரணத்தை, அவரது இரண்டாம் வருகைவரை, அதாவது இந்த யுகத்தினுடைய முழு அறுவடை வேலையும் முடிவடைந்து, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபை முழுவதும் மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதுவரை, ஆசரிப்பதைத் தொடர வேண்டுமென்ற அர்த்தத்தில் நமது கர்த்தர் குறிப்பிட்டுள்ளார் என்பது நமது கருத்தாய் இருக்கின்றது. அவர் கூறின பிரகாரம், நாம் அவரோடுகூடப் புதிய பாத்திரத்தில் பானம் பண்ணிடுவோம்.

இப்பொழுது நாம் அவரது அவமானத்தின், நிந்தனையின், பாடுகளின், உலகத்தினுடைய எதிர்ப்பு மற்றும் ஏளனத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுபவர்களாய் இருக்க, அவரது புதிய பாத்திரமானது சந்தோஷத்தின், ஆசீர்வாதத்தின், மகிமையின், கனத்தின், அழியாமையின் – திவ்விய சுபாவத்தின் பாத்திரமாய்க் காணப்படும். நமது கர்த்தருக்குப் பாடுகளின் பாத்திரத்தினை ஊற்றின பிதா, ஏற்கெனவே அவருக்கு ஆசீர்வாதத்தின் மற்றும் மகிமையின் பாத்திரத்தை ஊற்றிவிட்டார். நாம் அவரோடுகூட இந்தப் பாடுகளின் பாத்திரத்தில் பங்கடைவதற்கான சிலாக்கியம் பெற்றிருப்பதுபோன்று, நாம் உயிர்த்தெழும்போது, மறுரூபமடையும்போது அவரோடுகூட, மகிமையின், ஆசீர்வாதத்தின் பாத்திரத்திலும் பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருப்போம். ஆம், நம்முடைய பாத்திரமானது இப்பொழுது கலந்து காணப்படுகின்றது; கசப்பும் – இனிப்பும் கலந்து காணப்படுகின்றது; ஏனெனில் விசுவாசத்தினால் நாம், தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துவைத்துள்ளதானவைகள் அநேகவற்றை ஏற்கெனவே அனுபவித்து வருகின்றோம்.

கர்த்தருடைய ஏற்பாட்டில் சந்திரனானது, யூதருடைய வாய்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் சூரியனானது சுவிசேஷ யுகத்தினுடைய வாய்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நியாயப்பிரமாணத்தின் யுகமானது, வரும் காரியங்களுக்கான நிழலாய் (அ) பிரதிபலிப்பாய்க் காணப்படுகின்றது; அதாவது சந்திரனுடைய ஒளியானது, சூரிய கதிரினுடைய பிரதிபலிப்பாய்க் காணப்படுவதுபோன்று காணப்படுகின்றது. தேவனைப்பற்றின அறிவினால் உலகத்தைப் பிரகாசிப்பிக்கின்ற ஒளியினைத் தன் செட்டைகளின் கீழ்ப் பெற்றிருந்து, நீதியின் சூரியன் உதிக்கின்ற காலப்பகுதிக்கு அருகாமையில் நாம் காணப்படுகின்றோம். இதை நாம் காண்கையில், போதகர் கட்டளையிட்டதற்கேற்ப நாம் நமது தலைகளை உயர்த்தி, களிகூருகின்றோம். (மத்தேயு 13:43) கர்த்தருடைய உவமையின்படி சபையினுடைய ஜெயங்கொள்ளும் அங்கத்தினர்கள் அந்த நீதியின் சூரியனுக்குள் அடங்குவதினால், ஆயிரவருட அரசாட்சியினுடைய மகிமையின் வெளிச்சமானது,

உலகத்தார்மீது முழுமையாய்ப் பிரகாசித்திடுவதற்கு முன்னதாக, தெரிந்தெடுக்கப்பட்டதான சபையானது கூட்டிச்சேர்க்கப்பட்டு, அவளது மகிமையடைதல் நிறைவடைந்திட வேண்டும்.

நினைவுகூருதலில் நாம் பங்கெடுக்கையில், முதலாம் நினைவுகூருதல் நிகழ்ந்தபோது காணப்பட்ட சூழ்நிலைகளுக்கு நேர்மாறாக இப்பொழுது நீதியின் சூரியன் உதிப்பதை விசுவாசத்தின் கண்களினால் பார்க்கின்றவர்களாக இருக்கின்றோம். அப்போது சந்திரனானது (நியாயப்பிரமாண உடன்படிக்கையானது) அதன் முழு நிலையில் காணப்பட்டது; இயேசு மறுதலிக்கப்பட்டு, அவர் சிலுவையில் அறையப்பட்டவுடனே, யூதருடைய ஆட்சியானது நலிவுற ஆரம்பித்தது. இயேசு சிலுவையில் மரித்த நாளில் சந்திரன், பௌர்ணமி நிலையில் காணப்பட்டது என்றும், பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது என்றும் கவனிக்கப்படலாம். இந்த வருடத்தில் ஏப்ரல் 11-ஆம் தேதியில் சந்திரன் பௌர்ணமி நிலையில் காணப்பட்டு, பின்னர் அதன் தேய்வு ஆரம்பமாகும். ஆகையால் 11-ஆம் தேதியானது, நமது கர்த்தர் சிலுவையில் மரித்திட்டதற்கான நாளாகவும், 10-ஆம் தேதி மாலையானது முதலாம் நினைவுகூருதல் இராப்போஜனம் ஆசரிக்கப்பட்ட இரவிற்குரிய நாளாகவும் காணப்படும்.

## பாத்திரமான நிலையில் புசித்து, பானம்பண்ணுதல்

நினைவுகூருதல் இராப்போஜனம் அடையாளப்படுத்தும் காரியங்களை உணர்ந்துகொள்வதினால் மாபெரும் ஆசீர்வாதமும், அதில் பங்கெடுப்பவரின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு ஏற்ப சந்தோஷமும் கடந்துவருவதுபோல, நினைவுகூருதலில் அபாத்திரமான நிலையிலும், சரியற்ற நிலையிலும் பங்கெடுத்தல்கூட ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருக்கும், அவரது ஊழியத்திற்கென்றும் – தங்களுடைய இருதயங்களை – தங்களுடைய அனைத்தையும் – அர்ப்பணிப்பதன் மூலமாகக் கர்த்தருடன் உறவிற்குள் வந்தவர்களே இதில் பங்கெடுக்க வேண்டுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல.

யார் தங்களைப் பாவிகள் என்றும், இரட்சகரைப் பாவங்களிலிருந்து தங்களை மீட்பவர் என்றும், இவர் மூலமாய்ப் பிதாவினிடத்திற்கு வருபவர்களுடைய குறைவுகளை ஈடுசெய்திடுவதற்கு இவருடைய புண்ணியங்கள் போதுமானவைகள் என்றும் அடையாளங்கண்டுகொள்கின்றனரோ, இவர்களே இந்த அர்ப்பணிக்கப்பட்ட நிலைமைக்கு வரமுடியுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல. இப்படியானவர்களே மிகுந்த சந்தோஷத்துடன் இதில் பங்கெடுப்பவர்களாய் இருப்பார்கள். போதகருடைய பாடுகளை இவர்கள் நினைவுகூர்ந்து, அந்தப் பாடுகளிலும் மற்றும் அவை தங்கள் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கொண்டு வந்திட்டதான ஆசீர்வாதங்களிலும் களிகூர்ந்திட வேண்டும். கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொண்டவர்களும், தங்களுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்துமே அவர் மூலமாகவே வந்தது என்று முழுமையாய் உணர்ந்துகொண்டுள்ளவர்களுந்தான், அந்த ஒரு தருணத்தில் திராட்சப்பழரசத்தைப் – பானம்பண்ணிட வேண்டுமே ஒழிய, வேறு எவருமல்ல. தங்களுடையதனைத்தையும் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டவர்களே பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டுமே ஒழிய, வேறு எவருமல்ல; ஏனெனில் இதுவே பாத்திரத்தினுடைய அர்த்தமாய் இருக்கின்றது – அது பாடுகளின் பாத்திரமாகும், மரணத்தின் பாத்திரமாகும் – தேவனுடைய சித்தத்திற்கான முழுமையான ஒப்புக்கொடுத்தலாகும். "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்பதே போதகருடைய ஜெபமாக இருந்தது மற்றும் இதுவே நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பவர்களின் மன உணர்வாகவும், வேண்டுகோளாகவும் காணப்பட வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்கள் இந்த நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுத்தல் என்பது, பயனற்றதாக/நாடகமாக இருக்கும்; மற்றும் இது தவறாய் இருக்கும் மற்றும் தேவனிடமிருந்தும், மற்றும் தங்கள் செய்கையினுடைய தவறை உணர்ந்துகொள்வதற்கேற்ப தங்கள் சொந்த மனசாட்சியினிடமிருந்தும் குற்றவாளி என்று தீர்க்கப்படுதலையும், மறுப்பையும் கொண்டுவருதலாய் இருக்கும்.

ஆனால் மாம்சத்தினுடைய அபூரணங்கள் காரணமாக, எவரும் நினைவுகூருதல் ஆசரிப்பிலிருந்து விலகிக்கொள்ள நினைத்திட வேண்டாம். மாம்சத்தின் அபூரணம் என்பது அநேகருக்கு மிகுந்த இடறலின் கல்லாய்க் காணப்படுகின்றது. நாம் மாம்சத்தில் காணப்படுவதுவரையிலும், வார்த்தையிலும், கிரியையிலும், சிந்தையிலும் அபூரணங்கள் காணப்படவே செய்யும் - ஆம் இவை தவிர்க்கப்பட முடியாதவைகள். நாம் விரும்புகிறவைகளைச் செய்யமுடியாது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகின்றார். இதன் காரணமாக நம்முடைய அன்றாட, வேண்டுமென்றில்லாத, மனப்பூர்வமாய்ச் செய்யப்படாத மீறுதல்கள் மன்னிக்கப்படுவதற்கு நமக்குத் தெய்வீகக் கிருபை அவசியமாய் உள்ளது; ஆகையால் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களும், கிறிஸ்துவினுடைய ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுமானவர்கள் அனைவரும் ஜெபத்தில், பரலோகக் கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்கு வருவதற்கு

ஊக்குவிக்கப்படுகின்றனர். "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (எபிரெயர் 4:16) தேவைகளின் காரணமாகவே, தேவன் வழியைத் திறந்து, நமக்காக இந்த ஏற்பாட்டினை ஏற்பாடு பண்ணினார்.

நாம் எதற்காக — பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தினால் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டோமோ, அந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான தேவனுடைய ஏற்பாட்டின் மூலமாக, நாம் இனி ஒருபோதும் பாவிகளென ஆக்கினையின் கீழ் இல்லாமல், மாறாக கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கின்றோம் என்று உணர்ந்துகொள்வோமாக. இதுவே, ஒவ்வொரு நாளும் பொருந்தக்கூடிய பரிசுத்த பவுலினுடைய பின்வரும் வார்த்தைகளுக்குப் பின்னாகக் காணப்படுகின்ற கருத்தாகும்; அதாவது "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (உரோமர் 12:1)

கிறிஸ்தவர்கள் அனைவரும் கர்த்தரிடம் தங்கள் கணக்குகளைத் தீர்த்த நிலையில் வைத்திருக்க வேண்டும். கணக்குளைத் தீர்த்துக்கொள்ளவில்லையெனில், காலம் கடத்தாமல் கணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது இரட்சகருடைய பலியின் புண்ணியத்தின்மூலம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தரோடு உள்ள இப்படியான கணக்குகள் அவைகள் நிகழ்ந்தபோதே, உடனடியாகச் சரிச்செய்யப்பட வேண்டும் அல்லது அவை நிகழ்ந்த நாளிலேயே சரிச்செய்யப்பட வேண்டும். அவைகள் குவிவதற்கு நாம் அனுமதித்திடக்கூடாது; ஏனெனில் அவை ஆத்துமாவிற்கும், பரம பிதாவிற்கும் இடையில் மதிற்சுவரை எழுப்பிவிடும். ஆனால் கடந்தகாலங்களில் சூழ்நிலைகள் என்னவாகக் காணப்பட்டாலும்கூட, நினைவுகூருதல் காலங்கள் என்பது, மற்றக் காலங்கள் அனைத்தையும் காட்டிலும், கர்த்தருக்கும் நமக்கும் இடையில் எந்த மேகமும் காணப்படாமலும், நம்மை அவருடைய கண்களிலிருந்து மறைத்துப்போடாமலும் இருக்கத்தக்கதாக, நாம் பார்த்துக்கொள்வதற்குரிய காலமாய் இருக்கின்றது.

இப்படியாக மன்னிக்கப்பட்டு, கிறிஸ்துவினுடைய நீதியாகிய நம்முடைய வஸ்திரத்திலுள்ள அசுசியான கறைகள் சுத்திகரிக்கப்பட்டு, நாம் பண்டிகையை – நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை ஆசரிப்போமாக. இந்த நினைவுகூருதலில் நாம் அவரது பலி மற்றும் மரணத்தினுடைய புண்ணியத்தின் முக்கியத்துவத்தினை மீண்டுமாக ஒப்புக்கொண்டு, இதை நம் மனங்களில் பதியவைத்திடுவோமாக மற்றும் அவரது பலியும், மரணமும் எப்படி நமக்கான தேவனுடைய கிருபையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்றும், எதிர்க்காலத்தில் ஆயிரவருட இராஜ்யத்தின் மூலமாக முழு உலகத்திற்கும் பாராட்டப்படும், அதே கிருபையாய் இருக்கும் என்றும் ஒப்புக்கொண்டு, நம் மனங்களில் பதியவைத்திடுவோமாக. நம்முடைய அர்ப்பணிப்புக் குறித்தும், நம்முடைய கர்த்தரோடு மரிப்பதற்கும், ஒரே அப்பத்தின் பாகங்களாக, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பிட்கப்படுவதற்கும், அவரது பாடுகள், அவமானம் மற்றும் மரணத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுவதில் பங்கெடுப்பதற்குமான நம்முடைய அர்ப்பணிப்புக் குறித்தும் நினைவுகூருவோமாக. "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." (2 தீமோத்தேயு 2:12)

இந்த வருஷத்தில் நினைவுகூருதல் ஆசரிப்பானது, எங்குமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்களுக்கு மிகுந்த ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவும், ஐசுவரியமான ஆசீர்வாதமுள்ள தருணமாகவும் காணப்படும் என்று நாம் விசுவாசிக்கின்றோம். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7, 8)

*****

# உங்களால் கூடுமா?

*"நான் குடிக்கப்போகும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க, உங்களால் கூடுமா என்றார்."*
*மத்தேயு 20:22*

நம்முடைய இரட்சகரினால் இவ்வார்த்தைகள் பேசப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் நினைவுக்குக்கொண்டுவந்து பார்க்கிறோம்; இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு சிலநாட்களுக்கு முன்பாக இதைக்கூறினார். இயேசு தம்முடைய இராஜ்யத்தில், தம்முடைய சிங்காசனத்தில் இருக்கும்போது, தம்முடைய சீஷர்களும் தம்முடன்கூட இருப்பார்கள் என வாக்களித்திருந்தார். கர்த்தர் சொன்ன விஷயத்தில் அவர்கள் மிகவும் நம்பிக்கையாக இருந்தபடியினால் அவர்கள் தாங்கள் வகிக்கப்போகும் ஸ்தானத்தைக் குறித்து விவாதம் பண்ணிக்கொண்டிருந்தனர். யாக்கோபு மற்றும் யோவான் எனும் இரண்டு சீஷர்களுடைய தாயானவள் இயேசுவினிடத்தில் வந்து, இராஜ்யத்தில் தன்னுடைய இரண்டு குமாரர்களும் அவருக்கு வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் இருப்பதற்கு வேண்டிக்கொண்டாள். இயேசு இரண்டு சீஷர்களிடத்தில் திரும்பி, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்று கேட்டார்.

இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே தண்ணீரினால் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார் என நாம் அறிவோம். தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக, அவர் மனுஷருக்கான இரட்சகராக மரிக்க வேண்டியிருந்தது. அவர் முப்பது வயதை அடைந்தவுடன் — நியாயப்பிரமாணத்தின்கீழ் முப்பதாவது வயதை அடைந்தவுடன், இந்த மரணத்தை அவர் அடையாளமாய்த் தெரியப்படுத்தினார். அவருடைய ஊழியத்தின் மூன்றரை வருட காலப்பகுதியில், அவர் இந்த ஸ்நானத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்; அதாவது தம்முடைய ஆத்துமாவை மரணத்திற்குள் ஊற்றிக்கொண்டிருந்தார். இந்த மரணத்தை அவர் கல்வாரியில் முடித்தார். "நான் பெறும் ஸ்நானத்தை" என்று இயேசு கூறியுள்ளார். இதை அவர் தற்காலத்தின் அடிப்படையிலேயே குறிப்பிடுகின்றாரே ஒழிய எதிர்க்காலத்தின் அல்லது கடந்த காலத்தின் அடிப்படையில் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் பாத்திரத்தைக் குறித்து வித்தியாசமாகப் பேசுகின்றார். "நான் குடிக்கப்போகும் பாத்திரத்தில்" என்று கூறுகின்றார். பாத்திரத்தின் விஷயத்தில் தற்காலத்தின் (அ) கடந்த காலத்தின் அடிப்படையில் பேசாமல் எதிர்கால அடிப்படையில் பேசுகின்றார். தாம் எருசலேமுக்குப் போகப்போவதாகவும், அங்கு அவர் சிலுவையில் அறையப்படுவார் என்றும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் கூறியிருந்தார். வேறொரு தருணத்தின்போது, "மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கூறியிருந்தார் (யோவான் 6:53). போதகர் தாம் சிலுவையில் அறையப்படுவதுபற்றிக் கூறியிருந்தவைகளைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இயேசு சூழ்நிலையைப் புரிந்தவராக இருந்தார் மற்றும் தமக்காக இப்பாத்திரம் ஊற்றப்படப் போகின்றது என்பதையும் இயேசு அறிந்திருந்தார். இதைக் குறித்து அவர் மீண்டுமாக, "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ என்றார் (யோவான் 18:11).

## நமது கர்த்தருக்கான விசேஷித்த சோதனை

பாத்திரம் எனும் வார்த்தையானது, ஜீவியத்தின் பல்வேறு அனுபவங்களைக் குறிப்பதாக நாம் எண்ணக்கூடும்; அதாவது அனைவருக்கும் சந்தோஷமும், துக்கமும் கலந்த பாத்திரம் உள்ளது என்று எண்ணக்கூடும். ஆனால் இயேசு இவ்வார்த்தையைவேறே அர்த்தத்தில் பயன்படுத்தினார். அவர் கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது, "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினார். மீண்டுமாக அதே இரவில், "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினால் ஒழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறியும் ஜெபம்பண்ணினார். மரணத்திற்குள்ளான அவருடைய ஸ்நானத்தின் விஷயத்தில், நமது கர்த்தருக்கு எவ்விதமான தயக்கமுமில்லை. ஆரம்பம் துவங்கியே இம்மரணத்திற்குள்ளான ஸ்நானத்தின் விஷயத்தில் அவர் விரும்பி முன்வந்து பங்கெடுத்தார். அவமானமான மரணத்தைத்தான், அவர் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று ஜெபம்பண்ணினார். ஆனால் இப்படி அவமானத்துடன் தாம் மரிக்க வேண்டும்

என்பதுதான், தமக்கான பிதாவின் சித்தமாக இருக்கின்றது என அறிந்துகொண்ட மாத்திரத்தில், அதை ஏற்றுக்கொள்வதிலும் அவர் விருப்பமாயிருந்தார்.

தெய்வீகப் பிரமாணத்தைத் தூஷித்தவராக நமது கர்த்தர் மரணத் தண்டனைக்குக் கையளிப்பதற்கென நியாயப்பிரமாணத்தில் எதுவும் இல்லை. எனினும் அவருக்கு எதிராக தேவ தூஷணத்தின் குற்றமே தேர்ந்தெடுக்கப்பட்டது. "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று இயேசு பேசின விஷயத்திலும், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமை கோரின விஷயத்திலும் இயேசு தேவ தூஷணம் செய்ததாக ஆலோசனை சங்கத்தார் முடிவுபண்ணினார்கள். தாம் மிகவும் நேசித்த பிதாவுக்குத் தூஷணம் பேசினதாகக் கருதப்படுதலிலும், ஒரு குற்றவாளி எனச் சிலுவையில் அறையப்படுதலிலும் உள்ள அவமானம் மற்றும் நிந்தையிலிருந்து விடுவிக்கப்படவே இயேசு விரும்பினார். மேலும் இது குறித்த பாரமே அவருடைய மனதை விசேஷமாக அழுத்திக்கொண்டிருந்தது.

இயேசு தாம் மரிப்பதற்காகவே பூமிக்கு வந்திருப்பதையும், தாம் பாடுப்பட வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். ஆனால் (அவமானம் அடைதலாகிய) தம்முடைய அனுபவத்தின் இந்த ஒரு பாகத்தை அவர் முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை. "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்" என்பதை இயேசு அறிந்திருந்தார். இவ்வார்த்தைகள் இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பக் காலங்களில் நிக்கொதேமுவிடம் கூறியிருந்தார் (யோவான் 3:14). ஆனால் தாம் இழிவுபடுத்தப்படப் போகின்ற, அவமதிக்கப்படப்போகின்ற நேரத்தை அவர் நெருங்க நெருங்க, அவ்விஷயம் அனைத்தையும் அவர் உணர்ந்தபோது, அவர் மிகவும் கூனிகுறுகி, "இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் என்னைவிட்டு நீங்கட்டும்" என்று கதறி, தம்முடைய இருதயத்தை ஊற்றினார். ஆனால் தம்முடைய அர்ப்பணிப்பின்போது, "இதோ தேவனே உம் சித்தம் செய்ய வருகின்றேன்" என்றுள்ள தம்முடைய உறுதிமொழியை உண்மை என்று தெரிவிக்கும்வண்ணமாக, உடனடியாக இயேசு, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கூறினார் (மத்தேயு 26:39).

## அவருடைய அவமானத்தில் பங்குகொள்வதற்கு நாம் விரும்புகின்றோமா?

நமது இரட்சகர் தம்முடைய சீஷர்களிடம் பின்வரும் விதத்தில் கேட்டார். அதாவது, உங்களுடைய ஜீவன்களை எடுத்துவிடுவது அநியாயமானதாய் உங்களுக்குத் தோன்றும் நிலையிலும், உங்களுடைய ஜீவியங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க உங்களால்கூடுமா? நான் பானம்பண்ணப்போகின்ற இந்தப் பாத்திரத்தில், உங்களால் பானம்பண்ணக்கூடுமா? இது அவமானமும், நிந்தனையும், இழிவும் தொடர்புடையதாய் இருக்கும். என்னோடுகூட இந்தப் பாத்திரத்தில் நீங்கள் பங்குபெற விரும்புகின்றீர்களா?" என்று கேட்டார். "எங்களால் கூடும்" என்று சீஷர்கள் பதிலளித்தார்கள். அவர்கள் விருப்பத்துடன் காணப்பட்டனர்.

இதே பாத்திரம்தான் இராப்போஜனத்தில் இடம்பெறும் பாத்திரத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றது என்பதைக் காண்கின்றோம். அப்பம் நமது கர்த்தருடைய சரீரத்தையும், திராட்சரசம் அவருடைய இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது. பாத்திரமானது, அவருடைய மரணம் தொடர்புடைய அவமானத்தையும், நிந்தனையையும் விசேஷமாக அடையாளப்படுத்துகின்றது; அவருடைய பாத்திரத்தில் பங்குகொள்வதற்குத் தாங்கள் விரும்புகின்றதாக இரண்டு சீஷர்களும் கூறினார்கள்; அவர்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. என்ன வந்தாலும், உண்மையாய் இருக்க அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். அவர் என்ன நிபந்தனைகள் வைத்தாலும், அதற்குச் சம்மதிக்க ஆயத்தமாயிருந்தனர். ஸ்நானம் எனும் வார்த்தையின் அல்லது பாத்திரம் எனும் வார்த்தையின் முழுப்பொருளையும் அவர்கள் இன்னமும் அறிந்துகொள்ளவில்லை. இப்படியாகவே அவருடைய சீஷர்கள் அனைவரும் காணப்பட்டனர். பெந்தெகொஸ்தே நாள் வரும்போதோ, அவர் முன்னுரைத்திருந்ததுபோல, அவர்களிடம் அவர் பேசியிருந்த அனைத்தும் அவர்களுடைய நினைவுக்குவரும் (யோவான் 16:4; 13:19). ஆனால் அவர்கள் விருப்பத்துடனும், வாஞ்சையுடனும் காணப்பட்டனர். இப்படியாகவே நாமும் காணப்பட வேண்டும். அவர்கள் விரும்புவார்களானால், அவர்கள் இந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், இங்கு இப்படியாகத் தொடர்ந்து விருப்பம் கொண்டிருந்து, தம்முடன் தொடர்ந்து பாடுபடுவார்களானால், தம்மோடுகூடத் தம்முடைய சிங்காசனத்தில் ஆளுகைசெய்வார்கள் என்றும் இயேசு உறுதியளித்தார். ஆனாலும், சிங்காசனத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய இடத்தைக் கூறுவது தமக்கான காரியமாய் இராமல், பிதாவுக்கு அடுத்த காரியமாகவே இருக்கின்றது என்று இயேசு தெரிவித்தார்.

இடுக்கமான வழியில் நம்முடைய அருமையான மீட்பர் தைரியத்துடனும், மனோதிடத்துடனும் நடந்துசென்றது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அவர் எத்துணை பலமானவராகவும்,

தைரியமானவராகவும் காணப்பட்டிருக்கின்றார்! அவர் பின்வாங்குவதற்கான சிந்தனையைக் கொண்டிருக்கவேயில்லை; உலகத்தின் நன்மைக்காகத் தம்மைப் பலிசெலுத்த வேண்டும் என்றுள்ள பரலோகத்திலுள்ள பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவருடைய முழு நோக்கமாக இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு முன்பாக எத்துணை ஓர் உயர்வான மாதிரி முன்வைக்கப்பட்டது — மிகுதியான தாழ்மை மற்றும் சுயத்தை முழுக்கச் சரணடையப்பண்ணுவதன் மூலமாக ஜெயங்கொள்ளுவதற்கான உயர்வான ஒரு மாதிரி முன்வைக்கப்பட்டது!

## சபை கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுதல்

கர்த்தருடைய பாத்திரத்தில் சபை பானம்பண்ணுதல் என்பது, தற்காலத்தில் கிறிஸ்துவின் பாடுகளிலுள்ள நமது பங்கெடுப்பை அடையாளப்படுத்துகின்றது. சரியான நிபந்தனைகளின்கீழ் இப்பொழுது வராத எவரும், புதிய உடன்படிக்கைக்கான மாபெரும் மத்தியஸ்தரினுடைய சரீரத்தில் அங்கம் ஆகிடமுடியாது. ஆகவே, இரத்தத்தைப் பானம் பண்ணுவது என்பது, பாத்திரத்தில் பங்கடைதல் ஆகும். ஒருவேளை நாம் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணவில்லை என்றால், நாம் அவருடைய மகிமையில் அவருடன் பங்கடையமுடியாது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 26:27). அனைவரும், பானம்பண்ண வேண்டும், மற்றும் முழுப் பாத்திரமும் இந்த யுகத்தில் காலியாக வேண்டும்.

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைவதற்கென நாம் அனுமதிக்கப்பட்டிருப்பது என்பது மிகவும் பெரிதான சிலாக்கியமாகும். "அவரோடேகூட பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகை செய்வோம்." புதிய யுகத்தை ஆரம்பித்து வைப்பதிலும், அதின் ஆசீர்வாதங்களை விநியோகிப்பதிலும் நாம் பங்கடைவோம். இரத்தத்தைத் தெளிக்கும் நிஜமான மோசே, மகிமையடைந்த தலையும், அவரது சரீரமாகிய சபையுமான கிறிஸ்து ஆவார். "மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (அப்போஸ்தலர் 3:22). மோசே சிறிய அளவில் கர்த்தருக்கு நிழலாக காணப்படுகின்றார். சரீரம் இப்பொழுது உயிர்த்தெழுப்பப்பட்டுக்கொண்டு வருகிறது. இயேசு முதலாவதாக எழுப்பப்பட்டார். பின்னர் அப்போஸ்தலர்கள் அனைவரும், பின்னர் அவருடைய சரீரத்தின் மீதி அங்கத்தினர்கள் அனைவரும் எழுப்பப்படுவார்கள்.

மோசே ஜனங்கள் அனைவர்மீதும் தெளித்ததுபோல இந்த நிஜமான மோசேயும் நிறைவடையும்போது மனுக்குலத்தின் உலகத்தின்மீது "தெளிப்பார்;" மேலும், இது மனுக்குலத்தைத் தெய்வீகப் பிரமாணத்துடனான இசைவிற்குள் கொண்டுவருவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். மனுக்குலத்தின்மீது தெளிக்கப்படுவதற்கு ஆயிரம் வருடங்கள் தேவைப்படும். ஆகவே பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், இரத்தத்தைத் தெளிப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இரத்தத்தைத் தெளிப்பது என்பது, நீதிமானாக்கப்படுதலைக்குறிக்கின்றது. ஆனால் சபையினால் பாத்திரத்தில் பானம்பண்ணப்படுவது என்பது, நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், பரிசுத்தமாக்கப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கும்.

## தெய்வீக நோக்கங்களை நமது கர்த்தர் அடையாளம் கண்டுகொள்ளுதல்

"என் பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று பரிசுத்தவானாகிய பேதுருவிடம் கூறப்பட்ட நம்முடைய கர்த்தரின் வார்த்தைகளானது, முடிவில் கடுமையானதாய் இருக்கும் அவருடைய மரண அனுபவங்களைப்பற்றியே குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் மனுஷரால் அவமதிக்கப்பட்டு, தேவனுடைய சத்துருவாக, அதாவது தேவ தூஷணம் புரிந்தவராகக் கருதப்பட்டார். தம்முடைய சரீரப்பிரகாரமான பாடுகள் கடுமையானதாகக் காணப்படும் என்று அவர் அறிந்திருந்தார்; எனினும் அவருடைய வலியில் இன்னும் கூடுதல் வலியாக, அவருடைய பரிபூரணமான மனதிற்கு, அவமானமும், கெட்டப்பெயரும் காணப்பட்டது. எனினும், இந்தப் பாத்திரத்தையே, பிதா அவருக்குக் கொடுத்திருந்தார். இதுவே இயேசு தொடர்புடைய தெய்வீக நோக்கமாக இருந்தது.

நமது கர்த்தர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டுவதற்கு அவசியமாய் இருந்த அனைத்து அனுபவங்களையும் பெற்றிருந்தார். ஏனெனில், தேவ தூதர்கள் மற்றும் மனுஷர்களாகிய இருவருக்கு முன்பாகவும், அவர் தமது நேர்மையை/உண்மையை வெளிப்படுத்துவது அவசியமாய் இருந்தது. அனைத்து விஷயங்களும் மனிதனுடைய சிருஷ்டிப்புக்கு முன்னதாகவே தேவனால் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. "அவர் உலக தோற்றத்திற்கு முன்னதாக அடிக்கப்பட்ட

ஆட்டுக்குட்டியாக இருந்தார்" (வெளிப்படுத்தல் 13:8). அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி தொடர்புடைய அனைத்தும் பிதாவினால் முன்னமே அறியப்பட்டிருந்தது. இயேசு மனுஷனை மீட்கத்தக்கதாகவும், இப்படியாக உண்மையும் இரக்கமுமுள்ள பிரதான ஆசாரியனாக ஆகத்தக்கதாகவும் இயேசு பாவிகளுக்கு உரியதான பாத்திரத்தைப் பானம்பண்ண வேண்டியிருந்தது. அது பாடுகள் மற்றும் மரணத்தின் பாத்திரமாய் இருந்தது. இயேசு யூதனை மீட்கத்தக்கதாக சிலுவையின் மரணத்தை அடைவது அவசியமாய் இருந்தது.

## கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்ததில் வெளிப்பட்ட அன்பு மற்றும் நேர்மை

அவருடைய பாடுகள் அனைத்தும் வேத வாக்கியங்களில் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்ட விஷயத்தில் சிலுவையில் அறையப்படுதல் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவருடைய அனுபவங்கள் அனைத்தும் முன்னமே அறியப்பட்டிருந்தது, முன்னமே ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது மற்றும் அவசியமாய் இருந்தது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவர் பூமியில் வந்தபோதோ, வரவிருக்கின்ற அனைத்தையும் அவர் அறியவில்லை. ஆனாலும், "புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள" பாடுகளை அவர் அனுபவித்ததின்மூலம் அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். பிதாவின் சித்தம் அனைத்திற்கும் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்தார் மற்றும் இப்படியாகத் தம்முடைய நேர்மையை நிரூபித்தார். "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வந்தேன்." என்று அவரே கூறினார் (யோவான் 6:38). அவருடைய பலி பட்சிக்கப்படுவதற்குரிய வேளை நெருங்கியபோது, கெத்செமனேயின் தனிமையில், "பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" எனப் போதகர் ஜெபம்பண்ணினார். அவர் மரணத்தின் பாத்திரம் நீங்குவதற்கு ஜெபம் பண்ணினார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக சிலுவையில் அறையப்படுதலில் உள்ள அவமானத்தின் அனுபவங்கள் மாறக்கூடுமோ (அ) இல்லையோ என்றே எண்ணினவராகக் காணப்பட்டார். எனினும், அவர் முறுமுறுக்காமல் (அ) எதிர்க்காமல், "ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று கூறினதையே நாம் காண்கின்றோம்!

## நம்முடைய பாத்திரத்திற்கான விசேஷித்த மேற்பார்வை

நமது நேச கர்த்தர் கசப்பான பாத்திரத்தை அடிமண்டிவரை பருகினார் என்றும், அதுவும் மிகவும் நன்றியுடன் பருகினார் என்றும் நாம் காண்கின்றோம். நாம் அனைவரும்கூட அப்பாத்திரத்தில் பானம்பண்ணத்தக்கதாக நமக்கும் அவர் பாத்திரத்தைக் கொடுத்துள்ளதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். அவருக்கு இருந்த அதே அனுபவங்கள் அப்படியே நமக்கு இருப்பதில்லை. எனினும் பிதாவின் சித்தமான வழியில், மரணம் மற்றும் பாடுகளின் பாத்திரத்தில் நாம் அனைவரும் பானம் பண்ண வேண்டும். இயேசு பரிபூரணமானவராக இருந்தபடியால் அவரை மிகக் குறிப்பிடத்தக்க விதத்தில் பிதா கையாண்டார்.

நம்முடைய விஷயத்தில் அனுபவங்கள் வித்தியாசமானதாய்க் காணப்படும்; ஏனெனில் நாம் பூரணமில்லாதவர்களாய்க் காணப்படுவதினால், பூரணமானவரைக் கையாளும் கண்ணோட்டத்தில் இருந்துகொண்டு நாம் கையாளப்பட முடியாது. ஆகவே நமக்கான பாத்திரம் என்பது, போதகருடையதுபோன்று நிர்ணயிக்கப்பட்டதாக, குறிப்பிட்டதாக இருக்குமென்று எண்ணக்கூடாது; மாறாக, பிதா தம்முடைய குமாரனுடன்கூட நாம் மரணத்தின் பாத்திரத்தில் ஒரு பங்கடையும்படிக்கு நம்மை அனுமதித்துள்ளார். பிதாவின் திட்டத்தின்படி, பிதாவினால் நம்முடைய பாத்திரம் ஊற்றப்படுகிறதாயினும், நம்முடைய பாத்திரமானது நம்முடைய இரட்சகரினால் மேற்பார்வையிடப்படுகின்றது.

போதகருடைய விஷயத்தில், முழு உலகத்தின் பாவத்திற்கெனப் பாத்திரம் அவசியமாய் இருந்தது. நம்முடைய விஷயத்தில் அது அவசியமில்லை; எனினும் நமது கர்த்தருடைய பாடுகளிலும், மகிமையிலும் ஒரு பங்கை நமக்கு அருளுவது பிதாவுக்குப் பிரியமாயிற்று. இயேசு நம்முடைய குறைவுகளை நிறைவாக்கி, நம்முடைய குணநலன்களை வளர்த்தி, நம்மை அவருடைய மகிமையின் சாயலுக்கு வனைகின்றார். நமது பாத்திரத்தின்மீதான நமது கர்த்தருடைய மேற்பார்வை இல்லையெனில் நாம் அநேக விஷயத்தில் குறைவாகவே வளர்ச்சியடைந்திருப்போம்; ஆகவே, நம்முடைய பாத்திரத்திற்கு விசேஷித்த மேற்பார்வை அவசியமாய் உள்ளது. ஆகவேதான், அவசியமான அனுபவங்கள் நமக்கு வரும் அதே வேளையில் அவருடைய கிருபையும் நமக்குப் போதுமானதாக இருக்கும் என்றும், நம்முடைய பெலவீனத்தில் அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும் என்றும், அனைத்தும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்றும் கர்த்தர் நமக்கு வாக்களித்துள்ளார்.

நாம் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுக்காதது வரையிலும், நாம் அவருடன் கூட மரணத்திற்குள் மூழ்காததுவரையிலும், நம்மால் அவருடைய மகிமையின் இராஜ்யத்தில் பங்கடையமுடியாது என்பதையும், அவருடைய சிங்காசனத்தில் அவருடன்கூட ஒருபோதும் நம்மால் உட்கார முடியாது என்பதையும், நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. மாபெரும் விலையுடைய இந்த முத்தை அடையத்தக்கதாக, இந்தப் பூமியின் அனைத்தையும், குப்பையும், நஷ்டமும் என்று எண்ணக்கடவோமாக. பாடுகளின் அனுபவங்கள் நமக்கு வரும்போது, நாம் அச்சமடையாமல் இருப்போமாக. இன்னுமாக, "நம்மை சோதிக்கும்படி, நம் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" காணப்படுவோமாக; ஏனெனில் நம்முடைய அன்புக்குரிய போதகருடன்கூட இப்பொழுது பாடுபடுவதற்கும், பின்னர் நித்தியத்திற்குரிய இராஜ்யத்தில் அவருடன்கூட மகிமைப்படத்தக்கதாக, "நாம் அழைக்கப்பட்டும் இருக்கின்றோம்!"

"உனக்கு பக்கபலமாக நிற்க நண்பனும் இல்லை,
இளைப்பாறுதல் தர எந்தக் கரமும் இல்லை,
குறுகலான வழி, நெருக்கமான பாதையில் நடக்க உன்னால் கூடுமா?
காரிருளில் உன்னால் துணிச்சலாக முன்னேறிச் செல்ல முடியுமா?
அங்குக் கர்த்தர் வெளிச்சத்தை அனுப்பும் வரை
பொறுமையோடு காத்திருக்க உன்னால் முடியுமா?"

"இப்படியாக... அவர் அளிக்கும் பாத்திரத்தில் நீ பானம் பண்ணி
சத்தியக்கொடியை உயர்த்திப் பிடித்திருக்கும்போது
நீ அவருடையவனாய் இருப்பாய்,
அவருடைய கிரீடம் உனக்கு மகுடமாகும்.
அவரது சிங்காசனத்தில் நீ அமர்ந்து,
அவரது மகிமையில் பங்குபெறுவாய்."

*****

R 5425

# "சீஷத்துவத்திற்கான விலை"

## லூக்கா 14:25-35

"தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்." (மத்தேயு 16:25).

அது மாபெரும் போதகருடைய ஊழியத்தின் நிறைவு காலமாய் இருந்தது. அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த திரளான ஜனக்கூட்டத்தினர், நியாயப்பிரமாணத்தின்படி, பஸ்கா பண்டிகையைக் கைக்கொள்ளும்படிக்கு எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்தனர்; இயேசுவும் தாம் பஸ்கா பண்டிகையின்போது, நிஜமான பஸ்கா ஆடாக மரிக்கப்போவதையும் முன்கூட்டியே அறிந்தவராக இருந்தார். அவ்வப்போது பிரயாணத்தில் இயேசு திரும்பி, ஜனக்கூட்டத்தாரில் சிலருக்குப் போதகம் பண்ணினார். இன்றைய பாடத்தில் நாம் அவரால் இத்தருணங்களின் போது கொடுக்கப்பட்ட சில போதனைகளைப் பார்க்கப் போகின்றோம். அக்காலத்தில் போதகர்கள் மாணவர்களை (அ) சீஷர்களை ஏற்றுக்கொள்வது வழக்கமாய் இருந்தது; அதாவது தங்களை மாபெரும் போதகர்களாகக் கருதி, தங்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ள விரும்பும், தங்கள் அறிவுரைகளினால் நன்மையடைய விரும்பும் மாணவர்களை ஏற்றுக்கொள்வது அக்காலத்தில் போதகர்களின் வழக்கமாயிருந்தது. இன்றும் கூடக் கிறிஸ்தவர்கள் தங்களை இயேசுவின் பின்னடியார்கள் (அ) சீஷர்கள் எனக் கூறுகின்றனர்; இன்னுமாக அவருடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பதாகவும், அவர் தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களுக்கு வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களை நாடுவதாகவும் கூறுகின்றனர்.

அவருடைய வாய்க்கருவிகள் என்றும், அவருடைய ஊழியர்கள் என்றும் தங்களைக் குறித்துக் கூறிக்கொள்பவர்கள் தெரிவிக்கும் காரியங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாக, இயேசு முன்வைத்துள்ள சீஷயத்துவத்தின் நிபந்தனைகள் காணப்படுவது கவனிக்கப்படலாம். சபையில் எழும்பி நின்று ஒருவன், தான் தேவனுடைய ஜனங்களின் ஜெபத்தை விரும்புவதாகக் கூறுவதே, சீஷயத்துவத்திற்குப் போதுமான அடையாளமாக இருக்கின்றது எனச் சிலரால் சிலசமயம் கூறப்படுகின்றது. இன்னுமாக இப்படியாக தேவனுடைய ஜனங்களின் ஜெபங்களை விரும்புவதாகக் கூறுகின்றவன், கிறிஸ்தவனாக மனமாறியுள்ளான் என்று எண்ணப்படுகின்றான். இந்த ஒரு படியை அவன் அடியெடுத்து வைப்பதற்குக் கூடத் தூண்டுதல்கள் தேவைப்படுகின்றதாம். சிலசமயம் இத்தகைய தூண்டுதல்கள் வர்த்தக அடிப்படையில், அதாவது வியாபாரிக்கு, அதிகமான செழிப்பு, தொழிலில் ஏற்படுவதன் மூலம் அல்லது, வேலைக்காரனுக்கு, தன்னுடைய எஜமானிடத்தில் மாபெரும் தயவு கிடைப்பதன் மூலம் அல்லது அரசியல் வேலையில் நல்ல வாய்ப்புப் பெற்றுக்கொள்வதன் மூலம் தூண்டுதல்கள் ஏற்படுகின்றதாம்.

இவைகளையெல்லாம், நாம் இப்பாடத்தில் பார்க்கப் போகும் இயேசுவினுடைய வார்த்தைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, பெரும்பாலான பெயர்க் கிறிஸ்தவர்கள், தாங்கள் அறிக்கைப் பண்ணவேண்டும் என்று ஒருபோதும் நோக்கம் கொண்டிராதவைகளையே, நயமான தூண்டுதலினால் அறிக்கைப் பண்ணிக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் புரிந்துக்கொள்ள முடியும். சீஷயத்துவத்தற்கான ஆண்டவருடைய நிபந்தனைகளின்படி, ஒருபோதும் கிறிஸ்தவர்கள் ஆகாத அநேகரும், மற்றும் அவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காத அநேகரும் கிறிஸ்தவத்தை அறிக்கைப்பண்ணத்தக்கதாகப் பொறியில் சிக்கவைக்கப்பட்டுள்ளனர். "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:26, 27). இப்படியான தெளிவான வார்த்தைகளையும், நிபந்தனைகளையும் தவறாய்ப் புரிந்துக்கொண்டுள்ளோம் என்று சொல்ல எந்தச் சாக்குப்போக்கும் இல்லை. அவருடைய சீஷர்களால் மாத்திரமே நித்தியத்திற்கான ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆண்டவர் சொல்லவில்லை. முழு உலகமும் தொலைந்துப்போய், தேவனிடத்திலிருந்து பிரிந்துப் போய், நித்திய ஜீவனுக்கான உரிமை இல்லாமல் காணப்படுகின்றது என்பதே அவருடைய பொதுவான போதனையாக இருக்கின்றது. அநீதியுள்ளவர்கள் அனைவரும், தெய்வீகத் தயவிற்குள்ளாக திரும்புவதற்காக வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ஆண்டவர் "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" மரிக்க வந்திட்டார். எதிர்கால ஜீவியத்திற்கான இப்படிப்பட்ட வாய்ப்பினை, அவருடைய பின்னடியார்கள் தவிர, வேறு எவரும் பெற்றுக்கொள்வதில்லை என்று இயேசு சொல்லவில்லை. இப்படியாகவெல்லாம் தவறாய்க் கூறுபவர்கள், தங்களையே குழப்பிக் கொள்ளுகிறவர்களாய் இருப்பார்கள்.

"உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகிய மெய் ஒளியாக," ஏற்றக்காலத்தில் தாம் இருப்பார் என்றே இயேசு போதித்தார். இயேசு வருவதற்கு முன்னதாக, 4000 வருடங்களாகவே உலகம் ஏற்கெனவே காணப்பட்டு வருகின்றது; மேலும் அவர் வருவதற்கு முன்பு வாழ்ந்தவர்களுக்கு அவரை அறிவதற்கோ, அவருடைய சீஷர்களாக ஆகுவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதை யாரும் மறுப்பதில்லை. எனினும் இவர்களையும் ஆசீர்வதிப்பதற்காகவும், அவர் வந்த பிறகு உலகத்தில் பிறந்த அனைவரையும் ஆசீர்வதிப்பதற்காகவுமே அவர் மரித்தார். இப்படியாக உலகத்தை ஆசீர்வதிப்பது என்பது, அவருடைய இராஜ்யத்தில் நிறைவேற்றப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்; மேலும் அவருடைய இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாய், இந்த யுகத்திற்குரியதாய் இராமல், எதிர்க்காலத்திற்குரியதாய் இருக்கின்றது என்றும் அவர் தெளிவாய்க் கூறியுள்ளார். அதுவரையிலும் அவர் சீஷர்களை அழைத்து மாத்திரம் கொண்டிருக்கின்றாரே ஒழிய, உலகத்தை அணுக முயற்சிக்கவில்லை.

சீஷர்கள் அவரோடு கூடச் சிங்காசனத்தில் உட்காரத்தக்கதாகவும், மனுஷரைச் சீர்த்தூக்கும் அவருடைய மாபெரும் வேலையில் அவருடன் பங்குக்கொள்ளத்தக்கதாகவும், அதாவது ஆதாமுக்குள் இழக்கப்பட்டு, கல்வாரியில் மீட்கப்பட்ட அனைத்தையும் மனுக்குலத்திற்குத் திரும்பக்கொடுக்கும் அவருடைய மாபெரும் வேலையில், அவருடன் பங்குக்கொள்ளத்தக்கதாகவும் அவருடைய இராஜ்யத்தில், இயேசுவுடன் உடன்சுதந்திரராகும்படிக்குச் சீஷர்கள் அழைக்கப்படுகின்றனர். மிகுந்த உபத்திரவத்தின் வாயிலாக மாத்திரமே, சீஷர்களாக இராஜ்யத்தின் வகுப்பாருக்குள் பிரவேசிக்க முடியும் என்று, அவர் சீஷர்களுக்குத் தெளிவாய்க் கூறியுள்ளார்; இன்னுமாக உபத்திரவங்கள் என்பது, நீதியின் மீதான அவர்களுடைய அன்பையும், தேவனிடத்திலான அவர்களுடைய நேர்மையையும் நிரூபித்துக் காண்பிக்கும் என்றும் தெளிவாக அவர் சீஷர்களுக்குக் கூறியுள்ளார்; இன்னுமாக சொற்பமானவர்கள் மாத்திரமே, அதாவது தேவனுடைய பார்வையில் மனுக்குலத்திலேயே மிகவும் பொறுக்கியெடுக்கப்படத்தக்கதானவர்கள் மாத்திரமே இடுக்கமான வழியைக் கண்டுபிடிக்கத்தக்கதாக, வெகு சிலரே அந்தப் பாதையில், மகிமை, கனம் மற்றும் அழியாமையின் எல்லையை அடையத்தக்கதாக, தேவன் திட்டமிட்டே பாதையை மிகவும் இடுக்கமாக ஆக்கியுள்ளார் என்றும், அவர் தெளிவாய்ச் சீஷர்களுக்குக் கூறியுள்ளார்.

இந்தக் கண்ணோட்டங்களை, நம்முடைய மனக்கண்களுக்கு முன்பாக நாம் தெளிவாக வைக்கையில், சீஷயத்துவத்திற்குக் கடுமையான நிபந்தனைகள் இருப்பது நியாயம் என்று உணரப்படலாம். இப்படியான நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க விருப்பம் கொண்டு, இவ்வாறாக தேவனிடத்திலான தங்களுடைய அன்பையும், நேர்மையையும் நிரூபிப்பவர்களுக்கு மாத்திரமே, மீட்பரோடு கூட இராஜ்யத்தின் வகுப்பாருக்கு அருளப்படும் மாபெரும் வல்லமையும், கனமும், மகிமையும் கொடுக்கப்பட முடியும். இந்த வார்த்தைகளை நாம் கவனமாய் ஆராய்வோமாக; இதற்கிடையில் நம்மை, அதாவது நம்முடைய மாம்சத்தை அல்லாமல், நம்முடைய ஆவியை, நம்முடைய நோக்கங்களை, நம்முடைய வாஞ்சைகளைப் பரிசோதித்துப் பார்ப்போமாக.

இயேசுவினுடைய இந்த வார்த்தைகளைக் குறித்து **ஹென்றி வார்ட் பீச்சர்** அவர்கள் நன்றாய்ப் பின்வருமாறு கூறியுள்ளார் . . . "ஒருவரைப் பின்பற்றுவதற்கு விரும்பியும், வாஞ்சித்தும் இருப்பவர்களுக்குச் சொல்லப்பட்ட இப்படியான ஒரு வார்தை என்னைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்பும், ஒருபோதும் இப்படியாகப் பேசப்படவுமில்லை, பிற்பாடும் ஒருபோதும் இப்படியாகப் பேசப்படவுமில்லை." லூக்கா சுவிசேஷத்தில் இடம்பெறும் இவ்வசனத்திற்கு இணையான வார்த்தைகள், மத்தேயு 10:37-ஆம் வசனத்திலும் காணப்படுகின்றது, அதாவது "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." இங்கு இடம்பெறும் வெறுப்பு என்ற வார்த்தையானது, அன்பிற்கு எதிரானது என்று காட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சீஷன் ஆகுவது என்பது, நாம் கர்த்தரையும், அவர் ஆதரிக்கும் கொள்கைகளையும் பிரதானமாய் அன்புகூருவதாக இருக்கின்றபடியால், மற்றவர்களுக்கான அன்பு நமக்குக் கர்த்தரோடு ஒப்பிடுகையில் வெறுப்பாய்க் காணப்படும்.

நம் விஷயத்தில், கர்த்தருக்கான நம்முடைய அன்பிற்கும், அவருடைய சித்தத்திற்கான நம்முடைய கீழ்ப்படிதலுக்கும் எதிரான எந்த மற்ற அன்பையும் வெட்டிவிடுவது நோக்கமாக, சித்தமாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடைய அன்போடு ஒப்பிடுகையில், நம்முடைய பூமிக்குரிய அன்புகள் ஒருபொருட்டாக இல்லையென்று கருதப்பட வேண்டும். நமது கர்த்தருடைய கட்டளைக்கு ஏற்ப, ஒவ்வொரு பூமிக்குரிய எதிர்ப்பார்ப்பையும், நம்பிக்கையையும், இலட்சியத்தையும்,

நோக்கத்தையும், பலிச்செலுத்துவதற்கும், மற்றும் விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கும் நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். இப்படியான பக்தியின் வெளிப்பாடை வெளிப்படுத்துகிறவர்களிடத்தில் எதுவும் ஒப்படைக்கலாம். இவர்களைக் குறித்துக் கர்த்தர், "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்" என்று தீர்க்கத்தரிசனமாய்ப் பேசுகின்றார் (மல்கியா 3:17).

இயேசுவும் இப்படியான பண்பையே கொண்டிருந்தார் என்பதும், மற்றவைகள் அனைத்தையும்விட மேலாக பிதாவின் சித்தத்தையே முதன்மையாகக் கொண்டிருந்தார் என்பதும், இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்திரர்களாய் இருப்பவர்கள் அனைவரிடத்திலும் இதே மனது, இதே ஆவி காணப்படும் என்ற நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இராஜ்யம் சுயநலமான ஒன்றாக இராமல், எதிர்மாறாகவே இருக்கும் என்று அவர் நமக்கு நிச்சயம் அளிக்கின்றார். அந்த இராஜ்யத்தின் இராஜாக்கள், பிரபுக்கள், நியாயாதிபதிகள் வல்லமையில் மாத்திரம் எதிர்த்து வெல்லப்பட முடியாதவர்களாய் இராமல், கொஞ்சமும் அசுத்தப்படுத்தப்பட முடியாதவர்களாய் இருப்பார்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் தெய்வீகக் கோட்பாடே முதன்மையானதாகக் காணப்படும்.

இங்கு விவரிக்கப்பட்டுள்ளதான இப்படியான பக்தி என்பது சிலசமயம், அநேக பூமிக்குரிய பந்தங்களைத் துண்டித்துப் போடுவதைக் குறிக்கின்றதாக இருக்கும். இது இயேசுவின் பின்னடியார்களை, விநோதமான ஜனங்களாக எண்ணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். அநேகர் இவர்களுடைய போக்கை விநோதமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் எண்ணுவார்கள். ஆகவே, பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ள வண்ணம், நாம் கிறிஸ்துவின் நிமித்தமாகப் பைத்தியக்காரர்களாக எண்ணப்படுகின்றோம், ஏனெனில் மனித ஞானத்திற்கும், மனித அன்பிற்கும் பதிலாக, நாம் தேவனுடைய ஞானத்திற்கும், தேவனுடைய அன்பிற்கும் முன்னுரிமைக் கொடுத்துப் பிரசங்கிக்கின்றோம். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, பரிசுத்தவானாகிய யோவான், "அவர் இருக்கிறபிரகாரமாகவே நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்," அதாவது தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, பழித்துரைக்கப்பட்டு, விலக்கி வைக்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டுக் காணப்படுகின்றோம் என்று கூறுகின்றார். இம்மாதிரியான அனுபவங்களில் நிற்க முடிகின்றவர்கள் மாத்திரமே, "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தாம் ஜீவகிரீடத்தைக் கொடுத்து, அவர்கள் தம்முடன் சிங்காசனத்தில் உட்கார அனுமதிப்பதாக," இயேசுவினால் குறிப்பிடப்பட்ட கிரீடத்தை வெல்கிறவர்களாய் இருப்பார்கள்.

"இவைகளை நடப்பிப்பதற்கு எவன் தகுதியானவன்?" என்று அப்போஸ்தலர் கேள்வி கேட்கின்றார். "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்றும், "என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" மற்றும் "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" எனும் வாக்குத்தத்தத்தையும் பதிலாக வழங்குகின்றோம் (எபிரெயர் 13:5; 2 கொரிந்தியர் 12:9; 2:16; 3:5).

## "சிலுவை சுமத்தலின் அர்த்தம்"

இன்னும் அழுத்தம் தெரிவிக்கும் வண்ணமாக,"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்," என இயேசு கூறுகின்றார் (லூக்கா 14:27). தைரியத்துடன் கூடிய நோக்கத்துடனும், சீஷயத்துவத்தை அறிக்கைப் பண்ணுவதுடன், நாம் ஆரம்பிப்பது மாத்திரம் போதாது. நாம் விசுவாசத்துடன் கர்த்தர் பக்கத்தில் நிலை கொண்ட பிற்பாடு, நாம் நிரூபிக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் உணர்ச்சி வேகம் கொண்டிருப்பவர்கள் அல்ல, மாறாக தங்களுடைய உண்மையின் மூலமாக தங்களுடைய தகுதியை நிரூபித்துக் காண்பிப்பவர்களே தகுதியுள்ளவர்கள் என்று கருதப்பட்டு, இறுதியில் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். சிலுவை சுமத்தல் என்பது, அன்றாட விஷயமாக இருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளில் நமக்கெனக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீகச் சித்தத்திற்கு எதிராக, மாம்சம், உலகம் மற்றும் சாத்தானிடமிருந்து வரும் எதிர்ப்புகளே நம்முடைய சிலுவைகள் ஆகும். "என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்ற ஆண்டவரின் உணர்வே, சரியான உணர்வாக இருக்கின்றது.

நிதானித்து, யோசிக்கப்படாமல், சீஷயத்துவத்தை எடுத்தக்கொள்ளக்கூடாது என்பதற்கான எச்சரிப்பைக் கொடுக்கும் பொருட்டு, நமது கர்த்தர் ஓர் உவமையைக் கூறினார்; அதென்னவெனில் ஒரு கோபுரத்தைக் கட்டத் துவங்கின மனுஷன், அதற்கு அஸ்திபாரத்தைப் போட்டான், ஆனால் அதனை கட்டி முடிக்க அவனால் கூடாமல் போயிற்று, இவ்வாறாக அவன் தன் பிரயாசத்தை வீணாக்கி, தன்னையே ஏளனத்திற்கு ஆக்கிக்கொண்டு, மூடனாய் செயல்பட்டுக் கொண்டவனாய்

இருந்தான். இன்னொரு உருவகமானது, தேவையான ஆயத்தம் இல்லாமல், யுத்தத்திற்குப் போவது பற்றியதாகும்; இப்படியாக யுத்தத்திற்குச் செல்வது என்பது, விபரீதத்தையே கொண்டு வருவதாக இருக்கும். கிறிஸ்துவின் பின்னடியார்கள் அனைவரும் குணலட்சணத்தை வளர்த்துக்கொள்வதிலும், "நல்ல போராட்டம் போராடுவதிலும்" ஈடுபட்டிருக்கின்றனர். யாரொல்லாம் இயேசுவின் கொடியின் கீழ்த் தங்களை இணைத்துக்கொண்டுள்ளார்களோ, இவர்கள் சாத்தானுக்கும், பாவத்திற்கும் எதிரான நிலையை எடுத்துக்கொண்டவர்களாய் இருக்கின்றார்கள்; மேலும் இவர்கள் கடுமையான யுத்தத்தை எதிர்ப்பார்க்கலாம்; இன்னுமாக உண்மையாய் நற்கிரியைகளை நடப்பிப்பதில் தொடர்ந்து நிலைத்து நின்றாலே ஜெயங்கொள்கிறவர்களுக்கான கிரீடத்தையும், "நல்லது" என்ற வார்த்தையையும் கேட்க முடியும் என்பதையும் எதிர்ப்பார்க்கலாம்.

கிறிஸ்துவினுடைய காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பவர்கள், தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற தெளிவான முழுப்புரிந்துக்கொள்ளுதலுடன் கூட, திரும்பிப் பின்னே பார்க்காமல், நல்ல வழியில் தொடர்ந்து முன்னோக்கிப் போக வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்துடன் செயல்படுவார்களானால், அது எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும்! இன்னுமாக கிறஸ்துவினுடைய காரணங்கள்/நோக்கங்கள் மனுஷர் மத்தியில் நன்கு முன்னேறும்; இவர்களுடைய எண்ணிக்கை மிகச் சொற்பமாக இருந்தாலும் கூட உலகத்தில் இவர்களுடைய செல்வாக்கும், வல்லமையும், சந்தேகத்திற்கு இடமின்றி மிகப் பெரியதாகவே இருக்கும்.

## "உப்பு நல்லதுதான், ஆனாலும்..."

உப்பு, பதப்படுத்துகிற தன்மையைக் கொண்டதாகும். இது உணவிற்குச் சுவையையும் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. முற்காலங்களில் உண்மைக்கு, நேர்மைக்கு உப்பானது அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது; இன்னமும் கூட சில அரேபியர்கள், தாங்கள் உப்புச் சாப்பிட்ட வீட்டில் உள்ள நபருக்கு, மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. இவர்களைப் பொறுத்தமட்டில் உப்பு, நேர்மைக்கான/உண்மைக்கான உறுதிமொழியாக இருக்கின்றது.

இயேசு, தேவனிடத்தில் கொண்டிருந்த தம்முடைய உண்மைக்கும், தம்முடைய பின்னடியார்கள் அனைவரும் கொண்டிருக்க வேண்டியதும், தக்கவைத்தக்கொள்ள வேண்டியதுமான உண்மைக்கும், உப்பை அடையாளமாகப் பயன்படுத்துகின்றார். உப்பானது அதன் சாரத்தை இழந்துப் போகுமானால், அது எதற்கும் பயன்படாது; அது உரமாகக் கூடப் பயன்படாது, ஏனெனில் அது எதிர்மாறான செயல்பாட்டையே, சாரமற்றுப் போனப் பிறகுக் கொண்டிருக்கும்; அது முற்றிலும் பயனற்றதாயிருக்கும். இப்படியாகவே கிறிஸ்தவனும், உலகத்தில் ஒரு விசேஷித்த நோக்கத்தைப் பெற்றிருப்பவனாக இருக்கின்றான், அதாவது அவன் பதப்படுத்துகின்ற ஆற்றலாய் இருந்து, கிருமிநாசினியாக இருந்து, தொடர்புக்கு வரும் அனைவரிடமும் நல்ல பண்புகளை வெளியே கொண்டு வருபவனாக இருக்கவேண்டும். இதுவே உலகத்தைப் பொறுத்தமட்டிலான கிறிஸ்தவனுடய வேலையாக இருக்கின்றது. இதில் அவன் தவறுவானானால், அவன் அழைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிவதில் தவறுகிறவனாய் இருந்து, கர்த்தருடைய வேலைக்குப் பயனற்றவனாய் இருப்பான்.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று இயேசு இறுதியாகக் கூறினார். அவருடைய பின்னடியார்கள் அனைவரும் இந்த வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க வேண்டும். இவ்வார்த்தைகளை அசட்டைப் பண்ணுகிறவன், இவ்வார்த்தைகளைக் கொடுத்திட்டவரை அசட்டைப் பண்ணுகிறவனாய் இருந்து, நிச்சயமாய்க் கிடைக்கப்பெறும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தவறுகிறவனாய் இருப்பான். ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில், "அவர்கள் காதுகளிருந்தும் கேளாதவர்களாகவும், கண்ணிருந்தும், காணாதவர்களாகவும்" இருப்பார்கள். நம்மையும், இயேசுவின் பின்னடியார்கள் அனைவரையும் அளப்பதற்கான அதே கொள்கைகளின் அடிப்படையில் நாம் உலகத்தாரைக் கணிக்கக்கூடாது. உலகத்திற்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை பொன்னான சட்டமாக இருக்கின்றது. கிறிஸ்தவனுக்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை சுயத்தைப் பலிச் செலுத்தி, எல்லாம் இழந்து, தேவன் சித்தம் செய்வதாகும்.

**ஆமென்!**

R 5444

# "ஐசுவாரியவான் நரகத்திற்கும்...ஏழை பரலோகத்திற்கும்"

## லூக்கா 16:19-31

"ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்."-நீதிமொழிகள் 21:13.

அனைத்து ஐசுவரியமான புருஷர்களும், ஐசுவரியமான ஸ்திரீகளும் தினந்தோறும் சம்பிரமமாய் வாழ்கிறதினாலும், இரத்தாம்பரம், விலையேறப்பெற்ற வஸ்திரம் தரிப்பதினாலும், கடுந்துயரில் நித்திய காலத்தைக் களிப்பார்கள் என்ற அர்த்தத்தில் இயேசு கூறியுள்ளாரா? பரலோகத்திற்கு நாம் செல்ல வேண்டுமெனில், நாம் தரித்திரர்களாகவும், பருக்கள் நிறைந்தவர்களாகவும், பருக்களை நாய்களினால் நக்கப்பெற்றவர்களாகவும், ஐசுவரியமான மனுஷனுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைப் புசிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும் என்பது உண்மையா? எதிர்கால நன்மைகளின் பலன்களிலும், தண்டனைகளின் விஷயத்திலும், குணலட்சணத்திற்கு முக்கியத்தும் இல்லையா? இன்னுமாக நித்திய காலமாக அக்கினியில் வாதிக்கப்படும் ஐசுவரியவான்கள், தரித்திரர்கள் பேரின்பத்தில் இருப்பதைக் காண்பதும் மற்றும் கனப்படத்தப்பட்ட தரித்திரர், ஐசுவரியவான்கள் நித்தியமான துயரத்திற்குள் இருப்பதைக் காண்பதும் நடைபெறுமா? இது சர்வ வல்லமையுள்ளவரும், ஆதிமுதல் அந்திவரை அறிந்திருப்பவரும், அன்புமுள்ள சிருஷ்டிகருடைய ஏற்பாடாக இருக்குமா?

அநேக வருடங்களாக, தேவனுடைய ஜனங்களில் மிகவும் பரிசுத்தமாய் இருப்பவர்களுக்கு இந்த உவமையானது, பெரும் மனவேதனையை அளித்து வந்துள்ளது; இருதயமும், தலையும்/சிந்தனையும் இந்த உவமையோடு எதிர்த்ததாகவே காணப்பட்டது. ஆபிரகாம் மிகவும் ஐசுவரியவானாய் இருந்தார் என்றும், ஈசாக், யாக்கோபு, தாவீது இராஜா, சாலொமோன் இராஜா முதலானவர்களும் மிகுந்த ஐசுவரியவான்களாய் இருந்தார்கள் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். தேவன் தாமே ஐசுவரியமுள்ளவராய் இருக்கின்றார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். இன்னுமாக இக்காரியம் தொடர்புடைய வார்த்தைகளை நாம் எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகளில் பார்க்கும்போது, நம்பிக்கையற்றதும், இரண்டாம் மரணமாகவும் இருக்கிறதான கெஹன்னாவுக்கு ஆபிரகாம் செல்லாமல், மாறாக அக்கினியற்ற மரித்துப்போன நிலைமையாகிய கல்லறைக்கு, ஹேடிசுக்கு, ஷீயோலுக்கு போனார் என்றே நாம் கண்டுபிடிக்கின்றோம்.

நமக்குக் கிடைத்திட்ட அதிகப்படியான சத்தியமானது, இவ்வுமையின் விசித்திரத்தை/இரகசியத்தை அதிகரித்தது; ஏனெனில் ஷீயோல், ஹேடிஸ், கல்லறையானது அழிக்கப்படும் என்றும், அதிலுள்ள அனைவரும் வெளியே உயிர்த்தெழுதலில் கொண்டுவரப்படுவார்கள் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த உவமைக்கு ஒத்துப்போகிற/இசைந்துப் போகிற வேறு எந்த வசனமும் காணப்படவில்லை. அடையாளமான மிருகமும், அடையாளமான கள்ளத்தீர்க்கதரிசியும் சித்திரவதைக்குள் காணப்படுவதாக வெளிப்படுத்தல் விசேஷத்திலுள்ள ஒரு வசனத்தை மாத்திரமே இவ்வுமைக்கு (நேரடி பொருத்துதலின்) ஆதரவாகச் சொல்லலாமேயன்றி, மற்றப்படி இவ்வுமை தனித்தே மற்றவைகளுக்கு இசைவின்றி காணப்படுகின்றது. இந்த உவமையினுடைய கதையினால், சபையிலுள்ள சிந்திக்கிற ஜனங்களும் இடறிப்போய், குழப்பத்தில் காணப்படுகின்றனர்.

## "இப்பொழுது அனைத்தும் தெளிவாகியுள்ளது"

இப்பொழுது உவமையைப் பார்க்கலாம். நம்முடைய இரட்சகருடைய மற்ற உவமைகள் மற்றும் மறைப்பொருள்கள் போன்று, அதாவது உதாரணத்திற்கு, "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (அ) "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்ற வசனங்களில் இடம்பெறும் உவமை போன்று, இந்த உவமையும், சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது (யோவான் 6:53; மத்தேயு 18:9). "இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி,

அவர்களோடே பேசவில்லை" (மத்தேயு 13:34). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி வந்து தகுதியைக் கொடுப்பது வரையிலும், இயேசுவினுடைய போதனைகளுடைய ஆழத்தைப் புரிந்துக்கொள்வதற்கு எவரும் ஆயத்தமாய் இருக்கவில்லை.

ஆனால் இப்பொழுது அனைத்தும், எத்துணை எளிமையாய் உள்ளது! எத்துணை அருமையாய் உள்ளது! வேதாகமம் பற்றின நம்முடைய தற்போதைய புரிந்துக்கொள்ளுதலின் வெளிச்சத்தில், தெய்வீகக் குணலட்சணத்தினுடைய பிரகாசமானது, அவருடைய நீதியின் மீதும், அன்பு, ஞானம் மற்றும் வல்லமை ஆகியவைகளின் மீதும் அழகாய்ப் பிரகாசிப்பதினிமித்தம், தேவனுடைய ஜனங்கள் அநேகர் களிகூர்ந்து கொண்டிருக்கின்றனர்.

நம்முடைய இந்த ஆதார வசனப்பகுதி, ஓர் உவமை என்று புரிந்துக்கொள்வதில் நமக்குச் சிரமம் இல்லை. இதைச் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்வது என்பது தரித்திரர்கள் அனைவரும் பரலோகம் செல்வதாகவும், ஐசுவரியவான்கள் அனைவரும் நரகம் செல்வதாகவும் எண்ணிக்கொள்ளும் அர்த்தமற்ற பொருட்களையே கொடுப்பதாக இருக்கும்; ஏனெனில் இவ்வுமையானது, குணலட்சணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக எதுவும் தெரிவிப்பதில்லை. அதாவது தரித்திரன் நல்லவன் என்றோ, ஐசுவரியவான் கெட்டவன் என்றோ உவமையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது உவமையாகவே பார்க்கப்படும்போது, இங்குச் சொல்லப்பட்டுள்ள தரித்திரனையும், ஐசுவரியவானையும் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்பதை நாம் காணலாம். இப்படியாகவே மற்ற உவமைகளிலும், கோதுமை மற்றும் செம்மறியாடானது தேவனுடைய பிள்ளைகளைக் குறிப்பதாகவும், களைகள் மற்றும் வெள்ளாடு என்பது, இந்த உலகத்தின் பிரபுவானவனாகிய எதிராளியின் தலைமையின் கீழ்க் காணப்படுபவர்களைக் குறிப்பதாகவும் இருக்கின்றது.

## "உவமையில் வரும் ஐசுவரியவான்"

நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள இந்த உவமையில், ஐசுவரியவான் ஒரு வகுப்பாரையும், தரித்திரனாகிய லாசரு மற்றொரு வகுப்பாரையும் அடையாளப் படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர். இப்போது பார்க்கலாம்: ஐசுவரியவான், 16 நூற்றாண்டுகளுக்கு மேலாக தேவனுடைய கிருபையில் காணப்பட்ட யூத ஜனங்களுக்கு அடையாளமாக இருக்கின்றான். யூதர்களுக்கோ வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசிகளும், நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களும் கொடுக்கப்பட்டது. இக்காரியங்களே அடையாள வார்த்தைகளில், இவர்களுக்கான இராத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும், சம்பிரமமான மேஜையுமாக இருக்கின்றது. விலையேறப்பெற்ற வஸ்திரமானது, நிழலான பலிகளின் மூலமாக, இவர்களுக்கான நிழலான நீதிமானாக்கப்படுதலுக்கு அடையாளமாக இருக்கின்றது. இவர்களுடைய இரத்தாம்பரம், இராஜரிகத்திற்கு அடையாளமாக இருக்கின்றது; ஏனெனில் இவர்களே நிழலான இராஜ்யமாக இருந்தார்கள். இவர்களுடைய சம்பிரமமான வாழ்க்கையானது, அப்போஸ்தலனாகிய பவுல் உரோமர் 11:9-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றது போன்று தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு அடையாளமாக இருக்கின்றது.

இயேசுவின் நாட்களில், யூதர்களுக்கான கிருபையானது படிப்படியாக நலிவுற ஆரம்பித்தது. இவர்கள் கி.பி. 70-இல் முற்றிலும் கிருபையினின்று துண்டிக்கப்பட்டுப் போனார்கள்; இதை யூதர்கள் அனைவருங்கூட ஒப்புக்கொள்கின்றனர். இடைப்பட்ட 40 வருட காலப் பகுதியில், ஐசுவரியவானாகிய யூத ஜனங்கள் வியாதிப்பட்டு, மரித்துப்போய் அடக்கம் பண்ணப்பட்டனர். இவர்கள் ஒரு ஜாதியாக ஹேடிசுக்கு, கல்லறைக்குப் போனார்கள்; இவர்களுடைய உயிர்த்தெழுதல் இன்னும் நடைபெறவில்லை; சீயோனிசம் (Zionism) என்பது இவர்களுடைய உயிர்த்தெழுதலுக்கான ஆரம்பமாக இருப்பினும், இவர்களுடைய உயிர்த்தெழுதல் இன்னும் நிறைவடையவில்லை.

இவர்கள் ஒரு ஜாதியினராக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டாலும், தனித்தனி யூதர்களென இவர்கள் கடந்த 19 நூற்றாண்டுகளாக வாழ்ந்துக்கொண்டே வருகின்றனர். இவர்கள் துன்புறுத்தல்களை அடையும்போது, சிலசமயம் இயேசுவின் நாமத்தை அறிக்கைச் செய்துகொண்டு, தங்களுடைய கிரியைகளில் அவரை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பவர்களிடமிருந்து துன்புறுத்தல்களை அடையும்போது, இவர்களுடைய ஆத்துமா துக்கித்தது. இத்தனை நூற்றாண்டுகளிலும், இவ்வுவமையில் விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாமால் அடையாளப்படுத்தப்படும், தேவனிடம் இந்த யூதர்கள் கூக்குரலிட்டனர். இவர்களுக்கும்,

தேவனுக்கும் இடையே பெரும் பிளவு உள்ளது என்ற ஒரே பதிலை மாத்திரமே, யூதர்கள் பெற்றவர்களாய் இருந்தார்கள். இது இப்படியாகவே எப்போதும் தொடர்ந்து இருக்கப் போவதில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி! புதிய யுகம் விடிந்து கொண்டிருக்கின்றது, இதில் ஐசுவரியவான், ஹேடிசிலிருந்து திரும்பி வருவான். இஸ்ரயேல் ஒரு ஜாதியாக, மீண்டும் பழைய நிலைமைக்குக்கொண்டு வரப்படும்; தேவையான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவனுடைய கிருபையானது மீண்டும் திரும்பும்.

## "உவமையில் இடம்பெறும் தரித்திரன்"

இவ்வுவமையில் இடம்பெறும் தரித்திரன், புறக்கணிக்கப்பட்ட ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இவ்வகுப்பாரில், தேவனுடைய கிருபையினின்று அகன்று தூரம் போய்விட்ட பாவிகளும், ஆயக்காரர்களும் அடங்குகின்றனர். இவ்வகுப்பாரில் புறஜாதிகளுங்கூட அடங்குகின்றனர்; புறஜாதிகளிடத்திற்கு ஒருபோதும் தேவக் கிருபை காணப்படவில்லை, மற்றும் இவர்கள் இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும், அந்நியர்களாகவும் காணப்பட்டனர். "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 2:12). புறஜாதிகளுக்கு நிழலான நீதிமானாக்கப்படுதலாகிய விலையேறப்பெற்ற வஸ்திரங்கள் இருக்கவில்லை; மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் பங்காகிய, தேவனுடைய கிருபையில் ஒரு பங்கிற்கு அடையாளமாக இருக்கும் இரத்தாம்பரமும் இவர்களுக்கு இருக்கவில்லை. இவர்களுக்கு எந்த வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்படவில்லை. ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து, விழும் சிறு துணிக்கைகளை மாத்திரமே இவர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தவர்களாய்க் காணப்பட்டனர்.

இவ்வகுப்பாருக்கு இயேசுவினால் கொடுக்கப்பட்ட இப்படிப்பட்டதான இரண்டு துணிக்கைகளைக் குறித்து வேதவாக்கியங்கள் விவரிக்கின்றன. இயேசு உரோம நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை, யூதர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க சலுகையாகச் சொஸ்தப்படுத்தினார்; இந்த அதிபதி யூதர்களுடைய நண்பன் என்றும், ஜெப ஆலயம் முதலானவைகளைக் கட்டிக் கொடுத்ததின் மூலமாக இந்த அதிபதி யூதர்களுக்கு நன்மை செய்துள்ளார் என்றும், யூதர்கள் கூறி, இயேசுவிடம் வேண்டிக்கொண்டார்கள். இந்த அதிபதியினுடைய ஊழியக்காரனைச் சொஸ்தப்படுத்தினது என்பது, ஒரு துணிக்கையாகும். இதைப் போலவே, பிசாசு பிடித்த தன்னுடைய மகளை விடுவிக்கும்படிக்கு, இயேசுவிடம் வேண்டிக் கொண்ட சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயும், ஒரு துணிக்கையைப் பெற்றுக்கொண்டாள். இயேசு அவளிடம், "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" (மத்தேயு 15:26). இங்குப் புறஜாதியாரை, புறஜாதி நாய்கள் என்று கூறப்படும் யூத சொற்களின் வழக்கத்தையே இயேசுவும் பயன்படுத்தினார். இந்தச் சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீ, யூத ஸ்திரீயல்ல. ஆகையால், இவள் தேவனுடைய கிருபையை உரிமைப் பாராட்டுவதற்கு முடியாதவளாக இருக்கின்றாள். ஆனால் இவளோ "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" (மத்தேயு 15:27) என்று கூறினபோது, இயேசு அவளுடைய விசுவாசத்தைக் கவனித்து, அவள் வேண்டிக்கொண்ட துணிக்கையைக் கொடுத்தார்.

யூதர்கள் தங்களுக்கான கிருபையின் நிலைமைக்கு மரித்ததுபோல, புறம்பே இருந்தவர்களாகிய ஆயக்காரர்களும், பாவிகளும், புறஜாதிகளும் தங்களுக்கான கிருபையற்ற நிலைமைக்கும் மரித்துவிட்டார்கள்; தேவனுடைய கிருபைகளுக்காக வாஞ்சித்தவர்களும், அவருடைய வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளுக்குப் பசி தாகம் கொண்டுள்ளவர்களும், அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். பரிசேயர்களால் பாவிகள் என்றும், ஆயக்காரர்கள் என்றும், புறஜாதிகள் என்றும் புறக்கணிக்கப்பட்ட இந்த லாசரு வகுப்பாரை உள்ளடக்கினதாகவே, ஆதிகால திருச்சபை காணப்பட்டது. இவர்கள் தொடர்ந்துத் தேவனிடமிருந்து தொலைவில் காணப்படுவதற்குப் பதிலாக, இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகவும், அவருடைய வாக்குத்தத்தத்தின் சுதந்தரர்களாகவும் ஆனார்கள். இந்த உவமையில், இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக, அவருடைய கரங்களில் இருப்பவர்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளனர். நிழலில் ஈசாக்கே, சொல்லர்த்தமான ஆபிரகாமினுடைய வாக்குத்தத்தத்தின் பிரியமான குமாரனாகக் காணப்பட்டார். நிஜத்தில் இயேசுவும், அவருடைய பின்னடியார்களும், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராக இருந்து, தேவனுடைய இருதயத்தினிடத்திற்கும், கிருபையினிடத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக

இருக்கின்றனர். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29).

## "நிர்ணயிக்கப்பட்ட பெரும் பிளவு"

யூத மார்க்கத்திற்கும், கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் இடையிலான மாபெரும் பிளவானது, 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக நிர்ணயிக்கப்பட்ட காரியமாக இருக்கின்றது. இவ்வளவு நீண்ட காலமாகவும், எந்த யூதனும் தேவனுக்கு அருகாமையில் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை, மற்றும் எந்தப் புறஜாதியும், யூதனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவல்லாத வேறு வழியின் மூலம், கிருபையை நாடுவதற்கு அனுமதிக்கவும் படவில்லை. தெய்வீகத் திட்டத்தில் இந்தப் பெரும் பிளவு ஏற்பாடு பண்ணப்பட்டதாகவும், மாற்ற முடியாததாகவும் இருக்கின்றது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்போஸ்தலர் 4:12). அதாவது தேவனோடு இருதயப்பூர்வமான இருதய நிலைக்குள் நாம் வரத்தக்கதாக, கிறிஸ்துவினுடைய நாமமேயல்லாமல், வேறே நாமம் கொடுக்கப்படவில்லை. கிறிஸ்து வந்து, தம்மை இஸ்ரயேலர்களுக்கு அளித்து, அவரை அவர்கள் புறக்கணித்து, கொன்றுப் போட்டது முதல், இந்தப் பெரும் பிளவிற்கான காலம் ஆரம்பமாகின்றது.

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின்போது இன்னுமொரு யுகமாற்றம் நடப்பதைத் தேவனுடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுவதினால் தேவனுக்கு நன்றி! அப்போது லாசரு வகுப்பாராகிய, இன்றைய காலத்தில் தேவனுடைய பிள்ளைகளாக விசுவாசத்தின் மூலம் காணப்படுபவர்கள், திரைக்கு அப்பால் அவருடைய பிள்ளைகளென உண்மையாகவும், மகிமையிலும் இருப்பார்கள். இவர்கள் தங்கள் கர்த்தராகிய இயேசுவுடன் இணையும்போது, இவர்கள் உலகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொள்வார்கள்; காரணம் இவர்கள் அவருடைய மணவாட்டியாகவும், இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகவும் இருப்பார்கள். அப்போது ஐசுவரியவானுக்கு என்னவாகும்? ஓ, ஐசுவரியவான் ஹேடிசிலிருந்து உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்கிறவனாய் இருப்பான்!

தேவனுடைய இராஜ்யத்தின், ஆவிக்குரிய தளத்தில், லாசரு வகுப்பார் காணப்படும்போது, தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய தளத்தில் காணப்படும் இன்னொரு வகுப்பாரில், யூதர்களே காணப்படுவார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள், மேசியாவின் ஆவிக்குரிய இராஜ்யத்துடன் தொடர்புடைய பூமியில், பிரபுக்களாக வைக்கப்படுவதில்லை; மாறாக இவர்களால் பிதாக்கள் என்று அழைக்கப்படுபவர்களே பூமியில் பிரபுக்களாக வைக்கப்படுவார்கள். இப்படியாகப் பிரபுக்களாக வைக்கப்பட போகிறவர்களைக் குறித்து, பரிசுத்தவானாகிய பவுலினால், எபிரெயர் 11:32-40 வரையிலான வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது.

யூதர்கள் மீண்டுமாக தெய்வீகக் கிருபைக்குள் கொண்டுவரப்படுவது குறித்துப் பரிசுத்தவானாகிய பவுல் ரோமர் 11:25-33 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். இங்கு, தேவனுடைய ஜனங்களாக இப்போது காணப்படும் நாம், எப்போதும் தேவனுடைய கிருபையைப் பெற்றவர்களாக இருக்கவில்லை என்றும், இஸ்ரயேல் தேவனுடைய கிருபையினின்று துண்டிக்கப்பட்ட போதுதான், நாம் தெய்வீகக் கிருபைக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டோம் என்றும், தேவனுடைய கிருபையினின்று துண்டிக்கப்பட்ட அந்த இஸ்ரயேலர்கள், நம்முடைய கிருபையின் மூலமாக ஏற்றக் காலத்தில் கிருபைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கின்றார். அதாவது சபையானது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களென மகிமை, கனம் மற்றும் அழியாமையாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய கிருபைக்கும், மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும் இடையிலான பெரும் பிளவு கடந்துப்போய் விடுகிறதாய் இருக்கும். பின்னர் மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கிருபை திரும்பி வருவதாக இருக்கும். மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக, மாம்சீக இஸ்ரயேலர்களிடத்தில் வரும் தேவக் கிருபையானது, மாம்சீக இஸ்ரயேலர்கள் வாயிலாக ஆயிரவருட யுகத்தின்போது, சகல ஜாதியார்களுக்கும், பாஷைக்காரர்களுக்கும், கோத்திரங்களுக்கும் கடந்து வருகிறதாக இருக்கும்.

இதுவே, "உன் சந்ததியாருக்குள் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்பதே தெய்வீக வாக்குத்தத்தமாக இருக்கின்றது. ஆபிரகாமுடைய ஆவிக்குரிய சந்ததியாகிய சபையானது, இந்த வாக்குத்தத்தத்தில் முதலாவது பங்கை அடைவார்கள்; மற்றும் ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததியார்கள் இரண்டாவது பங்கை அடைவார்கள்; ஆனால் இவர்கள் இரு வகுப்பாரும், சாபத்தை அகற்றுவதிலும், மனுக்குலத்திலுள்ள அனைவருக்கும் ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் பொழிவதிலும் பயன்படுத்தப்படுவார்கள்.

## "ஐசுவரியவானாகிய டைவின் (Dive's) ஐந்து சகோதரர்கள்"

ஐசுவரியவான் தன்னுடைய உலர்ந்துபோன நாவை, ஒரு சொட்டுத் தண்ணீரைக்கொண்டு குளிரப்பண்ண வேண்டும் என்று வேண்டிக்கொள்வதாக உவமை தெரிவிக்கின்றது. இது மகா துன்பத்தில் காணப்பட்ட யூத ஜனங்கள், தங்களுடைய உபத்திரவங்களில், ஏதேனும் சில உதவிகளைத் தங்களுக்குக் கிறிஸ்தவர்கள் செய்ய அனுமதிக்க வேண்டுமெனத் தேவனிடம் கேட்பதற்கு அடையாளமாக இருக்கின்றது. இப்படியான உதவிகளை, யூதர்கள் எப்போதாகிலும் தேவனிடம் கேட்டதுண்டா? கடந்த காலங்களில் தங்கள் மீது வந்திட்டதுமான உபத்திரவங்களிலிருந்து தங்களை விடுவிக்கும்படி, யூதர்கள் தேவனிடம் ஜெபம் பண்ணினதுண்டா? ஆம், இவர்கள் ஜெபம் பண்ணியுள்ளார்கள்! இன்னுமாக இவர்கள் லாசரு வகுப்பாருடைய பிரதிநிதியானவர்களிடம், அதாவது கிறிஸ்தவ மண்டலத்தினுடைய (கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய) பிரதிநிதியானவர்களிடம், வேண்டுகோளும் விடுத்துள்ளனர்; இந்தப் பிரதிநிதியானவர்கள் மூலம் தங்களுக்கான விடுதலை வர வேண்டுமென்று இவர்கள் வாஞ்சித்துள்ளார்கள்.

இதற்கான ஓர் உதாரணத்தை, நம்முடைய நாட்களில், குடியரசு தலைவரான ரூசிவெல்ட் (Roosevelt) அவர்களிடம் யூதர்களால் ஏறெடுக்கப்பட்ட வேண்டுகோளில் நாம் பார்க்கலாம். இந்த வேண்டுகோளில், யூதர்களுக்கான துன்புறுத்தல்களைத் தடைப்பண்ணும் விதத்தில் ரஷ்ய அரசாங்கத்துடனான, குடியரசு தலைவராகிய ரூசிவெல்ட் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தும்படியாக, யூதர்களால் வேண்டுகோளிடப்பட்டது. இந்த ஒரு துளித் தண்ணீரை யூதர்கள் பெற்றார்களா? இல்லை உலக நாடுகளின் பரஸ்பர நல்லுறவு/மரியாதையானது, இப்படிப்பட்ட சம்பாஷணையை, ஒரு நட்பிற்கு உரிய நாட்டிடமிருந்து, வருவதை அனுமதிக்காது என்று ரூசிவெல்ட் அவர்களால் கூறி, மறுக்கப்பட்டது.

ஐசுவரியவான் மீது வந்த உபத்திரவத்தில் பங்கடைவதற்கான ஆபத்திற்குள்ளாகத் தக்கதான நிலையில், அந்த ஐசுவரியவானுக்கு ஐந்து சகோதரர்கள் காணப்பட்டதாக உவமை தெரிவிக்கின்றது. ஐசுவரியவானுடைய இந்த ஐந்து சகோதரர்கள் யார்? இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனியாவில் காணப்பட்ட யூதர்கள், பிரதானமாக பென்யமீன் மற்றும் யூதா கோத்திரர்களாக இருந்தார்கள் என்றும், மீதி பத்துக் கோத்திரத்தாராகிய பெரும்பாலானோர்கள் பல்வேறு தேசங்களில் சிதறிப்போயிருந்தார்கள் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இந்தச் சோதனையான அனுபவங்கள் தேவனுடைய கிருபைகளில் பெரும்பாலானவைகளை அனுபவித்த பாலஸ்தீனியாவிலுள்ள யூதர்களை மாத்திரம் பாதித்ததா (அ) சிதறிப்போயிருக்கும் மற்ற யூதர்களையும் சேர்த்துதான் பாதித்ததா? என்ற கேள்வி எழும்புகின்றது. "அவர்களுக்கு மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் இருக்கின்றார்கள் இவர்களுக்கு அவர்கள் செவிக்கொடுக்கட்டும்" என்பதாக பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இது யூதர்களை மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதை நிரூபிக்கின்றதாக இருக்கின்றது; ஏனெனில் புறஜாதிகளுக்கு மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் இருக்கவில்லை. ஐந்து என்ற எண்ணும் இசைவாகத்தான் உள்ளது. இரண்டு கோத்திரமாகிய யூதா மற்றும் பென்யமீன், ஓர் ஐசுவரியமுள்ள மனுஷனால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதினால், மற்றப் பத்துக் கோத்திரங்களும், ஐந்து சகோதரர்களால் அடையாளப்படுத்தப்படுவதும் சரியே.

இப்படியாகவே நடந்தது. பாலஸ்தீனியாவிலுள்ள யூதர்கள் மத்தியில் கொடுக்க ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷத்தின் செய்தியானது, ஒவ்வொரு தேசத்திற்கும் கடந்துச் சென்றது. புறஜாதிகள் மத்தியில் இருக்கும் பட்டணங்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கடந்துப் போகும் போது, முதலாவதாக, யூதர்களுக்குப் பிரசங்கித்து, "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.

நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம்" என்று குறிப்பிடுபவராக இருந்தார் (அப்போஸ்தலர் 13:46, 47). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இஸ்ரயேலர்கள் அனைவரின் மீதுமான பரீட்சை ஒன்றுபோலவே இருந்தது.

இவ்வாறாக நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறவைகளைக் காட்டிலும் மேலானதாகவே, இயேசுவின் போதனைகளிலுள்ள ஞானத்தின் ஆழம் காணப்படுகின்றது. இன்னுமாக இருண்ட காலங்களின் கொடூரமான உபதேசங்களானது நம்முடைய கணிப்புகளை விஷமேற்றினதாகவும், நம்முடைய ஆவிக்குரிய கண் பார்வையைக் குறைவுப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளில் இருக்கும் அழகைப் பார்ப்பதிலிருந்து நம்மைத் தடுக்கிறதாய் இருந்துள்ளதையும் நாம் கண்டுபிடித்துள்ளோம். புதிய நாளுக்காகவும், வேதாகமத்தின் மீது வீசும் வெளிச்சத்திற்காகவும் தேவனுக்கு நன்றி!

**ஆமென்!**

---

# "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்"

## லூக்கா 17:1-10

"மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைப் பாராட்டுவானாக."
- 1 கொரிந்தியர் 1:30

இந்தப் பாடமானது நான்கு பாகங்களைக் கொண்டதாகும்; ஒவ்வொன்றும் தனித்தனியான வேறுபட்டக் காரியமாகும். இவ்வார்த்தைகளுக்கு இடையிலான தொடர்பும் தெரிவிக்கப்படவில்லை, ஆனால் இவை பரத்திலிருந்து வரும் ஞானத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவைகளை வரிசையாகப் பார்க்கலாம்.

"இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம்." இடறல் என்ற வார்த்தையானது, தடுமாறி விழுதலை அல்லது கண்ணியில் சிக்குதலைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. இயேசுவின் அர்ப்பணம் பண்ணப்பட்ட பின்னடியார்களானவர்கள், சிறியவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர், காரணம் இவர்கள் புதிய சிருஷ்டிகளென, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணம் எனும் புதிய பாதையில் நடக்க ஆரம்பிக்க மாத்திரமே செய்துள்ளனர். இவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளானவர்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் அழைக்கின்றார் (1 கொரிந்தியர் 3:1). "பிள்ளைகளே" என்று பரிசுத்தவானாகிய யோவான் எழுதுகின்றார். இந்தக் குழந்தைப் பருவமானது, தொடர்ந்துக் காணப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது. கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சி காணப்பட வேண்டும். குணலட்சணமானது பலமடைய வேண்டும்; இந்தக் குணலட்சணமானது, ஞானமானதாகவும், பலமுள்ளதாகவும், கண்ணியில் அகப்படுத்தப்படுவதற்குக் கூடாததாகவும் இருப்பது மாத்திரமல்லாமல், குறைவாய் வளர்ந்துள்ள மற்றவர்களுக்கு உதவி புரியக் கூடியதாகவும் காணப்பட வேண்டும்.

இவ்வாறாகச் சபையில் மிகவும் வளர்ந்தவர்கள் மூப்பர்களென, மூத்த சகோதரர்களென அழைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள், சகோதரர்கள் மத்தியில் கர்த்தரை அடையாளப் படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர்; மேலும் சில சமயங்களில் பரலோக ஆறுதலும், ஆலோசனையும், கருத்துக்களும், கடிந்துக்கொள்ளுதல்களும் இவர்கள் மூலமாய், (சத்தியத்தில்) இளைய சகோதர சகோதரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. சாத்தான் இந்த யுகத்தின் அதிபதியாக இருப்பதினாலும், பெரும்பான்மையான மனுக்குலத்தை இவன் தன்னுடைய செல்வாக்கின் கீழ் வைத்துக்கொண்டு தப்பறைகள், மூடநம்பிக்கைகள், பாவங்கள் முதலானவைகளினால் குருடாக்கி வைத்துள்ளப்படியாலும், கண்ணியில் அகப்படுவதற்கு/இடறுவதற்கு வாய்ப்புகள் காணவேபடுகின்றது. "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு" என்று இயேசு குறிப்பிடுவதிலிருந்து, இங்கு இயேசு குழந்தைகளைப் பற்றிப் பேசவில்லை என்பது தெளிவாகுகின்றது.

இயேசுவின் பின்னடியார்களுக்கு, அதாவது அவருடைய சிறியவர்களுக்கு, அறியாமையினால் (அ) வேண்டுமென்றில்லாமல் இடறல் உண்டாக்குகின்றவர்களை இயேசு தண்டிப்பார் என்றோ, அநீதியாக குற்றம் தீர்ப்பார் என்றோ நாம் அனுமானிப்பதில்லை. தம்முடைய பின்னடியார்களை, தம்முடைய சிறியவர்களை, வஞ்சிப்பதற்கும், கண்ணியில் சிக்க வைப்பதற்கும், இடறச்செய்வதற்கும், சோர்வுபடுத்துவதற்கும், வேண்டுமென்றே முயற்சிப்பவர்களுக்கே, இயேசு எச்சரிப்பு வழங்குகின்றார் என்றே நாம் எண்ணிக்கொள்கின்றோம். கர்த்தருடைய பின்னடியார்களுக்கு எதிராக, துணிகரமாக மற்றும் வேண்டுமென்றே போடப்பட்ட திட்டங்கள் பற்றின சம்பவங்களை நாம் அனைவரும் கேட்டிருக்கின்றோம், மேலும் இதில் சாத்தான்தனமான ஆவியே காணப்படுகின்றது.

சில சமயம் தேவனுடைய உண்மையான ஜனங்கள் கூட, இவ்வாறாக சாத்தானுக்கான ஊழியங்களுக்குள் சிக்கிக்கொள்கின்றனர். "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16). தர்சு பட்டணத்துச் சவுல் கூட இவ்வாறாகக் கண்ணியில் சிக்கிக் கொண்டவராக, ஒரு குறிப்பிட்ட காலம் எதிராளியானவனால் பயன்படுத்தப்பட்டவராக இருந்தார்; மேலும் அறியாமையில், தான் இவைகளைச் செய்தபடியால் தேவன் தன்மேல் இரக்கம் காண்பித்ததாக சவுல் விளக்கம் அளிக்கின்றார். ஒருவேளை சவுல் வேண்டுமென்றே, துணிகரமாய் இவைகளைச் செய்திருப்பரானால், இவரை ஓர் அற்புதத்தை நிகழ்த்தி மீட்டுக்கொள்ளும் அளவுக்கு, இவரிடம் தேவன் இரக்கம் காட்டியிருந்திருக்கமாட்டார் என்று நாம் எண்ணுகின்றோம்; இன்னுமாக ஒருவேளை சவுல் இவைகளையெல்லாம் துணிகரமாய்ச் செய்திருப்பாரானால், அவர் தன்னுடைய துணிகரமான பொல்லாங்கான வழியிலேயே தொடர்ந்துக் காணப்பட்டிருந்திருப்பார் மற்றும் அவருடைய கழுத்தில் எந்திரக்கல் தொங்க விடப்பட்டு, அவர் கடலில் அமிழ்ந்துப் போவது சவுலுக்கே நலமாயிருந்திருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்.

ஏனெனில் ஒரு மனுஷன் இப்படியாக கடலில் அமிழ்த்தப்படும் போது, தன்னுடைய தற்கால ஜீவியத்தை இழந்துப் போகிறவனாக மாத்திரமே இருப்பானே ஒழிய, மரணம் எனும் நித்திரையினின்று அவன் விழிக்கும்போது ஆயிரவருட யுகத்திலுள்ள எதிர்க்கால வாழ்க்கையை இழந்துப் போகிறவனாய் இருக்கமாட்டான். அப்போது அவன் கீழ்ப்படிதல் மூலமாய்ப் பிரகாசிக்கப்படுவதற்கான முழு வாய்ப்பையும், பாவம் மற்றும் மரணத்தினின்று விடுதலைக்கான முழு வாய்ப்பையும் பெற்றுக்கொள்கின்றவனாய் இருப்பான். ஆனால் இயேசுவின் பின்னடியார்களை, வேண்டுமென்றே துன்பப்படுத்துகிறவர்களாகவும், பின்னடியார்களை நீதியின் வழியினின்று பின்வாங்க செய்கிறவர்களாகவும் இருப்பவர்கள், தங்கள் சொந்த மனசாட்சியைத் தவறான வழியில் திருப்புபவர்களாய் இருப்பதினால், மற்றும் தங்களையே மிகவும் சீரழித்துக்கொள்வதினால், இவர்கள் கல்லறையிலிருந்து வெளியே வந்த பிற்பாடு, புதிய யுகத்தினுடைய நிபந்தனைகளுக்கு இசைவாக வருவதென்பது, இவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் வெளிச்சத்திற்கும், அறிவிற்கும் எதிராக பாவம் செய்பவர்கள் நித்திய ஜீவனுக்கான தங்களுடைய வாய்ப்புகளை அபாயத்திற்குள்ளாக ஆக்குகின்றனர்.

## "மன்னிக்கும் ஆவி அவசியம்"

3 மற்றும் 4-ஆம் வசனங்களானது, மத்தேயு 18:15-22 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பிரசங்கத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. இப்பிரசங்கத்தின் பாடமானது உலகத்தாருக்காய் அல்லாமல், இயேசுவின் பின்னடியார்களுக்குக் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது. இது பின்னடியார்கள்,அதாவது விசுவாச வீட்டாரிலுள்ள சகோதரர்களிடத்திலான, அவர்களது கடமையைப்பற்றிப் பிரதானமாய்த் தெரிவிக்கின்றதாக இருக்கின்றது; இதற்கு அடுத்ததாக பரந்த கண்ணோட்டம் ஒன்றும் இருக்கின்றது. சில சமயங்களில் இந்தப் பரந்த கண்ணோட்டம் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. தேவைப்படும் பட்சத்தில் விஷயம் சபையாருக்கு முன்பு கொண்டுவரப்படலாம் என மத்தேயு 18-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் சகோதரருக்கான ஆலோசனை பற்றின புத்திமதிகள், வேறு யாருக்காகவும் இல்லாமல், மாறாக சபைக்கே என்று நிரூபிக்கப்படுகின்றது.

இரக்கம் அதாவது அளவற்ற இரக்கம் பற்றினதே படிப்பினையாகும். அனைவருக்கும் இரக்கம், அதாவது தெய்வீக இரக்கம் தேவைப்படுகின்றது, காரணம் அனைவரும் பூரணமின்மையில் காணப்படுகின்றனர் என்பதே சம்பாஷணைக்கான அடிப்படையாக இருக்கின்றது; மேலும் இந்தக் கிருபையை/பண்பை நாம் வளர்த்துவதற்கு நமக்கு உதவத்தக்கதாக, நாம் எந்தளவுக்கு இந்தத் தேவனுக்கொத்த பண்பைச் செயல்படுத்த முயற்சிக்கின்றோமோ, அதன் அடிப்படையிலேயே நமக்கு அவருடைய தயவும், அவருடைய ஆசீர்வாதங்களும் காணப்படத்தக்கதாக கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக்கா 6:35).

பரிசுத்தவானாகிய பவுலினால் "பிசாசுகளின் உபதேசங்கள்" என்று அழைக்கப்படும் தவறான உபதேங்களினால், நம்முடைய முன்னோர்களும், நாமும் இவ்வளவுக்கு வஞ்சிக்கப்பட்டிருந்தது என்பது விநோதமாகவே தோன்றுகின்றது (1 தீமோத்தேயு 4:1). ஒரு காலத்தில் பரம பிதாவானவர் மன்னிப்பை ஒருபோதும் வழங்காதவர் என்றும், அவர் தம்முடைய மனித சிருஷ்டிகள் பாவம் செய்தபடியினால், அவர்களை மன்னிப்பதற்குப் பதிலாக, அவர்கள் மீதான பகையினால் முழுக்க நிரம்பப் பெற்றவராக இருக்கின்றார் என்றும், நாம் எண்ணி வந்தோம். பாவத்திற்கான தண்டனை (அ) சம்பளம், சித்திரவதை என்றும், அதுவும் நித்திய காலத்துக்குமான சித்திரவதையாக இருக்க வேண்டும் என்றும் நாம் விடாப்பிடியாய்க் கூறி வந்தோம். சகல கிருபைகளுக்கும் தேவனாய் இருப்பவரின், அதாவது இரக்கங்களின் பிதாவாக இருப்பவரின் உண்மையான குணலட்சணத்தை நாம் எவ்வளவு குறைவாகப் புரிந்திருந்தோம்!

இன்னுமாக நம்மில் சிலர் நம்முடைய தப்பறைகளை நியாயப்படுத்தும் முயற்சியில், தேவன் அன்பானவராகவும், இரக்கமானவராகவும், நல்லவராகவும் இருந்தாலும், அவருடைய பின்னணியில் அவருடைய சிருஷ்டிகளைச் சித்தரவதைப்படுத்த வேண்டும் என்று கோரும் கடினமான பிரமாணம் ஒன்று காணப்படுவதாகவும், அவராலேயே தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத பிரமாணம் ஒன்றைக்கொண்டிருப்பதாகவும், மனுக்குலத்திற்கு இப்பிரமாணம் கொடுத்திட்ட தீர்ப்பை அவர் நிறைவேற்றத்தக்கதாக, அப்பிரமாணத்திற்குத் தேவன் கட்டுப்பட்டிருப்பதாகவும் நாமே அனுமானித்துக்கொண்டோம்.

இன்னும் சிலர் முழு மனுக்குலமானது, பிறப்பு மற்றும் இறப்பிற்குள்ளாக ஏதோ ஒரு கால கட்டத்தில், பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்புவதற்கும், பரிசுத்தவான்கள் ஆகுவதற்குமான முழு வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றது என்ற கருத்தை நாம் கொண்டிருக்கத்தக்கதாக நம்மைத் தவறான வழியில் நடத்திவிட்டனர். இவைகளெல்லாம் எவ்வளவு கேலிக்கு இடமாக இருக்கின்றது எனச் சமீப காலத்திலேயே, வேத மாணவர்களாகிய நாம் அறிந்து வருகின்றோம். 4000 ஆண்டுகளாக ஒரு சிறு யூத ஜனத்தார் மாத்திரமே தேவனைப்பற்றின அறிவை உடையவர்களாகக் காணப்பட்டார்கள் அல்லது இவர்களுக்கே நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன அலலது இவர்களுக்கே பாவம் மற்றும் அதன் தண்டனைப்பற்றின போதனையும் கொடுக்கப்பட்டுள்ளது என்று இப்போதுதான் நாம் அறிய வருகின்றோம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட யூதர்கள் கூட, சாத்தானால் குருடாக்கப்பட்டுள்ளனர் என இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்தனர். இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் பேசும்போது, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 13:16). பெரும்பான்மையான யூதர்கள் பார்க்காதவர்களாகவும், கேட்காதவர்களாகவுமே காணப்பட்டனர். இது கிறிஸ்தவ மண்டலத்தின் பத்தில் ஒன்பது பங்கின் நிலைமையின் விஷயத்திலும், உண்மையாகக் காணப்படுகின்றது. பிற தேவர்களை வணங்குபவர்களைப்பற்றி நாம் சொல்லவே அவசியமில்லை.

எந்த ஒரு வேதவாக்கியங்களின் ஆதாரம் இல்லாமலும், வேதவாக்கியங்களுக்கு எதிராகவும், நம்மில் அநேகர், தற்போதைய வாழ்க்கையில் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் அனைவரும், இன்னுமாக அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பரிசுத்த பின்னடியார்கள் ஆகாத அனைவரும், பிசாசுகளின் கரங்களில் நித்திய காலமாய்ச் சித்தரவதைப்படுவார்கள் என்ற கொடூரமான கூற்றை ஆதரித்தவர்களாகக் காணப்பட்டோம். இப்பொழுது கேட்பதற்குச் செவிகளை உடையவர்களாகவும், காண்கிறதற்குக் கண்களை உடையவர்களாகவும் இருந்து, கிறிஸ்து மூலமாய்த் தேவனுடன் உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பவர்களாகிய ஒரு சிறு வகுப்பாரே, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்று வேதாகமம் போதிப்பதை, இப்பொழுது நாம் காண்கின்றோம். இவர்களுக்கு மாத்திரமே எதிர்க்கால ஜீவனை அடைவதற்கான அனைத்து வாய்ப்புகளும், தற்கால ஜீவியத்திலேயே முடிகின்றதாய் இருக்கின்றது. மீதமான மனுக்குலத்திற்கு நியாயத்தீர்ப்பின் காலங்களில், உயிர்த்தெழுதல் மூலமாகவே, எதிர்க்கால ஜீவியத்தைத் தேவன் அருள நோக்கம் கொண்டுள்ளவராக இருக்கின்றார்.

உயிர்த்தெழுதல் என்பது, சபை வகுப்பாருக்கு மாத்திரமே உரியதல்ல; சபைக்கு உரியது முதலாம் உயிர்த்தெழுதலாக இருக்கின்றது. உயிர்த்தெழுதல் என்பது, "நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்குமுரிய" ஒன்றாகும் (அப்போஸ்தலர் 24:15). சபை வகுப்பார் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் உயிர்த்தெழுந்து வருவார்கள். அநீதிமான்கள் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும், ஒழுங்குப்படுத்தப்படுவதற்கும், நற்பலன்களை அடைகிறதற்கும், தண்டனை அடைகிறதற்கும், கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழுந்து வருவார்கள். மனுக்குலத்தார் இந்த

நியாயத்தீர்ப்புகளையும், நித்திய ஜீவனை அடைவதற்கான வாய்ப்புகளையும் அடைவதற்கே, மேசியாவின் இராஜ்யம் தொடங்கி வைக்கப்படும்; இன்னுமாக ஜனங்களை வழிநடத்துவதற்கும், அவர்களுக்கு பலனைக்கொடுப்பதற்கும், நீதியாய்த் தண்டிப்பதற்கும் அவர் நியாயாதிபதிகளை நியமிக்கத்தக்கதாகவே, இப்பொழுது அவர் மாம்சத்திலிருப்பவர்கள் மத்தியிலிருந்து சபையை அழைக்கின்றார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" (1 கொரிந்தியர் 6:2).

## "விசுவாசத்தின் வல்லமை - கண்மூடித்தனமான நம்பிக்கையின் வல்லமை"

கண்மூடித்தனமாக நம்பப்படுகின்ற அநேகமான விஷயங்கள், இன்று விசுவாசம் என எண்ணப்பட்டு வருகின்றது. ஒருவர் நம்மிடம் வந்து சந்திரனானது, பாலாடையினால் உண்டாக்கப்பட்டுள்ளது என்று கூறுவாரானால், அவர் கூறுவதை நம்புவது என்பது கண்மூடித்தனமான நம்பிக்கையே ஒழிய, விசுவாசமல்ல. "இப்படிப்பட்டவைகளைச் சொல்லுகின்றவன் யார்? என்றும், இக்காரியத்தைப்பற்றி நாம் அறிந்துள்ளவைகளைக் காட்டிலும், இவைகளைச் சொன்னவன் என்னதான் அறிந்திருக்கின்றான்?" என்றும் நாம் கேள்வி கேட்கிறவர்களாய் இருக்க வேண்டும். வேதாகமத்தில் பரிந்துரைக்கப்பட்டதான விசுவாசம் என்பது, தேவன் வாக்களித்துள்ளவைகள் தொடர்புடையதாய் இருக்கின்றது. இப்படியாக நாம் தேவனிடத்தில் விசுவாசங்கொள்ள வேண்டும், அதாவது அவர் பண்ணியுள்ள அவருடைய நல்ல வாக்குத்தத்தங்களை அவர் நிறைவேற்ற வல்லவரா என்று கேள்வி கேட்காத, சந்தேகிக்காத விசுவாசத்தைத் தேவனிடத்தில் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் உற்சாகப்படுத்தப்படுகின்றோம்.

நம்முடைய முன்னோர்கள் மனிதர்கள் மீது, மிகுந்த நம்பிக்கை வைத்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் விசுவாசம் என்று நினைத்துக்கொண்டதெல்லாம், வெறும் கண்மூடித்தனமான நம்பிக்கையாகவே இருக்கின்றது. அவர்கள் இருண்ட காலத்தின் விசுவாசப் பிரமாணங்களை அப்படியே உள்வாங்கி விட்டவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும் எந்தளவுக்கு ஒரு கூற்று அர்த்தமற்றுக் காணப்பட்டதோ, அதில்தான் தங்களுக்கு அதிக விசுவாசம் இருப்பதாக எண்ணிக்கொண்டார்கள். மாறாக அவர்கள், "நிரூபணம் எங்கே? இப்படியாகத் தேவன் எங்கே குறிப்பிட்டிருக்கின்றார்?" என்று சொல்லியிருந்திருக்க வேண்டும். விசுவாச பிரமாணங்களுக்கு ஆதரவு கொடுத்தவர்கள், தெளிந்த விசுவாசத்திற்கு எதிராக சந்தேகப்பட்டுக் கூக்குரலிட்டு, தெளிந்த விசுவாசமானது, மதங்களுக்கு எதிரான கொள்கை என்று கூறி, அநேக நேரங்களில், உண்மையுள்ளவர்களைக் கழுமரத்தில் கட்டி எரித்துப்போட்டனர். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில், நமக்கு உறுதியளித்துள்ளவைகள் மாத்திரமே, நம்மால் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே படிப்பினையாக உள்ளது; அதாவது நாம் தூய்மையான தேவ வார்த்தைகளை, அதாவது தவறான மொழிப்பெயர்ப்புகள் நீங்கப் பெற்றதும், இடைச் சொருகப்பட்ட வார்த்தைகள் நீங்கப் பெற்றதுமான தூய்மையான தேவ வார்த்தைகளை நாம் பெற்றிருப்பதில், கவனமாய் இருக்க வேண்டுமென்பதே படிப்பினையாக இருக்கின்றது.

இயேசுவின் சீஷர்கள், இயேசுவின் போதனைகளிலுள்ள மகத்துவங்களையும், நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளினாலும் பதிவு செய்யப்பட்டுள்ளதும், தம்முடைய மேசியாவின் இராஜ்யம் தொடர்புடையதாய் இயேசுவினால் கூறப்பட்டதுமான ஆச்சரியமான காரியங்கள் நிறைவேறும் விஷயத்தில், வரவேண்டியிருக்கும் சிரமங்களையும் மனதில் பதியப் பெற்றுக்கொண்டார்கள். ஆகையால் தங்களுடைய விசுவாசத்தைப் பெருகப்பண்ணும்படிக்கு, சீஷர்கள், கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இயேசு கொடுத்தப் பதிலானது, நம்முடைய நாட்களில் பெரிதும் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது; "அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்" (லூக்கா 17:6). இன்னுமொரு தருணத்திலும், இயேசு மலைகளைக் குறித்து இப்படியாகவே குறிப்பிட்டுள்ளார்; "அதற்கு இயேசு: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்;" "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல்

விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 17:20; 21:21). இன்னும் வேறு இரு தருணத்திலும், இயேசு இதைப் போன்றே மலைகள் தொடர்புடைய விஷயத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## "என்ன அர்த்தத்தில் கூறியுள்ளார்?"

மலைகள், சமுத்திரத்தினிடத்திற்கு இடம்பெயர்ந்து போகத்தக்கதாக, யூதர்கள் பிரயாசம் எடுப்பதற்காக நிச்சயமாக ஆண்டவர் இவ்வார்த்தைகளைப் பேசவில்லை; மாறாக ஒருவேளை அவர்களுக்கு தேவனுடைய வல்லமையின் மீது சரியான விசுவாசம் இருந்து, மலைகளைக் கடலுக்கு இடம்பெயர்க்கும்படிக்குத் தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டாரானால், அவர்கள் விசுவாசத்துடன் மலைக்குக் கட்டளையிடும்போது, மலை கடலுக்கு இடம்பெயர்ந்து செல்லும் என்பதை யூதர்கள் உணர்ந்துக்கொள்ளவே இயேசு விரும்பிட்டார். ஆனால் மலை (அ) மரம் தொடர்புடைய விஷயத்தில், தேவன் இப்படியாக எந்தக் கட்டளைகளையும் கொடுக்கவில்லை. ஆகவே இப்படியாக நாம் செய்ய முற்படுவதில், விசுவாசம் அடிப்படையாகக் காணப்படாது.

ஒரு சகோதரனிடம் ஒரு கேள்வி கேட்டப்போது, அவர் சரியான ஒரு பதிலைக்கொடுத்தார், அதாவது, "ஒருவேளை தேவன் உங்களிடம் மதில் சுவரிலிருந்து குதித்துவிட சொல்வாரானால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, "நான் குதித்துவிடுவேன்" என்று பதில் கூறினார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நாம் தேவனுடைய செய்தியைக் கேட்டுச் சரியாய்ப் புரிந்துள்ளோமா என்று உறுதிபடுத்துகிறவர்களாய் மாத்திரம் இராமல், தேவனுடைய வார்த்தைகளில், முற்றும் முழுமையாய் நம்பிக்கைக்கொள்கின்றவர்களாய் இருக்க வேண்டும். பின்னர் மலையை இடம்பெயர்க்கும் அளவிலான விசுவாசத்துடன் அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு முன்னேறிச்செல்கின்றவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் தேவன் முட்டாள்தனமான காரியங்களை (அ) தேவையற்ற மாற்றங்களைச் செய்யும்படிக்குக் கட்டளையிடுவதில்லை. மரங்களை வேரோடே பிடுங்குவதற்கான (அ) மலைகளை இடம்பெயர்க்கப் பண்ணுவதற்கான, இம்மாதிரியான கட்டளைகளைத் தேவன் கொடுப்பதில்லை. இப்படியாகச் செய்வதை மனிதன் தன்னுடைய புத்தியின்படி முடிவு எடுத்துக்கொள்ள, தேவன் விட்டுவிடுகிறாரே ஒழிய, அவர் இம்மாதிரியான கட்டளைகளையெல்லாம் கொடுப்பதில்லை. இப்படியாக மரத்தின் (அ) மலையின் விஷயத்தில், விசுவாசத்தினால் மலையை இடம்பெயர்த்துவிட்டதாக ஒரு மனுஷன் நம்மிடம் சொல்வானானால், நாம் அவனை நம்புகிறவர்களாக இருப்பது, கண்மூடித்தனமான நம்பிக்கையாகும். இப்படியான விதங்களில் தேவன் கிரியை செய்வதில்லை.

## "நம்முடைய ஆண்டவருக்குப் பிரயோஜனமற்றவர்கள்"

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மத்தியில் சிலர், இயல்பாகவே முன்னேறுகிற தன்மையுடைவர்களாகவும், சிலசமயம் மிகவும் இறுமாப்புக்கொண்டவர்களாகவும், சண்டையிடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். அவருடைய சீஷர்கள் ஆனவுடனே, இந்தப் பண்புகள் உடனடியாக மாறிவிடுவதில்லை. பழையவைகள் படிப்படியாகக் கடந்துப் போகின்றன, மற்றும் பழையவைகள் கடந்துப்போன இடங்களில், புதியவைகள் வருகின்றன. அவருடைய சீஷர்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரும் நினைவில் கொள்ள வேண்டிய படிப்பினை இப்பாடத்தில் கற்பிக்கப்படுகின்றது. இவர்கள் தங்களிடத்தில் நடப்பிக்கப்படும் தேவனுடைய கிருபையின் கிரியையானது, தங்களிடத்திலான தேவனுடைய தயை என்றும், அவருடைய கட்டளைகளுக்கான தங்களுடைய கீழ்ப்படிதலானது, பிரதானமாய்த் தங்களைச் சீர்ப்படுத்துவதற்கும், வளர்த்துவதற்கும் மற்றும் ஆசீர்வாதமான எதிர்க்கால ஜீவியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியம் என்றும் இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள், தாங்கள் கர்த்தருக்குச் செய்யும் ஊழியமும் ஒரு சிலாக்கியம் என்றும், தங்களுடைய ஊழியங்களினால், தேவனுக்கு நன்மை ஏதும் இல்லை என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் இல்லாமலேயே தேவனால் எளிமையாகக் காரியங்களைச் செய்துவிட முடியும், அதாவது நம் மூலமாய்ச் செய்வதைக் காட்டிலும், அவரால் எளிமையாய்க் காரியங்களைச் செய்துவிட முடியும் என்றவிதத்தில், நாம் அனைவரும் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம். அவரால் தம்முடைய தேவதூதர்களையும் (அ) ஜீவியத்தின் பல்வேறு காரியங்களையும் பயன்படுத்த முடியும். நம்மில் எவரும் அவருடைய வேலைக்கும், அவருடைய மகிமைக்கும் அவசியமானவர்களாய்க் காணப்படுவதில்லை. மாறாக கர்த்தருடைய திராட்சத்தோட்டத்திற்குள்

பிரவேசிப்பதற்கும், வேலை புரிவதற்குமான வாய்ப்பு என்பது, பிரதானமாக நம்முடைய சொந்த நன்மைக்குரியதாகவே இருக்கின்றது. இந்த ஊழியமானது, ஒருவிதமான சந்தோஷங்களை நமக்குக்கொண்டு வருகின்றது. இந்தச் சந்தோஷத்தை வேறெந்த விதத்திலும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது. திரைக்கு அப்பால் உன்னதமான ஊழியங்களைப் புரிவதற்கான தகுதிகளுக்கும், வளர்ச்சிக்கும் அவசியமான குறிப்பிட்ட அனுபவங்களை, இந்த ஊழியங்களானது நமக்குக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது.

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (எபேசியர் 2:8). ஒருவிதத்தில் சொல்ல வேண்டுமெனில் விசுவாசமே நாம் வளர்த்த வேண்டிய காரியமாக இருக்கின்றது. எனினும் விசுவாசம் நம்மால் உண்டானதல்ல, அது தேவனுடைய ஈவாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; ஆகையால் நம்முடைய விசுவாசத்தில் நாம் மேன்மை பாராட்டிக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டிராத எதை நாம் பெற்றிருக்கின்றோம்? தேவனுடைய வழிநடத்துதலானது, நமக்குக் கொடுத்திட்ட சில அறிவின் அடிப்படையில்தான், நம்மிடத்தில் அடிப்படையான ஆரம்ப விசுவாசங்கூடக் காணப்பட்டது; அதாவது சாதகமான பெற்றோரின் வளர்ப்பின் மூலமான தேவனுடைய வழிநடத்துதல் கொடுத்திட்ட சில அறிவின் அடிப்படையில்தான், நம்மிடத்தில் அடிப்படையான ஆரம்ப விசுவாசம் காணப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

**ஆமென்!**

---

R 5453

# "ஒன்பது பேர் எங்கே?"

## லூக்கா 17:11-19

"தேவனை மகிமைப்படுத்துவதற்கு இந்த அந்நியனே ஒழிய, மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே." (வசனம் 18)

இன்றைய நம்முடைய பாடத்தின் சாராம்சமானது நன்றியறிதல் ஆகும். இது ஒரு மிக நியாயமான குணலட்சணமாகவும், விலங்கினிடத்திலும் கூடக் காணப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இந்த ஒரு பண்பில்லாமல், ஒரு பரிபூரண மனுஷனோ (அ) தேவதூதனோ, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது, கற்பனை செய்துபார்க்க முடியாத ஒன்றாக இருக்கும். நம்முடைய நன்றியறிதலின் அளவுக்குத்தக்கதாகவே, நாமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம். இந்த ஒரு நன்றியறிதலானது, தெய்வீகப் பிரமாணங்களையும், ஒழுங்குகளையும் நாம் புரிந்துக்கொண்டோமோ (அ) இல்லையோ, இது தெய்வீகப் பிரமணாங்களுக்கும், ஒழுங்குகளுக்கும் நாம் கீழ்ப்படியத்தக்கதாக நம்மை வழிநடத்தும். நன்றியறிதலானது, தேவனுக்கான ஊழியத்தில் சுயத்தைப் பலிச் செலுத்தும் பிரயாசங்களை எடுப்பதற்கு நமக்கு உதவி செய்திடும்; மேலும் இயங்கிக்கொண்டிருக்கும் தெய்வீக ஏற்பாட்டின்படி இந்த நன்றியறிதலானது, அதற்கே உரியதான ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும்.

இயேசு சமாரியா மற்றும் கலிலேயா வழியாக எருசலேமுக்கு வந்தார். இதுவே அவர் மரிப்பதற்கு முன்னதாக, எருசலேமை நோக்கி செய்திட்ட அவரது கடைசி பிரயாணமாக இருக்கின்றது என அனுமானிக்கவும் படுகின்றது. அவருடைய கீர்த்தி எங்கும் பரவியிருந்தது. வழியருகே உட்கார்ந்து இருந்த பத்துக் குஷ்டரோகிகளும், நாசரேத்தூரின் இயேசு அவ்வழியாய்க் கடந்துப் போய்க் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டார்கள். ஊடனடியாகத் தங்களுடைய நோயின் காரணமாக, தங்களுக்கு இருக்கும் தொண்டைக் கட்டின குரலில், முடிந்தமட்டும் இயேசுவை உரக்கக் கூப்பிட்டார்கள். பொதுவாக இவர்கள் பணத்திற்காகவே சத்தமிடுவார்கள். ஆனால் இத்தருணத்திலோ, "ஐயரே எங்களுக்கு இரங்கும்!" என்று சத்தமிட்டார்கள்.

குஷ்டரோகிகள் என்பவர்கள் பரிதாபப்படுவதற்குரிய ஒரு வகுப்பாராகக் காணப்படுகின்றனர். இவர்களுடைய இந்த நோயானது, நீண்ட காலமாகச் சொஸ்தப்படுத்த முடியாத ஒன்றாக இருப்பதினால், வேதாகமத்தில் இந்த நோயானது பாவத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது. இந்த நோயானது, இரத்தத்தை மாசுப்படுத்துகிற ஒன்றாகும். மூட்டுகள் முறுக்கி, இணைந்து போய், அழுகி, தோல் போல் உரிந்து விழுந்துவிடும். நம்முடைய இந்தப் பாடத்தின் சம்பவம் நடைப்பெற்றதான காலப்பகுதியில் காணப்பட்ட ஒழுங்குகளின்படி, குஷட்ரோகிகள் பட்டணத்திற்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை; மீறினால் பிரம்பினால் முப்பத்தொன்பது முறை அடிக்கப்படுவது தண்டனையாக இருந்தது. இவர்கள் ஜீவிப்பதற்கென எவ்வேலையும் செய்யமுடியாது; மற்றும் இவர்கள் தங்களுடைய நண்பர்கள் (அ) பொது ஜனங்களின் தருமத்தையே எப்போதும் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். நோய் தொற்றிவிடும் என்ற அச்சத்தினால் இவர்கள் நூற்றைம்பது அடிக்கு தள்ளியே, ஒருவரை அணுக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் செத்து, செத்து உயிர்வாழ்கின்றவர்களாகக் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தில் இடம்பெறும் பத்துக் குஷ்டரோகிகளானவர்கள், யூதர்கள், சமாரியர்கள் என்ற இனவேற்றுமையைப் பொருட்படுத்தாமல், தங்கள் அனைவருக்குமே குஷ்டரோகம் இருப்பதினால், ஒன்றுகூடி ஜீவித்தவர்களாய்க் காணப்பட்டார்கள். இவர்களுடைய கூக்குரலுக்கு இயேசு பதில் கொடுக்கும் வண்ணமாக, அவர் மிகுந்த இரக்கம் கொண்டவராக இருந்தபோதிலும், ஏதோ இவர்களைக் கடுமையாய் நடத்துவது போன்று, "நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்று கூறினார். நியாயப்பிரமாண உடன்படிக்கையில், யூதர்களுடனான தேவனுடைய ஏற்பாடானது, பாவங்களினால் அல்லாமல், மற்றபடி அவர்களுக்கு நோய் வருவதில்லை என்பதாக இருந்தது; மேலும் குஷ்டரோக நோயின் விஷயத்தில், வியாதி உண்மையில் குஷ்டரோகமா (அ) வேறு ஏதாகிலும் வியாதியோ என்று ஆசாரியர்களே தீர்ப்புச் சொல்ல வேண்டியவர்களாய் இருந்தார்கள். நமது கர்த்தர் குஷ்டரோகிகளை ஆசாரியரிடத்திற்குப்போய், காண்பிக்கச் சொன்ன காரியமானது, சொஸ்தமாக்குதலைக் குறிப்பதாகவும், இவர்கள் ஆசாரியர்களிடத்திற்குப் போய்ச்சேரும் நேரத்தில், இவர்கள் தாங்கள் சுத்தமாகிவிட்டோம் என்று கூறும் நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதைக் குறிப்பதாகவும் இருந்தது.

இந்தக் குஷ்டரோகிகள், இயேசுவின் வல்லமைக் குறித்துப் போதுமான அளவுக்கு அறிந்திருக்க வேண்டும், மற்றும் இவர்கள் இப்படி ஆசாரியனிடத்திற்குப் புறப்பட்டுச் சென்ற விஷயத்தில், மிகுந்த விசுவாசத்தையும் செயல்படுத்தியிருக்க வேண்டும்; ஏனெனில் இவர்கள் உடனடியாகச் சொஸ்தப்படுத்துவதற்குக் கூக்குரலிடுவதற்குப் பதிலாக, அவருடைய கட்டளையின்படி பின்பற்றி, ஆசாரியனிடத்தில் தங்களைக் காண்பிக்கப் புறப்பட்டுப் போனார்கள். இவர்கள் ஆசாரியனிடத்திற்குத் தாங்கள் போய்ச்சேரும் நேரத்தில், தாங்கள் நன்றாய்ச் சுகமடைந்திருப்பார்கள் என்றும், ஆரோக்கியம் அடைந்திருப்பார்கள் என்றும் நம்பிக்கைக் கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இவர்கள் கொஞ்சம் தூரத்திற்குப்போன உடனே, தாங்கள் சொஸ்தமடைந்ததைக் கண்டுகொண்டார்கள். இவர்கள் தங்களுடைய குடும்பம், வேலை முதலானவைகளுக்குத் திரும்பிச் செல்லத்தக்கதாக ஆசாரியனிடத்தில் ஒப்புதல் வாங்க வேண்டுமென எத்துணை சந்தோஷத்துடன் துரிதப்பட்டுப் போயிருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. இவர்களுடைய இரத்தம் சுத்திகரிக்கப்பட்டதினால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால், இவர்கள் ஓடித்தான் சென்றிருக்க வேண்டும்! ஆனால் இவர்களில் ஒருவன் ஓடுவதை நிறுத்திவிட்டு, பின்னே திரும்பி வந்துவிட்டான்; அநேகமாக மற்றவர்கள் மகிழ்ச்சியின் பரவசத்தில் இருந்தபடியால், ஒருவன் இப்படிப் பின்னே ஓடுவதைக் கவனிக்கவில்லை. அவன் பின்னே ஓடி வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவருக்கு நன்றிச் செலுத்தினான், அவன் நன்றியுள்ள இருதயத்தைக் கொண்டிருந்தான்; மேலும் இதன் காரணமாக அவன் பின்னாளில் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வான் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை; அவன் அப்பொழுது சமாரியனாகவும், அந்நியனாகவும், இஸ்ரயேலின் காணியாட்சிக்குப் புறம்பானவனாகவும் இருப்பதினால் அத்தருணத்தில் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும், பின்னாளில் பெற்றுக்கொள்வான்.

## “கிருபையின் மற்றுமொரு துணிக்கை”

இந்தச் சம்பவத்தில், இந்தச் சொஸ்தப்படுத்துதலானது, பிள்ளைகளின் மேஜையிலிருந்து விழுந்த துணிக்கையாகும். ஏனெனில் ஐசுவரியவான் இன்னமும் மரிக்கவில்லை, அதாவது இஸ்ரயேலிடமிருந்து இன்னமும் தேவனுடைய கிருபையானது எடுக்கப்படவில்லை. “உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்” என்னும் வார்த்தைகளை இன்னமும் இயேசு கூறவில்லை. அவர்களுடைய வீடானது பாழாய் விடப்பட்ட பிற்பாடும் கூட, இஸ்ரயேலிடத்திலான கிருபையானது, தனித்தனி நபருக்கான கிருபையாக 3½ வருடங்கள் தொடர்ந்துக் கொண்டிருந்தது. இயேசு மரித்துப்போய், 3½ வருடங்கள் யூதர்களுக்குத் தனித்தனி நபராக கிருபை வழங்கப்பட்ட விஷயம் நின்ற பிறகே, சுவிசேஷமானது புறஜாதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது; கொர்நேலியு என்பவர் தேவனுடைய உறவிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் புறஜாதியாக இருக்கின்றார் (அப்போஸ்தலர் 10).

ஒருவேளை நன்றிச் சொல்வதற்கெனத் திரும்பி வந்தவன் சமாரியனாக இல்லாமல், யூதனாக இருந்திருந்தால் அவனை இயேசு தம்முடைய பின்னடியார்களில் ஒருவனாகும்படிக்கு அழைத்திருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை; “உன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என் பின்னே வா!” என்று சொல்லியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் வந்தவன் சமாரியனாக இருந்தபடியால், “நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” (லூக்கா 17:19) என்று மாத்திரமே கூறி அனுப்பினார். ஆனால் இந்த நன்றியுள்ள சமாரியனைக் கர்த்தருடைய ஏற்பாடானது பின்தொடர்ந்தது என்பதிலும், புறஜாதிகளுக்குக் கதவு திறக்கப்படுவதற்கான காலம் வந்தபோதோ, இவனும் செய்தியை மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டவர்களில் ஒருவனாக இருந்து, தேவனுடைய சுதந்தரர் ஆகுவதற்கும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன், பரம சுதந்தரத்தில் உடன் சுதந்தரராகுவதற்குமென அர்ப்பணம் பண்ணியும் இருப்பான் என்பதிலும் நமக்கு ஐயமில்லை.

“உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளை, தெய்வீக வல்லமையினால் இல்லாமல், அம்மனுஷனுடைய விசுவாசமே அவனை இரட்சித்தது என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது, மாறாக அம்மனுஷனுடைய விசுவாசத்தோடு கூடவே ஆண்டவர் தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தினார் என்றே புரிந்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வல்லமையும், அம்மனுஷனுடைய விசுவாசமும் சேர்ந்து, அவனைச் சொஸ்தப்படுத்தினது. இவை இரண்டும்தான் மற்ற ஒன்பது பேரைக்கூடச் சொஸ்தப்படுத்தினது. ஒன்பது பேர்க் கூட விசுவாசம் கொண்டிருந்தார்கள் மற்றும் சொஸ்தமாக்கப்பட்டார்கள்; மேலும் இவர்கள் (9-யூதர்கள்)

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்களாகக் காணப்பட்டபடியால், இவர்களே சமாரியனைக் காட்டிலும், மன்னிப்பையும், சொஸ்தமாக்குதலையும் வேண்டிக்கொள்வதற்கான உரிமைக் கொண்டிருந்தார்கள்.

## "பத்துப்பேர் சொஸ்தமாக்கப்பட்டிருந்தார்கள் - 9 பேர் எங்கே?"

பத்துப் பேர் சொஸ்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஒருவன் மாத்திரமே தேவனுக்கு மகிமை செலுத்தத் திரும்பிவந்துள்ளான் எனும் காரியத்தை, அங்கிருந்த பொதுஜனங்களின் கவனத்திற்கு இயேசு கொண்டு வந்தார். இவர்கள் திரும்பிவர வேண்டுமென்றும், துதிச்செலுத்த வேண்டுமென்றும், தம் மூலமாய்த் தெய்வீக வல்லமையே செயல்பட்டுள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அவர் இவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளவில்லை என்பது உண்மைதான் அவர் என்ன செய்யச் சொன்னாரோ, அதைத்தான் இவர்கள் செய்தார்கள், தங்களை ஆசாரியனிடத்திற்குப் போய்க் காண்பித்தார்கள்; பின்னர் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி, எதுவும் சொல்லவில்லை என்பதும் உண்மைதான்!

இவர்களைக் குணப்படுத்துவதற்கு முன்னதாக, "ஒருவேளை நான் உங்களைக் குணப்படுத்தினால், நீங்கள் உங்கள் ஜீவியங்களை அர்ப்பணித்து, என் சீஷர்களாகுவீர்களா?" என்று கர்த்தர் கூறி ஏன் பேரம் பேசவில்லை? அப்படி இயேசு கூறியிருந்தாலும், இவர்கள் ஒத்துக்கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமும் இல்லை. இப்படியாக வெறுக்கத்தக்கதும், சொஸ்தப்படுத்த முடியாததுமான நோயினை அகற்றுவதற்குக் கொடுக்கப்படும் எந்த நிபந்தனைகளுக்கும், யார்தான் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? ஏன் இம்முறையைக் கையாண்டு, இயேசு தம்முடைய சீஷர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளவில்லை? "பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களையே பிதா விரும்புகின்றார்" என்பதாகிய பிதாவின் கையாளுதலின் ஆவியையே, இயேசுவும் பின்பற்றுகிறவராக இருந்தார் என்பதே பதில். ஆவியோடும், உண்மையோடும் தம்மைத் தொழுதுகொள்ளாதவர்களைப் பிதா விரும்பாதது போன்று, குமாரனும் விரும்புவதில்லை.

இதன் அடிப்படையில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய பிரசங்கமானது, இன்றுள்ள சுவிசேஷகர்கள், எழுப்புதல் ஊழியங்கள் முதலானவர்களின் பிரசங்கங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. உலகப்பிரகாரமான ஜனங்கள் கிறிஸ்துவின் சீஷர்களாகும்படிக்கு இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி ஒருபோதும் வலியுறுத்துவதில்லை. இயேசுவும், அப்போஸ்தலர்களும் சில மாபெரும் உண்மைகளை மாத்திரமே பிரசங்கித்தார்கள், மற்றும் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டு, அதில் முன்வைக்கப்பட்ட மாபெரும் உண்மைகளினால் தாக்கத்திற்குள்ளானவர்களே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இயேசுவும், அப்போஸ்தலர்களும் பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பின் காலத்தையும் கூறி, காரியத்தை அந்தந்த நபரின் மனசாட்சிக்கே விட்டுவிட்டார்கள். பாவத்தை விட்டுவிட்டு, தேவனிடத்தில் திரும்புகிறவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் கிடைக்கப்பெறும் என்று அப்போஸ்தலர்கள் கூறினார்கள். தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்குமான ஊழியத்திற்கென, தங்களுடைய ஜீவியங்களை அர்ப்பணம் பண்ணவும், நல்ல போர்ச்சேவகர்களாக தீங்கு அனுபவிக்கக் கூடியவர்களுமாகிய, பாவத்திற்காக வருந்துகிறவர்களுக்குப் பரம அழைப்பைப்பற்றி அப்போஸ்தலர்கள் கூறினார்கள்.

இன்னொரு தருணத்தில், உணர்ச்சிவசப்படுதலைக் கடிந்துக்கொள்ளும் வண்ணமாக, இயேசு "அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்க்கக்கடவன்" என்று கூறினார் (லூக்கா 14:30). தம்முடைய குமாரனுடன் கூட, உடன் சுதந்தரர்களாய் இருப்பதற்கெனச் சத்தியத்தைப் பிரசங்கிப்பதன் மூலமாக ஒரு வகுப்பாரை அழைத்திட தேவன் பிரியங்கொண்டுள்ளார். இந்த வகுப்பார் ஜெபங்கள் மூலமாகவோ அல்லது உணர்ச்சிப் பரவசத்தின் மூலமாகவோ, தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டு வரப்படாமல், மாறாக தெய்வீக நிபந்தனைகளின் அடிப்படையிலேயே கொண்டு வரப்படுவார்கள். இப்படியாகத் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அதை விருதாவாகப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்றும், கலப்பையில் கை வைத்திட்ட பிற்பாடு, அவர்கள் பின்னோக்கிப் பார்க்கக்கூடாது என்றும், அவர்கள் தங்களைச் சிலுவையின் நல்ல போர்ச்சேவகர்களாக இணைத்துக்கொண்டுள்ளபடியால், அவர்கள் தீங்கு அனுபவித்து, ஊழியம் மற்றும், பலியாகிய சிலாக்கியத்தில் களிக்கூர வேண்டுமென்றும் உள்ள அவசர செய்தி கடந்துச் செல்கின்றது.

இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, கர்த்தருடைய சேனையில் போர்ச்சேவகர்களைச் சேர்ப்பதற்கு, ஆரவார பரவச முறையை, "hip-hip-hurrah" முறையைக் கையாளவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டுகின்றோம். இப்படிக் கூறுவதினால் நாம் மற்றவர்களைக் குறைக் கூற வரவில்லை, மாறாக தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய சித்தத்தை அறிவதற்கும், அவர் சித்தத்தைச் செய்வதற்கும் வழிகாட்டப்படத்தக்கதாக, உண்மைகளை அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டுவர மாத்திரமே செய்கின்றோம்.

## "பத்து, நூறு, ஆயிரக்கணக்கான மற்றவர்கள்"

நம்முடைய இப்பாடத்தை அடையாள கண்ணோட்டத்தில் பார்க்கலாம். அந்தக் குஷ்டரோகிகள், பாவிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றனர்; அதாவது தாங்கள் அசுத்தமாய் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்துக்கொண்டு, சுத்திகரிக்கப்படுவதற்காக கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் பாவிகளாய் இருக்கின்றனர்; இப்படியாக இவர்கள் கர்த்தரை நோக்கி கூப்பிடுவது என்பது, கர்த்தர் தேவனுடைய குமாரன் எனக் கொண்டிருக்கும் மகத்துவத்தையும், வல்லமையையும் ஒத்துக்கொள்வதையும், இவர் மூலமாய் மாத்திரம் பாவம் மன்னிக்கப்படுவதை ஒத்துக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இவர்கள் கர்த்தரை நோக்கி கூக்குரலிட்ட காரியமானது, இவர்கள் அவருடைய சீஷர்களாகுவதற்கான அதாவது, பின்னடியாராகுவதற்கான விருப்பத்தை அறிவிப்பதாகவும், பாவம் பாதகமானது என்று உணர்ந்து, தங்களுக்குள்ளாகவும், உலகத்திலும் காணப்படுகின்றதான பாவத்தை எதிர்த்துப் போராடி, அவருடைய அடிச்சுவடுகளில் இனிமேல் நடக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அறிவிப்பதாகவும் காணப்படுகின்றது. இப்படியான, எத்தனை பத்து, நூறு மற்றும் ஆயிரக்கணக்கானோரின் பக்தியையும், விசுவாசத்தையும் கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார்? எத்தனை பேர்களைக் குணப்படுத்தி, மன்னித்து, இவர்களுடைய சீஷத்துவத்தின் அறிக்கையின்படிக் கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார்? இவர்களில் எத்தனை பேர் அவருடைய உண்மையான சீஷர்களாகியுள்ளனர்?

கர்த்தருக்குப் பாவத்தைக் குறித்ததான தங்களுடைய துக்கத்தையும், பாவ மன்னிப்பிற்கான தங்களுடைய வாஞ்சையையும், வாழ்நாள் முழுவதும் அவருக்கும், அவருடைய தயவிற்கும், நன்றியும், பக்தியும் குறித்ததான தங்களது வாக்கையும் தெரிவித்துள்ள எத்தனை பேர்கள், தங்களுக்குக் கிடைத்திட்ட சிலாக்கியங்களையே மறந்துப்போய் உள்ளனர்; ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, எத்தனை பேர்கள் ஒரு தொழில் துறையினின்று, இன்னொரு தொழில் துறையினிடத்திற்கும், ஒருவகை களியாட்டங்களிலிருந்து இன்னொன்றிற்குச் சென்றிருக்கின்றனர்! இரக்கத்திற்கான கர்த்தரிடத்திலான தங்களுடைய ஜெபங்களையும், ஒருவேளை தங்கள் ஜெபங்கள் கேட்கப்பட்டால், தாங்கள் என்ன செய்வார்கள் என்று எடுத்திட்ட தீர்மானங்களையும் சொற்பமானவர்களே நினைவில் கொண்டவர்களாய் இருக்கின்றார்கள்!

## "மறுமலர்ச்சியானது வரவிருக்கின்றது"

தேவனுடன் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவர்கள் தொடர்புடைய விஷயத்தில், நாம் ஒரு கடுமையான சோதனை காலத்தில் இப்பொழுது வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம் என்ற கருத்தானது அநேக கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் பெருகிக்கொண்டு வருகின்றது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, உயிர்த்தெழுதலுடைய மாற்றத்தின் மூலமாக, கர்த்தருடைய மணவாட்டியாக, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நேரத்தை நாம் நெருங்கிக் கொண்டிருப்பதாக அநேக கிறிஸ்தவ ஜனங்கள் நம்புகின்றனர். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது;" "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (1 கொரிந்தியர் 15:50, 51, 52). இயேசுவுடன் கூட, அவருடைய இராஜ்யத்தில் துணையாளர்களாக இருக்கப்போகின்ற மணவாட்டி வகுப்பாருக்கான அங்கத்தினரைக் கண்டுபிடிப்பதற்கே, இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான அழைப்புக் கொடுக்கப்பட்டது.

யூத யுகத்தினுடைய முடிவின் சோதனையான காலங்களில் வாழ்ந்துக் கொண்டிருந்த யூதர்களைக் குறித்து, "கடவுள் உன்னை தேடி வந்த காலத்தை நீ அறிந்துக்கொள்ளவில்லை" என்று இயேசு கூறினார் (லூக்கா 19:44; திருவிவிலியம்). வெகு சொற்பமானவர்கள் மாத்திரமே, தாங்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலத்தினுடைய அம்சங்களையும், நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்களையும் புரிந்துக்கொள்வதற்குரிய, தேவனுக்கு அருகாமையிலான இருதய நிலைமையைக்

கொண்டிருந்தார்கள். அதே மாதிரியான மாற்றங்கள் இப்பொழுது நமது மத்தியிலும் காணப்படுகின்றது. இதுவும் தங்களுடைய புரிந்துக்கொள்ளதலின் கண்களைத் திறந்திருக்கப் பெற்றிருப்பவர்களால் மாத்திரமே, உணர்ந்துக்கொள்ள முடிகின்றதாய் இருக்கின்றது.

நம்முடைய பாடத்தில் இடம்பெறும் சமாரியன், தங்களுடைய கிருபையிலும், வார்த்தையிலும், எண்ணங்களிலும் கர்த்தருக்கு மகிமை செலுத்த, நாடும் கர்த்தருடைய நன்றியறிதலுள்ள பின்னடியார்களாகிய வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றவனாய் இருக்க, மற்ற ஒன்பது பேரும் ஒரே மாதிரியான கிருபையைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த போதிலும், தற்கால ஜீவியத்தின் இன்பங்களையும், ஆசைகளையும் நாடினவர்களாகவே இருக்கின்றனர்; ஆண்டவர் கடந்துச் சென்ற பாதையில் செல்லாததினால், இந்த ஒன்பது பேரும் சமாரியன் அடையாளப்படுத்தும் வகுப்பாருக்குரிய கனம், மகிமை மற்றும் அழியாமையை அடைவதில்லை. இவர்களுக்குக் கொஞ்சம் கீழான நிலைமையே அருளப்படும். வேதவாக்கியங்களின்படி, இன்னும் கொஞ்சங்காலத்திற்குள்ளாக, இராஜ்யத்தின் மகிமையானது, அதிர்ச்சியடைந்திருக்கும் உலத்திற்கு வெளிப்படுத்தப்படும், மற்றும் தற்கால சூழ்நிலைகளின் மகிமைகள் அனைத்தும் கடந்துப் போய்விடும்.

தம்முடைய ஜீவனையும் பொருட்படுத்தாமல், தாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக தம்மைத்தாமே வெறுமையாக்கினவரும், இதன் விளைவாக இப்பொழுது மிகவும் உயர்த்தப்பட்டிருப்பவருமாகிய நமது இரட்சகர் வாயிலாகப் பரத்திலிருந்து வருகிறதான ஞானம் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது திரைக்கு அப்பால், மகிமையான சபையில், ஓர் அங்கமாகுவதற்கென, தான் அனைத்தையும் குப்பையும், தூசியுமாக எண்ணினார் என்ற இதே கருத்தைத்தான் பரிசுத்தவானாகிய பவுலும் தெரிவித்துள்ளார். ஆயிரம் வருடம் யுகத்தின் போது, உலகத்திற்கு வரும் ஆசீர்வாதம் மகா பெரியதாயிருக்கும், சபை பெற்றுக்கொள்ளப் போவதான ஆசீர்வாதமானதோ தலைச்சிறந்ததாக இருக்கும்.

**ஆமென்!**

---

R 5455

# "மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது"
## லூக்கா 17:20-37

"இதோ தேவனுடைய இராஜ்யம் உங்கள் **மத்தியில்** இருக்கிறதே."
(வசனம் 21; திருத்தப்பட்ட வசனம்).

நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகளைப் புரிந்துக்கொள்வதற்கு, இது பேசப்பட்ட சூழ்நிலையை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இயேசுவுக்கு முன்னதாக யோவான் ஸ்நானன் வந்து, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்று பிரசங்கித்தார். ஏற்றவேளையில், இயேசுவே, வரவிருக்கின்ற மேசியா என்றும், தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும் சுட்டிக்காண்பித்தார். இயேசு தம்மைப் பூமியின் இராஜாவாக நிலைப்படுத்துவார் என்று, பல மாதங்களாகக் காத்துக்கொண்டிருந்த யோவான் ஸ்நானன், இப்படியாக நடப்பதற்குப் பதிலாக, தன்னுடைய வேலை நிறைவடையப் போவதைக் கண்டார்; மேலும் இவர் ஏரோதினால் சிறையிலே போடப்பட்டார். இயேசுதான் வரவிருக்கின்ற மேசியாவா அல்லது வேறொருவருக்காகக் காத்திருக்க வேண்டுமா என்று விசாரிக்கும்படிக்கு, யோவான் இயேசுவினிடத்திற்கு ஆள் அனுப்பினார். யோவான், தான் எதிர்பார்த்த பிரகாரமாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆதாரங்களைக் காணமுடியாததினால் ஏமாற்றம் அடைந்தார்.

இயேசுதான் மேசியாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிற, நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்ட இராஜா என்று கூறப்படும் காரியங்களைப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் கேள்விப்பட்டு, அவரைப் பரியாசம் பண்ணினார்கள். நகைப்பிற்கு இடமான இயேசுவினுடைய பின்னடியர்களின் கூட்டத்தைப் பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்கள் கவனித்தார்கள்; இயேசுவின் பின்னடியார்களில் ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் கனமிக்க ஜனங்கள், (அதாவது செல்வாக்கிலோ, ஆஸ்தியிலோ, விசேஷித்த ஸ்தானத்திலும் இல்லாத கனமிக்க ஜனங்கள்) காணப்பட்டனர். இயேசு ஓர் ஏமாற்றுக்காரர் என்றும், அவருடைய பின்னடியார்கள் அவரால் ஏமாற்றப்பட்டவர்கள் என்றும் பரிசேயர்களும், வேதபாரகர்களும் எண்ணினார்கள். இயேசுவைக் குறித்து அவருடைய பின்னடியார்கள் எண்ணிக்கொண்டிருந்தது, இயேசுவின் ஒரு வஞ்சனை என்று வெளிப்படுத்துவதன் மூலம், அவருடைய பின்னடியார்களை வஞ்சனையிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்குப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் எப்படி முயன்றார்கள் என்பதையே இந்தப் பாடம் நமக்குக் காண்பிக்கப் போகின்றது. ஆகவேதான் ஜனங்கள் முன்னிலையில், "தேவனுடைய இராஜ்யம் எப்போது வரும்? என்றும், நீர் அதை ஸ்தாபிப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்?" என்றும் இவர்கள் இயேசுவினிடத்தில் கேள்விக் கேட்டார்கள்.

இயேசுவைச் சிக்க வைக்கவேண்டும் என்பதே இவர்களது நோக்கமாய் இருந்தது என்பதில் ஐயமில்லை; ஏனெனில் ஒருவேளை நீண்டகாலம் எடுக்கும் என்று இயேசு சொல்வாரானால், அவருடைய பின்னடியார்கள் மனம் தளர்ந்துப் போய்விடுவார்கள்; ஒருவேளை கொஞ்சக்காலந்தான் என்று இயேசு கூறுவாரானால், "உமக்குச் சேனையை நீர் எங்கிருந்து பெற்றுக்கொள்வீர் என்றும், உம்முடைய போர்ச்சேவகர்களுக்கு நீர் எப்படி ஊதியம் கொடுப்பீர்? என்றும், எப்படி நீர் அவர்களுக்கு உணவு கொடுப்பீர்? என்றும், நம்முடைய முழுத் தேசத்தாலும் எதிர்க்க முடியாத உரோமின் அரசியல் வல்லமையுடன் எதிர்த்து யுத்தம் பண்ணுவதற்கு நீர் உரோமிற்குச் செல்வீரா?" என்றும் கேள்வி கேட்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் முதலாம் கேள்வியை மாத்திரமே பரிசேயர்களால் கேட்க முடிந்தது, காரணம் அதற்கு அவர் கொடுத்திட்டதான பதில் இவர்களைத் தடுமாறப் பண்ணிற்று. தேவனுடைய இராஜ்யம் வெளிப்படையாக வராது, அதாவது தேவனுடைய இராஜ்யம் வரும்போது, ஜனங்களால் அதைக் காண இயலாது என்று இயேசு பதிலளித்தார். இன்னும் விரிவாகச் சொல்லும் வண்ணமாக, தேவனுடைய இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்போது, இதோ இங்கே இருக்கின்றது (அ) இதோ அங்கே இருக்கின்றது என்று ஜனங்களால் பார்க்க இயலாது என்றும் இயேசு கூறினார்; காரணம் தேவனுடைய இராஜ்யமானது ஜனங்கள் மத்தியில் எங்கும் ஸ்தாபிக்கப்படும், தேவனுடைய வல்லமையாக இருக்கின்றது.

"இதோ தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்ற வசனத்தின் மொழிப்பெயர்ப்பானது தவறாய்க் காணப்படுகின்றது (வசனம்-21); ஆனால் இது வேண்டுமென்றே செய்யப்படாத தவறாகவே இருக்கின்றது (லூக்கா 17:21). ஒருவேளை மொழிப்பெயர்ப்பாளர்கள் கவனமாய்க் கவனித்திருப்பார்களானால், இயேசுவால் மாய்மாலக்காரர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும், சொல்லப்பட்ட பரிசேயர்களுக்குள், தேவனுடைய இராஜ்யம் இருக்கின்றது என்று மொழிப்பெயர்ப்பதிலிருந்து/சொல்வதிலிருந்து தங்களைக் காத்துக்கொண்டிருந்திருப்பார்கள். "தேவனுடைய இராஜ்யம் உங்கள் நடுவில் இருக்கிறதே" என்பதே சரியான மொழிப்பெயர்ப்பாகும்.

ஓர் இராஜ்யமானது, அதன் இராஜாவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இயேசு ஓர் இராஜாவாக இவர்கள் நடுவில் காணப்பட்டார், ஆனால் இவர்களோ அவரை அடையாளங் கண்டுகொள்ளவில்லை. "நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" (யோவான் 1:26). இப்படியாகவே சுவிசேஷ யுகம் முழுவதிலும் கிறிஸ்துவின் சபையாகிய, அவருடைய சரீரமானது, உலகத்தினால் அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை. "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). இது 18 நூற்றாண்டுகளாக உண்மையாய் இருந்து வருகின்றது; ஆனால் மாம்சத்தில் காணப்பட்ட கிறிஸ்துவும், சபையும், வேதாகமம் வாக்களிக்கிற பிரகாரமான வல்லமையிலும், மகா மகிமையிலுமான இராஜ்யம் என்ற விதத்தில், முழுமையான தேவனுடைய இராஜ்யமாகக் காணப்படவில்லை. கிறிஸ்துவும், சபையும், அப்போது தொடக்க நிலையிலுள்ள இராஜ்யமாக, கருநிலையிலான இராஜ்யமாக, தேவனுடைய ஏற்றவேளையில் அதிகாரத்தில் அமர்த்தப்படுவதற்கென ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இராஜ்ய வகுப்பாராகக் காணப்படுகின்றனர். அந்த ஏற்ற வேளையானது இப்பொழுது அண்மையில் உள்ளது என நாம் நம்புகின்றோம்.

இந்த இராஜ்யமானது ஆவிக்குரிய ஒன்றாக இருக்கப் போகின்றது; ஆகையால் இதில் ஆளுகைப் பண்ணப் போகிறவர்கள், தேவதூதர்கள் மற்றும் பரம பிதா போன்று கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருப்பார்கள். "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று இயேசு கூறியுள்ளார். தலையின் விஷயம் எப்படியாக இருக்கின்றதோ, அப்படியாகவே கிறிஸ்துவின் சபையாகிய தெரிந்துக்கொள்ளப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய விஷயத்திலும் ஆகும். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாம் மறுரூபமாக்கப்படுவோம்;" இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் இவர்களையும் காணாது, ஏனெனில், "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை;" மற்றும் மாம்சமும் இரத்தமுமானவர்களினால், ஆவிக்குரியவர்களைக் காணவும் முடியாது.

ஆயிர வருட யுகத்தில், இராஜ்யத்தின் அதிகாரமும், தேவனுடைய வல்லமையும் கிறிஸ்து மற்றும் சபை மூலமாக, மனுஷர்கள் நடுவில்/மத்தியில் செயல்படுத்தப்படும்; எனினும் அதை அவர்கள் மாம்ச கண்களினால் காணாமல், புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் மாத்திரமே காண்கின்றவர்களாய் இருப்பார்கள். குருடாக்கப்பட்ட கண்கள் யாவும் அப்போது திறக்கப்படும். இவ்வாறாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அனைத்துக் கண்களும் காணும்; இன்னுமாகப் பாடுகள் பட்டவராகிய அவர், தம்முடைய மகிமையில் பிரவேசித்துள்ளார் என்பதையும், அவருடைய மணவாட்டியாகிய சபை, அவரோடு கூட மகிமையில் காணப்படுகின்றார்கள் என்பதையும், கிறிஸ்து மற்றும் சபை மூலமாகவே, ஆயிர வருட அரசாட்சியின் ஆசீர்வாதம் தங்களுக்கு வருகின்றது என்பதையும் அனைவரும் புரிந்துக்கொள்வார்கள் (வெளிப்படுத்தல் 20:6).

## "மனுஷகுமாரனுடைய நாட்கள்"

பரிசேயர்களது வாயை அடைத்த பின்னர், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார் (லூக்கா 17:22). இது உண்மையுள்ளவர்களுக்கு அதிர்ச்சியான செய்தியாகும். எனினும் தங்களால் புரிந்துக்கொள்ள முடியாத விஷயங்களை ஆண்டவர் கூறுவதைக் கேட்பது, அவர்களுக்குப் பழகிப்போன காரியமாய் இருந்தது; உதாரணத்திற்கு அவருடைய மாம்சத்தையும், அவருடைய இரத்தத்தையும் பானம் பண்ண வேண்டும் என்று கூறினதும், அவர் தாம் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று கூறினதும் ஆகும். இவைகளையெல்லாம் சீஷர்கள் அடையாளங்கள் என்று புரிந்துக்கொண்டு, அவைகளின் உண்மையான அர்த்தம் என்னவாக இருக்கும் எனச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்கள்

எதிர்ப்பார்த்திருந்த பிரகாரமாகவே, இயேசு எப்படி மாபெரும் இராஜாவாக இருக்க முடியும், அதே வேளையில் தாங்கள் அவரையும், அவருடைய நாட்களையும் எப்படிக் காணாதிருக்கவும் முடியும்? என்று சீஷர்கள் யோசித்தார்கள்.

இன்னுமாக, "இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்" என்று இயேசு கூறினார் (லூக்கா 17:22). சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் "இப்படியாக என்னுடைய இரண்டாம் வருகையைக் குறித்து யாராகிலும் சொல்வார்களானால் நம்பாதிருங்கள். நான் இப்படியான விதத்தில் வருவேன் என்று நம்பி வஞ்சிக்கப்படாதிருங்கள். நான் எப்படி வருவேன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி, மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்" என்ற விதத்தில் இயேசு சொன்னார் (வசனம் 24).

"மின்னல்" என்று மொழிப்பெயர்க்கப்பட்ட 24-ஆம் வசனத்திலுள்ள இவ்வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையாகிய 'astrape' என்பதை "பிரகாசித்தல்" என்று மொழிப்பெயர்த்தால், இவ்வசனத்தை நம்மால் நன்கு புரிந்துக்கொள்ள முடியும்; அதாவது மின்னலுக்குப் பதிலாகப் பிரகாசித்தலைக்குறிக்கும் சூரியன் இடம்பெற்றால் இவ்வசனம் நன்கு புரியும்; கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறது சூரியன். ஆனால் இது எவ்வாறு மனுஷகுமாரனை, அவருடைய நாட்களில் அடையாளப்படுத்தப்பட முடியும்? அவர் எப்படிச் சூரியன் போன்று இருப்பார்? கிறிஸ்துவின் நாள் என்பது ஆயிர வருடங்கள் அடங்கியது என்றும், நம்முடைய கர்த்தரின் இவ்வார்த்தைகளானது, "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (யோவான் 16:12) என்ற இயேசுவின் மறைப்பொருட்களுள் ஒன்றாய் இருக்கின்றது என்றும், அவருடைய வார்த்தைகள் அனைத்தையும் தெளிவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, ஏற்ற வேளையில் பிரகாசிப்பித்தலை அருளும் பரிசுத்த ஆவியை இயேசு வாக்களித்துள்ளார் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இந்த வசனமானது புரிந்துக்கொள்வதற்கான ஏற்றவேளை வந்துவிட்டபடியால், இப்பொழுது ஆவிக்குரிய புரிந்துக்கொள்ளுதலை உடையவர்களுக்குத் தெளிவாகிக்கொண்டு வருகின்றது.

இவைகள் எல்லாம் நீண்ட காலத்திற்குப் பிறகு சம்பவிப்பவைகள் என்று, சீஷர்கள் படிப்படியாக அறிந்துக்கொள்ளத்தக்கதாக, இயேசு தாம் முதலாவது அநேகம் பாடுப்பட்டு, இஸ்ரயேல் தேசத்தால் புறக்கணிக்கப்பட வேண்டுமென்று விளக்கினார். அவருடைய வந்திருத்தலுக்கான அடையாளங்கள் பற்றின அவர்களுடைய கேள்விக்கு அவர் கொடுத்திட்ட விவரத்தை (மத்தேயு 24) மீண்டும் சொல்லும் வண்ணமாக "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்" என்று கூறினார் (லூக்கா 17:26).

இங்குத் திட்டவட்டமான காரியங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தில், நீதியின் சூரியனானது வானத்தின் ஒரு எல்லை துவங்கி, மறு எல்லை வரை பிரகாசிக்க ஆரம்பிக்கும் காலத்தில், நாம் எவைகளை எதிர்ப்பார்க்கலாம், என்பது நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. காலங்களுக்கான அடையாளங்களானது, உலகத்தில் பகிரங்கமாய்க் காணப்படாது, மாறாக ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதான நோவாவின் நாட்களில் இருந்தது போன்று, சோதோம் அழிக்கப்படுவதற்கு முன்னதாக லோத்தினுடைய நாட்களில் இருந்தது போன்று, உலகம் அமைதியாக, எப்போதும் போல் இயங்கிக்கொண்டிருக்கும். ஜனங்கள் புசித்தும், குடித்தும், திருமணம் பண்ணியும், வீடுகள் கட்டியும், விதைத்தும், நட்டும், எப்போதும்போல் செய்துகொண்டிருப்பார்கள். ஜனங்கள் இப்படியாக எப்போதும்போல் இருப்பது என்பது பொல்லாப்புத்தனத்தின் அடையாளங்கள் என்று குறிப்பிடப்படாமல், மாறாக உலகத்தைக் கையாளுவதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குமெனக் கிறிஸ்து, ஆரம்பிக்கும் தம்முடைய இரண்டாம் பிரசன்ன காலத்தை உலகத்துக்குச் சுட்டிக்காண்பிப்பதற்கென எவ்விதமான வெளியரங்கமான அடையாளங்கள் இருக்காது என்பதைக் கூறுவதற்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

## "ஜலப்பிரளயம் மற்றும் சோதோமின் அழிவு"

உலகத்தை ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில் ஏன் ஜலப்பிரளயம் மற்றும் சோதாமின் அழிவாகிய இரண்டு அடையாளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது? உலகத்தின் மீதான சாபத்தை எடுத்துப்போட்டு, அதை

ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யமானது, தேவனுடைய மாபெரும் ஏற்பாடாக இருந்தாலும், இந்த இராஜ்யமானது, நம்முடைய தற்கால அமைப்புகளின் அழிவுகளின் மீதே ஸ்தாபிக்கப்படும் என்று வேதாகமம் எங்கும் குறிப்பிடப்பட்டிருப்பதே பதிலாக இருக்கின்றது. தற்காலத்தின் இந்த மதம், சமுதாயம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் அமைப்புகளுடைய அழிவே, இயேசுவினால் ஜலப்பிரளயத்தினாலும், சோதோமின் அழிவினாலும் சித்தரிக்கப்படுகின்றது. மகா உபத்திரவத்திற்கான கொந்தளிப்புச் சடுதியாக நிகழ்வது வரையிலும், மகா உபத்திரவம் வருவதற்கு முன்னதாக, அவர் வந்திருக்கும் காரியத்தை உலகம் காணாது, உலகம் அறியாது, மற்றும் உலகம் யோசித்தும் பார்க்காது, மற்றும் நம்பவும் செய்யாது.

இது ஒரு மகிழ்ச்சியூட்டும் அடையாளமல்ல. ஒவ்வொரு மேகத்திலும் வெள்ளி சரிகை உள்ளது. நமது மனித தோல்விகளாகிய அழிவுகளின் மீது, இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு, உடனடியாக மகிமையான ஆசீர்வாதங்கள் பின்தொடரும் என்பதினால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகத்தின்மேல் பெரும் துன்பமானது சடுதியாய் வெடிப்பதை வலியுறுத்தும் வண்ணமாக "லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்தது," என்று இயேசு கூறினார் (லூக்கா 17:29). "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்." (வசனம் 30). கிரேக்க வார்த்தைகளானது, மகா உபத்திரவத்திற்கு முன்னானது கிறிஸ்துவின் பிரசன்னம் (அ) Parousia என்றும், உபத்திரவத்திற்குப் பின்னானது வெளிப்படுத்துதல் (அ) Epiphania என்றும் வேற்றுமைப்படுத்திக் காண்பிக்கின்றது.

கிறிஸ்துவின் வெளிப்படுதலானது, "அவர் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார்" என்று கூறப்பட்டுள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:7, 8). மகா உபத்திரவமானது பெரும்பாலும் உலகத்தை எரிக்கக்கூடிய ஒன்றாய் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது . . . இதற்குப் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தின் விசுவாசப் பிரமாணங்களானது, பூமி எரிக்கப்படும் என்ற கருத்தை வழங்குகின்றது. பரலோகங்களும்/வானங்களும் எரிக்கப்படும் என்று வரும் வார்த்தைகளை இவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

வேதாகமத்தில், அடையாள வார்த்தையான பூமி, மனித காரியங்களிலுள்ள சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றது; கடலானது அமைதியற்ற, திருப்தியற்ற திரளான ஜனக்கூட்டத்தரை அடையாயப்படுத்துகின்றது. வானங்கள் என்பது, மத சம்பந்தமான ஆவிக்குரிய வல்லமைகளை அடையாளப்படுத்துகின்றது. இவைகளெல்லாம் மகா குழப்பத்துடன் அழிந்துபோய், இவைகளுக்குப் பதிலாகத் தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ள புதிய வானங்களும், புதிய பூமியும் வரும் என்று பரிசுத்தவானாகிய பேதுரு நமக்குக் கூறுகின்றார் (2 பேதுரு 3:10-13). புதிய வானங்கள் என்பது, கிறிஸ்துவின் இராஜ்யத்திலுள்ள மகிமையில் இருக்கும் கிறிஸ்து மற்றும் அவருடைய உடன் சுதந்தரர்களாகிய மகிமையடைந்த சபை உள்ளடக்கின புதிய ஆவிக்குரிய குழுவை அடையாளப்படுத்துகின்றது. புதிய பூமி என்பது, மேசியாவின் இராஜ்யமானது ஸ்தாபிக்கும் புதிய சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றதாக இருக்கும்.

## "வீட்டின்மேல் இருக்கும் பரிசுத்தவான்கள்"

தாம் ஜுவாலிக்கிற அக்கினியாக வெளிப்படுவதற்கு முன்பு, தாம் வந்திருக்கும் காலத்தை மீண்டுமாக நினைவுபடுத்தின பிற்பாடு, மாபெரும் உபத்திரவத்திற்கு அடையாளமான நெருப்பானது, தற்கால அமைப்புகளைப் பட்சிப்பதற்கு முன்னதாக, அவருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும் மரிப்பார்கள் என்றும், மரிக்கும் அக்ஷணமே மறுரூபமடைவார்கள் என்றும் கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். அடையாள வார்த்தையில், அவருடைய நாளில் (Epiphania வெளிப்படுதலுக்கு முன்னதான, பிரசன்ன நாட்களில்) தங்களுடைய பொருட்களை வீட்டிற்குள் வைத்திருக்கும், வீட்டின்மேல் இருப்பவர்கள், பொருள்களை எடுப்பதற்கென, வீட்டின்மேலிருந்து இறங்காமல் இருக்கக்கடவன் என்று கூறுகின்றார் (வசனம் 31). இதன் அர்த்தம் என்ன?

வீடு என்பது தேவனுடைய வீட்டாரை அடையாளப்படுத்துகின்றது என்றும், வீட்டின்மேல் இருப்பவர்கள், தேவனுடைய ஜனங்களிலே மிகவும் பரிசுத்தவான்களாய் இருப்பவர்களை அடையாளப்படுத்துகின்றது என்றும் நாம் நம்புகின்றோம். இவர்கள் அவருடைய பிரசன்னத்தின்

நாட்களில், ஓடுவதற்கான அவசியத்தை அறிந்தவர்களாக இருப்பார்கள். இவர்களுடைய பொருட்களில், விலையேறப் பெற்றவைகளில், இவர்கள் எவ்வளவுக்குக் காப்பாற்ற நாட வேண்டும்? என்ற கேள்வி எழும்பலாம். இவர்கள் தங்களுடைய பொருட்களில் எவற்றையும் தக்கவைத்துக்கொள்ள/ காப்பாற்றிக்கொள்ள நாடக்கூடாது என்றும், இவர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்; அதாவது சமுதாயத்தின் சில சிலாக்கியங்கள், மனுஷர் மத்தியில் கனம், சில பட்டங்கள் அதாவது உதவியாளர், மூப்பர், ஊழியக்காரர் போன்றதான சிறு பதவி ஸ்தானங்களின் பெயர்கள் முதலானவைகளை இவர்கள் தக்கவைத்துக்கொள்ள நாடக்கூடாது. இவைகளையெல்லாம் தக்க வைக்க/காத்துக்கொள்ள முற்படுவது என்பது ஏமாற்றத்தை அளிக்கின்றாகவே இருக்கும். அனைத்தையும் நாம் விட்டுவிட வேண்டும், இல்லையெனில் அக்காலத்தின் பரீட்சைகளை நாம் வெற்றிகரமாய்க் கடந்துச் செல்ல முடியாது.

இதுபோலவே வயலில் இருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமல் இருக்க வேண்டும். வயலானது, உலகத்தை அடையாளப்படுத்துகின்றது. உலகத்தை விட்டு வெளியேறின, அதாவது பெயர்ச் சபைகளை விட்டு வெளியேறின எந்தக் கர்த்தருடைய ஜனங்களும், திரும்பிப்போகக் கூடாது; மாறாக சூழ்நிலையின் உண்மையை அவர்கள் அறிந்துக்கொண்டு, வயலிலிருந்து, கர்த்தரிடத்திற்கு ஓடிவிட வேண்டும்.

பிள்ளைகளை உடையவர்களுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் மேல் அக்காலத்தில் வரும் விசேஷித்தப் பிரச்சனைகளைக் குறித்துப் பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது தெரிவிக்கின்ற காரியமானது, அடையாளமான வார்த்தைகள் என்றும், உலகத்தை மாற்றுவதற்கும், புதிதாய் வருபவர்களுக்குப் போதிப்பதற்குமென நாடும் கிறிஸ்தவ ஜனங்களை அடையாளப்படுத்துகின்றது என்றும் நாம் நம்புகின்றோம். இவர்கள் விசேஷித்த ஆத்துமாவின் வருத்தத்தில் காணப்படுவார்கள்; அதாவது யுக மாற்றத்தின் நிமித்தமாகவும், "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற அழைப்பினாலும் வருத்தத்தில் காணப்படுவார்கள். அழைப்பைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவது என்பது இப்படிப்பட்டவர்களுக்குக் கடினமானதாக இருக்கும்.

சோதோமிலிருந்து, லோத்தும், அவருடைய குடும்பத்தாரும் தப்பி ஓடும்போது, அவர்கள் துரிதமாய் ஓடும்படியாகவும், அழியப் போகிறவைகளைத் திரும்பிப் பார்க்காதப்படியும் எச்சரிக்கப்பட்டார்கள். ஆகவே கர்த்தருடைய ஜனங்களும் அழிந்துப் போவதற்குரியவைகளைத் திரும்பிப்பார்க்கக்கூடாது. அவைகள் மீது கவனம் செலுத்தக் கூடாது. "பாபிலோனை விட்டு ஓடி விடுங்கள்!" "அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்பிவியுங்கள்!" (எரேமியா 51:6); லோத்தின் மனைவி கீழ்ப்படியத் தவறி, அழியப் போகிறவைகளை ஏக்கத்துடன் திரும்பிப்பார்த்து, தப்பிக்கொள்ள முடியாதவள் ஆனாள். இந்த உதாரணத்தை கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக்கொடுத்து, அவர்கள் தற்காலத்தின் காரியங்கள் அனைத்தையும் முழுமையாகத் துறந்து ஓடும்படியாக வலியுறுத்துகின்றார். தன்னுடைய ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்; தன் ஜீவனை இழந்துபோகிறவன், நித்தியத்திற்குரிய ஜீவனைக் கண்டடைகிறவனாக இருப்பான்.

**ஆமென்!**

---

# ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...

## CALLED OF GOD, AS WAS AARON

**ஆதார வசனங்கள் : எபிரேயர் 4:14 – 5:10**

**திறவு வசனம் :** “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்” **– லூக்கா 19:10**



இயேசுவின் ஆசாரியத்துவத்தைக் குறித்தும் அவரது ஆசாரியத்துவத்தோடே இணைந்து வருகிறதுமான திருச்சபையாரின் ஆசாரியத்துவத்தையும் குறித்தும் இந்தப் பாடத்தில் பார்க்க இருக்கிறோம்.

இயேசுகிறிஸ்து நாம் நம்பியிருக்கிற பிரதான ஆசாரியராக அல்லது மேலான ஆசாரியராக இருக்கிறார் என்று அப்போஸ்தலர் எழுதுகிறார். இயேசுகிறிஸ்து எப்படி எந்தவகையில் ஆசாரியத்துவத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று யூதர்கள் புரிந்துகொள்ள கடினமாயிருந்தது. தேவனாகிய கர்த்தர் ஆசாரிய முறைமையை லேவி கோத்திரத்திலிருந்து வந்த ஆரோனுடைய குடும்பத்தாரிடத்தில் நிச்சயப்படுத்தினார். இயேசுவும் அவரது சீஷர்களும் இந்த லேவி கோத்திரத்தைச் சார்ந்தவரல்லர். பிறகு எப்படி அவர் ஆசாரியத்துவ முறைமைக்கு அழைக்கப்படவும், அதன் பணிகளை நிறைவேற்றவும் முடியும் ?

ராஜரீக ஆசாரியக்கூட்டமாக சபை இருப்பதை பேதுரு அப்போஸ்தலன் சுட்டிக் காண்பிக்கிறதில் உள்ள உண்மையை கலந்து ஆலோசிக்கவேண்டியது அவசியமாகும். ஒரு நிஜமான ஆசாரியனாக இயேசு பாவநிவாரணபலியில் கொல்லப்பட்ட காளையாக தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்று பவுல் சுட்டிக் காண்பிக்கிறார். அவ்வாறு தம்மை சிலுவையில் பலிசெலுத்தினபின்பு, உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு, நிஜமான மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தார். அங்கு நமது நிமித்தமாக தம் சபையின் நிமித்தமாக, நிஜமான லேவியர்கள் மற்றும் நிஜமான உடன்ஆசாரியர்கள் நிமித்தம் தோன்றினார்.

இயேசு நமது மாபெரும் பிரதான ஆசாரியராக பரலோகத்தில் இருக்கிறார் என்று விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறோம் என பவுல் வாதிடுகிறார். அவர் நம் அபூரணங்களில் பரிதாபம் காண்பிப்பதால், ஒவ்வொரு தேவைகளிலும் ஏற்ற சமயத்தில் இரக்கம் பெறவும், கிருபையை அடையவும் நாம் மாபெரும் தைரியத்தோடும் உற்சாகத்தோடும் அவரிடத்தில் சேரக்கடவோம். நம் பிரதான ஆசாரியராக அவர் பரலோகத்தில் வீற்றிருக்கிறார் என்பதை நாம் உணரும்வரை இந்த நிச்சயமான ஆசீர்வாத வாக்குறுதிகள் வலுக்கட்டாயமாக தரப்படுவதில்லை. ஆதலால் இந்தப் பாடத்தைக்குறித்து அப்போஸ்தலர் கூறும் கருத்துக்களே இவ்வுண்மையை வெளியரங்கமாக்குகிறது.

**நிழலாக கொடுக்கப்பட்ட ஆரோனின் ஆசாரியத்துவம்:–**

எல்லா யூத ஆசாரியர்களும் லேவி கோத்திரத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களாலேயே ஆசாரிய முறைமைக்கு அபிஷேகம் பண்ணப்பட்டனர். அவர்கள் ஆசாரியவேலைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாக ஜனங்களின் பிரதிநிதிகளாயினர். ஜனங்களுக்காக காணிக்கைகளையும் அவர்களது பாவங்களுக்காக பலிகளையும் செலுத்தினர் என்று அப்போஸ்தலர் காரணகாரியத்தோடு உரைக்கிறார். இந்த ஏற்பாட்டின்படி, ஆசாரியர்கள் ஜனங்கள்மீது மனமிரங்க வாய்ப்பாயிற்று. ஏனெனில் ஆசாரியர்களும்அதே பலவீனங்களுக்கு ஆட்பட்டிருந்தனர். அதோடுகூட, அவர்களது சொந்த பாவங்களுக்காக மன்னிப்பையும் பெறுவது அவசியமாயிருந்தது. இப்படிப்பட்ட அபூரணமான, கறைபடிந்த, பாவநிலையிலுள்ள ஆசாரியர்களுக்குள் தங்கள் சொந்த பாவங்களுக்காக பலிசெலுத்துவது அவசியமாயிருந்தது. ஒருவரும் இந்தப்பணியை செய்ய அனுமதிக்கப்படாமல் இவரே செலுத்தவேண்டும், தேவன் அவரை இந்த ஆசாரியப் பணிசெய்ய அழைக்கவேண்டும். இவ்வாறே ஆரோனை பிரதானஆசாரியராக அவர் அழைத்தார்.

அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறபடி, மேலான நிலைமையில் உள்ள நிஜமான ஆசாரியருக்கும் இம்மாதிரியே சம்பவிக்கவேண்டும். கிறிஸ்து ஆவிக்குரிய பிரதான ஆசாரியராக தம் தெரிந்தெடுக்கப்பட்ட சபையாருடன், ஆவிக்குரிய நிலைமையில் ராஜரீக ஆசாரியத்துவத்தை உடையவராக,தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும். மற்றபடி தாமாக அந்த அலுவலை ஏற்றுக்கொள்ளமுடியாது.

“அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை. நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்”. மேலும், “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்” – சங்2:7, 110:4, எபி5:5,6.

**ராஜரீக ஆசாரியராகிய மெல்கிசேதேக்கு :–**

தெய்வீக அழைப்பின் மகா விசாலமான அஸ்திபாரத்தினை அப்போஸ்தலர் கூறும்போது, கிறிஸ்து ஆரோனின் ஆசாரிய முறைமைப்படி வந்த ஆசாரியரல்லர். ஏனெனில் ஆரோன் ஒரு யூத ஆசாரியன். பூமிக்குரிய ஒரு ஆசாரியன். இயேசுகிறிஸ்துவின் பூமிக்குரிய பலியின் ஜீவியத்திற்கு ஆரோன் முன்னடையாளமாக இருந்தபோதிலும், இயேசு மகிமைப்படுத்தப்பட்ட ஆசாரியராயிருக்கிறார். ஆரோனின் முறைமையின்படியல்ல, ஏனெனில் ஆரோன் ஒருபோதும் மகிமைப்படுத்தப்படவில்லை. அவர் ஒரு ராஜாவுமல்ல, மாறாக மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஒரேசமயத்தில் ராஜாவாகவும் ஆசாரியனாகவும்

**--2081--**

இருக்கிறார். பலிசெலுத்தும் ஆசாரியனாக அல்ல, ஆளுகின்ற ஆசாரியராக இருக்கிறார்.

ஆகவே மகிமையின் நிலைமையில் இயேசு ஒரு மனிதனாக அல்ல, ஒரு பூமிக்குரிய சிருஷ்டியாயும் அல்ல, முன்பு செய்துவந்ததுபோல், பலிசெலுத்துபவராகவும் அல்ல. அவர் வல்லமையிலும் மாபெரும் மகிமையிலும் ராஜரீக ஆசாரியன், தற்போது பரிசுத்தவான்களுக்கெல்லாம் ராஜாவாக இருக்கிறார். அவர்களது எல்லா உபத்திரவங்கள் கஷ்டங்களிலும் தேவையான நேரத்தில் தேவைப்பட்ட உதவியைச்செய்ய அவர் வல்லவராயிருக்கிறார். சிறிதுசிறிதாக தம் உடன் ஆசாரியர்களை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு, அதன்பின்பு இரண்டாம் திரையைக்கடந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் தம் சொந்த மகிமையான சாயலுக்கு மாற்றுகிறார். பின்பு உலகிற்கு அவர் ராஜாவாகவும் ஆசாரியராகவும் மகிமைப்படுவார். இப்படியாக 1000 ஆண்டுகள் ஆட்சிசெய்து, மனதார கீழ்ப்படிகிறவர்களை உயர்த்தி ஆசீர்வதிப்பார். அவர்கள் அப்பொழுது வெளிப்பட்டிருக்கிற வெளிச்சத்தின்கீழ் தேவனிடம் கிட்டிச்சேருவார்கள்

**அவர் தம் மாம்சத்திலிருந்த நாட்களிலே :–**

இரண்டாம் திரைக்கப்பால் உள்ள மகிமையடைந்த ராஜரீக ஆசாரியருக்கும், மாம்சத்தில் துன்பப்பட்ட இயேசுகிறிஸ்துவுக்குமுள்ள தொடர்பை அப்போஸ்தலர் காண்பிக்கிறார்(எபி5:7). அப்போஸ்தலர் எழுதும்போது, "அவர் தாம் மாம்சத்திலிருந்த நாட்களில்" என்று குறிப்பிடுவது, அது நடந்துமுடிந்த சம்பவம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அப்போஸ்தலர் பேதுரு விளக்குகிறார்; "அவர் மாம்சத்திலே கொலையுண்டார், ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" ஆனால் அவர் தம் மாம்சத்திலிருந்த நாட்களில், பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்தார். இயேசுவின் பின்னடியர்களாகிய நாம், அவரது வல்லமையில் நம்பிக்கைவைத்து, நம் உபத்திரவங்களிலும்அவர் நம்மேல் மனமிரங்குவார் என்பது அப்போஸ்தலர் நமக்கு தரும் கருத்து ஆகும். ஆகவே "இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயத்தினிமித்தம் கேட்கப்பட்டு..." என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

கெத்செமனேயில் நம் குரு பட்ட அனுபவங்களை சிந்தித்துப்பார்க்கும்பொழுது, தேவனிடத்தில் அவர் கண்ணீரோடும் மிகுந்த வேதனையோடும் இரத்தவியர்வை நிலத்தில் சிந்த பாடு அனுபவித்தார் என்று காண்கிறோம். நம் குரு இப்படிப்பட்ட சோதனையிலும், கசப்பான அனுபவங்களுக்குள்ளும் கடந்துசென்றார் என்றும், அவர் தற்போது பரலோக மகிமையிலும் வல்லமையிலும் வீற்றிருக்கிறார் என்றும், நம்மை கெத்செமனே அனுபவத்திற்கும், எதிராளியின் தாக்குதலுக்கும் அனுமதித்தபோதிலும் அவர் உண்மையாக தம்மை பின்பற்ற விரும்புபவர்க்கு ஏற்றவேளையில் ஏற்ற உதவி செய்ய நிச்சயம் இரங்குவார் என்பதுமே அப்போஸ்தலர் கூறவந்த கருத்தும் ஆலோசனையுமாகும்.

**ஒரு பாவியாக அல்ல, ஒரு குமாரனாக :–**

இயேசுவின் துன்பங்களை அப்போஸ்தலர் குறிப்பிட்டுக் காண்பிக்கும்போது, அவர் பாவியாக அல்ல, தேவபுத்திரனாக இருந்ததாலேயே பரலோகத்தந்தை அவரை பரீட்சித்தார். அவரது உண்மையும் நேர்மையுமான தன்மை சிலுவை மரணபரியந்தம் பரீட்சிக்கப்பட்டது. இவ்வாறு அவரது நம்பகத்தன்மை சோதிக்கப்பட்டு, தகுதிபெற்றபிறகே உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமை, கனம், அழியாமையை சுதந்தரித்தார். துன்பப்பட்டதும், சகித்தலுமான காரியங்களே மனிதரது பாவத்திற்கான பலியாகவும் மேசியாவின் ராஜ்யத்தில் மனிதர் மறுசீரமைப்படையவும் காரணமாயிற்று. ஆனால் அதே மாதிரியான சோதனைகள், கஷ்டங்கள், அனுபவங்கள் குருவாகிய அவருக்கும் அவசியமாயிருந்தது. அவர் தாம்பட்ட பாடுகளினாலே பரிபூரணராக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

இயேசு பாவத்தினால் வரும் உணர்வாகிய அபூரணநிலைமையை ஒருபோதும் அடையவில்லை. அவர் இப்பூமிக்கு வருமுன், தம் மகிமையை விட்டுவிட்டநிலையில், பிதாவோடு பூரணரும், கறையற்றவரும், லோகோஸ் நிலைமையில் மகிமைபெற்றவராயுமிருந்து, பின் மாம்சமாக்கப்பட்டார். மரியாளிடத்தில் பிறந்தபொழுது, நமக்கு வாக்குத்தத்தம் செய்தபடி, அவர் தொடர்ந்து, "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்". அவர் பட்ட பாடுகள், அவரை பாவமற்றவர் என்ற நிலைமையில் பூரணமாக்கவில்லை, மாறாக வேறொரு வகைப்பட்ட பூரணப்படுத்தலே அவருக்குள் நிகழ்ந்தது.

பலியின் உடன்படிக்கைக்குள் நம் கர்த்தர் நுழைந்தபொழுது, தந்தையின் சித்தத்தை மரணபரியந்தம் உண்மையாய் நிறைவேற்றி தம் நம்பகத்தன்மையை நிரூபிக்கவே நுழைந்தார். உன்னத நிலைமையில் பரிபூரணத்தை அடைவதே அவருக்கு இருந்த வாக்குத்தத்தம். தம் பலியின் உடன்படிக்கையை விசுவாசத்தோடும் உண்மையோடும் நிறைவேற்றி, தெய்வீக சுபாவத்தை வெகுமதியாக அடைவதே அவர் பெற்றிருந்த வாக்குத்தத்தம். அவர் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட அந்த புதியசுபாவம் வளர்ச்சியடைய வேண்டியதும் அல்லது பரிபூரணமடைய வேண்டியதும் அவசியம். இந்த நோக்கத்திற்காகவே சோதனைகளும் உபத்திரவங்களும், அடிகளும் அவருக்கு வர அனுமதிக்கப்பட்டது. அவர் பட்ட பாடுகளினாலே அவர் தெய்வீக முறைப்படி அல்லது தெய்வீக சுபாவத்தின்படி, அவர் புதியசிருஷ்டியாக பரிபூரணராக்கப்பட்டார்.

**மரணத்திலிருந்து அவரை இரட்சித்தல் :–**

குருவாகிய இயேசுகிறிஸ்துவின் விஷயத்தில், அவர் பலியின் உடன்படிக்கைக்குள் நுழைந்தபொழுது, ஜீவனா ? மரணமா ? என்ற நிலைமையே இருந்தது. பலியின் உடன்படிக்கைக்கு அவர் கீழ்ப்படிந்தால் தெய்வீக சுபாவமாகிய அழியாமையை சுதந்தரிக்கமுடியும். ஆனால் அதை நிறைவேற்றத் தவறும்பட்சத்தில் அவருடைய அனைத்தையும் இழந்துபோக நேரிடும். ஏனெனில் அந்த பலியின் உடன்படிக்கையை மையமாகக்கொண்டே அவருடையது அனைத்தும் அடங்கியிருந்தது. ஆகவேதான் கெத்செமனே தோட்டத்தில் பலத்த கூக்குரலோடும், கண்ணீரோடும் பிதாவிடம் வேண்டிக்கொண்டார். மாறாக இனிவரப்போகிற சிலுவை மரணத்தைக்குறித்தோ, அவருக்கெதிராக மனுஷர் செய்யப்போவதைப்பற்றிய பயத்தினாலோ அல்ல. தெய்வ வல்லமை அல்லது தேவன்பேரில் வைத்த நம்பிக்கையின்பேரில் சந்தேகம்

**--2082--**

ஏற்பட்டதன் காரணமாக அவருக்கு கண்ணீரும் கூக்குரலும் வரவில்லை. தெய்வீக நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாகவும் கிரமமாகவும் நிறைவேற்றுவதில் குறைவுபட்டு மரித்துவிடுவோமோ என்ற அச்சமே அவருக்குள் இருந்தது. சிறு பிழை ஏற்பட்டால்கூட தம் மரணத்தில் அனைத்தையும் இழக்க நேரிடுவதோடுகூட, உயிர்த்தெழுவதற்கான தகுதியையும் இழந்துவிடுவார்.

''தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மரணபயத்தினின்று அவர் மீட்கப்பட்டார். அதை உறுதிசெய்துகொண்ட தருணத்திலிருந்து, அந்த இரவில் நடைபெற்றதும், அடுத்தநாள் தொடர்ந்ததுமான எல்லா உபத்திரவங்களிலும், மனஅழுத்தங்களிலும் நம் குரு அமைதியிலும் அமைதி காத்தார். இப்படியாக அனைத்தையும் பூரணமாக நிறைவேற்றி, அவர் தம்மை உண்மையுள்ளவர் என்று நிரூபித்ததை, பரலோகத்தந்தை அவருக்கு நிச்சயப்படுத்தினபிறகு, நாம் ஐயப்படமுடியாது.

**தளபதியும், பிரதான ஆசாரியரும் :–**

இயேசுகிறிஸ்து தாம் அடைந்தவெற்றியையும், உயர்த்தப்பட்டதையும் அடிப்படையாகக்கொண்டு, ''தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகினார்''(எபி5:9).

மெல்கிசேதேக்கின் முறைமைப்படி நிஜமான ஆசாரியராக முதலாவது இரட்சிப்பை சுதந்தரித்தார். இது முதலாவதாக, அவரது சபையாரும், பரிசுத்த ஜாதியாரும், சிறுமந்தையும், ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாருமாகிய அவர்களுடைய இரட்சிப்புக்காக அளிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து அடைந்த அதே மகிமையின் ஸ்தானத்துக்கு இவர்களும் இரட்சிக்கப்படுகிறார்கள். அவர் சென்ற பாதையைத்தவிர வேறுபாதையில்சென்றால் அந்த ஸ்தானத்தை சென்றடையமுடியாது. ஆகவே அவர்கள் தங்களது சிலுவையை சுமந்துகொண்டு அவரைப் பின்பற்றவேண்டும் என்பதே அவர்களுக்கு அவர் அளித்த அழைப்பாகும். அவ்வாறு அவரது அடிச்சுவடுகளில் நடக்கும்போது, அவர் அடைந்தவாறே நற்கீர்த்தியும் துர்க்கீர்த்தியும் அடையநேரிடும்.

அவர் செய்தவாறே அதே பரிபூரணத்தோடும், முழுமையோடும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் எவரும் ஜெயங்கொள்ளமுடியாது. ஏனெனில் அவர் மாம்சத்தில் பரிபூரணராயிருந்தார். அவரைப் பின்பற்றுகிறவர்களோ வீழ்ச்சியினிமித்தம் அபூரணராக இருக்கின்றனர். அவரது பின்னடியார்களிடத்தில் என்ன தேவைப்படுகிறதெனில், அவர் வெளிப்படுத்தினதுபோலவே, அவர் தன் சுயவிருப்புக்களை பலியிட்டு தந்தையின் சித்தத்தை மனப்பூர்வமாக செய்ததைப்போலவே, அதே உண்மையும் நேர்மையுமான இருதயத்தை அவர்களும் வெளியரங்கமாக காண்பிக்கவேண்டும். இப்படிப்பட்ட தம் பின்னடியார்களுக்கு மாபெரும் உன்னத ஆசாரியர் தம் ஈடுபலியின் தகுதிகளை அளித்து, அவர்கள் மனப்பூர்வமாக செய்யாத கறைகளையும், மீறுதல்களையும் மூடுவதோடு, தம் பலியோடு இசைவாகும்படி பொருந்தச் செய்கிறார். இவ்வாறாக தேவன் பார்வையில் அவருக்குள் பூரணர்களாக நிற்கும் வாக்குறுதியை இவர்கள் அடைகிறார்கள். படிப்படியாக பூரணநிலையை அடைந்து, மகிமையான முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகின்றனர்.

''ஒரு நொடிப்பொழுதிலே ஒரு இமைப்பொழுதிலே நாமும் மறுரூபமாக்கப்படுவோம். ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது''

ஆனால் இந்த மேலான ஸ்தானத்தை சுதந்தரிக்கவேண்டுமானால், இயேசுவின் பின்னடியார்கள் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும், அவரது வழிகாட்டுதலைப் பின்பற்றவேண்டும். அவ்வாறு பின்பற்றுவோர்க்கு அவர் ஏற்றநேரத்தில் ஏற்ற உதவிதந்து, அவர்களை பராமரித்து பரலோக ராஜ்யத்துக்கு வழிநடத்துகிறார்.''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, நான் உனக்கு ஜீவ கிரீடம் தருவேன்''

அதோடுகூட, 1000 ஆண்டுகள் மேசியாவின் ஆளுகையில் தம் ராஜ்யத்தை ஆளுகைசெய்யும்போது, மனுக்குலத்தில் யார் யார் அவருக்கு கீழ்ப்படிகிறார்களோ, அவர்களுக்கு அவர் இரட்சிப்பின் காரணகர்த்தாவாக இருப்பார். கீழ்ப்படிய மறுப்பவர்களாகிய அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். ஆனால் மனப்பூர்வமாய் கீழ்ப்படிபவர்கள் பூமிக்குரிய மனித ஜீவிகளாக பூரணப்படுத்தப்படுவார்கள். தேவன் ஆதாமை சிருஷ்டித்த பரிபூரணத்துக்கு அவர்கள் மறுசீரமைக்கப்படுவதோடு, பாவத்தோடும் அதிலிருந்து மீண்டதுமான விலையேறப்பெற்ற அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

முழு உலகிற்கும் சொல்லுங்கள்
ஆசீர்வதிக்கப்பட்ட இந்த சந்தோஷ செய்திகளை
அறிவியுங்கள் இளைப்பாறுதலின் காலம் சமீபமாயிருக்கிறது
தேசத்திலுமுள்ள ஒடுக்கப்பட்ட எல்லோர்க்கும் கூறுங்கள் –
யூபிலி ஆயிரமாண்டுகள் நீடிக்கும் என்று .
நீலஆகாயத்தில் உதிக்கும் காலைக்கதிரவனை
ஒருவினாடி மறைக்கும் மேகம் என்னசெய்யமுடியும் ?
மகிழ்ச்சியின் வாக்குத்தத்த சூரியன்
வெளிப்படும் விரைவில்
எழுந்து ஒளிவீசும் ஆயிரமாண்டுகள்
விரைவாய் ஓடும் மகிமையின் யுகங்கள்
துரிதமாய் ஓடும் மகிழ்வின் காலங்கள் – கிறிஸ்து வெளிப்படுகையில்
ஆம்! ஆயிரமாண்டு ஆளுகை, அவரோடுகூட
தகுதிபெற்றவர்களுள் ஒருவனாக நானும் காணப்படுவேன்!

---

**--2083--**

R 5473

# "திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள்"

## மத்தேயு 20:1-16

"அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." - மத்தேயு 5:45

இந்த உவமையின் அனைத்து அம்சங்களும் நிறைவேறியுள்ளது என்று காண்பிக்கத்தக்கதாக, இந்த உவமைக்கு அர்த்தம் கொடுப்பதற்குச் சிரமமாய் உள்ளது. மாபெரும் போதகர் இதை இராஜ்யத்தின் உவமையாகக் கொடுத்துள்ளார்; ஆகையால் இது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய சபையின் அனுபவங்களுக்குப் பொருந்தக்கூடியது என்பதை நாம் அறிவோம். ஒருவேளை இந்த உவமையை நாம் இந்த யுகத்தினுடைய பல்வேறு காலக்கட்டங்களுக்குப் பொருத்துவோமானால் நமக்குச் சிக்கல் ஏற்படும்; ஏனெனில் யுகத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், யுகம் முழுவதிலும் வாழவும் இல்லை மற்றும் வேலை புரியவும் இல்லை. இன்னுமாக இப்படியாகப் பொருத்திப் பார்க்கப்படும்போது, யுகத்தின் ஆரம்பத்தில் காணப்பட்டவர்களுக்கு மாத்திரமே பலன்/கூலி தொடர்புடைய விஷயத்தில் திட்டவட்டமான வாக்குத்தத்தம் அருளப்பட்டிருக்கின்றது என்றும், மற்ற அனைவருக்கும், நியாயமாய்க் கூலி வழங்கப்படும் என்ற நிச்சயம் மாத்திரமே அருளப்பட்டிருக்கின்றது என்றுமுள்ள சர்ச்சையை நாம் எதிர்க்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த உவமைக்கு அர்த்தம் வழங்கும் விஷயத்தில், முந்தி வந்து, கடைசியில் கூலி பெற்றுக்கொள்பவர்களாக இருப்பவர்கள் முறுமுறுப்பதை, எவ்வாறு பொருத்திப்பார்க்க வேண்டும் என்பதிலும் மற்றொரு சிக்கல் காணப்படுகின்றது. சுவிசேஷ யுகத்தில் முதலாவதாக அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினுடைய காலப்பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னதாக, தங்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைவார்கள் என்று மற்ற வேதவாக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றன. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்றும், பின்பு உயிரோடு வாழும் நாம் மறுரூபமாவோம் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ளார். இன்னுமாக ஆதி சபையின் அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், தங்களுக்கு அருளப்படும் பலனைக் குறித்து முறுமுறுப்பார்கள் என்பது நினைத்துப்பார்க்கவே முடியாத ஒன்றாகவும் இருக்கின்றது.

இந்த அனைத்துச் சிக்கல்களையும், இந்த உவமையை, சுவிசேஷ யுகத்தினுடைய ஒட்டுமொத்த சபையினுடைய அனுபங்களோடு பொருத்திப் பார்க்க நாம் முற்படும்போது, நினைவில் கொள்ளவேண்டும்.

ஒருவேளை இந்த உவமையைத் தேவனுடைய ஜனங்களின் தனிப்பட்ட அனுபவங்களுடன் நாம் பொருத்திப்பார்க்க முற்பட்டாலுங்கூட, நமக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றது. இப்படியாக ஒருவேளை நாம் பொருத்திப்பார்த்தால், வாழ்க்கையின் ஆரம்ப வயதிலேயே கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பித்து, வாழ்க்கையின் முடிவு தருணமாகிய சாயங்கால வேளை வரை கர்த்தருக்கான ஊழியத்தில், உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களே, முதலாவதாக/முந்தி அழைக்கப்பட்டு, கூலியைக் குறித்து வாக்களிக்கப்பட்டார்கள் என்று நாம் கூற வேண்டியிருக்கும். இன்னுமாக கிறிஸ்தவ ஜீவியத்திற்குள்ளாக வாழ்நாட்களின் பிந்தைய நாட்களில் வந்து, தங்களுடைய கொஞ்சமான நேரத்தினாலும், பலத்தினாலும், காலங்களினாலும் கர்த்தருடைய நோக்கங்களுக்காக வேலை புரிபவர்கள், பிந்தி அழைப்பைக் கேட்டவர்களாய், அதாவது பதினோராம் மணி வேளையில் அழைப்பைக் கேட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கும். கர்த்தருடைய வேலையில் செலவிட்ட நேரம் பொருட்படுத்தப்படாமல், இவர்கள் அனைவருக்கும் ஒரே கூலிக் கொடுக்கப்படும் என்று நாம் அர்த்தம் கூறினாலும், ஆரம்பத்திலேயே அழைக்கப்பட்டவர்கள் முறுமுறுத்தார்கள், குறைக்கூறினார்கள், அதிருப்தியடைந்தார்கள் என்ற விஷயத்தில் விளக்கம் கொடுப்பதில் இன்னமும் சிரமமே உள்ளது.

கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராகவும், அவர் தம்முடைய ஜனங்களுக்குக்கொண்டிருக்கும் அவருடைய நீதியான மற்றும் அன்புடன் கூடிய ஏற்பாடுகளுக்கு எதிராகவும் முறுமுறுப்பவர்கள், திரைக்கு அப்பாலுள்ள பலனாகிய இராஜ்யத்தை ஒருபோதும் அடையமாட்டார்கள் என்பதில் நமக்கு உறுதியே. "நல்லது" என்று ஆண்டவரிடம் பாராட்டுதலையும், உயிர்த்தெழுதலின் மாற்றத்தையும் அடைகிற எவரும், முறுமுறுக்கும் விஷயத்தில் தொலைவில்தான் இருப்பார்கள் என்பதிலும் நமக்கு

நிச்சயமே. இவர்கள் ஒவ்வொரு சிறு ஊழியங்களிலும், பலிச்செலுத்துவதிலும் மகிழ்ந்து, களிகூருகின்றவர்களாய் இருப்பார்கள். இராஜ்யத்தின் வகுப்பாருக்கான பலனைக் குறித்துப் பேசும் மற்ற வேதவாக்கியங்களின் போதனைகளுக்கு இசைவாக, இந்த உவமையை நாம் எவ்வாறு பொருத்திப் பார்க்க வேண்டும்? ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது; அதென்னவெனில் இந்த உவமையை, நாம் இராஜ்ய வகுப்பாருடைய தற்காலஜீவியத்தின் அனுபவங்களுடன் முழுமையாய்ப் பொருத்த வேண்டும், அதிலும் விசேஷமாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுடைய தற்கால ஜீவியத்தின் அனுபவங்களுடன் பொருத்திப்பார்க்க வேண்டும்.

## "யூதர்களுக்கும் கொஞ்சம் பொருந்தும்"

1600 வருடங்களுக்கும் மேலாக யூதர்கள் மேசியாவினுடைய முதலாம் வருகைக்காகவும், அவருடைய வருகையின்போது வரும் ஆசிர்வாதமான வாய்ப்புகளுக்காகவும் காத்திருந்தார்கள். இயேசு தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது, "பரலோக இராஜ்யம் சமீபித்துள்ளது" என்று பிரசங்கம் பண்ணி, அதில் பிரவேசிப்பதற்கான சிலாக்கியத்தை யூதர்களுக்குக் கொடுத்தார். அந்தச் சிலாக்கியமே "ஒரு பணம்" அல்லது தங்களுடைய ஜீவியம் முழுவதும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கான, அதாவது அவர்களுடைய உண்மையுள்ள பிரயாசத்திற்கான கூலியாக இருந்தது. இராஜ்யத்திற்கான வாய்ப்புப் பிரகடனப்படுத்தப்பட்ட போது, சில ஆயக்காரர்களும், பாவிகளும் அதனிடத்திற்கு ஈர்க்கப்பட்டார்கள்; அதாவது தேவனுக்கான ஊழியத்தையும், திராட்சத்தோட்டத்தின் வேலையையும் முன்பு புறக்கணித்திருந்த சிலர், அதனிடத்திற்கு ஈர்க்கப்பட்டனர். இந்தப் புதிய வேலையாட்கள் கர்த்தர் இயேசுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய சீஷர்கள் ஆகுவதற்கான வாய்ப்பினை வழங்கப் பெற்றார்கள்.

சீஷத்துவத்திற்கான வாய்ப்பே அந்த ஒரு பணம் (அ) கூலி ஆகும். தேவனாகிய கர்த்தருக்குத் தங்களுடைய ஜீவியங்கள் முழுவதும் உண்மையாய் இருந்திட்ட பரிசேயர்களும், வேதபாரகர்களும், பாவிகள் மற்றும் ஆயக்காரர்களைக் காட்டிலும் தங்களுக்குச் சில முன்னுரிமை (அ) முக்கியத்தும் கொடுக்கப்பட வேண்டுமென்று எண்ணினார்கள், மற்றும் இராஜ்யத்திற்கான முதல்தரமான வாய்ப்புகளைத் தங்களுக்கு அளிக்காத எந்த ஏற்பாடுகளும் நியாயமற்றது என்று முறுமுறுத்தார்கள். ஒருவேளை பாவிகளும், ஆயக்காரர்களும் கூட மேசியாவின் சீஷராகுவதற்குரிய ஆசீர்வாதமான சிலாக்கியத்தை அடைவார்களானால், நிச்சயமாய் இதனை காட்டிலும் மேலான/உயர்வான காரியம் தங்களுக்கு வரும் என்று பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்கள் எண்ணினார்கள். இயேசு பாவிகளையும், ஆயக்காரர்களையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு புசித்ததைக் குறித்து இவர்கள் முறுமுறுத்தார்கள்.

இது தொடர்புடைய விஷயத்தில் பரிசேயர்களுக்கு விசேஷித்த கடிந்துக்கொள்ளுதலாக விளங்கும்படிக்கு, ஆண்டவருடைய உவமைகளில் ஒன்று காணப்பட்டது. கெட்ட குமாரன் தங்களுடைய சிலாக்கியங்களுக்கு ஏற்ப வாழாமல் காணப்பட்ட ஒரு யூத வகுப்பாருக்கு அடையாளமாய் இருந்தான், ஆனால் மூத்த குமாரனோ பிதாவின் வேலையில் காணப்படுவதற்குத் தொடர்ந்து முயன்று கொண்டிருந்த ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இந்தக் கெட்ட குமாரன் வகுப்பாரில் சிலர், இயேசு மற்றும் அவருடைய சீஷர்களின் உதடுகளிலிருந்து தேவனுடைய அன்பு பற்றின செய்தியைக் கேட்டு, பிதாவின் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் கிருபையாய்/இரக்கத்துடன் நடத்தப்பட்டு, (வழித்தப்பிப் போகாமலும், உண்மையாய் ஊழியம் புரிந்தவர்களுமாகவும் காணப்பட்ட மூத்தக்குமாரன் வகுப்பாருக்குரிய அதே) புத்திரத்துவத்தின் சிலாக்கியம் வழங்கப்பட்டபோது, மூத்த குமாரன் வகுப்பார் எரிச்சலடைந்தார்கள். இவர்கள் முறுமுறுத்து, விருந்தில் பங்குக்கொள்ள மறுத்தார்கள். இவ்விதமாய் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் சிலர் முந்திக் காணப்பட்டாலும், ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் பிந்தினவர்களாய்க் காணப்பட்டார்கள், மேலும் மற்றவர்களாகிய பிந்தினவர்கள் சிறந்த விதத்திலும், விரைவாகவும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைக் கண்டடைந்தார்கள்.

## "கிறிஸ்தவர்களுக்குக்கூடப் பொருந்தும்"

தேவன் அருளவிருக்கும் எதுவும் அன்பளிப்பு என்ற உண்மையை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்த உவமையினுடைய பொதுவான படிப்பினையாக இருக்கின்றது. கொள்கைக்கும், நீதிக்குமான அன்புடன் கூடிய நேர்மையுடன் நாம் அவருடைய ஊழியத்தில் ஈடுப்பட வேண்டும். ஒருவேளை நாம் பல வருடங்களாக ஊழியம் புரிந்திருந்தோமானால், ஊழியம்

புரிவதற்கான அந்தச் சிலாக்கியம் மதிக்கப்பட வேண்டும்; மற்றும் கர்த்தருடைய நோக்கங்கள் மீதான நமது அக்கறையானது நம்மை மகிழ்விக்க வேண்டும். இப்படியாக ஊழியத்திற்கான சிலாக்கியத்தினுடைய உணர்ந்துக்கொள்ளுதலின் கண்ணோட்டத்தின்படி நாம் பார்க்கும்போது, நாம் கர்த்தருடைய வேலைகள் நடந்தேறுவதைக் காண்பதில் மகிழ்கிறவர்களாகவும், மற்றவர்களும் ஊழியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கையில் மகிழ்கிறவர்களாகவும், நாம் எதிர்ப்பார்த்து நம்பியிருக்கும் அதே பலனை, மற்றவர்களும் அடைவதைப்பார்ப்பதில் மகிழ்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். இப்படியாகப் பரந்த மனப்பான்மையுடன் கூடிய ஆவி கொண்டவர்கள் மாத்திரமே, அதாவது திராட்சத்தோட்டத்தின் சிலாக்கியத்தை இப்படியாக உணர்ந்துக்கொண்டவர்கள் மாத்திரமே, அதாவது "தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவரிடமும்" இப்படியான அனுதாபம் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே, இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாய் இருப்பார்கள்; மற்றும் இராஜ்யம் அறிவிக்கப்பட ஆயத்தமாகும் போது, அறிவு மற்றும் வாய்ப்பிற்கான விசேஷித்த சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்வதிலும் ஆயத்தமாய் இருப்பார்கள்.

நிழலான இராஜ்யமானது இயேசுவின் நாட்களில் யூதர்களுக்கு அளிக்கப்பட்டது போலவும், தெய்வீக ஊழியங்களில் நீண்ட காலமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களோடு கூட, இராஜ்யத்தில் பங்கடைவதற்கான அதே வாய்ப்பினை, தெய்வீக ஊழியங்களுக்குப் புதிதாய் இருப்பவர்களும் பெற்றுக்கொண்டது போலவும், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவாகிய அறுவடை காலத்திலும் காணப்படும். கர்த்தருக்கு உண்மையாய் இருப்பதற்கும், அவருடைய நோக்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கும், தங்கள் ஜீவிய காலம் முழுவதையும் பெற்றிருப்பவர்கள், தங்களுக்கு அவ்வளவு அதிகமான சிலாக்கியமும், ஆசீர்வாதமும் இருக்கின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை பல வருடங்களுக்குப் பின்னர், சிலர் தெய்வீக ஊழியங்களுக்குள் பிரவேசித்தால், இவர்களை உடன் ஊழியர்கள் என்று கருதி, முந்தி வந்தவர்கள் களிக்கூர வேண்டும்.

ஊழியர்களாக/வேலையாட்களாக இருக்கும் அனைவரும், கர்த்தருடைய வார்த்தைக்கு இசைவாக திராட்சத்தோட்டத்தில் உள்ளே வரும், மற்றவர்களைக் குறித்துப் பொறாமைக்கொள்வதற்குப் பதிலாக, ஆண்டவர் இன்னும் வேலையாட்களைத் திராட்சத்தோட்டத்திற்குள் அனுப்பும்படிக்கு ஜெபம் பண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். தற்கால சத்தியத்தின் மாபெரும் அறிவானது இப்பொழுது, கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை புரியும் அனைவருக்குமான கூலியாக வந்து கொண்டிருக்கையில், நீண்ட காலத்திற்கு முன்னதாகவே ஆண்டவருடைய ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், சமீபத்தில்தான் உள்ளே வந்தவர்களுக்கும், ஒருவேளை இந்தக் கூலியானது சரிசமமாக வழங்கப்பட்டால் நாம் ஆச்சரியப்பட வேண்டாம்.

கர்த்தருடைய வழிமுறைகளில் நாம் களிக்கூருவோமாக. பதினோராம் மணி நேரத்தில் கூட வேலைக்கு வந்தவர்களிடத்திலான அவருடைய கிருபையின் காரணமாக, நம் இருதயங்கள் கோபங்கொள்ளாமல் இருப்பதாக. அவர்களும் சகோதரர்கள் அல்லவா? பொன்னான சட்டத்தினுடைய நிபந்தனையின் கீழ் நாம் அனுபவிக்கும் அதே ஆசீர்வாதங்களை, அவர்களும் அனுபவிக்க நாம் விரும்ப வேண்டாமோ? கர்த்தருடைய ஊழியத்தில் நீண்ட காலமாய்க் காணப்படுபவர்களின் சார்பிலிருந்து, ஏதேனும் விலகியிருக்கும் தன்மை அல்லது இவர்கள் தங்களிடத்தில் அதிகமான கர்த்தருடைய தயவு காணப்பட வேண்டுமென்று எண்ணுவது தவறாகும். நாம் கர்த்தரைப் போன்றே காணப்பட வேண்டுமென்றே கர்த்தர் விரும்புகின்றார் "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:45).

## "ஆதார வசனத்தின் படிப்பினைகள்"

தேவனுடைய குணலட்சணம் பற்றியும், மனித இரட்சிப்பிற்கான அவருடைய திட்டம் பற்றியும் உள்ள சரியான புரிந்துக்கொள்ளுதலை நம்முடைய முன்னோர்கள் இருண்ட யுகங்களின்போது, இழந்துப் போயுள்ளனர் என்பதை நாம் அதிகமதிகமாய்க் கற்று வருகின்றோம். அவரை அன்புள்ளவராகவும், கிருபையுள்ளவராகவும் சித்தரிப்பதற்கு பதிலாக, விசுவாசப் பிரமாணங்களில், அவரை வித்தியாசமாய் சித்தரித்துவிட்டனர். நமக்கு வழங்கப்பட்ட இருண்ட யுகங்களுடைய விசுவாசப் பிரமாணங்களானது, வேதாகமத்தின் போதனைகளைத் திரித்துக் காட்டுகின்றன. சமீப காலங்களில்தான் இந்த உண்மையை வேத மாணவர்கள் உய்த்துணர ஆரம்பித்துள்ளனர். தேவன் தம்முடைய பெரும்பாலான மனித சிருஷ்டிகளுக்கென, அக்கினி உள்ள நரகத்தையும், நித்தியமான சித்திரவதையையும் ஆதியிலே திட்டம் பண்ணியுள்ளார் என்றும், தெரிந்துக்கொள்ளப்பட்ட

சொற்பமான பரிசுத்தவான்களுக்கு மாத்திரமே பரதீஸ் என ஆதியிலே திட்டம் பண்ணியுள்ளார் என்றுமுள்ள போதனைகள் கொண்டுள்ள விசுவாசப்பிரமாணங்கள், பகுத்தறிவிற்குப் புறம்பாக இருக்கின்றதென, கிட்டத்தட்ட புத்தியுள்ள ஜனங்கள் அனைவருமே உணர்ந்து, இப்பொழுது இந்த விசுவாசப்பிரமாணங்களை ஒதுக்கிவிட்டனர்.

ஆனால் அந்தோ, நம்முடைய விசுவாசப்பிரமாணங்களுடைய தப்பிதங்களை நாம் உணர்ந்துக் கொண்டு, அவைகளை நாம் ஒதுக்கி வைத்துக்கொண்டிருந்தாலும், நம்மில் அநேகர் விசுவாசப் பிரமாணங்களுடைய போதனைகளானது எவ்வளவாய் வேதாகமத்தின் போதனைகளிலிருந்து வித்தியாசமாய் இருக்கின்றது என்பதைக் கவனிக்கத் தவறுகின்றனர்! ஆனால் வேதாகமம் மீண்டுமாகத் தேடப்படுகின்றது. நம்முடைய பார்வையை மங்கலாக்கின, விசுவாசப்பிரமாணம் எனும் மூக்குக்கண்ணாடியானது, சுக்குநூறாக உடைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. வேதாகமத்தை நாம் அதற்கே உரியதான, அதன் வெளிச்சத்தில் கற்றுக்கொள்வதற்காக, வாசிக்கின்றோம்; மேலும் இப்படியாகச் செய்யும் அளவுக்குத்தக்கதாக ஆசீர்வாதமும் நம்மிடத்தில் கடந்து வருகின்றது.

"இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்பதைக் கவனியுங்கள். பரலோகத்தில் இருக்கின்ற தங்கள் பிதாவைப் போன்று, தாங்கள் செய்வதாக எண்ணிக்கொண்டு, இயேசுவின் நாமத்திலும், பிதாவின் நாமத்திலும், மதத்தின் பெயரிலும் இருண்ட யுகத்தின்போது சகோதரர் கேல்வின் (Brother Calvin), பிளட்டி மேரி (Bloody Mary), மற்றும் இன்னும் பலரால் பயங்கரமான கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன. அந்தோ பரிதாபம், அவரை இவர்கள் சரியாய்ப் புரிந்துக்கொள்ளவில்லை. மிகவும் மோசமானவராக இவர்களால் சித்தரிக்கப்பட்ட மோசமான பிதாவையே, இவர்களும் பின்பற்றினவர்களாகக் காணப்பட்டார்கள். இப்பொழுது நம்மால், "இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்ற வார்த்தையை இயேசு எந்த அர்த்தத்தில் கூறினார் என்பதை பார்க்கின்றோம். "அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:45).

இயேசுவின் மிகச் சிறந்த சீஷர்களில் இருவர், அவரோடு கூடவே காணப்பட்டப் போதிலும், தவறான கருத்தைக்கொண்டிருந்தனர். அவர்களே இப்படி இருந்தார்களானால், விசுவாசப்பிரமாணங்கள் காணப்பட்ட காலப்பகுதியில், வேதாகம ஆராய்ச்சி தவிர்க்கப்பட்ட நிலையிலும், தெய்வீகக் குணலட்சணம் பற்றின சரியான புரிந்துக்கொள்ளுதல் அனைத்தையும் இழந்த நிலையிலும் காணப்பட்டவர்களை நாம் எவ்வளவாய்ப் பொறுத்துக்கொள்ள வேண்டும்!

இங்கு நாம் குறிப்பிடும் இரண்டு சீஷர்கள் செபதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபும், யோவானும் ஆவார்கள். கர்த்தருக்கும், சீஷர்களுக்கும் உணவு குறைவுப்பட்டபோது, யாக்கோபும், யோவானும், அப்பம் வாங்குவதற்கென, சமாரியா பட்டணத்திற்குள் போனார்கள். வியாதிப்பட்டிருக்கின்ற சமாரியர்களையும், யூதர்களையும் சொஸ்தப்படுத்தும்படிக்கு ஏன் இயேசு தங்கள் பட்டணத்திற்கு வரவில்லை என்று இவர்கள் இருவரிடமும் சமாரியர்கள் வினவினார்கள். அச்சமயம் அவருடைய ஊழியம் யூதர்களுக்கு மாத்திரமே உரியது என்று சமாரியர் அறிந்தபோது கோபமடைந்து, "யூதர்களிடமிருந்தே அப்பம் போய் வாங்கிக்கொள்ளுங்கள்; நாங்கள் உங்களுக்கு எதுவும் விற்பதில்லை" என்று இரு சீஷர்களிடம் கூறினார்கள். அனைத்திற்கும் சுதந்தரவாளியான தங்கள் ஆண்டவர் இப்படியாகக் கனவீனப்படுத்தப்பட்டபடியால் யாக்கோபும், யோவானும் மிகவும் கோபமடைந்து, சமாரியர்களுடைய பட்டணம் அழிக்கப்படத்தக்கதாகச் சமாரியர்கள் மீது அக்கினியை வரப்பண்ணுவதற்கு, இயேசுவிடம் அனுமதிக் கேட்டுக்கொண்டார்கள். இந்தச் சீஷர்கள், தங்களிடத்தில் தேவனுடைய ஆவி இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தார்கள், "அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்" (லூக்கா 9:55, 56).

இந்த இரண்டு அருமையான சீஷர்கள் கூடத் திருத்தப்படுவது அவசியமாய் இருந்ததானால், அதாவது சமாரியர்களை அழித்துப் போடும் விஷயத்தில், அவர்களிடத்தில் தவறான ஆவி இருந்தது எனக் காண்பித்துக் கொடுக்கப்படுவது அவசியமாய் இருந்ததானால், எதிர்க்கிறவர்கள் அனைவரும்

நித்தியமான சித்திரவதைக்குள் போவார்கள் என்று தேவனுடைய நாமத்தில் கூறுபவர்களுக்கு, எவ்வளவாய் இயேசுவின் இந்தக் கடிந்துக்கொள்ளுதல் பொருத்தமானதாய் இருக்கும்!

இப்படியாகக் காணப்பட்டவர்களில் சிலராகத்தான் நாம் இருக்கின்றோம். அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும், தவறான உபதேசமாகிய திராட்சரசத்தைப் பருகினதின் காரணமாக விசுவாசப்பிரமாணம் கொடுத்திட்ட போதை மயக்கத்தினாலும் இப்படியாக முன்பு ஒருகாலத்தில் நாமும் காணப்பட்டிருந்தோம். (வெளிப்படுத்தல் 17:1-5; 18:3). விடுவித்ததற்காக தேவனுக்கு நன்றி! தெளிந்த கண்ணோட்டங்கள்/பார்வைகள் அவருடைய ஜனங்களுக்கு வந்துகொண்டிருப்பதற்காக அவருடைய நாமத்தை துதிப்போமாக! புதிய யுகத்தினுடைய காலை விடிந்துக் கொண்டிருப்பது, பிரகாசிப்பித்தலைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நீதியின் சூரியன் உதித்துக்கொண்டிருக்கின்றது; அதன் பிரகாசமான கதிர்களினால் கடந்த காலத்தின் குட்டிச்சாத்தான்கள் ஓடி மறைந்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஆசீர்வாதமான செய்தியை உலகம் அனைத்திற்கும் சொல்லுங்கள்.

## "தேவனுடைய மகிமையான குணலட்சணம்"

நம்முடைய ஆதார வசனமானது, நன்றியற்றவர்களிடத்திலும், அநீதியுள்ளவர்களிடத்திலும், பாவிகளிடத்திலுங்கூட, நமது தேவன் கிருபையுள்ளவராக, இரக்கமுள்ளவராக, கருணையுள்ளவராக இருக்கின்றதுபோல, நாமும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சகல மனுஷருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்கிறவர்களாகவும் மற்றும் இரக்கமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும், காணப்பட வேண்டும் என்று கூறுகின்றது. இப்படியான தேவனைப்பற்றின ஒரு கண்ணோட்டமே நம்முடைய இருதயங்களின் கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இந்த அன்பின் தேவனைப்பற்றி நாம் அதிகமாய்ப் படிக்கையில், இவர் ஒருவரே அன்புள்ளவராகவும், உண்மையான தேவனாகவும் இருக்கின்றார் என்பதையும், முன்பு நாம் கொண்டிருந்த தவறான கருத்துக்கள் அனைத்தும் உண்மையற்றதும், அன்பற்றதும், நிஜமற்றதும், நாம் சொந்தமாய் உருவாக்கின தெய்வங்கள் என்பதையும் நாம் அதிகமதிகமாய் உணர முடிகின்றவர்களாய் இருப்போம். இன்னுமாக கல்லினாலும், மண்ணினாலும், இரும்பினாலும், வெண்கலத்தினாலும் புறமதத்தினர் செய்திருந்த விக்கிரகங்களைக் காட்டிலும், கொடூரமான விசுவாசப்பிரமாணம் எனும் விக்கிரகங்களை, பேனாவினாலும், காகிதத்தினாலும், மையினாலும், அச்சுகளினாலும் நாகரிகமடைந்திருக்கும் தேசங்கள் உண்டுபண்ணப் பெற்றிருக்கின்றனர் என்பதையும் நம்மால் காணமுடியும்.

"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கின்றான்." (நீதிமொழிகள் 23:7). ஒருவன் வணங்கும் தேவன் கொடூரமானவராகவும் பழிவாங்குபவராகவும், பகைக்கிறவராகவும், வெறிகொண்டவராகவும் இருப்பாரானால், இப்படியான கடவுளை வணங்கும் அந்த மனுஷனோ (அ) மனுஷியோ, அந்தத் தெய்வத்தின் கொடூரமான தன்மையின் தாக்கத்தினால் ஆட்கொள்ளப்படாமலும், அதே போன்று எண்ணுவதற்கும், செய்வதற்கும் வழிநடத்தப்படாமலும் இருக்குமாயின், இது அற்புதமாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய மனதின் கண்களுக்கு முன்னதாக அன்பான மற்றும் உண்மையான தேவனை, நமது மாதிரியாகக் கொண்டிருப்போமானால், நமது சிருஷ்டிகரின் மகிமையான குணலட்சணத்தை நாம் அறிய அறிய, நாம் மாற்றமடைந்து, நாளுக்கு நாள் மறுரூபமாக்கப்படுவோம். நம்மையும் அறியாமல், இந்த உயர்ந்த மாதிரியை நாம் பின்பற்றுபவர்களாகி, நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே, அதிகமதிகமாய் மறுரூபப்படுவோம்; மற்றும் நம்முடைய அன்றாட ஜீவியங்களில் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தமும் இன்னதென்று பகுத்தறிகிறவர்களாகவும் இருப்போம்.

நலமானதை, அதாவது கர்த்தருடைய உறுதியான வார்த்தைகளைப் பற்றிக்கொள்வோமாக. தெய்வீகச் செய்தியை நமக்கு மிகவும் திரித்துக் காண்பித்த இருண்ட யுகத்தினுடைய, மனித கொள்கைகளைப் புறம்பாக்கிடுவோமாக. இப்படிச் செய்வோமானால் நாம், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பவர்களாய் இருப்போம். (யோவான் 8:32).

**ஆமென்!**

---

# நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள்

கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே நல்நோக்கமுடையவர்களாகவே காணப்படுவார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. நல்நோக்கங்கள் இல்லாமல், வேறானவைகளைப் பெற்றிருந்து, அவர்களால் கர்த்தருடைய அங்கீகரிப்பை எப்படிப் பெற்றிட முடியும்? சுயநலமானது உள்ளே நுழைந்து, புதுச்சிருஷ்டியினால் கண்டுபிடிக்க முடியாத சில அளவுகளில், செயல்பாட்டில் காணப்படலாம்; ஆனால் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அது கட்டுப்படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டுக் கொல்லப்பட வேண்டும். கர்த்தருடைய பின்னடியார்களுடைய முழு ஜீவியமே - மனம் மற்றும் சரீரத்தினுடைய தனிப்பட்ட அபூரணங்கள் தொடர்பான மற்றும் மற்றவர்களுடைய வார்த்தைகள், நடத்தைக்குறித்துச் சரியாய்ப் புரிந்துகொள்ளுதல் தொடர்பான அனுபவமுடைய ஒன்றாயிருக்கின்றது.

பொதுவில் பேசுதல், அறிமுகம்பண்ணுதல், அடக்க ஆராதனைகள் முதலானவைகளில் ஈடுபடும் சகோதரரின் கவனத்திற்கு நாம் இரண்டு காரியங்களைக் கொண்டுவர விரும்புகின்றோம். எங்களுடைய யோசனைகளும், விமர்சனங்களும், அச்சகோதரர்களுக்கும், நாம் அனைவரும் ஊழியம் புரிந்திட விரும்பும் அந்தக் காரணங்களுக்கும் உதவியாக இருக்கும்படிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

(1) அடக்க ஆராதனைகள் நடந்திடும்போது, சகோதரரில் சிலர் மரணம் மற்றும் நமது இனத்தின் மீதான பாவத்தின் சம்பளம் குறித்தும், தண்டனையிலிருந்து விடுவிக்கும் மீட்பு மற்றும் உயிர்த்தெழுதல் குறித்துமான நற்செய்தியினைச் சொல்லிட வேண்டும் என்ற ஆர்வத்தில், எல்லை மீறிப்போய்விடும் அபாயங்கள் இருப்பதாக எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலசமயங்களில் இவர்கள் நீண்ட நேரமாய்ப் பிரசங்கம்பண்ணி - அத்தகைய தருணத்திற்குத் தகுதியாய் இருப்பவற்றைக் காட்டிலும் அதிகம் பேசிடுவதற்கு முற்படுகின்றனர். இன்னும் சிலசமயங்களில் மரணம் தொடர்பான சுவிசேஷத்தின் செய்தியையும், வேதாகம விளக்கங்களையும் முன்வைத்திட வேண்டும் என்ற மிகுந்த நோக்கத்தில், துன்பத்தில் காணப்படும் இறந்திருப்பவரினுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளையோ அல்லது இறந்திருப்பவர் குறித்தும், அவரது குணலட்சணம் குறித்தும், தேவனுக்கான அவரது வைராக்கியம் குறித்தும், வேதாகமத்தின் மீதான அவரது ஈடுபாடு அல்லது இழப்பில் காணப்படும் குடும்பத்தினரை ஆறுதல்படுத்தும் உண்மையுள்ள புகழுரை எதையேனும் குறித்தும் குறிப்பிடுவதற்கு மறந்து போய்விடுகின்றனர்.

முழுக்க புகழுரையினாலும் மற்றும் மரணம் குறித்த வேதாகமத்தின் போதனைகளுக்குக் கவனம் கொடுக்காமலும் காணப்படும் சாதாரணமான அடக்க ஆராதனைப் பிரசங்கங்கள் சரியானவை என்று எந்த விதத்திலும் தெரிவித்திடுவதற்கு நாம் விரும்பவில்லை. தெய்வீகத் திட்டம் குறித்த சில விளக்கங்கள் கொடுப்பதும், இறந்திருப்பவர் மற்றும் அவரது குடும்பத்தார் குறித்து சில விஷயங்கள் குறிப்பிடுவதுமாகிய தன்னடக்கமான வழிமுறையானது ஞானமாய் இருக்குமென நாம் யோசனையாக மாத்திரம் தெரிவிக்கின்றோம்.

(2) பொது ஊழியங்களுக்கான பேச்சாளரை அறிமுகப்படுத்திடும் சகோதரனைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் மிகுந்த கவனம் கொடுக்கப்பட வேண்டும். தவறான விதத்தில் அறிமுகம் கொடுத்திடுவதற்குப் பதிலாக, அறிமுகப்படுத்தி வைக்காமல் இருப்பதே சிறந்ததாயிருக்கும். பொது ஊழியங்களுக்கான பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் தருணத்தை, ஒருவர் தன்னை மிகைப்படுத்தி, தனது பேச்சுத்திறமையை, வேதாகமம் குறித்த தனது அறிவை வெளிக்காட்டிக்கொள்வதற்குப் பொருத்தமான தருணமெனக் கருதுவாரானால், அவருக்குப் பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் வேலைகள் கொடுக்கப்படக்கூடாது. தெய்வீகத் திட்டம் குறித்து, தான் அறிந்திருக்கும் அனைத்தையும் சொல்லிடுவதற்கும், கூட்டத்தாருக்குப் பேச்சாளர் என்ன சொல்லவிருக்கின்றார் என்பதை முன்கூட்டியே கூட்டத்தாருக்குத் தெரிவித்திடுவதற்குமான வாய்ப்பாக, பேச்சாளரை அறிமுகம்பண்ணிடும் தருணத்தினைக் கருதிடும் நபர் பொருத்தமற்ற நபராய் இருப்பார்; அதாவது எப்படித் துவக்க ஜெபம்பண்ணிடுவதற்கு அழைக்கப்பட்டிருக்கும் நபர் ஒருவர், ஜெபத்தைச் செய்தியாக நீட்டிச் சென்று, விலையேறப்பெற்ற நேரத்தை வீணடித்து, தனது தகுதியின்மையினால் அனைவருக்கும் வெறுப்பூட்டி பொருத்தமற்ற நபராய் இருப்பாரோ, அப்படியே ஆகும். பேச்சாளர் ஒருவரால்

இரண்டு மணி நேரங்களில் ஏற்படுத்திடும் பாதகத்தைக் காட்டிலும், பேச்சாளரை அறிமுகப்படுத்துபவரால் இரண்டு நிமிடங்களில் அதிகமான பாதகத்தினை ஏற்படுத்திட முடியும்.

தாழ்மையும், தன்னடக்கமும் மற்றும் சுருக்கமாய்ப் பேசுதல் என்பவைகள் எவ்விடத்தில் காணப்பட்டாலும் அவை பிரம்மாண்டமான பண்புகளாக இருக்கின்றன, ஆனால் புதிய வகுப்புகளை உருவாக்கும் கூட்டங்களிலும், பயண ஊழியர்களின் வருகையின் போதான கூட்டங்களிலும் அல்லது வேறு ஏதாவது கூட்டங்களிலும் பேச்சாளரை அறிமுகம் செய்திடுபவருக்கு இவை விசேஷமாய்த் தகுதியான பண்புகளாய் இருக்கும்.

இம்மாதிரியான தருணங்களில், ஜெபம் ஏறெடுக்கின்றவர், ஜெபத்தினை வேண்டுதலாக மாத்திரம் ஏறெடுத்திட வேண்டும். அவர் ஜெபம்பண்ணுவதைக் கேட்பதற்காகக் கூடியிருப்பவர்கள் கூடிவரவில்லை, மாறாக பிரசங்கத்தைக் கேட்கவே வந்திருக்கின்றனர். அவரது ஜெபத்தில் அவ்வேளைக்கான சிலாக்கியத்திற்காகவும், நம்முடைய நாட்களில் அருளப்பட்டிருக்கின்றதான சுயாதீனத்திற்காகவும், சத்தியத்தை அறிந்துகொள்வதற்குரிய இருதய வாஞ்சைக்காகவும், திறக்கப்பட்ட வேதாகமத்திற்காகவும் தேவனுக்கு நன்றி ஏறெடுத்திட வேண்டும். கூட்டத்திலும், கூட்டத்தார் மீதும், பேச்சாளர் மீதும் தெய்வீக ஆசீர்வாதங்கள் கடந்துவருவதற்கும் மற்றும் கர்த்தருடைய நாமமானது மகிமைப்படுவதற்கும், சத்தியமானது மேலானதாகக் காணப்படுவதற்கும், நீதியினை விரும்புபவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் என்று விண்ணப்பங்கள் கர்த்தரிடத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும்.

அறிமுகம் செய்தல் சுருக்கமாய் இருத்தல் வேண்டும். கூட்டத்தாருக்கும், கூட்டத்தாரில் போதகர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணுகிற சிறுகூட்டத்தாருக்கும் இடையில் வேறுபடுத்திக் காண்பிக்கும் விதமாக, "நாங்கள் நம்புபவற்றைப் பேச்சாளர் உங்களுக்குச் சொல்லிடுவார்" என்று சொல்லிடக்கூடாது. மிகுந்த தாழ்மையுடன், "மதிய வேளைக்கான பேச்சாளரை அறிமுகப்படுத்திடுவது எனக்கான சிலாக்கியமாகவும், கனமாகவும் காணப்படுகின்றது. அவர் International Bible Students Association சார்பாக நமக்கு வந்துள்ளார் மற்றும் வேதவார்த்தையிலிருந்து செய்தி ஒன்றினைக் கொண்டுவந்திருக்கின்றார் என்று நாம் நம்புகின்றோம். அது திருப்திகரமாகவும், உற்சாகமூட்டுகிறதாகவும், உதவிகரமாகவும் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம். நாம் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுவோம் என்றும், அவரது வசனமே சத்தியம் என்றுமுள்ள ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவில்கொண்டு, செய்தியை யதார்த்தமாய்க் கேட்போமாக. நம்முடைய இருதயங்களுடைய செவிகளினால் கர்த்தருடைய வார்த்தையானது கேட்கப்படும் அளவுக்குத்தக்கதாக நாம் களிகூருவோமாக. இப்பொழுது சகோ ------- அவர்களை இதோ உங்களுக்கு அறிமுகம்பண்ணிடுகின்றேன்; இத்தருணத்திற்கான அவரது தலைப்பு --------ஆகும்" என்பது போன்று காணப்பட வேண்டும்.

---

# கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம்

"இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளே - சகோதர சகோதரிகளாக நாம் ஒன்று கூடுவதற்கு, நமக்கு அதிகாரம் கொடுத்தது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. (மத்தேயு 18:20) இது கர்த்தருடைய ஜனங்களெனக் கூடுவதற்கு நமக்கான உரிமை பத்திரமாக இருப்பதினால் இதன் அடிப்படையில் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அவருடைய நாமத்தில் கூடி வர விரும்பும் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் சரிசமமான உரிமை இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தக்கொள்கைப் பற்றின வேதாகமத்தின் உதாரணத்தை நாம் நினைவில்கொள்ள வேண்டும்: ஒரு தருணத்தில் பன்னிரண்டு சீஷர்களும், பிரசங்கம் பண்ணிவிட்டு திரும்பினபோது, பரிசுத்த யோவான், இயேசுவை நோக்கி, "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" என்று கூறினார். (லூக்கா 9:49, 50) இங்கு யோவான் தடுத்த அந்நபர், இன்று நாம் கலந்துகொள்ளும் கூடுகைகளையல்லாமல் வேறே கூடுகைகளை நடத்திவரும் சிலருக்கு ஒத்திருக்கின்றார். இயேசு என்ன கூறினார்? "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்றார் (மாற்கு 9:39; 38-40).

இதுபோன்ற காரியங்களிலுள்ள தேவனுடைய சித்தம் தொடர்பாக, அவருடைய ஜனங்களுக்குப் போதிப்பதற்கு உதவும் பொதுவான கொள்கை இங்குக் காணப்படுகின்றது. நம்முடைய ஏற்பாடுகள்/ஒழுங்குகள் கர்த்தருக்கு மிகவும் பிரியமாய் இருக்கின்றது என்றே நாம் எண்ணுகின்றோம், இல்லையேல் இந்த ஒழுங்குகளை நாம் நடைமுறைப்படுத்தியிருக்க மாட்டோம். ஒருவேளை மற்றவர்கள் வித்தியாசமாக எண்ணினார்கள் என்றால், பொறுப்பு அவர்களுடையதும், கர்த்தருடையதுமாய் இருக்கின்றது. அவர்களைத் தடுப்பது நமக்கடுத்தக் காரியமல்ல, மாறாக அவர்களை ஆசீர்வதிப்பது (அ) அவர்களை ஆசீர்வதிக்காமல் இருப்பது என்பது, கர்த்தருடைய வேலைகளை நிர்வகிக்கும் விஷயத்தில், அவரது ஞானத்தின் அடிப்படையிலான, அவருடைய காரியமாய் இருக்கின்றது.

இந்தக் கருத்தின்படிச் செயல்படுத்தப்படுவது என்பது, கர்த்தருடைய ஜனங்களின் கூடுகைகளை மிகச் சிறிய வகுப்புகளாகப் பிரித்துவிடுவதாக இருக்காதா எனச் சிலர் கேட்கலாம். இது அந்தச் சகோதர சகோதரிகளைச் சார்ந்துள்ளது என்று நாம் பதிலளிக்கின்றோம். இரண்டு பேராகவும், மூன்று பேராகவும் அல்லது அதிக எண்ணிக்கைக்கொண்டவர்களாகவும் கூடுவதற்கு இவர்கள் உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர். ஒருவேளை இவர்கள் அதிக எண்ணிக்கையில் கூடுவதை அநுகூலமானதாகக் கண்டார்களானால், இப்படியாக இவர்கள் கூடுவதில் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இது இயேசுவினுடைய நேரடியான மற்றும் அப்போஸ்தலர்கள் வாயிலான போதனைகளின் வார்த்தைகளுக்கும், ஆவிக்கும் உட்பட்ட நிலையில், சபையில் அதிகளவிலான சுயாதீனம் இருப்பதைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது.

சகோதர சகோதரிகள் சபையாராகக் கூடுகையில், தங்களுடைய தனிப்பட்ட சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்களில் சிலவற்றை விட்டுக்கொடுக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட விருப்பங்கள் என்பது சபையாரின் விருப்பத்திற்கென ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். சபையில் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்களின் விருப்பங்களைக்கூடக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூடுமானால் அனைவருக்கும் அறையில் இடம் இருக்கத்தக்கதாகவும், செய்தியாளர்கள் விஷயத்திலும், கூட்டம் நடைபெறும் இடத்தின் விஷயத்திலும், கூட்டத்தின் வகை திருப்திகரமாய் இருக்கத்தக்கதாகவும், ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஒருவரும் தன்னுடைய விருப்பங்களையும், நன்மைகளையும், சுயநலமாய்க் கருத்தில்கொள்ளக் கூடாது. ஒத்துழைக்கும் சிந்தையும், பொன்னான பிரமாணமும், அன்பின் ஆவியும் நிலவ வேண்டும். ஆண்டவருடைய

ஆவியில் நிரப்பப்பட்டு, அவரோடு நெருக்கமாய் வாழும் அனைவரும், அனைவரின் நலன்கருதி, தனிப்பட்ட விருப்பங்களை விட்டுக்கொடுத்து, ஒருவருக்கொருவர் ஐக்கியம்கொள்வார்கள்.

## மனசாட்சி மதிக்கப்பட வேண்டும்

மனசாட்சியின் விஷயங்கள் எனும் காரியம் மாத்திரமே, பெரும்பான்மையானவர்களின் சித்தத்திற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட வேண்டியதில்லை. ஒருவனும் தன்னால் பாவம் என்றும், அநீதி என்றும், தவறு என்றும் நம்புகிற விஷயத்தை, மீதமான சகோதர சகோதரிகள் அனைவரும் அதைச் சரியான விஷயம் என்று எண்ணினாலும் கூட அவன் அதைச் செய்யக்கூடாது. ஒரு காரியத்தை ஒருவனுடைய மனசாட்சியானது செய்வதற்கு வழிநடத்துகையில், மீதமான சகோதர சகோதரிகள் அதைச் செய்யாமல் விட்டுவிட்டாலும், அவன் அதைச் செய்யாமல் விடக்கூடாது.

மனசாட்சியானது, எப்பொழுதும் மதிக்கப்பட வேண்டும், ஒருபோதும் அது கொல்லப்படக்கூடாது (அ) மீறப்படக்கூடாது. தன்னுடைய மனசாட்சிக்கு உண்மையாய் நிற்கும் எவர் ஒருவரும், அவருடைய சகோதர சகோதரிகள் அக்காரியத்தை வித்தியாசமான கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும்கூட, அவரை அவமதித்திடக்கூடாது. மாறாக அவருடைய திடமான நம்பிக்கையில் அவர் தைரியமாய் நிற்பது மதிக்கப்பட வேண்டும்.

இந்தக்கொள்கைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் சரீரத்தில் சுயாதீனம் தக்கவைக்கப்படலாம்; மேலும் எந்தளவுக்கு ஒத்த மனமுடையவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்ள முடிகின்றதோ, அவ்வளவாய் நாம் ஆசீர்வாதத்தை அடைய முடியும். ஐக்கியம் தக்கவைக்கப்படாத இடங்களில், ஒன்று கூடுதல் என்பது விரும்பத்தகாததாகவும், தெய்வீக ஒழுங்குகளுக்கு இசைவற்றதாகவும் காணப்படும். மேலும் வெவ்வேறு கூட்டங்களில் கூடுவது, அநுகூலமாய் இருப்பதாகச் சகோதர சகோதரிகள் காண்பார்களானால், உண்மையில் தனிப்பட்ட சுயாதீனத்தின் மீது மிகுந்த கட்டுப்பாடு செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிறுபான்மையாக இருக்கும் சகோதர சகோதரிகளுடைய உணர்வுகளுக்குப் பெரும்பான்மையாய் இருக்கும் சகோதர சகோதரிகள் மிகவும் அக்கறையற்று இருந்துள்ளனர் என்றும் நாம் நம்புகின்றோம்.

ஒரே பட்டணத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட கர்த்தருடைய ஜனங்களின் கூடுகை அவசியமானதாக (அ) விரும்பத்தக்கதாகக் காணப்பட்டாலும்கூட, நிச்சயமாய் அவர்கள் ஒரே மனமும், ஒரே இருதயமுமே கொண்டிருக்க வேண்டும்; இன்னுமாக அபிஷேகிக்கப்பட்ட தலையின் கீழ் ஒரே சகோதரத்துவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவர்கள் ஒருவருக்கொருவருடைய நலன்கருதி ஒருவரையொருவர், "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவும்படிக்குத்" தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் (எபிரெயர் 10:24).

---

# "கலியாண விருந்து"
## மத்தேயு 22:1-14.

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று."—லூக்கா 13:34.

இங்கு நாம் இராஜ்யம் பற்றின இன்னொரு உவமையைப்பார்க்க இருக்கின்றோம். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேலுக்கான தேவனுடைய கிருபை மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களானது, தேவனுடைய பரிசுத்த ஜாதியாகவும், அதிலும் விசேஷமாகக் கிறிஸ்துவினுடைய வருகையின்போது, இராஜ்யத்தில் மேசியாவுடன் உடன் சுதந்தரர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கான எண்ணிக்கைக்கு, போதுமான எண்ணிக்கையானவர்களாக, இஸ்ரயேலர்கள் காணப்படத்தக்கதாக, அவர்களை ஆயத்தப்படுத்தும்படிக்கு வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதை இந்த நம்முடைய பாடமானது நமக்குக் காண்பித்துத் தருகின்றதாயும் இருக்கின்றது. கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தவர்கள் சொற்பமானவர்களாய் மாத்திரமே இருந்தார்கள் என்றும், இவர்கள் இராஜ்ய வகுப்பாரின் எண்ணிக்கைக்குப் போதுமானவர்களாக இல்லை என்றும், இதன் காரணமாகவே உடன் சுதந்தரர்களுக்கான போதுமான எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அழைப்பானது, புறஜாதியார்கள் மத்தியில் மேசியாவின் இராஜ்யத்திற்கான உடன் சுதந்திரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றது என்றும் உவமை காட்டுகின்றது.

தேவனுடைய இராஜ்யம் என்று அழைக்கப்படுகின்ற பரலோக இராஜ்யமானது, ஒரு பூமிக்குரிய இராஜ்யமாக இராமல், மாறாக பரலோக இராஜ்யமாக இருக்கப் போகின்றது; இதை ஆளுகை செய்யும் மகிமையடைந்த கிறிஸ்து, பூமிக்குரிய சுபாவமுள்ள இராஜாவாக இராமல், மாறாக திவ்வியச் சுபாவத்தில் காணப்படும் பரலோக ஜீவியாக இருப்பார். தேவனையும், பரலோக ஆளுகையையும், அடையாளப்படுத்தும் இந்த இராஜ்யமானது, பாவத்தை ஒழித்துக்கட்டும்படிக்கு, மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. இதன் முதலாம் வேலை, "இவ்வுலகத்தின் அதிபதியான" சாத்தானைக் கட்டுதலாக இருக்கும். பிற்பாடு, அந்தகாரத்தின் கிரியைகள் அனைத்தும் வீழ்த்தப்படும். இந்த வீழ்ச்சி (அ) கவிழ்த்துப் போடுகிற காரியமானது, முதலாவது மகா உபத்திரவக் காலத்தை ஏற்படுத்தும்; பிற்பாடு நீதியின் ஆளுகை முன்னேறி வரும்போது, மேசியாவின் இராஜ்யத்திற்கான ஆசீர்வாதங்களுக்கு, ஒவ்வொரு வடிவிலான சாபமும் இடம் விட்டுக்கொடுத்து விடும்; அதாவது எந்தச் சாபமும், எந்த மரித்தலும், எந்தக் கண்ணீரும், எந்தத் துக்கமும் இல்லாமல் போகுமளவுக்கு/போகும்வரைக்கும் இடம் விட்டுக்கொடுத்துவிடும்.

ஆனால் இந்தப் பரலோக இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, மனுஷர் மத்தியிலிருந்து ஒரு மணவாட்டி வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடு மற்றும் கட்டளையின் ஒரு பாகமாக இருக்கின்றது. இந்த மணவாட்டிகள் பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய செய்கையாய் இருக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்; மற்றும் இவர்களில் தேவன் வேதவாக்கியங்களின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மூலமாகவும், ஜீவியத்தின் வழிநடத்துதல்கள் மூலமாகவும் தேவன் கிரியை செய்கின்றார். இப்படியாக இவர்கள் மனதில் மறுரூபமாக்கப்பட்டு, இவர்கள் மாம்ச சுபாவத்திலிருந்து, தெய்வீகச் சுபாவத்திற்கு, கண்ணிமைக்கும் நொடிபொழுதில் மாற்றப்படும் மகிமையான உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தமாக்கப்படுகின்றனர். இப்படியாக இவர்கள் கர்த்தருடைய மணவாட்டி வகுப்பார் மற்றும் அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்தரர் ஆகுவதன் மூலமாக, தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

## "உவமையைப் பொருத்திப்பார்த்தல்"

இயேசுவின் நாட்களில், அவர் தம்முடைய மரணத்தின் மூலமாக ஜீவனுக்கான புதிய வழியைத் திறந்து வைத்து, அவருடைய சீஷர்கள் ஆகுவதற்கும், அவருடைய உடன் சுதந்தரர்கள் ஆகுவதற்கும், அவருடைய மணவாட்டி ஆகுவதற்கும் விரும்புகின்ற யாவருக்கும் அவர் பரிந்துப்பேசுகிறவர் ஆனது முதல் துவங்கி, இந்த இராஜ்ய வகுப்பாருடைய வளர்ச்சிக்காக, உலகம் காத்துக்கொண்டிருக்கின்றது.

நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலத்தின் போதான இராஜ்யத்தின் காரியம் குறித்து இன்றைய பாடம் காண்பிக்கின்றது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் (சிலாக்கியம்) கொடுத்தார்" (யோவான் 1:11, 12).

தன்னுடைய குமாரனுக்காக திருமண ஏற்பாடு பண்ணின இராஜா, பிதாவாகிய தேவனாக இருக்கின்றார். உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே, கிறிஸ்துவுடன், அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்கள் என்கிறவர்கள் காணப்பட வேண்டுமென்று பிதாவாகிய தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். இராஜாவின் மகன் உலகத்திற்கு வந்து, தம்முடைய பின்னடியார்களுக்காகவும், தாம் இராஜாவாக இருக்கப் போகின்ற இராஜ்யத்திற்காகவும், ஒருவழியை உண்டு பண்ணுவது வரையிலும், இந்தக் கலியாணம் நடைபெற முடியாது.

சரியான வேளை வந்தபோது, தேவன் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்களை அழைக்கும்படி, தம்முடைய வேலைக்காரர்களை அனுப்பி வைத்தார், ஆனால் அவர்கள் கலியாணத்திற்கு வரவில்லை. யோவான் ஸ்நானனும், அவருடைய சீஷர்களும், இராஜாவின் மகன், யூதர்களின் மத்தியில் காணப்படுகின்றார் என்ற உண்மைக்கு, யூதர்களுடைய கவனத்தை ஈர்க்கும் இந்த அழைக்கும் வேலையைச் செய்தார்கள். "யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ...நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" என்றார். மீண்டுமாக அவர், "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" (யோவான் 1:26; 3:29). மணவாளனுடைய சத்தத்தைக் கேட்பதில் யோவான் ஸ்நானன் மகிழ்ச்சியடைந்தார். தன்னால் மணவாட்டி வகுப்பாரில் அங்கமாக முடியாத போதிலும், யோவான் ஸ்நானன் மணவாட்டி வகுப்பாருக்கான அழைப்பு வந்துள்ளது என்பதைத் தீர்க்கத்தரிசனமாய் முன்னுரைத்தார்.

## "செய்தியை அசட்டைப்பண்ணுதல்"

மீண்டுமாக ஊழியக்காரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இயேசு, "நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள்" என்று யூதர்களிடம் கூறும்படிக்குத் தம்முடைய சீஷர்களை அனுப்பி வைத்தார் (மத்தேயு 22:4).

ஆனால் இயேசு மற்றும் சீஷர்களின் செய்தி ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லை. அந்நாட்களில் காணப்பட்ட மத வல்லுனர்களாகிய பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் வழிகாட்டுதலின் கீழ், ஜனங்கள் செய்தியை ஒரு பொருட்டாக எண்ணாமல், தங்கள் வழியாய்ப் போனார்கள்; அதாவது ஒருவன் தன்னுடைய வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும், இராஜ்யம் தொடர்புடைய இந்தச் செய்தியை நாங்கள் நம்புவதில்லை என்றுகூறி போய்விட்டார்கள். சிலர் இதைக் காட்டிலும் மோசமாக நடந்துக்கொண்டனர். சிலர் வந்திட்ட ஊழியக்காரர்களைப் பிடித்து, அவமானப்படுத்திக் கொன்றுபோட்டார்கள். (நம்பிக்கைக் கொண்டிராத இந்த) விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களால் இயேசு மாத்திரம் கொல்லப்படாமல், மாறாக அவருடைய உண்மையுள்ள சீஷர்களும் கூட மோசமாய் நடத்தப்பட்டு, கொன்றுபோடப்பட்டார்கள்.

பின்னர், மற்றொரு உவமையில் பார்த்தப் பிரகாரமாக தேவன் அந்த இஸ்ரயேல் ஜனங்களிடம் கோபங்கொண்டு தம்முடைய சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைப்பாதகர்களை அழித்து, அவர்களுடைய பட்டணத்தைச் சுட்டெரித்துப் போட்டார். கி.பி. 70-இல் எருசலேமை அழித்துப்போட்ட தீத்து இராயனின் கீழான, உரோம சேனை, தேவனின் அந்தச் சேனையாக இருந்தது; ஏனெனில் மனிதனுடைய கோபத்தினால் தமது மகிமையை விளங்கப் பண்ணுவதற்கும் தேவனால் முடியும் மற்றும், தாம் விரும்பும் எவரையும் தம்முடைய தூதர்களாக (அ) ஊழியக்காரர்களாக (அ) வேலைக்காரர்களாக அவரால் பயன்படுத்தவும் முடியும்.

## ''கலியாணத்திற்குப் புறஜாதிகள் அழைக்கப்பட்டனர்''

இதற்கிடையில், கலியாண ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது என்றும், யூத தேசத்தார் இதற்கு விசேஷமாய் அழைக்கப்பட்டாலும், இந்தக் கனத்திற்குப் பாத்திரமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களாகிய அப்போஸ்தலர்களுக்கும், இவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கும் கூறினார். "ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றார்'' (மத்தேயு 22:9). ஆகவே ஊழியக்காரர்கள் புறபட்டு வழிகளிலே போய் தாங்கள் கண்ட யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இப்படியாகக் கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

வழிச்சந்துகள் என்பது, எங்குமுள்ள உலகத்தாருக்கு அடையாளமாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஸ்தானாதிபதிகள், இனிமேல் யூதர்களுக்கு மாத்திரம் என்று கட்டுப்பாடு விதிக்கப்படாமல், ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் ஆவதற்கும், இறுதியில் மீட்பருடைய இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகுவதற்குமெனத் தேவன் இப்பொழுது உலகத்திலிருந்தும், நீதியை விரும்புகின்ற ஒரு சிறு வகுப்பாரை அழைத்துக்கொண்டிருக்கின்றார் என்ற உண்மையை, சகல ஜாதியாருக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் அறிவிக்க வேண்டியவர்களாய்க் காணப்படுகின்றனர். வழிச்சந்தியிலுள்ள அனைத்து ஜனங்களையும் இடைமறிக்கிறவர்களாக இந்த ஸ்தானாபதிகள் காணப்படாமல், மாறாக அவர்கள் கூடும் இடங்களில், சந்திக்கும் அனைவரிடமும், கலியாண விருந்துக்குக் கதவு திறந்திருக்கும் மாபெரும் சிலாக்கியத்தைப் பரிந்துரைப்பவர்களாக மாத்திரமே இருக்க வேண்டுமென்பது கவனிக்கப்பட வேண்டும்.

இப்படியாக அழைக்கப்படுபவர்களில் அனைவரும் நல்லவர்களாக இருப்பதில்லை; சிலர் பொல்லாதவர்களாகவுங்கூடக் காணப்படுவார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலர், "சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துக்கொண்டார்'' என்ற வார்த்தைகளில் விவரிக்கின்றார். இப்படியான விதத்திலேயே, தேவன் அந்த வகுப்பாரை உலகத்திலிருந்து தெரிந்துக்கொண்டிருக்கின்றார். அழைக்கப்படுபவர்கள் எவ்வளவு இழிவானவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு அற்பமானவர்களாக இருந்தாலும் சரி, சுபாவத்தில் எவ்வளவு கீழ்த்தரமானவர்களாக இருந்தாலும் சரி, தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் கொள்ளும் அனைவரும், கிறிஸ்துவின் நீதியாகிய கலியாண வஸ்திரத்தின் மூடுதலினால், கலியாணத்திற்குப் பாத்திரவான்களாக ஆக்கப்படுவார்கள்.

சிலர் இயல்பாகவே எவ்வளவுதான் பாத்திரவான்களாக (அ) நல்லவர்களாக இருந்தாலும் சரி, இவர்களும் இராஜாவின் முன்னிலையில் காணப்படுவதற்கு இன்னமும் பாத்திரமற்றவர்களாகத்தான் காணப்படுகின்றனர். இந்தக் கலியாணத்தில் கலந்துக்கொள்பவர்கள் அனைவரும், கலியாண வஸ்திரம் தரித்திருக்க வேண்டும்; அதாவது கிறிஸ்துவினுடைய நீதியின் புண்ணித்தினால் மூடப்பட்டிருக்க வேண்டும். கலியாண சாலை இப்படியாக விருந்தாளிகளினால் நிறைந்தது, அதாவது இராஜா எண்ணினபடி அனைத்து இடங்களும் நிறைந்தது. இப்படியாகத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையானது, குறிப்பிட்ட எண்ணிக்கையென நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்; இன்னுமாக நிர்ணயம் பண்ணப்பட்ட எண்ணிக்கை நிறைவடைந்த பிற்பாடு, அழைப்பு நின்றுவிடும் என்றும் கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

## ''விருந்தாளிகளை உள்ளே வந்து பார்த்தல்''

யூதர்களுடைய வழக்கத்தின்படி, ஒவ்வொரு கலியாண விருந்தின் போதும், ஒவ்வொரு விருந்தாளியும் அவனுடைய சொந்த வஸ்திரங்களை மூடிக்கொள்ளத்தக்கதாக வெண்மையான கலியாண வஸ்திரங்கள் கொடுக்கப்படுவதுண்டு; சந்தேகத்திற்கு இடமின்றி இவ்வழக்கமானது, தெய்வீக ஞானத்தினால் ஏற்பாடு பண்ணப்பட்டதாகவே இருக்க வேண்டும். இப்படியாகக் கலியாணத்தில் மரியாதை தொடர்புடைய விஷயத்தில், அனைவரும் சரிசமமான நிலைமையில் காணப்பட்டனர், ஏனெனில் அனைவரும் விருந்தளிப்பவரின் விருந்தாளிகளாகக் காணப்படுகின்றனர். ஆகவே கிறிஸ்து மூலமாய் தேவன் அளித்துள்ள மாபெரும் விருந்துக்கு வரும் அனைவரும், மாம்சத்திலுள்ள தங்களுடைய ஏதேனும் சொந்த தகுதியில் வராமல், மாறாக தேவன்

தங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, தங்களிடத்தில் தகுதி இல்லை என்று ஒப்புக்கொண்டு, தாங்கள் இணங்க விரும்பும் இவ்வழைப்பிற்கு, கிறிஸ்துவினுடைய புண்ணியமே தங்களைத் தகுதிப் பண்ணுகிற காரியமாய் இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டு, வர வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

வீட்டிற்குள் பிரவேசிக்கும் போது, ஒவ்வொரு விருந்தாளிக்கும் வஸ்திரம் கொடுக்கப்படுகின்றது, மற்றும் அதை உடனடியாக விருந்தாளிகள் தரித்துக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். இந்தக் கலியாண வஸ்திரம் தரிக்காமல் காணப்படுவது என்பது, விருந்தை ஏற்பாடு பண்ணியுள்ள எஜமானை அவமதிப்பதற்கான குறிப்பாக இருக்கும். இன்னுமாக கலியாணத்தில் கலியாண வஸ்திரம் தரித்திராதவன் அதைக் கழற்றிக் கொண்டவனாக இருப்பான், ஏனெனில் வஸ்திரம் இல்லாமல் எவரும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. இக்காட்சியே நமக்கு உவமையில் கொடுக்கப்பட்டுள்ளது. விருந்தாளி ஒருவன் கலியாண வஸ்திரம் இல்லாமல் அங்குக் காணப்பட்டான்; அவன் தன் வஸ்திரத்தைக் கழற்றிக்கொண்டதன் மூலமாக, தனக்கு விருந்தளித்தவரை அவமதித்தவனாக இருந்தான்; வஸ்திரம் தரித்திருந்தாலே உள்ளே அனுமதிக்கப்படக்கூடிய நிபந்தனையாகிய, அந்த வஸ்திரத்தை அவன் களைந்துப் போட்டவனாகக் காணப்பட்டான்.

"விருந்தாளிகளைப் பார்க்கும்படி இராஜா உள்ளே பிரவேசித்தபோது" என்ற வார்த்தைகளானது, விருந்திற்குச் சற்றே முன்னதாக நடந்திட்ட பார்வையிடுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உவமையில் இடம்பெறும் இராஜா, தேவனைக் குறிக்கின்றபடியால், தேவன் ஏதோ ஒரு விதத்தில், உண்மையுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணி, அதே வேளையில் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியத்தை அவமதிக்கிறவர்களை, தெய்வீக நீதியின் வெளிப்படுத்தல் மூலம் பார்ப்பார்/கவனிப்பார் என்பதாகக் காண்பிக்கப்படுகின்றது. இல்லையேல் இத்தருணத்தில் இராஜா, கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம்; ஏனெனில் அவர் வரும்போது, அவர் பரம பிதாவினால் வல்லமையினாலும், இராஜரிக அதிகாரத்தினாலும் தரிப்பிக்கப்பட்டவராகக் காணப்படுவார்; இக்காரியமானது நமது கர்த்தரினால், தாலந்துகள் மற்றும் இராத்தல் பற்றின உவமைகளில் குறிப்பிடப்படுகின்றது. ஆகையால் அவருடைய இரண்டாம் வருகையின் போது, அவருடைய உண்மையுள்ள ஊழியர்களெனக் காண்பித்துக்கொண்டிருக்கும் அனைவரையும், அதாவது கலியாண விருந்தை அனுபவிக்க வாஞ்சிக்கும் அனைவரையயும், அவர் பார்வையிடுவாரென அவர்/கர்த்தர் தாமே நமக்குக் கூறியுள்ளார்.

இராஜாவுக்கு முன்னதாகக் கலியாண வஸ்திரம் இல்லாமல் காணப்பட்ட ஒரு மனுஷன், ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கிறானே ஒழிய, ஒரு தனி நபருக்கு மாத்திரம் அடையாளமாய் இருக்கின்றான் என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட வகுப்பாரை நம்மால் இன்றும் காண முடிகின்றது; அதாவது இவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்றும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்துக்குக் காத்திருக்கிறார்கள் என்றும், தங்களுடைய கர்த்தரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் அறிக்கைப் பண்ணுபவர்களாக இருந்து, அதே வேளையில் பிதாவுக்கு முன்பான தங்களுக்கான தகுதியின் விஷயத்தில், தாங்கள் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தை இனி ஒருபோதும் நம்புவதில்லை என்றும் நம்மிடம் தெரிவிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் இயேசுவைத் தங்கள் இரட்சகர் இல்லை என்றும், தங்கள் மீட்பர் இல்லை என்றும் மறுதலிக்கின்றார்கள். இயேசுவைத் தங்களுடைய போதகராக மாத்திரமே இவர்கள் கருதுகின்றனர்; மற்றும் இயேசுவினுடைய போதனைகளிலும் பகுதியை மாத்திரமே ஏற்றுக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கத்தினர் ஆகுவதற்குத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றார்கள் என்பது, வெளியரங்கமாய்த் தெரிகின்றது. நேர்மையுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களும் மாத்திரமே, அந்த மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினராய் இருப்பார்கள். கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தை மறுதலிக்கின்றவர்கள் அனைவரும், இராஜ்யத்தின் வகுப்பார் ஆகுவதற்கு மறுக்கப்படுவார்கள் என்று உவமை காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தாங்கள் எப்படி, "கலியாண வஸ்திரமில்லாமல்" உள்ளே வந்தார்கள் என்பதைச் சொல்ல முடியாமல் இருந்தார்கள், காரணம் வஸ்திரம் இல்லாமல் இவர்கள் உள்ளே வரவில்லை. ஒருவனுடைய பூரணமின்மையானது, கிறிஸ்துவின் புண்ணியமாகிய, கலியாண வஸ்திரத்தினால் முதலாவதாக மூடப்பெறாமல், கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையினுடைய ஐக்கியத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை. கலியாண வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டவர்கள், புறம்பே தள்ளப்பட்டார்கள். "அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்" (மத்தேயு 22:13).

## ‘‘புறம்பான இருள்’’

நம்முடைய மனங்களானது, இருண்ட யுகங்களினுடைய கற்பனைகளினால் நிரம்பியிருந்தபோது இந்த வேத வாக்கியத்தையும் (மத்தேயு 22:13), இதைப் போன்ற மற்ற வேத வாக்கியங்களையும் நாம் வேறு அர்த்தத்தில் வாசிக்கிறவர்களாய்க் காணப்பட்டிருந்தோம். கலியாண வஸ்திரம் இல்லாமல் இருந்த மனுஷன் அடையாளப்படுத்தும் வகுப்பார், நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளப்பட்டார்கள் என்றும், அங்கு அவர்கள் நித்திய காலமாய்ப் பாடுபடுவார்கள் என்றும் நாம் எண்ணியிருந்தோம். ஆனால் இப்பொழுது, மிகவும் கவனமாய் வேதவாக்கியங்களை ஆராய்ந்துப் பார்க்கும்போது, கலியாணத்திற்கு வந்த இந்த விருந்தாளிகள் அனைவரும், வெளி உலகமாகிய இருளினின்று, கலியாண சாலையின்/அறையின் வெளிச்சத்திற்குள்ளாக வந்தவர்களாய் இருக்கின்றனர்; ஆகவே விருந்தாளிகளில் ஒருவர் வெளிச்சத்திலிருந்து, புறம்பான இருளுக்குத் தள்ளப்படுதல் என்பது, இப்படிப்பட்டவர்களிடமிருந்து, கலியாண சாலை/அறையின் வெளிச்சம் அடையாளப்படுத்தும் அறிவையும், சந்தோஷங்களையும் எடுத்துப்போட்டு விடுகிறதாய் இருக்கும்.

புறம்பான வெளி உலகத்தைப் பொறுத்தமட்டில், அப்போஸ்தலர் யோவான் குறிப்பிடுவது போன்று, முழு உலகமும் இருளில், ‘‘பொல்லாங்கனுக்குள்’’ காணப்படுகின்றது. மணவாட்டி வகுப்பார் நிறைவடையும்போது, பிற்பாடு வரும் மேசியாவின் இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்களுக்காக, உலகை ஆயத்தம் பண்ணும்படிக்கு, ஒரு மகா உபத்திரவக்காலம் வரும் என்பதையும் நாம் அறிவோம். அந்த உபத்திரவத்தின்போது, இருளில் காணப்படுபவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும், அதாவது அவர்களுடைய தவறான அடிப்படையிலான மனித நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் கவிழ்க்கப்படுவது தொடர்புடைய விஷயத்தில் உலகம் ஏமாற்றம், அதிருப்தி, முதலானவைகளை அடையும்.

‘‘அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ சிலர்’’ (மத்தேயு 22:14) என்று கூறி, நமது கர்த்தர் உவமையை நிறைவு செய்கின்றார். இவ்வசனத்தின் அர்த்தமாக நாம் ஒரு காலத்தில், தெரிந்துக்கொள்ளப்பட்ட சிலர் மாத்திரமே எதிர்க்காலத்தில் தேவனிடமிருந்து கிருபை பெற்றவர்களாகவும், மீதமான மனுக்குலம் அனைவரும் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்படுத்தப்படுவார்கள் என்று அனுமானித்திருந்த விஷயம், அர்த்தமாய் இருப்பதில்லை; யூத தேசத்தார் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்; கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் சிலரைத் தவிர, மற்றவர்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ள தவறிப்போனார்கள். பதினெட்டு நூற்றாண்டுகளாக சுவிசேஷ யுகத்தினுடைய அழைப்பை ஏறக்குறைய அநேகர் கேட்கத்தக்கதாக, செய்தியானது வழிச்சந்துகளில் போய், ஒன்றன்பின் ஒன்றாக, புறஜாதியார் தேசங்களுக்குக் கடந்துப் போனது. எனினும் சிலர் மாத்திரமே அழைப்பை ஏற்றுக்கொண்டு, தெரிந்துக்கொள்ளப்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றனர். இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்ட நிலைக்கு வந்துள்ளவர்கள் மத்தியில், சரிவர உணர்ந்துகொள்ளாத ஒரு வகுப்பார் காணப்படுவார்கள். இவர்கள் புறம்பே தள்ளப்படுவார்கள் (அ) புறக்கணிக்கப்படுவார்கள்.

‘‘பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்’’ (லூக்கா 12:32) என்று கூறி, ஆண்டவர் மீண்டும் காரியத்தின் மீது கவனத்தைக் கொண்டு வந்தார். யூதர்களையும், புறஜாதிகளையும் அடக்கியுள்ள சிறுமந்தையினர், தங்கள் உண்மையின் மூலமாகத் தேவனுடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனமாக, அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட சபையாக, கிறிஸ்துவின் மணவாட்டியாக ஆகுவார்கள். பிற்பாடு ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் விழுகையின் காரணமாக இழந்துப் போகப்பட்ட அனைத்தையும் மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும், மனுக்குலம் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான மகிமையான வாய்ப்பினால், மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கான பரமபிதாவின் பிரதிநிதிகளாக சபை, அவர்களுடைய கர்த்தருடன் காணப்படுவார்கள்.

**ஆமென்!**

---

# நாவை அடக்குவது அவசியமாகும்

**மத்தேயு 12:36**

***அனைவருக்குமான முக்கியமான ஒரு பாடம்***

மனுஷர்களின் ஒவ்வொரு கேடான வார்த்தைக்கும், அவர்கள் கணக்குக்கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் கூறியிருந்தாலும், அவர் பேசப்படும் வார்த்தைகளுக்குப் பின்னாகக் காணப்படும் எண்ணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார். இருதயத்தின் மனப்பான்மையே, அவருக்குப் பெரும் வேதனையை அளித்தது. பரிசேயர் மற்றும் சதுசேயரின் இருதய நிலைமை, அவர்களுக்கே பாதிப்பைக் கொண்டுவரும் என்று கர்த்தர் அறிந்திருந்தார்.

கர்த்தருடைய ஜனங்கள் நீதியாய் இருப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், அவர்களுக்கு வேறு எதுவும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. அன்பாக இருப்பதும், இரக்கத்துடன் இருப்பதும், பெருந்தன்மையாய் இருப்பதும் சரியான காரியங்களாக இருந்தாலும்கூட, நீதியே குணலட்சணத்தின் ஆதாரமாய் இருக்க வேண்டும். நீதியை ஆதாரமாகக் கொண்டிராத அன்பும், இரக்கமும் கர்த்தருக்குப் பிரியமானதாகவும் இருப்பதில்லை, அவரைத் திருப்திப்படுத்துகிறதாகவும் இருப்பதில்லை. மற்றவர்களுடனான விஷயங்களில், ஒரு தேவனுடைய பிள்ளையானவன், மற்றவர்களிடமிருந்து நான் எதை எடுத்துப்போடலாம்? என்று யோசிக்காமல், மற்றவர்களுடைய உரிமைகள் என்ன? மற்றும் நான் என்ன செய்ய வேண்டும்? என என்னுடைய பரம தந்தை விரும்புவார்? என்றே யோசிப்பான்.

எந்த ஒரு விஷயத்திலும், ஒரு மனுஷன் தனக்கான சொந்த உரிமைகளை அடையாளம் கண்டுகொள்வது இயல்பான காரியமாகும். ஆனால் விழுந்துபோன சுபாவமோ மற்றவருடைய உரிமைகளை உடனடியாக உணர்ந்துகொள்வதில்லை. ஆகவே கர்த்தருடைய ஜனங்கள், மற்றவர்கள் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவார்களோ, அதையே அவர்களும், மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும், அதாவது நீதியாய்ச் செய்ய வேண்டும் என்பதே அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான படிப்பினைகளில் ஒன்றாகும்.

கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர், புதிய சுபாவத்திற்குரிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது, மற்றவர்களுடைய விஷயத்தில் தாங்கள் "பொன்னான பிரமாணத்திற்கு" முழுமையாய்க் கீழ்ப்படிவதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்பதை முழுமையாய் உணர்ந்துகொள்ளவில்லை என நாம் அஞ்சுகின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் தங்களுக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென விரும்புகின்றார்களோ, அதையே மற்றவர்களுக்கும் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும், முடிந்தமட்டும் ஒவ்வொரு எண்ணத்திலும் நீதி ஆளுகை செய்யத்தக்கதாக, சரீரத்தைக் கீழ்ப்படுத்துவது என்பது புதிய சிருஷ்டியின் கடமையாகும். ஒருவன் தன்னுடைய செயல்களில் நீதியாய் இருப்பதற்கு முன்பு, அவன் தன்னுடைய எண்ணங்களில் நீதியாய்க் காணப்பட வேண்டும். அநீதியான எண்ணங்களை உடையவன், எவ்வளவுதான் நீதியான செயல்களைச் செய்ய முயற்சித்தாலும், அவன் அநீதியாகச் செயல்புரிகின்றவனாகவே இருப்பான்.

---

R 5521

# "பிரதான கற்பனைகள்"

## மாற்கு 12:28-44.

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்."—லூக்கா 10:27.

நமது கர்த்தரைச் சிக்க வைக்கும்படி, நியாயசாஸ்திரிகள் நாடின நாளன்று, நமது கர்த்தரிடம் அநேகம் கேள்விகள் கேட்கப்பட்டன. அவரிடம் கேட்கப்பட்ட இறுதிக் கேள்வியைப் பற்றி இன்றைய பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம். சராசரியான கல்வியறிவைக் காட்டிலும் அதிகம் கொண்டிருந்த வேதபாரகரில் ஒருவன், இயேசுவிடம் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் மற்றும் அவைகளுக்கு நமது கர்த்தர் எவ்வளவு நன்றாய் உத்தரவு கொடுத்து வந்தார் என்பதையும் வேதபாரகன் உணர்ந்தவனாக இருந்தான். பின்னர் வேதபாரகன் ஒரு கேள்வியை முன்வைத்தான்; அநேகமாக இயேசுவைச் சிக்க வைக்க வேண்டும் என்றில்லாமல், நேர்மையுடனே இவன் இக்கேள்வியை முன்வைத்திருக்க வேண்டும். "கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று?" வேதபாரகன் கேட்டான்; இவன் பத்துக் கற்பனைகள் தொடர்புடைய கேள்வியைக் கேட்டான். "இஸ்ரயேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என்று இயேசு கூறினார் (மாற்கு 12:30).

நமது கர்த்தர் பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் வேதவாக்கியத்தைக் குறிப்பிட்டார் (உபாகமம் 6:4, 5). இயேசுவின் இந்த வார்த்தைகள், புரிந்துக்கொள்ளும் விதத்தில் எத்துணை அருமையாய்க் காணப்படுகின்றது. இந்த நூற்றாண்டில்கூட யாரால், இவ்வளவு மாபெரும் சத்தியத்தை, இவ்வளவு சுருக்கமாய்க் கூற இயலும்? பரலோக ஞானமானது உபாகமம் 6:4,5- ஆம் வசனம் முதலாவதாக பேசப்பட்டப் போது வெளிப்படுகின்றது. இயேசு இதைக் குறிப்பிட்டபோதும், அதே பரலோக ஞானம்தான் வெளிப்பட்டது. இயேசு, எதையும் கூடச் சேர்க்கவில்லை, ஏனெனில் எதுவும் கூடச் சேர்க்கப்பட முடியாது.

அன்பின் அழுத்தத்தை, நாம் தினந்தோறும் மிகத் தெளிவாகப் பார்த்துக்கொண்டு வருகின்றோம். அன்பே பிரதானமான காரியமாகும்! முற்காலங்களின் விசுவாசப் பிரமாணங்களின்படி, அன்பிற்குப் பதிலாக பயமே, அச்சமே காணப்பட்டது; ஏனெனில் அண்ட சராசாரத்தின் சர்வ வல்லமையுள்ள தேவன், பெரும்பாலான மனுக்குலத்தார் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்பட வேண்டுமென்று, நோக்கங்கொண்டு, மனிதனுடைய சிருஷ்டிப்பிற்கு முன்னதாகவே சித்திரவதைக்கான மாபெரும் நரகத்தை ஆயத்தம் பண்ணி வைத்துள்ளார் என்று நமக்குக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இப்படியெல்லாம் விசுவாசப்பிரமாணங்களில்தான் காணப்படுகின்றது; வேதாகமமானது, மனிதனுடைய அனைத்து விசுவாசப் பிரமாணங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு நேரெதிர்மாறாக, தேவன் அன்பாக இருக்கின்றார் என்றும், அவர் வெளிச்சம் மற்றும் இரக்கத்தின் பிதாவாக இருக்கின்றார் என்றும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் அவரிடமிருந்தே வருகின்றது என்றும் கூறுகின்றது.

உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே, கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாகத் தேவனால் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ள தெய்வீக மன்னிப்புக் குறித்தும்கூட, வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. பாவங்களுக்கான இந்த மன்னிப்பு என்பது, இப்பொழுது உலகத்திலிருந்து அழைக்கப்படும் சபைக்கு மாத்திரமே உரியதாய்க் காணப்படாமல், இறுதியில் தேவனுடைய அன்பானது, அவருடைய சிருஷ்டிகள் அனைத்தினிடத்திற்கும் வெளிப்படுத்தப்படும் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது; அதாவது மனுக்குலம் முழுவதும் தேவனுடைய அன்பு பற்றின அறிவிற்குள்ளாக ஏற்றக்காலத்தில் வந்து, பாவத்தைக் கைவிட்டு, தெய்வீக ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு, இப்படியாக மேசியாவின் இராஜ்யத்தின் கீழ், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக இழக்கப்பட்ட சரீரம், மனம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிலுள்ள பூரணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு,ம் மாபெரும் ஆசீர்வாதத்தை அடையத்தக்கதாக,

இறுதியில் தேவனுடைய அன்பானது, அவருடைய சிருஷ்டிகள் அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்படும் என்று நமக்கு வேதாகமம் தெரிவிக்கின்றது.

## "இரண்டாம் கற்பனை"

இயேசு இன்னுமாக, "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மாற்கு 12:31) என்று கூறினார். மீண்டுமாக, இத்தனை சொற்ப வார்த்தைகளுக்குள், எவ்வளவான காரியங்கள் உரைக்கப்பட்டுள்ளது என்று கண்டு பிரமிப்படைகின்றோம். சிறு விஷயங்கள் மாத்திரமே அடங்கப் பெற்றிருக்கும் நிலையில், எத்தனையோ புத்தகங்கள் பக்கம் பக்கமாக எழுதப்பெற்றுள்ளது. தம்முடைய சிருஷ்டிகளின் நன்மைக்கான அவருடைய அன்புடன் கூடிய வழிநடத்துதல்கள் மூலம் வெளிப்படும் இரக்கத்தையும், பரிவையும் கொண்டிருக்கும் ஒரு தேவனை வேதாகமம் வெளிப்படுத்துவதுபோன்று, வேறெந்த மதமும் காணப்படுவதில்லை. திருப்பி அன்பு செலுத்துவதைக் குறித்து வேறெந்த மதமும், கருத்துக்கூடக் கொடுப்பதில்லை. நம்முடைய சக மனுஷரிடத்தில் நாம் கையாள வேண்டிய இவ்வளவு ஓர் உயர்வான கொள்கையைக் குறித்து ,வேறெந்த மதமும் கருத்தும் தெரிவிப்பதில்லை.

கிட்டத்தட்ட 4000 வருடங்களுக்கு முன்னதாக பழமை வாய்ந்த இந்தத் தேவனுடைய பிரமாணத்தை, யூதர்கள் வாயிலாக, மற்ற ஜனங்களும், ஜாதியாரும் அறிய வந்தார்கள் (உபாகமம் 4:6-8). ஆனால் எவரும் இதன் உண்மையான முக்கியத்துவத்தைக் கிரகித்துக்கொள்ளவில்லை. இந்தப் பிரமாணத்திற்குக் கொஞ்சம் நெருக்கமாக, கன்பியூசியஸ் (Confucius) அவர்கள் எழுதியுள்ளார்; அதென்னவெனில் . . . "ஒருவன் தனக்கு மற்றவன் என்ன செய்யக்கூடாது என்று எண்ணுகின்றானோ, அதை அவன் மற்றவனுக்குச் செய்யாமல் இருப்பானாக" என்பதேயாகும்; ஓ! ஆனால் எத்துணை வித்தியாசமாய்க் காணப்படுகின்றது; கன்பியூசியஸ் அவர்களின் வார்த்தை செய்யாதே என்றுள்ளது, ஆனால் ஆண்டவருடைய வார்த்தை, "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்தில் அன்புகூருவாயாக" என்று உள்ளது.

தேவனுடைய பிரமாணங்கள் தெய்வீகமானவைகள் என்று சொல்வதற்கு, உண்மையில் சில காரணங்கள் இருக்கவே செய்கின்றது. ஒருவேளை மனிதர்களால் இந்த மாபெரும் இரண்டு பிரமாணங்களுக்கு ஏற்ப வாழ முடிந்தால் மற்றும் வாழ விரும்பினால், முள்ளும் குறுக்கும், இடர்பாடுகளுமுள்ள இந்த உலகம் எத்துணை அழகுடையதாய் இருந்திருக்கும்; ஒவ்வொரு மனிதனும் பரம பிதாவைப் பிரதானமாய் அன்புகூர்ந்து, அவருக்கு முழு வல்லமையோடும், அனைத்துத் தாலந்துகளைக்கொண்டு ஊழியம் புரிவதும் மற்றும் தன்னை நேசிப்பது போலவே அயலானையும் நேசித்து, வாய்ப்புக் கிடைப்பதற்கேற்ப, அந்த அயலானுக்கு உதவிட நாடுவதும், இந்த இரண்டு மாபெரும் கற்பனைகளாக இருக்கின்றன! இப்படி இருக்குமானால், உலகம் பரதீசாக இருந்திருக்கும். ஆனால் மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, உலகம் பரதீசாக இருக்குமென, நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதற்காக தேவனுக்கு நன்றி.

தெய்வீக ஏற்பாடானது, ஆதாமின் பாவத்திற்கு ஈடாக, கிறிஸ்துவின் மரணத்தை அருளினது போலவே, பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகைக்கு ஈடாக, கிறிஸ்துவின் ஆளுகையையும் அருளியுள்ளது. சத்தியத்தையும், நீதியையும் இறுதியில் விரும்பி வாஞ்சிப்பவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு, பூரணப்படுவார்கள் என்றும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களானது நமக்கு நிச்சயமளிக்கின்றது. தேவனுடைய பாதப்படியாகிய பூமியும், மேசியாவினுடைய ஆயிர வருட ஆளுகையின்போது மகிமைப்படுத்தப்படும் என்றும், இறுதியில் பாவத்தை விரும்பி, நீதியை நோக்கி முன்னேறுவதற்கு மறுப்புத் தெரிவிப்பவர்கள், ஜனங்கள் நடுவில் நின்று, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களானது நமக்கு நிச்சயம் அளிக்கின்றன. அப்போது "உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10) என்று கூறி நீண்ட காலமாய் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கு இணங்க, அந்தச் சந்தோஷமான நாட்கள் வரும். அப்பொழுது சகல முழங்கால்களும் முடங்கும் என்றும், சகல நாவுகளும் அறிக்கைப் பண்ணும் என்றும், முழுப் பூமியும், கர்த்தரின் மகிமையினால் நிரம்பும் என்றுமுள்ள வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.

## "தேவனுடைய இராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல"

வேதபாரகன், இயேசுவின் பதிலிலுள்ள உண்மையை ஒப்புக்கொண்டான். "அதற்கு வேதபாரகன்: சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்கதகனப்பலி முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்" (மாற்கு 12:32-33).

"அவன் விவேகமாய் உத்தரவு சொன்னதை இயேசு கண்டு: நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல என்றார்" (மாற்கு 12:34). இயேசுவின் சீஷனில் ஒருவனாக ஆகத்தக்கதான நிலைமைக்கு மிக அருகாமையில் வேதபாரகன் இருக்கின்றான், என்ற அர்த்தத்தில் ஆண்டவருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது; அதாவது இராஜ்யத்தை எதிர்ப்பார்க்கிறவர்களில் ஒருவனாகவும், அதற்காக காத்திருப்பவர்களில் ஒருவனாகவும், அதற்காக முயற்சி செய்பவர்களில் ஒருவனாகவும், அதற்காக ஆயத்தப்படுபவர்களில் ஒருவனாகவும் வேதபாரகன் காணப்படுகின்றான் எனும் அர்த்தத்தில் ஆண்டவர் கூறினார். கபடற்ற இந்த உத்தம இஸ்ரயேலர்களைத்தான் இயேசு, இராஜ்யத்தின் சிலாக்கியங்களைப் புறஜாதிகளுக்குத் திறப்பதற்கு முன்னதாக யூத ஜனங்கள் மத்தியிலிருந்து சேர்த்துக்கொள்ள விசேஷித்த விதமாய் நாடினவராகக் காணப்பட்டார். மேசியா தம்முடைய வருகையில் வரும்போது, அவர் ஓர் இராஜ்ய வகுப்பாரைத் தெரிந்துக்கொள்வார் என்றும், அந்த வகுப்பாருக்குத் தெய்வீக வல்லமை அருளப்படும் என்றும் யூதர்கள் புரிந்திருந்தார்கள், இதைத்தான் இயேசுவும் செய்துகொண்டிருந்தார். இயேசுவின் வார்த்தைகளும், அவருடைய போதனைகளும் சிலரை இழுத்துக்கொண்டும், சிலரைத் துரத்தித் தள்ளிவிட்டுக்கொண்டும் இருந்தது. அனைத்து உண்மையுள்ளவர்களும், நேர்மையான இருதயம் கொண்டவர்களும் இந்த வாலிபனான வேதபாரகன்போல், இராஜ்யத்திற்குத் தூரமானவர்களாய் இல்லாமல் காணப்பட்டனர். ஒருவேளை இவர்களது நேர்மையும், உண்மையும், இவர்களைப் பிதாவின் சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்கும் வைராக்கியங்கொள்ளத்தக்கதாக வழிநடத்தியிருக்குமானால், இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். ஏனெனில், "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14).

## "தேவன் இருதயத்தைப் பார்க்கின்றார்"

எருசலேமின் ஆலயம் இன்னும் புதியதாகவே காணப்பட்டது; மற்றும் அதன் பராமரிப்பு முதலியவைகளுக்காக, பணம் தேவையாய்க் காணப்பட்டது. பணம் கொடுப்பதற்கான சிலாக்கியம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; மற்றும் ஜனங்களும் விருப்பத்துடனான இருதயத்தோடு கொடுத்து வந்தார்கள். ஜனங்கள் எவ்வளவுதான் தங்களுடைய முன்னோர்களுடைய பாரம்பரியத்தினால் தவறாய் நடத்தப்பட்டிருந்தாலும், எவ்வளவுதான் தங்களுடைய குருடரான மத வல்லுனர்களின் தவறான வழிநடத்தல் காரணமாய்க் குழப்பப்பட்டிருந்தாலும், ஜனங்கள் தேவனைச் சேவிக்க வேண்டுமென்றும், அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றும், விருப்பம் கொண்டவர்களாக இருந்தனர். இது அவர்கள் ஆலயத்தின் வாசலில் இருந்த காணிக்கைப் பெட்டியில், பணங்களைக்கொண்டு வந்து, போடுவதில் காண்பித்த விருப்பத்தில் வெளிப்படுகின்றது.

இயேசு காணிக்கைப் பெட்டிகளின் முன்பாக உட்கார்ந்து இருந்து, எப்படி எல்லா நிலை ஜனங்களும் கொடுத்து வந்தார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார். ஒரு விதவை வந்து, இரண்டு காசைக் காணிக்கைப் பெட்டியில் போட்டாள்; இது பணப்புழக்கத்தில் இருந்த மிகச்சிறிய வெண்கல நாணயங்களாகும்; இந்த ஒரு காசின் மதிப்பு, சென்டில் எட்டில் ஒரு பாக மதிப்பாக (one-eight of a cent) இருந்தது. விதவையானவள் இதை ஆரவாரத்துடன் போட்டாள் என்று எண்ணுவதற்கு அவசியமில்லை; ஏனெனில் பெருமையடித்துக்கொள்ள முடியாதளவுக்கு இவை மிகச்சிறிய நாணயங்களாக/தொகையாக இருந்தது. இயேசு தெய்வீக வல்லமையினால் விதவையினுடைய நிலைமையையும், அவளுடைய காணிக்கையின் அளவையும் அறிந்துக்கொண்டார் என்று நாம் புரிந்துக்கொள்ளலாம். இதை வைத்து, இயேசு அப்போஸ்தலர்களுக்குச் சிறிய ஒரு பிரசங்கம் பண்ணினார். காணிக்கைப் போட்ட மற்றவர்களில் இந்த விதவையான ஸ்திரீயே, தேவனுடைய பார்வையில் அதிகம் கொடுத்தவளாக இருக்கின்றாள் என்று இயேசு கூறினார். இவள் தனக்கு உண்டாயிருந்த அனைத்தையும், அதாவது தன்னுடைய

ஜீவியத்திற்கு உண்டாயிருந்த அனைத்தையும் போட்டுவிட்டாள் என்றும், மற்றவர்கள் தங்களுக்கு இருக்கும் திரளானவைகளிலிருந்து காணிக்கைக் கொடுத்தார்கள் என்றும், இந்த இழப்பு அவர்களுக்குப் பெரிய இழப்புமில்லை என்றும், அப்போஸ்தலர்கள் வியக்கத்தக்கதாக இயேசு கூறினார்.

இந்தச் சிறு சம்பவமானது பலிகளையும், ஊழியங்களையும் குறித்ததான கர்த்தருடைய மதிப்பிடுதலை நமக்குக் காட்டுகின்றது. நாம் செய்த (அ) செய்யப் போகின்ற பெரிய காரியங்களைக் கர்த்தர் உயர்வாய் மதிப்பதில்லை. நாம் கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் அன்பும், ஈடுபாடும், சுயத்தைப் பலிச்செலுத்துதலும் கொண்டிருப்போமானால், உலகத்தின் பார்வைக்கு ஒரு பொருட்டாய் இராத, நமது ஜீவியங்களின் மிகச்சிறிய விஷயங்களும், மிகச்சிறிய பலிகளும், மிகச்சிறிய சுயத்தை வெறுத்தல்களும், ஆண்டவரின் பார்வையில் உயர்வானதாய் மதிக்கப்படும்.

இன்னுமாக கர்த்தரை மறுக்கிறதும், அபாத்திரத்தினால் இன்னும் சீக்கிரத்தில் அழிக்கப்படப் போகிறதுமான ஓர் அமைப்பிற்கே, இந்த ஸ்திரீ பணம் கொடுக்கிறாள் என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். மற்றவர்களுடைய நிலைமை என்னவாக இருப்பினும், கர்த்தர் காணிக்கை வழங்கினவரின் இருதயத்தையும், நோக்கத்தையும் பார்க்கின்றார் . . . "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." மாற்கு 14:8-ஆம் வசனத்தில் வருபவள் இயேசுவின் சீஷி ஆனாள் என்பதை நாம் அறிவோம். சுயத்தைப் பலிச்செலுத்துபவர்களை, கர்த்தர் தம்முடைய சீஷர்களாக ஆக்கிக்கொள்கின்றார்.

**ஆமென்!**

---

# தீமைபேசுதல் என்றால் என்ன?

*"ஒருவனையும் தூஷியாமல் இருங்கள்." (தீத்து 3:2)*

அப்போஸ்தலனுடைய கட்டளையானது மிகவும் திட்டவட்டமாயுள்ளது; நாம் யாரைக்குறித்தும் தீமைபேசிடக்கூடாது. அப்படியானால், பரிசுத்த பவுல் இங்கு என்ன அர்த்தத்தில் பேசியுள்ளார்? மனுஷனுக்கு எதிரான தீமையான நோக்கத்தில், நாம் அம்மனுஷன் குறித்த எதையும் பேசிடக்கூடாது என்ற அர்த்தத்தில் கூறுகின்றாரா? அல்லது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, தீமை பேசாதே எனும் அர்த்தத்தில் கூறுகின்றாரா? என்ற கேள்விகள் எழும்புகின்றன. தவறான நோக்கத்தோடு, தவறான எண்ணத்தோடு தீமை பேசுதல் என்பது, மிகக் கொடிதான குற்றமாக, விசேஷமாக தேவனுடைய பிள்ளைக்கு இருக்குமென நாம் நிச்சயமாய் அறிவோம் என்று நாம் பதிலளிக்கின்றோம். உங்களது நோக்கம் என்னவாக இருப்பினும் சரி, யாரைக்குறித்தும் தீமை பேசாதிருங்கள் எனும் அர்த்தத்திலேயே அப்போஸ்தலன் கூறியுள்ளார் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை இதுதான் அப்போஸ்தலனின் கருத்தாக இருக்குமானால் மற்றும் இதுதான் கருத்து என்பது மறுக்கப்பட முடியாது என்றும், அக்கருத்தானது, கர்த்தருடைய ஜனங்கள் அனைவர்மேலும் மிகவும் கண்டிப்பான கட்டளையை வைக்கின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். தீமை பேசுவதற்கான நோக்கம் தீயதாக இருக்குமானால், காரியம் மிக மோசமானதாய் இருக்கும்; ஆனால் நல்லதோ, தீயதோ, "ஒருவனையும் குறித்துத் தீமை பேசாதிருங்கள்."

இப்பொழுது தீமை பேசுதல் என்றால் என்ன? என்ற வேறொரு கேள்வியும் எழும்புகின்றது. இவ்விஷயத்திற்கு அநேகம் பாகங்கள் இருக்கின்றன. தீமை பேசுதல் என்பது, கெடுதல் உண்டாக்குகிறதைப் பேசுகிறதாய் இருக்கும்; ஆகையால் எந்த மனுஷனுக்கும் கெடுதல் உண்டாக்கும் எதையும் ஒருவன் பேசிடக்கூடாது. நாம் பொன்னான பிரமாணத்தைப் பொருத்திப் பார்ப்போமானால் இக்கட்டளையினுடைய நீதியும், நியாயமும் மிக எளிமையாகப் புரிந்துகொள்ளப்படலாம். யாரேனும் நமக்குத் தீமை செய்திட நாம் விரும்புவோமா? யாராவது - நம்மை மரியாதைக் குறைவாகப் பேசுவதை, நம்முடைய தவறுகள் குறித்து விமர்சிப்பதை அல்லது பேசுபவர் நம்மிடத்திலுள்ள தவறு என்று கருதிடும் காரியங்கள் குறித்து அவரால் விமர்சிக்கப்படுவதை மற்றும் இப்படியாக மற்றவர்களுடைய பார்வையில் நம்மை இழிவுப்படுத்திடுவதை - நாம் விரும்புவோமா? கர்த்தருடைய ஜனங்கள் பொன்னான பிரமாணத்தினை ஜீவியத்தின் ஒவ்வொரு காரியங்களிலும் செயல்படுத்திட கற்றுக்கொள்வார்களானால், அது நிச்சயமாய் மிகவும் உதவிகரமாயிருக்கும்.

இந்த விஷயத்தில் மிகுந்த கடமை உணர்சியுள்ள கிறிஸ்தவர்கள் சிலருக்குச் சிரமம் காணப்படுகின்றது. தீமை பேசுதல் எனும் இக்காரியத்தைச் சிந்திக்கையில், என்னுடைய நோக்கம் சரியானதா? என்று சிலர் சிந்திக்கின்றவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலனுடைய கட்டளைக்கும், மற்றவர்களை இழிவாய்ப் பேசுவதிலுள்ள தங்களது நோக்கத்திற்கும் எச்சம்பந்தமும் இல்லை என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். நோக்கம் என்னவாக இருப்பினும், நாம் தீமை பேசிடக்கூடாது. எனக்கு நல்ல நோக்கம் காணப்படுகின்றதா அல்லது கெட்ட நோக்கம் காணப்படுகின்றதா? என்பது கேள்வியல்ல; மாறாக நான் தீமை பேசுகின்றேனா? பொன்னான பிரமாணத்திற்கு முரணாக - அதாவது என்னைக்குறித்துப் பேசப்படுவதை நான் விரும்பிடாத - மற்றவர்களைக் குறித்த எதையாவது நான் பேசுகின்றேனா? என்பதுதான் கேள்வி. இக்கட்டுரையினை வாசிக்கும் ஒவ்வொரு வாசகனுடைய இருதயங்களிலும், மனங்களிலும் இக்கருத்தினைப் படிப்படியாகப் பதியவைத்திட நாம் விரும்புகின்றோம்.

## விதிமுறைகள் மீறப்பட்டது குறித்துத் தகவல் அளிப்பது தீமை பேசுதலா?

இப்பொழுது எழும் இன்னொரு கேள்வி என்னவெனில்: நம்முடைய ஆதார வசனத்தின் கட்டளையை நாம் எப்படி இல்லத்தில் அல்லது அலுவலகத்தில் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடைப்பிடித்திட வேண்டும்? நாம் காணப்படுகின்றதான இல்லத்திலோ, அலுவலகத்திலோ, அந்த

அலுவலகத்தின் அல்லது வீட்டின் நிர்வாகத்திற்கெனக் குறிப்பிட்ட சில விதிமுறைகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், அந்த விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தினைக்குறித்து நாம் தகவல் கொடுப்பது நம்முடைய சார்பில் நாம் தீமை பேசுவதாய் இருக்குமா? அது தீமை பேசுதலாய் இருக்குமென நாம் கருதுகிறதில்லை. ஒருவேளை நாமே விதிமுறைகளை மீறும் பட்சத்தில், நம்மைக்குறித்துத் தகவல் கொடுக்கும் நபர் சரியான காரியத்தையே செய்கின்றார் - அவர் நமக்குத் தீமையோ அல்லது கெடுதலோ அல்லது பாதகமோ செய்கிறதில்லை. விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தைக்குறித்துத் தகவல் கொடுக்காத நபர், தவறான நடத்தையில் நாம் தொடர்ந்து கொண்டிருப்பதற்கு நம்மை ஊக்குவிப்பவராக இருந்திடுவார்.

எந்தவொரு வழிமுறையினை மேற்கொள்கையிலும், தேவனுடைய ஜனங்கள் எப்போதும் நல்ல நோக்கங்களையே கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, வேறு எதையுமல்ல. மற்றவர்களைக் கையாளும் விஷயத்தில் நல்நோக்கத்தினை இல்லாமல், வேறு நோக்கத்தினைக் கொண்டிருப்பது என்பது கொலைபாதக நோக்கத்தினைக் கொண்டிருப்பதாகும். மேலும் தீமை பேசுதல் விஷயத்தில், நாம் நோக்கத்தினை பொருட்படுத்திடக்கூடாது. ஓர் அலுவலகத்திலோ, ஓர் இல்லத்திலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ, வேலை ஒன்றினைப் பொறுப்பேற்கும் ஒருவர், அந்த வேலை தொடர்புடையதான நிபந்தனைகளுக்கும், பலவகையான விதிமுறைகளுக்கும்கூட ஒப்புக்கொள்கின்றார். அலுவலகத்திலோ அல்லது இல்லத்திலோ காணப்படுகின்றதான கிட்டத்தட்ட அனைத்து விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் யாருக்கேனும் பாதகம் ஏற்படுத்த வேண்டும் எனும் கண்ணோட்டத்தில் இல்லாமல், மாறாக தொழிலினுடைய அல்லது குடும்பத்தினுடைய பொதுவான நலனிற்காகவே ஏற்படுத்தப்படுகின்றது என்பதில் ஐயமில்லை. ஆகையால் இந்தக் கடமைகள் யாவற்றையும் கடைப்பிடிப்பது என்பது, முக்கியமான பொறுப்பாயுள்ளதெனக் கருதப்பட வேண்டும். விதிமுறைகள் மீறப்பட்டுள்ள காரியத்தினை ஒருவர் தீமையான விதத்தில் தகவல் கொடுக்காமல், மாறாக உண்மையை மாத்திரமே தகவல் கொடுத்திட வேண்டும்.

தகவல் கொடுத்திடும் ஒருவர், தான் யாரைக் குறித்துத் தகவல் கொடுக்கின்றாரோ, அவரின் இருதயத்தை நியாயந்தீர்ப்பதற்கு இவருக்கு அவசியமில்லை. கேள்வி, கெட்ட இருதயம் பற்றினதல்ல. ஒருவர் முட்டாளாகவோ அல்லது மறதியுடையவராகவோ அல்லது கவனமற்றவராகவோ காணப்பட்டு, முக்கியமான விதிமுறைகளை மீறுவாரானால், இவ்விஷயம் குறித்துத் தகவல் கொடுப்பது என்பது, அதுவும் தகவல் கொடுத்திடுவதற்கு விதிமுறைக் காணப்படும் சந்தர்ப்பங்களில் தகவல் கொடுப்பது என்பது, இருதயத்தை நியாயந்தீர்ப்பதாய் இருக்காது. அது கடமையாக மாத்திரமே காணப்படும் - கட்டளையிடப்பட்டதைச் செய்ததாக மாத்திரம் காணப்படும் மற்றும் இது அவசியமானதாகவும், முறையானதாகவும் இருக்கின்றது. இந்தக் கொள்கையானது, தேவனுடைய செய்கையாகிய நம்முடைய சரீரங்களில் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். சரீரத்தில் ஏதாகிலும் நடக்கிறதெனில் - உதாரணத்திற்கு விரல் ஒன்று நசுக்கப்படுகிறதெனில், நரம்புகளானது உடனடியாக மூளைக்குச் செய்தி அனுப்பிவிடுகின்றது. ஒருவேளை பாதத்தில் காயம் ஏற்பட்டால், இச்செய்தி உடனடியாக மூளைக்கு அனுப்பிவிடுகின்றது. சரீரத்திலுள்ள ஓர் அவயவத்திற்கு ஏற்பட்ட தீங்கினை, மூளைக்குச் செய்தி அனுப்பிடுவதற்கான தொடர்பு வழிவகை இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள். செய்தியினை அனுப்பிடுவதற்கு உணர்ச்சி நரம்புகள் இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள். இப்படி இருக்குமானால், ஒருவன் தனது கைவிரலையோ அல்லது கால்விரலையோ தான் இழந்துள்ளானா அல்லது இல்லையா என்பதை அறியாதவனாய் இருப்பான். அவன் கால் தடுமாறி, விழுவது வரையிலும், தான் ஒரு காலை இழந்துள்ளான் என்பதை அறியாதவனாய் இருப்பான்.

## விஷயம் குறித்து, விதியைப் புறக்கணித்தவரிடம் விவாதிக்கப்படக்கூடாது

நம்முடைய சொந்த தனிப்பட்ட காரியங்களானது, தாக்கப்படக்கூடாது என்று எப்போதும் பார்த்துக்கொள்பவர்களாக நாம் காணப்படக்கூடாது. நாமும் சரி, மற்றவர்களும் சரி அபூரணங்களைப் பெற்றிருக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை மற்றவர்கள் கவனக்குறைவினால் நம்மை காயப்படுத்திடுவார்களானால், நாமும் சிலசமயங்களில் மற்றவர்களைக் காயப்படுத்திட வாய்ப்புண்டு என்பதை நாம் அறிவோம். ஆனால் தனிப்பட்ட காரியங்கள் என்பது குடும்பம் அல்லது அலுவலகம் சம்பந்தப்பட்ட காரியங்களிலிருந்து வேறுபட்டவைகளாய் இருக்கின்றன. இல்லத்தினுடைய அல்லது அலுவலகத்தினுடைய

விதிமுறைகள் மீறப்படுகிற காரியத்தினைக் குறித்துத் தகவல் கொடுப்பது என்பது அந்நிய காரியங்களில் தலையிடுகிறதாய் இராது. ஒரு குடும்பத்தினுடைய அல்லது ஒரு நிறுவனத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனுடைய நலம் கருதியே, முறையான மற்றும் நியாயமான விதத்தில் முழுக்குழுவினருடைய நலன்களானது பார்த்துக்கொள்ளப்படுகின்றது.

அலுவலகத்தில் காணப்படும் ஒருவர், அலுவலகத்தில் காணப்படும் அனைவரையும் சரிப்படுத்த முற்படுவது என்பது முறையான காரியமல்ல. ஒருவன் சுற்றித்திரிந்து மற்றவர்களைச் சரிப்படுத்திட முற்படக்கூடாது; அது அவன் காரியமாய் இராது. ஒருவேளை வேறொருவன் விதிமுறைகளை மீறுகிறான் என்றால், உண்மைகளோடு எதையும் சேர்த்துச் சொல்லாமல், உண்மைகளைத் தகவல் கொடுப்பது அவனது காரியமாய் இருக்கும். ஒருவேளை இப்படி இல்லாமல், ஒருவேளை மீறுதலைக் கவனிக்கும் ஒவ்வொருவரும், விதிமுறைகளை மீறினவரிடத்தில் போய், இப்படியாக அலுவலகத்திலோ, குடும்பத்திலோ காரியத்தைச் சரிப்படுத்த முற்படுவார்களானால், தொடர்ந்து குழப்பமே நிலவும். விதிமுறையினை மீறினவர் தன்னைத் தற்காத்துக்கொள்ளும் விதமாக, "என் நடத்தை அனைத்தும் சரியாகவே உள்ளது மற்றும் வாயிற்கதவு (gate) திறந்து கிடந்தாலும் சரி, மூடிக்கிடந்தாலும் சரி, அது உன் காரியமல்ல" என்று சொல்லிடலாம். ஆனால் ஒருவேளை வாயிற்கதவு மூடப்படாமல் திறந்தே கிடக்கிறதென்றால், உரிய அதிகாரியிடம் காரியத்தினைக்குறித்துத் தகவல் கொடுப்பது உங்கள் கடமையாயிருக்கின்றது மற்றும் இப்படியாக காரியத்தின் பொறுப்பினின்று நீங்கள் விடுவிக்கப்படலாம். இது மத்தேயு 18:15-18-வரையிலான வசனங்களின் அடிப்படையில் கையாளப்பட வேண்டிய ஒரு தனிப்பட்ட காரியமல்ல. காரியம் குறித்து டாம் அவர்களிடமோ, டிக் அவர்களிடமோ ஹேரி அவர்களிடமோ, மேரி அவர்களிடமோ அல்லது ஜேன் அவர்களிடமோ போய்ச் சொல்வது நம்முடைய கடமையல்ல. நாம் சொல்ல வேண்டியது (உரிய அதிகாரியிடத்தில்தான்) ஒரேயொரு நபரிடத்தில்தான் மற்றும் தகவலானது சகல பரிவான உணர்வுகளுடனும் சொல்லப்பட வேண்டும்.

பல நபர்களிடத்திற்குச் சென்று, அவர்களைச் சரிப்படுத்துவதற்கு முற்படுவதன் வாயிலாக முழு வீட்டையும் அல்லது அலுவலகத்தையும் நடத்திட முற்படும் ஒருவர், சீக்கிரத்தில் தனக்குப் பிரச்சனையை வருவித்துக்கொள்வார். ஒருவேளை புதிதாய் ஒருவர் வேலைக்குச் சேர்ந்து, அவர் தற்செயலாய் விதிமுறை ஒன்றினை மீறிவிடுகிறாரெனில், அவரிடத்தில்: இங்கு இப்படி, இப்படிச் செய்ய வேண்டும் என்ற விதிமுறை உள்ளது - என்று சொல்லிடுவது சரியாய் இருக்கும், எனினும் இதை ஒருமுறைக்குமேல் அவரிடம் சொல்லிக்கொண்டிருப்பதும் சரியாய் இராது. இரண்டாம் விசை மீறுதல்பண்ணப்படும்போது, அன்பின் ஆவியில் அது குறித்துத் (உரிய அதிகாரியிடம்) தகவல் கொடுக்கப்பட வேண்டும்.

## பலவகையான சந்தர்ப்பங்கள்

நாம் சம்பந்தப்பட்டதான காரியங்களில், சபையில் நாம் மேற்கொள்ள வேண்டிய சரியான நடத்தைப் பற்றின விஷயத்தில் கேள்வியினைப் பொருத்திப்பார்ப்போமானால், நம்முடைய தனிப்பட்ட பொறுப்பு என்னவென்று நாம் காணலாம். "உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து." வேறுயாருக்கோ எதிராக அவன் செய்திட்ட விஷயம் பற்றி நமது கர்த்தர் குறிப்பிடாமல், மாறாக "உனக்கு" விரோதமாக - என்றே குறிப்பிட்டுள்ளார். "இவர் அந்தச் சகோதரனுக்கு விரோதமாய் ஏதோ செய்துகொண்டிருக்கின்றார் என்று நான் எண்ணுகின்றேன்" என்று சிலர் கூறிடலாம். "இந்தச் சகோதரன் தன்னுடைய மனைவியை நன்றாய் நடத்துகிறதில்லை என்று எண்ணுகின்றேன்" என்று சிலர் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். "அது அச்சகோதரனுடைய காரியமாகவும், அவரது மனைவியின் காரியமாகவும் இருக்கின்றது; அது உங்கள் காரியமல்ல. உங்கள் சொந்த மனைவியை அல்லது கணவனை, உங்கள் சொந்த பெற்றோரை, உங்கள் சொந்த குழந்தைகளைப் பார்ப்பதே உங்கள் காரியமாய் இருக்கின்றது; மற்றவர்களை விட்டுவிடுங்கள். உங்கள் விஷயத்தைப் பார்த்துக்கொள்வதற்கு நீங்கள் பழகிக்கொள்ள நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம். உங்கள் சொந்த காரியங்கள் குறித்த உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் மற்றும் மற்றவர்களின் காரியங்களைக்குறித்து விமர்சிப்பதைத் தவிர்த்திடுங்கள்" என்று நாம் பதிலளிக்கின்றோம்.

ஆனால் சில மோசமான தவறைப் பார்க்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நாம் தெரு வழியே போய்க்கொண்டிருக்கையில், ஒரு மனிதன் கொடூரமாய்க் குதிரை ஒன்றினை அடித்துத் துன்புறுத்துவதை நாம் பார்க்கின்றோம் என்று வைத்துக்கொள்வோம்; நாம் எதுவும்

பேசக்கூடாதா? இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் நாம் ஒரு காவல்துறையாளரைக் காண்போமானால், அவரிடம்: "அந்த மனுஷன் அக்குதிரையைத் துன்புறுத்துவதைக் கவனித்துக்கொள்வீர்களா?" என்று கூறிடலாம் அல்லது அவ்விடத்தில் மனிதாபிமான சமுதாய அமைப்புகள் காணப்படும் பட்சத்தில், அவைகளுக்கு இது குறித்துத் தகவல் கொடுக்கப்படலாம். ஒருவேளை பெற்றோரில் ஒருவர் குழந்தையை மிருகத்தனமாய் அடித்துத் துன்புறுத்துவதையோ அல்லது இதுபோன்ற வேறு எதையாகிலும் காண்போமானால், அதைக் குறித்து உரிய அதிகாரிகளிடம் தகவல் கொடுப்பது சரியானதே. ஆனாலும் பொதுவாயுள்ள காரியங்கள் அனைத்தையும்போய், சரிப்படுத்த முற்படுவது என்பது அனைவருக்குமடுத்த காரியமல்ல. உலகம் முழுக்க தீமையினால் நிறைந்துள்ளது மற்றும் இப்படியாகவே இராஜ்யம் கட்டுப்பாட்டினை எடுக்கும் வரையிலும் காணப்படும்.

நாம் உலகத்தில் பார்க்கின்றதான எண்ணற்ற பிரச்சனைகளை, அதன் போக்கில் விட்டுவிடுவது சபைக்கு நலமாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் தவறான யாவற்றையும் நாம் சரிபடுத்தத் தொடங்குவோமானால், இராஜாதி இராஜனும்; கர்த்தாதி கர்த்தருமானவருக்கு ஊழியஞ்செய்திடுவதற்கு நமக்கு நேரம் இல்லாமல் போய்விடும். நமக்கு நேரம் கொஞ்சமாகவே உள்ளது. ஜனங்கள் ஏற்கெனவே நம்மைக்குறித்துத் தவறான கருத்துக் கொண்டிருக்கின்றனர்; ஆகையால் நாமும் எதிர்ப்பினைத் தேவையில்லாமல் அதிகரித்துக்கொள்ள வேண்டாம். ஒருவேளை சபைக்கும், நம்முடைய குடும்பங்களுக்குமான நம்முடைய கடமைகள் யாவற்றிற்கும் செலவிடும் நேரம் போக, எப்போதேனும் நேரம் இருக்குமானால், அப்போது இந்த வெளி காரியங்கள் சிலவற்றைப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நமக்கு மிகக்குறைவான நேரமே உள்ளது மற்றும் இதனால் நமது இன்றியமையாத கடமைகள் மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்குமான நம்முடைய ஊழியங்கள் போக, மற்றப்படி மற்றக் காரியங்களைப் பார்ப்பதற்கு மிகவும் குறைவான வாய்ப்புகளே நமக்குக் காணப்படுகின்றது. மேலும் இதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; ஏனெனில் நமக்கு விரோதமாய் எதிர்ப்புக் காணப்படுமானால், அது நமது பரலோக இராஜாவுக்கு நாம் உண்மையாய் இருந்ததன் காரணமாக மாத்திரமேயாகும்.

உலகத்தின் காரியங்களைச் சரிப்படுத்துவதற்கு நமது இராஜா நமக்கு அதிகாரம் அளித்திடவில்லை. எனினும் நமக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, எவ்வித வாக்குவாதத்திற்குள்ளாகக் கடந்து செல்லாமல், நீதியின் கொள்கைகளை நாம் அறியப்பண்ணிட/முன்வைத்திட வேண்டும். நம்முடைய இராஜா வந்து, தம்முடைய ஆளுகையைத் துவங்குகையில் மற்றும் நாம் அவரோடுகூட உயர்த்தப்பட்டிருக்கையில், நிர்வாகம் என்பது எப்படி இருக்க வேண்டுமென்று நாம் உலகத்திற்குக் காண்பித்துக்கொடுப்போம்! ஆனால் இப்பொழுதும்கூடச் சட்டங்கள் எவ்வளவு நல்லவைகளாக இருக்கின்றன என்பது ஆச்சரியமாகவே உள்ளது. உதாரணத்திற்கு நியூயார்க் நாட்டின் நற்சட்டங்களைக்குறித்துச் சிந்தித்துப்பார்க்கையில், நாம் வியப்பே அடைகின்றோம். அந்த நாடானது எப்படிப் பெரும்பாலானவர்களின் நலனுக்கடுத்த காரியங்களைக் கவனித்திட முயற்சிக்கின்றது என்றும் மற்றும் அது ஜனங்களுக்காக எவ்வளவு காரியங்களைச் செய்துள்ளது என்றும் பார்ப்பதற்கு ஆச்சரியமாய் உள்ளது; பாவப்பட்ட உலகமானது, இவ்வளவுக்குச் செய்ய முடிந்தபடியால், நாம் மகிழ்வுறுகின்றோம். இத்தகைய பிரதிகூலமற்றச் சூழ்நிலைகளின்கீழ், அவர்கள் செய்துள்ளவைகளை நாம் பாராட்டுகின்றோம். அனைத்துமே நீதியின் பிரமாணத்தின் கீழ்க் காணப்படும்போது, அது எத்துணைப் பிரம்மாண்டமானக் காலமாய் இருக்கும் மற்றும் எத்துணைப் பிரம்மாண்டமான உலகமாய் இருக்கும்!

## கேள்வியின் இன்னொரு பாகம்

சபையில் தீமைபேசுதல் குறித்த காரியத்திற்கு இப்போது திரும்பிவருகின்றோம்; மூப்பர் அல்லது உதவிக்காரர் ஊழியத்திற்கு ஒரு சகோதரன் முன்மொழியப்பட்டிருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் நமக்கு மாத்திரமே தெரிந்திருக்கிறதும், ஆனால் மீதமுள்ள சபையாருக்குத் தெரிந்திராததுமான குறிப்பிட்ட சில காரணங்களினிமித்தம், நம்முடைய கணிப்பில் அச்சகோதரன் அத்தகைய ஊழியத்திற்குத் தகுதியற்றவராக இருக்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? ஒருவரையும் குறித்துத் தீமை பேசக்கூடாது என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் எழும்பிநின்று, "சகோதரரே, சகோதரர் A அவர்கள் மூப்பராகிடுவதற்கு முற்றிலும் தகுதியற்றவர் என்று நான்

கருதுகின்றேன்; அவர் இன்னின்ன காரியங்களையெல்லாம் செய்திருக்கின்றார்; ஒரு பெண்ணிடம், பணம் விஷயத்தில் ஏமாற்றியுள்ளார் அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டு இருக்குமாயின், அதையும் குறிப்பிட்டு இவைகளையெல்லாம் நான் அறிவேன்" என்று நாம் சொல்லிட வேண்டுமா? இப்படியாக நாம் சொல்லிடலாமா? இல்லை! சபையினுடைய நலனுக்காக தீமைபேசுவதும், நன்மை வரத்தக்கதாக தீமை செய்வதும் நமது கடமையாக இருக்கின்றதா? நிச்சயமாக இல்லை! ஆனால் பழைய சிருஷ்டியானது, தீமை பேசிடுவதற்கான ஒரு வாய்ப்பினை எப்போதும் விரும்புகின்றது; அவனுக்குப் பகுதிவாய்ப்பினைக் கொடுத்துப்பாருங்கள், அவன் அனைவரிடமும், தான் அறிந்தவற்றை உடனே சொல்லிடுவான்!

அப்படியானால், நாம் என்ன செய்ய வேண்டும்? சரி, ஒருவேளை நாம் அச்சபையாரின் ஓர் அங்கத்தினனாய் இருப்போமானால், நாம் இப்படி முன்மொழியப்பட்டிருக்கும் சகோதரனிடத்திற்குப் போய் அவரிடம், "சகோதரன் A அவர்களே, யாரிடமும் தெரிவித்திட நான் விரும்பிடாத உங்களைக் குறித்த சில காரியங்களை நான் அறியவந்துள்ளேன். அருமையான சகோதரனே, உங்களைக்குறித்துத் தீமை பேசிட நான் விரும்பவில்லை. ஆனால் உங்களுடைய வாழ்க்கையிலுள்ள இக்காரியமானது தவறு என்றும், இந்தச் சபையார் உங்களைத் தெரிந்தெடுப்பது முறையாய் இருக்காது என்றும் நான் எண்ணுகின்றேன். இக்காரியத்தினை நான் சபையாரிடத்தில் சொல்ல விரும்பவில்லை. ஊழியம் புரிய நீங்கள் மறுப்புத் தெரிவிப்பீர்களா என்று உங்களிடத்தில் நான் கேட்க விரும்புகின்றேன். தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நீங்கள் மறுத்துவிடுவீர்கள் என்று நீங்கள் வாக்குத் தந்தால், அதுவே போதும். இல்லையேல் ஒருவேளை என் கருத்துச் சரியல்ல என்று நீங்கள் எண்ணுவீர்களானால், காரியத்தைச் சபையாரிடத்தில் வெளிப்படையாய்க் கூறிடுங்கள். ஒருவேளை இதை நீங்கள் செய்யவில்லையெனில் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நீங்கள் மறுப்புத் தெரிவிக்க மாட்டீர்களெனில், அப்புறம் நான் காரியத்தை வெளிப்படையாய்ச் சொல்ல வேண்டியிருக்கும் - நான் அறிந்திருப்பதை நான் சொல்ல வேண்டியிருக்கும்; ஏனெனில் நான் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை நீங்களும் அறிவீர்கள். உங்களிடத்தில் நான் அன்புடன்தான் வந்துள்ளேன் மற்றும் உங்களுக்குத் தீங்குசெய்வதற்கான விருப்பம் எனக்கில்லை" என்று சொல்லிடலாம்.

ஒருவேளை அச்சகோதரன்: "சரி சகோதரன் அவர்களே, முன்மொழியப்பட்டிருப்பதிலிருந்து விலகிக்கொள்கின்றேன்; மற்றும் நீங்கள் குறிப்பிடும் காரியம் குறித்த விஷயத்தில், நான் ஜெயங்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றேன்" என்பாரானால், நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்று அவரிடம் சொல்லலாம். இப்படியான விதத்தில் அந்தச் சகோதரனுக்கு நன்மை செய்கிறவர்களாய் இருப்போம் என்று நாம் எண்ணுகின்றோம். தீங்கிழைக்கிறதற்கு அல்லது சண்டைச் சச்சரவுக்கு ஏதுவானவைகளிலிருந்து நாம் சபையாரையும் பாதுகாக்கிறவர்களாயும் மற்றும் சமாதானத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருப்போம். ஒருவேளை இப்படியாக இல்லாமல், அச்சகோதரன் எதிர்த்து வாக்குவாதம்பண்ணுவாரானால், நாம் அவரிடம்: "ஒருவேளை முன்மொழியப்பட்டதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளவில்லையெனில், இக்காரியத்தினை நான் சபைக்கு விவரிப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளலாம்; ஏனெனில் நீங்கள் உங்களது ஜீவியத்தின் நடத்தையினை அங்கீகரித்து, அதைத் திரும்பவும் தொடருவதாகவும் கூறுகின்றீர்கள்" என்று சொல்லிடலாம்.

ஆனால் ஒருவேளை காரியம் சகோதரனுடைய வாழ்க்கையில் நீண்ட காலத்திற்கு முன்னதாக நடைப்பெற்ற காரியம் பற்றியதாயிருக்கின்றது; ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது ஐந்து அல்லது எத்தனையோ வருடங்களுக்குள்ளாக, இப்பொழுது அவரும் முற்றிலுமாய் மாற்றமும் அடைந்து விட்டவராக இருக்கின்றார். அவர் பழைய நடத்தையினின்று மாறியிருப்பாரானால் நாம் மகிழ்ச்சி அடையலாம். நாம் அச்சகோதரனிடத்திற்குச் சென்று: "சகோதரனே நீங்கள் தேர்ந்தெடுத்தலில் இடம் பெற பங்கெடுப்பதை நான் கவனிக்கிறேன். உங்களது வாழ்க்கை முற்றிலுமாக மாற்றமடைந்துள்ளதா?" என்று கேட்கலாம். அவர் ஒருவேளை, "ஆம், சகோதரனே, என் வாழ்க்கை முற்றிலுமாக மாற்றமடைந்துள்ளது" என்று சொல்வாரானால், நாம் மகிழ்ச்சிக்கொள்ளலாம். ஆனால் ஒருவேளை அச்சகோதரன் கோபமடைந்து, அது உங்கள் காரியமல்ல என்று சொல்வாரானால், நாம் அவரிடம்: "சகோதரனே, இதைக்குறித்துச் சபையாருக்கு நான் தகவல் கொடுத்திட வேண்டும். உங்களது நடக்கையின் வாயிலாக, நீங்கள் முற்காலத்தில் மேற்கொண்ட அதே நடத்தையையே, இப்பொழுதும் மேற்கொள்ளுகிறீர்கள் என்பது சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. ஒருவேளை நான் அத்தகைய தவறு செய்திருந்தேனாகில் மற்றும் தொடர்ந்து செய்து வருகின்றேனாகில், என் நடத்தைக் கண்டிக்கப்பட விரும்பிடுவேன். ஆகையால் உங்களை மூப்பராகவோ அல்லது

உதவிக்காரராகவோ பெற்றிருக்க வேண்டுமா என்பதை சபையார் மறுபடியும் சிந்தித்துப் பார்க்கத்தக்கதாக, இவ்விஷயத்தைக் குறித்து நான் தகவல் கொடுத்திடுவேன்" - என்று சொல்லிடலாம். ஆனால் ஒருவேளை அச்சகோதரன் சபையில் ஏதேனும் ஊழியத்திற்கென முன்மொழியப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம், அப்போது அவரது கடந்தகாலம் நம்முடைய காரியமல்ல என்று நாம் கருதிட வேண்டும்.

## இறுதி புத்திமதி

மற்றவருடைய உண்மையான நலனுக்கடுத்த காரியங்களுக்குத் தீங்காய் இருக்கும் எதுவும், ஒருபோதும் பேசப்படக்கூடாது. மற்றவர்கள் குறித்துள்ள நம்முடைய வார்த்தைகளில் நாம் மிகவும் ஜாக்கிரதையாகக் காணப்பட வேண்டும். சகோதரர்களில் சிலரை நம்பி வேறொரு சகோதரன் அல்லது சகோதரிக்கு அவப்பெயர் தேடித்தரும் சம்பவங்களையும், அவர்களது பெலவீனங்கள் சிலவற்றை வெளிப்படுத்தும் சம்பவங்களையும் பகிர்ந்துகொள்ளும் மனப்பான்மையானது கர்த்தருடைய பிள்ளைகள் சிலரிடத்தில் காணப்படுகின்றது. சகோதரருடைய அபூரணங்களை இப்படி வெளிப்படுத்திடும் தன்மையானது, நிச்சயமாகவே மூடிப்போடுகிற அன்பாய் இருக்கிறதில்லை (1 பேதுரு 4:8). இந்த ஒரு தன்மையைக்கூட இன்னமும் ஜெயங்கொள்ளாத நிலைமையில், நீண்டகாலமாய் இடுக்கமான வழியில் காணப்படுகின்றதான சிலரை நாம் அறிவோம். இவர்கள் - தாங்கள் விமர்சிக்கின்றதான சகோதரனை அல்லது சகோதரியைப் போன்றே, தங்களுக்கும் பெலவீனங்கள் அநேகமாக தெளிவாகவே காணப்படுகின்றது என்பதை மறந்து விட்டார்களா? நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் ஆண்டவருடைய கட்டளையை இவர்கள் புறக்கணிக்கின்ற காரியமானது, இவர்கள் தங்கள் சொந்த வளர்ச்சியில் குறைவுப்பட்டிருப்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இவர்கள் தீமை பேசுகிறார்கள் என்று சுட்டிக்காண்பிக்கப்படும்போது, அநேகமாகக் கோபம் அடைகிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவையனைத்தும் தூற்றுதல்களாக இருக்கின்றது என்றும், இது ஒரு சகோதரன் அல்லது சகோதரியுடைய நற்பெயரை மங்கப்பண்ணுகிறதாய் இருக்கின்றது என்றும், இது தேவ வசனத்தினால் மறுபடியும், மறுபடியுமாக முன்வைக்கப்பட்டதான கட்டளையை நேரடியாக மீறுவதாக இருக்கின்றது என்றும், நற்பெயரைக் களங்கப்படுத்துதல் என்பது, இன்னொருவருடைய நற்பெயரைத் திருடுவதாக இருக்கும் என்றும் - கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு சீக்கிரமாய்க் கண்டுகொள்வார்களோ, அவ்வளவு சீக்கிரமாய் இவ்விஷயமானது கர்த்தருடைய பார்வையில் விகாரமானதாய்க் காணப்படுவதை உண்மையில் கண்டு கொள்வார்கள். இக்காரியத்தினைத் தெய்வீகக் கண்ணோட்டமாகிய, ஒரே உண்மையான கண்ணோட்டத்திலிருந்து ஒருவிசைப் பார்த்தப் பிற்பாடு, மாம்சம் மற்றும் பிசாசின் இத்தகைய கிரியைகளை ஜெயங்கொள்வதற்கான முடிந்தமட்டிலுமான மகா வீரியத்தில், தேவபிள்ளை விழித்துக் கொள்ள வேண்டும். இந்த வார்த்தைகளை வாசிக்கின்றதான ஒவ்வொருவரும், அவனது அல்லது அவளது சொந்த இருதயத்தை ஆராய்ந்துபார்த்து, அவனது அல்லது அவளது சொந்த நடத்தைக்குறித்து எண்ணிப்பார்த்து, "நானோ?" என்று கேள்வி கேட்டுக்கொள்ளட்டும்.

சீக்கிரத்தில் வரவிருக்கின்றதான இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமாய்க் கருதப்படத்தக்கதாக, ஒவ்வொருவரும் தன்னிடத்தில் ஒருவேளைக் காணப்படக்கூடிய துர்க்குணம், பொறாமை, புறங்கூறுதல் மற்றும் வாக்குவாதம் எனும் பழைய புளித்த மாவை - அவன் அல்லது அவள் தேவனுடைய பிரியமான குமாரனுடைய சாயலாகத்தக்கதாக - பழைய புளித்த மாவை புறம்பே கழித்துப்போடுவார்களாக. மாம்சம் மிகவும் தந்திரமுள்ளது மற்றும் தனக்கென்று அனைத்து விதமான சாக்குப்போக்குகளையும் முன்வைக்கும் போக்குடையதாகும். ஒவ்வொருவரும் இக்காரியத்தினை, தனிப்பட்ட விதத்தில் இருதயத்தை ஆராய்ந்துபார்க்கிற காரியமாக்கிக் கொள்வார்களாக. நம்முடைய குணங்களைப் பூரணப்படுத்திடுவதற்கு வெகு சொற்பக்காலமே இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்கு, "கர்த்தாவே என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்று மிக ஊக்கமாய் ஜெபம்பண்ணுவோமாக! (சங்கீதம் 141:3).

---

## *சிலுவையில்லாமல் கிரீடமில்லை*

"இனிமைமிகு சிவப்பான திராட்சரசம் செய்யவே,
கருஞ்சிவப்பு திராட்சை நசுக்கப்பட வேண்டுமே.
அழுக்குப்படிந்த பொன்தனை புடமிடவே,
உலையில் கடுமையான தீப்பிழம்பு எரிந்திட வேண்டுமே.
சக்கரம் கடுமையாய்ச் சுழலாவிடில்,
ஆபரணங்களுக்கு ஒளி எங்கே?
எஃகு தன்னை மெருகேற்ற கீழ்ப்படுத்தாவிடில்,
கூர்வாளாக எப்படி ஒளிர முடியும்?

ஆசீர்வதிப்பதற்காய்க் காயப்படுத்தும் கரத்தின் கீழ்தனிலே
உந்தனை நீ அன்போடே கீழ்ப்படுத்தாவிடில்,
எந்தன் ஆத்துமாவே நீ எப்படி
ஆவியின் கனிகள்தனைப் பெற்றிடுவாய்?
ஆ! அனைத்துப் பூமிக்குரிய அசுசிதனை
நெருப்புப் பட்சிக்கும் என்று பொறுமையாயிரு —
நீ சிலுவையை மறுத்தாயானால்,
கிரீடம் உனக்கில்லையே.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 5532

# இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம்

**"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்." - சங்கீதம் 116:12-14**

இந்த வார்த்தைகளானது, தீர்க்கத்தரிசியாகிய தாவீதுக்கு இல்லாதளவுக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கு விசேஷித்த அர்த்தமுடையதாய்க் காணப்படுகின்றது. எனினும் இந்த வார்த்தைகளில் அடங்கும் உணர்வினைக் குறித்த சரியான கருத்தினைத் தீர்க்கத்தரிசி அதிகமாகவே கொண்டிருந்திருப்பார் என்று நாங்கள் எண்ணுகின்றோம். தேவனுடைய காருண்யம் குறித்து இராஜாவாகிய தாவீது உணர்ந்தவராகவே இருந்தார் என்பதில் ஐயமில்லை. கர்த்தரிடமிருந்து தனக்கு வந்திட்டதான ஆசீர்வாதங்களுக்காக, மிகவும் நன்றியுள்ள மற்றும் உணர்வுமிக்க இருதயத்தைத் தாவீது கொண்டிருந்ததை அவரது சங்கீதங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவரது இருதயமானது, "நான் கர்த்தருக்காக என்னத்தைச் செலுத்துவேன்? அவரது கிருபைகள் அனைத்திற்குமாக நான் என்னத்தைச் செலுத்துவேன்?" என்று சரியாகத்தான் கூறியுள்ளது.

ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான தேவனுடைய வாக்குத்தத்தத்தைத் தாவீது அறிந்திருந்தார்; ஒரு காலக்கட்டத்தில் தேவன் பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார் என்றும், இந்த ஆசீர்வாதமானது ஆபிரகாமின் சந்ததி வாயிலாகக் கடந்துவரும் என்றும் தாவீது அறிந்திருந்தார். தாங்கள்தான் ஆபிரகாமின் சந்ததி என்பதை இஸ்ரயேல் ஜனங்கள் அறிந்திருந்தார்கள். இவர்களில் ஒருவர் தாவீதுமாவார் மற்றும் ஏதோ ஒருவிதத்தில் தனக்கும் இவ்வாக்குத்தத்தத்தில் பங்குண்டு என்பதாக அவர் உணர்ந்திருந்தார். காரியம் அவருக்குத் தெளிவாய்த் தெரியவில்லை; எனினும் ஆபிரகாமின் சந்ததியே உலகத்தை ஆசீர்வதிக்கும் என்பதை அறிந்திருந்தார்.

"இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு" என்று தெரிவித்ததின் மூலம், தான் அந்த இரட்சிப்பில் பங்கடையத்தக்கதாக, கர்த்தர் தனக்கு அனுமதிக்கும் அனுபவங்கள் எதுவாயினும் அதை, தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சங்கீதக்காரன் மனதில் எண்ணம் கொண்டிருந்தார் என்று நாம் எண்ணுகின்றோம். தானும் அத்தகையதொரு பங்கை அடையத்தக்கதாக, அவர் கர்த்தருடைய நாமத்தைத் தொடர்ந்து தொழுதுகொண்டார்; தான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை "அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்" செலுத்துபவரானார். அவர் மனப்பூர்வமான பொருத்தனைகளைப் பண்ணியிருந்தார் மற்றும் அதை அவர் நிறைவேற்றப்போகின்றார்; இதை அவர் ஒரு சிலாக்கியமாகக் கருதுபவரானார்; தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர் மகிழ்ச்சிக்கொள்பவராய்க் காணப்படுபவரானார்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கு ஆழமான அர்த்தம் கொண்டுள்ளது

கிறிஸ்தவனுக்கு, இவைகள் அனைத்தும் மிகவும் ஆழமான அர்த்தமுடையவையாகும். நமது கர்த்தர் இயேசு துவங்கி, சபையினுடைய மாபெரும் தலையானவருடன் உடன் சுதந்திரர்களாகுவதற்கு அழைக்கப்பட்டதான தேவனுடைய புத்திரர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த வார்த்தைகளானது விசேஷித்த அர்த்தமுடையவையாகும். பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு,புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டதான இவர்கள், தேவனுடைய இரக்கங்கள் அனைத்திற்குமாக விசேஷித்த விதத்தில் திரும்பிச் செய்திடுவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர். இவர்கள் தாவீதைப் போன்றில்லாமல், தங்களுடைய பாவங்களுக்கான நிஜமான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்களானார்கள். தாவீதினுடைய பாவங்கள் நிழலான விதத்தில் மாத்திரமே மூடப்பட்டன மற்றும் இவரே: "நான் என்னத்தைச் செலுத்துவேன்?" என்று கூறுவாரானால், இதைக் காட்டிலும் மிக அதிகமாகவே நம்மால்: "நான் கர்த்தருக்காக என்னத்தைச் செலுத்துவேன்?"என்று கூறிட முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு நமக்குப் புத்திக்கூறியுள்ளார்: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை

வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (உரோமர் 12:1). இதையே நாம் மகிழ்ச்சியுடன் செலுத்துகின்றோம்; அதாவது நம்முடைய சரீரங்களை ஜீவப்பலிகளாகச் செலுத்துகின்றோம். ஒவ்வொரு உண்மையும், பெருந்தன்மையுமான இருதயத்தில், அன்பிற்கும், இரக்கத்திற்கும் கைமாறாக, நன்றியறிதலே காணப்படும் மற்றும் இவைகளைக் காட்டிலும் இனிமையான பொருத்தம் எதுவுமில்லை மற்றும் இவைகளே உயர்க் குணங்களைப் பெற்றிடுவதற்கும், சிறந்தவைகளைச் செய்திடுவதற்கும் அதிகம் ஏவுகின்றதாய் இருக்கும். தம்முடைய பிள்ளைகள் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் உண்மையான பெருந்தன்மையின் மற்றும் மிகுந்த நன்னெறியின் பண்புகள் அனைத்தையும் வளர்த்தி விருத்திச் செய்திடுவதற்குத் தேவன் விரும்புகின்றவராய்க் காணப்படுகின்றார். ஆகையால் நமக்குப் பாராட்டப்பட்ட அன்பு மற்றும் இரக்கத்தினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் நாம் கவனிப்பதும், அதற்கே உரிய நன்றியையும், (போற்றுதலையும்) உணர்ந்துகொள்ளுதலையும் கைமாறாய்க் காண்பித்திடுவதற்குக் கவனமாய் இருப்பதும் மிகவும் ஏற்றக்காரியமாய் இருக்கின்றது. சுயநலமோ (அ) கவனமற்ற தன்மையோ ஆத்துமாவினுடைய சிறந்த இயல்புகளை நெருக்கிப் போடும்போது, எத்தனைதரம் (நமக்குப் பாராட்டப்பட்ட) அன்பானது, கைம்மாறு பெற்றுக்கொள்ளாமல் கடந்துபோக வேண்டியுள்ளதாய் இருக்கின்றது.

மனிதனுடைய அன்பும், இரக்கத்தின் செயல்பாடுகளுமே, நன்றியறிதல் மற்றும் (பாராட்டுதல்) உணர்ந்துகொள்ளுதல் எனும் பண்புகளை வெளிப்படுத்துவதற்கு நம்மை அதிகமாய், பெரும்பாலும் தூண்டுகிறதானால், நமது பரம பிதாவினுடைய தொடர்ச்சியான கிருபையும், உருக்கமான இரக்கமும், நம்முடைய ஆத்துமா நன்றியோடு ஒப்புக்கொள்ளுதலையும், துதிச் சாற்றுதலையும் கைம்மாறாக வெளிப்படுத்தத்தக்கதாக (நம் ஆத்துமாவை) தூண்டிவிடுவது பொருத்தமானதாகவே உள்ளது! நாம் பெற்றிருக்கின்றதான ஒவ்வொரு நன்மைக்கும், நாம் அவருக்குக் கடன்பட்டிருக்கின்றோம். இவைகளின் அர்த்தத்தை, அவருடைய அன்பினால், உன்னதமானவரின் மறைவிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களும், நமது பிதாவினுடைய பொக்கிஷசாலையினுடைய ஐசுவரியங்களையும், "உச்சிதமான கோதுமைகளையும்" அனுபவிக்கிறவர்களுமாய் இருப்பவர்கள் மாத்திரமே அறிந்துகொள்வார்கள். அவரது கிருபைக்குரியவர்களாய் நாம் விசேஷமாய்க் காணப்படுகின்றோம்.

## அவரது கிருபை, ஓ! எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

நமக்கான விசேஷித்த ஏற்பாடுகள் அடங்கிய நீண்டதொரு பட்டியலை, நம்மில் யாராகிலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடக்கூடுமோ? நம்முடைய ஜீவியங்களின் கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூர்ந்து பார்க்கையில், நம்மில் யாரால்தான், கீழே கவிஞன் ஆச்சரியத்துடன் கூறுவது போன்று, கூறாமல் காணப்பட முடியும்:

"நான் திரும்பிப்பார்த்து, நாளுக்குநாள் தேவன்
என்னை வழிநடத்தி வந்த பாதையின் நிமித்தம்
துதி ஏறெடுக்கிறேன்."

கர்த்தர் தம்முடைய ஜனங்களை எத்தனை ஆச்சரியமாய் வழிநடத்தியுள்ளார்! அவரது பிள்ளைகள் என்றென்றும், அவரது தொடர்ச்சியான பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றவர்களாக இருக்கின்றனர். நன்மையான எதையும், அவர்களுக்கு அவர் விலக்கி வைக்கவில்லை மற்றும் அவருக்கு அவர்கள் கீழ்ப்படிதலோடு காணப்படும் பட்சத்தில், அனைத்தும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய் நடைப்பெறுகின்றதாய் இருக்கின்றது. வெயிலிலும், நிழலிலும், மகிழ்ச்சிகளிலும், கண்ணீர்களிலும், அமைதியான சூழ்நிலைகளிலும், புயலும் சீற்றமுமான வேளைகளிலும் பல வருடங்களாகக் கர்த்தரை நம்பி கடந்து வந்தவர்களில் எவர்தான், அவரது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுடைய உண்மையையும், அவரது உறுதியான உண்மையையும் கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடும்! நிச்சயமாய், "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை!" (யோசுவா 23:14). நம்முடைய வாழ்க்கையின் சிறிய மற்றும் பெரிய காரியங்களில், அவர் எப்போதும் நமக்கான நன்மைக்கடுத்த காரியங்களைக் கவனிக்கிறவராகவே இருந்துள்ளார். துன்பகாலம் ஒவ்வொன்றிலும் நம்பிக்கையூட்டும் ஓர் அம்சம் இருந்துள்ளது!

கர்த்தர் செய்துள்ளதான உபகாரங்கள் அனைத்திற்குமாக, நாம் அவருக்கு என்னத்தைச் செலுத்துவோம்? அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்ல முடிகின்ற எதையாகிலும், நாம் பெற்றிருக்கின்றோமா? எதுவுமே இல்லை. பிள்ளைகளுக்குத் தாங்கள் பாராட்டியுள்ள

தயவுகளின் மதிப்பைப் பிள்ளைகள் உணர்ந்து ஏற்றுக்கொள்வதைக் காண்பதற்கு அன்புள்ள பெற்றோர்கள் விரும்புவது போன்றே, நமது பரம பிதாவும், அவரிடத்திலான *நமது மனப்பான்மையையும்*, நம்மிடத்திலான அவரது கிருபைகளின் மற்றும் அன்பின் மதிப்பினை நாம் உணர்ந்துள்ளதை, *நாம் வெளிப்படுத்துவதையும்* — கூர்ந்து கவனிக்கின்றவராய்க் காணப்படுகின்றார். நமக்கு அருளப்பட்டதான அவரது சொல்லிமுடியாத ஈவுகளானது, அவரது இருதயத்தினால் மிகுந்த விலை செலுத்தப்பட்டு அருளப்பட்டவையாகும். ஆகவே நமது மீட்பரிடத்திலான விசுவாசத்தின் மூலமாக, நாம் நன்றியோடு இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருக்கான நமது பொருத்தனைகளைச் செலுத்திடுவோமாக. பாடுகள் மற்றும் சந்தோஷத்தின் இந்தப் பாத்திரத்தை, நாம் நமது அருமை ஆண்டவரோடுகூடப் பானம்பண்ணிடுவோமாக. "நாம் பயப்படாமல், நம்பிக்கையாயிருப்போம்" (ஏசாயா 12:2).

தம்மிடத்தில் தங்களை முழுமையாய் ஒப்புக்கொடுத்துள்ளவர்களுக்காக, பிதா ஒரு விசேஷித்த ஏற்பாடு பண்ணியுள்ளார். அவர்களுக்காக அவர் ஏற்படுத்தியுள்ளதான அனுபவங்களானது, "இரட்சிப்பின் பாத்திரமாய்" காணப்படுகின்றது. இந்தப் பாத்திரத்தை நாம் கர்த்தரிடமிருந்து ஏற்றுக்கொள்வது என்பது, அவரது ஏற்பாட்டின்படி நமக்குக் கடந்து வருகின்றதான அனுபவங்களானது எப்படிப்பட்டவைகளாக இருப்பினும் — துக்கமாகவோ (அ) சந்தோஷமாகவோ, வலியானதாகவோ (அ) இன்பமானதாகவோ இருப்பினும், அவ்வனுபவங்கள் அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளுவதாகக் காணப்படும். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று இயேசு தெரிவித்தது போலவே, நம்முடைய இருதயங்களுடைய வார்த்தைகளும் காணப்பட வேண்டும். மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தினதுபோன்று, கர்த்தர் உயர்த்தப்பட வேண்டுமென்று நிழலில் கர்த்தரைக் குறித்து முன்னுரைக்கப்பட்டுள்ளது. நிஜமான மாபெரும் பாவநிவாரண பலியாக தாம் காணப்படுவார் என்பதையும், விழுந்துபோன மனிதனுக்காக தாம் "பாவமாக்கப்படுவார்" என்பதையும் அவர் அறிந்திருந்தார். தமக்காக பிதா ஊற்றியுள்ளதான பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்குத் தாம் மிகவும் விருப்பத்துடன் காணப்படுவதாகக் கர்த்தர் குறிப்பிட்டார். மேலும் அந்தப் பாத்திரத்தையே, அவர் நமக்குக் கொடுத்துள்ளார்.

இராஜ்யத்தில் தம்மருகில் உட்காருவதற்கு விரும்பிட்டதான தமது சீஷர்களை நோக்கி, நமது இரட்சகர்: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க உங்களால் கூடுமா?" என்றார். அவர் கடைசி வரைக்கும் அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணினார் — அதன் அடிமண்டி வரைக்கும் அவர் பானம் பண்ணினார். இப்படியாகவே அவரது பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். நாமும் அதே பாத்திரத்தில் பானம் பண்ணிட வேண்டும். அது நமக்கான தனிப்பட்ட பாத்திரந்தான், எனினும் அது அவருடைய பாத்திரமாகும். நாம் உண்மையிலேயே நேர்மையாய்க் காணப்படுவோமானால், பாத்திரத்திலுள்ள நமக்கான பங்கை நாம் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். இன்னுமாக நாம் அதைப் பானம் பண்ணுகையில், அவர் நம்மோடுகூட இருப்பார் என்பதையும், நாம் தனிமையில் காணப்படுவதில்லை என்பதையும் நாம் அறிவோம். அவரது அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் அனுபவங்களையும் அவர் மேற்பார்வையிடுகின்றார் மற்றும் ஒவ்வொரு சோதனை மற்றும் பரீட்சையிலும், ஒருவேளை பரீட்சை நமக்கு மிகவும் கடுமையாகிப்போகும் வேளையில், தப்பித்துக்கொள்வதற்கான ஏதோ ஒரு போக்கையும் அவர் அருளுவார்.

## இராஜ்யத்தில் சந்தோஷத்தின் பாத்திரம்

தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவின தருணத்தின்போது, ஆண்டவர் அப்போஸ்தலர்களுடனான தம்முடைய சம்பாஷணையில் கூறினதாவது: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29). இங்கு நமது கர்த்தர் இரண்டு மகா நாட்களை — பாடுபடுகிற நாளையும் மற்றும் மகிமையின் நாளையும் வித்தியாசப்படுத்துகின்றார். இந்தச் சுவிசேஷ யுகமானது பாடுபடுகிற நாளாய்க் காணப்படுகின்றது. ஆயிர வருட நாளானது, மகிமையின் நாளாகக் காணப்படும் மற்றும் இது விசேஷமாக "கிறிஸ்துவினுடைய நாள்" என்று பேசப்படுகின்றது.

திராட்சப்பழரசமானது, சொல்லர்த்தமான பாத்திரமானது, இரண்டு கருத்துக்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. திராட்சரச பாத்திரமானது, திராட்சப்பழமானது அதன் ஜீவனை இழந்துபோவதன் காரணமாக உண்டாகுகின்றது. திராட்சப்பழமானது, அதன் தனித்துவத்தை இழந்துபோகின்றதாய் இருக்கின்றது; சாறுபிழிந்தெடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாகத்

திராட்சப்பழ ரசமானது பயன்பாட்டிற்கென ஆயத்தம் பண்ணப்படுகின்றது. திராட்சரச பாத்திரமானது . . . திராட்சச்சாறானது திராட்சப்பழம் பிழியப்படுவதை மாத்திரமல்லாமல், ரசத்தின் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே அடையாளமான பாத்திரத்தில், நாம் பானம் பண்ணும் விஷயத்திலும் காணப்படும். நமக்கு அது நமது இரட்சகருடைய பாடுகளையும், மரணத்தையும் மற்றும் இந்தப் பாடுகளில் அவரோடுகூட நாம் பங்கடைவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆனால் திராட்சரசமானது, சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையுங்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்தில் வேதவாக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் முந்தின பத்தியில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டதான வார்த்தைகளாகிய திராட்சப்பழரசத்தின் விஷயத்தில், பாத்திரமானது இராஜ்யத்தின் சந்தோஷங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இயேசுவுக்கான பூமிக்குரிய அனுபவங்களினுடைய விஷயத்தில், பிதா அவருக்கு ஒரு குறிப்பிட்ட பாதையை அமைத்து வைத்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணம் எனும் அவருடைய பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மையாய்ப் பானம் பண்ணிட்ட பிற்பாடு, அவருக்கு வித்தியாசமான/வேறே பாத்திரம், வேறே அனுபவம், அதாவது கனம், மகிமை மற்றும் அழியாமை கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும் அவருடைய பின்னடியாளர்களாகுவதற்கு விரும்புகிறவர்களுக்கும் இதே செய்தியை, அதாவது அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணினார்களானால், அப்போது அவர்கள் சந்தோஷமாகிய அவரது வருங்கால பாத்திரத்திலும் பங்கடைவார்கள் என்று இரட்சகர் முன்வைக்கத்தக்கதாக, பிதா அவருக்கு அதிகாரம் அளித்தவரானார்.

## இப்பொழுதுதான் அநுக்கிரகக்காலம்

நம்முடைய பாத்திரமானது, சந்தோஷத்தின் பாத்திரமாகவும், கசப்பின் பாத்திரமாகவும் காணப்படுகின்றது. கசப்பான காடியைக் குடிப்பதற்கென நாம் அழைக்கப்படும்போது, பிதாவின் சித்தத்தைச் செய்வதில் களிகூர்ந்தவராக, இந்தக் கசப்பில் தைரியமாயும், உண்மையாயும் பங்கெடுத்தவரான அவரை நாம் நினைவுகூருவோமாக; மற்றும் நாமும் தைரியங்கொண்டு, நம்முடைய அருமை கர்த்தருடன் இந்தப் பாத்திரத்தில் பங்குபெறுவதற்குப் பாத்திரமாய் நாம் கருதப்பட்டதற்கு நாமும் களிகூருவோமாக. பரிபூரணராய்க் காணப்பட்ட அவருக்கே, பாத்திரத்தில் பானம் பண்ணுதல் தொடர்புடையதான அவரது அனுபவங்கள் பற்றிய விஷயத்தில் தெய்வீகப் பலமும், உதவியும் அவசியமாயிருந்து; தேவையான உதவிக்காக அவர் உண்மையாய் பிதாவை ஜெபத்தில் நாடினது போலவே, நாமும் காணப்பட வேண்டும். நாம் சோதனைக்குள் பிரவேசிக்காதபடிக்கும், நமக்கான உதவி கடந்துவருகிறதான ஒரே ஒருவராகிய அவரிடத்திலிருந்து, நாம் வேறு பக்கமாய்த் திரும்பிவிடாதபடிக்கும், நாம் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும்.

"இப்பொழுதே உமக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்" என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார் (சங்கீதம் 116:14, 18; திருவிவிலியம்). சபைக்கு "இப்பொழுதே அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணிய நாளாய்" இருக்கின்றது. இப்பொழுதே, பலிகள் ஏறெடுக்கப்படுவதற்குரிய காலமாய் இருக்கின்றதே ஒழிய, எதிர்காலத்தில் அல்ல. நம்மால் மேற்கொள்ளப்பட்டதான இந்தப் பொருத்தனையை, பலியினாலான இந்த உடன்படிக்கையை, நாம் நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக கர்த்தர் இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். நாம் அர்ப்பணித்துள்ளதான மாம்சமானது, பட்சிக்கப்பட வேண்டும். பலிப்பீடத்திலிருந்து ஒருவேளை நாம் பலியை எடுத்துப்போடுவதற்கு நாடுவோமானால், மாம்சத்தை அழித்துப்போடத்தக்கதாக நாம் கையாளப்படுவோம்; இப்படியாக இல்லையேல் நாமே அழிந்துபோக நேரிடும். நமக்காக பிதா ஆயத்தம் பண்ணியுள்ளதான பாத்திரத்தை நாம் உண்மையாய்ப் பானம் பண்ணுவோமானால், இப்படியாக பானம் பண்ணுகிறவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான ஆசீர்வாதங்களை நாம் பிற்பாடு பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். ஆகையால் இப்பொழுது தற்கால ஜீவியத்தில், அவர் நமக்கு அளித்துள்ளதான இந்தப் பாத்திரத்தில் நாம் பானம் பண்ணுகின்றோம்; ஏனெனில் இப்பொழுது இதைச் செய்யவில்லையெனில், வரவிருக்கின்றதான இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்களின் காலப்பகுதியில் நாம் எந்தப் பங்கையும் பெற்றிராதவர்களாகக் காணப்படுவோம்.

நமது கர்த்தருடைய விஷயத்தில், சொல்லர்த்தமாகச் சிலுவையில் அறையப்படுதலானது அவசியமாய் இருந்தது. நியாயப்பிரமாணத்தினுடைய கோரிக்கையை அவர் முழுமையாய்ச் சுமக்க வேண்டியிருந்தது; நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பயங்கரமான குற்றவாளியாகக் காணப்படுகிறவரின் விஷயத்தில் காணப்படுவதுபோலவே, நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு மீறுதலுக்கான

தண்டனையை அவர் சுமக்க வேண்டியிருந்தது; இல்லையேல் அவரால் அனைத்து/ஒவ்வொரு யூதனையும் மீட்டிருக்க முடியாது. அவர் நியாயப்பிரமாணத்தினுடைய சாபத்தைச் சுமக்க வேண்டியிருந்தது; அவர் மரத்தில் தொங்க வேண்டியிருந்தது. ஆனால் நமது அனுபவங்கள் தொடர்புடைய விஷயத்தில், சிலுவை என்பது, மரத்தினாலான சொல்லர்த்தமான சிலுவையாகக் காணப்படுவதில்லை; ஆணிகள் என்பது சொல்லர்த்தமான ஆணிகளாகக் காணப்படுவதில்லை; கசப்பான வார்த்தைகளும், தூஷணங்களும், திரித்துக்கூறப்படுதல்களும்தான் நமக்கான பங்காய் இருக்கின்றது; இன்னுமாகச் சரீரத்தினுடைய கடைசி அங்கத்தினர்கள் சிலருக்கு, சில விதங்களில் சரீர ரீதியிலான கொடுமைகளும் செய்யப்படலாம்; நாம் அதை அறியோம்.

## சிலுவையின் பாதையில்

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்." திராட்சரச ஆலைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான சோதனையான அனுபவங்கள் வாயிலாக நாம் அனைவரும் கடந்து போக வேண்டும். தெய்வீக ஊழியத்தில், நாம் நமது ஜீவியங்களை ஒப்புக்கொடுத்திட வேண்டும். மனிதன் எனும் விதத்தில் நாம் தடையம் இல்லாமல் போவதற்கும் மற்றும் புதிய சிருஷ்டிகளாகுவதற்கும் வேண்டி, நாம் நம்மை நொறுக்கும் அனுபவங்களுக்குள் ஒப்புக்கொடுத்திட வேண்டும். "அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோமே" ஒழிய, மற்றப்படியல்ல. ஆகையால் அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கான அழைப்பை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். பாத்திரமானது அதன் கடைசிவரை குடித்து முடிக்கப்படாதது வரையிலும், நாம் அடுத்த பாத்திரத்தை, அதாவது இராஜ்யத்தினுடைய சந்தோஷங்களாகிய பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. நமது கர்த்தர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது, அது அவருக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொணர்ந்ததாய் இருப்பினும், அது அவருக்கு இறுதி தருணம் வரையிலும், அதாவது "முடிந்தது" என்று சத்தமிட்டது வரையிலும், சோதனையான/துயரம் நிறைந்த வேளை போன்றதாகவே இருந்தது. இப்படியாகச் சபையின் விஷயத்திலும் காணப்படும். நாம் பாத்திரத்திலுள்ள அனைத்தையும் பானம் பண்ணிட வேண்டும்; பாத்திரத்திலுள்ள எதுவும் மீதியாய் வைக்கப்படக்கூடாது. நாம் அனைத்து அனுபவங்களையும் சகித்துச் சந்தித்தாக வேண்டும்.

கிறிஸ்துவினுடைய சரீரமானது, அவர்களுடைய ஓட்டத்தை நிறைவுபண்ணும்போது, கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்துமே நிறைவடைந்துவிடும். நமது கர்த்தர் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவருக்குச் சந்தோஷத்தினுடைய புதிய பாத்திரமானது கொடுக்கப்பட்டது. அப்போது தேவனுடைய தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுது கொண்டார்கள். சீக்கிரத்தில் நமக்கான சந்தோஷத்தின் பாத்திரமானது, நமக்குக் கொடுக்கப்படும். நித்திரையிலிருந்த பரிசுத்தவான்கள் 1878-ஆம் வருடம் வசந்த/இளவேனிற் காலத்தில் விழித்தெழுந்து, தங்களுடைய பலனுக்குள் பிரவேசித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, அது மகிமையானதொரு வேளையாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், ஆண்டவருடைய வருகையின்போது, உயிரோடிருப்பவர்களாய்க் காணப்பட்டவர்கள் ஒவ்வொருவராய், வீட்டிற்குள் சேர்க்கப்படுகின்றார்கள். நாமும் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டால், சீக்கிரத்தில் அவர்களோடுகூட இந்தச் சந்தோஷத்தின் பாத்திரத்தில் பங்குபெறுகின்றவர்களாய் இருப்போம் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்துவினுடைய அங்கத்தினர்கள் அனைவரும் திரைக்குப் பின்னாக வருவது வரையிலும், பூரண ஆனந்தம் அடையப்படாது என்று நாம் நம்புகின்றோம். அப்போது அவரது சிங்காசனத்தில் நாம் பங்கடைந்து, அவரது மகிமையிலும் பங்குபெறுவோம். அப்போது நமது அருமை கர்த்தருடன் இராஜ்யத்தில், புதிய ரசத்தை நாம் பானம் பண்ணுவோம்; ஏனெனில் இதுவே அவரது உண்மையுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்குமான வாக்குத்தத்தமாக இருக்கின்றது.

## நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று யேகோவா சொல்லுகிறார்

நம்முடைய ஆதார வசனத்தினுடைய இறுதியில் சங்கீதக்காரன் தான் செய்த பொருத்தனைகளை, "அவருடைய (தேவனுடைய) ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்" செலுத்துவேன் என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். நம்முடைய இருதயங்களில் நாம் உண்மையாய்/ நேர்மையாய்க் காணப்படுவது மாத்திரம் போதாது; மனுஷர் முன்னிலையில் ஒரு சாட்சியையும்,

வெளிப்படையான அறிக்கையையும் கர்த்தர் விரும்புகிறவராய்க் காணப்படுகின்றார். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (உரோமர் 10:10). சத்தியத்தின் சாட்சியாளர்கள் அனைவரும், சத்தியத்திற்கு இரத்த சாட்சிகளாய்க் காணப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர்கள் சத்தியத்திற்காகப் பாடுபடுவதற்கு விருப்பமுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இப்படியாகவே சத்தியத்தின் கொடிதனை உண்மையாயும், தைரியமாயும் உயர்த்திப் பிடித்திருப்பவர்களுக்கும், அதிகமாய்க் காணப்பட வேண்டும். இவர்களே எதிராளியானவனின் குறி இலக்காகக் காணப்படுவார்கள்.

தம்மை மனுஷர் முன்னிலையில் அறிக்கைப் பண்ணாதவர்களைத் தாமும் பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்த தேவதூதர்கள் முன்னிலையிலும் அறிக்கைப் பண்ணுவதில்லை என்று நமது ஆண்டவர் கூறியுள்ளார். முற்றும் முழுமையாய் உண்மையுடன் காணப்படுபவர்களே, நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றுக்கொண்டவர்களும், சீக்கிரத்தில் இப்பொழுது பரலோகக் களஞ்சியத்தில் சேர்க்கப்படுபவர்களுமாகிய இந்த உண்மையுள்ளவர்களின் வகுப்பாரில் அடங்குவார்கள்.

ஆகவே நமது அருமை ஆண்டவருடன், நாம் பருகத்தக்கதாக, நமக்குச் சிலாக்கியமாயுள்ளதான இந்த "ஆசீர்வாதத்தினுடைய பாத்திரத்தின்" மதிப்பை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வோமாக; மற்றும் தேவையான நேரங்களில், உதவிக்கான கிருபையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவோமாக." தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு கண நேரமும் அவர் நமக்குத் தேவையாய் இருக்கின்றார். நமக்கான மாபெரும் பரிந்துபேசுபவரின் நாமத்தில், நாம் எந்நேரத்திலும் கிருபையின் சிங்காசனத்தினிடத்தில் வரலாம்.

நமது பிதாவின் செவிகளானது, எப்போதும், அவரது பிள்ளைகளுடைய கூப்பிடுதலுக்குத் திறந்தே உள்ளது. "அவரது கண்ணின் கருமணி போன்ற" அவர்கள் அவருக்குப் பிரியமானவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களை "அவர் தமது உள்ளங் கைகளில் வரைந்திருக்கின்றார்." "ஒருவனை அவன் தாய்த் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன்" என்பது, அவருக்குச் சொந்தமானவர்களுக்கான அவரது வாக்குத்தத்தமாக இருக்கின்றது. நாம் செலுத்தும் அனைத்துமே, அவரது நன்மைகள் அனைத்திற்கும் மற்றும் அவர் நமக்குப் பாராட்டியுள்ளதான ஈடு இணையற்றதான கிருபைகள் அனைத்திற்கும், திரும்பச் செலுத்தப்படும் மிக மிகச் சிறு கைம்மாறாகவே இருக்கின்றது. ஆனால் நம்முடைய சிறிய கைம்மாறுடன்கூடக் காணப்படும் அன்பு மற்றும் வைராக்கியத்தின் அளவானது நமது பரலோக பிதாவிடத்திலும் மற்றும் நமது மாபெரும் மீட்பரிடத்திலுமான நமது நன்றியுணர்வின் அளவினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

"ஆண்டவரே, நான் உமக்கு என்னத்தைச் செலுத்துவேன்?
என்னால் எண்ணிப்பார்ப்பதற்கு மிஞ்சி காணப்படுதே உம் அன்பு!
எந்தன் பாவப்பட்ட ஜீவனை வாங்கினவருக்கு
எந்தப் புகழுரைதான் பொருத்தமாயிருக்கும்?

தாழ்வில் இருந்த என்னையே
திவ்விய தயவின் உயர் தளத்திற்கு உயர்த்தினீரே!
எந்த வார்த்தைகள்தான் உம்மைத் துதிப்பதற்குப் பொருத்தமாயிருக்கும்?
எந்த வார்த்தைகள்தான் உம் அன்பைபோன்ற
அன்பினை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமாயிருக்கும்?

ஆண்டவரே, நான் உமக்கு என்னத்தைச் செலுத்துவேன்?
எந்தன் இருதயத்தை, எந்தன் பலத்தை,
எந்தன் ஜீவனை நான் கொண்டுவருகின்றேனே!
எந்தன் கரங்களை, எந்தன் குரலை, மகிழ்ச்சியாய்
உமக்கு, எந்தன் இரட்சகருக்கு, எந்தன் இராஜாவுக்கு
சேவையில் அர்ப்பணிக்கின்றேனே!"

*****

R5541 / செப்டம்பர் 1914

# பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள்

## மாற்கு 14:12-25

***"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்."* (1 கொரிந்தியர் 11:26)**

இந்த ஒரு பாடத்தினுடைய விஷயமானது, இயேசுவினுடைய பூமிக்குரிய ஊழியத்தின் மிகச் சுவாரசியமான அம்சங்களில் ஒன்றாகும். அப்போஸ்தலர்களுடனான தம்முடைய கடைசி இராப்போஜனமாக இது இருக்கப்போகின்றது என்பதை அப்போஸ்தலர்கள் அறியாதிருந்தார்கள் என்று அவர் அறிந்திருந்தார். அவர் தம்முடைய மரணம் சமீபித்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருந்தபோதிலும், அவர் குறிப்பிட்டிருந்தது போன்றதொரு விபரீதமானது மிகவும் சமீபமாய் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முடியாதவர்களாய் அவரது சீஷர்கள் காணப்பட்டனர். ஆனால் இயேசுவோ தாம் குறிப்பிட்டவைகளின் அர்த்தத்தினை முழுமையாய் உணர்ந்தவராய், தம்முடைய வேலையின் நிறைவிற்காய் ஆவலுள்ளவராய் இருந்தார். அந்த நாளினுடைய முடிவின்போது, அவரும், அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசிக்க சென்றபோது இயேசு: "நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றார்; அது அடுத்தநாள் நிறைவேறின மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாகும்.

பஸ்காவை ஆயத்தம்பண்ணும்படிக்குப் பேதுருவும், யோவானும் அனுப்பிவைக்கப்பட்டிருந்த இரண்டு சீஷர்களாகக் காணப்பட்டனர். இப்படி இயேசுகூறி அனுப்பினபோது, அவர் பெத்தானியாவில், லாசருவின் வீட்டில் காணப்பட்டார் என்பது நிச்சயமே. இயேசுவும், அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசித்ததான அதே பெரிய மேல்வீட்டறையில்தான், அப்போஸ்தலர்களும், மற்றவர்களும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்குக் காத்திருக்கத்தக்கதாகக் கூடியிருந்தார்களென அனுமானிக்கப்படுகின்றது. இந்த ஓர் அறையானது இன்னமும் பாரம்பரியத்தினால் அடையாளம் காண்பிக்கப்படுகின்றது, எனினும் கிறிஸ்தவர்கள்மேல் விசேஷித்தப் பொறாமை கொண்டவர்களான முகமதியர்களின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

அதே நாளினுடைய மாலையில் இயேசு பன்னிரண்டு பேரோடுகூட இவ்வறையில் கூடினார்; அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அவர்கள் யூதருடைய பஸ்காவினை, அதற்குக் குறிக்கப்பட்ட வேளையில் ஆசரிப்பதற்கெனக் கூடினார்கள். ஆட்டுக்குட்டியானது சுடப்பட்டிருந்தது மற்றும் புளிப்பில்லாத அப்பம் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது மற்றும் கசப்பான கீரைகளும் இருந்தன. அனைத்துமே ஆதிக் கட்டளைக்கு அப்படியே ஒத்திருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே; ஏனெனில் புதிய யுகம் இன்னும் வராததினால் இயேசுவும், அவரது அப்போஸ்தலர்களும் மற்ற யூதர்களைப்போன்று யூத பிரமாணத்தினுடைய ஒவ்வொரு அம்சத்திற்கும் கட்டுப்பட்டவர்களாய் இருந்தனர். இயேசுவின் பலிக்கான தெய்வீக அங்கீகரித்தலையும், முழுமையான அர்ப்பணித்தலின் வாயிலாக அவருடைய சீஷர்களாகி உள்ளவர்கள் அனைவருக்குமான தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலையும் குறிக்கின்றதான பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கான வேளை வருவதுவரையிலும், நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு அம்சமும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தமாகவே காணப்பட்டது.

## இராஜ்யத்தின் கனங்கள் விரும்பப்பட்டன

தாங்கள் மாபெரும் துன்பம் நிகழப்போவதற்கு முந்தைய நாளில் காணப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்வதற்குப்பதிலாக, இயேசு சீக்கிரமாய் இராஜாவாகச் சிங்காசனத்தில் அமருவார் என்று அப்போஸ்தலர்கள் நம்பினவர்களாய் இருந்தனர். அவரது சிங்காசனத்தில், அவரோடுகூடத் தாங்கள் உட்காருவதற்கான அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்தார்கள். இந்த வாக்குத்தத்தத்தை அடைவது மிகவும் அருகாமையில் காணப்படுவதுபோன்று அவர்களுக்குத்

தோன்றினபடியால், தாங்கள் இராஜ்யத்தில் பெறப்போகின்றதான கனத்தின் நிலைகள் குறித்த சிந்தனைகளே அவர்களுக்குக் காணப்பட்டது. இதற்காகப் பிடிவாதமாய்ப் போராடவில்லையெனில், மிகுந்த கனமிக்க ஸ்தானங்கள் தங்களுக்குக் கிடைக்காது என்பதாக அவர்கள் எண்ணினார்கள். அவர்களுடைய மனநிலையை உணர்ந்தவராக இயேசு, "புறஜாதியாரின் இராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்பேலாவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்" என்றார்.

இவைகள் அவர்களுக்குப் புரிந்துகொள்வதற்குக் கடினமாய்க் காணப்பட்டதான புதிய கொள்கையாய் இருந்தன; மற்றும் இன்றுவரை இது இயேசுவின் பின்னடியார்கள் முழுமையாய்ப் புரிந்துகொள்வதற்குச் சிரமமாகவே உள்ளது. மாம்சத்தில் பிரதான பணிவிடைக்காரனாய்க் காணப்படுபவனே, இராஜ்யத்தில் பிரதானமானவனாய்க் காணப்படுபவான். பணிவிடைக்காரர்களிலேயே பெரிய பணிவிடைக்காரர் கர்த்தராகிய இயேசுவே ஆவார். இதே கொள்கையானது அவரது பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும்கூட உண்மையாயிருக்கின்றது. இவர்களில் யார் மிகுந்த உண்மையுடனும், மிகுந்த நேர்மையுடனும், மிகுந்த வைராக்கியத்துடனும் சகோதர சகோதரிகளுக்குப் பணிவிடைச் செய்கின்றானோ, அப்படிப்பட்டவனே தேவனிடத்திலான தனது தயவைப் பெருகப் பெற்றவனாகவும், மேசியாவின் இராஜ்யத்தில் மிகவும் பெரிதான ஒரு ஸ்தானத்திற்கெனத் தன்னை ஆயத்தம் பண்ணுகிறவனாகவும் இருப்பான்.

ஏதாகிலும் கனமற்ற பணிவிடையைச் செய்வது என்பது, உயர் ஸ்தானத்திற்கான தங்களது அபாத்திர தன்மையை ஒப்புக்கொள்ளுகிறதாய் இருக்குமென்ற எண்ணத்தினாலும், எவரும் பணிவிடைக்காரனுடைய பணியை எடுப்பதற்கு விரும்பாததினாலும், பாதங்கள் கழுவுவதற்கான எந்த ஏற்பாடுகளையும் சீஷர்கள் பண்ணவில்லை. மணற்பாங்கான தேசத்தில், பாதரட்சைகளானது பயன்படுத்துகையில், பாதம் கழுவுதலானது மிகவும் இன்றியமையாததாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளும் வகையில் இயேசு பந்தியிலிருந்து எழும்பி, தம்முடைய சீஷர்களுக்காக இந்தக் கனமற்றப் பணிவிடையைப் புரிந்து, தாழ்மைக்குறித்த பாடத்தினுடைய முக்கியத்துவத்தைக்கூறி, அவர்கள் ஒருவருக்கொருவர் செய்ய வாய்ப்புப் பெற்றுள்ளதான பணிவிடையானது எவ்வளவு தாழ்வானதாக இருப்பினும், அதைப் புரிந்திடுவதற்கு அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டுமென்பதைச் சுட்டிக் காண்பித்தார்.

இப்படிப்பினையானது, அனுசரிக்கப்பட வேண்டிய ஒரு சடங்காச்சாரமாய் இராமல், மாறாக ஒரு கொள்கைக்கான விளக்கப்பாடமாக இன்னமும் நம் மத்தியில் காணப்படுகின்றது. கர்த்தருடைய சகோதரருள் ஒருவருக்குச் செய்யப்படுகின்றதான எந்த ஓர் எளிமையான/தாழ்வான பணிவிடையும், பாதம் கழுவப்படுவதற்கு ஒத்திருக்கின்றது.

## யூதாசினுடைய வாழ்க்கையில் கவலைக்கிடமான வேளை

பஸ்கா போஜனம், அதாவது ஆட்டுக்குட்டி, கசப்பான கீரைகள் மற்றும் புளிப்பில்லாத அப்பம் புசிக்கப்பட்டுக்கொண்டிருந்தது; புளிப்பில்லாத அப்பங்களானது தடிமனான ரொட்டிபோன்றிருக்கும் மற்றும் சிலசமயம் மாம்ச சாற்றை எடுப்பதற்குக் கரண்டிக்குப் பதிலாகவும் பயன்படுத்தப்படுகின்றது. சுவிசேஷங்களில் ஒன்றானது, இயேசு இருதயத்தில் வியாகுலமடையத் தொடங்கி, "என்னோடுகூட என் விருந்தினர்களாக, என் குடும்பத்தின் அங்கத்தினர்களாக உணவருந்திக் கொண்டிருக்கும் பன்னிரண்டு பேராகிய உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பதற்குத் திட்டம் பண்ணிக்கொண்டிருக்கின்றான்" என்று கூறினதாகத் தெரிவிக்கின்றது.

இப்படியாகக் கூறுவதில் இரண்டு நோக்கம் இருந்திருக்க வேண்டும். முதலாவதாக இவ்வார்த்தைகளானது, ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருப்பதான காட்டிக்கொடுத்தல் குறித்து இயேசு நன்கு தெரிந்திருந்தார் என்பதைச் சீஷர்களுக்குக் காண்பிப்பதற்காகும். இதனால் இயேசுவுக்கு ஏதோ எதிர்ப்பார்க்காத விதத்தில் நடந்துவிட்டதென அல்லது தெய்வீகத் திட்டத்திற்குப் புறம்பாக ஏதோ நடந்துவிட்டதென அவர்கள் எண்ணமாட்டார்கள். இரண்டாவதாக யூதாசை திகைக்கப்பண்ணத்தக்கதாக, அவரைச் சிந்தித்துப்பார்க்க வைக்கத்தக்கதாக, அவருக்குக் கடைசி கண்டனமாகக் காணப்படுவதற்கென இயேசு இவ்வார்த்தைகளைக் கூறினார். துரோகியினுடைய நடக்கையானது, நமது அறிவுக்கு எட்டியவரை வெட்கக்கேடான ஒன்றுதான்; ஆனால் துரோகியானவன் யாருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகின்றானோ, அந்நபரிடமிருந்து விருந்தோம்பலைப் பெற்றுக்கொண்டு, அந்நபரினுடைய அப்பத்தைப் புசிக்கையில், அவனது நடக்கையானது இரட்டிப்பான விதத்தில் வெட்கக் கேடானதாகக் காணப்படும்.

சீஷர்கள் மத்தியில் அச்சம் பரவினது; ஒருவர்பின் ஒருவராக, "நானோ?" என்று கேட்டார்கள். "என்னை நீர் குறிப்பிடவில்லை அல்லவா!" என்பதே இக்கேள்வியினுடைய உட்கருத்தாகும். "நானோ?" என்று பொதுவாய்க் கேட்கப்பட்ட கேள்வியை யூதாசும் கேட்டுக்கொண்டார். அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவிற்கு அடுத்து உட்கார்ந்திருந்தார் மற்றும் ஆண்டவர் யாரைக் குறிப்பிடுகின்றார் என்று ஆண்டவரிடம் கேட்கத்தக்கதாகப் பரிசுத்த பேதுரு, யோவானுக்குச் சைகைக்காட்டினார். அது அநேகமாக இயேசுவுக்கு மாத்திரமே கேட்க, மிகுந்த மெல்லியக் குரலில் கேட்கப்பட்டக் கேள்வியாய் இருந்தது. "நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்" என்பதாக மெல்லிய குரலில் நமது கர்த்தருடைய பதில் காணப்பட்டது. விசேஷித்த அக்கறையைச் சுட்டிக்காட்டும் வண்ணமான ஒரு விசேஷித்த துணிக்கையை (தோய்த்து) ஆயத்தம்பண்ணி, அதை யூதாசிடம் கொடுத்தார். இப்படியாகவே பரிசுத்த யோவானும், பரிசுத்த பேதுருவும் காரியத்தினை அறிந்துகொண்டார்கள்.

இது நடந்த கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு, யூதாஸ் புறப்பட்டுப்போனார்; "சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" என்பதாகப் பதிவுபண்ணப்பட்டுள்ளது. தனது சிறந்த நண்பனை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கும் காரியத்தினை யூதாஸ் ஆலோசித்து, தீர்மானித்து, ஆதாயத்தினைக் கணக்குப்பார்த்தபோது, பொல்லாங்கனின் ஆவியானது அவனிடத்தில் முற்றிலுமாய் ஆதிக்கம்கொண்டது. கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு இயேசு நிறுவினதும், இன்று கிறிஸ்தவர்களினால் ஆசரிக்கப்படுகிறதுமான நினைவுகூருதலின் இராப்போஜனத்தின்போது, யூதாஸ் அநேகமாக இருந்திருக்க மாட்டார்.

## நினைவுகூருதலின் அர்த்தம்

இயேசுவினால் நிறுவப்பட்டதான நினைவுக்கூருதலின் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திடத்திலிருந்து முற்றிலுமாய் வேறுப்பட்டதாகவும், வேறானதாகவும் இருக்கின்றது; எனினும் இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும்; ஏனெனில் ஒன்று நிழலாகவும், மற்றொன்று அதற்கான முழுமையான உதாரணமாய் (அ) இன்னும் மேலான அர்த்தமுள்ள உயர்தரமான நிழலாய்/மாதிரியாய்க் காணப்படுகின்றது. ஒன்றில் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை அடையாளப்படுத்துவதற்கு, சொல்லர்த்தமான ஓர் ஆட்டுக்குட்டி பயன்படுத்தப்படுகின்றது; மற்றதில், அதாவது முழுமையான உதாரணத்தில் அப்பம் பிட்கப்படுதலானது, இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

யூதர்கள் தங்கள் ஜாதியினுடைய பிறப்பையும், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்ததான தங்கள் ஜாதியாரின் விடுதலையையும் கொண்டாடுகின்றனர். இதன் ஆரம்பமானது, எகிப்தியர்கள்மீது பத்தாம் வாதை கடந்துவந்தபோது, தங்கள் முதற்பேறானவர்களை வாதையானது கடந்துபோனதில் ஆகும். அந்தப் பஸ்கா இரவின்போது தப்புவிக்கப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், மேசியாவின் இராஜ்யமாகிய காலை வருவதற்கு முன்னதாக பாவம் எனும் இரவு நிலவும் தற்காலத்தில் கடந்துபோகப்படுகிறவர்களாகிய (அ) தப்புவிக்கப்படுபவர்களாகிய முதற்பேறானவர்களின் சபைக்கு நிழலாய் இருக்கின்றனர் என்று பரிசுத்த பவுல் நமக்குக் காண்பிக்கின்றார்.

கிறிஸ்துவினுடைய மரணத்திற்கான நினைவுகூருதலானது மாதந்தோறும் (அ) காலாண்டுதோறும் (அ) வாரந்தோறும் ஆசரிக்கப்படக்கூடாது என்றும், இது யூதருடைய பஸ்காவிற்கான முழுமையான உதாரணமாய்க் கருதப்பட்டு, யூதருடைய பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலத்தில், வருஷந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்றுமுள்ள முடிவிற்கு வேதத்தின் மாணாக்கர்கள் அதிகமதிகமாய் வந்துகொண்டே இருக்கின்றனர்.

தாம் நிறுவினதான இராப்போஜனத்தினுடைய அர்த்தத்தை அப்போஸ்தலர்களுக்கு விளக்கினபோது, அவர்கள் அவரது வார்த்தைகளினுடைய அர்த்தத்தினைப் புரிந்துகொண்டார்களென நாம் புரிந்திட வேண்டாம். மாறாக அவர் ஏற்கெனவே முன்னறிவித்திருந்ததுபோல, அவர்கள் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களையும், வெளிச்சமூட்டுதலையும் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியானது இக்காரியங்களை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவந்து, அவைகளின் அர்த்தத்தினை அவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவினது. "இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற இயேசுவினுடைய வார்த்தைகளின் உட்கருத்தினை இப்பொழுது நாம் பார்க்கலாம். சிலர் எண்ணிக்கொள்வதுபோன்று, அப்பமானது அவரது உண்மையான சரீரமாகவும், திராட்சரசமானது அவரது உண்மையான இரத்தமாகவும் மாறினது என்ற அர்த்தத்தில் அவர் கூறியிருந்திருக்கமாட்டார் என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம். அவர் அத்தருணத்தில்

இன்னமும் தம்முடைய உண்மையான சரீரத்தையும் மற்றும் தம்முடைய உண்மையான இரத்தத்தையும் பெற்றிருந்தார். "இந்த அப்பமானது, உங்களுக்காகப் பிட்கப்படப்போகின்றதான என் சரீரத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது; மற்றும் நாளை உங்களுக்காக சிந்தப்படப்போகிறதான என் இரத்தத்திற்கு — என் ஜீவன் கொடுக்கப்பட்டதற்கு — இந்தத் திராட்சரசம் அடையாளமாய் இருக்கின்றது" என்ற அர்த்தத்திலேயே அவர் கூறினார்.

அந்த அப்பத்தைப் புசிப்பதினாலும், அந்தச் சொல்லர்த்தமான பாத்திரத்தில் பானம்பண்ணுவதினாலும், சீஷர்களுக்கு விசேஷமான புண்ணியம் உண்டாகும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறினதாகவும் நாம் எண்ணிவிடக்கூடாது. இவைகளுக்கு அப்பால் நாம் நோக்கிப்பார்ப்பவர்களாக இருந்து, அவர் பின்வரும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டார் என்று பார்க்க வேண்டும்; அதென்னவெனில், "என்னுடைய மரணமானது பெற்றுத் தந்ததான புண்ணியங்களில் நீங்கள் விசுவாசத்தினால் பங்கெடுக்கும்போது மாத்திரமே, என் சீஷர்களாக உங்களுக்கு அளிக்கப்பட்டதான மாபெரும் ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்" என்பதேயாகும். இயேசுவின் மரணமானது, தங்களுடைய பாவங்களுக்கேயாகும் என்றும், அதுவே தங்களைப் பரம பிதா ஏற்றுக்கொள்வதற்கான அடிப்படையாயிற்று என்றும் அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். கிறிஸ்துவினுடைய ஜீவனை அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் மாத்திரமே, தாங்கள் இந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் உண்மையில் பெற்றுக்கொள்பவர்களாக முடியும் என்று உணர்ந்துகொண்டார்கள்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய மற்றுமொரு முக்கியமான அர்த்தத்தினைப் பரிசுத்த பவுல் அடிகளார் நமக்காகச் சுட்டிக்காண்பிக்கின்றார். அவர் கிறிஸ்து மற்றும் அவரது சபையின் ஒருமைப்பாட்டினைக்குறித்துத் தெரிவிக்கின்றார். மேலும் ஒரே அப்பமும், ஒரே பாத்திரமும் காணப்படுவதை நமக்குத் தெரிவிக்கின்றார். முதலாவதாக இந்த அப்பமானது கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றது; மேலும் இரண்டாவதான பார்வையில் பார்க்கையில் கிறிஸ்துவினுடைய பலியின் மூலமாக நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகும் மற்றும் பிட்கப்பட்டு வரும் ஒரே அப்பத்தின் பாகங்களாகும் சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர். இதுபோலவே கிறிஸ்துவினுடைய இரத்தத்தின், அவரது பலியின் புண்ணியத்தில் பங்கெடுத்தப்பிற்பாடு, அவரது உண்மையான பின்னடியார்கள் அனைவரும், அவரோடு அங்கத்தினர்களாகவும், அந்த ஒரே பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக் கேளுங்கள்:

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (KJV); "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" - (1 கொரிந்தியர் 10:16, 17; திருவிவிலியம்).

## புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுதல்

இயேசு பாத்திரமானது, திராட்சப்பழரசமானது புதிய உடன்படிக்கைக்குரிய இரத்தத்தினை அடையாளப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். நியாயப்பிரமாண உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாக இருக்கின்றது; இது யூதர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவர முடியவில்லை, காரணம் இதை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை. மேலும் இதனால் அவர்கள் பூமியின் மற்ற ஜாதிகளை ஆசீர்வதிக்கவும் தகுதியற்றவர்களானார்கள். ஆனால் மோசேயைக்காட்டிலும் மேன்மையான (அ) சிறந்த (அ) உயர்ந்த ஒரு புதிய மத்தியஸ்தரினால், மேம்பட்ட ஒரு புதிய உடன்படிக்கையானது அறிமுகப்படுத்தப்படும் என்று தேவன் வாக்களித்தார். பழைய நியாயப்பிரமாணமானது நிறைவேற்ற முடியாமல் போனவைகளை, புதிய உடன்படிக்கையானது நிறைவேற்றுமெனத் தேவன் தெரிவித்துள்ளார்; ஏனெனில் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, அதன் மத்தியஸ்தராகிய மேசியாவினால், அவரது இரண்டாம் வருகையில் தொடங்கி வைக்கப்படும். வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும் அவரது இராஜ்யமானது, மனுக்குலத்தை ஆண்டு, ஆசீர்வதித்து, கற்பித்து, இந்தப் பாக்கியமான

வாய்ப்புகளுக்கு இணங்குகிற யாவருக்கும், "கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை" அருளும்.

இயேசுவின் மரணமாகிய இரத்தமானது, அந்தப் புதிய உடன்படிக்கையை முத்திரையிடுகின்றது (அ) நடைமுறைக்குக் கொண்டுவருகின்றது. ஆனால் கவனியுங்கள்; இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் தொடங்கி வைக்கப்படுகின்றதான ஆயிரவருட யுகத்தினுடைய புதிய உடன்படிக்கையின் கீழ்ச் சபையானது, ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அந்தப் புதிய உடன்படிக்கைக்கு முன்னதாகவே சபை ஆசீர்வதிக்கப்படும். ஆம், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதான அவர்களது அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியங்களானது (இரத்தமானது) புதிய உடன்படிக்கையினை முத்திரையிடுகின்றதான அவரது சொந்த பலியில் ஒரு பாகமாகக் கருதப்படுகின்றது. ஆகையால் கிறிஸ்துவின் முழுச் சரீரமாகிய சபையானது, அவரது பாத்திரத்தில் அவரோடுகூடப் பானம்பண்ணுதலில் — பூமிக்குரிய உரிமைகள், சிலாக்கியங்கள், ஜீவனையே பலிச்செலுத்துவதில் பங்கடைந்து முடிவது வரையிலும், புதிய உடன்படிக்கையானது, முழுமையாய் முத்திரையிடப்பட முடியாது.

## பலியினாலான உடன்படிக்கை

இதற்கிடையில் இயேசுவும், சபையும் தங்கள் பலனை நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் அல்லது புதிய உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்ளாமல், மாறாகப் பலியினாலான உடன்படிக்கை என்று அழைக்கப்படும் ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்கின்றனர். கிறிஸ்து மற்றும் சபையினுடைய இந்த உடன்படிக்கைக்குறித்துச் சங்கீதங்களில் கர்த்தர், "பலியினாலே என்னோடே உடன்படிக்கைபண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங்கீதம் 50:5) என்று கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசேஷித்த பலியினாலான உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பவர்கள், கர்த்தரோடுகூடக் கூட்டிச் சேர்க்கப்படுதலானது, 1800 வருடங்களுக்கும் மேலாக, இதுவரையிலும் நடைபெற்று வருகின்றது. பலியானது கிட்டத்தட்ட நிறைவேறியுள்ளது என்றும், சீக்கிரத்தில் பலிச்செலுத்தியவர்களாகிய, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் மகிமையடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலினுடைய வல்லமையினால் மாற்றமடைந்து, "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்ற அவரது வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப, அவர்களது கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்றும் நம்புவதற்கு நமக்கு அநேக காரணங்கள் உள்ளது.

இனிப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதில்லை என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார்; அவர் பானம்பண்ணவுமில்லை. அவரது வேலை — பாத்திரத்தில் அவர் பானம் பண்ணுதலானது, அடுத்த நாளில், கல்வாரியில் நிறைவேறினது. அங்கு அவர் பிதா தமக்கென ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ணுதலை நிறைவேற்றி முடித்தார். அதே பாத்திரத்தினைப் பிதா, இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்குமாக ஊற்றிக்கொடுத்துள்ளார்; மற்றும் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப்போகின்றதான இராஜ்யத்தில் அவரது உடன்சுதந்திரர்களாகக் காணப்படவேண்டுமானால், அவர்களும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும் மற்றும் அவரது பிட்கப்பட்ட சரீரத்தினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்க வேண்டும்.

இதுவே இராஜ்யத்தில் விசேஷித்த ஸ்தானங்களைக் கேட்டுக்கொண்டதான தமது சீஷர்களாகிய பரிசுத்த யோவானுக்கும், பரிசுத்த யாக்கோபுக்கும் கொடுக்கப்பட்ட நமது கர்த்தருடைய பதிலின் உட்கருத்தாகும். இயேசுவோ: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா (உங்களுக்கு விருப்பமா)?" என்று கேட்டார். அவர்களும் தங்களது விருப்பத்தினை மனப்பூர்வமாய்த் தெரிவித்தனர். அவர்கள் வேண்டுதலை, அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அவர்கள் விருப்பத்துடன் காணப்பட்டால், அவர்கள் தமது பாத்திரத்தில் பானம்பண்ணத்தக்கதாக அவர் பார்த்துக்கொள்வார் என்றும் இயேசு அவர்களுக்கு உறுதியளித்தார். இப்படியாகவே அவரது பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (உரோமர் 8:28) என்று வேதவாக்கியங்களானது, அவரது பின்னடியார்களுக்கு உறுதியளிக்கின்றது.

*****

# ஏன் கெத்செமனேயில் வியாகுலம்?

## மாற்கு 14:38-42

***"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்."***

***மத்தேயு 26:41***

தமது மரணத்திற்கான நினைவுகூருதலாகிய இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, இயேசுவும், அவரது சீஷர்களும் ஸ்தோத்திரப் பாடல் பாடிவிட்டு, பட்டணத்திலிருந்து, வெளியே எதிரேயுள்ள ஒலிவ மலைக்குப் போனார்கள்; சுமார் ஒரு மைல் தொலைவிற்குப் போனார்கள். கெத்செமனேக்குப் போகிற வழியில் அநேக முக்கியமான படிப்பினைகளானது சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவைகளைப் பரிசுத்த யோவான் அவர்களின் சுவிசேஷமானது, 15 முதல் 17 வரையிலான அதிகாரங்களில் பதிவு செய்கின்றதாய் இருக்கின்றது.

கெத்செமனே எனும் வார்த்தையின் அர்த்தம் எண்ணெய் செக்காகும்; இது மிகுந்த அர்த்தமுள்ள பெயராகும். யூதர்கள் ஒலிவ பழங்களை உணவிற்காகவும், வெளிச்சத்திற்காகவும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் நினைவுகூருகையில் மற்றும் இயேசுவும் உலகத்திற்கு ஆகாரம் அளிப்பவர் மற்றும் வெளிச்சம் அளிப்பவர் என்பதை நாம் நினைவுகூருகையில், இயேசுவின் ஆத்துமாவை நசுக்கிப்போட்டதான, அவரது சோதனையான அனுபவங்களை, எண்ணெய்க்காக ஒலிவப்பழங்களை நசுக்கி எடுக்கும் தோட்டத்தில், அவர் பெற்றிருப்பது விசேஷித்த விதத்தில் பொருத்தமுடையதாய்க் காணப்படுகின்றது என்று நாம் காண்கின்றோம்.

கெத்செமனே என்பது மலர் தோட்டமாய் இராமல், ஒலிவ மரத்தோட்டமாய் இருந்தது. இவ்விடம் என்று அனுமானிக்கப்படுகின்ற இடமானது, இன்றும் கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது மற்றும் பிரான்சிஸ்கான் துறவிகளினால் (Franciscan Monks) பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தோட்டத்தில் மிகப் பழமைவாய்ந்த சில ஒலிவ மரங்களும், மிகவும் பழமை வாய்ந்த கர்வாலி மரம் ஒன்றும் காணப்படுகின்றது. தோட்டமானது இயேசுவினுடைய நண்பர்கள் சிலருக்குச் சொந்தமானதாகக் கருதப்படுகின்றது; மற்றும் இயேசு கைது செய்யப்பட்டபோது, ஏற்பட்ட சத்தம் காரணமாக எழுந்து, துப்பட்டியினால் தன்னைப் போர்த்திக்கொண்டு வந்த வாலிபன், பரிசுத்த மாற்கு அவர்களின் சுவிசேஷத்தினுடைய எழுத்தாளராகிய ஜான் மாற்கு ஆவார் என்றும் கூறப்படுகின்றது (மாற்கு 14:51, 52).

### எச்சரித்தல்

கெத்செமனேக்குப் போகிற வழியில், அவர்கள் மகா ஆபத்தானச் சூழ்நிலைக்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் பதியவைக்க முற்பட்டார். அவர், "மேய்ப்பனை வெட்டு அப்பொழுது ஆடுகள் சிதறிப்போம்" என்ற தீர்க்கத்தரிசனத்தை அவர்களுக்குக் குறிப்பிட்டார் (சகரியா 13:7). இதன் காரணமாக அவர்கள் அனைவரும் சோர்வடைவார்கள்,இடறுவார்கள், கலங்கிப்போய்விடுவார்கள் என்று தெளிவாய் அவர்களுக்குக் கூறினார். அவர்கள் எதிர்ப்பார்த்திராதக் காரியங்கள் சம்பவிக்கும் என்று கூறினார்.

கர்த்தருக்கான தனது பக்தியில் முழு நம்பிக்கையுடையவரான பரிசுத்த பேதுரு, இதை மறுத்தார் மற்றும் இது ஒருவேளை மற்றவர்களுடைய விஷயத்தில் உண்மையாய் இருந்திட்டாலும், தன் விஷயத்தில் அப்படியாக இராது என்றும், போதகரை மறுதலிப்பதற்குப் பதிலாக, அவரோடுகூட மரிப்பதற்குத் தான் ஆயத்தமாய் உள்ளதாகவும் தெரிவித்தார். பரிசுத்த பேதுரு மாபெரும் அபாயத்தில் காணப்படுவதாக இயேசு இன்னும் வலியுறுத்தினவராக இருந்தார். பரிசுத்த பேதுரு தனது மாம்சத்தினிடத்தில் மிக அதிகமாய் நம்பிக்கைக் கொண்டவராகவும், தேவனை நோக்கிப்பார்க்காதவராகவும், சோதனைக்கு எதிராக ஜெபத்துடன் விழித்திராதவராகவும்

காணப்பட்டார். இயேசு கூறினவைகளை, மறுத்து விளக்கம் அளிக்கும் வண்ணமாகச் சீஷர்கள் அனைவரும் பேசினவர்களானார்கள். அவர்கள் தாங்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றும், மரிப்பதற்கு ஆயத்தமாகக் காணப்படுகின்றார்கள் என்றும் தங்களைக் குறித்துக் கூறினார்கள். அவர்கள் மீது எத்துணை கடுமையான சோதனைகள் வரப் போகின்றது என்று அவர்கள் அறியாதவர்களாய்க் காணப்பட்டனர்!

இதில் அன்றுபோல் இன்றுமுள்ள இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்கும் படிப்பினை நிச்சயமாய் உள்ளது. நமது கடைசி மூச்சு வரையிலும், கர்த்தருடைய காரணங்களுக்கு/நோக்கங்களுக்கு நேர்மையாய்/உண்மையாய்க் காணப்பட வேண்டுமென்று முழுமையாய் உறுதியுடன் காணப்படுவது சரியே; இத்தகைய உறுதி என்பது ஜெயம் கொள்ளுதலுக்கு மிகவும் அவசியமே. அநேகரால் செய்யப்படுகின்ற தவறு என்னவெனில், சோதனைகளும், பரீட்சைகளும் எவ்வளவு கடினமானதாகக் காணப்படும் என்பதை உணர்ந்துகொள்ளாததும், தேவையின் போதான பரம உதவியின் அவசியத்தினை உணர்ந்து கொள்ளாததுமேயாகும். அப்போஸ்தலன்: "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாய் இருக்கிறேன்" என்று எழுதியுள்ளார். இப்படியாக அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், தான் கர்த்தருக்கு முழுக்க உண்மையாய் இருக்கும் அதேவேளையில், தான் தன்னுடைய சொந்த பலவீனங்களையும், இயலாமைகளையும் உணர்ந்துகொள்வதாகவும், ஆனால் பரம உதவியினை தான் விசேஷமாய் நாடுகையில், தான் பலமுள்ளவனாய்க் காணப்படுவதாகவும், தான் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்போது, தான் சோதனைகளுக்கு எதிராக முன்னெச்சரிக்கப்படுகின்றதாகவும் கூறுகின்றார்.

சந்தேகத்திற்கிடமின்றி இந்த யுகத்தினுடைய முடிவில், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு நாட்களில், கிறிஸ்துவினுடைய சபைக்கு, கெத்செமனே அனுபவங்கள் கடந்துவரும். இந்தச் சோதனைகளிலும், பரீட்சைகளிலும் நிலைநின்று, ஜெயம்கொண்டவர்களாக வருபவர்களின் கர்த்தரிடத்திலான விசுவாசம் மற்றும் நம்பிக்கையே பலமுள்ளதாய்க் காணப்படும்; இவர்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள் மற்றும் இவர்கள் இப்படியாய் அவைகளுக்கு எதிராய்ப் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். நமது கர்த்தர் பரிசுத்த பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும், அவர்களுக்கு வரவிருக்கின்ற சோதனைகள் குறித்து முன்னெச்சரித்தது போலவே, நமக்குச் சமீபமாய்க் காணப்படுகின்றதான மிக நெருக்கடியான பரீட்சைகள் குறித்து நம்மையும் முன்னெச்சரிக்கைச் செய்கின்றார். இப்பாடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதான அப்போஸ்தலர்களுடைய அனுபவங்களிலிருந்து நாம் நன்மை அடைவோமாக.

## மரணத்திற்கு ஏதுவான துக்கம்

தோட்டத்தை வந்தடைந்தவுடன், இயேசு அப்போஸ்தலர்களில் எட்டுப் பேரை வாசலிலேயே நிறுத்திவிட்டு, இன்னும் சற்றுத் தொலைவில் நிழல்களுக்குள் பேதுருவோடும், யாக்கோபோடும், யோவானோடும் போனார். நடக்கப்போகின்ற ஏதோ ஒன்றிற்காகவும், இதைக் குறித்து இயேசுவினால் அறியப்பட்டிருந்த ஏதோ ஒன்றிற்காக, அவர்கள் அனைவரும் விழித்திருக்க வேண்டும், காவல்காக்க வேண்டும். ஆனால் இப்படியாக எதுவும் நடக்காது என்றே அப்போஸ்தலர்களுக்குத் தோன்றினது. போதகர் மீது அவர்களுக்கு அனுதாபம் இருந்தபோதிலும், மோசமான விளைவுகள் வரப்போவதாக அவர் எதிர்ப்பார்ப்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நடுராத்திரியாயிற்று, அவர்கள் நேரமே தூங்கும் பழக்கம் உடையவர்களாய்க் காணப்பட்டனர். அன்றைய மாலையில் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் போதகர் கொடுத்திட்டதான பலமான பாடங்கள், அவர்களிடத்தில் அரைத் தூக்கத்தினை ஏற்படுத்தினது. அவர்கள் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்குப் பதிலாக தூங்கினார்கள். போதகருக்கு நெருக்கமாய்க் காணப்பட்ட மூவரும்கூடத் தூங்கினார்கள்.

பிதாவோடு தனிமையில் சம்பாஷித்திட விரும்பினவராக, இயேசு கல்லெறியும் தூரம் அப்பால் நிழலுக்குள் மறைந்து சென்றார். அவர் மீது கடந்துவந்திட்டதான வியாகுலத்தின் நிமித்தமாக, அவர் அவ்வப்போது, மனித ஆறுதலை/அனுதாபத்தை நாடினபோது, தமக்கு நெருக்கமானவர்களும்கூட, அனைத்தையும் மறந்து போனவர்களாக, தூக்கத்திலிருப்பதைக் கண்டார். "ஜனங்களில் ஒருவனும்

என்னோடிருந்ததில்லை” என்று தீர்க்கத்தரிசி சரியாகவே கூறியுள்ளார் (ஏசாயா 63:3). அவர் ஒருவராய்த் துயரம் எனும் ஆலையை, தனிமையில் மிதித்திட்டார்.

தமது அப்போஸ்தலர்களுக்குப் புத்திமதி கூறி, அவர்களில் சிலரைத் தோட்டத்தினுடைய வாசலில் விட்டது முதல், போதகர் தம்மைக் குறித்தும், சில மணி நேரங்களில் நடக்கவிருக்கின்றதென, எதிர்ப்பார்க்கப்படுகின்றதான முக்கியமான நிகழ்வுகள் குறித்தும் விசேஷமாய்ச் சிந்தனைச் செய்தவரானார். அவர் தமது அபிமான மூன்று சீஷர்களை விட்டுச் செல்லுகையில், அவரது ஆத்துமாவின் மீது சடுதியாக வந்திட்டதான அழுத்தத்தினுடைய பாரத்தினை உணர்ந்தவராக, “என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது - என் மீது வரவிருக்கின்றதான ஆபத்துக்கள் வருவதற்கு முன்னதாக, நான் இப்போதே மரித்துவிடுவேன் போன்றுள்ளது” என்றார். அவர் “மிகவும் கலங்கியிருந்ததாகவும், திகிலடைந்ததாகவும்” அவரைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். இங்கு இடம்பெறுகின்றதான வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தையானது, உச்ச அளவிலான கலக்கத்தையும், திகிலடைதலையும் குறிக்கின்றதாய் இருந்து, தனிமையை, நண்பர் அற்ற நிலையை, ஏக்கத்தை அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இரட்சகர் மீது சடுதியாய் வந்திட்டதான மிகுந்த துயரங்களும், நம்பிக்கையின்மையின் உணர்வுகளும் சற்றுநேரம் தொடர்ந்தது; அவர் பிதாவிடம் மூன்றுதரம் ஜெபத்தில் சென்று, இந்த வேளை தம்மைவிட்டுக் கடந்துபோகும்படிக்கு வேண்டிக்கொண்டார்; தம்முடைய இருதயத்தை நொறுக்கிக்கொண்டிருக்கின்றதான கடுமையான அழுத்தமானது கடந்துபோகும்படிக்கு வேண்டிக்கொண்டார். போதகருக்கு இரத்த வியர்வை உண்டாகுமளவுக்குப் பெருந்துயரம் காணப்பட்டதாக, மருத்துவராகிய லூக்கா சுவிசேஷகர் தெரிவித்துள்ளார். இரத்த வியர்வை குறித்த இந்தப் பதிவானது சில பழைய மூலப்பிரதிகளில் இடம்பெறவில்லை என்றாலும், இத்தகைய அனுபவங்களானது, மாதுயரங்களில் காணப்பட்டுள்ளதான மற்றச் சிலருக்கு ஏற்பட்டுள்ளதென மருத்துவர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

## போதகருடைய துயரத்திற்கான காரணம்

போதகர் தம்முடைய மரணத்தைக் குறித்து முன்னறிந்தவராக இருக்க மற்றும் இதைக் குறித்துத் தம்முடைய சீஷர்களிடம் அவர் கூறியிருக்க மற்றும் தாம் மரணத்திலிருந்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார் என்று அவர்களுக்கு நிச்சயமளித்திருக்க, அவர் தம்முடைய மரணத்தை எதிர்ப்பார்த்ததில், கொண்டிருந்த மாதுயரத்தை நாம் எவ்வாறு விளக்குவது? அவரது பின்னடியார்களில் சிலருக்கு இல்லாத அளவுக்கும், ஆம் பொதுவான ஜனங்களுக்கு இல்லாத அளவுக்கும், மரணம் குறித்த எண்ணமானது, மீட்பருக்கு ஏன் இத்தனை பயத்தைக் கொடுத்தது?

சிலுவையில் அறையப்படுதலுக்கு நிகரான (அ) இதற்கும் மேலான அனுபவங்களுள்ள மரணங்களுக்குள்ளாகப் பல நூறு இரத்த சாட்சிகள் கடந்துபோயிருக்கின்றனர். இவர்கள் இயேசுவுக்கு நிகரான கொடுமையான மரணங்களுக்குள் கடந்துசெல்கையில், மிகுந்த தைரியத்தையும், மனோதிடத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இரட்சகருடைய இத்தகைய மனநிலையையும் மற்றும் அந்த வேளை (அ) பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று மிகவும் ஏக்கமாய் அவர் ஜெபம் பண்ணினதையும் நாம் எப்படி எடுத்துக்கொள்வது?

இந்தக் கேள்வியையும், இதற்கானச் சரியான பதிலையும் புரிந்துகொள்வதற்கு, மீதமான மனுக்குலமிடமிருந்து போதகர் எவ்வளவு வித்தியாசமானவர்/வேறுபட்டவர் என்பதை நாம் நினைவில் கொண்டிட வேண்டும். உலகம் அனைத்தின் மீது, ஒரு மரணத்தண்டனை தீர்ப்புக் காணப்படுகின்றது. நாம் எப்போது மரிக்கப் போகின்றோம் என்பதுதான் கேள்வி என்பதை நாம் அனைவருமே அறிவோம். மரிக்கும் நிகழ்வானது, சில மணி நேரங்களுக்கு அதிகப்பட்சமாய் நீடிக்கக்கூடியவை என்பதை நாம் அனைவருமே அறிவோம். மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான எந்த நம்பிக்கையும் நமக்கு இல்லை என்பது மாத்திரமல்லாமல், நாம் ஏற்கெனவே பத்தில், ஒன்பதும் மரித்த நிலையில் உள்ளவர்களாகக் காணப்படுவதினால், நம்முடைய உணர்வுகளானது ஏறக்குறைய மரத்துப்போனதாகவே காணப்படுகின்றது. மரணம் குறித்த விஷயத்தில் நாம் ஏறக்குறைய அலட்சியமானவர்களாகவும், கவனமற்றவர்களாகவும் மற்றும் இதற்கேற்ப கடுமையானவர்களாகவும் காணப்படுகின்றோம்.

## உண்மையான தைரியத்தினுடைய வெளிப்பாடு

மரணத்தைக் குறித்துக் கவலைக்கொள்ளாமல், பயமற்ற நிலையில் போர்வீரர்கள் யுத்தத்திற்கு பாய்ந்து செல்வதுண்டு மற்றும் இதைப்போன்று பாய்ந்திடும் குதிரைகளும் உண்டு. தாங்கள் என்ன செய்கின்றார்கள் என்று முழுக்கப் புரிந்துகொண்டுள்ள நிலைமையிலும், மரணத்தைக் கண்டு மிகவும் பயப்படுகிற நிலைமையிலும், ஆனால் கடமை மற்றும் அன்பினுடைய கட்டளையின் காரணமான கீழ்ப்படிதலின் நிமித்தமாக முன்னேறுகிறவர்கள்தான் மாபெரும் தைரியம் உடையவர்களாய் இருக்கின்றனர். இயேசு இப்படியானதொரு போர்வீரன்தான். மற்றவர்கள் மரணம் என்பது என்னவென்று புரிந்துகொண்டிராததை, அவர் புரிந்துகொண்டிருந்தார். ஜீவனுடைய முக்கியத்துவம் மற்றும் மதிப்புக் குறித்து மற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடியாததை, இயேசு உணர்ந்துகொண்டவராய்க் காணப்பட்டார்.

இயேசு பரலோக மகிமையைத் துறந்தவராக, ஆவிக்குரிய தளத்தின் சுபாவத்தை விட்டுவிட்டவராக, மனித சுபாவத்தை எடுத்துக்கொண்டார், காரணம் மனிதன் பாவம் செய்திருக்கின்றான் மற்றும் தெய்வீக ஏற்பாட்டின்படி இயேசு மனுஷனுக்கான மீட்கும் பொருளென, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிக்க வேண்டியிருந்தது. இதுவே அவரைக் குறித்த பிதாவின் சித்தமாயிருந்தது. இந்த நோக்கத்திற்காகவே, அவர் உலகத்திற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார். இந்த ஒரு சிந்தையே, அவரது ஜீவியம் முழுவதையும் இயக்கினதாய் இருந்தது. தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலும், மனுக்குலத்திற்கு ஊழியம் புரிவதிலும், அவர் தினந்தோறும் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து வந்தார். இப்பொழுது அதன் மாபெரும் உச்சக்கட்டத்திற்கு வந்திருக்கின்றார்.

கர்த்தருக்குக் கொடுத்திருக்கும் இப்பணியில் அவர் உண்மையுள்ளவராய்க் காணப்பட்டாரானால், அவர் தெய்வீக வல்லமையினால் மரணத்தினின்று, அவர் முன்பிருந்த நிலைக்கும், ஜீவதளத்திற்கும் மேலான தளத்திற்கும், நிலைக்கும் உயிர்த்தெழுப்பப்படுவார் என்று பரம பிதா வாக்களித்திருந்தார். இவ்விஷயத்திலான பிதாவினுடைய உண்மையைக் குறித்தும், பிதாவின் வல்லமையைக் குறித்தும் இயேசு ஐயம் கொள்ளவில்லை. ஆனால் பிதாவின் வாக்குத்தத்தமும், ஏற்பாடும் நிபந்தனையின் அடிப்படையிலேயே இருந்தது; நமது கர்த்தர் உண்மையுள்ளவராகக் காணப்பட்டால் மாத்திரமே, அவர் உயர்நிலையான ஜீவனுக்கான உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏதேனும் அளவில், பெரியளவிலோ (அ) சிறிய அளவிலோ, அவர் பாவத்தில் ஈடுபடுவாரானால், அவருக்கு பாவத்திற்கான தண்டனையானது, “சாகவே சாவாய்” என்பதாகவே இருந்திருக்கும்.

மூன்றரை வருடங்களாக அவரது ஜீவியமானது, தேவனுக்கும், தெய்வீகச் சித்தத்தினைச் செய்வதற்குமென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர் தெய்வீகச் சித்தத்தினைப் பரலோக பிதாவுக்குப் பிரியமான விதத்தில், முற்றும் முழுமையாகச் செய்துள்ளாரா? என்பதுதான் கேள்வியாயிருந்தது. இதனோடுகூட இனி அடுத்து சில மணிநேரங்களில் வருகின்றதான அனுபவங்கள் வாயிலாகத் தம்மால் சரியான தைரியத்துடனும், சரியான விசுவாசத்துடனும், சரியான கீழ்ப்படிதலுடனும் கடந்துபோக முடியுமா, தாம் கடந்து போவாரா? அல்லது தவறிப்போய், தம்முடைய அனைத்தையும் மரணத்தில் இழந்துவிடுவாரா? என்ற கேள்விகள் அவருக்குள் குவிந்தன.

## போதகருக்குப் பரிந்துபேசுபவர் எவருமில்லை

இப்படியாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க நாடுகின்ற நம்மிடமிருந்து, நமது போதகருடைய விஷயம் எவ்வளவு வேறுபட்டிருந்தது என்று நாம் பார்க்கின்றோம். நாம் இழந்துபோய்விடுவதற்கென்று எதுவுமில்லை; ஏனெனில் நம் சந்ததியினர் அனைவரும் மரணத் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றனர். இன்னுமாக இயேசுவினுடைய பின்னடியார்கள், தங்களுடைய பாவங்களுக்காக மரித்திட்ட தேவனுடைய குமாரன் அவரே என்றும், அவரது புண்ணியமானது நமது அப்பரிபூரணங்களினாலான குறைகளைச் சரிசெய்துவிடுகின்றது, ஏனெனில் நாமும் அவரில் நிலைத்திருந்து, பிதாவின் சித்தத்தைச் செய்ய விரும்புகின்றவர்களாய் இருக்கின்றோம் என்றும் உணர்ந்துகொள்கின்றனர்.

ஆனால் ஒருவேளை போதகர் தவறிப் போய்விடுவாரானால், அவரது குறைவுகளைச் சரி செய்திடுவதற்கு அவருக்கு எவருமில்லை. அவர் தவறிடுவது என்பது நித்தியமான மரணத்தைக் குறிப்பதாகிவிடும்; இன்னுமாக விசேஷித்த உண்மைக்கெனத் தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த அந்த விசேஷித்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழந்திடுவதையும் குறிப்பதாகிவிடும். மேசியாவின் இராஜ்யத்தின் வாயிலாக, மனுக்குலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமைகளினின்று தூக்கிவிடும் பிதாவின் வேலையைப் புரிந்திடுவதற்கான மாபெரும் சிலாக்கியத்தினைக்கூட இழந்துவிடுவதைக் குறிப்பதாகிவிடும். சுருக்கமான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், போதகருடைய நித்தியமான ஜீவனும் மற்றும் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக, பிதாவின் வலது பாரிசத்தில் உயர்வாய் அவர் உயர்த்தப்படுவதும், அழியாமையும், கனமும், மகிமையுமான அவருக்கானவைகள் யாவும், அந்த இரவில், கெத்செமனேயில் தராசில் காணப்பட்டது.

இவைகள் அனைத்தையும் போதகர் உணர்ந்தபோது, அவர் இந்த எண்ணங்களினால் அமிழ்த்தப்பட்டார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமக்கு முன்பு காணப்படுகின்றதான விசேஷித்த உபத்திரவங்களிலிருந்தும், கோரமான/பயங்கரமான அனுபவங்களுள்ள வேளையினின்றும் தாம் தப்புவிக்கப்படத்தக்கதாகவும், தாம் கடாட்சிக்கப்படத்தக்கதாகவும், தெய்வீகத் திட்டமானது வேறு விதத்தில் நடந்தேறுவதற்கு வாய்ப்புள்ளதா என்று அவர் விரும்பினதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! அந்த அனுபவங்களினுடைய பயங்கரமான பாகமானது, அவர் தேவதுஷணம் புரிந்தவராக, தேவனுக்கும், நீதிக்கும் சத்துருவாக, பாதகனாக/குற்றவாளியாகக் கையாளப்படுவதாய் இருந்தது.

## நமது கர்த்தர் எதற்குப் பயப்பட்டார்

இக்காரியங்களானது சீரழிந்த, சீர்க்கேடான ஆத்துமாவிற்குப் பெரிதாய் ஒன்றும் இராது, ஆனால் பிதாவுக்கு அன்பினாலும், உண்மையினாலும் நிரம்பிக் காணப்படுகிற இருதயத்திற்கோ, இத்தகைய அனுபவம் என்பது பயங்கரமானதாய்க் காணப்பட்டிருக்கும்; அதாவது பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, தம்முடைய அனைத்தையும் தியாகம் பண்ணிட்டவர், தம்முடைய பரலோக மகிமையை, தம்முடைய பூமிக்குரிய நலன்களைத் தியாகம் பண்ணிட்டவர் – இப்படிப்பட்டவர் தேவனுக்கு எதிராக தேவதூஷணம் பேசிட்டவராக கருதப்படுவதும், அவர் பாதகனென, குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதும், அவருக்குப் பயங்கரமானவைகளாகவே காணப்பட்டிருக்கும்! உயர்க்குணமுள்ளவரும், நேர்த்தியானவருமான இயேசுவுக்கு, அதாவது "பரிசுத்தரும், மாசில்லாதவரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்" என்று யாரைக் குறித்து எழுதப்பட்டிருக்கின்றதோ, அவருக்கு இவைகள் பயங்கரமான அனுபவங்களாகவே காணப்பட்டிருக்கும்!

இந்த அவமானமே, தம்மை விட்டுக் கடந்துபோகக்கூடுமோ என்று இயேசு ஜெபம் பண்ணினார். அவர் தாம் சாகக்கூடாது என்று ஜெபம் பண்ணிடவில்லை; ஏனெனில் இந்த நோக்கத்திற்காகவே (மரிப்பதற்காகவே) தாம் பூமியில் வந்திருக்கின்றார் என்றும், தம்முடைய மரணத்தின் மூலமாக மாத்திரமே, மனுஷ ஜாதியின் மீதான மரணத் தண்டனை மாற்றப்பட முடியும் என்றும் அறிந்திருந்தார். அவர் தம்முடைய மரணத்தைக் குறித்து அடிக்கடி பேசியிருந்தார்; மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று அவர் ஒரு கணம்கூட எண்ணினதில்லை. "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த வேளையினுடைய விசேஷித்த அவமானத்தை மாற்றிடுவதற்குப் பிதாவிடம் ஏதேனும் வழி இருக்கும் என்றுதான் அவர் எதிர்ப்பார்த்தார். எனினும் போதகர் தமக்கான மிகுந்த துயரமான வேளையிலுங்கூட, "ஆகிலும் என் சித்தப்படியல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார்.

போதகருடைய கெத்செமனே அனுபவங்களானது, பயத்துடன் இணைந்து காணப்பட்டது என்று பரிசுத்த பவுல் நமக்கு உறுதியளிக்கின்றார்; இது மரித்துவிடுவோம் என்பதற்கான பயமாய் இராமல், மாறாக மரணத்திலேயே என்றென்றும் காணப்பட்டுவிடுவது குறித்த பயமாக இருந்தது; முற்றும் முழுமையான கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் பேரில் பிதாவினால் வாக்களிக்கப்பட்டுள்ளதான மகிமையான உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரமாகக் கருதப்படாமல் போவது குறித்த பயமாக இருந்தது. "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று (உயிர்த்தெழுதல் வாயிலாக) இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும்

கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபிரெயர் 5:7) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். அவர் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்; மற்றும் இதைவிட மேலாக அவர் மரணத்திலிருந்து (உயிர்த்தெழுதல் வாயிலாக) இரட்சிக்கப்படுவார் என்ற நிச்சயம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

## பரத்திலிருந்து பலப்படுத்தப்பட்டார்

இதுவே தேவனிடமிருந்து ஒரு தேவதூதன், அவருக்குத் தோட்டத்தில் தோன்றி, அவரைப் பலப்படுத்தினார் என்ற வார்த்தைகளுக்கான விளக்கமாகும்; இயேசு அந்நிமிடம்வரை உண்மையாய் இருந்திருக்கின்றார் என்றும், சீக்கிரத்தில் வரவிருக்கின்ற சோதனையான வேளையில், தெய்வீக ஆசீர்வாதமானது அவரோடே காணப்படும் என்றும் பிதாவிடத்திலிருந்ததான வாக்குறுதியை, தூதன் இயேசுவுக்குக் கொடுத்தார். அந்தக் கணம் முதல் அனைத்துப் பயங்களும், வியாகுலங்களும் போய்விட்டன. பிதா இதுவரையிலும் அங்கீகரித்துள்ளாரெனில், மற்றும் பிதாவின் ஆசீர்வாதமும், புன்முறுவலும் தம்மோடுகூட வருமாயின், எது வந்தாலும் அவரால் அனைத்தையும் சந்திக்க/சகிக்க முடியும். மீதமான இராத்திரி வேளையிலும், பின்தொடர்ந்து வந்த நாளிலும், மிகவும் கடுமையான சூழ்நிலைகள் மத்தியில், இயேசு அமைதியிலும் அமைதியுள்ளவராய்க் காணப்பட்டார். தமக்காக அழுதவர்களை அவர் ஆறுதல் படுத்தினார்; தம்முடைய தாயாரை, உண்மையுள்ள பரிசுத்த யோவானிடம் ஒப்படைத்தார்.

போதகருடைய இந்த அனுபவங்களில், அவரது சீஷர்களின் அனுபவங்களை அடையாளம் காணலாம். அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றும், பிதா அவர்களை அன்புகூருகின்றார் என்றும், அவரது கிருபை அவர்களுக்குப் போதுமானது என்றும், மீட்பருடைய நீதியின் வஸ்திரமானது, அவர்களை மூடுகின்றது என்றும் அவர்களுக்கு உறுதியளிக்கப்படுகையில், அவர்கள் மரணத்தைக் கண்டு அச்சமடைந்திருந்தாலும், இம்மாதிரியானச் சூழ்நிலைகளில் அவர்களால் தைரியமாய்க் காணப்பட முடியும்.

போதகருக்கும், அவரது பின்னடியார்களுக்கும் இடையிலான மாபெரும் வித்தியாசமானது நினைவில் கொள்ளப்பட வேண்டும்; அதென்னவெனில்: "ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருக்கவில்லை" என்பதான போதகருடைய விஷயத்திலிருந்து நம்முடைய விஷயம் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது; போதகர் நம்மோடுகூடக் காணப்படுகின்றார்; "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று போதகர் கூறுகின்றார். இதனோடுகூடக் கிறிஸ்துவினுடைய சகோதரரின் மத்தியிலான ஆவியின் ஐக்கியத்தினையும் நாம் பெற்றிருக்கின்றோம்; நம்மோடுகூட விழித்திருந்து, நம்மோடுகூட ஜெபம் பண்ணுகிறவர்களாகிய சகோதரர்களின் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளானது, ஒவ்வொரு சோதனையான வேளையிலும் பலப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குகள் அனைத்திற்குமாக நாம் அவருக்கு நன்றி செலுத்திக்கொண்டு, தேவன் தம்முடைய குமாரன் வாயிலாக கொடுத்திட்டதான பலத்தினுடைய பலத்தில் நம்முடைய கெத்செமனேக்குள் கடந்து செல்வோமாக.

*****

# உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி

## மத்தேயு 26:14-25, 47-50; 27:3-10.

***"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ." மத்தேயு 26:24***

இயேசுவின் பதினொரு சீஷர்கள் கலிலேயர்களாக இருக்க, யூதாஸ் பாலஸ்தீனியாவின் தெற்குப் பகுதியைச் சார்ந்தவராக இருந்தார். வணிகத்தில் திறமைமிக்கவராக யூதாஸ் இருந்தபடியால், அவர் அப்போஸ்தலர்களின் கூட்டத்திற்குப் பொருளாளராக அமர்த்தப்பட்டார் என்று அனுமானிக்கப்படுகின்றது. இயேசுவின் நண்பர்கள், இராஜ்யத்தைக் குறித்து அறிவிப்பதற்கு, தாங்களும், இயேசுவும், தங்களுடைய முழு நேரத்தையும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்ததான உண்மையை உணர்ந்திருந்தனர். ஆகவே அவர்களைத் தாங்கும் வண்ணமாக சிலர் தானாகவே முன்வந்து பண உதவி பண்ணினார்கள் என்று நாம் வாசிக்கையில் நமக்கு விநோதமாக எதுவும் தோன்றவில்லை.

இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் பணத்திற்காக கெஞ்சியிருப்பார்கள் என்றோ அல்லது பணம் வசூலிக்க முயன்றிருப்பார்கள் என்றோ நம்மால் எண்ணி கூடப் பார்க்க முடியாது. இப்படியாக, செய்யப்பட்டிருக்குமாயின், அது "சகல பொன்னும், சகல வெள்ளியும், பர்வதங்களில் திரிகிற ஆயிரமாயிரமான மிருகங்களும் என்னுடையவைகள்" என்று பிதாவாகிய தேவன் பேசினதின் மதிப்பைக் குறைத்துப் போடுவதாகவும், உதவிக்காக அவர் கேட்டுவாங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றார் என்பதாகவும் ஆகிவிடும். மாறாக, ஆண்டவருக்கு ஆதரவாக சிலர் தானாகவே முன்வந்து கொடுத்தார்கள் என்றே வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. உதாரணத்திற்கு, ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், இன்னும் சிலரும் இதைச் செய்தார்கள் என்று வாசிக்கின்றோம் (லூக்கா 8:3). இப்படியாக, முன்வந்து கொடுக்கப்பட்ட நன்கொடையின் நிமித்தம், அப்போஸ்தலரின் கூட்டத்தாருக்குப் பொதுவாக ஒரு பொருளாளர் நியமிக்க அவசியமாயிற்று. அதுவும், அந்தப் பொருளாளர் மிகச்சிறந்த வாணிக திறன்மிக்கவராகவும் இருப்பது அவசியமாயிற்று.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இயேசு யூதாசைத் தெரிந்துக்கொண்டபோது, அவர் கேடான மனிதனாக இருந்தார் என்று சொல்வதற்கோ, நம்புவதற்கோ எவ்வித காரணங்களும் நமக்கில்லை. ஆனால் மிகுந்த சாதகமான செல்வாக்குகளின் கீழ் இருந்தபோதிலும், அதாவது, இயேசு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் தோழமை இருந்துகொண்டிருக்கும் போதும், இராஜ்யத்தின் செய்தி தொடர்ந்து அவர் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும்போதும், அவர் கேடான குணங்களை வளர்த்துக்கொண்டிருந்தார் என்று நம்புவதற்கு அனைத்துக் காரணங்களும் நமக்குக் காணப்படுகின்றன. எனினும் அவருடைய பின்மாற்றத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்தது. மேலும், யூதாசுக்கு, சுயநலம், பணத்தின் மீது பிரியம், பேராசை ஆகியவைகளின் அடிப்படையிலேயே சோதனை வந்தது என வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன.

### சகல தீமைகளுக்கும் வேர்

அந்தோ! எத்தனை நேர்மையான மனிதர்கள், பணத்தின் மீதான அன்பின் நிமித்தம், நீதியின் பாதையினின்று கெடுக்கப்பட்டுப் போய்விட்டனர்! பரிசேயர்களுக்கு எதிராக, இயேசு கூறின கடுமையான குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர்கள் பணப்பிரியராக இருந்தார்கள் என்பதை நாம் நினைவுகூருகின்றோம். இன்றைய காலத்திலுள்ள அநேக கிறிஸ்தவர்களுக்கும், பிரச்சனை/இடர்பாடு பணத்தின் மீதான ஆசையின் அடிப்படையிலேயே உள்ளது என்று ஒருவேளை நிரூபித்துக்காட்டப்பட்டாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்பது இன்றும் உண்மையாகவே உள்ளது (1 தீமோத்தேயு 6:10). மேலுமாக அப்போஸ்தலர் (இப்பண ஆசை எனும்) வஞ்சனையின் நிமித்தம், அநேகர்

வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் கூறுகின்றார்; எனினும் யூதாஸ் செய்ததுபோன்று எப்போதும் மிக அபாயகரமாக இருப்பதில்லை.

யூதாஸ் தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்குக் காட்டிக்கொடுக்கும் அளவு பணப்பிரியனாக இருந்தார். அதாவது, கூலியின் அடிப்படையில் பார்க்கையில் முப்பது வெள்ளிக்காசு என்பது இருநூறு முதல் முன்னூறு டாலர்களுக்குள்ளான மதிப்பை உடையதாகும். இன்னும் வேறுசிலர் தங்கள் மனசாட்சியை விற்றுப்போடும் அளவிற்கு, ஆஸ்திகள் பெறும் பொருட்டு/சம்பாதித்துக்கொள்ளும் பொருட்டுப் பணப்பிரியராக இருக்கின்றனர். தப்பறைகளை ஆதரிப்பதின் மூலம், தங்கள் தொழிலில் நன்கு செழிப்படையலாம் என்று நம்பி, பணத்திற்காகச் சிலர் சத்தியத்தையும் விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். சிலர் பணத்திற்காக, சபையையே விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். மேலும், மனுஷனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, தாங்கள் வாடகைக்காக/கூலிக்காக அமர்த்தப்பட்டிருக்கும் நபராக இருப்பதினால், தாங்கள் விசுவாசிக்காததைப் பிரசங்கிக்க விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். சிலர் தங்களுடைய தேசபக்தியை, பணத்தின் மீதான விருப்பத்தின் காரணமாக வியாபாரம் செய்து, தங்கள் தேசத்தையும் விற்றுப்போட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

பண ஆசையின் ஏமாற்றுத்தனமான சதிதாக்கத்திலிருந்து, ஒவ்வொருவரும் தங்களைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாய் உள்ளது. ஆனால், நாம் பணத்திற்கும், பண ஆசைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், பண ஆசையே, அழிவையும் உண்டாக்கி, ஆத்துமாவை ஏமாற்றி, சிக்கவைக்க செய்கின்றதாகவும் காணப்படுகின்றது. பணம் என்பது கடின உழைப்பையும், கூலியையும், சேர்த்து வைத்தலையும் குறிக்கின்றது. மேலும், பணத்தைக்கொண்டு செய்யப்படக்கூடிய நன்மையினிமித்தம் அதற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். ஆனால், பணத்தின் மீது ஆசைக்கொள்வதோ, அதற்கு ஊழியம் புரிவதோ, அதனை விக்கிரகமாக பாவித்து வாழ்க்கையில் வைத்துக்கொள்வதோ, தேவனிடத்திலிருந்து நம்முடைய இருதயங்களைத் தூர விலகச்செய்யும்படிக்குப் பணத்திற்கு அனுமதிக் கொடுப்பதையோ நாம் செய்யக்கூடாது. இந்தப் பண ஆசையே யூதாசின் பயங்கரமான வீழ்ச்சிக்கான, அடிப்படை காரணம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

## ஒரு தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்

பணப்பையைச் சுமந்திருந்த யூதாஸ், ஒரு கள்வன் என்று சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்துக்கொள்ளாமல், போகப்போகத்தான் அறிந்துக்கொண்டார்கள் (யோவான் 12:6). சீஷர்களுக்கென்று கொடுக்கப்பட்ட பணங்களைத் தனக்கென்று யூதாஸ் பயன்படுத்திக் கொண்டிருந்து, சில நியாயமாய்த் தோன்றும் சாக்குப்போக்குகளைக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில், பாவம் எப்பொழுதும் ஏமாற்றுகின்றதாய்க் காணப்படுகின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி அவர் இப்படியாகக் கூறியிருந்திருக்க வேண்டும்..."நான் பணத்தைச் சேமித்து வைத்துள்ளேன். ஏனெனில், ஆண்டவருக்கும், நம் அனைவருக்கும் மிகுந்த பணத் தேவை ஏற்படும் ஒரு காலம் வரும் என எனக்கு தோன்றினதினாலேயாகும். அப்படியான ஒரு காலக்கட்டத்தில், வருங்காலத்தைக் கருதி நான் செய்ததை உணர்ந்துக்கொள்வீர்கள்" என்பதேயாகும். இப்படியாக, அவர் சிந்தித்துக் கொண்டிருந்தது, பணத்தின் மீதான அவருடைய ஆசையை அதிகரிக்கச் செய்துவிட்டது. மேலும், இந்த ஆசையானது, இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக திட்டம் போடத்தக்கதாக, அவருடைய உற்சாகமான வியாபார எண்ணங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மனதை, வழி நடத்தினது.

இயேசு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதை அறிந்த யூதாஸ், தனது தவறுக்காக மனவருத்தம் அடைந்தவராக, பிரதான ஆசாரியர்களிடம் பணத்தைத் திரும்பக்கொண்டு போய், தான் செய்த காரியத்தை திருத்தம் செய்ய விரும்பினவராக இருந்தார் என்று பதிவுகள் உள்ளன. அவர்களோ, அவரைக் கண்டு நகைத்து, அவர் ஒருவேளை குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்துள்ளார் என்றால், அது அவர் பாடு என்றும், அதைக் குறித்துத் தங்களுக்குக் கவலை இல்லை என்றும் கூறினார்கள். திரும்பிக் கொடுக்கப்பட்ட பணமானது, "இரத்த பணமாக" இருந்தபடியினால், அவர்களால் அதை மீண்டுமாக ஆலயத்தின் நிதி இலாகாவிடத்தில் போட்டுவிடக் கூடாதிருந்தது. ஆகவே அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குறைந்த விலையில் குயவனுடைய நிலத்தை வாங்கினார்கள். இப்படியாக, அவர்கள் மறந்துபோனதும், எரேமியாவினால் முன்னுரைக்கப்பட்டதுமான தீர்க்கத்தரிசனம் நிறைவேறினது. "இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக

அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கத்தரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்தேயு 27:9, 10).

இயேசு குற்றவாளிக்குரிய தண்டனை தீர்ப்பிற்குள்ளானார் என்று யூதாஸ் கேள்விப்பட்டு, ஆச்சரியம் அடைந்தார் என்பது போன்று பதிவுகள் காட்டுகின்றது. இயேசு இக்கட்டான பரீட்சையில் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது, அவர் தம்மை மேசியா என்று உறுதிப்படுத்திக்கொண்டு, தமது சத்துருக்கள் மேல் ஜெயங்கொள்வார் என்று யூதாஸ் அனுமானித்திருக்க வேண்டும். யூதாஸ் தனக்கும் பங்குண்டு என்று நம்பிக்கைக்கொண்டிருந்த இராஜ்யத்தின் ஸ்தாபனத்தை, இப்படியாகத் துரிதப்படுத்தலாம் என்றே அநேகமாக எண்ணியிருக்க வேண்டும். இறுதியில், தன்னுடைய தவறுக்காகக் காரணம் தெரிவிக்கும் விதமாக, "பாருங்கள் நமக்கு முப்பது வெள்ளி காசும் சேர்ந்துவிட்டது மற்றும் வேறு எந்த வழியிலும் காரியங்களை வேகமாக உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவர முடியாமல் இருக்க, நான் இப்படிச் செய்து உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவந்ததற்காக எனக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்" என்றே யூதாஸ் கூறியிருந்திருப்பார். இவ்விதமாக யூதாஸ் ஒரு கதாநாயகனாகவும் திகழ்ந்திருக்க முடியும். அதேசமயத்தில் பொருளாதார ரீதியில், தனக்குள்ள ஞானத்தையும், இராஜ்யத்தில் மாபெரும் பொருளாளருக்குரிய ஸ்தானத்திற்கு/பதவிக்கு, தான் சரியான நபர்/பாத்திரவான் என்பதையும் நிரூபித்திருக்க முடியும். இப்படியாக திட்டங்கள் அவன் மனதில் இருக்க, நளதத் தைலம் குறித்த விஷயத்தில் காணப்பட்ட மரியாளின் செயல்பாட்டை இயேசு அங்கீகரித்தப்படியால், இயேசுவின் மீது யூதாசுக்குள் கொஞ்சம் கோபம் மூண்டது. இந்தக் கோபத்தினுடைய தாக்கத்தினிமித்தமாகவே, காட்டிக்கொடுப்பதற்கான ஒப்பந்தத்தைச் செய்யும்படிக்கு யூதாஸ் முதலாவதாக, ஆசாரியர்களையும், வேதபாரகர்களையும் தேடிச்சென்றார்.

## மறக்கப்பட்டுப்போன நிலை - உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையற்ற நிலை

யூதாஸ், பழியினின்று விலகிக்கொள்வதற்கான காரணங்களை நாம் இங்கு வைக்கப்போவதில்லை. தேவன் மற்றும் அவருடைய நோக்கங்களுக்கு எதிரான துரோகத்திற்கு, எவ்விதத்திலேயும் காரணங்கள்/சாக்குப்போக்குகள் வைக்க முடியாது. அக்கிரமம் பண்ணுகிற ஒவ்வொருவனும் முதலாவதாக தனது மனதில், தன்னுடைய தவறான போக்கை அங்கீகரித்துக் கொள்கின்றான் என்ற உண்மையை மாத்திரம் நாம் சுட்டிக்காட்டுகின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், பாவத்திற்கான ஒவ்வொரு அடியும் எடுத்துவைக்கப்படுவதற்கு முன்பு மனதும், மனசாட்சியும் துணிகரம் கொள்கின்றது. ஆகவேதான் இயேசு, "மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" (மத்தேயு 26:24).

தனது நண்பனை, தனது போதகரை, தான் தேவகுமாரன் என்று அங்கீகரித்துக்கொண்டவரை, இயேசு மூலம்தான் மேசியாவின் இராஜ்யம் வரும் என்று தான் நம்பிக்கொண்டிருந்தவரை காட்டிக்கொடுத்து, ஒப்புக்கொடுப்பதற்குரிய இத்தகையத்துணிகரமும், இத்தகையத்துரோகமும், மிகவும் கேடான/அகோரமான துரோகமாகும்/நயவஞ்சகமாகும்; மற்ற அனைத்து அப்போஸ்தலர்கள் போன்று, யூதாசும், இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து வரவும், சத்தியத்திற்காகக் கொண்டிருக்கும் நேர்மையினிமித்தம் இயேசுவுக்கு வரும் பாடுகள், சோதனைகள் மற்றும் ஜனங்களால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுதல் ஆகியவைகளில் பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மேலும், யூதாஸ் உண்மையாய் இருக்கும் பட்சத்தில், உலகை ஆசீர்வதிப்பதற்கான பரலோக இராஜ்யத்தில், ஆண்டவரோடு பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மற்றவர்களோடு, யூதாசும் இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்துள்ளார்; பிசாசுகளை துரத்தியுள்ளார், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தினார். மேலும், இவை யாவற்றையும் அவர் இயேசுவின் நாமத்தின் மூலம் செயல்படும் தேவனுடைய வல்லமையினாலேயே செய்தார். யூதாஸ் இரட்சகரின் கூடவே இருந்துள்ளார். மேலும், இயேசுவின் வாழ்க்கையினுடைய பரிசுத்தத்தையும், இயேசு எப்படித் தேவனுக்கு உண்மையாக இருந்தார் என்பதையும், யூதாஸ் அறிந்திருந்தார். ஆகவே இந்த அனைத்து விஷயங்களும் யூதாசினுடைய தவறையும், தவறுக்கான அவருடைய பொறுப்பையும் காட்டுகின்றது.

யூதாஸ் தற்கொலை செய்துகொண்ட விஷயமும், இயேசுவின் வார்த்தைகளுடைய நிறைவேறுதலைக் காட்டுகின்றது; அதாவது தான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று யூதாஸ்

எண்ணினார். தற்கொலை செய்துகொள்ளும் ஒவ்வொருவரும், இதே வார்த்தைகளைத்தான் கூறியிருக்கின்றார்கள். எனினும், தற்கொலை செய்துள்ள மற்றவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அவர்கள் அறியாமையினாலேயே இப்படிச் செய்துகொண்டார்கள். மேலும், கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தும் உள்ளார். ஆகவே இப்போது (அறியாமையினாலே) தற்கொலை பண்ணினவர்கள், மற்றவர்களோடுகூட நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வதற்கான ஆசீர்வாதத்தையும், வாய்ப்பையும் நிச்சயமாகப் பெற்றுக்கொள்வார்கள்.

ஆனால் யூதாசின் விஷயத்திலோ, அவர் ஏற்கெனவே இந்த வாய்ப்புகள், சிலாக்கியங்கள் மற்றும் அறிவு பெற்றுக்கொண்டதினாலும், ஒளி மற்றும் அறிவிற்கு எதிராக பாவம் செய்துள்ளபடியாலும், இந்த அனைத்து ஆசீர்வாதங்களும், வாய்ப்புகளும் அவருக்குத் தள்ளுபடியாகிவிட்டது. யூதாஸ் தனக்கான இடத்திற்குப் போய்விட்டார் என்று வாசிக்கையில், அது யூதாஸ் (அ) வேறு எவரும் பாவத்திற்கான தண்டனையாக நித்திய காலமாய்ச் சித்திரவதை பண்ணப்படுவார்கள் என்று பொருள்படுவதில்லை. மாறாக அவருக்கான இடம் என்பது, மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; நம்பிக்கை ஏதுமற்ற மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; அதாவது உயிர்த்தெழுதலின் வாய்ப்பற்ற நிலையாகும். அவர் சாதாரணமான புத்தியில்லாத மிருக ஜீவன் போன்று செத்துப்போனார். இன்னுமாக, இத்தகைய சிலாக்கியங்களை அனுபவித்த ஒரு நபர், எதிர்க்காலத்தில் ஏதாகிலும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வாரா என்ற விவாதமும் பேசப்பட வேண்டியதில்லை (அப்போஸ்தலர் 1:25).

## இரண்டு பதிவுகளுக்கும் இடையிலான ஒற்றுமை

யூதாசின் முடிவு குறித்து வேதவாக்கியம், அவர் போய் நாண்டுகொண்டு செத்தார் என்று கூறுகின்றது (மத்தேயு 27:5). வேறு ஒரு வாக்கியம் இப்படியாக இருக்கின்றது, "அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று" (அப்போஸ்தலர் 1:18). இந்த இரண்டு பதிவுகளையும் இசைவுபடுத்துவது எளிது. இரண்டு பதிவுகளுமே உண்மை. தூக்குப்போடுவதற்கென்று, யூதாஸ் செங்குத்தான பாறையின் மேலுள்ள மரத்தின் கிளையைத் தெரிந்துக்கொண்டார். ஒருவேளை பாரபளுவினிமித்தம் கயிறு அறுந்துவிட்டதால், யூதாஸ் தலைக்கீழாக விழுந்து, வயிறுவெடித்து, குடல் சரிந்துபோய்ச் செத்திருப்பார் என்பதை நம்மால் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது.

எனினும், அவருடைய மரணம் குறித்த விஷயம் அவ்வளவு முக்கியத்துவம் காட்டப்பட வேண்டியதில்லை. அவருடைய ஆத்துமா மரித்துவிட்டது என்றும், இதன் விளைவாக அவருக்குத் தேவனிடத்திலும், கிறிஸ்துவிடத்திலும் இருந்த தொடர்பை அவர் இழந்துவிட்டார் என்றும், எதிர்க்கால வாழ்க்கைக் குறித்ததான சகல நம்பிக்கையும் இழந்துவிட்டார் என்றுமான விஷயங்களைக் கவனிப்பதே முக்கியமானதாகும். எனினும், கடைசி நேரமளவும் ஆண்டவர் அவரிடத்தில் பெருந்தன்மையுடன், அவருடைய ஒவ்வொரு அடிகள் முதற்கொண்டு, கடைசி கிரியைவரை யூதாஸ் நினைத்துப் பார்ப்பதற்கும், வருந்துவதற்கும் ஏதுவான ஒவ்வொரு வாய்ப்பையும் கொடுத்தவராகவே காணப்பட்டார்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் இயேசுவைக் காட்டிக்கொடுப்பார் என்று தேவன் ஆரம்பம்/ஆதி முதல் அறிந்தவராக இருந்தும், இரத்த பணத்தின் மூலம் நிலம் வாங்கப்படும் எனும் விஷயம் ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்பட்டிருந்தும், இவைகள் யூதாஸ் வீழ்ச்சியடைவதற்கு அவன்தான் காரணம் என்ற குற்றத்திற்கான பொறுப்பிலிருந்து, அவனை விடுவிப்பதில்லை. தேவனுடைய முன்னறிவு யூதாசைப் பாதிப்பிற்குள்ளாக்காமல், அவனுடைய சொந்த தவறான கிரியையே அவனைப் பாதிப்பிற்குள்ளாக்கிற்று. இப்படியே, அனைவருக்கும் காணப்படுகின்றது. ஆரம்பம் முதல் யார் யார் ஓட்டத்தில் நின்றுவிடுவார்கள் என்று தேவன் அறிந்திருப்பது, நம்மைப் பாதிப்பதில்லை. காரணம், நாம் மீறும்போதும், பேராசைகொள்ளும் போதும், பாவத்திற்கு நம்மை நாமே ஒப்புக்கொடுக்கும் போதும், நாம் என்ன செய்வோம் என்று மாத்திரமே தேவன் அறிந்திருக்கிறாரே ஒழிய, இப்படித் தேவன் அறிந்திருக்கிற காரியத்தினால் நமக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

இயேசு, தம்மை யார் காட்டிக்கொடுப்பார் என்று முன்னதாகவே அறிந்திருந்தார் என்ற சாட்சியானது, இவ்விஷயத்தை அவர் யூதாசைத் தெரிந்தெடுத்தப்போதே அறிந்திருந்தார் என்று அர்த்தமாகாது. தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று

வேதவாக்கியங்களில் குறிப்பிட்டிருந்ததை அவர் அறிந்திருந்தார். மேலும், யூதாசிடம் ஆரம்பம் முதலே பாவம் மற்றும் பேராசையின் திசையில் விலகிப்போகும் மனப்பான்மை தென்பட்டதினால், யூதாசுதான் நம்பிக்கை துரோகத்திற்கு ஏதுவான கிரியை செய்யக்கூடிய நபராக இருப்பார் என்று இயேசு அறிந்துக்கொண்டார் என்றபோதிலும், வார்த்தை மூலமாகக்கூட இயேசு யூதாசைத் தவறு செய்தலுக்கு நேராக நடத்தாமல், மாறாக, அவரை எச்சரிக்கவே செய்தார்.

*****

# இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள்

## மத்தேயு 26:57-68

***"அடிக்கப்படும்படி கொண்டுப்போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." ஏசாயா 53:7***

நாகரிகமுடையவனோ அல்லது அஞ்ஞானியோ, எப்படியாக இருப்பினும், பகுத்தறிவுள்ள ஒவ்வொருவரிடத்திலும், நியாயம் எனும் மனதின் தன்மையானது இயல்பாகவே நியாயத்திற்காகப் பரிந்து பேசுகின்றதாய் இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு தேசமும், அதன் சட்ட புஸ்தகங்களில் நியாயமான சட்டங்களைப் பெற்றிருக்க நாடுகின்றது; மேலும் சீசர் மற்றும் லைகர்கஸ் (Lycurgus) போன்றவர்களுடைய சட்டங்களுடன்கூட, உலகத்தினுடைய அநேக சட்டங்களானது, அதிகப்படியான ஞானத்தையும், அதிகப்படியான நீதியையும்/நியாயத்தையும் வெளிப்படுத்தி உள்ளது என்பதை ஒத்துக்கொள்ளவே வேண்டும்.

ஆனால் மோசேயின் கரங்களில், தேவனாலே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட யூதருடைய நியாயப்பிரமாணமானது, உண்மையில் உயர் நிலை வகிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் கிறிஸ்தவ மார்க்கத்தினை ஏதேனும் அளவில் அடையாளங்கண்டுகொண்டதாகத் தெரிவிக்கின்றதான தேசங்கள் அனைத்தினுடைய சட்டங்களானது, உயர் நிலையில்/தளத்தில் நீதியின் கொள்கைகளை முன் வைத்திட நாடுகின்றது; எனினும் இந்தச் சட்டங்களுக்கு விளக்கம் கொடுக்க முற்படும் விஷயத்திலும், அவைகளைத் தனிப்பட்ட நபர்களிடத்தில் செயல்படுத்தும் விஷயத்திலும், சட்டங்களையும், நியாயமான கொள்கைகளையும் மீறுவதற்கு அவசியமான சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகிவிட்டன என்று சாக்குப்போக்குகள் சொல்வதும், நியாயத்தின் கொள்கைகளினின்றும், சட்டங்களினின்றும் விலகுவதுமாகிய செயல்கள் எங்கும் காணவேபடுகின்றது.

யூதருடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிராக, இயேசு அநீதியான விதத்தில், யூதருடைய நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டச் சம்பவமானது, நம்மை ஒன்றும் ஆச்சரியத்துக்குள்ளாக்குவதில்லை; இன்னுமாக அச்சம்பவமானது, மற்ற நீதிமன்றங்களில், பல்வேறு சம்பவங்களின்போது நடைப்பெற்ற காரியத்திலிருந்து வேறுபட்டதாகவும் நாம் எண்ணுவதில்லை.

### சட்ட விரோதமான முறையில் - கைது செய்தல்

பிலாத்துவினுடைய கட்டளையின் பேரிலோ அல்லது ஏரோதினுடைய கட்டளையின் பேரிலோ அல்லது இவர்களுடையப் போர் வீரர்களினாலோ இல்லாமல், வேறு நபர்களினால் இயேசு கைது செய்யப்பட்டார். யூத மார்க்கத்திற்கு நன்மை கொடுக்கிறதாய் இருக்குமெனத் தாங்கள் கொண்டிருந்த திட்டங்களுக்கு, இயேசுவும் அவரது ஊழியமும் தீங்கு விளைவிக்கின்றதாய் இருக்குமெனக் குறிப்பாய்த் தீர்மானம் செய்து காணப்பட்டிருந்த பிரதான ஆசாரியனும், அவரது கூட்டாளிகளுந்தான், இயேசுவைக் கைது செய்தார்கள். இயேசுவைக் கொலை செய்ய வேண்டுமென முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அனைத்துக் கொலைக்காரர்களும் செய்வதுபோன்று, இந்தக் கொலைக்காரர்களும், தங்களின் இந்தச் செய்கைக்கு ஏதேனும் விதத்தில் நியாயம் கற்பிக்க நாடினார்கள்; இன்னுமாக இவர்கள் அரசியல்வாதிகளாகக் காணப்பட்டப்படியால், தங்களைக் காட்டிலும் மென்மையான மனசாட்சிகளை உடையவர்களைக் கருத்தில் கொண்டவர்களாக, தங்கள் செய்கை நியாயமானதுபோன்று தோற்றமளிக்கத்தக்கதாக வகைத்தேடினார்கள்.

ஆசாரியர்களுடைய பொறுப்பின் கீழ், அநேக மனிதர்கள் ஆலயத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் காவற்காரராய்ப் பணிபுரிந்தனர். இவர்கள் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்களாய்க் காணப்பட்டனர்; இந்த வேலைக்காரர்களே பட்டயங்களுடனும், ஆயுதங்களுடனும், பந்தங்களுடனும், யூதாசுடன் பின்தொடர்ந்து வந்தார்கள்; அன்றிரவு, இயேசு வழக்கம்போல் பெத்தானியாவுக்குப் போக நோக்கம் கொள்ளாமல், மாறாக தம்முடைய சீஷர்களுடன்

கெத்செமனே ஒலிவ தோட்டத்தில் ஒன்றுகூடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளார் என்று யூதாஸ் முன்கூட்டியே அறிந்தவனாய் இருந்தான்.

பிரதான ஆசாரியனுக்குரிய ஸ்தானத்திலிருந்து ஓய்வுப் பெற்றிருந்த அன்னாவின் வீட்டிற்கு இயேசுவை நேரடியாய்க் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இவர் ஓய்வு பெற்ற ஸ்தானத்தில், இவரது மருமகனாகிய காய்பா பொறுப்பேற்றிருந்தார். அன்னா இயேசுவை விசாரணை செய்து தோல்வியடைந்தார்; பின்னர் தன்னுடைய வீட்டு முற்றத்திலேயே, தன்னுடைய வீட்டோடு சேர்ந்து காணப்பட்ட காய்பாவின் வீட்டில், காணப்பட்டக் காய்பாவினிடத்திற்கு இயேசுவை அனுப்பி வைத்தார். அங்கு அநேகமாகக் காலையில் மூன்று மணியளவுக்கு ஆலோசனை சங்கத்தினர் கூடினர்.

இயேசுவைக் கொன்று போடுவதற்கான திட்டம் நன்கு போடப்பட்டிருந்தது. இயேசுவையும், மற்ற அப்போஸ்தலரையும் விட்டு பஸ்கா போஜனத்தின்போது யூதாஸ் கடந்துபோனது முதல், இந்த விசாரணை நடைப்பெறுவது வரைக்குமுள்ள, இடையில் காணப்பட்ட நேரங்கள் முழுவதும், பட்டணம் எங்கும் காணப்பட்ட ஆலோசனை சங்கத்தாரை, அவர்களது இல்லங்களிலிருந்து கூட்டிச் சேர்ப்பதற்கெனச் செலவிடப்பட்டது. இயேசு ஜனங்களுக்குப் போதித்ததினாலும் மற்றும் ஜனங்களுக்கு அவரால் போதிக்கப்பட்டவைகளானது, பரிசேயர்கள் மற்றும் வேதப்பாரகர்கள் மற்றும் முன்னோர்களுடைய பாரம்பரியத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்தினதாலும், இயேசுவைக் கொன்றுபோடுவதற்கு நாடின இவர்கள், "ஒருவனும் ஒருக்காலும் பேசாததுபோன்று பேசினவரை" கொன்றுப்போடுவதற்கான இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் நியாயப்படுத்துவதற்காக, (இப்பொழுது சூழ்நிலைகள் அனைத்தும் ஏதோ கைமீறிப்போனதுபோன்று இவர்கள் கருதி) இந்த நடவடிக்கைகளை எடுத்ததாகக் காண்பித்துக் கொண்டார்கள். (யோவான் 7:46; மத்தேயு 26:55).

புரோகிதருக்குரிய/ஆசாரியனுக்குரிய அதிகாரம் தக்கவைக்கப்படுவதற்கு, அறியாமையும், மூடநம்பிக்கையும் அவசியம் என்பது தவறான மதப்போதனைகளுடைய கொள்கையாகும். ஆகவேதான் தப்பறையானது எப்போதும் சத்தியத்தைப் பகைக்கின்றதாய்க் காணப்படுகின்றது; ஆகவேதான் இருள் எப்போதும் வெளிச்சத்தைப் பகைக்கின்றதாய் இருக்கின்றது. இயேசு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட காரியமானது, வெளிச்சத்திற்கு மேலாக, இருள் வெற்றியடைந்து ஓங்கின மற்றுமொரு சம்பவமாக மாத்திரமே உள்ளது. எனினும் இது தோற்றத்தில் மாத்திரமே வெற்றியாகக் காணப்பட்டது; ஏனெனில் இவ்விதமாகவே தேவனுடைய திட்டமானது நடந்தேறியது. இவ்விதமாகவே பாவத்திற்கான மாபெரும் பாவநிவாரணம் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது; இதன் விளைவாக இறுதியில் பாவம், சாத்தான் மற்றும் மரணம் வீழ்த்தப்படும் மற்றும் நீதியும், சத்தியமும் உலகமெங்கும், நித்திய காலமாய் ஸ்தாபிக்கப்படும்.

## அநீதியான ஒரு விசாரணை

மிகுந்த செல்வாக்குமிக்க 70 யூதர்களை ஆலோசனை சங்கமானது கொண்டிருந்தது. மற்றும் இவர்களது வார்த்தைகளுக்கு, ஜீவன் (அ) மரணத்திற்கான அதிகாரத்தை அக்கால கட்டத்தில் கைகளில் பெற்றிருந்த உரோம தேசாதிபதியிடம் மிகுந்த செல்வாக்கு இருந்தது.

காய்பா பிரதான ஆசாரியனுக்குரிய பணியை மாத்திரம் செய்யாமல், இதனோடுகூட, இயேசுவின் விஷயத்தில், இயேசுவுக்கு எதிராக வழக்கை நடத்தும் வழக்கறிஞராகவுங்கூடச் செயல்பட்டார். ஆலோசனை சங்கத்தாரைக் கூட்டிச் சேர்க்கும்போது, சாட்சியாளர்களைத் திரட்டும் பணியையும் காய்பா மறவாதிருந்தான்; இந்தச் சாட்சிகள், சாட்சி சொல்லத்தக்கதாக இலஞ்சம் கொடுக்கப்பட்டார்கள் என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீய ஆவிகளின் பிடியிலிருந்து இயேசுவினால் விடுவிக்கப்பட்டவர்களில், இயேசுவினால் குருடான கண்கள் திறக்கப்பட்டவர்களில், இயேசுவினால் செவிடான காதுகள் திறக்கப்பட்டவர்களில், இயேசுவினால் மரண நித்திரையினின்று எழுப்பப்பட்டவர்களில் யாரையாகிலும் ஆலோசனை சங்கத்தின்முன் கொண்டுவருவதற்கான எந்தப் பிரயாசங்களும் எடுக்கப்படவில்லை. பிரதான ஆசாரியன், லாசருவின் சம்பவத்தைக்கூட அறிந்திருந்தார், ஆனால் அவர்கள் இப்படிப்பட்டச் சாட்சிகளை விரும்பவில்லை. அவர்கள் இயேசுவைக் கொலை செய்திட விருப்பமாய் இருந்தார்கள், அதுவும் நியாயமானது போன்றதொரு மூடலின் கீழ்ச் செய்ய விரும்பினார்கள்.

காய்பா சாட்சியாளர்களை அழைத்தார், ஆனால் சாட்சியாளர்களின் சாட்சிகள் இசைவற்றிருப்பதைக் கண்டார்; யூதருடைய நியாயப்பிரமாணத்தின்படி, எந்த ஒரு காரியத்தை நிரூபிப்பதற்கு, குறைந்த பட்சம் ஒன்றுபோல் இரண்டு சாட்சிகளாகிலும் இருக்க வேண்டும். இறுதியாக ஆலயம் குறித்து இயேசு ஏதோ கூறித் தாங்கள் கேட்டதாகத் தெரிவித்த இரண்டு சாட்சிகளுடைய சாட்சிகள் கொஞ்சம் ஒத்திருந்ததாய் இருந்தது; அதாவது இயேசு தம்மால் ஆலயத்தை இடித்துப்போட்டு, மூன்று நாட்களுக்குள் கட்டியெழுப்ப முடியும் என்று கூறி, தாங்கள் கேட்டதாகச் சாட்சியாளர்கள் தெரிவித்தனர். இவர்கள் அநேகமாய் இயேசுவின் வார்த்தைகளைத் தவறாய்ப் புரிந்துள்ளனர். எனினும் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்குவதற்கு, இவர்களது சாட்சிகள் பலமான விஷயங்களாகக் காணப்படவில்லை.

கடைசி முயற்சியாக, தேவதூஷணமெனக் குற்றம் சாட்டத்தக்கதாக, இயேசுவையே எதையாகிலும் பேச வைப்பதற்குக் காய்பா முயன்றார். கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு, இயேசு எதுவும் பதிலளிக்கவில்லை; ஆனால் இப்பொழுதோ காய்பா, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு, இயேசுவினால் அமைதியாய் இருந்து, பதிலளிக்காமல் இருக்க முடியாது. இக்கேள்விக்குப் பதிலளிக்காமல் இருப்பது என்பது, இந்த மாபெரும் சத்தியத்தை மறுதலிக்கிறதாகவும் இருக்கும் மற்றும் ஆலோசனை சங்கத்தாருக்குச் சரியான சாட்சியை அளிப்பதற்குத் தவறிப்போவதாகவும் இருக்கும். ஆகவே காய்பா சொன்னது சரிதான் என்று இயேசு ஒப்புக்கொண்டார்.

தேவதூஷணம் என்று கூறுவதற்கான வாய்ப்பு இது என்று பிடித்துக்கொள்வதற்கான ஆவலில், காய்பா தாவி, துள்ளி எழுந்தார்; ஆனால் இயேசு இன்னும் தொடர்ந்து, "மனுஷ குமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். இப்படி இயேசு கூறினதினிமித்தம் காய்பா மிகவும் அதிர்ச்சியடைந்தது போன்று நடித்து, ஆலோசனை சங்கத்தார் மத்தியில் தேவனுடைய பிரதிநிதியாகக் காணப்படும், தான் பயங்கரமான ஏதோ ஒன்றைக் கேட்டுள்ளதைப்போன்று ஆலோசனை சங்கத்தாருக்குக் காண்பிக்கத்தக்கதாகக் காய்பா தன்னுடைய ஆசாரிய வஸ்திரத்தைக் கிழித்து நாடகமாடினார். காய்பா ஆலோசனை சங்கத்தாரை நோக்கி, "இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது – உங்களது தீர்ப்பென்ன – என்று கேட்டார்;" அதற்கு அவர்கள், "மரணத்துக்குப் பாத்திரனாய் இருக்கிறான்" என்றார்கள்.

இந்தக் கருத்திற்கு/முடிவிற்கு இரண்டு பேர் மாத்திரம் விலகி நின்றார்கள் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; இவர்கள் இயேசுவுக்கு மாபெரும் மதிப்புக்கொடுப்பதற்குக் கற்றிருந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் ஆவார்கள். இவர்களால் என்னதான் செய்யமுடியும்? அதிகப்பட்சமாக, ஆலோசனை சங்கத்தாரின் இந்த நடவடிக்கை சட்ட விரோதமானது என்றும், இராத்திரி வேளையில் ஒருவரை மரணத் தண்டனைத் தீர்ப்பளிப்பதற்கென விசாரணை நடத்துவதை நியாயப்பிரமாணமானது தடைச்செய்கின்றது என்றும்தான் இவர்களால் கூற இயலும். விடியும்போது, சட்டப்பூர்வமாய் நடவடிக்கை எடுக்கத்தக்கதாக ஆலோசனை சங்கத்தார் காத்துக்கொண்டிருந்த வேளையில், இயேசு அடுத்திருந்த அறையில் காவல் வைக்கப்பட்டார். தேவதூஷணம் உரைத்தவராகவும், குற்றவாளியாகவும் பிரதான ஆசாரியனால் தீர்க்கப்பட்ட இயேசுவானவர், பிரதான ஆசாரியன் செய்வதெல்லாம் சரியென அறியாமையில் எண்ணிக்கொண்டிருந்த பிரதான ஆசாரியனுடைய வீட்டில் காணப்பட்ட வேலைக்காரர்களுடைய பல்வேறு அவமதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டார்.

## தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒப்புக்கொடுத்தார்

"நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்துநிற்கவில்லை" (யாக்கோபு 5:6) என்ற வசனத்தின் வார்த்தைகளும் மற்றும் நம்முடைய இப்பாடத்தின் ஆதார வசனத்தின் வார்த்தைகளும் முழு இசைவுடன் காணப்படுகின்றது மற்றும் இரண்டுமே, இவ்விசாரணையின்போது காணப்பட்ட இயேசுவுக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இயேசு தம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்ள முற்படவில்லை என்ற விதத்தில், அவர் தம்முடைய வாயைத் திறவாதவராய்க் காணப்பட்டார். பிதாவின் சித்தமல்லாத எதுவும் தமக்கு

நிகழ்வதில்லை என்பதை இயேசு உணர்ந்தவராக, காரியங்களை அவர் தடைப்பண்ணிட முற்படாமல், காரியங்கள் அவைகளின் போக்கிலேயே நடைபெறத்தக்கதாக மகிழ்ச்சியுடன் அனுமதித்தார்.

தம்மைத் தற்காத்துக்கொள்ளத்தக்கதாக, "எந்த மனிதனும் பேசாததுபோல்" பேசின அவரது அறிவுள்ள மனமும், அவரது நாவும் வாதங்களை முன்வைத்ததானால், காய்பாவும், முழு ஆலோசனை சங்கத்தாரும் நடுங்கிப்போயிருப்பார்கள் என்பதிலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கத் துணிந்திருக்கமாட்டார்கள் என்பதிலும் சந்தேகமில்லை! சத்தியம் முன் வைக்கப்படுவதற்கு, என்ன பேசப்படுவது அவசியமாய் இருந்ததோ, அதை மாத்திரமே இயேசு பேசினார்; மேலும் அவர் பேசின சத்தியத்தையே, அவரது சத்துருக்கள் தவறான விதத்தில், தேவதூஷணம் என்று கூறினார்கள்.

இயேசுவின் பின்னடியார்கள் உலகத்திடமிருந்து முழு நீதியையும், எப்போதும் சரியாய்ப் புரிந்துகொள்ளப்படுவதையும் எதிர்பார்க்கக்கூடாது என்று வேதவாக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களது எஜமானைப்போன்றே, தங்களுக்கான அனுபவங்களின் பாத்திரமும்கூட, பரம ஞானத்தினால் மேற்பார்வையிடப்படுகின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்; இன்னுமாக தெய்வீக ஏற்பாடுகளுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருந்தால், தங்களுக்கான அனுபவங்கள் அனைத்தும் மேலான நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறுவதைத் தங்களால் காணமுடியும் என்பதையும் இவர்கள் நினைவில்கொள்ள வேண்டும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

*****

# பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார்

## மாற்கு 14:27-31, 53, 54, 66-72

*"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." 1 கொரிந்தியர் 10:12*

பரிசுத்தவானாகிய பேதுரு மனபலமுடைய, மிகவும் தைரியமுடைய மனுஷனாவார், அதே நேரம் சிந்திக்காமல் செயல்படுகிறவராகவும் காணப்பட்டார். "படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும்" ஜனங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட்ட இரண்டு சீஷர்களில், பேதுருவும் ஒருவர் ஆவார் (அப்போஸ்தலர் 4:13). சில விஷயங்களில் யூதாசைக் காட்டிலும், பேதுருவுக்குச் சாதகமற்ற, அனுகூலமற்ற சூழ்நிலைக் காணப்பட்டது. எனினும் இருவரும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் சரிசமமான வாய்ப்புகளைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்; எனினும் இந்த இரண்டு மனிதர்களுடைய முடிவும் எத்துணை வித்தியாசத்துடன் காணப்பட்டது. ஒருவர் இழிவான இரண்டாம் மரணத்திற்குள் கடந்துச் சென்றார். மற்றொருவரோ சோதனையிலும், பயிற்சியிலும் மேலும், கீழும் ஏறி இறங்கினவராகக் கடந்துச்சென்ற பிற்பாடு, தனது ஆண்டவரோடுகூட மகிமை, கனம் மற்றும் அழியாமை எனும் பலன்களில் பங்கடைந்தார் மற்றும் அப்போஸ்தலர்கள் மத்தியிலும் உயர்வானவராய்க் கருதப்பட்டார்.

நமது கர்த்தருடைய மரணத்தின் காலக்கட்டத்தில் பரிசுத்தவானாகிய பேதுருவுக்கு வந்திட்டதான விசேஷமான "புடைத்தல்களைக்" குறித்தே நம்முடைய இன்றைய பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம்; இது குறித்துப் பேதுரு, இயேசுவினால் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டார் மற்றும் அவரிடம் இயேசு: "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்"என்றார் (லூக்கா 22:31, 32). அநேக பல தருணங்களில் வெளிப்பட்டதான பரிசுத்தவானாகிய பேதுருவின் தைரியமானது, உண்மையில் அவரது பெலவீனமாகவே இருந்தது. பேதுருவுக்கு வரவிருக்கின்றதான புடைக்கிற அனுபவங்கள் குறித்தெல்லாம் அவரை இயேசு முன்கூட்டியே எச்சரித்தப் பிற்பாடுங்கூட, பரிசுத்தவானாகிய பேதுரு எவ்விதமான அச்சமும், திகிலும் கொண்டிராதவராகவே காணப்பட்டார். ஆகையால் அவர் விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்க வேண்டியிருக்க, அவர் விழிப்புடனும், ஜெபத்துடனும் காணப்படாதவராகவே காணப்பட்டார்; சுயத்தின் மீதான நம்பிக்கையானது, அவரை இப்படியாகக் கொஞ்சங்காலம் காணப்பட வழிநடத்தினது.

இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், இவர் அடுத்தநாள் காலையில், சேவல் கூவுகிறதற்கு முன்பாக நமது கர்த்தரை மறுதலிப்பார் என்று கூறப்பட்டபோது, இது நிச்சயமாய்த் தவறு, காரணம் தன்னுடைய ஆண்டவருக்காக தான் மரிப்பதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றாரெனக் கூறினார். இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், தனது பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய காதை வெட்டிப் போட்டார் மற்றும் இந்த வேலைக்காரன் பிற்பாடு இயேசுவினால் சொஸ்தமாக்கப்பட்டான். உணர்ச்சிவசப்படுகின்றதான இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், இயேசுவினுடைய மேசியாத்துவத்தை முதலாவதாக ஒப்புக்கொண்டவராக/தெரிவித்தவராக இருந்தார்.

தம்மைக்குறித்து ஜனங்கள் என்ன கூறுகின்றார்கள், அதாவது தாம் யார் என்று சொல்லுகிறார்களென இயேசு கேட்டார். பின்னர் "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். அப்போது பரிசுத்தவானாகிய பேதுரு பிரதியுத்தரமாக: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றார். இந்த ஒரு பதிலானது, பரிசுத்தவானாகிய பேதுரு தேவனுடன் ஓர் ஆசீர்வாதமான உறவின் நிலையில் காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது இல்லையேல், இப்பதிலைக் கொடுப்பதற்கான அறிவு அவருக்கு இருந்திருக்காது என்று இயேசு கூறினார். இயேசு அவரை நோக்கி: "மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் (மத்தேயு 16:17).

சிறந்த பண்புகளுள்ள இதே பாத்திரம், தனது ஆண்டவரை மறுதலிக்கும் அளவுக்கு அதுவும் சாபங்களுடன் மறுதலிக்கும் அளவுக்கு, பயத்தினால் மிகவும் திணறிப்போவார் என்று யாராவது எண்ணியிருந்திருப்பார்களா!

புதிய ஏற்பாட்டினுடைய எழுத்தாளர்கள், உண்மையை எவ்விதமான மாற்றங்கள் செய்யாமலும் அல்லது உண்மையை மறைக்காமலும் பதிவு செய்துள்ளதிலிருந்து, அவர்கள் பெரும்பான்மையான எழுத்தாளர்களிடமிருந்து நிச்சயமாய் மிகவும் வேறுபட்டவர்களாய்க் காணப்படுகின்றனர் என்ற கருத்தானது நம்முடைய மனங்களில் உடனடியாகவும், அழுத்தத்துடனும் பதிகின்ற ஒரு காரியமாய் இருக்கின்றது. இப்படியான விதத்தில், வேதாகமத்தைத் தவிர, வேறு எந்தப் புத்தகமும் நிச்சயமாய்க் காணப்படுவதில்லை. உலகப்பிரகாரமான மகா மத அமைப்புகளையும், பல்வேறு பிரிவினராகிய அமைப்புகளையும் ஸ்தாபித்தவர்கள், மிகவும் வேறுபட்ட ஆவியையே வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களது தலைவர்கள் அனைவரும் சிறந்தவர்களாகவும், தலைச் சிறந்தவர்களாகவும், கல்வியறிவுள்ளவர்களாகவும், வீரர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் — நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், தனது ஆண்டவரைப் பரிசுத்தவானாகிய பேதுரு மறுதலித்ததின் மூலம் வெளிப்படுத்தின பெலவீனங்கள் — போன்றதான பெலவீனங்கள் — தங்களின் தலைவர்களில் காணப்பட்டதென அனைவருக்கும் சுட்டிக்காட்ட வேண்டுமென நினைத்துக்கூடப்பார்க்கமாட்டார்கள்.

இது வேதாகமத்தின் மீதும், அதன் உண்மையின் மீதும், அதன் வாய்மையின் மீதும் நமக்கு நிச்சயமாய் மிகுந்த நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக தங்களது தவறுகளைக் குறித்து வெளிப்படையாய்க் கூறுகின்றவர்களும், தாங்கள் படிப்பறியாதவர்கள் என்று கூறுகின்றவர்களுமான மனிதர்கள், மகா தைரியமும், மகா உண்மையும், சத்தியத்திற்காக மகா அன்பும் கொண்ட மனிதர்களாக இருக்க வேண்டுமென்ற உண்மையில் நாம் நம்பிக்கைக்கொள்ளலாம். நிச்சயமாய் இவர்களது சாட்சியமானது, ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானதேயாகும்.

## பரிசுத்தவானாகிய பேதுருவின் சோதனை எதிர்பாராமல் வந்தது

சோதனைகளானது இரகசியமான விதத்தில் வருகின்றதாய் இருக்கின்றது. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதைப் பரிசுத்தவானாகிய பேதுரு வெட்டினபோது, அவர் நமது கர்த்தரை மறுதலிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்திருப்பார் என்று நாம் எண்ணவே முடியாது. ஆனால் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் மாறினது. ஆண்டவர் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். முந்தைய தருணங்களிளெல்லாம், அதாவது "அவரது வேளை இன்னும் வராத" காலக்கட்டங்களில், அவர் தமது சத்துருக்கள் மத்தியில் சஞ்சரிக்கத்தக்கதாக, அவரால் செயல்படுத்தப்பட்ட அந்த வல்லமையை, அவர் இப்பொழுது செயல்படுத்தவில்லை, காரணம் "அவரது வேளை வந்துள்ளது." பரலோகத்தினுடைய நண்பர்கள்/ஆதரவு இல்லாமல், தனது ஆண்டவர், அவரது சத்துருக்கள் வசத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதையும், ஒரு நீதிமன்றத்திலிருந்து, இன்னொரு நீதிமன்றத்திற்கு இப்படியாக அழைத்துக்கொண்டுப் போகப்படுவதையும் பார்த்த பரிசுத்தவானாகிய பேதுரு உறைந்து போனார்.

அரண்மனையிலிருந்த யாரோ ஒருவரோடு பரிசுத்த.யோவானுக்குப் பழக்கம் இருந்ததினால், அவர் உள்ளே பிரவேசிப்பதற்கும், தன்னோடுகூடப் பரிசுத்தவானாகிய பேதுருவை உள்ளே கொண்டுவருவதற்கும் அனுமதிக்கப்பட்டார்; ஆனால் இவர்கள் இருவரும் சேர்ந்து அங்குக் காணப்படவில்லை. பரிசுத்தவானாகிய பேதுரு முற்றத்தில் காணப்பட்டார். குளிராய் இருந்தபடியினால், அவர் குளிர்க் காய்ந்துக்கொள்ளத்தக்கதாக, அங்கிருந்த கனல் தட்டை அணுகினார். அரண்மனையின் வேலைக்காரர்கள் பேசிக்கொண்டு காணப்பட்டதான முற்றத்தினுடைய வெளிச்சத்தில், அவர் வேலைக்காரிகளில் ஒருவளால் மிகவும் கூர்ந்து கவனிக்கப்பட்டார் மற்றும் அவள்: "நீயும் அந்த நசரேயனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்றாள்.

தான் அடையாளங்கண்டுகொள்ளப்பட்டதைக் குறித்துத் திகைப்படைந்தவராகவும், இதனால் தனக்கு என்ன நடக்குமோ என்று யோசித்தவராகவும், பரிசுத்தவானாகிய பேதுரு உடனடியாக, தனக்கு இயேசுவை யார் என்று தெரியாதென மறுத்துவிட்டார். பின்னர் ஜனங்கள் குறைவாகவும், இருளும் நிழலும் அதிகமாகவும் காணப்பட்டதான முற்றத்திலுள்ள மற்றொரு பகுதிக்குச் சென்றுவிட்டார். ஆனால் அவர் மீண்டுமாக கலிலேயன் என்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு,

அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். மீண்டுமாக அவர் மறுதலித்தார். மூன்றாம் முறையாக அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்றும், ஒரு கலிலேயன் என்றும், அவருடைய பேச்சுபாணியே, அவரைக் காட்டிக் கொடுக்கின்றது என்றும் அதே குற்றச்சாட்டுகள், அவர்மேல் சுமத்தப்பட்டன. மீண்டும் தனது ஆண்டவரைத் தனக்குத் தெரியாது என்று மறுதலித்து, சபித்தார்.

பயங்கரமாயுள்ளது என்றே நாம் இதைக் குறிப்பிட வேண்டும். நிச்சயமாக பரிசுத்தவானாகிய பேதுருவும்கூட, இது பயங்கரமாயிருந்ததாகத்தான் பிற்பாடு எண்ணியிருந்திருப்பார்; ஏனெனில் அவ்வேளையில், அதிகாலையில், சேவல் கூவவே, சாத்தான் பேதுருவைக் கோதுமையைப் புடைக்கின்றதுபோல் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான் என்றும், சேவல் கூவுவதற்கு முன்னதாக, பேதுரு தனது ஆண்டவரை மூன்று முறை மறுதலித்திருந்திருப்பார் என்றுமுள்ள ஆண்டவருடைய வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தார். இவை அனைத்தும் அவரை நொறுக்கினது; அவர் தனது போர்வையினால், தனது தலையைப் போர்த்திக்கொண்டு, மனங்கசந்து அழுதவராக வெளியேறி, இருளில் நடந்துச் சென்றார்; ஏனெனில் சேவல் கூவினபோது, இயேசு பேதுருவிடமிருந்து சற்றுத் தொலைவில் நடத்திச் செல்லப்பட்டுக்கொண்டிருக்க, பேதுரு இயேசுவை ஏறெடுத்துப்பார்த்த போது, ஆண்டவர் தமது கண்களை ஏறெடுத்து, பரிசுத்தவானாகிய பேதுருவைப்பார்த்தார். அது கோபத்துடன்கூடிய ஒரு பார்வையாக இருக்கவில்லை; அது அனுதாபமிக்கப் பார்வையாக இருந்தது; ஆனால் அப்பார்வை பேதுருவின் இருதயத்தைப் போய்த் தொட்டது.

பரிசுத்த பேதுருவின் குற்றம் என்பது, எவ்விதத்திலும் யூதாஸ் செய்த குற்றத்தைப் போன்றதாகக் காணப்படவில்லை; பேதுரு தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மாத்திரம் நாடினவராக இருந்தார். அவர் ஆண்டவருக்குப் பாதகம் பண்ணவோ (அ) பாதகம் பண்ணிப் பார்க்கவோ நாடவில்லை. பரிசுத்த பேதுருவினுடைய முழுமையான மனந்திரும்புதலுக்கு, அவர் பிற்பாடு, மரணம் வரையிலும் உண்மையாய் இருந்த காரியம் பலமான சாட்சியமாய் அமைகின்றது. பரிசுத்த பேதுரு சிலுவையில் அறையப்படும் தண்டனைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார் என்றும், தனது ஆண்டவரை தான் ஒருகாலத்தில் மறுதலித்ததை நினைவுகூர்ந்தவராக, தனது கர்த்தர் அடைந்த அதே மரணத்தைப் போன்றதான ஒரு மரணத்தை தான் அடைவது என்பது, தனக்கு மிகவும் பெரிய கனத்தைச் சாற்றுவதாக இருந்துவிடுமெனப் பேதுரு எண்ணினார் என்றும், அவரது வேண்டுகோளின் பேரிலேயே, அவர் தலைக்கீழாகச் சிலுவையில் அறையப்பட்டார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

## அனைத்துக் கிறிஸ்தவர்களுக்குமான பாடம்

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்" என்பதான நமது ஆதார வசனமானது, பரிசுத்த பேதுருவின் அனுபவங்களிலிருந்துள்ள பாடத்தினை அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் புகட்டுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொந்த கணிப்பில், நாம் பெலவீனர்கள் என்று இருக்கும்போதும், முழு விசுவாசத்துடன் நாம் கர்த்தருடைய கரத்தை இறுக்கிப் பற்றிக்கொண்டிருக்கும் போதும்தான் நாம், தேவன் தமது நித்திய குமாரன் வாயிலாக அளிக்கும் வல்லமையில், உண்மையில் பலவான்களாயிருப்போம். தேவனுடைய ஜனங்களுக்கான அனுபவங்களானது, எவ்வளவு வித்தியாசமானவைகளாகக் காணப்பட்டாலும், முதலாம் உயிர்த்தெழுதலுக்கு முன்னேறிக் கொண்டிருப்பவர்கள், கடுமையான புடைக்கப்படுதல்களைச் சகித்து நிலை நிற்பதற்கும், கர்த்தருக்கான, சத்தியத்திற்கான, சகோதரா சகோதரிகளுக்கான தங்களது அன்பையும், தங்களது உண்மையையும்/நேர்மையையும் நிரூபிப்பதற்கும் எதிர்ப்பார்க்கப் படுவார்கள் என்பது மற்றொரு பாடமாகும்.

கர்த்தர் நம்மீது அக்கறையற்றவராக இருப்பதின் காரணமாக இராமல், மாறாகப் புடைத்தெடுத்தல்களிலும், சோதனைகளிலும் மற்றும் பரீட்சைகளிலும் நிலைநிற்க முடிகின்றவர்களே, இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருப்பார்கள் என்பதினாலேயே புடைத்தெடுத்தல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடாமல் இருப்போமாக.

*****

# இயேசு, பிலாத்துவினால் விசாரணைப்பண்ணப்பட்டார்

## மத்தேயு 27:11-26

***"பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்." 22-ஆம் வசனம்.***

சீசருடைய அரசாங்கத்திற்கான பிரதிநிதியாகவும், யூதேயாவிற்கான உரோம தேசாதிபதியாகவும் பிலாத்துக் காணப்பட்டார். இயேசுவினுடைய மரணத்தின் விஷயத்தில், நாம் இவரைக் கடுமையாய்க் குற்றஞ்சாட்டிட விரும்பவில்லை. இவர் என்ன செய்ய வேண்டுமோ, அதையே செய்தவராய்க் காணப்பட்டார். யூதர்களுடைய கோட்பாடுகளை (அ) மதம் சார்ந்த வாக்குவாதங்களைக் குறித்துத் தெளிவுபடுத்துவதற்காக பிலாத்து யூதேயாவில் காணப்படாமல், மாறாக யூதேயாவின் ஜனங்களை அமைதியானவர்களாகவும், ஒழுங்குடையவர்களாகவும், உரோம அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டுக் காணப்படுபவர்களாகவும் வைத்துக்கொள்வதற்கே இவர் யூதேயாவில் காணப்பட்டார். நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டுமெனில், இவர் நீதியாய் ஆளுகை செய்ய வேண்டும் என்பது செயல்முறைக்கொள்கையாகக் காணப்பட்டது; எனினும் உரோம அரசாங்கத்தின் நன்மைக்கு வேண்டி நீதி, தியாகம் பண்ணப்பட வேண்டியும் இருந்தது. இயேசுவைக்குறித்துப் பிலாத்து ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கின்றார் என்றும், நேரம் நியமித்து, இயேசுவை அவர் சந்தித்தும் இருக்கின்றார் மற்றும் இயேசுவினுடைய போதனைகள் தொடர்பாகக் கேள்விகள் கேட்டும் இருக்கின்றார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

ஜனங்கள் விழிப்படைவதற்கு முன்னதாகவும், இயேசு கைது செய்யப்பட்டது தொடர்பாக, அவரது நண்பர்களும், ஜனங்களும் ஒத்துழைத்து ஏதேனும் செய்வதற்கு முன்னதாகவும், இயேசு ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் எந்தளவுக்கு விரைவாகக் காலையில் கொண்டுவரப்பட முடியுமோ, அவ்வளவுக்கு முன்னதாகக் கொண்டுவரப்பட்டார். எவ்வளவுக்கு வேகமாய் முடியுமோ, அவ்வளவு வேகமாய்ப் பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை சங்கத்தினுடைய பிரதிநிதிகளும் இயேசுவை உரோம நாட்டு தேசாதிபதியின் இருப்பிடத்திற்கு அழைத்துச்சென்று, இயேசுவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படிக்குப் பிலாத்துவினிடத்தில் வேண்டிக்கொண்டார்கள். இயேசுவுக்கு எதிரான அவர்களது குற்றச்சாட்டு என்ன என்று பிலாத்துக் கேட்டார். இயேசு ஒரு பொல்லாத மனுஷன் என்றும், தண்டனைப் பெறுவதற்குப் பாத்திரவான் என்றும், அப்படியாக அவர் இல்லையென்றால் தாங்கள் அனைவரும் அவரைக் குற்றஞ்சாட்டிக்கொண்டு, அங்கு வந்து நிற்கமாட்டார்கள் என்றும் தந்திரமாகப் பதிலளித்தார்கள்.

உரோம கையாளுதலின் கீழ், யூதர்கள் தங்கள் மதம் சார்ந்த அனைத்து வாதங்கள் தொடர்புடைய விஷயங்களைக் கையாளுவதற்கு மிகுந்த சுதந்திரம் பெற்றிருக்கின்றார்கள் என்றும், யூதமார்க்கத்திற்கு தான் காப்பாளன் அல்ல என்றும், ஆகையால் அவர்களே தங்களது (மதம் சார்ந்த) வழக்குகளைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் பிலாத்து அவர்களுக்கு நினைப் பூட்டினார். இதைத் தாங்களும் அறிவார்கள் என்றும், ஆனால் மரணத்தண்டனை விதிப்பதற்கான அதிகாரம் எதுவும் தங்களுக்கு இல்லை என்றும் ஆசாரியர்கள் பதிலளித்தார்கள். இப்படியாகக் குற்றமற்ற நபர் ஒருவர் மீது பிலாத்து மரணத்தண்டனையைச் சுமத்தத்தக்கதாக, அவர்கள் வேண்டுமென்றே திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றனர் என்பதான அவர்களது பொல்லாப்பினுடைய ஆழத்தை வெளிப்படுத்தினவர்களானார்கள். பின்னர் இயேசு ஜனங்களின் மனதைத் தவறான திசையில் திருப்பினார்; அதாவது உரோம அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்தும், உண்மையாய் இருப்பதிலிருந்தும் ஜனங்களுடைய மனதைத் திருப்பினார் என்றும், இராயனுக்கு ஜனங்கள் வரி செலுத்தக்கூடாது என்று ஜனங்களிடத்தில் இயேசு கூறினார் என்றும், இயேசு தம்மை யூதருடைய இராஜாவாகிய மேசியா என்று உரிமைப்பாராட்டிக்கொள்கின்றார் என்றும் இயேசுவைக் குற்றம் சாட்ட ஆரம்பித்தார்கள்.

இக்குற்றச்சாட்டுகளானது, உரோம தேசாதிபதி கவனத்தில் எடுத்துக்கொள்ளுவதற்கான கட்டாயத்திற்குள்ளாக்கும் கடுமையான குற்றச்சாட்டுகளாகும்; மேலும் இவைகள், ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் நடைப்பெற்றதான விசாரணையின்போது, இயேசுவுக்கு எதிராகக் கூறப்பட்டதான குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது என்று நாம்

கவனிக்கின்றோம். குற்றச்சாட்டுகள் போலியானதாக இருந்தபோதிலும், இயேசு தம்மைக் காத்துக் கொள்வதற்கென எதையும் கூறவில்லை. தாம் மரிப்பதற்கான வேளை வந்துள்ளதென இயேசு அறிந்திருந்தார். தமக்கான தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகமாய்க் காணப்படுவதாக அவரால், அறிந்துகொள்ளப்பட்டக் காரியங்களை அவர் புறம்பே தள்ளிவிட விரும்பவில்லை/முற்படவில்லை.

## இயேசு பிலாத்துவின் முன்னிலையில்

தோற்றத்தில் மிகவும் கனிவானவராகத் தோன்றும் இயேசுவானவர், உரோம சாம்ராஜ்யத்திற்குப் பாதகமாய் அமையும் புரட்சியினை எழுப்புவதற்கு வாய்ப்பில்லையெனப் பிலாத்துச் சிந்தித்தவராகவே, இயேசுவை ஏறெடுத்துப்பார்த்தார். பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் பொறாமையினாலேயே குற்றஞ்சாட்டினார்கள் என்று பிலாத்து உணர்ந்து கொண்டதாக, மற்றொரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த மதத் தலைவர்களுடைய போதனைகளைக் காட்டிலும், இயேசுவினுடைய போதனைகளானது ஜனங்களுடைய மனதை அதிகம் கவர்ந்துள்ளது எனவும், இயேசுவின் மரணத்திற்குப் பொறுப்பாளியாகுவதிலிருந்து தங்களைத் தவிர்த்துக்கொள்ள நாடினவர்களுக்காக, பிலாத்துவாகிய தான் கீழ்த்தரமானதும், அநீதியானதுமான காரியத்தைச் செய்து கொடுக்கும்படிக்கு தான் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றார் எனவும் பிலாத்துக் கொஞ்சம் உணர்ந்துகொண்டார்.

எனினும் பிலாத்து, நசரேயனுக்காக அனுதாபம் கொள்பவர்போன்று தெரியப்படக்கூடாது. இராயனைப் பற்றியல்லாமல், வேறொரு இராஜா குறித்து முன்வைக்கப்பட்டதான குற்றச்சாட்டுகளைக் குறித்துப் பிலாத்து அக்கறையற்றவராகக் கையாளுவது போன்றும் தெரியப்படக்கூடாது. ஆகையால் அவர் இயேசுவை நோக்கி: "உமக்கு எதிராய்ச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை நீர் கேட்கவில்லையா? ஏன் நீர் உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை மற்றும் குற்றஞ்செய்துவிட்டேன் (அ) குற்றஞ்செய்யவில்லை என்று கூறி மன்றாடவில்லை?" என்றார். இயேசு எதுவும் பேசவில்லை.

பஸ்காவினுடைய துவக்க நாளாக இருந்தபடியினால், உரோம தேசாதிபதியின் இருப்பிடத்திற்குப் பிரவேசிப்பதிலிருந்து தவிர்த்துக்கொண்ட பரிசேயர்களினிடத்திற்கும், வேதபாரகர்களினிடத்திற்கும் பிலாத்து வெளியே வந்தார். பிரதான ஆசாரியர்களுடன் கலந்து ஆலோசித்துவிட்டு, அவர்கள் பேசினவைகளைக்கேட்டு வந்தவராக பிலாத்து, "நீர் யூதருடைய இராஜாவா? நீர் அதை ஒப்புக்கொள்கின்றீரா?" என்று கேள்வி கேட்டார். இயேசுவோ பிரதியுத்தரமாக, "என்னைக் கண்டதினாலும் மற்றும் என்னுடைய போதனைகள் குறித்து அறிந்திருந்ததினாலும் கேள்வி கேட்கின்றீரா அல்லது என்னுடைய சத்துருக்கள் உறுதியாய் முன்வைத்தவைகளின் அடிப்படையில் மாத்திரம் உம்முடைய கேள்வி காணப்படுகின்றதா?" என்று கேள்வி கேட்டார். இயேசுவினுடைய சொந்த தேசத்தினுடைய பிரதான மனிதர்களே அவரை ஒப்புக்கொடுத்துள்ளார்கள் என்றும், இத்தகைய எதிர்ப்பை அடையத்தக்கதாக அவர் செய்துள்ளது என்னவென்று, தான் இப்பொழுது அறிய விரும்புகின்றார் என்றும் பிலாத்துக் கேட்டார்.

தமது இராஜ்யமானது இவ்வுலகத்திற்குரியதல்ல, அதாவது இந்தத் தற்கால யுகத்திற்குரியதாகவும் (அ) தற்கால ஒழுங்கிற்குரியதாகவும் இல்லை என்று இயேசு பதிலளித்தார். ஆகையால் தாம், சீசருடைய இராஜ்யத்துடன் மோதலில் இல்லை/சண்டையிலில்லை என்ற விதத்தில் இயேசு பதிலளித்தார். இயேசுவும் சரி, அவரது நண்பர்களும் சரி, அரசியல் ஆட்சியை எதிர்த்துக் கலகம் எதுவும் செய்யவில்லை எனும் உண்மை பற்றிப் பிலாத்துக் கணிப்பதற்கு ஏதுவாயிற்று; ஏனெனில் ஒருவேளை இயேசுவினுடைய இராஜ்யமானது ஒரு பூமிக்குரிய ஆட்சியாக இருந்திருக்குமாயின், நிலவும் ஆட்சிக்கு எதிராக அவரும், அவரது நண்பர்களும் கலகமே செய்திருப்பார்கள். தமது இராஜ்யமானது, எதிர்க்காலத்திற்குரியது என்று இயேசு கூறினார். "அப்படியானால், நீர் உம்மை இராஜா என்றும், எப்போதோ மற்றும் எங்கோ நீர் ஆளுகை செயல்படுத்துவீர் என்றும் கூறுகின்றீரா?" என்று பிலாத்துக் கேட்டார். இயேசுவோ, தாம் ஓர் இராஜா என்றும், இதற்காகவே தாம் பிறந்திருக்கின்றார் என்றும், இதற்காகவே தாம் உலகத்திற்கு வந்தார் என்றும் பதிலளித்தார். தாம் சத்தியத்திற்குச் சாட்சிபகர வேண்டுமென்றும், சத்தியவான்கள் அனைவரும், மற்றும் இப்படியானவர்கள் மாத்திரமே, தம்முடைய சாட்சியை உணர்ந்துகொள்ள முடிகின்றவர்களாய் இருப்பார்கள் என்றும் கூறினார்.

"ஆ!" "அனைவருக்கும் இதுதானே கேள்வியாய்க் காணப்படுகின்றது; 'எது சத்தியம்' என்பதுதான் அனைவருக்கும் கேள்வியாய் உள்ளது. யாருக்குமே அது தெரிவதில்லை" என்றார் பிலாத்து. பின்னர் அவர் யூதர்களினிடத்திற்குப்போய், "இவரில் நான் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்கவில்லை. இவர் சீசருக்கோ அல்லது அவருடைய சட்டங்களுக்கோ எதிரான குற்றவாளியாக எவ்விதத்திலும் இல்லை. இவருடைய சுதந்திரத்தையோ அல்லது இவரது உரிமையையோ நீதியாய்த் தடைப்பண்ணிப்போடும்படிக்கு நான் முடிவெடுக்கத்தக்கதாக, இவர் எதையும் செய்யவில்லை" என்று பிலாத்துக் கூறினார்.

பிரதான ஆசாரியர்களும், வேதசாஸ்திரிகளும் அபாயத்தை உணர்ந்தார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்துப்போடலாம் என்று அவர்கள் நம்பிக்கையாய்க் காணப்பட்ட தருணத்தில், இயேசு தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளதோ? பின்னர் அவர்கள் இயேசு கலிலேயா நாடு தொடங்கி அனைத்து இடங்களிலும் உபதேசம் பண்ணி ஜனங்களைக் கலகப்படுத்துகின்றார் என்று தீவிரமாய்/சீற்றத்துடன் குற்றஞ்சாட்டினார்கள். கலிலேயா என்ற வார்த்தையைப் பிலாத்துக் கேட்டபோது, "இவர் கலிலேயரா?" என்று விசாரித்தார். இயேசு கலிலேயன் என்று பதிலளிக்கப்பட்டபோது, "அப்படியானால் இந்தப் பிரச்சனைமிக்க வழக்கை நான், கலிலேயாவின் இராஜாவாகிய ஏரோதினிடத்திற்கு மாற்றிவிடுகிறேன்" என்று பிலாத்துக் கூறினார்; ஏரோதுக்கும் எருசலேமில் அப்போது அரண்மனை இருந்தது.

இயேசுவைக்குறித்து அறிந்துகொள்வதற்கு ஆர்வத்துடன் காணப்பட்டதான ஏரோதினிடத்திற்கு இயேசு அனுப்பி வைக்கப்பட்டார். ஏரோது, இயேசுவைக்குறித்து அநேக விஷயங்களைக் கேள்விப்பட்டவராகவும், இயேசு ஏதாகிலும் அற்புதம் செய்வதைப்பார்ப்பதற்கு விரும்பினவராகவும் காணப்பட்டார். ஏரோது, நமது கர்த்தரிடம் கேள்விகள் கேட்டார். ஆனால் இயேசு எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் இயேசுவைக்குறித்து, இராஜாவினிடத்தில் (ஏரோதினிடத்தில்) கடுமையாய்க் குற்றம் சாட்டினார்கள். ஏரோதும், அவரது போர்ச்சேவகர்களும் அவரைப் பரியாசம் பண்ணினார்கள் மற்றும் மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, பரியாசம் பண்ணப்பட்ட இராஜாவைப் போல் அவரைப் பிலாத்துவினிடத்திற்கு ஏரோது திரும்ப அனுப்பிவைத்தார். பிலாத்துவின் சார்பில் ஏரோதிற்கு மதிப்புக்கொடுக்கப்பட்டதான இச்செய்கையும் மற்றும் ஏரோதும் மரியாதையைத் திரும்பக்காட்டின செய்கையும், இவர்கள் இருவருக்கும் இடையில், சில காலமாய் நிலவிவந்ததான பகைமையைத் தகர்த்து, இவர்களை இணைத்தது.

## பிலாத்துவும் சரி, ஏரோதும் சரி, அவரைக் குற்றவாளியெனத் தீர்க்கவில்லை

இயேசுவைக் குற்றஞ்சாட்டினவர்களை நோக்கி பிலாத்து மறுபடியுமாக, "ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்ய வில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்" (லூக்கா 23:14-17). இயேசுவை இந்தளவுக்குப் பாடுபட அனுமதிக்கும்போது, யூதர்கள் அமைதியடைவார்கள் என்ற எண்ணத்திலும் மற்றும் இயேசுவினுடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்கான எண்ணத்திலுந்தான் இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டது என்பது உறுதியே.

வருஷத்தினுடைய அந்த ஒரு காலக்கட்டத்தில், பஸ்காவை முன்னிட்டுப் பிலாத்து, பலமுறை கைதிகளை விடுதலைப் பண்ணியுள்ளார். இம்முறையும் பிலாத்துக் கைதிகளில் எவரையேனும் விடுதலைப் பண்ணுவாரா அல்லது இல்லையா என்று அவ்வேளையில் ஜனக்கூட்டமானது, பிலாத்துவுக்குச் சந்தோஷ ஆரவாரமிட்டு, கேட்டுக்கொண்டனர். இது இயேசுவைத் தள்ளிவிடுவதற்கும், அவரைப் பிரதான ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களுடைய தலைவர்களின் கரங்களினின்று விடுவிப்பதற்கும் ஏற்ற வாய்ப்பு எனப் பிலாத்து எண்ணினவராக, ஜனங்களை நோக்கி: "சிறையில் காணப்படுகின்றதான யூதர்களுடைய இராஜாவென்று உரிமைப் பாராட்டிக் கொண்டவரை, நான் உங்களுக்கு விடுதலைப்பண்ணட்டுமா?" என்று கேட்டார். ஜனக்கூட்டத்தாரோ தங்களது மதத் தலைவர்களை நோக்கிப்பார்த்தார்கள் மற்றும் கொள்ளையனாகிய பரபாசை

விடுதலைப் பண்ணுவதற்குத் தேசாதிபதியை வற்புறுத்திடத் தூண்டி விடப்பட்டார்கள். ஜனக்கூட்டத்தாரை நோக்கி பிலாத்து: "அப்படியானால், மேசியா என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். தங்கள் மதத்தலைவர்களால் ஏவப்பட்டதான ஜனக்கூட்டத்தாரோ: "அவரைச் சிலுவையில் அறைய வேண்டும்!" என்று சத்தமிட்டார்கள். பிலாத்துவோ பிரதியுத்திரமாக: "ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன்" என்றார் (லூக்கா23:22). பரியாசம் பண்ணப்படவும், வாரினால் அடிப்பிக்கப்படவும் மாத்திரம் இயேசு கையளிக்கப்பட்டார். காத்துக்கொண்டிருந்த யூதர்களை நோக்கி பிலாத்து: "அவரிடத்தில் நான் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு அவரை வாரினால் அடிப்பித்து, இன்னும் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக அவரை நான் உங்களிடத்தில் வெளியே கொண்டுவருவேன்" என்றார்.

## இயேசுவை விடுவிப்பதற்கான பிலாத்துவினுடைய பிரயாசங்கள்

இயேசு முள்முடியும், சிவப்பான அங்கியும் தரிப்பிக்கப்பட்டவராக வெளியே வந்தார். பிலாத்து அவர்களை நோக்கி: "எகி ஹோமோ!" (Ecce homo!) — அதாவது இதோ, இந்த மனுஷன்! என்றார். யாரை நான் கொன்றுபோடுவதற்கென, நீங்கள் முயன்றுகொண்டிருக்கின்றீர்களோ, அம்மனுஷனைப் பாருங்கள். இதோ பாருங்கள், உங்கள் இனத்திலேயே (அ) மனுக்குலத்திலேயே இம்மனுஷன் மிகச் சிறந்த மனுஷனாகக் காணப்படுகின்றார். இவரது துக்கத்தையும், அவமானத்தையும் பாருங்கள். இவரது குணத்தினுடைய அருமையான மேன்மையை இதோ பாருங்கள். இவருக்கு எதிராக உங்களுக்கு, என்ன கோபம் இருப்பினும், இவருடைய அவமானங்களை நீங்கள் காண்கையில், இப்பொழுது நீங்கள் சாந்தமாகுவீர்கள்" என்றார். ஆனால் அவர்களோ, "இவரைச் சிலுவையில் அறையும், இவரைச் சிலுவையில் அறையும்!" என்று சத்தமிட்டார்கள். பிலாத்துவோ பிரதியுத்தரமாக: "இதுவே உங்கள் விருப்பமானால், நீங்கள் அவரைச் சிலுவையில் அறையலாம்; ஆனால் நான் அவரில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை — நான் அவரில் எந்தத் தவற்றையும் காணவில்லை" என்றார். அப்போது யூதர்கள் தங்களது எதிர்ப்பிற்கான உண்மையான காரணத்திற்கு வந்தார்கள், காரியங்களினுடைய உண்மை விஷயத்திற்கு வந்தார்கள்; அதாவது இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டார் எனவும், அதைத் தாங்கள் தேவதூஷணமாகக் கருதிக்கொண்டார்கள் எனவும் தெரிவித்தார்கள். பிலாத்து இதைக் கேட்டபோதோ, மிகவும் பயம் அடைந்தவராக, இயேசுவை நோக்கி: "நீர் எங்கேயிருந்து வந்தவர்?" என்று கேட்டார் மற்றும் இயேசுவிடமிருந்து எந்த மாறுத்தரமும் அவருக்கு வரவில்லை. அப்போது பிலாத்து அவரிடம்: "நீர் என்னோடே பேசுகிறதில்லையா? உம்மைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உம்மை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உமக்குத் தெரியாதா? என்றார். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்" (யோவான் 19:10, 11). பின்னர்ப் பிலாத்து மறுபடியுமாக இயேசுவை விடுதலைப் பண்ணிடுவதற்கு எண்ணினார்; எனினும் இப்படிச் செய்வது என்பது, அமைதியும், சமாதானமும் தக்கவைப்பதற்கும், தான் பொறுப்பேற்றுள்ள பட்டணத்தில் அமளியைத் தூண்டிவிடுவதற்கு ஏதுவாய் இருக்கும் என்று எண்ணினார். யூதர்களோ: "இவரை விடுதலைப்பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை இராஜா என்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" என்று சத்தமிட்டார்கள். இது பிலாத்துவைத் தர்மச்சங்கடமான நிலைக்குள்ளாக்கியது. இயேசுவை விடுதலைப்பண்ணுவது என்பது, பிலாத்துவை இராயனுடைய எதிரிக்கு ஆதரவளிக்கின்றவராக்கும்; இன்னுமாக (விடுதலைப்பண்ணும் பட்சத்தில்) பிலாத்து விநோதமாய்த் தோன்றுவார், ஏனெனில் இயேசு அவருடைய சொந்த நாட்டாரினாலேயே குற்றஞ்சாட்டப்பட்டவராகவும், தமக்கு ஆதரவாகப் பிலாத்துவைத் தவிர வேறு எவரையும் உண்மையில் பெற்றிராதவராகவும் காணப்பட்டார்.

இயேசுவுக்கு எதிராக எதுவும் செய்ய வேண்டாம் என்று வலியுறுத்தும் விதமாகவும், இது விஷயம் தனக்கு விசேஷமான சொப்பனம் வந்ததை அறிவிக்கும் விதமாகவும், தன்னுடைய மனைவியிடத்திலிருந்து, பிலாத்துவுக்கு வந்ததான செய்தியின் நிமித்தமாகவும் பிலாத்துத் திகைப்பிற்குள்ளானார். மீண்டுமாக யூதர்களுடைய அதிகாரிகளிடமிருந்து இல்லாமல், மாறாக ஜனங்களின் உதவியைப் பிலாத்து நாடினார். உயர்நிலையில் உள்ளவரான இயேசுவை அவர்கள் முன்பாக நிறுத்தி, பிலாத்து: "இதோ உங்கள் இராஜா!" என்று சத்தமிட்டுக் கூறினார். ஆனால் இது ஜனக்கூட்டத்தாரை ஆத்திரமூட்ட மாத்திரமே செய்தது, மற்றும் அவர்களோ: "இவரை அகற்றும்,

சிலுவையில் அறையும்! இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று தீவிரமாய்/சீற்றத்துடன் சத்தமிட்டார்கள்.

நம்பிக்கை இழந்தவராக, ஜனங்கள் முன்னிலையில், தனது கைகளில் தண்ணீர் ஊற்றி, கழுவிக்கொண்டு பிலாத்து, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். ஜனங்களோ, "இவர் இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக!" என்று சத்தமிட்டார்கள்.

அப்படியாகவே நடந்ததல்லவா! 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக யூதர்கள், தேவனுக்கு அந்நியர்களாக்கப்பட்டும், தீர்க்கதரிசிகள் இல்லாமலும், ஆசாரியர்கள் இல்லாமலும், பாவநிவாரண பலிகள் இல்லாமலும், பாவ நிவாரண நாட்கள் இல்லாமலும் பாடுபட்டிருக்கின்றனர் (ஓசியா 3:4, 5). "ஆ! அவர்களது அக்கிரமமானது மன்னிக்கப்படுகிறதற்கும், கர்த்தர் இஸ்ரயேல் மேல் விண்ணப்பத்தின் மற்றும் கிருபையின் ஆவியை ஊற்றிடுவதற்கும், அவர்களது புரிந்து கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பதற்கும் மற்றும் அவர்கள் அனைவரும் அவரைத் துதிப்பதற்குமான வேளை நெருங்கிக்கொண்டிருக்கின்றது" (சகரியா 12:10).

உரோம சாம்ராஜ்யத்தினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு எதிராய் இராததாய்க் காணப்படும் ஜனங்களுடைய விண்ணப்பங்களுக்குச் சம்மதிப்பதற்குப் பிலாத்துக் கட்டுப்பட்டவராய் இருந்தபடியால், அவர் விண்ணப்பத்திற்கு இணங்கி, இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, கள்வனாகிய பரபாசை அவர்களுக்கு விடுதலைப்பண்ணினார்.

## அதே ஆவி இன்னமும் மேலோங்கிக் காணப்படுகின்றது

கடந்த 18 நூற்றாண்டுகளில் மனித சுபாவமானது மாற்றம் அடைந்துள்ளதென நாம் எண்ணிட வேண்டாம். சூழ்நிலைகள் இன்றும் அதைப்போலவே காணப்படுகின்றது என நாம் நம்பலாம்; இன்றும்கூட இயேசுவினுடைய (அ) அவரது சீஷர்களுடைய மரணத்தை, எந்த ஒரு தேசத்தினுடைய அரசியல் வட்டாரங்களானது விரும்பி, இவர்களது மரணமானது, சமாதானத்திற்கு ஏற்றதாக இருக்குமெனக் கருதுமானால் மற்றும் விசேஷமாக அந்த ஒரு தேசத்தின் மத அதிகாரிகளும், போதகர்களும் ஜனங்களை எளிதில் நம்பவைக்கும் தன்மையைத் தக்கவைத்துக்கொள்வதற்குக் குற்றமற்றவர்கள் பலியாகுவது அவசியமெனக் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில், இயேசுவோ (அ) அவரது சீஷர்களோ எந்தவொரு தேசத்திலுங்கூட மரணத்தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள்.

எதிர்க்காலத்தில் இம்மாதிரியான அனுபவங்களானது, தேவனுடைய பரிசுத்தவான்களில் சிலருக்குக் கடந்துவருமானால், நாம் ஆச்சரியமடையாமல் இருப்போமாக. மதத்திற்கு நலமானவைகள் என்று சொல்லப்படுகின்றதான இந்த நலன்களுக்காக மத அதிகாரிகளினால் குரல் எழுப்பப்படும்போது, அரசியல் அதிகாரிகளினுடைய வல்லமையைக்கொண்டு, நீதியானது புரட்டிப்போடப்பட்டு, யுகம் முழுவதிலும் குற்றமற்றவர்கள் மரணத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று வரலாற்றின் பக்கங்களானது காண்பிக்கின்றது. அனைத்துக் காலக்கட்டங்களிலுமுள்ள தேவனுடைய ஜனங்கள் நடந்துகொள்ள வேண்டிய விதமானது, ஆண்டவரினால் முன்வைக்கப்பட்டுள்ளது; அதென்னவெனில், தேவனுடைய சித்தத்தை எதிர்ப்பின்றி முழுமையாய் ஏற்றுக்கொள்ளுதலாகும் மற்றும் அவரது நோக்கம்/காரணங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களில் தேவனுடைய மேற்பார்வை உள்ளது என்று முழுமையாய் உணர்ந்து கொள்ளுவதாகும் மற்றும் விளைவுகளானது மிகவும் அதிகமான நித்திய கனமகிமையாய் இருக்கும் என்று முழுமையாய் நம்பிக்கைக்கொண்டிருத்தலாகும்.

"உலகம் அனைத்துமே எந்தன் முடிவை ஏளனம் பண்ணினாலும்,
இயேசுவே என் பங்காய்க் காணப்படுவாரே;
அனைவரிலும் அழகானவராகிய அவரைத் தவிர,
வேறு எவரிலும் நான் திருப்தியடைகிறதில்லையே.
உம் பாடுகளை, உம்மோடுகூட நான் ஏற்றுக்கொள்கின்றேனே,

உம் தரித்திரத்தையும், அவமானமான சிலுவையையும்,
உம்மோடுகூட நான் ஏற்றுக்கொள்கின்றேனே.
உலகத்தின் இன்பங்களினின்று விலகி ஓடுகின்றேனே.
உலகத்தின் பொக்கிஷங்களைக் களிம்பைப்போல் கருதிடுவேன் நானே.

*****

R 5572

## நன்றி சொல்கிறோம்

நன்றி சொல்கிறோம், எங்கள் பிதாவே நீர் எமக்கு அணிவித்த நீதியின் வஸ்திரத்திற்கே

நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே, நீர் எமக்களித்த இகத்தின், பரத்தின் உணவிற்காக

நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே, எங்கள்கண்கள் ஒளியினைக் காணும் பேறுபெற்றதற்காக.

நன்றி சொல்கிறோம் தேவனே, நீர் எமக்குக் கொடுத்த உறுப்புகளுக்காக

கண்கள் காணவும், செவிகள்கேட்கவும், மூக்கு நுகரவும், வாய் பேசவும் செய்தீரே.

நன்றி சொல்கிறோம் எங்கள் தேவனே, சூரிய ஒளியும் மழையும் எமக்கே தந்ததற்காக.

நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே, நாங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கவும்,

வலிகளை அனுபவிக்கவும் தந்த சந்தர்ப்பத்திற்காக

நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே, எமைத் தெளிவாய்ப் பார்க்க எமக்குள் முளைத்த தேவஅன்பிற்காய்

ஒவ்வொரு தைக்கப்பட்ட இருதயமும் எம்மை எவ்வாறு உம் அண்டையில் இன்னும் கிட்டி நெருங்கச் செய்ததற்காக.

வார்த்தையில் செயலில் நாங்கள் தவறியபோதினில்
எமக்குக் கொடுத்த மன்னிப்பிற்காய்
நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே,

எம் தேவைகளில் நீர் எமக்களித்த போதுமான கிருபைகளுக்காக நன்றி செலுத்துகிறோம் தேவனே,

புகழுகிறோம் உம்மை யாமே, ஆசீர்வதிக்கப்பெற்ற எம் அன்பின் தகப்பனே

உம் திருக்குமாரனையே எமக்கென நீர் தந்திட்ட தயவுக்காய்

நன்றிகளை ஏறெடுக்கிறோம் எம் அன்பின் தேவனே,

அவர் ஈன்றெடுத்த வெற்றிக்காய் நன்றி,

அவர் காட்டிய நீதிக்காய் நன்றி எங்கள் நல்ல தகப்பனே.

அவர் ஆடைகூட வெண்மையாயும் தூய்மையாகவே விளங்கியதற்காய் நன்றி.

உம் விலையேறப்பெற்ற வார்த்தைகட்காக நன்றி தேவனே.

அவை எமக்களித்த மகா பரிசுத்த விசுவாசத்திற்காக,

அவை எம்முள் கிளர்ந்துஎழுந்தமைக்காக நன்றி தேவனே.

முடிவில்லாத நித்திய வாழ்க்கையைக் கொடுக்கும் மகிமையின் நம்பிக்கைக்காக நன்றி தேவனே,

நித்தியமும் உம்மோடு வாழ்ந்திடவே எங்கள் மனம் ஏங்கி நிற்குதே தேவதேவனே.

உம் வேலையாட்களுக்காகவும், ஒவ்வொரு பரிசுத்தவான்களுக்கும்,

அவர் காட்டிடும் அன்பினுக்காகவும் நன்றி பிதாவே.

அவர்தாம் கொண்டுள்ள இருதய ஒற்றுமைக்காகவும், அதன் வலிமைக்காகவும் நன்றி தேவனே,

ஆசீர்வதியும் தந்தையே, நீர் கொடுத்த ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு நன்மையான ஈவுக்கும் நன்றி தேவனே.

உம் செட்டைகளின்கீழே எம்மை பாதுகாப்பாய் வைத்திடுவீர் எம் தேவதேவனே.

---

R 5572/335/496

# நன்றி சொல்கிறோம்.

நன்றி சொல்கிறோம், எங்கள் பிதாவே, நீர்எமக்கு அணிவித்த நீதியின்வஸ்திரத்திற்கே.
நன்றி சொல்கின்றோம் எங்கள் தேவனே, நீர் எமக்களித்த இகத்தின், பரத்தின், உணவிற்காக.
நன்றி சொல்கின்றோம் எங்கள்தேவனே,எங்கள்கண்கள் ஒளியினைக்காணும் பேறுபெற்றதற்காக.
நன்றிசொல்கிறோம் தேவனே, நீர் எமக்குக்கொடுத்த உறுப்புகளுக்காக.
கண்கள்காணவும், செவிகள்கேட்கவும், மூக்கு நுகரவும், வாய் பேசவும்செய்தீரே.
நன்றி சொல்கிறோம் எங்கள் தேவனே, சூரிய ஒளியும் மழையும் எமக்கே தந்ததற்காக.
நன்றி சொல்கிறோம் எங்கள் தேவனே, நாங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கவும்,
வலிகளை அனுபவிக்கவும் தந்த சந்தர்பத்திற்காக
நன்றி சொல்கிறோம் எங்கள் தேவனே,எமைத் தெளிவாய்பார்க்க எமக்குள் முளைத்த தேவ அன்பிற்காய்.
ஒவ்வொரு தைக்கப்பட்ட இருதயமும் எம்மை எவ்வாறு உம்அண்டையில் இன்னும் கிட்டி நெருங்கச்
செய்ததற்காக.வார்த்தையில் செயலில் நாங்கள் தவறிய போதினில் எமக்குக்கொடுத்த
மன்னிப்பிற்காய்நன்றி சொல்கிறோம் எங்கள்அன்பின் தேவனே,
எம் தேவைகளில் நீர் எமக்களித்த போதுமான கிருபைகளுக்காக நன்றி செலுத்துகிறோம் தேவனே,
புகழுகிறோம் உம்மை யாமே. ஆசீர்வதிக்கப்பெற்ற எம் அன்பின் தகப்பனே உம் திருக்குமாரனையே
எமக்கென நீர் தந்திட்ட தயவுக்காய் நன்றிகளை ஏறெடுக்கிறோம் எம் அன்பின்தேவனே. அவர்
ஈன்றெடுத்த வெற்றிக்காய் நன்றி,
அவர் காட்டிய நீதிக்காய் நன்றி எங்கள் நல்ல தகப்பனே.
அவர் ஆடைகூட வெண்மையாயும் தூய்மையாகவே விளங்கியதற்காய் நன்றி.
உம் விலையேறப்பெற்ற வார்த்தைகட்காக நன்றி தேவனே.
அவை எமக்களித்த மகாபரிசுத்த விசுவாசத்திற்காக,
அவை எம்முள் கிளர்ந்து எழுந்தமைக்காக நன்றி தேவனே.
முடிவில்லாத நித்திய வாழ்க்கையைக் கொடுக்கும் மகிமையின் நம்பிக்கைக்காக நன்றி தேவனே,
நித்தியமும் உம்மோடு வாழ்ந்திடவே எங்கள்மனம் ஏங்கி நிற்குதே தேவ தேவனே.
உம் வேலையாட்களுக்காகவும், ஒவ்வொரு பரிசுத்தவான்களுக்கும்,
அவர் காட்டிடும் அன்பினுக்காகவும் நன்றி பிதாவே.
அவர் தாம் கொண்டுள்ள இருதய ஒற்றுமைக்காகவும் அதன் வலிமைக்காகவும் நன்றி தேவனே,
ஆசீர்வதியும் தந்தையே. நீர் கொடுத்த ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு நன்மையான ஈவுக்கும் நன்றி
தேவனே.
உம் செட்டைகளின் கீழே எம்மை பாதுகாப்பாய் வைத்திடுவீர் எம் தேவ தேவனே.

R 5572/335/496/

## இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால்,

இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால்,
நாம் எவ்வளவு விசுவாசமிக்க வீரர்களாய்வாழ்ந்திருப்போம்,
கெத்சமெனேக்கு நாம் அவரோடு சென்றிருந்தால்,
தூங்காமல் விழித்திருந்து அவரோடு ஜெபித்திருப்போம்,
இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால்,
அடுத்தவர் வந்தவர் பாதம் கழுவு முன்பாக நாமவர் பாதம் கழுவியிருப்போம்,
அவர் சோதனைக்குட்பட்டு இரத்தவியர்வை சிந்தி நம் தேவை அவர்க்கு வேண்டியபோதில்
அவரண்டைக்கு நாம் சென்று சேர்ந்திருப்போம்,
அவர்கல்வாரிப்பயணத்தின்போதோ, தன்னார்வம் கொண்டுதவியிருப்போம்,
அவருடன் நாம் இருந்திருந்தால், உயிர்த்தெழுந்து பரனேறிச் சென்றதனாலே,
நாம் அவர்க்குமட்டும் தனியாளாய் உதவிசெய்திருக்கமாட்டாதே,
இப்போது அவர் மாம்சதேகம் விட்டு ஆவியின்சரீரம்பெற்றுக்கொண்டாரே,
வலிகளைக்கூடநீங்கிக்கடந்து சென்றுவிட்டாரே,
அவர்மகிமைப்படும்போதினிலே, வார்த்தைகள்நமக்கே கொடுக்கப்பட்டதே,
அவருக்குளவ்வாறு நேரிட்டதோ, நமக்கும் அவ்வாறே நேரிடும் என்றே.
அவரதுஇடுக்கமான வழியிலே நடப்பதனாலே நாம் இதனை ஓர் சிலாக்கியமாய்
அடைந்துவிட்டோமே,
அவர்பாத அங்கங்களான நாமே, களைப்படைந்தே பயணம் செய்திட்டாலும்,
அடுத்தவர் சுமந்திடும் சிலுவைதனில் நாமும் உதவிசெய்திடும்போதினிலே,
ஜீவத்தண்ணீர்அங்கே ஊற்றப்படுமே, நாம் நமதன்பை அவர்க்கே காட்டலாகுமே,
அவரோடு அங்கே இருக்கும்வேளையிலே,
அவர்விரும்பியபடியே நாம்செய்திட்டோம் என்றே இதன்மூலம்தானே அறிந்திடுவீரே.

R 5577

## என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும்

### MY PRESENCE SHALL GO WITH THEE

சர்வ வல்ல பிதாவாகிய தேவனே,
வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தாவே,

ஒவ்வொரு கிரகத்தின் மையமும் ஊற்றும் ஆனவரே,

உயிர்களுக்கெல்லாம் தேவனானவரே,
வானாதி வானங்களுக்கப்பாலே,

அரியணைமீதே அமர்ந்திருப்பவரே,

அண்டசராசரங்களின் எடைகளைக் கரங்களில் தாங்கி

உம் ஆச்சர்யமான எண்ணுதற்கரிய ஞானத்தினாலே,

உம் கவனத்திலிருந்தே ஓர் இரவோ, பகலோ, ஒருமணித்துளியோ, விடுபட்டுப் போவதில்லையே,

ஓர் அடைக்கலான் குருவியின் விழுதல்கூட

உம் கண்காணிப்புக் கண்களிலிருந்து தப்புவதில்லையே,

உம் ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாப்பவர் நீரே, தம் வாழ்க்கையைவிடவும் உம்மை அதிகம் நேசிக்கின்றாரே,

அவர்களின் தூதர்கள் அவர்களைத் தினமும் உருவாக்கி வருகின்றாரே,

திருத்தும் கோலினால் அவர்க்கு வழிகாட்டுகிறாரே,

நித்திய வாழ்வுக்கு வழிநடத்திச் செல்வாரே,

உம் பிரசன்னம் எப்போதும் எமது அண்டையில் இருப்பதை எண்ணும்போதினிலே,

எத்துனை ஆனந்தம் அடைகின்றோமே,

உம் இமைகள்கூட அயர்வதில்லை, கண்கள் ஒருபோதும் துஞ்சுவதில்லை,

இரவுபகல் துயிலுவதில்லை,

உம் உதவிவேண்டிக் கதறிஅழும் குழந்தைகளைக் கண்ணோக்கிப் பார்த்திடுவீர்,

பூமியும் வானமும் நிலைமாறிப்போனாலும்,

நேற்றும் இன்றும் என்றும் எப்போதும்

உம் நிலையினின்றே பிறழாத தேவனே,

பொய்யின் நிழல்கூட அறிந்திராத தேவனே,

விசுவாசத்தினாலே நும் கரம் பற்றிக்கொண்டோம்,

எம் கவலைமிகுந்த இதயம் தன்னை

உம்மீதே சாற்றிவைத்தே இளைப்பாறுதல் கண்டோம்,

உம்பார்வைக்கு நாங்கள் அருமையானதால்

எம்மை நீர் கைவிடுவதில்லையே,

உம் பிரசன்னம் எமக்கு முன்பாக எப்போதும் செல்லலாகுமே.

---

# தேவனால் வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர்

## மாற்கு 15:22-37

***"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்." ஏசாயா 53:4***

இயேசு சிலுவையில் அறையப்பட்டது தொடர்புடையதான உண்மைகளின் விஷயத்தில் வாக்குவாதம் பண்ணுவதற்கு இடமில்லை. சிலுவையில் அறையப்படுதலுக்கான காரணம் மற்றும் தெய்வீக வரம்பு தொடர்புடைய விஷயத்தில் மாத்திரமே வாதம் செய்வதற்கு இடமுள்ளது. ஏசாயா தீர்க்கத்தரிசி நமக்குத் தெய்வீக விளக்கத்தை அளிக்கின்றார்.

## பாடுகள் நிறைந்த பாதை!

ஜனங்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதில் தம்முடைய சத்துவத்தை அவர் இலவசமாய்க் கொடுத்து வந்ததான, அவரது மூன்று வருட ஊழியத்தினால் இரட்சகர் மிகவும் பெலவீனமடைந்து காணப்பட்டார். இது தவிர பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு அவர் தம்முடைய சீஷர்களை அனுப்பிவைத்தது முதல், தூக்கம் இல்லாதவராகவும், தொடர்ச்சியாக அழுத்தத்துடன் இருந்தவராகவும் காணப்பட்டார். இந்த ஒரு வேளையில்தான் பஸ்கா தொடர்புடையதான துயரமான அனுபவங்களும், நினைவுகூருதலின் இராப்போஜனம் நிறுவப்படுதலும், கெத்செமனேக்கு நேரான பிரயாணமும், அங்கு வியாகுலமும், பெலவீனம் அடைதலும், பிரதான ஆசாரியனால் நடத்தப்பட்ட ஆலோசனை சங்க விசாரணையும், ஏரோதின் முன்னிலையிலும், பிலாத்துவின் முன்னிலையிலும் நடைப்பெற்றதான விசாரணைகளும், சவுக்கடிகள் முதலானவைகளும் நடைப்பெற்றன; இவைகள் அனைத்துமே அவருக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்ததாகவே இருந்தது. யாருக்காக அவர் பரலோக வீட்டையும், மகிமையையும் தியாகம் பண்ணினாரோ, அவர்களாலேயே அவர் சிலுவையில் அறையப்படும்படிக்கு இப்பொழுது தீர்க்கப்பட்டிருக்க, அவர் தம்முடைய சிலுவையையும் இப்பொழுது சுமந்துச் செல்ல வேண்டியவராய் இருந்தார். அவரது பெலவீனம் காரணமாக, சிலுவையின் பாரத்தைச் சுமக்க முடியாமல் போகும் கட்டம் வருவது வரையிலும், அவர் சுமந்துக்கொண்டுவந்தார் மற்றும் அவருக்கு உதவிச் செய்யத் தக்கதாக வழிப்போக்கனான ஒரு விவசாயி வற்புறுத்தப்பட்டார்; வழிப்போக்கன் முழுச் சிலுவையையும் சுமந்து வந்தாரா அல்லது சிலுவையின் ஒரு பாகத்தைச் சுமந்து, இயேசுவுக்குப் பின் நடந்துவந்தாரா என்பது வேதவாக்கியத்தில் மிகத் தெளிவாய்க் கொடுக்கப்படவில்லை.

இயேசுவுக்கு உதவி அளிப்பதற்குப் பதிலாக, பேதுருவும், யோவானும், யாக்கோபும், தோமாவும், மற்ற அப்போஸ்தலர்களும் எங்கே போனார்கள்? அவர்கள் பயத்தினால் தடுக்கப்பட்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்தோ, எத்துணையான ஓர் ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்துபோனார்கள்! பலவந்தத்தின் காரணமாகச் சிலுவையைச் சுமந்த சிரேனே ஊர் விவசாயியானவன், அந்த ஒரு வேளையின் போதான அனுபவங்களின் வாயிலாக, இரட்சகருடைய செய்தியினுடைய உண்மையைத் தனது இருதயத்தில் பதியப் பெற்றுக்கொண்டதன் மூலம், நசரேயனின் பின்னடியார்களில் ஒருவராகப் பிற்பாடு ஆனார் என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

அழுதுகொண்டிருந்த ஸ்திரீகள் சுற்றிக்கூட்டம் கூடி நின்றார்கள் மற்றும் அவர்களில் எவரும், உதவிக்கரம் நீட்டவில்லை என்று நாம் எண்ணுகின்றோம். அவர்களை நோக்கி இயேசு: "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார். அவர்கள் மறைவிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் மலைகளையும் குன்றுகளையும் நாடுவார்கள் என்பது தொடர்புடையதான போதகருடைய வார்த்தைகளானது, 37-வருடங்களுக்குப் பிற்பாடு எருசலேமின் அழிவின்போது, யூத ஜனங்கள் மீது வந்ததான மாபெரும் உபத்திரவத்தின் ஒரு பாகம் பற்றியதாகும் என்று வேதத்தினுடைய சில மாணவர்கள் எண்ணுகின்றனர். இன்னுமாக எருசலேமுடைய அழிவும் மற்றும் இந்த உபத்திரவமும், இந்த யுகத்தினுடைய முடிவின் காலங்களில்

நடைபெறவிருக்கும் மாபெரும் துன்பங்களை எடுத்துக்காட்டுகின்ற நிழல்களாய் இருக்கின்றது என்றும் எண்ணப்படுகின்றது.

மலைகள் மற்றும் குன்றுகள் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட்ட இதே வார்த்தைகளே, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு தொடர்புடைய விஷயத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது நிச்சயமே. கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது, ஜுவாலித்து எரிகின்ற அக்கினியாகிய நியாயத்தீர்ப்புகளோடு வெளிப்படுகையில், அக்கினியானது தற்போதுள்ள ஒழுங்குகளைப் பட்சித்துப்போட்டு, புதிய இராஜாவுக்காக வழியை ஏற்படுத்துகின்றதாக இருக்கும். ஒருவன் தன்னுடைய ஜீவனை மாய்த்துக்கொள்வதற்கு எளிமையான வழிகள் இருக்கின்றது; ஆகையால் ஒருவன் மலைகள் தன்மேல் விழும்படிக்கு ஜெபம் ஏறெடுப்பான் என்று நாம் எண்ணி விடக்கூடாது. மாறாக சீறுகின்ற உபத்திரவங்களுக்கு எதிராக, அநேகர் பாதுகாப்பையும், மறைவையும் நாடுவார்கள் மற்றும் விரும்புவார்கள் மற்றும் இதற்காக ஜெபம் ஏறெடுப்பார்கள் என்பதே கருத்தாகும். சமுதாயம் எனும் பாறைகள், சமுகத்திற்காக சமுக அமைப்புகளாய் இருக்கின்றன மற்றும் இவை ஒவ்வொன்றும் அதன் சொந்த அங்கத்துவத்தைப் பாதுகாத்திட நாடுகின்றது (லூக்கா 23:28-30).

"பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?" என்று இயேசு கூறினார் (லூக்கா 23:31). இங்கு அவர் யூத தேசத்தை, தமது சாபத்தினால் (அ) தீர்ப்பினால் உடனடியாகப் பட்டுப்போன அத்திமரத்திற்கு ஒப்பிடுவதாகத் தெரிகின்றது. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்கள் முன்னதாக, எருசலேமுக்குக் கழுதையின் மீது ஏறிவந்து, எருசலேமுக்காகக் கண்ணீர்விட்டு, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" என்று கூறினார். அத்திமரமானது பச்சையாக இருக்கக்கூடிய கொஞ்சக்காலத்திலேயே, அதன் அதிகாரிகள், அவரைச் சிலுவையில் அறைந்துபோடத்தக்கதாக, அனைத்து நியாயப்பிரமாணங்களை மீறிடுவதற்கும், மனசாட்சி அனைத்தையும் உதறித் தள்ளுவதற்கும் விரும்பும் அளவுக்குத் துணிச்சலான/மூர்க்கத்தனமான நிலைக்கு வந்து விட்டார்கள்.

இவ்வளவுக்கு விரைவாகப் பொல்லாப்பானது மிகவும் கொடிய விதத்தில் நீதியின் வரம்பைக் கடந்து செயல்பட்டுள்ளதானால், பிற்காலங்களில் என்னவெல்லாம் எதிர்ப்பார்க்கப்படலாம்; அதாவது யூத தேசமாகிய அத்திமரமானது, முற்றிலும் பட்டுப்போய்விடும்போதும் மற்றும் அதனிடத்தினின்று உயிர்ச்சாறு (தேவனிடத்திலான பக்தி) அனைத்தும் இல்லாமல் போய்விடும்போதும் என்னவெல்லாம் எதிர்ப்பார்த்திடலாம். இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, பரிசுத்தவான்களானவர்கள் கொடுமைக்கு ஆளாகுவார்கள் மற்றும் இப்படியாகப் பூமியின் உப்பானது எடுத்துவிடப்படும் மற்றும் உடனடியாகப் பரவலாய்ச் சீர்கேடாகிய ஒழுங்கின்மை தொடங்கும்.

## மனுஷக்குமாரன் உயர்த்தப்பட்டார்

இயேசு தாம் சிலுவையில் அறையப்படப்போவதை முன்னமே குறிப்பிட்டுள்ளார்; அதாவது "வெண்கல சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது போல, மனுஷக்குமாரனும் உயர்த்தப்பட வேண்டும்" . . . சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இப்படியாக வெண்கல சர்ப்பமானது, இயேசுவுக்கு ஒரு நிழலாகப் பயன்படுத்தப்பட்டது. அவர் உண்மையில் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் ஆவார்; ஆனால் அவர் பாவியின் ஸ்தானத்தை எடுத்தார் . . . அவர் பாவிபோன்று நடத்தப்பட்டார். நியாயப்பிரமாணத்தின் கீழ்க் கடுமையானதொரு தண்டனையாகக் காணப்படுவது, சிலுவையில் அறையப்படுதலாகும் . . . "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" ஆவான். ஆகையால், இயேசு நமக்காக சாபத்திற்குள்ளானார் என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார் (கலாத்தியர் 3:13). அவர் பாவம் அறியாதவராக இருந்தபோதிலும், அவர் பாவியினுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். வேத வாக்கியங்களின்படி இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்.

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றதான வார்த்தைகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டாம்; ஏனெனில் இவைகள் பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இடம்பெறுவதில்லை. இன்னுமாக, யூதர்களுடைய பாவங்களானது தண்டனையைக் கொண்டுவரும் என்பதையும் இயேசு அறிந்திருக்க வேண்டும். தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்றும், அவர்களது பட்டணத்தைச் சுட்டெரித்துப்

போடுவார் என்றும் இயேசு தம்முடைய உவமையில் முன்னுரைத்துள்ளார் (லூக்கா 20:14-16). "உங்களுக்காக அழுங்கள்" என்ற வார்த்தையானது, யூதர்கள் தங்கள் பாவங்களுக்காக தண்டனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதையும், இந்தப் பாவமானது அவர்களுக்கு முழுமையாய் மன்னித்துவிடப்படுவதில்லை என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. யூதர்கள் தெய்வீகத் தயவினின்று இப்பொழுதுவரைக்கும் 18-நூற்றாண்டுகளாகத் துண்டிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். இந்தப் பிரகாரமான தெய்வீக ஏற்பாடுகள் தொடர்புடைய அனைத்திலும் பிதாவுடன் இயேசு முழு இசைவுடன் காணப்பட்டார் என்றும், தெய்வீகச் சித்தத்திற்கு எதிராக எதையும் இயேசு வேண்டிக்கொள்ளவில்லை என்றும் நாம் எடுத்துக்கொள்வது சரியே.

இயேசுவை யூதர்கள் புறக்கணித்தக் காலத்தில், அவர்கள்மீது வந்த உபத்திரவம் பற்றியதான மேற்கூறிய காரியத்தைப் பரிசுத்தவானாகிய பவுலும் குறிப்பிட்டுள்ளார்; அதாவது அவர்கள் குறித்து எழுதப்பட்டுள்ளதான அனைத்தும் நிறைவேறித் தீரத்தக்கதாக "அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" என்பதாகும் (1 தெசலோனிக்கேயர் 2:14-16).

இன்னொரு பக்கம், யூதர்களுக்காகவும் இயேசு தம்முடைய ஜீவனைக்கொடுத்தவராகக் காணப்படுவதினால், தேவனுடைய பிரதிநிதியென, அவரது குமாரரென யூதர்களிடத்தில் அனுப்பி வைக்கப்பட்டவரைக் கொன்றுப்போட்டதான மாபெரும் பாவத்தின் காரணமான தண்டனையினால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டாம் என்று இயேசு விரும்பமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே. இப்படிப்பட்டதான துணிகரமான பாவத்திற்குரிய நீதியான தண்டனை என்பது, முற்றிலுமாய் அழிக்கப்படுவதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அப்போஸ்தலனோ நீதியைக் குறித்து இல்லாமல், மாறாக "நன்மையானவைகளை இயேசுவின் இரத்தம் பேசுகின்றதெனச்" சுட்டிக்காட்டுகின்றார் (எபிரெயர் 12:24). இயேசுவின் இரத்தமானது உலகத்தாருக்காக மாத்திரமல்லாமல், யூதர்களுக்காகவும் பாவங்களுக்கான மன்னிப்பைப் பேசுகின்றது. அந்த இரத்தமானது, ஆயிர வருட இராஜ்யத்தின்போது, தேவனுடன் ஒப்புரவாகிக்கொள்வதற்கான முழு வாய்ப்பைக் குறித்துப் பேசுகின்றது.

கொஞ்சம் அறியாமையின் காரணமாக, யூதர்கள் தங்கள் நடத்தைக்கு முழுப் பொறுப்பாளிகளாய் இருக்கவில்லை என்ற கருத்தைப் பரிசுத்தவானாகிய பேதுரு உறுதிப்படுத்துகின்றார். யூதர்கள் சிலரை நோக்கி, அவர் கூறினதாவது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." (அப்போஸ்தலர் 3:17); ஏனெனில் அறிந்தார்களானால் "ஜீவாதிபதியை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" (அப்போஸ்தலர் 3:15-17). தேவனுடைய ஏற்றவேளையில் முழு உலகத்தின் புரிந்துகொள்ளுதலுடைய கண்கள் திறக்கப்படும் என்று சகரியா தீர்க்கத்தரிசி நமக்குக் காட்டுகின்றார். அனைவரும் காரியங்களை வித்தியாசமாய்ப் பார்ப்பார்கள் மற்றும் யூதர்கள் குறித்தும் விசேஷமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது "அவர்கள் தாங்கள் குத்தினவரை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, தங்கள் சிறந்த நண்பனை, தங்கள் மீட்பரை தாங்கள் மோசமாய் நடத்தியுள்ளனர் என்று உணர்ந்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

## என் வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்

இயேசு மரித்துக்கொண்டிருக்க, நெய்யப்பட்டிருந்ததான அவருடைய வஸ்திரத்திற்காக சீட்டுப்போட்டும், இன்னுமாக அவரது மற்ற உடைகளைத் தங்களுக்குள்ளாகப் பங்கிட்டுக் கொண்டதுமான உண்மையின் வாயிலாக, உரோம போர்ச்சேவகர்களுடைய கல்லான இருதய தன்மை சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. ஆயிர வருட இராஜ்யத்தின் விளைவாகக் கல்லான இருதயங்கள் மாற்றப்பட்டு, உருக்கமான இருதயங்கள் கொடுக்கப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம். ஆதாமினிடத்தில் ஆதியில் காணப்பட்டதும், பிற்பாடு மனிதனாகிய இயேசுவினிடத்தில் காணப்பட்டதுமான தேவசாயலுக்கும், ரூபத்துக்கும் மனுக்குலம் அனைத்தும் முழுமையாய்ச் சீர்ப்பொருந்தப்படுவது ஓ! எத்துணை அவசியமானதாய்க் காணப்படுகின்றது!

இயேசுவோடுகூட, அவரது இரண்டு பக்கங்களிலும், அதேவேளையில் தண்டனை நிறைவேற்றப்பெற்ற இரண்டு குற்றவாளிகளிலும், உலகத்தினுடைய மனப்பான்மையானது வெளிப்படுத்தப்படுகிறது; இயேசுவினுடைய சிலுவையின்மேல், யூதர்களுடைய இராஜா என்று எழுதி தொங்கவிடப்பட்டிருந்தது. துன்பத்தில் காணப்பட்டு ஒரு குற்றவாளி, இயேசுவை வஞ்சகன் என்று தூஷித்து, இயேசு தம்மையும் மற்றும் தங்களையும் இரட்சித்துக்கொள்வதின் மூலம் தம்முடைய வல்லமை எதையாகிலும் வெளிப்படுத்திட வேண்டும் என்று கூறி நகைத்தான். இயேசு தம்மை இரட்சித்துக்கொள்வாரானால், அவர் உலகத்தினுடைய இரட்சகராக முடியாது என்பதை அந்தக் கள்வன் கொஞ்சும் அறியாதிருந்தான்!

மற்றக் கள்வனோ இயேசு தவறு எதுவும் செய்யவில்லை என்றும், அவர் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்றும் கூறி இயேசுவுக்கு ஆதரவு கொடுத்தான். பின்னர் இயேசுவை நோக்கி தான் பேசின இரக்கமான வார்த்தைகளுக்காக, கைமாறு ஒன்றை கேட்டுக்கொண்டதின் வாயிலாக, அவர் மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினான். "இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்" (லூக்கா 23:42). அந்தப் பாவப்பட்ட கள்வனானவன், இயேசு தம்மை இராஜா என்று சொன்னதை அறிந்திருந்தான். இயேசுவிடம், "நீர் இராஜாவோ?" என்று கேள்விக் கேட்கப்பட்டபோது, கள்வன் அவர் அருகில் நின்றுகொண்டிருந்தான் மற்றும் "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று அவர் பதில் கூறினதையும் கள்வன் கேட்டான். இயேசு தோற்றத்திலும், பண்புகளிலும் மிகவும் சிறந்தவராகக் காணப்பட்டபடியால், அவர் இராஜாவாய் இருப்பதற்குப் பாத்திரமானவர் என்று கள்வன் அடையாளங்கண்டுகொண்டான். இயேசு சொல்லுகிறபடி, அவர் உண்மையிலேயே இராஜாவாக இருப்பாரோ? இவர்தான் மேசியா என்று இறுதியில் நிரூபணமாகுமோ? ஆகையால் உண்மையையாகிலும் சொல்லுவோம் மற்றும் இவர் சார்பில் ஒரு வார்த்தையையாகிலும் சொல்லுவோம் மற்றும் இவர் தமது இராஜ வல்லமையை அடையும்போது, என்னைத் தயவாய் நினைவுகூருங்கள் என்று வேண்டுதலாவது செய்வோம் என்று கள்வன் எண்ணிச் செய்தான்.

இயேசுவின் பதிலானது கடந்த காலங்களில் நம் அனைவராலும் பொதுவாக மிகத் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. அன்றைய தினமே கள்வன் இராஜ்யத்தில் தம்மோடுகூடக் காணப்படுவான் என்று அவர் வாக்களித்ததாக நாம் எண்ணினோம். ஆனால் மற்ற வேத வாக்கியங்களையும் பார்க்கும்போது, இயேசு அன்றைய தினம் இராஜ்யத்தில் இல்லாமல், மாறாக யோசேப்பினுடைய புதிய கல்லறையில் காணப்பட்டார் என்றும், மூன்றாவது நாள் வரையிலும் அவர் மரணத்திலிருந்து, சியோலிலிருந்து, ஹேடிசிலிருந்து, கல்லறையிலிருந்து உயிருடன் எழுந்திருக்க வில்லை என்றும், தமது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடுங்கூட அவர் மரியாளிடம்: "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறப்போகிறேன்" என்று கூறினார் என்றும் நாம் அறிவோம். அப்படியானால் தாமும், கள்வனும் அன்றைய தினமே பரதீசில் காணப்படுவார்கள் என்று இயேசு சொல்லியிருந்திருக்க முடியாது.

இதோ, உண்மையான விளக்கம்: விழுகையின் காரணமாக 6000 வருடங்களுக்கு முன்னதாகத் தொலைந்துபோனதான பரதீசானது, மேசியாவினால் அவரது மகிமையான இராஜ்யத்தில் திரும்பக்கொடுக்கப்படும். அப்போதுதான் அதாவது, "நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது" - கள்வன் தன்னை நினைத்தருளும்படிக்கு வேண்டிக்கொண்டான். மரித்தது முதல் கள்வன் மேசியாவின் இராஜ்யம் வரும் காலத்திற்காக, மரணத்தில் நித்திரைப்பண்ணி, காத்துக் கொண்டிருக்கின்றான். இயேசு கொடுத்தப் பதிலானது, முழு இசைவுடனே காணப்படுகின்றது; ஆமென், அப்படியே ஆகட்டும் என்று பதிலளித்தார். "இன்றைக்கு (எனக்கு ஒரு நண்பன் இல்லாத இந்த நாளில் மற்றும் எனக்கு ஓர் இராஜ்யம் இருக்கும் என்று தோன்றுவதற்கு அநுகூலமாய் எதுவும் இராததுபோன்று காணப்படும் இன்றைக்கு நான் உன்னிடம் கூறுகின்றேன்), நான் உனக்கு மெய்யாகவே சொல்லுகின்றேன் நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" (லூக்கா 23:43, சரியான மொழியாக்கம்).

உலகை பரதீசாக மாற்றும் பணியை, இயேசுவின் இராஜ்யமானது விரைவில் ஆரம்பித்து விடும். மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கின்றதானவர்களின் உயிர்த்தெழுதலின் போது, அந்தக் கள்வனும் ஆண்டவரினால் நினைவுகூரப்படுவான். சந்தேகத்திற்கிடமின்றி அந்தக் கள்வன் பரதீசில் பெரும் ஆசீர்வாதத்தை அடைகிறவனாய் இருப்பான், காரணம் அவன் சிலுவையில் ஆறுதலான வார்த்தைகளைப் — பேசினதினாலும் மற்றும் அவனுடைய வார்த்தைகளானது, அவன்

உருக்கமான மற்றும் தவறுக்காக மனம் வருந்துகிற இருதயம் உடையவன் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றதாய் விசேஷமாய் இருப்பதாலும் ஆகும்; இப்படிப்பட்ட இருதய நிலைமை உடையவர்களே இராஜ்யத்தில் ஆசீர்வாதங்களை முதன்மையாய்ப் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்பார்கள்.

இயேசு தமது தாயாரை, தமது சீஷனாகிய யோவானிடத்தில் ஒப்படைத்த காரியமானது, மரியாளுடைய கணவனாகிய யோசேப்பு உயிரோடில்லை என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அவர் ஒப்படைத்த காரியமானது, அவரது உச்சக்கட்டமான பாடுகளுடைய வேளையின்போது அவரது அன்புக்குரியவர்களின் நலன் குறித்த போதகருடைய ஆழ்ந்த கவனத்தை நமக்குக் காண்பித்துத் தருகின்றது.

போதகர் மரிக்கும்போது, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர்?" என்பதான அவரது வார்த்தைகளானது, அவர் தம்மைப் பரம பிதா என்று சொல்லாமல், மாறாக தேவனுடைய குமாரன் என்று சொல்வதை நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இது போதகர் எந்த அளவுக்கு முழுமையாய்ப் பாவியினுடைய தண்டனையை அனுபவித்திட்டார் என்பதையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பாவத்திற்கான தண்டனை என்பது, மரித்துப்போவதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாகத் தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்படுதலையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. பாவியினுடைய ஸ்தானத்தை எடுக்கும் இயேசு, ஒரு கணமாகிலும் பாவியினுடைய (உறவு துண்டிக்கப்பட்ட) அந்நியனாக்கப்பட்ட நிலையினை முழுமையாக அனுபவித்தாக வேண்டும்.

"முடிந்தது" என்று போதகர் கூறின வார்த்தைகளானது, முந்தின நாளன்று அவர் கூறி இருந்த வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. அதென்னவெனில் "ஆகிலும் நான் முழுக வேண்டிய (மரணத்திற்குள்ளான) ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் (முடிவது வரையிலும்) எவ்வளவோ (சிரமப்பட்டு) நெருக்கப்படுகிறேன்" (லூக்கா 12:50).

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்ற வார்த்தைகளானது, இயேசு தம்முடைய ஜீவனை ஒப்புவிக்கின்றார் என்றும், அவர் பெற்றிருந்ததான ஜீவனுக்கான ஆவி என்பது அவரது முந்தின நிலைமையிலிருந்து (இப்போதுள்ள மனித நிலைக்கு) மாற்றப்பட்ட ஒன்று என்றுமுள்ள உண்மைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆதாம் போன்று ஜீவனுக்கான அவரது உரிமையை, அவர் இழந்து காணப்படவில்லை. ஆகையால் அவரால் அந்த ஜீவனை தமது சொந்த ஆவி என்று சொல்ல முடிந்தது; அதை ஜீவனுக்கான அவரது உரிமை என்றும் அவரால் சொல்ல முடிந்தது. உயிர்த்தெழுதலில் அது அவருக்கு மீண்டுமாகக் கொடுக்கப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தின் காரணமாக, அவர் கொஞ்சம் காலம் அதை ஒப்புவித்தவராகவும், சரணடையப்பண்ணினவராகவும் மாத்திரம் காணப்பட்டார்.

*****

# "சபையின் ஏற்படுத்துதல் (ORDINATION)"

## மத்தேயு 28:16-20; லூக்கா 24:36-49.

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." மத்தேயு 28:20.

இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் நாற்பது நாட்களளவும் கொடுத்திட்ட செய்திகள் மூலம், தம்முடைய சபையிடம் அவர் பணியை ஒப்படைப்பதுப் பற்றியே நம்முடைய இப்பாடம் அமைகின்றது. முதலாவதாக எருசலேமுக்கு அருகாமையிலான எம்மாவு என்னும் கிராமத்திற்குச் சீஷர்களில் இருவர் போய்க் கொண்டிருக்கும்போது, அந்தச் சாயங்கால வேளையில் ஆண்டவரினால் கொடுக்கப் பெற்ற வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். அடுத்ததாக இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து, எடுத்துக்கொள்ளப்படுவதற்குச் சற்று முன்னதாக இயேசுவினால் கூறப்பட்ட பணியின் காரியங்களையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

எம்மாவுக்குப் போகிற வழியிலும், அடுத்து வந்து இயேசு காட்சியளித்துத் தோன்றின தருணங்களிலும் கொடுக்கப்பட்ட படிப்பினைகள், அவ்வேளையில் காணப்பட்ட கிறிஸ்துவின் பின்னடியார்கள் யாவருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதாய் இருந்திருக்க வேண்டும். "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கத்தரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்று கூறினார் (லூக்கா 24:44-47).

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தை எடுத்திருக்க வேண்டிய சம்பாஷணைகளையும், வேதவாக்கியங்களின் விளக்கங்களையும், சுவிசேஷகன் சில வார்த்தைகளுக்குள்ளாக அடக்கி கூறியுள்ளார். அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கத்தக்கதாக, என்ன விளக்கங்களெல்லாம் கொடுக்கப்பட்டது என்பது நமக்குச் சொல்லப்படவில்லை என்றாலும், அதை நாம் அனுமானிக்கலாம். இயேசு அநேகமாக வருடந்தோறும், அக்குறிப்பிட்ட காலத்தில் அடிக்கப்படும் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அர்த்தத்தை அவர்களுக்கு விளக்கி, தாம் அந்த ஆட்டுக்குட்டியினுடைய, நிஜமாக இருப்பதைக் காண்பித்துக் கொடுத்திருந்திருக்கலாம்; பஸ்காவினுடைய அர்த்தத்தை அநேகமாக அவர் விளக்கி இருக்கலாம்; அதாவது நிழலில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்திலிருந்து கடக்கப் பெற்றார்கள் என்றும், இந்த முதற்பேறானவர்கள் ஆசாரியர்களையும் உள்ளடக்கின லேவி கோத்திரத்தாரினால் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள் என்றும், இந்த முதற் பேறானவர்களுக்கான நிஜமாக, (பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய முதற்பலனான) சபை காணப்படுவார்கள் என்றும், இயேசுவின் பின்னடியார்களாகிய பரிசுத்தவான்கள் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினராகவும் மற்றும் நிஜமான லேவியர்கள் என்பவர்கள், மேசியாவின் இராஜ்யத்தில் மனுக்குலத்தின் உலகமானது உயர்த்தப்படும் வேலையில், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாருக்கு வேலைக்காரர்களாகவும் இருப்பார்கள் என்றும் விளக்கியிருந்திருக்கலாம்.

ஆண்டவர் நிஜமான பாவ நிவாரண நாள் குறித்தும், விசேஷித்த பலிகள் குறித்துங்கூடச் சில விளக்கங்களைச் சீஷர்களுக்குக் கொடுத்திருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை; அதாவது, தாமே இந்த விசேஷித்தப் பலிகளை ஆரம்பித்ததாகவும், அது தம்முடைய சீஷர்களினால் தொடரப்படும் என்பதாகவும், பலிகள் நிறைவடையும்போது பிரதான ஆசாரியனிடமிருந்து, ஒப்புரவாகுதலின்/பாவ நிவாரண ஆசீர்வாதங்கள் ஆயிரம் வருடங்கள் கொண்ட மேசியாவின் இராஜ்யத்தில் கடந்துவரும் என்பதாகவும் ஆண்டவர் விளக்கம் கொடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## "உன்னதத்திலிருந்து வல்லமை வாக்களிக்கப்பட்டது"

ஆண்டவருடைய மாபெரும் திட்டங்களில் எவைகளெல்லாம் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், ஆண்டவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அவைகளைக் கேட்பதில் ஆழமான ஆர்வத்தை அடைந்திருப்பார்கள் என்பதில் நமக்கு உறுதியே. அவர்களுடைய கவலை மறைந்துவிட்டது. ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் ஆண்டவரையும், அவருடைய ஆலோசனைகளையும், அவருடைய அறிவுரைகளையும் இழந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனால் இப்பொழுதுதோ இந்தப் பிரகாசிப்பித்தலின் வாயிலாக, அவர்களுடைய இருதயங்கள் அறிவினுடைய புதிய ஏவுதலினால் கொளுந்துவிட்டு எரிந்தது. அவர்களால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாத தெய்வீகத் திட்டத்தினுடைய உயரங்களையும், ஆழங்களையும், நீளங்களையும், அகலங்களையும் கண்டார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் தூண்டப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் நடைபெறுவதற்கு, இயேசுவின் மரணம் அவசியமாய் உள்ளது என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள். தங்களுக்கு அவரோடு கூடப் பாடுபடுவதற்கு மாத்திரமல்லாமல், மகிமையடைவதற்குமான சிலாக்கியம் உள்ளதையும், அவர்கள் கண்டுகொண்டார்கள்.

அக்கடைசி தருணத்தின்போதான் ஆண்டவருடைய செய்தியின் நிறைவு பகுதியானது, "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" என்பதேயாகும் (லூக்கா 24:49). கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை, அவர்களுடைய தலையாகிய இயேசுவிடமிருந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதைப் பிதா பல்வேறு நிழல்களில் வாக்களித்துள்ளார். உதாரணமாக, இக்காரியத்திற்கு ஆரோனின் தலையில் ஊற்றப்பட்ட பரிசுத்த தைலம் நிழலாகக் காணப்படுகின்றது; ஆரோன் இயேசுவுக்கு நிழலாய் இருக்கின்றார்; மற்றும் ஆரோனின் சரீரத்தில் தைலம் வழிந்தோடின காரியமானது, சபையினுடைய அபிஷேகித்தலுக்கு நிழலாய் இருக்கின்றது.

இப்படியாகச் சபையினுடைய தெய்வீக ஏற்றுக்கொள்ளப்படுதல்/அங்கீகரிக்கப்படுதல் குறித்ததான இந்த வாக்குத்தத்தமானது மிகவும் முக்கியமான காரியமாகும். இது இல்லாமல், சீஷர்களுக்கு எந்தப் பணியும் இருக்காது, மற்றும் சீஷர்களால் தேவனுடைய ஸ்தானாபதிகளாகவும் இருக்க முடியாது. இயேசு முதலாவதாக 12-பேரையும், பிற்பாடு எழுபது பேரையும் அனுப்பி வைத்தது உண்மைதான்; ஆனால், இவர்கள் அவருடைய தனிப்பட்ட பிரதிநிதிகளாகக் காணப்பட்டனர்; அவர் தம்முடைய சொந்த ஆவியையே, தம்முடைய சொந்த வல்லமையையே இவர்களுக்குக் கொடுத்திருந்தார்; மேலும் இதை வைத்துதான் இவர்கள் அற்புதங்களைச் செய்து, பிசாசுகளைத் துரத்தினார்கள். இவர்கள் அப்போது பிதாவினால் அங்கீகரிக்கப்படவில்லை. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை" (யோவான் 7:39). இந்தப் பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலுக்காகவும், அபிஷேகத்திற்காகவும் இவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்தப் பரிசுத்த ஆவியினால் மாத்திரமே இவர்கள் தெய்வீக ஊழியத்திற்கும், தேவனுடைய ஸ்தானாபதிகளாகவும் மற்றும் பிரதிநிதிகளாகவும் இருப்பதற்கும் தகுதிப்படுத்தப்பட முடியும்.

## "இதோ உங்களுடனேகூட இருக்கிறேன்"

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஆசியும், தம்முடைய நற்செய்தியைத் தெரிவிப்பதற்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்ததும் பற்றியதான பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது, நம்மை வெகுவாய் ஈர்க்கின்றது. கர்த்தர் சந்திப்பேன் என்று கூறியப் பிரகாரமாகவே, பதினொரு பேரும் அவரைக் கலிலேயாவிலுள்ள மலை ஒன்றில் சந்தித்தார்கள். அவர் கொஞ்சம் நேரந்தான் அவர்களுக்குக் காட்சியளித்துத் தோன்றினார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டனர், சிலர் முழுமையாய் நம்பிக்கொண்டனர், சிலர் தடுமாற்றத்திலேயே காணப்பட்டனர். இப்படியாக தடுமாற்றத்தில் இருப்பவர்களை நம்ப செய்வதற்கே, இயேசு நாற்பது நாட்கள் பூமியில் காணப்பட்டார். பதினொரு பேரையும் நம்ப வைக்கும் தமது வேலையை, கர்த்தர் முழுமையாய் நிறைவேற்றினார் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில், அவர்கள் மேல்வீட்டறையில், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களுக்காகக் காத்திருக்கும்போது, ஒரே இருதயமும், ஒரே மனமும் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம்.

இயேசு அவர்கள் அருகாமையில் வந்து, பூமிக்குரிய காரியங்கள் மற்றும் பரலோகத்திற்குரிய காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தமக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாகத்

தெரிவித்தார். இவ்விஷயத்தை அவர்கள் உணர்ந்துக்கொள்ளாதது வரையிலும், அவர்களால் சரியான விதத்தில், உலகத்திற்கு முன்னதாக அவரை அடையாளங்காட்ட முடியாது. இந்த ஓர் அதிகாரத்தையும், வல்லமையையும் அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலத்தில் கொண்டிருக்கவில்லை. அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலப் பகுதியில், மரணம் வரையிலுமான, அதாவது சிலுவையின் மரணம் பரியந்தமுமான தம்முடைய உண்மையுடன்கூடிய நேர்மைக்கான பரீட்சையின் கீழ்க் காணப்பட்டார். ஆனால் அவர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டின பிற்பாடு, பிதா அவரை மரணத்திலிருந்து மகிமையான பூரண வல்லமைக்கான நிலைமைக்கு எழுப்பினார். இப்படியாக அவர் மரணத்திலிருந்ததான தம்முயை உயிர்த்தெழுதல் வாயிலாக, வல்லமையுள்ள தேவனுடைய குமாரனாக அழைக்கப்பெற்றார். தாம் இனி ஒருபோதும் மனிதனுக்கான எல்லைகளின் கீழ் அல்லது மரண உடன்படிக்கையினுடைய எல்லைகளின் கீழ்க் காணப்படுவதில்லை என்பதை, கர்த்தர் தம் சீஷர்கள் அறிய வேண்டுமென விரும்பிட்டார். அந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றிவிட்டார். அவர் ஆசீர்வாதத்திற்குள், பலனுக்குள் இப்பொழுது பிரவேசித்திட்டார். அவர் சுபாவ மாற்றத்தை அடைந்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவர் பூமிக்குரிய காரியங்களில் மாத்திரமல்லாமல் பரம காரியங்களிலும் அனைத்து வல்லமையையும் பெற்றுள்ளார்.

வானோர் மற்றும் பூதலத்தார் அனைவரும் அவருக்கு முன்பாக வணங்கிடுவார்கள் என்பதாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது நிறைவேற ஆரம்பிக்கும் நிலைக்கு அவர் வந்திருக்கின்றார். அவர் பரத்திற்கு ஏறிச்சென்றார்; அங்குத் தேவதூதர்கள் அனைவரும் அவரைப் பணிந்துக்கொண்டு, அவர் பிதாவினால் உயர்த்தப்பட்டவரென அவருக்குச் செவிக்கொடுக்கின்றனர். தீர்க்கத்தரிசனத்தின்/வாக்குத்தத்தத்தின் ஒரு பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. அதாவது, பூலோகத்தார் யாவரும் அவர் முன் வணங்கிட வேண்டுமென்ற பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. இப்படியாகச் சம்பவிப்பதற்கான காலம், ஆயிர வருடங்கள் கொண்ட அவருடைய மேசியாவின் இராஜ்யத்திலேயே ஆகும். ஆனால் தற்காலத்தில் இயேசு, தேவனுடைய குமாரன் என்ற அறிவிற்குள்ளாக வருபவர்கள் அனைவரும், அவர் பிதாவின் பிரதிநிதி என்ற விதத்தில், தங்கள் முழங்கால்களை அவருக்கு முன்பாக மகிழ்ச்சியுடன் முடக்குகின்றனர். இப்படியாகவே உலகமும் அவரை ஒரே பேறான குமாரன் என்று அடையாளம் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிவார்கள்.

இறுதியில் எல்லா முழங்கால்களும் முடங்கும், எல்லா நாவுகளும் அறிக்கைப் பண்ணும்; தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவனுடைய மகிமைப்படுத்தப்பட்ட குமாரனை ஏற்றுக்கொள்ள தவறுபவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்; அதாவது, தேவன் கிறிஸ்து மூலமாய் விழுந்துபோன சந்ததிக்கு வடிவமைத்திட்ட ஆசீர்வாதங்களையும், தேவக் கிருபைகளையும், இன்னமும் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாகக் கருதப்படுவார்கள்.

## "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், உபதேசம் பண்ணுங்கள்"

இங்குதான் உருவாகின்றது, ஊழிய பொறுப்பு ஒப்படைக்கப்படும் காரியம். முதலாவது இந்தப் பணி பதினொரு அப்போஸ்தலர்களுக்கு உரியதாய் இருந்தது; பின்னர், இதனுள் யூதாசுக்குப் பதிலாக வந்த பரிசுத்தவானாகிய பவுலும் இடம்பெறுகின்றார். "மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்" என்று பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 11:5). அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்குமான வாய்க்கருவிகளாக, உலகத்திற்கு காணப்படுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு வாரிசாக, அப்போஸ்தல கண்காணிகள் காணப்படுகின்றார்கள் எனச் சொல்லப்படுவது அனைத்தும் தவறான காரியமாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததுமாக இருக்கின்றது. அப்போஸ்தலர்களுக்குப் பின்வரும் அப்போஸ்தலர்கள் என்று எவரும் இல்லை; அப்போஸ்தலர்கள் இன்னமும் நம்முடன் காணப்படுகின்றனர்; இவர்கள் மூலமான ஆண்டவருடைய செய்தியானது, நமக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16, 17). அப்போஸ்தலர்களிடமே சபையை ஆரம்பித்து வைப்பதற்கான மாபெரும் வேலை ஒப்படைக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று வல்லமையினைப் பெற்றுக்கொண்டார்கள்.

இயேசு 12-அப்போஸ்தலர்களைச் சபைக்கான வாய்க் கருவிகளாக/ பிரதிநிதிகளாக விசேஷமாய் நியமித்தது, அவர்கள் பூமியிலே எதைக் கட்டுகிறார்களோ, அது பரலோகத்திலும்

கட்டப்படும் என்றும், அவர்கள் பூமியிலே எதை அவிழ்க்கின்றார்களோ, அது பரலோகத்திலும் அவிழ்க்கப்படும் என்றும் தெரிவித்திருந்தாலும், சபையினுடைய ஒவ்வொரு அங்கமும் தம்முடைய பிரதிநிதியாக இருக்கத்தக்கதாகவும், அவரவருடைய வாய்ப்பு மற்றும் திறமைக்குத் தக்கதாக சுவிசேஷச் செய்தியை அறிவிக்கும் வேலையில் பங்கடையத்தக்கதாகவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தையும், ஜெநிப்பித்தலையும் அடைந்தவர்கள், ஏசாயா 61:1-3-ஆகிய வசனங்களின்படி, அபிஷேகிக்கப்பட்ட தலையாகிய இயேசுவின் கீழ், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும் . . . அவர் என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1-3). பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் இப்படியாக அவன் (அ) அவளுடைய வாய்ப்பு (அ) வரம்பு (அ) சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர். சகோதரிகள் பொதுவிடங்களில் போதிக்கக்கூடாது என்பது அப்போஸ்தலர் கொடுத்திட்ட ஒரு கட்டுப்பாடாகும் (1 தீமோத்தேயு 2:12). எனினும் அனைவருக்கும், அநேகமான வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் கிறிஸ்தவ மண்டலத்தின் குருமார் வகுப்பார் (clergy class), அதாவது தாங்கள் மாத்திரமே தேவனுடைய செய்தியைப் போதிப்பதற்கு (அ) பிரசங்கிப்பதற்கு அதிகாரம் உடையவர்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக்கொள்பவர்களாகிய குருமார்கள், மாபெரும் தவறை செய்துள்ளனர். இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, குருமார் வகுப்பாரை (clergy) (அ) கிறிஸ்தவ பொதுமக்கள் வகுப்பாரை(laity) தங்கள் மத்தியில் கொண்டிருக்கவில்லை. மாறாக, நமது கர்த்தர், "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். . . கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்றே கூறியுள்ளார் (மத்தேயு 23:8, 10). ஆண்டவரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆண்டவருடைய சீஷர்கள் மத்தியில் குறிப்பிட்ட வகுப்பாரை, மாபெரியவர்கள் போல் நாடுவதையும் மற்றும் குருமார் வகுப்பார் போன்ற காரியத்தையும் தடை பண்ணுகிறவர்களாகவே காணப்பட்டனர்.

## "சபைக்கான பணி"

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளிலிருந்தும் சீஷர்களை உருவாக்கிடுங்கள்" (சரியான மொழிப்பெயர்ப்பு) என்ற செய்தி அப்போஸ்தலர்களுக்கு வழங்கப்பட்டது. ஜாதிகளை/தேசங்களைச் சீஷராக்க வேண்டும் என்பதாக பணி கொடுக்கப்படவில்லை; மாறாக, அனைத்துத் தேசங்களிலிருந்தும், கிறிஸ்துவின் சீஷர்களாகும்படிக்கு விரும்புபவர்கள் ஐசுவரியவான்களாகவோ (அ) தரித்திரர்களாகவோ, கல்வியறிவு உடையவர்களாகவோ (அ) கல்வி அறிவு இல்லாதவர்களாகவோ, இழிவானவர்களாகவோ (அ) மேன்மையானவர்களாகவோ இருந்திட்டாலும், அவர்களைச் சேர்த்துக் கொள்வதே பணியாகும். கிறிஸ்துவின் சீஷன் என்பவன் அவருடைய பின்னடியானவனாகவும், கற்றுக்கொள்கிறவனாகவும், பின்பற்றுகிறவனாகவும் இருக்கின்றான். இந்தச் சீஷத்துவத்தை இயேசு பின்வருமாறு விளக்குகின்றார்; அதாவது, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், (என்னுடைய சீஷனாக இருக்கவிரும்பினால்) அவன் தன்னைத் தான் வெறுத்து, (தன்னையும், தனது தாலந்துகளையும், தனது சித்தத்தையும், தனது ஆஸ்தியையும், தன்னுடைய அனைத்தையும் தள்ளிவைத்துவிட்டு, சீஷத்துவத்தை முதலாவதாக நிறுத்தி) தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

கிறிஸ்துவின் உண்மையான பின்னடியார்களாகவும், உண்மையான சீஷர்களாகவும் காணப்படும் அனைவரும், கர்த்தர் தங்களை வழிநடத்துகின்ற பாதை கடினமான ஒன்று என்றும், இப்பாதையில் தங்கள் சொந்த சித்தங்கள் தொடர்ந்து சிலுவையில் அறையப்பட்டு, கீழ்ப்படுத்தப்பட வேண்டும் என்றும், இப்பாதையில் தங்களுக்கு மாம்சத்தின் விஷயத்தில் எப்போதும் சிரமம்/பிரச்சனை காணப்படும் என்றும் உணர்ந்துக்கொள்வார்கள். எனினும் இறுதியில் நான் எங்கே இருக்கின்றேனோ (பரலோகத்தில் (அ) மகிமையின் இராஜ்யத்தில்) அங்கே என் சீஷர்களும் இருப்பார்கள்" என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவினுடைய சபையின் தண்ணீர் ஞானஸ்நானமானது, உலகத்திற்கு மரித்திருக்கிற காரியத்திற்கும், சுயத்திற்கு மரித்திருக்கிறதற்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினராக, புதிதான ஜீவனுக்குள் எழுந்திருக்கிறதற்குமுரிய அடையாளமாகப் பார்க்கப்பட்டாலும், தண்ணீர்

ஞானஸ்நானமானது வெறும் ஓர் அடையாளமே. ஆகையால் நமது பணி தண்ணீர் ஞானஸ்நானம் வழங்குவதாக இல்லாமல், மாறாக பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக கொடுக்கப்பட வேண்டிய ஞானஸ்நானமாய் இருக்கின்றது என நமக்குக் கூறப்பட்டுள்ளது. "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக ஞானஸ்நானம் கொடுங்கள்" (சரியான மொழிப்பெயர்ப்பு) எனும் வசனத்தில் இடம்பெறும் **"நாமத்திற்குள்ளாக"** எனும்போது, இது ஐக்கியத்திற்குள்ளாக ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்துவின் சீஷர்கள் அனைவரும், பிதாவினுடைய நாமம், நீதியின் சார்பில் உள்ளது என்பதை அங்கீகரிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் அவரது நாமத்தை முன்வைக்கும் கொள்கையைத் தவிர, மற்ற அனைத்துக் கொள்கைகளுக்கும் அவர்கள் மரித்தவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் நீதியின், நியாயத்தின், உண்மையின் நாமத்திற்குள்ளாக அவர்கள் முற்றும் முழுமையாய் மூழ்கிக் காணப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் மற்ற நாமங்களாகிய லுத்தரன்ஸ் (Lutherans) (அ) கல்வீனிஸ்ட் (Calvinist) (அ) உரோமன் கத்தோலிக்கம் (அ) கிரேக்க கத்தோலிக்கம் (அ) ஆங்கிலிக்கன் கத்தோலிக்கம் (Anglical Catholic) (அ) வெஸ்லியன்ஸ் (Wesleyans) ஆகியவைகளைப் புறக்கணித்துவிட்டு, கிறிஸ்துவின் நாமத்திற்குள்ளாக மூழ்கிட வேண்டும்; மற்றும் அவருடைய நாமத்தையும் அங்கீகரித்திட வேண்டும்; மற்றும் அவருடைய சரீரமாகவும், அவருடைய சபையாகவும், அவருடைய அங்கத்தினர்களாகவும் காணப்பட வேண்டும். இன்னுமாக அவர்கள் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாகவும் மூழ்கிட வேண்டும்; மற்றும் பரிசுத்த ஆவியை அங்கீகரித்திட வேண்டும்; அதாவது, தங்கள் சொந்த ஆவியையும், தங்கள் சொந்த சித்தத்தையும் மரிக்கப் பண்ணி, அவர்கள் பரிசுத்த ஆவியினை அங்கீகரித்திட வேண்டும். அவர்களுடைய சொந்த இலட்சியங்களும், நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும் புறக்கணிப்பட வேண்டும். தேவனுடைய பரிசுத்தமான சித்தமும், தேவனுடைய மனதும், தேவனுடைய பரிசுத்தமான நோக்கமுந்தான் அவர்களுடைய சித்தமாகவும், நோக்கமாகவும் காணப்பட வேண்டும்.

இப்படியாக எல்லா தேசங்களிலுமுள்ள, எல்லா ஜனங்கள் மத்தியில் நமது செய்தியைக் கேட்கிறதற்குச் செவியுடையவர்களிடத்தில், நமக்கான பணி காணப்படுகின்றது. நாம் அப்படிப்பட்டவர்களைச் சீஷராக்கி, அவர்களைப் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியினுடைய நாமத்திற்குள்ளாக முழுகப் பண்ணிட வேண்டும். இயேசு கட்டளையிட்டவைகளையெல்லாம் கடைப்பிடிக்கும்படிக்கு நாம் அவர்களுக்கு உபதேசத்திட வேண்டும். இதுவே நம்முடைய அதிகாரத்தினுடைய எல்லையாக இருக்கின்றது. நாம் மனித அமைப்புகளை உருவாக்கவுங்கூடாது; மற்றும் உருவாக்கிக் கொண்டு, அதனை இராஜ்யங்கள், சபைகள் என்றோ (அ) வேறு நாமத்திலோ அழைக்கக்கூடாது. நாம் இயேசுவின் பின்னடியார்களை ஆயத்தம் மாத்திரமே பண்ணவேண்டும்; தேவனோடு ஒத்தழைக்க மாத்திரமே வேண்டும்; தமது தயவுள்ள திருவுளத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உண்டு பண்ணுபவராகிய தேவனோடு, நாம் ஒத்துழைக்க மாத்திரமே வேண்டும்.

## "உலகத்தின் முடிவு பரியந்தம்"

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" இயேசுவின் இந்த வார்த்தைகளானது, உலகம் ஒரு முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவிப்பதாகப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது; ஆனால் கிரேக்க மொழி அர்த்தத்தின்படி பார்க்கும் போது, ஆண்டவர் யுகத்தின் முடிவு வரையிலும் தம்முடைய ஜனங்களோடு இருப்பார் என்பதே ஆண்டவர் உண்மையிலேயே கூறினவைகளாகும்; அதாவது தெய்வீக நோக்கம் நிறைவேற்றப்படத்தக்கதாக, போதுமான எண்ணிக்கையில் கிறிஸ்துவின் சீஷர்கள் சேர்க்கப்படுவதாகிய தெய்வீக நோக்கத்துடன் கூடிய பணியைச் சுவிசேஷ யுகமானது முடிப்பது வரையிலும், சுவிசேஷச் செய்தியானது, இராஜரிக கூட்டத்தாராகிய, மகிமையிலுள்ள கிறிஸ்துவின் மணவாட்டிக்கான எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக, (சீஷர்களை) சத்தியத்திற்குக் கீழ்ப்படியப் பண்ணுவதன் மூலமாக (அவர்களிடத்தில்) பரிசுத்தமாக்கப்படுதலை நிறைவேற்றி முடிப்பது வரையிலும், அவர் தம்முடைய ஜனங்களோடுகூடக் காணப்படுவார். பின்னர் யுகத்தினுடைய முடிவுவரும். பின்னர் ஆண்டவர்தாமே, தம்முடைய தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதற்கும், அவர்களைத் தம்மோடுகூட மகிமைப்படுத்துவதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் அல்லாத மனுக்குலத்தின் உலகத்தாரை ஆசீர்வதிப்பதற்குமென வருவார்.

**ஆமென்!**

---

# சபையின் ஏற்படுத்துதல் (ORDINATION)

## மத்தேயு 28:16-20; லூக்கா 24:36-49

*"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." (மத்தேயு 28:20)*

இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் நாற்பது நாட்களளவும் கொடுத்திட்ட செய்திகள் மூலம், தம்முடைய சபையிடம் அவர் பணியை ஒப்படைப்பதுப் பற்றியே நம்முடைய இப்பாடம் அமைகின்றது. முதலாவதாக எருசலேமுக்கு அருகாமையிலான எம்மாவு என்னும் கிராமத்திற்குச் சீஷர்களில் இருவர் போய்க் கொண்டிருக்கும்போது, அந்தச் சாயங்கால வேளையில் ஆண்டவரினால் கொடுக்கப் பெற்ற வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். அடுத்ததாக இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து, எடுத்துக்கொள்ளப்படுவதற்குச் சற்று முன்னதாக இயேசுவினால் கூறப்பட்ட பணியின் காரியங்களையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

### இதோ உங்களுடனேகூட இருக்கிறேன்

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஆசியும், தம்முடைய நற்செய்தியைத் தெரிவிப்பதற்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்ததும் பற்றியதான பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது, நம்மை வெகுவாய் ஈர்க்கின்றது. கர்த்தர் சந்திப்பேன் என்று கூறியப் பிரகாரமாகவே, பதினொரு பேரும் அவரைக் கலிலேயாவிலுள்ள மலை ஒன்றில் சந்தித்தார்கள். அவர் கொஞ்சம் நேரந்தான் அவர்களுக்குக் காட்சியளித்துத் தோன்றினார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டனர், சிலர் முழுமையாய் நம்பிக்கொண்டனர், சிலர் தடுமாற்றத்திலேயே காணப்பட்டனர். இப்படியாக தடுமாற்றத்தில் இருப்பவர்களை நம்ப செய்வதற்கே, இயேசு நாற்பது நாட்கள் பூமியில் காணப்பட்டார். பதினொரு பேரையும் நம்ப வைக்கும் தமது வேலையை, கர்த்தர் முழுமையாய் நிறைவேற்றினார் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில், அவர்கள் மேல்வீட்டறையில், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களுக்காகக் காத்திருக்கும்போது, ஒரே இருதயமும், ஒரே மனமும் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம்.

இயேசு அவர்கள் அருகாமையில் வந்து, பூமிக்குரிய காரியங்கள் மற்றும் பரலோகத்திற்குரிய காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தமக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இவ்விஷயத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளாதது வரையிலும், அவர்களால் சரியான விதத்தில், உலகத்திற்கு முன்னதாக அவரை அடையாளங்காட்ட முடியாது. இந்த ஓர் அதிகாரத்தையும், வல்லமையையும் அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலத்தில் கொண்டிருக்கவில்லை. அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலப் பகுதியில், மரணம் வரையிலுமான, அதாவது சிலுவையின் மரணம் பரியந்தமுமான தம்முடைய உண்மையுடன்கூடிய நேர்மைக்கான பரீட்சையின் கீழ்க் காணப்பட்டார். ஆனால் அவர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டின பிற்பாடு, பிதா அவரை மரணத்திலிருந்து மகிமையான பூரண வல்லமைக்கான நிலைமைக்கு எழுப்பினார். இப்படியாக அவர் மரணத்திலிருந்ததான தம்முடைய உயிர்த்தெழுதல் வாயிலாக, வல்லமையுள்ள தேவனுடைய குமாரனாக அழைக்கப்பெற்றார். தாம் இனி ஒருபோதும் மனிதனுக்கான எல்லைகளின் கீழ் அல்லது மரண உடன்படிக்கையினுடைய எல்லைகளின் கீழ்க் காணப்படுவதில்லை என்பதை, கர்த்தர் தம் சீஷர்கள் அறிய வேண்டுமென விரும்பிட்டார். அந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றிவிட்டார். அவர் ஆசீர்வாதத்திற்குள், பலனுக்குள் இப்பொழுது பிரவேசித்திட்டார். அவர் சுபாவ மாற்றத்தை அடைந்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவர் பூமிக்குரிய காரியங்களில் மாத்திரமல்லாமல் பரம காரியங்களிலும் அனைத்து வல்லமையையும் பெற்றுள்ளார்.

வானோர் மற்றும் பூதலத்தார் அனைவரும் அவருக்கு முன்பாக வணங்கிடுவார்கள் என்பதாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது

நிறைவேற ஆரம்பிக்கும் நிலைக்கு அவர் வந்திருக்கின்றார். அவர் பரத்திற்கு ஏறிச்சென்றார்; அங்குத் தேவதூதர்கள் அனைவரும் அவரைப் பணிந்துகொண்டு, அவர் பிதாவினால் உயர்த்தப்பட்டவரென அவருக்குச் செவிக்கொடுக்கின்றனர். தீர்க்கத்தரிசனத்தின்/வாக்குத்தத்தத்தின் ஒரு பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. அதாவது, பூலோகத்தார் யாவரும் அவர் முன் வணங்கிட வேண்டுமென்ற பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. இப்படியாகச் சம்பவிப்பதற்கான காலம், ஆயிர வருடங்கள் கொண்ட அவருடைய மேசியாவின் இராஜ்யத்திலேயே ஆகும். ஆனால் தற்காலத்தில் இயேசு, தேவனுடைய குமாரன் என்ற அறிவிற்குள்ளாக வருபவர்கள் அனைவரும், அவர் பிதாவின் பிரதிநிதி என்ற விதத்தில், தங்கள் முழங்கால்களை அவருக்கு முன்பாக மகிழ்ச்சியுடன் முடக்குகின்றனர். இப்படியாகவே உலகமும் அவரை ஒரே பேறான குமாரன் என்று அடையாளம் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிவார்கள்.

இறுதியில் எல்லா முழங்கால்களும் முடங்கும், எல்லா நாவுகளும் அறிக்கைப் பண்ணும்; தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவனுடைய மகிமைப்படுத்தப்பட்ட குமாரனை ஏற்றுக்கொள்ள தவறுபவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்; அதாவது, தேவன் கிறிஸ்து மூலமாய் விழுந்துபோன சந்ததிக்கு வடிவமைத்திட்ட ஆசீர்வாதங்களையும், தேவக் கிருபைகளையும், இன்னமும் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாகக் கருதப்படுவார்கள்.

## ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், உபதேசம்பண்ணுங்கள்

இங்குதான் உருவாகின்றது, ஊழிய பொறுப்பு ஒப்படைக்கப்படும் காரியம். முதலாவது இந்தப் பணி பதினொரு அப்போஸ்தலர்களுக்கு உரியதாய் இருந்தது; பின்னர், இதனுள் யூதாசுக்குப் பதிலாக வந்த பரிசுத்தவானாகிய பவுலும் இடம்பெறுகின்றார். "மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்" என்று பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 11:5). அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்குமான வாய்க்கருவிகளாக, உலகத்திற்குக் காணப்படுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு வாரிசாக, அப்போஸ்தல கண்காணிகள் காணப்படுகின்றார்கள் எனச் சொல்லப்படுவது அனைத்தும் தவறான காரியமாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததுமாக இருக்கின்றது. அப்போஸ்தலர்களுக்குப் பின்வரும் அப்போஸ்தலர்கள் என்று எவரும் இல்லை; அப்போஸ்தலர்கள் இன்னமும் நம்முடன் காணப்படுகின்றனர்; இவர்கள் மூலமான ஆண்டவருடைய செய்தியானது, நமக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16, 17). அப்போஸ்தலர்களிடமே சபையை ஆரம்பித்து வைப்பதற்கான மாபெரும் வேலை ஒப்படைக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று வல்லமையினைப் பெற்றுக்கொண்டார்கள்.

இயேசு 12-அப்போஸ்தலர்களைச் சபைக்கான வாய்க் கருவிகளாக/பிரதிநிதிகளாக விசேஷமாய் நியமித்தது, அவர்கள் பூமியிலே எதைக் கட்டுகிறார்களோ, அது பரலோகத்திலும் கட்டப்படும் என்றும், அவர்கள் பூமியிலே எதை அவிழ்க்கின்றார்களோ, அது பரலோகத்திலும் அவிழ்க்கப்படும் என்றும் தெரிவித்திருந்தாலும், சபையினுடைய ஒவ்வொரு அங்கமும் தம்முடைய பிரதிநிதியாக இருக்கத்தக்கதாகவும், அவரவருடைய வாய்ப்பு மற்றும் திறமைக்குத்தக்கதாக சுவிசேஷச்செய்தியை அறிவிக்கும் வேலையில் பங்கடையத்தக்கதாகவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தையும், ஜெநிப்பித்தலையும் அடைந்தவர்கள், ஏசாயா 61:1-3-ஆகிய வசனங்களின்படி, அபிஷேகிக்கப்பட்ட தலையாகிய இயேசுவின் கீழ், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும் . . . அவர் என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1-3). பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள

அனைவரும் இப்படியாக அவன் (அ) அவளுடைய வாய்ப்பு (அ) வரம்பு (அ) சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர். சகோதரிகள் பொதுவிடங்களில் போதிக்கக்கூடாது என்பது அப்போஸ்தலர் கொடுத்திட்ட ஒரு கட்டுப்பாடாகும் (1 தீமோத்தேயு 2:12). எனினும் அனைவருக்கும், அநேகமான வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் கிறிஸ்தவ மண்டலத்தின் குருமார் வகுப்பார் (clergy class), அதாவது தாங்கள் மாத்திரமே தேவனுடைய செய்தியைப் போதிப்பதற்கு (அ) பிரசங்கிப்பதற்கு அதிகாரம் உடையவர்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக்கொள்பவர்களாகிய குருமார்கள், மாபெரும் தவறை செய்துள்ளனர். இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, குருமார் வகுப்பாரை (clergy) (அ) கிறிஸ்தவ பொதுமக்கள் வகுப்பாரை (laity) தங்கள் மத்தியில் கொண்டிருக்கவில்லை. மாறாக நமது கர்த்தர், "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். . . கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்றே கூறியுள்ளார் (மத்தேயு 23:8, 10). ஆண்டவரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆண்டவருடைய சீஷர்கள் மத்தியில் குறிப்பிட்ட வகுப்பாரை, மாபெரியவர்கள் போல் நாடுவதையும் மற்றும் குருமார் வகுப்பார் போன்ற காரியத்தையும் தடை பண்ணுகிறவர்களாகவே காணப்பட்டனர்.

---

R 5588

# "அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு...."

## லூக்கா 24:50-53; அப்போஸ்தலர் 1:1-11.

"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?"—யோவான் 6:62.

நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, அவர் பூமியில் நாற்பது நாட்கள் காணப்பட்ட காரியம், தெய்வீக நோக்கம் நிறைவேற்றப்படுவதற்குப் போதுமான காலமாய் இருந்தது. இஸ்ரயேலையும், உலகத்தையும் ஆளத்தக்கதாக, சிங்காசனத்தில் இருக்கப்போகிறவர் என்று சீஷர்களால் அனுமானிக்கப்பட்டவர், சிலுவையில் அறையப்பட்டதினிமித்தமாக, ஆரம்பத்தில் சீஷர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் இப்போது நீங்கிவிட்டது. உண்மைகளை சீஷர்களுக்குத் தெரிவித்தக்காரியத்தில், தெய்வீக ஞானம் விளங்குவதை நம்மால் காணமுடிகின்றது. இயேசு பிற்பாடு, தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குக் காட்சியளித்ததுபோல, ஒருவேளை உயிர்த்தெழுந்த காலகட்டத்தின்போது, சூரியனுடைய பிரகாசத்திலும் மேலான ஒளியில் காட்சியளித்திருந்தால், சீஷர்கள் எப்படிப் பயமுறுத்தப்பட்டிருப்பார்கள்; ஆனால் இயேசு காட்சியளித்த விதத்தில், சீஷர்கள் இப்படியாகவெல்லாம் பயமுறுத்தப்படவில்லை. சீஷர்கள் தங்களுடைய கர்த்தர் இனி ஒருபோதும் மரித்தவர் அல்ல என்றும், அவர் உயிரோடு இருக்கின்றார் என்றும், அவர் இனி ஒருபோதும் ஒரு மனித ஜீவியாக இராமல், மாறாக ஆவிக்குரிய ஜீவியாக இப்பொழுது காணப்படுகின்றார் என்றும், அவர் இனி மனிதன் போல் நடக்க வேண்டியதில்லை என்றும், மாறாக தேவதூதர்கள்போல், காற்றைப்போன்று வரலாம், போகலாம் மற்றும் விரும்பினால் தோன்றலாம், மறையலாம் என்றும் படிப்படியாகக் கற்றுக்கொண்டார்கள்.

அது மெதுவாகப் புகட்டப்பட்ட பாடமாகும். முதலாம் நாளில் மூன்றுமுறை அவர் காட்சியளித்த பிற்பாடு, அடுத்த ஓய்வுநாளில் அவர் நாலாம்முறைக் காட்சியளிப்பது வரையிலும், இடைப்பட்ட ஒவ்வொரு நாட்களிலும் அவருக்காக எதிர்ப்பார்த்துச் சீஷர்கள் காத்திருந்தனர். இந்தத் தாமதமானது, அவரைப்பற்றின அறிவிற்கான அவர்களது பசியை, தாகத்தையே தூண்டினது. இதற்கிடையில், இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது, தங்களிடம் கூறியக் காரியங்களைக் குறித்து, சீஷர்களால் சிந்தித்துப்பாக்க முடிந்தது, மற்றும் சிந்திக்கவுஞ்செய்தார்கள். தாங்கள் பரலோக இராஜ்யத்திற்குப்பதிலாக, பூமிக்குரிய இராஜ்யத்தை எதிர்ப்பார்த்ததில் தவறு செய்துள்ளார்கள் அல்லது மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டுள்ளார்கள் என்று சீஷர்கள் உணர்ந்துகொண்டனர்.

எம்மாவு எனும் ஊருக்குப் போகிற வழியில் கொடுக்கப்பட்ட பாடமானது, மிகவும் மனதில் பதியப் பெற்றதாய்க் காணப்பட்டிருக்க வேண்டும். அந்தப் பாடமானது இயேசுவைப்பற்றின தீர்க்கதரிசனங்களைக் கையாளுகிறதாய் இருந்து, எப்படி இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது, அதாவது இந்தத் தீர்க்கத்தரிசனங்களில் சில எற்கெனவே நிறைவேறிவிட்டது என்பதையும், சில இன்னும் எதிர்க்காலத்தில் நிறைவேறும் என்பதையும் அவர்களுக்கு விளக்கிக் கொடுத்ததாய் இருந்தது. அவர் இந்த விளக்கங்களையெல்லாம் கொடுத்தபோது, அவர்கள் தங்கள் இருதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தது என்று சரியாகத்தான் சொல்லியிருக்கின்றனர்!

## "ஒரு முக்கியமான படிப்பினை"

நான்கு முறை அவர் காட்சியளித்துத் தோன்றின பிற்பாடு, அவர் இரண்டு வாரமளவும் எவ்விதமாகவும் காட்சியளித்துத் தோன்றவில்லை. அப்போது அவர்களது பதற்றமான நிலைமை தணிந்தது; மற்றும் பூமிக்குரிய காரியங்கள் (தேவைகள்) அவர்களிடத்தில், சிலவற்றை வலியுறுத்தவும் ஆரம்பித்தன. சீஷர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? இயேசு தங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக அழைப்பதற்கு முன்னதாக, தாங்கள் பண்ணிக்கொண்டிருந்த தொழிலுக்குத் திரும்ப வேண்டுமெனச் சீஷர்கள் அவரவர் தங்களுக்குள்ளாக எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனால், எவருமே இந்த முடிவை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தத்தக்கதாக பேச்சைத் துவக்கவில்லை. செய்கைக்கும், எண்ணங்களுக்கும் எப்போதும் தலைவனாக இருந்த பரிசுத்தவானாகிய பேதுரு, இறுதியில் தன்னுடைய தீர்மானத்தைத் தெரிவிக்கும் வண்ணமாக, "மீன்பிடிக்கப் போகிறேன்," அதாவது நான் மீன் பிடிக்கும் தொழிலுக்கு

மீண்டும் திரும்பப்போகிறேன் என்று கூறினார். பேதுருவின் இந்த ஒரு வாத்தைப் போதுமானதாய் இருந்தது. மற்றவர்களும் இதே மனநிலையில் காணப்பட்டபடியால், பழைய மீன்பிடிக்கும் தொழில் மறுசீரமைக்கப்பட்டது.

இப்படியான ஒரு தீர்மானம் எடுக்கப்படத்தக்கதாகவே, இயேசு தாம் பரமேறிச் செல்வதைத் தாமதித்தார். தாம் இல்லாத போதும், தம்முடைய ஆசியுடன், சீஷர்கள், மனிதர்களைப் பிடிக்கும் வேலையைத் தொடர வேண்டும் என்பதைச் சீஷர்களுக்கு காண்பித்துக்கொடுக்க கர்த்தர் சித்தமாயிருந்தார். ஆண்டவர் அவர்களது நன்மைகளுக்கடுத்த காரியங்களில் கண்ணோக்கமாய் இருந்து, அந்த இரவில், அவர்களுக்கு எந்த மீனும் அகப்படாதபடிக்குப் பார்த்துக்கொண்டார். அவர்களால் எந்த மீனையும் பிடிக்க முடியவில்லை; அவர்கள் சோர்ந்து போனார்கள், எனினும் இது அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவானதுதான்; "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற வசனத்தில் சொல்லப்பட்டதுபோல், இவர்களுக்குப் பண விஷயத்தில் ஏற்பட்ட சோர்வுகூட நன்மைக்கு ஏதுவானதுதான் (ரோமர் 8:28).

காலையில் இயேசு கரையில் நின்றுகொண்டு, விற்பதற்கு மீன் வைத்திருக்கின்றார்களா என அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டார். அவர்கள் தங்களுக்கு எதுவும் அகப்படவில்லை என்றார்கள். "நீங்கள் படகுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள்" என்று ஆண்டவர் கூறினார். இப்படியான அறிவுரை முட்டாள்தனமானது என்று அவர்கள் கூறியிருந்திருக்கலாம், ஆனால் அவர்களோ இந்தத் தங்களுடைய துரதிர்ஷடத்தை மாற்றுவதற்கு எதையும் செய்யும் மனநிலையில் காணப்பட்டனர். அவர் சொன்னபடியே, அவர்கள் வலையைப் போட்டார்கள்; உடனடியாக வலை பெரிய மீன்களால் நிரம்பிற்று. அப்போது கரையில் நின்று கொண்டிருப்பவர், தங்களுடைய உயிர்த்தெழுந்த கர்த்தரானவர், தங்களுக்குக் காட்சியளிக்க, மறுபடியும் தோன்றியுள்ளார் என்பதை அறிந்துக்கொண்டார்கள்.

அந்த மீனவர்கள் (சீஷர்கள்) கரைக்கு வேகமாய் வந்தனர். இதுபோன்ற மீன் அதிகமாய் அகப்படும் காரியத்தின் அனுபவத்தை, ஆண்டவர் முன்னொரு தருணத்தின்போது கொடுத்ததை, அவர்கள் அறிந்திருந்தனர்; இது போன்றதான அனுபவமானது, இதற்கு முன்பு ஒரே ஒரு முறைதான் அவர்களுக்கு நடந்துள்ளது. பரிசுத்தவானாகிய பேதுருவுக்காக, படகு மிகவும் மெதுவாகவே நகர்ந்தது. ஆண்டவர் மறைந்துவிடுவார் எனப் பேதுரு அஞ்சினார். பேதுரு தன் மேற்சட்டடையைக் கட்டிக்கொண்டு, கடலிலே குதித்து, கரைக்கு நீந்திச் சென்றார். ஆண்டவர் மறைந்து போகவில்லை, அவர் பரிசுத்தவானாகிய பேதுருவையும், மற்றவர்களையும், ஏற்கெனவே நெருப்பில் வைக்கப்பட்டிருந்த மீனை, காலை உணவாகப் புசிக்கும்படிக்கு, (போஜனம் பண்ணுங்கள் என்று கூறி) வரவேற்றார்.

இங்கு மாபெரும் படிப்பினைக் கொடுக்கப்பட்டது. தேவையான போதெல்லாம் தங்களுடைய ஆண்டவரால் தங்களுக்கும் சமைத்த மீனைக்கொடுக்க முடியும் என்றும், தங்களுடைய மீன் பிடிக்கும் தொழிலில், அவர் சிறந்தது/நன்மையானதெனக் காண்பதற்கேற்ப தங்களுடைய தொழிலில் ஜெயத்தை அவரால் கொடுக்க முடியும் என்றுமுள்ள படிப்பினைகள் கொடுக்கப்பட்டது. இந்தத் தருணத்தில் அவர்களுடைய தேவைகளை இவ்விதமாய்ச் சந்தித்த அவரால், இவ்விதமாகவே எதிர்க்காலத்தில் அவர்களைத் தம்முடைய நாமத்தில் பேசும்படிக்கு அதிகாரமளித்து, அனுப்பி வைக்கும் போதும் சந்திக்க முடியும். சீஷர்களில் எவரும், கரையில் நிற்கும் முன்பின் தெரியாத அந்த நபருடைய பெயர் என்ன என்று கேட்கவில்லை; ஏனெனில் கரையில் நிற்கும் நபருடைய தோற்றமும், அணிந்துள்ள வஸ்திரமும் வித்தியாசமாகக் காணப்பட்டாலுங்கூட, இனி ஒருபோதும் மனித ஜீவியாகக் காணப்படாதவரும், பல்வேறு உருவங்களை எடுத்துக் காட்சியளித்துத் தோன்றுவதற்குரிய வல்லமையை உடையவருமாகிய கர்த்தரே, இன்னொருமுறை காட்சியளித்துத் தோன்றியுள்ளார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

பாடம் கற்பிக்கப்பட்டது, இயேசுவும் மறைந்து விட்டார். இன்னொரு முறையும், அவர் தம்முடைய பின்னடியார்களைக் கலிலேயாவில் வைத்துச் சந்தித்தார். இந்தச் சந்திப்பானது, முன்கூட்டியே சொல்லி வைக்கப்பட்டு, ஏற்பாடு பண்ணப்பட்ட சந்திப்பாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில், இயேசு தம்முடைய பின்னடியார்களைச் சந்திப்பதாக முன்னமே தெரிவித்தார். கிட்டத்தட்ட ஐந்நூறு சகோதர சகோதரிகள் அவரைச் சந்தித்தாகவும், அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக இருந்ததாகவும் பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 15:6).

# "நமது கர்த்தருடைய இறுதி அறிவுரைகள்"

நம்முடைய இந்தப் பாடமானது, விசேஷமாக இயேசுவின் பரமேறுதல் பற்றியதாகும். இது எருசலேமுக்கு அருகாமையிலான பெத்தானியாவில் நடைப்பெற்றது. அவர் தம்முடைய பின்னடியார்களை, பரிசுத்த நகரமாகிய எருசலேமில் சொல்லியிருந்தபடியே, மிகவும் அதிகாலமே சந்தித்திருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. அவர், அவர்களைப் பெத்தானியாவுக்குக் கூட்டிக் கொண்டு போகும்போதுதான், அவர்கள் அறிந்திருப்பது அவர்களுக்கு நலமானது என்றுள்ள காரியங்களையும், அவர் அவர்களை விட்டுப் பிரிவதற்கு முன்னதாகவும், அவர் இனிமேல் அனுப்பவிருக்கின்ற ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் ஆயத்தப்படத்தக்கதாக, சரியான விசுவாசத்தில் அவர்கள் காணப்படுவதற்கு முன்னதாகவும், அவர்கள் முற்றும் முழுமையாக நம்ப அவசியமானவைகளையும் அவர் விவரித்துக்கொண்டு வந்தார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை எழுதின பரிசுத்தவானாகிய லூக்கா அவர்கள், நாற்பது நாட்களளவும் காணப்பட்ட இயேசுவின் போதனைகளுடைய சாரம், தேவனுடைய இராஜ்யம் பற்றியதாகும் என்று நமக்குக் கூறியுள்ளார். ஆனாலும் அவர்கள் இன்னமும் புரிந்துக்கொள்ளவில்லை; அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது வரையிலும், அவர்களால் முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது என்பது உண்மையே. ஆகையால்தான், அவர்கள் எருசலேமை விட்டுப்போகாமலும், எவ்விதமான பிரசங்கம் பண்ணும் வேலையில் ஈடுபடாமலும் இருந்து, பிதா வாக்களித்துள்ளதாக இயேசுவினால் ஏற்கெனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட, பரிசுத்த ஆவி எனும் வரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருக்க மாத்திரமே செய்ய வேண்டுமென்ற காரியத்தை இயேசு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். யோவான் ஸ்நானன் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கொடுத்தார் என்றும், ஆனால் தாமோ தம்முடைய பின்னடியார்கள் மேலான ஞானஸ்நானமும், தகுதியும் பெற்றுக்கொள்ள நோக்கமாய் இருக்கின்றார் என்று, அதாவது பெந்தெகொஸ்தே அன்று, ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள நோக்கமாய் இருக்கின்றார் என்று, இயேசு அவர்களுக்கு விவரித்தார்.

இந்தக் கடைசி தருணமாகிய, ஏழாவது காட்சியின் போது, "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" எனும் மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட்கும் அளவுக்குரிய நிலைமைக்குச் சீஷர்கள் வந்துவிட்டனர் (அப்போஸ்தலர் 1:6). இராஜ்யமானது யூதேயாவின் இராஜாவாகிய சிதேக்கியாவின் காலத்தில் இஸ்ரயேலிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அப்போது தேவன், "உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்" என்ற வார்த்தைகளைக் கூறியிருந்தார் (எசேக்கியேல் 21:25-27).

சீஷர்கள் இயேசுதான் மேசியா என்று எண்ணினார்கள் மற்றும் அவருக்கு இராஜ்யத்தை அளிப்பதற்கான பிதாவின் வேளை வந்துவிட்டது என்றும் எண்ணினார்கள். ஆனால் இவைகளுக்கு நேர்மாறாக, பரலோக இராஜ்யமானது ஆளுகிறவர்களின் கையில் பலவந்தஞ் செய்யப்பட்டதையும், சிங்காசனத்திற்குரிய வாரிசானவர் கொல்லப்பட்டார் என்பதையும் அவர் மரித்தோரிலிருந்து எழுந்துள்ளார் என்பதையுந்தான் சீஷர்கள் கண்டார்கள். இராஜா என்று ஒருவர் இருப்பார் என்ற நம்பிக்கையை, அவர்கள் மீண்டும் அடைந்துவிட்டனர் மற்றும் ஆண்டவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இக்காலத்திலா (அ) எதிர்க்காலத்திலா வருவார் என்று இப்பொழுது அவரிடம் கேட்கின்றனர்.

"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப்போஸ்தலர் 1:7) என்ற ஆண்டவருடைய பதிலானது அர்த்தமுடையதாகும். தம்முடைய சீஷர்கள் நியமிக்கப்பட்ட வேளையில், காலங்களையும், வேளைகளையும் குறித்து அறிந்துக்கொள்வார்கள் என்று ஆண்டவர் எற்கெனவே அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்; ஆனால் இக்காரியங்களையெல்லாம் அவர்கள் புரிந்துக்கொள்வதற்கு அப்போது ஏற்றவேளையாக இருக்கவில்லை. அவர்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அவர்களுக்குள் பொறுமை வளர்வது என்பது, அவர்களுக்கு நன்மையை உண்டுபண்ணுகிறதாகவும், அவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்துகிறதாகவும், அவர்களுடைய குணலட்சணங்களைப் பலப்படுத்துகிறதாகவும் இருக்கும்.

மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாக, கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் காலமான நீண்ட இடைவெளி காணப்படுமெனப் பிதா அப்போது தெரியப்படுத்தியிருப்பாரானால், அது ஞானமான காரியமாக இருந்திருக்காது; இன்னுமாக தங்கள் நம்பிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில், நீண்டகால இடைவெளி இருப்பது என்பது கர்த்தருடைய ஜனங்களைச் சோர்வடையப் பண்ணிவிடுவதினால், இக்காரியத்தைப் பிதா வெளிப்படுத்துவது, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவானதாகவும் இராது. அவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும் என்றும், அவர்கள் பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகித்தலை அடைவது வரையிலும் தேவனுடைய திட்டம் தொடர்புடைய எதையும் புரிந்துக்கொள்ள விசேஷமாய் எதிர்ப்பார்த்திட வேண்டாம் என்றும் மாத்திரமே ஆண்டவர் சுட்டிக்காட்டினார்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக இருப்பதற்கும், அவருடைய செய்தியை எடுத்துப் பேசுவதற்கும் முழுமையாய்த் தகுதியடைவார்கள்; மற்றும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களுக்கு, "ஏற்ற கால சத்தியம்" வழங்கப்படும். இப்படியாக அவர்கள் உலகத்தாரோடு இருளில் காணப்பட மாட்டார்கள்; இன்னுமாக கர்த்தருடைய நாளும், அவர்கள்மேல் இரவில் திருடன் வருகிற பிரகாரமாக (அ) கண்ணியாக வருவதில்லை. பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களானது, அவர்களுடைய சுபாவக் குறைவுகளை மூடிப்போடவில்லை என்றாலும், அவர்களை ஊழியத்திற்கு முற்றும் முழுமையாய்த் தகுதிப்படுத்திற்று; ஏனெனில், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, "ஜனங்கள் அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 4:13).

## "நமது கர்த்தரின் பரமேறுதல்"

நமது கர்த்தருடைய பரமேறுதல் என்பது, உலகத்தைப் பொறுத்தமட்டில் அல்லாமல், மாறாக அவருடைய சபையைப் பொறுத்தமட்டில் கவனத்தை ஈர்க்கும் ஒரு காட்சியாகும். உலகத்தைக் குறித்து, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று ஏற்கெனவே கூறிவிட்டார் (யோவான் 14:19). கர்த்தர் தம்மைத் தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்தின அந்த நாற்பது நாட்களின் காலபகுதியில், உலகமானது அவரைக் காணவில்லை; ஏனெனில் அவர் தம்முடைய உண்மையுள்ள அர்ப்பணம் பண்ணிக்கொண்டவர்களுக்கு மாத்திரமே தம்மை வெளிப்படுத்தினாரே ஒழிய மற்றவர்களுக்கல்ல. அவருடைய சீஷர்களுக்கு மிகவும் உதவியாய் இருந்திட்ட, கண்கள் காணத்தக்கதாக மாம்ச சரீரம் எடுத்துக் காட்சியளித்தல் காரியமானது, கர்த்தர் பரமேறிச் சென்றதோடு நின்றுவிட்டது. அவர்கள் இன்னமும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாததினால் அவர்களுடைய விசுவாசத்திற்கு உதவியாகவும் மற்றும் தம்முடைய பரிசுத்தவான்களைத் தம்மோடுகூடச் சேர்த்துக்கொள்வதற்கும், உலகத்தை ஆசீர்வதிப்பதற்கும், அவர் மகா வல்லமையுடனும், மகா மகிமையுடனும் திரும்பி வருவது வரையிலும் அவர்களால் இனி ஆண்டவரைப்பார்க்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக வழிநடத்தப்படுவதற்காகவும்தான், இப்படியான பரமேறுதலின் காட்சி அவசியமாய் இருந்தது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, இயேசு தம்முடைய இந்தப் பரமேறுதலைக் குறித்து முன்னமே கூறியுள்ளதை நமக்கு நினைப்பூட்டுகின்றது. அவர் முன்பிருந்த இடத்திற்குத் திரும்புவது என்பது, அவர் முன்பிருந்த ஸ்தலத்திற்குத் திரும்புவதாக மாத்திரம் புரிந்துக்கொள்ளப்படக் கூடாது; அவர் உலகத்திற்கான ஈடுபலியாகத்தக்கதாக, மாம்சம் ஆகும்படிக்கு, அவர் விட்டுவந்த ஆவிக்குரிய நிலைமைக்கும் திரும்புவதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து அவர்கள் பார்வையிலிருந்து மேகங்களுக்குள்ளாக மறைந்த போது, அவர் காட்சியளிக்கத்தக்கதாக உருவாக்கின சரீரம் மறைந்து போயிருக்க வேண்டும். இந்தச் சரீரத்தை அவர் பயன்படுத்தினதற்கான காரணம் சீஷர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவும், இயேசு நிரந்தரமாகவே போய்விட்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், அவர்கள் இனிமேல் ஏதாகிலும் விதத்தில் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றுவார் என்பதை எதிர்ப்பார்க்க வேண்டாம் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகவும் ஆகும். இது ஒரு நோக்கத்துடன் கூடிய படிப்பினையாகும்.

## "நமது கர்த்தருடைய திரும்பிவருதலின் விதம்"

இயேசு மறைந்துபோன பிற்பாடு, தேவதூதர்கள் தோன்றி, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப்போஸ்தலர் 1:11) என்று கூறினதாக சுவிசேஷகர்களில் ஒருவர் பதிவு செய்துள்ளார். இவ்வார்த்தைகளினிமித்தமாக இயேசு தம்முடைய இரண்டாம் வருகையின்போது, மாம்சத்தில் வெளிப்படுவார் எனச் சிலர் நம்புகின்றனர்; ஆனால் இப்படியாகப் புரிந்துக்கொள்பவர்கள் மிகப்பெரிய தவறை செய்கின்றார்கள் என்பதே நம்முடைய புரிந்துக்கொள்ளுதலாய் இருக்கின்றது. உலகம் இனி இயேசுவைக் காண்பதில்லை; சபையானது, யுகத்தின் முடிவில் தங்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைவது வரையிலும், விசுவாசத்தின் கண்களினால் மாத்திரமே அவரைக் காண்கின்றவர்களாய் இருப்பார்கள். "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." (1 கொரிந்தியர் 15:50-52; 1 யோவான் 3:2).

கர்த்தர் போன விதத்திற்கு, தேவதூதர்கள் அழுத்தம் கொடுப்பதை நாம் கவனிக்க வேண்டும்; அந்த விதத்தில்தான் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையும் காணப்படும். அவர் அமைதியாய், இரகசியமாய் உலகத்திற்குத் தெரியாமல் போய்விட்டார்; அவர் இரவில் திருடன் வருகிற விதத்திலேயே திரும்ப வருவார்; மனுஷ குமாரனுடைய பிரசன்னத்திற்கான/ வந்திருத்தலுக்கான அடையாளங்களை உணரத்தக்கதாக, புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறக்கப் பெற்றவர்களைத் தவிர, மற்றபடி எவரும் அவருடைய இரண்டாம் வருகையை அறிந்திருப்பதில்லை. இப்படியாகப் புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்றவர்கள், அவருடைய உண்மையுள்ள பரிசுத்தவான்களாகிய சிலர் மாத்திரமே ஆவர். ஆகையால்தான் தம்முடைய இரண்டாம் வருகையின்போது, நோவாவின் நாட்களில் காணப்பட்டது போன்று காணப்படும் என்றார்; அதாவது அவருடைய வந்திருத்தலை அறிந்துக்கொள்ளாமல், மனுக்குலமானது புசித்தும், குடித்தும், விதைத்தும், பெண்கொண்டும், பெண் கொடுத்தும் காணப்படும் என்றார் (மத்தேயு 24:37-39).

**ஆமென்!**

---

## Righteous and Unrighteous Anger
# நீதியான கோபமும் அநீதியான கோபமும்

"அன்பு சினமடையாது" 1 கொரி. 13:5

இந்த தலைப்பு வசனம் எழுதப்பட்டுள்ள அதிகாரத்தில் அப். பவுல், அன்பு என்கிற குணத்தை அப்பியாசப்படுத்தி, அபிவிருத்தி பண்ணுவது மிக முக்கிய தேவை என்று கூறுகிறார். இந்த அன்பு என்கிற குணம் இல்லாமல் நாம் எதை அடைந்தாலும் நாம் தேவனுடைய பார்வையில் ஒன்றுமில்லை. அன்பு சினமடையாது என்று இந்த வசனத்தில் அப்போஸ்தலர் கூறுகிறார், சினமடையாது என்கிற வார்த்தையை பவுல் இங்கு ஒரு வித்தியாசமான பொருளில் பயன்படுத்துகிறார். "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படிக்கு ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்" என்று கூறுகிறார். (எபி. 10:24) இந்த வசனம் நற்கிரியைகளை தூண்டவும், மற்றவர்களிடம் அன்பு செலுத்தவும், நீதியின் மேல் ஆதிக்கம் செலுத்த பழகவும் போதிக்கிறது. எனினும் இன்றைய பாடத்தின் சிந்தனை கோபமூட்டுதல் ஆகும். அன்பு சீக்கிரத்தில் சினமடையாது, நீடிய பொறுமையை கடைபிடிக்கும்.

சினமடைதல் அன்பின் குணமல்ல என்று நாம் சொல்லலாம். நீதியான கோபம் – நீதியின் கொள்கை மேல் உள்ள அன்பினால் பொறுப்புடன் கூடிய கோபம் – அன்புடன் ஒவ்வாததாக இருக்கிறது. "தேவன் அன்பாக இருக்கிறார்" என்றும் "அவர் பாவியின் மேல் அனுதினமும் சினங்கொள்கிறார்" என்றும் வேதம் கூறுகிறது. அவரது கோபம் பாவத்திற்கு எதிராக நீதியாக கொண்டுள்ள கோபமாகும்.

### தேவனுடைய நீதியான கோபம்

நமக்கு முன் உதாரணமாக தேவனைப் பார்க்கும்போது மனித உயிரினங்களின் மேல் அவரது அன்பு வெளிப்படுத்தப்பட்டதையே நாம் காண்கிறோம். தூதர்களுக்கு அவர்களுக்குரிய ஆசீர்வாதங்களை கொடுத்திருந்த அதே தேவ அன்பே மனுக்குலத்திற்கும் ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்குரிய ஆசீர்வாதங்களையும், நித்திய ஜீவனையும் கொடுத்திருக்கிறது. பாவம் வந்தபோது, அன்பு பின்வாங்குகிறது. வேறுவிதமாக சொல்வோமேயானால், தேவனுடைய விசேஷித்த குணமாகிய நீதி அங்கே வெளிப்படுத்தப்பட்டது. பாவத்திற்காக மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட இந்த தண்டனை நல்லதாக இருந்தது. ஏனெனில் உலகத் தோற்ற முதல் தேவன் மனிதனின் விழுதலை முன்னறிந்து அவனது மீட்பை விலைக்கிரயமாக வாங்கியிருந்தார். மரண தண்டனையில் கூட மனிதன் மே–ருந்த தேவனுடைய அன்பு உறுதியாயிருந்தது, ஆனால் தேவன் பாவத்திற்கு விரோதமாக இருக்கிறார். அவரது கட்டளை மீறப்பட்டபோது, அன்பு அல்லது அன்பின் உருவாயிருக்கிற அவர் நீதியான கோபத்திற்கு தூண்டப்பட்டார்.

இதுபோலவே தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய யூதர்களுக்கு விரோதமாக அவரது நீதியான கோபம் தூண்டப்பட்டது. எரேமியாவிடம் அவர் கூறியதாவது: "அவர்கள் எனக்கு கோபமுண்டாக்கினது என்ன?" (எரே. 8:19) தேவனுடைய கோபத்தை குறித்து அநேக வேத வசனங்கள் கூறுகின்றன. அந்தக்கோபம் பாவத்திற்கு எதிராக எப்பொழுதும் எரிகிறதாயிருக்கிறது. அது ஆறாயிர வருட காலமாக உலகின்மேல் இருந்துவருகிறது. மரண தண்டனைக்குள்ளான உலகத்திற்கு எதிரான இந்த கோபத்தினால் தேவ அன்பு எந்த வகையிலும் பங்கப்படவில்லை. ஆகையால் அன்பானது நீதியாக கோபத்திற்கு தூண்டப்படக்கூடும். நீதிக்கு முழுமையாக இசைந்திராத இப்படிப்பட்ட உணர்வுகளுக்கு, நீதியை தமது சிங்காசனத்திற்கு ஆதாரமாகக் கொண்டுள்ள தேவன் இடங்கொடுக்கிறதில்லை, ஆனாலும் தண்டனைக்குட்பட்ட இந்த மனுக்குலத்தின் விடுதலைக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். தேவனுடைய அன்பு அவரது விழுந்துபோன சிருஷ்டிகளுக்காக இந்த ஏற்பாடுகளை செய்திருக்கிறது.

### தேவ அன்பு கொஞ்ச காலம் நிறுத்திவைக்கப்பட்டது

ஆனால் அன்பானது சுலபமாகவோ, அநீதியாகவோ கோபமூட்டப்படுவதில்லை. ஆதிபிதாவாகிய ஆதாமினால் வேண்டுமென்றே செய்யப்பட்ட கிரியையே தேவ கோபத்தை தூண்டியது. தாயாகிய ஏவாள் வஞ்சிக்கப்பட்டதால் உலகம் தண்டனைக்குள் வரவில்லை. முழு அறிவோடு செய்யப்பட்ட ஆதாமின் பாவமே, தேவ கோபத்தை வரவழைத்து மனுக்குலத்திற்கு மரண தண்டனையை பெற்றுத் தந்தது. இந்த ஆறாயிர வருட பாவ காலத்தில் தேவனுடைய அன்பு கொஞ்ச காலம் நிறுத்தி வைக்கப்பட்டது, சொல்லப்போனால் பின்வாங்க தூண்டப்பட்டது.

ஆனால் இந்த காலத்தில் தேவனுடைய குணலட்சணங்கள் மாறவில்லை. மனிதன் விழுந்துபோனதி–ருந்து இருக்கும் கொடூரமான நிலைமைக்கு தேவன் காரணமல்ல, தேவனிடத்தில் இருக்கும் அன்போ, நீதியோ பாவத்தை அங்கீகரிக்கவில்லை, "பாவத்தின் சம்பளம் மரணம்." (ரோம. 6:23) மரணத்துடன் அதன் இயற்கையான

பலனாக செல்கின்ற ஒவ்வொன்றும் அந்த தண்டனையின் ஒரு பகுதியாக இருக்கிறது. தம்முடைய வல்லமையால் மனுக்குலத்தின் நன்மைக்காக இவையெல்லாம் நீக்கப்படும் என்பதை அறிந்தே தேவன் இந்த நிலைமைகளை அனுமதித்திருக்கிறார். பாவம் இந்த பூமியின்மேல் கொண்டுவந்த கேடு நாசத்திற்கு தேவனுடைய பெரிய எதிராளியே காரணமாக இருக்கிறான். மனுக்குலத்திற்கு நன்மையுண்டாகும் பொருட்டு நீதியின் மகா எதிராளியாகிய சாத்தானை தேவன் நசுக்குவார். (எபி. 2:14)

குறித்த காலம் வரும்போது, கொஞ்சகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேவனுடைய அன்பு மனிதனுக்கு வெளிப்படுத்தபடும். மனுக்குலத்திற்கு மீட்பராக தமது ஒரே பேறான குமாரனை சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு அனுப்பியபோது அன்பு வெளிப்பட்டது. அவர் பூமிக்கு வந்து அவரது ஜீவனை மனித பாவத்திற்கு மனமுவந்து கொடுத்தார். தேவனுடைய குமாரனுக்கு மணவாட்டியாகும்படி ஒரு வகுப்பாருக்கு, சபையை கூட்டிச் சேர்க்க அழைப்பு சென்றது. இந்த வகுப்பார் தான் ஆதாமின் சந்ததியை இரட்சிக்கும் வேலையில் அவருடன் இருப்பார்கள். இந்த சுவிசேஷ யுகத்தில், இந்த சபை கூட்டி சேர்க்கப்பட்டு, குறித்த காலத்தில் ராஜ்ய மகிமையில் உயர்த்தப்படும். பிறகு தேவனுடைய அன்பு மனுக்குலத்திற்கு வெளிப்படும். தேவனுடைய நிபந்தனைகளின் கீழ் ஜீவனை பெற்றுக்கொள்ள விருப்பம் உள்ள மானிடர் அனைவரையும் தேவனுடைய ராஜ்யம், பாவம், சீரழிவு மற்றும் மரணத்தி—ருந்து ஆண்டவருடைய மகிமை மற்றும் ஒளியினிடத்திற்கு வழிநடத்தும்.

**கிறிஸ்தவ வாழ்க்கையில் விசேஷித்த ஆபத்து**

இப்போது வெகு சீக்கிரத்தில் வரயிருக்கிற மகா பெரிய இரட்சிப்பின் வேலைக்கு நாம் உண்மையிலேயே தகுதியுள்ளவர்களாயிருக்கும்படி தேவனுடைய பிள்ளைகளாக நாம் எப்படி ஆவலுள்ளவர்களாய் விழிந்திருந்து ஜெபிக்க வேண்டும்! நம்மிடத்தில் அன்பு போதுமான அளவு பலமுள்ளதாக இல்லாதிருக்கும் ஆபத்து இருக்கிறது. வீழ்ச்சியின் காரணத்தினால் பாவம் மற்றும் சுயநலம் ஆகியவை உலகத்தில் பிரதானமான செல்வாக்காக இருக்கும்படி வந்திருக்கிறது. இவை ஆறாயிரம் வருடங்களாக கிரியை செய்து, மனிதனை அன்பு, இரக்கம், சகோதர அன்பு, நீடிய பொறுமை ஆகியவைகளில் மிகவும் குறைவுள்ளவனாக ஆக்கியிருக்கிறது. இப்பொழுது கோபம், பொறாமை, பகைகள், சண்டைகள் ஆகியவைகளில் அன்பைக் காட்டிலும் அதிக முன்னேற்றம் உடையதாக இருக்கிறது. தேவன் நம்மை தம்முடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளும்போது நமக்கு தேவையான முதலாவது குணம் அன்பு என்று கூறுகிறார். அன்பு நமது இருதயத்திலும், சிந்தனையிலும் வளர வேண்டும், மேலும் அது நமது சிந்தனை, வார்த்தைகள் மற்றும் கிரியைகளில் ஊடுருவ வேண்டும்.

விழுந்துபோன நமது சரீரம், காணக்கூடாத "ஆகாயத்து அதிகார பிரபுவின் " உதவியுடன் இந்த தேவையான நிலையை அடைவதை தடுக்கும்படி முயற்சி செய்யும். மேலும் இதை அடைந்த பிறகு, புது சிருஷ்டியாகிய நாம் இந்த நிலையி—ருந்து பின்வாங்க அதிகமான அழுத்தம் நமக்கு சில சமயங்களில் கொடுக்கப்படும். அவ்வப்போது தேவனுடைய பிள்ளைகள் மற்ற சகோதரரர்களோடு கூட தங்களது ஆவிக்குரிய நலத்திற்கும், ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் கூட ஆபத்து வருகிற அனுபவத்தைப் பெறுகிறார்கள். அந்தகார சக்திகள் அவர்களது உணர்வுகளையும், மன எழுச்சிகளையும் தாக்கி அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையி—ருந்து வழிவிலக வைக்க முயற்சிக்கின்றன. அவன் தன் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆபத்தான கட்டத்திற்கு வருகிறான். அவன் முன்னேறவோ அல்லது பின்வாங்கவோ வேண்டும். அவனால் அங்கேயே நிற்க இயலாது. போராட்டம் அங்கே நடக்கிறது. இந்த கடுமையான சோதனை ஒரு படிக்கல்லாக இருந்து அவனை தேவனிடம் நெருங்க வைக்குமா அல்லது அது ஒரு தடுக்க—ன் கல்லாக இருந்து கவிழ்த்துவிடுமா?

இப்படிப்பட்ட இக்கட்டான வேளையில் ஜெபம் ஒன்றே புக—டம். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மனோதிடத்தை சோதிப்பதற்கே இந்த சோதனைகளை தேவன் அனுமதிக்கிறார். அனுகூலமற்ற வெளிச்சத்தில் அன்பான சகோதர, சகோதரியைப் போல இந்த காரியத்தை எதிராளியானவன் நமது போராட்டமான உள்ளத்திற்கு முன்பாக வைத்து முயற்சிப்பான். எதிராளியானவன் தவறான ஒரு தீர்மானத்தை எடுக்க சொல்— நமது மனதை வஞ்சிப்பான். நம்முடைய மாம்சமும் இந்த காரியத்தைக் குறித்த தீர்மானத்துக்கு தக்கவாறு இயங்குகிறது. நமது சிந்தனையிலும் இருதயத்திலும் ஒரு தற்கால பாதுகாப்புக்கான இப்படிப்பட்ட யோசனையை மறுப்பதே பாதுகாப்பான செயல். இப்படிப்பட்ட சமயத்தில் தேவனுடைய உதவியையும், சகிப்பதற்கான பலத்தையும் தேவனிடம் கேட்பதுதான் நல்லது. மேலும் இந்த அவசர காலத்தில் அவரது வசனத்தில் இருந்து ஆலோசனை தேடுவதும்தான் நல்ல ஒரு செயல். நாம் அடிக்கடி பாடுகிற துதிப்பாட—ன் வரிகளை நாம் நினைவுப்படுத்துவோமாக.

**--2169--**

“சோதனைக்கு இடங்கொடுக்காதே,
ஏனெனில் அது பாவத்துக்கு இடங்கொடுக்கும்;
ஒவ்வொரு வெற்றியும் உனக்கு உதவிடும்
மற்றவைகளை ஜெயிப்பதற்கு.
தைரியமாக முன்னோக்கி போரிடு,
தவறான ஆசை குறையும்;
எப்போதுமே இயேசுவை நோக்கிக்கொண்டிரு,
அவர் உன்னை முழுவதும் தாங்குவார். ”

**“மன்னியுங்கள், அப்பொழுது நீங்களும் மன்னிக்கப்படுவீர்கள் ”**

ஆகையால் சகோதரரே, பிரியமுள்ளவர்களாயும் ஒருவரையொருவர் தாங்குகிறவர்களாயும் இருங்கள். நமது சொந்த பலவீனங்களையும், குறைகளையும் நினைத்து, வார்த்தைகளிலும், கிரியைகளிலும் இயற்கையான சுபாவங்களிலும், ஒருவொருக்கொருவர் பிரியமுள்ள கட்டுமானத்தை போட தேடுங்கள், வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் கறையுள்ளவர்கள் என்பதை நினைவுகூறுவோமாக. நம்மை வருத்தப்படுத்துகிற சகோதரர்களில் அநேகர் தங்கள் முந்தைய வாழ்க்கையில் வழிவழியான சுபாவங்களையும், சூழ்நிலைகளையும் உடையவர்களாயிருந்திருப்பார்கள். இவைகளை நாம் அறியாதவர்களாயிருக்கிறோம். அறிந்தோமானால் நாம் அவர்கள் மேல் மிகவும் இரக்கமுள்ளவர்களாயிருப்போம். மற்றவர்களுக்கு எரிச்சலூட்டுகிற, சில பலவீனங்களும், பழக்கவழக்கங்களும் நம்மிடமும் இருக்கிறது என்பதை நாம் அறியாதிருக்கிறோம் என்பதை நாம் நினைவு கூருவோமாக, மற்ற சகோதரரிடமிருக்கிற குறைகளையும், குற்றங்களையும் கண்டுபிடிப்பதைக் காட்டிலும் நம்மிடம் உள்ள குறைகளையும், குற்றங்களையும் மிகவும் ஜாக்கிரதையுடன் கவனிக்க வேண்டும்.

“சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். ” (எபே. 4:31:32) “ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய் உருக்கமான இரக்கத்தையும், தயவையும் மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவையெல்லாவற்றிலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும், பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. ” (கொலோ. 3:12–16)

இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தில் தேவனுடைய பிள்ளை வெற்றி பெற்றிருந்தால், மேலும் உறுதியான முயற்சியினாலும், ஜெபத்தினாலும் தேவனுடைய கரம் அவனுக்கு விடுதலையை கொண்டு வந்திருக்குமேயானால், சோதனை வரும்முன் இருந்ததைக் காட்டிலும் இப்போது அவன் ஒரு பலமான கிறிஸ்தவனாக இருக்கிறான். இடுக்கமான பாதையில் ஒரு நீண்ட அடியை எடுத்து வைத்திருக்கிறான், பலமாக தேவனை பிடித்துக்கொண்டிருக்கிறான். மேலும் இது அவனை அடுத்த சோதனையில் வெற்றிக் கொள்ளச் செய்யும். ஆனால் ஒவ்வொரு தோல்வியும், தேவனுடைய பிள்ளையை பலவீனமுள்ளவனாகவும், பொல்லாத சேனைகள், எதிரியானவன், மற்றும் அவனது சொந்த மாமிசத்தால் வருகிற பலமான தாக்குதல்களை எதிர்க்க முடியாதவனாகவும் ஆக்குகின்றது.

கிறிஸ்துவின் சபை சம்பந்தமாக அன்பைக் குறித்துப் பேசும்போது, அப்போஸ்தலர் கூறுகிறதாவது: நாம் கர்த்தரை பிரியப்படுத்தவேண்டும் என்றால் இந்த கிருபையில் நாம் அதிகமாக வளர வேண்டும். இந்த குணத்தை பெருமளவில் பெற்றிருக்கிறவர்கள் சீக்கிரமாக கோபமடையமாட்டார்கள், உடனே எதிர்க்கமாட்டார்கள், தங்களது உரிமைகளும், கௌரவமும் மீறப்படுமோ என்று பயந்து மிகவும் விழிப்பாய் இருக்கமாட்டார்கள். குறைவான அன்புள்ளவர்கள் சீக்கிரத்தில் கோபப்பட்டு தீங்கு செய்வார்கள், நமக்கு உதவுகிறவரை நோக்கிப்பார்த்து, சுயத்தை தாழ்த்தி அதை சிலுவையில் அறைகிற வேலையை சுறுசுறுப்பாக தொடருவோமாக. நமது கர்த்தர் பாராட்டுகிற அன்பு நீடிய பொறுமையாகும். ஆகையால் நீதியான பொறுப்புடன் கூடிய கோபத்திற்கு இடமில்லை என்று இது பொருள்படாது, பெரிய அநீதியை பார்க்கும்போது ஒரு நீதியான கோப உணர்ச்சி இருக்கவேண்டும். ஏன்? ஏனெனில் அநீதி தவறானது, அநீதி தெரிந்து, அறிந்து செய்யப்படும்போது தேவன் கோபம் கொள்கிறார். எனவே தேவனுடைய பிள்ளைகள் அநீதியின் மேல் இரக்கங்கொள்ளக்கூடாது.

**--2170--**

## அன்பு நீதியோடு இணைந்தது

நீதி என்கிற குணத்தை தேவனுடைய பிள்ளைகள் மிகவும் ஜாக்கிரதையாக வளர்க்காவிட்டால், நீதியை பாராட்டாத (மதிக்காத) ஒரு மனோபாவத்திற்கு போய்விடுவார்கள். ஆனால் நாம் எது சரி, எது தவறு என்று தீர்மானிக்கும்போது, நாம் இன்னும் மேலே சென்று அன்பு, இரக்கம் மற்றும் தயவு போன்ற குணங்களை ஜாக்கிரதையாக வளர்க்க வேண்டும். எதுவெல்லாம் நீதி, அன்பு என்று தான் மதிப்பீடு செய்வதுதான் சரி, மற்றவர்கள் மதிப்பீடு செய்வது முற்றிலும் தவறானது என்று யாரும் கூறுமுடியாது. அதுவும் பிரத்தியேகமாக மற்றவர்கள் என்பது நம்மைப்போன்று கிறிஸ்துவுக்குரிய குணலட்சணங்களை அபிவிருத்தி செய்ய நினைக்கிற ஒரு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாகவோ, அல்லது சகோதரியாகவோ இருக்கும் பட்சத்தில் நம்முடைய கருத்துக்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்காது. எனவே நமது கருத்துதான் சரியானது என்றும் மற்றவர்களது கருத்து தவறானது என்றும் அருதியிட்டுக் கூறமுடியாது. எனவே நமது கருத்து தவறானதாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. நீதி, அன்பு குறித்த போதனைகள் தனக்கு இனி தேவை இல்லை, தனது சகோதரனுக்குத்தான் தேவை என்று கூறுகிற அளவுக்கு கிறிஸ்துவின் பின்னடியார் எவரும் அந்த அளவுக்கு அபிவிருத்தி அடையவில்லை. சகோதரர்களுடனான நமது அனுபவத்தில், மற்றொரு சகோதரனிடத்தில் குற்றம் இருப்பதாகக் காணப்பட்டால், நாமே நமக்குள் இப்படியாகக் கூறுவோமாக : இங்கே ஒரு சகோதரர் என்னைக் காட்டிலும் அனுகூலம் அற்றவராக (துரதிருஷ்டசா—யாக) இருக்கிறார். ஆவியின்படி அவர் என் சகோதரராக இருக்கிறார். அவர் தவறு செய்பவராக எனக்குக் காணப்படுகிறார், ஒரு வேளை அவர் தான் செய்வது தவறு என்று அறியாதிருப்பதினால், நான் அவர்மேல் பரிதாபப்படுகிறேன் அல்லது என்னுடைய கணிப்பு தவறானதாக இருக்கலாம். என்னுடைய கண்ணோட்டத்தில் இந்த விஷயத்தை அவர் பார்ப்பாரானால் அவர் வேறு விதமாக செய்திருக்கலாம். நான் அவரை நியாயந் தீர்க்கமாட்டேன். அதை சர்வ வல்ல தேவனிடம் விட்டுவிடுவேன். ஏனெனில் அவரே மிகச் சரியாக நியாயந் தீர்ப்பார், மேலும் இந்த அதிகாரம் அவருக்கே உரியது. (1கொரி. 4:5)

## சகல மனிதரிடமும் அனுதாபம்

தேவன் பாவத்திற்கு அனுதாபம் காட்டுகிறவரல்ல; ஆனால் பாவிகளின் மேல் இரக்கங்காட்டுகிறவர். பாவிகளை இரட்சிப்பதற்காக தம்முடைய ஒரே பேறான குமாரனையே தந்திருக்கிறார். மனுக்குலத்தை உயர்த்துகிற வேலைக்காக அவர் ஓராயிரம் வருடத்தை ஒதுக்கி வைத்திருக்கிறார். நாம் அநீதியை கவனிக்கிறோம், கவனிக்க வேண்டும். கண்டிப்பதோ அல்லது தண்டிப்பதோ நமது அதிகார வரம்புக்கு உட்பட்டதல்ல. நாம் “காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லக்கூடாது.” நமது நீதி சம்மந்தப்பட்ட புலனை அதிரச் செய்கிற கிரியைகளை நாம் பார்க்கிறோம். நாம் நமக்குள்ளேயே சொல்—க்கொள்ள வேண்டியதாவது: இது குற்றமான ஒரு செயல் என்று நம்புகிறேன்; குற்றமிழைத்தவருடன் இதை தீர்த்து வைப்பது எனது வேலையல்ல. அந்த நபருக்கு அந்த குற்றத்தில் எந்த அளவிற்கு பொறுப்பு இருக்கிறது என்பதை தேவன் அறிவார்; நான் அறியேன். ஒரு அனுதாப நிலையில் இருந்துக்கொண்டு அவனை முடிந்தவரை கவனிப்பதுதான் எனது கடமை ஆகும். எனது சக்திக்கேற்றவாறு, எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அவனை நல்வழிப்படுத்த உதவுவதுதான் எனது கடமையாகும். ஆனால் நான் இந்த விஷயத்தில் “சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவனாகவும், புறாவைப் போல கபடற்றவனாகவும்” இருக்க வேண்டும். அந்த நடத்தை தவறானதுதான், ஆனால் அந்த நபர் எந்த அளவுக்கு அதற்கு பொறுப்பு என்பதை என்னால் அறிய முடியாது.

எனவே வீழ்கையினால் அகில உலகமும் மிகவும் துன்பத்தில் இருக்கிறது என்பதை அன்பானது கவனித்துப் பார்க்கிறது. அன்பு சொல்கிறது: எல்லோரிடமும் அன்பாயிரு; சாந்தமாயிரு; தாங்குகிறவனாயிரு. நாம் பாவம், வேதனை, வியாதி, மரணம் உள்ள உலகில் இருக்கிறோம் என்பதை எப்பொழுதும் நினைவு கூறவேண்டும். இந்த கருத்தி—ருந்து பார்க்கும்போது, அன்பு சீக்கிரத்தில் சினமடையாது, மற்றவர்களை இரக்கத்துடனும் அனுதாபத்துடனும் பார்க்கிறது. எனவே “பிரியமானவர்களே கறை, திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்” (எபே. 5:27) நாம் பிதாவிடம் ஒப்புக் கொடுக்கப்படும்படியாக அவருடைய கிருபையினால் பரிபூரணமும் முழுமையும் அடையும் வரை, நம்முடைய மகிமையுள்ள தலைவராகிய கிறிஸ்துவுக்குள் வளருவோமாக; ஆமென்.

----------------------------

**--2171--**

R5604

## The First Armageddon Battle
# முதலாம் அர்மகெதோன் யுத்தம்

"நியாயாதிபதிகள் 4:4—24; 5:1—22"

சிசெராவும் பாராக்கும் — தெபோராளும், யாகேலும் — பின்னால் கூறப்பட்டவர்கள் கொலைகாரர்களா? — எப்படி "நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களி—ருந்து சிசெராவோட யுத்தம் பண்ணின?"

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்." (சங். 34:17)

நிஜமான மகா அர்மகெதோன் யுத்தம் மிக அருகில் இருக்கிறது, அதாவது தற்கால உலக யுத்தத்தைத் தொடர்ந்துவரும் என்று நாம் இதி—ருந்து குறிப்பிடுகிறோம். இன்றைய பாடம் மெகிதோ பள்ளத்தாக்கில் நடந்த யுத்தங்களில் முதலாவதைக் குறித்ததாகும். அதில் குறிப்பிடப்படுகிற அநேக சங்காரங்கள். "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவக் காலத்தை" குறித்த தெய்வீக முன்னறிவிப்பை அடிப்படையாக கொண்டதாகும். இந்த உபத்திரவம் மேசியாவின் மகிமையான ஆயிர வருட அரசாட்சிக்கு வழியை ஆயத்தப்படுத்தும். (1கொரி. 15: 24—26; வெளி. 20:6)

இஸ்ரயேலர்கள் விக்கிரக ஆராதனையின் நிமித்தம், தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையின் பிரகாரம், அவர்களது எதிரிகள் அவர்களை துரத்தி முறியடிக்கப்படும்படியாக அனுமதிக்கப்பட்டார்கள். மகா சங்கடத்தை அடைய பெற்றிருந்தனர், அவர்களது சத்துருக்கள் பலமுள்ளவர்களாகவும், கொடியவர்களாகவும் இருந்தனர். கானானிய சேனாதிபதியாகிய சிசெரா வடக்கு பாலஸ்தீனாவிலுள்ள இஸ்ரயேலர்களை வருடக்கணக்காக அடிமைப்படுத்தியிருந்து தெற்கு பகுதியையும் வெற்றிக்கொள்ளும்படியாக பெரும்படை பலத்துடன் புறப்பட்டிருந்தான். அவனது படைபலம் தொள்ளாயிரம் இருப்பு ரதங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவன் மெகிதோ பள்ளத்தாக்கின் தெற்கு பகுதியை அடைந்தபோது, பத்தாயிரம் வீரர்கள் அடங்கிய ஒரு படையோடு, பாராக் என்கிற இஸ்ரயேல் தலைவன் ஒருவன் தெற்கு நோக்கி முன்னேறுகிறான் என்று அறிவிக்கப்பட்டது. தெய்வீக வழிநடத்துத—ன் கீழ், பாராக் தாபோர் மலையில் தனது படைத்தளத்தை அமைத்திருந்தான். இதே மலையில்தான் நமது ஆண்டவரின் நாளில், ஒரு மறுரூபக்காட்சி மூலமாக தமது அப்போஸ்தலர்களுக்கு வரப்போகிற மேசியாவின் ராஜ்யத்தை காண்பித்தார். எனவே எதிர்காலத்தைக் குறித்த இன்னொரு முக்கிய அம்சத்தின் சித்திரத்தை நாம் பெற்றிருக்கிறோம். தற்கால ஸ்தாபனங்களை கவிழ்த்துப் போடுகிற அர்மகெதோனின் அழிவையும், மிக அருகில் இருக்கிற இராஜ்யத்தையும், இணைந்த காட்சியை நாம் பெற்றிருக்கிறோம்.

### கலங்கடிக்கப்பட்ட ஒரு படை

சேனாதிபதியாகிய சிசெரா, குறைவான ஆயுதங்களுடன் இருக்கும் இஸ்ரயேலர்களை இகழ்ந்து, கீசோன் ஆற்றின் இரு பக்கங்களிலும் தனது படையுடன் தாபோர் மலையை நோக்கி முன்னேறினான். கானானிய படைகளுக்கு எதிராக முன்னேறும்படி சேனாதிபதி பாராக்குக்கு தேவனுடைய கட்டளை மறுபடியும் வந்தது, நம்முடைய பாடத்தில் விவரிக்கப்பட்டபடி சங்காரம் மிகப்பெரிதாயிருந்தது. சிசெராவின் படை கலங்கடிக்கப்பட்டதால், அது சிதறுண்டு போனது. பெருங்காற்றும், காற்றுடன் கூடிய மழையும் பெருகியது. தாழ்வான பள்ளத்தாக்கில் சகதி உண்டானதால் சிசெராவின் ரதங்கள் பயனற்றுப் போனது. தப்பித்துக்கொள்ள ஓடின அவனது வீரர்கள் இஸ்ரயேலரின் பட்டயக் கருக்கினால் வெட்டுண்டு வீழ்ந்தார்கள். ஆயிரக்கணக்கான வீரர்கள் ஆற்றின் வெள்ளத்தினால் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டார்கள். இஸ்ரயேலருக்கு ஆதரவாக தேவனுடைய இந்த தலையீடுதான் "நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களி—ருந்து சிசெராவோட யுத்தம் பண்ணினதாக" தீர்க்கதரிசன பாஷையில் கூறப்பட்டிருக்கிறது. இதே போல, சமீபித்திருக்கிற மகா அர்மகெதோன் யுத்தத்தில் மனித சக்தி வியாபித்திருக்காமல், குழப்பமுண்டாக்கும் சேனைகள் தற்கால முறைமைகளை முற்றிலுமாக உடைத்தெறியும். ஏனெனில், "அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாக இருக்கும்." (எசே. 38:21; சக. 8:10; 14:13) காற்றுடன் கூடிய மழையாகிய சத்தியமும், பெரும் வெள்ளமாகிய, அறிவும் பெரும் மனித அழிவை ஏற்படுத்தும். இதை தேவன் உலக ஆசீர்வாதமாக மாற்றிப் போடுவார்.

### விசுவாசமுள்ள ஒரு ஸ்திரீயின் வல்லமை

கர்த்தர் தமது வேலையில், நல்ல குணாதிசயத்திற்கும், சுவிசேஷ ஊழியத்திற்கும் சாதாரணமாக மனிதர்களை பயன்படுத்துவதையே விரும்புகிறார். ஆனால் கடமையி—ருந்து வழுவுகிற ஆண்களினிமித்தம் உயர்ந்த [illegible]ள்ள

ஸ்திரீகளை பொது ஊழியத்தில் தேவன் ஈடுபடுத்துவதாக வேதம் நமக்கு படம் பிடித்து காட்டுகிறது. தெபோராள் இங்கே குறிப்பிடத்தகுந்த உயர்ந்த குணமுடையவளாக காணப்படுகிறாள். தேவ கட்டளையை அசட்டை செய்ததால் எப்படி தம்முடைய ஜனங்கள் தோல்வியை தழுவினார்கள் என்பதை தெபோராள் உணர்ந்திருந்தாள். இது கானான் தேசம் முழுவதும் பரவியிருந்ததையும், ஜனங்களை சரியான வழியில் வழிநடத்த— தேவனிடம் திருப்ப—என்ன தேவை என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள். இவர்களை வெற்றிக் கொள்ளாதிருந்த கானானியர்கள் இவர்களை வெற்றிக் கொண்டார்கள்.

இந்த வெற்றி தேவனால் அனுமதிக்கப்பட்டது. பிற ஜனங்களிடமிருந்து தனித்து வாழவேண்டும் என்ற தேவ கட்டளையை இஸ்ரயேலர்கள் அசட்டை செய்தபோது, இது ஆரம்ப நிலையி—ருந்தது. ஆனால் அவர்கள் கானானியருடன் கலப்பு திருமணம் செய்ய ஆரம்பித்திருந்தார்கள். இதனிமித்தம் புற ஜாதி பெண்கள் தங்கள் கணவன்மார்களையும், குழந்தைகளையும் புறஜாதி தேவர்களை வணங்கும்படி தவறான வழியில் இழுத்துச் சென்றார்கள். வெளியரங்கமாக விக்கிரக ஆராதனைக்கு சென்றிராத பெரும்பாலான இஸ்ரலேயர்கள், உண்மையான தேவனையும், அவரைப் பற்றிய அறிவையும் இழந்திருந்தார்கள்.

இந்த நாட்களிலும்கூட இதே நிலைமைதான் இந்த நாட்டிலும் எல்லா இடங்களிலும் இருக்கிறது. கடந்தகால மிகப் பயங்கரமான மத கோட்பாடுகளில் இருந்து மனம்மாறிய அநேக கிறிஸ்தவ ஜனங்கள், கோட்பாடுகளும், வேதாகமமும் ஒரே போதனையையே போதிக்கின்றன என்ற நம்பிக்கையில், வேதாகமத்தைவிட்டு விலகியிருக்கிறார்கள். மதத்தில் உள்ள வெறுப்பையும், ஆலயத்தின் வெறுமையான ஆசனங்களையும் பற்றிய விளக்கம் இதுதான். ஜனங்களுக்கு என்ன தேவை என்றால், அன்பின் மெய்யான தேவனையும், வேதத்தில் குறிப்பிட்டுள்ள அவருடைய உண்மையான திட்டத்தையும் பற்றிய சரியான செய்திகள்தான்.

இஸ்ரயேலர்கள் ஒடுக்கப்பட்ட காலத்தில், கோத்திரத் தலைவர்கள்கூட தேச பக்தியிலும் தேவனிடத்தில் உள்ள விசுவாசத்திலும் குறைவுபட்டவர்களாகக் காணப்பட்டார்கள். ஒவ்வொரு கோத்திரமும் தனித்தனி நாடாகவும், அவர்களுக்குள் ஒரு இணைப்பும் இல்லாதிருந்தது. தெய்வீக ஐக்கியமும், உண்மையான மதமும் தளர்வடைந்திருந்தது. இப்படிப்பட்ட காலத்தில்தான் இஸ்ரயேலருக்கு ஒரு வழிகாட்டியாக தெபோராள் என்ற ஒரு ஸ்திரீயை தேவன் தெரிந்துகொண்டார். தேவனிடத்திலும் அவரது ஊழியத்திலும் அவள் தன்னை மிகவும் அர்ப்பணித்திருந்ததால், மற்றவர்களைக் காட்டிலும் நிலைமையை மிகவும் உன்னிப்பாக அறிந்திருந்தாள். அவள் தனது குடியிருப்பை வடக்கு பகுதியி—ருந்து எப்பிராயீம் மலைத் தேசத்தின் நடுப்பகுதிக்கு மாற்றியிருந்தாள். அங்கிருந்து அவள் வெவ்வேறு கோத்திரத் தலைவர்களுக்கும் உற்சாகம், மற்றும் எழுச்சியூட்டும் வார்த்தைகளை அனுப்பினாள். அவள் மதிக்கப்பெற்றாள். அவளது ஆலோசனை பாராட்டப்பட்டன. அவளது ஆலோசனையை தேடி வந்தார்கள். அதாவது அவள் இஸ்ரயேலரை நியாயம் விசாரித்தாள், கண்டித்தாள், வழிநடத்தினாள் மற்றும் உதவி புரிந்தாள்.

## இருதயத்தை முற்றிலுமாக அர்ப்பணிப்பது அவசியம்

தெபோராள் ஒரு தீர்க்கதரிசினியாக கூறப்பட்டிருக்கிறாள். தேவன் விசேஷித்த செய்திகளை கொடுக்கிற ஒரு வழியாக இருந்தார். தேவனுக்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் தன்னை மனமுவந்து அர்ப்பணித்த ஊழியக்காரியாக அவள் இருந்ததால், நிச்சயமாக தேவன் அவளை பயன்படுத்தினார். தேவனுடைய ஜனங்கள் எல்லாருக்கும் எப்படிப்பட்ட ஒரு பாடம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்காகவும், அவருடையவர்களுக்காகவும் காரியங்களை செய்து முடிக்கவும், அவருடைய ஊழியத்திற்கு பயன்படுத்தபடுவதற்கும் இருதயத்தின் முழு அர்ப்பணம் அவசியமாக இருக்கிறது.

சிசெராவின் படை தொள்ளாயிரம் ரதங்களுடன் மெகிதோவுக்கு தெற்கு நோக்கி முன்னேறிய தகுந்த நேரத்தில் அவளுடைய நப்த— கோத்திரத்தின் தலைவனாகிய பாராக்குக்கு செய்தியை அனுப்பினாள். தேவனுடைய ஜனங்களை விடுவிப்பதற்கும் பத்தாயிரம் வீரர்களோடு யுத்தத்திற்கு செல்வதற்கும் இதுதான் சரியான நேரம் என்று உறுதிபடக் கூறினாள். இவள் ஒத்துழைக்கவில்லை என்றால், பாராக் மறுத்திருப்பான். அவனோடு செல்ல அவள் ஒத்துக்கொண்டதால், இந்தக் காரியத்தின் கனம் அவளுக்கு பிரிந்துசென்றது. அவனது தைரியமின்மையால், அவன் தனது ஆசீர்வாதத்தை இழந்திருப்பான்; எனவே இஸ்ரயே—ன் படை, சேனாதிபதி பாராக்கின் தலைமையில் தாபோர் மலைக்கு முன்னேறினாலும், ஒரு ஸ்திரீதான் தேவனுடைய வாயாக, பிரதிநிதியாக இருந்து, யுத்த காரியங்களை இயக்கி இஸ்ரயேலுக்கு மிகப்பெரிய வெற்றியை கொண்டுவந்தாள்.

**யுத்தம் நியாயமானதா? – யாகேல்**

சேனாபதி சிசெராவின் ரதங்கள் சேற்றில் சிக்கிக்கொண்டன, அவனது படை தோல்விகண்டது. அவன் கால்நடையாக மற்றவர்களுடன் ஓடினான். அவனது சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால் விழுந்தது. உபசரணையுள்ள ஒரு கூடாரத்திற்கு வந்து தன்னை ஒளித்துக்கொண்டு, தூங்கிவிட்டான். அவனை உபசரித்தவள் ஒரு கூரான ஆணியை எடுத்து அவனது நெற்றியில் சுத்தியால் அடித்து இறக்கினாள். இது உபசாரத்திற்கு எதிர்மாறான செயல் என்று சிலர் கூறுகிறார்கள். ஒரு பெண்ணின் கூடாரத்திற்குள் நுழைகிற ஒரு மனிதன் மரணத்திற்கு பாத்திரன் என்று பாலஸ்தீனாவில் அரேபியர்களிடம் இன்றும் உள்ள ஒரு பழக்கம் என்பதை சுட்டிக்காட்டி இது சரியான செயல் என்று சிலர் கூறுகிறார்கள். எனினும் யாகேல் என்பவள் ஒரு கிறிஸ்தவள் அல்ல என்பதையும், பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டவள் அல்ல என்பதையும், கிறிஸ்துவின் பள்ளியில் பயின்றவள் அல்ல என்பதையும், நாம் நினைவுகூருவோமாக. எனவே அவளைப் பற்றி என்ன கூறினாலும், அன்பின் பிரமாணமாகிய கிறிஸ்துவின் ஆவியின் பிரமாணத்திற்கு கீழ் இருக்கிற கிறிஸ்தவர்களுக்குரிய எதுவும் அவளைக் கட்டுப்படுத்தாது.

தேவனோடு உண்மைக் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள உறவுக்கு இணையாக எந்த யூதனும் பெற்றிருக்கவில்லை என்பதை நாம் நினைவு கூருவோமாக. புது சிருஷ்டிகளாகிய நம்முடைய பலவீனங்கள் மற்றும் ஆசைகளுக்கு எதிராக நம்முடைய போராட்டத்திற்கு, மாம்சீக இஸ்ரயேலர்களின் போர்கள் நிழலாக இருக்கிறது. சிசெரா மற்றும் அவனது வீரர்களின் மரணம், அவர்களை நரகத்திற்கு கொண்டு போகவில்லை என்பதையும், "அவர்கள் பிதாக்களோடு நித்திரை அடைந்தார்கள்," "அவர்கள் பிதாக்களோடு சேர்க்கப்பட்டார்கள்" என்பதற்கு அது வெறும் வழிப்பாதையாக இருக்கிறது என்பதையும் நாம் நினைவு கூருவோமாக, அவர்கள் விழித்தெழும் காலம் வரும்வரை அவர்கள் ஒன்றும் அறியாதிருக்கிறார்கள். சாத்தானின் ராஜ்யத்தையும், பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையையும் கவிழ்த்துப்போட்டு இந்த உலகத்தை சுதந்தரித்துக்கொண்டு தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்ததற்கு பிறகு இருக்கும்படி இந்த விழித்தெழும் காலத்தை தேவன் குறித்திருக்கிறார்.

கல்வாரியில் இயேசு நிறைவேற்றிய இரட்சிப்பின் வேலையின் பலனாக மற்ற மனுக்குலத்தைப் போல சிசெராவும் அவனது படை வீரர்களும் புறப்பட்டு வருவார்கள். தேவ கிருபை அவர்கள் மேல் விளங்கும்பொருட்டு அவர்கள் புறப்பட்டு வருவார்கள். பூமிக்குரிய பரதீசில் மாம்சீக பூரணத்தில் நித்திய ஜீவனுக்குள் நுழையத்தக்கதாக அவர்களை தயார்படுத்தும்படி, ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படியத்தக்கதாக அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும். இதை நாம் உணர்ந்து கொண்டால், நாம் கொள்ளை நோயினாலோ, வியாதியினாலோ, அல்லது யுத்தத்தினாலோ சாகிறோமா என்பது பெரிய காரியமாக இருக்காது. கிறிஸ்துவை அறிந்து, அவரை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால், புது சிருஷ்டிகளாக ஜெநிபிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த காலத்தில் சோதனை இருக்கிறது. மற்ற மனுக்குலம் அனைத்திற்கும் சோதனை வருங்காலத்தில் இருக்கும். ஏனெனில் நித்திய ஜீவனுக்குரியவர்களா அல்லது இரண்டாம் மரணத்திற்குரியவர்களா என்று சோதிப்பதற்கு அறிவு அவசியமாக இருக்கிறது.

" ஓர் ஆயிரம் வருடங்கள்! பூமிக்கு வரும் மகிமை!
நீண்ட நாட்களாக முன் சொல்லப்பட்ட
சந்தோஷமான நாள் இதுவே;
சீயோனுடைய மகிமையான பிரகாசமான காலை இதுவே,
பழங்காலத்தில் தீர்க்கதரிசிகள் இதை முன்னறிந்தார்கள். "



R5605

# துணிவின் நாயகன் - கிதியோன்
# The man of courage

**நியாயாதிபதிகள் 6:11-40.**

பகுத்தறிவுள்ளவன் - வலிமையுள்ள பாத்திரம் - தன்னம்பிக்கையில் மிகத் தாழ்மையானவன் - ஆதாரத்தைத் தொடர்ந்த விசுவாசம் - பலனளிக்கப்பட்ட விருந்தோம்பல் - தேவனுக்கென்று துணிவுடன் செயல்படுபவன் - கூடுதல் ஆதாரத்தைத் தேடும் விசுவாச வளர்ச்சி

**"நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." சங்கீதம் 65:4**

கர்த்தரால், அவருடைய வேலைக்கென்று, தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் பெரியவர்கள், செல்வந்தர்கள், ஞானிகள், வல்லவர்கள் அநேகர் இல்லை என்று வேதம் நமக்கு கூறினாலும், அதற்கான காரணம் அவர்களை ஏற்றுக்கொள்வதில் விருப்பம் இல்லாமை என்றில்லாமல், மாறாக அவர்களுடைய ஞானம், செல்வம், வலிமை, மற்றும் திடமானது அவர்களை அதிக தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், போதுமான அளவிற்கு கர்த்தரை சார்ந்திராதவர்களுமாக மாற்றி -- அவருக்கான ஊழியத்தில் மகிழ்ந்திருந்து அவரால் போதிக்கப்படுவதற்குத் தேவையான தாழ்மையற்றவர்களாக மாற்றிவிடுவதேயாகும். வலிமைமிக்க ஒரு இஸ்ரயேலனான, இந்த கிதியோனிடமே கர்த்தருடைய தூதன் ஒரு செய்தியுடனும், ஒரு வேலையுடனும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். **"பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"** என்பதே அவருடைய வணக்க வாழ்த்தாக இருந்தது. கிதியோனோவென்றால், **"என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலி–ருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?"** என்று சாதுரியமாகப் பதிலளித்தான்.

மீதியானியர்களும், கிழக்கிலிருந்து வந்த நாடோடிகளும், கானான் தேசம் மிகவும் விளைச்சல் நிறைந்த இடம் என்று கண்டுணர்ந்து, அடிக்கடி படையெடுத்து தாக்கி, தேசத்தின் விளைச்சலை கைப்பற்றுவது வழக்கமாக இருந்தது. இதனாலேயே, இந்த ஒரு சந்தர்ப்பத்தில் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்கு தப்புவிப்பதற்காக, ஆலைக்கு சமீபமாய் அதை போரடித்தான் - அதாவது, வழக்கமாக போரடிப்பதைப்போல் செய்ய பயந்தார். காரணம், மீதியானியர்கள் மறுபடியும் தங்களுடைய உடைமைகளை கொள்ளையடித்து, வரியை கூட்டிவிடுவார்கள் என்ற பயத்தினால் அவ்வாறு செய்தார்.

தேவதூதன் அங்கு வேதாந்தம் பற்றி விவாதம் பண்ண வராமல், மாறாக கிதியோனுக்கு எழுச்சியூட்டி, கர்த்தருடைய ஜனங்களை விடுவிக்கும் விஷயத்தில் அவனை (கிதியோனை) தூதுவராக ஆக்கவுமே வந்திருந்தார். "மனாசே கோத்திரத்தில் என் குடும்பம் மிகவும் எளியது ;என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்" என்று கிதியோன் மறுத்து கூறுவதிலிருந்து அவனுடைய தாழ்மை பிரகாசிக்கின்றது. உண்மையில் தெரிந்துகொள்ளுதலில் தவறு ஏற்பட்டுள்ளது என்றும், தன்னை காட்டிலும் அதிக தகுதியுள்ள ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றான். ஆனால் அதற்கு கர்த்தருடைய தூதனோ "ஒரே மனுஷனை முறியடிப்பது போல நீ மீதியானியரை முறியடிப்பாய் " என்று பதிலளித்தார்.

இஸ்ரயேல் பாதுகாக்கப்பட்டு, அவர்களது விருப்பங்கள் பாதுகாக்கப்படும் என்று கர்த்தர் அவர்களோடு பண்ணின வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து - அவர்களுடைய விருப்பங்கள் பூமிக்குரிய விருப்பங்கள் தான் என நாம் நினைவு கூறும்போது - இந்த பாதுகாப்பு என்பது இஸ்ரயேல் தேவனிடம் உண்மையுள்ளவர்களும், விசுவாசமுள்ளவர்களுமாய் இருக்கும் தன்மையை சார்ந்து இருந்தது என்பதையும் நாம் நினைவுகூற வேண்டும். ஜனங்கள் வழிவிலகி விக்கிரகங்களைப் பின்பற்றினால் அவர்கள் மீது பல்வேறு இன்னல்கள் வரும் என்றும் - அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுடைய விளைச்சலை அறுப்பார்கள் என்பதையும் கர்த்தர் இதே உடன்படிக்கையில் உறுதிபடுத்தியிருந்தார். இதன்மூலம் தாங்கள் அனுபவிக்கின்ற இந்த இன்னல்களை கர்த்தர் அனுமதிக்கக் காரணம் என்ன என்ற கிதியோனின் கேள்விக்கான பதிலை நாம் அறியலாம். அதாவது, தேவன் அவருடைய உடன்படிக்கைக்கு உண்மையற்றவராக இருக்கவில்லை, இஸ்ரயேலர்களே உண்மையற்றவர்களாக இருந்தனர்.

**--2175--**

இந்த உண்மையற்ற தன்மையை நிரூபிக்கும் சம்பவம் நம்முடைய பாடத்தில் உள்ளது. கிதியோனுடைய தகப்பன் பாகால் மற்றும் அஸ்தரோத்தின் தோப்பை பாதுகாக்கும் பொறுப்பில் இருந்தார். அவைகளின் சிலைகள் அவருடைய வீட்டிற்கு அருகாமையில் இருந்தது - கிட்டத்தட்ட அவருடைய நிலத்திற்குள்ளாகவே இருந்தது. இந்த தோப்பு என்பது, செங்குத்தாக நிறுத்தி வைக்கப்படும் கம்பமாகும் - அது விக்கிரகத்தின் அருகே, அதின் கனத்திற்காக வைக்கப்பட்டிருக்கும்; மேலும் இவைகளை கிதியோன் காலத்தில் இருந்த ஜனங்கள் பராமரித்து வந்தார்கள், மேலும் கிதியோனுடைய சொந்த தகப்பன் அவர்களில் முக்கியமானவராக இருந்தார். இதுவே இஸ்ரயேலர்கள் மீதியானியர்களின் கீழ் உதவுவார் இல்லாமல் இருந்ததின் இரகசியம் ஆகும்.

கிதியோனுக்கு தன்னிடம் வந்திருப்பவரைப் பற்றி தெளிவாகத் தெரியாவிடினும், அவர்களுக்கு இடையே நடந்த உரையாடலில் தன்னிடம் வந்திருப்பவர் கனத்திற்கு உரியவர் என்று அவனை நம்ப வைத்தது. அவன் அவருக்காக விருந்தை ஆயத்தம் பண்ணி அவருக்கு கொண்டு வந்து கொடுத்தான். அதை சாப்பிடுவதற்கு பதிலாக தேவதூதன், "**நீ இறைச்சியையும், புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று**" என்று கட்டளையிட்டார். பின் தமது கையிலிருந்த கோலினால் அப்பத்தையும், இறைச்சியையும் தொட்டார். "**அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி இறைச்சியையும், அப்பத்தையும்**" பட்சித்து அது பலியாக ஏற்றுகொள்ளப்பட்டது - இவ்வாறு நடந்த அற்புதம், வந்தவர் கர்த்தருடைய தூதன் என்பதை உறுதிப்படுத்தியது. அவர் வந்த வேலை நிறைவேறிய காரணத்தினால், தூதன் உடனடியாக கிதியோனின் பார்வையிலிருந்து மறைந்து போனார்.

## தூதர்களுடைய பணிவிடை

நம்முடைய இயற்கையான கண்களுக்கு புலப்படாத ஆவிக்குரிய ஜீவிகளால் நாம் சூழப்பட்டு இருக்கிறோம் என்ற உண்மையை நிரூபிக்கும் வகையில் இங்கு ஒரு எடுத்துக்காட்டுடன் கூடிய விளக்கம் நமக்கு உள்ளது. மேலும், முற்காலங்களில் தேவன் மனுக்குலத்தோடு தொடர்புகொள்ள இந்த தூதர்களைப் பயன்படுத்தியுள்ளார் என்ற உண்மைக்கும் இச்சம்பவம் எடுத்துக்காட்டாகும். இந்த தூதர்களைப் பற்றி நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "**கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.**" [R5606: பக்கம் 9] மேலும், இவர்களைக் குறித்து "**இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?**" என்றும் வாசிக்கிறோம். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தருடைய தூதர்கள் அவருடைய ஜனங்களோடு கூட எப்பொழுதும் இருக்கிறார்கள் -- உண்மையில் பெந்தெகோஸ்தே நாள் துவங்கி இந்த சுவிசேஷயுகம் வேறு எப்போதும் இல்லாத அளவு அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள், காரணம், தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தேவனுடைய ஜனங்களே ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களும் அவர்களுடைய பிதாவின் பார்வையில் விசேஷமும் விலையேறப்பெற்றவர்களுமாய் இருக்கிறார்கள். சங். 34.7; எபி. 1.14.

தம்மைப் பின்பற்றுகிறவர்களைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கூறுவது என்னவென்றால், "**அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்**" என்பதே. கிறிஸ்துவின் சரீரத்தில் அர்ப்பணிக்கப்பட்ட அங்கங்களாக இருப்பவர்கள் தொடர்பான காரியங்களை கவனிப்பதும், "தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்ற வாக்குறுதியோடு இசைந்திராமல் அவர்களுக்குப் பாதகமாக சம்பவிப்பவைகள் அனைத்திலும் இருந்து விடுவப்பதும் அவர்களுடைய கடமைகளில் ஒரு பங்காகும். புது சிருஷ்டியின் விருப்பமும், நன்மையும் கவனிக்கப்படுமே ஒழிய மாம்சத்தின் விருப்பங்கள் அல்ல. வல்லமையுள்ள இந்த தூதர்கள், சுவிசேஷயுகம் முழுவதும் கண்களுக்கு புலப்படாமல் இருப்பதன் காரணம் புத்திரவீட்டாரில் அங்கத்தினர்களாகிய இவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புவதே ஆகும். - IIகொரி. 5.7

முற்காலங்களில், அதாவது ஊழிய வீட்டாரின் காலங்களில், மனுக்குலத்துடனான தங்களுடைய சந்திப்புகளில் கர்த்தருடைய பிரதிநிதிகள் மனித உருவம் எடுத்தவர்களாய், சாதாரணமாக காட்சி அளித்தனர். இதன் மூலமாக தாங்கள் கொண்டுவந்த செய்தியை அறிவிக்கும்போது நேரடியாக உரையாடுவதற்கும், அறிவுறுத்துவதற்கும் நல்ல சந்தர்ப்பத்தைப் பெற்றனர். இவ்விதமாக கர்த்தருடைய தூதர்கள் ஆபிரகாமுக்கு தோன்றி அவரோடுகூட புசித்தார்கள். அவர்கள் தங்களை அவருக்கு வெளிப்படுத்தும் வரைக்கும் ஆபிரகாம் அவர்களை அறியாதிருந்தார்.

**--2176--**

# கிதியோனுடைய பெரிதான துணிச்சல் வெளியானது

தேவதூதன் கிதியோனை சந்தித்த அந்த இரவிலே, கர்த்தர் கிதியோனுக்கு மேலும் ஒரு வெளிப்படுத்துதலைக் கொடுத்து பாகாலுடைய பலிபீடத்தை தகர்க்கவும், அவனுடைய நிலத்திலிருந்த பாகாலின் விக்கிரகங்களை உடைத்து, அதற்கு பதிலாக யெகோவா தேவனுக்கு ஒரு பலிபீடத்தை எழுப்பி, அவனுடைய தகப்பனின் காளைகளில் ஒன்றைக்கொன்று முன்பு பாகாலுக்கு கனம் செலுத்துவதற்காய் இருந்து வெட்டப்பட்ட தோப்பின் கட்டை விறகுகளின் மேல் சர்வாங்கதகனபலியிட தேவன் கட்டளையிட்டார். இந்த வேலையானது இரவோடு இரவாக செய்து முடிக்கப்பட்டது. காரணம், அவனுடைய தகப்பனும், சகோதரர்களும் மற்றும் நகரத்தின் ஜனங்களும் அறிய வரும் பட்சத்தில், அவர்கள் உறுதியாக எதிர்க்க வாய்ப்பு இருந்ததே ஆகும். இப்படியிருக்க, இந்த வேலையைச் செய்ய தன்னை தேவனே அழைத்திருக்கிறார் என்று அறிந்த பின் கிதியோன் மிகவும் துணிவுள்ளவனாக காணப்பட்டான்.

நமக்கான வேலை தெய்வீக அதிகாரத்தில்தான் உண்டாயிருக்கிறது என்ற உறுதியான நம்பிக்கை எந்த ஒரு மனுஷனையும் (அ) மனுஷியையும் இருதயத்தில் பலம் உள்ளவர்களாக்குகிறது என்று நாம் கூறலாம். தேவனிடத்தில் விசுவாசக் குறைச்சலும் தேவனிடத்திலிருந்து புறப்பட்ட பொறுப்பை உணரத்தவறுவதுமாகிய இந்த குறைச்சலே இன்றைய நாட்களின் குறைச்சலாகும். இப்படியிருக்க, இன்று ஏறெடுக்கப்படும் பெரும்பான்மையான போதனைகள், ஜெபங்கள் மற்றும் நற்கிரியைகள் சடங்காச்சாரமாக இருந்து **"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவைகளாக"** இருக்கின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதுபோல, இப்படிப்பட்டவர்களை விட்டு நாம் விலகி இருக்கவேண்டும். நாம் தேவனுடைய ஊழியர்களாகவே இருக்க விரும்பி அவருடைய தெய்வீக வார்த்தையை நிச்சயமாக அறிய விரும்புகிறோம். இதை ஆயுதமாக தரித்திருக்கும்போது, "ஒருவன் ஆயிரம் பேரை துரத்துவான்."

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒரு எபிரேய வாலிபன் கூறுகையில், "நான் இசைதிறமை உள்ளவனாய் இருந்து அதையே நாடுகிறேன் ; ஆனால், என் வாழ்க்கை முழுவதையும் ஆக்கிரமிக்க தகுதியான மாபெரும் பொருளை கண்டுபிடித்து, அந்த பொருளுக்காகவே என் வாழ்க்கையை செலவிட வேண்டும் என்பது போன்று உணர்கிறேன்". இதுபோன்ற உணர்ச்சி மிகுந்த கருத்துக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அநேக வாலிபர்களிடம், குறிப்பாக பன்னிரண்டு முதல் இருபது வயதிற்கு இடைப்பட்டவர்களிடம் காணப்படுகிறது. தேவனுடைய வழிநடத்துதலில் ஞானமும், உதவிகரமுமான அறிவுறுத்துதலுக்கு உட்பட்டு அதன்மூலம் வாழ்வின் மிக உன்னத பயனை உணர்ந்து அதை தேவனுக்கும், அவருக்குமான ஊழியத்திலும், மனுக்குலத்துக்கான ஊழியத்திலும் தங்களை அர்ப்பணிக்கிற வாலிபர்கள் மகிழ்ச்சிக்கு உரியவர் ஆவர். இந்த கதை முழுவதும் வெளிப்படுவதுபோல, கிதியோனும் அப்படிப்பட்டவர்களில் ஒருவன் ஆவான். அவனிடம் துணிச்சலும், விசுவாசமும் இருந்தது, ஆகிலும் தேவனுடைய நாமத்திற்காக அவருடைய சித்தம் செய்வதற்கான அவரைப் பற்றின ஞானத்தை பெறுவது மாத்திரம் அவசியமாய் இருந்தது.

நடந்த சம்பவங்களை ஊரார் அறிந்து, அவைகளை கிதியோனே செய்தான் என்று அறிந்தவுடன் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அவனுடைய தகப்பனுடன் முறையிட்டனர். அவனுடைய தகப்பனோ வலிமை நிறைந்த தேவனுக்கு பாதுகாப்பு கொடுப்பது அவசியமா என்று ஞானமாக பதிலளித்தான். தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முடியாத பாகால், இஸ்ரயேலையும் பாதுகாக்க முடியாது என்ற அவனுடைய வாதம் வலிமையாய் இருந்தது. உடனே தங்களுடைய இரட்சகராக ஏற்று கொள்வதற்கு வேறொரு தேவனை தேட ஜனங்கள் ஆயத்தமானார்கள். இதற்கிடையில், கிதியோன் பெற்ற பொறுப்பிற்கு இசைவாய், மீதியானியர்கள் கூடிவருகையில் பல்வேறு கோத்திரங்களுக்கு கிதியோன் தூதுவர்களை அனுப்பினான், விளைவாக தங்களை நோக்கி படையெடுத்து வருபவர்களோடு யுத்தம் பண்ண முப்பதினாயிரம் பேர் முன்வந்தார்கள்.

ஆனாலும், இதற்கிடையில், தான் தெய்வீக திட்டத்தையே செய்கிறோம் என்பதற்கான கூடுதல் ஆதாரத்தை கிதியோன் கர்த்தரிடத்திலிருந்து எதிர்ப்பார்த்தான். அதில் ஒரு சோதனையாக மயிருள்ள ஒரு தோல் இராமுழுவதும் போடப்பட்டு, பனி தோலின் மேல் மாத்திரம் பெய்து பூமியெல்லாம் காய்ந்திருக்க வேண்டும் என்பதாகும். கர்த்தர் அதற்கு பதிலளித்து ஆதாரத்தைக் காண்பித்தார், விளைவாக கிதியோன் தோலிலிருந்து ஒரு கிண்ணம் நிறைய பனிநீரை கசக்கி பிழிந்தான். ஆனாலும் இது போதுமான

-2177--

இருக்கவில்லை. ஒருவேளை மயிருள்ள தோலுக்கும் பனிநீருக்கும் விசேஷமான ஈர்ப்பு இருந்திருக்கலாம் என்று எண்ணி இப்பொழுது சோதனையை மாற்றி மயிருள்ளதோலைச் சுற்றிலும் பனி பெய்து நனைக்க வேண்டும் என்றும் ஆனால் மயிருள்ள தோல் மாத்திரம் காய்ந்திருக்க வேண்டும் என்றும் தேவனிடம் கேட்டான். இதுவும் அருளப்பட்டது.

ஆனாலும், கர்த்தர் கிதியோனுக்கு தேவையான அடையாளத்தை அருளின காரணத்தால் இன்று நாமும் அதுபோன்ற சோதனைகளை ஏறெடுக்கலாம் என்று நினைத்தோமானால் அது தவறாகும். எல்லா விஷயத்திலும் நமக்கு அநேக அனுகூலங்கள் உண்டு. நமக்கு பின்பாக இருக்கும் ஆயிரமாயிரம் வருடங்களுக்கும் தேவையானவை நமக்கு முன்பு இருக்கும் கிதியோன் மற்றும் மற்றவர்களுடைய அனுபவங்களில் உள்ளது -அதோடு, மனுக்குலத்தோடும் ஆண்டவராகிய இயேசுவோடும் இருந்த தேவனுடைய அன்பை குறித்த புதிய ஏற்பாட்டு பதிவுகளும் உள்ளது. நாம் "அருமையான ஜீவவார்த்தைகளை" பெற்றவர்களாகவும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது வைத்த விசுவாசத்தின் விளைவாக பரிசுத்த ஆவியானால் ஜெனிப்பிக்கப்பட்டு அதன்மூலம் பரலோகப்பிதாவினிடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டும் இருக்கிறோம். ஆகையால், நமது நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். ஏற்கெனவே நமக்கு போதிக்கப்பட்ட பாடங்களின் மூலம் நாம் விசுவாசித்து நடக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்ப்பார்க்கிறார், மாறாக நமது காலத்திற்குரிய அடையாளங்களை தரிசித்து அல்ல.

---------------------------

**--2178--**

## Gideon's Brave Three Hundred

# கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள்

நியாயாதிபதிகள் 7:1–8, 16–23

ஒரு சிறிய படை மிகப்பெரியது– "மகிமை உமக்கே உண்டாயிருப்பதாக"–பயமுள்ளவர்கள் வீட்டுக்கு போகக்கடவர்கள் – பயமுள்ளவர்களின் நீரூற்று – இன்னும் படை பெரியது– நக்கிக் குடித்தவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்–"நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள் "–பானை, தீவட்டி, எக்காளம்–யேகோவாவும் கிதியோனும்–வெற்றி–இந்த நிகழ்ச்சி ஒரு உவமை–அதன் பொருள்.

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். " (சக. 4:6)

இன்றைய பாடம் பெர்சிய சேனைகளை தீரமுள்ள முந்நூறு வீரர்கள் வெற்றி கொண்டதை நினைவுபடுத்துகிறது. ஆனால் இந்த யுத்தம் மானிட தைரியத்தை சார்ந்திராமல், தேவனுடைய ஆசீர்வாதத்தை சார்ந்திருந்தது. கடந்த பாடம், பல்வேறு இஸ்ரயேல் கோத்திரங்களுக்கு தூதர்களை அனுப்பி, தேவனுடைய வெற்றிக்குரிய வாக்குத்தத்தத்தின் மூலம் கிதியோனை உற்சாகப்படுத்தியதை பற்றியது. இன்றைய பாடம் ஆரோத் நீரூற்றின் அருகே கில்போவா மலையின் அடிவாரத்தில் கிதியோனுடன் இருந்த 32,000 பேர் கொண்ட படையின் பலனை காண்பிக்கிறது. ஆரோத் நீருற்று என்பது யோர்தான் நதியில் கிழக்குப்பக்கமாக நீரை வடிய விடுகிற ஒரு சிறிய ஏரி. அந்த ஏரியின் தூரமான பக்கத்தில் 1,35,000 மீதியானியர்கள் இருந்தனர். அவர்கள் கொஞ்ச காலம் இஸ்ரயேலர்களை கொடுமைபடுத்தி கொள்ளையிட்டவர்கள். ஆனால் இப்போது கிதியோனின் படை கூடியிருக்கிறதை அறிந்திருந்தார்கள். இஸ்ரயேலரை நசுக்குவதற்கு இவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

கிதியோன் தன்னுடைய படை மிகவும் சிறியதாக கால் பாகம்தான் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால் தேவன் அவனது படை மிகவும் பெரியது என்று அதை குறைக்கச் சொன்னார். தேவன் நம்மை ஜெயிக்க வைத்தார் என்று நினைக்காமல் தங்களது வீரம்தான் ஜெயிக்க வைத்தது என்று நினைக்கும் அபாயம் இருந்ததால் இப்படிச் சொன்னார். தெய்வீக வழிகாட்டுத–ன்படி, கிதியோன் பயமும், திகிலும் உள்ளவன் எவனோ, அவன் வீட்டுக்கு --2179-- போகக்கடவன் என்று பிரசித்தப்படுத்தினதால்

22,000 பேர் திரும்பி போய்விட்டார்கள். ஆரோத் என்ற பெயர் கொண்ட நீரூற்று கோழை என்று அர்த்தமுடையது. 22,000 பேர் பயந்து வீட்டுக்கு சென்றதால் இந்த பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

கிதியோனின் சிறிய படை 10,000 பேர் ஆக சுருங்கிப்போனதால், கிதியோனின் விசவாசம் நிச்சயமாக சோதிக்கப்பட்டது! ஆனால் தேவன் அவனிடம், ஜனங்கள் இன்னும் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறினார். அவர்களை தண்ணீரண்டைக்கு இறங்கிப் போகப்பண்ணி தண்ணீர் குடிக்கச்செய்து, அவர்களைப் பிரிக்கும்படி கூறினார். தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக தன் நாவினால் நக்குகிறவர்களையும் குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றி குனிகிறவர்களையும் தனியே பிரிக்கச்சொன்னார். தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து நக்கிக்கொண்டவர்களின் இலக்கம் முந்நூறு பேர். இவர்கள்தான் ஜெயம் கொள்வதற்கு தகுதியானவர்கள் என்று தேவன் அறிவித்தார். எனினும் மீதியுள்ள 9,700 பேர் எதிரிகளை பிற்பாடு பின்தொடர்வதில் சேர்ந்து கொள்வார்கள்.

தண்ணீரை கையில் அள்ளி தங்கள் வாய்க்கெடுத்து நக்கிக் குடிக்கும் பழக்கம் பாலஸ்தீனர், மேய்ப்பர்கள் முத—யவர்களிடம் இன்னமும் காணப்படுகிறது. இந்த பழக்கம் எச்சரிக்கையாக இருப்பதையும், கீழ்ப்படிதலையும் குறிப்பிடுகிறது. ஒரு காளையானது தனது முழு கவனத்தையும் செலுத்தி தண்ணீருக்குள் வாயை வைத்து உறிஞ்சுகிறது. தனது எஜமானது கட்டளையையும் கவனியாது, அடித்தாலும் பொருட்படுத்தாது, குடிக்கிறதிலேயே கவனமாக இருக்கும். ஆனால் ஒரு நாய், அதற்கு மாறாக, தண்ணீரை நக்கிக் குடிக்கும். மேலும் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து எல்லாப்பக்கமும், பார்த்துக்கொண்டேயிருக்கும். கீழ்ப்படிதலுடன் தன் கடமையை செய்வதற்கும், தண்ணீரைவிட்டு செல்வதற்கும் தயாராயிருக்கும்.

இங்கே தண்ணீர், வேதம் மற்ற இடத்தில் குறிப்பிடுவது போல, சத்தியத்தையும், கிதியோனின் படையில் உள்ள இரண்டு பிரிவினரும் சத்தியத்தை நேசிக்கிற, மதிக்கிற இரண்டு வகுப்பினரையும் குறிக்கிறது. இரண்டு வகுப்பினரும் சத்தியமாகிய தண்ணீரைப் பருகினர். ஆனால் ஒரு வகுப்பினர் அவர்களுடைய திருப்திக்கேற்றவாறு குடிக்கின்றனர். ஆனால் மற்ற வகுப்பினர் மிகவும் ஜாக்கிரதையாக சுற்றிலும் கவனித்துக்கொண்டு, தேவைக்கேற்ப குடிக்கின்றனர். இவர்கள் எஜமானனின் எச்சரிக்கையை அசட்டை பண்ணாமலும், எல்லா நேரத்திலும் தெய்வீக வழிகாட்டுதலுக்கு தங்கள் கண்களையும், காதுகளையும் முழுவதுமாக திறந்து வைத்துக்கொண்டும் இருக்கின்றனர். பின்னாலே சொல்லப்பட்ட புத்தியுள்ள வகுப்பினர் கிதியோனின் கூட இருந்த முந்நூறு பேரைக் குறிக்கிறது. கிதியோன் நமது இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவைக் குறிக்கிறார்.

### அர்மகெதோனில் வெற்றி

தற்காலத்தில் படைகள் விழித்திருந்து எச்சரிக்கையாய் இருப்பதுபோல் பழங்காலத்தில் இருந்ததில்லை. கிதியோனும், அவனது நம்பிக்கையான வீரர்களும் அந்த இரவின் இருளில் மீதியானியரின் கூடாரங்களுக்குள்ளே ஊடுருவிச் செல்ல முடிந்தது, அங்கே ஒருவன் சுடப்பட்ட ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டு வந்து கூடாரத்தை கவிழ்த்துப் போட்டது என்று தன்னுடைய தோழனிடம் தான் கண்ட கனவைக்குறித்து கூறினான். அப்பொழுது மற்றவன், அது கிதியோனின் பட்டயமேயல்லாமல் வேறல்ல என்று அதன் அர்த்தத்தை கூறினான். இந்த நிகழ்வு மீதியானியர்களின் பயத்தையும், திகிலையும் காண்பித்தது. கிதியோன் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தான். தேவன் அனுமதித்த இந்த சிறிய நிகழ்வு மூலம் அவனது விசுவாசம் பலப்பட்டது.

நடுஜாமத்தின் துவக்கத்தில், மீதியானியர் ஜாமக்காரரை மாற்றிவைத்த பின்பே கிதியோன் அவர்களை தாக்குகிற நேரமாக குறிக்கப்பட்டு இருந்தது. யுத்தம் செய்யும் முறைமை விசித்திரமானதாக இருந்தது. மீதியானியரின் அருகில் குறிப்பிட்ட இடைவெளியில் கிதியோனின் முந்நூறு வீரர்கள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டனர். சாதாரண ஆயுதங்களாகிய வாள், கவசம் முத—யவைகளைத் தவிர, கிதியோனும் அவனது முந்நூறு வீரர்களும் வேறு புது ஆயுதங்களையும் வைத்திருந்தனர். ஒவ்வொருவரும் இடது கையில் பானையையும் அந்த பானைக்குள் தீவட்டியையும், வலது கையில் எக்காளத்தையும் வைத்திருந்தனர். கிதியோன் எப்படிச் செய்கிறானோ அப்படியே அவர்களும் செய்யவேண்டும் என்று கட்டளை பெற்றிருந்தனர். அதாவது அவர்களது பானையை உடைத்து தீவட்டிகளைத் தங்கள் இடது கையிலும், ஊதும் எக்காளத்தை தங்களது வலது கையிலும் பிடித்துக் கொண்டு "யேகோவாவுடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்" என்று சத்தமிட்டு பாளையத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலைகளிலேயே நின்றார்கள்.

மீதியானியர்கள் தூக்கத்தைவிட்டு எழுந்து, எரிகிற தீவட்டிகளைக் கண்டு, பானை உடைகிற சத்தத்தை ஆயுதங்களின் சத்தமாகவும், கத்துகிற சத்தத்தையும் எக்காளத்தின் சத்தத்தையும் கேட்டு, பெரும் சேனைகளால் சூழப்பட்டிருக்கிறோம் என்று நினைத்து, திகைத்து, சிதறிக் கூக்குர—ட்டு

-2180-

ஓடிப்போனார்கள்; எதிரிகள் என்று நினைத்து ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் போரிட்டுக் கொண்டனர். கிதியோனும் அவனது முந்நூறு வீரர்களும் அவர்களை பின்தொடர்ந்தார்கள். மற்ற 9,700 பேரும் இவர்களோடே சேர்ந்து சண்டையிட்டார்கள். வெற்றி அபாரமாக இருந்தது. கர்த்தரே மீட்பராக அங்கீகரிக்கப்பட்டார், கிதியோனும் அவனது வீரர்களும் கனப்படுத்தப்பட்டார்கள்.

### இன்றைக்கான சில பாடங்கள்

பழைய ஏற்பாட்டு காரியங்களை குறிப்பிட்டு அப். பவுல், "முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது" என்று கூறுகிறார். அந்த காலத்துக்குரிய சில பாடங்களைக் கொடுத்ததோடு, கடந்த கால அனுபவங்களைக் கொண்டு, கர்த்தர் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு சில பாடங்களைக் கொடுக்கிறார். கிதியோனின் அழைப்பு சுவிசேஷ யுக அழைப்பை குறிக்கிறது.

உலகில் அநேகர் செய்தியைக் கேட்டு, கிறிஸ்துவின் போர் வீரராக விரும்புகிறார்கள். அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, இயேசுவின் சத்தம் அவர்களை அழைத்து, அமர்ந்திருந்து, கணக்குப் பார்க்கச் சொல்கிறது; கலப்பையின்மேல் தன் கையை வைத்து, கர்த்தரின் ஊழியக்காரனான பிறகு பின்னிட்டு பார்ப்பது சரியல்ல என்று சொல்லுகிறது.

சத்துருவானவனின் பார்வை, மரண பயம் (எபி : 2:15) அவர்களை ஆண்டவரோடு நடக்க முடியாமல் பண்ணுகிறது. ஏனெனில் அது நீண்ட தூரமாக இருக்கிறது. அவர்கள் கனத்தையும், மகிமையையும் நினைத்து, அழைப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். பெருங்கஷ்டத்தினாலும், பொறுமையினாலும் தான் அதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை கவனிக்க தவறிவிடுகிறார்கள். பயந்து திரும்பி சென்ற கோழைகள், உண்மையான அர்ப்பணிப்பை செய்யாதவர்கள். அவர்கள் அர்ப்பணிப்பு செய்யாதிருந்தால் நலமாயிருக்கும். பெரும் வெற்றியில் அவர்கள் பங்கு பெறமாட்டார்கள், வெற்றிமாலை அவர்களுடையதாக இராது. ஜீவ கிரீடம் அவர்களுக்கு கிடைக்காது.

இரண்டாவதாக வருகிற சோதனை, கீழ்ப்படிதலும் உண்மையுள்ளவர்களாயிருத்தலும் ஆகும். கர்த்தரின் ஜனங்களில் ஒரு வகுப்பினர் உண்மையுள்ள நாய்களைப்போல, எஜமானருடைய சத்தத்துக்கு கீழ்ப்படிந்து அவரது சித்தத்தை நிறைவேற்ற ஜாக்கிரதையாக இருப்பவர்கள். கர்த்தரின் ஜனங்களில் இன்னொரு வகுப்பினர், எஜமானருடைய சத்தத்துக்கு அவ்வளவு கீழ்ப்படியாமல், அவருடைய ஊழியத்தில் மிகவும் அஜாக்கிரதையாக இருப்பார்கள். இவர்கள் எஜமானனுக்கு மிகவும் குறைவாகவே பயனுள்ளவர்களாய் இருப்பார்கள்.

உலகத்தாரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் ஜாக்கிரதையாக இருப்பவர்கள், எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருப்பார்கள். ஆண்டவர் தெரிந்துகொண்டவர்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பவர்களுக்கு ஊழியம் செய்ய அதிக சந்தர்ப்பம் கொடுக்கிறார். இப்படிப்பட்டவர்கள்தான் பானையை உடைப்பவர்களாக – இந்த பூமிக்குரிய வாழ்க்கையை ஆண்டவருடைய ஊழியத்துக்கு அர்ப்பணிப்பவர்களாக இருப்பார்கள். அதனிமித்தம் சத்திய வெளிச்சம் பிரகாசிக்கும். சத்தியம் ஜெயம் பெறும். வைராக்கியம் உள்ள இவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக எக்காளத்தை ஊதுவதில் மிகவும் உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் வெளிச்சத்தை பிரகாசிக்கப் பண்ணுவதால், ஆசீர்வாதமான சந்தர்ப்பத்தை பெறுகிறார்கள். அவர்களது வைராக்கியம் விசேஷித்த சந்தர்ப்பங்களையும், சலுகைகளையும் பெறும்படி செய்கிறது.

கர்த்தருடைய வெற்றி அவருடைய உண்மையான ஆவிக்குரிய கிதியோனாலும் அவருடைய சிறு மந்தையாலும் அடையப்பெறும். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆவி, உடைக்கப்பட்ட பானையி–ருந்து பிரகாசிக்கும் தீவட்டியினால் குறிக்கப்படுகிறது, கிதியோனின் சேனைகளின் உடைக்கப்பட்ட பானை, கர்த்தருடைய பிள்ளைகள் எப்படி தங்களது மாம்சீக சரீரங்களை தேவனுடைய ஊழியத்தில் அவருக்கு பரிசுத்தமும், பிரியமுமான ஜீவ ப–யாக ஒப்புக்கொடுக்கிறார்கள் என்பதை குறிக்கிறது, பாவ சேனைகளுக்கு எதிராக நல்ல போராட்டத்தை போராடி தங்களது வெளிச்சத்தை பிரகாசிக்கப் பண்ணுகிறார்கள்.

ஆவிக்குரிய கிதியோனின் பெரும் வெற்றி எட்டப்படும் வேளையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த சமயத்தில் பாவ சேனைகளும், தீமையின் பலமும், ஒன்றின் மேல் ஒன்று விழுந்து அழியும். ஐரோப்பிய நாடுகளுக்கான தற்போதைய போர் இதற்கு ஆரம்பமாக இருக்கிறது, முடிவாக அல்ல. வேதப் பிரகாரம், அராஜகத்தின் தற்கா–க ஆளுகை அதன் உச்சக்கட்டமாக இருக்கும். அது உலகத்தை மேசியாவின் மகிமையான நீதியின் ஆளுகைக்கு தயார் செய்யும்.

**R5608**

## The Life Promised to the Church
## சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன்

"நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம். " 1யோவா. 2:25

கிறிஸ்தவர்களின் பொதுவான கருத்தில் இந்த வசனத்தைப் பார்க்கும்போது, அர்த்தம் இல்லாததுபோல் இருக்கும். ஏனெனில் பெரும்பாலான ஜனங்கள், மனுக்குலத்திற்கு பிறந்த அந்த கணத்தில் இருந்தே நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டு, அவர்கள் எப்பொழுதும் எங்கேயாவது வாழவேண்டும் என்று நம்புகிறார்கள். மோட்சத்திற்கு (பரலோகத்திற்கு) செல்ல தகுதியற்றவர்களானவர்கள் மரணத்திற்கு பிறகு நரகத்திற்கு நித்திய வேதனைக்கு செல்வார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் நித்திய ஜீவனை பெற்றிருக்கிறான் என்றும், அது அவனைவிட்டுப் பிரியாது என்றும், அவர்கள் அனுமானிப்பதினால்தான் இப்படிப்பட்ட தவறான முடிவுக்கு வருகிறார்கள். நாம் பிறக்கும்போதே ஒரு மரணமற்ற சுபாவத்தோடு பிறக்கிறோம் என்றும், இப்படிப் பிறந்த எவரும் தொடர்ந்து எங்கேயாவது ஜீவிக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் வேதம் இதற்கு மாறாக போதிக்கிறது. தேவன் ஜீவனைக் கொடுத்தாலன்றி யாரும் ஜீவனை பெற்றுக்கொள்ள இயலாது என்று வேத வசனங்கள் கூறுகின்றன. தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, தேவன் நமது முதல் பெற்றோருக்கு பூரண ஜீவனையும். சரீரத்தையும் கொடுத்தார். அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவர்கள் என்றென்றும் ஜீவனோடிருப்பார்கள் என்றும், ஆனால் அவர்கள் கீழ்ப்படியாமல் போனால், பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் கூறினார். அவர்கள் கட்டளையை மீறினவுடனேயே தண்டனையாகிய மரணம் அமலுக்கு வந்தது. "நீங்கள் சாகவே சாவீர்கள். " கீழ்ப்படியாமல் போனதால் தண்டனை அவர்கள் மேல் வந்தது.

தொள்ளாயிரத்து முப்பது வருடங்களுக்குப் பிறகு, ஆதாம் மரித்தான். இந்த காலக்கட்டத்தில் தண்டனை படிப்படியாக அவன்மேல் வந்தது. கடைசியாக மூச்சை விடும்வரை அவன் அனுதினமும் மரித்துக்கொண்டிருந்தான். ஆதாமின் பிள்ளைகள் அவனது பரிபூரண ஜீவனை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்கள் பிறக்கும்முன்பே ஆதாம் பரிபூரணத்தை இழந்திருந்தான். எனவே பாவத்தினாலும் பாவச் செய—னாலும், உலகம் அவலட்சணமடைந்து ஒரு மரிக்கும் இனமாக ஆனது.

### கிறிஸ்துவினாலன்றி ஜீவன் இல்லை

கிறிஸ்துவுக்குள்ளான தேவ ஏற்பாடு இல்லாதிருந்தால், மனித குலத்திற்கு எதிர்கால ஜீவன் என்பதே இருந்திருக்காது என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். " ஏதேனி—ருந்து நமது ஆதி பெற்றோரை வெளியே அனுப்பும் முன்பே முடிவாக ஒரு இரட்சகரைக் குறித்து வாக்குத்தத்தைக் கொடுத்தார். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்றும் கூறினார். மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆளுகை செய்தது. அப்படியிருந்தும், சாபம் ஒரு நாள் நீக்கப்படும் என்ற நம்பிக்கை மனுக்குலத்திற்கு இருந்தது. இந்த நம்பிக்கை சேத் குடும்பத்தின் மூலமாகவும், அதன் பிறகு நோவாவின் குடும்பத்தின் மூலமாகவும் பின்னர் ஆபிரகாம் மற்றும் அவனது சந்ததியாராகிய இஸ்ரயேலர்கள் மூலமாகவும் தொடர்ந்து வந்தது. இந்த நம்பிக்கை வெறும் ஒரு யோசனைதான். தேவனுடைய திட்டங்கள் குறித்த ஒரு தெளிவான வெளிப்பாடு இல்லை. உண்மைதான், சேத்தின் வம்சத்தில் வந்தவனும் ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையானவனுமான ஏனோக்கு, "இதோ, எல்லாருக்கும் நியாயத் தீர்ப்பு கொடுக்கிறதற்கு தமது பரிசுத்தவான்களோடே கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். " எனவே நீதி ஒருநாள் பூமியிலே நிலை நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் " என்று ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் கூட ஒரு தெளிவான, நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு நம்பிக்கையான செய்தியாக இல்லை, எனினும் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து உணர்த்தியது.

தேவனுடைய கட்டளைகளை கடைபிடிப்பதின் மூலம் நித்திய ஜீவனை பெற முடியவில்லை என்று இஸ்ரயேலர் கண்டபோது, ஒரு இரட்சகனை அவர்களிடம் அனுப்புவதாகவும், அவர் அவர்களது கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, ஒரு புது உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்துவார் என்றும், வாக்குத்தத்தம் பண்ணினார். நியாயப் பிரமாணத்துக்கு கீழான அவர்களது அனுபவம், பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையி—ருந்து அவர்களை விடுவிக்க எதனாலும் இயலாது என்பதை போதித்தது. மேசியா அவர்களது மீட்பராக இருப்பார். (ரோம. 11:26)

## இயேசுவின் போதனைகளின் கருத்து

இயேசு வந்தபோது நித்தியஜீவன், அழியாத ஜீவன் என்ற வார்த்தைகளை கூறினார். இயேசு கிறிஸ்து “ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்” என்று பரி. பவுல் கூறுகிறார். (2 தீமோ. 1:10) நமது இரட்சகர் வெளிச்சத்துக்கு கொண்டுவந்த இவைகள் இதற்கு முன் காணப்படவில்லை. தேவனுடைய திட்டத்தைக் குறித்தத் தகவல் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் கூட, ஆனால் ஒவ்வொன்றும் இதற்கு மாறாக இருந்தது, ஏதேனில் தேவன் அளித்த மரண தண்டனை, நித்திய ஜீவனைக் குறித்த சகல நம்பிக்கைகளையும் சாத்தியம் ஆகாமல் செய்வது போல காணப்படுகிறது. பாவம், மரணம் என்கிற சாபத்தி–ருந்து ஒரு நாள் விடுவிக்கப்படும் என்ற தெளிவில்லாமல் தேவன் கூறியிருந்தாலும், இது எப்படி நிறைவேறும் என்று யாராலும் சொல்ல முடியவில்லை; இன்னும் நீதியானதாக இருக்கிற மரண தண்டனையி–ருந்து தேவன் எப்படி இரட்சிப்பார் என்பதை யாராலும் சொல்ல முடியவில்லை.

ஆனால் இயேசு வந்தபோது, இந்த முழு விஷயத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். தேவ கிருபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவரது இரட்சிப்பின் வேலை, தெய்வீக நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிற அனைவருக்கும் கடைசியாக நித்திய ஜீவன் கொடுக்கப்படும் என்பதைக் காண்பித்தார். அவர் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார். தேவன் உலக மக்களுக்கு கொடுக்க தீர்மானித்திருந்த நித்திய ஜீவனை மாத்திரமல்ல, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கிற உண்மையுள்ள பின்னடியார்களுக்கு ஒரு மேன்மையான ஜீவனாகிய அழியாமையை கொடுக்க தீர்மானித்திருந்ததையும் அவர் வெளிப்படுத்தினார். ஆகவே இதற்கு முன் நினைத்துப் பார்த்திராத ஒரு புதிய எண்ணத்தை வெளியரங்கமாக்கினார்.

நித்திய ஜீவனையும், அழியாமையையும் குறித்த நமது ஆண்டவரின் கூற்று, அவரது அப்போஸ்தலர்களது கூற்றைக்காட்டிலும் அவ்வளவு தெளிவாக இல்லை. இந்த அப்போஸ்தலர்கள் பேசும்போது விசேஷித்த விதமாக வழிநடத்தப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டதை நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். அவர்கள் பூமியில் கட்டப்படுவது எதுவோ அது தேவனுடைய பார்வையிலும் கட்டப்பட்டிருக்கும்; அவர்கள் கட்டவிழ்ப்பது எதுவோ அது தேவனுடைய பார்வையிலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். ஆனால் நமது ஆண்டவர் கூறுகிற, அப்போஸ்தலர் பேசுகிற மற்றும் போதிக்கிற அனைத்திற்கும் ஒரு அடிப்படை இருந்தது.

இயேசு தம்மைப் பற்றி தெளிவாக கூறாததற்கு ஒரு காரணம் இருந்தது. அவர் தமது அப்போஸ்தலர்களிடம் பேசும்போது “இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்” என்று கூறினார். கனம், மகிமை, சாகாமையை பெற்றுக்கொள்ளத்தக்கதாக சபை அழைக்கப்பட்டதைப் பற்றி நமது ஆண்டவர் அப்போஸ்தலர்களுக்கு சொல்ல முயற்சித்திருந்தால், அது அவர்களுக்கு தாங்கக்கூடாத அளவு இருந்திருக்கும். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை–ஆழ்ந்த காரியங்களை ஏற்றுக்கொள்ளான். எனவே ஆழ்ந்த ஆவிக்குரிய காரியங்களை சொல்லாதுவிட்டது கர்த்தருக்கு நல்லதாயிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு புரிந்துகொண்டிருக்க முடியும். (யோவா. 16:12–14)

### உலகிற்கு நம்பிக்கை

இயேசுவின் போதனை முழுவதும் நித்திய ஜீவனைப் பற்றியது ஆகும். ஆரம்பத்தில் மனுஷர்கள் அனுபவித்த நித்திய ஜீவனை புதுப்பிப்பதற்காக, தம்மை எல்லாரையும் மீட்கும் பொருளாக கொடுக்கும்படியாக இயேசு வந்திருந்தார். எல்லாரும் ஜீவனை சுதந்தரமாக பெற்றிருக்கிறார்கள் என்று எங்கேயும் வேதம் கூறவில்லை. மாறாக, வேத வாக்கியங்கள் அதற்கு எதிராக கூறுகின்றன. “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.” “தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமில்லாதவன் ஜீவன் இல்லாதவன், அவனிடத்தில் தேவனுடைய உக்கிரமான கோபம் நிலைத்திருக்கும்.” நமது தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தம் நமது ஆண்டவர் கொண்டுவந்த சத்தியத்தை விசேஷமாக குறிப்பிடுவதாக நாம் புரிந்துகொள்கிறோம். “முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்ட இரட்சிப்பு.” (எபி. 2:3) பாவம், மரணத்தி–ருந்து மானிட இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தை இயேசு வந்தபோது வெளியரங்கமாக்கினார்.

2183

நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் (நீதிமான்களாக்கப்பட்டவர்களும், நீதிமான்களாக்கப்படாதவர்களும்) உயிர்த்தெழுந்திருப்பது உண்டு என்று அவர் காண்பித்தார். கடைசி நாளாகிய, ஏழாம் நாளின் ஆயிர வருட யுகத்தின் ஆரம்பத்தில் அவர்களை உயிரோடே எழுப்புவார். இந்த காலத்தில்தான் மேசியாவின் ராஜ்யம் உலகமெங்கும் வியாபித்து ஆசீர்வதிக்கும். நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஆபிரகாமின் வித்தாகிய கிறிஸ்துவும் அவரது சபையாரும் பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிப்பார்கள்.

### சபைக்கு கொடுக்கப்பட்ட விசேஷித்த சலுகைகள்

நமது தலைப்பு வசனம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை மட்டும் குறிப்பிடுகிறது. இது உலகத்தை சேர்த்துக்கொள்ளவில்லை. "இது அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்." (1 யோவா. 2:25) இந்த வாக்குத்தத்தம் நமக்கானதாகும், மற்றவர்களுக்கல்ல, பொதுவான நியமனத்தின்படியே உலகிற்கு சகல வாக்குத்தத்தங்களும் செய்யப்பட்டன. உலகமனைத்தும் ஆசீர்வதிக்கப்பட வேண்டியிருக்கிறது. வரக்கூடிய இந்த ஆசீர்வாதம், நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளக்கூடிய அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். தேவன், எல்லாம் தம்முடைய குமாரனை சார்ந்திருக்கும்படி செய்திருக்கிறார். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்"– மற்றவர்களல்ல. எனவே விசுவாசிகள் மட்டுமே இப்போது ஜீவனை பெற்றுக்கொள்வார்கள். இது முழுமையான அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. இப்போது இந்த ஜீவனின் ஆரம்பம்தான், உயிர்த்தெழுதலில்தான் முழுமையடையும், உலகிற்கு இப்போது ஜீவனில்லை, தேவனுடைய ஏற்பாடு மூலமேயன்றி, வேறெதினாலும் அவர்கள் நித்திய ஜீவனை பெறமுடியாது.

இப்போது கிறிஸ்துவுக்குள் வருகிறவர்கள்தான் மணவாட்டியாகிய சபை வகுப்பார். அவர்கள் விசேஷித்த சலுகை பெற்ற வகுப்பார். அவர்கள் அழியாத ஜீவனுக்குள் வருகிறார்கள். உலகிற்கும் வாக்குத்தத்தம் உண்டு, ஆனால் மனுக்குலத்திற்கான இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிகள் மட்டுமே அறிவார்கள். சகலரும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளதக்கதான சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள். தேவன் ஒரு சோதனை நாளாகிய ஒரு நியாயத் தீர்ப்பின் நாளை ஏற்பாடு செய்திருக்கிறார். அந்த காலத்திலே சத்தியத்தைக் குறித்த அறிவுக்கு மனுமக்கள் கொண்டுவரப்படுவார்கள். அவருடைய நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, நித்திய ஜீவனை அடைவார்கள்.

தேவன் இப்பொழுது சபை தெய்வீக சுபாவத்தை பெறும்படி செய்வது போல, உலகத்தார் மாம்சீக சுபாவத்தில் நித்திய ஜீவனை அடையும்படி செய்வார். அர்ப்பணம் செய்துக்கொண்ட தேவனுடைய ஜனங்கள் "நமக்கு" என்கிற வகுப்பாராகும்படி கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும்." இந்த பதம் ("நமக்கு"), சீஷராகி, ராஜ்யத்திற்குரிய கனமும், மகிமையும் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று விசுவாசிக்கிறவர்களுக்கும், அப்படி விசுவாசித்து, தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து கிறிஸ்துவினுடைய அடிச்சுவட்டில் தங்கள் மரண பரியந்தம் நடக்கிறவர்களுக்கே உரியது.

இந்த "நமக்கு" என்கிற வகுப்பார், ஆவிக்குரிய ஆசாரியர்களை மாத்திரமல்ல, ஆவிக்குரிய லேவியர்களையும் சேர்த்துக் குறிப்பிடுகிறது. இரண்டு வகுப்பாரும், அழியாத ஜீவனாகிய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டாலும், தங்களை "முற்றும் ஜெயங்கொண்டவர்களாக" நிரூபிப்பவர்கள் மட்டுமே "ஜீவ கிரீடத்தை" (அழியாமையை) பெற்றுக்கொள்வார்கள். இயேசுவின் அடிச்சுவட்டில் மிக ஜாக்கிரதையாக நடக்கிறவர்களுக்கு ஒரு விசேஷித்த வாக்குத்தத்தத்தை வேத வாக்கியங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட வகுப்பார் அவருடன் உடன் சுதந்தரராகவும், அவரோடு சிங்காசனத்திலே உட்காருகிறவர்களாகவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். (வெளி. 3:21)

ஒரு சமயத்தில் நமது ஆண்டவர் யூதர்களிடம் கூறியதாவது: "பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருப்பதற்கு அருள் செய்திருக்கிறார்." (யோவா. 5:26) இந்தக் கூற்றில் அவர் சந்தேகத்துக்கிடமின்றி அழியாமையைக் குறித்து கூறியிருக்கிறார். பிதா அழியாத ஜீவனை அளித்திருக்கிறார். இந்த அழியாத ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தை நமது ஆண்டவர் அவரது பூமிக்குரிய ஊழிய காலத்தில் பெற்றிருந்தாலும், உண்மையிலேயே அதை அவர் உயிர்த்தெழுதலில்தான் பெற்றுக்கொண்டார். இதே வாக்குத்தத்தமே அவரது சரீரமாகிய சபைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவா. 10:27,28)

--2184--

இன்னொரு சமயத்தில் அவர் கூறியதாவது: “நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.” (யோவா, 6:53) இது இயற்கையாக அமையப்பெற்ற ஜீவன்—அவர்களுக்குள்ளாகவே இருக்கும் ஜீவன். இந்த ஜீவனுக்கும் சாதாரண ஜீவனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், முன்னானது சுதந்தரித்துக் கொண்டது, பின்னானது வைத்து காப்பாற்றப்பட வேண்டும். எல்லா தேவ தூதர்களும், யாரும் எடுத்துக்கொள்ள முடியாத ஒரு அழியாத, நித்திய ஜீவனை பெற்றிருக்கிறார்கள். தேவன் தீர்மானித்தால் அதை எடுத்துக்கொள்ள முடியும், ஆனால் அது காலம் குறிக்கப்பட்ட ஜீவனில்லை. ஆனால் தேவதூதர்களின் ஜீவன் எப்படி காப்பாற்றப்படுகிறது என்பதை நாம் அறியோம். ஆனால் அவர்களும் மரிப்பார்கள் என்று வேத வசனங்கள் கூறுவதால் அவர்கள் அழியாமையை பெற்றிருக்கவில்லை என்று நிரூபணமாகிறது.

### எச்சரிக்கையான ஒரு வார்த்தை

நாம் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாக பேச வேண்டும். தெரிந்துகொள்ளப்பட்ட சபை மட்டும்தான் அழியாமையை சுதந்தரித்துக் கொள்ளும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம் என்று நாம் பெரும்பாலான ஜனங்களிடம் கூறுவோமானால், அவர்கள் நமது போதனையை தவறாக புரிந்துகொண்டு மனுக்குலத்தில் உள்ள மற்ற அனைவரும் மிருகங்களைப் போல் அழிந்துபோவார்கள் என்று எண்ணுவார்கள். ஆகவே நமது கருத்தை சரியாக புரிந்துகொள்ளும்படி நாம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். நித்திய ஜீவன் என்பது தொடர்ந்து இருக்கச் செய்ய வேண்டிய ஒரு ஜீவன், ஆனால் அழியாமை என்பது தெய்வீக நிலைக்குரிய ஜீவன், அதை நாம் தொடர்ந்து இருக்கச் செய்யவேண்டிய அவசியமில்லை.

இயேசு கூறுகிறதாவது: “நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.” (யோவா. 10:10) ஆதாம் இழந்த ஜீவன் இதுதான். நித்திய ஜீவன் என்று சொல்லும்போது அது என்றென்றைக்கும் இருக்கும் ஜீவன் ஆகும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு—ஒரு வருடத்திற்கோ அல்லது ஒரு லட்சம் வருடத்திற்கோ—கொடுக்கப்பட்ட ஜீவன் இல்லை. ஆனால் பறிக்கப்படாதவரை அது என்றென்றைக்கும் இருக்கக்கூடிய ஒரு ஜீவன். நமது ஆண்டவர் வேத வாக்கியங்களில் இரண்டுவித வகுப்பாரைக் குறித்து குறிப்பிடுகிறார். தொடர்ந்து இருக்கச்செய்ய வேண்டிய என்றென்றைக்குமான ஜீவனைப் பெறுகிற கீழ்ப்படிதலுள்ள உலகத்தார் மற்றும் கிறிஸ்துவோடுகூட தெய்வீக சுபாவத்தில் பங்குபெறுகிற சபை. சபைக்கு கொடுக்கக்கூடிய ஜீவன் சுதந்தரிக்கப்படுவது, முற்றிலும் அபரிமிதமானது, தொடர்ந்து இருக்கப் பண்ணவேண்டிய அவசியமில்லாதது.

இந்த வாக்குத்தத்தம்தான், அவர் நமக்கு கொடுக்கிற வாக்குத்தத்தம். கனம், மகிமை, சாகாமைக்கு நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டுமானால், உண்மையில் அதிகப்படியான ஜாக்கிரதையை அப்பியாசப்படுத்த வேண்டும். பரிசை பெறுபவர்கள் தேவன் கொடுக்கக்கூடிய மகாபெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். நமக்கான, தேவனுடைய மகாபெரிய வாக்குத்தத்தங்களை உணர்ந்து கொள்ள நாம் செய்ய வேண்டியது இருக்கிறது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். தேவன் இந்த உடன்படிக்கையில் அவரது பங்கை நிறைவேற்ற விருப்பம் உள்ளவராகவும், தகுதியுள்ளவராகவும் இருக்கும்போது, நாம் நமது பங்கை நிறைவேற்ற, உறுதிப்படுத்த ஒவ்வொரு நியாயமான வழியிலும் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

— — — — — — — — — — — — — — — —

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

<u>வெளியிடுபவர்:</u>

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், **--2185--**

சென்னை– 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com